வெளியீடு எண்: 135

தணிகைப்புராணம்

(குறிப்புரையுடன்)

திருவாவடுதுறை ஆதீனம்

உ

சிவமயம்

திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்துப்

பிரதமபரமாசாரியர்

ஸ்ரீ பஞ்சாக்கரதேசிகமூர்த்திகள்

மகரத்தலைநாட்குருபூஜை விழாமலர்

விகாரி - தை - அசுபதி - உக

3—2—1960

உ

தணிகைப்புராணம்

*

கவிராக்ஷஸ - ஸ்ரீ கச்சியப்பமுனிவர்



திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்தொன்றுவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரிய சுவாமிகள்

வெளியீடு எண் 135.

உ
சிவமயம்

தணிகைப்புராணம்

(குறிப்புரையுடன்)

இஃது

திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து
இருபத்தொன்றாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக சுவாமிகள்
கட்டளையிட்டருளியபடி
வெளியிடப்பெற்றது.

திருவாவடுதுறை ஆதீனம்

1960

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையில் சிவஞான
 போதநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
 மெய்ஞ்ஞான பானு வாகிக்
குயிலாரும் பொழில்திருவா வடுதுறைவாழ்
 குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
 நீடூழி தழைக மாதோ.

—மாதவச்சிவஞானயோகிகள்.



ஸ்ரீ நமசிவாயமூர்த்திகள்

உ
சிவமயம்

முகவுரை

திருச்சிற்றம்பலம்

"நல்லானை நல்லான நான்மறையோ டாறங்கம்
வல்லானை வல்லார்கள் மனத்துறையு மைந்தனைச்
சொல்லானைச் சொல்லார்ந்த பொருளானைத் துகளேதும்
இல்லானை யெம்மானை யென்மனத்தே வைத்தேனே"

—திருநாவுக்கரசுசுவாமிகள்.

திருச்சிற்றம்பலம்

திருத்தணிகைப்புராணம் என்பது திருத்தணிகையினது புராணம் எனவிரியும்: ஆறன் தொகை. திருத்தணிகையைப் பற்றிய புராணம் எனப் பொருள்கொள்ளின் இரண்டனுருபும் பொருளும் உடன்தொக்க தொகையாம். திருத்தணிகை என்பது தொண்டை நாட்டிலுள்ள சுப்பிரமணியதலங்களுள் ஒன்று. புராணம் - பழையவரலாறு. புராண இலக்கியங்கள் பெருங் காப்பியவகையைச் சார்ந்தன. வடமொழியில் உள்ள புராண நடை வேறு, தமிழ்மொழியில் உள்ள புராணநடை வேறு. வடமொழியிலே உள்ள புராணங்கள் வரலாற்றைமட்டும் அறிவிப்பன. தமிழ்ப்புராணங்கள் வரலாற்றுடன் காவிய இலக்கணங்களையும் பெற்று விளங்குவன. வடமொழியில் காவியங்கள் தனியே பொருந்துவன. முருகவேள் சூரன் முதலிய அசுரர்களோடு செய்த போரினின்றும் தணிந்து வந்து இருத்தலாலே தணிகை எனப்பட்டது. 'அமர்தணிதலிற் றணிகை' எனப் புராணவரலாற்றுப் படலத்துக் கூறப்பட்டமை காண்க.


பெருங்காப்பியத்தின் இலக்கணமாவது வாழ்த்துதல், தெய்வம் வணங்குதல், உரைக்கும் பொருள் உணர்த்தல் என்னும் மூன்றனுள் ஒன்று முன்வர நடப்பதாய்; அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கினையும் பயக்கும் ஒழுகலாறுடையதாய்; தன்னோடு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதானை நாயகனாக உடையதாய்; மலை வருணனையும், கடல் வருணனையும், நாட்டு வருணனையும், நகரவருணனையும், இருது வருணனையும், ஆதித்தோதய வருணனையும், சந்திரோதய

வருணனையும் என்று இன்னோரன்ன வருணனையுடைத்தாய்; நன்மணம் புணர்தல், பொன்முடி கவித்தல், பூம்பொழில் நுகர்தல், புனல்விளையாடல், தேம்பிழி மதுக்களி, சிறுவரைப் பெறுதல், புலவியிற்புலத்தல், கலவியிற்களித்தல் என்னும் இன்னோரன்ன செய்கைச்சிறப்புப் புகழ்ந்து தொடுக்கப்பட்ட நல்லொழுக்கமுடைத்தாய்; மந்திரமிருத்தலும், தூதுவிடுத்தலும், மேற்செலவு செருச்செய்கையும், வென்றியெய்துதலும் சந்திபோலத் தொடரப்பட்டு; சருக்கமென்றுதல், இலம்பகமென்றுதல், பரிச்சேதமென்றுதல், படலமென்றுதல் பாகுபட்டு விளங்கி; எட்டுவகைப்பட்டசுவையும், மெய்ப்பாட்டுக் குறிப்பும் இடைவிடாமல் கேட்போர் மதிக்கப் புலவராற்புனையப் படும் தன்மையையுடையது என்பர் ஆசிரியர்.

இத்திருத்தணிகைப் புராணத்தை அருளிச்செய்த கவிஞர் பெருமான், திருவாவடுதுறையாதீனத்து, கவிராக்ஷஸ - ஸ்ரீகச்சியப்பமுனிவர் என்பவர். நூலாசிரியர் பெயரைக் கேட்கவே இதன்பெருமை குன்றிலிட்ட தீபமென விளங்கும்; இப்புராணச் செய்யுள்நடை சங்க இலக்கியங்களைப் போலவே கம்பீரமான நடையுடன், கவின்மிகவுடைத்தாக மிளிர்வதைப் பெரும் புலவர் யாவரும் நன்கறிவர்.

இவ்வாசிரியர் சீவகசிந்தாமணி முதலியவற்றிலே கண்ட கருத்துக்களை ஏற்றவிடங்களில் அமைத்து இப்பேரிலக்கியத்தைச் செய்து முடித்தனர் என்பர். திருத்தக்கதேவர் முதலிய சான்றோரும் அதற்கு முன்புள்ள பேரிலக்கியங்களிலே உள்ள கருத்துக்களைத் தத்தம் நூல்களிலே மறைந்துபடாமை அமைத்தனர். கருத்துக்கள் பொதுவானவையே; அவற்றைக் குழைத்தமைத்து மெருகிட்டு வைத்தலிலே ஆசிரியர்கள் ஒருவரை ஒருவர் விஞ்சிநின்று சிறப்பிக்கப்படுவர் என்க. இது கண்கூடு.

திராவிடமாபாடியகாரராகிய ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகளை வித்தியாகுருவாக உம்மைப்பெரும்புண்ணியத்தாற்பெற்ற இவ்வாசிரியர், அவ்வாசிரியர்பால் அறிந்த சிவஞானநுணுக்கங்களையெல்லாம் உரிய இடங்களில் அமைத்துப் போற்றுதலைக் காணலாம். சிந்தாமணி, சிலப்பதிகாரம், கலித்தொகை, பத்துப்பாட்டு, புறநானூறு முதலிய சங்க இலக்கியங்களில் காணும் சொற்களையும் சொற்றொடர்களையும் கருத்துக்களையும் அங்கங்கே குழைத்தமைத்து மெருகிட்டுவைத்திருக்கும் திறம் புலவருலகத்துக்கே பெருமைதருவதாம். திருக்குறட்கருத்துக்களையும் ஏற்றபெற்றி எடுத்தாண்டமையும் குறிப்பிடத்தக்கது.



தணிகைத் திருக்கோயில்

கல்லாடம், சிவதருமோத்தரம், மெய்கண்டநூல்கள் இவற்றின் செய்திகளும் இதில் மிக்குள்ளன. தொல்காப்பியச் சூத்திரங் களையும் அதனுரையையும் நோக்கி உணரவேண்டிய செய்யுட் களும் உள.

தலம் : சீபூரணகிரி, கணிகவெற்பு, மூலாத்திரி, நல்ல காத்திரி, கற்பசித்து, தணிகை, பிரணவார்த்த மாநகரம், இந்திரநகர், நாரதப்பிரியம், அகோரகைவல்லியப்பிரதம், உற் பலவரை என இந்நூலில் பாராட்டப்படுகிறது. புராணவரலாறு 58—60 காண்க. தணிகைக்குன்றுக்கு அடையாளமும் (62) கூறப்பட்டுளது. சீபூரணகிரி, கணிகவெற்பு என்பவற்றின் காரணமும் சொல்லப்பட்டிருக்கிறது.

மூர்த்திகள் : ஆபற்சகாய விநாயகர், வீராட்டகாசம் சிவ லிங்கம், குமாரலிங்கம், பிரமதேவர் வழிபட்டலிங்கம், அகத்திய லிங்கம், இந்திரன் திருமால் ஆதிசேடன் இராமன் நாரதர் முதலியோர் வழிபட்ட சிவலிங்கமூர்த்திகள் முதலியன.

இத்தலத்திலுள்ள முருகவேள் **ஞானசத்திதரர்** என்று கூறப் படுவர் (களவுப்—491).

தீர்த்தங்கள் : குமார தீர்த்தம், பிரமதீர்த்தம், விஷ்ணு தீர்த்தம், ஆதிசேடதீர்த்தம், நாரததீர்த்தம், இந்திரதீர்த்தம், சிவகங்கை, நந்திநந்தினியாறு, ஏழ்சுனை முதலியன.

சிவதலங்கள் 64 : கயிலை, மந்தரம், சம்புலாசியம், இமயம், தருமகானம், குணத்தானம், நீலகண்டம், குலாசலம், வில்வ கங்கணம், வராகம், சிலைவட்டம், கந்தருவவனம், கேதாரம், காமிகாரணியம், உதீசி, உத்தாலகம், சீகோட்டம், குருகுல்லி யம், காசி, கபிலேசம், மாகாளம், விரூபாக்கம், தேசநீவனம், கிருத்திவாசேசம், ஆதாரசித்தியம், மந்தனகாளம், மாயாபுரம், சீசயிலம், தண்டகாரணியம், ஆலவாய், புடைமருதூர், மலய வெற்பு, விக்கிரமேசம், சாலிவாடீசம், சம்புவனம், திரிசிரமலை, சப்பேசம், பஞ்சநதம், வாஞ்சியம், சீபுரம், பசுபதித்தலம், இடைமருது, மாயூரம், சித்திர வேதிகம், மாலிங்கேசுரம், சித்தாரணியம் (திருவாவடுதுறை), சுநாகதம், கண்டீசம், சிதம்பரம், தாலவனம், மத்தியாபகேசுரம், இருடிவிந்தியம், வராஞ்சலம், காஞ்சி, வடாரணியம், திருப்பாசூர், வியாக்கி ரேசுரம், விரிஞ்சை, திருவல்லம் முதலாகக் கூறப்பட்டுள. (40-48)

முருகவேள் தலங்கள்—64: பவானி சங்கமம், சமணப் பிராண நாசனம், பவானி சங்கரம், சரவணம், குமாரபுரம், கதம்பகாரணியம், வன்னித்தானம், சத்திபுரம், சண்முகபுரம், கன்னபூடணம், வாகுலேயமாபுரம், பவுத்திரம், ஆருடம், மேடகம், நப்பிரமதமோசம், கந்தமாதனம், கிரவுஞ்சம், வேத சயிலம், சத்தியவாசகம், குமரகோட்டம், கவுமாரம், தாமிர சூடத்துவசம், வில்வகானனம், தேவகும்பம், குகைத்தானம், விசாகபவனம், வித்தியாவனம், மாரனந்தகாரணம், சுவேத மாவனம், சுகுமார சிகாசலம், சுராபயப்பிரதம், வள்ளிவெற்பு, மாவிரபுரம், சோமாக்கந்தம், வாகுலேயாசிரமம், கெந்தசயி லம், சித்திரகூடம், சம்பகேசுரம், கோமுக்கியம், காளத்திமலே, பிரணவபுரம், ஞாஞசனம், கதிக்கேணி, புத்திரகாமம், இந்திரா பயப்பிரதம், சிவோபாசியம், பிரமநிக்கிரகம், பிரமவநுக்கிரகம், வாதபுரம், வராஞ்சலம், வரதசயம், அபிடேகபுரம், கல்யாண கானம், சுப்பிரமணியம், வித்தியாதரம், மணிகண்டேசுரம், தானபஞ்சகம், சயந்தபுரம், குமாராசலம், வேங்கடம், சீபூரணகிரி முதலியவை. *(49—56)*

துதிகள்: பிரமன் சிருட்டி பெறுபடலம் 84 முதல் 94; நந்தியுபதேசப்படலம் 49 முதல் 59, 129 முதல் 142; வீராட்ட காசப்படலம் 7 முதல் 12: இந்திரன் அருள்பெறு படலத்தில் 19 முதல் 22 வரை முதலியன காண்க.

செய்திகள்: அண்டங்களெல்லாம் இறைவன் வடிவமெனல், முருகவேள் சிவபிரானின் வேறல்லர் எனல், ஞானசத்திவடி வினர் குமாரக்கடவுள், பூமணமும் உடலுயிரும் பொன்விழியு மென அத்துவிதக்கலப்பு, 36 தத்துவங்கள் விளேச்சமம் கன்ம மொத்தல், அட்டாங்க பஞ்சாங்க நமஸ்காரம், வெயிலின்கண் வெண்ணெய் உருகல்போல் உள்ளமுருகல், விழியிற்புனல் வார் தல், கரம் சிரம் சேர்ந்துகுவிதல், மயில் மீனம் ஆமை முதலியன முறையே அடைகிடத்தல் சினேயைநோக்கல் சிந்தித்திருத்தல், திருநந்திதேவர் சிவபெருமானுடைய ஏவலின் இருக்கின்ற மையை அறியார் அறியார், நந்திநந்தினியானது மண்ணவருக் குப் புனலாய் விண்ணேருக்குத் தீர்த்தமாய் மாதவத்தோருக்கு அருளாய்ப் பரபோகம் முதலியவற்றைத் தருதல், குமரவேள் சிவபூசை செய்தமுறை, வைரவக்கடவுள் உதரத்தில் சுக்கிரன் புக்கமை, குமாரதீர்த்தத்தில் மாசிமாத மகத்தில் நீராடல், ஐந்தெழுத்தும் அஞ்சுபதமெனல், சண்பகத்தில் வண்டுகள் மொய்யா, பொதியில் தென்றல் சந்தனம் செந்தமிழ் நல்கும் எனல், ஒரு காவிக்கொடி மூன்று மலரைப்பூத்தல்.

கற்றல் கேட்டலொடு பெருந்தகைமை முற்றினும் ஊழ் வலியைக் கடத்தல் கூடாது; துன்புறுவோர்க்கு எத்தனை புத்தி புகட்டினும் ஏறாது; அறிவுடையார்க்கு நரகமும் துறக்கமே அறிவிலார்க்குத் துறக்கமும் நரகமே; அவரின் மேம்பட்டவர் அருள் மிகினும் தன்னின் மேம்பட்ட ஆற்றலுடையாரைப் பிழைப்பது அடாது; பெருமையோடு கூடிவாழும் நாளில் சிறுமை வந்தடுத்தால் அதனை ஒருபிறப்பெனக் கருத இயலாது; தீயூழ்வந்தடுத்ததாயின் எத்தகையோரையும் வாட்டும்; கல்வி கேள்விகளில் வல்லாரும் ஊழ் உருத்த முந்துமாயின் அவர் கற்றனவும் கேட்டனவும் பயன்படா; ஒளித்திருந்தாலும் கற்றோர் புகழ் யாண்டும் பரவும்; அறிவுடையோர் பிழை செய்யார், அறிவில்லார் பிழைபடுவர் ஆயினும் அதனைப் பொறுத்தல் பெரியோர் கடன்; பல நூல்களைக் கற்றறிந்தாலும் உபதேசம் வேண்டும்; பூரியர் குழாத்தைச் சீரியோர் சேரினும், சீரியோர் குழாத்தைப் பூரியோர் சேரினும் அவ்வவராக மதிக்கப்படுவர்; ஒருசமயத்திலுள்ளோர் தமது சமயநூலின் எல்லையை அறியாமல் பலபல சமயத்தும் சென்று உறுதியின்றி உழல்வர்; தத்தம் கோத்திரத்துக் கொள்வதும் கொடுப்பதும் உலகில் இல்லை; கற்புநிலையைக் காட்டத் தம்கையால் முல்லையை வளர்த்தல், மேருவைச் சாம்பூநதம் முழுதும் வளையாதிருத்தலும் நந்தி நந்தினி தணிகாசலத்தை முழுதும் வளையாதிருத்தலும்; காந்த புராணத்துச் சங்கரசங்கிதையின் பிற்கூற்றிலே தணிகை மான்மியம் கூறப்பட்டிருத்தல்; ஆறுகுவடுகள் பொருந்தி அறுமுகனே ஆயது அக்குன்றம் எனல்; சைவசித்தாந்தம் ஒருமையன்பிற் கேட்டுணர்ந்த உயர் முனிவர்; கடவுளாகிய தன்னோடு விராய உயிரின்வினைப்பயனைத் தான் அடையார்; அதிமதுரமரத்தடியில் யானை செல்லுமாயின் அதற்கு மயக்கமுண்டாம்; சிலந்திப்பூச்சி தன்வாயால் தன்மீது தானே வழிவையாது நூற்கூடு இயற்றிக் கெடும்; நின்றபாவனை இருந்தபாவனை கிடந்தபாவனைகளாக அங்கியை வைத்து அந்தணர் வேள்வியியற்றுதல்; வைகாசிப் பூரணை விசாகநாள் வல்லமையுள்ளாரே கொள்வர்; கீர்த்திப் பிரதாபங்கள்; குமரவேள் ஏவலின் வீரவாகுதேவரைக்கண்டு திருமால் முதலியோர் அஞ்சுதல்; பாம்பின் வாய்ப்பரிதி, கருவுட்படுகுழவி; கண்துயிலாதொழிதல்; தொண்டைநாடு துண்டீரநாடு எனவும் தண்டகநாடு எனவும் வழங்குதல்; முப்பாழ்; தைப்பூசத்தில் இறைவரைவழிபடல்; புரட்டாதித்திருவோணம் சோமவாரத் திருவாதிரைகளில் அகத்தியதீர்த்தத்தில் ஆடல்; தசகாரியம் சிவபுண்ணியம்; ஞானசத்திதரனை நண்ணுவோர் திருமாலாதியரையும் படைப்பர் எனல்; பாதகம் உபாதகம்

அதிபாதகங்கள்; பிணிகள் பலவற்றுள்ளும் பசிப்பிணியே மேலானது; இருபத்தெட்டுக்கோடி நரகங்கள்; பூதவுடம்பு, பூதபரிணம உடம்பு, பூதசாரவுடம்புகள்; கருவளர்ச்சி, கண்ணூறு கழிய நீறளித்தல் முதலிய செய்திகள் கூறப்பட்டுள்ளன.

அகத்தியன் அருள்பெறு படலத்தில் ஞானசத்திதரன் முதலாகவுள்ள முருகவேளின் பதினாறு மூர்த்தங்களின் தியானம் (64-79) கூறியுள்ளமை காண்க. 149-இதில் ஞானநூற்பொருளை உபதேசித்தல், ஞானசாத்திரம் தொடங்கும்போதும் முடிக்கும் போதும் செய்யும் உபசாரம்; சிவதருமோத்தர நூலில் கூறப்பட்ட செய்திகள் முதலிய திறப்படச் சொல்லப்பட்டன. சிவதருமோத்தர நூலின் உதவி இப்படலத்துக்கு இன்றியமையாதது.

வீராட்டகாசப்படலம் 62 - முதல் 76 வரை திருவேங்கடமலை வருணனை, வீராட்டகாசம் முதலிய தலப்பெயர்க்காரணம் 119, குமாரேசப்படலம் 4 முதல் 14 வரை தணிகை வருணனை முதலிய கூறப்பட்டிருக்கின்றன. திருக்குற்றால வருணனையும் உள்ளது.

உவமைகள் : வெஞ்சின மூண்டுழி வகுத்தறியார்போல், ஒருபொருட்கிடர்செயின் அவை மறுகணத்துறுகொல், பொருளினை .... ஆக்குவான் புகுந்து அழிப்பார்போல், ஏதுணவுண்ணினும் எவர்க்கும் வேள்கணை தீர்திறம் அரிது, நல்லவர் இன்புறத்தக்கது யார்க்கும் கழலற்ற இன்பப்பயனுய்க் களிப்பிப்பதன்று, மாய்ந்தும் தக்கவர் பூண்பரால் உதவி, பழி ஆசிலார்க் கடுப்பினும் ஆய்ந்துளோர் விடார், பல்லுயிர்தொறும் பாகத்தெல்லையில்புரம் பொடித்தவன் அருள் பொருந்தும், அருளினர் என்றுமவ் அருளிற் றீர்வரோ, விளலருந் தகையரும் மிடைந்தொருத்தர்பால் தளர்வு செய்வாரெனில் தாழ்க்கப்பாலரே, எடுத்ததோருடலுயிர் இகவு முற்றினும் அடுத்த ஆணவத்தின் மீட்டாதல் போல், சாத்துயர் ஏய்க்கினும் அகைநலத்து அனுங்கார் அமைந்தாரரோ, இனஞ்சாடுவோர் வெறுத்தற்கு அஞ்சுவரோ மற்றை வேற்றினம், மன்னுசிவம் சதாசிவனென்றுடலம் வெண்மை வாய்ந்தீசன் என நீலவுருவம் பூண்டு பின்னர் அரனெனச் சிவந்த வடிவம் தாங்கும் பெற்றிமைபோல், பரவு சிவஞானமுணர் அடியார் செங்கைப் படுத்த பொருள் பெரும் பயனைப் பயக்குமாபோல், நல்வினையார்க்கொரு செய்தொழிலில் கிளை பல்பொருள் வாய்த்திடும், பங்கமளாய் அலர் பட்டவர்பால் துயரேபலகால் துறுவிப்பர்கள், அறத்தின் உயிர்

துறக்கம் இறுப்பதுவேண்டா இதனுல் எய்துவாம்என உளத்தின் அறுத்தவர்போல், செயற்றலே நின்றுழப்பவர்கள் தேக்கெறிவர், சுற்றமெல்லாம் வேருக்கித் தொடர்ந்தவரை யோகிருத்தும் நற்றவர்போல். இழிவுளாருளும் ஏற்பவர்க்கெலாம் அழிவிலா வரம்அருளுவார் உளர், வினைகழிப்பிஞர்ந்து செல்லல் அங்கலாக் கையின் ஆவிபோன்றன, புரைத்ததாயினும் பெற்றது புல்லிதாப் பெருததிற் புகலாமென்றுரைத்த நன்மொழி, மந்திரம் தளேத்த மணிப்பணி அசைவற்றிருத்தல், மானமா முதிர் புதல் மயிர் யாப்பச் செல்லுருது நிற்றல், பூரியோர்குழாம் சீரியர் சீரியோர் பொதியிற் பூரியர் சேரிற் சேரும் அவ்வவராகவே மதித்திடப் படுவர், இருபெருவேந்தர் சேர்ந்தபோது செய்வரிசைகள், ஒரு வழிக் கோத்திரம் நண்ணிஞர்தமை நீவி ஒள்ளியோர்ப் புணர் மாதர்போன்று, அறஞ் செயப்பெறும் பாவங்கள் அழிந்தென (பக் - 683), வேலியே பயிரைமேயின் வேறெருரு காப்புண்டோ (பக் - 685), வெள்ளறிவிஞேரின் ஐம்பொறிகளும் கண்டவிடத் திற் செல்லல்போல் (பக் - 709)என்பனவும்;

வனப்பு அறிவு திறம் அருள் இவற்றில் ஒருவரையுயர்த்த முருகனே உவமித்தல், அறுமுகன் தணிகைவரை படைத்தான் எனல், ஓவவம்பலம் இரசதவம்பலம் ஒளிர்பொனம்பலம் கண்டோர் பாவநுங்கொளி அரதன அம்பலம் பதமெடுத் திறையாடல், சுத்ததத்துவம் அசுத்ததத்துவம் சுத்தாசுத்ததத் துவம் தத்துவாதீதம் என்பன, தோய்ந்து நீர் பரிதிக்கு இறைத் தலது தூநீரும் வாய்ந்த மாதவர் உண்டிடார், ஓங்கும் அவன ருட்குரியார் தமக்கடுத்தாரையும் போற்றும் உறுவன்மான, வெற்றிவேலிறைவன்கொண்ட விச்சுவருபம், இறைஞ்சும் அடி யார்க்கு அன்பின் அளவைக்கு இயைய ஆரருள் சுரக்கும் நதிச் சடில வித்தகர், கூடினவர் முன்பு குழையாருமுளரோ, நன்கு செய்த முன் நல்வினைப்பயன் தன்கண் வந்துபோம் தனுவோடு ஒத்ததே, விரிஒளிமணி கைப்பெற்றவர் பொளிகல் விற்றுண விழைவுருர், நீரில்போட்ட கல்லேப் புணையில்லாமல் கரையில் ஏற்ற இயலாது, கைத்தலநெல்லி, கலுழற்கண்டு பைத் தவிர் அரவமென்ன, புயல்வளர் பருவத்தாழ்ந்த புற்றெழும் ஈயல்போல, உலேபடும் இளவெந்நீரின் உளமகிழ் கமடம், கொலேமுகத் தூண்டில் காணுக் கொழுநிணம் விழுங்கும் மீன் போல், முடவன் கொம்புத்தேனே விரும்பிஞற்போல, தாழ் மடைக்கண் தோயம் பரந்தென, ஆடுகள் ஓரிடத்துத் தழை மேயாது பல இடங்களிலும் சென்று மேய்தல், மயில் தன்குஞ்சு களேத் தோகையினுள் அடக்கிக்கொண்டு பருந்தைச் சீறுதல், விடங்கழிகாலத்து அராமெலிதல், அணைகடந்தபெருவெள்ளம்,

கண்குத்திற்றென்று தங்கையினை நீப்பாராார், கடலில் அலை கின்ற துரும்பைத் தெப்பமாகப் பொருந்துதல், விளக்கிலுள்ள திரியானது வெம்மைபொருந்தும் நெய்யைச் சொட்டுமாறு போல, கடலை நுண்மணலால் கரைகோலிக் காத்தல்போல, சிவனருளிற் கலந்த பெரியோர்இருண்மலத்தோடு இயைந்தென, மலநோய் நீங்கினமாத்திரத்தில் உண்மைஞானம் விரைந்தணு குதல் போல், தலைப்பெயலால் முளைத்தெழுந்த வித்துப் பின் பெயலால் தளிர்த்துப் பயிராவதுபோல், அரசரால் தள்ளுண் டோரை ஏனையோரும் கலவார் (655 பக்), தேவர்கள் ஆகாய மார்க்கமாகச் செல்லும் மந்திரத்தை மறந்து விடுவாராயின் பூமியில் விழுந்து கலங்குவர் (பக்—657),விறகுக்குத்தக அக்கினி கதிப்பதுபோல, சிவனைக் கருதாதவர் குறையுறுதல்போல, சிவனைத்தியானிக்கும் காப்பை அறியாதார் உயங்குறுதல்போல (பக்-660) இறைவரை எண்ணுர், கூற்றுக்கிரையாதல்(பக்-664), இறைவர் மலத்தை நீக்கலும் உயிரானது அருளுக்கு முற்படு மாறு போல (பக்-665). எளியோரை வலியோர் வாட்டின் வலியோரை அடக்கி முறைநிறுத்தல் பேரரசின்கடன், ஒருவர் குறையை மாற்றும் கருத்துடையார் தமக்குக் குறை தேடிக் கொள்ளார், கன்னவாசலில் நுழைவோன் அகத்தாரைக்கண்டு பிற்படுதல், உலககாரியத்தால் அதற்குக் காரணனும் மலமும் பிறவும் உள எனச் சிந்தித்தல், ஊழ்நீங்கினுல் அதனைப் பின் பொருத்துவார் யாவர், ஊழ்வந்தடுப்பின் உடங்கிருந்தோரிற் பிரியார் யார், ஆயன் கொன்றமரம் என்பனவும்;

இராமன் அருள்பெறு படலத்தில் விபூதியின் பரியாய நாமங்கள், பெயர்க்காரணம், வகை, விபூதிசெய்தல், தரிக்கும் இடமும் அளவையும், உருத்திராக்கமணிதல் முதலிய கூறப் பட்டுள. பக்குவமில்லார்க்கு உண்மைப்பரஞானம் எந்தக் கருணையால் இயைய இயைத்தாலும் கொள்ளார், மாரவேள் கணையலைத்தோர் வழியறியார், சிற்றிலிழைத்தாடும் சிறுமியர் மனையறம் புரிகாலத்து நினைப்பின் நகைதரும் எனல், மங்கைய ரால் துயர்பெரிதும் வளரும், உடலின் இழிவு, உள்ளம் அடங்கு றினல்லால் தெள்ளரிய சிவஞானம் சிவணுது, பாலினது அடியிற் கிடத்திய நீலக்கல்லின் ஒளி பால்முழுதுமாய்த் திகழும், மல மாயை கன்மம் ஒழியினல்லால் முத்திவாழ்க்கையில்லை, பெண் பிறப்புப்போல் தாழ்ந்ததில்லை, நீரோட்டத்தின் எதிர்ப்பட்ட புல்லும் அதன்வழியே ஒழுகும், காந்தம் இரும்பை ஈர்க்கும், பெருமை கல்வி தவம் முதலிய அருமையானவற்றை யெல்லாம் காமநோய் அழிக்கும், பேரறிவுடையாருக்கு ஒன்றைச் சொல் லித் தெருட்டுவார் யாவரே, மந்திரம் யாத்த வயின் அணுகா

மணி நாகம், கண்ணடிக்குள் தோன்றும் சாயையை வேண்டி மழவழல், இறைவர் உயிர்களின் ஆணவ இருள்கெடக் குருவுருக் கொண்டு எளிவருதல், சிவபெருமானுடைய அடியாரையடுத் தாரையும் விலங்கு பாம்பு முதலியன நோக்கா, வரால்மீன் தகட்டு வடிவாயிருக்கு மெனல், வள்ளிக் கொடியின் முதலை அரிந்தால் மேலேயுள்ள கொடி வாடும், ஊழால் வரக்கடவன யாவருக்கும் யாங்கும் தணிப்பரிது, குவளைக்கு நீரையின்றியும் ஆருயிர்க்குச் சிவபெருமானையின்றியும் உடலுக்கு உயிரை யின்றியும் பற்றுக்கோடில்லை எனல், உற்றார்க்குரியவர் பொற் றொடிமாதர், நன்னிமித்தங்கள்; விரிச்சி குலாவுதல், இடனுடல், காகம் இடத்திலிருந்து வலனுதல் (பக்-647), மனோவாக்குக் காயத்தைக் கடந்த திருவடி அவற்றால் பணிக்கண் விரை வார்க்குக் கூடுதல், பொருட்செல்வம் பெற்றாரே அறத்தையும் இன்பத்தையும் அடைவர், சந்திரன் பரிவேடம் கொள்வதும் வேங்கை பூத்தலும் விவாகம் செய்தற்குரியது (பக்-648), அன்னை அகலும்போது சிறாரிடம்கூறி ஆற்றி அகலுதல் அரி தெனல், நடு இரவில் நொச்சிபூத்து உதிர்தல் (பக்-665), பெண்கள் சிறுபருவத்தில் தாய்சீறினும் விடாதுபற்றி அழுவர் யௌவன காலத்திலே நாயகர்சீறினும் அவரையேமருவியழுவர் எனல், வைக்கோற்புரி உடைந்தாற்போல அரவங்கள்செல்லும், முருகனெனவும் தெய்வயானையெனவும் வாழ்க என வாழ்த்து தல், இளையனும்தான் இணையிலா முதியனுந்தான் எனும் முருகவேள், முருகக்கடவுளுக்குக் கோழிவாங்கிவிடும் பிரார்த் தனை (பக்-674), இந்திரஞாலத்தேர் நினைக்குமுன் எவ்விடமும் போய் மீளுவதெனல், பசுவின் தலையில் எழும் கொம்புக்கு வேங்கை அஞ்சுமா (பக்-683) என்பனவும் பிறவும் காண்க.

சீபரிபூரணநாமப் படலத்தில், சிங்கமுகன்கூற்று 177-186, ஒன்றுதன் முதன்மை யொன்றே மதிப்பவர்க்குணர்த்தல்வீண், அழியுங்காலத்தில் எவ்வளவு அறிவுறுத்தினும் எள்ளளவும் கைக்கொள்ளார் என்பன;

கம்பராமாயணம் - அயோத்தியாகாண்டம் - மந்தரை சூழ்ச்சிப் படலத்து வரும் 'வெயின்முறைக் குலக்கதிரவன் ..... மயின்முறைக் குலத்துரிமையை' என்னும் பகுதிக்குக் களவுப் படலத்திலே 244-ஆம் செய்யுளில் 'பலாவம் பொழிலி னொருதா யுயிர்த்த பலமயிற்கும், கலாவம் புனைந்த களிமயின் மூத்த தெனக்கருத' என இந்நூலாசிரியர் உணரவகுத்துக் காட்டுதல் எத்துணைப் பெருமிதத்தை எம்மனோருக்கு விளைவிப்பதாம்.

அனிச்சப்பூ : 'அனிச்சப்பூக் கால்களேயாள் பெய்தாள் நுசுப்பிற்கு, நல்ல படாஅ பறை' 'அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர், அடிக்கு நெருஞ்சிப் பழம்' 'மோப்பக்குழையும் அனிச்சம் முகந்திரிந்து, நோக்கக் குழையும் விருந்து' என்பன வள்ளுவர் வாக்கு.

அனிச்சப்பூவை மென்மைத் தன்மைக்குக் காட்டாகக் கூறுவர் பெரியோர். அனிச்சம், கோட்டுப்பூ கொடிப்பூ நிலப்பூ நீர்ப்பூ என்பவற்றுள் எதனைச் சார்ந்ததென அறியலுறுவார்க்கு இவ்வாசிரியரே விளங்க அறிவிக்கின்றார். நாட்டுப்படலம் 108 ஆம் செய்யுளில், 'கமலஞ் செங்கழுநீ ரனிச்சம் கமழ், குமுதம் வள்ளி கொடிவிடு சைவலம்' எனக் குறிப்பிடுகின்றார். 'சைவலந்தா மரைகுவளை தண்குமுதம் கொடிவள்ளை, தெய்வமணம் கமழ்நீலம் திகழனிச்சம்' என விநாயகபுராணத்தும்; 'நடக்கலுற்றமையால் நம்பகையெல்லாம், அடர்க்கலுற்றனம் அத்தகுதாட்பகை, கிடக்கலுற்ற அனிச்சமும் கீழ்ந்துமென்(று), இடக்கலுற்ற அவற்றினை யெங்கணும்' எனத் திருவானைக்காப் புராணத்தும் இவர் அருளிச்செய்தமை பெரிதும் விருந்தாம்.

இலக்கணக்குறிப்பு : களவுப்படலம் - பன்னீருயிரும் பதினெண்ணுடலும் (223), குன்றியலுத்தொடர் (227), பெயர் வினை,சேரின் (228) சடம்படும் ஆவியும் ஆவியும் (233), ஒன்பானுயிர் (261), வீராட்டகாசப்படலம் - ஆன், ஈன் (89) என்பன.

அணிகள் : தற்குறிப்பேற்றம், உருவகம், உவமம், சிலேடை முதலிய அணிகள் வந்துள்ளன. நந்தியுபதேசப் படலத்திலே இருபொருட் சிலேடை 73, முப்பொருள் சிலேடை 74, நாற்பொருட் சிலேடை 75, ஐம்பொருட் சிலேடை 76, அறுபொருட் சிலேடை 77 வந்தமைகாண்க.

தாவரம் : காந்தள், வேங்கை, ஏனல், அகில், சந்து, குங்குமம், கொன்றை, தாமரை, குமுதம், காஞ்சி, கரும்பு, நாகம், நீலம், ஞாழல், குரவம், வள்ளி, தோரை, வேய், மா, ஆசினி, அசோகம், குறிஞ்சி, கோங்கு, மரவம், பாடலம், இருப்பை, பூவை, பிடா, குமிழ், வரகு, சாமை, சொன்னல், துவரை, முல்லை, வஞ்சி, மருது, கற்பகம், கமுகு, கழுநீர், தாழை (தெங்கு), வாழை, நாகவல்லி, மஞ்சள், இஞ்சி, அனிச்சம், வள்ளை, சைவலம், கழை, குளவி (மரமல்லிகை), இறுங்கு, மாதவி, கறி, எருக்கு, வருக்கை, பாலை, பனை, கூதளம் முதலியன.

விலங்குகள் : வேழம், மான், வருடை, உழுவை, உம்பல், ஆனிரை, மேதி, எண்கு, மானமா, அரி, மந்தி என்பன.

பறவைகள் : மயில், வாரணம், கிள்ளை, குரால் (கோட்டான்), தூதுணம்புறு, கோகிலம், நாரை, கம்புள், குரண்டம், அன்னம், பூவை, நேமி, மகன்றில், கலுழன், சகோரம், வண்டானம், குருகு, பெருநாரை, சக்கரவாகம், பருந்து முதலியன.

நீர்வாழ்வன : மகரம், இறுல், சுறு, வாளை, வரால், ஞெண்டு, கூர்மம், இப்பி, இடம்புரி, வலம்புரி, சலஞ்சலம், பாஞ்சசன்னியம், இடங்கர், யானைமீன், திருக்கை என்பனவும் பிறவுமாம்.

ஊர்வன : ஈயல், அரவம், சிலந்தி.

நதிகள் : சேய்நதி, நந்திநந்தினி, முகலி, பாலி, சாம்பூநதம்.

வாத்தியங்கள் : கின்னரம், தண்ணுமை, சாப்பறை, தொண்டகம், பதலை, தக்கை, தகுணிச்சம், குடமுழா, வீணை முதலியன.

படைக்கலங்கள் : வயிரம், ஈட்டி, வேல், சிலை, நாந்தகம், கிடுகு, கூவிரம், கணை, வாள், உலக்கை, கணிச்சி முதலியன.

சைவசித்தாந்தக் கருத்துக்கள் : பக் - 556 - செய் 232, பக் - 563 செய் 259, பக் - 566 செய் 270, பக் - 598 செய் 376, பக் - 631 செய் 478, பக் - 632 செய் 481, பக் - 645 செய் 517, பக் - 646 செய் 521, பக் - 651 செய் 537, பக் - 665 செய் 574, பக் - 668 செய் 585 முதலியன.

களவுப்படலத்தில்: மாசிலாமணி, போதிவனம்; காவிரி, ஆனைக்கா, வெண்ணுவல்; மதுரை, கடம்பு, மீனாட்சியம்மையார் அரசாட்சி செய்தல்; மந்தாநிலம், தமிழ், மலயவெற்பு, சந்தனத்தழை, சுசீந்தரம், கொல்லிப்பாவை, சிவபுரம் என்பனவும் பிறவும் வந்தன.

சில சொற்கள்: இவர்வாக்கில் மறுவலும், இருவி என்னும் சொற்கள் அடிக்கடி வந்துள்ளன.

நொண்டல், செண்ணம், இலிற்றல், தேத்தடை, தெவ்வி, கனவி, முரஞ்சல், விட்டரம், முழுவி, அந்தித்தல், நிரந்தரித்தன, புயக்கல், பறப்பை, விலங்கித்தல், அஞ்ஞை, தொழித்தல், கோணம், வஞ்சம், ஓசனித்தல், போத்து முதலிய அருஞ் சொற்கள் பல வந்தன.

வள்ளி திருமணப்படலம் செய் 80: வாசனைப்பொருள்கள் கூறப்படுகின்றன.

வேதங்களெல்லாம் 'சுப்ரமணியோம்' எனக்கூறுதலையும் இவ்வாசிரியர் விதந்தெடுத்துக் கூறியுள்ளார்.

தணிகைப்புராணச் செய்யுட்டொகை 3161. களவுப் படலத்தில் கோவைக்கலித்துறைச் செய்யுட்கள் மிக்கன.

பறப்பை என்பது பறவை எனப் பொருள்படும். அவை கங்கசயனம், கருடசயனம் முதலியன. கூர்மசயனம், சேஷ சயனங்களும் கொள்ளப்படும். சயனம் - கட்டும் வேதிகையின் வகைகள் என்பர் பெரியோர். இனி, பறப்பை - யாககுண்டத்தின் கீழ் வேதிகை: அது கூர்மமாதிய கிடக்கைபோலக் கட்டப் படுதலின் கூர்ம சயனம், கருடசயனம், கங்கசயனம், சேஷ சயனம் என நான்குவகைப்படும். கருடனாகிய பறவைபோல் அமைக்கப்படும் வேதிகையைப் பறப்பை என்பர் கந்தபுராண காரர் (வேள்விப்படல - 3 செ). நெய்விடு பாத்திரத்தையும் பறப்பை எனவே வழங்கப்படும். (கந்தபுரா - சாலைசெய்பட - 23 செய்). இதனால் ''பறப்பை படுத்தெங்கும் பசுவேட் டெரியோம்பும்'' என்னும் தேவாரப்பாடலில் 'பறப்பை' என்னும் சொல் லுக்குப் பொருள் இன்னதென விளங்குகின்றதன்றோ!

பிறநூற் கருத்துக்களையொத்த செய்யுட்பகுதிகள் :-

காப்பு - 2: ஊற்றிருந்த மும்மதத்து (சிந் 152).

நாட்டுப்படலம் - 39 : இலகு காடிகைப்பரி கொண்டவே (சிந் 1778); 46; இழுமென இழிதரும் அருவி (முருகு 316), இழுமென்று வந்தீங்கிழியும் மலையருவி (சிலப்), இழுமென் ஓதையின் இழிதரும் அருவி (ஆனைக்காப்புரா).

நகரப்படலம் — 17: நித்தில முலையினார்தம் நெடுங்கணால் நோக்கப் பெற்றும், கைத்தலம் தீண்டப் பெற்றும் கனிந்தன மலர்ந்த காண்க (சிந் 1907), அடியானும் விழியானும் அணைப் பானும் சுவைப்பானும், வடிவாரு நிழலானும் வசையானும்

இசையானும் . . . . காரிகையார் வழிநின்ற (ஆனைக்காப்பு - ஆரஞ்சாத் - 26); 97: சொற்கள் பொருளில்லா ஓசையாதல் (சிந் 116). 63: ஓசனிக்கின்ற வன்னம் (சிந்தா - 2652).

நாட்டுப்படலம் - 114: செந்நெலின் - களிறுமாய கழனி யாக்கம் (சிந்தா 1617); களிறுமாய்க்கும் செந்நெலங்குலை (நைடத - சுயம் - 138); யானை மறையக் கதிர்த்தலைச் சாலிநீடி (பிரபுலிங் - மாயையுற் - 11); களிறு மாய்க்கும் கதிர்க் கழனி (மதுரைக்காஞ்சி).

வீராட்டகாச - 63: அதிமதுரத்தழையால் யானைக்குக் களிப்புமிகும் (சிந் 750) 26: கூற்றத்தைக் கொம்மை கொட்டிக் குலத்தொடு முடியுமென்பார் (சிந் 1109); கூற்றம், புறங் கொம்மை கொட்டினுரில் (பழ 126); 3: மங்கல வெள்ளை வழித்து முத்தீர்த்தபின் (சிந் 1467); 34: தனிதி னேகுபு (சிந் - 1421); 62: உழுதுசாந்தம் கோட்டுமண் கொண்டமார் பம் (சிந் - 2294); வானவருடலம் கோட்டுமண் கொண்டற வளர்ந்து (கூர்மபுரா — ஆதவர் - 8).

சிபரிபூரண - 48: தேனைமாரியன்னுன் (சிந் - 161).

நந்தியுப - 29: சிலம்பி வலந்ததுபோல் போர்வை போர்த்து (சிந் - 340); 31: மானிடம் பழுத்தன கிலுத்தம் (சிந் - 1900); மானிடம் பழுக்கும் கிலுத்தநீள் வனம் (கூர்மபுரா - சம்புத் தீவி - 32).

புராணவர - 43; மலர் தெகிழ்ந்த நாற்றமும் (சிந் - 1440); தெகிழ்ந்த காமத்துச் சிந்தனை செய்தனிர் (பேரூர்ப்பு - கரிகால் 31).

நாரதன் - 10: இலைப்புரை கிளைத்திட்டேமே (சிந் - 174); இலைப்புரை கிளைத்துவாடும் துவாரகைக்கிறை (காஞ்சிப்பு - வாணீச 34).

குமாரேசப் - 6: அன்னமு மகன்றிலு மணிந்து (சிந்-1250).

களவுப்படலம் - 102: திருவே புகுதக (சிந் - 2121); 129: திருநீர்க் குமரியாட . . . . முப்பொழியு மென்றான் (சிந் - 2020); 430: நிணந்தென் நெஞ்ச நிறைகொண்ட கள்வன் (சிந் - 1311); 521: கால்வரை கீழ்ந்தென (சிந் - 1157, 2727).

வள்ளிநாயகி . . 60 ; செண்ணவஞ்சிலம்பு (சிந் - 1333): செண்ணவஞ்சிலம் போசையும் (பேரூர்ப்பு - நகரப் 77); 74: கவரிகன் றூட்டப் போந்தபால் (சிந் - 49); 77: விலங்கரம் பொருத சங்கின் வெள்வளை (சிந் - 2441); 59: முனித்தலைக் கண்ணி நெற்றிச் சிரூர் முழாலிற்புல்லி (சிந் - 2541).

அகத்தியன் - 79: தீத்தும்மு வேலான் (சிந் - 2348); எரிதும்மி யிலங்கு வைவேல் (கூர்ம - ஆதவர் - 8).

திருக்குறட் கருத்துக்கள் அமைந்த செய்யுட்களும் பல. அவை வருமாறு:—

நாட்டுப்படலம் செய் - 4: ''இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும், வல்லரணும் நாட்டிற் குறுப்பு'' (குறள் 737) இதனை 'வருபுனல் . . . . பல்லுறுப்பிற்றுகி' எனவும்; ''பிணி யின்மை செல்வம் விளைவின்பம் ஏமம், அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து'' (குற - 738) என்பதனை 'பொங்கிய செல்வ . . விளைவு நன் கணிந்து' எனவும்; ''தள்ளா விளையுளும் தக்காரும் தாழ் விலாச், செல்வமும் சேர்வது நாடு'' (குற - 731) என்பதனை 'தாழ்வில் திருவினர் . . . . செறிந்தது' எனவும் கூறியருளியமை காண்க.

செய்யுள் - 5: ''பெரும்பொருளால் பெட்டக்க தாகி'' (குற - 632) என்பது 'மலிபெரும் பொருளாற் பெட்கும் வண்மையும்' எனவும்; ''நாடென்ப நாடா வளத்தன'' (குற - 739) என்பது 'நாடாதியாதும் மெலிவுக உதவும் வாய்ப்பும்' எனவும், ''கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்றூ நாடு'' (குற - 736) என்பது 'மெலிகலார் மெலிந்த காலும் நலிதரா வளனும்' எனவும் மேற்கொள்ளப்பட்டன. ''அருங்கேட்டால் ஆற்ற விளைவது நாடு'' (குற - 732) என்பது 'எல்லா நலிவுநீத் தாற்ற வீண்டும் ஒலிகெழு விளையுளோடும்' என அமைக்கப் பட்டது. எல்லாநலிவும் என்றது 'மிக்க பெயலோடு பெய லின்மை எலி விட்டில்கிளி - அக்கணர சண்மையோ டாறு'' என்றதை நோக்கி என்க.

செய்யுள் - 6: ''பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும், கொல்குறும்பும் இல்லதுநாடு'' (குற - 735) இதன் பொருளை 'பல்குழு வேந்தலைக்கும் படர்கொலைக் குறும்பு தீய பல்கு முட்பகை' என்றமைத்தார். ''உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும், சேரா தியல்வது நாடு'' (குற - 734)

என்பதனை 'உடற்றும்பகை யுறுபசி திராநோய் புல்குறி தானு மின்றி' என்றமைத்துக்காட்டினர். ''பொறை யொருங்கு மேல் வருங்கால் தாங்கி இறைவற்(கு), இறையொருங்கு நேர்வது நாடு'' (குற - 733) இதனை 'பொறையொருங் குறுகாற் றுங்கி நல்கிறை வேந்தர்க் குய்க்கும் நலத்தது' என அருளிச்செய்தார்.

வீராட்டகாசப் படலத்தில்: செய் - 105: ''பேதைமை யொன்ரோ பெருங்கிழமை யென்றுணர்க, நோதக்க நட்டார் செயின்.'' ; ''கடிதோச்சி மெல்ல வெறிக நெடிதாக்கம், நீங்காமை வேண்டு பவர்'' (குற - 562) அமைத்திருக்கின்றமை காண்க.

கலித்தொகைச் செய்யுளின் கருத்து முதலியவந்த இந்நூற் செய்யுட்கள் வருமாறு:—

நாட்டுப்படலம் 37-ஆம் செய்யுள் 'விழிக்குடைந்த மான் செவி....பாளை கழிக்கும்' என்பது, ''நுண்பொறி மான் செவி போல வெதிர்முளைக், கண் பொதி பாளை கழன்றுகும் பண் பிற்றே'' (குறிஞ்சிக்கலி - 7 செய், வரி 16 - 17).

நாடு - 39-ஆம் செய்யுள்....'வளகு மேய்ந்து சேவகங் கொளும் மாமதமொழுக்கும், குளகு தேரிய வருடைமான் குப்புறு மடுக்கத்து' என்பது, ''புணர்நிலை வளகின் குளகமர்ந் துண்ட, புணர்மருப்பெழில்கொண்ட வரைபுரை செலவின், வயங்கெழில் யானைப் பயமலை நாடனை'' (கலி - குறிஞ்சி - 7 செய்: வரி 20 - 22)

நாடு – செய் 44: 'குருவி யோப்புதங் கவண்கலால் குலைந் திரு வினத்தோடு, உருவ வாசினி யுக்கன' என்பது, ''ஆசினி மென்பழம் அளிந்தவை யுதிராத், தேன்செய் இருஅல் துளை படப்போகி'' (குறிஞ் - 5 செய்: வரி 10 - 12).

நாடு - செய் 52: 'தூதுணம் பறவைகள் தூதுண் டோவறக் காதலந் துணையொடு கழுமிப்புல்லுவ' களவுப் - 609 செய்: 'கல்லிரை தேரினும் வீழ்துணை நீங்கிற் கபோதகநோய், அல்லிரை யோத மனையது' என்பன; ''தூதுணம் புறவெனத் துதைந்த நின்னெழில்'' (குறிஞ்சிக்கலி - 20 செய்: வரி 16).

நகரப்படலம் - 125 செய்: 'நிலவு வெண் கரி வணக்கிய நிகரில்யாழ் தழுவி, மலரும் இன்னிசை யெழுப்புவர் மேனில மகளிர்'' என்பது, ''காழ்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல், யாழ்வரைத் தங்கியாங்குத் தாழ்பு'' (பாலைக்கலி - 2 செய்).

களவுப்படலம் - 492 செய்: 'பரிதி யுலகமெல்லாம், விருப் பவிர் மேகம் விளைப்பதன்றோ' என்பது ''கன்மிசை யுருப்பறக் கனைதுளி சிதறென, இன்னிசை எழிலியை யிரப்பவு மிவை வதோ'' (பாலைக்கலி - 15 செய்).

களவு - 339 செய்: 'சூடிய பூவும் பருகிய ஓலையும் தோகை யரும், நாடிய காலை நிகர்ப்பர்' என்பது, ''தோணலை முண்டு துறக்கப் பட்டோர், வேணீ ருண்ட குடையோ ரன்னர்'' (பாலைக்கலி - 22 செய்).

களவு - 392 செய்: 'கானவர் வார்விற் கணைபிழை யாதகண் ணூர்சிலம்பன்' என்பது, ''..தம்மையரும், தாம்பிழையார் தாந்தொடுத்த கோல்'' (குறிஞ்சிக்கலி - செய் - 3).

களவு - 330 செய்: 'பளிக்குரல் வேய்நெற் படுத்திபக் கோடுபற்றிச் செழுந்தேன், துளிக்குமென் கூந்தலர் வள்ளையி னேச்சு மைசூழ் சிலம்பா' என்பது, ''....வயக்களிற்றுக், கோடுலக்கை யாகநற் சேம்பி னிலைசுளகா'' (குறிஞ்சிக்கலி - 5 செய்).

களவு - 477 செய்: 'மாலை யருவியு மோங்குவ ஒண்டொடி யாய், அழுங்குவ தேநமக் காக்கிப்பொய்ச் சூளுற்ற வண்ணல் வெற்பே' என்பது ''தானுற்ற, சூள்பேணான் பொய்த்தான் மலை'' (குறிஞ்சிக்கலி - செய் - 5).

களவு - 478 செய்: 'மருளிற்பிணைந்து....பொய்ம்மை புகுந்திடினே' என்பது, ''பொய்த்தற் குரியனோ பொய்த்தற் குரியனோ'' (குறிஞ் - 5: 21 வரி) என்பதனையும்; ''நும்மோ ரன்னோர் மாட்டு மின்ன, பொய்யொடு மிடைந்தவை தோன் றின், மெய்யாண்டுளதோ விவ்வுலகத் தானே'' (அகம் - 286: 15 - 7 வரிகள்) என்பதனையும் கருதிவந்தமை காண்க.

களவு - 575 செய்: 'நொச்சிப்புதுமலர் வீங்கிருள் வீழ்வன நோக்குதுமே' என்பது, ''கூடுதல் வேட்கையாற் குறிபார்த்துக் குரல்நொச்சிப், பாடோர்க்கும் செவியொடு பைதலேன் யானுக'' (குறிஞ்சிக் - 10); ''நொச்சிப் பூவுதிர் நள்ளிருள் நடுநாள்'' (கல்லா - 2) என்னும் கருத்தைப்பற்றியது.

இனி, இத்தணிகைப் புராணத்தை முதன்முதலாக யாழ்ப் பாணத்து ஸ்ரீ சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் 1883-ஆம் ஆண்டிலே அச்சிட்டார்கள். அவர்கள் விண்ணப்பத்தின்படியே

அப்போது இவ்வாதீன நூல்நிலையத்திலுள்ள தணிகைப் புராண ஏட்டுச் சுவடிகளையும், மதுரை - இராமசாமிப்பிள்ளை அவர்கள் இவ்வாதீனத்தில் பாடங் கேட்டுள்ளபோது குறித்து வைத்திருந்த இப்புராணக் குறிப்பையும் அநுப்புவிக்கும்படி 16-வது குருமகாசந்நிதானம் மேலகரம் ஸ்ரீ சுப்பிரமணியதேசிக மூர்த்திகள் கட்டளையிட்டருளினார்கள். அச்சிட்ட பிள்ளையவர்கள் எக்காரணத்தாலோ அவற்றுள் குறிப்புரையை அச்சிடாமல் புராணமூலத்தைமட்டும் அச்சிட்டு வெளிப்படுத்தினார்கள். பின்பு, சில (30) ஆண்டுகட்குமுன் ஸ்ரீ கா. நமச்சிவாய முதலியா ரவர்கள் தணிகைப்புராணத்தை அச்சிட்டனர். அப்பதிப்பிலே சிதம்பரம் ஈசானியமடம் ஸ்ரீ இராமலிங்கசுவாமிகள் தமது கையால் எழுதிவைத்துள்ள குறிப்பையும், செந்தமிழ் முதல் தொகுதியில்: பாலவநத்தம் ஸ்ரீ பாண்டித்துரைசாமித் தேவ ரவர்கள் எழுதியுள்ள இருபொருட்சிலேடை முதலிய சிலேடை களின் உரைக்குறிப்பையும், சுன்னாகம் - ஸ்ரீ குமாரசாமிபிள்ளை யவர்கள் எழுதி வெளியிட்டுள்ள ஆராய்ச்சிக் குறிப்பையும் சேர்த்துப் பதித்துள்ளார்கள்.

இப்போது ஆதீன வெளியீடாக வரும் இப்புராணக் குறிப்புரை, என் தமிழாசிரியர்களில் ஒருவரும் இவ்வாதீன வித்துவானுமாகிய ஸ்ரீ பொன்னோதுவாமூர்த்திகள் ஸ்ரீ சே. ரா. சுப்பிரமணியக் கவிராயர் அவர்களிடத்திலும், ஸ்ரீ ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகளிடத்திலும் இரண்டுமுறை பாடங்கேட்ட படியே எழுதிவைத்திருந்த பெறலரும் சரக்கறையாகிய குறிப் புரைகளாம். இக்குறிப்புரை எழுதிவைத்துள்ள காலம் ஸ்ரீமத், உ. வே. சாமிநாதையர் அவர்கள் முதன்முதலாக சீவகசிந்தா மணியைப் பதித்த கி. பி. 1887-ஆம் ஆண்டின் முன்னரென்று தெரிகிறது. ஸ்ரீ பொன்னோதுவாமூர்த்திகள் யாழ்ப்பாணத்து ஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் மருகரும் மாணவகரும் ஆகிய ஸ்ரீ பொன்னையா பிள்ளையவர்கள்பால் திருவாவடுதுறை மகா லிங்கம்பிள்ளையுடன் கம்பராமாயணம் கேட்பதற்குமுன்னரேயே தணிகைப்புராணம் முதலியவற்றை நன்கு ஆராய்ந்து பாடங் கேட்டவர்கள். ஆதீனவித்துவானாக இருந்து, 1888-ஆம் ஆண்டில் குன்றக்குடியிலுள்ள திருவண்ணாமலை ஆதீனத்துக்குத் தலைவராகச் சென்று விளங்கிய ஸ்ரீ ஆறுமுகத்தம்பிரான் சுவாமி களிடம் இரண்டாம் முறையாகத் தணிகைப்புராணத்தை ஓதுவாமூர்த்திகள் பாடங்கேட்டனர். அப்போது அவர்களுடன் தணிகைப்புராணப்பாடம் கேட்டவர்கள் பின்பு திருப்பனந்தாள் காசிமடத்துத் தலைவர்களாக விளங்கிய ஸ்ரீ சொக்கலிங்கத் தம்பிரான் சுவாமிகளாவார்கள்.

மகாவித்துவான் பிள்ளை அவர்களுடைய மாணவர்களுள் ஒருவராகிய பெரியண்ணபிள்ளை அவர்கள்பால் தமிழ் நூல்களைப் பாடங்கேட்டிருந்த என் தந்தையார் த. ஆ. சபாபதிப் பிள்ளையவர்கள்; ஸ்ரீ பொன்னோதுவாமூர்த்திகளும், உரத்தூர் - ஸ்ரீ கோ. வைத்தியலிங்கம் பிள்ளை அவர்களும், பழநி - ஸ்ரீ குமாரசாமித்தம்பிரானும் ஸ்ரீ பொன்னையாபிள்ளை அவர்களிடம் யாழ்ப்பாணத்துக்குச் சென்று பாடங்கேட்டிருந்த காலத்திலேதான் தாமும் சென்றிருந்து பல நூல்களை முறையாகப் பாடங்கேட்டார்கள். திருவிரும்பூளை என்னும் ஆலங்குடியில் என் தந்தையாரவர்கள் இருந்தபோது மேற்கண்ட குமாரசாமித் தம்பிரான் 12 ஆண்டளவிலே உடனிருந்தார்கள். அப்போது அடிக்கடி ஸ்ரீ பொன்னையாபிள்ளையவர்கள் ஆலங்குடிக்கு வந்து தங்கியிருந்து கந்தபுராணப் பிரசங்கம் செய்வார்கள்.

இனி, முற்கூறிய ஈசானமடம் இராமலிங்க சுவாமிகள் சின்னப்பட்டம், பேட்டை - ஸ்ரீ நமச்சிவாயதேசிகர்பால் பாடங் கேட்டுச் சிறந்தவர்கள். அப்போது அவர்களுடனிருந்து தமிழ் கற்றவர்கள் சூரியனார்கோயில் ஆதீனத்து ஸ்ரீ முத்துக்குமார தேசிக சுவாமிகள். பாலவனத்தம் ஸ்ரீ பாண்டித்துரைசாமித் தேவரவர்கள் இவ்வாதீனத்து ஸ்ரீ பழநிக்குமாரத் தம்பிரான் சுவாமிகளிடத்திலும், மதுரை - இராமசாமி பிள்ளையவர்களிடத்திலும் பாடங்கேட்டுச் சிறந்தவர்கள். ஆகலின், தணிகைப் புராணத்துக்குக் கிடைத்தவுரை முழுவதும் திருவாவடுதுறையாதீனத்திலே முறையாகக் கற்றுக் கேட்டவுரைகளே என்பதில் யாதும் தடையில்லை. ஸ்ரீ சே. ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்களும் பேட்டைப் பண்டாரச்சந்நிதிகளிடமே நன்கு கற்றுத் தேறியவர்கள்.

இப்புராணத்தைப்பற்றிய விரிவான ஆராய்ச்சியையும் இம் முகவுரையிலேயே சேர்த்திருக்கின்றேன். நூலாசிரியர் வரலாறு, செய்யுள் முதற்குறிப்பகராதி முதலியவைகளும் இப்புத்தகத்தில் இடம்பெற்றுள்ளன. இந்நூலைக்கற்கும் மாணவர் நன்கு ஆராய்ந்து கற்கவேண்டும் என்னும் கருத்தால் ஆராய்ச்சியில் குறிக்கப்பட்டுள்ள பல செய்திகட்கு இடங்களை எடுத்துக்காட்டாமல் வாளாவிட்டிருக்கிறேன். எனினும், சிலவற்றிற்கு இடமும் காட்டப்பட்டுள.

இவ்வாதீனத்து முனிவர்பிரானாகி விளங்கிய கவிராக்ஷஸ - ஸ்ரீ கச்சியப்பமுனிவர் அருளிய இந்நூலையும், என் தமிழாசிரியர் ஸ்ரீ பொன்னோதுவாமூர்த்திகள் எழுதியுள்ள குறிப்புரையையும்

திருவருளும் குருவருளும் கூட்டத், தக்க முறையிலே நன்கு ஆராய்ந்து அச்சிடும்படி கட்டளையிட்டருளி, ஆவன செய்து அநுக்கிரகித்தருளிய இருபத்தொராவது குருமகாசந்நிதானமாக வீற்றிருந்தருளிச் சித்தாந்த சைவச் செங்கோல் செலுத்தி ஆண்டுகள்தோறும் சித்தாந்தசைவ மாநாடுகளையும், திருமந்திர மாநாடுகளையும் கூட்டுவித்துச் செந்தமிழ் மக்களைச் செந்நெறியிலொழுகச் செய்துவரும் **ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக சுவாமிகள்** பெருங்கருணைத்திறம் யாவரானும் என்றும்மறவாமல் போற்றிப் பாதுகாத்தற்குரியதாம். அதனால் யாமெல்லாம் என்றென்றும் உய்வோமென்பதில் ஐயமில்லை.

ஒன்றுக்கும்பற்றாத எளியனேனையும் தன்னருட்பணிக்குரிய வனாகத் தொண்டுகொண்ட செந்தமிழ்ப் பரமாசாரியராகிய ஸ்ரீ சுப்பிரமணியமூர்த்தியைச் சிந்தித்து வந்தித்து வாழ்த்துதலையன்றி வேறு என்ன செய்யக்கடவேன். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தின் திருவடிகள் நீடுவாழ்க.

"தேசிக நாதன் சிவஞான தேவன்செங் கைத்தலமுன்
வீசிநின் றூடிய வம்பல வாணன் வியனுலகம்
பேசிய பஞ்சாக் கரவன் பிறங்கருட் டாண்மலரைக்
கூசிநின் றேத்திய மாதவத் தூர்க்கென் குறையுளதே."


இங்ஙனம்,

சித்தாந்தசைவமணி—

திருவாவடுதுறை
16—10—1959

த. ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளை,

ஆதீனவித்துவான்.



கவிராக்ஷஸ ஸ்ரீ கச்சியப்ப முனிவர்

ஸ்ரீ கச்சியப்பமுனிவர் வரலாறு

ஸ்ரீ கச்சியப்பமுனிவர் சற்றேறக்குறைய நூற்றெழுபது வருஷத்திற்குமுன் தொண்டை மண்டலத்திலே, தணிகைத் திருப்பதியிலே, காஞ்சீபுரத்துப் பரம்பரைச் சைவவேளாளர் குலத்திலே அபிஷிக்தர் மரபிலே அவதரித்து, ஒழுக்கம் அன்பு அருள் முதலிய நற்குணங்களோடு வளர்ந்துவருவாராயினர்.

பின்பு தந்தை தாயர்களாலே தக்க பிராயத்திலே வித்தியாரம்பஞ் செய்விக்கப்பெற்று, சிறிது கல்வி கற்ற அளவிலே, கச்சியப்பமுனிவர், சிவக்ஷேத்திர யாத்திரைசெய்யத் தொடங்கி, தொண்டைநாட்டிலுள்ள சிவஸ்தலங்களெல்லாம் தரிசித்துக் கொண்டு, சோழநாட்டிலுள்ள ஸ்ரீ சிதம்பரம் முதலிய திருப் பதிகளைத் தரிசித்தார். பின்னர் ஸ்ரீ ஞானக்கோமுத்தியாகிய திருவாவடுதுறையை அடைந்து, மடாலயத்தினுள்ளே புகுந்து திருக்கைலாச பரம்பரைச் சித்தாந்தசைவ ஞானபாநுவாகிய ஸ்ரீ நமச்சிவாயமூர்த்தியைத் தரிசித்து, திருவருள்நோக்கஞ் சிந்திக்கப்பெற்று, அப்பொழுது அத்திருமரபிற் சின்னப்பட்டத்தில் எழுந்தருளியிருந்த ஞானாசாரியராகிய அம்பலவாண தேசிகரை ஒடுக்கத்திலே போய்த் தரிசித்துப் பேரன்போடு வணங்கினர். வணங்கியபின் அந்த ஞானதேசிகரிடத்தே, சமயதீக்ஷையும் பெற்று, சிவாச்சிரமத்திற்குரிய துறவறத்தை அடைந்து, விசேட நிருவாணதீக்ஷைகளையும் பெற்றார்.

அங்ஙனம் தீக்ஷைபெற்ற கச்சியப்பமுனிவரர், அகத்திய மகாமுனிவர் வரத்தினால் பாண்டிவளநாட்டிலே அவதரித்து, எளிதிலே வடமொழிக்கடலும், தென்மொழிக்கடலும் கரை கண்டுணர்ந்து, பேரூர் - ஸ்ரீ வேலப்பதேசிகராகிய ஞானாசாரியரிடத்தே அநுக்கிரகம்பெற்று, மெய்யுணர்வின் முற்றுப்பேறுடையராய்ச் சித்தாந்தசைவ சிவஞானபோத திராவிடமகா பாஷ்யகர்த்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகளை வித்தியாகுருவாகக்கொண்டு, அம்மெய்ஞ்ஞான முனிவரிடத்தே தென்மொழியிலேயுள்ள பல இலக்கணங்களும், இலக்கியங்களும், தர்க்கமும, சிவஞான நூல்களாகிய மெய் கண்டசாஸ்திரம் பதினான்கும், பண்டாரசாஸ்திரம் பதினான்கும்,

மற்றும பல நூல்களும் ஐயந்திரிபற ஓதியுணர்ந்து, கல்வி கேள்விகளில் வல்ல மகாவித்துவானெனப் பெயர்பெற்று, அச் சிவஞானயோகிகள் மாணுக்கர் பல்லோருள்ளுஞ் சிறந்தவராய் வீற்றிருந்தார்கள்.

இவர்களது வாக்கு வல்லபத்தையும், பிரசங்க சாதுரியத்தையும் புகழாதார் இல்லை. இவர்கள் செய்யுளியற்றும் விரைவு, நெட்டுருப்பண்ணிய பழம்பாடல் ஒப்பித்தல்போல் இருந்தது என்று சொல்லுவார். இதுமட்டோ! காலம் இடங்கட்கேற்பப் புதிது புதிதாக யுக்திகள் வேண்டியவண்ணம அவரது திருவாயினின்று தோன்றிக்கொண்டிருக்குமாஞல் அவர் பெருமை இத்துணைத்தெனச் சொல்லற்பாலதா?

பின்பு ஸ்ரீ கச்சியப்பமுனிவர், சிவபெருமான் அப்புலிங்க மூர்த்தியாக எழுந்தருளியிருக்கப்பெற்ற திருவானைக்காவில் அமர்ந்திருந்தபொழுது, திருவானைக்காப் புராணமும், பூவாளூர்ப் புராணமும் மொழிபெயர்த்தருளினுர்.

பின்னர்க் கொங்கநாட்டிலே, விராட்புருடனுக்கு விந்து ஸ்தானமாய்; சிவ்பிரானுலே படைக்கப்பட்டதாய்; தக்ஷிண கைலாசம், பிப்பிலாரண்ணியம், மேலைச்சிதம்பரம், ஆதிபுரி, தவசித்திபுரம், பத்திபுரம், ஞானபுரம், வன்மீகபுரம், மேருபுரம், தேனுபுரம், பசுபதிபுரம், குருக்ஷேத்திரம, பிறவாநெறித்தலம முதலிய பல தெய்வீகமான ஹேதுநாமங்களை யுடையதாய்; தேவர், அசுரர், முனிவர் முதலிய அநேகராலே பூஜிக்கப்பட்ட அளவில்லாத சிவலிங்கங்களையுடையதாய்; காஞ்சிநதி, கந்த தீர்த்தம், சக்கரதீர்த்தம், பிரமதீர்த்தம், காலவதீர்த்தம் முதலிய பல திவ்விய தீர்த்தங்களையுடையதாய் விளங்குந் திருப்பேரூருக்கு ஸ்ரீ கச்சியப்பமுனிவர் சென்று, அங்கே சிலகாலம் வசித்த பொழுது, மூர்த்தி தலம் தீர்த்தங்களாகிய மும்மைச் சிறப்பும் பெற்று, இம்மை மறுமை வீடுபேறு எனனும் மும்மைப்பயனும் எளிதில் தரத்தக்கதாயிருத்தலையும், மற்றெந்தத் தலத்திலும் இயற்றும் பாவம் திருவிடைமருதூரிலும், அத்திருவிடைமருதூரில் இயற்றும் பாவம் இப்பேரூரிலும் தீருமென்பதையும், பிரமகுண்டமாகிய திருநீற்று மேட்டிலுள்ள விபூதியை அணிவோர்க்குப் பிரமராக்கதமும், மலடும், நோய்களும், இடர்களும், பாவங்களுந்தீர்ந்து இகமும் பரமும வீடும் கூடுமென்பதையும்,

பிறவாப்புளி இறவாப்பனை முதலிய பல ஸ்தல விம்மிதங்களையும், சோதிவிருக்ஷம் சிலாநதி முதலிய பல பருவத விம்மிதங்களையும், சிவபெருமான் அப்பேரூரின்கண்ணே அரி பிரமாதியோர்க்கு ஆனந்த தாண்டவஞ் செய்துகாட்டிய இரசதசபையிலே, விராட்புருடனுக்கு இருதயஸ்தானமாய் விளங்கும் ஸ்ரீ சிதம்பரத்தின்கண்ணதாகிய கனகசபையிலே பஞ்சகிருத்திய திருநிருத்தஞ் செய்தருளுந் திருக்கோலத்தைப் பரமாசாரியராகிய சுந்தரமூர்த்தி நாயனாருக்குக் காட்டக்கண்டு வணங்கிப் பேரானந்தப் பெருங்கடலின் மூழ்கி, மீண்டு ஸ்ரீ சிதம்பரத்தை அடைந்து சபாநாயகரை நமஸ்கரித்து, "மடித்தாடு மடிமைக்கணன்றியே" என்னுந் திருப்பதிகம்பாடி அதிலே, "பாரூருமரவல்கு லுமைநங்கை யவள்பங்கன் பைங்கணேற்ற-னூரூரன்றருமனார் தமர்செக்கிலிடும்போது தடுத்தாட்கொள்வான் - ஆரூரன்றம்பிரா னாரூரன்மீகொங்கி லணிகாஞ்சிவாய்ப் - பேரூரர் பெருமானைப் புலியூர்ச்சிற் றம்பலத்தே பெற்றாமன்றே" என்று அந்நாயனார் சபாநாதரைத் திருப்பேரூரிலே கண்ட நிலைமையைச் சிறப்பித்தருளிய அற்புதத்தையும் பற்பலமுறை உற்றுநோக்கி ஆனந்தவெள்ளத்தில் அமிழ்ந்திக் காலந்தோறும் சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு திருவருட் செல்வர்களாய் வீற்றிருந்தார்கள்.

அப்போது, சிலகாலம் மழையில்லாமையால் வெப்பமிகுதி பற்றி ஜனங்கள் தாகசோகங்களுற்று வருந்துவதை நோக்கி, தெள்ளியோர் உள்ளமேபோல வெள்ளியம்பலத்திலே ஆனந்த தாண்டவஞ் செய்தருளியகாலத்து, ஆடலின் வேகத்தால் அருமைத் திருமேனியில் ஆபரணமாக அணிந்துள்ள அரவங்கள் விடத்தை யுமிழ்ந்ததனால் தேவராதியோர்க்கு உளவாகிய தாகசோகங்களைத் திருமுடிக்கண்ணதாகிய கங்கையைக் காஞ்சிநதியாகச் செல்லும்வண்ணம் ஆஞ்ஞாபித்து மாற்றியருளிய பேரருண் முதலியவற்றை அடக்கி அரசம்பலவாணர்மீது பெரிதும் அருமையாகிய ஓர்பிரபந்தம்பாடி மழை வருஷிக்கச் செய்து, ஜனங்களுடைய தாகசோகங்களை மாற்றியருளினார்கள். பின்னும் பட்டீசர்மீது பல பதிகங்கள் பாடிப் பலருக்குக் குட்டநோய் முதலியனபோக்கி மற்றும் பல அற்புதங்களையுஞ் செய்தருளினார்கள். அந்த ஸ்தலத்தின் மகிமைகளை உலகத்தார் பலரும் உணர்ந்துய்யும்படி திருவுளங்கொண்டு சொற்சுவையுங் பொருட்சுவையும் இனிது விளங்கும்வண்ணம் காலம் இடம்

களுக்கேற்ற அலங்கார அமைதியோடு பேரூர்ப்புராணத்தை யும் மொழிபெயர்த்தருளினார்கள்.

அதன்பின்பு திருத்தணிகையை அடைந்து ஆங்கே சில காலம் வீற்றிருந்து இயற்றமிழ்ப் போதகாசிரியர் விசாகப்பெரு மாளையர், வித்துவான் - சரவணப்பெருமாளையர் இருவருக்கும் பிதாவாகிய கந்தப்பையர் முதலாயினோருக்குக் கல்வி கற்பித் தருளினார்கள். அப்போது, பல வித்துவான்களும் தமிழிலே புறச்சமயியாற் செய்யப்பட்ட சீவகசிந்தாமணியைப் பேரிலக்கிய மாகக் கொண்டாடுதலைச் சித்தத்திலேகொண்டு, அதினும் மாட்சிமைபெறத் திருத்தணிகைப்புராணத்தை மொழிபெயர்த் தருளிச்செய்தார்கள். சொல்வளம், செய்யுணடை, சந்தம், பொருட்சுவையென்னும் இவைகளிலே தமிழ்மொழியிலுள்ள எந்த இலக்கியமும் இதற்கு மேம்பட்டிலதென்பது புராணத்தை ஓதியுணர்வோர்க்கு எளிதில் விளங்கும் என்பர்.

தம்மாணுக்கரிற் சிறந்தவராகிய கந்தப்பையருக்கு வயிற் றிலே ஓர் குன்மநோயுண்டாயபொழுது, தணிகையாற்றுப் படையைப் பாடி, அவர் நோயை மாற்றியருளினர். அதனால் அவர்கள் சிவத்தியான வுறைப்பிற் சிறப்புடையரென்பது தெள் ளிதிற் புலப்படும். மற்றும் திருத்தணிகைப்பதிற்றுப்பத்தந் தாதி முதலிய பிரபந்தங்களும் அங்கே இருந்தபொழுது இயற்றி னார்கள்.

பின்பு சென்னைமாநகர்க்குச் சென்று அங்கே சிறிதுகாலம் வசித்தார்கள். அப்பொழுது அவ்விடத்துப் பக்தஜனங்களும், பிரபுக்களும் வேண்டிக்கொண்டபடி விநாயகபுராணம் சென்னை விநாயகர் பிள்ளைத்தமிழ் முதலியன இயற்றி, அவர்கள் அடி யுறையாக இரண்டாயிரம் வராகனிட, அதைக்கொண்டு இத் திருவாவடுதுறையிலே ஆதீனபரமாசாரியராகிய ஸ்ரீ நமச்சிவாய மூர்த்திகள் சந்நிதி மண்டபப்பணி அணிபெறச் செய்வித் தருளினர்.

விநாயகபுராணம் அரங்கேற்றுஞ் சபைக்கு ஐயாப்பிள்ளை என்னும் ஒரு பெரிய பிரபு 'நாம்வர இதென்ன இராமாயணமா' என்று சற்றே இகழ்ந்தனர். மற்றப் பிரபுக்கள் முனிவரர்க்கு அதனை மறைத்தும், அவர் தமது புராணத்தைத் தொடங்காது இராமாயணத்தை எடுத்துக்கொண்டு யாவரும் பிரமிக்கும்படி

முதல் ஆறு செய்யுளில் நூறுகுற்றம் ஏற்றினர். உடனே அப் பிரபு நூறுவராகனும், பீதாம்பரம் முதலியவைகளும் கொண்டு போய்ப் பாதகாணிக்கையாக வைத்துத் தீர்க்கதண்டஞ் சமர்ப் பித்து 'சுவாமிகளது மகத்துவம் அறியாத ஏழையைத் தேவரீர் காத்தருளுக' என்று விண்ணப்பஞ்செய்ய, அதன்பின்பு தமது புராணத்தைத்தொடங்கி அரங்கேற்றினர்கள்.

இம்முனிவர் சென்னபட்டணத்திலிருக்கும்போது, காஞ்சீ புரத்தில் எழுந்தருளியிருந்த இவராசிரியராகிய ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள்பால், ஆங்குள்ள தமிழ் வித்துவான்கள் ஒருங்குகூடி, நீவிர் காஞ்சிமான்மியஞ் செய்யப்புகுந்து அதன் கண்ணே கடவுள் வாழ்த்தில், 'சங்கேந்து மலர்க்குடங்கை' என்பதை முதலிலுடைய சபாநாயகர் துதியை முன்னர் அமைத்து, 'தணந்தபெரும்' என்பதை முதலிலுடைய ஸ்தல நாயகராகிய ஏகாம்பரநாதர் துதியை பின்னர் வைத்தது தவ றென்று சாதித்தனர். அச்சிவஞானயோகிகள் தம்முடைய மாணுக்கரைக்கொண்டு அவர்களைத் தலைமடங்கச் செய்வதே தகுதியென்று திருவுளங்கொண்டு, அதனைக் கச்சியப்ப முனிவ ருக்குத் தெரிவித்தார். உடனே முனிவரர் சென்னையினின்றும் புறப்பட்டு ஸ்ரீ காஞ்சிசேர்ந்து, அனைவரையும் ஏகாம்பரநாதர் சந்நிதிமண்டபத்திற் சேரச்செய்து, பிரசங்கிக்கத் தொடங்குவா ராகி, அந்த ஸ்தலத்து ஓதுவாரைநோக்கி இந்த ஸ்தலத்துத் தேவாரப்பதிகங்களுள் ஒன்றனை முதலிலே ஓதும்படி சொல்ல, அவர் "திருச்சிற்றம்பலம்" என்று தொடங்கினர். அப்பொழுது கச்சியப்பமுனிவர், ஆக்ஷேபித்த வித்துவான்களை நோக்கி 'இவர் 'திருச்சிற்றம்பலம்' என்று தொடங்குகின்றாரே; இது உங்கட் குப் பொருத்தந்தானா? இவரை நீங்கள் சேர்ந்து இச்சந்நிதியில் இந்த ஸ்தலத்துத் தேவாரப்பதிகங்களைப் பிருதிவியம்பலம் என்று சொல்லி ஆரம்பிக்கும்படி செய்யக்கூடாதா?' என்ற அளவிலே, அனைவரும் வாயெடாது ஊமர்கள்போலத் தலை வணங்கியிருந்தனர். அதன்மேல் விநாயகர்காப்புக்குப்பின், கடவுள்வாழ்த்தில் முதலாவது உயிர்களின் போகம் வீடுபேறு கட்கு ஹேதுவாகப் பஞ்சகிருத்தியத் திருநிருத்தஞ் செய்தரு ளும் சபாநாயகர்துதி கூறுதலே முறையென்று பல நியாயங்கள் காட்டி அவ்வித்துவான்கள் அவமானம் அடையச்செய்தனர்.

பின்பு, ஸ்ரீ காஞ்சியில் வீற்றிருக்கக்கருதி அங்கே அமர்ந்த பொழுது தம்முடைய ஆசிரியர் திருவாக்கைச் சிரமேற்கொண்டு

காஞ்சிப் புராணத்து இரண்டாங்காண்ட மொழிபெயர்ப்புச் செய்தருளி, பின்னர்க் கச்சியானந்தருத்திரேசர் வண்டுவிடு தூது, கச்சியானந்தருத்திரேசர் பதிற்றுப்பத்தந்தாதி, பஞ்சாக்கரதேசிகரந்தாதி முதலிய பல நூல்கள் இயற்றியருளினார்.

இங்ஙனம் லோகோபகாரமாகப் பல நூல்கள் இயற்றிப் பல நன்மாணாக்கர்களுக்குக் கற்பித்துத் தமிழ்மொழியை அபிவிருத்திசெய்து, சிவப்பேற்றிற்குக் காரணமாகிய சிவத்தியாஞாதிகளின் உறைப்பில் வதிந்தருளிய ஸ்ரீ கச்சியப்பமுனிவரர் ஸ்ரீ காஞ்சீபுரத்திலே சாலிவாகன சகாப்தம் **1712**-க்குச் சரியான சாதாரணஹு சித்திரைமீ **11**வ மங்களவாரத்தில், புனர்பூச நக்ஷத்திரமும் பூருவபக்ஷத்துச் சத்தமியுங்கூடிய கும்பலக்கினத்தில் சிவபரிபூரணதசை அடைந்தருளினர். (கி. பி. 1790)

ஏர்தரு சாலி வாகன சகாத்தம்
ஆயிரத் தெழுசதத் தொருபத்
திரண்டின்மேற் சாதா ரணவரு டத்தில்
இயைதரு சித்திரைத் திங்கள்
சார்தரு தேதி பத்தினே டொன்று
தகுசெவ்வாய் வாரம்பூ ருவத்திற்
சத்தமி புனர்பூ சத்திரு நாளில்
தவலறு கும்பலக் கினத்திற்
சீர்தரு துறைசை வாழ்சிவ ஞான
தேவன்மா ணாக்கருண் முதன்மை
திகழ்ந்துள கச்சி யப்பமா முனிவன்
திருப்பெருங் காஞ்சியி லெய்திச்
சேர்தரு மடியார் தமதக விருளைத்
தினகரன் முன்னிரு ளென்னத்
திருந்துதன் னருளா லகற்றிவீ டுறுத்திச்
சிறந்தபூ ரணமடைந் தனனே.

இச்செய்யுள் முற்காலத்தது.

ஸ்ரீ மெய்கண்டதேவர் திருவடி வாழ்க.
ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள் திருவடி வாழ்க.
ஸ்ரீ கச்சியப்ப முனிவரர் திருவடி வாழ்க.

படலஅகராதி

[எண் — பக்க எண்]

அகத்தியனருள்பெறுபடலம்	...	200
இந்திரனருள்பெறுபடலம்	...	484
இராமனருள்பெறுபடலம்	...	495
கடவுள்வாழ்த்து	...	2
களவுப்படலம்	...	505
குமாரேசப்படலம்	...	127
சீபரிபூரணநாமப்படலம்	...	330
திருநகரப்படலம்	...	41
திருநாட்டுப்படலம்	...	6
நந்தியுபதேசப்படலம்	...	161
நாகமருள்பெறுபடலம்	...	492
நாரணனருள்பெறுபடலம்	...	477
நாரதனருள்பெறுபடலம்	...	750
நைமிசப்படலம்	...	74
பிரமனருள்பெறுபடலம்	...	472
பிரமன்சிருட்டிபெறுபடலம்	...	137
புராணவரலாற்றுப்படலம்	...	79
வள்ளிநாயகி திருமணப்படலம்	...	687
விடையருள்படலம்	...	741
வீராட்டகாசப்படலம்	...	103



ஸ்ரீ சண்முகர்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

தணிகைப்புராணம்

விநாயகர்காப்பு

மும்ம தத்தனென் றொருபெயர் தனக்குமொய் கூந்தற்
கொம்மை வெம்முலைக் கோற்றொடிக் கொடிச்சியை யிலைவேற்
கைம்ம லர்த்தனி யிளவற்குங் கஃஃறெனுங் கானத்
தம்ம முந்துபுக் குறுத்தவ னடிமலர் பணிவாம். 1

ஊற்றிருக்கு மதக்கலுழி யுன்னுமடி
யாருளத்துக் கறையை மண்ணக்
கூற்றிருக்குங் கூர்நுதிவெண் கோடுவெளிற்
றறிவிரண்டுங் குமைப்ப மேனி
தோற்றிருக்கு மளப்பரிய சுடர்நிறைப்பத்
தோரணக்கம் பத்தெஞ் ஞான்றும்
வீற்றிருக்கும் பெருமானை விரைமலர்தூய்ப்
பணிந்தெழுந்தெம் மெலிவு தீர்வாம். 2

---

1. கஃறு - கருமை. ஒலிக்குறிப்பினை உணர்த்தும் சொல் என்பாரும் உளர். 'கஃறென' என்பது ஒலிக்குறிப்பினை உணர்த்தும் இடைச்சொல் (நன் 421 சூத் - உரை). ''உருவினும் இசையினும் அருகித் தோன்றும்'' என்னும் சூத்திரவுரையில் 'கஃறென்றது' உருவு என்றார் இளம்பூரணர். ''கஃஃறென்னும் கல்லதர் அத்தம்'' என நிறத்தின்கண்ணும், ''சுஃஃறென்னும் தண்டோட்டுப்பெண்ணை'' என இசையின்கண்ணும் வந்ததென்றார் நச்சினார்க்கினியர் (தொல் - மொழிமரபு 7).

2. கூற்றின்தன்மை இருக்கும் எனப் பொருள்கொள்க. கூற்றின் தன்மை என்றது கொலைத்தொழிலை. கூற்று புகழ் என்பாருமுளர். அறிவு இரண்டு - பாச அறிவு, பசு அறிவுகள். மூன்றும் அடியில் இருக்கு என்றது வேதத்தை. தோரணக்கம்பம் என்பது விநாயகர் ஆலயத்தின் பெயர்.

கடவுள்வாழ்த்து

சிவபெருமான்

உலகிரு ளுருவத் தொளிகளி னிரித்தாங்
குறுபொரு ளெவற்றையுந் தெரித்துள்
விலகிருண் முழுது மருள்கொடு துமித்து
விராயொளிர் தன்னையுந் தன்னால்
இலகுயிர் தனையுந் தெரித்தறி வுறுக்கும்
இயல்பினெக் காலமும் பிறழா
தலகிலற் புதக்கூத் துமையினைக் காட்டும்
அடிகள்சே வடிகளைப் பணிவாம். 1

சிவசத்தி

சீரணி சிருக்கு மணிவடஞ் சங்கு
திகிரிசூ லப்படை யிலைவேல்
போரணி பாச மங்குசங் கழைவில்
பூங்கணை வேறுவே றணியா
ஆரணன் மாய னரனிப முகத்தன்
அனங்கனென் றிவர்தொழிற் கெல்லாம்
காரண மாத் தெளித்தருள் கொழிக்குங்
கன்னியை யுன்னியேத் தெடுப்பாம். 2

ஆபத்சகாய விநாயகர்

பண்ணிய மேந்துங் கரந்தனக் காக்கிப்
பானிலா மருப்பமர் திருக்கை
விண்ணவர்க் காக்கி யரதனக் கலச
வியன்கரந் தந்தைதாய்க் காக்கிக்

---

1. ஆங்கு - அவ்வுலகத்து. உமையினைக்காட்டும் என்பது உருபு மயக்கம்.

2. சிருக்கு - யாககுண்டத்து நெய்யொழுக்கும் ஓர் கருவி. முருகனது வேல் எனக் கூறுதொழிந்தது தன்னிகர் உயர்ச்சியில்லான் காப்பியத் தலைவனாக வேண்டுதலின் என்க; அங்ஙனம் கூறின் சத்தி உயர்ச்சியும் முருகன் தாழ்ச்சியுமாய் முடியும், ஆகலின் முடியாது கூறினார்.

கண்ணிலா ணவவெங் கரிபிணித் தடக்கிக்
கரிசினேற் றிருகையு மாக்கும்
அண்ணலைத் தணிகை வரைவள ராபச்
சகாயனை யகந்தழீஇக் களிப்பாம். 3

சுப்பிரமணியர்

ஓங்கொளியாய் விசும்பாதி தொறுமியலுந்
தன்றியல்பை யுருவின் மாட்டும்
பாங்குபெறத் தெரித்ததுபோற் பலபொறியாப்
பரமர்விழி பயந்த ஞான்று
தேங்கொளியாய் வெளியடர்ந்து வளிதொடர்ந்தொள்
ளொளிபடர்ந்து தெளிநீர்ப் புக்கு
நீங்கிவினை யாட்டயர்ந்து தணிகையமர்
பெருவாழ்வை நினைந்து வாழ்வாம். 4

தெய்வயானையம்மை
வள்ளியம்மை

இறைகதித்த சூர்முதலை யிறுப்பவரா
னேயிளையோ ஞன வாற்றுன்
முறைகதித்த விருசுடரே முகத்துவிழி
யெனத்தெரிக்கு முறைமை யேய்ப்ப
நறைகதித்த மலர்க்கழுநீர் நளினமவன்
விழியருகு நலக்க வேந்தி
நிறைகதித்த வுளத்தொடிடம் வலமமர்ந்த
மாதர்பத நினைத்தல் செய்வாம். 5

திருநந்திதேவர்

கள்ளகந் தளித்த மலர்த்தலைச் சேக்குங்
கடவுண ரணன்முத லானோர்
உள்ளகந் தழும்ப மலர்ப்பத மம்மைத்திட்
டுடலெலாந் தழும்பவேத் திரத்திண்

4. ஒளி - முன்னையது சோதி, பின்னையது அக்கினி.

5. வள்ளியம்மையார் வலமும், தெய்வயானையம்மையார் இடமும் ஆம். வலக்கண் சூரியன், இடக்கண் சந்திரன்.

வள்ளலங் கமலத் தனிக்கர மமைத்த
வரதனைக் கற்றைவெண் கதிர்கால்
வெள்ளியங் கயிலைக் காவல்பூண் டருளும்
வீரனை வார்கழல் பணிவாம். 6

நவவீரர்

ஈர வான்மதி மிலைச்சிய பொலஞ்சடை யிறைவனு ரருள்கூரக்
கார வாவிய குழலுமை நூபுரக் கதிர்மணி யிடைத்தோற்றும்
நார வாவியி னறுமலர்க் காவிநேர் நயனமா தர்களீன்ற
வீர வாகுவை முதலிய வீரர்தம் விரைமலர்ப் பதம்போற்றி. 7

சமயகுரவர்

முன்னாலுந் துளைக்கரத்தோன் முருகவேள்
பிடித்தெழுந்து மொய்ம்பிற் றுவப்
பின்னாலுங் கதிர்ச்சடிலப் பிஞ்ஞகனு
ரடித்தொண்டின் பெருக்க வீறு
பொன்னாலும் பெண்ணாலு மறிவுறுத்திவ்
வுலகினிடர் பொன்றி யாண்ட
அந்நால்வர் பதகமல மகந்தழீஇப்
புகழ்ந்திறைஞ்சி யரந்தை தீர்வாம். 8

சண்டேசுரநாயனார்

புண்ணியம் பாதக மாகப் போற்றிய
அண்ணலந் தக்கனு ரகத்து நாணிய
புண்ணியம் பாதக மாகப் போற்றிய
அண்ணலந் தண்டித னடிகள் போற்றுவாம். 9

திருத்தொண்டர்

பாய வாருயிர் முழுவதும் பசுபதி யடிமை
ஆய வெவ்வகைப் பொருள்களு மவனுடைப் பொருள்கள்
மேய விவ்வண மலதுவே றின்றென வுணர்ந்த
தூய மெய்த்தவத் தடியவர் துணையடி தொழுவாம். 10

---

6. கடவுளும் நாரணனும்.

8. பொன்றி - பொன்றுவித்து.

ஆசாரியபரம்பரை

அருள்வளர் நந்தி மேதகை விளக்கி
யருள்சிவ ஞானபோ தத்தைத்
தெருள்வளர் தமிழ்ச்செய் தளித்தமெய் கண்ட
தேவனற் சந்ததி விளங்க
வருமொரு துறைசைத் திருநகர் நமச்சி
வாயதே சிகனொடு மிந்தக்
குருபரன் வழிவந் தருணனி கொழிக்குங்
குரவர்கள் பலரையுந் துதிப்பாம். 11

அவையடக்கம்

கருவிக ளனைத்து மென்னுட் கலந்துநின் றியக்கா நிற்கும்
ஒருவனை யன்றி யானே யுஞற்றுத லின்மை யாலே
மருவுமென் பாடற் குற்றம் பொறுமென மதிக்க நாணித்
திருவமர் கல்வி சான்றோர் திறத்தொன் றுஞ் செப்பி லேனல். 1

பசுகர ணங்க ளெல்லாம் பதிகர ணங்க ளாக
வசிபெறு மடியார்க் காயின் மன்னிய வொருமை தன்னால்
இசையுமற் றவரி னன்றோர்க் கென்னுரை யோம்பு கென்னக்
கசிவுறு மனத்தி னேனுங் கட்டுரைப் பதுமாண் பன்றே. 2

முதுக்குறை வுடையோர் நிற்ப
முழுங்குதன் காதை யென்னல்
விதுக்குறை முடியோன் மைந்தன்
விரிந்தசெந் தமிழ்ச்சொல் லாகப்
புதுக்குபு கேட்கு மார்வம்
பாகடை புன்சி றூர்கை
மதுக்குலாந் தொடையன் மார்பர்
வைத்துவாய்க் கவர்தல் போலாம். 3

ஆகத்திருவிருத்தம் 16.

---

1. கருவி - தத்துவம். கலத்தல் வினையைச் சிவனுக்கு ஏற்றுக.

2. பசுத்துவம் பதித்துவமாக.

திருநாட்டுப்படலம்

வட்டவாய்க் கமலத் தண்ணன் மணிமுடி துளங்க வோச்சிக்
குட்டிய குமரப் புத்தேள் குலாவிய தணிகைக் குன்றம்
அட்டொளி மணியின் மோலி யணிந்தெனத் தன்பாற் கொண்ட
முட்டறு பாலி நாடு முச்சகத் துயர்ந்த தொன்றே. 1

துலங்கலில் போக மூட்டித் தொக்கநா ளிற்ற காலை
அலங்கலி லறத்தி னற்று லருங்கதி யுயிரை யெய்த்துப்
புலங்கெழு தன்பாற் போகம் புலர்ந்துழிக் கிழக்க தாக்கும்
நலங்கெழு துறக்க விண்ணை நக்கது தொண்டை நாடு. 2

கோண்முறை பிறழ்ந்து மாரிக் குளிர்பெயல் வறக்கு மேனும்
தாண்முறை தப்பா வண்ணந் ததைமண லகழுந் தோறும்
ஊண்முறைப் புனல்வந் தோடு மொலிநதிக் குலத்தா லேனை
வீண்முறை நாட்டை யெல்லாம் வீழ்த்தது தொண்டை நாடு. 3

வருபுனல் வாய்ந்த வோங்கல வலர ணிருநீ ரென்னும்
பொருவில்பல் லுறுப்பிற் றாகிப் பொங்கிய செல்வ மேமம்
வெருள்பிணி யின்மை யின்பம் விளைவுநன் கணிந்து தாழ்வில்
திருவினர் தக்கோர் சாலச் செறிந்தது தொண்டை நாடு. 4

---

1. குன்றத்தைக்கொண்ட. ஓச்சி - ஓங்கி.

2. துலங்கல், அலங்கல் - அசைதல். துளங்கல் என்பது எதுகை நோக்கி விகாரப்பட்டது. கெழு: சாரியை (சிலப் - பதி).

3. பிறழ்ந்து - பிறழ்தலால். மாரிக்காலத்துக் குளிர்ந்த மழை வறக்குமேனும், மாரி என்பது ஈண்டுக்காலத்தை உணர்த்தி நின்றது.

4. வருபுனல் - அருவிநீர். இருநீர் - ஆற்றுநீர் , ஊற்றுநீர். ''மலை யரண் காட்டரண் மதிலரண் நீரரண், வகையுறு சிறப்பின் நால்வகை யரணே'', ''காவல்வேல் காவற் காடிவை யரணே'' என அரண், மலை காடு மதில் நீர் என நால்வகைப்படும் என்றும், காவல் வேல் காவற் காடு என மூவகைப்படும் என்றும் பிங்கலந்தை கூறுமாறு காண்க. இனி, காடு மதில் காவல் ஆகிய மூன்றனையும் ''காடும் எயிலும் கவசமும் அரணம்'' என அப்பிங்கலந்தை அரணம் என்று கூறுமாறும் காண்க.

மலிபெரும் பொருளாற் பெட்கும் வண்மையு நாடா தியாதும்
மெலிவுக வந்தவும் வாய்ப்பு மெலிகலார் மெலிந்த காலும்
நலிதரா வளனு மெல்லா நலிவுநீத் தாற்ற வீண்டும்
ஒலிகெழு விளையு ளோடு முடையது தொண்டை நாடு. 5

பல்குழு வேந்த லைக்கும் படர்கொலைக் குறும்பு தீய
பல்குழுட் பகையு டற்றும் பகையுறு பசிதீ ராநோய்
புல்குறி தானு மின்றிப பொறையொருங் குறுகாற் றுங்கி
நல்கிறை வேந்தர்க் குய்க்கு நலத்தது தொண்டை நாடு. 6

கறைகெழு களத்தெம் மண்ணல் கரைந்தபல் லாக மத்தின்
முறைநெறி யொழுக்கி னோடு முடிவில்பல் லறமு மின்பம்
நிறையும்விம் மிதமு மென்னு நீக்கமி லணிக ளெல்லாம்
இறைவியா லணியப் பட்ட திலங்குதுண் டீர நாடு. 7

மான்றவல் வினைகால் சீக்கும் வளங்கெழு தொண்டை நாடு
சான்றவ ருடைத்தென் றேதுந் தகுமொழிக் கதிரான் மற்றை
ஏன்றசீர் நாட்டின் சீர்த்தி யென்னுமீ னொளிமை யாப்ப
ஆன்றசெம் பருதி யாய தனையதண் டகநன் னாடு. 8

கொடைப்புகழ்க் கவயம் போர்த்துக் கூரறப் படைக ளேந்தி
விடைப்பரு வேழம் பொற்றேர் விரைசெலற் பரியாள் வாய்மை
படைப்பருஞ் சீல நோன்பு பத்திமை யாகப் பாய்த்திக்
கடைப்படு பாவத் தெவ்வைக் கடந்தத் தொல்லை நாடு. 9

---

5. பொருளுண்மையினால் யாவரும் விரும்பும் வளமும். ஒலி - தழைத்தல். "வாரொலி கூந்தற் பேரிற் கிழத்தி" (சிலப் - மனையறம்) "வாரொலிகூந்தல் நின் மணமகன்தன்னை" என்பதற்கு 'நீண்டுசெறிந்த தோர் கூந்தல்' என்றுரைத்தார் அடியார்க்குநல்லார்; விசேடவுரை.

6. பல்குழுவும் குறும்பும். பல்குழு - சோரர், கள்ளுண்போர், கொலைஞர் முதலாயினோர். புல்குறி - பொருந்தும் அடையாளம்; அஃதாவது முதலிரண்டடியிற் கூறிய தீயனவாகியபொருள்கள் நிகழ்தற்கு ஏதுவாக முன்னே நிகழும் உற்பாதமாம் அடையாளம்.

8. மான்ற - மயங்குதற்கு ஏதுவாகிய.

"வேழ முடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து - பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்துச் செப்பலரு நற்றொண்டை
நன்னாடு சான்றோ ருடைத்து." இஃது ஔவையார் வாக்கு.

9. விடைதல் - பிரிதல்; விடைப்பு என்பதும் அது.

முரிதிரை சுருட்டிப் பல்வீ மொய்த்தபஃ றீர்த்த மாடி
விரிபுகழ்த் தலங்கள் சால மேவியா னந்தக் கூத்தர்க்
குரியபல் வடிவந் தன்னு ளுறுத்தலால் வீடு வெஃகிக்
கரிசறுத் தவர்கள் போன்று கவின்றதப் பொருவி னாடு. 10

கருங்குழல் கானிற் றோற்றிக் கதிர்முலை மலையிற் றோற்றி
இருங்கையும் பணையிற் றோற்றி யெரிமணிக் கலாப வல்குல்
பெருங்கடற் றோற்றி வேத வொழுக்கெனுங் கணவற் பின்னி
ஒருங்குநாற் பயனு மக்க ளுயிர்த்தளிப் பஃதந் நாடு. 11

விண்ணவ ரவுணர் சித்தர் விஞ்சையர் கருடர் நாகர்
மண்ணவ ரெவருந் தோய்ந்து வரம்பெறு மேன்மை சான்ற
புண்ணிய நதிகள் பல்ல பொங்கொளி மணிநீர்ப் பாவி
அண்ணல்வார் நதியி னோடு மணிந்ததப் பொருள்கூர் நாடு. 12

கடவுள் வெண்கரி விசும்பொரீஇப்
புரந்தரன் காவலந் திசைநோக்கிப்
படர்வ தொத்துவெண் ணிறமுகிற்
குழாமணி படுகடற் பரப்பண்மித்
தொடலை வெண்டிரைப் பெரும்புனன்
முகந்தது தொல்லைபோ லொருசாபம்
அடர வல்விரைந் தெழுந்தென
வுடல்கறுத் தந்தரத் தெழுந்தன்றே. 13

தேத்த டைத்திரள் கிழிந்தசும்
பருவரைச் செழுங்கிரி தனைமன்றுட்
கூத்தி யற்றருட் பரம்பரன்
மதலையைக் குறித்துநோன் புழந்தேதம்
நீத்தி டக்கரி யடுத்தென
நந்தித னெடுமலை முதலாகத்
தூத்த டப்பொலங் குவட்டுயர்
சிலம்பெலாந் தொடர்ந்துசென் றிறுத்தன்றே. 14

10. பல் வடிவம் - பலவான மூர்த்தங்கள்.

11. பணை - மருதநிலம். தாமரையைக் கையாகக் கொள்க.

13. ஏனையதிசைகளில் கடல் உளவாகவும் கீழ்த்திசையைக் கூறினார், மேகத்திற்கு அத்திசைக்கடலை நோக்கிச் செல்லல் இயல்பு ஆதலின். தொடலை - மாலைபோலும் ஒழுங்காகிய. அது என்றது வெண்கரியை.

14. வரை - குறிஞ்சி. மூங்கில் என்பாருமுளர். ஏதம் - சாபம்.

செம்ம லார்க்கிபஞ் சாத்தமேக்
குயர்த்தவா சிகையெனச் சிலைவாங்கி
விம்மு வாண்மணித் திப்வா
ராதனை விளைத்தெனத் தடித்தின்று
சும்மை யேத்தெடுத் தெனமுழக்
கெழீ இவிழி சொரிந்தெனப் பொழிந்தெங்கும்
மம்ம ரேதநீத் தொளிர்ந்தென
வெண்ணிற வயக்கமாண் டதுமாதோ. 15

உருகு வெஞ்சின வெம்மைதா
னுடற்றுழி யுடைகுளி ரொளித்தாங்குப்
பெருகு தண்குளிர்க் குடைந்திது
பொழுதுபோர் பெட்டல்யர் வருங்கண்ணுக்
குருகு முன்கையார் குங்கும
முலைகளிற் கொம்மெனக் கரந்தன்றால்
திருகு தம்பகை சார்தனங்
கிடைக்குமேற் சிவனுரு தவர்யாரே. 16

உண்ட பாற்சுவை நினைந்தொரு
முனிதவ முழந்துபாற் கடல்பெற்ற
பண்டை நீர்மைதேர்ந் தமரரான்
பயத்தின்முன் படிந்தநந்தியங்குன்று
மண்டு மாதவம் புரிந்தது
வரத்தழீஇ வழிதர மேற்பெய்து
கொண்ட தாமென வாவயின்
விழுந்தநீர் குலாய்வழிந் ததையன்றே. 17

பாலியாற்றுவளம்

வேறு

காந்தளம் போது வேய்ந்து களிமயில் கடாவிப் பல்பூ
வேய்ந்தமென் குழற்கொம் பன்னார் வெறியயர் களத்துச் சார்ந்து
வாய்ந்தவிங் குலிகச் சேற்றின் வயங்குதன் னுருவந் தோற்றிப்
போந்துலாய்ச் சிலம்பிற் செவ்வேள் போன்றது பாலி நீத்தம்.

---

15. சாபத்தால் உண்டாகிய கருநிறம்.

ஆழ்ந்தநீர்ச் சுனைபுக் காடி யவிர்பளிக் கறையின் வைகி
வீழ்ந்தவ ராகந் தோய்ந்து வேங்கைதண் குறிஞ்சி குற்றுத்
தாழ்ந்தபைங் குரல வேனற் றவிர்ந்துபுள் விலங்கு மோப்பி
வாழ்ந்திடுங் கொடிச்சி மார்த மொழுக்கமு மரீஇய தாங்கண். 19

கோழரை யகிலுஞ் சந்துங் குங்கும வனமுஞ் சாடி
வாழிய குறிச்சி புக்கு வளத்தினை வாரி வித்தி
வீழுமென் கிழங்கு கெண்டி விரைத்ததே னழித்து மாந்தி
ஊழுறு சிலைக்கை வேட ரொழுக்கமும் விராய தாங்கண். 20

சிலையலங் கணிச்சி வெண்ணெய் தெவ்விவா னிமிர்ந்து வாரி
நிலைபுகுந் துழக்கி யொல்கு நிலனெடுத் திருவி யண்டர்
உலைதர வெறிக்கொண் டெற்றி யுறுகலி முடிவு தோற்றித்
தலைவரு மாயோ னென்னத் தவழ்ந்தது புறவத் தம்மா. 21

முளிதயிர் நறுநெய் பெய்யு மூரியங் கலன்கள் பாடி
யுளியெடுத் தியங்கி யாங்காங் குற்றவை மாற்றிப் பொன்னும்
தெளிமணித் திரளு மற்றுஞ் செறித்துராய்க் குளவி செந்தேன்
துளிகுழற் பொதுவ மாதர் தொழின்மையும் பயின்ற தாங்கண்.

திணிகவைக் கோடும் வேயுந் திரிபுரி நாருந் தாங்கி
மணிநிரை யோம்பி நேரும் வல்விடை தழுவித் தோய்ந்த
அணிநிறை மகளிர் கூந்த லலங்கலங் கொன்றை சூட்டிப்
பிணிதபு மாயர் செய்கை பேணியும் பெயர்வ தாங்கண். 23

---

20. ஊழ் - பகை.

21. சிலை - இராமாவதாரம். அலம் - பலராமன். கணிச்சி - பரசுராமன். வெண்ணெய் - கண்ணன். வான் நிமிர்ந்து - திரிவிக்கிரமன். வாரி நிலை புகுந்து உழக்கி - மச்சம், கூர்மம் முதலியன. நிலன் எடுத்து இருவி - வராகம். அண்டர் உலைதர வெறி கொண்டு எற்றி - நரசிங்கம். கலிமுடிவு தோற்றி - கற்கி. வெறி - இரத்தவெறி; நதிக்கு விரைவு. அம் முல்லைநிலமாகிய அவ்விடத்தில் வருகின்ற மாயோனைப்போல. ஒல்கும் நிலன் - நிலைபெயர்ந்த பூமி.

22. முளிதயிர் - காய்ச்சியதயிர். குளவி-பச்சிலை; இதனை அணிந்த கூந்தல்.

23. கவைக்கோடு - முள் முதலியவற்றோடு விராய தழைகளை எடுத்துக்கொண்டு போம்பொருட்டுள்ள இரு கவையான கொம்பு. நதிக்கு மூழ்கிய மகளிர் எனவும், இடையருக்கு விடைதழுவிப் புணர்ந்த மகளிர் எனவும் பொருள்கொள்க. வேய் - புல்லாங்குழல்.

பூத்தசெந் தாம ரைக்கண் மெய்யெலாம் பொலியத் தோற்றித்
தூத்தகை வயிரம் பற்றித் துலங்குவா ரணமேற் கொண்டு
காத்தலை மருவி நீண்ட கற்சிறை பலவுஞ் சிந்தி
ஏத்துவிண் ணரச னென்ன விறுத்தது பழனப் பாங்கர். 24

மருதமர் கிள்ளை யஞ்ச வயின்வயி னியம்பிச் சென்று
முருகமர் வயலிற் பூத்த முண்டகங் குமுதங் கட்டுக்
குருமணிக் காஞ்சிச் சூழற் கொழுநனை மலரப் புல்லித்
திருவியல் கடைசி மார்தஞ் செய்கையுந் தழீஇய தாங்கண். 25

தளைசெறி வயலிற் சென்று தக்கன செய்து பின்னர்
விளைவினைக் கொய்து மோட்டு வியன்களத் தேற வுய்த்து
முளைத்தகை கருப்பங் காடு முழுவது மெறிந்தங் காட்டித்
திளைமகிழ் களமர் தங்கள் செயற்கையும் படைத்த தாங்கண். 26

மேற்றிசைத் தொடர்பி னோடும் விரிகடற் பயிற்சி காட்டித்
தோற்றெழி னுகைச் சூழற் றுன்னுமத் தொடர்புங் காட்டி
ஏற்றெதிர் மகர முந்தி யெங்கில வளனும் போற்றி
ஆற்றல்சால் வருண னென்ன வணைந்தது கானற் பாங்கர். 27

முண்டக நீல ஞாழன் முருகெழ முடியிற் சூடி
மண்டிய விலைகைக் கொண்டு வளைமுதல் வேட்டோர்க் குய்த்து
மிண்டிமீன் கவர்புள் ளோப்பி வெய்துமிக் கிரக்கங் காட்டித்
தொண்டை வாய்ப் பரத்திமார்தந் தொழின்மையும் பெற்ற
[தாங்கண். 28

---

24. நதிக்குச் செந்தாமரைமலர் பொருந்திய இடம் தன் மெய்யிற் பொலிய என்க. வாரணம் - நதிக்குச் சங்கு; இந்திரனுக்கு வெள்ளானை; கண் - மூங்கில் என்பாரும் உளர்.

26. தளை - நால் வரம்பு சேர்ந்து வட்டித்த வயல்; தளை என்பதற்கு நேரே வரம்பு எனப் பொருளுரைப்பாருமுளர்.

27. வருணனுக்கு நாகச்சூழலில் துன்னலாவது அச்சூழலில் சுறுமுள் நாட்டித் தன்னை வழிபடுவாரிடத்துச் சேறல்.

28. நெய்தலுக்கு இரங்குதல் உரித்து. இரக்கமாவது நாயகன் பிரிவுக்கு இரங்குதலாம்.

கடுங்களி யுப்பு மேத்திக் கழிபல வுழக்கி நீந்தி
நெடுங்கடல் குளித்துக் கீழ்நீர் நித்திலந் துவர்மே லாக்கிப்
படுங்கலன் பலவுந் தள்ளிப் பரத்தியர் தோயப் புல்லிக்
கொடுங்கொலைப் பரவ மாக்கள் கொள்கையுங் கெழீஇய தாங்கண்.

கலையொடு வாளம் பற்றிக் கன்னியாய்க் குரவம் போது
தலைமலைந் தெயிற்றி மாராய்த் தனுவொடா றலைத்து மாந்தர்க்
குலைவுசெ யெயின ராயு முருப்பவிர் முரம்பு தோறும்
அலைதிரைப் பாலி நீத்த மமிழ்தென வொழுகிற் றம்மா. 30

வேறு

முழங்கு சேய்நதி நந்தினி முகலியே யாதிப்
பழங்கண் டீர்நதி பலவுமிப் பாலியி னோடுந்
தழங்கு நீர்கொடு தலையளி புரியுநா னிலத்து
வழங்கு மைந்திணை வளஞ்சிறி துரைத்திடப் படுமால். 31

குறிஞ்சி

மருந்துண் விண்ணர மடந்தையர்க் கரியதன் மார்பம்
திருந்து தங்குலத் தவட்கருள் சிறப்பினான் மகிழ்ந்து
விருந்து நித்தலுஞ் செய்வபோல் வெற்பர்வே லிறைக்குப்
பொருந்து பூசனை விழாத்தின மெடுப்பது பொருப்பு. 32

வணங்கு மாருயிர்க் குகைதொறும் வதிதலாற் குகனென்
றிணங்கு வான்பெயர்க் கியையுமா றிருப்பது போலாம்
நிணங்கொள் வேற்படை நின்மல னிரைமணிக் குகையின்
கணங்கொண் டோங்கிய மலைக்கெலாங் கடவுளாய்க் கலத்தல். 33

---

29. களிமண்ணோடு கலந்த உப்பு.

30. வாள் - இருபொருளுக்கும் ஆயுதம். கன்னி - துர்க்கை. மான் வாகனம். தனு - வில். முரம்பு - கல்மேடு; ஆகுபெயராய்ப் பாலையை உணர்த்தியது.

32. பொருப்பு வெற்பரால் எடுக்கப்படுவது.

33. உயிராகிய குகை.

நொடித்த நீதெென நுனித்தறிந் திருந்தினே விளேப்பார்
துடித்த லேப்படர் சந்தனக் குங்குமத் தொகுதி
வடித்த நவ்வியா லெறிந்தெரி மடுக்குமொண் புகையுந்
தடித்து மேகமுந் தவழ்வன வேற்றுமை காட்டா. 34

சுள்ளி வேலிய குறிச்சியர் சுரைபடு மிரும்பின்
வள்ளி கெண்டிய குழிகளின் மாலேவெள் ளருவி
அள்ளி யுய்த்தவெள் வயிரமு மாரமு நிதியின்
பள்ளி போன்மெனப் பசும்பொனே டிமைப்பன பலவும். 35

கொடிச்சி மார்விழிக் கூர்ங்கணே குளிப்பகா னவர்தோள்
வடித்த வாங்கவர் வார்கணே குளிப்பமால் வேழம்
தடித்த வேழத்தின் கோடுகள் குளிப்பபூந் தருக்கள்
கடித்த பூந்தருக் கோடுகள் குளிப்பவான் கங்கை. 36

விழிக்கு டைந்தமான் செவிகண்மெல் லியனல்லார் தடிந்தவ்
வுழிக்க ஞற்றியாங் குயர்பணே கண்பொதி பாளே
கழிக்கு மற்றவை மறையவெண் கதிர்மணி யுகுக்கும்
கொழிக்கு நித்தில மறையமேற் கொட்டும்வண் டோரை. 37

மழைத்த கார்முகி லகடுகீண் டெழுந்துவா ஞேங்குந்
தழைத்த வேய்நுதிக் களிமயி லகவுவ சமர்க்கட்
குழைத்த மாமரங் கீழ்ந்தவன் கோயின்முன் மணியின்
இழைத்த கேதனத் திளமயி லகவலோ டியையும். 38

இளகு காழகிற் சந்தனப் பொதும்பரெவ் விடனும்
வளகு மேய்ந்துசே வகங்கொளு மான்மத மொழுக்குங்
குளகு தேரிய வருடைமான் குப்புறு மடுக்கத்
தளகி னேடுபாட் டிரட்டுமா லலேதொறுங் குரால்கள். 39

---

34. நொடித்தல் - அழித்தல். அறிந்தும், விளேப்பார் எறிந்து மடுக்கும் புகை என முடிக்க.

35. சுள்ளி - சிறுவிறகு. சுரை - துளே.

39. இளகு - தளிர்த்த. வளகு - வளப்பம். வள கு: கு சாரியை என்பர். குளகு - இலேநுகர் விலங்கு உணவு. ''இலே நுகர் விலங்குணவே குளகு'' (சூடாமணி நிகண்டு). அளகு - கோழி கூகை இவைகளின் பெண்ணின் பெயர். ''கோழி கூகையல்லாப் பெண் அளகென்றேதும்'' என்று

வணங்கு நுண்ணிடை மாதரார் வனமுலைக் கோட்டோ
டணங்கு போர்செய வளைந்தன போலடற் கரிக்கோ
டிணங்கு வேலிசூழ் குறிச்சியெங் கணுமினி தெழுந்த
கணங்கொள் வள்ளைகேட் டுறங்குவ கனிப்பொழிற் கிள்ளை. 40

உடுக்க வொள்ளிணர்த் தழைபல கொய்துழூஉழ் தினைகள்
மடுக்கும் புள்ளெறி கவண்கலான் வார்பணை பொதிர்த்தும்
இடுக்க ணேபுரி மாதரை யிற்செறிப் பாமென்
றடுக்கல் வேங்கைக ளெரியகைத் தெனவல ரூழ்க்கும். 41

உருமி ஞர்த்துடன் றெதிரெ றுழுழுவையோ டும்பல்
பொருத முற்றொழில் கனவலிற் பொருக்கென வெழுந்தங்
கருகு நின்றவொள் வீயிணர் வேங்கையை யலைக்கும்
மருவு வெஞ்சின மூண்டுழி வகுத்தறி யார்போல். 42

வாய்வ தாகிய பொருளினை வல்விரைந் தன்றே
ஆய்வ தாய்கில ராக்குவான் புகுந்தழிப் பார்போற்
காய்வ தாகிய திறத்தினுற் கதழ்ந்துதா யிடத்து
வீழ்வ தாக்கியுண் ணுதுபோ துவவிள வேங்கை. 43

குருவி யோப்புதங் கவண்கலாற் குலைந்திரு லினத்தோ
டுருவ வாசினி யுக்கன வசும்பின நிலத்து
மருமலர்ப்பதம் வழுக்கிவீழ்ந் தினைவர்மா னனையார்
ஒருபொ ருட்கிடர் செயினவை மறுகணத் துருகொல். 44

பாடம் சொல்வாருமுளர். ''கோழி கூகை ஆயிரண் டல்லவை, சூழுங் காலை அழுகென லமையா'' (தொல் - பொருள் - மரபு - சூத் - 57) ''அப் பெயர்க் கிளவி மயிற்கு முரித்தே'' (ஷை சூத் - 58). குரால் - கோட்டான். இளகுதல் - ஈரித்தல், நெகிழ்தல், குழைதல், தளர்தல்.

40. வள்ளை - கணவனைப் புகழ்ந்து பாடும்பாட்டு, உலக்கைப்பாட்டு; அது மகளிர் சுண்ணம் இடிக்கும்போது பாடுதல். ''தினையளவு போதா'' திருவள்ளுவமாலையுரை.

41. பணை - கிளை. அகைத்தென - செறித்தாற்போல. பொதிர்த்து - துளைத்து.

43. ''கடமா தொலைச்சிய'' (நாலடி - அதி - 30, செய் - 10)

ஆழ்ந்த நீரல காதிக ளளித்திடப் படுவ
வாய்ந்த மாமணி யாதிய வயின்றெரு றுமிறைவ
தாழ்ந்த வாயினு மரியவே லுயர்ந்தவாய்த் தகையும்
வீழ்ந்த வாயினு மெளியவேற் ருழ்ந்தவாய் விடுமே. 45

கொழுவி டைக்கறை விராவிய பலிக்குறை நிரப்பி
வழுவில் பல்பிரப் பிரீஇவெறி யாட்டயர் மன்றத்
தொழுகு பல்லிய வோதையு முரவுவெள் ளருவி
இழுமெ னோதையு மெழுகட லவியினு மவியா. 46

தேனுஞ் செந்தினை யிடிகளுந் தீஞ்சுவைக் கனியும்
ஊனுந் துய்ப்பன வுடுப்பன மரவுரி தழைகள்
வானுந் தோய்சுனை யாடுவ மணிவரை யிருப்ப
ஏனஞ் சூழ்ந்தகுன் றவர்க்கொரு நல்குர வின்றே. 47

அன்பி னைந்திணைக் களவலாற் களவொன்று மறியார்
இன்ப மாண்பிரி வினைவலா வினைவொன்று மெய்தார்
துன்பமோட்டுவாய்ப் பொய்யலாற் பொய்யொன்றுஞ் சொல்லார்
முன்பு மாதவப் பயத்தினு லவண்முயக் கமர்வார். 48

உயங்கு வாரல தின்புறு ரென்பதுண் மையினுன்
முயங்கு வாரைமுன் றுயர்செய்தன் முறைதெரித் தாங்கு
வயங்கு லாவிய மாரவேள் பகழியாய் மலர்ந்த
தயங்கு தேமல ரசோகங்க டழீஇயது குறிஞ்சி. 49

---

45. அலகு - பலகறை.

46. பிரப்பு - பேருண்டி. ''பிரப்பென் றுரைப்பது பேருண்டி யாகும்'' (பிங்கலம்). ''பறையரக் கரத்தம் .... குறுணியொவ் வொன்றதாகக் கொள்கலம் பல்லுணுக்கள், பெறுமுறை பரப்பிவைப்ப பிரப்பெனப் பேசலாமே'' (சூடாமணி நிகண்டு). பிரப்பு - ஒருகலத்திற் பல்லுணுப் பரப்புவது; பேருண்டி. (அகராதி) ''சில்பலிச் செய்து பல்பிரப் பிரீஇ'' (முருகு - 234).

48. பொய் - பொய் பாராட்டல் என்றதுறை. இந்நூல் களவுப் படலம் ''இயங்குந்திறன்'' (92 செய்) என்பதுகாண்க. ''பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த, நன்மை பயக்கு மெனின்'' (குறள் - 292.)

49. அசோகு காமுகருக்கு முன்பு துன்பத்தைச் செய்து பின்பு புணர்ச்சிக்கு ஏதுவாய் இன்பம் செய்யும் என்க. புணர்தலும் புணர்தல்

பாலை

வேறு

பகைத்துடிப் படுப்பவர் பகைக்கட் பாய்கலை
உகைக்குமச் செய்கையா லுவப்பச் செய்வபோல்
மிகைத்திறக் குமரிக்கு விழாவெ டுத்தனூர்
துகைத்திறுப் பதுதொகு முரப்புச் சூழலே. 50

வரையுறை கடவுளா மகனை நீங்குதற்
கருமையி னடுத்தமை யறையுஞ் சண்டிகை
கிரியினுங் கிரிபுறங் கெழீஇய கானினும்
பெரிதுமாம் பாலையம் பிராட்டி யாயதே. 51

தூதுணம் பறவைக டுதுண் டோவறக்
காதலந் துணையொடு கழுமிப் புல்லுவ
ஏதுண வுண்ணினு மெவர்க்கும் வேள்கணை
தீர்திற மரிதெனத் தெளிப்ப போன்றன. 52

எயிற்றிய ரிளமுலை யிணைய வெண்ணுபு
வெயிற்றலை மாதவம் விளைத்தல் வீழ்வன
பயிற்றிய தெனநிறம் பரந்த மெல்லிதழ்
குயிற்றிய தெனமுகைத் தலர்ந்த கோங்கமே. 53

குரவலர்ப் பாவைபெற் றெடுப்ப கோழரை
மரவம்வெள் ளணியினல் வயக்க மாணுவ
விரவலர் தூற்றுவ வேரிப் பாடலம்
பரவிசை பகர்வன பறவைக் கோகிலம். 54

நிமித்தமும் குறிஞ்சி. துயர்செய்யும் தன்முறை. ''புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்'' (தொல் - அகத் - 16).

50. பகையிடத்துத் துடியடித்துச் சேறல், தம்பகைவரிடத்துத் துர்க்கை தன் வாகனத்தைச் செலுத்திவரும் தன்மையால்.

51. துர்க்கை - உமையின் கூறு.

53. சிற்பிகளால் சித்திரிக்கப்பட்டமலர் நிறங்குன்ரு; வாடா; குவியா எப்போதும் ஒரு பெற்றித்தாய் இருக்கும். செய்தாற்போல என்னும் பொருள்பட 'பயிற்றியதென' 'குயிற்றியதென' என்ருர். குயிற்றிய தென - வரிசையாகச் செய்தாற்போல.

விரிமுகி லிடையிடை விராய மீனமும்
சுரிகுழன் முச்சியிற் றூக்கு நித்திலச்
சொரிகதிர் மணிகளுந் துணையு மென்பவே
பொரிகெழு பொருட்டரை யிருப்பை பூத்தவே. 55

நிகழ்தரு நால்வகை நிலனு மெல்லையாத்
திகழ்தரு பாலையந் திணைக்கங் கேற்புற
இகழ்தருஞ் சுரத்தவ ரெய்து போகமும்
புகழ்தரு நானிலத் தவர்தம் போகமே. 56

உடங்குசெல் பவர்க்கிடை யூறென் றின்றியே
அடங்கரும் பெருமகிழ் வாக்கி மாதரை
இடங்களி விரீஇயவர் செலவ மூங்குமா
தொடங்கலி னுதவியிற் சுரமொப் பில்லையே. 57

பிரிந்தவர் பசலையம் பெரிய போர்வையுள்
திருந்துவ ரென்னத்தன் செய்கை தோற்றியாங்
கரந்தைசெய் மதன்கணை யாகப் பூத்தமா
மரந்தழீஇ யதுநலம் வளாய பாலையே. 58

முல்லை

வேறு

ஆக்கங் கருதித் துணைநீங்க வன்னோர் கிளந்த
வாக்கின் படிமங்கைய ராருயிர் வாழ்ந்தி ருக்கை
காக்குந் தொழிலென்று புரக்குமக் கண்ணாற் கன்பு
பூக்குஞ் செயலாற் பொலிவுள் ளதுபூத்த கானம். 59

ஆளிக் கொடியேந் தியதங்கை யகற்சி யாற்றுன்
மூளுற்ற வார்வத் தணிமைக்கண் முற்றிற்று நேராம்
காளக் குருமேனி முராரி கல்சூழ் முரம்பு
கோளுற்ற கானக் கொருதெய்வத மாய கொள்கை. 60

---

55. முச்சி - மயிர்முடி.

57. சுரம், புணர்தற்கு ஏதுவாகிய இடமுடைத்து ஆதலால் அவ்வாறு கூறினர்.

58. மாம்பூ பசலையுண்டாக்கும். "நினைக்கும் அரவிந்தம் நீள்பசலை மாம்பூ" என்பதுகாண்க. பிரிதலும், பிரிதல் நிமித்தமும் பாலைக்குரித்து.

59. இருத்தலும் இருத்தல் நிமித்தமும் முல்லை; ஆதலின், உயிர் வாழ்ந்திருக்கை என்றார்.

60. தங்கை - துர்க்கை.

தூங்குங் கனிமல் கியகொன்றை துணர்த்த லர்ந்து
பாங்கெங் கணுமிற் பதுருத் திரப்பல்க ணங்கள்
வீங்கும் புகழ்மால் விடைபற்றி வெள்ளிச்சி லம்பின்
ஓங்கும் பெருமான் முனமுய்ப்ப வந்துற்ற தொப்பாம். 61

விலகா விறன்மா லறிந்தோர்விளை யாட லாற்றுற்
பலமாய வுருக்கொடு நின்றருளிர் பான்மை போலாம்
அலரா னிறைகொன்றை யலங்கிய சூழ லெல்லாம்
புலரா மதுமா மலர்பூவைகள் பூத்த காட்சி. 62

இருந்தைக் குவையொத் தனபூவைக ளீண்டு கோபம்
திருந்தும் தழலொத் ததுகொன்றைகள் செம்பொ னொத்த
பெருந்தூட் குவையொத் தனபூத்த பிடாம ரங்கள்
பொருந்தேர் முகிலொத் ததுபொற்றெழில் வல்ல கொல்லன்.

விரிகான் மலர்வாச நுகர்ச்சி விழைந்து தத்தம்
உரிநா சியொன்று லமையாதுலப் பற்ற நாசி
பரியா விமையோ ரவணிற்குமப் பண்பு தோற்றும்
வரிபா டளிவீழ மணிக்குமிழ் பூத்த மாண்பு. 64

மானுக மலர்த்திரு மாதவ னாகி மாயோன்
ஆனு வொளிநா முறவள்ளியை யீன்ற வாற்றான்
நாநாளு மிவற்றண வேமென நண்ணி யாங்குத்
தாநாளு மிகுந்துழல் கின்றன தாவு மான்கள். 65

தணியா விமையோர்க்குண வூட்டுநர் சால வாங்கண்
அணிநா மணியார்ப்பெழ நூன்முறை யாய்ந்த தேபோல்
மணியார்ப் பெழவெங்கணு மேய்வது மண்ண கத்தோர்
பணிதேவ ரெலாருமு றுப்பிற்ப யின்ற நல்லா. 66

உழலைத் தொழுவானிரை சாலவு வக்கும் வண்ணம்
குழலத் தெழுமின்னிசை யெவ்வுயி ருங்கு ளிர்ப்ப
எழலுற் றதுநல்லவ ரின்புறத் தக்க தியார்க்கும்
கழலற்ற வின்பப்பய னுய்க்களிப் பிப்ப தன்றே. 67

---

61. மாலாகிய விடை.

63. உலைமுகத்திலிருந்து மேல் எழும் தூட்குவை என்றது தீப் பொறியை. பிடவின் மலர் வெண்ணிறம். பொருந்து ஏர் எனப்பிரிக்க.

66. ஊட்டுநர் எழுப்பும் நூன்முறையை ஆய்ந்ததுபோல நல்லா மேய்வது. நல்லா மேய்வது போன்ம் எனமுடிப்பாரும் உளர்.

67. உழலை - உழலைமரம்,

அல்லும் பகலுங்கரு தன்பர ளித்த வேற்று
வெல்லும் பரபோகம் விளைத்தருள் வேந்து நேரப்
புல்லும் புனலுந்தமை யூட்டுநர் பொற்ப விண்ணோர்க்
கொல்லும் பயமாதியு ணப்பய னுய்க்குங் கற்ரு. 68

தாற்றுக் கதிர்கால்வர கம்பயிர் சாமை சொன்னல்
ஆற்றக் கிளருந்துவ ரைப்பயி ராதி முற்றும்
தோற்றிக் கிளையோடினி துண்டின மூன்றுந் துன்றப்
போற்றிக் குடிமல்கிய பொற்பின பாடி யெல்லாம். 69

குளிர்மென் மொழிநேருவ தென்றுகொ ழுஞ்சு வைப்பால்
ஒளிர்செந் தழலுய்த்துறு நாமமற் றொன்ற தாக்கி
வளமங் கையர்மத்தினு டைத்தலு மாழ்கி யோவென்
றளாறுஞ்செயல் போற்குமி ழுர்ப்பெழுங் காலை யெங்கும். 70

வார்கண்ட முலைத்துணை வாண்முக மங்கை நல்லார்
கார்கண்டு கவிழ்த்தவி ழிப்புனல் கால்செய் தன்பர்
தேர்கண்டு மிழோகைவி ழிப்புனல் சேர வாருய்
ஊர்கண்ட நெடும்பணை சென்றினி தோம்பு மன்றே. 71

தடக்குங் குமத்தையனல் லார்தமி யாய காலைக்
கிடக்குங் கிடையல்லதில் லாமை கிளக்கு மாபோற்
கடக்குங் கழைவார்சிலை யான்கணை யாக வேவும்
அடக்கும் பசுந்தேன்கமழ் முல்லை யணிந்த முல்லை. 72

மருதம்

வேறு

விலகிவில் லுமிழு மோலி வேந்தருக் குறுப்பாந் தாங்கள்
உலகமூன் றளிக்கும் வேந்தை யும்பணுக் கோட னன்றென்
றிலகுபே ருழவ ரெல்லா மிந்திர தெய்வம் போற்ற
அலகில்சீர் வளத்தி னோங்கு மலர்தலைப் பழனச் சூழல். 73

---

68. விண்ணோர்க்கும் பயன்படும் பால்.

69. இனம் மூன்று - பசு, எருமை, ஆடு என்பன. எருது என்பாரும் உளர்.

73. உலகம் மூன்று - மண், விண், பாதலம். விலகல் - எறிதல்.

தெவ்விய வவுணர்க் காய்ந்து திருவர சளித்துக் கேண்மை
வவ்விய விளவன் மாயன் மருங்கக லாமை போலாம்
நவ்விய புறவஞ் சூழ்ந்த நறும்புனற் சூழற் கின்பம்
கவ்விய கற்ப வேந்தன் கடவுளாய் வதியும் வண்ணம். 74

அருப்புனற் கால்க ளோடை யகனதி மணிக்காழ் பூண்டு
சுருப்பயி லிலஞ்சி பொய்கை தொகுபணை யிலைப்பூண் டாங்கி
நருப்பொழிற் பொதும்பர் நந்தா வனவுடை நலக்கச் சூழ்ந்து
மருப்பகை கடக்கு நொச்சி வளைசெறித் தன்றச் சூழல். 75

பூஞ்சினை வஞ்சி பாங்கர்ப் புனைந்ததற் கேற்பப் பைத்தூர்
ஆஞ்சிறை யடமேற் செல்லு மவையதன் றொழின்முற் றுமை
காஞ்சிவேய்ந் ததற்கங் கேற்பக் கடிமரு தினத்திற் சிந்துந்
தீஞ்சுவை நறைநீ ரோடை செறுநதி கால்க ளெங்கும். 76

காலிரு மருங்கு நீண்ட கரைக்கலித் தெழுந்த வேழம்
வாலிய பூத்து நிற்கும் வண்ணஞ்செங் களத்துப் போர்வேட்
டாலிய மன்னர் சேனை யணிவகுத் துடற்ற வேந்தும்
வேலிருங் கூட்ட மென்ன விளங்குவ விடங்க டோறும். 77

அளிநரம் புளர நாரை யமிழ்திசைப் பீலி யூதத்
தெளிதிரை முரச மார்ப்பச் சேவடி கம்புள் சூட
நளிசிறைக் குரண்டந் தாழ்ந்து நலத்தக வொடுங்கி நிற்ப
மிளிர்மணி மலர்மே லன்னம் வீற்றிருப் பனநீ ரோடை. 78

இந்திரற் காக்கம் வேண்டி யீட்டிய வேள்வித் தீயின்
வந்தெழு மவுணர் தாக்க மறுகுமேழ் முனிவ ரேய்ப்ப
முந்துசெங் கமலத் தேனுண் மூசளி வெண்பூச் செற்றுத்
தந்தலை மிதிப்ப வன்னந் தணப்பன விலஞ்சி தோறும். 79

---

74. கவ்விய - கவ்வ.

76. ஊரானது நீரின் தொழில் முற்றுமை. அவையதன் - அவற்றது.

" நிரைகவர்ந் திடுதல் வெட்சி நிரைமீட்டல் கரந்தை என்ப
வெருவமேற் சேறல் வஞ்சி மீட்டெதிர் ஊன்றல் காஞ்சி
வருநொச்சி புரிசை காத்தல் வளைத்திடல் உழிஞை யாகும்
பொருவது தும்பை என்ப போர்வெல்லல் வாகை யாமே. "

இதற்கேற்பப் பொருள் கொள்க.

77. கலித்து - தோன்றி. கலி - ஒலி.

78. பீலி - சிறு சின்னம்.

ஓம்புதன் குறியி னோடு முறைநெ்தெனக் கமலம் பூத்த
தீம்புனற் றடத்துண் மேதி சென்றுமேய்ந் துழக்க விண்ணில்
தாம்பெரு வாளை வெய்யோற் ருக்குவ கமலத் தேவி
கூம்புறப் பானு ணீங்குங் குற்றங்கண் டொறுத்தன் மான. 80

பண்டொரு கோள்வாய்ப் பெய்து பாற்றிய காரிப் புத்தேள்
மிண்டிய கோள்க ளுள்கள் வேறுள மீன முற்றும்
உண்டுபின் னுமிழ்வ போல வுரைத்தவன் னவற்றை யெல்லாங்
கொண்டுள மடக்கிக் கால்வ குருமலர்ப் பொதும்ப ரீட்டம். 81

வேறு

புரிமுறுக் குடைந்து தேறல்வார்ந் திழியும்
புதுமலர் கற்பகம் வளர்ந்த
விரிபுகழ்த் துறக்க வேந்துதெய் வதமாய்
மேதக வதிந்தகா ரணத்தால்
உரிமைகொண் டுகைக்கு மூர்த்தியாந் தாமு
முடங்கவட் பயில்வது போலாம்
வரியளி முரலும் பொழிரெறு நிவந்த
மதிரெறு மழைக்குலம் பயிறல். 82

மணிநிறக் கமுகு மிடறிறக் கலித்த
வாய்விரி யாதமென் பாளை
துணிபுனற் கயத்துத் தோற்றிய நிழலைச்
சூர்த்தவன் மீனென வெருவி
அணிமலர் மிசையா தகலெரு மையின்பி
னடரிரு டுரந்துசென் மதிபோல்
திணிமுலை யொழுக்குந் தீம்பய னுகர்ந்து
செல்லுவ சிறையனத் தொழுதி. 83

---

80. தன்குறி - தாமரையாகிய ஆயுதம். குறி - ஆயுதம். பானுள் - ஒருநாளிற்பாதியை; நள்ளிரவை அன்று; இரவு.

81. ஒரு கோள் - சுக்கிரன். பாற்றிய - கக்கிய. காரி - வடுகன்.

83. கலித்த - தோன்றிய. வன்மீன் - முதலை. ஒடும் இயல்பின்றி நிலையாயுள்ள புனலைத் துணிபுனல் என்றார்; தெளிபுனல் எனக் கூறுமாறும் காண்க.

தெளிபுன லுகுத்துத் தங்களைப் புரக்குஞ்
செய்ந்நன்றி மதித்துவர் பருகும்
அளிமுகிற் குலத்துக் கருஞ்சுவை யிளநீ
ரளிக்கிய விழைந்தன போலும்
வளிவழக் கழுங்க மிடைந்துபல் குலைகண்
மடலிறக் கான்றுபூம் பாளைக்
குளிர்மணங் கஞற்றி நிழன்றுவா ளோங்கிக்
குயின்குழாங் தைவருந் தாழை. 84

சிறையளிக் குலங்கண் முரன்றலர் தோறுஞ்
செல்லுவ திவவியா ழெழுப்பி
நறைமலர் தொறும்வே றிறைகொளுந் தேவர்
நயப்புற வின்னிசை மிழற்றி
நிறைவரங் கிடைத்துப் போதுமெய் யடியார்
நிகர்தரு நந்தன வனங்கள்
பொறையுயிர் தாது குவிவன வவற்றைப்
பொழிமதுப் பெயர்ப்பன பணைக்கே. 85

மங்கையர் தடந்தோள் வடிவமு மதர
வனப்பும்வா லெயிற்றுநீர்ச் சுவையும்
தங்கிய நலத்தாற் றளைதொறு முழவர்
தலையளி புரிவன கரும்பர்
அங்கவை குழைய வணக்குநா ணுக
வயலெலா மடர்வன சுரும்பர்
பங்கமெங் கணும்வே ளெய்கணை யாகப்
பரப்புவ தாமரை யரும்பர். 86

இரவெலாங் கணவன் கலவியிற் றிளைத்த
விருநில மடந்தையக் கலப்பின்
விரவுசெந் நிறத்த விழிகளுந் தந்த
விழுக்குறி யிதழ்க்கனி வாயும்
பரர்விழிப் படுத்தற் குள்ளக நாணிப்
பாணியான் மூடிய தேய்ப்ப
வரமலர்க் கழுநீர் குமுதமுன் பகலின்
மலர்முகங் குவிவன வயல்கள். 87

---

86. அதரத்துக்குச் செங்கரும்பின் நிறம் உவமை. தளை - வரம்பு.

87. முன்னாள் - பகல், முற்பகல். பின்னாள் - இரவு, பிற்பகல். மாலைக்காலத்து மலர்வன ஆகலின் முன்பகலைக்கூறினர்.

மேகமண் டலத்தைத் தைவரு வாழை
விரவுவ தொருபுற மாகப்
பூகமென் றயிர்ப்ப நிவந்தெழு கரும்பு
பொதுளுவ தொருபுற மாக
நாகவல் லிகளு மஞ்சளிஞ் சிகளும்
நலப்பன வொருபுற மாகக்
காய்கதிர்ச் செந்நெ லிடமெலாம் விளைக்கும்
களமர்கள் கம்பலை மிகுமால். 88

பள்ளிகொண் டுறங்கும் புள்ளினம் தீய
பண்பினர் போலெழுந் திரியக்
கள்ளயி னசையின் வண்டினந் தக்கோர்
கடுப்பவீழ் மலரொடுந் துவள
வள்ளலப் படைகள் பூட்டுபு களமர்
மலர்முத றுமிதரக் கடவும்
வெள்ளமெண் ணிலவென் றுரைதரு பகட்டேர்
விளாவுவ வியனில நெளிய. 89

உழுநர்க ளொருபா லுழுதசே றழுந்த
வொண்புனல் பாய்த்துந ரொருபால்
அழுகுசே றறிந்து மறுவலும் விளாவி
யைதுறக் குழப்பிநே ராக்கி
விழுமிய முளைக டெய்வதம் போற்றி
மேதக வித்துந ரொருபால்
கெழுமுளை சேற்றிற் பதிந்தபின் றெளிநீர்
கீழ்மடைக் கவிழ்க்குந ரொருபால். 90

திறந்தகீழ் மடைகள் சிக்கெனச் சிறைத்துச்
செறித்தமேன் மடைகளைச் சீத்து
விறந்தநீர் பரவ முளைப்புனல் பாய்த்தி
விழுமிய விடரொரீஇப் புரப்ப
நிறந்தழை மதிபோல் வெள்ளொளி விரிக்கு
நென்முளை முழுவது மதியின்
உறைந்தபைங் கிரண மெனப்பசந் தெழுந்தாங்
குயர்வன பண்ணைக டோறும். 91

---

88. நாகவல்லி - வெற்றிலைக் கொடி.

89. வள் அலப்படை. வள் - கூர்மை. ஏர்கள் விளாவுவன.

91. விறப்பு - செறிவு. ''விறப்பு முறப்பும் வெறுப்பும் செறிவே'' தொல் - உரி - சூத் - 49).

வேறு

நாறு பறித்துக் குணின்மோதி நறுநீ ரலைத்து முடிசெய்த
வேறு நிலத்தி னுழத்தியர்கள் விரவிப் பதிப்ப வளர்தோற்றம்
கூறு படுத்தி வதியுடலங் குற்றங் களைந்து கூற்றொழிப்பப்
பேறு கதுவ வேற்றுடலம் பெய்து செழிக்கு முயிர்போலும். 92

வித்து நிலத்தின் வெறுத்தபயிர் விறப்பி னீங்க விடைவாங்கிப்
பைத்த நிலத்தி னகன்றபயி ரகல்வி னீங்கப் பதித்தோம்பும்
மைத்த வுடலி னுழவர்வினை மாற்றி யூட்டி யினிதளிக்கும்
சுத்த னிகர்த்தார் பணியெல்லாந் தோற்றத்திலங்கு முயிர்
[போன்ற. 93

வேறு

வீண்பட லொழிகென மிதித்த பூந்தழை
ஏண்படு தன்னுரு விறந்து பைம்பயிர்
மாண்பட வளர்ப்பன மாய்ந்துந் தக்கவர்
பூண்பரா லுதவியென் பொருள்வி ளைக்குமே. 94

கோசலம் விராய்க்குளம் பழுந்திச் சேறதாய்
மாசென வழித்தெறிந் துலர்ந்த வாப்பியும்
பூசலோ டுழவர்கள் போதர் வார்பழி
ஆசிலார்க் கடுப்பினு மாய்ந்து ளோர்விடார். 95

பரம்புபல் லுயிர்தொறும் பாகத் தெல்லையிற்
புரம்பொடித் தவனருள் பொருந்துந் தன்மைபோல்
வரம்பின தெல்லையின் மண்டு காற்புனல்
நிரம்பிநின் றதுநெடும் பணைக டோறுமே. 96

மருவுபல் லுயிருமேல் வளர்க்கும் பைம்பயிர்
குருகின முன்புபோற் குறுகு ருவகை
சுருள்விரித் தமன் றுயிர்த் தொகைக ளோம்புவ
அருளின ரென்றுமவ் வருளிற் றீர்வரோ. 97

---

92. உடலம் கூறு படுத்தி - உடலினின்று உயிரை வேறுபிரித்து.

93. வினை மாற்றி ஊட்டல் - செய்த முறை தவற நுகர்வித்தல். 'புரிதரு முறையிற் பிறழ்ந்து' (நந்தியுபதேச - செய் - 115).

95. போதருவார் - போதர்வார்; விகாரம்.

97. பயிராயிருக்கும் காலத்தும் உயிரை ஓம்பலால் 'என்றும் அவ் வருளிற் றீர்வரோ' என்றார். உயிர்த்தொகை - மீன், ஞெண்டு முதலியவை. அவ்வுயிர்களைக் குறித்துவரும் குருகு என்க. அமன்று - நிறைந்து.

எடுத்ததோ ருடலுயி ரிகவு முற்றினும்
அடுத்தவா ணவத்தின்மீட் டாதல் போன்மெனக்
கெடுத்தமா மலர்முதல் கிழங்கு நிற்றலின்
விடுத்தெழுந் தெங்கணு மிடைதன் மேவுவ. 98

அளமரு பிறப்புக வமலர்க் குய்த்திடும்
வளமலர் களையென வழுங்கப் பட்டன
விளறருந் தகையரு மிடைந்தொ ருத்தர்பால்
தளர்வுசெய் வாரெனிற் றூழ்க்கற் பாலரே. 99

வேறு

அரிய லார்ந்த வனந்தரு ளத்தினன்
மருதம் பாடும் வயற்றலை யாடவர்
பருவங் காட்டலும பாய்களை கட்பச்செல்
கரிய வாட்டடங் கண்ணிய ரெங்கணும். 100

பணைம லர்க்களை பற்றிப்ப றித்தலும்
பிணைய னம்பெடை யோடிரி வுற்றன
இணைம லர்க்குல மென்னக்க வற்றுவார்
துணையு நம்மையு மென்றுது ணிந்தென. 101

செங்கை தாடித லைக்குய மானனம்
பொங்கு தாமரைப் போதெனற் கேற்புறப்
பங்க மோடு பயின்றன கட்டுலாம்
அங்க ணுற்றுக்கா லாட்டியர்க் கென்பவே. 102

பகைமை தோன்றப் பறித்தடு காலையும்
முகைநெ ரிந்தமு டிப்பன மோப்பன
தகைக ளுண்பன சாத்துய ரெய்க்கினும்
அகைந லத்தனுங் காரமைந் தாரரோ. 103

---

98. மலர் முதலானவை அக்கிழங்கினை விடுத்து எழுந்து. உயிர் உடலை நீப்பினும் ஆணவத்தால் மீட்டும் அவ்வுடலில் ஆதல் போல், மலர் முதல் மேவுவ.

99. விளறு - வெள்ளறிவு.

100. அரியல் - கள். அனந்தர் - மயக்கம்.

101. பிணை - விருப்பம். துணை - பெடை. மலர்க்குலத்தைக் கவற்றுமாபோல்.

103. உண்ணப்படுவன. அகை - செறிந்த.

மதுநு கர்ந்த மயக்கினர் பாங்குளார்
வதன மாதி களையென வெளவுவார்
கதிய தம்படை காய்பகை போற்செயும்
முதுமை யத்திர மூழ்குநர் போன்றுளார். 104

களையக் கைகளை பற்றுதொ றுந்தொழில்
உளையப் பூவென் றுளிமுகம் பாய்வன
விளைமட் டேட்டலர் வீதனி றுத்துமத்
தெளிவைத் தேறிய போற்சிறை வண்டினம். 105

வயலிற் பாய்வன மாதர்வி ழிக்கயல்
வயலி ருங்கயல் வாண்முகம் பாய்வன
அலரிற் பாய்வன வாரள கத்தளி
அலரின் வண்டள கத்தலர் பாய்வன. 106

எள்ளுங் காற்கிரிந் தாங்களை ஞெண்டுபோம்
பள்ள நீரிற் பகட்டுவ ரால்புகும்
அள்ளல் கூர்ம மழுந்தும டர்த்தெறி
கள்ள வம்புயங் கங்கிற்க விழுமே. 107

கமலஞ் செங்கழு நீரணிச் சங்கமழ்
குமுதம் வள்ளை கொடிவிடு சைவலம்
அமிழ்த மென்மொழி யாற்றுக்கா லாட்டியர்
தமது மெய்யினல் லாற்றளை யில்லையே. 108

உறுப்பி னுக்கின மாயொளிர் யாவையும்
கறுத்த டர்த்த கடைசியர் புன்முதல்
இறுத்தெ றிந்தன ரீண்டினஞ் சாடுவோர்
வெறுத்தற் கஞ்சுவ ரேமற்றை வேற்றினம். 109

---

104. களை என்று. மை அத்திரம் - மாயாஸ்திரம், மோகனாஸ்திரம்.

105. கையானது களையாகக் களையைப் பற்றுந்தொறும். அலர் வீதலை.

107. அளையிற்போம், அள்ளலில் அழுந்தும்.

108. தளையில் இல்லை. தளை - வயல்.

மதுநு கர்ச்சியின் வாண்முகஞ் சேந்தன
கதுவு நீரிற் கரங்கள்வி ளர்த்தன
செதுவ தட்டரு டீம்பயிர்க் கீத்தலாற்
புதுமை யீரொளி பூத்தன போன்றன. 110

அன்னத் தோடக நாணவொ துங்குபு
கின்ன ரத்தொகை யஞ்சக்கி ளந்துபோய்
நன்னர்த் தம்வயி னண்ணுவ ராபவே
முன்னிப் பண்ணை முழுக்களை கட்டுளார். 111

சூறை யாட்டயர் வார்தொலை வெய்தலும்
பாறி னோர்படர்ந் தாங்குப் படுகளை
கோறல் செய்தவர் நீங்கலுங் கொம்மெனச்
சேற ருவயற் செற்றின புள்ளெலாம். 112

கைகள் சிப்புக் களைதொழி னீவுதல்
நெய்க டிப்புன லாநில வுந்தலை
செய்க ளாகத் திருநில மங்கைதன்
மைக ருங்குழ லாவள ரும்பயிர். 113

ஒளிகண் மாய்ப்ப வொலிதெங்கு பூகதம்
துளிமை மாய்ப்பன வாழைதொ குங்கமை
வளியின் மண்டில மாய்ப்பன வென்றுதாம்
களிறு மாய்ப்ப கதழ்ந்தெழும் பூம்பயிர். 114

வேறு

எழுந்துவளர் பசும்பயிரின் றோற்ற நோக்கி
யெமைப்பொதிந்து துவக்கியுடன் முழுதுஞ் சால
அழுந்திநனி கண்டுதி யாக்கு மீதென்
றஞ்சியிடை மடக்கும்வகை யகத்துநாடிச்

---

110. செதுவது - குற்றமாயுள்ளது, களையப்படுவது, அருளை ஈத்தலால். ஈரொளி - அட்டலால் உண்டாகிய வீரமும் அருளைக்கொடுத்தலால் உண்டாகிய புகழும் ஆகிய இவற்றின் ஒளி: கீர்த்தி, பிரதாபம்.

111. தோடு -கூட்டம்.

112. பாறினோர் - அஞ்சிஓடினோர். சூறையாடல் - கொள்ளையிடுதல்.

114. ஒளிகள் - சூரியசந்திரர். பயிர் களிறு மாய்ப்ப. ''பகன்மாய்ந்த மாலை மணிவிளக்கங் காட்டி'' (சிலப் - கனாத்திறம்). மாய்தல் - மறைதல். 'களிறு மாய்க்கும் கதிர்க்கழனி'' என்றாற்போல என்றார்.

செழுஞ்சுவைத்தெள் ளமிழ்தகிர ணங்க டம்மாற்
செறிகருப்பக் கனமுறுத்து வளரா நிற்கும்
விழுங்கியிருட் பிழம்புமுரஞ் சொளிகான் றெங்கும்
வெறிகளுற்றுங் குமுதமகட் புணருஞ் செல்வன். 115

களபநெடு வாய்க்கிளைக்கு மிளங்கோ டென்னக்
கவவுமடல் கிழித்தெழுவண் கதிர்க ளெல்லாம்
வளர்திறங்கண் ணகன்புடவி முழுது மான
வல்லவுண னெண்ணிறலம வதியப் பெற்றங்
களவையிடற் கரியபிரான் வரத்தி னற்ரு
லங்கநிறை யுரோமமெல்லா மமரர் கோமான்
உளநடுங்க வயிரநுதி யீட்டி யாக்கி
யும்பர்பொதிர்த் தடநெடுகு மூக்க மானும். 116

உடன்முழுதும் பலயோனி தழுவி யெண்ணி
லொண்டொடியா ரோருருக்கொண் டிருந்தா லன்ன
அடர்பசும்பொ னுலகிறைவன் செய்தி கேளா
வறியாது போர்முயன்ரு மந்தோ வென்று
தடவுமனத் தெழுஞ்சமழ்ப்பா லொளிவே ருயத்
தனிப்படைக டலையிறங்குந் தன்மை போலும்
மடல்கிழித்து விசும்பெழுந்த கதிர்க ளெல்லா
மரகதத்தி னொளிதழைத்து வணங்குந் தோற்றம். 117

மன்னுசிவஞ் சதாசிவனென் றுடலம் வெண்மை
வாய்ந்தீச னெனநீல வுருவம பூண்டு
பின்னரர னெனச்சிவந்த வடிவந் தாங்கும்
பெற்றிமைபோல் வித்துமுளை வெண்மை யாகி

---

115. சந்திரனுனவன் கனஞ்செய்து வளர்வான். இருட்பிழம்பை விழுங்கி. முரஞ்சொளி - நிறைந்த ஒளி. ''முரஞ்சல் முதிர்வே'' (தொல் - உரி - 37).

116. அகத்திட்ட மடல். கவ்வு - அகத்திடுதல். அவுணன் பெற்று ஆக்கி அட நெடுவிக்கும் ஊக்கம் எனமுடிக்க. ''கவ்வகத்திடுமே'' (தொல் - உரி - 59) கவ்வு அகத்திடாகிய குறிப்புணர்த்தும்; உ - ம்: 'கவ்வுக் கடுங் குரையள் காமர் வனப்பினள்' எனவரும். எச்சமாங்கால், கவைஇய எனத் திரியும். கவ்வு - அகத்திடுதல்'' (சிலப் - கானல்வரி - 52 உரை).

117. அன்ன இறைவன்.

நன்னர்மர கதவொளியின் பயிரா யோங்கி
நயந்ததற்பின் செம்பொனிற வயக்க மாண்ட
கொன்னும்விளை வாய்ப்பழுத்து நாளுந் தாழ்ந்த
குழவிபயக் தவர்மணிப்பூண் கொங்கை யென்ன. 118

பரவுசிவ ஞானமுண ரடியார் செங்கைப்
படுத்தபொருள் பெரும்பயனைப் பயக்கு மாபோல்
விரவுமுழ வர்களளித்த சிலகொண் டாற்ற
வியன்பணைகள் பெரும்பயனு விளைத்த சாலி
மரகதமெல் லுருத்தணந்து கவுர மேனி
வயங்கியறம் பற்பலவும் வளர்க்கு மாற்றல்
இரவுவளங் கதிர்ச்சடிலக் குழகன் பாங்க
ரிருந்தருளு முலைமமாதும் புரையு மன்றே. 119

உடல்கருவி புவனமுறு போக மெல்லா
முடங்கியைந்துஞ் சிவன்றேற்ற மொன்றே காணும்
மடனகன்ற சீரடியார் நுகர்ச்சி யாது
மருவாமை யொழிந்துநிற்கும் வாய்மை யொப்ப
இடனகன்ற தளைகடொறும் விளைந்த சாலி
யிரும்புனல்வேண் டாமையொழி பருவ நோக்கித்
தடநெடுந்தோ ளுழவரெல்லா மண்மி யாத்த
தண்புனலைக் கவிழ்த்துணக்குந் தொழிற்க ணின்றார். 120

வேறு

ஆக்கும் பொழுதாக் கியளித் துலகம்
போக்கும் பதநேர் தலும்போக் குமருள்
தேக்கும் பரனேர் விளைசெந் நெலெலாம்
தாக்கும் வகைகண் ணினர்சார் குவரால். 121

---

118. சிவம் எழுவாய்: வித்து முளையானவை மாண்டன, தாழ்ந்தன என முடிக்க. மாண்ட விளைவாய் என்று இயைக்க.

119. இரவுக்கதிர் - சந்திரன்.

120. கருவி - கரணம்.

121. அளிக்கும்பொழுது அளித்துப், போக்கும்பரம், நேர்.

தகவா யினுந்தா மளிசெய் தவென
முகநே ரெதிர்வுக் குளமுன் னலர்மற்
றுகவீழ் விளைவிம் பருறந் தெவரும்
இகவா ளினிறுத் தனர்பின் னிடுவார். 122

விளைவைத் தடிவார் வளைமீன் கமடம்
உளையக் கொலைசெய் தொருபா லிடுவார்
திளைநல் வினையார்க் கொருசெய் தொழிலில்
இளைபல் பொருள்வாய்த் திடுகேண் மையவே. 123

வயன்மீட் டுமெழுந் தமலர்ப் புதல்கள்
குயவாய் விளைவோ டுகுறைந் தனவால்
பயில்பங் கமளா யலர்பட் டவர்பால்
துயரே பலகாற் றுறுவிப் பர்களே. 124

நிலையா யெழுகா லிருந்தார் நிகரும்
சிலைபோ லிருந்தே துயில்வார் சிவணும்
தலைதாழ் தருகாற் றடிவுற் றிடலும்
அலையாப் படைகொண் டவரொத் ததரோ. 125

வேறு

குறைத்தபூங் கதிர்ச்சாலி கொடுபோந்து களனெங்கும்
செறித்திதனைப் பலவாற்றாற் செலுத்தறத்தி னுயிர்துறக்கம்
இறுப்பதுவேண் டாவிதனை னெய்துவா மெனவுளத்தின்
அறுத்தவர்போ லுழவரெல்லா மைதுநெடும் போரிடுவார். 126

விண்ணறுத்து மேக்கிவர்ந்தார் வியன்றுறக்கத் தவர்மகளிர்
அண்ணன்முலை முயக்கன்றி யறியாமை யெதிர்நோக்கிப்
பண்ணரிய தவந்தானப் பயப்பாட்டி னெடும்விளங்கும்
மண்ணகலா ரறிஞரென வல்லையவ னுருதிழிவார். 127

---

122. உழவர் எவரும் உகவீழ்ந்த விளைவை இவ்விடத்து மிகுந்து முன்னலராய்ப் பின்னிடுவார். உறந்து - மிகுந்து.

123. கேண்மை - முறைமை.

125. பாயாவேங்கை என்றாற்போல அலையாப்படை என்பது கண் படையை உணர்த்தியது. தலை தாழ்தருகாற் சிவணும்.

126. உளத்தில் முடிவு செய்தாரைப்போல.

127. அறுத்து - அளவு படுத்தி. உழவர்கள் துறக்கத்தோர் வேறொன்று அறியாமையைநோக்கி. விளங்கு மண்ணை அறிஞர் அகலார் என.

இவற்றின்வழி யீங்கெவரு மிவர்வரெனப் பலகோளும்
தவச்சிதர்ப்ப வைகறொறுந் ததைந்துரிஞ்சிச் செலனோக்கிக்
கவற்சியிமை யார்க்குறுத்தல் கடனன்றா லெனக்கதிர்ப்போர்
அவற்றையெலாந் தணித்துழவ ரருந்தொடக்குக் கடாவிடுவார்.

தென்புலத்தார்க் கெதிர்முறைசெய் செயல்போலத் தென்றி
தன்பகட்டுக் கினமான தாங்கள்செய றக்கதென [சைக்கோன்
முன்புவய லிடனாக முன்னிவிளா வியவீண்டும்
இன்புறுக்குங் கதிர்த்துகைப்பி னிடனேர்பு திரிந்தனவால். 129

செயற்றலைகின் றுழப்பவர்க டேக்கெறிவ ரெனுமொழிக்கண்
அயிர்ப்பதுமுண் டேதொடக்கி யடித்துகைப்பக் குலாலன்வினை
இயக்குதிகி ரியிற்பெயர்கா லிருங்கதிர்கௌ வுபுகுதட்டி
வயிற்றடக்கி யுடல்வீக்கி மதப்பனவன் பகட்டினங்கள். 130

சுற்றமெலாம் வேறாக்கித் தொடர்ந்தவரை யோகிருத்தும்
நற்றவர்போல் வைப்பதடி நவைதுவரத் தணப்பித்துக்
கொற்றவனா தியர்க்களித்துக் குலாவியபண் டியிற்கொடுபோய்
முற்றநெடுங் கூடுநிலன் முதுகுளைய வுறுத்துவரால். 131

வித்துணக்க லொருபாலாம் வெறுத்தவரி சனமிஞ்சித்
தொத்தெடுப்ப தொருபாலாஞ் சுவைக்கரும்பு தடிந்தாலை
வைத்தடுவ தொருபாலாம் வார்கமுகா தியிற்குலைத்த
கொத்திருப்ப தொருபாலாங் குளிர்பணைத்தண் ணடைக
[டொறும். 132

---

128. பலகோளும் உரிஞ்சிச் செல்லலை. இவர்வர் எனவும், கடனன்றால் எனவும் கருதி.

129. விளாவியன திரிந்தன. ஏர்பு - எழுந்து. வலது பக்கத்து மாட்டை அடித்து ஓட்டினால் வலமிருந்து இடமாகத் திரும்பும் என்க.

130. உண்டே: ஏகாரம் வினாப்பொருளில் வந்தது.

131. தொடர்ந்தவரை - மாணாக்கரை. நற்றவர் - பெரியோர். வை பதடியை சுற்றமாகக் கொள்க. கூட்டில் உறுத்துதலை யோகத்தில் இருத்துதலாகக் கொள்க. துவர - முழுதும்.

மங்கலத்தின் பெருமகிழ்வும் வருபுனலாட் டயர்வியப்பும்
கொங்குயிர்த்த மலர்ச்சோலைக் குலாய்நுகருந் தனிநயப்பும்
திங்கடொறுந் தேவகுலச் சிறப்பெடுக்கு மிகுகளிப்பும்
பொங்குவன வூர்கடொறும் பொலிதருமாந் தருக்கெல்லாம். 133

பரத்தைமையாற் கணவருடன் பாவையர்கள் புலந்தொழிக்கும்
வரத்தகலா மலதேனைக் கலாம்வருவ தறியாதங்
கிரக்கலுறு வார்க்களித்து மிடருழப்பார்க் கிடர்துமித்தும்
புரக்கவிரங் குவதன்றிப் புகாதுயங்கி யிரங்குவதே. 134

தணந்துபரத் தையர்மாட்டுச் சார்காலு மூடலினும்
உணர்ந்துணர்த்தும் பாணியினு முலவாமை யெழுநினைவு
புணர்ந்ததன தியறெரித்தாற் போலமதன் கணையாகி
மணங்கமழ்பங் கயமலர்கண் மரீஇத்திகழுந் திணைமருதம். 135

நெய்தல்

வேறு

விருப்பின் மீன்கவர் வினைஞர் கோட்சுறு
மருப்பி னூடலும் வருதன் மாண்புணர்ந்
தொருப்பட் டோர்ம்புன லும்பற் போற்றித்தம்
கருத்து வாய்ப்பது கருங்க டற்புரம். 136

கிழக்கு மேற்கெனக் கெழுமச் செப்பலாற்
கிழக்கு மாதிரக் கிழவன் பண்ணைசூழ்
முழக்கு நீர்க்கடன் முதல்வ னூனது
வழக்கு மேற்றிசை வருணற் கென்பவே. 137

---

133. சிறப்பு - விழா.

134. பரத்தைமை - அயன்மை; பரத்தையிற் பிரிந்ததனால், பின்னர் இன்பம் விளைக்கும் கலாம் ஆதலால் அகலாம் என்றொழியாது 'வரத்த கலாம்' என விசேடித்தார்.

135. ஊடலும், ஊடல் நிமித்தமும் மருதத்துக்கு உரித்து. அம் முக்காலத்தும் நினைவுண்டாம் என்க.

136. மருப்பில் வருணனைத் தியானித்து நாடுதலும். வருதலின் மாண்பை உணர்ந்து.

புரையில் புன்னைகள் பூசை நீர்க்கடல்
அரையற் காற்றுவா னமைத்தல் போன்மெனத்
திரையொ துக்கிய தெய்வச் சங்கினுள்
விரைம துப்புனல் வீயு குப்பன. 138

பொய்ம்மை யண்ணல்பாற் புகன்ற தீங்கெலாம்
மைம்ம ணிக்கடல் வைக லும்படிந்
தமம நீக்குமா றடுத்த போன்றன
விம்மு தேமலர் விறந்த முண்டகம். 139

தடித்தெ ழுந்தொறுந் தாழை பூப்பன
அடுத்த தண்கட லுண்மி நீர்முகில்
எடுத்த செல்வமற் றிஃதெ ஞான்றுமம்
மடுத்த காதலின் மகிழ்ச்சி கொண்டென. 140

தாழை பூவொடு தழைந்த முன்னெலாம்
ஞாழல் வீத்திர ணன்று குப்பன
வாழி வாளொடு வளைந்த கள்வர்முன்
வீழ ணித்தொகை வீசு வாரென. 141

கலவி ஞர்பழி கரக்கு மேதைபோற்
குலவு நாகமுங் கொங்கு ஞாழலும்
நிலவு கைதையு நெய்த லுங்கடற்
புலவ றக்கடி போர்ப்ப வெங்கணும். 142

இழிவு ளாருளு மேற்ப வர்க்கெலாம்
அழிவி லாவர மருளு வாருளர்
கழிபு லாற்கருங் கடல கன்றுறை
முழுகு வோரைவான் முன்னு விக்குமே. 143

தெள்ளி யோர்ப்பொருஞ் செயற்கு விஞ்சுற
உள்ளு வான்பொரு ளுதவு பூங்கடல்
தொள்ளை யோர்ப்பொருந் தொடுதற் கேற்புற
அள்ளு நீரெழு மார்வக் கேணிகள். 144

---

140. தாழையாகிய தாம் அடுத்திருக்கும் கடல் என்க. முகில் கடல்நீரை முகந்து செல்வதால் இம்மின்னல் உண்டாயதென்று.

144. கடல் உயர்ந்தோரை ஒக்கும், கேணிகள் கீழோரை ஒக்கும். செயல் - முத்து எடுக்கும்பொருட்டுப் பரதவர்மூழ்கும் செய்கை. கீழோர் முயற்சியளவினதாய பயனைச் செய்வார்.

கருவு யிர்ப்பன கங்கு டிப்பன
மருவி னத்தினை வாய்ம டுப்பன
உருகு நோக்கினு லுவப்ப மீன்குலம்
உருவ மாதிக ளுறழ்வ காட்டுமே. 145

இப்பி வாலிடம் புரிவ லம்புரி
தப்ப ருஞ்சலஞ் சலங்கள் பன்முறை
பப்பின் முற்றிய பாஞ்ச சன்னியம்
எப்ப ரிசனத் திறைவ னுக்குமே. 146

விலங்கித் தாந்திரை விரைந்து வேறுபல்
புலங்க ளிற்பொருள் போக்கி யேற்றுலாம்
கலங்கள் காழ்வினை கழிப்பி னுர்ந்துசெல்
அலங்க லாக்கையி னுவி போன்றன. 147

துப்பு நித்திலத் தொகைகள் சங்கினம்
உப்பு மீனமு முயர்த்த வாடவர்
மைப்பெ ருங்கணுர் விலையின் மாற்றுவ
ஒப்பின் றெப்பன வுருவு போலவே. 148

சீரி யோர்பலி தேடி யோர்க்குமக்
காரி யீதுணக் கடனன் றுலென
ஆர வண்முதோ றகல வோப்புவார்
ஈர மீனுணக் கேந்து கொங்கையார். 149

---

145. ரூப ரச கந்தங்கள் தலைகீழாக எதிர்ந்து மாறியிருப்பன வற்றைக் காட்டும். மாறியிருத்தலாவது கந்த ரச ரூபமாய் இருக்கும் முறை. கரு உயிர்ப்பன - வேற்று மீன்களின் முட்டையோடு கலந்திருத்த லால் தன் முட்டை இது என்று அறியும்பொருட்டு அம்முட்டையைச் சுவாசித்தல் செய்வன. கரு - முட்டை. மீன்கள் மெய்யோடு மெய் புணராது பார்வையளவில் காமம் துய்த்து மகிழ்தல் இயற்கை; ஆகலின், 'நோக்கினுல் உவப்ப' என்றுர். உயிர்ப்பன - கந்தம். குடிப்பன மடுப் பன - ரசம். நோக்கினுல் உவப்ப - ரூபம்.

146. இறைவன் - அரசன்.

" இப்பியா யிரமே சூழ்ந்த திடம்புரி யென்று கூறும
ஒப்பில்சங் காயிரஞ்சூ ழுறுவ்லம் புரியென் றோதும்
அப்படி யதுவும் சூழ்ந்த சலஞ்சல மாகு மற்றைத்
தப்பிலாச் சலஞ்ச லங்கள் சார்ந்தது பாஞ்ச சன்னியம் "
(சூடாமணிநிகண்டு)

147. திரை - கடலில். ஓர் வினைமுடிவில் மற்றோர்வினையையார்ந்து.

148. ஆடவர், மகளிர் உறுப்புக்கு ஒப்பென உயர்த்தா நிற்பர்; அம்மகளிர் தம் உறுப்புக்கு ஒப்பல்ல என மாற்றுவார். உப்பிய மீனம். உருவு: ஒப்பலொப்புப் பொருள்.

நீங்கு காதலர் நீண்ட தேர்வழி
பாங்கின் மாதரார் பார்த்தங் காற்றுதல்
தேங்கு நீர்க்கட றெரிந்து கட்பகை
தூங்கி நீருகத் தூர்க்க முன்னுமே. 150

துணைவ னீங்கினர் தொழுதிப் புள்ளொடும்
அணையும் வண்டொடு மலையு மீனொடும்
புணரு மின்னலிற் புலம்பன் மேயினர்
உணர்வித் தன்னவற் றுரைகொள் வாரென. 151

சாத லன்னதோர் தளர்வு செய்தம
நீதி காட்டிய கிகரில் பூங்கமைழக்
கோதை வார்சிலைக் குமரன் கூர்ங்கணை
யாத னீலமங் கணிந்த நெய்தலே. 152

மன்னு நானில வரைப்பி னைந்திணை
சொன்ன வாறினிச் சொற்ற நானிலம்
முன்னி யொன்றினே டொன்று முற்றிய
அன்ன நீர்மையு மறைய நின்றதே. 153

திணைமயக்கம்

வேறு

வரைத்தி னைக்குரா னுகர்கிளி கொல்லையின்
வளரிறுங் கினுக்கேக
நிரைத்த கொல்லையிற் சொன்னலூண் வாரண
நெடும்புனத் தினைக்கேகிப்
புரைத்த தாயினும் பெற்றது புல்லிதாப்
பெருதகிற் புகலாமென்
றுரைத்த நன்மொழி புதுக்குறும விம்மித
மோங்குவ தொருபாங்கர். 154

---

150. தேர்வழியைப் பார்த்துத் தம்மனத்தைத் தாமே ஆற்றிக் கொண்டிருத்தலை. கண்ணாகிய பகைநீர் உகக் கடல் முன்னும்.

152. தளர்வு - இரக்கம். காட்டிய - காட்ட. கணையாதலாகிய நீலத்தை. இரங்கலும் இரங்கல் நிமித்தமும் நெய்தற்கு உரித்து.

154. புரைத்ததாயினும் - உயர்வாயிருந்ததாயினும்; புகல் - விருப்பம். வாரணம் - கோழி. "பெற்றது சிறிது செய்து பெருதகிற் பெரிது பண்ணும்; உற்றவா ணவத்தின் செய்கை" என்றமை காண்க.

மல்லன் மந்திரந் தனைத்தென முழைதொறு
மணிப்பணி யசைவற்று
முல்லைத் தீங்குழ னுகர்தர மானமா
முதிர்புதன் மயிர்யாப்பச்
செல்லு ருதவ ணிற்றல்போற் றிணையுணச்
செல்லுறு பதநோக்கிப்
பல்லி ணர்க்கொடி மாதவி நறுநிழற்
பயில்வது முளதாங்கண். 155

பூரி யோர்குழாஞ் சீரியர் சீரியோர்
பொதியிற்பூ ரியர்சேரில்
சேரு மவ்வவ ராகவே மதித்திடப்
படுவராற் செறிபண்ணை
வாரு நாகவல் லிகளுராய்க் கறியென
மலைக்கறி யுடன்மேவும்
கூரும் வெள்ளிலை யுடனது வெனக்கறி
கூடுவ தொருபாங்கர். 156

வேழ மென்றுதன் பெயர்கொளத் தகாதென
வெகுண்டகன் பணையண்மி
வேழம் யாவையும் வரைத்தலை வேழங்கள்
வீத்துணைப் பகடென்ன
வாழி தன்பெயர் கொண்டதென் னெனச்சினை இ
மதமலை வறங்கூர
வாழை யாதிகற் புகுந்திருங் கடாவடும்
வனப்புமா யிடைமல்கும். 157

பரந்த பன்னாதி மடுப்பினு மமைவுருப்
பாழுகட் டிணைக்கார்கோள்
இரங்க மாலைவெள் ளருவியாற் குழிப்பமேக்
கெழுவரை வரைதன்னைத்

---

156. உராய் - பெயர்ந்து. பூரியோர் குழாத்தையும் சீரியர் குழாத்தையும் முறையே சீரியோர் பொதியினும் பூரியர் சேரினும். பூரியோர் - கீழோர்.

தரங்க நீள்கரத் திரள்களாற் சிதர்படத்
தடவுரத் தெதிர்ந்தோச்சிச்
சுரந்த வோகையிற் பெருங்கட றெழித்திடுந்
தொடர்புள தொருபாங்கர். 158

காந்து நாகத்தின் மணிகளும் வயிரமுங்
கனையருவி யிழிஞ்ஞ்கல்
ஏந்தி நீள்கடற் களிப்பவீர்ம் புணரியு
மிலங்குவித் துருமத்தோ
டார்ந்த நித்திலந் திரைகளி னடுக்கலுக்
களித்திரு பெருவேந்தர்
சேர்ந்த போதுசெய் வரிசைகள் காட்டுமத்
திருவுமா யிடைமன்னும். 159

குரும்பை மென்முலை தோன்றுமுன் பாளையங்
குரூஉத்துகின் மிசைபோர்த்திட்
டரும்பி முன்வரு காலது நீவுவ
தழகெனப் புறவத்து
விரும்பு முல்லைகள் சிரிப்பநீர்ப் பழனத்து
விறந்தநெட் டிலைத்தெங்கு
பெரும்ப ழங்களாற் றளவினைச் சிதைத்திடும்
பிணக்குள தொருபாங்கர். 160

கேழ்த்த பொன்மலர்க் கடுக்கைசூழ் மாதவிக்
கிளர்கொழுந் திருண்மேகம்
தாழ்த்த சாகைய வயன்மரு தினங்களைத்
தாவவந் நிலவேழும்
சூழ்த்த நீள்கொடி வயலைமென் கொழுந்துக
டுறுவனத் தெழுபூவை
ஊழ்த்த பூஞ்சினை தாய்ப்பரத் தையர்கருத்
துறழ்வளங் களுமாங்கண். 161

புலவு வீசுதற் கஞ்சிநா சியைக்கருஞ்
சாந்திறைற் புதைத்தென்ன
சுலவு காரளி யிமிர்குமிழ் காட்டிடத்
துறுவன மவண்மாதர்

---

158. கார்கோள் - கடல்.

159. அருவியினுல்.

கலக வாள்விழி மானடற் கஞ்சுபு
கண்கள்மூ டியதென்ன
அலரு நீலங்கள் பகற்கழி குவிதரு
மழகுகாட் டுவதோர்பால். 162

மாய ஞகிய மீனந்தன் வரைப்பிடை
வதிதரப் புகுந்தாங்கு
மேய வாழியி னெழுந்தமீன் புறவத்து
விரைக்குறுஞ் சுனைவீழ
ஏய பூஞ்சுனை மீனமன் னதனிட
மெதிர்கொளக் குதித்தோடிப்
பாய வேலைநீர்ப் புகுந்துலாய்த்
திரிதரு பரிசுமவ் வுழித்தாகும். 163

கலவர் மீன்படுத் தெழுப்புசாப் பறையொலி
கறங்கறீ தெனத்தன்னுள்
அலவர் சாலிகொய் தண்ணுமை ததும்பொலி
யடக்கிமே லெழநோக்கிக்
குலவு நீணதிப் பழனமென் றுறைப்புனல்
கூர்ப்புறக் கடலேறி
நிலவு தன்னிடத் தடக்கிடு மயக்கமு
நீடுவ தொருஞாங்கர். 164

வாங்கு செந்நெலின் கதிர்கவர்ந் தினக்குரீஇ
மகரநீர்க் கடற்பாங்கர்
ஓங்கு புன்னையிற் கொறிப்பவங் குணக்குமீ
னெய்யெனக் கவர்ந்தோடித்
தேங்கு நீர்ப்பணைக் காஞ்சியிற் கொடியினஞ்
சேர்ந்துதம் பதிநீங்கிப்
பாங்கு வேற்றிடம் புகுங்கொடி யோரெனப்
பயில்வது முளதாங்கண். 165

---

162. வானமாகிய பெண் குமிழியைக்காட்ட, கழியாகிய பெண் முடிக்கொண்டாற்போல.

164. கலவர் - பரதவர். அலவர் - அலத்தையுடைய உழவர். கூர்ப்பு - உவர்ப்பு.

165. தம் பதியினின்றும் பிறர்பொருளைக் கவர்ந்து வேற்றிடம் ஓடும் கொடியோர் என்க. வாங்கு - வளைந்த.

குரும்பி தேரிய முதையலூர்ப் படப்பையுங்
குன்றினெண் குகள்செல்ல
இரும்பு லாரிய புனம்வயற் கொல்லையா
-னின்றகன் றுகள்செல்ல
அரும்பு மூசிய குறுஞ்சுனை கற்சுனை
யாவிவண் டுகள்செல்ல
வரம்பி லாரிமை யாரியன் முறைதெரி
வயினெனக் கலப்போர்சார். 166

வேழம் வாய்திறந் தெழுமணி புறநகர்
வேலையு முரம்பாக்க
ஆழி வீசிய மணிகுளஞ் சுனையவ
லடவவை வயன்மாதர்
கோழி யோச்சிய குழைபடக் கிழிந்தகுன்
றகத்திருல் புன்னுக
வாழி தேத்தடை யருவிகள் பெயர்த்தலை
வாயிடும் வளனோர்சார். 167

கான வாரணங் கழனியுங் கானலுங்
கலாவுறக் கடிநல்லூர்த்
தான வாரணம் பாக்கமும் பாடியும்
தகைதரத் திரைமுந்நீர்க்

---

166. குரும்பி - புற்றுஞ்சோறு. முதையல் - முல்லைநிலப் பழங் கொல்லை. ஊர்ப்படப்பை - மருதநிலத்தோட்டம். படப்பையும் என்ற உம்மையை முதையலோடும் ஒட்டுக. மூசிய - மொய்க்க. குறுஞ்சுனை - முல்லைநிலத்து. ஆவி வண்டு - மருதநில வண்டு.

ஒருசமய நூலில் எல்லையையுடையராயினுருக்குத் தமது சமயநூலுக்கு ஏற்பப் பல தேவருள் ஐயமின்றி இன்னுன் தலைவன் எனத்துணியும் உணர்ச்சியுண்டு.

ஒருசமயத்திலுள்ளார் தமது சமயநூலின் எல்லையை அறியாமல் பல சமயத்தும் போய்ப் போய் இன்னுன் தலைவன் என்று துணிவுருமல் ஐயுற்று அலைவர். அவ்வாறு ஐயுற்றுப் பலரும் அவ்வரம்பிலராய்க் குழுமித்திரியும் இடத்தைப்போல ஓர் நிலத்தில் உள்ளது அந்நிலத்தளவில் அமையாது பல நிலத்தும் போய்ப் போய் அலையும் என்க.

167. வேழம் - கரும்பு. முரம்பு - மேடு. புறநகர்வேலை - அகழி. அவைகளை.

கூன வாரணங் கொழும்புனற் கால்களுங்
குரைப்பருக் காணியாற்றுப்
பேன வாரமுந் தவழ்ந்திட மிருவளம்
பிணைந்ததா லொருமாடு. 168

வள்ளி மௌவனீள் வயலைதுப் பிலதைகண்
மலர்விரி கணிகொன்றை
கள்ள வஞ்சிநா கத்தினுட் டங்கிலக்
கடிமர மொரீஇமூன்றும்
நள்ள மீப்படர்ந் தொருவழிக் கோத்திர
நண்ணினர் தமைநீவி
ஒள்ளி யோர்ப்புணர் மாதர்போன் றுறுவள
மொருமருங் குளதாமால். 169

இனைய வாறுபல் வளங்களும் விராவிய
விடங்களு ளுவராதி
புனையு மாழிதன் னிழிவறிந் தகற்சியிற்
போற்றிநின் றிடக்கானும்
வனைக லாப்புகழ்ப் பழனமு மருங்குற
வள்ளிநா யகற்ருங்கி
வினையெ லாந்தபும் விலங்கல்வீற் றிருப்பது
தணிகையந் தலமாதோ. 170

திருநாட்டுப்படலம் முற்றிற்று

ஆகத்திருவிருத்தம்—186.

---

168. நல் ஊர்த் தான வாரணம் - மருதநிலத்தில் உள்ள யானை. அஃது அரசருடையது. பாக்கம் - நெய்தல்நிலத்தூர். பாடி - மருதநிலத்தூர் என்பது நிகண்டு. நல்லூரைக் குறிஞ்சிநிலத்து ஊர் என்றும் கூறுவர். கானவாரணம் - கோழி. ஆரமும் - நீரினும். முந்நீர்; சிலப்பதிகாரம் காண்க.

169. இலதை - கொடி. மூன்றும் - தந்நில மொழித்து ஒழிந்த ஏனை மூன்று நில மரத்தினும். ஒள்ளியோர் - வேறு கோத்திரத்து ஆடவர். தத்தம் கோத்திரத்துக் கொள்வதும் கொடுப்பதும் உலகவழக்கில் இல்லை.

திருநகரப்படலம்

திருவி ளங்கிய வனப்பினி லறிவினில்
திறத்தினி லருடன்னில்
ஒருவர் தங்களை யுயர்த்தமுன் முருகனை
யுவமையாக் குவரன்னன்
பொருவில் வள்ளியொ டாடிட மாகிய
புகழ்த்தணி கையும்யாங்கும்
ஒருந கர்க்கணி யுயர்த்தமுன் னுவமையா
வுரைப்பதா லெவராலும். 1

ஓங்கு பன்மறை யாதியின் முதலெழுத்
துறுபொரு ளுணர்கல்லாத்
தீங்கு தேர்ந்துவன் சிறையிடப் பட்டவன்
சிருட்டியி லுளதாயின்
பூங்கள் வார்குழல் வள்ளியொ டாடுதல்
புகன்றிடா னதனன்முற்
றுங்கி வையகம் படைப்புழி யறுமுகன்
றுன்படைத் தஃதொன்றே. 2

குண்டு கண்ணபேழ் வாயின வீங்கிய
குடவயிற் றினபூதம்
மிண்டு தேவர்க டலைக்கல னராத்தொடை
வியன்புயக் கணநாதர்
மண்டு வெள்ளியங் குன்றுமொவ் வாதெனின்
மழவிளங் கதிர்கோடி
கொண்ட மேனியி னமரர்சூ ழித்திருக்
குன்றமொப் பதுமுண்டே. 3

சங்க மேந்திய தலைவனும் பிரமனும்
சதமகத் திறையோனும்
பொங்கு தந்நக ரொழிவள முழுவதும்
புகுந்துபோற் றுபுவாங்கி

---

1. முன் - முதலாக. இரண்டற்கும் அப்பொருளே.

2. பிரமனைச் சிறையிலிட்டுப் படைப்புழி என்க.

அங்கண் வைகினர் வாழலுற் றுரெனி
லறுமுக னரசாளும்
நங்கள் காவியங் கிரிவள மொன்றொடு
நாட்டவும் படுமேயோ. 4

புல்லி தாகிய பொன்னக ராதிமேற்
பொருந்துவ தடாதென்ன
வல்லை நாறிய வெழுவதோர்ந் தித்தலம்
வகுத்துழி வரைகீண்டோன்
செல்லு றுவகைப் பலவரை யாப்புறச்
சிவணுவித் தாற்றுவென்
றல்ல னுக்குபன் மணிச்சிலம் பிடைப்படைத்
ததன் றலை யமர்ந்திட்டான். 5

பரவு காஞ்சியிற் பற்பல விம்மிதம்
பணித்தவ ணொழியாமை
அரவ மாலைய னமைந்தது மூலகெலா
மழிப்பமேக் கெழும்பௌவம்
விரவு றுதயல் விலக்கலுங் குருமொழி
விளம்பிய விடணுமிக்
குரவ னீள்வரை யெல்லையினிருந்தவக்
கொள்கையைத் குறித்தன்றே. 6

ஓவ வம்பல மிரசித வம்பல
மொளிர்பொனம் பலங்கண்டோர்
பாவ நுங்கொளி யரதன வம்பலம்
பதமெடுத் திறையாடல்
மேவ வஞ்செவிக் குருமொழி வைத்தவன்
வியன் றணி கையைநோக்கின்
சாவ வவ்வுழித் தென்றிசைக் கடவுளைச்
சாடுதற் கருத்தன்றே. 7

---

5. தலம் எழுவதை ஓர்ந்து.

7. இறையாடல் சாடுதற் கருத்தன்றே என முடிக்க. இயமன் தணிகையை நோக்கி வரில். சித்திரசபை - திருக்குற்றாலம். அரதனசபை - திருவாலங்காடு. தாமிரசபை - திருநெல்வேலி.

வார ணபபிரான் மணிநகர் துறக்கமே
மணிப்பொருட் டலர்வாழ்க்கை
ஆர ணப்பிரா னணிநகர் சத்திய
வுலகமே யராப்பள்ளி
நார ணப்பிரா னகர்கள்வை குந்தமே
நன்றெழுந் தார்த்தாடும்
கார ணப்பிரா னகர்சிவ லோகமே
கரைந்தவத் தலைமாதோ. 8

புடைந கர்த்தலை யசுத்ததத் துவமெனப்
பொலிந்தது வளஞ்சான்ற
இடைந கர்த்தலை யிலங்குசுத் தாசுத்த
மெனப்பொலிந் தஃதுள்ளால்
மிடைந கர்த்தலை சுத்தத் துவமென
விளங்கிய தவைமூன்றும்
உடைய தத்துவ மவைகடந் தொளிர்வதொத்
தோங்கிய துயர்குன்றம். 9

ஆய பல்படை யாதிக ளாக்கலிற்
புடைநக ரயன்போலும்
மாய மென்மொழி மயக்கியா டவர்துனி
மாதரை யுயிர்காத்து
மேய போகங்கள் விளைத்தலி னிடைநகர்
விண்டுவொத் திடுமுற்றோர்க்
கோய வின்னல்க ளறன்கடை துடைத்தலி
னுண்ணக ரரனேரும். 10

அடுத்து ளோரினைப் பலர்கயப் பொழில்களா
லணுக்கலா லரன்போலும்
மடுத்த மாணெழிற் புடைநகர் மாதரார்
மறைத்துநல் கிடுமின்பம்

---

8. வாரணப்பிரான் - வெள்ளையானையை உடைய இந்திரன். நகர்கள்: கள் பகுதிப்பொருள் விகுதி. நன்மையானது எழுந்து.

9. புடைநகர் முதலிய மூன்றும் ஒன்றிஒன்று உயர்ந்திருத்தலால் ஒன்றிஒன்று உயர்ந்த மூன்று தத்துவங்களாக அவற்றைக் கூறினார்.

10. ஆடவரை மாதரை உயிர்காத்து. இடைநகர் தன்னிடத்திலுள்ள மாந்தரை உயிர்காத்துப் போகத்தைக் கொடுக்கும் என்க.

தொடுத்த காதலி னிடைநக ரீசனைத்
துணையும்வேட் டனதுய்ப்பக்
கொடுத்து மேவலி னுண்ணகர் சதாசிவக்
கொற்றவன் றனைநேரும். 11

முழுது ணர்ந்தநித் தியர்தமக் காயினு
முழுவதுஞ் சொலப்புக்கால்
பொழுதின் றுய்விடு மாதலின் மூவகைப்
புரவள மெழுகூற்றில்
பழுதில் பல்பவ மெண்பத்து நான்குநூ
றுயிரம் பட்டாங்குக்
குழுமி நின்றிடு மவற்றுளுஞ் சிலவினிக்
கொண்டிவ ணுரைப்பாமால். 12

வேறு

அலங்குகதிர்ச் செழுஞ்சாலி கோழரையை
மறைத்தலினு லலர்பூஞ் சோலைக்
கிலங்குமணி மேகலையா மிணர்த்தபொழில்
பாம்புரியோ டெழுந்த நொச்சி
நலங்கிளரு மரைமறைத்து நிற்றலினு
லதற்குடையா நாம விஞ்சி
விலங்கலுயர் தடவரையை மறைத்தலினு
லதற்குடையாய் விளங்கு மன்றே. 13

துன்றுகதிர்ப் பசுஞ்சாலி படிக்குயர
வதற்குயர்ந்து சோலை தோன்ற
மன்றல்கமழ் பொழிற்குயர்ந்து மதிருேன்றும்
பெருங்காட்சி வள்ளி பாகன்

---

11. உள்நகரில் தேவர் ஆலயம் இருத்தலால் 'வேட்டன துய்ப்பக் கொடுத்து' என்ருர். அரன் - ஈசன் - சதாசிவன் என்றது முதற்செய்யு ளிற் கூறிய பிரம விட்டுணுக்களொழிந்த உருத்திரன் மகேசுரன் சதாசிவன் என்பவரை. அழித்தலால் உருத்திரன், திரோபவித்தலால் மகேசன், அநுக்கிரகித்தலால் சதாசிவன் என்க.

12. புர வளமானது குழுமி நின்றிடாநிற்கும்.

13. மேகலை - ஆடை. பாம்புரி - அகழி. விலங்கலினது தட அரையை என்க.

வென்றகழ ஞெழுப்புகுமெய் யடியவர்கண்
மனமிவர்ந்து விலங்கல் சேர
ஒன்றுமணி பலகுயின்ற சோபான
மடுத்துயர்ந்த வோக்கங் காட்டும். 14

வளச்சாலி மலர்ப்பொழின்முன் றலைவணக்கும்
மலர்ச்சோலை மதின்முன காய்த்த
தளிர்ச்சாகைத் தலைவணக்குந் தடமதினீள்
கிரிமுன்மிசை தரித்து வானம்
அளப்பான கொடித்தலைகள் வணக்குமருஞ்
சாதிமுன்னோர்க் கடுத்த பின்னோர்
திளைப்பான மகிழ்சிறக்க முறைநின்று
தலைவணக்குஞ் செய்கை மான. 15

கொடியனவே குளிர்பொதும்புங் கொடியனவே
யிஞ்சியுங்கோ புரமுஞ் சாலக்
கொடியனவே யிவைமுறையாற் கொழுங்கண்மடுத்
தலர்தூற்றுங் குறுகார் சேரின்
அடிபெயரா தவ்வுழியே தலைதுமிக்கும்
பொறிபடைக்கு மலரி யாதி
மிடிதுளக்குந் தேவர்தமை யாறலைத்துக்
கலக்கநனி விளைத்துத் தட்கும். 16

கடியனவே யகன்வயலுங் கடியனவே
தண்டலையுங் கயமுஞ் சாலக்
கடியனவே யிவைமுறையா லுழுதுழக்கிப்
புண்படுக்கக் கலங்கு மாதர்
அடியெடுத்திட் டுதைத்துவைது கட்டிமணி
வாய்க்கவ்வி யயிற்க ணோக்கிப்
பொடிமதுப்பல் வளம்பறிக்கப் படுங்குடைந்து
மாசுறுத்தப் புலம்பு மன்றே. 17

---

16. கொடியோருக்கும் சிலேடையாகப் பொருள்கொள்க.

17. கடியன - வாசனையுள்ளன, விலக்கப்படுவன. காலால் மிதிக்கக் கலங்குவதும், பெண்கள் அவ்வாறு செய்து பறிக்கப்படுவதும் புலம்புவதும் விலக்கப்படுவன என்க.

பூத்திருந்தும் புனற்றடங்கள் யாவரையுந்
　　தோய்ந்துபுகழ்ப் பொருளு மாக்கும்
காத்திருந்தும் கடிமலர்கள் கமழ்நறுந்தேன்
　　சோர்வுடைத்தாய்க் களிப்பு மாக்கும்
ஏத்திருந்தும் வயவர்சிலை யெதிர்ந்தவர்தம்
　　முயிர்வாங்கி யிசையு மீட்டும்
பாத்திருந்தும் புலவர்குழா மொருகலைமான்
　　றனை மணந்து பழியுந் தீரும். 18

வேறு

ஆழ்ந்து கிடந்துங் கரப்பதக மன்றேனை
　　யறிஞரினி தமைத்தவருஞ் செய்யு டானுந்
தாழ்ந்து கிடந்தும் புகழத்தக்க மைந்தர்தடங்
　　கரமன்ற வரறஞ்சா னெஞ்சந் தாமும்
போழ்ந்து கிடந்தும் புனைவலை யன்றேனைப்
　　பொருகளிற்றுக் கோடுகளும் பொழிலி னுள்ளால்
வீழ்ந்து கிடந்தும் முயர்வமல ரன்றேனை
　　வியனகருள் வெறுத்தபொருள் பலவு மன்றே. 19

வேறு

நகர மூன்றினும் விராய்த்தொடை படுப்பன நாடித்
தொகையி னுற்சில வுரைத்தன மினித்தொகு நகருள்
வகையி னுற்சில வேறுவே றுரைப்பது மதித்துப்
புகரி லாப்புடை நகர்வள முந்துறப் புகல்வாம். 20

புறநகர்

கூவி ரத்தடந் தேர்கடாய்க் குமரர்கள் பயிலும்
தாவி லெல்லைய சக்கரங் குழித்தவா ரொழுங்கு
மேவி யிந்நகர்க் குமரரை விண்டவர் நகரி
ஏவ நன்றுழப் படுவதென் றியம்பலொத் துளவே. 21

---

18. தோய்ந்தோரைச் சுத்தப்படுத்தலால் 'புகழ்ப் பொருளுமாக்கும்' என்றார். பழியை ஈட்டாது இசையுமீட்டும்.

19. நெஞ்சமும் அநேக பொருள்கள் தங்கிக்கிடந்து யாவரானும் புகழத்தக்கன என்க. வெறுத்த - ஊடலால் வெறுத்து எறிந்த.

20. தொடை படுப்பன - தொகுதியாகச் சேர்வனவற்றை.

21. எல்லையினவாகிய ஒழுங்கு ஒத்துள. வார் - நீண்ட. விண்டவர் - விரோதித்தவர். ஏவம் - இவ்விதம்; வடசொல்.

பரும நின்றுகு மணிபரல் சொரிவதாப் பகட்டின்
அருவி மும்மதம் விலாழிநீ ராவடி மிதித்தல்
உருவ வன்மர மிடிப்பதா நிலம்வலி யுறுப்பார்
விரவி நின்றவச் சூழலொத் துளசெண்டு வெளிகள். 22

வற்க மிட்டவாம் பரிபயில் வன்னில மவற்றின்
அற்கும் வன்குர மகழ்ந்தொளி ரறைமுழுச் சுவடு
விற்க லைக்குழ மதிமுழு மதியென விளங்கப்
பொற்க லைக்கடி தடங்குறி பொறித்தன போலும். 23

கட்டும் வாரினர் கழலினர் காளையர் கதித்து
முட்டும் வேல்சிலை நாந்தக முழுதுங்கல் லூரிக்
கொட்டில் வாய்ப்பயில் வாரது குறித்தனர் நோக்க
வட்ட வான்பயில் விஞ்சையர் மனத்துளும் பயில்வார். 24

புரவி போம்வழி பொற்குலாஞ் சங்கிலிப் படலை
கரிகள் போம்வழி கதிர்ப்பணி யடுக்கிவீழ் காழ்கள்
இரத மூர்வழி யிணர்மலர்த் தொடைத்திரண் மாந்தர்
பரவு நீள்வழி பங்கயத் தாமமா நகர்க்கே. 25

தண்ட மேந்துகைக் குஞ்சரம் வெளிறபுத் தேகும்
தண்ட மூற்றெழ வாக்கிய மும்மதத் தாரை
வண்டு துன்றலிற் புடைநகர் மாதராள் வயிற்றுக்
கொண்டெ ழுந்துநீண் மணிமயி ரொழுக்கெனக் குலவும். 26

தோய்ந்து நீர்பரி திக்கிறைத் தலதுதா நீரும்
வாய்ந்த மாதவ ருண்டிடா வளமைபோன் மணிக்கைப்
பாய்ந்த நீருடன் முழுவது மெறிந்தும்பர்ப் பனித்துக்
காய்ந்த வேழங்கள் பின்புவாய் மடுப்பன கமழ்நீர். 27

---

23. வற்கம் - பண்முற்றுப்பெற்ற. ''மறுவறு குதிரைவாயின் வடம் வட்டி கயிறு வற்கம்'' (நிகண்டு). குதிரைவாயின் வடம் என்பாருமுளர். விளங்கும்படி குறி பொறித்தனவற்றை.

25. காழ் - மணிவடம்.

26. வெளில் - தறி. ஏகுந்தண்டத்தில்.

27. உடல் முழுவதும்.

தடத்து நீர்த்திரைத் திரளுமத் தடத்துநீர் மடுப்பான்
இடத்து நீங்கிய வாம்பரித் திரளுநேர்ந் திருமபோர்
நடத்த மேற்செலு மாறுபோ லெழுந்துதாய் நடந்தங்
கடுத்த போதவை யடியர்போற் றலைபணிப் பனவால். 28

ஒற்றை யஞ்சகட் டிரதமு மொன்றலா தில்லாக்
கற்றை யங்கதிர்ப் பரிதித லுலகினைக் காய்வான்
உற்ற தொத்தன வுருள்பல பூண்டபஃ றேர்கள்
முற்ற வுள்ளுறீஇ முகில்கிழித் தெழுந்ததேர் நிலைகள். 29

கண்ணி றந்திவை போலடுங் கடன்வலாச் சமழ்ப்பால்
வெண்ணி றம்படை களிறுமொன் றல்லது மேவாப்
புண்ணி றம்படப் பொருமர சுலகடப் பொலிந்தாங்
கெண்ணி றந்தவுட் டளைத்தெழுந் தனவிபக் கூடம். 30

சுந்த ரந்தமக் கீட்டிய துரகதப் பிறவி
வந்த நாளிது வாலென மகிழுந்துமீப் பரித்தாங்
கந்த ரம்வரு மசுவதி நாடவழ் முடிய
மந்தி ரம்பல வகந்தழீஇ வான்றொடு மாடம். 31

கடக முள்வயிற் காட்டிய கூடங்கள் மிசையும்
கடகங் காட்டிய வென்பது கண்டகந் தழீஇய
உடலும் வில்லின வுமபரும் வில்லின வென்ன
அடலின் விண்ணிவந் தெழுந்தன வத்திர சாலை. 32

கிடுகு கூவிரங் கிம்புரி புரசைமத் திகைவார்
வடுவில் கூர்ங்கணை வாள்சிலை யாதியா நான்கு
படையி னுர்ப்பன வுறுப்பெலாம் பண்பின ரியற்றல்
அடைவின் முற்றிய சேரியு மனந்தமா லவணே. 33

---

28. திரைத்திரளும் பரித்திரளும் நேர்ந்து. தம்மிடத்தினின்று நீங்கிவந்த.

30. கண் இறந்து - கண் வேகத்தைக் கடந்து. தாட்சணியமில்லாது அடுங்கடன் என முடிப்பாரும் உளர். எண்ணிறந்த யானைகளைத் தன்னுள்ளே தளைந்து. எண்ணிறந்த: வினையாலணையும் பெயர்.

31. ஈட்ட. நாள் - நட்சத்திரம்.

32. கடகம் - யானைத்திரள். பன்னிரண்டு யானைகள்கூடிய தொகுதி அது. "கடகம் யானைத்திரட்பேர்" (நிகண்டு).

33. நாற்படையிற் கட்டப்படுவன ஆகிய உறுப்பு எல்லாவற்றையும்.

விஞ்சை வல்லவர் படையெலாம் விறந்துமே வாதார்
நெஞ்சு துட்கெனும் புடைநகர் வளநிகழ்த் தினமேல்
அஞ்சி லோதிய ராடவ ரொடுமத னமர்த்தல்
எஞ்சு ருதபா சறையெனு மிடைநகர் மொழிவாம். 34

இடைநகர்

வேறு

புளினமுங் குயிற்றுபொற் குன்றும் பொய்கையும்
அளிமல ரோடையு மலங்குய் யானமும்
களிபெறு மாடமுங் கலந்த நீர்மையால்
ஒளிவிசும் புலகினு மொண்மை மிக்கதே. 35

அவலெறி யுலக்கைபோ யதிரத் தாக்கலும்
இவர்குலைத் தெங்கிள நீர்கள் சிந்துவ
தவலருந் தாகநோய் தவிர வோச்சுவார்க்
குவகையி னளித்திடு முதவி போன்றன. 36

வன்மையி னிடித்திடும் வாசப் பொற்சுணம்
வின்மலி நுண்டுக ளெழுந்து மேவலின்
பன்மலர் பொற்கெனும் பரிசு தேன்விரைஇப்
பொன்மலர் மணத்தொடும் பூத்த போன்றவே. 37

கந்து கம்புடைப் பார்முலை கச்சுக
அந்தில் வீறுவ தம்மிணை யாகிய
பந்தொ றுப்பன பார்ப்பவ வாய்வெளி
வந்து தோற்றிய வண்ணநி கர்ப்பன. 38

வார்ந்த காதொடு மானுவ தென்றிழை
யார்ந்து ளாரலைக் கப்படு மூசலிச்
சார்ந்த மாதரைத் தாங்கிய நெஞ்சமும்
ஊர்ந்த லைக்கப் படுமென்ப தொத்ததே. 39

---

34. ஓதியரொடும் ஆடவரொடும்.

37. பொற்சுண நுண்துகள். பரிசானவை போன்ற.

ஆட லம்மனை யவ்வளைத் தோளியர்
பாட லம்பசுந் தேன்பெருக் குந்தொறும்
கோட மன்ற குழைத்தலைப் பொங்கரும்
பீட மன்றபைந் தேறல்பெ ருக்குமே. 40

பொன்ன னார்புகுந் தாடவி ரிந்துபோம்
அன்ன மீட்டு மணைந்தன வேற்றுமை
மன்ன லாற்றம வாழ்க்கைம லர்க்கயம்
இன்ன வென்றறி யாவிடர் மூழ்குமே. 41

எக்கர் மீதுமி ழைத்தபொற் குன்றினும்
நக்க தேனலர் நங்கையர் சூடுவான்
தொக்கி ருப்பன தொல்வரைக் கோட்டகம்
புக்கு மஞ்ஞைதி ரண்டன போன்றன. 42

தொண்டை வாய்மணித் தூநகை மாதரார்
வண்ட லாட்டயர் சூழல்கள் வந்தெதிர்
கண்ட காளையர் கண்ணொடு முள்ளகம்
விண்டி டாவகை மெய்ப்பய னல்குமே. 43

வடிவின் வென்றவ ளங்கொடி யீட்டமும்
மிடறு வென்றவி ரிதலைப் பூகமும்
மடந லார்திறை வாங்குவர் பாகடை
தடவு மாடமி ருந்தவை தாழவே. 44

ஊடி முன்னுமின் னாருடை மேகலை
வீட மைந்தர்கள் வெய்தென வீர்த்தலும்
ஆட கப்பொடி யான்விளக் கட்டுந்தம்
தோடு வில்லிடத் தூண்மறைந் துட்குவார். 45

---

40. பொங்கர் மகளிர் பாட மலரும் மரமுடைத்து ஆதலிற்கூறினார்.

43. சூழல்கள் நல்கும். பயன் - காம இன்பம். விண்டிடாவகை - தம்மினின்றும் தாம் அவற்றை விடாதவகை.

44. பாகையும் அடையையும். அடை - வெற்றிலை.

45. ஊடி முன்னும் - ஊடி அடைகின்ற. வீட - கெட.

வீசு சுண்ணமு மென்மலர்ச் சுண்ணமும்
வாச மென்மலர் வார்மது வும்விரை இத்
தேசு மிக்க திருநகர் கூட்டுமெய்ப்
பூசி நின்றபொற் பிற்றெனத் தோன்றுமே. 46

சோலை வாயினுந் தோய்புனற் றேத்துமின்
மாலை மார்பினர் மாட்டுநன் காட்டயர்
வேலை மாதரின் வீழுணி பம்புறல்
கோல மாநகர் கொண்டது போன்றதே. 47

தோட்டுக் காதினர் சூழ்கலை யின்சுவை
கேட்டுக் கற்றரசு வாகதங் கேண்மையிற்
கூட்டுக் கண்ணிருந் தோதக்கு றித்தவை
கோட்டுக் கிள்ளைகள் கொண்டுநடாத்துமே. 48

பூவை பைங்கிளி பூங்குயில் வண்டினம்
தாவு மந்தியும் யூகமுந் தத்தம
தாவி யந்துணை யோடும ளவளாய்
மேவி யும்பர்க்கும் வேட்கைபெ ருக்குமே. 49

ஏர்மி குத்தவி டைநக ரீதினி
நீர்மி குத்தநி ழற்கிடங் கும்பொறிப்
போர்மி குத்தபொன் னிஞ்சியுஞ் சூழ்ந்துநற்
சீர்மி குத்தவ கநகர் செப்புவாம். 50

அகநகர்: அகழி

வேறு

வேலவன்முன் விழுங்குகெனப் பணித்திடலும்
வீரமகேந் திரத்தை யுண்டு
சாலவத னிடத்தமர்ந்த தகுவர்குல
மேயழித்துத் தந்திட் டங்கு

46. விரவுதலால் தேசுமிக்க நகர் தோன்றும். கூட்டு - கலப்புச் சாந்தம்.

47. ஆட்டயர் வேலையில் வீழ்ந்த மாதரினின்றும்.

நீலநெடுங் கடறனது நவையுமவ
னருட்டிறத்தா னீங்கிப் பண்டு
போலதனைச் சூழ்கிடந்தாற் போன்றதுபொன்
மதிலுடுத்த கிடங்கு மாதோ. 51

சூர்கவர்ந்த வளம்வேண்டிச் சுராடுத்த
ஞானறுதன்பாற் சூழ வைகும்
ஏர்கனிந்த திசைக்கிறைவ ருடன்மான
சோத்திரம்வந் திருந்தா லன்ன
போர்கடந்த மதிற்புறத்துப் பூங்கிடங்கம்
மலைவதிபுட் கரஞ்சூழ் சுத்த
நீர்கலந்த கடலுமுடங் கணைந்ததனைச்
சூழ்கிடந்த நிலையுங் காட்டும். 52

கோடுநெருங் கியதமது குலம்பணித்த
றனக்கன்றிக் குறிய தொண்டன்
பாடுமரு ளியவிறைவற் பணிந்துவரம்
பெறநேமிப் பறம்பு மப்பால்
பீடுபிறங் கியகடலு மதிலகழிப்
பெயர்பூண்டு பெயர்ந்த வோவென்
றுடுகொடி மதிலுகப்பு மகழியகற்
சியுமெவரு மயிர்ப்ப மல்கும். 53

பாதலமுன் னுலகமெலாம் படிந்தாடிப்
பருகியுளப் பரிவு தீர
ஆதிகம டந்துளைந்து களிதூங்க
வழற்கால வரனுர் தங்கும

---

51. கடலானது தகுவர் குலத்தை மாத்திரம் அழித்து மீட்டும் அம் மகேந்திரத்தை உண்டாக்கி.

52. அடுத்த ஞான்று தானும் வந்திருந்தாலன்ன என முடிக்க. புட்கரத்தீவில் பெரும்புறக்கடலால் சூழப்பெற்றிருக்கிற மானசோத்திர மலையை மதிலாகவும், பெரும்புறக் கடலை அகழியாகவும் கொள்க. மான சோத்திரமலையின் எண்திக்கினும் அட்டபாலகர் இருத்தலால் 'திசைக் கிறை வருடன்' என்றார். கிடங்கு காட்டும். புட்கரத்தீவைச் சூழ்ந்த. அதனை என்றது மானசோத்திரமலையை.

53. கோடு நெருங்கிய. சிலேடை: மலைக்குச் சிகரம். கடலுக்குக் கரை. குலம் - இனம். தொண்டன் - அகத்தியர், இறைவன்.

சோதியழ றழலாமை யப்புவனத்
தினிதமர்வோர் தோய்ந்து மெய்யில்
சீதமுற வவ்வளவுஞ் சென்றுழ்ந்து
கிடந்ததிந்தத் தெளிநீர்ச் சூழல். 54

அந்தரத்தில் விண்ணவர்கட் கணிநகரம்
பற்பலவு மமைத்த வேதன்
இந்தநக ரனைத்துமொரு மதலையின்றே
லற்காவென் றெண்ணி வல்லே
மைந்துபெறு மொருமலையந் நகரனைத்துஞ்
செறிந்தோங்க வகுத்தல் போலும்
கொந்தொளிவிட் டெறிக்குமணி குயின்றுவெளி
யடைத்துகந்த கோணை நொச்சி. 55

கிழக்கமர்ந்த வேழுலகுந் தமக்குமக
மெனவுடுத்த கிடங்கும் விண்ணோர்
வழக்கமர்ந்த வேழுலகுந் தமக்குமதி
லெனவளைத்த மதிலும் வேத
முழக்கமர்ந்த தணிகைவரை முருகனிடர்
துமித்ததுமேன் மொய்யா தோம்ப
வழக்கமர்ந்த தனதருளை விடுப்பவது
போய்வளைந்த வுருவம் போலும். 56

களவொழுக்கி னைந்திணையு நானிலமு
மொருங்கடுத்த கலப்பி னுற்ற
உளமதித்த வேற்கடவு ளோங்கல்புற
வம்பணையீண் டுறுத னோக்கி
அளவையிடற் கரிதாக வேறமைத்த
கடல்போலு மகழி வேனில்
தளர்வகல வாட்டயர்வார் சமைத்துறுத்த
பலமதலை தாங்கு மன்றே. 57

---

54. காலாக்கினி உருத்திரர்.

55. அற்கா - தங்கா. அந்நகர் - அத்தேவருலகு. உகந்த - உயர்ந்த.

56. முருகன், மேல் கீழ் உலகத்தாருடைய இடரைத் துமித்து அவ்விடர் மேலும் அவர்மீது சூழாது ஓம்பும்பொருட்டு. அது - அவ்விடர்.

57. களவொழுக்கினையுடைய ஐந்திணைப் புணர்ச்சியையும் நானிலம் அடுத்த இடத்தில் ஆற்றும்பொருட்டு.

முத்தனைய நகைமடவார் வீசியசுண்
ணமுமுலையிற் கழிந்த சாந்தும்
மைத்தகுழன் மலர்த்தாது மஞ்சளுமாட்
டயர்காலை மலிந்த யாவும்
தத்துதிரைப் பேரகழி யெறிந்தொதுக்கும்
வண்டலொளி தழைக்கு மாற்றால்
சுத்தநறுங் கடல்சூழ்ந்த தமனியப்பார்
பொருமடுத்த சூழ லெல்லாம். 58

வீங்குபுனற் சரவணத்து வேற்கடவு
ளணைவிரிபொற் றவிச தாகத்
தாங்குமல ரினமென்று தாமரையும்
வரைகிழித்த தடந்தோண் மாலைப்
பூங்குவளை மலரினமென் றிருகுவளைப்
பலமலரும் பூத்த தென்ப
ஓங்குமவ னருட்குரியார் தமக்கடுத்தா
ரையும்போற்று முறுவர் மான. 59

இன்னுமறை பலகாலிங் கிகப்புறினுங்
கடலமுத மெடுக்க வேண்டி
மன்னமரர் துயவுறினு மிடர்நமக்கெய்
தாவெனமான் மகிழ்ச்சி கூரத்
துன்னுமக ரங்களுமோட் டாமையுமன்
னவன்கரத்துத் தூய வாழி
மின்னகுகூ ரிழந்தேனென் றல்லாக்கு
மிடங்கர்களும் விறக்கு மன்றே. 60

நெடுங்கைவழிப் புழையகத்து நிறைகடலோ
டெமைமடுத்து நிலத்து மீளக்
கடுங்கொலைய களிற்றுமுகக் கடவுள்பல்கால்
விடுத்தெமது கரஞ்சேர் சங்கம்

---

59. அம்மலர்களை அகழி பூத்தது என்ப. இரு குவளை - கருங்குவளை, செங்குவளை. உரியார் தமக்கு - உரியாருக்கு.

60. அன்னவன் - திருமால். அல்லாக்கும் - மயங்குதற்கு ஏதுவாகிய. ஆதிமூலமே என்று அலறிய யானையைக் கௌவிய முதலைமேல் ஏவப்பட்டுச் சயங்கொண்டிருந்த சக்கரம் என வருவித்துரைக்க.

அடுங்கணங்கொண் டகன்றிடினுங் கவலையிலே
மௌனத்திருமா லயர்வு நீங்கப்
படுங்கதிர்வெண் மணிகொழிக்கும் பலவளைசூழ்
தலைப்பணிலம் பல்ல சூழும். 61

மந்தரநட் டரவநெடுங் கயிறியைத்துக்
கடைந்துலவா மருந்து காண
அந்தரரு மினிவருவர் போலுமென
முகிலினங்க ளாழி நோக்கா
இந்தமணி நெடுங்கிடங்கி னறும்புனல்வாய்
மடுத்தெழுந்தவ் விளைப்பு நீங்கச்
சந்தமணி மதிற்றலையிற் கிடந்துவெளி
பரந்தெங்குந் தளிக்கு மன்றே. 62

ஒழுகுதிரைக் கிடங்கிடைநீண் மதில்கடல்க
ளொருங்குவிரா யுறுநீர் நாப்பண்
விழுதுநிகர் சடைப்பெருமான் றழற்பிழம்பா
யெழுந்தவுரு விழையக் கங்கை
பழுதறுமால் பதந்துருவிப் புனல்கரப்பப்
பங்கயத்தோன் பறவை யாகி
எழுமளவி லோசனிக்கு முறைகாட்டி
யிடைமதிற்கட் டுளும்பு மன்றே. 63

மதில்

கோளுறுவிண் ணரவமணி கொழிக்குமகன்
கிடங்குடுத்துக் குரூஉக்கல் வேய்ந்து
வாளுறுதிண் மதிலிடைத்த னுடலுரிஞத்
தவழ்ந்தேகும் வனப்பு முந்நீர்த்
தாளுறுபண் ணவர்நிறுவுந் தடஞ்சிலம்பு
சூழ்ந்தவராத் தாம்பு நேரும்
நீளுறுவெண் கதிர்க்கற்றை நிலாத்தொடுதன்
மதலையென நிற்ற னேரும். 64

---

61. விடுத்து - விடுக்க. பாஞ்சசன்னியம்.

62. வருவர் போலும் என்று யாவரும் கூறும்படி.

63. கங்கையானது காட்டித் துளும்பும். ஓசனித்தல் - சிறகடித்துக்கொளல்.

64. விண்ணரவம் ஏகும் வனப்பு. சந்திரன் மதிலைத் தொடுதல். மதலை - தம்பம்.

வெளிவிரவு வளிதன்பால் விரவநெடும்
புவிவிரவு விரிநீர் தன்னை
ஒளிவிரவி நின்றதுபோல் விரவுசெம்பொன்
மதிலும்ப ருயர்த்த ஞாயில்
தெளிவிரவு தழற்கொழுந்து சிவணுமவற்
றெழுந்தூமத் திரட்சி யென்ன
வளிவிரவு கொடிதுவன்று மிம்முறையால்
வாணகர் மதிலும் போலும். 65

குழுமுபொறி மடங்கல்களி றடுபுலிவா
னரம்பாந்தள் குலாய நீரால்
எழுவரையிற் குவட்டினங்க ளெனநிரந்த
ஞாயிலினெந் திரங்கள் சில்ல
எழுவடிவா ளயிலாழி யெய்கணையின்
னனவுமிழ விலங்கு நொச்சி
வழுவில்படைக்குலமனைத்தும் வகுக்குமறு
முகன்கரத்து வளைய மானும். 66

வேறு

வடாதுசார்க் கயிலைக் குன்றம் வளைத்தபொன் னிஞ்சி மானும்
கெடாதசீர் மதிற்பா னாட்டுங் கேதனத் திரள்கள் சூழ்ந்து
விடாதுமே னிவப்ப விண்ணின் வேந்திருக் கின்ற காட்சி
அடாதசீர் காழி வஞ்ச வடவியி னிருத்தல் காட்டும். 67

வில்லுமிழ் மணிப்பொற் கோடும் வெண்சுதை யெயிலும் பூப்பப்
புல்லிய வகழித் தெண்ணீர் புடைவளை பரிவே டக்கும்
எல்லுமிழ் மதிக்கு நாப்ப ணிலங்குவான் கரையின் பாங்கர்
ஒல்லும்வார் சோலை மற்றை யுடுக்குல நிரந்த வானம். 68

---

65. தன்பால் - அக்கினியின்பால். விண்ணில் விரவிய வளி. புவியில் விரவிய நீரை.

66. பொறியாகிய என விரிக்க. மதில் மலை, மதிலுறுப்பு சிகரம், பொறியாகிய மடங்கல் முதலியன மலையிலுள்ள சீவசெந்துக்கள் எனக் கொள்க.

67. மானும் மதில். வஞ்சம் - மூங்கில். இந்திரன் இருக்கும் காட்சி.

68. கோடு - கரை. தெண்ணீர் வானுகும்.

இடர்தபு மதிளுற் பாலு மெழுந்தகோ புரங்கண் மேருத்
தடவரை நான்கு மெல்லை தணந்துகந் திருந்த வாங்குக்
கொடிவரைத் தேத்து நீண்ட குளிர்மரங் கிடங்கு முற்றும்
தொடியுறக் கிடந்த சாம்பூ நதமெனுந் தொல்லை யாறு. 69

நவமணி குயிற்றி யிட்ட நான்குகோ புரமும் விண்ணிற்
சிவபுரத் தெல்லை காறுஞ் சிவனுவோர் வணங்க நிற்கும்
நிவமணிக் கிடங்கிற் றேற்று நீழலுங் கிழக்கி னெல்லைத்
தவவள ருலகோர் யாருந் தாழ்ந்தெழப் பொலிந்து நிற்கும். 70

கற்றையங் கதிர்கான் றெல்லி கடும்பக லாகச் செய்யும்
பொற்றபன் மணிகால் யாத்த பொற்பினு லுலக மெல்லாம்
தெற்றெனத்தம்பாற்காணத் திகழ்தலாற்செருச்செய்ஞாட்பின்
வெற்றிவே லிறைவன் கொண்ட விச்சுவ ரூபம் போலும். 71

மேனிலை மாடத் திட்ட விளக்குமிழ் தூமஞ் சென்று
வானிமி ரண்டப் பித்தி வைகலு மாசு செய்ய
ஆனிவர் கொடியின் வெண்டு சையென நீவி நீவி
நீனிறம் படைத்த வெண்ப நெடியவ னுருவ மான. 72

அண்டமா ரளவைக் கேற்ப வடங்கின வன்றி வீறின்
மண்டுநீர்க் கிடங்க ரண்ட மலிபுனற் பரப்போ டொன்றும்
மிண்டுபோர்ப் பொறியி னிஞ்சி விளங்குகோ புரங்க ளன்ன
கொண்டவார் கொடிக ளெண்ணி லண்டமுங் குறுக நீளும். 73

---

69. மேருவுக்கு அடைகலாய் அடுத்த மலை நான்கும். நான்கும் உகந்திருந்தன. ஆங்குக் கொடி மரமும், கிடங்கு ஆறும் ஆம். மேருவுக்கு ஒருபுறத்து ஓடும் சாம்பூநதம் நாற்புறத்தும் சூழ்ந்தாற்போல் ஈண்டு உளது என்க.

70. அக்கோபுர நிழல் என்க.

71. கோபுரமானது பொற்பின் ஏதுவினுலே அவ்வாறு திகழ்தலாற் போலும் என முடிக்க.

72. ஆன் இவர் - அவ்விடத்து உயர்ந்த; அசையும் என்க. தூசானது ஐயென நீவி நீவிப்படைத்த. மானப்படைத்த.

73. புனற் பரப்பு - பெரும்புறக்கடல். இஞ்சியும் கோபுரங்களும் அத்தன்மையன. அண்டமா ரளவைக்கேற்ப அடங்கு மத்தன்மையை உடையன என்க.

பாயின வகழி மாண்பும் பங்தொடு பாவை தூங்கும்
வாயில்வண் புரிசை மாண்பும் வகுத்தன மற்று முந்தை
ஆயின பொருளு மைந்த ரளித்துவந் தேவ லாற்ற
மேயின பரத்தை மாதர் வியத்தகு சேரி சொல்வாம். 74

பரத்தையர்வீதி

வேறு

இங்கணல னெய்துநர்க ளெவ்வுலகின் மாட்டும்
பொங்குகலை யிற்றணிவு பூண்டுவெரி நீயார்
தங்கிவைகள் போலெனவொர் சான் றுதெரிப் பார்போல்
அங்கணவிர் சித்திரம ளப்பிலபொ றித்தார். 75

பற்குறிந கக்குறிகள் பாணிகொடு தட்டல்
நற்கமிழ்து துய்த்தல்களி நன்றெழு வணைத்தல்
அற்குகர ணங்களறி யாருமெளி தாகக்
கற்குமவகை நின்றனக திர்த்தமணி யோவம். 76

இவர்மனமொ ருக்குமிள மங்கையரில் வைகக்
கவர்மனம்வி டுத்திளையர் காழிலுயி ரோடும்
அவிர்பொருள்க வர்ந்துவிடு மாற்றலுடை நல்லார்க்
கிவர்மனமொ ருக்கலுறி னெங்ஙனுல குய்யும். 77

அகப்பொருட மக்கருளு வார்க்கஃது நல்கி
உகப்புறுப ரத்தையர்க ளுண்மையுணர் கல்லார்
இகப்பறுசு கச்சமரி னெய்த்திறைபி றுக்கும
புகர்ப்பொருளை யின்பவிலை யென்றுபுகல் கிற்பார். 78

---

74. மற்றும் - தாம் ஈட்டிய செல்வத்தையும், முன்னே உள்ள பொருளையும்.

75. கலை - கொக்கோகம். எழுதியுள்ள சித்திரங்கள் முதுகுகாட்டா ஆகலான் அவ்வாறு கூறினர்.

76. நல்கு அமிழ்து நற்கமிழ்து என்றாயிற்று. நன்கு அமிழ்து எனவும் கூறுவர். அணைத்தலும் ஆகிய கரணங்களை அறியாரும்.

77. இவர் மனம் - ஆசையோடு கூடிய மனம். இவர் மனத்தை நாயகர்மீது ஒருக்குகின்ற நாயகிகள் என்க. இவர்மனம் பின்னையதும் அப்பொருளே.

78. ஆடவர்கள் இரகசியமான செல்வப் பொருள்களைக் கொடுக்கப் பரத்தையரும் தமது இரகசியப் பொருளைக் கொடுத்து. ஆடவர்பொருள்

இத்தகைய மாதரினி ணங்குசுக வாரி
தத்தையனை யார்தருத லின்மைதனை நாடி
மெத்துளம கிழ்ச்சியின்வி டுத்தருள்சி றப்பும்
ஒத்ததவர் பாலிளைய ருய்த்தநிதி யீட்டம். 79

உடம்புபிணி யாலிறவு னுற்றறமி கந்து
மடம்படவு ளம்பொருள்கண் மற்றுமுகு மாற்றால்
விடம்புரையும் வேசையர்வி ழைச்செனவு ணர்ந்தும்
உடம்படுவ ரென்னிலவ ருய்க்குநல னெற்றே. 80

நன்பொருளி னுக்கியைய நன்றுவிளை யாடி
இன்புதவும் வேசையரி றைஞ்சுமடி யாருக்
கன்பினள வைக்கியைய வாரருள்சு ரக்கும்
மின்புரைந திச்சடில வித்தகனி கர்த்தார். 81

பாடலிசை யாழ்பலப யிற்றுமிசை யோடும்
ஆடலர வம்புடைய கனறுபுற னேகும்
பீடினர்த மக்குமொரு பீழைசெயு மென்றால்
கூடினவர் முன்புகுழை யாருமுள ரேயோ. 82

ஈங்கிவர்க ளோடுபுண ரின்பநுகர் பாக்குத்
தாங்குபரு வம்பெரிது சார்பொழுது காறும்
ஆங்கவர்க ளோடுநல னார்ந்துபயில் கின்றார்
வீங்குபுகழ் மாயன்முதல் விண்ணவர்க ளெல்லாம். 83

கங்கையிறை வன்முடிக லப்பவிடம் வெற்பு
மங்கையுட னானதும லர்ப்பொனரி மார்பம்
தங்கியதும் வாணிதவி சாக்கியதும் வேதன்
பொங்குமறை நாவரைவில் பூவையர்பொ ருட்டே. 84

இரகசியமாயிருத்தலாவது சேமிக்கப்பட்டிருத்தல். ஆடவர் அகப்பொருளைக் கொடுத்து இழக்குமாறுபோலத் தாம் அப்பொருளைக் கொடுத்தும் இழவாது உயர்ந்து நிற்றலால் 'உகப்புறு' என விசேடித்தார். உகப்பு - உயர்ச்சி. அகப்பொருள் - காமவின்பம்.

82. அரவமானது செயும் என்றால். அவர் முன்பு கூடின்.

83. அவர்கள் இலக்குமி முதலியோர்.

வெள்ளணிய ணிந்துபலர் மெய்முழுத ரத்த
ஒள்ளணிய ணிந்துபல ருத்தலையி றப்பார்
வெள்ளமெனு மாக்கமும்வி ளங்குகலை மாண்பும்
உள்ளிமலர் மாதர்பல ராயுறுவ தொப்ப. 85

சிறப்பினவ கப்பொருள்செ றித்துவிலை யாக்கும்
மறப்படைக டந்தவிழி மாதரிட னீதால்
புறப்பொருள்செ றித்துவிலை போக்கியிட ரின்றி
அறப்புகழ்வி லைக்குநர்க ளாவணமு ரைப்பாம். 86

ஆவண வீதி

வேறு

கற்ப கங்களுங் கன்னி வாழையும்
பொற்ப நட்டெழீஇப் போகு சட்டமேல்
பற்பன் மாலைகள் பயிற்று மாவணம்
அற்பு மன்றல்செ யகங்கள் போன்றவே. 87

மடுக்குங் காலையிற் குறைய வாங்கியும்
விடுக்குங் காலையின் மிதப்ப நல்கியும்
அடுக்குஞ் செல்வம்விண் ணரசு மேசற
எடுக்கும் பண்பினர் யாரு மென்பவே. 88

கலங்க ளுக்கியுங் கால்க ளுக்கியும்
அலங்கன் மார்பினு ரமைத்த பல்பொருள்
விலங்கன் மாடமுன் றனதன் வீழ்நிதி
இலங்கி யிவ்வுழி யிருந்த தொத்ததே. 89

---

85. ஆக்கம் - செல்வம்; செல்வத்தைப்பெற உள்ளித் திருமகளும், கலைபயில உள்ளிக் கலைமகளும் பலராய் உறுவது ஒப்ப என்க.

87. கற்பகம் - தெங்கு.

88. குறைய - விலை குறைய. மிதப்ப - விலை அதிகப்பட. ஏசற - கவலைப்பட; ஏசறவு - கவலை.

89. மாடத்துக்கு முன்னே பலபொருள் ஒத்தது. பொருள் மாடங்களுக்கு முன் குவிக்கப்பட்டுள்ளது என்க. கால் - வண்டி.

துலாம ணிந்தவர் சூளி கைத்தலைத்
துலாமி வர்ந்தெழுஞ் சோம திக்கினான்
நிலாவி ரும்பொரு ணிறைந்த தாமென
நிலாவு மத்தலை யிவர்ந்து நீங்குமே. 90

பொன்னும் வெள்ளியும் பூணு மாடையும்
மின்னு பன்மணி விராய கோவையும்
என்ன வேண்டினு மில்லை யென்னுமச்
சொன்னி கழ்த்திடாச் சோர்வங் குள்ளதே. 91

இலைய வேற்படை யிறைவற் காணிய
மலையெ லாமடுத் தனைய மாடமுன்
குலவு பல்பொருட் குப்பை யம்மலை
நிலவு பல்வரை நிரைக ளொத்தவே. 92

முன்கு வித்தகண் மூடு முன்புபோய்
பின்கு வித்தவும் பெயரு மத்தலை
நன்கு செய்தமுன் னல்வி னைப்பயன்
தன்கண் வந்துபோந் தனுவொ டொத்ததே. 93

செம்பொற் சுண்ணமுஞ் செச்சைச் சாந்தமும்
வம்பு நானமும் வாச மாலையும்
நம்பி வீழளி நல்கு மாதரார்
பம்பு யிர்ப்பினாற் பாற வைகுவார். 94

கனிவ ருக்கமுங் கமழ்சிற் றுண்டியும்
இனிய விற்குந ரிடஞ்சென் முன்னரே
நனிம ணம்புன னாவிற் றோற்றமுன்
பனிம லர்க்கணை படர்கண் டோற்றுமே. 95

---

90. சோம திக்கினான் - வடதிசைக்கு இறைவனாகிய குபேரன்; சோமன் - குபேரன்; அவனது திசை வடதிசை. சந்திரனுக்கும் சோமன் என்னும் பெயர் உளதாகலின் அவ்வாறு கூறினார்.

91. கோவையுமாகிய எப்பொருளை வேண்டினாலும்.

93. நன்காக முன்னேசெய்த நல்வினைப்பயன் என்க.

94. செச்சை - குழம்பு. அளி பாற. உயிர்ப்பு சண்பக வாசனைய தாகலின் பாறும்.

95. கனிவருக்கம் முதலியவற்றைப் பார்த்தவர்களுடைய கண்களுக்கு உடனே மன்மதபாணம் தோன்றும்; எனவே, அக்கனிவர்க்கம்

தாழ்ந்தி டாவளத் தருக்கி ஞலென்கோ
ஆர்ந்த பல்சன வடர்ச்சி யாலென்கோ
சோர்ந்து கைத்தலஞ் சுடர்பொற் காசுகள்
வீழ்ந்த நேடிலார் வீதி வாயினே. 96

பொருண்மை சுட்டிய புகலு மோசைகள்
பொருண்மை சுட்டிடாப் பொங்கு மோதைபோல்
மருவு மாட்சியான் மாண்ட கேள்வியார்
கருது மூங்கையிற் கையிற் பேசுவார். 97

ஐந்து மாமுக ஞறு மாமுகன்
நந்தி யாதியோர் நாம வீரராய்
வந்த வாவட மாதி ரத்தவன்
அந்தில் வந்தம ரளகை போன்றதே. 98

சொற்சு ருக்கியுஞ் சுட்டிக் கூறியும்
விற்கு மாவணம் விளம்பி ஞமினிப்
பொற்ப யாவரும் புகன்று வாழ்தரும்
பற்பல் வீதியும் பகர லுற்றனம். 99

மற்றையவீதிகள்

வேறு

கோளகர் வகுப்புங் குண்டகர் வகுப்பும்
குலாவுறும் விராத்தியர் வகுப்பும்
தாஞுறு மந்த ராளர்தம் வகுப்பும்
தகும்பிரதி லோமர்கள் வகுப்பும்
ஆஞுறு மனுலோ மர்கள்பெரு வகுப்பும்
அவ்வவ வினங்கள்வே றமைந்து
நாளுமின் புகப்பத் தத்தம தியல்பின்
நண்ணிவாழ் வீதிக ளனந்தம். 100

முதலியவற்றைத் தமது நாயகிக்கும் கொடுத்துக் காமம்துய்க்க எண்ணுவர் என்பது பெறப்படும். மணமானது நாவில் புனலைத் தோற்றுவிக்கும்.

98. ஐம்முகனுகிய சிவன் ஆறுமுகனுகவும், நந்தியாதியோர் வீரராகவும் வந்தவிதம்.

100. கோளகர் - கைமைபெற்ற பிள்ளைகள். குண்டகர் - தலைவனைப் பிழைத்து ஈன்ற சோரபுத்திரர். விராத்தியர் - பிரதிலோமத் தந்தைக்கும்

ஆதியீ றமைந்த பொருள்சிறந் தனவென்
றருமறை யினிதெடுத் தியம்பும்
நீதியான் முகத்திற் சிறந்துபூங் கமல
நிகர்த்தவிர் வேதனுர் பதத்தில்
கோதிலா தெழுந்து வரைதுலாக் கோலும்
குளிர்ந்தசெங் கோலும்வேய்ங் கோலும்
தீதிலா மூவர் செலுத்தவேர்ச் சிறுகோல்
செலுத்துநர் வீதிகள் பலவால். 101

குய்யமா யுயிர்க டோற்றுதற் குரிய
குறிதமக் கேபிறப் பிடமாய்
ஐயமுன் வேத னிடத்தவ தரித்திட்
டதற்கியை தரமறை பிறர்பால்
வையக மூன்று மொருங்குறு மேனும்
வழங்கிடா தருநிதி யாக்கி
உய்யநூல் வகுத்த வொழுக்கினிற் பிறழா
துழப்பவர் வீதிகள் பலவால். 102

பகைமுழு திரிக்கு மத்திரஞ் சுமந்த
பங்கயத் தொங்கரும் புயத்துத்
தகையழ கெறிப்ப நான்மறைக் கிழவன்
றந்திட வந்தகா ரணத்தால்

அநுலோமத் தாய்க்கும் பிறந்தவர். அந்தராளர் - அநுலோமத் தந்தைக்குப் பிரதிலோமத் தாயிடத்துப் பிறந்தவர். பிரதிலோமர் - உயர்குலத் தாய்க்கும் இழிகுலத் தந்தைக்கும் பிறந்தோர். அநுலோமர் - உயர்குலத் தந்தைக்கும் இழிகுலத் தாய்க்கும் பிறந்தவர்.

101. ஆதியில் பொதுவிதியாக விதிக்கும் பொருளைப் பார்க்கினும் அதற்கு ஈற்றில் அமைந்த சிறப்புவிதி சிறந்ததென்று. ஆதியினும் ஈறு அமைந்த என விரிக்க. அதுபோல முகத்தைப் பார்க்கினும் சிறந்து அவிர் பதத்தில் சூத்திரர் எழுந்து செலுத்துநர் என முடிக்க. வேய்ங்கோல் - மூங்கிற்கோல். சிறுகோல் - தாற்றுக்கோல். முக்கோலும் செல்லுதற்குக் காரணமான ஏர்க்கோலினர் ஆகலின் அவர் தோன்றிய பதத்தை 'அவிர் பதம்' என்றார்.

102. குய்யமாய் - மறைவாய். குறி - பிரமதேவனது குறி. மறை - இரகசியம்; என்றது வாங்கிய பொருள்களின் விலையைப் பிறர்க்குக் கூறாது மறைத்தலை. உழப்பவர் - வணிகர்.

புகையழற் பொறிக டும்முவான் படைக்கள்
புயத்தினி தேந்திமே வார்தம்
மிகைதணித் துலகிற் குடைநிழல் பரப்பும்
வேந்தர்வாழ் வீதிகள் பலவால். 103

இருமையு மளிக்கு மொழுக்கெலாந் தெரிக்கு
மிருமறை யெழுந்தவாண் முகத்துப்
பொருவரு வேதக்குரிசின்முன் னுயிர்ப்பப்
போக்கறப் பொலிந்தகா ரணத்தால்
ஒருமையி னோத லாதியா வுரைத்த
வுயர்தொழி லாறினுஞ் சிறந்து
பெருமையின் மறையோ ரெனும்பெயர் தமக்கே
பெற்றவர் வீதிகள் பலவால். 104

அருள்வளங் கொழிக்கு மைந்தொழி லாக
வடங்கிய சிறப்பொடு பூசை
மருவுமெவ் வகையு மாகம வழியான்
மயரறத் தெளிந்தவர் வரையாச்
சுருதிகண் மிருதி புராணமெக் கலையுந்
துகளறத் தெரிந்தவ ரிறைவன்
தருதிரு மேனி தீண்டிடு மாதி
சைவர்வாழ் வீதிகள் பலவால். 105

கரிசறு கவிக்குக் கவிகம கனுக்குக்
கமகன்வா திக்கொரு வாதி
துரிசறு வாக்கி தனக்கொரு வாக்கி
யாயவர் தொன்றுதொட் டமைந்து
வரிசையின் வந்த கேள்வியர் பொருது
வருமிகல் கடந்தவெஃ குடையார்
பரிசினாற் பயிற்சி யின்பெனக் கலைதேர்
பட்டிமண் டபம்பல வயங்கும். 106

---

105. பூசையே பஞ்சகிருத்தியமாய் அடங்கும் என்க. வரையாச் சுருதி - வேதம்.

106. வாக்கியும் ஆயவர்கள். எஃகு - சூரியபுத்தி.

அறிதரா தியற்றும் புண்ணிய நிரம்பி
யறிந்துபல் புண்ணியம் புரிவோர்
மறிதரா தகத்துச் சரியைமுன் ஞன்கும்
வழுத்தப வியக்குந ருண்மை
நெறியினு லந்த நான்கினுங் கருத்தை
நிறுத்துந ராயசீ ரடியார்
பிறிதரா தமர்ந்து தத்தம தியல்பு
பேணிவா ழிருக்கைக ளனந்தம். 107

மும்மலச் செருக்கை முதலொடு முருக்கி
முழுத்தபே ரறிவெனக் கிளைத்த
விம்முயிர் கெடுத்து வீங்கிய வருளை
வியங்கொளுந் திருக்கினை மிளிர்த்துச்
செம்மைமெய் யருளைக் கடந்தொளிர் சிவத்திற்
றினகர விழியெனக் கலக்கும்
இம்முறை யுண்மை ஞானமீ ரைந்து
மியங்குநர் மடங்களெண் ணிலவால். 108

---

107. அபுத்திபூர்வபுண்ணியம், புத்திபூர்வபுண்ணியம், உபாயச் சரியை, உபாயக் கிரியை, உபாய யோகம், உபாய ஞானம், உண்மைச் சரியை, உண்மைக் கிரியை, உண்மை யோகம், உண்மை ஞானம் ஆகிய இப்பத்திற்கும் சிவபுண்ணியம் என்று பெயர். முந்திய ஒன்பதும் மலநிலை. பிந்திய ஒன்றும் அருள்நிலை.

108. மேற்செய்யுளிற் கூறப்பட்ட பத்தனுள் இறுதியிலுள்ள உண்மை ஞானம் ஒன்றும் தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி, ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் எனப் பத்தாய் விரிந்து நிற்கும். இதற்குத் தசகாரியம் என்று பெயர். இத்தசகாரியமும் சுத்தாவத்தையுள் அடங்கும். அவற்றுள்ளும் முந்திய ஒன்பதும் சுத்தசாக்கிரம் முதலிய நான்கினும், பிந்திய போகம் ஒன்றும் சுத்த துரியாதீதத்தினும் அடங்கும். 'மும்மலச் செருக்கை முதலொடு முருக்கி' என்பதனுல் தத்துவரூபம் முதலிய மூன்றும், 'முழுத்த பேரறிவெனக் கிளைத்த விம்முயிர் கெடுத்து' என்பதனுல் ஆன்மரூபம் முதலிய மூன்றும், 'வீங்கிய வருளை வியங்கொளும் திருக்கினை மிளிர்த்து' என்பதனுல் சிவரூபம் சிவதரிசனம் ஆகிய இரண்டும், 'செம்மை மெய்யருளைக் கடந்து' என்பதனுல் சிவயோகம் ஒன்றும், 'ஒளிர் சிவத்தில் தினகர விழியெனக் கலக்கும்' என்பதனுல் சிவபோகம் ஒன்றும் தோன்றி நின்றன. வியம் - ஏவல். உயிர்கெடுத்து - ஆன்மபோதத்தைக் கெடுத்து.

அலகில்பல் லுயிரு முயிர்த்ததம் மாமி
யருளிரு நாழிநெல் லேகொண்
டிலகறம் வளர்த்தா ளெனுமிழுக் ககல
விருநிதி வேண்டின வெல்லாம்
குலவரைக் கிழவன் கொடுத்திட வாங்கிக்
கோதைய ரிருவரும் வளர்ப்ப
நிலவிநிற் பனபோற் பலவறச் சாலை
நித்தலும் வயின்றொறுந் தழையும். 109

பெருநிதி முகப்பத் தானமாக் கொடுக்கும்
பெற்றியர் வாக்குநீர்த் தாரை
இருகர தலத்தும் பிழைத்துவீழ் மணியு
மிரணியக் குப்பையும் வரன்றிப்
பொருதிரை சுருட்டி யொழுகுத லானும்
போகுமா ளிகைநிரை கரைபோல்
மருவுத லானுங் குலநதி நதம்போல்
வயங்குவ பற்பல்வீ திகளும். 110

மணிமலர்ப் பட்டின் விசித்திரம் பிறங்க
மல்லல்வீ திகடொறு மமைத்த
தணிவில்பூம் பந்த ராற்றினைக் கடப்பச்
சமைத்தவான் சிலைவழி போலும்
அணிதரு மகர தோரண மணித்தோ
ரணங்களாங் காங்குநீண் டவிர்தல்
துணிவுறு தகையோ ரியங்குதற் கமைத்த
தொடர்படு கொடிவழி போலும். 111

நெருங்குதோ ரணத்திற் றூக்கிநித் திலங்க
ணிலாவொடு குளிர்தவக் கான்று
வருங்கதி ரிரவி விளர்ப்பவெப் பனுக்கி
மல்குவான் மீனெனத் தோன்றி
இருங்கலை மதியோ டுடுவினுக் கொளிமிக்
கிணக்கியந் தாரகைக் குலத்தோ
டொருங்கலிற் பொழுது தெரிப்பவே திங்கட்
குறுத்தினன் கறைகுறை விறையோன். 112

---

109. முருகன் கொடுக்க. வள்ளி தெய்வயானை இருவரும்.

மாடமாளிகைகள்

சந்திர காந்தச் சிலைகளிற் குயின்ற
தமனிய மாடமா ளிகைகள்
இந்துவா னுலவ வுமிழ்ந்தநீ ரருவி
யிழிதர வெழுபெருங் கொடிகள்
அந்தில்வார்ந் தசையும் பாடெலாங் கதிர்க்கு
மவிருடுக் குலந்தவழ் காட்சி
சிந்துவேய் மணிகள் வரைவயிற் கிடந்து
திவளொளி காலுவ போன்ற. 113

வையக வரைப்பி னுயிரெலாங் கருமம்
வளர்ப்பதற் கேதுவாய் வழங்கும
வெய்யவ னாதி கோளொடு நாளை
விந்தநேர் தகைப்பது தகாதென்
றையபொன் மணியிற் குயிற்றுநீண் மாடத்
தவையெலாஞ் செல்லிய வழிகள்
தெய்யநன் கமைத்த வுண்மைதேர் கல்லார்
செறிந்தகா லதரென மொழிவார். 114

வேறு

பொன்ன ளாவிய மேனிலை மாடத்துப் புனைந்த
நன்னர் மாலைதாழ் சுருங்கையி னுகந்து நாகம்
முன்னு காலையி னொருங்குடன் மூடுறி கழற்றி
மன்னு மோகையிற் றுளும்புறு மதிதொறு மன்னே. 115

செம்பொன் வார்கொடி சேணுற நிவந்துகற் பகத்தின்
வம்பு லாவிய பொன்னகர் மதிற்புறம் புடைப்ப
இம்பர் மேம்படு மிந்நகர் நிகர்க்கலாற் றுநீ
உம்பர் வாழ்தலொண் ணாதென வொறுப்பபோன் றனவால்.

வளியின் யாத்தபொன் னகர்கொடி வைகலுந் துளக்க
நெளியு நீர்மையா னிலத்திடை விழுமென வஞ்சி
ஒளிறு வாள்விழி யிரவினும் விழித்துளா ரொத்தார்
அளிவி ழாமலர்ப் பொலந்தொடை யந்தரத் திமையார். 117

---

115. சுருங்கை - நுழைவழி. நாகம் - இராகு கேதுக்கள்.

117. வாயுமண்டலத்தால் யாக்கப்பட்ட பொன்னகர் நெளியும் நீர்மையினாலே.

கன்னி கும்பங்க டாங்கிய வென்றொளி கதிர்க்கும்
கன்னி கும்பங்க டாழ்ந்துபோங் கனகவா னரங்கில்
துன்னி மாதரா ராடலிற் சுடர்மணி யுக்க
மின்னு மீன்விசும் பிகழ்ந்திறை கொண்டமை வீழும். 118

திகழு மின்னனார் மாடத்து மடுத்தனர் திறப்ப
அகின றும்புகை சுருங்கையி னிவந்தெழு மாக்கம்
முகிலுண் கூந்தலார் முகத்தினை மதியென முன்னிப்
புகுக ரும்பணி யன்மைதேர்ந் தெழுவது புரையும். 119

சீத ளத்தொடு வெம்மைய திதலைவெம முலைக்குச்
சீத ளத்தொடு வெம்மைசெய் தக்கதென் பார்போற்
சீத ளப்பனி நீர்விராய்ச் சந்தனஞ் செறித்துச்
சீத ளப்புன லறவிரை புகைப்பராற் றிளைப்போர். 120

சித்தி ரம்பல பயின்றுபைங் கிளிமொழி திகழ்ந்து
மெத்தி ருஞ்சுவை யுஞறுநிரந் தரித்தெங்கும் விரைத்துத்
தத்து தென்றல்வந் துலாவுபு தையலார் பயில்
வைத்த மாடமு மவரென வைம்பொறி வாங்கும். 121

மானி னத்தொடு முயலின மருவும்வண் வடவை
மேனி புல்லுறு மிடபமவீழ் பிடிபரி யேறு
தானி வர்ந்தெழும் வார்கொடி மகரமேற் றூங்கி
வேனின் மன்னவ னிடமென விளங்குவைப் பெங்கும். 122

---

118. அரங்கம் கன்னி கும்பங்களைத்தாங்கிய என்று கருதி. அரங்கத்துக்குக் கன்னி கும்பங்கள் பெண்களுடைய நகில்கள். உக்க என்பது பெயர்.

119. கரும்பணி - இராகு (கருநிறமுடையது); கேது செந்நிறம்.

121. கிளி - மகளிர் வளர்க்கும் கிளி. பெண்கள் ஐம்பொறி வாங்குதலை ''கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும், ஒண்டொடி கண்ணே உள'' என்னும் திருக்குறளால் அறிக. கண்ணாற்கண்டும் காதாற் கேட்டும் நாவாலுண்டும் மூக்காலுயிர்த்தும் மெய்யாலுற்றும் நுகரும் ஐம்புலனும் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு பொருள்களான் நுகரப் படுவன ஒருகாலத்தே இவள்மாட்டு நுகரப்பட்டன என்க.

122. கொடியால் மகரராசியை மேலேதாங்கி விளங்கு வைப்பு எவ்விடத்தும். மான்சாதி மகளிரோடு முயற்சாதி ஆடவர் மருவுவர். குதிரைப்பெட்டைச்சாதிப் பெண்களோடு இடபச்சாதி ஆடவர் புல்லுவர். பெண்யானைச்சாதிப்பெண்களோடு ஆண்குதிரைச்சாதி ஆடவர் புணர்வர் என்க.

கற்புக் காட்டிய கைவளர் பசுங்கொடிக் கமழ்ந்த
கற்புக் கூந்தலர் காவியஞ் செவியினர் கலப்போர்
பொற்பக் காமநூல் வாதினில் வென்றுபோர் மதன்பால்
எற்பக் கேவலை யிவையெனப் பறித்துளார் நிகர்த்தார். 123

எண்ணி லண்டத்துப் பிரமரு மொருநக ரிதுபோற்
பண்ண வன்னமாய்க் காந்துபார்ப் பப்புகுந் தாங்குச்
செண்ண வஞ்சிலம் பரற்றிய தீங்குரல் கவர்வான்
வண்ண வன்னங்கள் புகப்படுங் கலவிசெய் மாடம். 124

கலவி யாற்றிய காலையும் புலவிக்கா லத்தும்
குலவு தங்நடை குறைந்தமைக் கொக்குமா றொதுங்கும்
நிலவு வெண்கரி வணக்கிய நிகரில்யாழ் தழுவி
மலரு மின்னிசை யெழுப்புவர் மேனில மகளிர். 125

தடவு மேனில மெழுக்கிடுந் தண்புன லாப்பி
கடவு ளாப்பியுங் கங்கையுங் கவினுறுத் துவபூ
மடல்வி ராவிய கற்பகத் திழையவண் வதிவார்
படரெ லாந்தப வுண்பது பனிவிசும் பமிழ்தம். 126

முழவு வென்றதோ ளாடவர் மேனில முகத்துக்
கழகம் விண்ணவர் கலவினர் கலைபல தெரிவார்
மழலை மென்மொழி மாதரார் பண்ணையின் மருவி
விழவு மல்கியாட் டயர்வரால் விளங்கர மகளிர். 127

பொறித்த சீரெழுத் தொழுக்கெனப் பொற்றமா டங்கள்
செறித்த வார்நிரை வீதியிற் சிலவள மொழிந்தாம்
வெறுத்த வீதிதற் சூழ்தர வெற்றிவே லிறைவன்
குறித்த கோயில்கொண் டோங்கிய குன்றினி மொழிவாம். 128

---

123. தமது கற்புநிலையைக் காட்டத் தம்கையால் வளர்த்த முல்லைக் கொடி. கூந்தலராயும் செவியினராயும் கலக்கும் பெண்கள். எற்பக்கு என்னும் ஒருமை வழுவன்று; தனித்தனி ஒவ்வொருவரும் கூறலால்.

124. செண்ணம் - ஒளி.

125. வணக்க.

126. புனலும் ஆப்பியும். அவ்வாப்பியும் கங்கையுமாம். அலங்கரிப்பன கற்பகம் தரும் ஆபரணங்களாம். கவின் உறுத்துவ - அலங்கரிப்பன. பூமடல் விராவிய.

127. ஆடவர் கழகம் என்க. விழவு - சிறப்பு.

128. நீண்ட வரிசையான வீதி.

வேறு

நீல வுடைதண் கிடங்காக
    நீவி யிறுக்கு மரைப்பட்டம்
கோல மதிலா மாடநிரை
    குளிர்பூந் தொடையா விடைக்குவடு
வால முலையா நெடுந்தூவி
    மணிப்பொன் மோலி முடிசூடிச்
சீல நகர மகளிருந்து
    செங்கோல் செலுத்துஞ் செவ்வித்தே. 129

சிகர மவிர்பொற் குடங்கொடிஞ்சி
    செம்பொற் கோயிற் பலமதிலும்
புகரில் கிடுகு மாடநிரை
    பூட்டி விடுத்த மணிவடமாம்
நிகரில் வரைத்தே ரிவர்மால்பு
    நிரைசோ பானந் துணிநீரில்
தகுகற் சுனைக ளணியாடி
    தவழ்வெள் ளருவி மணிவடமே. 130

பிறவி தொறும்வேட் டருந்தவங்கள்
    பெரிது மிழைத்த சூர்முதலை
நிறுவு கொடிமேன் மஞ்ஞையென
    நிறுத்த குமரன் றனதுவரை
உறைவ தரிய தவமாக்கி
    யுயர்த்த வுகந்தார்ப் பெடுப்பனபோற்
சிறைய மயிற்புள் ளினங்கோடி
    திரள்வேய்த் தலைநின் றகவுமால். 131

செம்பொன் மேருக் கடையாகிச்
    சிறந்த கந்த மாதனமும்
அம்பொன் மேருக் குடாதுதிசை
    யவிர்பொற் கந்த மாதனமும்

---

129. நீவி - ஆடை. மலைக்குவடு. வாலம் - இளமை.

130. குடம் தேரின் உச்சியிலுள்ள கும்பம். பூட்டி விடுத்த வடம் - மலையாகிய தேரை இழுக்கின்ற வடம். மால்பு - ஏணி. சுனை கண்ணடி. மதில் என்றது கோயிலைச்சூழ்ந்த மதிலை. சிகரமானது குடமாம்.

131. முருகனுடைய வரையானது தன்னிடத்து உறைவதையே தவமாக்கி உயர்த்த.

உம்ப ரிறைதன் னிடந்தணவா
ஆக்க மறிந்து படர்ந்தனைய
பைம்பொன் வரைக ளிரண்டுமிரு
பாலு மதிலா யுடைத்தரோ. 132

கனைவெள் ளருவி கலித்திழியுங்
கனக வரைமுற் றுமவளையா
அனைய நதிபோற் றனைப்பாதி
யவதி வளைந்து கடலகடும்
இனைய வகழ்ந்து புகுநீத்த
மிரைக்கு நந்தி நந்தினியும்
நனைய வொருபால் வரைமதில்சூழ்
நாம வகழி யெனவுடைத்தால். 133

வரங்கள் வேட்டுப் படர்விண்ணோர்
மண்ணோர் நாகர் யாவர்க்கும்
இரங்கி யினிது கைதூவா
தீத்தல் கருதி யெண்ணிறந்த
கரங்கள் படைத்தங் கிருந்ததுபோற்
காமர் வளங்க ளனைத்தினுக்கும்
அரங்க மெனவோங் கியகுன்ற
மழல்செய் காந்தண் மலர்ந்ததே. 134

கோபுரம்

காலந் தொறுநன் றியம்பலுறுங்
கணங்கொ ளியப்பே ரொலிச்செறிவான்
மூலந் தொடங்கிப் பேரண்ட
முகடு காறு நெக்குடைய

---

132. முருகவேள் எப்போதும் நீங்காமலிருக்கும் ஊக்கத்தை அறிந்து. தணிகைமலையின் இருபக்கத்தினும் இரண்டு மலைகள் உள ஆகலின் இவ்வாறு கூறினர். தன் இடம் - தணிகை.

133. தணிகாசலமானது மேருவை முழுவதும் வளையாத சாம்பூநதம் போலத் தன்னை முழுவதும் வளையாமலிருக்கிற நந்தி நந்தினி என்னும் நதியை மதில்சூழ் அகழியாகவுடைத்து. தணிகையானது ஓர்பால் நனைய வுடைத்து. வரை மதில் - இருகந்தமாதன மதிலை.

134. கைதூவாது - இடைவிடாமல், கைவிடாமல்.

ஞாலந் தொடுத்துப் பலமதலை
நாட்டிக் கொடுத்தா லெனவோங்கும்
கோலந் தழைத்துப் பலதிசையுங்
குன்றத் தெழுந்த கோபுரமே. 135

பிரம வுலகத் தயனுயர்த்த
பிணைமென் சிறையோ திமக்கொடியும்
வரவை குந்தத் தரியுயர்த்த
வகிர்நா வரவப் பகைக்கொடியும்
இரவும பகலும் மடிவருட
வெழுந்து வானத் திலங்குகந்த
புரநன் குயர்த்த கொடியுமாய்ப்
பொலியுந் திருமுற் றணிக்கொடியே. 136

மண்டபம்

மன்றல் புரியு மண்டபமும்
வயங்கு மூர்த்தி மண்டபமும்
பொன்றுஞ் சிரத மண்டபமும்
பொற்ற விமான மண்டபமும்
துன்றும் யாக மண்டபமுந்
தொக்க விழாமண் டபமெல்லாம்
குன்ற மிசைபன் மணிக்குவடு
குலாய்விண் ணிவந்த காட்சியவே. 137

போற்ற வடுத்தோர் கொணர்ந்திறுக்கும்
பொன்னங் கிழிக்குன் றுகளொருபால்
தோற்றும் வெள்ளி வரையொருபால்
தூசு மூடை யடுக்கொருபால்
வீற்று மணியின் றிரளொருபால்
விழுப்பல் பொருளின் பரப்பொருபால்
ஏற்று வளைவாய்ப் புள்ளொருபால்
எண்ணி வரைத லரிதாமால். 138

---

135. அண்டமானது தன்மூலம் தொடுத்து முகடுவரையும் நெக்குடைதலால். மதலை - தம்பம்.

137. விழாமண்டபமும்.

138. மூடை - மூட்டை. போற்ற அடுத்துளோர் முருகவேளைக் குறித்துத் தணிகாசலத்தில் உய்த்த மயில் முதலிய புள். ஏருகிய புள்.

நகர்சூழ் வட்ட நீர்க்கோடு
நகுபன் மணிமா ளிகைபல்வீ
தகுமா நகர மணிப்பொய்கை
தனிற்சூழ் மதில்க ளிதழ்வரிசை
திகழ்சீ ருச்சி பொகுட்டாய
தெய்வ வரைதா மரைகிழவன்
புகழ்சூழ் பொய்கை மலரிருந்த
பொற்பும் விளங்க வீற்றிருக்கும். 139

மன்னு மிருமா யையுங்கடந்து
வயங்கு மிறைவர்க் கம்மாயைத்
துன்னு மணிபொன் னமிழ்தாதி
தொடுத்திட் டுவமை வழங்கியாங்
கென்னு நிகராப் பொருள்களே
யிதன்மாட் டுவம மெடுத்தவெனக்
கொன்னு மதியிற் கூர்த்தவர்கள்
குறிப்ப ரிதற்கோர் நிகரின்றே. 140

வெள்வே லிறைவ னறைக்கமல
விரைசூழ் பதந்தை வருமுள்ளத்
தள்ளூ றின்பப் பெருவெள்ள
மடங்கா தெழுந்து வீறுதல்போல்
தள்ளா வளத்து நகரியல்பு
சாற்றப் புகுத லொடுமன்றே
விள்ளா தெழுந்த பேரார்வ
மிகையைத் தணித்தாங் கதைபுகல்வாம். 141

திருநகரப்படலம் முற்றிற்று
ஆகத்திருவிருத்தம்—327.

---

139. நகரைச்சூழ்ந்த மதில் நீர்க்கரையாம். மாளிகைகள் பல தாமரையாம். நகரம் பொய்கையாம். தன்னிற் சூழ்ந்த மதில்கள் இதழ் வரிசையாம். தன் உச்சி பொகுட்டாம். தான் முருகன் இருக்கும் தாமரை யாம். கிழவன் வீற்றிருக்கும். தனில் என்றது தணிகாசலத்தை.

140. வழங்கினாற்போல. என்னும் - எவ்விதத்தினும்.

141. அள்ள ஊறும்படியான. விடாதெழுந்த பேரார்வம்.

நைமிசப்படலம்

பூவி ருந்த நான்முகன் பொருக்கெ னக்க டாவிய
தாவி ருந்த பைம்புனேமி சார்ந்த சைந்த நைமிசம்
தேவி ருந்த செந்தழற்றி கழ்ந்து விண்ணு ளார்க்கெலாம்
மாவி ருந்து வைகலும் வழங்கி ருக்கை யாயதே. 1

படுப்ப வுய்த்த வான்குலம் பறப்பை கூர்ம மாதியும்
விடுப்ப வுய்த்த கோணமும் விறந்த நோக்கி நம்மையும்
அடர்ப்ப வென்றொ ளிப்பபோ லழன்று டற்று தீம்புகை
இடர்ப்ப டும்வி லங்குபுள்ளு மூர்வ சேணி றக்குமே. 2

கன்னி யந்து ழாயினான் கமழ்ந்த பங்க யத்தினான்
மன்ன னாதி தேவர்கண் மகிழ்ந்து முற்று மாண்பினால்
நன்னர் நைமி சஞ்சிறந்த நாகம் வைகு நாடெலாம்
கொன்னு மண்வ ரைப்பிடைக் குழீஇக்க லந்த தொத்ததே.

நீறு துன்று மேனியார் நிகழ்த்து கின்ற வேள்வியை
ஊறு றாற்ற முன்னுவார்கட் கூறு றாற்ற மர்ப்படை
வேறு வைப்ப வேண்டிலார் விழைந்து றாற்று செய்வினை
வீறு கின்ற வாற்றலம்ம மிண்ட கந்த கர்க்குமே. 4

புகைய வட்ப டுந்தொறும் புயல்வி சும்பெ ழுந்தழல்
நகைப டுந்தொ றுந்தடித்து நாறு நெய்யு குந்தொறும்
அகைபு னற்ற ளிக்குமும்ப ரார்நி ரப்ப றுந்தொறும்
பகைநி ரப்பு வையகம் பறைக்கு நீர தென்பவே. 5

---

1. அசைந்த - தங்கிய.

2. கருடயாகத்துக்கும் கூர்மயாகத்துக்கும் கருடனும் கூர்மமும் உரியன. விடுப்ப உய்த்த கோணம் - அசுவமேதயாகம் இயற்றும் பொருட்டுத் திசாமுகங்கள்தோறும் விடுக்க நைமிசத்தில் செலுத்திய குதிரை. விலங்கு ஊர்வ புள் சேண் இறக்கும் என்க.

3. மன்னன் - இந்திரன்.

4. மிண்டு அகம் - செறிந்த செருக்கு.

5. புயல் எழா நிற்கும். தழலின் நகை படுந்தோறும். நிரப்பாகிய பகை. பறைக்கும் - ஓட்டும்.

ஏட்டை முற்றும் வன்பிறப்பி ரிக்க வன்ன வாய்தநேர்
நாட்ட முற்ற வள்ளலாரை நாட்ட முற்ற லால்வினை
மீட்டு மீட்டு மீட்டியீட்டி வெஃகு மின்ப வாழ்க்கைவிண்
மாட்டும் வைத்தி ழைத்திலார் மரீஇய மாத வத்தரே. 6

தோலு டுக்கை வற்கலை துலங்கு நீறு வார்சடை
மூல மாதி யூணினன்றி முன்ன லாவு ளத்தினர்
சாலு மைந்த ருக்களுந் தயங்கு மற்றை யாவும்வந்
தேலு மாறு கொள்கவென் றிரக்க வல்ல நீர்மையார். 7

நஞ்ச ழுத்து நீலகண்ட நாதர் பாத தாமரை
நெஞ்ச ழுத்தி யஞ்செழுத்து நீண்ட நாவ ழுத்துபு
பஞ்ச ழுத்து மேகலைப் பரந்த வல்குல் பாகர்சொல்
விஞ்ச ழுத்து காதினர் விளம்பு மத்த லத்துளார். 8

இன்ன வாய மேன்மைசான் றியாணர் வண்மை நாடொறும்
மன்னு கின்ற நைமிச வனத்து வேறு மாதவர்
நன்னர் யூப மாமக நடாத் தலைக்கு றித்தரோ
துன்னும் வேலை யேழும்வந்து தொக்க தென்ன முற்றினர்.

வேறு

பிருகு வுக்கிர சீலன்போ தாயனன் பிசிங்கிவி பாண்டகன்
துருவ னாரதன் சுப்பி ரன்புதன் சுமதியத்திரி சங்கமன்
அரித கன்பவு லன்சு முந்தர னுபத்தம்பன கத்தியன்
கருண னங்கிர சன்ப ருப்பதன் காத்தியாயனன் கண்ணுவன்.

பவுமன் பாசத ரன்ப ராசரன் பங்குபப்புரு பக்குவன்
கவுசி கன்கபி லன்க லாதரன் காணன்காலன்கை வல்லியன்
கவுத மன்சர பங்கன் முற்கலன் காலவன் பண்டி தோத்தமன்
சவுன கன்சதா னந்தன் வாரன்சா தாதபன்சம தக்கினி. 11

---

6. ஏட்டை - இளைப்பு. வன்னம் - எழுத்து. இன்பவாழ்வையுடைய விண் என்க. நாட்டமுற்றதனால் இழைத்திலர்.

7. உடுக்கையான தோலும் வற்கலையும் நீறும் சடையும் மூலமாதி ஊணும் ஆகிய இவற்றினன்றி வேறொன்றை நினையாத.

8. பஞ்சு - ஆடை. சொல்விஞ்சு - சொல்மிகுதி.

10. விபாண்டகன் என்ற ஒருவன்.

11. பங்கு என்ற ஒருவன்.

சாம தக்கினி சற்ச ரன்சயன் சனிபரந்தபன் சத்தியன்
தூம பன்சுகன் சத்தி மாண்டவி யன்சுதீக்கண னிரதிதன்
வாம தேவன்ப ரத்து வாசன்வ சுசாபாலன்காண் டிப்பியன்
காமர் விண்டுவி ருத்தன் குண்டலன் காசிபன்புகழ் தேவலன்.

வேறு

அசித ஞதியர்க ளொன்றி ரண்டுபல
வடியி ஞர்தலையி ஞர்பலர்
கசிவி னேடுதவம் வேறு வேறுபுரி
காட்சி யாளரிவர் தம்முழைப்
பசையி னேடுபணி செய்து பீழைதபு
பண்பு மிக்கவர்க ளன்னவர்
வசையி லேவல்புரி வோரு மண்மினர்
மகிழ்ந்து வைகலுறு மேல்வையில். 13

இரவி செங்கதிர னைத்தும் வாங்கியினி
தேய்த்து விட்டனைய வேணியும்
பரவு வெண்மதிபொ டித்தெடுத் தனைய
பாவ முற்றுமறு பூதியும்
விரவு முள்ளிருடி ரண்டு ருக்கொடு
வெளிக்க தித்தனைய கண்டியும்
வரமி குத்தபதி னெண்பு ராணமும்
வயங்கு சூதனு மடுத்தனன். 14

கற்ப கங்கடவு ளானி தித்துணை
கதிர்த்த மாமணி யடுத்தலும்
ஒற்க மிக்கவன்ம கிழ்ந்தெ திர்ந்தென
வுயர்ந்த நைமிச வனத்திடை
அற்கு மாதவர்கள் யாவ ருந்தலை
யடுத்த சூதமுனி வரவுகண்
டுறப வப்பய னடுத்து ளாமென
வுவந்து வல்லையெதிர் கொண்டனர். 15

---

12. பரந்தபன் என்ற ஒருவன். சத்தி, இரதிதன், விண்டு என்ற ஒருவன்.

14. கதித்தல் - விளங்குதல்.

15. ஒற்கம் - தரித்திரம்.

ஆத னத்திடையி ருத்தி நான்முறை
யருச்ச னைத்தொழினி ரப்புபு
வேத மாகமம் விளங்க வோதிய
விதிக்கி லக்கியமெ னப்படும்
ஏத நீவுபதி னெண்பு ராணமு
மெனைத்தும் மோர்ந்துபொரு டெள்ளிய
சூத மாதவ வெனப்பு கழ்ந்துவகை
துள்ள மெல்லவுரை யாடுவார். 16

வாய்ந்த மூவறுபு ராண முன்பிவண்
வகுத்து ரைத்தனைய வற்றினுள்
ஏய்ந்து மேதக விளங்கு காந்தம
திணங்கு சங்கிதையொ ராறனுள்
ஆய்ந்து சங்கரர் பெயர்பு ணர்த்தவ
தனுட்சி றந்திடுபின் கூற்றினிற்
காய்ந்து டற்றுகதிர் வேற்ப டைக்குரிசில்
காம ருந்தணிகை மான்மியம். 17

கன்ன லுங்கனியு மேத குஞ்சுவைய
கண்டு மாரமுது மேசறப்
பன்னி யெம்பரிவ றுத்தி முற்றுபரி
பாக மின்மையி னயர்த்துளேம்
இன்னு மன்னதனை யாங்க ளுய்ந்திட
வெடுத்தி யம்பிதுவி யங்கொளல்
அன்மை தக்கவர்த காத வர்க்கருளி
னறிவ ளித்தருள னீதியே. 18

என்று மாதவ ரிரந்து வேண்டலு
மிலங்கு சூதமுனி மொழியுமால்
நன்று மாதவ நவிற்றி யாணவ
நலித்து மேதகைமை பூண்டுளீர்

---

16. எனப்படும் சூத என முடிக்க. ஏதம் நீவு புராணம்.

17. காந்தபுராணம்: 1 சனற்குமாரசங்கிதை, 2 சூதசங்கிதை, 3 பிரமசங்கிதை, 4 விட்டுணுசங்கிதை, 5 சங்கரசங்கிதை, 6 சூரசங்கிதை என ஆறு சங்கிதைகளையுடையது.

இன்றயர்த்தனமெ னக்கி எந்தமை
யெமக்கு மேதகைநி றுத்தலொன்
றன்றி வையக மளித்த லொன்றுள
மமைத்தி டாவிழைவொன் றுகுமே. 19

இகன்மி குத்தகொடி முட்கு டம்பையி
னிருந்த கோகில மழப்பறழ்
தகுசி றைத்துணை முளைத்த லுஞ்சிறை
தணந்து சேணெழியு மாறுபோற்
றெருகுமு டற்சிறை துரந்து வீடணுகு
சூழ்ச்சி பன்முறையும் வேட்டலின்
உகுபி றப்பினும தேபி றப்புமை
யுயிர்த்து ளார்மகவு யிர்த்துளார். 20

வினைத்தி ருக்கினை மிளிர்த்த செவ்விமிடை
யுற்றலால் வினைகண் முற்றுதல்
இனைத்து நீத்தருள்கொ ழிக்குநற்குரவ
னண்மி வாழ்தணிகை மான்மியம்
நினைத்த லுஞ்சிறிது முற்று றுவென
நிகழ்த்தி மேலது விளம்புவான்
முனைத்த வேற்கரனை முன்னி யன்னது
மொழிந்து வந்தவழி தேற்றுமால். 21

நைமிசப்படலம் முற்றிற்று

ஆகத்திருவிருத்தம்—348.

---

19. நவிற்றி - செய்து. தான் மறவாதவன் என்பது தோன்றலால் 'மேதகை நிறுத்தல் ஒன்று' என்றான்.

20. பின்னைய சிறை - கூடு. கொடி - காகம். யாதொரு சம்பந்தமுமில்லாத உடலிலிருந்து நல்வினையால் பக்குவப்பட்டு வீடடைதலால் தன் தாயின் கூட்டிலன்றி யாதொரு சம்பந்தமுமில்லாத காக்கையின் கூட்டிலிருந்து சிறை முளைத்துப் பக்குவமடையும் கோகிலத்தை உவமித்தார்.

21. மிளிர்த்த - கெடுத்த. உற்றலால் நீத்துக் கொழிக்கும் குரவன் என்க. நினைக்கவும் முடியாது எனில், சொல்லுவது எவ்வாறு என்றபடி. அன்னதை ஒருவர் மற்றொருவருக்கு மொழிந்துவந்த வழியைத் தேற்றுவான்.

புராணவரலாற்றுப்படலம்

உலகம் யாங்கணு மிழியிரு குணமிக வுதுதேர்ந்
தலகில் சீர்முதற் குணமடர்த் தோங்குவா னிறையை
இலகு பேருரு வாய்த்தரித் திருப்பதொத் துளதால்
விலகி வாளுமிழ் வெள்ளியம் பொருப்பெனுங் கயிலை. 1

எண்ணி றந்தபல் வரைகளு மெறுழ்வளி மிளிர்ப்ப
மண்ணும் விண்ணமு மறிகட லடர்க்குமவ் வேலை
அண்ண லாணையி னிவந்தண்ட முகட்டெல்லை காறும்
நண்ணி நிற்பது நகுகதிர் பரப்புமச் சயிலம். 2

புரம்பொ டிப்பவா னவர்பிரான் பொலங்கிரி வாங்கிக்
கரம்பி டித்தனான் றுலகெலாங் கவிழ்தராக் காட்சி
வரம்ப டைத்தபொன் வரையுமற் றேனைய வரையும்
உரம்ப டைத்ததா னூன்றியே நிற்றலிற் போலும். 3

பொன்வ ரைக்குல மணிவரைக் குலம்புவி யிருப்பத்
தன்வ ரைப்பக லாதிறை தவிர்வரம் படைத்த
மின்வ ரைச்சுடர் வீக்கந்தன் போன்மறு வீழ்த்தோர்
நன்வ ரைப்பலா திறைநய வாமையை நவிற்றும். 4

வயக்க மாண்டவெள் ளருவிகள் வயின்வயின் வீழ்தல்
துயக்க மாணவன் றரக்கனைச் சுடர்விர னுதியால்
இயக்க மாற்றலு மிருந்தவச் சிலம்பெழு பாக்குத்
தயக்க மாண்டதன் கரங்களை யூன்றுத றகையும். 5

---

1. இருகுணங்கள் மிகா நிற்ப. முதற்குணம் சாத்துவிகம். அவ்விரு குணத்தை அடக்கி. ஓங்குவான் - ஓங்கும்படி.

2. வரைகளையும் மிளிர்ப்ப.

3. இருவரையையும் தான் ஊன்றி.

4. மணிவரை - இரத்தினமலை.

5. துயக்கம் - வருத்தம். இயக்கம் மாற்றலும் - இயங்குதலை ஒழித்தலும்; எனவே, இருத்துதலும் என்றபடி.

பிரம னேமுதன் மாயனே முதலெனப் பிணங்கும்
விரகி லார்க்கெலாம் விடமிடற் றிறைவனே முதலென்
றுரனை யேய்ப்பவர் போன்றுளா ருவணமேக் குயர்த்தோர்
பரவு வேதர்க ளாவயிற் பற்பலர் பயில்வார். 6

அண்டம் யாவையு மரைக்கணத் தளவையி னவித்துப்
பண்டு போலவை யுயிரொடும் படைத்தினி தளிக்க
மண்டு மாற்றல்பெற் றுள்ளபூ தங்கண்மா மலநோய்
விண்ட சாரதத் தலைவரும் விளம்பிலெண் ணிலரால். 7

நலக்கு மாகம மறையெலா நவின்றுமெய் யுணர்ந்து
மலக்கு றும்பினைத் துமித்தின்ப வாரியிற் படியும்
அலக்க ணற்றவர் தமக்குமெய்ப் பணியலா தின்மை
துலக்கி நந்தியெம் பிரானமர் காவலுந் துதையும். 8

வேறு

மதியொ ராயிரம் வகிர்ந்திரு பாங்கினும்
வயக்கிவைத் தெனத்தோற்றும்
நுதியி ராயிர மணிச்செழு மருப்பினு
நொறிலுனை யெழுமான்றேர்க்
கதிரி ராயிரங் கோத்தன கிம்புரிக்
களிறுவாக் கியதானம்
நதியு ராய்த்தவழ்ந் தசும்புதோ யிசும்பிவர்
நடையரி முடமாமால். 9

வழுக்கி யஞ்சிறைத் தும்பிக ளவசமாய்
மலர்த்தலை விழவீமற்
றெருழுக்கி ரும்பொழின் மதுப்புனற் றுரைக
ளுடன்விராய்த் தவழ்ந்தேகிச்
செழுக்கு தம்பைநான் றெருத்தலைத் தரவரு
திருப்பதி தனைக்காமம்
முழுக்க வென்றவன் புணர்ந்தெழு கண்டகை
முதுநதி வளங்காட்டும். 10

---

6. விரகு - அறிவு. உரன் - ஞானம்.

7. பூதங்களும் பூதத்தலைவர்களும்.

9. மருப்பின்கண்ணும். களிறு - இரண்டாயிரம் கொம்புகளையுடைய அயிராவணம். இசும்பு - வழுக்குநிலம். உராய் - பெயர்ந்து.

10. தாரைகள் அம்மலரோடு விராய். மதுவைச் சிவந்த புனலாகவும், வண்டை மிதக்கின்ற சாளிக்கிராமமாகவும் கொள்க.

வளியு ளர்த்தலுஞ் சந்தனங் கிளைகளை
மணமலி யிணர்ப்பூந்தேந்
தளியு கக்கருப் பூரமம் மரத்தொகை
தரவிராய் நனிதேய்த்த
தெளிகொ டேய்வையுண் முழுகிய குவடுக
டேவிவெம் முலைமான
வெளிறு துன்றுதந் நிறமருந் தவத்தினால்
விளித்தொளிர் வனபோன்ற. 11

கற்றை வெங்கதி ருடற்றிய விருட்டுணி
கதிரவன் மனையாமென்
றுற்று டற்றுவ தெனக்களி வண்டினம்
முழக்குபு மதுமாந்தும்
பொற்ற வம்புய மலர்ந்தனத் தொழுதியிற்
பொலிந்துகற் சுனையாவும்
அற்ற மெய்யினர்க் கற்றவன் றிருவரு
ளாமெனக் குளிர்தூங்கும். 12

கொடைமை நல்குவ கற்பகப் பொழிற்கவட்
குளிர்மரப் பொதும்பெல்லாம்
மிடைவி லங்கினந் தேனுவுக் கினமணி
மிளிர்சிந்தா மணிக்கந்தேன்
மடையு டைத்தெழு மலர்க்குலந் தவழ்வன
மலர்வளை நிதிக்கென்ப
உடைதி ரைப்புனற் றீர்த்தங்க டிருத்தங்கட்
குதவுவ மலந்தீர்த்தல். 13

வளங்க ளெண்ணிலதுவன்றிய வத்தகு
மாதர்வெண் கயிலாயத்
திளங்க திர்ச்செழும் பரிதிகள் பற்பல
வெறுழ்கொளத் திரண்டாங்கு
விளங்கொ ளிச்சுடர்த் தூணங்க ளாயிரம்
விறந்துபன் மணிமாலை
துளங்கு மின்னென நான்றசைந் திருங்கவின்
றுளும்புமண் டபநாப்பண். 14

---

12. பற்றற்ற உண்மையோருக்கு முடிவுபட்டவன் என்க.

13. உலகத்திலுள்ள திருத்தங்கட்கு என்க.

14. மாதர் - அழகு.

ஒளிபி ழம்பிய வாரமும் போர்வையு
முத்தரீ யமுமான
களிபி ழம்புதம் மினமெனத் தாங்களுங்
கதிபெறக் குறிக்கொண்டாங்
களிபி ழம்பிய பாததா மரைநிழ
லகத்தொடு புறம்போர்ப்பத்
தெளிபி ழம்பிரு நாகமு மடங்கலுஞ்
செறிந்துதாங் கணைமேலால். 15

இருந்த வம்பல வுழந்துதன் மாசினை
யிகந்துபே ரொளிகூர்ந்து
திருந்து வெண்மதி விசும்பெழ வார்சடைச்
சிவணிய வொருநாகம்
அருந்தின் மற்றிது பெருஞ்சுவைத் தாமென
வாவிவௌ வுபுமீண்டு
பொருந்தி ஞலென வயங்குகாம் புயர்குடைப்
பொழிகதிர் நிழல்பம்ப. 16

நாமி கப்புறி னமைப்பரித் துழலுமா
லைந்துயிர் தனைமன்ற
தாமி கப்புறு தன்மைநா யகன்றிருச்
சந்நிதிக் குரித்தான
ஆமி தைக்குறித் தெனமகிழ்ந் தெழுந்தெழுந்
தாட்டயர் வனபோலக்
காமர் முற்றிழைக் கன்னிய ரிரட்டிய
கவரிக ணணிதுள்ள. 17

கற்றை வார்சடை செஞ்செவி மணியுரங்
கரங்கடி தடம்பூந்தாள்
முற்ற ராவணி முழுவதுந் தழைத்தொளி
முதிர்ந்தெழில் வளம்பொங்கும்
பெற்றி சூழ்ந்தது முயன்றுளார் போன்மெனப்
பிடிநடை மடமாதர்
பற்றி வீசுசாந் தாற்றிகள் வளியெழீஇப்
பாங்கெலாங் குளிர்தூர்ப்ப. 18

---

18. அது - அவ்வளம் பொங்குதலை.

குழலும் வீணையுந் தோற்பொலி முழவமுங்
குரைகட லமிழ்தன்ன
மழலை கூர்மொழிப் பாடலு மயங்கவந்
தாடலை மதித்தாங்கண்
அழலம் போருகக் கரமுகிழ்த் தஞ்சலி
யளித்தவ ரவ்வாறே
விழவு கூர்திரு வனப்பட வுள்ளகம்
விளிந்தனர் தலைநிற்ப. 19

மாய னாதிவிண் ணவரெலாந் திருவுரு
வனப்பினை யெதிர்நோக்கிச்
சாயன் மாதரார் பெண்ணவா யவ்வுருச்
சத்தியிற் றழீஇக்கோடல்
மேய காலையின் மோகமிக் கெழுதலும்
வினைமறந் தடிபோற்றும்
தூய வானர மகளிர்போற் கையறு
தொழின்மையி னணிநீட. 20

கொம்மை மென்முலைக் கொடியிடைக் கிடமருள்
குழகன தடிநாடும்
செம்மை நெஞ்சினர்க் குறுவழி யண்மைய
செவ்விய வெளிதுய்ப்பத்
தம்மை யல்லதில் லாமையைச் சாற்றுதல்
தகையவா கமமெல்லாம்
விம்மி ருங்கதி ருருவுகொண் டண்மையின்
விராயமர்ந் தினிதேத்த. 21

போத விழ்ந்துதே னுறைக்குமென் மலர்த்தொடை
பொங்கிய விரைச்சாந்தம்
மாதர் வில்லுகு மிழைகளுஞ் சிந்திமெய்
வளந்தப வுளமெல்லாம்

---

20. மங்கையருடைய பெண்தன்மையை அவாய். கையறு - செயலற்ற. 'மோகமிக் கெழுதலும் வினைமறந் தடிபோற்றும், தூய வானர மகளிர்' என்றது முதற்செய்யுளிற் கூறினரை.

21. செவ்விய - நல்வழிய.

கோத னுங்கிமெய் யருள்வள மிகவினோர்
குழுக்களைத் தவவோச்சித்
தீத னுங்கிய நந்தியங் குருபரன்
றிருமுன்பு பணிசெய்ய. 22

பரந்து நின்றொளிர் பராபரை யாதியாப்
பன்னுமைம் பெயர்பூண்டு
நிரந்த வைந்தொழி றன்னொடும் பிரிவின்றி
நிகழ்த்துசத் தியையன்றி
உரந்த ழைத்திடா வுண்மையி னுடன்றொழு
துயிரெலாங் களிதூங்க
வரந்த ழைத்தவ னுமையொடும பேரருள்
வழுங்கிவீற் றிருந்தானல். 23

வண்டு முரய்த்தொடை மார்பனும பிரமனும்
வானவர் முதற்கோவும்
மிண்டு மொன்பதிற் றிருவரும் பதினொரு
மூவரும் வேறாய
தொண்டர் யாவருந் தொழுதுதங் குறைவினைத்
துறுத்தமே வரப்பெற்றுக்
கொண்ட வோகையி னவரவ ருறைபதி
குறுகின ரதுகாலை. 24

பக்கு வம்பல புண்ணிய மலபரி
பாகஞ்சத் திநிபாதம்
தொக்க வல்வினை யொப்புநே ரடுத்தலிற்
றெல்லுரி கழல்பாக்கு
மிக்கு நாடும்வா ளரவெனப் பிறவியை
வெருவிய வுளத்தோடும்
தக்க மாதவ ரெழுவரு மறுவலுந்
தாழ்ந்தெழுந் ததிர்நின்றார். 25

---

22. அருள்வளம் - ஞானம்.

24. ஒன்பதிற்றிருவர் - பதினெண்கணத்தவர். பதினொரு மூவர் - முப்பத்துமுக்கோடி தேவர்.

குடந்தம் பட்டெதிர் நிற்றலும் பசுங்கதிர்க்
குரூஉமதி மிளிர்வேணி
மடந்தை பாகன்மற் றுயிர்க்குயி ராகிய
வள்ளலன் னவர்நெஞ்சம்
கிடந்த வேட்கையைத் திருவுளத் தடைத்தருள்
கெழுமுநந் தியின்பாங்கர்த்
தொடர்ந்த வன்பினு லுணர்சனற் குமரனுந்
தொன்முனி முகநோக்கி. 26

செயிர்பி றங்கிய பகைமையு முறவெனச்
செறிந்தநம் மையும்பாரா
உயிர்பி றந்தவ ராதலின் முனிவரர்க்
குண்மையை முறையானே
மயர்த புத்தினி துரைமதி யெனவருள்
வழங்கியா வயினின்றும்
வெயிற முழ்பிய வுவளக வரைப்பினை
மென்கொடி யொடும்போந்தான். 27

வேறு

அண்ணலா ரருளிச் செய்த வருடலைக் கொண்டு போற்றிப்
புண்ணிய சனற்கு மாரன் புளகமோ டாங்கு வைக
எண்ணிய வெண்ண முற்ற வெம்பிரான் கருணை வெள்ளம்
நண்ணிய முனிவர் தாழ்ந்து நயந்தனர் கிளக்க லுற்றார். 28

முனிவர ரெனைத்துந் தேரு மொய்யரு ணிதியம் பெற்றுக்
கனிமொழி பாகன் பாதக் கலப்பெனுஞ் சேக்கை சேக்கும்
புனிதமெய்ச் சனற்கு மார புங்கவ நின்னைச் சேர்ந்தாம்
இனியடி யேங்கட் கெய்தா விரும்பொருள் யாங்க ணுண்டே. 29

---

26. குடந்தம் - நால்விரல் முடக்கிப் பெருவிரல் நிறுத்தி நெஞ்சிடை வைத்து நிற்றல்; திரட்சியுமாம்.

27. ஆணவம் முதலிய பகையையும். உயிர்த்தன்மையாய்ப் பிறந்தவர்.

28. தாம் எண்ணிய எண்ணமானது நிறைவேறும்படி கிளக்கலுற்றார்.

29. எனைத்தும் - சிறிதும்.

சுற்றமென் வல்லி பின்னித் தொக்கசத் தாதி வெண்டேர்
செற்றியிந் தியமா மல்கிச் செனனமே மரண மென்ன
முற்றிய வழிக ணீண்டு முனிவினைத் தழல்கள் சூழ்ந்து
பற்றிய வாழ்க்கைக் காடு பாற்றுமெஃ கின்று பெற்றாம். 30

சுத்தமெய்ஞ் ஞான வின்பத் துறைபடி முத்திக் கேது
சத்தியந் தருமந் தானந் தவமக மக்கட் பேறென்
றித்திற மென்றுந் தத்த மியல்புளி யொழுக லென்றும்
வைத்தசொன் மறையிற் றோன்று மலைவுமின் றொழித லானேம்.

என்றுளத் தெழுந்த வார்வ மெழுகட லென்னப் பொங்க
நின்றுவிண் ணப்பஞ் செய்யு நீத்தமா தவத்தி னார்க்கு
நன்றருட் பார்வை நல்கி நவைதபு தீக்கை யாற்றி
ஒன்றுமுப் பொருளு மும்மை யுணர்வினாற் றெளித்திட் டானே.

இங்கிது நந்தி யெங்கோ னிருந்தவப் பேறு வாய்ந்த
மங்கண னாதி யான மாதவத் தோர்க்குப் பண்டு
சிங்கிய மலத்தி னுள்ளந் தெளிதரத் தெருட்டிற் றாகும்
நுங்களுக் குரைத்தா மென்று நுவன்றனன் மோன முற்றான். 33

கேட்டனன் றமைதி பெற்றுக் கிளர்ந்துடன் சிந்தித் தங்கண்
வாட்டமின் றெழுவர் தாமு மயர்தபத் தெளிந்த பின்றைக்
காட்டரு நிட்டை கூடல் கலவும்வா தனையி னெய்தார்
மீட்டவுள் ளத்த ராகி மெலிந்துதங் குருவைச் சார்ந்து. 34

ஐயனே போற்றி யாண்ட வமலனே போற்றி மூவா
மெய்யனே போற்றி நின்னை மேவியு மேவார் போல
வையக மாட்டெம் முள்ளம வழிக்கொள லாயிற் றெந்தாய்
உய்யநின் கருணை யின்னு முறுத்தெனக் குமரன் கூறும். 35

---

30. சத்தமாதி பேய்த்தேர். மா - மிருகம். எஃகு - ஆயுதம்.

32. முப்பொருள் - பதி பசு பாசம். முப்பொருளையும் பொது கூடம் சிறப்பு என்னும் மூவகை உணர்வால் தெளிந்தான்.

33. மங்கணமுனி.

34. நிட்டையினின்று மீட்ட.

பொறுமையையம் பொறிய டக்கல் புரைதபு தவமா சார
முறைவழி யொழுகல் சீல முற்றிய வாய்மை யூக்கம்
அறிவரு ளருச்ச ஞதி யடைந்தன்பு கடைப்பி டித்தல்
நெறியிவர் புத்தி கூர்த்த னடுநிலை நிலைத்தி ரேனும். 36

வாதனை மலநோய் தாக்க வாய்மையி னிலைத்த லின்றி
வேதனை யுலகி னுள்ளம் விரவமெய் விதிர்ப்புக் கொண்டீர்
சாதகப் பாலிர் நீயி ராதலிற் சாத கத்தாற்
சாதலும் பிறப்பு மில்லாச் சாத்தியப் பாலி ராமின். 37

சாதக வழியும் பல்ல வவற்றினுட் டளர்வின் ருவ
ஏதமி றலங்தோ றெய்தி யிறைஞ்சுத லொன்றின் வைகல்
தீதறு தலமும் புத்தி செறிப்பவீ டுறுப்ப வேண்டின்
ஓதிய விரண்டு முய்ப்ப வுலப்பில வுலகின் மாதோ. 38

அவற்றினுட் புத்தி முத்தி யருங்குரைத் தின்றி யார்க்கும்
தவற்றினைத் துமித்து நல்குந் தலங்களுஞ் சில்ல வாகும்
அவற்றுளு முக்கண் மூர்த்தி யமர்தலஞ் சில்ல சில்ல
துவற்றுதேங் கடப்பந் தாரான் சூழலப் பெயருங் கேண்மின். 39

வேறு

மாலைவெள் ளருவி தாழ்வரைக் கயிலை
மதமலை யுரற்றுமந் தரமே
சாலநோ யனுக்குஞ் சமபுலா சியமே
தண்பனிக் குவடுசூ ழிமயம்
ஏலமார் சோலைத் தருமநற் கான
மெழில்குலா வியகுணத் தானம்
கோலம்வீற் றிருந்த வளமிகு நீல
கண்டமே குலாசல வரைப்பு. 40

---

37. சாதகத்தால் - சாதக முயற்சியால். பசுகரணங்களெல்லாம் பதிகரணங்களாதல் நிட்டைகூடுபவர்க்கே ஆதலின் நிட்டை கூடுதலைச் சாத்தியமாகக்கொள்க.

38. புத்தி - போகம்.

39. அருங்குரைத்து - அருமைத்து; குரை அசைச்சொல்.

வெறிகமழ் பொழில்சூழ் வில்வகங் கணமே
விணைக்குறும் பகழ்தரு வராகம்
எறிதிரைக் கங்கை வட்டமேத் துகர்த
மிடர்தபுத் தருள்சிலை வட்டம்
மருவில்கந் தருவ வனந்தெழித் தளிசேர்
மலர்ச்சுனை வெறுத்தகே தாரம்
உறைமதுப் படப்பைக் காமிகா ரணிய
முதீசியுத் தாலக வைப்பு. 41

கடவுளர் முதலோர் வணங்குசீ கோட்டம்
கா தரந் தபுங்குரு குல்லியம்
சுடர்மணி யிமைக்குங் கங்கைசூழ் காசி
தொல்வினை யறுங்கபி லேசம்
மடவிய ராட லருதமா காளம்
வான்படர் புகழ்விரு பாக்கம்
தொடலைவன் மாயை விடைகொள்வன் மீகம்
துலங்கிய தேசநீ வனமே. 42

திங்கள்சேர் மாடக் கிர்த்திவா சேசம்
கங்கையா தாரசித் தியமே
துங்கமா தவர்வாழ் மந்தர காளம்
துகளின்மா யாபுர மிபங்கள்
சிங்கநின் றுலம்ப வெருவுசீ சயிலம்
தெகிழ்ந்தபூந் தண்டகா ரணியம்
பொங்குநீர் வைகை யாலவாய் பொருந்தும்
பொருகரை யமர்புடை மருதூர். 43

காவிரி வளத்த வுசிரமே தென்பாற்
கவின்றவுத் தாலக நகரம்
பூவிரி பொதும்பர் மலயவெற் படுத்தோர்
போக்கரு விக்கிர மேசம்

40. தருமகானம்.

41. தெழித்து - முழங்கி.

43. தெகிழ்ந்த - வாய் விரிந்த.

நாவலர் துவன்றுஞ் சாலிவா டீசம்
நற்கதி யருள்சம்பு வனமே
வீவிரி காந்தட் டிரிசிர வோங்கன்
மேதக வளர்சுசப் பேசம். 44

பாட்டளி முரலும் பொய்கைசூழ் பஞ்ச
நதம்பய னருள்புட்ப விபினம்
கோட்டரி யுகளும் வாஞ்சியங் கோணை
மதில்புடை சூலவுசீ புரமெய்
வீட்டினர் வதியும் பசுபதித் தலமே
வரும்பஞ்ச லோகமாத் தானம்
வாட்டமுற் றிரிக்கு மிடைமரு தென்றாழ்
வழக்கறு மாடமா யூரம். 45

சீர்த்தசித் திரவே திகமடி யார்க்குத்
தேனிக்கு மாலிங்கே சுரமே
சூர்த்தவன் பிணிக டுமிசித்தா ரணியம்
துயர்விடு சுநாகத வைப்பு
பார்த்தலத் தொளிகள் பரப்புகண் டீசம்
பரவுசீர்ச் சிதம்பர நகரம்
ஓர்த்தவ ரலக்க ணொறுத்திடுந் தால
வனமத்தி யாபகே சுரமே. 46

உடற்பய னளிக்கு மிருடிவிந் தியமே
யும்பரார் தொழும்வராஞ் சலமே
தடப்பல நதிசூழ் காஞ்சிமா நகரம்
தண்டலை யுடைவடா ரணியம்
மடப்படு மலந்தீர்த் தருடிருப் பாசூர்
வயங்கிய வியாக்கிரே சுரமே
கடப்பருஞ் சீர்த்தி விரிஞ்சைமா நகரம்
கரிசிரித் திடுந்திரு வல்லம். 47

எட்டனை நாற்றி யிரட்டிய விவைமற்
றெறிதிரைப் பெரும்புனற் கங்கை
வட்டவார் சடிலத் திளம்பிறை கதிர்க்கும்
வள்ளலா ரமர்தல மாகும்

---

44. காவிரிக்கரையிலுள்ள உசிரம்.

46. சித்தாரணியம்-திருவாவடுதுறை. தாலவனம்-திருப்பனந்தாள்.

47. வியாக்கிரேசுரம் - திருப்பாதிரிப்புலியூர்.

அட்டொளி விரிய வழற்பொறி தும்மு
மரித்தலை வேல்வல னுயர்த்த
கட்டழுகெறிக்கு மறுமுகக் கடவுள்
கதியநற் றலங்களுந் தெரிப்பாம். 48

பிறங்கிய பவானி சங்கமஞ் சமணப்
பிராணநா சனம்புயன் மேகம்
உறங்கெயி லுடுத்த பவானிசங் கரம்விண்
ணுவகையிற் பணிசர வணமே
அறங்கிளர் குமார புரமணங் கஞற்றி
யலர்விரி கதம்பகா ரணியம்
மறங்கடி வன்னித் தானநீ ரோடை
மலிந்துவாங் கியசத்தி புரமே. 49

வரம்பல வுதவுஞ் சண்முக புரஞ்சீர்
மல்கிய கன்னபூ டணமேர்
பரந்தெழு கீர்த்தி பூடணம் வாகு
லேயமா புரம்பவுத் திரமே
விரவுமா ரூட மேடக மோசை
விரியுநப் பிரமத மோசம்
புரவுபூண் டருளுங் கந்தமா தனமே
போகுயர் முடிக்கிர வுஞ்சம். 50

தவமலி வேத சயிலமின் புறத்துஞ்
சத்திய வாசகம் பிறவி
அவமறு குமர கோட்டமே மூலகு
மாதரித் துறுங்கவு மாரம்
துவர்வளம் படைத்த தாமிர சூடத்
துவசமே வில்வகா னனமே
திவளொளி மயூர மதம்விடுந் தானத்
தேவகும் பக்குகைத் தானம். 51

---

48. அறுபத்துநாலு தலமிவை. அரி - ஒளி. எட்டனை நாற்றி - முப்பத்திரண்டு, அதனை இரட்ட அறுபத்துநான்காம்.

49. நீருண்டமேகம். புயல் - நீர்.

51. மயூரம் - மயில்.

எழில்வளர் விசாக பவனமெய்ஞ் ஞான
மீத்தருள் வித்தியா வனநல்
விழவுகொண் மார னந்தகா ரணமெய்
விளைத்திடுஞ் சுவேதமா வனமோர்
தழைசுகு மார சிகாசலம் வளங்கள்
தகுஞ்சுரா பயப்பிர தந்தேன்
வழிமுழை குவட்டு வள்ளிவெற் போங்கு
மாவிர புரமெனுந் தலமே. 52

வளமிகு சோமாக் கந்தமும் மலந்தீர்
வாகுலே யர்சிர மந்தொல்
பளகறு கெந்த சயிலநீள் முகின்மீப்
படிதருஞ் சித்திர கூடம்
தளிரிணர்ச் சோலைச் சம்பகே சுரங்கோ
முக்கியந் தறுகண்மா வேழம்
களகள முழங்குங் காளத்தி விலங்கல்
கருணைசெய் பிரணவ புரமே. 53

உரனிகழ் ஞான சனங்கதிக் கேணி
யுஞற்றறும் புத்திர காமம்
அரிறபு மிந்தி ராபயப் பிரத
மவிர்சிவோ பாசிய நகரம்
பிரமநிக் கிரகம் பீடுசேர் பிரம
வனுக்கிர கம்பிழை தபுத்தோர்
இரவுநன் பகலும் வழிபடும் வாத
புரமில கியவராஞ் சலமே. 54

பொலிந்தசீர் வரத சயமபி டேக
புரமலர்க் குறுஞ்சுனை படப்பை
மலிந்தகல் யாண கானம்வீழ் வரங்கள்
வழங்கிடுஞ் சுப்பிர மணியம்
ஒலிந்தபூம் பொதும்பர் வித்தியா தரமே
யுளங்கவர் மணிகண்டே சுரமே
சலந்தவிர் சமயத் தானபஞ் சகமென்
றுரைத்திடுந் தலங்களோ ரைந்தே. 55

---

55. பஞ்சகம் - ஐந்து தலம். அவையாம்.

தரைபுகழ் சயந்த புரமரு ளெவர்க்கும்
தருங்குமா ராசல மணிகள்
வரைகிடந் திமைக்கும் வேங்கட முத்தி
வழங்குசீ பூரண கிரியென்
றுரைதரு நாலெண் ணிருதல முருகற்
குறுதல நுமக்கொத்த தலமும்
புரையிலித் தலத்து ளுயர்ந்தநான் கீற்றிற்
புகன்றநாற் றலமவை யவற்றுள். 56

மதந்தவி ரடியார் வாதனை மலமும்
வாட்டுசீ பூரண கிரியாம்
விதந்தநூற் றிருபத் தெட்டினு மேலாய்
விளங்குமால் வினைக்குறும் பொதுக்கிப்
பதந்தர வல்ல சத்திய விரத
பாற்கர கேத்திர மாகி
இதந்தரு மிறைவற் கருண்மொழி கொடுத்த
திதுவலா தின்மையின் மாதோ. 57

என்றுமோ ரியல்பி னின்றிடுஞ் சீபூ
ரணத்தினை யாயிடை வதிவோர்
மன்றநன் றுறலா லப்பெயர்த் தாகும்
வானவர் திருவெலா நிரம்பி
நின்றிட லானு மப்பெய ரதற்கு
நிகழ்த்துவர் கணிகமாத் திரையின்
வென்றிகொள் வரங்கள் வழங்கலிற் கணிக
வெற்பென மிகுமொழி யுடைத்தால். 58

மூலமா யுலக முழுவதும் படைத்த
முதல்வனே முருகனைத் தனக்கு
மூலமாக் கொண்டு வணங்கலின் மூலாத்
திரிவைக ளுறுமலர் மூன்று

---

57. யாம்: தன்மைப்பன்மை.

58. ஸ்ரீ - திரு. பூரணத்தினை - முத்தியாகிய திருவை (நிறைவை);

கோலமார் காவி யுயிர்த்தலி னல்ல
காத்திரி குமைத்திடுங் கற்ப
காலமு மழியா திருத்தலிற் கற்ப
சித்தமர் தணிதலிற் றணிகை. 59

பிரணவப் பொருளை யுணர்த்தலிற் பிரண
வார்த்தமா நகரமிந் திரற்கும்
வரமளித் திடலா லிந்திர நகரி
மகதியாழ் முனிக்குறு பிரியம்
விரவிய சிறப்பா ன்ரதப் பிரியம்
வீட்டினை யகோரனென் றுரைக்கும்
அரிறபு தவத்தோற் குய்த்தளித் திடலா
லகோரகை வல்லியப் பிரதம். 60

இறுதியிற் கிளந்த விந்நாற் பெயரு
நீண்டிய முதலுக நான்கும்
முறைமையி னெவ்வொன் றுரிமையி னெடுத்து
மொழிந்திடப் படுமெந்த வுகத்தும்
மறுமுத றுமிக்கும் வளங்கெழு சீபூ
ரணப்பெயர் வழங்கிடப் படுமால்
அறிமினோ குறிக ளத்திருக் குன்றத்
தினுக்கடை யாளமுங் கேண்மின். 61

தெண்டிரைக் கங்கைக் காசிமா நகர்க்குத்
தெனுதியோ சனையிரு நூற்றின்
வண்டமிழ்க் காஞ்சி வடாதிரண் டனிற்கீழ்
வளைகடன் மேற்றிசை யைந்தில்
தொண்டர்சூழ் விரிஞ்சை வடகிழக் கெல்லை
மூன்றினிற் றுலங்குகா ளத்தி
அண்டர்சூழ் வரைக்கு நிருதிமூன் றரையி
னரசுவீற் றிருப்பதக் குன்றம். 62

குழவிவெண் மதிய மிலைச்சிய வேணிக்
குருபரன் பிரணவப் பொருளை
விழைதகத் தவத்திற் பெற்றுவீ ராட்ட
காசஞ்செய் வீராட்ட காசம்

---

59. ஒரு காவிக்கொடி மூன்று மலரைப் பூக்கின்றது என்க. காவி அத்திரி என்பது காத்திரி என மரீஇயது.

61. குறிகள் அறிமினோ: குறி - பெயர்.

அழலவிர்ந் தனைய நெட்டிலைக் கதிர்வேல்
அவாயினி தமர்ந்தருள் குமரன்
சுழல்பவம் குமைக்குந் தன்பெயர் விளங்கத்
தொழுஞ்சிவக் குறியுமாங் குளவால். 63

குன்றவர் மடந்தை குவிமுலை மார்பிற்
கோட்டுமண் கொளப்புணர் வேலோன்
அன்றுமெய் யன்பிற் போற்றிய வாபச்
சகாயனென் றடற்களிற் றிறையும்
மன்றலங் கமலத் தயன்படைப் பிளையோன்
வழங்குமா றருந்தவ முளுற்றி
ஒன்றிய வுளத்தான் வழிபடு மெண்டோ
ளுத்தமன் குறியுமற் றுளவால். 64

குருமொழி வேட்டு நந்திமா தவங்கள்
குயிற்றிய குகையுமற் றவற்கு
மருமலர் கடப்பந் தாரிஞ னழைத்த
மணித்திரை நந்திநந் தினியும்
பொருவில்செந் தமிழ்க்கு முதற்குரு வாகப்
பொலிவரம் வரையுரங் கிழித்த
முருகனுய்த் தளிப்ப வகத்தியன் போற்று
மொய்யொளி யிலிங்கமு முளவால். 65

இந்திரன் பிரமன் மாதவன் சேடன்
இவர்வலிச் சூரன்கைக் கவர்ந்த
அந்தமி றங்கள் வளம்பெற வேண்டி
யருச்சித்த வருட்குறி பலவும்
சுந்தர மனையை யிழந்தமா லரன்பாற்
றுகளறு பெருந்தவ மாற்றி
மைந்துபெற் றெண்ண முற்றிமீண் டருளை
வழங்கவாழ் சேக்கையு முளவால். 66

மாடகம் பொலிந்த திவவியாழ் முனிவன்
வந்தனை புரியருட் குறியும்
பீடகம் பொலிந்த வம்முனி மொழியப்
பெருகிய வோகைபி னிளையோன்

தோடகம் பொலிந்த விணர்மலர்க் கூந்தற்
சுந்தர வல்லியை மணந்து
பாடகம் பொலிந்த வடிப்பிடி யோடும்
பயிலுமப் பருப்பத முடைத்தால். 67

கடம்பணி குமர னுன்முகன் றிருமால்
கதிர்மணிச் சேடனு ரதன்றூர்த்
தடம்புயக் குலிசத் திந்திரன் செழுந்தீந்
தமிழ்முனி பெயரினல் விளங்கும்
இடம்படு தீர்த்தஞ் சிவகங்கை யெட்டு
மியம்பிய நந்திநந் தினியும்
மடந்தபு நும்மால் விளங்குமேழ் சுனையு
மணிவரை யண்மையி னுடைத்தால். 68

நறுமணங் கமழுந் தாமரை நிகர்த்த
நகைமுக மாறுமெல் லுமிழும்
மறுவறு மணிகள் வயின்வயி னிமைத்து
மல்கிருட் செறிவுகால் சீக்கும்
அறுமணிக் குவடா யறுமுகத் திறையே
யாயதா லடைந்தவ ருயிர்மேற்
கொறுகொறுத் துழலும் வல்வினைப் பகையைக்
கொலைபுரிந் தருளுமக் குன்றம். 69

சேயிடை யிருந்து கேட்பினுந் தொழினும்
செப்பினுஞ் சித்தம்வைத் திடினும்
ஆயிடை வதித லாதிகள் செயினும்
அலகில்பல் பவத்தினு மீட்டும்
மாயிரு வினையுஞ் சவட்டிமீ ளாத
வரம்பிலின் புறுத்துவ தென்றல்
காயிலை வேலோன் றணிகையின் பெருமை
கட்டுரைக் கடங்குவ தன்றே. 70

---

67. அருட்குறியையும் உடைத்தால்.

68. தீர்த்தமும் சிவகங்கை ஒன்றுமாகிய எட்டையும்.

69. கொறுகொறுத்து - கோபித்து.

இன்னணஞ் சிறந்த வுற்பல வரையை
யெய்தியாங் கினிதுவீற் றிருக்கும்
மின்னவிர் நுதிவேல் வீரனைப் பணிந்து
மேதக வதிந்தவ னருளால்
துன்னிய மலவா தனைவிடை கொள்ளத்
துலங்கிய சாக்கிரா தீத
மன்னியின் புருவா யாணவ நிலைபோன்
மருவுதி ரெனப்பணித் திட்டான். 71

அருளிய குரவன் றிருவடிப் போதி
லருந்திறற் பெருந்தவ முனிவர்
இருவிழி பொழிநீர் மண்ணுதல் புரிய
வெழுந்தனர் பலமுறை வீழ்ந்து
திருவுடை யாளங் கூறிய முகத்தாற்
றெரித்தனை மான்மியம் விரித்துக்
குருபர வருளென் றிரந்தவன் முழுதும்
குறைவறத் தெருட்டிடத் தெளிந்து. 72

மறுவலும் வணங்கிப் புறவிடை கொண்டு
மடங்கனேக் கெனமனங் குரவன்
நறுமலர்ப் பதத்து நாமவே லிறைவன்
நளிர்வரைக் குன்றினும் படர
எறிகதிர் வெள்ளி வரைதணந் தாங்க
ணெய்திநா யகனடி பணிந்து
நிறையுள மகிழ்ச்சி தலைசிறந் தனராய்
நெடுவரைத் தெனுதுழிச் சார்ந்து. 73

தொழித்தளி முரலு நந்தன வனமுந்
துறுமலர்ப் பொதும்பரு மணிகள்
கொழித்தலை சுருட்டுஞ் சுனைகளும் படுத்த
கொள்கையின் விளங்கறை பலவும்
செழித்தவிண் ணமர ருள்ளமுங் கவர்க்குந்
திருக்குலாய் மும்மலச் செருக்கும்
அழித்தெழு மருட்கோ ராகர மான
வற்புதச் சூழல்கண் டமர்ந்து. 74

---

71. ஆணவத்தில் தம்செயலற்றிருப்பதுபோல.

73. பதத்தும்.

வைகலும் விதியா னட்கடன் கழிப்பி
மருவுமான் மார்த்தபூ சனையை
நைகர மில்லா வன்பொடு நவிற்றி
நறைகமழ் கடம்பணி தாரான்
செய்கழற் சரண் பங்கயம் போற்றித்
தேசிக னருளிய குறியால்
பொய்கழ லுள்ள நிட்டையைக் கூடும்
பொருவறு சூழ்ச்சிகைக் கொண்டு. 75

ஆதியீ றில்லா வைந்தெழுத் தைந்து
நிலையினு மாம்வகை யுணர்ந்து
தீதுசே ரிரண்டு நிலையினு நீங்கித்
திகழ்நிலை யிரண்டினும் பயின்று
பேதமே யபேதம் பேதமோ டபேத
மெனப்படும் பெருநிலை யாய
ஞாதிரு ஞான ஞேயமுந் திகழா
நன்மையிற் றென்மைய ராஞர். 76

அத்தகு வரைப்பி னெழுசுனை யாடி
யருந்தவ மாதிக ளியற்றின்
சித்தமா சிரிய விழிஞரு மொல்லை
சிவத்தினைச் சிவனுவர் கண்டீர்
இத்தகு முனிவ ரெழுவர்க்கு நந்தி
யெம்பிராற் குரியமா ணக்கன்
மெய்த்தவக் குமரன் விளக்கிய ததனை
வினைச்சம மிலார்க்குரைக் கொணுதால். 77

என்றுமா தவத்துச் சூதமா முனிவ
னியம்பலு மரும்பெரும் பொருளை
இன்றுநாங் கேட்ப முன்புநாம் புரிந்த
விருந்தவ மிருந்தவா வென்னென்

---

76. பஞ்சாக்கரமானது மாறி மாறி நிற்றலால் 'ஆதியீறில்லா' என்ருர். ஐந்து நிலை: சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்பன. சாக்கிரம் சுழுத்தியாகிய இரண்டு நிலையினின்றும் நீங்கி, சொப்பனம் துரியம் ஆகிய இரு நிலையினும் பயிலுதல்செய்து, துரியாதீதத்தில் தொன்மைபோலானுர். ஞாதிரு முதலிய மூன்றும் திகழா நன்மை. எழுத்து ஆகும் விதம். ஞாதிரு - காண்பான். ஞானம் - காட்சி. ஞேயம் - காட்சிப்பொருள்.

77. குமரன் - சனற்குமரன்.

றென் றுமா னந்தக் கண்கணீர் பாய
வுருகிய வுளத்தொடு மெழுந்து
நின் றுவான் முனிவ ராங்கணோ ரைய
நீத்திடக் கடாவின ரன்றே. 78

முனிவர ரெழுவர் கேட்டுளந் தூய்மை
முற்றின ரெனமொழிந் தனையம்
முனிவரர் யாவ ரத்தகு காதை
மொழிந்தருள் காலமெக் காலம்
கனிவருந் தீஞ்சொற் கட்டுரை யென்னக்
கடாவுத வியமுனி வரர்க்குப்
புனிதவெண் ணீற்றுச் சூதமா முனிவன்
போக்கரு விடையெதிர் கொடுக்கும். 79

வேறு

கறங்கு மணிவெண் டிரைமுகந்த
கமஞ்சூற் கொண்ட லெனவரவின்
உறங்குங் கடவுண் மலர்க்கமல
வுந்தி யெழுந்த நரைத்தலையோன்
பிறங்கு பகலிற் பதினல்வர்
பீழை பெருக்கு மிடிகடியா
அறங்கள் கிளரத் தனிச்செங்கோ
லளிக்கு மனுக்க ளுளரவருள். 80

முந்து மரசன் சுவாயம்பு
பிரிய வரதன் முதனல்வர்
மைந்தர் தேவர் யாமாதி
மகவா னரியே யுரிசிமுனி
சந்த முலையா கிருதிதனைத்
தழுவி யுயிர்த்த சுயக்கினன்மால்
புந்தி நுனித்த புலத்தியனை
முதலோர் பொருவி லெழுமுனிவர். 81

---

78. இருந்தவா என்னை என்றென்று.

80. பிறங்கிப் பகல் எனவும் ஆம்.

81. யாம்: தன்மைப்பன்மை. என்றது சூதர் என்க.

தோற்று மிரண்டா மனுவேந்தன்
சுவாரோச் சிடனே யவன்மைந்தர்
ஆற்ற றுயுமத் தாதியர்க
ளமரர் திவிடி தனேமுதலோர்
வீற்று மகவா னுரோச்சனன்மால்
வேத சரசு திவிடிதைபெற்
றேற்ற விபுபு முனிவரர்க
ளூர்ச்சத் தம்பன் முதலெழுவர். 82

மூன்று முறைவேந் துத்தமனே
மூரிப் பவனன் முதலானோர்
ஆன்ற மைந்தர் சத்தியன்முன்
னோர் சுரர்சத் தியசித்து
வான்ற னிறைமால் சூனுருதை
மறைதேர் தரும னெனுமுனிவற்
கீன்று வளர்சத் தியசேன
னெழுவர் பிரம தாதிகளே. 83

பெருமை பிறங்குஞ் சனற்குமரன்
பிரச மலர்த்தாண் முடிசூடி
அருமை மறையந் தத்தெளிவா
யமைந்த சைவ சித்தாந்தம்
ஒருமை யன்பிற் கேட்டுணர்ந்த
வுயர்ந்த முனிவ ரிவர்கண்மர்
இருமை வழங்கு மிதுகாறு
மியைந்தோர் தமையு மினிக்கேண்மின். 84

நடலை யுலகத் துயர்துரக்கு
நாலா மனுத்தா பதன்மைந்தர்
விடபன் முதலோர் சத்தியகன்
முதலா னோர்விண் ணவர்மகவான்

82. மத்தாதியர்கள். ஆற்றல் துயும் - பிறர் வலிமையைக் கொடுக்கும்படியான. மால் விபுபு. வேதசரசும், திவிடிதை என்பவளும்.

84. வேதமுடிவின் தெளிவாகி.

அடல்வல் வினைதீர் திரிசிகன்மா
லரினி யரிமே தசுபயந்த
படர்முற் றிரிக்கு மரிமுனிவர்
பழிப்பில் சோதி முதலானோர். 85

விரித்த வீண்டை விண்ணவர்கள்
விதுர்த னுயிர்த்தோ ரொழுக்கனைத்தும்
தெரித்த வேத நூன்முழுதுந்
தெவ்வா தோப்பி மடமூழ்கி
வரித்த கழற்கா லவுணர்நனி
வருத்த வாழ்நாள் வல்லையவண்
இரித்து ளார்வை துருதேய
ரென்னும் பெயரு மிவர்க்காகும். 86

ஐந்தா மனுவேந் தரைவதக
னூன்ற மைந்த ரருச்சுனனை
முந்தை யுடையோர் பூதரதன்
முதலோ ரமரர் சதக்கிருது
மைந்து மிகுந்த விபுமால்
வளைத்தோட் சுருபி சுப்பிரன்பால்
அந்தில் வரும்வை குண்டனிர
ணியரோ மனையா தியர்முனிவர். 87

தகைசீ ராறு மனுச்சக்கு
தந்தோன் சாக்கு தப்பெயரோன்
புதல்வர் புருடன் முதலானோர்
புலவ ராப்பியர் கண்முதலோர்
மதவிந் திரன்மந் திரதுருமன்
வயிரோ சனற்சம் பூதிபுணர்ந்
துதவு மசிதன் மான்முனிவ
ரவியன் முதலா முறுவர்களே. 88

---

85. உலகத்தின் துயரைத் துரக்கும்படியான.

86. வேதநூல் முழுவதையும் கைக்கொள்ளாது ஒழித்து: வைதுருதேயர் - ஒரு பகுதியார். அவர் இவரே என்பது.

87. அரைவதகன்;

88. சங்கு தந்தோனாகிய சாக்குதப்பெயரோன். சம்பூதி வயிரோசனனைப் புணர்ந்து. அவியன்.

ஈண்டை விளம்பு முனிவரரு
மிருள்கால் சீத்து நிலவெறிக்கும்
மாண்ட திருநீற் றுருக்கவயம்
வயங்கு மணிமே னியிற்றிளைப்பப்
பூண்ட சிவமுள் ளகந்திளைப்பப்
பொலிந்த குமரன் றனையடைந்து
மூண்ட விழைவி னடித்தொண்டு
முறையிற் புரிந்த நெறியோரே. 89

துரிசி லேழா மனுவைவச்
சுதனுற் சாதத் தேவர்களே
பரனே சர்வ வித்தமனே
பயின்மா னுடரே கசேருவ்வே
தரும னிக்கு வாருவே
சையன் றிருட்ட நாபன்னே
மருவும் விடபத் துவசனென
மைந்தர் பதின்ம ரவன்றனக்கே. 90

வெய்யோன் விசுவ தேவர்வசு
விடப மருத்து வசுவனியான்
னையா வமரர் புரந்தரனு
னுக நகரஞ் செகிற்பரித்தோன்
எய்யா விறன்மால் காசிபனுக்
கெழுந்து பரந்த களபமுலை
மையார் தடங்க ணதிதிமணி
வயிறு வாய்த்த வாமனனே. 91

வினையில் காசி பன்வசிட்டன்
விசுவா மித்தி ரன்சமதக்
கினியத் திரியே கவுதமனே
கேழில் பரத்து வாசனென

90. வைவச்சுதனுல்: ஆல் அசை. சாதத்தேவரும் - பிறந்த தேவரும்; சையன்.

91. வசுவனியால்: ஆல் அசை. புரந்தரனுல்: ஆல் அசை. செகில் - தோள்.

முனிவ ரெழுவ ரிதுகா று
முறைசெய் மனுவே ழுனுண்மூன்றும்
மனுவந் தரத்து முனிவரென
வகுத்தா மறிமோ வெனக்கிளந்து. 92

கூற்ற நடுங்கு மருஞ்சாயக்
கோணை யாற்ற லிருந்தவத்திர்
தோற்ற மரணங் கெடவின்பத்
துறையு ளழுத்து மருளிரண்டில்
தேற்று மமல மொழிமயமாய்த்
திகழு மருளிம் மான்மியமே
போற்றி யினிது கேண்மினெனப்
பொருவில் சூதன் சொலப்புக்கான். 93

புராணவரலாற்றுப்படலம் முற்றிற்று

ஆகத்திருவிருத்தம் — 441.

---

92. எழுவர் ஆகும் என முடித்துவிடுக. மூன்றும்மனு முடிவில் உள்ள இம் முனிவர்கள்தாம் சனற்குமாரரிடத்துக் கேட்டவர் என வகுத்தாம். 77 ஆம் செய்யுள் முனிவர்.

93. அருள் இரண்டு - சொல்வடிவாயுள்ளதும், சொற்பொருள் வடிவாயுள்ளதும் என்னும் இந்த இரண்டுமென்க. இனி, புராணரூபமும் மந்திரரூபமும் என்பாரும் உளர்.

வீராட்டகாசப்படலம்

பூமணமு முடலுயிரும் பொன்விழியு
மெனும்புணர்ப்பா ருயிர்கள் பண்டு
தோமடையப் பார்த்திருந்து மெண்குணத்திற்
றிரியாது துகடீர் பாகம்
தாமடைய வெவ்வுயிர்க்கு மொருங்குறுத்தா
திருந்துமொரு சலமு மில்லா
வீமலிபொற் கடுக்கையந்தார் வீராட்ட
காசன்விரை மலர்த்தாள் போற்றி. 1

வேறு

கன்மிசை மஞ்ஞையுயி ருந்துக லாபம்வி ரித்தாட
வின்மணி சிந்தரு வித்திர டாழ்ந்துவி ழுந்தோற்றம்
முன்னிய சேடனம் மஞ்ஞையை யஞ்சிமு ரன்றெல்லை
தன்னுல கெய்துறு தன்மைத குங்கயி லாயத்தில். 2

மங்கல வெள்ளைவ ழித்தும லர்த்துகண் மேலட்டிக்
கொங்குயிர் தாமம ணிந்துகொ ழும்புகை மிக்கார்த்தி
வெங்களி நல்குவி தானம டுத்துவி ளக்கேந்திப்
பொங்கிவ ளங்கள்பொ லிந்தொளிர் மண்டப வுட்சூழல். 3

தோற்றிய வாறிரு மூன்றுறு தத்துவ சோபானம்
பாற்றுதை யப்பயில் வித்தப சும்பொன ணைச்சேக்கைக்
கோற்றொடி மங்கையி டத்திலி டைக்கும ரப்புத்தேள்
வீற்றிருப் பப்பரன் வீற்றிருந் தானொரு நாண்மேனாள். 4

---

1. பொன் - சூரியன். புணர்ப்பு - கடவுளாகிய தன்னோடுள்ள இயைபு. சலம் - கோபம்; ஈண்டுப் பாரபட்சம். தோம் - ஆணவமலம். பேரருள் உடைமையில் திரியாது. எண் குணங்களாவன: தன்வயத்த னாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றல் உடைமை, வரம்பிலின்பம் உடைமை என்பன. பிறவாறும் கூறுப; அஃது ஈண்டுப் பொருந்தாது.

3. சாணம் மெழுகுதற்குப்பதிலாக வெள்ளைபூசி. வெள்ளை - சந்தனம்.

4. தத்துவம் முப்பத்தாறு.

அத்தகு செவ்விய றிந்துவி னைச்சம மாய்க்கன்மம்
ஒத்தத வத்தினன் முத்தியை வேட்டவு ளத்தானப்
பித்தினன் சந்திர காசனெ னப்பெயர் பூண்டுள்ளோன்
மெய்த்தக ணங்களுண் மிக்கவ னுங்கண்வி ரைந்துற்றான். 5

எட்டினு மைந்தினு மெய்தவ ணங்கியெ ழுந்தூறி
உட்டினை யார்வமு ருக்கவெ யிற்கணு றும்வெண்ணெய்
பட்டதை யென்னநெ கிழ்ந்துவி ழிப்பனி நீர்வார
மொட்டுறு கஞ்சமெ னக்கைசி ரத்துமு கிழ்த்தோதும். 6

வேறு

வெளியூ டுவிரா யவளிச் சலமவ்
வெளிசற் றும்விரா வுதலின் றதுபோல்
விளியா துவிரா யவுயிர்த் தொகுதி
விரவும் வினையின் பயனே துமுறு
ஒளியே யுலகெங் குநிறைந் துணர்வுக்
குணர்வா கியவின் பநெடுங் கடலே
தெளிமா தவருள் ளகம்வி ளரிய
தேக்கா ரமுதே சரணஞ் சரணம். 7

அருவென் றுருவென் றருவோ டுருவென்
றறையும் பலபே தமுமா யவைமற்
றொருவும் பொருளா யபரா பரனே
யுடனின் றுயிரைத் தொழிலிற் புகுவித்
திருளும் வினைமாய் வினெழுந் தொறுமங்
கெய்யா மையருத் துமருட் செறிவே
தெருளும் புலனில் லவரெய் தரிய
தேக்கா ரமுதே சரணஞ் சரணம். 8

காட்டா கியநின் னருளுண் மையினைக்
கருதா துபுசிப் புவினைத் திறமே
வேட்டா ழுமுயிர்க் கவையாய் மிடையா
மேன்மே லுமுயர்த் தருள்வித் தகனே

---

7. தன்னோடு விராய வாயுவின் இயக்கத்தை ஆகாயம் பற்றுதவாறு போல, கடவுளாகிய தன்னோடு விராய உயிரின் வினைப்பயனைத் தானடையாத ஒளியே என்க. சலம் - சலித்தல்.

8. ஓர் வினைப்பயன் முடியுந்தோறும் உயிர் அறியாவிதம் மற்றோர் வினைப்பயனை அருத்துகின்ற. எய்யாமை - அறியாமை.

வாட்டா ணவம்வாட் டியுடற் பொறைவிண்
மணிமுன் னர்விளக் கெனமாய்ப் பவனே
சேட்டா ரணமுந் தெரியா தயருந்
தேக்கா ரமுதே சரணஞ் சரணம். 9

மட்டார் குழன்மங் கையிடம் பிரியா
வரதா மதனு சகரா சரணம்
ஒட்டா தபுலிக் கலையோ டுதிசை
யுடையாய் பலவும் முடையாய் சரணம்
தொட்டா தவர்வாட் கணுகுத் தெயிறு
தொலைவித் தபவித் திரனே சரணம்
கட்டார் தருகொன் றைமணங் கமழுங்
கயிலைக் கிரியாய் சரணஞ் சரணம். 10

அந்திப் பிறைகு டியசெஞ் சடிலத்
தழகா குழகா சரணஞ் சரணம்
சந்தப் புரமூன் றுமொருங் கவியச்
சமரா டமரா சரணஞ் சரணம்
பந்தப் படுமென் னையெடுத் தருளும்
பவனே சிவனே சரணஞ் சரணம்
கந்தப் பொழில்சூழ்ந் துவளங் கதுவுங்
கயிலைக் கிரியாய் சரணஞ் சரணம். 11

சொல்லார் பொருளேசரணஞ் சரணம்
சுடருட் சுடரே சரணஞ் சரணம்
ஒல்லா ரிருளே சரணஞ் சரணம்
உற்றோ ரொளியே சரணஞ் சரணம்
வெல்லா வயவா சரணஞ் சரணம்
விடையா விடையா சரணஞ் சரணம்
கல்லா லமர்வாய் சரணஞ் சரணம்
கயிலைக் கிரியாய் சரணஞ் சரணம். 12

---

9. இருளைக்கெடுத்து ஒன்றைக்காட்டுதலிற் காட்டென்றார். காட்டுப் பொருளாகிய என்க; உதாரணம் எனினும் அமையும். வினைத்திறப் புசிப்பே வேட்டு என்க. காட்டாய் உள்ளது அருள் என்க.

10. பவித்திரம் - சுசி. நாசம் செய்பவனே. கரம் - செய்தல். கட்டு ஆர்தரு, கள் தார்தரு கொன்றை.

12. பிறரால் வெல்லமுடியாத வயவா. விடையா - நீங்காத.

வேறு

என் று தோத்திரமி யம்பிய விருந்த வன்முகம்
நன் று நோக்கிவிழை வென்ன து நவிற் று கென லும்
கொன்றை மாலிகை மிலைத்தசடி லக்கு முகனார்
வென்ற பாதமலர் மீட்டுமுடி கோட்டி மொழிவான். 13

வேத மாதிபல வும்பொருள் விளக்கி யிருளின்
ஏத மோதியெனை யின்னருளி னாண்ட ருளினை
ஆத லாலடைவ தின் றுகுறை யாதி மறைமுன்
ஓது கின்றமொழி யின்பொருளு ருமை யலதே. 14

மும்ம தக்கலுழி வண்டுதிறை கொள்ள முடுகுங்
கைம்ம லைக்கடவுள் போலமகன் மைக்க ணிறுவிச்
செம்ம னல்கினையெ னக்கிதுதெ ளித்த ருளுதற்
கம்ம வையமிலை யென் றுண ரு ளால ணவினேன். 15

திருவு ளக்கருணை செய்திதுதெ ளித்த ருளென
இருண்ம லப்பகையி டிக்குமற வாழி யருளும
பொருவி லாகமம றைத்திரள்பு ராண முழுதாய்
மருவு மக்கரமொ ரைந்தனொடு மானு மிதுவே. 16

ஐந்தெ ழுத்துமொரு சார்மொழிக ளைந்தெ னவுமாம்
மைந்து பெற்றவெமை யேமுழுது ணர்த்தி வழுவா
தைந்தெ ழுத்துமொழி யொன்றெனவ ழங்கி வருமால்
மைந்த தேர்தியென வான்பொருடொ குத்த ருளினான். 17

எண்ணில் பல்பவ மிருந்தவமு ழந்த பயனால்
கண்ணெ னாதநவை யில்பொருளு ணர்ந்து பெரிதும்
உண்ண யந்துகண நாதனுவ கைக்க டலினான்
அண்ணல் கூறினவ கஞ்செவியி னார்த லொடுமே. 18

ஞான சத்தியுரு வாதலி னலத்த குமரன்
ஆன ளித்தபொரு ளன்றியத னுட்பொ ருளெலாம்
தான றிந்தறிக லானென விருந்த னனரோ
போன தப்பொழுது பின்னரொரு போது முருகன். 19

---

15. என்னை மகன்மைக்கண் நிறுவி. செம்மலே என விளியாக்குக. நல்கினை - அருளினாய்.

16. இது - பிரணவம்.

19. ஆன் - அவ்விடம்.

தந்தை தாய்புடைய கன்றுகயி லைத்த டவரை
அந்தில் வைகலுறு மந்திரமி ருந்த ருளுநாள்
எந்த வானவரு மிந்திரனு மாலு முமைசேர்
உந்தன் வார்கழலி றைஞ்சவவ ணெய்த லுறுவார். 20

வைத்த வேலிளவ ருட்டுணைவ ணங்கி யருளான்
மெய்த்த வன்பின்விகிர் தன்சரண மெய்தி னர்களால்
பைத்த வெண்டிரைநெ டுங்கடல்ப ரந்த வுலகின்
கொத்து யிர்த்தவனு மாங்கவரு டன்கு றுகுவான். 21

கற்றல் கேட்டலொடு காழறுபெ ருந்த கைமையும்
முற்றி னுருமட ரூழினைமு னிந்த மைவரே
அற்றை ஞான்றிளவ லென்றுளம கந்தை யெழலும்
உற்று வந்தனைபு ரிந்திலனொ துங்கி னனரோ. 22

கோட்டி ளங்கதிர்ம திப்புனல்கு ளிக்கு முடியோன்
வேட்ட நல்வரம ளிப்பவண் மீண்ட பொழுதும்
ஓட்டை நெஞ்சினனி றைஞ்சிலனொ ழிந்தி டலுமவ்
வேட்டை யூழினனி கந்தமையு ளத்தின் மதியா. 23

அண்ட கோடிகளை னைத்துமவை யாக்கி நிறுவும்
அண்ட ரோடெளித முற்றுமெரி வாய்க்க ணுதவிப்
பண்டு போலெவையு மாக்கியளி பாய்த்தும் விழிகள்
மண்டு கோபவெரி யானனிவ யங்கி மறல. 24

தந்தை முந்திளவ றன்னுழிய லாது பிறர்பால்
மைந்தி னுற்றணிவி லாதவிறல் வாகு வைவிளித்
திந்த நான்முகனி ரும்புவன மாக்கு மெறுழின்
சிந்தை வைத்திடுசெ ருக்கொடுத ருக்கி வருவான். 25

---

20. உத்தன் - தலைவன்: மெலிந்தது.

23. ஏட்டை - இளைப்பு: இளைத்த ஊழ் எனவே நல்லூழ் இல்லாத என்பது பெறப்படும்.

24. மறல - விரோதிக்க.

25. தந்தையிடத்தும், முந்திளவலாகிய விநாயகரிடத்தும், தன்னிடத்துமல்லது.

எம்மை யேதுமுணர் கின்றிலணி யம்பு மறையும்
மும்மை வையகமு முன்றொழுதல் கண்டு மறிவு
செம்மை பெற்றிலனு டற்றவரு தீவி னையினைக்
கொம்மை கொட்டினன்வி ரைந்தெதிர் கொணர்ந்து விடுதி.

என்றி டிக்குலமு லம்பியதெ னக்க டவலும்
நன்று நன்றெனவ ணங்கினன டத்த லதுகண்
டன்று டங்குபடர் தேவர்முனி வோர ளைவரும்
மன்ற நீத்துயிரை வெற்றுடல ராகி மருளா. 27

மைந்தன் றந்தையையி கந்துமுன மாய்ந்த னமெலாம்
தந்தை மைந்தனையி கந்துவரு தண்ட மொருவி
உய்ந்து போவதுள தாங்கொலென வாயி னுரையார்
சிந்தை யாலுணர நோக்கினர்சி தர்ந்து பெயர்வார். 28

அங்கி காலுமட லாழியிது போது மிகவின்
தங்கு மேயெனவ யர்ந்துதனி மாயன் மறையச்
செங்கை வச்சிரவ லாரிதிகழ் கோகி லவுரு
இங்கும் வந்திறகி றுங்கொலென மாழ்கி யிரிய. 29

நெரித்த வாண்முகநெ ரித்தினுமி றக்க வருமே
தெரித்தி லேமெனம றிந்துமதி திக்கி னடைய
வரித்து வைத்தனவெ யிற்றுநிரை வாட்க ணுகுமேல்
தரித்தி லேமெனவ ருக்கர்தளர் வோடு சுழல. 30

அடர்ப்ப வண்மிடின ருந்துதியெ டுத்து நவின்மின்
சுடர்ப்ப தங்களில்வி ழுந்துதுணை சேர்ந்து நிமிர்மின்
விடுக்கு மென்றுவிரி நாவொடுக ரத்தி ரளினை
மடுத்த காதலினி யக்கியெரி வல்வி ரைவுற. 31

மற்றை வானவர்கண் மாதவர்கள் யாரு மறிவின்
முற்று நின்னடிமை யென்றுமுறை தாழ்ந்து யிரையாம்
பெற்று மீடுமென வோடவொளி பில்கு மவுலிக்
கொற்ற வீரனயன் முன்கைபிடி கொண்ட னவினன். 32

---

26. தீவினையை அழைத்தனன். கொம்மை கொட்டல் - கைதட்டி அழைத்தல்.

29. இகவு - நீக்கம்.

30. வரித்து - வரிசைசெய்து.

வேறு

வேத நான்முகனை மேவி நிற்றலும்
கோதை வேல்வலங் கொண்ட கொற்றவன்
போதின் மேயினோய் புவன மாக்குவோய்
யாதின் மிக்குளை யியம்பு கென்றனன். 33

முனிவ னின்னண முதல்வன் கூறலும்
தனிதி னின்றவச் சதுமு கத்தவன்
பனியு ளத்தினன் பகர்த லொன்றிலான்
புனிதன் மேலிது புகறன் மேயினன். 34

வாழ்வு மிக்குளை யென்னில் வைகலும்
வீழ்ம னக்குறை மெத்த வுள்ளுபு
போழ்ம திச்சடைப் புனித னெந்தைமுன்
தாழ்தல் செய்திடச் சார்கு வாயலை. 35

வலன்மி குத்தியே னென்னல் வந்தவன்
குலவு மெம்பியாற் கோட்பட் டீங்குறீஇ
அலம ராவுள மலமந் துத்தரம்
சிலவு நல்கிடாச் செய்கை பெற்றிலாய். 36

இன்ன தன்மையா லீடி லெண்குணம்
மன்னி யெங்கணு மலர்ம ணம்மெனத்
துன்னி யாருயிர்த் தொகுதிக் கைந்தொழில்
முன்னி யாற்றுமம் முதல்வ னீயலை. 37

உலகு யிர்ப்பதி னுயர்ந்து ளேனெனில்
அலகி லண்டமு மாக்கு நின்னையும்
குலவு மாலையுங் கோணை வன்கணத்
தலைவர் தம்மையுந் தந்த தில்லையே. 38

தஞ்ச மின்றியுஞ் சமைக்க வல்லையேல்
எஞ்சு நின்றலை யிழைத்துக் கோடிமுன்
துஞ்சி னைய்கொலோ தோற்ற நின்னதேல்
விஞ்ச வின்னினிக் காண்டும் வீறலை. 39

---

34. உரிமை என்பது உரிது எனவும், அருமை என்பது அரிது எனவும் நிற்பதுபோலத் தனிமை என்பது தனிது என நின்றது.

38. அண்டங்களை ஆக்கும் நின்னையும்.

39. துஞ்சினைய்கொலோ - மறந்தாயோ.

சகல ரும்பலர் சத்து வக்குணம்
தொகுவர் நீயதிற் ரேற்ற முற்றிலை
இகுமி ராசதத் திழித மோகுணம்
புகுநர் நிற்புறங் கண்டு ளாருளார். 40

எவற்றி ஞனுமிங் கென்னை யாணவத்
தவற்றி னைத்தெறுந் தத்து வத்தினைக்
கவற்ற லின்றியே கண்டு வல்வினை
துவற்றன் மேலெனத் துணிந்து ளாயெனில். 41

தத்து வத்தினைத் தவவி ளக்குவ
உத்த மத்துயர் மறைய வற்றின்முன்
வைத்த சொற்பொருள் வழங்கு மாற்றநீ
செத்து நிற்றியேற் றெறுதற் பாலையே. 42

வேறு

இன்ன வாறெலா முயிர்த்திறக் கேட்டினை யெடுத்துப்
பன்னு மேல்வையும் பணிந்திரந் திலன்பரி வுழப்போர்
என்னும் வாலறி வெத்திறத் தூட்டினு மெய்தார்
கொன்னும் வாயுளான் மூகைமைக் கொள்கையே மிக்கான். 43

செதுப்ப முந்தலை மாலையந் திரட்கண நோக்கி
வெதுப்ப வெந்துய ருள்ளகம் வெச்செனப் புடைத்து
நொதுப்பில் வன்சிறை புகுத்துமி னெறிறப வென்றுன்
மதுப்பொ லங்தொடைக் கடம்பணி மார்பினன் றெழித்து. 44

---

40. மும்மலமுடைய சகலரும் பலர் என்க. இகும்: அசை.

41. துவற்றல் - வற்றுவித்தல்.

42. செத்து - ஒத்து; ஈண்டு அறிதன்மேற்று. முதற்செய்யுளிற் கூறப்பட்ட வல்வினையைத் தெறற்பாலை ஆவாய் என்க.

43. என்னும் - எப்படிப்பட்ட. கொன் - பயனின்மை. உத்தரம் சொல்லாமையின் வாய் என்றொழியாது 'கொன்னும் வாய்' என்றார்.

44. செது - குற்றம் பொருந்திய; இறந்த என்பாரும் உளர். நொதுப்பு - அழிவு; இளக்கம் எனினும் அமையும். நொறில் - வலிமை. வெச்சு - விரைவு. தலைமாலைத் திரளை அணிந்த கணங்களைப்பார்த்து. உள்ளகத்தைத் துயரானது வெதுப்ப என்க. செதுக்கல் என்பது முதனிலை யாக நின்றது.

குருதி கொப்பளித் தருவியாய்க் குவவுத்தோட் குதிப்பப்
பொருவில் பன்மணி மோலியிற் பொடிபட்டுப் பொழியத்
திருவு மற்றவன் றேசுநற் சிருட்டியுஞ் சிந்த
உருவ வன்கணம் விரன்மடித் தோச்சின சிரத்தில். 45

எருக்கி வன்கரம பிறையெனப் பிடர்கொடுத் தெற்றி
மருக்கி ளர்ந்ததார் மணிவடம் வழித்தலைச் சிந்தத்
தருக்க ழிந்துநீர்த் தாரையில் விழிச்சுடர் சாம்பப்
பொருக்கெ னக்கொடு போந்தருஞ் சிறைப்புகு வித்த. 46

உளைய வேற்றவ ரொறுத்தூழி யஞ்சலென் றேரும்பும்
களைக ணாகிய தந்தைதாய் கடிமழ வென்ன
விளைவ தோர்கிலா விரிஞ்சன்வே றொருதுணை யின்றி
அளைய ருஞ்சிறைப் பெருந்துயர்த் துணையொடு மாழ்ந்தான். 47

பாம்பின் வாய்ப்பல நாட்படு பரிதியு மறிவங்
கோம்பு முள்ளமோ டுலப்பினுட் கருப்படு மழவும்
கூம்பு றுதுபன் ளுள்விரி கங்குலின் விழியும்
தேம்ப ருஞ்சிறைத் திசைமுகத் தவனிக ராஞன். 48

கணவ ஞர்சிறைப் படுவது கருதிஞள் கொல்லோ
தணவு றுதவ ளுவகந் தவிர்ந்தவொப் பனையாள்
இணர்கு லாந்தருத் தாமரை யிசையிவை மற்றும்
அணவி வாழ்தரு மகமென முன்லரே யமைத்தாள். 49

விரகு மேவரி னரகமுந் துறக்கமே வெதிர்க்கும்
நரக மேவிர கில்லுழி நயத்தகு மிடமும்
அரவ மாலையன் கயிலையு மலரவன் றனக்குப்
புரவி லாத்துயர்க் கவதியில் புவனமா கியதே. 50

---

46. எருக்கி - அடித்து. எற்றி - தள்ளி. கண்ணொளியானது நீர்த் தாரையில் சாம்ப.

47. கடி - நீக்கிய. சிறையிலே துன்பமாகிய ஓர் துணையோடும்.

48. பூர்வ ஞானத்தோடு கருக்குழியிற்படும் உயிர்க்குத் துன்பம் தோன்றும் ஆதலால், நல்லறிவைப் பாதுகாத்த உள்ளத்தோடு எனப் பொருளுரைக்க. அறிவு என்றது பூர்வஞானத்தை. தேம்பு - மெலிவு.

50. விரகு மேவரின் - அறிவு மேவிஞல். வெதிர்க்கும் நரகம் - செவிடுபடுத்தும்.

தேவ ராயினு ரின்பமே நரகினிற் றிளைக்கும்
பாவ ராயினர் துன்பமே படரிரு பயனும்
பூவ ராயின ரேநுகர் வாரெனப் புகல்வார்
காவ ளுன்முக னிடும்பைநோய் கண்டிலார் போலும். 51

மூவ ரென்றுட னெண்ணிடு முதன்மையு முனிவர்
தேவர் யாவரும் பணிபுரிந் துயர்தரு திருவும்
நாவி யங்குழன் மாதரார் கலவியி னயப்பும்
ஆவ விற்றவா றெனவிலா வித்துள மயர்வான். 52

கறுவு கொண்டிடி னுலகெலாங் கவிழ்த்தருள் கொள்ளின்
நிறுவு மாற்றன்மா தவர்நெடுந் தேவர்யா வரையும்
பெறுதல் வல்லயான் பீழையிற் பிணையுமா செய்தோன்
சிறுவ னேயென நினைதொறுந் தெருமரா நின்றான். 53

தன்னின் மேம்படு மாற்றலர்ப் பிழைப்பது தகாதால்
அன்னர் தம்மின்மேம் பட்டவ ருண்மிகுந் தூழியும்
கன்னி பாகனார் பேரருட் கடலினிற் றிளைத்து
முன்னி னேற்கிங்க ணிதுவந்து முடிதலி னென்பான். 54

போது தவ்வெனக் கேண்மையர் தவ்வெனப் புல்லும்
மாதர் தவ்வென மைந்தர்க டவ்வென வானில்
கோதில் சத்திய வுலகந்தவ் வெனவென்றன் கொள்கை
யாதுந் தவ்வென விறுத்தலும் நன்றென விளைவான். 55

பெருமை தக்கபிற் சிறுமைவந் தடுப்பினப் பிறப்பை
வருபி றப்பினு ளொன்றென வைக்கவும் படுமே
ஒருசி ரம்பிரா னுண்கல னுக்குநாட் செல்லல்
முருக னுய்த்ததற் கிடும்பிரை யெனமுன்னிக் கரைவான். 56

நெடிய மாயனுந் தலையொன்று நிலத்திடை வீழ்த்து
முடிவு பெற்றனன் பன்முறை யிளிவர முயன்றான்
கொடிய பால்வினை போல்வதூஉ மெவர்தமைக் குறுகா
தொடிதல் பெற்றதென் றாழுடை வலியையு நினைப்பான். 57

---

52. விலாவித்து - அழுது புலம்பி.

54. மேம்படும் ஆற்றலர்.

55. தவ் - பொலிவு அழிவு. தவ்வென - பொலிவு அழிய.

56. படுமா? படாது; எனவே, ஓர் பிறப்பன்று என்பது.

கற்றல் கேள்விநன் றுடையவர் தமக்குமூழ் கலக்க
முற்று மேல்வையி லதன்பய னறிவுமுற் றாமல்
செற்று றுத்துமீ சன்றொழிற் றிறத்தையுஞ் சிந்தித்
தற்ற முற்றவ னாற்றவே துவுஞ்சிறி தறிந்தான். 58

உலக மாக்கிடு முதற்றொழிற் குரியவ னிமைப்பின்
அலகில் காலங்க ளருந்துயர் படும்பிழைப் பிழைத்தால்
புலனி லாதெமைப் போல்பவர் பொழுதெலாம் பிழையே
பலவு மாற்றுவார் பருவருந் துயரென்று பரிவார். 59

தீய பாவங்க ளளற்றன்றித் தீர்வுகா ணாதால்
ஆய பல்வகை யளறென்ப வருந்துய ரப்பால்
மேய நான்முகன் வழிபடா வறன்கடை விளிக்கும்
தூய தண்டமுங் கருணையே யன்றுகொ றுறவீர். 60

ஆர ணன்றுயர்க் கவதியின் றதுநிற்க விப்பால்
பூர ணன்புகர் துமித்தருள் வழங்கிடும் புனித
கார ணன்புவ னங்களை யளிப்பது கருதிச்
சீர ணங்கிய வேங்கடச் சிலம்பினைச் சார்ந்தான். 61

வேறு

குளிர்மரம் பொந்தாகக் கோட்டுமண் கொளும்வேழம்
தெளிபளிக் கறைநாப்பட் டிகழ்தன துருநோக்கிக்
களிறென வெதிர்பாய்ந்து கதிர்மருப் பிடையிறலும்
ஒளிர்மணி யிளமதியி னொழுகமிழ் தெனவுகுமால். 62

---

58. ஊழானது கலக்கும்பொருட்டு முற்றும் சமயத்தில் அக்கல்வி கேள்விகளின் பயனை அறிவு அடையாதபடி தடைசெய்து அவ்வூழை உறுத்துகின்ற ஈசன்; எனவே, பிரமன் நான் கற்றவனாயிருந்தும் அதன் பயனை அடையாதபடி ஊழ் தடுத்தது என்று உணர்ந்தான் என்பது. செற்று - தடுத்து.

59. இமைப்பொழுதில் இழைத்தால் என முடிக்க. பரிவார் நீக்குவார்.

60. அளறென்ப அருந்துயராகும். அப்பால் மேய - அத்துன்பத்தின் பகுதியை மேவிய. அளறு துன்பப்பகுதியை மேயனவாம் என்றலும் ஒன்று.

62. கோட்டுமண் கொளல் - குத்தல்.

குரங்கிய மலர்ச்சாகைக் கோடம லதிங்கத்திண்
மரங்கொலு மதவேழ மதர்த்தெழு மயக்கத்தால்
உரங்கிள ரரசென்று துடன்மடங் கலின்மார்பம்
அரங்கொலுங் கூர்ங்கோட்டி னழுத்துபு நிமிர்ந்தோச்சும். 63

தோற்றுதி வள்ளுகிரு மவைதுறு மியதாளும்
கூற்றெனக் கொளல்வாய்த்துக் கொம்மென வெழுவேங்கை
ஏற்றுவன் னுதிக்கோட்டி னிமில்விடை குலைப்பநினைப்
பாற்றுத லில்லையெனப் படர்தெரிப் பனபோலும். 64

குடநிகர் செருத்தற்றிண் கோட்டிள வனமேதி
இடவிய வறைநின்று கன்றினை யினிதூட்டிப்
படர்தர வுகுதீம்பால் பசையறத் துவர்ந்ததனைக்
கடறமர் வாழ்க்கையினர் கணிச்சியின் வௌவுவரால். 65

மானின முடல்சிந்த வால்வெடித் தெழுசிங்கம்
ஊனிவர் கும்பத்தி னூறுசெய் நெய்த்தோரும்
கானிவர் மதமூன்றுங் கதிர்மணி வரன்றொழுகித்
தேனிவர் வரையெல்லாஞ் சித்திரித் தனபோன்ற. 66

பாரித்த வெறுமெருத்துப் பானிற வுளைவயமா
வாரித்த வயிற்குவவு மத்தகத் துகுமணியும்
சீரித்த மணிமருப்புஞ் செற்றுபு சுவையமிழ்தம்
பூரித்த மதிகோடி புணர்ந்தெதன வொளிவீசும். 67

---

63. அதிங்கமாகிய மரத்தைக் கொம்பினால் குத்திக் கொல்லும் வேழம். அதிங்கமரத்தடியில் யானை செல்லுமாயின் அதற்கு மயக்க முண்டாம். குரங்கிய - அசைகின்ற. அதிங்கம் - அதிமதுரம்.

64. தோல் வாயிற் கூரிய நகமும். துதி - வாயில். துதி - வாய்; கூர்மை என்பாரும் உளர். வேங்கையை ஏற்று. வேங்கையானது விடையை நோக்கி இனி உமது குலத்தைப் பாற்றேன் என்று சொல்லும்படி விடையானவை அதற்குத் துயர் செய்தலைத் தெரிப்பன போலும்.

65. ஊட்டிப் படர்தர - ஊட்டிச் செல்லாநிற்ப. துவர்தல் - காய்தல். கடறு - காடு.

66. வெடித்து - அடித்து. மான் ஈண்டு யானை. வெடிபோதல் - தாவுதல்.

67. எருத்தில் வெண்மயிரினையுடைய. வாரித்த - தடுத்த; ஆதரித்த எனக் கொண்டு சத்தித்த இடத்தில் எனப் பொருள்கூறுவாரும் உளர்.

ஆணடி நிழலோம்பி யமர்துயின் மகண்மாவை
ஏணமர் வரைச்சிறுவ ரெயிற்றிய ரெனவண்மிக்
காணுநர் காணுன்கிற் கன்னிய ரெனவியவாப்
பூணுறு பாசத்தாற் பூட்டினர் போதருவார். 68

புழுகொடு கத்தூரி புள்ளுவர் பலர்கொண்மார்
ஒழுகிய வரையெங்கு முலம்பிய கரிநாடும்
முழுவலிச் சீயத்தின் முழக்கினுக் குளமஞ்சி
விழுமவை யெளிதாக வெஃகினர் பெயர்த்தெழுவார். 69

ஏலமொ டிலவங்க மிளகுபச் சிலைமஞ்சள்
வாலிய கப்பூர மணத்தகுங் குமஞ்சாந்தம்
ஆலிய வகில்வாழை யாசினி முதலாகச்
சாலவிண் ணவர்விழையுந் தகையன வகையனவே. 70

கீற்றுவெண் மதிக்கோடு கெழுமலிற் றுடைகீறித்
தேற்றுளி யுகுவதனைத் தீம்புனற் சுனைக்கெண்டை
ஏற்றுண வாயணரி யிருப்பன மறைமொழிவாய்
தோற்றினர் புனலமுந்துந் தூத்தவர் நிலைகாட்டும். 71

சிலையென நனிவாங்கிச் செற்றிய நென்மிசையாக்
கொலைபுரி மதவேழங் கொம்மென விடுவேழம்
அலைபுரி தூண்டிலென வையென நிமிர்ந்தோங்கி
நிலைபுரி வாளியெனச் செந்நிலை நின்றிடுமே. 72

அடிவரைத் தடமார்ப மருவிக ளகழ்ந்தாங்குச்
சுடர்விடு வயிரங்கள் சுழித்தெழுந் திருபாலும்
வடிபெருங் குலையென்ன வார்த்திசை யெழுப்பிப்போய்
இடவிய பணைமருதத் திளம்பயிர் வளர்ப்பனவே. 73

---

68. நிழலைப்பாதுகாத்து.

69. புள்ளுவர் - வேடர். கொள்ள ஒழுகிய வரை.

71. அணரி - பிளந்து.

72. வாங்கி - வளைத்து. பின்னைய வேழம் மூங்கில்.

73. ஆங்கு - அவ்விடத்து. அருவிகள் மலை மார்பை அகழ்ந்து என்க.

மல்லிகை கொடிமுல்லை மாதவி கூதாளம்
பல்லிணர் மந்தாரம் பாதிரி புன்னாகம்
மெல்லிதழ் மலர்ப்பிண்டி வேங்கைசண் பகவாசத்
தல்லுறழ் குழலாரி னருவரை நிகராமால். 74

நிறைநிகர் கோங்கங்காய் நெட்டணி லிலவங்காய்ப்
பறைதரு பஞ்சோடும் பன்மயி லுகுபீலி
உறைமது மலர்மயங்கி யொண்டுகள் விரவிமண
அறையென வறைபலவு மமருள் ளமுமுடற்றும். 75

குவட்டுமத் தகத்தோட்டி குளிர்பிறை கொளவாங்கண்
உவட்டெடுத் தொழுகருவி யொழுகுகை யறைபுளகம்
கவட்டணி கொடிநிரைநீள் கதலிநெட் டிலைசெவிபோர்
சவட்டர சிபமென்னத் தருவதத் திருமலையே. 76

வேறு

இத்தகு வளஞ்சால் வெற்பை யெய்திய குமரப் புத்தேள்
எத்தகு தொழிற்குந் தானே யிறையெனுந் தன்மை தேறிப்
பித்துறு முலக முய்யப் பெருகிய கருணை யோடும்
உத்தமச் சூழ லுடி யொளிர்மணிக் கோயில் கொண்டான். 77

கதிர்மணிக் குலங்கால் யாத்துக் கண்கவர் வனப்பு வாய்ந்த
பிதிரொளித் தவிசி னுச்சிப் பெருந்தவ முனிவர் தேவர்
அதிர்கழல் வேந்தன் மாயோ னடற்கணம் வீரர் போற்ற
முதிரொளி யெறிப்ப வைகி முதற்றொழி றொடங்கி னானே. 78

ஆக்கிய படைப்புக் கேற்ப வளித்திட வல்லா னென்று
பூக்கமழ் துளவத் தாரான் புரத்தலுந் தந்தை செல்வம்
பாக்கிய மனைய மைந்தர் பாலதாய் முடியு மாற்றால்
தாக்குருத் திரனர் செய்யுந் தனித்தொழி லோடுஞ் செய்தான். 79

---

75. நிறை - மிடா. பின்னைய அறை பாறை.

76. புளகம் - கண்ணாடி. கவட்டணி - யானைக் கழுத்திலிடும் கயிறு முதலியன.

77. தேறி உய்ய என முடிக்க.

79. என்று என்னும் வினையெச்சம் காரணப்பொருட்டு.

இந்திரற் கரசு மன்றே யிற்றதா லிவ்வா றெங்கோன்
முந்திய படைப்புக் காப்பு முருக்கலோ டுஞற்றி நீதி
தந்துயிர் மறைப்பி னீக்கித் தனியரு ளுறுத்தா னிற்ப
வந்துவந் தொழிந்த தேவர் வருடங்கள் பலவு மாதோ. 80

எண்குணந் தனக்கே யன்றி யில்லாதா யெங்கு நின்ற
ஒண்குணப் பொருளே யான வுத்தமக் குமரப் புத்தேள்
நண்குணத் தவர்தங் கோளு நயக்குமே யென்ன லாங்கும்
வண்குணத் தவனே பேற்றின் வயக்குமா லவர்க்கொன் றின்றே.

முற்றிய செல்வ நல்கு முதல்வர்பாற் றருக்கி னன்றே
சுற்றமு மினமுந் தானுந் துறப்பதற் கைய மில்லை
கற்றையஞ் சடிலத் தேவாங் கந்தனை யிகந்த வேதன்
மற்றவ ரோடுஞ் செய்கை மறுத்தினைந் திருந்த வாற்றால். 82

பற்றிக றனக்கொன் றின்றிப் பணிபுரி யடியார்க் கான
பற்றிக றழுவி நீக்கும் பராபரக் கடவுட் செவ்வேள்
முற்றுமத் தொழிலிற் பட்ட மூதுயிர் பெற்ற பேற்றை
இற்றெனக் கிளக்க லாமே யெஃகறி வுடையோர்க் கேனும். 83

கண்டவர் பிறவி மாய்க்குங் கமண்டல மக்க மாலை
கொண்டிரு கரத்துச் சார்வோர் கொடும்பய மொதுக்கி நல்க
ஒண்டொடிக் கமலச் செங்கை யோரிரண் டமைத்தவ் வாற்றின்
விண்டலர் கடப்பந் தாரான் வீற்றிருந் தருளு நாளில். 84

---

80. இந்திரனும் உலகத்தைக் காக்கின்றான் ஆகலின் அவனையும் கூறினார். திரோபவத்தினின்று நீக்கி நீதியை உயிர்க்குத்தந்து. அவ்வுயிரை மறைப்பின் நீக்கி.

81. பேற்றின் - பேற்றால். தான் இப்போது பெற்றிருத்தலால் என்பது. குணத்தவர் - திரிமூர்த்திகள். என்னலை வயக்கும். குணத்தவன் - முருகவேள்.

82. செல்வத்தைத் துறப்பதற்கு. செல்வம் என்றது சிருட்டி யாதியை.

83. பற்று இகலைத் தான் தழுவி. எஃகு - கூர்மை. பற்று இகலைத் தான் ஏற்றுப் பின் நீக்குகின்ற. பற்று இகல் - விருப்பு வெறுப்புக்கள்.

84. நல்க - வரங்கொடுக்க. இருகரத்துக்கொண்டு அமைத்து வீற்றி ருந்தருளும் என்க.

பொறிவரிச் சுரும்பு மூசாப் பொலந்தொடை யமரர் விண்ணின்
நெறியுளி செங்கோ லோச்சு நெடுந்தகை யுலக முண்ட
வெறிகமழ் துளபத் தொங்கல் விண்டுமா தவர்கள் யாரும்
செறிகதி ரிமைப்ப வீசுந் தெள்ளொளிக் கயிலை சார்ந்தார். 85

வாயிலி னந்தி பாதம் வணங்கினர் விடைகொண் டேகிப்
பாயின பரும வல்குற் பைந்தொடி யோடு வைகும்
ஆயிர நாமத் தண்ண லடிமல ரன்பிற் றாழ்ந்து
மேயின துதிகள் செய்து விரிகரங் குவித்து நின்றார். 86

கவலைநெஞ் சலைப்ப நின்ற கடவுளர் தம்மைச் செந்தேன்
துவலைசெய் கொன்றை மாலைச் சுந்தர னருளி னோக்கி
நவிலுதிர் வரவை யென்ன நவிற்றவுஞ் சுதும்யா மென்றார்
சவலையீ ரெம்மு னஞ்சல் சாற்றுதி ரென்னச் சொல்வார். 87

இடும்பையங் கடலுட் டாழ்ந்த வெங்களை யெடுக்கத் தோன்றும்
கடம்பனை யிளைய னாகக் கருதிமென் கமலத் தோன்றல்
மடம்படு பேதை நீரால் வணங்கில னீங்குப் போந்து
குடம்பையு ளுலண்டு போலக் கோட்படும் வினையன் மீண்டான்.

ஆன்வழிக் கொள்ளும் வேத னவன்றனைப் பற்றி வல்லே
ஈன்வரு கென்ன வீர னெதிருய்ப்ப மறையி னாதி
ஊன்வளர் பிரணவத்தி னுறுபொருள் வினவி மொத்தித்
தேன்வழி மழலைத் தீஞ்சொற் செம்மல்வன் சிறையி லிட்டு. 89

---

87. சவலைச் சித்தமுடையீர்.

88. சிலந்திப்பூச்சி தன்வாயால் தன்மீது, தானே நூற்கூடு வழி வையாது இயற்றிக் கெடுமாறுபோல என்க. ''வரியுடல் சூழக் குடம்பை நூல் தெற்றிப், போக்கு வழிபடையா துள்ளுயிர் விடுதலின், அறிவு புறம் போய உலண்டது போல'' என்பது கல்லாடம்.

''வீடுகட்டி மாடுகட்டி மெய்யிறுகக் கட்டும்வினைப்
பூடுகட்டி விட்டுப் புறப்படமாட் டாதுலண்டு
கூடுகட்டி யாங்கேயென் கோட்டைகட்டி னேன்கடப்பங்
காடுகட்டி யாளுமுக்கட் கட்டித் திரவியமே.''

— மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி.

கமலத்தோன் தன் மடம்படு எனப் பிரிக்க. உலண்டு போலப் பிரமதேவன் தான் உய்யும்வழி இயற்றிக்கொள்ளாது விட்டமையால் தண்டிக்கப்பட்டான் என்க.

89. ஆன் - அவ்விடம். ஈன் - இவ்விடம். ஊன் - உவ்விடம்.

ஆங்கவன் படைப்பி னோடு மடிகளெம் பாங்கர் வைத்த
ஓங்கிய பணியுந் தானே யுஞற்றிவேங் கடத்தில் வைகும்
ஈங்கிதன் பொருட்டு நின்னை யெய்தினே மென்று போற்றப்
பூங்குழ லுமையை நோக்கிப் பூரண னவர்க்குச் சாற்றும். 90

செம்மைய ஞான சத்தித் திருவுருக் கொண்ட செம்மல்
எம்மின்வே றல்லன் யாமு மவனின்வே றல்லேங் கண்டீர்
அம்மழ வடிவி னன்பா லன்புசெய் தவர்பி ழைத்தோர்
நம்மடித் தொண்டு செய்தோர் நவைபடப் பிழைத்தோ ராவர்.

மிக்கவப் பிழையுட் பட்ட வேதனுக் குறுத்த தண்டம்
தக்கதே யெவ்வா றன்னோன் றனைச்சிறை விடுவித் திட்டல்
தொக்குவந் தடுத்தீர் நீயிர் சொல்லுமி னென்னச் செந்தேன்
நக்கலர் கொன்றை யான்மு னடுங்கிய வுளத்திற் சொல்வார். 92

பண்டிகந் திருளிற் பட்ட படர்பெரும் பிழையை நீயே
கண்டொரு செயலு மில்லாக் காலத்துக் கருணை வைத்துக்
கொண்டிடும் பருவ நோக்கிக் கோணைமெய் யருளிற் றந்த
அண்டனிப் பிழையுள் வையா தளிப்பதின் றரிது போலும். 93

அவ்வயிற் சேறு மாயி னடர்க்குமென் றஞ்சு கின்றேம்
இவ்வயிற் சார்வு மஞ்சி யிருந்தன மின்று காறும
ஒவ்வரும் பொருளே நீப்பி னுயங்குவே மன்ற வன்றி
எவ்வயிற் சேறு மெந்தா யிரங்குகென் றிரந்து தாழ்ந்தார். 94

தாழ்ந்தவர் வறிய ராகாத் தன்மையன் கருணை கூர்ந்து
போழ்ந்தநுந் துயரந் தீர்மி னெனவருள் புரிந்து பொற்றூர்
ஊழ்ந்துக வமரர்த் தாக்கி யொளிர்ந்தவேத் திரத்திண் கையின்
வாழ்ந்திடுங் காவ லானை வருகென வழைத்துக் கூறும். 95

பொலங்குவட் டருவி தத்திப் பொன்மணி வரன்றி வீழ்ந்து
நிலங்கிழித் தொழுகி யோடி நிமிரும்வேங் கடத்தை யண்மி
அலங்கலங் கடப்பந் தாரா னடிமல ரன்பிற் றூழ்ந்து
நலங்கிளர் குடந்த முற்று நயத்தகு துதிக ளார்த்தி. 96

---

93. இருள் - ஆணவம். முன்னே உன்னை நீங்கி ஆணவத்திற்பட்ட. ஆணவத்தில் ஆழ்ந்து செயலற்றுக்கிடக்கும் காலத்தில் அருளின்கண் கொண்டுவந்த.

உருவம்வே றன்றி யைந்து முகனறு முகனென் றோதும்
திருவுரு விரண்டன் மாட்டுஞ் சிவமெனும் யாமே மன்ற
பொருவிலா ருயிராய் நிற்பேம் பொலிந்தவிவ் வுருவி னின்றும்
தருவர மவண தாங்குத் தருவர மிவண தாமே. 97

மாதவன் முதலோர் வேண்ட மலரவன் சிறையைச் சீக்கும்
ஏதமில் வரமீண் டாயிற் றிவ்வர மவண தன்றே
போதனைச் சிறையை நீக்கிப் புகுதக வீண்டென் றெம்மால்
ஆதரு மின்றீஞ் சொல்லா வறைமதி மேன்மை யோடும். 98

பைத்தபூஞ் சேக்கை மேலான் படர்பெருஞ் சிறையைச் சீத்து
வித்தக னிங்கு மேவு மவனொடு மேக வென்றான்
அத்தனவ் வருண்மேற் றாங்கி யருணந்தி தேவன் வல்லே
தொத்தலர் குளிர்பூஞ் சோலை சூழ்ந்தவேங் கடத்தைச்
[சார்ந்தான். 99

எட்டுறுப் பானு மைந்த னுமங் கெதிரே வீழ்ந்து
மட்டலர்க் கமல மேய்க்கு மலரடி பழிச்சும் வாயான்
மொட்டுறு கமலம் வெல்ல முகிழ்துணைக் கரத்தாற் சேர்ந்து
நெட்டுட றனுவிற் கோட்டி நின்றிறை யருளீ தென்றான். 100

அமலனா ரருளிற் றெல்லா மங்ஙனங் கிளத்த லோடும்
கமலநான் முகத்தி னானைக் காவலிற் பெயர்ப்ப வேவிக்
குமரவேள் கயிலை யண்மிக் கோயிலைக் குறுகா நின்றான்
விமலனார்க் குணர்த்தி னால் விரைந்துமுன் சென்று நந்தி. 101

அங்ஙன மணுக நண்ணி யடியிணை வணங்க லோடும்
இங்ஙனம் வருத லென்னா வெடுத்தணைத் துச்சி மோந்திட்
டுங்ஙன மிருவிப் பின்ன ருவனுடைப் பெருமை தன்னை
எங்ஙன முலகந் தெள்ளு மங்ஙனந் தெளிப்ப வெண்ணி. 102

முரிதிரை சுருட்டுந் தெண்ணீர் முழங்கிவிண் ணிழியக் கண்டு
புரிசடைக் கரந்த பெம்மான் புன்னகை முகத்தி னோடும்
எரியகைந் திலங்கும் வைவே லிருளிலை யடுக்கஞ் சூழ்ந்த
வரைபக விடுக்கும் வென்றி மைந்தனை நோக்கிக் கூறும். 103

---

99. மேவுக என்பது மேக என நின்றது.

102. வருதல் - வருக.

103. வேலைப்பக விடுக்கும் மைந்தன். அடுக்கம் - சாரல்.

அறிவினிற் பெரிய நீரா ரறிந்தரும் பிழைகள் செய்யார்
அறிவினிற் சிறிய நீரா ரறிந்தறி யாமை யானும்
செறிபிழை யிழைப்ப வவ்வத் திறத்தின துண்மை நாடிச்
சிறுமையி னீங்கி னோர்கள் செயிர்த்துள வயிரங் கொள்ளார். 104

பேதைமைப் பாலி னாதல் பெருங்கிழ மையினா னாதல்
மேதக நட்டோர் மாட்டும் விரவிடும் பிழைக ளெல்லாம்
காதுதற் பால வல்ல காதிடிற் கண்ணோ டிக்
நோதுக வோச்சி மெல்ல நோன்றவே யெறிகு வாரால். 105

பூவணைக் கிழவன் சான்ற புலனகத் தின்மை யாலே
ஓவிய வணக்கத் தோடு மொய்யென நம்பா லுற்றான்
மேவிய பிழையு மொன்றே விளித்தனை யுணர்த்திப் பின்னும்
தாவிய வணக்க மன்றே தன்னமே பெரிதாக் கொண்டு. 106

துண்டமும் வாயுங் காதுந் துணைக்கணுஞ் சோரி தூங்க
அண்டமும் பொடிக்கு மாற்ற லருங்கணம் புடைப்ப வேவிக்
கண்டக நிரைத்தா லன்ன கடும்பர னிரந்த கோட்டம்
முண்டகத் தவனைப் பன்னாண் முழுத்துய ருழப்ப வைத்தி. 107

பெருந்தவ முழந்து நம்பாற் பெற்றிடுந் தொழிலு நீயே
திருந்துறச் செய்தி நன்மை தீமைகண் டருளிக் காத
இருந்தனம் யாமே யன்றி யிடர்துமித் தின்ப மேய்ப்ப
வருந்திய தேவர்க் கென்றே வந்தனை நினக்கி தாமே. 108

வேறு

என்றுளக் குய்யம்வைத் தெம்பிரா னருளலும்
நன்றெனக் குமரனு நகைமுகத் துரைசெய்வான்
அன்றினர்க் காலமா யன்பினர்க் கமுதமாம்
வென்றியங் கழலினாய் விரகிலா னென்றனை. 109

---

105. கண்ணோடி - தாட்சணியம்செய்து. ஓச்சி - ஓங்கி. நோன்ற - பொறுக்க.

106. ஒழிந்த வணக்கத்தோடும், நீ விளித்து உணர்த்தினாய். ஒழிந்த வணக்கம் சிறிதை நீ பெரிதாக்கொண்டு.

107. கோட்டம் - சிறைச்சாலை.

விரகிலான் பிரணவ மெய்ப்பொரு ளோர்கிலான்
பிரணவப் பொருளிலான் பிறழ்தரா துலகெலாம்
வரனுடைச் சிருட்டியின் வயக்குவா னலனரை
அரவிஞ யெங்ஙன மளித்தனை யென்றனன். 110

மைந்தநீ யதன்பொருள் வல்லையே லுரையென
முந்துமெய் பொருள்களு முறையன்றி யருள்செயா
எந்தையப் பொருள்பொழு திடமறிந் தியல்புளித்
தந்திடத் தக்கதன் றேயெனச் சாற்றினன். 111

வாய்மையே கூறினை மாசிமா மகமிதோ
மேயதா னீயுளம் விழைதகப் பயிலிடம்
ஆயசீர்க் கணிகவெற் பமைந்துளந் தகப்பொருட்
கேயுமா றேற்குது மேகுது மவ்வயின். 112

வந்தனை யோதென வானவ ரிந்திரன்
பைந்துழாய்த் தொடையினன் படர்கணந் தொடர்தர
இந்துவி னிமிழ்கதி ரிரசதப் புரிபொரூஉம்
செந்துவர்ச் சடைமுடிச் செம்மலங் கண்மினன். 113

வளமலைச் சாரலின் வடகிழக் கெல்லையின்
இளமதிச் சடையவிழ்த் திம்பரிற் ருழ்த்துபு
களமிகுப் போரெனக் கருதருந் தியானமோ
டுளமலி தவமொரு கணிகமுற் ருனரோ. 114

வழிபடுங் கடவுளொன் றின்மையின் வடகிழல்
வழிபடு வோரெலாம் வடதிசை முகமுற
வழிபடுங் கடவுளாய் வதிந்தவ னங்ஙனம்
வழிபடக் கந்தனை மதித்தவ னிருத்தலும். 115

என்றுமத் தாணியா வினிதுவீற் றிருக்குமக்
குன்றிடைப் பலரொடுங் கொம்மெனத் தோன்றுபு
மன்றலங் கொன்றையான் வதிந்தவச் சூழலில்
தென்றிசை யெல்லையைச் சேர்ந்தெதிர் வைகினன். 116

---

110. சிருட்டித்தொழிலை அவனுக்கு எவ்வாறு கொடுத்தாய்.

113. வந்தாய் ஆகி ஓது என்று. புரி - கம்பி.

114. தான் வழிபடு கடவுள் இல்லாதிருக்கவும் தியானித்தலால் கள்ளமிருப்போர் என்ருர்.

எதிருறுங் குமரனை யிருந்தவி சேற்றியங்
கதிர்கழல் வந்தனை யதனொடுந் தாழ்வயின்
சதுர்பட வைகுபு தாவரும் பிரணவ
முதுபொருட் செறிவெலா மொழிதரக் கேட்டனன். 117

தனக்குத்தா னேமக னாகிய தத்துவன்
தனக்குத்தா னேயொரு தாவருங் குருவுமாய்த்
தனக்குத்தா னேயருட் டத்துவங் கேட்டலும்
தனக்குத்தா னிகரினான் றழங்கினின் றாடினான். 118

வேறு

சாருமெவ் வுயிருந் தன்வய மாக்கித்
தளர்க்குமா ணவப்பகை யோடும்
சூரனை முதலாந் துளக்கரும் பகையுந்
துலங்குமிப் பிரணவப் பொருளாம்
வீரனி லின்றே விளிந்ததென் றுளத்து
விரைந்தெழும் வீரத்தின் குறிப்பின்
ஆரமர் முடியோ னார்த்தலி னாய
தவ்விடம் வீராட்ட காசம். 119

மரணமும் பிறப்புங் கடந்தபே ரின்பம்
வழங்குமப் பெரும்பெய ரிறைக்குப்
பிரணவப் பொருளைக் கொடுத்தகா ரணத்தாற்
பிரணவ வருத்தநன் னகராம்
இரணவல் லவுணக் கிளையெலா முருக்க
விலங்கருட் டிருவுருத் தாங்கி
அரணமா யமரர்ப் புரப்பவ னென்று
மமர்தரு டணிகைமா நகரம். 120

பணிகிள ராரம் பண்ணவன் முருகற்
படர்ந்தருந் தவத்தினை யாங்குக்
கணிகமே புரிந்து கருத்துமுற் றுறலாற்
கணிகவெற் பெனப்பெயர் விளங்கும்

---

117. தாழ்ந்த இருப்பிடத்திலிருந்து கேட்டனன். சதுர் - வலிமை.

119. உயிர்களுடைய ஆணவப்பகை எனக் கொள்க.

120. பெரும்பெயர் - 'தத்துவமசி' வாக்கியம். ரணத்தையுடைய அவுணர்.

துணிகதி ரிமைக்கு நவமணி யடுக்கஞ்
சூழ்ந்தவச் சிலம்புமற் றின்றும்
அணிகிளர் தவங்க ளாற்றியோர் கணிக
மாற்றினு மரும்பய னடைவார். 121

மூலமீ றிகந்து மூலமே யில்லா
மூலகா ரணப்பொரு டனக்கு
மூலமா யிருந்து நால்வகைப் பொருட்கு
மூலமா கியவரு மறையின்
மூலவான் மொழிக்குப் பொருட்செறி வெவர்க்கு
மூலமா னவன்விரித் தமையான்
மூலவே தண்ட மெனப்படுங் குறவர்
மூலந்தே ரருவரைப் பறம்பு. 122

ஒருகையி லக்க மணிவட மொன்றி
லொளிர்மணிக் கமண்டலு மற்றை
இருகர மபய வரதமா யங்க
ணிருந்ததே சிகனையன் றுடங்கு
மருவினர் போற்றி நால்வகைப் பொருளு
மல்கலி னுமப் பெயர்த்தாம்
பொருவில்ச் சயில மின்றுநாற் பொருளின்
புணர்ச்சிக்கு மூலமாய்ப் பொலியும். 123

உருவினெஞ் ஞான்று மிளமையிற் றளரா
வுத்தம னிறைமையென் குணத்துப்
பொருளினஞ் ஞான்று முதுமையிற் றளராப்
பொலிவுகண் டிமையவர் திருமால்

---

121. கணிகம் - க்ஷணப்பொழுது.

122. தனக்கு மேலான மூலப்பொருள் இல்லாத மூலகாரணப் பொருளாம் கடவுட்கு மூலமாயிருந்து.

123. உடங்கு மருவினர் - சிவனோடுவந்த தேவர்கள். மல்குதற்கு மூலமாய் இருத்தலினாலும்.

தருநிழ லரசன் மாதவ ரெல்லாஞ்
சாமிநா தப்பெயர் கிளந்து
மருவிய மகிழ்ச்சி தினைத்தன ரப்பேர்
வழங்குமா லன்றுதொட் டென்றும். 124

ஆர்த்துநின் றுடும் வீராட்ட காசத்
தடிகள்பின் பாருயிர் புரப்பான்
சீர்த்தமெய் யுருவே சிவலிங்க வுருவாய்த்
திகழவீற் றிருந்தனன் மாதோ
வார்த்தசெஞ் சடைதாழ் திருவடை யாளம்
வயங்குமச் சிவலிங்க வடிவைப்
பார்த்தவர் பணிந்தோர் பழிச்சின ரெய்தும்
பயனெவர் பகர்தரற் பாலார். 125

அத்தகு வரைப்பின் வீராட்ட காசத்
தடிகளா சான்வழி பாட்டிற்
கொத்தநற் றீர்த்த மகிழ்ந்துவார் சடிலத்
தொண்புனல் பாய்த்தினர் நிறைத்து
வைத்தன ரதனுற் சிவகங்கை நாமம்
வழங்குமத் திருத்தநீர் படிந்தோர்
பொத்துநோய் தீரா தனவெலாந் தீர்ந்து
போகமும் வீடுமெய் துவரால். 126

அன்றுடங் கணைந்தோர் படிந்துவேற் கரத்தா
சானொடு வீராட்ட காசத்
தொன்றுநா யகனைப் பணிந்தெவற் றுனு
மொழிப்பரு முடலுயிர்ப் பிணிகள்
மன்றநீத் தெண்ணும் வரங்கள்பெற் றுய்ந்தார்
மதித்துறி னளவினிற் படாரால்
பின்றையு மதிற்றோய்ந் திற்றைநாள் காறும்
பெரும்பிணி யிரித்தவர் மாதோ. 127

---

124. எண்குணத்துப் பொருளாலே முதுமையிற் றளராத பொலிவு. அஞ்ஞான்றும் - இளமையாய் இருக்கும் அக்காலத்தும். முதுமை - பேரறிவு. சாமி - முதல்வன். எண்குணமுடைமையே இறைமையாதலின், 'இறைமை எண்குணம்' என்றார்.

உட்டுகண் முழுதும் பரிந்துமெய்ப் பொருளி
ஞெருக்கிய வறிவினீர் தழங்கி
நட்டநின் றியற்றும் வீராட்ட காச
நாதனார் சிறப்பெடுத் துரைத்தாம்
சட்டமூ வுலகும் போற்றவீற் றிருக்குஞ்
சாமிநா தனுமகிழ் சிறந்தாங்
கெட்டுரு வுடையோ னருட்குறி நிறுவி
யியற்றுபூ சனைத்திறங் கிளப்பாம். 128

வீராட்டகாசப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்—569.

---

128. பரிந்து - நீக்கி. சட்ட - நேராக.

குமரேசப்படலம்

யாவருக்கு மெய்ப்பொருட்கு மின்பமெய்த நின்றவர்
மூவருக்கு மின்புறுத்து மூவிருதி றத்தரும்
தாவிலின்ப மெய்தநின்ற தத்துவத்த னென்பவால்
ஓவிலின்ப வுருவமான வொளிர்குமார வீசனை. 1

வேறு

காய மல்கமர ராண்மைதபு காரி யுதரம்
போயி ருந்துபுற னேகுபுக ரென்ன முகிரேய்
வேயி னின்றமணி விண்டுவெளி வந்து திவளும்
மீயு யர்ந்தகணி காசலவி சாக னொருநாள். 2

கான ரும்பியக டுக்கையுமெ ருக்கு மலையா
வான வர்க்கரிய நாடகந விற்று வரதன்
ஞான சத்தியினை நல்கியகு றித்த விழைவின்
ஆன பத்திமைய கத்தெழவ ருச்ச னைசெய்வான். 3

வயிர வீட்டிக ணிரைத்தொழுக வைத்த துபொரப்
பயில்செ ழுங்கதிர் கொழுந்துகொடு பம்பி நிமிரும்
கயிலை வெற்பினமர் கங்கையைவ ரக்க ருதினன்
வியனெ டுங்கிரி யடிக்கணெதிர் மேய ததுவே. 4

வெள்ளி யங்கிரியின் மீதமர்தி ருத்த மணிகள்
தெள்ளொ ளிக்கதிர்பி லிற்றுகணி கச்சி லையடி
நள்ளு கின்றதுந லத்தகயி லைக்கி றைதொழூஉம்
வள்ளல் வெற்பெனம தித்தடிவ ணக்க நிகரும். 5

---

1. நின்றவராகிய பெரியோர்கள் என்ப என முடிக்க. விஞ்ஞான கலர் முதலிய மூவருக்கும் இன்பத்தையுறுத்துகின்ற அறுசமயக்கடவுளரும் இன்பமடைய நின்ற தத்துவத்தன் என்க. மூவருக்கும் - புறப்புறம் புறம் அகப்புறம் ஆகிய மூன்று சமயத்தார் என்பாரும் உளர். அகச்சமயமாகிய சைவத்துக்குப் புறமாகி இருத்தலால் புறச்சமயம் என்க. குமார வீசன் - குமாரக்கடவுள் வழிபட்ட ஈசன். ''அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ் வவர் பொருளாய்'' நிற்பவன் சிவனொருவனே ஆகலின், 'மூவருக்கும் இன்புறுத்தும் மூவிருதிறத்தரும்' என்றார்.

2. காரி - வைரவன். புகர் - சுக்கிரன்.

3. வரதன் - சிவன். வேலாயுதத்தை நல்க.

பன்ம ணித்திரள்கொ ழித்துமலர் பம்பி யினவண்
டன்ன நேமியும கன்றிலும ணிந்தொ ளிர்தலான்
மன்ன டுக்கன்மகள் வண்கடித டத்த ணிதரும்
மின்ன லங்குமணி மேகலைவி ழைந்த ததுவே. 6

ஆம்ப லுற்பலம டுக்கிதழ்ந றுங்க மலமும்
தாம்ப யின்றனத யங்கியிரு போது மலரா
யாம்பி றங்குவர மீகெனவெ னைத்து லகமும்
ஓம்பி யாக்குமுரு கற்பணிய வுற்ற னபொரூஉம். 7

இருசு டர்க்கிரண மெய்தலறி யாதி ரசதப்
பெருவ ரைக்கணொரு பெற்றியினி ருந்த மலர்கள்
இருதி றத்தனவி ருப்பனகள் கன்னி மைகழீஇ
மருவு மன்பரைம ணந்துபிரி மங்கை யர்பொரூஉம். 8

ஓதி மம்புடையி ருப்பவொளிர் செங்க மலம்வீழ்
மாதர் வண்டுபொடி மல்கியப ராச ரன்வளர்
வேத மந்திர விழுத்தழல்வி ரைந்து குமவன்
தாதை யர்க்கொலைபு ரிந்ததகு வோர்கி ளைபொரூஉம். 9

மேல வாந்தலைய கீழ்த்தலைய கீழ்த்த லையன
மேல வாகுநிழ ருற்றுவிரி நீர்வி னையினல்
மேல வாம்பொருள்கி ழக்கனகி ழக்கி டுபொருள்
மேல வாஞ்செய றெளிக்குமொரு சான்று விழையும். 10

---

6. மகன்றில் - அன்றில். அடுக்கலாகிய மகள் என்க. மணிமேகலை - மலரை மேகலையாகவும், வண்டு அன்னம் முதலிய புள்ளொலியைச் சிலம்பொலியாகவும் கொள்க.

7. மலரா - மலர்ந்து. யாம் தன்மைப்பன்மை. கயிலைத்தீர்த்தத்தில் இருந்த மலர் என்க.

8. ஒரு பெற்றி - மலர்ந்த ஒருதன்மையாகவே இருக்கும் தன்மை, குவித்த ஒருதன்மையாகவே இருக்கும் தன்மை. இருதிறம் - மலர்ந்தும் குவிந்தும் இருக்கும் தன்மை.

9. பொடி - விபூதி. உகும் தகுவோர் என்க. பராசரன் தாதையர் நூற்றுவர்.

10. பின் இரண்டு அடிகட்கும் ''புண்ணியம் பாதக மாகப் போற்றிய'' என்னும் செய்யுட்கருத்தைக் கொள்க.

காத ரந்தபவி ளங்குகணி காச லமிழல்
போத வுட்பொதிதி ருத்தமொளி பொங்கு வரையை
மாத வத்துறுதி யானவழி யான்ம னமிசை
ஆத ரத்தமர வைத்தமைவு பெற்ற துறமும். 11

ஓங்கு தூவிகைய மாடநிழல் செய்ய வுதன்மேல்
பாங்கர் நீள்பொழின்ம துப்புனல்ப னிப்ப தவைசேர்
தீங்கு தீர்த்திடுப திட்டைதெளி யாடி யினிடைத்
தாங்கி வார்புனல்பொ ழிந்துபுரி தன்மை நிகரும். 12

நின்றி ருந்துகிடை யுற்றுநிகழ் வேள்வி யினிடை
மன்ற பன்முறைறவ ருந்துவது தீர முழுகி
ஒன்றி ருந்தவமு ஞற்றுபல வங்கி யுறமும்
துன்று தூவிகளி னேற்றுசுடர் தோற்று வனவே. 13

தூவி வெண்குருகு தோற்றுகுர ஞூபு ரமென
மேவ வாளைநெடு மீனம்வெடி போய்வி ழுவன
காவி நேர்விழிய கூத்தியர்க திக்த சதியில்
தாவி யந்தரம றிந்துவரு தன்மை புரையும். 14

வேறு

பெருகிய வித்தகு வளத்திற் பெட்புறீஇக்
கருவினை தபுங்கயி லாய கங்கையை
வருகென வழைத்தவன் மறுவின் மாயையின்
பொருவில்பல் பொருள்களும் பூத்திட் டானரோ. 15

---

11. தியானவழியால்.

12. தூபியையுடைய கருப்பக்கிரகம் நிழல் செய்ய. அவை புரிதன்மை என முடிக்க. அவை - பொழில்கள்.

13. அந்தணர் அங்கியை நின்றபாவனை, இருந்தபாவனை, கிடந்த பாவனைகளாக வைத்து வேள்விசெய்தல் விதி.

14. தூவி - இறகு. குருகு - அன்னம்.

15. பெட்பு - பெருமை. சுத்தமாயை எனக் கூறுவார் 'மறுவில் மாயை' என்றார். பூசைக்குரிய பொருள்கள்.

இலக்கண முழுதமை யிலிங்கம் வேதிகை
அலக்கணந் தித்தவர் விழையு மாலயம்
மலக்கணம் விடைகொண் மண் டபங்கள் கோபுரம்
நலக்கண மணிகொடு நவம தாக்கினன். 16

பித்திகை யெங்கணும் பெருகு மான்மதம்
மெத்திய சந்தன விழுது கொட்டுபு
பைத்தெழு விரைப்புகை பாய்த்தி யோசனை
பொத்திய மணங்குலாம் பொற்பி யற்றினன். 17

தூண்டொறும் வாருறை சேர்த்தித் தூங்குகாய்
மாண்டமென் கதலிவார் கரும்பு பூகதம்
ஆண்டுறுத் தும்பரி னவிர்பொற் பட்டினால்
காண்டகு விதானங்கள் கற்பித் திட்டனன். 18

ஆடகத் தகடுக ளடுத்த கீழ்நிலம்
பாடமை மணித்துகட் பசும்பொற் சுண்ணநீர்
நாடரு விரைகலந் தொழுக்கி நன்மணி
தோடவிழ் மலரறு கரிசி தூவினன். 19

பொன்னரி மாலையும் போதிற் றொங்கலும்
மின்னகு பன்மணி விராய கோவையும்
துன்னிய கனிகளுந் துலங்கு மாடியும்
என்னவு மணிபெற வெங்குந் தூக்கினன். 20

தோரண மெங்கணுந் தொடரிப் பல்கொடி
காரண விசும்பெலாங் கஞற்றிப் பாலிகை
பூரண கும்பங்கள் பொலிந்த வேதிகை
ஏரண வியவிளக் கினமு மீட்டினன். 21

---

16. துன்பத்தின் முடிவைக்கண்டவர் எனவே துன்பம் நீங்கினவர் என்பது; துன்பத்தை முடிவுசெய்தவர்.

17. விழுது - குழம்பு.

19. மணித்துகளையும், பொற்சுண்ணத்தையும், விரையையும் நீரில் கலந்து ஒழுக்கி.

21. தொடரி - தொடுத்து. வேதிகையில் என விரிக்க.

வட்டகை வலம்புரி வளைபொற் பாசனம்
கொட்டொளிப் படலிகை கொடிய கஞ்சுடர்
இட்டசைப் பனவெழி லாடி யாதியா
முட்டற யாவையு முறையு யிர்த்தனன். 22

எண்ணெயா மலகமா மஞ்சள் பாறயிர்
தண்ணெய்தேன் வேழத்தின் சாறங் கைந்தென
நண்ணமிர் திரதங்க ளுளி கேரநீர்
அண்ணலங் கனியரு விரையு மார்த்தினன். 23

தேசவிர் கலைகளுந் தெய்வ மாலையும்
பூசமை சாந்தமும் புகையுஞ் சுண்ணமும்
காசவிர் கலன்களுங் கனிந்த பல்சுவை
நேசமல் கமிர்தமு நிரைத்திட் டானரோ. 24

சூருயிர் குடிப்பவன் சுத்த மாயையின்
ஆரவிவ் வகையெலா மமைத்த பின்மணி
வீரரு மிலக்கரும் விழுமம் வீழ்த்துயர்
பாரிடத் தலைவரும் பரிப்ப வேவினன். 25

வேறு

கள்ளவிழ்பன் மலர்களுலுங் கயிலாய கங்கையெனும்
தெள்ளுதிரை மணிகொழிக்குந் திருத்தநீர் புகுந்தாடி
ஒள்ளியவே றுடையுடுத்திட் டொளிர்பூதி முழுதணிந்து
வள்ளல்விழிக் கதித்தமணி வடம்பலவுந் தாங்கினன். 26

பல்லியம்பல் கணமியம்பப் பண்ணவர்பல் லாண்டிசைப்ப
மெல்லியல்விண் ணரமகளிர் மின்னினுடங் கினர்நடிப்பச்
சொல்லமிழ்த மிடற்றிசையுஞ் சுடர்மணியாழ் நரப்பிசையும்
கல்லிளகப் பரந்திசைப்பக் கதிர்மணிக்கோ யிலையடுத்தான். 27

---

22. கொடியகம் - பூந்தட்டு. ஒளியைக் கொட்டுகின்ற. சுடரிட்டு அசைக்கப்படுவன: அது பலதிறப்படும். வலம்புரிவளை.

23. நாளிகேரநீர் - இளநீர்.

26. கதித்த - தோன்றிய.

தானிருக்குந் திருவெல்லை தனக்குவட கீழ்ஞாங்கர்
ஆனிருக்கை கொள்வாவச் சகாயனையன் பொடுமிருத்தி
வானிருக்கு மளப்பரிய வழிபாடு புரிந்தருவித்
தேனிருக்கு மலர்க்கடப்பந் தெரியலான் மகிழ்வித்தான். 28

பிணிகிழங்கி னொடும்பெயர்த்துப் பெயராத நிலையருளும்
கணிகைவரை யடிச்சாரற் கயிலாய கங்கைமுகந்
தணிகிளர்பன் னிறைநிரப்பி யல்லனவும் பலர்புரியத்
தணிவிறன திருக்கைவட சாரமைத்த வாலயத்துள். 29

கருவிகளு மறியாமை கதுவவரு கேவலமும்
ஒருவியெழு பரஞானத் துளச்செயலைத் தபத்தோற்றும்
பெருகுபர மானந்தப் பெருநிலைமைப் பொருளேயாம்
முருகனருட் குறிப்பதிட்டை முறையியற்றிப் பூசிப்பான். 30

குருமணியி னொளிப்பிழம்பு கொழுந்தோடிப் பல்கணியாய்
மருவுகத வெனத்தோற்று மணிவாயி லிருபுடையும்
பொருவில்பர மபரமெனப் புகன்ஞான மிரண்டனையும்
அருணிலையுந் திருவெழுத்தி னருச்சனைசெய் தமைத்திட்டான்.

பூதமுதற் கரணமெலாம் புறமாக வகம்புறமற்
றுதரவி னிடைமூழ்கி யமைத்தபொரு ளவையனைத்தும்
வேதமுடி கடந்தொளிரும் விழுப்பொருளி னிறைவாக்கித்
தீதனுக்கு மஞ்செழுத்துஞ் செயிர்விரவா முறைமாறி. 32

---

28. ஆன் - அவ்விடம்.

29. பிணியைப் பெயர்த்து. கிழங்கு - மூலமலம். நிறை - மிடா.

30. மனம் முதலிய அந்தக்கரணமாகிய கருவிகள் யாவையும் அறியாமை பொருந்தும்படி வருகின்ற சுத்தகேவலத்தையும் நீங்கி எழுகின்ற பரஞானத்தினாலே உளச்செயலைக் கெடத் தோற்றுகின்ற பரமானந்த நிலைப்பொருள் என்க. முருகவேள் சிவலிங்கப்பதிட்டைசெய்து பூசிப்பான்.

31. வாயிலின் இருபுறத்தும் இரண்டு ஞானத்தையும் இரண்டு துவாரபாலகராக வைத்து அருச்சித்தான் என்க.

32. மூழ்கி என்பதன்காறும் பூதசுத்தி சொல்லியபடி; அதன் பின்பு ஆக்கி என்பதன்காறும் திரவியசுத்தி; பூசைக்குரிய உபகரணங்களாக முன் சுத்தமாயையால் அமைத்த பொருள் அத்தனையும் வேதத்தைக்கடந்த மந்திரத்தினாலே நிறைவாக்கி என்க. நிறைவு ஈண்டுச் சுத்தம் என்னும் பொருட்டு. உடலைத்தகித்தவழி அகம்புறம் என்பது இன்றாகலான் 'அகம் புறமற்று' என்றார். பேரெழுத்து - மூலமந்திரம்.

பாதமுக முடிக்குதவு பாத்தியமா திகளெல்லாம்
பேதமறு மருள்கடந்த பேரெழுத்தி னினிதமைத்தங்
காதனமு மூர்த்தியுமூ லமுமந்தத் திருவெழுத்தால்
ஏதமற வுயிரெல்லா மிணர்மலர்கொண் டருச்சித்தான். 33

அளியாகி யொளியாகி வெளியாகி யளவாகும்
களியாத பொருட்கலப்பிற் கதித்தசுகத் தப்புறமாய்
விளியாத சுகம்பெருக்கி விளங்குதிரு வுருக்குளிர்ப்பத்
தெளியாமுந் தயிலமுதற் செறிவனைத்து மாட்டினன். 34

விழைதகுமென் கலிங்கத்தான் மெய்யீரந் தபப்புலர்த்தித்
தழையொளிநாண் கோவணம்விற் றதைகதிர்ப்பூம் பட்டணிந்து
குழைகலவைச் சேறெங்குங் கொட்டிமணத் துகளட்டி
மழைதவழ்வ தெனவிரைகண் மடுத்தபுகை தவழ்வித்தான். 35

குண்டலமுங் கதிர்த்தோடுங் குருக்கிளர்பொன் மணிமுடியும்
கண்டசர மங்கதமுங் காழ்பணியு மலர்த்தொடையும்
ஒண்டொடியு மோதிரமு மொளிருதர பந்தனமும்
மண்டுகுரா னூபுரமு மற்றுமெடுத் தலங்கரித்தான். 36

பாறயிர்நெய் புளிகடுகு பயறுசருக் கரைதிலகம்
வேறுவிர வியவல்சி வெற்றன்னங் குய்க்கருனை
ஊறுசுவைச் சிற்றுண்டி யொண்வறையல் கனிபுனலும்
தேறுமனு மொழிந்தமுது செய்தருள மகிழ்சிறந்தான். 37

வேறு

பூசுபுனல் கரத்தேந்திப் பாத்தியமா
சமனமருக் கியம்பூ ரித்து
வாசமலி பாகடையின் சுருணீட்டி
மணித்தூபந் தீபம் வட்டித்

34. ஆகி, (ஆய்) பெருக்கி என்னும் வினையெச்சங்கள் விளங்கு என்னும் வினையுடன் முடியும். களியாத - மயங்காத; கள்ளுண்டு களித்தலின் களி என வழங்குமாறும் காண்க. ஆம் - நீர். உயிர்கள் காண்டற்களவாகிய பொருள். பொருட்கலப்பில் உண்டாகும் சுகத்துக்கு அப்புறமாயுள்ள சுகம் என்க. அப்புறமாயுள்ள சுகம் இலக்கணத்தால் அளவிடப்படாது. பொருட்கலப்பை அளவிடலாமாகையால் 'அளவாகு பொருட்கலப்பு' என்றார். பொருட்கலப்பால் உள்ள சுகம் மேலானதன்று ஆகலின், அது களிக்கத்தக்கதன்று; பின்னையதே களிக்கத்தக்கது.

தாசறுபஃ றீபவா ராதனையும்
புரிந்தாடி யாதி யுய்த்து
நேசமலி புகழ்பரப்பி வலம்வந்து
நிலத்திறைஞ்சி நின்ற னுங்கு. 38

வாளாங்கு வைகுறினுந் தாமேவந்
தருள்புரியும் வாய்மை மைந்தன்
தாளாண்மைத் தலைநின்ற வழிபாட்டிற்
றரிப்பரே தலையன் காண
வேளாண்மை வித்தகனு ரவணணிந்த
வணிமுழுதும் விளங்க விண்ணோர்
நாளார்ந்த மலர்தூவக் கணநெருங்க
நயந்தெதிரே நண்ணி னால். 39

மறுவலும்வீழ்ந் தெழுந்துநின்ற திருமகனை
முகநோக்கி வரமே தென்றார்
முறுவனில வெழக்கனிவாய் முகிழ்விரித்து
முடித்தலைவிண் ணவர்மே லென்றும்
கொறுகொறுக்கு மவுணருயிர் குடித்திடுநுஞ்
ஞானசத்தி கொடுப்ப தென்றான்
அறுகுமலி சடைமுடியா ரதனொடுபல்
வரமளித்தவ் விலிங்கத் தானார். 40

இருளனுக்கி யொளிபெருக்கு மவ்விலிங்கம்
குமாரலிங்க மெனும்பேர் பூணும்
மருளிரிக்கு ஞானசத்தி தரித்தலினாற்
கணிகவரை வாழ்க்கை பூண்ட
தருநிகர்த்த குரிசிலுக்கு ஞானசத்தி
தரனென்னச் சாற்று நாமம்
பொருண்மிகுத்த பலபெயரின் மிக்கபெய
ராயங்குப் பொலிந்த தன்றே. 41

---

38. வட்டித்து - வளைத்து.

39. அருள் புரிதற்கு ஏதுவாயிருக்கும் மைந்தன் என்க. வேளாண்மை - உபகாரம்.

40. விண்ணவர்மேல் கொறுகொறுக்கும் அவுணர். சத்தி - வேல்.

41. சாற்றும் நாமமானது பொலிந்தது என முடிக்க.

வெள்ளிவரை யிருத்தலினுற் கயிலாய
கங்கையென விளங்குந் தீர்த்தம்
தெள்ளுபுகழ்க் கணிகவரைக் குமரனமைத்
தாடிமகிழ் திளைத்து முக்கண்
வள்ளலுக்கு மாட்டுதலாற் குமாரதீர்த்
தப்பெயரின் வயங்கு மப்பேர்
உள்ளினவ ரெழுபவத்திற் காதரமு
மெழுந்திரிய வுருக்கு மாலோ. 42

கும்பமதி வருமகத்திற் குமரவே
ளினிதாடிக் குழகற் காட்டும்
வம்பவிழ்பூங் கயிலாய கங்கையிடை
அம்மதியின் மகத்திற் சென்று
கம்பமறப் படிந்தாடிக் குமாரலிங்கந்
தொழுவோர்கள் கரிசி னீங்கி
உம்பருக்கு மறிவரிய சிவலோகத்
தெஞ்ஞான்று முறுவர் மாதோ. 43

எத்தினத்தா யினுமொருகான் முழுகினரெப்
பிணியுமெழு காத மோப்பிப்
புத்தியறி வாயுள்சுசி புகழ்சூழ்ச்சி
வீரம்வலி பொருண்மேம் பாடு
மித்திரர்புத் திரர்மனைவி முதலான
வெறுக்கையெலா மேவி யீற்றில்
கொத்திஞெடுங் கந்தலோ கத்தையவ
னுருக்கொண்டு குறுகி வாழ்வார். 44

செங்கமல மலரேய்க்கு மொருதிருக்கை
குறங்கமைத்துச் செம்பொன் மேருத்
துங்கவரிச் சிலைக்கடவு ளருண்ஞான
சத்தியொரு தொடிக்கை யேந்திப்
பொங்குமருட் கருணைவிழிக் கடையொழுக
மலர்ந்தமுகப் பொலிவி னேடும்
அங்கணமர் ஞானசத்தி தரனையகத்
துறநினைப்போ ரவனே யாவர். 45

---

44. புத்தி - சிந்தனை. கொத்து - சுற்றம்.

ஐம்பொறியின் வழியொழுகா தவற்றை றவியங்
கொண்டறிவின் மயமே யாக்கிக்
கொம்பனையா ளிடத்தரனை வழிபாட்டி
னினிதேத்துங் கொள்கை மிக்கீர்
பம்புகதிர் மதிமோலிப் பரமர்மகிழ்
குமாரலிங்கப் பரிசு சொற்றும்
வம்பவிழ்பூ வணைக்கிழவன் மாதவஞ்செய்
தருள்பெற்ற மரபுஞ் சொல்வாம். 46

குமாரேசப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்—615.

---

46. அவ்வைம்பொறியை அறிவுமயமாக்கி என்க.

பிரமன்சிருட்டிபெறுபடலம்

ஒன்றாகிப் பலவாகி யுருவாகி யருவாகி
அன்றாகி யாருயிர்கட் காருயிராய் நிறைந்தானும்
பின்றாழுஞ் சடையானும் பிறங்குநுதல் விழியானும்
வென்றாலும் விடையானும் விருத்தபுரி வித்தகனே. 1

வேறு

முரலுஞ் சிறைவண் டினமொய்த் துளரும்
அரவிந் தமமர்ந் தவனா றுமுகன்
விரவுஞ் சிறைவிட் டபின்விண் ணுயர்தன்
பரவும் பதிசென் றுபதிந் தனனால். 2

காரா கிருகங் கழிவுற் றபினும்
ஆரா வமுதா யவருட் பரமன்
சீரா ரருளாற் செய்சிருட் டிசெய
வாரா மையினோ கைமனத் திலனே. 3

அந்தோ விதுநாஞ் செயலாம் வழிமற்
றெந்தோ வெனவெண் ணியசூழ்ச் சியினான்
முந்தா ரணமுந் தெரியா முதல்வன்
தந்தா னவனே தரவல் லவனே. 4

தலைவன் சரணஞ் சரணம் புகினம்
உலமந் தபவத் துயரோ டுமிவண்
அலமந் தவருந் துயருந் தவிர
நிலவுந் தொழிலென் றுநினைந் தனனே. 5

உத்தா லகவா ரணியப் பெயருற்
றித்தா ரணிபோற் றவிருந் தபதி
வித்தா ணவமாய்க் கும்விழுத் தவரோ
டத்தா னமகன் றடைவுற் றனனே. 6

---

3. காராக்கிருகம் - சிறைச்சாலை.

4. எந்து என்பது தெலுங்குச்சொல்; அஃது என்னை என்னும் பொருட்டு. ''அதெந்துவே யென்றருளாயே'' (திருவாசகம்).

6. உத்தாலக ஆரணியம் - திருக்குற்றாலத்தலம். வித்தாகிய ஆணவம். அத்தானம் - பிரமலோகம்.

வேறு

கரந்து வைகினுங் கற்றவர் தம்புகழ்
நிரந்து தோற்றப் படுவது நேர்மனுள்
பரந்த வேர்ப்பல வின்பழம் யாவர்க்கும்
சுரந்த வாசத்திற் றேற்றுமொர் பாலெலாம். 7

உறும்ப லாயிர வண்டமு டம்பெலாம்
பெறும்ப ராபரன் பெற்றிநி கர்ப்புற
நறும்ப லாயிர நன்கனி தூங்கிய
குறும்ப லாவின் குழாமொரு பாலெலாம். 8

ஆண வப்பிணி நீங்கவ ரும்பயன்
மாண நல்கரன் மானமந் திக்குலம்
காணு மென்கறி யைக்கறித் தாழ்பறழ்க்
கூணி ருங்கனி யூட்டுமொர் பாலெலாம். 9

அருவி தொட்டவ றைக்குழி மாத்தன
கருவி முந்திரி கைப்பழ மீந்தின
உருவ வின்மது வோடுகக் கேடின்றிப்
பருவ மன்றிப்ப யப்பவொர் பாலெலாம். 10

கால மன்றியுங் குற்றுக்க டவுளர்
பால ளிப்பப் படர்தவத் தாலளி
மேல டாதன போல்விரைச் சண்பகச்
சோலை விண்ணணந்து மூரவுமொர் பாலெலாம். 11

---

7. படுவது நேர் ஆகும் என முடிக்க.

9. ஆழ் - வருந்துகின்ற. உறைப்பு நீங்கக் கனிகொடுக்கும்.

10. பாறையிலுள்ள குழியானவை பயப்பன. மாத்தன - மாவின் கண் உள்ளன; எனவே, மாம்பழம் என்பது. கருவி - கூட்டம். ஈந்தின - ஈந்தில் உள்ளன.

11. இரவில் மொட்டாயிருத்தலால் வண்டுகள் மொய்க்கமாட்டா. விடியற்காலத்து அலரும் ஆகலின் வண்டு வீழும். அது வீழுமுன் மல ரெடுத்தல் வேண்டுமாகலின் 'காலமன்றியும் குற்று' என்றார். சண்பக மலரில் வண்டுகள் மொய்க்கமாட்டா என்க.

சுனைம லர்க்கணந் துற்றுவ வென்றுதேன்
இனைய வாளையி டித்திறை கொள்வபோல்
துனைய வும்பர்த்தொ டுத்தவி ருல்கிழீஇ
நனையு குக்குந லத்ததொர் பாலெலாம். 12

வண்டு போய்மலர்க் காந்தளின் மூசுதல்
கண்ட மூற்குட்க விழ்ந்தன வென்றுநீர்
நொண்டு நுண்டுளி தூஉய்ப்பெயர்த் தோகையுட்
கொண்டு மந்திகு னிக்குமொர் பாலெலாம். 13

இனிய செய்கையர் யாங்குள ரோவெனத்
துனியில் கேள்வியர் சூழ்ந்தனர் நேடல்போற்
புனித மென்கிழங் காதி புரைகிளைஇத்
தனிவில் வேடர்ச ரிப்பதொர் பாலெலாம். 14

தூசு மின்கல னும்விரை யுந்துதை
வேசி மாதரின் வேழக்க தலியில்
பூசல் வேழம் புணர்ந்துவி டுந்திறம்
ஆசு மில்பயம் பார்ந்ததொர் பாலெலாம். 15

வீங்கு தோட்குடை வேய்வியங் கோளுறீஇ
ஆங்க ணிற்பத மாவ ணங்கனார்
தாங்கு தீம்புனஞ் சார்புட்கு லந்தப
ஓங்கு முத்தெழ வூழ்க்குமொர் பாலெலாம். 16

---

12. தான் இருக்கும் சுனையில் சோலையிலுள்ள வண்டுகள் பூக்களை நிறைப்பன என்று. தேன் - வண்டு. இறை - தங்குதல். நனை - கள்.

13. பெயர்த்து - வண்டைப் பெயர்த்து. பிழைக்குச்செய்தோம் என ஓகைகொண்டு. நொண்டு - மொண்டு.

14. புரை கிளைஇ - தேடி.

15. கரும்பாலும் வாழையாலும் யானையைப் புணர்ந்து விடும்திறம் சிறிதும் இல்லாத பயம்பு. பயம்பு - யானை வீழும் படுகுழி என்க. ஆசும் - சிறிதும். பெரிய பள்ளம் வெட்டி மேலே மணலைப் பரப்பும் முறையால் பரப்பி, வாழை கரும்பு முதலியன வைத்து, நாற்புறத்தும் சிறிய வேலி எழுப்பி, ஒரு கொல்லைபோலத் தோற்றச்செய்து யானையினைப் பிடிப்பார் என்க. வேழக் கதலி - யானைக்கொம்பன் என்னும் வாழை என்பாரும் உளர். அது மலையில் உள்ளது.

16. தோட்கு உடை. பெண்களின் ஏவலை உற்று.

மென்மை யாரிடம் வாய்த்துமி குத்துறின்
வன்மை யார்வலி மாய்ப்பது காட்டுமென்
தன்மை யாரரு வித்திரள் சான்றகல்
புன்மை யாகப்பொ ளிந்தொரு பாலெலாம். 17

கெழுமு பாவங்கிட் டாதுபெ யர்ப்பபோல்
விழும வெள்ளரு வித்திரள் வீழ்வன
இழுமெ ஞேதையு மந்தரத் தின்னியம்
குழுமு மோதையுங் கூர்க்குமோர் பாலெலாம். 18

அரம்பு செய்பிணி தீர்வெறி யாட்டயர்
வரம்பிற் ெறாண்டக வங்கிய வோதையும்
நரம்பி னேழிசை நாவியற் பாடலும்
சுரம்பொற் கென்னத் துதையுமோர் பாலெலாம். 19

அற்ப கத்திமை யாரண்மிச் சிந்திய
கற்ப கக்கடிப் போதுங் கலன்களும்
பொற்ப கப்பொழில் கைசெய்தெ னப்பொலி
வெற்ப கத்துவி ளங்குமோர் பாலெலாம். 20

தென்றல் சந்தனஞ் செந்தமி ழென்றிவை
நன்ற ளிப்பந றும்பொதி யந்தழீஇ
நின்ற தாங்கொரு பாலென நீண்டவக்
குன்றெ லாமவை கூர்ந்தன மிக்கரோ. 21

---

17. பொளிந்து காட்டும் என முடிக்க.

18. வீழ்வனவற்ருல் உண்டாகும் ஓதையும். கூர்க்கும் - மிகும்.

19. அரம்பு - குறும்பு. தொண்டகம் - குறிஞ்சிப்பறை. வங்கியம் - ஊதுகொம்பு. சுரம் - சுரலோகம். பொற்கென்ன - பொலிவழிய; நிறம் வேறுபட என்பாரும் உளர்.

20. போதும் கலன்களும் ஓர்பாலெலாம் விளங்கும் என முடிக்க. சோலையானது மலையை அலங்கரித்தாற்போலப் பொலியும் வெற்பு என்க.

21. பொதியமானது தென்றல் முதலிய மூன்றையும் நல்கும் பொருட்டு ஓர்பாலில் தழுவி நின்றது என்று யாவரும் சொல்லும்படி அக்குன்றில் அவை இருந்தன என்க.

இருபு டைக்க ணிருபெருந் தேவரும்
மருவ நாப்பண் மதலையிற் றூங்கிய
ஒருபெ ரும்பெய ருத்தமன் போன்மெனப்
பொருவின் முத்தலை பூத்ததக் குன்றமே. 22

இச்சை ஞானந்தொ ழிலிவை மூன்றனோ
டச்ச னின்றனைத் தும்விளைத் தாலென
முச்சி ரத்தொடு நின்றுமு றைமுறை
பொச்ச மில்வளம் பூப்பதக் குன்றமே. 23

முத்தொ ழிற்குரி யாரொரு மூவரும்
எய்த்து றாமை யினிதுறத் தாங்கியோர்
கத்த னுண்டெனக் காட்டுமா தாரமாய்
அத்தி ரிக்குவ டேந்தும டுக்கலே. 24

மூன்று மெய்ப்பொருண் மூன்றுமொற் றித்தலில்
தோன்று மொன்றென வென்றுது ணிப்பபோன்
மூன்றெ னச்சிக ரமுகிழ்த் தொன்றெனத்
தோன்ற நிற்குமு லத்தினத் தொல்வரை. 25

ஈண்டுப் போந்தவ ரிமமைம றுமையும்
மீண்டு றுதமெய் வீடுமு றுபவென்
றூண்டுத் தானரு ளும்பயன் காட்டலும்
மாண்ட தான்மும்ம ணித்தலை யோங்கலே. 26

---

22. மதலை - பற்றுக்கோடு. நடுத்தலையை உருத்திரனாகக்கொள்க.

23. அத்தன் என்பது அச்சன் என விகாரமாயிற்று.

24. தாங்க. திரிக்குவடு - திரிகூடமலை. அடுக்கல் காட்டும்.

25. மெய்ப்பொருள் மூன்று - ந ம என்னும் இரண்டுமொழித் தொழிந்த சி வ ய என்பன. இது சூக்குமபஞ்சாக்கரம். இம்மூன்று அக்கரமும் பொருளினுல் ஒன்றில் அடங்கும். சி சிவம், வ சத்தி, ய உயிர், ந திரோதமலம், ம ஆணவமலம். மூன்றும் ஒற்றித்தலாவது பாசம் பசுவிலும், பசு பதியிலும் ஒன்றியவழி பதியொன்றாகவே மதிக்கப்படுதல். மெய்ப்பொருள் மூன்றும்; அம் மூன்றும் ஒற்றித்தலில் ஒன்றெனத் தோன்றும் என்க.

"சிம்முதலா வோதுவதே சீரென்று ராதலினுல்
நம்முதலா வோதுவதை நாடாதே — ஐம்முதலின்
மூன்றுநிற்பி ரண்டிழிவு முத்தியினிற் சத்தியமே
தோன்றவுண ரூன்றவுரைத் தோம்."

இங்ஙனமாகலின், மூன்றெழுத் ம் மெய்ப்பொருளெனப்படும்.

மூவர் மும்மறை மூவகை யாருயிர்
மூவ கைச்சுடர் மூவுல குந்தொழும்
மூவ ருந்தலை வன்னுரு மூவகைத்
தாவ துந்தெரிக் கும்மவ்வி லங்கலே. 27

இலைமு கப்பசும் பூண்களி டையிடைத்
தலைய மைத்தத னிவரை மார்பகம்
நிலையு மாரநி கர்த்திடும் பல்சுனை
உலைய வீழ்ந்திழிந் தாருரும ருவியே. 28

ஆங்கு நாதன ருணட மாடுதும்
ஓங்கு மப்பதி யொண்மைவ ளத்தினுக்
கியாங்கு மொப்பிலை யென்றும திந்துளம்
தாங்கு மின்பத்த ருக்கெனத் தக்கதே. 29

அனாதி யாகிய வண்ணல மர்ந்தவத்
தெனாதுத் தாலகத் தேத்தினை யண்மினன்
மனாதி மம்மர்த்த ணந்தும கிழ்கொள
இனாத தீர்க்குமி ருந்தவ மாற்றினன். 30

வேறு

வருவைகலின் வாராதெழு வாமான்மணி யிரதத்
தொருசெங்கதி ரமரன்றண வுறினும்வர வொழியா
அருவிப்புனன் முக்காலமு மாடிப்பொடி பூசித்
திருமல்கிய வருள்கண்மணி சிரமாதியி னணியா. 31

---

27. மூவரும், மும்மறையும், மூவகையுயிரும், மூவகைச்சுடரும், மூவுலகும் என அவ்விலங்கல் தெரிக்கும். அரு உரு அருவுரு எனத் தலைவன் உரு மூவகைத்து ஆதலையும் தெரிக்கும் அவ்விலங்கல் என முடிக்க. மூவரையும் என்று எல்லாவற்றையும் விரிக்க. மூவுயிர் விஞ்ஞானகலர் முதலியோர். யாவரானும் தொழப்படும் கெடுதற்கரிய தலைவன் என்க.

28. சுனை வீழும் அருவியானது இலைமுகப்பூண்கள் இடையிடையே நிலையும் ஆரம் நிகர்க்கும்.

29. ஆடுதலான கருத்து தருக்கு எனத் தக்கது என முடிக்க.

குழகன்றிரு வுருவாங்குறும் பலவுங்குழ கன்மெய்
நிழல்செய் தமர் குற்றுலமு நிமலந்தரு மிறைவன்
அழகொன்றிய சபையுந்தொழு தன்பாலருச் சனையும்
தழையச்சிவ லிங்கத்தினி யற்றித்தவ முறுநாள். 32

வட்டச்சடை யத்தாணியின் மலர்மெல்லணை மேலால்
அட்டுத்தழ லரவங்குடை யாகக்குளிர் மதியம்
விட்டுக்கதிர் விரியப்பயில் வீறுய்த்தருள் விமலன்
மொட்டுக்குவி முலைமாதுடன் முன்னேயெதிர் நின்றான். 33

கண்டானுடல் கவலைக்கட ருழக்கடி தெழுந்தான்
தண்டாமரை நுண்டாதுத யங்குந்தட மார்பம்
மண்டான்படி யத்தண்டென மலர்மெல்லடி வீழ்ந்தான்
கொண்டான்வல மெதிர்நின்றுகை குவியத்துதி புகல்வான். 34

எண்ணுதிகழ் தக்கன்மக மியற்றக்குழு முற்ற
விண்ணோருடல் சிதறுந்தனி வீரன்றனை யிகலி
மண்ணாழ்தர விழிகங்கைம டுத்துத்திறல் சிந்தும்
தண்ணார்மதி மிலைசெஞ்சடைத் தந்தாயடி போற்றி. 35

கழைவார்சிலை குழையக்கடி மலர்வாளிக ணிமிர
விழைபோர்புரி மதவேளுரு விளியத்தழல் வெந்தீ
உழைநேர்விழி யுமையாள்கர மொளிர்கண்ணிணை கதுவத்
தழைபேரிரு ளிரிகண்ணுமிழ் தலைவாவடி போற்றி. 36

---

32. சிவலிங்கத்தில் அருச்சனையும் இயற்றி.

33. மதியமானது அத்தாணியில் மேலால் பயில் வீறைக் கொடுத் தருளும் விமலன் என முடிக்க. தழல் அட்டு அரவம் - அக்கினியை நிறைக் கின்ற பாம்பு: தழல் ஈண்டுக் கோபாக்கினி.

34. தாழ்ந்துபோம்படி கண்டான். உடலுகின்ற கவலை. உடலல் - மாறுபடுத்துதல்.

35. வீரபத்திரனைச் சடையால் தந்தவனே. இகலி இழி கங்கை என முடிக்க.

36. கதுவலால் தழை இருள் என்க. விளியும்படி தழலுகின்ற வெந் தீயைக் கண்ணால் உமிழ்ந்த தலைவா என்க.

இன்னற்கட னடுவட்படி யெளியேமுறை கேளா
மன்னிக்கிள ரின்பக்கடல் வதிவித்தருள் செவியை
மின்னிக்கிளர் வன்னித்தலை வெதிர்பட்டிற வுலகம்
முன்னிக்கிள ருழைவாய்க்கருண் முதல்வாவடி போற்றி. 37

அழல்போலுயிர் முழுதுஞ்சுடு மனுராணவ மொருவக்
குழல்வாய்மொழி யுமைகாணமு கிழ்க்குங்குறு நகையால்
உழலாவுல கொருமூன்றினு முறையும்புர மூன்றும்
தழல்வாய்விழ மறநல்கிய தந்தாயடி போற்றி. 38

மருளாதுனை யறியும்வகை மாலாதியெல் லேமும்
ஒருவாதுணர் மறையாகம முதவுந்திரு வாயால்
தெருளாதுல கேழும்பொடி செய்யும்வளை யாளி
வெருளார்தர வுயிருண்டருள் விமலாவடி போற்றி. 39

இரந்தாருல கோரேழினு மிவரேயிறை யென்ன
வரந்தானனி யெளிவந்துவ ழங்குங்கர மலரின்
உரந்தாவிய வளியேன்சிர மொன்றென்றுய்யென வாங்கிப்
புரந்தானுடல் சூலத்திடு புனிதாவடி போற்றி. 40

முத்திப்பத மொருமூன்றொடு முழுதுங்கழு திரதம்
செத்துப்பணி யடியார்சிரஞ் சேர்த்தின்பருள் பாதத்
தெத்திக்கினும் விரையாக்கலி யிவர்வித்தம ரியமன்
மைத்துத்திணி யுடல்பொன்றிய வரதாவடி போற்றி. 41

---

37. உலகம் செவிடுபட்டு இறும்படி யாகத்தினின்று தோன்றிய மானைக்கண்டு அதன் முழக்குக்கு அஞ்சிய யாவரும் இம்மான் சிவபிரானை என் செய்யுமோ? என்று துக்கித்தகாலத்து அவர் அம்மானின் முழக்கத்துக்குத் தம் செவியைக்கொடுத்து அச்செவிக்கு அணித்தாகத் தம் கரத்தில் வைத்தனர் என்பது வரலாறு. கேட்டு வதிவித்தருள் செவி என்க. அச்செவியை மானினது வாய்க்கருளிய முதல்வா என்க.

38. ஒருவுதல் காரணமாக உமை காண என முடிக்க.

39. எல்லேமும் உணர்கின்ற மறையாகமம். வாயால் நரசிங்கத்தின் உயிரை உண்டருளிய விமலா. வளையையுடைய யாளி என்றமையால் விட்டுணுவாகிய நரசிங்கம் என்பது பெறுதும். எல்லேமும் மருளாது உன்னை அறியும்வகை என்று முடிக்க.

40. தாவிய - நீங்கிய. உலகத்தைப் புரந்தானாகிய மாலின் உடலைச் சூலத்திலிட்ட புனிதா என்க. உரம் - ஞானம். யாசித்தவரை ஏழுலகுக்கும் இவரே இறை என வழங்கும் கரமலர்.

41. முத்திப்பதம் என்பதனைப் பதமுத்தி என மாறுக. சாலோக, சாமீப, சாரூபங்கள் பதமுத்தி. பதமுத்தி மூன்றனோடு சுவர்க்காதிபோகம்

அருளசெய்பவன் புரிதண்டமு மருளேயெனு முண்மைத்
தெருளொன்றுமு ளத்தானருள் செயவந்தருண் முருகன்
வெருளொன்றிய புரிதண்டமு மருளாகிய மெய்ம்மைப்
பொருளொன்றிய வயனின்னன புகலுந்துதி கேளா. 42

எற்றுக்கிவ ணுற்றுத்தவ மினிதாற்றினை யென்னுக்
கற்றைச்சடை முடியான்கரு ணையினோடருள் செயலும்
வற்றிக்கவி னழிமேனியன் மழைகண்டெழு மயிலின்
முற்றக்கிள ருவகைக்கடன் முழுகுற்றெதிர் மொழிவான். 43

தவற்றிற்கதி நடைகண்டுத ருக்குக்கடன் முழுதும்
சுவற்றிக்கொடு நரகுந்துணை யாகாவிட ரேய்த்துக்
கவற்றிச்சிறை யிடுவித்தருள் கந்தப்பெரு மான்செய்
இவற்றுத்தொழில் யான்செய்கதி லென்றானெதிர் நின்றான். 44

அற்றேனின தார்வங்கம முலரோயிது கேண்மோ
செற்றார்படை செற்றித்தெறு ஞாட்பிற்றிர ணோக்கிப்
பற்றாதென மற்றைப்படை பணிசெய்திட நிற்கும்
முற்றாழல் வேலானல தருளன்முடி யாதால். 45

முழுவதையும் பேய்த்தேர்போல அறிந்து பணியும் அடியார் என்க. எனவே, பரமுத்தியில் இச்சையுடையராய்ப் பணியும் அடியார் என்றவாறு. கழுது இரதம் - பேய்த்தேர். செத்து - அறிந்து. பாதத்தால் இயமனுடைய உடலைப் பொன்றுவித்த. விரையாக்கலி - ஆணை. ஆக்கினையை இவர்வித்து அமரும் இயமன்.

42. உளத்தான் என்றது பிரமனை. உளத்தான் அயன் புகலும் துதி என முடிக்க. எவருக்கும் அருள் செயவே வந்தருளிய முருகன். உளத்தினுலே ஒன்றிய அயன் என முடிப்பாரும் உளர். வெருளொன்ற. அருளாகிய மெய்ம்மைப்பொருளே என்று உடம்பட்ட அயன் என்க.

44. தவறினிடத்துக் கதித்த நடையைக் கண்டு. இவற்றுத்தொழில் - ஆசைத்தொழில்; என்றது படைத்தல் தொழிலை. செய்க தில் என்பதில் தில் என்பது விழைவுப்பொருளை உணர்த்தும் இடைச்சொல்.

45. செற்றாரது படை என்க. மற்றைப்படை என்றது வேலினின்றும் உண்டாகும் பல படையை. அப் பல படைகளும் தன்பணியைச் செய்யத் தான் சும்மா நிற்கும் வேல் என்க. பற்றாதென நிற்கும் வேல்.

துறைமுற்றிய மறையாகம மங்கந்தொகு கலைகள்
இறைமுற்றிய விறையோனுல கெல்லாம்பணி குரவன்
நறைமுற்றிய விதழித்தொடை நாமுந்தொழு மாசான்
பொறைமுற்றிய வவன்வார்கழல் புகலேபுக லாமே. 46

எய்யாந்தவ றுடையார்க்கரு ளீயுந்திற நோற்பின்
கையாந்தவ ரொருவிக்களி யருள்வாங்கழல் போற்றி
மெய்யாந்தவ முழந்தாய்பிழை வித்தாய்நம தருளால்
மையாந்தநின் விழைவுய்த்தருள் வான்பாலுறல் பெற்றாய். 47

இனியன்னவ னருளுக்கொரு வைப்பாயில குவையால்
துனிவின்றுயர் தவமாற்றிய சூழென்றனன் கேட்டான்
புனிதன்முக மெதிர்நோக்குபு புலவர்க்கமிழ் தன்னான்
நனிவந்தெளி தருளுந்தல நவிலாயென நவில்வான். 48

குருதித்தசை மிசையுங்குடர் மாலைத்தலை வேலான்
சுருதித்தலை மொழியின்பொரு ளெம்மைத்துளக் குறுத்த
கருதிக்கதி யெவரும்புகு கணிகாசல முளதவ்
வொருதிக்கினு நிகரில்லதி னுறைகென்றும றைந்தான். 49

சேட்டாரண மறியான்மறை சிவலிங்கம்வ ணங்கித்
தீட்டாமொழி யறிவான்றிகழ் மகிழ்வோடுமெ ழுந்தான்
தோட்டாரணி யஞ்சூழ்பதி தொழுதான்விடை கொண்டான்
கூட்டார்கிளி தமிழ்தேர்தரு கூடற்பதி சார்ந்தான். 50

---

46. கலைகளால் தலைமை முற்றிய இறையோன்.

47. திறத்தை எய்யாம்: ''எய்யாமை அறியாமை''. நோற்பின் கையாம் - தவம் செய்யின் வெறுக்கமாட்டோம். நின்விழாவைக் கொடுத் தருள்பவன் ஆகிய முருகனிடத்தும் செல்லும் தன்மையை எம்மாற் பெற்றாய்.

48. முருகனைக் குறித்துத் தவம் ஆற்றச் சூழ்வாய் என்றனன். புனிதன் - சிவன். அமிழ்து அன்னான் - முருகவேள்.

49. முருகவேள் எமக்குப் பிரணவத்தை விளக்கிய கணிகாசலம் என்க. துளக்குறுத்த - விளக்கிய.

50. பதி என்றது திருக்குற்றாலத்தை.

எட்டெட்டருள் விளையாடல்செ யிறைவன்கழன் மலரின்
மட்டட்டிய குழலாளொடு வணங்கிப்புற னேகி
மொட்டொட்டிள முலைபங்கினன் முருகார்மலர்க் குறையூர்
அட்டிட்டசி ராப்பள்ளியை யடைந்தான்றெழு தகன்றான். 51

எண்ணத்துய ரியமாதவ ரீண்டும்புலி யூர்போய்
விண்ணத்துய ரியகோபுர மேகம்பர னுருவின்
வண்ணத்துய ரியதோலின்வ யங்காலய மெய்திக்
கண்ணத்துய ரியலாதறு கதிர்மன்றுப ணிந்தான். 52

ஆங்குப்புற விடைகொண்டன னன்னத்திரள் சேக்கும்
பூங்கட்கம லக்குப்பைகள் பொழிதேன்மணம் வீசத்
தேங்கும்புன லெழுவாளைக டெங்கம்பழஞ் சிந்தும்
வீங்கும்புகழ் திசைபோர்த்தவி யன்காஞ்சிய டுத்தான். 53

உயங்கும்பவ மோரேழினு முறுவல்வினை நீவித்
தயங்கும்பர போகந்தரு தனிமாநிழ லென்றும
வயங்குந்திரு வேகம்பனை வாழ்த்திப்பஃ றளியும்
நயங்கொண்டுப ணிந்தேத்தின னகரம்பிறக் கிட்டான். 54

எண்ணோங்கிய சீபூரண நகரெல்லைய கத்து
விண்ணோங்கிய புகழின்னகர் விளங்குங்குண திசையில்
தண்ணோங்கிய மதிதோய்வரை தனக்கோசனை யரையில்
பண்ணோங்கிய வாணிக்கொரு பதிநாவின னுற்றான். 55

வேறு

அண்டர் போற்று மடுக்கனேர்
கண்டு தாழ்ந்து கசிந்தனன்
பண்டை வேதம் பழிச்சினான்
மண்டு கட்புனல் வாக்கினான். 56

---

51. கடவுளானவர் மலருக்காக உறையூரை அழித்த சிராப்பள்ளி. (சாரமாமுனி - செவ்வந்திப்பூ - நந்தனவனம்)

52. கோபுரத்தின்மீதுள்ள மேகங்கள் கடவுளின் திருவுருவின்மீது உள்ள யானைத்தோலைப்போல வயங்குகின்றது என்க. கண்ண - கருத.

55. வாணிக்கு ஒரு இடமாகிய நா.

ஆண்டி லிங்க மமைத்தனன்
மாண்ட பூசை வயக்கினுன்
பூண்ட வேடப் பொலிவொடு
மூண்ட ருந்தவ முற்றினுன். 57

முதுமை மாதவர் மூசுதேன்
மதுவி ராங்தொடை வானவர்
பதும ஞேடு படர்ந்துசெல்
நுதுபு லத்தரு நோற்றனர். 58

விருத்த ராகிய மெய்த்தவர்
விருத்தங் தீர்தர மேவுமவ்
விருத்த வானகர் மேயதால்
விருத்த மாபுர மெய்ப்பெயர். 59

பொற்ற மாதவம் போற்றியே
ஒற்றை யாண்டொழி வெய்தலும்
பெற்று வெற்பிவர் பெற்றிமை
உற்ற னன்னுயர் மால்வரை. 60

வேறு

நைகரமி லன்போடு நண்ணும் வேதன்
செய்கழற்காற் குமரனமைத் திருவுங் தீர்த்தம்
பொய்கடியும் விதியாற்றிற் புகுந்து தோய்ந்து
மெய்கதுவும் வினைமுழுதும் விழைந்து செய்தான். 61

மட்டுவிரி பொழிற்குன்றம் வலம்வந் தேறிச்
சட்டவிடர் தபுமாவச் சகாயற் போற்றி
எட்டுருவாங் குமாரலிங்கத் திறைவன் பாதம்
அட்டுமது மலர்தூவி யஞ்சித் தானுல். 62

---

58. மாதவரும், வானவரும் பிரமனேடு படர்ந்து சென்ற அவித்த ஐம்புலத்தை யுடையவரும் நோற்றனர். நுது - அவித்த: ''நெய்யா லெரி நுதுப்பேம்'' என்னும் திருக்குறளான் (1148) அறிக.

59. விருத்தர் - முதியோர். விருத்தம் - வேறுபாடு, கேடு. விருத்து - புதுமை; வலித்தல் விகாரம். விருத்தராகிய மெய்த்தவர் விருத்தம் தீர்தர மேவும் நகர் என உடம்பொடுபுணர்த்திக் கூறியதே விருத்தபுரம் என்னும் பெயர்க்காரணம் என்க.

வானாதி பூதங்கள் வயக்கி மாற்றும்
ஆனாத பேரறிவா மடல்வே லண்ணல்
கானாரு மலர்ப்பாதங் கசிந்து தாழ்ந்தங்
கூனாதி யொருக்கியுணர் வயத்த னானான். 63

அன்றுபோய் வழிநாளங் கடுத்த கீழ்சார்
ஒன்றுநீர்ச் சுனைநோக்கி யுதனிற் றேய்ந்து
மன்றல்சூழ் சுனைத்தலையின் வைகி நாளும்
நன்றுமா தவமாற்று நடைமே தக்கான். 64

மறைகதித்த வாறெழுத்தின் வண்மை நாடி
முறைகணித்து முருகனருள் வடிவ முற்றப்
பொறைகதித்த வுளத்தமைத்துப் பொறிக ளோப்பி
நிறைகதித்த மாதவத்தி னிகழுங் காலை. 65

தன்னருளைப் பிழைப்பதே தண்டாச் செல்லல்
என்னுமது முன்றெரித்த விறைவன் மீட்டும்
தன்னருளைப் பெறுவதே தக்க வின்பம்
என்னுமது தெரிப்பவாங் கெதிரே தோன்றும். 66

வேறு

நலம்புரிந் தண்மி னோர்க ணண்ணிய வெம்மைப் போலக்
குலமபுரி தேவ தேவர் குருமணி முடிக டாழ
வலம்புரி முத்தம் போல வயங்குவ ரென்னு மாபோற்
சிலம்புகிண் கிணிகள் மற்றுஞ் சேவடித் துணையி னார்ப்ப. 67

வலத்தினர் கொள்ப வென்னு மரபினைத் தெரித்திட் டாங்கு
வலத்தனித் தாள்சேர்ந் தாண்மை மாற்றலர் கழலு மாற்றால்
நலத்தகு கழலென் றோது நகைமணிக் கழல்கண் டோரைக்
கலத்தலென் றுணர்த்து மாபோற் கலகல கலவென் றார்ப்ப. 68

---

65. ஆறெழுத்து - சடக்கரம்: அது 'சரவணபவ' என்பது. வேறுங் கூறுவர்.

68. வல்லமையுள்ளாரே கொள்வர் என்னும் மரபைத் தெரித்தாற் போல வலத்தாளிற் சேர்ந்து. வலத்தாள் - வலிமையுள்ளதாள், வலப் பக்கத்தாள் என இருபொருள் கொள்க. கலத்தல்: வியங்கோள்.

வெங்கதிர் மணிகால் யாத்த மேகலை மூன்று தாங்கும்
அங்கியு மிவனே யென்ன வறிவுறுப் பனபோ னின்ற
செங்கதிர்ப் பட்டுஞ் சேர்த்த திருவரை நாணு மும்பர்ப்
பொங்கொளிப் பட்டின சுற்றும் புகர்மல மூன்றுஞ் சீப்ப. 69

மூவரு மங்கத் தோர்பான் முகிழ்க்குமா செய்யு மாண்மை
மூவரை காட்டு மார்ப மொய்வரை யருவி யன்ன
மாவிரை பொங்கும் பூந்தார் மணிவடம் பொற்ரு ரெல்லாம்
நாவலர்க் கடங்காப் பொற்பி னருகதிர் பிணைந்து துள்ள. 70

பூமுத லைந்தற் கீத்தல் புணர்த்தமை தெரிக்கு மாபோல்
தாமரை மலர்ந்து கற்பந் தளிர்த்துத்தே னுவின்கா தாகிக்
காமுற வலம்பு ரிந்து கதிர்மணி முகிழ்த்த செங்கை
நாமற வஞ்ச லென்று வமைத்தரு ணயப்புத் தோன்ற. 71

ஆறிரு கோடி வெய்யோ ரனைவரு மொருங்கு கூடி
வீறினும் பரிதி முன்னர் வெண்கதி ரெனமை யாக்கும்
பேறிருங் கிரணக் கற்றைப் பெருவிலைச் சிறுக லாழி
மாறிரி யடியா ருள்ள முழுவதும் வளைத்துக் கொள்ள. 72

பிரமர்நா ரணர்பல் லோரைப் பெற்றெடுத் தவர்க்கு நல்க
வரமலி பாச மாழி வகுத்துவைத் திருப்ப தேய்க்கும்
உரமலி முன்கைச் சூழ்ந்த வொளிர்ந்தபொற் றொடரி னோடு
கிரணவொண் கடக மெங்குங் கேழொளி மயமாத் தேக்க. 73

---

69. மேகலை மூன்று - காருகபத்தியம் முதலிய மூன்று அக்கினிக்கும் சதுரம்ாகவும் வட்டமாகவும் முக்கோணமாகவும் யாககுண்டத்திற் செய்யப்படுவன. சுற்றும் - சுற்றுமாகிய மூன்று மேகலையும். அறிவுறுப்பன போற் சீப்ப என முடிக்க.

70. ஆண்மையை மூ வரை காட்டு மார்பம்: சிறந்த ஆடவர்க்கு இலக்கணமாய் மார்பினிடத்திருக்கும் மூன்று உத்தமரேகை.

. 71. பூ முதல் - பதுமநிதி முதலிய. புணர்த்தமை - கையாகியதான் கொடுத்தமையை. இரேகை வலம்புரியப்பெற்று. கற்பகத் தளிரைப் போலத் தளிர்த்து. மணிரேகை முகிழ்த்த என்க.

72. வீறினும் அவ்வனைவரும் மையாக்கும்படியான கிரணம் என்க. மையாக்கும் - மயங்கும். பன்னிரண்டுகோடி சூரியர். ஆழி - மோதிரம்.

73. பெற்றெடுத்து அவர்களுக்கு நல்கும்பொருட்டு. பிரமனுக்குப் பாசமும், விட்டுணுவுக்குச் சக்கரமும். பொற்றொடர் நெகிழ்ச்சியுளதாகலான் பாசம் என்றும், கடகம் கடினமாய் வட்டவடிவாய் வளைந்திருத்தலின் ஆழி எனவும் கூறினர். பொற்றொடர் - கொலுசு.

வரையரோ தோளன் றென்னும் வயிரவங் கதங்கண் முன்கைப்
புரைதபு கடக மிக்குப் பொலிபிர தாபங் காட்ட
நிரையிரா சதத்தின் மேலாய் நிகழுஞ்சாத் துவிகத் தாகும்
உரைதகு கீர்த்தி யும்ப ருற்றொளிர் முறைமை காட்ட. 74

கடகமங் கதங்க ணேரே கதிர்மதி மண்டி லத்தின்
சுடர்தர வும்ப ரங்கித் தொகுகதிர் மண்டி லஞ்செய்
படர்கதிர்க் குண்ட லங்கள் பரிதிபன் னிரண்டும் வேறு
தடவரை பெற்றொ ருங்கு சார்ந்தெழு காட்சி தோற்ற. 75

மண்டிலம் பிறழா தோங்க வயங்கித ழாயி ரஞ்சூழ்
முண்டக மேனின் றன்ன முகமதித் திலக மாதோ
கொண்டருந் தவர்கள் யோகிற் குறிக்கொடன் னுருவங் காட்டக்
கண்டரு கருணை வெள்ளங் கதித்தொழு கமிழ்திற் பாய. 76

இருவரா யிருந்து தான்வே றெனவவர் தமக்கு மேலாம்
ஒருவனே யென்ன வென்றூ ழொளிர்மதி யாகி வேறாய்
இருசுடர் விழிக்கு மீப்பா லிலகெரி விழிகொ லென்னப்
பொருநிய திலக மேலாற் பொழிகதிர்ப் பட்ட மின்ன. 77

---

75. கதிர் - சூரியன். இரண்டும் இருமண்டிலம்போலச் சுடர்தர. மண்டிலத்தைச் செய்யும் குண்டலம். சூரியமண்டிலத்துக்குமேல் சந்திர மண்டிலம், அதன்மேல் உள்ளது அக்கினிமண்டலம் என்க. பன்னிரண்டு குண்டலத்துக்கும் பன்னிரண்டு தோள்களையும் உதயகிரியாகக்கொள்க. கடகத்திற்குமேல் அங்கதம், அதன்மேல் குண்டலம் என்க.

76. மண்டிலம் - மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்கினை என்னும் ஆதாரம் ஆறும் ஓங்கி நிற்ப மேலே வயங்குகின்ற ஆயிரந்தோட்டு முண்டகமானது மேலே நின்றாலொத்த முகம். அம்முகத்திலுள்ள திலகமானது யோகிகள் குறிக்கொள்ளுதலால் அம்முண்டகத்தில் தங்கும் சிவன். தன் என்றது சிவத்தை. முண்டகத்தில் ஒழுகு அமிழ்து என்க. ஆறினும் ஓங்கிச் செல்ல. அதன்பின் வயங்குகின்ற என்பாரும் உளர். தாமரையாகச்சொன்ன முகத்திலுள்ள கண் என்க. அமிழ்து - தேன்.

77. இருவராய் - பிரம விஷ்ணுக்களாய். ஒருவன் - உருத்திரன். ஆகி வேறாய் இலகு எரி என்க. ஒளியுடைப்பொருள் எவையோ அவையெல்லாம் தேயுவின் தொடர்புடையனவாம்; அதுபற்றி என்றூழும், மதியுமாகி அவைகளினும் தலைமை தோன்ற அவற்றின்மேலே இலகும் எரிவிழி என்றார். மணி வயிரம் முதலிய எல்லாம் தேயுவின் சம்பந்தமாம். திலகத்தை எரி விழியாகக்கொள்க.

குவிதரு மாறு தாரக் குருமலர் மலர்த்து மாறு
சவிமுகப் பரிதி காப்பட் டவிர்சிவ னுருவஞ் செங்கேழ்
அவிர்மணித் திலக மீக்க ணலங்கிய விதானம் பட்டம்
இவர்கதி ரிலம்ப கந்தோ ரணமென வெழின்மிக் கீட்ட. 78

உதரபந் தனவோ ராழி யொளியுரப் பலகைப் பல்கைப்
பிதிருறுப் பெறுழ்த்தோட் சேக்கைப் பிணைமுகப் பரிதி பொற்
கதிர்மணிக் கிடுகு கூம்பு கவினிய மேற்போக் கென்ன [றேர்க்
முதிர்மணி தெரிந்து செய்த முயங்கொளி மோலி வாய்ப்ப. 79

அணிபரித் தொழுகி வார்ந்த வவிர்மணிச் செவிகள் சுற்றில்
பிணிமணி வடங்க டுக்கிப் பிறக்கிய தெனக்க வித்த
மணிமுடித் தேர்மேற் போக்கின் வார்கொடிக் குழாங்க ளாங்குத்
தணிவற வெழுந்து துள்ளுந் தண்கதிர்க் கொழுந்து காட்ட. 80

கருங்கடல் வரைப்பிற் செய்ய கதிரவ னெழுந்த தென்ன
ஒருங்கரத் தொகைக ளாறு மொண்சிறைக் கலாவ மஞ்ஞை
நெருங்குபல் வன்னப் புள்ளி நிகழுவெரிந் தலையிற் றோற்றி
மருங்குபல் கணமுஞ் சூழ மலரவ னெதிரே சென்றான். 81

விண்ணவர் சொரிபூ மாரி மெய்யெலா மினிமை யாக்கத்
தண்ணுமை பதலை தக்கை தகணிச்சங் குடமு ழாக்கள்
பண்ணிசை வீணை மற்றும் படர்செவிக் கினிமை யாக்க
உண்ணிறை தியான வேத னொளிர்விழி விடுத்துக்
[கண்டான். 82

---

78. ஆறு மலரையும் மலர்த்துகின்ற ஆறுமுகப் பரிதி என்க. ஆறு திலகமும் ஆறுமுகப் பரிதியினிடத்தும் தங்கிய ஆறு சிவமாம். இலம்பகம் - நெற்றிச்சூட்டு.

79. உதரபந்தனமாகிய ஒரு சக்கரத்தையும், மார்பாகிய பலகையையும், பன்னிரண்டு கைகளாகிய சுற்றுறுப்புக்களையும், தோளாகிய ஆசனத்தையும் உடைய பொற்றேர். முகமாகிய சூரியனது பொற்றேரின் மேற்போக்கென்ன மோலி வாய்ப்ப என முடிக்க.

80. சுற்றில் - தேரின் சுற்றுப்பக்கத்தில். செவிகள் என வார்ந்த என முடிக்க.

81. அரா என்பது அரவென நின்றது.

கதுமென வெழுந்து தன்னுட் கருதிய வுருவிற் ரோற்றும்
விதுவணி பெருமான் மைந்தன் விரைமலர்ப் போது தாழ்ந்து
குதுகலம் பொங்கக் கண்கள் கோட்டமெய் யிழுகு வெள்ளம்
முதுநில நனைப்பச் சூழ்ந்து முன்னின்று துதிகள் விண்டான். 83

வேறு

வானாதி பூத முதலான யாவும்
வருவித் தளித்தி யவைமற்
றானாத வாவி தொழிலிற் கிளர்ப்ப
வடைவிற் புணர்த்தி யவையாய்
ஊனாதி யூனி னுயிராதி யெண்ணி
லுயிருக்கு ணின்ற வுணர்வும்
தானாதி நின்னை யருளாகி நின்ற
தவரன்றி யாவ ரறிவார். 84

துதையத்து வாவும் வடிவென்ன மொய்த்தி
துகமரு மைந்து மனுவும்
வதிவுற்றி யக்கு முடலிற் பணித்தி
வளரைந்தொ ழிற்கு முதலாய்க்
கதுவுற்ற வொன்ப துருவுங்க லத்தி
கழலாத காய மறிவாத்
ததைகிற்றி நின்னை யருளாகி நின்ற
தவரன்றி யாவ ரறிவார். 85

---

83. தனது உள்ளத்திற் கருதிய உருவத்தின்படித் தோன்றிய மைந்தன். கண்களால் நீரைக்கொட்ட. மெய்யில் ஒழுகும் அக் கண்ணீர் வெள்ளம்.

84. அவை புணர்த்தி - வாளா இருந்த உயிரானது சகலாவத்தையிற் பொருந்தும்படி அவ்வைம்பூதங்களை உடலாகச் செய்கின்றாய். பின் ஆதி மூன்றற்கும் ஆகின்றாய் என்பது பொருள்.

85. ஆறத்துவா நீ. பஞ்சப்பிரமமந்திரம் ஐந்தையுமே உனக்கு வடிவாகக் கொள்வாய். வடிவம் அறிவாகப் பொருந்துகின்றாய். காயம் - வடிவம். ஒன்பது உரு - நவபேதம்; அவை பிரமா, விட்டுணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவம், விந்து, நாதம், சத்தி, சிவம் என்பன. காண்கிற்பார் - காணவல்லார். ''அவ்விடத் தவரையார் காண்கிற்பார்'' (சிலப்பதி - கொலைக்கள).

கலைகற்றி லாமை யிளமைக்க ணிற்றி
கலைமுற்று ணர்த்து முதிய
நிலைமைக்க ணிற்றி நிகழ்வேத மங்க
முதலாக நீடு கலைகள்
மலைவற்று ணர்த்து பொருண்முற்று மாதி
யவையொன்று மன்றி வளர்மெய்த்
தலைநிற்றி நின்னை யருளாகி நின்ற
தவரன்றி யாவ ரறிவார். 86

இழிவுற்ற டுத்த மலகேவ லத்தின்
இணர்வாய்ந்த லர்ந்த தருவின்
அழலொத்தி யாவி யுருவாதி யோடு
மணைவுற்ற போது சிலையின்
நிழலக்க திர்க்கு மனலொத்தி யன்ன
நிகழாத வீட்டி னயமார்
தழலொத்தி நின்னை யருளாகி நின்ற
தவரன்றி யாவ ரறிவார். 87

இருளத்து லப்பி லுயிர்மூழ்கி நிற்ப
இயல்விச்ச தேது மிலதாக்
கருணைத்தி றத்தி னலகற்ற வாவி
கருவிப்ப டுத்தி கருவி
மருவுற்ற வற்று ளுயிர்சில்ல வாங்கி
மயரற்ற சுத்த நிலையில்
தருகிற்றி நின்னை யருளாகி நின்ற
தவரன்றி யாவ ரறிவார். 88

---

86. கலை கற்றிலாமையையுடைய இளமைக்கண் என்க. கலைகள் உணர்த்து பொருள் என்க.

87. மல கேவலம் - உயிர் உடலுடன் கூடாமல் உள்ள நித்திய கேவலம். சகலாவத்தையில் அணைவுற்றபோது என்க. சிலை - கல். சகலாவத்தையில் நினைத்தால் சிறிது வெளிப்பட்டு நிற்பர். முத்தியில் இரும்பைத் தன்வயமாக்கி, மேற்பட்டுத்தோன்றும் அழலொத்தி. அயம் - இரும்பு. உரு ஆதி - தனு கரண புவன போகம். அன்ன நித்திய கேவலமும் சகலாவத்தையும்.

88. உடலோடு கூடாது மூழ்கி நிற்ப. வித்து விச்சு என்றாயது; ''விச்சதின்றியே விளைவு செய்குவாய்'' (திருவாசகம்) என்றதுபோல.

திளமாயை மோக விளையிற்பி ணைந்த
செறியாவி யின்ப நிலையில்
வளையாவி டுப்ப வுருமூன்றெ டுத்தி
வழியூடு கைத்து நலனை
விளையாவ ளித்தி வினையொப்பு றுத்தி
வினைமாயை மூல மலநோய்த்
தளைவீழ்த்தி நின்னை யருளாகி நின்ற
தவரன்றி யாவ ரறிவார். 89

உயங்கப்பி ணிக்கும் வினையுங்க ரந்து
ளுடனுய்மு டித்தி யதனை
வயங்கத்தெ ரித்தி மறுகத்த கர்த்தி
வளராமை நூலின் முறையின்
இயங்கப்பு குத்தி யெரிகும்பி யூடும்
இனைவித்தி தோய்த லிலையாய்த்
தயங்குற்றி நின்னை யருளாகி நின்ற
தவரன்றி யாவ ரறிவார். 90

அது காரணம் எனப் பொருள்படும். உடலோடு கூடிநின்று புண்ணியம் இயற்றும் உயிர் அதனோடு கூடாது மல கேவலத்தில் மூழ்கிக்கிடக்கும் காலையில் அப்புண்ணியம் இயற்ற இயலாது. புண்ணியம் இயற்றினால்தான் கருணைசெய்யக்கூடும். புண்ணியம் இயற்றமுடியாத மல கேவலத்தில் மூழ்கிக்கிடக்கவும் புண்ணியம் இயற்றலாகிய காரணம் இலதாகக் கருணைத் திறம் கிடைத்ததென்பார் அவ்வாறு கூறினர். கருணைத்திறத்தாற்படுத்தி. ஆவியைக் கருவியாற்படுத்தி எனவே, சகலாவத்தைக்குக் கொண்டுவந்து என்பது. கருவி - தத்துவங்கள். அவை உடல் முதலியன. கருவி மருவுற்ற வற்றுள் - கருவிகளை அடைந்த அவ்வுயிருள். அலகு அற்ற - அளவில்லாத.

89. ஆவியை வளைத்து விடுப்ப. உரு மூன்று - பிரமா விஷ்ணு உருத்திரன். நல்வழியில் செலுத்தி. விளையா - விளைத்து. வினையும் மாயையும் மூலமலமும் ஆகிய நோய்த்தளை. மூலமலம் - ஆணவமலம். வினை - கன்மமலம். மாயை - மாயாமலம்.

90. உள்ளத்தில் நீ மறைந்திருந்து உடனுகி எத்தொழிலையும் முடிக்கின்றாய், அவ்வாறு முடித்தும் நீதான் அத்தொழிலைச் செய்தாய் என்று வயங்கத் தெரிக்கின்றாய், அத்தொழிற்பயனைப் பின்பு புசிப்பித்துத் தண்டிக்கின்றாய், அத்தொழிற்பயன் வளராமலிருக்கும்படி உயிரை நூலினும் புகுத்துகின்றாய், அந்நூலில் புகுத்தல் செய்யாத உயிரை நரகத்தில் இனைவித்தி, நீ தோய்தல் இலையாய்த் தயங்குற்றி, வினையும் முடித்தி என முடிக்க. குற்றல் - செய்தல்.

வழிநின் றுநன் றுபுரிகால தன்றன்
வழிபோலு டற்று பயனும்
குழிநிற்ப வுய்த்தி கொடுமைத்தி றங்கள்
குயில்கால வற்றின் வழிபோற்
பழியற்று ணர்த்து பயனும்பு ணர்த்தி
பயனென் றுரூத திறமும
தழிநிற்றி நின்னை யருளாகி நின்ற
தவரன்றி யாவ ரறிவார். 91

நாளுற்றெ ழுந்த மதிபோன்ம லங்கள்
நலியத்து ரந்து வருதி
வாளுற்ற செய்ய சுடர்போல முற்று
மடியக்கி ளர்ந்து நிமிர்தி
ஆளத்த விர்ந்த திருமேனி தன்னை
அழலம்பி ழம்பி னறியத்
தாளுய்த்தி நின்னை யருளாகி நின்ற
தவரன்றி யாவ ரறிவார். 92

பகைசெய்து நிற்கு முலகேது முள்ளம
படராத வண்ண மொளியின்
மிகைசெய்தி ருத்தி யுடலூழெ னைத்தும்
விரவாமை யேற்று நுகரா
வகைசெய்து நிற்கு மறிவுங்கெ டுத்து
மறியாமை யின்ப நிலையில்
தகைசெய்தி நின்னை யருளாகி நின்ற
தவரன்றி யாவ ரறிவார். 93

---

91. "புண்ணியம் பாதகமாக" என்னும் செய்யுட் கருத்தேயாம். கொடுமைத்திறம் - பாதகம் (தீவினை).

92. மதி சிறிது சிறிதாக வளர்வதுபோலச் சிறிது சிறிதாக அருளைப் பதித்துத் துரந்து வருதி என்க. சந்திரனால் முற்றும் நீங்காத இருளைச் சூரியன் கெடுப்பதுபோல ஆசாரியமூர்த்தங்கொண்டு கிளர்ந்து நிமிர்த்தி. எவரையும் ஆளத்தங்கிய திருமேனியை அடியார்கள் சோதி சொரூபமாக உளத்தில் அறியும்படி முயற்சியிற் செலுத்துகின்றாய்.

93. உலகு - பிரவஞ்சம். ஏதும், எனைத்தும் - சிறிதும். சீவன்முத்தருக்குப் பிரவஞ்சம் சிறிதும் உளத்திற் பொருந்ாதவாறு சோதி செய்திருக்

கலங்காத நின்மெய் யருளிற் புகாத
கலதிக்கு ணத்தி பூழைதயேன்
விலங்கோடி ணைந்து மதியாத குற்றம்
விரவாமை யன்று கயிலை
நிலங்காதி விட்டி யருள்செய்யும் வைப்பு
நிமிர்பூர ணக்கி ரியெனும்
தலங்கோடி நின்னை யருளாகி நின்ற
தவரன்றி யாவ ரறிவார். 94

வேறு

வேத மத்தக மணைந்துகி டந்த
விழுப்பெ ருந்துதியெ டுத்துந வின்று
பேதை மைக்குணமி குத்தக ருத்தாற்
பீடி லாதசிறு நாயடி யேன்செய்
ஏத மத்தனையு மின்றுபொ றுத்திங்
கின்ன ருட்கருணை நல்குதி யென்று
மாதர் பொற்கமல பீடிகை மேலான்
மறுவ லுங்கழல்ப ணிந்துநி மிர்ந்தான். 95

மரக தக்கதிர்த ழைத்தக லாப
மஞ்ஞை மீதுவரு மஞ்ஞையொ டொப்பான்
வரந விற்றுதிவ ழங்குது மென்று
மகிழ்சி றந்துதிரு வாய்மலர் விண்டான்
பரவு வேதன்மகிழ் கூர்ந்துப டைக்கும்
பண்பெ னக்கருள்க வென்னவ ளித்து
விரவு பண்புடைமை யின்னும்வ ரங்கள்
வேண்டு கென்னவயன் வேண்டுத லுற்றான். 96

கின்றாய். உடலோடு விராய ஊழைச் சீவன்முத்தர் சிறிதும் பொருந்தாத படி நீ ஏற்றுக்கொண்டு, அச்சீவன்முத்தர் நுகராதிருக்கும்படி செய்து, தற்போதத்தையும் கெடுத்து. அறிவு - தற்போதம். மறியாமல். ஊழ் உண்டாவதற்கு உடல் ஏதுவாகலின் 'உடலூழ்' என்றார்.

94. இணைந்து - ஒத்து.

95. மத்தகம் - உச்சி. மாதர் - அழகு, காதல்.

96. அஞ்ஞை - அன்னை.

வேட்ட நல்வரம ளித்துவி டுக்கும்
வீறி லார்கள்பலர் விண்ணவர் மாட்டும்
வேட்ட நல்வரம னைத்தும்வ ழங்கார்
வேட்ட மாத்திரைவி ளைப்பவர் சில்லோர்
வேட்ட நல்வரம ளித்ததன் மேலும்
வேறு நல்வரம்வி ழைவிய ளிப்ப
வேட்ட வண்ணல்கரு ணைத்திற நோக்கி
விம்மி தப்புணரி விம்முமு ளத்தான். 97

சிறந்த பத்தியடி யேனின தாளிற்
செல்வ நல்குரவி னும்புரி வாழ்வு
மறந்து நின்னடியார் மாட்டுமி கந்த
மதிப்பு ருமையும்வி ருத்தபு ரிக்கண்
உறந்து வாழுநர்வெ றுக்கைய ராகி
உனனு கின்றகதி யெய்தலு மங்கண்
அறந்த ழைத்தசிவ லிங்கமி றைஞ்சும்
அன்ப ரென்னுலக மெய்தலும் வேண்டும். 98

இத்த லைப்படுதி ருத்தமெ னுமம்
எய்த வுந்தலைவ வினாறுவை காசி
ஒத்த பூரணைவி சாகம டுத்த
ஒண்மை யாலிவைய டுத்துறு காலைப்
பைத்த விப்புனல்ப டிந்தவர் மும்மைப்
பாத கங்களபல வுந்தப நூறி
மெத்து செல்வமலி யென்னுல கெய்தி
வீற வுங்கருணை நல்குதல் வேண்டும். 99

---

97. அளித்தனுப்பும் பெருமையில்லாதார் எனவே, வேட்ட வரங்களைக் கொடாதவர் என்பது பெறப்படும். வழங்காராய்.

98. உறந்து - மிகுந்து.

99. பாதகம் மூன்று. அவை பாதகம், உபபாதகம்; அதிபாதகம். பாதகம் - சூதாடல், கள்ளுண்ணல், பொய்சொல்லல் முதலியன. உபபாதகம் - பாதகம் செய்வோனுக்குத் துணையாயிருந்ததனுல் வரும் பாதகம். அதிபாதகம் - மாபாதகம்.

அளிய னிங்குநவி ரேருத்திர மோதும்
அன்பு ளார்கவிதை நான்குந டாத்தும்
களிமி குங்கவிக ளாகிவ ளங்கள்
கனுவி யெப்பிணியு முப்புடை கண்டாங்
கொளிசெய் நின்னுலக மெய்தலும் வேண்டும்
ஒருவ வென்னவர முற்றும ளித்து
நளிய ருட்புணரி யாங்கும றைந்து
நலத்த கோயிலினை நண்ணின னன்றே. 100

பவள வாய்ச்சிறக ரோதிம மூரும்
பண்ண வன்களித மைத்தன ளொகித்
துவளி டைக்கலைம ணுட்டியொ டண்மித்
தொன்று போலுலக ளித்திட லுற்றான்
குவளை பூத்தொளிரு மத்தகு தீர்த்தம்
கோத றும்பிரம தீர்த்தமெ னும்பேர்
திவளி ரும்புகழி னோடுவி ளங்கித்
தேவ ரும்படிய நின்றதை யன்றே. 101

எப்பெ ருங்கலையு ணர்ச்சிய ரேனும்
எப்பெ ருந்துயரு ழந்தவி டத்தும்
அப்பெ ருந்துயர மீட்டுமவி னைக்கும்
அத்த குந்தொழின்மு யங்குவ தன்றி
ஒப்ப ருந்தலைவன் மெய்யரு ளின்ப
உததி மூழ்கும்வகை தன்னமு முன்னார்
பப்ப ருந்துயர்பல் காலுமு ழந்தும்
பங்க யன்றொழிலை மீட்டனன் மாதோ. 102

விண்ண வர்க்கவியி னின்பம்வி ளைத்தும்
மேதி னிக்குமுறை யாவும்வி ளைத்தும்
கண்ணு தற்பர னடித்துணை நாளும்
காத லன்புவளர் பூசைவி ளைத்தும்

---

100. உப்புடைகண்டு - புறங்கண்டு.

101. திவளல் - விளங்குதல்.

102. மீட்டும் - பின்னும். துயர்செய்யும் படைத்தல்தொழிலைஎன்க. இச்செய்யுளால் பிரமனை இகழ்ந்தார்.

எண்ண மிக்கமுனி வீரய ஞேற்றங்
செய்த ருந்தொழின்மை பெற்றமை சொற்ரும்
அண்ண ணந்திதவ மாற்றுபு செவ்வேள்
அருள்கி டைத்தவுயர் காதைதெ ரிப்பாம். 103

பிரமன்சிருட்டிபெறுபடலம் முற்றிற்று

ஆகத்திருவிருத்தம்—718.

நந்தியுபதேசப்படலம்

மண்ணவருக் கிரும்புனலாய்த் தோன்ற நின்றே
மண்ணமிர்தும் விண்ணமிர்தும் வழாமை யாக்கும்
விண்ணவருக் கிருந்தீர்த்த மாகித் தோன்றி
விண்ணமிர்துஞ் சிவவுலகும் விரவ வுய்க்கும்
பண்ணரிய மாதவத்தோர்க் கருளாய்த் தோன்றிப்
பரபோக வமிர்தமாய்ப் பலியா நிற்கும்
நண்ணரிய புகழ்க்கடம்ப னழைப்ப நந்தி
நந்தினியாந் தத்துவா மிருதந் தானே. 1

வேறு

மாங்குயின் மிழற்றுமொழி மங்கையுமை யாளோர்
பாங்குற மடங்கலணை மீதுபயில் வெள்ளி
ஓங்கலி னொருத்தனுயி ரோம்பிய வெழுந்த
வீங்கருளி னோடினிதி ருந்தருளும் வேலை. 2

நெற்றிவிழி யாளர்நிமி ருந்தலைமை பூண்டோர்
துற்றதலை மாலைதவழ் தோளினர்க ளெல்லாம்
பிற்றகைய முற்றவிர்பெ ருந்தகைமை நந்தி
உற்றடிவ ணங்கினனு ளக்குறைதெ ரிப்பான். 3

ஓதுமறை யாகமமு யர்ந்தகலை முற்றும்
ஏதமக லக்கருணை நோக்கினெனை வைத்துத்
தீதறந வின்றுபொரு டெள்ளிதின ளித்தாய்
மேதகைய வாகம விழுப்பனுவன் மாட்டு. 4

1. நந்திக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தலால் நந்தி நந்தினி என்றும் பெயராயிற்று. நந்தம் - மகிழ்ச்சி. நந்தத்தைச் செய்வதனால் நந்தினி என்றாயிற்று. ஈன்றோர்க்கு மகிழ்வைச் செய்தலால் புதல்வனுக்கு நந்தன் என்றொரு பெயர் உளவாதலும் அறிக. இப்படலம் 8ஆம் செய்யுளிற் காண்க.

முப்பொருளி லக்கணமு முப்பொருளி னொன்றுச்
செப்புநின தின்னருள்செ றிந்தடியி னொன்றும்
அப்பெரிய முத்தியெனு மாரமிர்த வாரி
எப்பொழுது மூழ்குவது மெய்தலில னெந்தாய். 5

அன்னவை தெரித்தநின ழுத்திவிடல் வேண்டும்
தன்னிகரி லாநிமல சங்கரச யம்பு
கன்னியொரு பாககரு ணைப்புணரி யென்னாப்
பின்னரும்வ ணங்கிமுழு வற்கடல்பெ ருத்தான். 6

திருகுமிரு வல்வினைதி ருந்துபரி பாகம்
மருவுதலு றுத்திமெய்வ ழங்குமொரு வள்ளல்
கருணைநனி பொங்கியதெ னக்கதிர்கி ளர்ப்பக்
குருநகையி னந்திமகிழ் கொள்ளவருள் விள்ளும். 7

ஐந்தொழிலி யற்றரசி ருக்கைகயி லாயம்
ஐந்தொழில்க டந்தவரு ளாகுமஃ திங்கண்
அந்தின்மிக வுந்தெரிவு றுக்குமடை வில்லை
அந்தவரு ளுக்குரிய தாங்கணிக வெற்பு. 8

ஒருமறை நாடரிய வுண்மையெனு ஞானம்
ஆரவருள் பெற்றடிய ழுந்துமத னாற்சீ
பூரணகி ரிப்பெயர்பொ ருந்துமள வில்லா
ஏரணவு நம்முருவ மாயிலகு மன்றே. 9

எங்கணெவ ருஞ்சிறிது மேருந மக்கும்
அங்கணுயிர் யாவுமடி சேரும்வகை நாடித்
தங்குமிளை யோனருட ருங்குரவ னானோன்
புங்கவன வற்குநிகர் பூரியரும் விள்ளார். 10

---

5. இலக்கணமும் எய்தல் இலன், வாரியில் மூழ்குவதும் எய்தல் இலன் எனத் தனித்தனி முடிக்க. செப்பும் என்பதை நின் என்பதனோடு முடிக்க.

6. முழுவற் கடல் - எழுமையும் தொடர்ந்த அன்பாகிய கடல்.

8. அஃது - நீ விரும்பும் முத்தி. அருளாற் பெறப்படுவது முத்தி யாதலின் ஐந்தொழிலையும் கடந்த என்றார். அந்தில் : அசை.

9. அடியில் அழுந்திப் பூரணம் பெறுதலால் ஸ்ரீ பூரணகிரி என்க.

10. ஏர்தல் - ஒத்தல். நாடித்தங்கிய இளையோன். நமக்கும் குரவனானோன். புங்கவனாகிய அவனுக்கு. பூரியர் - கீழோர்.

வெய்யமல வேர்துவர வீட்டுநெறி யன்றிப்
பொய்யமல நின்றமதம் புக்கவரு நாளும்
ஐயனென வந்தடிய ணிந்தறமு ளாற்றி
உய்யும்வகை யுங்கருணை யுய்த்தவணி ருக்கும். 11

அன்னவனை யேசரண டைந்தவணி ருந்து
மன்னியபெ ருந்தவம்வ ழாதுபுரி கிற்பின்
துன்னுமறை நாடரிய தூத்தகைய வேணின்
நன்னருள மிக்குவகை நாறவெதிர் தோன்றி. 12

திரைத்துமணி சிந்திவரு தெய்வநதி யொன்று
விரைத்தவண டுத்துறவி ளித்ததின ழுத்திப்
புரைத்தசிவ வாரியும்பு குத்திவிடு மம்ம
உரைத்தநதி மூலமுமு ரைப்பமறி மைந்த. 13

வேறு

திருமகட் குரியதாய்ச் சிவனும் தன்னியல்
இருநிலந் தெரிப்பவவ் வேழை கொங்கையின்
உருவவன் கனிபடும் வில்வ மோங்கிய
பொருவில்சீர் வில்வமா புரமொன் றுள்ளதே. 14

இருடபு நமக்கர சிருக்கை யாகிய
திருவள ரத்தகு தேஎத்து நம்முடை
உருவமா யைங்குவட் டோங்க லுள்ளது
தருபெயர் வில்வமா சயில மென்பதே. 15

கஞ்சவெற் பென்னவுங் கரைவர் யோசனை
அஞ்சத னுயரமவ் வளவும் பூமியுள்
துஞ்சறச் சிகரமே தோன்ற நின்றெழில்
விஞ்சும்யோ சனையொன்று விரிவி னெல்லையே. 16

---

11. துவர வீட்டும் - முழுதுங்கெடுக்கும்; சைவசமய நெறியிலன்றிப் பிற சமயத்திற் புக்கவரும்.

12. வேள் நின் எனப் பிரிக்க. நன்னர் உளம்.

15. சிவபிரானுக்குரிய ஐம்முகங்களே ஐங்குவடாம் என்பார் 'நம்முடை உருவமாய்' என்றார்.

தெய்வமே கமழுமச் சிலம்பி னுச்சியில்
சைவதத் துவமய தீர்த்தந் தானுள
துய்வகை யெம்மொடா மொருமை யெய்துவான்
கொய்வளம் புகழ்ச்சனற் குமர னண்ணுபு. 17

தேங்கிய பெரும்புனற் றீர்த்த மாடுநீ இப்
பாங்கிருந் தருந்தவம் பயிற்றி நம்மடி
ஓங்கிய பூசனை யொழிவில் பத்திமை
தாங்கியாற் றுபுமகிழ் தழைப்ப வைகுமால். 18

அத்தகு திருத்தமங் காறு கொண்டெழு
உத்தம னுன்பொருட் டழைக்கு மென்றுபின்
வித்தகன் விடைதர வணங்கி மெய்யருள்
பொத்திய வுளத்தினன் போதன் மேயினன். 19

வேறு

கயிலையங் கிரியை வணங்கின னீங்கிக்
காமரு பேசுரம் பரவிப்
பயிலிய நாகே சுரஞ்சித்த விடமும்
பணிந்துமா மகேசுரந் தாழ்ந்து
வெயின்மணித் தேனு சிலைநன்கே தாரம்
வீமகோ டாரமு மிறைஞ்சிக்
குயினுழை சோலைக் கெண்டகை வளர்கூர்
மாசலந் தொழுதன னகன்றான். 20

பரவிய பிரம ரசலஞ் சித்த
பங்கமே மனேபங்க மெத்தி
உரனரு ளிடப மால்வரை யுருரு
பயிரவ மொளிர்விரூ பாக்கம்
வரநனி யருளும் வில்வகஞ் சோம
கேசுர மாரகங் காளம்
விரவிய சீர்த்திப் பிப்பிலா ரணியம்
வாரணா சியும்வியந் தகன்றான். 21

---

17. சிவதத்துவ தீர்த்தம் எனப் பெயர்.

20. தேனுசிலை - ஒருதலம். கெண்டகி தீரத்திலுள்ள கூர்மாசலம்.

21. வில்வகம், சோமகேசுரம், மாரகங்காளம்.

தெள்ளிய திரியம் பகந்தகு காளே
    சுரஞ்சங்க மேசுரந் தெரிசித்
தொள்ளொளி விரிக்கு மல்லிகார்ச் சுனமும்
    ஓங்குகா ளத்தியும் போற்றி
வள்ளவாய்க் கமல மிரவினும் விரிய
    வாளரா வுமிழ்ந்தசெம் மணிகள்
அள்ளொளி கதிர்க்கு மடுக்கல்சூழ் சீபூ
    ரணகிரி தொழுதுசென் றடுத்தான். 22

வெறிகமழ் கமல வோடையுந் தடமும்
    வேறுசூழ் வீராட்ட காசக்
குறிகுணங் கடந்த சச்சிதா னந்தன்
    குரைகழற் றாமரை வணங்கி
நறியசெங் கடப்பந் தாரணி சாமி
    நாதனை யாவயிற் பணிந்து
செறிபொழி லுடுத்து முகிற்படாம் போர்க்குஞ்
    சிலம்பினை யிவர்தரச் செல்வான். 23

வேயின முகுத்த நித்திலக் குவையும்
    விரிபணப் பொறியரா வுமிழ்ந்த
பாயிருள் பருகுஞ் செம்மணிக் குவாலும்
    படரிருள் குப்பைகொண் டன்ன
மாயிரு மணியும் பளிக்கின மணியும்
    மாறையின் றிரளுமோ ராங்குச்
சாயிளந் திங்கட் கண்ணியான் முகத்திற்
    றயங்குவ கண்டுள மகிழ்ந்தான். 24

முழங்கிசை யருவி வீழ்ந்தகழ் வரைப்பு
    முடலையாக் கையினெ றும்ப் பொருப்பர்
கிழங்ககழ் வரைப்பு மூடிக மகழுங்
    கேழ்கிளர் வரைப்புமொள் வயிரம்

---

22. மல்லிகார்ச்சுனம் - திருப்பருப்பதம்.

23. பொழிலை வஸ்திரமாக உடுத்து, முகிலைப் போர்வையாகப் போர்க்கும் சிலம்பு என்க. குறி - பெயர்.

24. மாயிரு மணி - நீலமணி. பளிக்கினவாகிய மணி. ஓராங்கு - ஒரு மிக்க. சாய் - கலைகுறைந்த. ஈசானம் முதலிய ஐந்து முகங்களும் ஐந்து நிறமுடையன ஆகலான் அவ்வாறு கூறினர்.

பழுங்கணுற் றழுங்க விறைகடி வலாரி
பற்றிய வச்சிரஞ் சிதர்த்துத்
தழங்கிசைக் குன்றந் தன்மிசை வீழ்த்திக்
கொண்டெனத் தயங்குவ கண்டான். 25

களிற்றினந் தம்முட் கலாங்கொடு கறைவன்
கால்பொரக் கழைமணி சிதர்ந்த
ஒளிற்றுவெண் பூழி போர்த்துவெள் ளென்ன
வுருவெலாங் கதிர்ப்பமிக் கிகலிப்
பிளிற்றொடு பொருவ முருகனைத் தவத்தாற்
பிடர்த்தலைச் சுமந்துவா னடுத்த
வெளிற்றுட லிபங்கள் பொருதுபோ ருழக்கும்
வேற்றுமை தோற்றுவ கண்டான். 26

செழுங்கலை மதியங் காண்டொறு மதன்றன்
சிலைகளுந் தீம்புனற் பெருக்கால்
கொழுங்குளிர் பெருக்க விரவிகாண் டொறுமக்
கொற்றவன் சிலைகளுங் கனலால்
அழுங்குருப் புறுத்தும் வரைநல்லூ ழடுப்பி
னொருநன் றேசெயத் தீதின்
விழுங்குவெந் துயரம் யாவருஞ் செய்யும்
வினைத்திறங் காட்டுவ கண்டான். 27

விடரளைப் பூழைத் தூங்குவீங் கிருளும்
வியன்றலை வாயிலிற் கிடந்த
சுடர்பளிக் கறையிற் றோற்றிய பரிதிச்
சாயையிற் றாவொளி யிரித்திட்

---

25. அவ்வரைப்புகளில் வயிரம் தயங்குவ கண்டான் என முடிக்க. மலையானது துன்புற்று அழுங்கும்படி என்க. இறை - சிறை.

26. கறை - உரல். அடி மிதித்தலால் உண்டாகும் முத்தின் துகள். சுமக்கும்பொருட்டு அடுத்த வெள்ளையானைகள் யான் சுமப்பேன், நீ சுமத்தலாகாது என்று போருழக்கும் என்க. பொருதல் தோற்றுவ என முடிக்க.

27. உருப்பு - வெப்பம். சந்திரகாந்தச் சிலைகள் பெருக்கா நிற்ப, சூரியகாந்தச் சிலைகள் உருப்புறுத்தும் வரையானது காட்டுவ என முடிக்க. ஆரும் - யாவரும். தீதடுத்தால். வரையை, நல்லூழ் அடுத்தும் ஒரு காலத்தில் தீதடுத்தும் உள்ள ஒருவனைக் கொள்க. சந்திரகாந்தம் நல்லூழ், சூரியகாந்தம் தீயூழ் என்க. சந்திர சூரியரை முறையே நன்று தீது செய்பவ ராகக் கொள்க.

டடர்மலந் துமியச் சிவப்பிர காச
மாகிய வடியரை யடுப்பின்
மடவருந் தூய ராவரென் றுரைக்கும்
வாய்மையைத் தெரிப்பன கண்டான். 28

இருவகை மாயை காரண மாக
விலகுபல் புவனமு மிழைத்து
மருவுமப் புவனத் துயிர்களைப் புரப்ப
வதிதரும் வள்ளல்போற் சிலம்பி
பொருவினால் வலந்து தங்கிய வலயம்
பொலிந்தபைம் பூவைகண் மாயன்
பரிதிமார் பணிந்த கருநிறத் தவுணப்
பதகனிற் றேன்றுவ கண்டான். 29

தூயவிஞ் ஞான கலர்க்கரு டானே
தோன்றுமா றெனமயிர்க் குட்டி
மேயவண் டுருவாய்த் தன்னுருக் கழிக்கும்
விம்மித மொருபுறங் காட்ட
நாயக னெதிர்நின் றருண்மய மாக்கு
நன்மையா ரெனப்புழுக் குளவி
யாயவற் புதமு மொருபுறங் காட்ட
வானந்த முகிழ்த்தெழக் கண்டான். 30

தாரெனப் பூக்கு மராமரந் தடைஇய
தாமங்க டூக்குபொன் னிதழி
ஏரியற் பாவை யேந்துபைங் குரவ
மீண்டுமா னுடம்பழு கிலுத்தம்

---

28. பூழையானது தன்னிலுள்ள இருளையும் இரித்திட்டுத் தெரிப்பன கண்டான் என முடிக்க. பளிக்கறையை அடியவராகவும், பரிதியைக் கடவுளாகவும், பூழையை மடவராகவும் கொள்க.

29. அப்பு வனத்து வதிதரும் வள்ளல் என்க. வலந்து - சுற்றி. பரிதி - சக்கரம். பதகன் - தாரகன்.

30. மயிர்க்குட்டி - முசுக்கொட்டைப்பூச்சி.

வேரியங் திமிசு மிரவிதே ராழி
மெலிய்வாங் கதற்கெதி ருருளை
நேருவ போலத் தேத்திருல் சுமந்து
நிமிர்வன விடங்தொறுங் கண்டான். 31

ஆயிரத் தோரெட் டண்டமும் பரிக்கும்
அவுணனை யஞ்சியாங் காங்கு
மேயின குலிசப் படையினரெல்லாம்
வேற்றுருக் கொண்டன ரண்மிப்
பாயின புகழான் பதந்தொழப் பெற்றுப்
பரிவுதீர்ந் தார்ப்பன போலக்
காயிலைப் பொழிற்கட் கண்படு முடலக்
களிமயி லகவுவ கண்டான். 32

கழிமதக் களிறு காருமென் றுளிய
கனைகுர லருவிகூ திருந்தேன்
பொழிமலர் மாலை விரிவமுன் பனியும்
வைகறைப் பூப்பபின் பனியும்
வழிவளர் வேள்வித் தீயிள வேனின்
மாதவத் தீமுது வேனில்
ஒழிவுறு மிருது தொறுமொழி யாத
விருதுவே றுஞற்றுவ கண்டான். 33

தெங்கினெண் பாளை வானர மிதிப்பத்
தீங்கனி துடுமென வீழ்ந்த
பொங்குநீர்ச் சுனையின் புடையுளர் தோகை
பொள்ளென வெரீஇமுழைச் சேப்ப

---

31. தடைஇய - பெருத்த. மானுடம் பழுத்த கிலுத்தம் என்க. கிலுத்தமரத்தின் காய் மனிதர்போன்றுளது. சூரியனது ஒரு உருளைக்கு ஆபத்து நேரிட்டபோது எதிர் உருளையைக் கொடுப்பதுபோல என்க.

33. காரும் - கார்காலமும். மாலைக்காலத்து விரிவனவாகிய வெண் மலர்கள் அம்மாலைக்காலத்து வெண்மையாய்த் தோன்றுகின்ற முன்பனி யாகவும், வைகறையில் மலர்வனவாகிய அவ்வெண்மலர்கள் அவ்வைகறை யில் வெண்மையாய்த் தோன்றும் பின்பனியாகவும். ஒருநாளில் முன் தோன்றும் பனி முன்பனி, பின்பு தோன்றும் பனி பின்பனி. தவம் செய்யு மிடத்து உண்டாகும் அக்கினி வேள்வித்தீயினும் மிக்கு எரிந்து கிளரும் ஆகையால் அவ்வாறு கூறினர். கூதிர்க்காலம் குளிர்காற்றோடு கூடி மேகத்தின் சிறுதிவலை பரந்திருக்கும் தன்மையுள்ளது என்க.

அங்கண்வா ளரவங் கமுகின்மேற் றுவ
வதன்தலைத் தவழ்சுட ரஞ்சித்
துங்கவன் கோயிற் கொடித்தலை மஞ்ஞைத்
துணையடி தாழ்வது கண்டான். 34

பொறிபடு துறுக லெனநினைந் துறங்கும்
புலிவெரிந் தலைநெறு நெறென
எறிசுடர்க் குவட்டின் முசுவிலங் கித்திட்
டெழுந்துயர் சோலையை வாவக்
கறிவளர் சார லுழுவைகண் மலர்த்துக்
கதுமென வெதிர்நிலைக் குவடு
முறிபடத் தாக்கி முதிர்சினங் கடவி
முழங்குபு வெள்குவ கண்டான். 35

காலணி சிலம்பிற் காய்க்கும்வெட் பாலை
சாலெனக் காய்படுங் கோங்கம்
வாலறு மணிலிற் காய்களு லிலவும்
வேலியின் வாங்கடி வரைதக்
கோலமுந் தீம்பூ மரங்கருப் பூரங்
குங்கும மிலவங்கங் கோட்டம்
ஏலமும் விடுக்கு முருகெதிர் கொள்ள
வெழில்வளங் கண்டுகண் டடுத்தான். 36

கரைத்தலை யண்ட மணைத்தடை கிடக்கும்
களிமயில் கயிலையந் தீர்த்தத்
திரைத்தலைச் சினையை நோக்கிய மீனம்
சிந்தைசெய் கூர்மமிம் மூன்றும்
விரைத்தபூங் கடம்ப னூற்றினு ளேக்கான்
விழுத்தக வுன்னலா னருளைத்
தரைத்தலை வழங்குந் திறத்தினைக் காட்ட
தழைத்தநெஞ் சொடும்புனல் படிந்தான். 37

---

34. சேப்ப - தங்க. அம்முழையிலிருந்த அரவம் என்க.

35. துறுகல் - குண்டுக்கல். மலையிலுள்ள முசு. விலங்கித்திட்டு - விலகி. கண்மலர்த்து - கண்விழித்து. எதிரே நிலைத்திருக்கும் குவட்டைத் தன் இனமாகிய புலிஎனக் கருதி. குவடு என்று அறிந்ததனால் வெள்குவன.

36. வாவிய தக்கோலக் கொடியும். தக்கோலம் - வால்மிளகு. தீம்பூ - கிராம்பு.

37. ஊறு, நோக்கு, உன்னல் எனத் தீக்கை மூவகைப்படும்.

வந்தடி பணிந்த மாதவர்க் கங்கை
மலரெடுத் தெதிர்ந்தவர்த் தழுவி
அந்திலா தனத்தி லிருந்தமூ தறிவோர்க்
கஞ்சலி வணக்கமு மளித்துக்
கொந்தவிழ் சோலைக் குன்றுசூழ் போகிக்
குருஉமணி குயின்றொளி யசும்பும்
சுந்தரச் சோபா னங்களி னிவர்ந்து
சுடர்மணிக் கோயிலைச் சார்ந்தான். 38

மணிகுயின் றெடுத்த மாடநீண் மறுகு
வலம்வந்து மயிலிருந் தகவும்
திணிநெடுங் கொடியு மூர்தியு நின்ற
திருமுன்னர்த் தாழ்ந்தெழுந் தேகித்
தணிகுந ரிடுக்கண் டாழ்த்தரு ளாவச்
சகாயனைத் தாண்மலர் பழிச்சித்
துணிமதி மலைத்த குமாரலிங் கத்துத்
துவரொளி வண்ணனைத் தொழுதான். 39

ஆவயி னகன்று புணர்தொறும் புதிதா
யணித்துமா யருமறைச் சிரமும்
பாவனைத் திறமுங் கடந்தெழு மின்பப்
படரொளிப் பிழம்புரு வான
ஆவியை யிச்சை யறிவொடு தொழிலென்
றவையொரு மூன்றுமூ விலையாய்
மேவிய மணிவேல் வலனுயர்த் தருளும்
வீரனை யனுக்கனுய்த் தொழுதான். 40

வேறு

விழிகா லருவிக ளடியூ டிழிதர
விரிபூ வனையகை முடியேறப்
பொழிமா மறைமொழி விரியப் புலன்வழி
விரியுற் றலமரு பொறிகூம்ப

---

40. ஆவியை, வீரனைத் தொழுதான்.

இழுதா யுருகுளம் வயிரத் தொடரென
விமிழ்கொண் டடிமல ரிறுகப்போய்த்
தொழுமா தரவின னுழுவற் றொடுகடன்
முழுகித் துளைபவன் வழிநாளான். 41

திரையுந் திரைதவழ் நறுநீர் முழுகுபு
திருநீ றுடன்முறை யொளிர்வித்து
விரைதண் மலர்தளிர் கனிகாய் மதுமுதல்
வெற்பிற் பொதுளுவ தழுவிச்சென்
றுரைநெஞ் சுடலமு மதியா முருகவ
தொளிர்தா ணறுமலர் வழிபட்டுக்
குரைபைம் புயறவழ் கிரிசூழ் பொழுதொரு
குகைமேற் றிசையெதிர் கண்ணுற்றான். 42

கோலத் திணிவரை வாய்விண் டனவொளிர்
குருமா மணிஞெமிர் குகையண்மி
ஞாலத் துயர்கெட வருவா னுயர்தவ
நன்றாற் றியவிது தகுமென்னாச்
சாலத் தனதுள நினைவின் றுழியுயிர்
தணிவுற் றுழியல தடிசேராச்
சீலத் திளையவ னருளா லொருமொழி
திகழ்வுற் றதுவிரி வெளியூடே. 43

வற்றா மதம்விளை பஞ்சேந் தியவரு
மலைவென் றவர்பலர் தவமூக்கிப்
பெற்றா ருயரிய சித்தித் திறமிவ
ணதனாற் பிழைதபு குகைநாமம்
கற்றா சொருவினர் சித்திக் குகையென
மொழிவார் கழிதவ மிதினீயும்
உற்றா தரியினி நந்திக் குகையென
வுரைதிக் கெழுமெனு மொழிகேளா. 44

---

41. உளம் முருகவேளது அடிமலரில் இறுகும்படி. உழுவல் - எழுமையும் தொடர்ந்த அன்பு.

43. ஞெமிர் - நெருங்கிய.

44. பஞ்சேந்திரியமான யானை. ஊக்கி - மேற்கொண்டு. திறம் பெற்றார்.

விடையம் பொறிவழி மறவிக் கனவினும்
வெஃகா தவைவிய வித்தட்கும்
நடைவிஞ் சியவுள மகிழ்மிக் கெழுதர
நந்திக் குரிசிற விர்ந்தியோகின்
இடையும் வளிநடு வழியூ டினிதெழ
வெழுதோ வியமென வசைவற்றுள்
அடையுஞ் சுடர்விழி யிருமுந் நிலைகளி
னடைவிற் படர்வன படர்வுற்றான். 45

ஆறு தாரமு முறையிற் கழிதலும்
அவிழா யிரவித ழரவிந்தத்
தேறு ரூடம தெனவைத் தருளிய
இறைபார்ப் பதியிரு புடைவைக
வீறுர் பலபரி சனமுங் கனலுற
வினைவென் றவர்பலர் தொழுதேத்தக்
கூறு வருமறை யோதப் பயில்வகை
குமரன் றிருவுரு நினைகின்றான். 46

வேதத் துயரிய வாறக் கரமனு
விரிநா வகமலர் பயில்கிற்ப
ஏதத் தனிமல வலிசிந் தியவுளம்
எழிலா ரிறைவன தடிமூழ்க
நாதத் தலைவளர் போதத் திருவுரு
நாளும் வழிபடு நலனேடும்
போதுற் றனனவன் வினையின் றிரிவொடு
போதுற் றனசது ருகநான்கு. 47

---

45. மறவி - மறந்தாயினும். வெஃகல் - விரும்பல். மறவி வெஃகாது வியவித் தட்கும் என்ற வினைகளின் கருத்தா உளம் என்று அறிகா யோகத் தினால் வருந்திய வளி என்க. அவ்வளியானது இடைகலை பிங்கலைகளில் இயங்காது சுழுமுனைநாடியில் இயங்க என்க. உள்ளே அடைந்திருக்கும் ஞானக்கண் ஆறு ஆதாரங்களினும் முறையே படர்வனவாக நந்தி படர்ந் தான் என்று அறிக. பொறிவழியே விடயத்தை வெஃகாது.

46. ஏறு - இடபம். ஆரூடம் - ஏறுதல்; என்றது ஈண்டு வாகனம். அரவிந்தத்தின்கண் குமரன் உரு நடுவேயாக வைக, கனலுற, ஏத்த, ஓதப் பொருந்துமாறு தியானித்தான்.

47. நாதாந்தத்தின் உச்சியில் வளரும் திருவுரு என்க.

விண்ணோ ரவுணர்கண் முதலா வனைவரும்
விற்றுன் றியவிவன் விழைவென்னெனன்
றெண்ணு வலமர விளைமா தவனிடை
எதிரின் றெழுதரு மருளோடும்
தண்ணார் மதிமுடி யிறைவர்க் கருளிய
தலைவன் மயின்மிசை யெதிர்நின்றான்
மண்ணு வொளிவிடு மணிபோல் பவனடி
மலர்வீழ்ந் தருமறை மொழிகிற்பான். 48

வேறு

தடவிய வுளத்துச் சேக்காத் தற்பரா னந்த போற்றி
இடவிய செய்ய நெஞ்சத் திறைகொளு மிறைவ போற்றி
மடவிய மலஞ்சே தித்து வரமருள் வள்ளல் போற்றி
நடவிய மஞ்ஞை யூர்தி நாயக போற்றி போற்றி. 49

வேதனு யுலகந் தோற்றி வேதனெண் ணரியாய் போற்றி
மாதவ னாகிக் காத்து மாதவற் கெய்தாய் போற்றி [போற்றி
போதனுய்த் துடைத்துப் பூத்து வேறுமாய்ப் பொலிந்தாய்
ஆதியீ றிடையு மாகி யவையொன்று மணுகாய் போற்றி. 50

ஐம்படை சுமந்த வாளி யண்ணற்கு மண்ணல் போற்றி
நம்பன்மெய் பாதி செய்த நாமவே னம்பி போற்றி
வெம்படை வீரர் தாழும் வீரர்க்கும வீர போற்றி
உம்பரி னும்பர் போற்று மும்பர்க்கு மும்ப போற்றி. 51

---

48. வில் - ஒளி. மாசில்லாத மணியாகலின், கழுவாமலே ஒளிவீசும் என்க; மாசு உண்மையால் ஏனைய மணி கழுவப்படும்.

49. தடவிய - பெரிய; எனவே, கடினமான என்றவாறு. தடம் என்பது கோணம் எனவும் பொருள்படும் ஆதலால் கோணலையுடைய உளம் என்பாரும் உளர்.

51. விஷ்ணுவாகிய வாள். அவ்வாளையுடைய கடவுளுக்கும் அண்ணல். ஐம்படை - ''சக்கரம் தனு வாள் தண்டு சங்கம், பற்றலர் மேல்விடும் பஞ்சாயுதமே'' (பிங்கல).

வெளியிடை யொன்றாய் நின்ற வெளிமுதல் வெளியே போற்றி
வளியிடை யிரண்டாய் நின்ற வளிமுதல் வளியே போற்றி
ஒளியிடை மூன்றாய் நின்ற வொளிமுத லொளியே போற்றி
தெளிபுன னான்காய் நின்ற தெளிபுனன் முதலே போற்றி. 52

படியிடை யைந்தாய் நின்ற படிமுதற் படியே போற்றி
சுடரிரண் டாகி நின்ற சுடரினுட் சுடரே போற்றி
உடலுயி ராகி நின்ற வுயிரினு ளுயிரே போற்றி
தொடர்செயெண் பொருளு மெய்யாத் துன்னிய புராண
போற்றி. 53

முந்திய பொருள்க ளெல்லாம் பிந்தமுந் துள்ளாய் போற்றி
பிந்துறு பொருள்க ளெல்லா முந்தப்பிந் துறுவாய் போற்றி
மந்திரப் பொருள்க ளெல்லாம் வழுத்துமந் திரத்தாய் போற்றி
வெந்திறற் படைகளெல்லாம் வியத்தகும் படையாய்போற்றி. 54

பொருள்வளர் குணங்கண் மூன்றும்
புரட்டுமெண் குணத்தாய் போற்றி
வெருள்வளர் தொழில்க ளெல்லாம்
விளிக்குமைந் தொழிலாய் போற்றி
மருள்வள ரறிவு முற்று
மாய்க்குமொள் ளறிவாய் போற்றி
இருள்வள ரிச்சை சிந்தும்
இச்சைமிக் குடையாய் போற்றி. 55

52. ஒன்று - சத்தம். வெளிக்கு முதலாயுள்ள ஒரு வெளியே. இரண்டு - சத்தம் பரிசம். மூன்று - சத்தம் பரிசம் ரூபம். நான்கு - சத்தம் பரிசம் ரூபம் ரசம்.

53. ஐந்து - அவைகளுடன் கந்தம். 'வெளியிடை' என்பதுமுதல் 'உயிரே போற்றி' என்பதுவரை அட்டமூர்த்தி வடிவம் கூறியவாறு. மெய்யா - வடிவமாக.

54. மந்திரார்த்தம் எல்லாம் என்றது மந்திரத்தாய் எனக் கூறும் தன் மந்திரம் அல்லாத ஏனையோர்க்கு உரிய மந்திரங்கள் என்க.

55. இராசதம் முதலிய முக்குணங்களையும் கெடுக்கும் எண்குணம்; சிருட்டி முதலிய பொருள்கள் வளர்தற்கு ஏதுவாகிய குணம்.

ஆணவ மூல மைந்து மலமெ.று மிருளோ ராறும்
ஏணறத் துமிப்ப வில்விட் டிலகறு முகத்தாய் போற்றி
பேணுறு திசைமேல் கீழும் பெருமிரு ஞான முய்ப்ப
மாணுறு வதனந் தோறு மலரிரு விழியாய் போற்றி. 56

மலர்முகப் பரிதி யஞ்சி வான்கதி ரிராறுந் தாழ்வுற்
றிலகுவ தென்னக் காதி லெரிமணிக் குழையாய் போற்றி
அலர்கதிர் வதனை வென்றாழ்க் கலர்ந்ததா மரைக ளென்னக்
குலவிய தளிர்க்கை யுந்தி குரைகழற் பதத்தாய் போற்றி. 57

தெறுதழற் பிணிகண் மண்ணுஞ் சிவகங்கை யானாய் போற்றி
வெறிகமழ் கபிலைக் கங்கைத் தீர்த்தமாய் விரிந்தாய் போற்றி
பிறவிதீர் ஞான சத்தி தானெனும் பெயராய் போற்றி
அறிஞர்சூழ்ந் தேத்துஞ் சீபூ ரணகிரிக் கதிப போற்றி. 58

நயந்தெதிர் பழிச்சி நின்ற நந்தியை யுடலந் தைவந்
துயங்கினை போலுஞ் சால வுயர்தவ முழந்தென் றையன்
வியந்துநீ வேட்ட தென்னே விளம்புதி தருது மென்றான்
முயங்கிய தவத்தான் மீட்டு முன்பணிந் திதனை வேண்டும். 59

வேறு

சிவதத்துவ வமிர்தப்பெயர் சிவனுங்குளிர் தீர்த்தம்
இவணுந்தியின் வருவித்ததி லெனைமுக்கியெ டுத்துப்
பவமுற்றிய பாசம்பசு பதியின்றிற மருளிச்
சிவதத்துவ வமிர்தக்கட நிகழ்வித்திடு கென்றான். 60

தெருளொன்றிய வரநல்கிய சீபூரண கிரியான்
நிருதித்திசை முகனும்பின னிகழ்தத்துவ வமிர்தம்
வருகென்றுகை மலரின்றலை வளைவித்தலு முக்கால்
வெருவிச்சன முளையும்படி விரைவுற்றது வருமால். 61

---

56. ஆணவ மூலம் - ஆணவமாகிய மூலமலம். ஐந்துமலம் - ஆணவம், மாயை, கன்மம், மாயேயம், திரோதாயி என்பன. நான்கு திசையும் மேலும் கீழும் ஆகிய ஆறிடத்தும் பரம் அபரம் என்னும் இரண்டு ஞானத்தையும் கொடுக்க மலர்ந்த விழி என்க. ஒவ்வொரு திசைக்கும் இரண்டு ஞானத்தையும் கொடுக்கும்பொருட்டே விழி பன்னிரண்டாகப் பெற்றான்.

61. முக்கால் வளைவித்தலும்.

மங்கைக்கிட மிடமாகிய வரதன்முடி மடுவில்
கங்கைப்புனல் பொங்கிப்புடை கவிழ்கின்றது நிகரத்
துங்கக்கிரி முடியிற்றவிர் தோயங்கடி திழியா
அங்கட்புவி கிழியப்பட ராருயெழு தருமே. 62

சந்தக்குற டகிலின்றுணி தரளக்குவை பெயரா
உந்திக்கன வயிரங்களொ துக்கிப்புடை யெதிரும்
கொந்துற்றலர் தருவுங்குவ டுகளுந்தலை மறியப்
பந்தப்படு சிறையும்பல பறையக்கடு கியதே. 63

ஒளிர்பொன்னணி மலைமாதுள முளையப்புவி வீழா
நெளியப்புடை தவழாவுட னிமிராநடை கொள்ளா
வளிபிற்பட வோடாமலி மழலைக்குரல் பயிலும்
அளிமுற்றிய சிவதத்துவ வமிர்தப்புனன் மகவே. 64

மலதத்துவ விருள்கண்டெதிர் மருவத்தவ வெருவி
அலறிப்புடை யிரிவுற்றென வருவிக்கட கரிகள்
பலவன்றிக ளுளியங்கலை பதறிக்குளி ரொலியின்
விலகும்படி விரிவுற்றது சிவதத்துவ வமிர்தம். 65

நஞ்சேந்திரு ளரவந்தபுத் தரவங்கொடு நலியும்
பஞ்சேந்திய விபமாதபுத் திபமாபல தழுவி
மஞ்சேந்திய காயந்தொக வருகாயம கற்றி
அஞ்சேலென வுலவுற்றது சிவதத்துவ வமிர்தம். 66

இரண்டற்றொளிர் சிவதத்துவ மினிதுய்த்தருள் புகழ்போல்
வரண்டித்திரை தருவித்தில மணியும்பன்ம ருப்புக்
குரண்டத்தொகை யன்னத்திரள் குருகின்கணம் வளைகள்
திரண்டொத்தது நுரைபொங்கிய சிவதத்துவ வமிர்தம். 67

---

63. சிறை - அணை.

64. மலையாகிய மாது. மகவு பயிலும் என முடிக்க.

65. நதியின் குளிறு ஒலியால் என்க. இம்மிருகங்கள் கரியன ஆகலின் அம்மல இருளாகக் கூறினர். நதிக்கு எதிரே மருவ அஞ்சி. கலை - மான். கிருஷ்ணசினம் - கருநிறமுடைய மான்.

66. ஆணவ இருளாகிய பாம்பைத் தபுத்து. பின்னைய அரவம் முழக்கம். பஞ்சேந்திரியமாகிய யானைகளை அகற்றி, தழுவி, உலவுற்றது என முடிக்க. தன்னிடத்துவந்த சரீரத்தை ஒரிடத்து அகற்றி.

67. இவைகள் இரண்டு புகழ்போல ஒத்தது என முடிக்க; போல் என்பதை அசையாக்கிப் புகழை ஒத்தது என முடிப்பினும் பொருந்தும். நதியானது சிவதத்துவத்தை உய்த்து அருளால் உண்டாகிய புகழ் என்க.

கலவும்பொறி விடயம்படை காமாதிக ளாக்கி
நிலவிஞ்சியி னரையற்றப நிகழுந்தனி யொளிபோல்
அலர்குங்கும மருதந்தளி ரவிரிங்குலி கங்கொண்
டுலவுற்றது சிவதத்துவ வமிர்தப்புன லுந்தி. 68

வேறு

சிலம்படி சிலம்பச் சூழ்ந்து தீங்குழற் கானந் தோற்றி
அலந்தவிர் பண்ணை முற்றி யாழிகைக் கொள்ளு நீத்தக்
குலம்புரி நங்கை செவ்வேள் குன்றினை வலமாய்ச் சூழ்ந்து
நலம்புரிந் தருள்வீ ராட்ட காசத்தை நண்ணிற் றுலோ. 69

அங்கண்வீற் றருளு முக்க ணமலனைக் குமர வேளைச்
செங்கழற் போது போற்றிச் சிவகங்கை மருங்கு தாழ்ந்து
வங்கமொன் றென்றின் முட்டி மறிதரச் சேர்ப்ப ரார்ப்பப்
பொங்குவெண் டரங்கத் தெண்ணீர்ப் பொருகடல் கிழித்த
[தன்றே. 70

சுரும்புகண் டுளித்த தேறற் றுய்த்திசை முரன்று மூசும்
கரும்பொடு மசோகஞ் சூதங் கமலமுற் பலமே முல்லை
பெரும்புன றழுவும் பெற்றி பெட்டுவீ டாடு வோர்பால்
பொரும்பரி சறவேள் செங்கைப் போர்ப்படை பறித்த தொக்கும்.

தத்துவ வமிர்த மென்னுந் தற்பரந் தீர்த்த மாயும்
தத்துவ வமிர்த நாமந் தரித்தெனக் கொன்றை தும்பை
மத்தம்வெள் ளெருக்க டம்பு வன்னிபா சறுகு கோடென்
றித்திற வணியு முன்போ லிசைந்துருக் கவினத் தோன்றும். 72

---

68. பொறிகளையும், விடயங்களையும், காமாதிகளையும் படைகளாக ஆக்கி. உடலை மதிலாகவும், உடலில் உள்ள உயிரை அம்மதில் அரணுகவும் கொள்க. ஒளி - பிரதாபம். விடயத்தை எந்திரமாக்கிக் காமாதிகளைப் படையாக்கி என்பாரும் உளர்.

69. பண்ணை என்பதை நங்கைக்கு விளையாடிடம் என்க; நதிக்குத் தீங்குழல் ஓசையமைந்த முல்லைக்கானத்தில் தோற்றி என்க.

71. சுரும்பு துய்த்து. துய்த்து - உண்டு. கணுவில் துளித்த. வீடு பெட்டு மூழ்குவாரிடத்து.

72. தத்துவ அமிர்தம் என்றது முன்னையது முத்தி. தற்பரம் என்றது கடவுளை. தீர்த்தத்தைக் கடவுளாகக் கூறினர். தத்துவ அமிர்தமாகிய கடவுள் தீர்த்தமானகாலத்தும் அப்பெயரைத் தரித்ததற்கு இயைதர என்க.

காத்தலை மருவ லானுங் கடிதடந் தோற்ற லானும்
பூத்தலை மலைத லானும் போகமும் புணர்த்த லானும்
ஏத்துவிண் ணவருந் தாழ வின்னிசை யெழுப்ப லானும்
கூத்தொடு மியற லானுங் கூத்தியர் புரையும் வாரி. 73

கொக்கின மிறுத்த லானுந் தோலொடு குலாவ லானும்
அக்கரை வளைத்த லானு மாடுறு மரவத் தானும்
முக்கணெம் பெருமான் செவ்வேள் முருகனென் றிருவர் போலும்
தொக்கபன் மணியுஞ் சாந்துந் துறைதுறை கஞற்றும் வாரி. 74

தானங்கைக் கோட லானுந் தருவரை யடங்க லானும்
கானங்கொ டருவின் மாதர் களிதழைப் பித்த லானும்
வானங்கொ ளிறைமால் வேழ மூவரு மானு மென்ப
பேனங்கொண் டார்த்துப் பைத்துப் பெருங்கடன் மடுக்கும்
[வெள்ளம். 75

---

73. கூத்தியர்: காவினிடத்துத் தோன்றல், அரையைத் தோற்று வித்தல், பூவைத் தலையில் மலைதல், போகத்தைப் பொருந்துதல், இனிய இசையை எழுப்பல் எனக் கொள்க. வாரி: காத்தலைப் பொருந்தல், மணம் பொருந்திய தடாகத்தில் தோன்றல், பூக்களை இடந்தொறும் பொருந் துதல், போகங்களையெல்லாம் பொருந்துவித்தல், ஒலி எழுப்பல் (கீர்த்தி). வாரி - நீர்.

74. நீர்: கொக்குகள் தங்குதல், நீர்யானைகள் பொருந்துதல், அழகிய கரையை வளைத்தல், மூழ்குதலால் உண்டாகும் அரவமிருத்தல்.

முக்கட்கடவுள்: கொக்கிறகு சூடுதல், மான்தோல் புலித்தோல் யானைத்தோல் இவை விளங்குதல், அக்கு அரையில் வளைத்தல், ஆடுகின்ற பாம்பு.

முருகவேள்: மாவைத்தடிதல். தோல் - அழகு. அக்கரை வளைத்தல் - எலும்பு மாலையுடையவரை வணங்கச்செய்தல். ஆடுறும் மரவம் - அசை கின்ற கடம்பு.

75. தானம் - சுவர்க்கம், மாவலிகொடுத்த தானம், மதம். இடங் கள். தகு வரை அடங்கல் - தக்க மலைகள் அடங்குதல், அரக்கர்கள் அடங்குதல்: ஐசாரியை. குத்துக்கோலுக்கு அடங்கல், மலையில் அடங்கல். வரை - மூங்கிலாகிய குத்துக்கோல். இரண்டாம் அடி: கற்பகத்தின் அடியில் அரம்பையருக்கு மகிழ்ச்சி தழைப்பித்தல், புல்லாங்குழலால் அழகிய மகிழ்ச்சி தழைப்பித்தல், மரத்தினது அழகிய களிப்பைச்செய்யும் தழை யைப் பித்தல். இதுவே நதிக்குமாம். தரு - புல்லாங்குழல். கானம் - இசை.

கடம்படு தோற்றத் தானுங் கடலகம் புகுத லானும்
இடம்படு கோட்டி னானு மிபமுக னேர்த லானும்
தடம்படு துளைக்கைச் செம்மல் சண்முகன் பொதியத் தோன்றல்
குடம்படு மாலிந் நால்வர் போன்றது குரைநீர் வெள்ளம். 76

கலைவளங் கோட லானுங் கரமலை யிருத்த லானும்
நிலனிலை யாகுந் தோற்ற நிகழ்தரு புணர்ப்பி னானும்
அலர்புக ழீசன் மாயோ னகத்தியன் மாதர் வெற்பென்
றிலகுமிவ் வைவ ரோடு மிணைவது பொருநீர் நீத்தம். 77

இனையபல் வளத்தி னோடு மியங்குநீர் நதியை நோக்கி
வனைபுகழ்க் கடப்பந் தாரான் மலரவிழ் கடைக்கண் வெள்ளம்
நனைதர வெதிர்நின் றானை நனைநதி யாடு கென்றான்
வினையிகு நந்திப் புத்தேள் விதியுளி யதன்கட் டோய்ந்தான். 78

கொடுங்குழை மகளிர் கொங்கைக் குங்கும வளறு போல
இடுங்களி பாங்கர்த் துன்ன வெழுநதி தோய்ந்த நந்தி
அடங்கரும் பிறவிப் பௌவ மதினின்று மேறு கின்றான்
தடங்கரை யேறி யுள்ளந் தழைத்தெழு மகிழ்ச்சி கொண்டான்.

---

76. அகத்தியருக்குக் கடம் குடம் எனப் பொருள்படும். கடம் என்பது விஷ்ணுவுக்கு முல்லைநிலம். கோடு என்பது நதிக்குக்கரை, விநாயகருக்கு இடதுபக்கத்திற் கொம்பு, சண்முகருக்கும் அகத்தியருக்கும் மலை, மாலுக்குச் சங்கம், நதிக்கு யானை உகநேர்தலானும், விநாயகருக்கு யானையின் முகம் நேர்தலாலும், சண்முகருக்குத் தாரகன் நேர்தலினாலும், அகத்தியருக்குக் காவிரியின்பொருட்டு விநாயகர் நேர்தலினாலும், விஷ்ணுவுக்குக் கயேந்திரன் என்னும் யானையானது முதலையால் உகாநிற்பத் தான் நேர்ந்து சென்றமையாலும் என்க.

77. கலைவளம் - சந்திரனாகிய ஒருகலை வளரும் வளம், இலக்குமியான மான் வளம் கொள்ளுதல், சாஸ்திரவளம், வஸ்திரவளம், கல்லை வளமாகக் கொள்ளுதல், தன்னால் கலைந்துபோகும் வளப்பத்தைக் கொள்ளுதல். கர மலை இருத்தல் - கையில் மேருமலையாகிய வில் இருத்தல், ஒளி பொருந்திய பாற்கடலில் இருத்தல் அல்லது கையில் கோவர்த்தனகிரி இருத்தல், ஆசமிக்கக் கையில் கடல் இருத்தல், நஞ்சு உண்டாகும் கடல் போலும் கண்கள் இருத்தல், யானைகள் இருத்தல். இதுவே நதிக்கும் ஆம். இரண்டாம் அடி: உலகம் இல்லையாகும் சங்காரம், உலகு நிலையாகும் திதி, பூமி சமமாகும் தோற்றம், உலகம் நிலைபெறும்படியான சையோகமிருத்தல், யானைகள் இருத்தல். இதுவே நதிக்குமாம். கரம் - ஒளி, நஞ்சம். கலை - சந்திரன். அலை - கடல்போலும் கண்கள்.

78. நனைக்கும்படியான நதி. 79. களி - வண்டல்.

வம்பணி முலையி னுரு மாழையு மண்ணு மெல்லாம்
வம்பெனக் கடந்த நந்தி யின்னண மகிழ்ந்த வாற்றால்
வம்பவிழ் மலரும் பொன்னு மணிகளு மணிந்து செல்லும்
வம்பெழு நதிப்பேர் நந்தி நந்தினி யென்ப மாதோ. 80

வேறு

நெஞ்சந் தூய நிறைதவ நந்திபின்
மஞ்ச னைத்தணி கைப்பதி வள்ளலைக்
கஞ்சம் வென்ற கழலிணை தாழ்ந்தெழீஇ
விஞ்சு மன்பின் விளம்புதன் மேயினன். 81

மூவ ருக்கரி யாயருண் மொய்ம்பினால்
தேவ ருக்கரி தாந்திருப் பெற்றுளேன
ஓவி லின்பவு ததிய முந்திய
தாவி லுண்மையி னித்தரத் தாங்குவல். 82

அன்ன வூர்திய கந்தைய கழ்ந்தொரீஇத்
துன்ன ரும்பயன் றுய்ப்பவ முங்கிய
முன்ன ருந்தணி கைக்கொரு முன்னவ
இன்னு மோர்வர மீகென வேண்டுவான். 83

வேறு

விமலமா ரனந்த ரூபமா தேவ
விச்சுவ நாதமா போக
சமன்வித சர்வா பின்னவென் றுரைத்துத்
தைமதிப் பூசநாட் புலரிக்
கமலமும் வளையு மப்பெயர் நிதிதற்
கண்டவர் தமக்கெலா முதவ
இமிழ்திரைக் கரத்தி னேந்திய தெனமிக்
கிணங்குமிந் நதிப்புனல் படிந்தோர். 84

---

82. அழுந்திய - அழுந்த.

84. சமன்வித சர்வாபின்ன என ஓர் பெயராக்குக. சமானமாகச் சர்வத்தினும் அபின்னமாயுள்ளவன். புலரியிற் படிந்தோர் எனவும், கமலமும் வளையும் மிக்கு இணங்கும் எனவும், நிதியை உதவ எனவும் முடிக்க.

கேவல சகலங் கடந்தவைந் தவத்தைக்
கிளரொளி முத்தியை யுறுக
தேவநின் மயவிக் கிரகவத் துவய
சிவசச்சி தானந்த நிரிக
மேவரு சங்க பூரண நிமல
வெனமுக்கால் விளம்பிமூ வருடம்
தாவருங் கண்ண பக்கத்து மூன்று
மிருத்தைதொ றுடுநர் தாமும். 85

பெருகுநின் கருணைத் திறத்தினு லடியேன்
பெற்றவிப் பேறெலாம் பெறுக
தெருளிலர் பாவத் திறத்தின ரேனும்
செப்புமந் திரத்தொடெந் நாளில்
பொருவிலிந் நதியிற் படியினு மவரும்
புகர்மலப் பிறவியை யொழிக
குருபர விவையும் வழங்கிமெய்ஞ் ஞானங்
கொடுமதி யெனமுறை துதித்தான். 86

வேட்டநல் வரங்க ளளித்துவேற் றடக்கை
விண்ணவன் மீட்டுமீ தருளும்
வாட்டுமா ணவத்து மாதவ சேய்க்கண்
வதிந்திந்த நதியைநின் குகையைச்
சேட்டொளி மோலித் தேவர்சூழ் நமையும்
சிந்தையி னினைந்துபோற் றுநரும்
நாட்டவர் பணியுந் தலைமைபெற் றீற்றி
னலத்தகு முத்தியை யுறுக. 87

---

85. நித்திய கேவலத்தையும் சகலத்தையும் கடந்த. சாக்கிரம் முதலிய ஐந்து அவத்தையின்மீது விளங்கும் முத்தி. நிரிக - ஆசையில்லாதவனே. கிருட்டினபக்கம் மூன்றும் இருத்தை - சதுர்த்தி நவமி சதுர்த்தசி ஆகிய 4, 9, 14. ''நந்தைபத் திரையினேடு நாட்டிய சயையிரித்தை, முந்துபூ ரணையாம் பக்கம் முதற்ருெட்டு மூன்று வட்டம்'' முதற்பக்கம் தொடங்கி மூன்று வட்டமாக வருகின்ற ஐந்து பக்கங்களின் பெயர்: நந்தை, பத்திரை, சயை, இரித்தை, பூரணை ஐந்து. 1, 6, 11 நந்தை, 2, 7, 12 பத்திரை, 3, 8, 13 சயை, 4, 9, 14 இரித்தை, 5, 10, 15 பூரணை என்பது சூடாமணி நிகண்டு.

87. உலகத்தில் அரசனுயிருக்கும் இறைமை.

இழிஞரே யாக விலங்குபுள் ளாக
இணர்மலர்த் தருமுத லாக
வழிமதுக் கமழுங் கணிகவெற் பகத்து
வதியினும் வாழுநா ளிறினும்
கழிசிறப் பளிக்கு நம்முடை யுலகங்
கலந்தனர் வாழ்கவென் றருளி
விழிபொழி யருளி னழுத்திவே றிருந்து
மெய்யரு டெளிப்பவ னுனன். 88

வேறு

இனுத நூலின ரியம்புவ பலதிற மெண்ணில்
கனுவெ னத்தலை மயங்குவ கழிகசை வத்த
மனுதி யாலறி வரியன நிறைவின வலிய
அனுதி சத்திநித் தியத்தன வைந்துமெய்ப் பொருளே. 89

பதியு மப்பதிக் கடிமையாம் பசுவுமப் பசுவின்
முதிரு மாணவப் பகையுமம் முழுப்பகை துமிப்பக்
கதிய மாயையுங் கருமமு மெனப்படு மவைதாம்
மதியு ளோர்கள்பின் னிரண்டையு மலத்தொடு மொழிவார்.

அறிந்து யிர்க்கறி விப்பது பதியறி வித்தால்
அறிந்து நிற்பது பசுவது சிவத்தடை யாமைச்
செறிந்து வையகத் துய்ப்பதா ணவந்திரள் கருவித்
துறந்த மாயைமற் றாணது பஃறிறக் கருமம். 91

உணர்வெ ழாச்செயிர் வலியினு லுறவினை யிழந்து
தணவு றுதவா ணவத்தினைத் தலைப்படு முயிர்கட்
கணவு தாயென விரங்கியா ரருளினுற் பருவப்
புணர்வு தேர்ந்துடல் கரணமும் புவனமும் பொருத்தி. 92

---

89. நூலினர் என்றது பிறசமய நூலாரை. அநாதியே உண்டாகிய வல்லமையோடுகூடிய நித்தியத்தன். ஐந்து பொருள் என்றது அடுத்த செய்யுளிற் காண்க.

90. அவை - ஐந்து மெய்ப்பொருள். ஆணவமலத்தோடு சேர்த்து மொழிவார்.

91. மிக்கமாயையானது திரண்ட தநு கரண புவன போகங்களை யுடையது. கருவித்து - கருவியையுடையது.

92. உறவு - பதி.

உற்ற மாயையோ டாணவ மொழிந்தொளி ரறிவே
முற்றும் வானுரு வெனக்கொளு முதலிலா முதல்வன்
பற்று மாயையிற் படர்வினைப் பாலவா முயிர்கட்
கிற்று ருவுட லொடுமிறு முடன்முத லியைத்து. 93

அருவு ருத்திறத் துடலுயி ருலகமாய் வேறாய்
மருவு மற்றவற் றுடனுமாய் வல்வினைக் கேற்பக்
கருவி முற்றவுந் தொழிற்படுத் துணவினைக் காட்டிப்
பொருவி னற்பதம் புகுத்துவான் புகர்மலங் கழிக்கும். 94

இரும்பு சேர்ந்தெரி யழற்றினு மெரியுடைத் தொழிலே
இரும்பி னுக்கழற் றுவதிலை யிரும்படைப் பாதி
விரும்பு நான்முக னாதியோ ரிடைவிளைத் துழியும்
அரும்பி யாங்குமீட் டொடுக்குமவ் வரனுடைத் தொழிலே.

அனாதி பந்தமோ டனுபந்த மாவது மலமே
அனாதி பந்தமோ டனுபந்த முறுவது முயிரே
அனாதி பந்தமோ டனுபந்த மிரண்டுமில் லாதான்
அனாதி முத்தனா யனாதியே கலந்தரு ளமலன். 96

விதந்த யாவையும் புரிந்துமோர் விகாரமின் மையினால்
சுதந்த ரத்தினா லொருவழி குணங்கலப் பதனால்
இதந்தொ லாருயிர்க் கேற்றுசீர்த் திறமுத லானும்
முதிர்ந்த பேரொளி முதல்வனை யொப்பதொன் றிலையால்.

---

93. மாயையால் உண்டாகிய தொழில். இருவுடல் - நுண்ணுடல். இறுமுடல் - பருவுடல்.

94. திறத்தால் ஆய் என முடிக்க. கருவி – தத்துவம்.

95. சிருட்டித்த முறையே எல்லாவற்றையும் மீட்டும் ஒடுக்குகின்ற.

96. அநாதி பந்தம் - ஆணவமலம். அநுபந்தம் - மாயை கன்மங்கள். அநாதியே உள்ள மலத்திற்கு அநாதிபந்தம் என்றும், அம்மலத்திற்குப் பின்பு இடையிலே அதைத்தொடர்ந்து மிகத்தோன்றும் மலத்திற்கு அநுபந்தம் என்றும் பெயர். கலந்த அமலம்.

97. பதியானது திரிமூர்த்திகளாய் நின்ற இடத்து இராசதம் முதலிய குணங்கள் உண்டென்று சாதிக்கப்படுதலின் 'ஒருவழி குணங்கலப்பதனால்' என்றார்.

பரவு மிப்பொரு ளொன்றலாற் பதியில்லை வேறு
விரவு மாருயிர் சிற்றறி விற்பல விதத்த
இருண்ம லத்தின வீண்டுறு சகலத்த வசிப்ப
வரும்வி யாபகத் தனமலந் தபமுத்தி யடைவ. 98

தொகையி றந்தன வாயினுந் தொல்லையா ணவநோய்
தகைய நின்றன வதனொடு கருமமுந் தகையும்
வகையி னின்றன வவற்றொடு மாயையு மருவும்
மிகையி னின்றன வென்னமூ வகையின விதப்பின். 99

சத்து நேர்தனக் கெனவறி விலாதன தணவா
மெத்த சத்தென வறிவுமே வாதவு மல்ல
ஒத்த றிந்தவுங் கனவத்திற் கலங்குமூக் கத்த
சத்த சத்தையு மறிதலிற் சதசத்தா வனவே. 100

மூல வாணவ மயக்கலின் முதல்வனைப் பின்னிட்
டேலும் வான்றரை நரகத்தி லின்பதுன் பருந்தும்
வேலை நோய்முத லடுத்துழி வெறுப்பன வெறுக்கை
கோல மாதர்மற் றடுத்துழிக் குளிர்வன நாளும். 101

தனைநி கர்ப்பருஞ் சத்தசத் துருதசத் தறியா
தனைய தாகலி னதற்கொன்றும் வேண்டுவ தில்லை
வினையும் பல்வகைக் கரணமும் வேறுவே றுடலும்
வனையு மண்டமும் யாவையு முயிர்க்கென மதியாய். 102

கலாதி யிச்சையா திகள்வந்து கலாவுமா றன்றே
நிலாவி நெல்லுறு முளையென வாணவ முயிரில்
குலாவு மிச்சையா திகளொரீஇக் குளிர்பதி மாட்டுச்
சுலாவு மிச்சையா திகளையுந் தோற்றுரு தணவும். 103

---

98. வேறு பதியில்லை. எந்த இடத்தில் வசித்தனவோ அந்த இடத்தில் வியாபகத்தன.

99. விஞ்ஞானகலர் முதலிய மூவகை என்க.

100. தனக்குச் சத்து நேர் என. சத்து - அறிவுடைப் பொருள்.

101. பதியைத் தாழ்த்தித் தான் முந்தி. அருந்தும் வேலை - நுகரும் போது.

103. கலாதி - காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், பிரகிருதி ஆகிய வித்தியாதத்துவம் ஏழு. கலாவு மாறு நிலாவி. உயிரிற் குலாவுகின்ற இச்சாக் கிரியா சத்திகளை நீக்கி. ஆணவம் நிலாவியனவும்.

விழிப்பு ணர்ப்புறு மிருளென விராவிய தன்னை
அழிப்ப முற்றிய சத்தியுந் தன்வழி யாக்கி
ஒழிப்பின் மூன்றிடத் திருதிறத் தவத்தையோ ரைந்தும்
கழிப்பி லாதுயி ருறப்பல சத்தியிற் கதுவும். 104

வேறு

உறுதி பயக்குங் காரியங்க ளொருகா லத்துஞ் செயவொட்டா
திறுதி பயக்குங் காரியமே யெக்கா லத்து நிகழ்விக்கும்
செறியு முயிரி னல்லறிவை யெக்கா லத்துஞ் சிதைத்துவரும்
மறிய வுயிர்க்குப் புகரறிவை யெக்கா லத்தும் வளர்ப்பிக்கும். 105

தூய நினைவைத் தூமொழியைத் தூய தொழிலைத் தோற்றுது
தீய நினைவைத் தீமொழியைத் தீய தொழிலைத் தவத்தோற்றும்
ஆய தனியா ணவப்பகையி னரட்டைத் தணிப்ப வுயிரடுக்கும்
மாயை யிரண்டு திறனுகுஞ் சுத்த மசுத்த மெனமாதோ. 106

வேறு

சுத்ததத் துவமோ ரைந்துநால் வாக்கும்
தொக்கவைம் பத்தொரக் கரமும்
கொத்துறு மெண்பத் தொருபதஞ் சத்த
கோடிமா மந்திரப் பகுப்பும்
மெய்த்தநா லேழா கமமிரு நூற்றே
ழுபாகமம் விரிந்தநால் வேதம்
மொய்த்தமூ வாறு புராணமூ விருசாத்
திரமறு பத்துநாற் கலையும். 107

---

104. தன்னை - ஆணவத்தை. ஐந்தையும் உறும்படி. மூன்றிடத்தும் ஐந்தையும் உயிர் உறும்படி என்க. கேவலம் சகலம் சுத்தம் ஆகிய மூன்று இடம். கீழாலவத்தை 5. மேலாலவத்தை 5. ஐந்து - சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்: இது கீழாலவத்தை. கடை முதலாக மாறின் மேலாலவத்தை. சத்தி முன்னையது திரோபவம்; பின்னையது வல்லமை.

107. சுத்ததத்துவம் - சிவதத்துவம் ஐந்து: சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியம், சத்தி, சிவம் என்பன. நால்வகை வாக்கு - சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி. உப - இரண்டு. உபாகமம் - ஆகமங்கட்கு அங்கமாயுள்ளவை. சத்தகோடி மந்திரம் - நம:, சுவாஹா, சுவதா, வஷட், வௌஷட், பட், ஹூம் என்னும் முனைகளையுடையன. எண்பத்தொரு பத மந்திரங்கள்.

மேதகு சிவமே சத்தியே நாதம்
விந்துவே சதாசிவ மகேச
பேதமே யரனென் றிவர்க்கும்விஞ் ஞான
கலரொடு பிரளயா கலர்க்கும்
தீதறு சரியை கிரியையோ கத்திற்
செறிந்தவர் தமக்குநற் றனுக்கள்
ஓதுறு கரண புவனபோ கமுமைங்
கலையுமற் றுயிர்ப்பது சுத்தம். 108

காலமே நியதி கலையொடு வித்தை
கதித்தெழு மராகமே புருடன்
சாலநா லாறு தத்துவம் தன்பாற்
றரும்பிர கிருதியோ ரேழும்
மாலயன் வலாரி தேவர்கண் முதலா
மன்னிய சகலருக் கெல்லாம்
கோலநற் றனுக்க ளாதிய நான்கும்
கொடுப்பதா லசுத்தமா மாயை. 109

மயக்கிடு மாயா காரிய மிலையேல்
வல்வினை நுகர்ச்சியு மில்லை
துயக்குமவ் வினையின் கழிவுமாங் கெய்தா
தொல்லையே சூழ்ந்தவா ணவத்தின்
முயக்குமற் றெழித லரிதரி தாகும்
மூதுயிர் மாயகா ரியத்தின்
இயக்குற லன்றி யிருவினை யீட்டா
திவையின்றி யவையுமெய் தாவால். 110

இருவினை யென்ப மனமுதன் மூன்றின்
இயற்றுறு மிதமகி தங்கள்
பெருவினைப் பயன்கள் புண்ணிய பாவம்
பேசுமிக் கருமத்தின் பயன்கள்

---

108. ஐங்கலை - நிவிர்த்தி முதலிய கலைகள்.

109. ஏழையும் நான்கையும் கொடுப்பது. புருடனும் பிரகிருதியாகிய ஏழும்.

110. காரியம் - தனு கரண புவன போகங்கள். இவை - இருவினை. அவை - தனு முதலியன.

மருவிடு மின்ப துன்பமா மவைதாம்
மாய்வினவ் விருவினை தோற்றும்
ஒருதனு விளைப்ப மற்றொரு தனுவின்
உணப்படுங் கெட்டுங்கே டிலவாய். 111

மனமுதன் மூன்று மசைவற நின்று
வந்திடு நல்வினை பலவே
மனமுதன் மூன்று மசைவற நின்று
வந்திடுந் தீவினை பலவே
மனமுதன் மூன்றும் புடைபெயர் வுற்று
வந்திடுந் நல்வினை பலவே
மனமுதன் மூன்றும் புடைபெயர் வுற்று
வந்திடுந் தீவினை பலவே. 112

தூயவா யமைக்கப் படும்வினை யெவர்க்கும்
தூயவா யிருப்பன பலவே
தீயவாய் விலக்கப் படுவன வெவர்க்கும்
தீயவா யிருப்பன பலவே
தூயவா யொருவர்க் கொருவருக் கொழியும்
தீயவா யிருப்பவும் பலவே
தீயவா யொருவர்க் கொருவருக் கடுக்கும்
தூயவா யிருப்பவும் பலவே. 113

நல்வினை திறம்பித் தீயவாய்த் தீய
நல்லவாய் வருபவு முளவே
வல்வினை மெலிய வினைகளாய் மெலிய
வலியவாய் வருபவு முளவே
நல்வினை செயும்போ ததன்பயன் போலத்
தீயவு நணுகலு முளவே
புல்வினை செயும்போ ததன்பயன் போல
நல்லவும் புணர்தலு முளவே. 114

---

111. மனம் வாக்குக் காயம். இதம் அகிதம் - நல்வினை தீவினைகள்.

112. கொல்லாமையைக் கடைப்பிடித்தல் முதலாயின கொள்க. இரண்டாவது அடி அறஞ்செய்யாமை எண்ணுமையாதியால் வருபவை.

113. கடையிரண்டடி சிற்றறிவோர்வினை, பேரறிவோர்வினை.

114. வல் வினை - பசுபுண்ணியம். மெல்வினை - சிவபுண்ணியம். அசுவமேதம் செய்தல் முதலியன வல்வினை: பயன் சுவர்க்காதி போகங்கள்.

புரிதரு முறையிற் பிறழ்ந்துயிர் தெய்வம்
பூதமென் றிவற்றினு ளொன்றால்
மருவுழி விளைந்த விளைந்தில விளைந்த
வன்றிவே றுவன வென்னத்
திரிவிதப் படுவ பயனிழி வினைகள்
தீர்வுசெய் யினுநுகர்ந் தன்றி
இரிதரா முழுது மிதுவிலை யானு
மியையும்பண் ணுமையும் பலிக்கும். 115

இன்பமே பயக்கும் புண்ணிய மெல்லா
மிழிதரு பாவங்க ளெல்லாம்
துன்பமே பயக்கும் புண்ணிய பாவந்
தொக்கதம் பயன்றரா தொழியா
கொன்படு வினைக ளொழியிரு வினையுங்
குலாவுறு புண்ணிய பாவ
வன்புறு பயனை யப்பயன் போல
வழங்குறு தொழிவகை யிலையே. 116

ஈண்டுநாற் பிறப்பி னெழுவகைத் தோற்றத்
தெண்பத்து நான்கெனு மிலக்கம்
மாண்டபல் பவத்திற் பன்முறை வினையான்
மறிதரு முயிர்களை யெடுப்ப

முத்தி கிடையாமல் சுவர்க்காதி இன்பம் கிடைத்தலால் 'மெலிய வினைகளாய்' என்றார். மெலிய - மெல்வினை; என்றது கடவுளைவழிபடல் முதலிய இலேசான வினைகளை. இவற்றால் முத்தி கிடைத்தலால் 'வலியவாய்' என்றார். முதலடிக்குப் 'புண்ணியம் பாதகமாக' என்னும் செய்யுட் கருத்தே. கடை இரண்டடிக்குக் கோயில் விளக்குத் தூண்டுதலையும், சாக்கிய நாயனாரையும் கொள்க.

115. முன்செய்த வினைகளைச் செய்தமுறையாலன்றிப் பின் அநுபவித்தலின் 'முறையிற் பிறழ்ந்து' என்றார். உயிர் - ஆதியான்மிகம். தெய்வம் - ஆதிதெய்விகம். பூதம் - ஆதிபௌதிகம். மருவுழிப் பயன் திரிவிதப்படுவன என முடிக்க. தீர்வு - பிராயச்சித்தம். முழுதும் இரிதரா என மாற்றுக. இது என்றது நல்வினை தீவினையாகிய இருவினையை.

116. அழுக்குத் திரட்டல் முதலிய பயனற்ற வினைகள் ஒழிந்த இருவினைகளும் புண்ணிய பாவப்பயனை வழங்காது ஒழியாது வழங்கியேவிடும். அப்பயன்போல - புண்ணிய பாவமானது எவ்வாறு தம்பயன் தாராது ஒழியாதோ? அவ்வாறு.

ஆண்டருு ளமல னுறுதியி லுலக
மாக்குழி யருந்தலந் தீர்த்தம்
காண்டகு மூர்த்தி யென்னமூன் றுருவாய்க்
கண்ணக னுலகெலாங் கதித்து. 117

அறிதரா வகையிற் புண்ணிய முற்ற
வடுத்தறி தரப்பணித் ததற்பின்
செறிதரு மகத்துச் சரியைமுன் றுன்கும்
திகழ்தர மென்மெலச் செலுத்தி
நெறிதரு முண்மைச் சரியைமுன் மூன்று
நிரப்பியே தன்வலி தேய்ந்து
பறிமல பாகம் பயிற்றுபு சத்தி
பதித்திரு வினைச்சம மாக்கி. 118

பாசமும் பசுவுங் கீழுற மேலாம்
பசுபதி நீருறு கூர்ப்புத்
தேசுறத் திரண்டா லெனவருட் குருவாய்த்
திருவுரு வெடுத்தெழுந் தருளி
மாசறு மனுக்கள் பதங்களக் கரங்கள்
வதிபுவ னங்கடத் துவங்கள்
ஆசறு கலைக ளென்னுமோ ராறும்
அரிறபத் தூய்மைசெய் தருளி. 119

கூட்டமே பொதுவே தன்னியல் பென்னக்
குறித்திடு முத்திற வுணர்வால்
நாட்டுமுப் பொருளு மொன்பது தரமா
நாடிடப் படுமவை யெல்லாம்

---

117. நாற்பிறப்பு - அண்டசம், சுவேதசம், உற்பிச்சம், சராயுசம் என்பன.

118. அபுத்தி பூர்வபுண்ணியம் முதிர அடுத்துப் புத்தி பூர்வபுண்ணியம் செய்து, தன்வலி தேய்ந்து பறிந்த மலம் என்க. சிவபுண்ணியம் பத்தினுள் இச்செய்யுளில் ஒன்பது கூறி, உண்மைஞானத்தைப் பின்னர் தசகாரியமாக விரிக்கின்றார். தன் என்பது ஈண்டு ஆணவம்.

119. ஆறத்துவாக்களையும் தூய்மைசெய்து.

காட்டுபு காட்டுந் தானுங்கா ணறிவும்
கதிர்விழி யெனக்கலப் பாகும்
ஈட்டரும் பயனுந் தெரித்ததி னமுத்தும்
இவற்றையுங் கிளக்குதுங் கேட்டி. 120

மண்முத லாகச் சிவமுடி வாக
மலிதரு தத்துவ மெல்லாம்
நண்ணிய தொழிலைத் தனித்தனி காண்டல்
நவைதரு மதனுரு வாகும்
திண்ணிய வவைதாஞ் சடமெனக் காண்டல்
தெரிசன மிடையிவை நீங்கும்
உண்மையைக் காண்டல் சுத்தியா மூன்றும்
உற்றன பாசத்தின் மாட்டு. 121

இன்னணம் பாச மகறலு முறவும்
இகலுறு பகையுநா டாது
மன்னிய தானே முதலென நிற்றன்
மாசுயிர்க் குருவிது காறும்
அன்னியத் தழுங்கு நினக்குயி ருருளென்
றகற்றவவ் வருளினுன் முதலென்(று)
உன்னுதல் காட்சி யுதுகொடு செயனேர்ந்
தொழிந்தரு ளாய்விடல் சுத்தி. 122

---

120. கூட்டவுணர்வு, பொதுவுணர்வு, சிறப்புணர்வு ஆகிய இம் மூன்றும் பதி பசு பாசம் ஆகிய முப்பொருளுக்கும் உண்டாகலான் மும் மூன்று ஒன்பஃதாம். கலப்பாகும் பயனைத் தெரித்து. கூட்டவுணர்வாவது பொதுவாக உணர்தல். பொதுவுணர்வாவது ஒன்றன் இலக்கணம் மற்றொன்றற்கும் செல்ல உணர்தல். சிறப்புணர்வாவது ஒன்றனையே உணர்தல். அமலன் அழுத்தும்.

121. தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி. அவை என்றது தத்துவத்தை. இவை - சடமான தத்துவம்.

122. உறவு - பதி. பாசமகன்ற அகங்காரத்தால் நிற்றல். நினக்கு உயிர்போல் உள்ளது அருளாகும் என்று சொல்லிப் பிறர் அகற்ற, அதன் பின் பெற்ற அருளால் உண்டாகிய அகங்காரத்தால் உன்னுதல். அருளைக் கொண்டு எத்தொழிலையும் செய்ய. அன்னியத்து - வேறான தத்துவத்து. ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி.

மேதகு மருளான் முதலென நினைத்தல்
விழுத்தகு மருளினு லதுசெய்
தீதறு தொழில்கள் செய்வலென் றெண்ணும்
செயலற றிகழருண் மயமாய்ப்
போதமுற் றொடுக்க லென்னமுன் கிளந்து
போந்தவற் றடங்கிய மூன்றும்
ஆதித னுருவந் தெரிசனம் யோகம்
ஆமினிப் போகமு மருள்வாம். 123

ஒன்றுறு மதனு லொருபொரு ளாகா
திரண்டினுல் வேறுமா காது
தொன்றுறு நிலையே நிலையதாய்ச் சேர்ந்து
துன்னலுந் துன்னுரு மையுமற்
றன்றுமா ணவத்தி னழுந்தியாங் கறிவாய்
அறிவினு ளழுந்தியங் கறிவு
பொன்றியும் பொன்ரு தவசமா யின்பப்
புணரிவாய் மடுப்பது போகம். 124

இந்நிலை தனக்கு மேலொரு நிலையும்
இல்லையீ தொழிதரா தென்றும்
மன்னுயிர் மற்றை யொன்பதுங் கண்டு
மாற்றுமால் வகுத்தவீ ரைந்தும்
துன்னிய வுண்மை ஞானமென் றுரைப்ப
சுத்தவைந் தவத்தையு ளடங்கும்
பின்னிலை நான்கி னென்பது மடங்கும்
பெருநிலை போகமே யடங்கும். 125

---

123. நினைத்தலே சிவரூபம், செயலறலே சிவதரிசனம், திருவடியில் ஒடுங்குதலே யோகம். அது - அருளானது. என்ன மூன்றும் ஆம் என முடிக்க. முன் கிளந்துபோந்த சிவபுண்ணியத்துள் அடங்கிய இம்மூன்றும் என்க.

124. ஒன்றுதல் - கலத்தல். பதியில் ஒன்றிய அதனுல் ஒருபொருள் என்னலாம் எனின் அவ்வாறு ஆகாது. சகலாவத்தைக்கு முன்னே உற்ற நிலையே. அன்றும் - பகைத்த. ஆணவத்தில் அழுந்திச் செயல் அற்றிருந் தாற்போல் புணரியை வாய்மடுத்தல்.

125. இந்நிலை - போகநிலை. என்றும் ஒழிதராது. நான்கு - சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம் என்பன. பெருநிலை - துரியாதீதத்தில்.

இரிதரா வுடலின் வினைவரும் வருங்கால்
இலகிய சாக்கிரா தீதம்
துரியமென் றிரண்டி னின்றிடி னேரு
சுழுத்திசொப் பனத்திற்சாக் கிரத்தில்
மருவினும் வளருஞ் சகலத்தின் விரவின்
வளர்திறங் கிளப்பதென் மீட்டும்
பெருநிலை யழுந்த வவையெலா மழியும்
பின்புபே துறுத்துவ தின்றே. 126

மருண்மல மொழிய மாயையும் வினையும்
வயங்கரு ளாகியே நிற்கும்
இருண்மல முலகோர்க் கிரித்திட வவற்றை
யெம்பிரா னென்றுகொண் டருளும்
சுருதியான் மொழியாற் சுவானுபூ திகத்தைத்
தோற்றிய வமலனை யாங்கும்
இருபகுப் பிறநின் றேத்தியின் புறுப
இனையசன் மார்க்கமுற் றவரே. 127

என்றுவேற் றடக்கைச் செம்மலார் பெத்த
முத்தியென் றிரண்டினுந் தன்மை
ஒன்றலா தின்மை பொருடொறுங் காட்டி
யுரைத்தரு ளறிவெலாங் கேட்டு

போகம் நீங்கிய என்பது. சுத்தசாக்கிரம் முதலிய ஐந்தவத்தையில் எனப் பொதுவகையாகக் கூறினர். போகம் துரியாதீதத்தில் அடங்கும்.

126. இரிதரா உடல் - விட்டு நீங்காத சரீரம் எனப் பொருள் கொள்க. சாக்கிராதீதம் - துரியாதீதம். வினையானவை ஏரு. வளரும் அவை - வினைகள். பெருநிலை - துரியாதீதம். புளியம்பழமானது ஓட்டில் ஒட்டாமல் அவ்வோட்டைவிட்டு நீங்காதிருத்தல்போலச் சீவன்முத்தர்கள் முத்தியை அடைந்தாலும், உடலோடு கூடியிருப்பினும் அதில் ஒட்டாமல் விட்டு நீங்காதிருத்தலால் 'இரிதரா உடல்' என்றார். அவ்வுடல் இருத்தலால் வினைவரும் என்க.

127. இருண்மலம் - ஆணவம். அவற்றை - மாயை கன்மங்களை. ஆகமத்தால் குருவாயிருந்து உபதேசிக்கும் உபதேசத்தால் சுவானுபூதிகமாகிய ஆனந்தத்தை. ஆங்கும் - சீவன்முத்தனாகிய காலத்தும். சன்மார்க்க முற்றவர் - சீவன்முத்தராயுள்ளவர். சுவானுபூதிகம் - தானே சுயமாக அநுபவித்தல்.

நன்றுசிந் தித்துத் தெளிந்துட னிட்டை
நண்ணிய நந்திமா தவத்தோன்
துன்றிய மகிழ்ச்சி மீக்கொள வாண்ட
தோன்றருள் பழிச்சுத லுற்றான். 128

வேறு

இயல்புவே றுடைமை கற்றோ ரெண்ணிய பலவே றாகப்
பயில்வுறு முலக மெல்லாம் பாற்றியு மீட்டு மாயோன்
அயனொடுந் தோற்றிப் போற்றி யடர்மல வாற்றல் காற்றும்
செயறலை நின்ற வின்பத் திருவுரு முதன்மை போற்றி. 129

ஒண்குண மில்லா நாயே னுறுமட மன்றி யில்லாத்
திண்குண மலத்திற் பண்டு சிவணுற வாளா நின்ற
எண்குணத் தலைவன் மற்றாங் கிரும்பரு வத்தை யெய்த்து
வண்கலை யாதி தந்த வரம்பில்வள் ளன்மை போற்றி. 130

இருண்மல மொன்றே பற்று மிருவினை யுடையேற் கந்தோ
மருண்மலி மாயை கன்மந் திரோதான கரியை மல்கும்
பொருண்மலி தருமா மாயைப் புகர்மல நான்குந் தந்தும்
அருண்மலி யருளிற் றீரா வற்புதத் தொழின்மை போற்றி. 131

---

128. பந்தத்தோடு கூடியிருக்கும் காலம் பெத்தகாலம். பந்தம் நீங்கி முத்தியை அடையும் காலம் முத்திக்காலம். இருகாலத்திலும் பதி பசு பாசமாகிய முப்பொருளுக்கும் இயல்பாக உண்டாயிருக்கிற தன்மை ஒன்றேயாம் ஆகலின் அவ்வாறு கூறினார். தன்மையானது ஒன்றாகுமே யல்லாமல் வேறின்மையை முப்பொருள்தோறும் காட்டி என்க.

129. உனது தன்மையானது வேறுடைமையாய்ப் பல வேறாக இருக்கவும் இவ்வாறு நின்ற திருவுரு. இனி, இயல்பு - இயற்கை; வேறுடைமை செயற்கை: இயற்கையாலும் செயற்கையாலும் கற்றவர் எனினும் அமையும்.

130. காலதத்துவம் முதலியவற்றைத் தந்து சகலாவத்தைக்குக் கொண்டுவந்த. வீணாக வாளா ஏய்த்து என முடிக்க.

131. இருண்மலம் - ஆணவம். திரோதானகரி - திரோதானம் என்பதுதான் அவ்வாறு வரும். ஆணவம் மாயை கன்மம் திரோதாயி மாயேயம் ஆக மலம் ஐந்து. தந்தும். அருண்மலி அருள்.

நெருப்பிடை யழற்றி வாளி னிமிருடல் பிளந்து கண்வாய்
குருப்பொலி சோரி தூங்கக் குடைந்தடு நரகத் திட்டும்
கருப்பொலி புவியி னுய்த்துங் காமரு துறக்கத் தேய்த்தும்
விருப்பொடு வெறுப்பு மின்றி மிளிரவி காரம் போற்றி. 132

பூதமோ பூதத் தான பொறையுடல் பொறிக டாமோ
மேதகு கரணந் தானோ விரிதரு மாயை கொல்லோ
யாதுதா னுணர்வ தென்றென் றினைதரா வண்ண நீதாழ்
போதமவே றென்று வந்த பொங்கொளிப் போதம் போற்றி.133

கேவல சகல சுத்த முயிரெலாங் கெழுமு மென்றும்
தாவரு மாயை யில்லா ரிருதிறத் தார்க ளென்றும்
ஆவயின் மாயை யின்றி யடாவிரு கரும மென்றும்
மேவர விதித்து மாலா விழுத்தகு வாய்மை போற்றி. 134

சாக்கிர வவத்தைக் குள்ளாஞ் சகலத்தி லென்னை யன்னே
ஆக்கிடுந் தோறு நீங்கி யடரிருட் கேவ லத்தின்
வீக்குறும் பிழையுட் கொண்டு விடாதுளஞ் சலியா மீட்டும்
காக்குமத் தோலாச் சூழ்ச்சி கைக்கொளுங் காதல் போற்றி. 135

வினைத்திற மூளு மாறு மெலியுமென் மெலிவை யாற்றி
அனைத்துக ளனுங்கு மாற்ற னறிவுறுத் தணைத்து மாற்றிக்
கனைத்துவண் டிமிருந் தேந்தார் கமழ்மலர்க் கமல பாதம்
நினைத்துறும் வாழ்வு தந்த நின்மலக் கொழுந்து போற்றி. 136

---

132. கரு - செனனம். ஆன்மாக்களிடத்து விருப்பு வெறுப்பினுல் செய்பவர் அல்லர் என்பது தோன்ற 'இன்றி' என்ருர்.

133. உயிரானது பூதம் முதலியன அன்று. இதுவாகும் என்று குருவாய் வந்து உபதேசித்துத்தந்த என்க. உடல்தாமோ, பொறிகள் தாமோ உணர்வது யாதுதான் என்றென்று. உணர்வது என்றதும், போதம் என்றதும் உயிரினை. நீ தங்கிய உயிர் என்க. நீ என்றது கடவுளை.

134. கேவலாவத்தையையும், சகலாவத்தையையும், சுத்தாவத்தை யையும். மாயைமலமில்லாதவர்கள் விஞ்ஞானகலரும் பிரளயாகலரும். ஆணவம் கன்மம் மாயை ஆகிய மூவகை மலத்துள் ஆணவமுடையார் விஞ்ஞானகலர், ஆணவம் கன்மமுடையார் பிரளயாகலர். விதித்தும்.

135. நான் சகலாவத்தையினின்றும் நீங்கிக் கேவலத்துக்குச் சென்ற பிழையை. சலியாமல். பதியானது என்னில்நீங்கி என்பதும் ஒன்று.

136. பிரபஞ்ச ஆசையால் மெலியும் மெலிவு. அனை துகள் - அக் குற்றம்; அனைத்துகள் - எல்லாம் என்பாரும் உளர்.

கேவல சகல முத்திச் சகலமுங் கிளர வுய்த்தக்
கேவல சகல நீக்கக் கெழுமுறு சுத்தந் தன்னில்
கேவல மாயி னேனைக் கேவலந் தணித்து மேலாம்
கேவல முறுத்த நாடுங் கேவலப் பொருண்மை போற்றி. 137

ஆணவத் தன்றே பட்டா யடுத்துறு மாயை பெட்டாய்
பூணுறு வினைக்கோட் பட்டாய் போக்கொடு வரவும் பட்டாய்
ஏணுற வறிந்தாய் நீயே போலுமென் றிழித்து மேலாம்
மாணுருத் தோற்றி யென்னைக் காட்டிய வடிவம் போற்றி. 138

ஒன்றுகே வலத்தி னையைந் துறழைந்து சகலத் தொன்று
முன்றவிர் சகலத் தைந்து முதிரொளிச் சுத்தந் தன்னில்
என்றரு ளெழுத்தின் பேத மிசைத்துறு முறையுங் காட்டி
நன்றெனக் கருளி யாண்ட நலத்தகு பெருமை போற்றி. 139

யானென தென்ன நின்ற விருண்முழு திரித்திட் டெல்லாம்
தானென வென்னை வல்லே தன்னடி யிருத்திப் பொன்முன்
மீனென விளக்கே யென்ன விரவிய மாயை மாய்த்தங்
கூனுறு நுகர்ச்சி யெல்லா மேற்றரு ளுரிமை போற்றி. 140

---

137. சகலமானது கேவலசகலம் என்றும், முத்திச்சகலம் என்றும் இருவகைப்படும். முத்திச்சகலமாவது சகலாவத்தையில் முத்திபெற்றுச் சீவன்முத்தனுயிருத்தல்; ஏனையது அவ்வாறன்று. உய்த்து அக்கேவல. தனியாயினேனை. மேலாங்கேவலம் - முத்தி. கைவல்லியம் என்றும் முத்திக்கு ஒரு பெயருண்டு. "கேவலந் தனிமை முத்தி" நிகண்டு. சகலத்திலேயே கேவலத்தை அடைதல் கேவலசகலம்.

138. நீயே அறிந்தாய்போலும் எனவே, அறியவில்லை என்பது; இறப்பொடு பிறப்பும்.

139. பஞ்சாக்கரத்தில் ஒரு அக்கரம் கேவலாவத்தைக்கு, சகலாவத்தைக்கு ஐந்து. பஞ்சாக்கரத்தில் ஒன்று முன் நீங்கியும், மேற்கூறியுமுள்ள சகலத்து ஐந்தக்கரமும் சுத்தாவத்தைக்கு. ஒரு அக்கரம் நீங்கிய ஐந்து எனவே, நாலக்கரம் என்பது. இசைத்துப், பின் பொருந்தும் முறையையும் காட்டி. தனித்தனி ஐவைந்தாக உறழப்படும் ஐந்து என்க.

140. எல்லாப்பொருளும் தானே என்று. பொன் - சூரியன்.

என்வழி யின்று காறு மிருந்தரு டன்னைப் போலத்
தன்வழி யெற்றை ஞான்றுந் தங்குமந் நிலைமை தோன்றத்
தன்னையு மென்னையுந் தந்து தனதென தறமுப் பாழ்மேல்
பின்னிய முழுப்பா ழான பெருகுபே ரின்பம் போற்றி. 141

அருள்பொழி விழியீ ராறு மலர்தரு முகமோ ராறும்
திருவரு ளினிது தந்த செங்கனி வாயுங் கையும்
மருமலர்ப் பதமும் வாய்ந்த வள்ளற னுருவ மெல்லாம்
பெருகிய சுகத்துக் கப்பாற் பிறங்குமப் பிறக்கம் போற்றி. 142

என்றிருந் துதிகள் சால வியம்பியாட் டயர்ந்து முன்னே
நின்றமெய்க் குரிசி றன்னை நின்மலக் குமர னோக்கி
இன்றுநின் கருத்து முற்றிற் றினிக்கயி லாயத் தெந்தை
மன்றலங் கழற்றாள் போற்றி வதியென வருண்மேல் கொண்டு.

பன்முறை வணங்கி மீட்டும் பஃறுதி நிரப்பி மெய்யில்
புன்மயிர் பொடிப்பக் கண்கள் பொழிமழைத் தாரை வாக்கச்
சின்மயன் றாளிற் சூழ்ந்த சிந்தையைப் புய்க்க லாற்றான்
மென்மெலப் பிந்திப் பிந்தி விண்ணெறி முன்னு கின்றான். 144

கோயிலை வணங்கி யப்பாற் குன்றினை வணங்கித் தான்றோய்
பாயிருந் தீர்த்த மான படர்நதி வணங்கி யவ்வூர்
மேயின வெல்லை தாழ்ந்து வெற்பது மறையுங் காறும்
சேயொளி விழிநே ராகச் சென்றுபின் றிரும்பிச் சென்றான். 145

---

141. என்னிடத்து அடங்கிக் கீழ்ப்பட்டிருந்த தன்னைப்போல. நான் தங்கும் அந்நிலைமை. முப்பாழ் - போதப்பாழ், சீவப்பாழ், சிவப்பாழ். போதப்பாழாவது தத்துவரூபம் முதலிய மூன்றையும் அறிந்து பாழ்படுத்தி நீங்கல். சீவப்பாழாவது ஆன்மரூபம் முதலிய மூன்றையும் அறிந்து நீங்குதல். சிவப்பாழாவது சிவரூபம் முதலிய இரண்டையும் அறிந்து நீங்குதல். முழுப்பாழ் - முத்தி. தன்னை - சிவத்தை.

142. உருவம் எல்லாம் பிறங்கும் பிறக்கம் என்க. நந்திபெற்ற சுகம் என்க.

143. கூத்தாட்டயர்ந்து.

144. புய்க்கல் - பெயர்த்தல்.

145. விழி மலைக்கு நேராகப் பின்னிட்டு நடந்து.

விலங்கலுந் தலமு மாண்ட வித்தக னுருவு மெல்லாம்
நலங்கிள ரறிவிற் றேய்த்து நயத்தகப் பொறித்து வைத்த
அலங்குபொற் கிழியே யான வகத்தினை கயிலை சார்ந்தங்
கிலங்கருட் குரவற் போற்றி யேவலி னிருக்கின் றானல். 146

இன்னணஞ் சகச நிட்டை யெய்திய நந்திப் புத்தேள்
தன்னருட் குரவ னேவற் றலைநிற்கு மியல்புந் தேறார்
அன்னவ னூலை யாய்ந்து மாக்கைநின் றுளதேன் முத்தி
மன்னல ரென்ப ரன்னோர் மம்மர்நோய்க் கொழிவு முண்டே. 147

நூலினை யறிந்தார் போன்று நுண்ணறி வுடையார் போன்றும்
மாலினைத் தவிர்ந்தார் போன்றும் வழியறிந் தடைந்தார் போன் [றும்
மேலெனத் தத்தங் கோளே விதந்தலை கின்றார் நந்தி
சாலவன் றருளு நூலிற் றலைப்படா வுள்ளத் தாரே. 148

சத்திய நிருவா ணத்தாற் றனுகர ணாதி தம்பால்
பொத்திய வோட்டி னொட்டாப் புளிம்பழம் போற றேற்றார்
அத்தினா லுடல்போ மென்ப ரதுபுரி முறையுந் தேற்றார்
பித்தென மயங்கி நிற்பார் பெரிதிவ ருணர்ந்தார் போலும். 149

பிறவுயிர்க் கருள நிற்கும் பெற்றிமை யோரார் தேகத்
துறும்வினை யுடல்போங் காறு முயிருண்ணு மென்பா ரென்
அறிவொடு கலத்த லின்று யாம்வினை வளரத் தேகம் [னின்
மறுவலு மெடுப்ப தோரா ரிவர்களு மலமற் றாரே. 150

---

146. கிழி - எழுதுபடம்.

147. இடையறுமல் எப்பொழுதும் கூடும் நிட்டைக்குச் சகசநிட்டை என்று பெயர். அன்றியும், உபதேசமுறையாற் கூடும் நிட்டைக்குச் சகச நிட்டை என்றும் கூறுவர். அன்னவன் - நந்தி. நந்தி முத்தியை அடைந்தும் ஆக்ஞையோடிருத்தல்பற்றி 'என்பர்' என்றார். நூல் - சிவஞானபோதம்.

148. வழி - நன்னெறி. விதந்து.

149. தனு கரணாதிகள் போறலை என முடிக்க. தம்பால் என்றது புளியம்பழத்தின்பால். அத்தினால் - சத்தியோ நிர்வாணமாகிய அதனால். அதுபுரி - சத்தியோநிர்வாணமானது செய்கின்ற. சத்தியோநிர்வாணம் அசத்தியோநிர்வாணம் எனத் தீக்கை இருதிறப்படும். அவற்றுள், சத்தியோநிர்வாணதீட்சை என்பது தீட்சை பெற்றவுடன் உடலோடு இருந்தே முத்தியை அடைதல். அசத்தியோநிர்வாணதீட்சை என்பது தீட்சைபெற்றுத் தேகாந்தத்து முத்தியை அடைதல்.

150. சீவன்முத்தர்கள் பிறவுயிர்க்கு அருள நிற்கும் என்க. மலம் அறுதவர்கள் உடல் போங்காறும் உயிருண்ணும் எனின், அறிவொடு

ஆங்கவன் போல யானு மறுகுண முடையே னென்பார்
ஓங்கவன் றொழில்க ளெல்லா முஞற்றுவல் யானே யென்பார்
தேங்கிய பிரமம் யானே தெளிவுறின் வேறின் றென்பார்
ஈங்கிவ்வா றுரைப்போ ரெல்லா முயிரியல் புணரா தோரே. 151

வரிகழற் குமர னல்க மாதவ நந்தி பெற்றுங்
கரிறப விளக்கு நூலி னமைதராப் பொருள்க ளில்லை
கரிசிலந் நூலி னுண்மை கேட்டிலார் கல்வி சான்றும்
விரியுமப் பொருளின் றன்மை தன்னமும் விளங்கக் காணார். 152

மந்திர கலைகண் மற்றைத் தந்திர கலைவான் வேதம்
அந்தமி லேனை யெண்ணெண் கலைமுத றுவர வாய்ந்த
நந்தியுந் தணிகைச் செவ்வே ணல்கிடப் பெற்றா னென்றால்
முந்துநூன் மாத்தி ரத்தான் முப்பொரு டெளிய லாமே. 153

வேறு

ஞானநூ லோத லோதுவித் திடுதல்
நற்பொருள் கேட்டல்கேட் பித்தல்
ஆனவப் பொருளைச் சிந்தனை செய்தல்
ஐந்துஞா னத்துறு பூசை
தானெனி லந்நூன் முப்பொரு டெளிக்கும்
தலைப்பொரு ளாகிய தணிகை
வானவன் மலர்த்தாள் வணங்குந ரெய்தும்
வரத்தினை யென்னென மொழிகேன். 154

கலத்தல் இன்றாகி. ஆகும் வினையும் வளரத் தேகத்தை மீட்டும் அவ்வுயிர் எடுப்பதாய் முடியும்.

151. அறுகுணம் - சர்வஞ்ஞத்துவம், சர்வேசுரத்துவம், சர்வநியந்திருத்துவம், சர்வாந்தர்யாமித்துவம், சர்வகற்பிதத்துவம், சர்வசக்தித்துவம் என்பன.

153. பல நூல்களைக் கற்றறிந்தாலும் உபதேசம்வேண்டும் என்பது கருத்து. தெளியலாமே - தெளியலாகாது.

154. ஐந்துமே ஞானபூசை ஆகலின்.

இருவினைச் சமத்தி னெய்திய முனிவீர்
　　எறிதிரை நந்திநந் தினியை
வரவழைத் தயில்வேல் வள்ளன்மா தவத்து
　　நந்தியை யாடுறப் பணித்துப்
பொருவிலா கமத்தி லுயருப தேச
　　கலையினைப் புகன்றவா புகன்றும்
விரவிய புகழா னகத்திய னண்மி
　　மெய்யருள் பெற்றது மொழிவாம். 155

நந்தியுபதேசப்படலம் முற்றிற்று

ஆகத்திருவிருத்தம்—873.

அகத்தியனருள்பெறுபடலம்

மகத்தீ சனெனப் படவைப் பனவும்
சகத்தீ சனெனப் படச்சார் வனவும்
உகத்தீ சனெனப் படவுள் ளனவும்
அகத்தீ சனடித் துணையன் றிலையே. 1

வேறு

திருக்கிளர் தாமரை செற்றிய பண்ணை
மருக்கிளர் காசிவ ரைப்பிடை மேனாள்
ஒருக்கிய வைம்பொறி யானுப தேசம்
அருக்கிய சிந்தைய கத்திய னென்பான். 2

இந்திர னாதிய ரேத்தி வணங்கப்
பந்தணை மெல்விர லாளொரு பாலாம்
அந்தணன் மெல்லணை மேலமர் வேலை
வந்தெதிர் தாழ்ந்தும கிழ்ந்திது சொற்றான். 3

சுந்தர மங்கையர் சொல்விழை காமம்
மைந்தரின் யாரு மகிழ்ச்சிதி ளைக்கும்
செந்தமி ழென்னுந் திருத்தகு பாடை
தந்தருண் ஞானமுந் தந்தரு ளென்றான். 4

மொழிந்தெதிர் நின்றமு னிவனை நோக்கிச்
செழுந்தமி ழுஞ்சிவ ஞானமும் வேட்பின்
எழுந்துயர் காவியி ருங்கிரி யண்மின்
தழுந்தர முண்டதன் றன்மையுங் கேண்மோ. 5

---

1. மகத்தீசன் - இந்திரன். சகத்தீசன் - அரசன். உகத்துக்கு ஈசன் - உருத்திரன். அகத்தியற்கு அருள்செய்த ஈசன்.

2. அருக்கிய - சுருக்கிய. உபதேசத்தைச் சுருக்கிய எனவே, உள்ளத்திலே உபதேசத்தை அடக்கிய என்பது.

4. விழைய மைந்தர்.

எவ்வரம் வேண்டியி றுப்பினும் வல்லே
அவ்வர மவ்வயி னல்லது முற்றுச்
செவ்விய தியாம்பணி யத்திகழ் வேலோன்
தெவ்வுப தேசமுஞ் செப்பிய தாமால். 6

நம்மரு ளாணையி னந்திசி றந்த
அம்மலை நண்ணிய ருந்தவ மாற்றிச்
செம்மற ருஞ்சிவ ஞானமு ணர்ந்தான்
எம்மரு கெய்தியி ருந்தனன் மீட்டும். 7

ஓருட லட்டொளி பெற்றதிக் காசி
பாரிடை வந்துப ணிந்தவர்க் கெல்லாம்
ஈருட லீட்டிருண் மாயைகன் மங்கள்
வேரொடு மாய்த்தலிற் காசியின் மேலாம். 8

பெற்றுப தேசம்பி றங்கிய வஞ்ஞான்
றிற்றது சூர்முத லென்றெழுந் தாடல்
உற்றிடு நம்மொரு சூழலங் குண்டால்
கற்றவர் காசியெ னக்கரை வாரால். 9

இத்தகு காசியி றும்பொழு தெம்மான்
மெய்த்தொளிர் தாரகம் விள்ளுவ தாகும்
அத்தகு காசிய னைத்தினு மேலாம்
உத்தம வுண்மை யுரைப்பதெஞ் ஞான்றும். 10

ஈண்டிறும் போதிலி யம்புப தேசத்
தீண்டுப யன்னம தின்னுரு வாகும்
ஆண்டரு ளுண்மையி னைம்மலை மாங்கே
மாண்டொளிர் முத்திவ ரும்பய னுமே. 11

---

6. தெவ் - கிரகிக்கக்கூடிய.

8. ஓருடல் - தூலசரீரம். ஈருடல் - தூல சூக்கும உடம்புகள்.

10. எம்மால்.

11. பயன் என்பதில் னகரம் சந்தம்நோக்கி மிக்கது. நமது இன்னுரு - சாருபம். ஆண்டு - தணிகை.

ஞானமெ வற்றினு மேலது நல்கும்
தானமு மேலெத்த லத்தினு ஞானம்
ஆனத லத்தினு மத்தல மேலாம்
வானருள் யாமும தற்கிவர் மாண்பால். 12

ஆங்குப தேசம றுமுக னல்கத்
தாங்கிய ஞான்றுத டமொன்ற கழ்ந்து
வீங்கிய வேணிவி ழுப்புன ருழ்த்தாம்
தேங்கிய வச்சிவ கங்கையு முண்டால். 13

இவணுறு கங்கையெ ரிசடை யுய்ப்பத்
தவழ்வதொன் றேனுந்த வமுனி வாயின்
உவளக முற்றுலந் தாரென்பி ஞர்ந்த
தவணுறு கங்கைக்க ழுக்கொன் றுமின்றே. 14

பகீரதன் மாதவ ஞலிது பாரில்
உகாவவர் பேரொடு மோங்கிய தாங்கண்
முகேரெனத் தோய்சிவ கங்கைமுன் யாமே
புகாயென வைத்தலி னப்பெயர் பூணும். 15

ஈங்குறு கங்கையி னெய்துப யத்தின்
ஆங்குறு கங்கையி னுயிர மேலாம்
ஈங்குவ சிப்பவெ ழுந்தப யத்தின்
ஆங்குவ சிப்பதொ ராயிர மேலாம். 16

மலக்கமு றுத்திய வன்பிணி யாதி
கலக்கமு றுத்துக ரிசுக ளெல்லாம்
அலக்கணு றுத்திய வாணவத் தாமஃ
துலக்குவ தேலுல வாப்படர் யாதே. 17

---

12. மேலாகும். அது - ஞானம். இவர்தல் - விரும்புதல்.

14. உவளகம் - இடம்.

15. மாதவன் - சன்னுமுனி. உகா - உக்கு. பாகீரதி, சானவி.

17. மலக்கம் - மயக்கம். அஃது - ஆணவம்.

முத்தியின் மேற்பய னின்றது மூழ்கின்
அத்தலை நல்குவ தத்தட மென்றான்
மெத்திய வேலைவி ழுப்பொருள் யாதே
பத்தியி னாடுநர் பாற்பலி யாதே. 18

விலங்குப றப்பைவி ரைத்தரு வாக
அலங்கிய வத்தட நீருட லண்மின்
இலங்கிய தெய்வத மாயிடர் வீழ்த்துப்
புலங்கெழு போகம்பொ ருந்தவி டுக்கும். 19

திரைத்தவிர் பன்மணி சிந்தியி ரைத்து
நுரைத்தலை யத்தட நுண்புன றோய்ந்த
விரைத்தம ருத்துவி ராவிய புல்லும்
நிரைத்தது றக்கநி லத்தர செய்தும். 20

அவ்வயின் வாழ்தரு வாதியு மாங்கண்
செவ்விய நந்திரு மேனியி னார்த்த
எவ்வமி லாமல ராதிக ளீவ
எவ்வெவை யுஞ்சிவ லோகம தேறும். 21

பாங்கரி னந்திப டிந்தருள் கூடும்
வீங்கிய யாறும்வி ழுத்தக வெய்தும்
ஓங்கிய வச்சிவ கங்கையொ டொக்கும்
தேங்குகு மாரதி ருத்தமு முண்டால். 22

முழங்குறு விண்ணதி மூன்றவை யெம்மால்
வழங்கிடப் பட்டன மாலயன் மன்னற்
கழுங்கிய வேதற்க ருளிய கங்கை
பழங்கண றுக்கும்ப கீரதி யீது. 23

---

18. அது - முத்தி. பலியாதது யாது. அதை நல்குவது.

20. அலைகின்ற அத்தடம்.

21. தருவாதியும், ஈவனவாகிய எவ்வெவையும்.

22. யாறும் திருத்தமும்முண்டு. எய்தும் சிவகங்கை. ஆறு - நந்தி நந்தினி யாறு;

23. மன்னன் - இந்திரன். மன்னற்குப் பட்டன.

மற்றையி ரண்டுமவ் வானின கத்தே
உற்றன நங்கயி லாயமு றுத்த
அற்றமில் கங்கையொன் றள்ளிலே வெள்வேற்
கொற்றவன் முன்னக்கு றுகிய தாங்கு. 24

ஆதலி னுற்கும ரன்பெய ரான்ற
தீதறு நங்கயி லாயதி ருத்தம்
ஓதிய வச்சிவ கங்கையொன் றுக்கும்
ஈதல தொன்றும தற்கெதி ரின்றே. 25

வேறு

குட்டநோய் பெரும்பிணி குருதி கால்பிணி
முட்டிய முயலகன் முருக்கும் வாதநோய்
தொட்டுயிர் விழுங்குறுஞ் சூலை யாதியும்
அட்டெழி றருவதக் குமார தீர்த்தமே. 26

கதிரொளி யிருளெனக் கலங்குங் கண்களும்
முதிரிரு ளொளியென முகிழ்க்கும் பேரொளி
பொதிநலந் தருவது புக்குத் தோய்ந்தவர்க்
கதிரொலித் திரைசெயக் குமார தீர்த்தமே. 27

புண்ணிடைப் புழுக்குலம் பொழிவ தாயினும்
விண்ணெனும் புண்கறை வீழ்ப்ப தாயினும்
துண்ணென வுறுப்பிறத் துணிப்ப தாயினும்
மண்ணுறி னப்பிணி வல்லை மாய்க்குமே. 28

கொலைப்பழி யாலுயிர் குமைக்குஞ் சாயையும்
அலைப்புறு பூதமு மலகைப் பேதமும்
மலைப்புற வருத்துமந் திரத்தின் சூழ்ச்சியும்
உலைப்புறு வனவதி னுவந்து தோய்நர்க்கே. 29

---

24. கங்கை பத்துள் கயிலாயத்திலுறுத்தவொன்று.

27. ஒளியை இருளெனக் கலங்கும் கண்கள் - குருட்டுக்கண்கள். முதிர்ந்த இருளை ஒளியென.

28. உறுப்பை வெட்டினுற்றுன் தீரும் என்னும்படியான புண்ணும். புண் துணிப்பதாயினும் என்பாரும் உளர்.

29. சாயை - பிரமகத்தி.

கருக்கொலை தந்தைதாய் கன்னி யந்தணர்
உருக்கிளர் வீரரா னுதவி கொல்கொலை
குருக்கொலை யாயினுங் குழைந்து ளாருயிர்
வெருக்கொளத் தோய்ந்துறின் விளிக்கு மத்தடம். 30

பகைஞரைப் போரிடைப் பணிக்க வேண்டினும்
அகையுறு நட்பினை யாக்க வேண்டினும்
மிகைநல மொக்கலின் விளைக்க வேண்டினும்
தகைபெற முற்றுமத் தடத்துத் தோயினே. 31

புதல்வரை வேண்டினும் புலமை வேண்டினும்
கதமலை வேண்டினுங் கவிகை வேண்டினும்
சுதைநிகர் மொழியினர்த் தோய வேண்டினும்
பதவிகள் வேண்டினும் படியி னல்குமே. 32

சித்திநா லிரண்டையுஞ் செறிய வேண்டினும்
முத்திற வுலகெலா முகிழ்க்க வேண்டினும்
பொத்திமற் றவற்றினைப் புரக்க வேண்டினும்
எத்திறம் வேண்டினு மீவ தன்னதே. 33

கமழ்புனன் முடித்தலை கலந்து தாழ்தொறும்
இமிழ்தரு பாவங்க ளிறங்கிக் கீழிடும்
நிமிர்தொறு நல்வினை நிமிர்ந்து மேலிடும்
அமிழ்தென வளிக்குமத் தடத்தி னென்பவே. 34

உண்ணினு மழுக்கொடா சூச மோப்பமெய்
மண்ணினுஞ் செல்வுழி வழுக்கி வீழினும்
கண்ணுறக் காணினுங் கரையக் கேட்பினும்
தண்ணிய தடம்பலன் றருவ தென்பவே. 35

விண்ணிட முயிர்த்தொகை மிடைய மெல்குமே
மண்ணிடம் விண்ணினும் வாழ்வு முற்றுமே
தண்ணறு நரகெலாந் தவ்வென் றேங்குமே
அண்ணலத் தடத்திடை யருளு மாண்பினே. 36

---

30. ஆன் - பசு. உயிர் அஞ்சித்தோய்ந்தால்.

31. அகையுறு - செறிந்த. அகை - உயர்வு என்பாரும் உளர்.

32. கதமலை - யானை.

36. அண்ணல் - முருகவேள்.

அத்தலந் தன்னையா மடைகு வாமெனப்
புத்தியி னினைப்பினும் புறத்திற் செல்லினும்
பத்தடி நடப்பினும் பரிந்த நோயெலாம்
கொத்தொடு மவர்புறம் வழிக்கொண் டோடுமே. 37

பரிதிமேற் கெழுந்தொறும் பனிமு ருங்குமா
றொருதிருத் தணிகையை யுன்னிச் சார்தொறும்
அருகிநோ யத்தட மாடத் தீர்வுறும்
முருகனைத் தொழுதெழ முகிழ்க்கு மின்பமே. 38

அஞ்சிறைப் பூவைபைங் கிள்ளை யாதியைத்
தஞ்சிறைப் படுப்பாராற் றக்க வூணினல்
மஞ்சனு முத்தியை வழங்குஞ் சூழ்ச்சியால்
நெஞ்சுறு நினைவெலா நிரப்பி யாவர்க்கும். 39

கணிகமழ் தடவரைக் கலைகள் குப்புறும்
கணிகவெற் பதனிடைக் கருத்து முற்றுறும்
கணிகமுற் றிருப்பினோர் கங்குல் வைகுறின்
கணிதமில் பெரும்பயன் கைக்க ணெல்லியே. 40

காழ்படு முளத்தினன் கணிக வெற்பென
வூழ்பட வொருமுறை யுரைப்ப னாயினும்
பாழ்படும் பஃறிறப் பாவக் குப்பையும்
வீழ்பதம் யாவையும் விரைவிற் சூழுமே. 41

கற்பம்வந் தழிக்கொணுக் கற்ப சித்தெனும்
பொற்புறு மத்தகு பொருப்பைப் போற்றுறின்
எற்பட வெழுமுணர் விடைய றித்துறும்
அற்பட வறுமுக னருள்க லக்குமே. 42

---

38. மேற்கு - மேல். சூரியனெழப் பனி முருங்குமாறுபோல்.

39. யாவர்க்கும் வழங்கும்.

40. இருப்பின் முற்றுறும் என முடிக்க.

41. பாவக்குப்பையும் பாழ்படும்.

42. எல் - ஒளி. அல் - ஆணவ இருள்.

நால்வகைப் பயனையு நாடி ஞூர்பெற
மூலமாய் நின்றவம் மூல வெற்பினைச்
சீலரா யுள்ளகஞ் சிந்தை செய்யினும
பாலுநீ இப் பயனெலாஞ் செவ்வி பார்க்குமே. 43

சீபரி பூரண கிரியைச் சேர்ந்தவண்
வீபவ ரிழிஞரே யானுங் வீழிவாய்
மாபயின் மார்பனுஞ் சமழ்ப்பின் மாழ்குற
ஆபவான் மலமொரீஇ யருளி னெல்லையே. 44

அல்லகாத் திரியென வரற்றி னோர்முறை
நல்லகாத் திரிவன விரித்து நாடமர்
வல்லகாத் திரத்தினுஞ் சவட்டு மான்கடாய்
எல்லகாத் திருப்பதிக் கிறைமை பூண்பரே. 45

பிறப்பவ ரருள்பிறப் பெல்லை யாகுவர்
சிறப்பவத் தணிகையந் தேத்து வாழுநர்
மறப்பருங் கந்தலோ கத்து வாழ்குவர்
இறப்பவர் மலமிறந் திறப்பர் முத்தியின். 46

இருண்மல மிரித்தலி னிரவி யொக்குமால்
மருள்பிணி துமித்தலின் மருந்து போலுமால்
பொருள்பல விளைத்தலிற் புகழ்ச்சிந் தாமணி
தருநிதி தேனுவுந் தலமொப் பாகுமே. 47

குணங்கரும் விருச்சிகங் குலாவு மாரஞள்
குணங்குறி கடந்தவக் குமரன் றாட்டுணை
வணங்குறி னெழுபவ மல்லற் செல்வமோ
டிணங்குமந் தணர்களாய் முத்தி யெய்துவார். 48

---

43. பயன் - தருமார்த்த காமமோக்ஷம்.

45. அல்ல - கரிய. அது காவியை விசேடித்தது. ஓர்முறை அரற்றின். காவியத்திரி காத்திரி. கா - சோலை. வனத்தில் சஞ்சரித்தலை யொழித்து நாட்டில் அமரும் யானை என்க. காத்திரத்தினும் - முன் காலினாலும்: காத்திரம் - களிற்றின் முன்கால். மான் - யானை. அல்கா - சுருங்காத. பதி - ஊர். இறைமை - அரசனுந்தலைமை. புராணவரலாற்றுப்படலம் செய். 59 அல்லகாத்திரி என வருமாறு காண்க.

46. முத்தியில் தங்குவர்.

48. குணங்கு அரும் - நோய்க்கு அரிய. குணங்குதல் - வளைதல் என்பாரும் உளர்.

அருடரு மாறெழுத் தாங்க ணோதுவோர்
முருகனை துருக்கொடு முன்னி வாழ்வரால்
இருவகை யயனத்திற் பதமி றைஞ்சுநர்
மருமலர்க் கடப்பிணன் மருங்கி ருப்பரால். 49

கணிகையர் விழைவினுற் காரி யத்தினுல்
தணிகையை யடைந்தவன் சரணந் தாழ்நரும்
மணிமரு ளுருக்கொடு மறுபி றப்பினில்
அணிமிகு கந்தலோ கத்தை யண்முவார். 50

வேறு

மறைக ளாகமம் வண்கலை யவ்வயின்
நிறைய நல்குநர் நீடிரும் போகமும்
அறிவு மாயுளு மற்கிய செல்வராய்ப்
பறைய மும்மலம் பாயரு ளாபவே. 51

கூவி ரத்தடந் தேர்மத குஞ்சரம்
வாவு கொய்யுளை மாசிவி கைக்குலம்
மேவி யுய்ப்பவ ரன்னவை மேல்கொடு
தாவி லாத்துறக் கந்தனைச் சார்வரால். 52

நீர்சொ ரிந்துநி லத்தைய ளிப்பவர்
சீர்சொ ரிந்தசெல் வத்தின்மி குந்துவாழ்ந்
தேர்சொ ரிந்தமெய் யெய்தியி ருவளம்
பார்சொ ரிந்திடப் பார்த்திப ராகுவார். 53

அன்ன நல்கினு மாடையு தவினும்
பொன்ன ளிப்பினும் பூணணி வீசினும்
கொன்னும் வேறுத லத்திற்கொ டுப்பதின்
அன்ன வைப்பின ரும்பயன் கோடியே. 54

---

49. உத்தராயனம், தட்சிணாயனம். கடப்பு: வலித்தல் விகாரம்.

52. உய்ப்பவர் - முருகனுக்குக் கொடுப்பவர்.

53. இரு - பெரிய.

ஆயு நான்மறை யந்தணர்க் கவ்வயின்
ஈயு நற்பயன் கோடியி லக்கமாம்
பாய தொல்புகழ்ப் பார்முதல் யாவையும்
காயி லைக்கதிர் வேலவற் கீயினே. 55

அருப்பி ளம்பொழி லாக்குநர் நந்தனம்
மருப்பொ லிந்தவ னங்கள்பு துக்குநர்
திருப்பொ லிந்ததி ருத்தந் தொடுநரும்
இருப்பர் கந்தவு லகத்தெஞ் ஞான்றுமே. 56

தூம மெங்குங்க மழத்தொ குக்குநர்
காம ரும்பல தீபங்க ளுற்றுநர்
தாம நாற்றுநர் தாமும றுமுகன்
சேம வானுல கத்தன்றிச் செல்லுறார். 57

கோயில் கோபுரங் கூடம்பன் மண்டபம்
வாயின் மாமதின் மற்றுமி ழைக்குநர்
தீய தீர்ந்துவிண் செல்வமெ லாந்தழீஇ
ஆய பின்னிளை யோனுல கண்முவார். 58

புதுவ தாக்கும்பு கரில்ப யத்தினும்
கதுவுந் தூர்ந்தகண் ணுர்தடந் தீர்த்தமும்
செதுவ தானதி ருப்பணி யாவையும்
முதுவ தோர்ந்துமு றையினி யற்றினே. 59

மங்க லத்தின்ம லிசிவ கங்கையும்
கொங்கு லாவுங்கு மாரதி ருத்தமும்
அங்க ணந்திக்க ழைத்தரு ளுந்தியும்
பொங்கு நீர்விதி யாற்புகுந் தாடுபு. 60

வீடு நல்கிய வீராட்ட காசத்தின்
ஆடு மெம்மையு மவ்வயி னன்பர்நோய்
சாட வைகிய சாமிநா தப்பெயர்
நீடு மேந்தனி லையும்ப ணிந்துபோய். 61

---

55. ஏனைய தலத்தில் கொடுப்பினும் அவ்வயின் அந்தணர்க்குக் கொடுத்தல் கோடியாகும். அக்கோடியினும் இலக்கமாம்.

59. செது - குற்றம்; ஈண்டு அழிவதான என்பது. முதுவது - பழமையாயுள்ளது. இயற்றின் கதுவும் என முடிக்க.

வான ளாவிய மல்லல்வ ரையிவர்ந்
தானி ருந்தரு ளாவச்ச காயனோ
டான மீருங்கு மாரலிங் கந்தொழா
ஞான சத்தித ரனையு நண்ணுவோர். 62

எண்ணில் புண்ணிய மெண்ணில்பல் லூழிகள்
பண்ணு மப்பயன் பற்றுவர் வேதனை
அண்ணன் மாலைய ளித்துநி றுவுதற்
கெண்ணின் மற்றஃ தெண்மைய வர்க்கரோ. 63

வேறு

இச்சா ஞானக் கிரியையெனும்
இவைமூன் றிலையாய்க் கிளைத்தெழுந்திட்
டச்சா னுழி யறச்சுவற்றும்
அயில்வே லொருகை வலத்தமைத்து
நச்சா தவரைத் தெறுமொருகை
நளினங் குறங்கி னமைத்திமையோர்
விச்சா தரர்சூழ் ஞானசத்தி
தரன துருவம் விதிப்போரும். 64

வைவாய்க் கணிச்சிப் படையென்ன
வதிவித் திடுங்கோ வணத்தண்டு
கைவாய் வலத்தி னமைத்தருளிக்
கடியி லிடக்கை பதித்தருளி
ஐவாய் வழங்கும் பொறிபுலனை
யவித்த வுறுவ ரிமையவர்கள்
உய்வா னிறைஞ்ச வருள்வழங்குங்
கந்த னுருவ முஞற்றுநரும். 65

---

62. ஆன் - அவ்விடம்.

62, 63. நண்ணுவோர் பற்றுவர்.

64. அஞ்ஞானம் என்பது அச்சானம் என்றாகி வடநூற்புணர்ச்சி விதி பெற்று நின்றது. அஞ்ஞானமாகிய கடல்.

65. கணிச்சி - கோடரி. கடி - அரை.

ஒருகை தனது வலக்குறங்கி
னணங்கைத் தழுவி யுகளமுலை
மருவ வபய மொன்ருக
வளர்தோல் வாள்கு லங்குலிசம்
பொருவேல் வாள்வில் கதைபுள்ளம்
புயங்கோல் பத்துங் கரம்பத்தின்
இருவு மாறு முகத்தேவ
சேஞ பதிசீ ரிழைப்போரும். 66

இருள்கால் சிக்கு மணிக்கடக
இடக்கை கடியிற் கொளவிருவி
வெருள்கா லுளத்தோர்க் கஞ்சலென
விரவும் பயஞ்சா டபயமெனத்
தெருள்கா லொருகை வலத்தமைத்துத்
திகழ்ந்து பணிவோர் தமக்கெல்லாம்
அருள்கால் விழிச்சுப் பிரமணிய
வண்ண லுருவ மமைப்போரும். 67

ஒற்றை முகமு மிணைவிழியும்
உம்மைப் பயனு மொருங்களிக்கும்
கொற்ற வரத மூன்றலைக்குக்
குடமோ ரிரண்டு மிடங்கதிர்ப்ப
மற்றை வலப்பான் மணிவேலும
வாளுங் கதிர்ப்பக் கரநான்கும்
பெற்ற மதவெங் களிற்றூர்திப்
பெருமா னுருவஞ் சமைப்போரும். 68

ஞாங்கர்ப் படைகே டகங்கண்டை
நளினஞ் சேவல் கதையிடங்கம்
ஓங்கும் பகழி வாள்வரதம்
ஒளிரு மபயஞ் சிலையவைதாம்

---

66. வேல்வாள் - வேலாயுதம். வாள் ஈண்டு ஆயுதப்பொது. ஒளி வில் என்பாரும் உளர். புள் - கோழிக்கொடி. அம்புயம் இருவும்.

68. முகமும், விழியும், கரம் நான்கும் பெற்ற என முடிக்க. ஊனைத் தலையிலுடைய.

தாங்கும் கரங்க ளீராறும்
தயங்கும் வதன மோராறும்
ஆங்க விளங்க வருட்சரவ
ணபவ னுருவ மாக்குநரும். 69

சேர்த்த குலிசங் கேடகமே
செழித்த வரத மிடப்பாலும்
கூர்த்த மணிவேல் வாளபயம்
குலாவு வலப்பா லுங்கவின
ஏர்த்த வாறு மலர்க்கரமும்
இலங்கும் வதன மோராறும்
சூர்த்த பிணிக டபுங்கார்த்தி
கேய னுருவந் தொகுப்போரும். 70

வைத்த சுடர்வேல் வாளிரண்டும்
வலப்பா லிடப்பால் வாரணப்புள்
பைத்த மணித்தோ லோரிரண்டும்
பயில வலர்ந்த நாற்கரமும்
முத்த முறுவற் குறமாது
விளங்க முன்வந் தடுத்துமலக்
கொத்து விளியக் கடைக்கணிக்கும்
குமார னுருவங் குயிற்றுநரும். 71

படைவேல் பகழி வாடிகிரி
பாச மபயம் வலத்திடத்துச்
சுடர்வார் குலிசஞ் சிலைதோல்பூஃ
டோட்டி வரத மிவைபரித்த
தடவான் கரமு முகமாறுந்
தனிமா மயிலு மிருமாதர்
உடனு மெழிலுந் தருமாறு
முகவ னுருவ முனுற்றுநரும். 72

---

69. வேற்படை. கண்டை - மணி. இடங்கம் - கொடி. ஆங்க: அசைச்சொல்.

71. தோல் - ஆயுதம். வள்ளியைப்பார்க்கும் குமாரன்.

72. புள் தோட்டி.

வரதங் கொடிகே டகந்தோட்டி
வார்ந்த வெறுழ்ப்பா சங்குலிசம்
பரவு மபயம் வாள்சூலம்
பரிதி முசலம் வேன்முந்நாற்
கரமும் விளங்க வறுமுகமுங்
கதிர்ப்ப விழிகள் கருணைமழை
தரவென் றருளுந் தாரகாந்
தகன்சீ ருருவஞ் சமைப்போரும். 73

அபய முசலம் வாள்சூலம்
அயில்வே ரேட்டி வலம்வரதம்
தபுநீர் குலிசஞ் சிலைபதுமம்
தண்டங் கதைமற் றிடமாக
உபய விராறு கரதலமும்
ஒளிர்வித் தாறு முகந்தோற்றிச்
சுபநன் கருளி யிடர்துமிக்கும்
சேனா பதிசீர் தொகுப்போரும். 74

வரத மணிக்குண் டிகையிரண்டும்
வாமத் திருக்கைத் தலமாக்கிப்
புரவு புரியு மபயமொடு
புரைதீ ரக்க வடம்வலப்பால்
இரவை யிரிக்கும் வலத்தமைத்திட்
டெல்லா வுலகு மினிதளித்துப்
பிரம சாத்த னெனப்பொலிந்த
பெருமா னுருவம் பிறக்குநரும். 75

அல்யாப் பவிழ்க்கும் வலக்கரங்கள்
அபய மக்க வடந்தாங்க
வெல்யாப் புறுத்த மணிக்கடமும்
கடியு மிடக்கைத் தலஞ்சேரச்

---

73. வென்றருளிய. தாரகனுக்கு யமனாயிருந்து உயிர் முடித்தலின் தாரகாந்தகனென்றார்.

74. அயில் - கூர்மை.

75. யாசித்தலை ஒழிக்கின்ற வல்லமையோடு அமைத்து. சாத்தன் - தண்டிப்போன், தெரிவிக்கிறவன்.

சொல்யா முனைய வள்ளிவலம்
துன்ன மணிநீ ரரிவாக்கக்
கல்யா ணத்தி னெழில்வாய்ந்த
கடவு ளுருவங் காண்போரும். 76

கடியி லிடக்கைத் தலமிருவிக்
கமலம் வலக்கைத் தலமேந்தி
அடியின் மணிக்கிண் கிணிகவைஇ
யமரும் பால வுருத்தோற்றி
முடிக ளுரிஞு வெதிர்வணங்கு
முகுந்தன் முதலோர்க் கருள்சுரக்கும்
படியி லெழிற்சுப் பிரமணிய
பகவ னுருவம் பயிற்றுநரும். 77

அழலு நெடுவேல் வாள்பகழி
அபயம் வலநாற் கரத்தமைத்துத்
தழல்வச் சிரங்கே டகம்வரதம்
சாப மிடநாற் கரத்தாக்கி
எழின்மிக் கொழுகு முகமாறும்
இலங்கத் தோற்றிக் கிரவுஞ்சம்
புழைபட் டழியப் படைவிடுத்த
புத்தே ளுருவம் பொறிப்போரும். 78

புலிங்கங் கதிப்பத் தீத்தும்மும்
பொருவே லபயம் வலத்திருகைத்
தலங்கொண் டிடப்பா லிருகரத்தும்
தக்க வரதம் வச்சிரமும்
இலங்க வணிந்து திரைக்கடலும்
எழுபல் வரையு முலகனைத்தும்
குலுங்கக் கடவு மயிலூர்திக்
கோமா னுருவ மியற்றுநரும். 79

ஈண்டு விளங்க வெடுத்துரைத்த
வீரெண் ணுருவ மேயன்றி
வேண்டி முருக னெடுத்தருளும
வெவ்வே றுருவ மமைப்போரும்

---

76. கடி - அரை.

77. படி இல் - ஒப்பில்லாத. பாலசுப்பிரமணியபகவன்.

மாண்ட வள்ளி தெய்வமட
மாத ருருவம் வகுப்போரும்
ஆண்ட வீரர் முதலான
வமர ருருவ மாக்குநரும். 80

இம்மைப் பிறப்பிற் பிணிதுமிய
எதிரில் செல்வத் திடைமூழ்கி
மம்ம ருறுக்கும் பகைநீங்கி
வைய முழுதும் பணிகேட்பக்
கொம்மை முலையா ரின்பநலம்
கூட்டுண் டான்ற மகவுயிர்த்துச்
செம்மற் குணத்துத் தலைநின்று
திகழ வாழ்ந்து கடைநாளில். 81

திமிரப் படலங் கிழித்தொதுக்கும்
செறிவெங் கிரண வுருவாய்ந்த
அமர ராகி யொளிப்பிழம்ப
அடுத்த விமான மேல்கொண்டு
நிமிரும் புகழெண் டிசைபோர்ப்ப
நெடுவான் மலர்மா ரிகடூர்ப்பத்
தமர மிகுந்துந் துமிமுழங்கச்
சங்கும் வயிரு நனிநரல. 82

களிவண் டெனநின் றிறுமாக்கும்
கண்ணின் வழியே மனஞ்செல்ல
ஒளிவண் டணிந்த செம்பதுமம்
உறழ்கை வழியே விழிநடப்பத்
தெளிமின் னனைய வரமகளிர்
தெய்வ நடன மெதிர்குயில
நளிதண் கடலி னமிழ்தென்ன
நரம்புங் குரலு மிடைமயங்க. 83

முற்ற வுணர்ந்தோர் முதுக்குறைவு
முரியு மகளிர் கரத்தேந்திக்
கற்றைக் கவரி புடையிரட்டக்
கதிர்வெண் கவிகை மேனிழற்ற

---

80. ஆண்ட வீரர்.

ஒற்றி மணிவேத் திரக்கரத்தோ
ருறுமா சனத்தின் றிரள்விலக்க
வெற்றி யிமையோ ரெதிர்கொள்ள
வெய்து விசும்பின் வழிநீந்தி. 84

துளிக்கும் பசுந்தேங் கற்பகப்பூஞ்
சோலை வதிந்து குங்குமத்திற்
குளிக்குங் களப முலைமடவார்
கொழுந்தீங் கலவி யமிழ்தளைந்து
களிக்குங் களியான் வருவைகல்
கழித்து நாக மழிகாலை
அளிக்கும் பிரம னுலகெய்தி
அரிய போக நனிநுகர்ந்து. 85

அந்த வுலக மழிகாலை
அரவப் பள்ளி நெடுமால்வை
குந்த நிலவிப் பெரும்போகம்
கொள்ளை கொண்டங் கவ்வுலகும்
சிந்து மளவிற் றிப்பியமாய்த்
திகழ்ந்த கந்த வுலகணைந்திட்
டெந்த வளமு மெதிர்நிற்ப
இனிது வாழ்ந்து வீடுறுவார். 86

மல்கும் பொருளின் றிரட்கேற்ப
மாசைக் குவையா லிரசதத்தால்
புல்கு மேனைத் தாதுவால்
பொற்ப வுருவங் குயிற்றுநர்பால்
அல்கும் பயனெவ் வளவாமவ்
வளவும் பொருளா னல்கூர்ந்து
மெல்கு மவர்சித் திரித்தேனும்
விரும்பிற் பயப்ப துண்மையே. 87

---

84. பெரியோருடைய அறிவும் கெடும்படியான மகளிர் என்க. முரிதல் - கெடுதல். ஒற்றி - அடித்து.

86. வைகுந்தம்.

சரியை கிரியா யோகத்துத்
தலைநின் றவர்கள் வேலுயர்த்தோற்
குரிய வுருவி னென்றாக
வுளுற்றிற் றியானித் தேத்தெடுப்பின்
அரிய பூசை விழாவாதி
ஆற்றி னவர்கள் பெறும்பேற்றைத்
தெரிய வுரைத்த லரிதாகும்
தெள்ளித் தெளிந்த முனிவரனே. 88

பலகூ றுவதெ னருள்புரிந்து
பணிக்குந் தேவர் பலருள்ளும்
இலைவேற் படைகைத் தலத்தமைத்த
இறையே நனிமிக் குயர்தேவன்
நிலனுர் தலம்பல் லவற்றுள்ளும்
நிகழ்நாற் பொருளு மெளிதளிக்கும்
தலமா வெமக்கு மருள்புரியத்
தக்க வதுவே தலமதனல். 89

ஆங்குப் படர்ந்து ஞானசத்தி
தரனை யகத்தா மரையிருவி
ஓங்குந் தவத்தான் முனிவரநின்
உள்ளம் விழைந்த விழைவெல்லாம்
பாங்கு பெறத்தெவ் வுதியென்று
பணித்த காசி நகரிறைவன்
பூங்கட் கமல பதமிறைஞ்சி
விடைகொண் டினிது புறம்போந்தான். 90

அரங்கும் வினைகள் வழிக்கொள்ளும்
ஆற்றன் முனிவன் வழிக்கொண்டு
குரங்குந் துணர்ப்பல் லவச்சாகைக்
குளிர்பூஞ் சோலை வானிமுன்ற
புரங்கொ லிறைவன் பஃறலமும்
போற்றி முழவ மெனக்குயில்கள்
இரங்கும் பொதும்பர்ப் பருப்பதத்தை
யெய்தி வணங்கி யியங்கினான். 91

---

89. அதனுற் பலகூறுவதென் என முடிக்க.

91. அரங்கல் - அழுந்தல். குரங்கும் - வளைந்த; அசைகின்ற. ஸ்ரீபருப்பதம்.

பூங்கா வகத்துப் பசுங்கோட்டுப்
புதன்மென் மயிரின் வாலணில்கள்
மூங்கா வரற்றக் குறுந்தாளை
மோட்டா மைகடாழ் புனலழுந்தி
நீங்கா மகிழ்ச்சித் தலைநிற்கும்
நெடுவெண் டரங்க முகலிதழீஇ
ஓங்கா நின்ற தென்கயிலை
யுற்றுப் பணிந்து நெறிச்சென்றான். 92

போதா வினம்பூ ணிகள்கம்புள்
புனற்பால் பிரிக்கும் புண்ணேமி
தேதா வெனப்பண் முரன்றெறிந்து
சிறைவண் டினஞ்சூழ் மலர்ப்பிறங்கல்
மீதார் தரச்சென் றகன்வயல்கள்
விளைத்துத் தவழ வெதிர்நோக்கி
ஈதா நந்தி நந்தினியென்
றெழுந்த களிப்பி னதிற்றோய்ந்தான். 93

திரையும் புனறோய்ந் தெழுந்தாங்குச்
செய்யுங் கடன்க ணிரப்பியபின்
கரையி னிவர்ந்தா னவ்வேலைக்
கதித்த வழியின் கீழ்பாங்கர்
வரையென் றயிர்க்கு மாடநிரை
வயங்கி வெளியி னிடைதூர்த்த
விரைசென் றெதிரும் வீராட்ட
காச நகரங் கண்ணுற்றான். 94

---

92. மூங்கா - வாய்மூடாது. மூங்கையாயுள்ளவர் பேசுங்காலத்து உண்டாகும் கண்டத்தொனிபோல் எனினும் பொருந்தும். மூங்கா - கீரி. (அகராதி) வடசொல்.

93. போதா - பெருநாரை. கம்புள் - சம்பங்கோழி. பூணி: ஒரு பறவை. நதியானது நேமியும், மலர்ப்பிறங்கலும் தன்மேற் பொருந்தச் சென்று.

வேறு

கோடுகொண்டு லாவுறுங் குலாவுமாறு கான்மரீஇ
ஆடுநீடு சிறைபடு மணங்குவேங்கை மாறுகொண்
டோடும்வார்ந்த பட்டநெற்றி யுற்றுநிற்கு மின்னவாம்
தோடுகொண்ட விருதிறத்த தும்பிச்சூழ லெங்குமே. 95

நித்திலங்கொ ழித்தலு நிரந்துவண்ட லாடலும்
ஒத்துநீர்ப டிதலு மொண்மலர ணிதலும்
தொத்தலர்ந்த பைம்பொதும்பர் சூழ்தலும்பொ ருந்திய
பைத்தெழுந்த விருதிறத்த பண்ணையீட்ட மெங்குமே. 96

வயங்குசித்தி ரத்தன மாதர்தங்கு ழாத்தன
தயங்கிவிண்ணி ழுெங்குவ தண்ணென்பாட லீண்டுவ
முயங்குகண்கள் வாங்குவ முதிர்ந்தவின்ப மாக்குவ
இயங்குகின்ற விருதிறத்த வம்மனைக ளெங்குமே. 97

மண்சுருங்க வார்ந்தன வளாயமாம திற்குலம்
விண்சுருங்க வோங்கின விளங்குகோபு ரத்தொகை
எண்சுருங்க வன்னவற் றெழுந்தவார்கொ டித்திரள்
கண்சுருங்க மல்கின கதித்தபல்வ ளங்களே. 98

சுரும்புமூசு தேந்தொடை சுடர்ந்தபன்ம ணிவடம்
விரும்பநாற்றி யெங்கணும் விசித்ததோர ணங்களும்
கரும்பரம்பை பூகதங் கலந்துபொன்ன ணிந்தெழில்
அரும்புபந்த ரீட்டமு மழற்றுவேனின் மாற்றுமே. 99

---

95. தும்பி - யானை, வண்டு. யானையானது பகையினிடத்திற் பொருந்தி ஆடும். மாறுகால் - பகைவரிடத்து: வண்டுக்கு ஆறுகால் மருவி ஆடும் என்க. சிறை - யானை கட்டுமிடம். நெற்றி - இடம். தோடு - கூட்டம்.

96. பண்ணை - விளையாடுமிடம், மருதநிலம். வண்டல் - மகளிர் விளையாட்டு, வண்டல்மண்.

97. இயங்குதல் - ஒளிசெய்தல் (அகராதி).

98. மதிற்குலம் ஆர்ந்தன. திரளெழுந்தன. வளங்களைப் பார்த்தற்கு இக்கண்கள் மிகுதியாயுள்ளன அல்ல என்பார் 'வளங்கள் கண் சுருங்க மல்கின' என்ருர்.

99. தொடை - வடம். நாற்றி விசித்த தோரணம் என்க.

உடுநிரந்த மண்டிலம் வேறுண்டாய தோவென
விடுசுடர்வி ளக்கமு மெழிலிவானம் வேறெனப்
படும்விரைப்பு கைகளும் பனியினோடு கூதிரை
முடுகிவாய்ம டுத்துணு மொய்ம்பினின்ற மாடமே. 100

இவறிமாதர் குங்கும மீர்ம்பனிப்பு னல்விராய்ச்
சிவிறியின்மு றுக்குபு சிந்துகின்ற சேதகம்
தவறிலங்க லார்கள்வீசு தமனியப்பொ டிகலாய்ச்
சுவறநின்று பூமியின் றென்னிறமி தென்னுமே. 101

புழுகுமிக்க ளாவலிற் புளகவெம்மு லைத்தலை
இழுகிவீழ்ந்த சாந்தமங் கியங்குதாளி ழுக்குவ
முழுகுகட் பசுந்தொடை மொய்த்தகுப்பை யிடறுவ
ஒழுகொளிக்க லன்களிற்று வீழ்ந்தகாலு டற்றுமே. 102

வயலின்மள்ள ரார்ப்பொலி வரையின்மாமு ழக்கொலி
புயறவழ்ந்து லம்பொலி போகுநந்தி நந்தினி
பயிலுகின்ற பேரொலி பலவுமுள்ள டங்குற
இயமியம்பு பேரொலி யெழுந்துமிக்கொ லிக்குமே. 103

பிறக்கமல்கு தேவர்கள் பெட்டிறைஞ்ச வுற்றவர்
இறக்கநெஞ்செ ழாமையா லிருப்பநோக்கி யன்னவர்
துறக்கமுற்று மவ்வயிற் றொடர்ந்திறுத்து வாழ்ந்தெனச்
சிறக்குமந்த நகரினைத் திசைவணங்கி யண்மினன். 104

---

101. சேதகம் - சேறு. நிலத்திற்படிந்த சேதகமானது கலாய்நின்று என்னும் என முடிக்க.

102. தொடையாகிய மொய்த்த குப்பை. கலன்களுள் இற்று வீழ்ந் தனவாகிய சில.

103. மா - மிருகம்.

104. இந்நகரில் இறைஞ்சவந்தவர்களாகிய தேவர்கள் இதைக் கடப்பதற்கு மனம் வாராமையால் ஈண்டே இருத்தலை அவர்களுடைய உலகமானது பார்த்து அவ்வுலகமே ஈண்டுத் தங்கி வாழ்ந்தாற்போலச் சிறந்த நகர் என்க. இறக்க - நீங்க.

பூமிநாத மாதியீ ருயவெப்பு ணர்ப்பும்வீழ்
சாமிநாதன் வைகிய தென்கரைத்தண் கோயிலும்
நேமிநாத னுதன்வாழ் வடகரைக்க ணிலயமும்
தோமினுத லில்லவன் கண்டெழுந்து துள்ளினன். 105

தாளதாம ரைகளுந் ததைந்தவோதி மங்களும்
வாளையாரல் கெண்டைமீன் வரான்மலங்கு நித்தலும்
ஆளுமன்ன நீரதா யாடினரி ருண்மலக்
காளநீவு றுஞ்சிவ கங்கைகண்ட டுத்தனன். 106

வேறு

சிலைபிளந்து தெவ்வியாறு சென்றெருதுக்கும் வச்சிரம்
தலைசுருங்கு சங்குளைந்து தந்தநித்தி லங்களுல்
குலைகளங்க கழ்ந்தெறிந்து கோலமல்க மாமதி
வலையமாகி யஙகண்மாத வங்குயிற்றன் மானுமே. 107

அன்னகோட்ட கம்பிரான லங்கல்வேணி மீதுடன்
மன்னுகங்கை தன்னின்மல்லல் வெளவவுன்னி யாடுவான்
முன்னுதான வர்த்துரப்ப மொய்யொளிக் கலைக்கொழுந்
துன்னியங்கண் வட்டமாய்வ ளைந்துகொண்ட தொக்குமே. 108

பளிங்கரிந்து சுற்றெலாம் பதித்துமுற்று வித்தவவ்
ஒளிர்ந்தகற்ற லத்தின்மொட்டு டைந்தபங்க யங்களும்
மிளிர்ந்தவோதி மங்களு மிடைந்தநீர்நி ழற்றலின்
குளிர்ந்தநீரு நீருறுத கோடுநாடொ ணுதடுே. 109

---

105. பிருதிவி முதல் நாததத்துவம் ஈருகிய. வீழ் - கெடுக்கின்ற. நேமிநாதனுகிய விஷ்ணுவுக்கு நாதனுயுள்ள கடவுள். தோம். இன்னுதல் - துன்பம்.

106. ஆளும். காளம் - விடம். மலங்கும்.

107. சிலை - மலை. குலையானது மானும். மதியானது வட்டமாகி. எறிந்து குயிற்றலை. நீருங்கோடும் வெண்மையாகத் தோன்றுதல் களங்கம் நீங்கிய பூரணசந்திரன் போன்றுளது. களங்கம் எனற்பாலது களங்கு என நின்றது. ஆறு - நதி.

108. கோட்டகம் ஒக்கும். உடன் - சந்திரனுகிய தன்னேடு. சந்திரன் கலைக்கொழுந்து வளைந்துகொண்டதை ஒக்கும்.

109. சுற்றலத்தில் நிழற்றலில்.

வாளையொன்றெ ழுந்துவீழ வாளைநோக்கி ஞரெலாம்
வாளையொன்றெ ழுந்ததென்று வாய்மைசொல்ல வவ்வயின்
வாளைநீழ னோக்கினர் மதத்தரின்ம றுத்துநீள்
வாளைபல்ல வென்னவின் மணிக்குலங்க ளெங்குமே. 110

திங்கள்வெண்ணி லாவெனச் செறிந்தநித்தி லக்கதிர்
தங்கவோடு வெய்யவன் றழற்பிழம்பு துன்னலால்
பங்கயங்கு விப்பருத லர்ந்தகூடு பாணிதேர்ந்
தங்கணன்பர் செவ்விநாடு மங்கலார்கள் காதலின். 111

மாதரார்க ழுத்தெனும் வளைத்தலைக்கண் வாண்முகப்
போதலர்ந்த பங்கயம் பொலிந்திருத்தல் கண்டுநேர்
ஊர்திரைத்த டத்திவற்றி னுற்றிருத்த றக்கதென்
ருதனம்ப டுத்தவம்பு யத்தையான்ற சங்கமே. 112

முன்னநேடி நாடொணாத முன்னவன்மு டிப்புனல்
இன்னதீதின் வைகியெண்ண மெண்ணியாங்கு முற்றுமென்
றன்னமாகி யெண்ணில்வேத ராதனத்தி னேடுநீஇ
மன்னுகின்ற தொக்குமான் மலர்த்தலைக்க ணன்னமே. 113

கண்முகத்து டற்றுமாதர் காமர்சிந்த வேள்சிலைத்
திண்முகத்து நாணெனச் செறிந்துநம்மை யேவுறும்
வண்ணமுள்ள தீதென மகிழ்ந்துநன்று செய்வன
தண்ணருவ ளிக்கருத்தி நீலமோடு தாமரை. 114

---

111. அங்கண்ணல். செவ்வி - சமயம். காதலின் அலர்ந்த என முடிக்க. புணர்ச்சியில் விருப்புடைய பெண்கள் புணரும்பொருட்டுத் தம் நாயகரை அழைக்க அதிக வெளிப்படையாகவும், அதிக குறிப்பாகவும் உணர்த்தாமல் நாயகர்க்கு விளங்குமளவு குறிப்பில் உணர்த்துமாறுபோல தாமரை குவியுந்தன்மையினீங்காது முழுவதும் அலராது நடுநிகரனவா யலர்ந்தன என்பது. காதலின் - ஏனையோர்க்கு ஆசையுள்ளது எனத் தோன்றியும், இல்லை எனத் தோன்ருமலும் இருக்கின்ற விருப்பத்தைப் போல. காதல் அரும்பாமலும் விரியாமலும் இருக்கும். காதல் அரும்பா மலும் விரியாமலும் நடுநிகரதாயிருக்குமாபோல்; காதலரும்பல் - அன்பு சுருங்கல். விரிதல் - அன்புமிகுதல்.

112. நேர் - எதிரியாக. அம்புயத்தைப் பொருந்திய சங்கமானவை ஆதனமாகப் படுத்துக்கொண்டன.

114. கண்ணுலும் முகத்தாலும் உடற்றுகின்ற. நரு.

கொங்குவிம்மு தாமரைக் குலத்திைேடு சங்கினம்
தங்குகின்ற பெற்றிவான் றயங்குமாநி தித்துணை
அங்கணங்க ணின்றுவேட் டடுத்திறைஞ்சு வோர்க்கெலாம்
செங்கையுய்ப்ப வண்ணலார் செறித்தசூழல் போன்றதே. 115

விந்தமொப்ப வங்கைவில் விளங்குதேரி னுள்ளிரீஇ
உந்துதேரி னுழியொன் ெறுழிந்துருமை நல்கென
முந்தனுரை நோக்கிமாத வங்குயிற்ற முன்னியாங்
கந்தயங்கு நேமியம்பு ளெண்ணிலாத வற்குமே. 116

வேறு

அன்ன பொய்கை யருங்கவின்
மன்னு மோகை மலிந்தெழ
முன்னர் நோக்கு முனிவரன்
துன்னி யன்பிற் றுளைந்தனன். 117

தவள நீறுசண் ணித்துமெய்ப்
புவனம் போற்றுமுப் புண்டரம்
திவள வெங்குஞ் செறித்தனன்
இவறு கண்மணி யேய்ந்தனன். 118

கோயி லைக்குறு குற்றனன்
வாயின் முன்னர் வணங்கினுன்
போய கத்தொளிர் பூரணன்
தூய பாதந் தொழுதனன். 119

ஆண்டு வேண்டு மரும்பொருள்
காண்ட கக்கதிப் பித்தனன்
மூண்ட வன்பு முகிழ்த்தெழப்
பூண்டு பூசை புரிந்தனன். 120

---

116. அங்குற வில்லால் விளங்குகின்ற தேர். ஐ வில் - ஐந்துகிரணம். சூரியனது தேர் என்க. நேமிப்புள்ளானது தன் உணவுக்குச் சூரியன் ஆதாரமாயிருத்தலால் அச்சூரியனது தேருக்கு ஒற்றைச்சக்கரம் இருக்கின்றது, அவ்வொற்றைச்சக்கரம் நீங்கினுல் சூரியன் வரவு தடைப்படும்; படவே நமக்கு உணவு நீங்கும் எனக்கருதி அவ்வொற்றைச்சக்கரம் நீங்காமலிருக்கும்படி அருளுக எனத் தவம் முன்னிஞற்போல என்க. ஒரு சக்கரமானது குயிற்ற என்பாரும் உளர். தேரின்கணின்று அத்தேரைச் செலுத்தும் சக்கரம் என்க.

ஐந்து சுத்தி யமைத்தருள்
ஐந்தொ ழிற்படு மர்ச்சனை
ஐந்த டக்கி யமைத்தபின்
ஐந்தி னைந்துதி யார்த்தினன். 121

வேறு

ஒருபாலின் மலைமடந்தை யொழியாமை வீற்றிருந்தும்
இருபாலு மிருடியர்க ளிறைஞ்சேத்துந் தனிமுதலே
தருவானத் திறையவனுஞ் சதுமறைநான் முகத்தவனும்
திருமாலு மறியாநின் றிருவடியென் சிரத்தினவே. 122

புவியிருந்தேர்த் தவிசனைய பொருப்புநெடுஞ் சிலைகுழைத்தும்
குவிமுலைசற் றேபொருதக் குழைந்தருளும் பெருந்தகையே
சவிமணிநூ புரத்தொலியுந் தழங்கியகைப் பறையொலியும்
அவிர்சடைநீர் முழக்கொலியு மடங்கலுமென் செவியனவே. 123

முறைமுழுதும் பகுத்தமைத்து முறைதிறம்ப மூவருக்கும்
உறைமலர்வா ணியைத்திருவை யுமையையரு ளறக்கடலே
பிறைமுடியு நகைமுகமும் பெருந்தோளும் வரைமார்பும்
நிறையுதர பந்தனமு நிலாக்கச்சும் விழியனவே. 124

வேறு

குறுமுனி பழிச்சி நிற்பக் குரூஉமதி மிலைத்த வேணி
அறவனு ரெதிரே தோன்றி யலர்முகத் தருளிச் செய்வார்
மறைவழி யெம்மை யாதி வராகநல் வழிபா டாற்றி
உறைதரு மிடம தாகு மவ்வுழி நீயும் வைகி. 125

---

121. தானசுத்தி, பூதசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, இலிங்க சுத்தி இவ்வைந்தும் பஞ்சகிருத்தியமாயடங்கும் பூசை எனவே, பூசை பஞ்சகிருத்தியத்துக்கு ஏதுவாயுள்ளதென்பது. பஞ்சலட்சணத்தாலாகிய துதி எனவே செய்யுளால் துதித்தான் என்பது. பஞ்சாக்கரத்துதி என் பாரும் உளர்.

123. பூமியாகிய தேருக்குத் தவிசுபோன்ற மேருகிரி. பறை - உடுக்கு.

124. முறை - இன்னருக்கின்னர் என்னும் பிறப்பால் ஒத்தபந்தம். கடவுள் திரிமூர்த்திகளையும் படைத்தலால் அவருக்கு அவர்கள் புதல்வர் முறை. சத்தியாகிய இலக்குமி முதலிய மூவரும் புதல்வியர்முறை. திரி மூர்த்திகளையும் உமை முதலிய மூவரையும் தானேபடைத்துப் புதல்வர், புதல்வியர் என்னும் முறைதிறம்ப அருளிய கடலே எனினும் அமையும்.

எம்மையோ ராண்டு காறு மியற்றுதி பூசை யப்பால்
கைம்மலை யுலம்பு மோதை கடிப்பிடு முரசி னேடும்
விம்மிய கணிக வெற்பின் மீமிசை யிவர்ந்து நோற்றுச்
செம்மலைப் பெறுக வென்னுத் திகழ்தரு மிலிங்கத் தானுர். 126

அருமறை முறையிட் டின்னு மளப்பருஞ் சோதி யென்று
மருவுவீ ராட்ட காச வள்ளலங் கருள லோடும்
பெருகிய வுவகை துள்ளப் பிணைபொரு ளன்றே பெற்றுங்
குருகிய வுளத்த னுடல் பாடல்க ளுஞற்று நின்றுன். 127

கருணையந் திறத்துத் தாழ்ந்த கருத்தினை யரிது மீட்டுப்
பொருவில்வீ ராட்ட காசப் புனிதனை வணங்கிப் போந்து
திருவளர் வராக வைப்பைச் சேர்ந்திருந் தங்கும் பொய்தீர்
ஒருசிவ லிங்கந் தாபித் துஞற்றினன் வழிபா டெல்லாம். 128

நித்தலு நதியிற் றேய்ந்து நிறைசிவ கங்கை யாடிப்
பத்தியிற் சாமி நாதன் பாதபங் கயங்கள் போற்றி
அத்தன்வீ ராட்ட காசத் தடிகள்பூ சனையுஞ் செய்தான்
உத்தமன் வரைந்த வாண்டு மின்னண மொழித லோடும். 129

வழிவரு நாளு முன்போல் வராகமா புரத்துத் தேவைத்
தொழுதுவீ ராட்ட காசத் தோன்றலைச் சாமி நாத
முழுவலி யிளவற் போற்றி முனனிமென் மலரின் வண்டு
குழுமிய குமார தீர்த்தக் குருமணிக் கரையைச் சார்ந்தான். 130

திரைதவழ் தீர்த்த மாடிச் செய்கட னினிது முற்றி
வரைபுறஞ் சூழ்ந்து வெய்யோன் மணிநெடுந் தேரிற் பூண்ட
விரைசெலற் கலினப் பாய்மா விறற்குரந் தவழப் பொங்கும்
புரைமணித்தூளிப்போர்வைப் பொருப்பினையிவர்ந்துசென்றுன்.

---

126. ஓதை விம்மிய. கடிப்பு - குறுந்தடி.

127. சோதியும் வள்ளலும். பிணை - ஆசை.

129. உத்தமன் - சிவபிரான்.

130. பின்னுளிலும். இளவலை என விரிக்க.

131. தணிகைவரையை வலம்வந்து. குரம் தவழ்தலால் உண்டாகும் தூளியைப் போர்வையாகக்கொண்ட பொருப்பு.

வண்டொடு ஞிமிறு மூசும் வார்மதக் கலுழி யேயன்
றெண்டிசை யுயிர்க்கு நல்க வெழுபெருங் கருணை நீரும்
கொண்டலென் றியம்பு மாவச் சகாயனைக் குறுகிப் போற்றி
அண்டர்சூழ் குமாரலிங்கத் தமலனை வணங்கிப் புக்கான். 132

புக்கன னெழுத்தோ ராறும் புகன்றிடு வாயன் சென்னித்
தொக்கெழு கையன் சிந்தை துற்றெழு முழுவ லன்பன்
நக்கலர் கமல பாத நாடுபு திளைக்குங் கண்ணன்
மிக்கவி பொறிய னாகி விழுப்பொரு ளெதிரே தாழ்ந்தான். 133

புளகமெய் யரும்பிப் போர்ப்பப் பொங்குநீர் விழிகள் கால
இளகிய வுளத்தி னோடு மெழுந்தருந் துதிக ளார்த்தி
அளவிடற் கரிய வைவே லடிகளைப் பூசை யாற்றி
வளமலி யுணவு விட்டு வருந்துயி லிரவு நீத்தான். 134

வைகறை யெழுந்து தூநீர் மனுமுறை யினிது தோய்ந்து
செய்கடன் முடித்த பின்னர்த் திருநந்தி குகையுங் கண்டு
நைகர மில்லா வன்பி னுதனைப் பணிந்து போற்றிப்
பெய்கழ னிருதி திக்கிற் பிறங்கவோர் தீர்த்தஞ் செய்தான். 135

தோலடிப் பவளச் செவ்வாய்த் தொகுசிறை யன்னங் கம்புட்
பீலியிற் பிளிறு நாரைப் பிரமரத் துழனி பொங்க
நீலமு மரையும் பூப்ப நிருமித்த தீர்த்தப் பாங்கர்ச்
சாலவைந் தடக்கி மேலாந் தவமலி யோக முற்றான். 136

ஒவ்வொரு திங்க ளாக வுறுசுவைக் கனிகண் மூலம்
எவ்வமில் சரகு தூநீ ரெறிவளி முறையி னுண்டு
பவ்வமுண் டமைந்தான் பின்னர்ப் பாற்றிய வுணவ னாகித்
தெவ்விய தவநா ளுண்டு செல்லுற முயன்ற காலை. 137

---

132. கலுழி இயம்புதலே யன்றியும் கருணையானதும் விநாயகரை மேகம் என்று இயம்புகின்றதென்க. அன்றி என்பது அன்று என நின்றது.

133. அவித்த ஐம்பொறியனாகி.

134. வருகின்ற துயில்.

136. உண்டாக்கிய தீர்த்தம்.

137. சரகு - இலை.

வளைவகிர்ப் பேழ்வாய்ச் சூட்டு வன்றலைக் கருங்கட் டோகை
விளைசமர்ப் பூட்கை மஞ்ஞை வெரிந்தலை யிவர்ந்து செவ்வேள்
துளையிசை நரமபின் பாட றுந்துமி யெழுந்து விம்மக்
கிளைஞருங் கணமுஞ் சூழக் கெழுதவச் சூழல் சார்ந்தான். 138

கண்டெழுந் தாடிப் பாடிக் கழலிணைப் போதின் வீழ்ந்து
மண்டணிற் புரண்டு சூழ்ந்து மறைபல வெடுத்துப் போற்றும்
தொண்டனை மகிழ்ந்து நோக்கித் தோகையை யடுப்ப வுந்தி
ஒண்டளிர்க் கரத்தா லன்னு னுடலந்தை வந்து கூறும். 139

எண்ணில்பல் கோடி யாக்கை யீட்டிய பாவ மெல்லாம்
நுண்ணிய திரண மாக நுங்குறுங் காட்டுத் தீயாம்
தண்ணிய சோலை சூழ்ந்த தணிகையித் தலத்தை நீசெய்
புண்ணிய மிகுதி யாற்றுற் போந்தனை புலவ ரேறே. 140

மாதவ மிகுதி யில்லா மாண்பினர்க் கீண்டைச் சேர்வும்
தீதறு குமார தீர்த்தஞ் சிவகங்கை நதியிற் றோய்வும்
கோதில்வீ ராட்ட காசக் குமாரலிங் கத்தி னோடும்
போதக முகத்தி னவச் சகாயனைப் போற்றும் பேறும். 141

இத்தலந் தன்னிற் றோற்ற மிருக்கையந் திக்கும் பேறும்
மெய்த்தவ நந்திச் சூழல் விழியெதிர் காணும பேறும்
உத்தம முனிவ வெய்தா வோங்குமித் தலத்திற் போந்த
அத்தகு போதே கினபான் மங்கல மனைத்துஞ் சார்ந்த. 142

ஈட்டிய தவத்தாற் சால வெய்த்தனை யாக்கை முற்றும்
வேட்டதெ னுவறி யென்றுன் மீட்டுவந் தனைகள் செய்து
கோட்டிய மெய்யி னோடுங் குடங்கைவாய் புதைத்துக் கட்டித்
தீட்டிய புகழசால் வேதத் திருமுனி யிதனைச் சொற்றான். 143

---

138. பூட்கை - வலிமை. வளைந்த வாய். வகிர் - பிளவு. கண்ணைத் தோகையிலுடைய.

139. மயிலைச் சமீபத்திற்செலுத்தி.

140. திரணம் - விறகு. தியாந்தணிகை.

141, 142. மாண்பினர்க்கு எய்தாவாம். அந்தித்தல் - மரணித்தல்.

கணிப்பறு பவங்க ளீட்டுங் காழ்மலச் செருக்கை நூறித்
தணப்பற வெண்ணெய் போலத் தவிர்ந்தநின் பாத நாயேன்
மணப்பமெய்ஞ் ஞான மின்னே வழங்குபு தமிழின் பாடைப்
புணர்ப்பினி தருளு கென்னுப் புகன்றுபின் னிதுவும் வேண்டும்.

வராகமா புரத்து நாயேன் வணங்கருட் குறியின் வைகும்
அராவணி சடையி னேனை யமர்ந்துறைதைப் பூசந் தன்னில்
விராவிய வன்பி னோடும் விதிவழி பூசை செய்வோர்
தராதலம் வியப்பப் பாவந் தணந்தருங் கதியிற் சேர்க. 145

கன்னியி லடுத்த வோணங் காட்சிநீ கொடுத்த விந்நாள்
அன்னதா லிந்த நாள்வந் தடுத்துழி யீங்கென் பேரால்
மன்னுமித் தீர்த்தந்தன்னில் வந்துதோய்ந் துன்னைக் கண்டோர்
துன்னிய மலங்க ளெல்லாந் துமித்துநின் னருளிற் சேர்க. 146

ஆதிரை நாளிற் சோம வாரத்தி னுடி னேரும்
மேதினி மீது வேண்டு மேதகு செல்வந் துய்த்துக்
காதியெவ் வினையு நின்றன் காமரு முலகில் வாழ்ந்து
சோதியுட் சோதி யாநின் சுடர்க்கழற் பாதஞ் சேர்க. 147

இன்னபல் வரமு நல்கென் றிரந்தனன் முனிவர் கோமான்
அன்னணம் வரங்க ணல்கி யறுமுகக் கடவு ளன்னுன்
தன்னைநற் றமிழின் பாடை தனக்குமுன் குரவ னுக்கிப்
பொன்னிவர் கோயி லுள்ளாற் போதந்து ஞானங் கூறும். 148

வேறு

மேதகு மறமா யறமற மாக
விளைப்பதாய்ப் பசுபதி பாசம்
கோதற வறிந்து சிவத்தினை யடையக்
குறுகிய நெறியதாய்ப் பயிலும்

---

144. எள்ளில் நெய் வியாபித்திருத்தல்போல எங்கும் வியாபித்த பாதம் என்க.

148. போதந்து - போந்து. பாடைதனக்கு - பாடைக்கு. பாடைக்கு முதற்குரவனுக்கி.

ஆதர வுடன்வே தாகம வழியால்
அமலனு ரடிவழி பாடு
தீதற வுஞற்றல் பரமமாந் தருமம்
சிவனுரை வேதமா கமங்கள். 149

பிரணவ முதலாய்ச் சிவாயவென் பதுபின்
பிணைந்துறக் கிளக்குமா றெழுத்தும்
விரவுமந் நூலி னெவ்வகை மனுக்கு
மேலதா மவைதரு பொருள்கள்
பரனொடு பஞ்ச சத்திக ளிரண்டு
பயனுமாம் பயின்றவர்க் காதி
மருவிய பதத்தின் வித்தினு லென்ன
மறைமுத லனைத்துந்தோன் றினவால். 150

ஓமெனு மந்தப் பதந்தனை யுரைத்தோர்
வேதமா திகளெலா முரைத்தோர்
தோமறு மந்தப் பதப்பொரு ளுணர்ந்தோர்
தொக்கநூற் பொருளெலா முணர்ந்தோர்

---

149. ஆதரவுடன் உஞற்றலானது தருமம் ஆகும். வேதாகமங்கள் சிவபிரானுரையாம். அறம் அறமாக விளைப்பதாய் - சில நூல்கள் அறத்தையுணர்த்துவதுபோல உணர்த்திப் பின் பாவப்பயனை விளைக்கும். வேதாகமங்களாகிய தாம் அவ்வாறு விளைக்காது அறத்தை அறமாகவே விளைப்பதாகி, அறமாய். பயிலும் ஆதரவு....''தவமுந் தவமுடையார்க் காகும்'' என்பதுபோல, அறம் அறமாக என்பதற்குப் பொருள்கொள்க. ஆதரவு - அன்பு. முதலிரண்டடிகளையும் ஆதரவுக்கு விசேஷணமாக்கிப் பொருள் கோடலும் ஒன்று.

150. 'சிவாய' என்பது பிரணவத்துக்குப் பின்னே பொருந்த. பிணைந்துற - பொருந்த. ஓம் சிவாய நம என்பது ஆறக்கரம். ஆறெழுத்தும் மேலதாகும். அந்நூல் - வேதாகமம். ஆறக்கரங்களைப் பயிற்சி செய்தவருக்கு அவ்வாறக்கரங்களும் தருகின்ற அர்த்தமானவை பரனோடு ஐந்து சத்திகளாகிய இருவகையே அர்த்தமாகும். சிவத்தோடு ஐந்து சத்தியையும் சேர்க்க வருகின்ற ஆறுமே ஆறு அக்கரத்தின் பொருளாம். பயன் - அர்த்தம். ஆதியில் மருவிய பிரணவத்தில். வித்தின் ஆல் என்ன - விதையில் தோன்றும் ஆலைப்போல. 'ஓம் சிவாய' என்பது ஆறெழுத்தாயுள்ளது. ஓம் என்பது அ, இ, ம் என்னும் மூன்றெழுத்தெனவும் கூறுவர். பயின்றவர்க்கு ஆம்.

ஏமுறு மந்தப் பதப்பொரு ளின்றேல்
இரவியில் வழிவிழி யென்னக்
காமரு பொறிமற் றிருப்பினுஞ் சற்றுங்
கதிப்பரி தாகுமா தவனே. 151

ஆர்த்தவோங் காரப் பொருளெனத் தோன்றும்
ஆரியன் சைவதன் மங்கள்
பார்த்திபர்க் கருளல் பாங்கவர் தீயர்
பகுதிகொண் டளற்றினிற் படாமை
ஓர்த்துயிர் பலவு முறையினு லோம்பித்
தீநெறி யுருவகை யொதுக்கிச்
சேர்த்திரு பயனுந் தாங்களு மடைவர்
செருக்கினுந் தெருட்டலுங் கடனே. 152

ஆணவ மாயை காமிய முயிர்கள்
அமலனு மனுதிமெய்ப் பொருளே
மாணவ காவிப் பொருள்களை யிவற்றை
வயக்குறும வாக்கியந் தம்மைப்
பேணுறு பருவ மடுத்தவர்க் கல்லாற்
பெறும்பயன் புகழ்முத லொன்று
காணிய கொடுப்போ ரவரொடு நரகம்
காணியாக் கைக்கொள்வர் விரைந்தே. 153

கரிசறு தான முதலற முணர்த்திக்
காமரு போகமு மும்மைப்
பொருளுநன் குணர்த்திப் போக்கரு வீடும்
புகுத்துமிவ் விறைவன்வாக் கியநேர்

---

151. கதிப்பு - கதித்தல்; என்றது பிரகாசித்தலை.

152. ஆரியனுனவன் சைவதன்மங்களை அரசனுக்கு உபதேசித்தல் பாங்காகும். அவர் - அரசர். கொண்டு படாமலறிந்து, ஓம்பி, ஒதுக்கிச் சேர்த்து, அடைவர் என முடிக்க. உயிர்களன்றி அரசர்களாகிய தாங் களும். அரசர்கள் செருக்கடையினும் ஓர்ந்து.

153. காமியம் - கன்மம். மும்மலமும், உயிரும், கடவுளும் ஐம் பொருளாகும். மாணவக - மாணுக்கனே. ஆசிரியன் இவ்வைம்பொருள் களையும், இவ்வைம்பொருள்களைத் தெரிவிக்கின்ற வேதாகம வாக்கியங் களையும் பருவமுள்ளார்க்கு அல்லாமல் புகழ் முதலாகிய ஒன்றைப் பெறும் பயனைக் காணும்பொருட்டு உபதேசிப்போர். கொடுத்தல் - உபதேசித்தல்; கைக்கொள்வார்.

தருபய னுளதோர் நூலிலை முன்னைத்
தவத்தினாற் பயிலுநர் சிலரே
துரிசுறு புறநூல் பயிலுநர் பலரே
சூழ்ந்திடு மிருண்மலச் செருக்கால். 154

வார்சடைக் கடவுள் வாக்கிய மினைத்தால்
வழிபடற் குரிப்பொருள் கேட்டி
ஆர்திரைப் புணரி கடைந்தனான் றெழுங்கோ
வைந்தினும் பயமுத லாறும்
சீர்தக வுதித்த வவற்றினுண் மயத்திற்
சீறிலை வில்வமுன் றுய
தேர்திகழ் கமலை விழைந்திருத் தலினாற்
சீபல மெனபபெயர் விளங்கும். 155

கமலவுற் பலமும் பின்பதி னெழுந்த
கமழ்ந்தகுங் குலியநீ ருயிர்த்த
தமிழ்துறழ் பாலிற் கதிரொடுஞ் செந்நெல்
ஆயது சந்தன மாதி
இமிழுமங் கலத்த பொருளெலாந் ததியின்
ஈண்டிய வீன்றதால் வெண்ணெய்
உமிழ்சுவை யமிழ்த முரோசனை யீன்ற
துளத்துறு சித்திபே தங்கள். 156

ஆதலா லானி றுறுமவ் வாறும்
அருளிய பொருள்களுந் தழுவிச்
சோதிநிட் களமாய் நின்றிடி னுயிரின்
துரிசறு தெனக்கரு ணையினால்

---

154. பதி பசு பாசமாகிய முப்பொருளையும். வாக்கியம் - வேதாகமம். நேர்தரும் வேறு நூல் இல்லை என்க.

155. உரிப்பொருள் - பூசைக்குரிய பொருள். காமதேனு ஐந்து. ஆறு - மயம், நீர், பால், தயிர், வெண்ணெய், கோரோசனை. மயம் என்பது சாணம். அச்சாணத்தில் வில்வம் முதலில் உண்டாயது. கமலை - இலக்குமி. சீபலம் - வில்வம். சீ - இலக்குமி.

156. குங்குலியத்தைக் கோசலம் உயிர்த்தது. அதின் - சாணத்தில். உரோசனை - கோரோசனை, பாலிலாயது, ஆதிப்பொருளெலாம் ஈண்டியன. வெண்ணெய் அமுதத்தை ஈந்ததால். அட்டமாசித்திகளைக் கோரோசனை ஈந்தது.

மாதர்சேர் சகள வடிவுகொண் டிருந்த
வரதனை வழிபடப் பெற்றோர்
கோதுறு வினைகண் முழுவதுந் துமித்துக்
குறுகுவர் சிவபுரத் தவன்பால். 157

ஈட்டும்பூ சனைசெ யன்பர்த மேவெழ்
சுற்றமு மேவல்செய் தவரும்
கேட்டவர் மகிழ்ந்தோர் வேட்டவர் முகமன்
கிளந்தவர் கண்டவ ரிவரும்
பாட்டளி முசு மலர்முத லளித்த
பாதவ முதலிய வுயிரும்
சேட்டொளி திளைக்குஞ் சிவபுரம் வாழ்ந்து
பிறந்துழிச் செல்வரா யுயர்வார். 158

இத்தகு பூசை யிறைவனை நாளும்
இயற்றியோ கத்தினும் பணியும்
உத்தம குணத்தார்க் குணர்வெழு நீக்கம்
உண்மைகண் டொளிர்சிவ ஞானம்
கைத்தலக் கனிபோற் கொடுக்குமா ரியனும்
கசிந்துநின் றேற்பவர் தாமும்
அத்தனே டிரண்டற் றொற்றுமை யாகி
ஆனந்தத் தவசராய்த் திளைப்பார். 159

உடங்குகேட் பவர்கட் கூறுகள் விளைப்பார்
வாதமே யுளுற்றுநர் பொச்சாப்
படங்கலு முடையா ரோதிவே தாதி
அகற்றினர் சாதியி னிழிந்தோர்

---

157. தழுவி வழிபட. களம் - வடிவம். நிட்களம் - வடிவின்மை யாகிய அருவம். சகளம் - வடிவுண்மையாகிய உருவம். மாதர் என்பது அழகு.

158. பூசைசெய்யும் அன்பருக்கு ஏவல்செய்வோர், அவரைக் கேட்டோர், உபசாரம் சொன்னவர், பூசைக்குப் பூக்கொடுத்த மரம்.

159. தற்போதம் நீங்கலைக்கண்டு. ஏற்பவர் - உபதேசத்தைப் பெறுவோர்கள். யோகத்தினும் வணங்குகின்ற. நீக்கம் எழும் உண்மை என மாற்றுக.

தொடங்கிய நூலிற் பயன்கொளார் மொழிகள்
சோர்வுறச் சொல்லுநர் களிப்பு
மடங்கிலார் தம்மின் மேதகு சாதி
வந்தவர்க் குரைத்திடா ரறிந்தோர். 160

மேதகு ஞானந் தங்குலத் தளிக்கும்
மெய்த்தவ னில்லெனி லடுத்த
சாதியி னமைந்த குரவர்பாற் கேட்டல்
தகும்பிற கேட்பது தகாதால்
மாதவ ஞான மருண்முறை கிளந்தாம்
மாசறு ஞானநூ றன்னைத்
தீதறு பூசை யுஞற்றுநர் கொடுக்கும்
திறமினிச் செப்புதுந் தெளிதி. 161

வேறு

பரமனைப் பரஞா னத்தைக்
குரவனைப் பணிந்து பின்னர்
விரவுமெண் முழத்தி ஞன்கின்
விளங்குமண் டபமொன் றுக்கித்
தரளநாற் றூண்க ணட்டித்
தகையொளிப் பட்டான் வேய்ந்து
கிரணவொண் மணிபூ வாடி
கேழ்கனி கவரி நாற்றி. 162

அம்புயஞ் சுதையா னுப்பண்
அணிந்தய லலங்கா ரித்து
வம்பலர் பரப்பி மேலால்
வானிறப் புதுப்பட் டேய்த்துக்

---

160. மடங்கல் - கெடுதல். அறிந்தோர் - ஆசிரியர்.

161. தமக்குக் கீழாக அடுத்த சாதியில். தமக்குக் கீழ்ப்பட்ட சாதியின்கண் உள்ள ஆசிரியனிடத்தில் ஞானோபதேசம் ஒன்றுமாத்திரம் பெறலாம்; நூல் முதலியவற்றைக் கேட்டலாகாது. முதற்செய்யுளில், அறிந்தோராகிய ஆசிரியர் தமக்கு மேற்பட்டிருக்கும் சாதி மாணவருக்குச் சொல்லார் எனப் பொதுவிதி கூறி, ஈண்டு ஞானோபதேசமட்டும் செய்ய லாம் எனச் சிறப்பு விதி விதித்தார். ஞானநூலைப் பூசையுஞற்றுநராகி மாணவர்கட்குப் பாடம் சொல்லும் திறத்தை என்க. கொடுத்தல் - பாடம் சொல்லல்.

162. ஞானத்தை - ஞானசத்தியை.

கும்பநாற் றிசையும் வைத்துக்
கமலம்வாய்க் கொள்ளப் பெய்து
பம்புமங் குரங்கால் வார்த்துப்
பன்மணித் தவிசாங் கிட்டு. 163

அரியணை மீது வெண்புத்
தகத்தினை யமைத்து மேலால்
வரியிவர் புத்த கத்தை
வைத்துரோ சனைகப் பூரப்
பரிமளக் கலவை கொட்டிப்
பன்மணித் தொடலை தூசு
விரிமணத் தொங்க லாதி
விசித்திரம் பிறங்கச் சாத்தி. 164

அருச்சனை யாதி முற்றி
அறுசுவை யுணவு மார்த்திக்
கருப்புரங் கமழுஞ் சந்து
காழகில் குந்தி ருக்கம்
மருக்கொள்குக் குலுவோ ரைந்தின்
மண்டுதீம் புகைக ளேய்த்துக்
குருப்பொலி கபிலை நெய்யாற்
கொழுஞ்சுடர் பரப்பிப் போற்றி. 165

சென்னிதா ளிருகன் னங்கள்
திருமுகம் வாய்பு யங்கள்
என்னுமோ ரெட்டுஞ் சென்னி
இருகர முழந்தா ளைந்தும்
நன்னிலந் தோயத் தாழ்ந்து
நயந்தபி னதற்குப் பாங்கர்
மன்னுபூங் கோயி லாக்கிக்
குரவனை வழிபா டாற்றி. 166

---

163. மண்டப நாப்பண் சுண்ணும்பால் தாமரைமலர் செய்து. கமலம் - நீர். கால்வார்த்து என்பது ஒருசொல்.

164. வெண்புத்தகம் - எழுதாத வெள்ளை ஏட்டுப்புத்தகம். வரியிவர் புத்தகம் - இனித் தாம் எழுதுதற்காக வைத்திருக்கும் எழுதிய புத்தகம். உரோசனை - கோரோசனை.

165. குந்திருக்கம் - குங்குலியம். குக்குலு - குங்குலியவகை.

166. அட்டாங்க, பஞ்சாங்கங்களால் தாழ்ந்து முன்செய்த மண்டபத்தின் பக்கத்தில்.

இரங்துமா ணுக்க ஞசான்
ஈந்திடப் பெற்றுப் பின்னர்ப்
பரந்தநூல் காப்பு நீக்கிப்
பயின்றவைங் கவிதை யேட்டின்
வரிந்துடன் காப்புச் செய்து
வயங்குமா ரியன்முன் ஞேனர்
சுரந்தவான் சுவைநா லுண்டி
துய்த்தபி னினத்தோ டுண்டு. 167

இரவினும் பலிக ளோம்பி
இணைவிழைச் சொழிக வில்லோன்
வரவிரு முழத்திற் பின்ஞண்
மண்டபம் விளைத்து முன்போல்
பரவுபூ சனைக ளாற்றிப்
பயில்வுற வரைக வந்நூல்
தெரிவுறப் பயிலுங் காலும்
இம்முறை பூசை செய்க. 168

முடிவுநாள் பசித்து முக்கண்
மூர்த்தியைப் புத்த கத்தைப்
படியிலாக் குரவன் றன்னைப்
பூசனை பயிற்றி யெல்லிக்
கடிகொண்மங் கலத்தால் வேத
வொலியினெற் றுயிலைக் காதி
விடிவுகண் டருச்ச ஞதி
விளைத்திர தத்தி னேற்றி. 169

---

167. ஈந்திட - ஏட்டைக் கொடுத்திட. ஆரம்பித்த அன்றுதினம் மாத்திரம் ஐந்து பாட்டெழுதவேண்டும் என்க. முன்ஞேனர் துய்த்தபின்.

168. பலிகள் ஓம்பி - உணவுகள் ஒழிந்து. இல்லோன் ஒழிக. வர - மேலான. பின்ஞளில் இருமுழத்தால் மண்டபம்செய்து முடிவுகாலம் வரையும் அதில் வைத்து எழுதுக. ஆசிரியனிடம் பாடங்கேட்டுப் பயில் காலும். இல்லறத்தோன். இருமுழத்தில் வர என்பாரும் உளர்.

169. ஏட்டை ஏற்றி.

அறமனை தோறு மாக்கி
அவரவ ருடங்கு நண்ண
மறலினர் நிகளஞ் சீத்து
வண்பலி பலவு மோக்கித்
திறன்மிகு மிறையும் போதச்
செறிந்தியம் பலவு நல்க
நிறைவளர் நகர்சூழ் போந்து
நின்மலன் கோயி லுய்த்து. 170

மீட்டுநற் பூசை யாற்றி
வேந்தனை யுள்ளிட் டோர்க்குத்
தீட்டுபுத் தகத்திற் சில்ல
வாக்கியந் தெரித்துச் செம்பொன்
கோட்டமில் குரவற் கீத்துக்
கொழும்பொனுந் தூசு மற்றும்
வாட்டமின் மறையோ ராதி
வெளவுற வழங்கல் வேண்டும. 171

இன்னணம் பூசை யாற்றின்
இடரெலா முலகிற் றேம்பும
மன்னுறு நன்மை யெல்லாம்
மதிகண்மும் மாரி நல்கும்
சொன்னவா றீந்து ளாரும்
தொகுமெழுத் தொரோவொன் றற்கங்
குன்னருஞ் சிவலோ கத்துள்
ஓராயிரங் கற்பம் வாழ்வார். 172

ஆடிவை காசித் திங்கள்
அடுத்தபூ ரணையிற் பூசை
நாடினர் தாமு முன்னை
நற்பயன் பற்று வார்கள

---

170. அறத்தையாக்கி, நண்ண, போத, நல்க, போந்தென முடிக்க. ஊரரசனும் சீத்து, ஒக்கிக்கூடவர. பலி - பூசை, பிச்சை. நல்க - ஓசையைக் கொடுக்க;

172. இடர்தேம்பும். நன்மையெல்லாம் மன்னும். தேம்பும் - கெடும். ஈந்துளார் - பாடஞ்சொல்லும் ஆசிரியர்.

ஏடெழு தூசி பாசம்
　　ஈந்தவ ரெழுதி வைப்போர்
பீடுறப் பயில்வோர் சொல்வோர்
　　பெரிதரும் பயன்க ளாய்வோர். 173

ஆய்ந்தவர்க் கன்ன மாதி
　　அளிப்பவர் முதலா ேனாரும்
ஏய்ந்தநற் சுற்றத் தோடும்
　　சிவபுரத் தெல்லே சேர்வார்
வீந்திடி னேடு வேறு
　　வரைந்தது வோமஞ் செய்க
வாய்ந்தநூல் வழங்க லீதா
　　லயம்புரி மரபுங் கேண்மோ. 174

வேறு

மதிதவழ்கோ புரநிமிரப் புரிசைபுறஞ்
　　சூழ்போக்கி மணிநீர்ப் பொய்கை
பொதியவிழ்பூம் பொழிலாக்கி யைவகையா
　　வரணமுறை பொறப்பச் செய்து
விதியினூ றெரிகழக மடைப்பள்ளி
　　முதற்பலவும் விதியி ஞக்கிக்
கதியருளு மிறைவனம ரிடமாதி
　　வரைகளெனக் காண்க மாதோ. 175

பழனமிரு நிதிநடன மடமாதர்
　　பணைக்கைமத யானை பாய்மா
உழலுருளின் மணிநெடுந்தே ரூர்தியணி
　　யிவைபலவு முவந்து நல்கி
விழவொடுபூ சனைபெரிதும் விளக்கவிளைத்
　　தவர்மீட்டும் பிறப்பின் மேவார்
குழவிமதி மிலேத்தபிரான் சிவபுரம்வாழ்ந்
　　தவனடிக்கீழ்க் குறுகு வாரால். 176

---

174. செல்லரித்தல் முதலியவற்ருல் ஏடு வீந்தால் வெறுென்றெழுதி வைத்துக்கொண்டு, அவ்வீந்த பழைய ஏட்டை ஓமகுண்டத்தில் சமித்தாகக் கொண்டு ஓமஞ் செய்க. ஆலயம் புரி.

176. இரும் நிதி.

சிவநகர்செய் தபதியரே வலினிருந்தோர்
கூலிவினை செய்தோர் பூணி
சிவநகரிற் பிறந்தவர்க ளொழுக்கமுட
னுறைந்தவர்நாள் செல்ல மாய்ந்தோர்
சிவநகரி னிறப்பமென வெண்ணினர்சென்
றிறைஞ்சினர்சிந் தித்தோர் செல்லச்
சிவநகர்செல் பவருடனே துணைச்செல்வோர்
களுஞ்சிவலோ கத்தைச் சேர்வார். 177

சிவபணிசொற் றனமினியைம் மகஞ்சோறும்
தெளிமுனிவ கருமஞ் சீர்சால்
தவமுரைமந் திரம்வருபா வனைபரம
ஞானமெனத் தருமவ் வைந்தும்
அவமறுபூ சனையங்கி யோம்பன்முதல்
கருமநனி யாக்கை வாட
உவகையுடன் விரதமுளூற் றுதலாதி
தவங்களென வுரைப்பர் சான்றோர். 178

மானதமு மந்தமும்பா டிதமுமென
மந்திரந்தான் மூன்று மூன்றும்
மோனமுற மனத்தகத்தே வாயகத்தே
பிறர்கேட்க மொழித லாகும்
ஆனவிவை யொன்றற்கொன் றிழிந்தனநேர்
அனுமிகைமுன் விரல்கண் மூன்றின்
மேனிறுத்தல் வடமுறையா முள்ளிடுதல்
போகிபுறம் விடுத்தல் யோகி. 179

---

177. நாள் - ஆயுள். கோயிலுக்குச் சாந்தரைத்தல் முதலிய பணி செய்யும் பூணி: பூணி - எருது. செல்லச் செல்பவர். செல்ல - சேர.

178. ஐம்மகமாவன:- கருமயாகம், தவயாகம், மந்திரயாகம், பாவனையாகம், ஞானயாகம் என்பன.

179. மந்தம். அனுமிகை - சுண்டுவிரலுக்கடுத்தது. பெருவிரலும் சுண்டுவிரலும் நீங்கலாக மற்ற மூன்று விரல்களின் மேலே நிறுத்துதல் வடத்தின் முறையாம். நேர் - மார்புக்கு நேரே. முறையே இழிந்தன என்றலுமாம்.

வளியிடைபிங் கலைநடுநா டியினியங்க
மந்திரிக்கின் முறையே போகக்
களிசிவனும் வீடணுகு மிரண்டுமுறுங்
கைவிரலி னிறையே சங்கின்
ஒளிவடம்புத் திரதீவி படிகமணி
புண்டரிக மணியோண் கஞ்சம்
அளிமணிநற் குசைமுடிகண் மணியிவைநே
ரொன்றற்கொன் றதிக மாமால். 180

பரமனருட் டிருவுருவை யுளத்திருத்தல்
பாவனையப் பரமன் மெய்ந்நூல்
உரிமையினோ துதலோது வித்தல்பொருள்
கேட்டல்கேட் பித்த லுள்ளம்
விரவுறநன் கிருத்தலென வைந்தாகும்
ஞானமகம் விரித்த வீண்டைக்
கருமமுத லொன்றற்கொன் றதிகமிவற்
றிருபயனுங் கலப்பர் தக்கோர். 181

கருமமுதன் மகமைந்துங் கரைந்தனமால்
இவைமுறையாற் கழிப்பி மேலாம்
அருடலைப்பட் டவர்பெருமை யறைதுநெடுங்
கடன்முகந்த வறவ கேண்மோ
ஒருமுதலைத் தழலிடையந் தணர்சரியை
கிரியையின ருருவின் யோகர்
திருகறுதம் மகமலரிற் காண்பர் மெய்ஞ்ஞா
னியரெங்குந் தெரியக் காண்பார். 182

---

180. புத்திரதீவி - ரசத்தாலாகிய ரசமணி. கஞ்சம் - துளசி. புண்டரிகம் - வெண்டாமரை: செந்தாமரை என்பாரும் உளர். சுழுமுனைநாடி. இடைகலை போகம், பிங்கலை வீடு, சுழுமுனை இரண்டும். கஞ்சம் அளித்த மணி. கண்மணி.

181. ஞானமகம் ஐந்தாகும். உள்ளம் விரவுற நன்கிருத்தல் - சிந்தித்துத் தெளிதல்.

182. அந்தணர் தழலிடத்தும். உருவின் - இலிங்க முதலிய வடிவத்தினும், கழித்து.

இறைவனமர் புரிதனக்கு விற்கிடைமூன்
றயுதநிலத் திரியும் பாவம்
உறைகளுற்றுங் கங்கைதனக் கதற்கிரட்டி
யெல்லையிடை யோட்டந் துட்கும்
மிறைபுரியு மும்மலமும் வேரோடு
மகழ்ந்தெறிந்து மெய்ஞ்ஞா னத்தின்
முறைபுரியுஞ் சிவயோகி யிடந்தனக்குக்
கோடியிடை முடுகி யோடும். 183

வேறு

சரியைமுன் மூன்றும் புரிநர்சா லோக
முதலிய மூன்றுமே சார்வர்
துரிசறு ஞான முழப்பவ ரிறைவன்
றுன்னல முழுவதும் பெறுவர்
விரியொளி மணிகைப் பெற்றவர் பொளிகல்
விற்றுண விழைவுரு ரதுபோற்
பிரிவரு ஞானம் பெற்றவர் கருமம்
பிணைந்ததன் பயன்கொளக் கருதார். 184

வளியுளர் காலும் வெளியினைத் தணவா
மாட்சியி னுடலிரு வினையால்
நெளிதரு காலுஞ் சாக்கிரா தீத
நிலையினிற் பெயர்தரார்க் கவற்றுன்
விளைவன சற்று மிலையவை யிரண்டும்
விமலனே யேற்றவர் தம்பால்
உளைவன விழைவ வுளுற்றுநர்க் கடைய
வுறுத்துவ னுலுறு தவனே. 185

---

183. அயுதம் - பதினுயிரம். முப்பதினுயிரம். உறை - துளி. மிறை - நடுக்கம். கோடி விற்கிடை என்க.

184. மாணிக்கத்தைக் கையில் பெற்றவர்கள். அதன் பயன் - அக் கன்மத்தின் பயனே.

185. வளியானது உளருங்காலும். உடல் நெளிதருகாலும். அவற்றுல் - அவ்விருவினையால். விமலனே அவ்விருவினையை ஏற்றுக்கொண்டு ஞானமுடைய அப் பெரியோருக்கு, வருந்துவனவற்றைச் செய்வோருக்குத் தீவினையையும், மகிழ்வனவற்றைச் செய்வோருக்கு நல்வினையையும் உறுத்துவான். வீராட்டகாசப் படலம் 7ஆம் செய்யுள் முதலடி காண்க.

உடங்குறை கமலப் பாசடை நீரோ
டொற்றியா மருந்துமந் திரத்தார்
விடங்கனன் றுடற்றப் படார்வினை யுடற்ற
விடைப்புற வுயங்குறுர் சிவத்தின்
அடங்கிய வன்ப ரறிவவிவ் விதிகொண்
டறிவினை யறிவிடை யடக்கார்
தொடங்குறின் வினைமெய்ந் நூல்பயின் றவரும்
தொன்றுபோ லதன்பயன் சூழ்வார். 186

காவலன் சிறையோர் மண்ணைகோட் பட்டோர்
கதியெலா மவர்வழி யன்றி
மேவரி ததுபோ லுடறனக் குள்ள
வினையெலாம் விமலனல் விரவச்
சாவதும் பிறப்புங் கடந்தபே ரின்பம்
தணப்புறு திருப்பதே யல்லால்
ஆவதா னமக்கென் ருென்றையும் புரியார்
அருள்வழிப் பட்டமா தவரும். 187

ஆதலா லவர்பா னிகழ்செய லனைத்தும்
அமலனு ரருட்செய லாகும்
காதலா லவர்க்கே பூசனை புரிக
கரிசறப் பூசனை புரிந்தோர்

---

186. ஒற்றியா - சேரமாட்டா. ஒற்றியா என்பதும், உடற்றப் படார் என்பதும் அன்பருக்கு எடுத்துக்காட்டுவமை. அன்பர் உயங்குறுர். விடைப்பு - வருத்தம். ஐம்புலத்தையும் அறிவின்கண்ணே. இந்த விதியைக் கொண்டடக்கிக்கொள்ளாதவர்கள் ஓர் வினையாகிய காரியத்தைத் தாங்கள் தொடங்கினல் மெய்ந்நூல் பயின்றிருந்தாலும் முன்போல அவ்வினைப் பயனை அனுபவிப்பார்.

பின்னைய அறிவு ஈண்டுச்சிவம். அடக்காதவர்களுக்கு வினைவரினும் நூல் பயின்றவராயினும் அவ்வினைப்பயனை அநுபவிப்பார். தொடங்குறின் வரினும் என்பாருமுளர். மந்திரத்தார் படார். அதன்பயன் மொய்க்கப் பெறுவார்.

187. கதி - நடை: என்றது செய்கையை, அவர் - காவலன், பேய். விரவ இருப்பதேயல்லால். பேரின்பம் - முத்தி. நமக்குச் சுதந்தரமாகத் தொழில் ஆவதால் என்று ஒன்றையும் செய்யார். வினை - தொழில். ஒன்றையும் - ஒரு தொழிலையும்.

மேதகு மிறைவ னுலகுபெற் றிருந்து
விரிசத நியுதகற் பங்கள்
போதலும் பின்றை மாயவன் முதலோர்
போகபூ மிகளெலாம் வாழ்ந்து. 188

தவம்புரி குலத்து மண்ணிடைத் தோன்றித்
தம்பிரான் பூசையா தரவால்
அவந்தெறப் புரிந்து ஞானமுற் றின்பத்
தழுந்துவ ரமலனுர் பதத்தில்
நிவந்தவா தரவு கடைமுதன் மூன்று
நிகழ்கடை யாதர வுடையோர்
துவந்துவ மூன்று பிறப்படைந் தொழித்துச்
சோதியு ளிரண்டறக் கலப்பார். 189

இடையினு தரவு பெற்றவர் சிவலோ
கத்திடை வாழ்ந்திரு பிறப்புப்
படிமிசை யெடுத்துத் தேசிக னருளாற்
பயின்றுஞா னத்தைவீ டுறுவார்
மடமறு முதன்மை யாதர வுடையார்
வள்ளலா ருலகுவாழ்ந் தொற்றை
உடனிலத் தெடுத்து முப்பொரு ளியல்பு
முணர்ந்தின்பத் துணர்விறந் திருப்பார். 190

வேறு

முனிவ ஞானயோ கத்தினர் பெருமையை
மொழிந்தன முலகத்தோர்
துனிவு தீர்தரப் புரிதரு தருமமுஞ்
சொல்லுது மறிதன்மம்

---

188. அவர் - ஞானியர். நியுதம் - இலக்கம் (நூறு ஆயிரம்).

189. போக பூமிகளிலெல்லாம் வாழ்ந்து இன்பத்தழுந்துவர் என முடிக்க. நிவந்த. துவந்துவம் - பந்தம்.

190. ஞானத்தைப் பயின்று. ஒற்றை உடல்.

கனிவி னீதலே யெரியினை யோம்பலே
கடவுளா லயஞ்செய்தல்
புனிதன் பூசனை நான்குமா மிவற்றினுற்
புகுதரும பலமெல்லாம். 191

ஈத லாவது பாத்திர மென்பவர்க்
கிடம்பொழு துறநூலின்
நீதி யாதர வடைந்துதா தாவெனு
நீர்மையர் பொருணல்கல்
ஓது பாவெனல் பாவமற் றதினெடுத்
துறுத்துத் திரமென்ப
தாத லாற்கரி சறுத்துநற் கதியினுய்ப்
பவர்கள்பாத் திரமாவார். 192

கரும முற்றவர் கற்றறி மேதையர்
காழின்மந் திரஞ்சான்ரோர்
பெருமை யோகினர் ஞானிய ரிவர்க்குளம்
பெட்டுத விடினேதும்
ஒருபி றப்புநா றுயிர மூழிபே
ரூழியும் பயனிற்கும்
பொருவி லாச்சிவ ஞானயோ கத்தரே
பொருவில்பாத் திரமாவார். 193

திரைசெய் நீர்விழுஞ் சிலையினைப் புணையன்றிச்
சிலகரை யேற்றாதால்
புரைசெய் பாவத்தி னழுந்தினர் தமைப்புரை
யொழிந்தவர் தாமன்றி

---

191. ஞானத்தைப் பயின்று. ஈதல் - கொடை.

192. ஈதலாவது நல்கலாம். முத்தியிலுறுத்துதல்.

193. ஏதும் உதவிடின் - யாதாவது கொடுத்தால். தாம் கருமமுற்றோருக்குக் கொடுத்தால் ஒரு பிறப்பினும், மந்திரத்தாற் சான்றோருக்குக் கொடுத்தால் ஆயிரம் பிறப்பினும், யோகியருக்குக் கொடுத்தால் ஊழி வரையினும், ஞானியருக்குக் கொடுத்தால் பேரூழிவரையினும் பயன் நிலை பெறும்.

நிரைசெய் மேற்கதி செலுத்தவல் லாரலர்
நிகழ்கரி சினரற்றால்
உரைசெய் பாத்திர மபாத்திர மறிந்தளித்
தொழிக்கநற் பயன்வேட்டோர். 194

அந்த ணாளர்கள் கோடியோர்க் கருத்திய
அரும்பயன் வறிதென்ன
வந்து மல்குறும் பிச்சைஞா னியர்கரம
வழங்குவார்க் கெனிலன்பால்
வெந்த பல்வகை யுணவுதூ சருங்கலன்
வேண்டிய கொடையெல்லாம்
எந்தை யோடொரு மித்தவன் னவர்க்கலா
லெண்ணுரு ரறிந்தோரே. 195

தென்பு லத்தவர்க் குரியநாண் ஞானியர்க்
கருத்துநர் சிவலோகத்
தின்ப ருந்துற மூவெழு சுற்றமு
மிருப்பரூட் டினர்நம்பால்
அன்பின் வந்தனை புரிந்துதம் மனையிடை
யடுத்தஞா னியர்க்கூட்டின்
துன்ப மல்கள றுரீஇயவர் குலமெலாந்
துன்னுவர் சிவலோகம். 196

கொண்டு விற்றல்கூ லித்தொழி லுழுதல்பொய்
கூறுதல் வெகுளித்தீ
மண்ட லென்றவற் றலகிடன் மெழுகறீ
வளர்த்தனீ ரரிசிக்கண்

---

194. புரை - குற்றம்; ஈண்டுப் பாவம். அற்ருல் - அத்தன்மையால். கரிசினர் அல்லர். பாத்திரமறிந்தளித்து. அபாத்திரமறிந்தொழிக்க. ஒழிக்க - பாவத்தை நீக்குக என்பாருமுளர்.

196. அருத்துநர்கள் தமது சுற்றமானது இன்பருந்தத் தாமுமிருப்பார். ஊட்டிஞல் நம்பால் ஊட்டினராவார். அவர் குலமெல்லாம் சிவலோகம் துன்னுநராவார். சுற்றத்தாருக்கும் ஊட்டினவராகி இருப்பர் என்பாரும் உளர்.

உண்டு பாவமீ தொழிவுறு மைம்முகத்
தொருவனை யெரிதன்னைக்
கண்ட ஞானியைக் குரவனை நித்தலும்
பூசனை காண்பார்க்கே. 197

எடுத்த வையிரு தொழிலையு மியம்பிய
இறைவனு தியர்க்கென்றே
தொடுப்பிற் பாவங்க ளிலைதமக் கென்றிடிற்
சூழுமவ் வொருபானல்
அடுக்கும பாவமும் விதித்தன விலக்கின
அகற்றியாற் றலின்வேறு
மடுக்கும் பாவமுந் தபவெணிற் செய்கமுன்
வகுத்தவர் தமைப்பூசை. 198

ஈச னாதியர்க் களித்தவூ ணவிழொன்றற்
கீரைஞ்ஞா றெனுமாண்டு
தேசு லாஞ்சிவ புரத்திருப் பார்செழுங்
கருணைநெய் ததிகூடில்
பேசும வான்பயன் றசமடங் காம்பெருஞ்
சுவையசொன் றியின்பேதம்
வாச நோலையா திகட்குநா ருயிர
வரிசையி னுயர்கிற்கும். 199

சிறந்த வேடத்தி னடுப்பினு மஃதின்றிச்
சேரினு மொழுக்கெல்லாம்
அறிந்து ளாரெனச் சாரினு முள்ளவ
ரெனவரு வாரேனும்

---

197. என்றவற்றின்கண்ணும். கொண்டு விற்றல் - சொற்பவிலைக்கு வாங்கி அதிக விலைக்கு விற்றல். நீரின்கண்ணும் அரிசியின்கண்ணும் பாவமுண்டு. நீரில் பூச்சி, அரிசியில் புழு. அலகிடினும் மெழுகினும் எறும்பு முதலியன சாம். காண்பார்க்கு ஒழிவுறும்.

198. கொண்டு விற்றல் முதலிய பத்துத் தொழிலையும். விதித்தனவற்றை யகற்றி, விலக்கியவற்றை யாற்றலின். வகுத்தவர் - ஐம்முகத்தொருவன் முதலிய நான்கு திறத்தார்.

199. நோலை - சிற்றுண்டி (எள்ளுருண்டை).

அறிந்த மெய்யடி யார்களைப் பரமென்றே
அயிர்ப்பறத் தெளிந்தன்பால்
பிறந்த வான்பயன் பெறவுளம் விழைந்துளார்
பெரிதும்பூ சனைசெய்வார். 200

அடியர் தங்களை யாசுரைத் தவரது
கேட்டவர் கேட்பித்தோர்
உடன்வி ராவினர் மூட்டின ருடன்பட
லுற்றவ ரிவரெல்லாம்
விடிவில் வெந்நர கழுந்துவ ராதலான்
விமலமெய்ப் பொருளென்றே
கடிகொள் பூசனை புரிவத லாற்கரி
சடியர்பா லுரையற்க. 201

மனத்தி னல்வடி வாலவ மதிக்கினும்
வாய்பிள வாக்கும்பி
இனத்தி னேடுவீழ்ந் தழுந்துவ ரவற்றினும்
இயல்பலா தனசெய்யல்
நுனித்த வாலறி வுடையவ பாத்திர
நுவன்றும்பாத் திரமல்லான்
தனக்கி யாவதும் புரியலென் றுமவன்
தன்மையுங் கிளப்பாமால். 202

வேறு

அமலனடிக் கன்பிலார் பிறப்பை யஞ்சார்
அருந்தவரென் றுலகுதமை மதித்துப் பேண
விமலனடி யவர்கோலத் தொளித்தோ ரன்னோர்
விதியினவர்க் களிப்பினுமவ் வீகை வித்தும்

---

200. மறிதல் - கெடுதல். ஒழுக்கமுள்ளவரென. அன்பால் பூசனை செய்வார். பிறந்தபயனைப் பெறவிரும்பினவர்.

202. முதற்செய்யுளில் 'கரிசடியர்பாலுரையற்க' என வாக்கால் அவமதித்தல்கூறி, ஈண்டு மனத்தானும் காயத்தானும் அவமதித்தலைக் கூறினர். அவமதித்தல் - இருக்கையினின்று எழாமை முதலியன. இயல்பலாதன - அடித்தல் முதலியன. செய்யல், புரியல் என்பன எதிர்மறை வியங்கோள். பாத்திரத்தைச் சொன்னேம். இனி, பாத்திரமாகாதவனுக்கு ஏதுங்கொடுக்கவேண்டாமென்று முன் சொன்னேம். அவன்தன்மையும் சொல்வோம்.

சமமறுநெல் லுவர்நிலத்து மனுவிற் றூவுந்
தக்கவரா குதிசாம்ப ரிடத்தும் வாட்கண்
கமலமனுர் விழைவலியின் மாட்டு மென்னுய்க்
கழியுமது போல்வாளா கழியு மன்றே. 203

பாத்திரமு மபாத்திரமு முயிரே யொன்று
பயனுக்க வொன்ருக்காப் பண்பென் னேவென்
ருத்தனுரை யிடத்தேது மயிர்த்த னீரின்
அழுந்தாத மரத்தொடியைந் தயமேற் ருெக்க
மூத்தகனங் கரைசேர்க்கு மரத்தொன் ருேதேன்
முழுகுமது தானுமிந்த முறைமை யன்ருே
காத்தருளு மிறைவனெடு கலந்தார் நன்மை
காட்டுவதுங் கலவார்காட் டாத வாறும். 204

குருடர்முட வர்கள்விருத்தர் நோயி னேர்நல்
குரவுடையோர் பாலகரா தியரு மீவோர்க்
குருகலுறு மிரக்கமிகி னளிக்கத் தக்கார்
ஒற்றையங்காற் கொடிஞ்சிமணிப் பொலந்தே ரூரும்
பரிதிநடு வானெழுங்கால் வந்தோ ரெல்லாம்
பாத்திரமென் றவர்தமக்கும் பரிந்து பூசை
புரிகவினி யருந்தவதா தாவென் பாரைப்
புகன்றுபின்பா தரவுமற்றும் புகல்வா மன்றே. 205

வணக்கம்வரை யாதளித்த லுறவு கோப
மாற்றலிரக் கமுமுடையார் தாதா வென்பார்
இணக்கமுறு மிருப்பெழுகை விரைந்து போதல்
எதிர்கொள்கை தவிசினிடை யிருத்தல் பூசை

---

203. அன்பிலாரும், பிறக்க அஞ்சாதவரும், ஒளித்து நின்ருேரு மாகிய முத்திறத்தாரும் அன்னேராவார் என முடிக்க. அன்னேர் - முற் கூறிய அபாத்திரர். விதியினுல் அபாத்திரருக்குக் கொடுத்தாலும் அவ் வீகையானது வித்தியநெல் உவர்நிலத்தின்கண்ணும், மனுவினுல் தூவும் ஆகுதி அக்கினியிலன்றிச் சாம்பரின்கண்ணும், பெண்களின் விழைவு அலியினிடத்தும் பயனின்றி யாதாய்க்கழியுமோ அதுபோலப் பயனின்றிக் கழியும்.

204. அயிர்த்தல் - அயிரற்க. அயமானது இயைந்து சேர்க்கும். ஒன்ருதேல் முழுகும்.

205. ஆதியரும் ஏற்கத்தக்கார்.

பிணக்கமற வுளுற்றலின்சொ லாதி தம்மாற்
பெட்டுவப்புச் செயல்பிரியி னுடங்கு சேறல்
கணித்தவிவை யேழானும் பயன்கள் கொள்வார்
கரிசிலர்க ணல்கூர்ந்த காலு மாதோ. 206

பாத்திரத்தின் மிக்கபாத் திரமெய்ஞ் ஞானி
படர்ந்திரவா னவனிருக்கும் பாங்க ரண்மி
ஈத்திடுக வவனென்றும் வேண்டா னேனும்
ஈகுநர்க்குப் பயன்கருதி யேற்றுக் கொள்வான்
வாய்த்திடுமா தரவிரக்கத் தோடு மீவான்
வாங்கினரோ டரனுலக மருவி வாழ்வன்
வீத்திடுமா தரவிரக்கத் தீந்தோ ரெல்லாம்
வெங்கிரயத் தழுந்துவரேற் றவர்க ளோடும். 207

தருகவெனு மிடியர்தமை யொருவி யன்றே
தக்கபெரி யவர்யாங்க ணுள்ளா ரென்று
துருவுநர்கள் சிறந்தவர்க ளல்ல ரில்லாத்
துப்பினரில் லாயினற மின்றே யன்றோ
மருவியுளத் தெழுங்காதல் பத்தி யற்றான்
வழாதுகடைப் பிடித்திடுதல் சிரத்தை யிந்த
இருதிறத்தி னின்சொன்முதல் கொண்டு செய்யும்
இனிமையா தரவுவிதி வழிபா டாதி. 208

காசிகுருக் கேத்திரங்கா ளத்தி காஞ்சி
கனகசபை சேதுமுத லிறைவன் வைப்பும்
தேசுதிகழ் சீபரிபூ ரணவிவ் வோங்கல்
செந்தில்பரங் குன்றாதி யெமது வைப்பும்

---

206. கோபம் மாற்றல் - கோபத்தையொழித்தல். தாதா என்பார் உடையாராவார். ஆதிதம்மால் - முதலானவைகளால்.

207. கெடுத்த ஆதரவிரக்கத்தோடும்; எனவே ஆதரவிரக்கமின்றி என்பது.

208. செல்வத்தாற் பெரியவர் என்க. துப்பு - உணவு. வறியார் இலரேல் கொடையுமில்லை ஆகலான் 'அறமின்றே அன்றோ' என்றார். காதல் - பத்தி. அப்பத்தியால் ஒரு காரியத்தை உறுதியாகப் பிடித்தலே சிரத்தையாகும். பத்தி சிரத்தையாகிய இருதிறத்தாலும் இன்சொல் முதலானவற்றைக் கைக்கொண்டு விதிப்படி வழிபாடு முதலியன செய்யும் இனிமையே ஆதரவாம்.

வீசுதிரைக் கங்கைநதி முதலாந் தீர்த்த
வியன்கரையும் விரிகடலின் கரையுங் கண்டை
ஓசையெழு மானினஞ்சே ரிடமு முண்மை
யுணர்ந்தவர்வா ழிடமுமிட மாகு மன்றே. 209

இரவியைவெண் மதியையர வடுக்குங் காலம்
ஈரயனா முதற்பலவாங் கால மீதற்
குரியவெலா முரைத்தனமீண் டுரைத்தா முன்னே
உம்பனா லயமியற்ற லீண்டை யீத்தல்
எரிவளர்த்த லொடுபொதுவி னுரைத்துப் போந்த
ஈசன்பூ சனைமுன்னுந் தொகுத்தா மேனும்
அரியயனுக் கரியபிரான் பூசை யாற்றும்
அத்தமருஞ் சிறப்பினுமற் றறைகிற் பாமால். 210

அடருயிர்கொ லாமைபொறை வாய்மை நாணே
ஆதரவே யடக்கமே யீகை தீமை
உடறவம்பா வனையிறைவன் பூசை பத்தும்
ஒண்டரும மிறைவன்பூ சனைக்கு மற்றைத்
தொடர்தருமொன் பதுமுறுப்பா முறுப்பு முற்றும்
சூழ்ந்திறைவன் பூசனையை யுஞற்றி னாரும்
படருமவற் றுட்சிலகொண் டிறைவன் பூசை
பண்ணினருஞ் சிவலோகம் பற்றி வாழ்வார். 211

அத்தகைய சிவபுரிவாழ் வாரின் பொன்றே
அல்லாது துன்பமறி யாரவ் வாழ்வும்
கைத்தலமன் பூசனைபெட் டவரே யெல்லாம்
கழன்றுமுழுப் பாழ்வெளியிற் கலந்து வாழ்வார்

இருதிறத்தானும் செய்யும் இனிமையே ஆதரவாம். வழிபாடு முதலியவையே விதியாம். விதியாவது கடவுள் அடியாரை வழிபாடு செய்தல் முதலியவையாம்.

209. கண்டை - மணி. பசுவின் தொழுவமும். இந்த இடங்களெல்லாம் கொடையுளோர் தருமஞ்செய்தற்கிடமென்க. 192 ஆம் செய்யுளில் ஈதலாவது இடம் பொழுதுற நல்க என்றவற்றுள் ஈண்டு இடத்தைக்கூறி அடுத்த செய்யுளிற் காலத்தைக் கூறுகின்றார்.

210. காலமாவது அடுக்குங்காலமும் ஈரயனமும் முதலாகப் பலவாகும். ஈண்டு உரைத்தனம். உம்பன் ஆலயம் இயற்றல் முன்னே உரைத்தாம்.

211. தீமையை உடலுகின்ற தவம்.

வைத்தவினை பறிக்குமுறுப் பவற்று ளியாதும்
பற்ருது சிவபூசை பரித்து ளாரும்
மெய்த்தபயன் பெறுவரந்தப் பயனுந் தேற
விரித்துரைத்தும் வினைத்திருக்கை மிளிர்த்து ளாயே.

வேறு

அழுக்கு ளத்தினு முடலினு மருதொரு
நாளருச் சனைசெய்தோர்
வழுக்கு வன்றடி விழைந்துணுங் குய்யக
வுலகினை மரீஇவாழ்வார்
ஒழுக்கு வெஞ்சினக் கண்ணரா யிருதினம்
உம்பனுக் கலரிட்டோர்
விழுக்க ளுண்டுதேக் கெறிதரு மரக்கர்வாழ்
வியனுல கமர்கிற்பார். 213

நயக்க மூன்றுநா ணம்பன்பூ சனைநனி
நடவிய வூன்றின்போர்
இயக்கர் வாழுல கத்தினை யெய்துவர்
இன்னிசை பாத்தன்மை
வியக்கு மெய்ப்பொரு ளறிகிலார் நான்குபா
விமலன்மு னுரைத்தாடின்
உயக்க மோப்புகாந் தருவத்தை யேய்ந்தின்ப
வுததியிற் படிவாரால். 214

உலகு ளார்தலைப் புகழவேட் டைந்தின
மும்பன்பூ சனைசெய்தோர்
இலகு வானிறை யுலகுறு பல்வகை
யின்பமுந் திளைப்பாரால்
திலக வானுத லார்விழை வாலறு
தினம்பரிந் தனர்செய்தோர்
நிலவு வான்மதி யுலகில்வேட் டாங்கின்ப
நித்தலு நுகர்வாரால். 215

212. இன்பு. வாழ்வையும் கைத்து.

213. வழுக்கு - மாமிசபேதம். குய்யகம் - பிசாசு.

214. நயக்க. இன்னிசையையும் செய்யுளின் குணமாக வியக்கப்படுகின்ற அர்த்தத்தையும் அறியாதவர்களாகி. காந்தர்வலோகத்தை.

215. வானிறை - இந்திரன். காமாசையாற் செய்தோர்.

வேறு வேறுள விழைவினு லெழுதினம்
விளங்குபூ சனைசெய்தோர்
ஈறு சேரரும் வளம்பதிப் பிரமலோ
கத்திலின் பினிதார்வார்
கூறி வேதகா யத்திரி யெட்டுகோள்
அருச்சனை குயின்றோரும்
ஊறு போகங்கண் முழுவது மப்பதி
யுண்டுளப் பரிவீர்ப்பார். 216

ஒருவ னேயொரு மூவரென் றுன்பது
தினமருச் சனையுய்த்தோர்
பெருகு போகங்கள் வைகுந்த வெல்லையிற்
பெட்டபெட் டாங்கேய்வார்
பொருளி னுலொழுக் காலிறைந் தோர்களும்
பொருவிலன் புளதாமேல்
திருநி லாவியான் றவர்க்குமுன் னுரைத்தவச்
சிவநக ரடைவாரால். 217

ஏன்ற வன்பினுற் பொருளினு லொழுக்கினுல்
ஈசனைப் பணிந்தோரும்
ஆன்ற வவ்வநற் பயன் றனக் கேன்றவா
னுலகினைத் தலைப்பட்டுக்
கான்ற பேரொளி லரம்பையர்க் கலவியங்
களிதிளைத் தொரீஇமண்ணில்
தோன்றி யெவ்வகை யுறுப்பொடும் பூசித்துத்
துன்னுவர் சிவலோகம். 218

விளங்க வோதுமிவ் வுலகங்கண் மேலுமூன்
றுலகங்கள் விராய்நிற்கும்
வளங்கு லாவுநம் முலகொன் றுநிலையுமவ்
வைப்பின்மேன் முலைக்கோட்டில்

---

216. அப்பதி - பிரமலோகம்.

218. ஏன்ற - தமக்கு இயன்ற. மான்ற - பெருமை தங்கிய.

துளங்கு நூலிடை யுமையவ ளுலகுறும்
துலங்குமப் பதிமேலால்
களங்கு லாவிய கண்டர்வா ழுலகுறும்
காழ்வினைக் குறும்பட்டோய். 219

எம்மை யன்பொடு பூசனை புரிந்தவர்
எம்முடை யுலகத்தார்
அம்மை மென்மலர்ப் பாதபூ சனைசெய்தோர்
அவளுடை யுலகத்தார்
மம்ம ரின்றியெங் கைதையைவழி பட்டவர்
வயங்கவ னுலகத்தார்
செம்ம னல்குமச் சிவபுர மடைந்தவர்
திருமுரூர் பதஞ்சேர்வார். 220

அலகை யாதியாச் சிவபுர மிறுதியா
வடைவின்முற் றுபுநிற்கும
குலவு சித்திக ளெட்டுநற் குணங்களு
மிம்முறை கொண்டேறும்
நிலம்வ னங்கனல் வளிவெளி மனமகங்
காரமே விரிபுந்தி
நலிவி லொண்குண மூலமு முராரித
னல்லக விளக்காகும். 221

புந்தி நீங்கிய வெட்டும்வண் கமலத்தோன்
புந்தியைத் தெருளவிக்கும
இந்த வாறுகீ ழுள்ளவர்க் கொரோவொன்றங்
கிகப்புறு மிழிந்தோரும்

---

219. இவ்வுலகம் - தேவருலகம், பிரமலோகம், வைகுந்தலோகம். மூன்றுலகம் - கந்தலோகம், சத்தியலோகம், சிவலோகம்.

220. திருமுரூர் - திரும்பார்.

221. பைசாச உலகம் முதலாகச் சிவலோகம் ஈறுகவுள்ள உலகங்களில் நில்லாநின்ற அட்டசித்திகளும், குணங்களும் அவ்வுலகங்கள் முற்ற நிற்கும். அம்முறையாகவே ஏறி அவ்வுலகங்களில் நிறைந்துநிற்கும். நிலம் முதலிய ஓன்பதும் விஷ்ணுவின் அகம்விளக்கும்: எனவே, அவனுள்ளத்தை அவ்வொன்பதும் விளக்கைப்போல் விளக்கிக்கொண்டிருக்கும் என்பது கருத்து. குணமூலம் - பிரகிருதி. வனம் - நீர். விஷ்ணு மாயாருபமாகையால் இவ்வாறு கூறினர்.

அந்தி வானிறத் தமலன்பூ சனையினல்
அடைவினி லுயர்ந்தேறி
முந்து பார்முத லொன்பதும் விளக்குறு
முதன்மையுள் ளவராவார். 222

இலக்கம் வண்டரை யாகவிட் டெறிந்தக
லிடைப்பிழை யாதற்றே
நலக்க நம்பிராற் குளுற்றிய வினைகளும்
நன்மையிற் பிழையாதால்
குலக்க ணந்தொழு மமலனும் வினைதொறும்
குருலகு வெனுமபேதத்
துருக்க ரும்பயன் றருமினிப் பாதகத்
துண்மையு முரைப்பாமால். 223

வேறு

முன்ன ருளுற்றும் பாதகரே
முதிர்வா தனையான் மறுவலுந்தாம்
துன்னி விளைப்பா ரவையெல்லாம்
தூலஞ் சூக்க மதிசூக்கம்
என்ன மூன்றுந் தூலமீங்
கியம்பப் படுமா லதுமூன்றும்
உன்னு மனவாக் குக்காயத்
தொன்று நான்கு வகைப்படுமால். 224

---

222. இவ்விதமாகவே பிரமனுக்குக் கீழுள்ள ஒவ்வொரு தேவர்க்கும் எட்டிநின்றும் ஒன்றுென்றும் நீங்கும். கடவுளாவார் என்பது.

223. தரையானது இலக்காக எறிந்த கல் அத்தரையையே அடையுமாறு போலக் கடவுளைக் குறித்துச் செய்த வினைகளும் அக்கடவுளையே யடைந்து நன்மை செய்யும். அமலனுகிய கடவுளும் பேதத்தால் பயன் தருவார். குருவினை - மிகுந்திருக்கின்ற வல்வினை. லகுவினை - சிறிதாயிருக்கின்ற மெல்வினை. வினைதொறும் - அவரவர் செய்யுந்தொழில்தோறும்.

224. "தவமும் தவமுடையார்க்காகும்" ஆதலால், முற்பிறவியில் தீவினைசெய்தவரே மறுபிறப்பினும் தீவினையாகிய பாதகத்தை வாதனையால் துன்னி விளைப்பார். அப்பாவங்களெல்லாம் ஸ்தூலபாவம் என்றும், சூக்குமபாவம் என்றும், அதிசூக்கும பாவமென்றும் மூவகைப்படும். அம்மூன்றனுள் ஸ்தூலபாவத்தைமாத்திரம் ஈண்டுச் சொல்லப்படும். அத்தூல பாவமும் மனவாக்குக் காயத்தான் மூன்றும். அம்மனம் முதலிய மூன்றில் ஒவ்வொன்றும் நந்நான்கு வகைப்படும்.

பிறனில் விழைதல் பொருள்விழைதல்
பிறர்தம் பொருட்கே டெணலுயிர்கட்
கிறுதி யெண்ணன் மனத்தனவாம்
ஏங்கு மழுகை கோளுரைபொய்
அறைதல் புறங்கூ றுதல்வாக்கின்
ஆவ பிறனில் புணர்ச்சியுயிர்
தெறுதல் பழியூ ணுணல்பிறர்சீர்
தெவ்வ ஞன்கும் வடிவினவே. 225

அளந்த வவைதா மொன்றுபல
வாக விரியு மவையெல்லாம
கிளந்த வதிபா தகமாகி
மூன்றுட் கெழும வடங்கியிடும்
தளைந்த வதிபா தகமாபா
தகமே யுபபா தகமென்ன
விளங்கு மவையொன் றற்கொன்று
வீறு தணிந்த நிலையினவே. 226

புரையி லிறைக்கு மவன்மொழிக்கும்
பொருவு முயர்வு முன்னினரும்
உரைசெய் தவரு நிந்தையவ
ரோடுங் குரவர்க் குரைத்தோரும்
கரைசெ யிறைவன் வாக்கியபுத்
தகமக் கடவு டிரவியங்கள்
வரைசெய் குரவன் பொருளிவைவெள
வினரு மதிபா தகரென்பார். 227

கடவுள் பொருளைக் கவர்ந்தோரைக்
கனகங் கொடுத்து மடர்ப்பரிதேல்
விடுக வுறைந்த தேசத்தை
விடாது பயிலின் மற்றவரும்

---

226. அதிபாதகமானது மிகக்கொடியது.

227. சமமில்லை என்றெண்ணுது சமமாகின்ற உயர்வை நினைத்தாரும். இறைக்கும் பொருவும். இவ்விறையின் மொழியாகிய வேதாகமங்கட்கு உயர்வுமெனினும் பொருந்தும். அவரோடும் - இறைவேதாகமமாகிய அவர்களோடும்.

அடரு மதிபா தகம்புரிந்தோர்
ஆவ ரதிபா தகக்கணித்தாய்த்
தொடரும் வினையு முளததுவும்
தொகுத்த வதிபா தகத்தடங்கும். 228

பொருவி லிறையா சாற்கன்பு
புரியார் பூசை புகழ்ந்துவவார்
இருவர் தமக்கும் வறங்கூர்கால்
ஏ்து முதவார் பொருளிழப்பின்
மருவும் பணியேன் றனவிளையார்
வெளவு நியதி தனைவிடுப்பார்
பெரிய தவத்தோர் தமையிகழ்வார்
பிரானை யிகழ்ந்தோ ரிவர்நிகர்ப்பார். 229

புனித முடலோ டிடம்பயிற்றாப்
பூசை புரியா தரனூலை
இனிது பயில்வார் பயில்விப்பார்
ஏற்பார் பொருளாய் வார்வரைவார்
துனிவின் விடுத்துப் புறநூலைச்
சூழ்வா ரதுசேர் புத்தகத்தை
நனிவிற் றிடுவா ரிவர்நம்பன்
வாக்கை யிகழ்ந்தார் நல்லினமே. 230

வேறு

ஆரியற் பணியா தறம்பயி னூலை
யாதரிப் பார்பணி புரியார்
ஆரியன் பணிசெய் பவர்தமை யொழிப்பார்
அடுமிடர் மூப்புவந் துறுங்கால்
ஆரியற் றணப்பா ரவன்மனை புதல்வ
ராதியை யவமதித் துழல்வார்
ஆரியற் கிகலி யெதிருரை கொடுப்பார்
ஆரியற் பழித்தவர்க் கினமே. 231

---

229. பூசை செய்வோரைப் புகழ்ந்து சொல்லி உவவாதவர். இருவர் தமக்கும் - இறை, ஆசான் ஆகிய இருவருக்கும்.

230. வேதாகமநூலைத் தம் உடலையும் இடத்தையும் புனிதம் செய்து பூசையியற்றாது பயில்பவர். துனிவின் — கோபத்தால். அது - புற நூல். புறச்சமயநூலை விற்றால் அது எங்கும் பரம்பும்; அதனால் விற்கக் கூடாது.

ஐந்தெனப் படுமா பாதக மவைதாம்
அருமறை யாய்ந்தவந் தணனைச்
சிந்துற வடர்த்த றேறல்வாய் மடுத்தல்
செம்பொனைக் கரந்தனர் வெளவல்
கொந்தெழிற் குரவன் மனைவியைக் கலத்தல்
கோடுமிவ் வினைஞரைக் கூடல்
இந்தவல் வினையின் மருங்கியல் வினையும்
இவற்றினு ளடங்குவ மாதோ. 232

வெகுளியா தியின்வே தியர்தமை வைதல்
சபையிடை மேதையர்ப் பழித்தல்
அகனுறத் தன்னை மதித்தலா ரியனோ
டிகறனீர் நுகர்ச்சியிற் படரான்
பகுவிடை விலக்கல் பகர்ந்துபின் கொடாமை
பார்த்திபன் செவிபிறர் குறையைப்
புகறன்முக் கணனு தியர்நிலம் பறித்தல்
ஆதிபூ சுரர்க்கொலைக் கினமே. 233

மறைபயின் றொழித்தல் வளரெரி விடுத்தல்
இருமுது குரவர்சொன மறுத்தல்
அறவரே தோழ ரிவர்க்கனு ருறுத்தல்
அறம்விலக் கியபொரு ணுகர்தல்
நெறிபதி தொழுவ நெடிபடு கானில்
நெருப்பிடன் மிருகங்கள் வருத்தல்
பறைதரா விழிசொல் பறைந்ததாத் தெளியப்
பறைதல்கண் ணுகர்வினைக் கின்மே. 234

வறியவ ருறையுள் வளநிதி கரிதேர்
வாம்பரி களமர்பன் மணியும்
செறியிலைத் தெங்கு கமுகுதாற் றரம்பை
தீங்கழை செந்நெலா திகளும்

---

232. மாபாதகம் ஐந்தெனப்படும். கோடும் — கோணிய. வேதாகமங்கட்கு உயர்வுமெனினும் பொருந்தும், அவரோடு - இறை.

233. ஆன் - பசு. தருவேன் எனக் கூறிப் பின் கொடாமை. அரசன் செவியிற் புகறல்.

234. ஒருவன் சொல்லாத இழிசொல்லை அவன் சொன்னதாகப் பிறரிடைச் சொல்லல். கள் நுகர். ''உள்ளிவெள் ளுள்ளி யுதும்பரஞ் செம்முருங்கை வள்ளிபச லைமதுக்கோ வை'' முதலியன. அறம் - அறநூல்.

வெறிகமழ் சந்தங் குங்கும மாதி
விரைகளு முடையணி யினமும்
முறிவில்பல் பண்டக் கலன்களுங் கவர்தன்
முந்துபொன் கவர்வினைக் கினமே. 235

கொடைக்குரி யவரைப் பெற்றுமீ யாது
குமரியை யில்வயிற் செறித்தல்
படைக்கணில் லவடன் றுரிசறிந் தோர்ந்து
பயிறனீத் தவர்மனை புதல்வன்
தொடைக்குரி மருகி யுடன்பிறந் தவளைத்
தூமொழிப் புதல்வியை முயங்கல்
கடைப்புலை மகளைக் கலத்தலுங் குரவன்
காதலாட் புணர்வினைக் கினமே. 236

மிறைதரு முபபா தகம்பல வவையும்
விளம்புது மெய்த்தவ வறிக
மறையவர்க் கமைத்த பொருள்பெரி யவர்தம்
மாண்பொருள் கவர்தலன் னவற்றைப்
பறைதரப் பிறராற் கெடுத்தனற் குலத்தாற்
பயிலறி வருளினுற் றருக்கல்
நிறைதவத் தினரை வெகுளுத லெள்ளல்
நீத்திடல் செய்ந்நன்றி கோறல். 237

இறப்பவுங் காமப் புணர்ப்புறல் வறிதும்
ஈத்துரு தீட்டலே வேட்டல்
சிறப்பறு வஞ்சம் வயிரமுங் கோடல்
தீமுனர் மணந்தவ ளிருப்ப
நறக்குழன் மகளிர் நன்னல முண்டு
நாணறல் கற்புடை யவளைப்
பெறத்தகு மெளிய ளென்றெண லவடோள்
பிணைதர வலித்தல்கட் புணர்ச்சி. 238

---

235. வறியவருடைய உறையுளும்.

236. புதல்வனுடைய மாலைக்குரிய மருகி. பெண்ணை ஏற்றுக்கொள்ளுதற்குப் பாந்தமுடையாரைப் பெற்றிருந்தும்.

238. பொருளைப் பாதுகாத்து விரும்பிவைத்தல். கண்புணர்ச்சி - கண்ணினுற் கற்புடையாளைப் பார்த்தல். வலித்தல் - வலோற்காரம் பண்ணல்.

பழியறு கன்னிக் கிழிவெடுத் துரைத்தல்
பருவநல் லறிவுடை யவளைக்
கழியமெய் யுணர்ந்தாற் கன்றிமற் றொருவற்
களித்தல்கண் டிடுமண மெட்டின்
இழிவறு பிரம மாதியைந் தன்றி
ஏனைய மன்றலிற் புணர்தல்
அழிதன்மா லையவென் றறத்துறந் தவரை
ஆடக மாதிசென் றிரத்தல். 239

தளர்விடை யூற்றிற் பதியினை நீங்கல்
சகியினைத் தணத்தனற் குணரைக்
கிளைஞரைத் தரும முடையரைப் பதியைக்
கேழில்வீ ரரைவசி யர்களை
அளிதரு பசுவைத் தனக்கெனத் தருவை
ஆலயத் தருக்களைக் கோறல்
துளிமது மல்ரைத் தனக்கெனக் குற்றல்
துரிசினர் கைப்பொரு ளிரத்தல். 240

கண்ணுதற் பரமன் றிருப்பணிக் குரியார்
கவையடி யான்முதல் கவர்தல்
அண்ணல்பூ சனையின் பயன்றனைத் தான்செய்
அருந்தடா கத்தினைப் பொழிலை
நண்ணிய மனையைப் புதல்வரை விற்றல்
நல்லன தீயன பயத்தல்
புண்ணிய பாவ மெனத்தெரி கல்லாப்
பொத்தினைப் பூசுரன் படுதல். 241

தருவலென் றேற்ற பொருள்கொடா தொழிதல்
தருகுவல் பாகமென் றொருவர்
இருநிலம் விளைத்து முழுவதுங் கோடல்
இல்லவ ளணிகல மழித்தல்

---

239. ஏனைய மன்றல் - மணமெட்டில் ஐந்து நீங்கிய மற்றை மூன்று.

240. தளர்வினும் இடையூற்றினும். பதி - கணவன். பின்னையதும் அது.

241. உரியார் - கணிகையர் முதலியோர். புண்ணிய பாவமாகிய இரண்டும் நல்லன தீயன பயத்தலாகும் என்று பகுத்துணர்வில்லாத அறியாமையைப் பார்ப்பானடைதல். பொத்து - அறியாமை.

விரதியர் பொருளை நயந்தனர் கோடல்
விளைதபத் தரும்பொருள் வாங்கல்
பரவுறு வசிய மாதியிற் செம்பொன்
பற்றல்வில் லாதன விற்றல். 242

புகழினைக் குறித்து நியதிகைக் கோடல்
பொருள்களான் மறைமுதல் கொள்ளல்
திகழ்நடம் விஞ்ஞை மாதிய மதித்துத்
திரிதனற் சமயநின் றவர்கள்
இகழ்பசு நூலை வழியெனப் பயிறல்
இரும்பொரு ளேற்றுநூல் பயிற்றல்
நிகழ்தரு மவலத் தருக்கமே யறைதல்
படிமத்தைப் பரித்துநீத் திடுதல். 243

வானவ ரெரிமந் திரமது கொடுத்த
வரதரை யோம்புறு திகத்தல்
ஆனரு மறையோ ரறவரைப் பிழைத்தல்
அரசனுக் கிழிப்புரை கிளத்தல்
ஈனமில் பிதிரர் செய்கடன் றவிர்தல்
இருவினை நரகொடு துறக்கம்
ஊனமி லிறையு மில்லையென் றுரைத்தல்
உண்மது மகளிர்தோள் கலத்தல். 244

பூரணை யிருது மதிபகல் பிதிரர்ப்
போற்றுநா ளாதியின் மகளிர்
வாரணி கொங்கை மணத்தனீர்க் கலத்தல்
வண்பசுப் புணர்தனட் புடைத்தல்

---

243. நியதி - நித்தியகருமம். பொருள்களினலே வேதம் முதலிய வற்றை வாங்கல். பதிநூலைப் பயிலாது பசுநூலைப் பயிறல். நிகழ்தரும். படிமம் - தவவேடம்.

244. வானவரையும், எரியையும், மந்திரத்தையும், அம்மந்திரத்தை யுபதேசித்துக் கொடுத்தவரையும், நல்வழியையும் பாதுகாவாது இகத்தல். கொடுத்தவர் அதரை. ஆன் - பசு.

ஈரமில் கொடுஞ்சொற் களத்தனீர்க் கோட்டை
இறுத்தல்கூ பத்தடந் தூர்த்தல்
வீரமுற் றமர்தன் சமயங்கால் கோறல்
விண்ணவர் விமானங்கள் சிதர்த்தல். 245

அமிழ்தமே யாகப் பகாதுண லன்றி
அனைத்துமா மருஞ்சுவை கொழிக்கும்
தமிழ்முனி யுபபா தகமத னினமும்
சழக்கறக் கிளக்குதுந் தெரிக
இமிழ்மறை யாளர் தாபதர் சகிகன்
னியர்பசு விவர்வினைக் கூறு
நிமிர்தர விழைத்த னெஞ்சழுக் காற்றில்
நிறுவல்பா வையர்பழி நாட்டல். 246

எரிவளர் சாலை கோயிலா னிலைநீ
ரெறிகுளம் வீதிவெற் பீமம்
விரிமலர் நந்த வனந்தரு நீழன்
மேடவல் சிலைவினை நிலமெய்
தெரிதவர் வளாக முவர்நில முறையுள்
திருநதி யறுகுபைந் தும்பை
நெறிநிலம் வழிவன் மீகமற் றிவற்றின்
இருவகை யியக்கமு நீத்தல். 247

பிறர்நிதி வேந்தன் றனக்குறக் காட்டல்
பேனநீர் தனில்விளை யாடல்
உறவிகல் கடந்தோர்க் குறுகுல மாதி
ஆய்தலொண் வழியிடை தடுத்தல்
மறலிய வழக்கிற் றெளித்தசொல் சொலாமை
மாற்றல னுயிர்கரந் திறுத்தல்
தெறல்வினைத் தூண்டி லாதிய செய்தல்
செயுமவை கோடல்பொய் களத்தல். 248

---

245. நீரில் புணர்ச்சிசெய்தல். நட்பு உடைத்தல் - நட்பைக் கெடுத்தல். நீர்க்கோடு - நீர்க்கரை. கால்கோறல் - அழித்தல். விமானம் - கர்ப்பக்கிருகம் முதலியன.

246. உபபாதகம் இன்னும் அனைத்துமாம்.

247. மேடு அவல். சிலை - கல்.

248. தெளித்த சொல்லை வழக்கிற்சொலாமை. பகைவனுயிரை மறைந்து கொல்லுதல். செய்த அத்தூண்டிலைத் தான் கொள்ளுதல்.

ஆருயிர் மயங்க மருந்திட லதிதி
    ஆதியோர் பசிமுத லொருமை
வாரமற் றடியர் பாலிரங் காமை
    மற்றுமத் தொழும்பரை யொறுத்தல்
பேருறு வருண நிலையிவை சிதைத்தல்
    பெருநிலத் துயிர்தப நடத்தல்
சீரிய சுற்றம் வேந்தனு டியர்க்கும்
    செயிர்வினை முடித்திடக் கருதல். 249

ஆவினை யினத்தி னீக்கலான் பிணியை
    அகற்றுதல் செயாமையா னேறு
நோவவன் பீச முடைத்தலவ் விரண்டின்
    நோன்சுமை யுறுத்தல்வே தியர்க்குத்
தாவினை யுஞற்றன் மதுமண மோத்தல்
    தரணிகா வலனெனப் பிறந்தும்
தேவர்கட் கவியூண் கொடாமைமூத் தவர்நோய்
    செறிநரா தியர்க்கிரங் காமை. 250

ஊனுண வெண்ணல் கொலையதற் கிரக்கம்
    உறுமைமற் றிடைவிலக் காமை
ஏனைய விழிவுஞ் செய்யுவஞ் சாமை
    இறுத்திடப் பிறவுயிர் வளர்த்தல்
ஆனவர்ச் சனையீ சன்பணி சிறிதும்
    ஆற்றிலே மெனவிரங் காமை
பேனநீர்க் கடலிற் கலங்கொடு சேறல்
    பெட்டுவே சையர்நலந் திளைத்தல். 251

வினைபுரி யாளர்க் குள்ளதீ யாமை
    வெய்யகோ னடத்தல்வெங் கோலின்
முனைவர்பா லேற்றல் கள்ளனை யறிந்து
    நல்லனென் றேமொழிந் தகற்றல்

---

249. வருணத்தையும் நிலையையும். நிலை - ஆச்சிரமம்.

250. தாவு - வருத்தம். கள்ளின் வாசனையை மோத்தலும் ஆகா தென்க.

251. ஓருயிரைக் கொல்ல ஓருயிரை வளர்த்தல்.

இனைதரக் கள்ள னென்றுநல் லவனை
எண்ணலர்கள் ளற்குடன் படுதல்
புனைதரு கள்ளத் தொழில்சொலல் பயிற்றல்
புரையுறக் கள்ளனைச் சார்தல். 252

பாறயி ரிழுது தயிலநீர் கூலம்
பட்டுவார் கவரிதண் கவிகை
நாறுமூன் றசைசங் கிதைவிரி மதலை
நகைமணி யிரும்புசெம் பாதி
வீறிலி திரண மாயினும் பிறர்பால்
வெறுத்தன கரவினுற் கோடல்
தேறுக வுபபா தகக்கின மென்று
தெள்ளிய வொள்ளறி வுடையோய். 253

ஆடவர் மகடூஉ மானிடர் தேவ
ராகவிவ் வியற்றுறி னவ்வ
பாடழி பயனைப் பயந்தலா தொழியா
பார்த்திப ஞெறுத்திடப் பட்டோர்
பீடுறு குரவன் மெய்யடி யவராற்
பிரித்திடப் பட்டவர்க் கெல்லாம்
நீடுறு பயனெய் தாவினி யறம்பா
வப்பய னிலைமுறை கிளப்பாம். 254

வேறு

அன்னநீர் செருத்தலா ஞடையாதி பல்லவும்
நன்னர்நெஞ் சுவப்புற நயந்தளித்து ளோர்களும்
மன்னுமீச ஞதியோரை வணக்கமுற்றி ஞேர்களும்
என்னருந் தெஞதுதிக்கி னெய்திமே லியங்குவார். 255

---

252. வேலை செய்தோர்க்குக் கூலி கொடாமை.

253. கூலம் - ஊண், பண்ணிகாரம். இதை - மரக்கலப்பாய். மதலை - மரக்கலம். ஆதிகோடல் என முடிக்க. வெறுத்தல் - தங்கல்.

254. ஆடவர் என்றது ஆண்பாலாரை; மகளிர் என்றது பெண் பாலாரை; மானிடர் என்றது அவ்விருதிறத்தாரை. பாதகத்தை இயற் றுறின் அப்பாதகம் ஒழியா என முடிக்க. ஒறுத்திடப்பட்டோரும் பிரித் திடப்பட்டோரும் ஆகிய இவர்களுக்கெல்லாம். பிரித்தல் - தலயாத்திரை, தீர்த்தயாத்திரை செய்வாயாக; செய்தால் இப்பாதகம் தீரும் என்று அகற்றல். ஆடவர் மகடூஉவைத் தேவரினும் சேர்க்க.

255. அன்னமும்.

இரதமாதி யூர்ந்துபல் வியமியம்ப வியவர்கள்
விரசமந்த மாருதம் விராயியங்க நெறியெலாம்
பரவுபல் வளத்தபோகம் பண்பிஞர்ந்து செல்லுறும்
வரதர்தம்மை நடுவனு மகிழ்ந்தெதிர்ந்து தவிசுறீஇ. 256

காதலோடு பூசனை களுற்றிநீயி ரெம்பிரான்
வேதநீதி யாற்றினீர் விண்ணினின்ப மேய்ந்துமுன்
பாதகத்தி னெஞ்சிய பயனருந்த விவ்வயிற்
போதுகென்ன நன்றெனப் போகபூமி யெய்துவார். 257

என்றவெல்லை முனிவர னிறைஞ்சிவே விறைவனை
ஒன்றுதான்வி னுவுவா னுதவினுரை யோதுமி
முன்றலைக்க ணன்னநீர் மொழிந்ததென்னை யென்றலும்
குன்றிறுக்கு மிளவலுங் குறுமுனிக்கி தருளுமே. 258

வேறு

பொருண்மிகு மூர்தி யாதி போக்கருங் கொடைகட் கெல்லாம்
பொருண்மிகா வன்னந் தெண்ணீர்ப் போக்கருங் கொடையே
பொருண்மிகு மூர்தி யாதி பூத்திடும் பயத்தி னூங்குப் [மேலாம்
பொருண்மிகா வன்னந் தெண்ணீர் பூத்திடும் பயன்மேம்
[பாட்டால். 259

பிணிபல வவற்றுண் மேலாம் பிணிபசி யதன்பா லான
பிணிநறுந் தெண்ணீர் வேட்கை பிணியிவை யுயிர்கட் கெல்லாம்
தணிமருந் தன்னந் தெண்ணீர் சார்பசி யொழிவி னுண்டாம்
தணிவில்பல் வேட்கை நீக்கு மவையெலாந் தமக்குப் பின்னும்.
260

---

256. வியவர்கள் விரச - வழிச்செல்வோர்கள் கூடவர.

257. இயமனுனவன் வந்தவர்களைப் பூசைசெய்து.

258. அன்னத்தையும் நீரையும்.

259. செருத்தல், ஆன், ஆடை முதலியவற்றைக் கொடுத்தால பொருட்செலவாம். அன்னம், தெண்ணீர் கொடுத்தால் அவ்வளவு பொருட்செலவு ஆகாது ஆதலால் 'பொருள் மிகு மூர்தி' எனவும், 'பொருள் மிகா அன்னம் தெண்ணீர்' எனவும் கூறினுர். ஊர்தி - செருத்தல். மேம்பாட்டால் மேலாம். ஊர்தி முதலிய கொடைகளுக்கெல்லாம்.

260. பிணியானது பல ஆகும். மேலாம் பிணியாவது பசியாகும். அப்பசியின்பாலாகிய பிணியாவது வேட்கையாகும். பிணியிவை தணி மருந்தாவது அன்னம் தெண்ணீராகும். பசிநீங்கிய பின்பு உண்டாகின்ற

உடலினை வளர்த்த லானு முடலினாற் கிளந்த வேனை
மடனிகு மறங்க ளெல்லாம் வளர்த்திட லானு நீத்தோர்
கடவுள ராதி யோரு முணவினைக் கருத லானும்
தொடர்தரு பல்லாற் றானுந் துப்பளித் திடுதன் மேலாம். 261

ஆதலா லன்னந் தெண்ணீ ரவற்றினை முன்னர்ச் சொற்றாம்
பூதவன் பரிணா மத்தைப் போட்டுநற் பூத சாரத்
தோதரு துறக்கஞ் செல்வோ ருறுமுறை தொகுத்தா மிப்பால்
பாதகர் பூத தேகம் படர்ந்துறு முறையுஞ் சொல்வாம். 262

கருவிளங் குழவி பாலர் காளையர் விருத்த ராக
மருவுட னுகர்ச்சி யற்ற மாத்திரை யறிந்து தென்பால்
தருமன தேவ லாளர் சார்ந்தனர் கொண்டு போத
வெருவுற நெறியின் முற்றும வேதனை யனந்த கோடி. 263

சுழல்விழி யங்கி காலச் சுடர்ந்தெரி குஞ்சி பொங்கத்
தழனிமிர் திறலின் முற்றுந் தறுகண்வன் றூதர் கையில்
மழலைமென் கிள்ளை பூசை வாயகப் பட்டாங் கல்லாந்
துழலைபாய் மனத்தர் பாசப் பிணிப்பொடு முறுவர் சில்லோர்.

கொடிற்றினைத் துளைத்துக் கோத்த கொடுந்தொடர்ப் பட்டுச்
மிடற்றினை யிறுக்கியாத்த வீசுபாசத்திற் செல்வோர் [செல்வோர்
உடற்றுபு நாசி யண்ண மோட்டம்வார் குய்யங் கோத்துப்
பிடித்தனர் பாச மீர்ப்பப் பெயர்குவர் சிற்சி லோரே. 265

கடகரி யொறுப்ப வேங்கை கதழ்ந்துதாய்த் துமிப்பச் சீயம்
அடல்சினங் கடவ யாளி யதிர்த்துவாய்ச் சுவைத்துக் கால
இடிபடை மழைதீ மாரி யெறுழ்ச்சிலை மாரி யாதி
உடறுணி படுப்ப மாழாந் துறுவதி கடப்பர் சில்லோர். 266

ஏனைய வேட்கை எல்லாவற்றையும் நீக்கக்கூடியனவெல்லாம் அதற்குப் பின்னாகும்.

261. துப்பு - உணவு.

262. பஞ்சபூதத்திரிவாகிய உடல். போட்டு - நீக்கி. உடலைப் போட்டென்பது. பூதசாரம் - தேவ உடம்பு. பூதசாரத்தால் துறக்கம் சேர்வோர். பூததேகம் - நரகர் உடம்பு.

263. கருவாக. உடல் நுகர்ச்சி.

264. உழலை - ஓட்டை. உழலுதலை என்பாரும் உளர்.

266. வேங்கையானது துமிப்பவும். சீயமானது கடவவும். யாளியானது காலவும். இடிமழையும் படைமழையும். வதி - வழி.

அயினுதிப் பரல்கா றின்ன வழற்கொழுந் தளாவிச் சூறை
வெயின்முகத் துருகும் யாக்கை மென்றுமென் றுமிழ்ந்து சூழ
உயிரினை முழுதுந் தூத ரொறுத்திடுஞ் செல்லன் மாந்தப்
பயிலிட மின்றி நீண்ட பாழ்நெறி யிறப்பர் சில்லோர். 267

நெறிகளோ கொடிய வந்த நெறிபயில் பொருள்க ளெல்லாம்
தெறுவன வவற்றின் மேலுஞ் சிக்கயாப் புறுத்த காலர்
குறிபயி லங்க நான்குங் கொடியன வென்று லென்னே
உறுதுயர்க் கவதி யுண்டோ தென்றிசை யுறுநர்க் கம்மா. 268

பஃறுயர்ப் படுத்தி யுய்த்துப் படர்பெருங் கால தூதர்
அஃறவழ் மெய்யர் வெய்ய வடன்முனைப் படைய ராகி
விஃறவழ் கழற்கால் வீரர் மிடைந்தனர் சூழ வைகும்
கஃறலை வணங்குந் திண்டோட் காவலற் கிதனைச் சொல்வார்.

இறைவநின் வியங்கோ ளாற்றி னிழுதையர் தம்மை யெல்லாம்
முறையுளி யியவைத் தண்ட முற்றுவித் தீங்குத் தந்தாம்
மிறைவளர் தண்ட மின்னும் விளைப்பன வருண்மோ வென்ன
நிறைகுணத் தரும வேந்த னிகழ்த்திய மாற்றங் கேட்டு. 270

சித்திர குத்தற் கூவித் தீங்கெலாஞ் செப்பென் றேவிக்
கைத்தல நெல்லி போலக் கருத்தினு ளவர்க்குந் தோன்ற
மெத்திய பாவ மன்னுன் விரித்தபின் கலுழற் கண்டு
பைத்தவி யரவ மென்னப் பதைப்புறு வாரை நோக்கி. 271

---

267. சூறைக்காற்றுனது அளாவி யாக்கையை மென்று மென்று உமிழ்ந்து சூழவும். செல்லல் உயிரை மாந்தவும்.

268. குறி - பெயர். பெயர் தங்கிய அங்கம் நான்கு:— கால், மறல், மடங்கல், பாசத்தன்: இந்நால்வரும் யமதூதர்கள்: 'கமையில் கால் மறல் மடங்கல் காலன் பாசத்தனும்பேர்' என்பதனுலும் அறிக. அவற்றின் மேலுங் கொடிய.

269. ஆகிச் சொல்வார்.

270. இயவை - வழி. என்று கூறுநிற்ப இயமனுனவன் அதைக்கேட்டு.

271. ஏவி நோக்கி. பாவத்தை எடுத்து விரித்துச் சொன்னபின்பு. படத்தை விரித்து அடங்கிய. அவி - அவிந்த; என்றது அடங்கிய என்பதாம்.

பொய்யெனப் போகு மாதர் போகமும் பொருளு மற்றும்
மெய்யெனக் கருதி வேத விதிதபப் பலவுஞ் செய்தீர்
மையவிர் மிடற்றெம் மண்ணன் மறைவழி யேது மில்லீர்
நையவீண் டணைந்தீர் பன்னு ணரகினுக் கிரையு மானீர். 272

கோட்டிப மிவுளி பொற்றேர் கொழுநிதி மனைவி மைந்தர்
ஈட்டிய பொருள்க ளெங்கே யெங்ஙன மிகந்து போந்தீர்
ஓட்டைநெஞ் சுடையீ ரொன்று முடன்வரக் காணீர் வாளா
நாட்டுளார்க் கவற்றை யீட்டி நரகெலா மீட்டிக் கொண்டீர். 273

என்றுரு மேற்றிற் பொங்கி யிதழ்மடித் தெயிற்றிற் றின்று
வன்றிறற் சண்ட னாதி வயப்படைத் தலைவர்ப் பாரா
நின்றவிக் கொடியோர்க் கெல்லா நிகழ்த்துக தண்ட மென்ன
நன்றெனப் பணிந்து போந்து நவையறிந் தொறுத்தல் செய்வார்.

வெவ்வினைப் பிலநா லேழு விளம்புமிவ் விருபத் தெட்டும்
ஒவ்வொரு கோடி யாக வுறுமுறு நாலே ழுள்ளும்
தெவ்வினை முதன்மை யெய்தி யைவ்வைந்து செறிந்து நிற்கும்
இவ்வெலாம் பலகா லண்மி யினைபவா லொழிவு காறும். 275

வேறு

பிறையெ யிற்றினர் பிடித்தடி திரித்து வயிர
அறையி னெற்றமுடி மூளைக டெறிப்ப வயர்வார்
கறைம டுத்துமுச லம்பலர் கரங்க ளினெழீஇ
முறைசெ யக்கடிதி னென்புகண் முரிந்து குழைவார். 276

உண்ண லாகுமிது சொன்றியுறு நீரி துவெனு
நண்ண லோடுமவை மென்கிருமி நாறு திரமாய்
எண்ண மாறவிவை யேநுகர்தி ரென்று முடுகித்
துண்ணெ னக்கொடிய தூதுவர் தெழிப்ப வழிவார். 277

---

273. அறிவுபோய நெஞ்சு என்பார் ஓட்டை நெஞ்சு என்றூர்.

275. பிலம் - நரகம். பிலமானது நாலேழாகும். இருபத்தெட்டுக் கோடியாகவுறும், இருபத்தெட்டுக்கோடி நரகத்தில் ஒவ்வொரு கோடியினும் அஞ்சு அஞ்சாகத் தலைமை பொருந்தும். வருத்தும் வினையால் தலைமையடைந்து. தெவ்வினை - பகையான வினை.

276. அடிதிரித்து - பதகர்களுடைய இருகாலையும் திருக்கி. கறை - உரல்.

277. என்று சொல்லித் தூதர் நண்ணலோடும். ஆய் மாறு நிற்ப.

சிவிறி வாங்கினர் முறுக்கிவிடு செப்பின் விதலைத்
துவலை காலதரெ னத்துளைது றுப்ப மடிவார்
இவறு மாதரினி ணர்க்கனல் கொழுந்து ருவினைத்
தவவ ணைந்துடல லைந்துகவி னைந்து தளர்வார். 278

வாழி வாளரம்வ லிந்திருபு றத்து நடவிப்
போழும் வாருடல்பொ ருத்திநுதி வாய்ச்சு ரிகையால்
கோழி ளந்தசைகள் கொய்துபகு வாயி னுதவிக்
கேழி ரத்தமும டுப்பமதி கெட்டு விளிவார். 279

அண்ண மூடெழ முடக்கினை யழுத்தி யதுசேர்
திண்ணெ றுழ்த்தொடரி னூற்றினர்தெ றக்க வலுவார்
வண்ண வார்தழல்வ ளர்த்துமுடி கீழு றமறித்
தெண்ணி லாதகொடு மைத்தொழிலி யற்ற வழுவார். 280

உள்ள டித்துணை பெயர்ச்சியற வூசி நிமிர
முள்ளு டைக்கதையின் முன்னுகென மொத்த விழுவார்
வள்ள யிற்கணநி ரைத்தநில மீது மறுகத்
தள்ளி யோச்சியுடல் பொள்ளல்செய நோத றகுவார். 281

கூறு செய்துடல்கு டங்கரின டைத்தி ழுதுபெய்
தேறு வன்னியினி டத்தசைக ரைந்தி றுகுவார்
ஊறு செம்புனலொ ழுக்கெழ வரிந்து கழுகு
பாறு நாய்நரிமு கத்திடவி டுமபை படுவார். 282

---

278. விதலை - செம்புருக்குநீர்: (நடுக்கம்). தம் வடிவம் பலகணி எனக் கூறுமாறு துளைக்க. காலதர் - பலகணி. இரும்பு முதலியவற்றாற் செய்த பெண்ணுரு என்க. இணர் ஈண்டுத் தீக்கொத்து.

279. வாழி: அசைச்சொல். வாளையும் அரத்தையும் உடலின் இரு பக்கத்தும் செலுத்தும்போழ்துள்ள உடல்.

280. முடக்கு - துரட்டியாக இருக்கும் இரும்பு: தூண்டில்முள். அது சேர் - அம்முடக்கொடு சேர்ந்த.

281. முள்ளையுடைய கதையால் மொத்த. அயில் - வேல்.

282. இழுது - நெய். முகந்திட. முகத்திலிட எனினும் பொருந்தும். வரிந்து - வரிசையாயிருந்து.

உறுப்பி றுப்பவொரு பாலுருகு செம்பொ னொருபால்
வெறுப்ப வொன்பதுது ளைக்கணும்வி டுப்ப வொருபால்
கறுப்பொ டும்வயிறு கீழ்ந்துகுடர் காற்றி நுதிமுள்
நிறைப்ப வோவெனநெ டுந்துய ருழத்த லுறுவார். 283

வண்டு வாருடறு ளைப்பமத வேழ முலவை
கொண்ட லைத்தெரிய வேங்கைகுரல் கவ்வி நலிய
மிண்டி நாயடவி ழுங்கவர வங்கொ டிவளாய்க்
கண்டொ டக்கிருமி கெண்டிநெளி யக்க தறுவார். 284

கலைவ லார்மகளிர் பூண்முலை கலப்பொ ழிவுகா
றுலைவி லாதுவள ரின்பமல தொன்றும் விரவா
தலைசெ யள்ளலகல் காறுமடர் துன்ப மலது
நிலைவ தின்றெனின தன்றிறநி கழ்த்த வெளிதே. 285

வேறு

எழுநான்கு கோடி யளறுமவி ழுங்க
எறிவெண்ட ரங்க விரிநீர்
முழுவான்ப தங்க ளெவையுஞ்ச வட்டு
முடிவுங்க வற்சி யுறுவார்
கழியாத நோன்மை யதிபா தகங்கள்
கருதாது ஞற்றி னர்களும்
வழியாய வற்றி னிமான பாவ
மதியாமை யாற்றி னருமே. 286

இருவான்சு டர்க்கு முடிவெய்து காறும்
எழுநான்கு கோடி நரகும்
ஒருவாது முப்பர் கொலையாதி யைந்தும்
. உணர்வற்றி ழைத்த கொடியோர்

---

283. ஒருபால் உறுப்பை இறுப்பார்கள். ஒருபால் உருகு செம்பொன்னை நவத்துவாரத்தினும் வெறுக்கும்படி விடுப்பார்கன். ஒருபால் கீழ்ந்து காற்றி முள்ளை நிறைப்பார்கள். ஓ என்று.

284. குரல் - கழுத்து. கண்தொட.

285. மதனநூலில் வல்லவர்கள் ஒழிவுகாறும் சிற்றின்பமல்லாமல் வேறொன்று விரவாது அதைப்போலத் துன்பமல்லாமல் வேறொன்று நிலைவ தின்றெனின். வித்வான்களோடு கலத்தலும், பெண்கள் முலையோடு கலத்தலும் என்பாரும் உளர்.

286. நீர் என்றது கடலை.

மருவாரி சத்த ஞெருமுன்ப கற்குள்
வருபாதி கால மவைசேர்
பரிபாத கங்கள் புரிவோர்தி ளைப்பர்
பதிஞன்கு கோடி யளறு. 287

அயனர்ப கற்க ஞெருபாத வந்தம்
அளறேழு கோடி யுறுவர்
பயமேது மின்றி யுபபாத கங்கள்
பரிவுற்றி ழைத்த பதகர்
வயமாரி வற்றின் வருகால மள்ளல்
ஒருபாதி யாக மருவச்
சயமாரி வற்றின் வழிபாத கங்கள்
உடையார்ச ழங்க லுறுவார். 288

எரிவாயு றுத்த வொளிரும்ப சும்பொன்
எனவள்ள லின்ன லுறலும்
உரைபாத கங்க ளொழிவுற்றி யாரும்
உறுதூய்மை யெய்தி விரைவில்
கரையேறு வார்க ணிரயந்த காத
கரிசான வெஞ்சு வினையும்
தரைமீதி ழிந்த பிறவிக்கண் வந்து
நெடிதிற்ற ணத்த லுறுவார். 289

தருவாகி யென்பில் புழுவாய்ப்ப றப்பை
தானய்வி லங்கி னுருவாய்
ஒருவாத செல்ல லுடறேுற ருந்தி
உறுவார்க ளாவி னுருவம்
வெருளான்பி றப்பு விழுமுற்ற வத்தின்
வியன்மா னிடத்தி லணைவார்
அரிதாமி தன்க ணணைவுற்று முய்தி
அறியாரி தென்கொ லறிவே. 290

---

287. பஞ்சபாதகம். கொடியோருழப்பர். இரவும் பகலும் ஆகிய பிரமன் ஒருநாளின் முற்பகலிற் பாதிக்காலம்வரையிலும் பஞ்சபாதகத்துக் கிணையாகப் பாவம்புரிவோர் திளைப்பர். கொலையாதி ஐந்தையும் இப் படலம் 232-ஆவது செய்யுள்கொண்டு உணர்க.

288. பாத அந்தம் - காற்பங்கு: பாதம் - கால். பதகருறுவர். அக்காற்பங்கில் வருகின்ற காலம் பாதி - அரைக்கால். அள்ளலிற் சழங்கல் உறுவார் என முடிக்க. காலம் பாதியாக மருவ.

289. பசும்பொன் மாற்று உயருமாறுபோல. நிரயம் கரையேறு வார்கள்.

290. பசுவினுருவம் உறுவார்கள்.

அரிதாம்பி றப்பு ளுயர்மானி டத்தின்
அடைவுற்று வைக லதனின்
அரிதாகு நல்ல குலனிற்பி றத்தல்
அறவாள ராத லதனில்
அரிதாகும் வேத முதலாய்ந்து முக்கண்
அமலற்க லத்த லதனின்
அரிதாமு யர்ந்த குலனுற்றும் வீணில்
அழிவாரி தென்கொ லறிவே. 291

நிலையாமை கண்டு நிலையாத காயம்
நிதியாதி கொண்டு சிலர்தாம்
உலையாத வூக்க முலகத்தி லீட்ட
உதுகண்டி ருந்து முகிழ்மென்
முலைமாத ராதி பொருண்மீது வேத
முறையிற்பி றழ்ந்து படரும்
அலையான வார்வ மறவீசி யுய்தி
அறியாரி தென்கொ லறிவே. 292

முத்தேவ ராதி புலவோரும் விண்ணின்
முழுதின்ப கற்றி யருளின்
பித்தேறி நின்ற முனைவன்ப தங்கள்
பெருகன்பி னோடு பணியும்
அத்தேய மான வுயர்பார தத்தின்
அரிதின்றி வாழ்வ ணவியும்
செத்தாரின் வேறு மலராகி யுய்தி
தெளியாரி தென்கொ லறிவே. 293

---

291. வைகல் அரிதாகும்.

292. பெரியோர்களாகிய சிலர்கள் ஈட்டாநிற்ப, இதைக்கண்டிருந்தும் படரும் ஆர்வம். அலையான. கெடாத ஊக்கம் - யாகம் பூசை முதலிய செய்தல்.

293. புலவோரும் அகற்றி அருட்பித்தேறிப் பணியுமிடமாகிய பாரதத்தின். செத்தாரின் வேறல்லராகி எனவே செத்தார்போலாகி என்பது. பாரதம் - பரதக்கண்டம். நல்வினை செய்யாதிருத்தலால் செத்தாரைப் போலவும்; வேறும் அலர் ஆகி - உயிரோடிருப்பவராயல்லாமலும். செத்தாரினின்றும் வேறுமல்லாதார் எனவே, செத்தாரும் அல்லர், இருந்தாரும் அல்லர் என்பது.

வருணங்க டோறு நிலைதோறு மாற்றல்
வகைமைக்கி யன்ற வினைகள்
தருகின்ற வேத முதனூலு நாளும்
தவிர்கின்ற பாரு மியைய
மருவொன்று போது புனலெங்கு மன்ன
வளர்பூசை கொள்ள விறைவன்
உருவொன்றி நிற்ப நிரயத்து மீள
உறுவாரி தென்கொ லறிவே. 294

மறைநீதி கொண்டு புரிவோர்கள் விண்ணின்
மகிழ்போக முண்டு விமலம்
நிறைஞான வாரி படிவுற்ற பாவ
நிலைமன்னி நிற்பர் மறைநூல்
முறைகோடி னூர்க ணிரயத்து மீள
முழுகித்தி ளைப்ப ரடியார்
அறைபாத கங்கள் செயினும்வி ழார்கள்
இமையார்வ ணங்க வமர்வார். 295

அள்ளற் பரப்பி னினைவோரும் விண்ணின்
அடர்போக வின்ப வுததி
வெள்ளத் தழுந்து மிமையாரு மண்ணின்
மிளிர்மானி டாதி யுருவம்
கொள்ளப் படுக்கு முயிரும்பி றத்தல்
குழைவுற் றிறத்தல் பலவும்
தெள்ளித்தெ ளிந்த கலைமாத வத்த
தெரியக்கி ளத்து மறிதி. 296

வேறு

பாவகா ரணத்தாற் பூதத்தி னிமைக்கும்
பாணியி னரகருற் பவிப்பார்
மேவுபுண் ணியத்தாற் பூதசா ரத்தின்
விண்ணவ ரொருகணத் துதிப்பார்

---

294. தவிர்கின்ற - தங்குகின்ற.

295. அபாவநிலை - பின்னமின்மையாகிய நிலை. அபாவம் - இன்மை. புரிவோர்கள் நிற்பர். அடியார் செயினும்.

296. அள்ளல் - நரகம்.

ஓவுறும் பூதத் திண்பரி ணாமத்
தோதிரு வினையின்மண் ணுயிர்கள்
ஆவன பையுண் மானிடம் விலங்காம்
அண்டத்தா மரவம்புள் ளாதி. 297

கிருமிகீ டாதி கசிவினிற் றோன்றும்
கேழிணர்த் தருமுதற் பலவும்
உருவவித் திடத்து நிலம்புனல் வெயில்கால்
உறவெழும் வித்துயிர்த் தவற்றுள்
அரியன யவைமுன் செந்நெலீ றாக
அறைவன வெண்ணிரண் டவைதாம்
உரியதம் பலத்தி னசிக்குமப் பலந்தான்
உணவதாய் மனிதரை வளர்க்கும். 298

அகத்திடு முணவு நீர்விராய்ப் பருவம்
அடைதலு முணவுமே லறல்கீழ்த்
தகப்பகுத் திடுமாற் பிராணன்பின் வளிதீச்
சாரங்கோ தெனவிரண் டாகப்
பகுத்தலுஞ் சார மிதயநின் றெல்லா
நாடியுஞ் சமானனாற் பயிலும்
இகத்தருந் துரால்பன் னிரண்டென வெளியாம்
சாரமு மெண்ணுமத் துணைத்தாம். 299

---

297. பூததேகத்தில் நரகர் உற்பவிப்பார். இமையளவு நேரத்திற்கு உள்ளாக என்க. பூதசார தேகத்தில் உதிப்பார். பூதத்தின் திரிபாகிய தேகத்தில் மண்ணுயிர்கள் ஆவன. கருப்பையுள் மானிடம் விலங்காகும்; அரவம் புள்ளாதி அண்டத்திலாகும்.

298. கசிவு - வேர்வை. தருமுதலாகிய பலவும் விதையின்கண்ணே நிலம், புனல், வெயில், காற்றுக்கள் ஆதாரமாகப் பொருந்த எழாநிற்கும். வித்திடத்தெழும். பதினறு அரியன. யவை - கோதுமை. நசிக்கும் - கெடும்; பிரயோசனப்படுங்காலத்திற் கெட்டுப்போம்.

299. உணவும் நீரும் விராவிப் பக்குவப்படுதலும். உணவு மேலும் நீர் கீழுமாக. பிராணன் பகுத்திடும். பின்பு அபானனும், உதராக்கினியும் பகுத்த மாத்திரத்தில். நாடி - நரம்பு. துரால் - கோது. பருவமடைதல் - சீரணமாகுங்காலம். பிராணவாயு. பின்வளி - உதானன் என்பாருமுளர். வெளிப்படும்.

இயக்கமோ ரிரண்டாய் மிடற்றினில் வழுக்காய்
நாசியி னிளங்களிப் புனலாய்
வயக்கமாண் விழியிற் பீளையாய்ச் செவிநா
மணியெயி றுகிர்குதங் குய்யம்
முயக்குறு மழுக்காய் மயிர்த்துளை தோறும்
முகிழ்க்கும்வே ராய்த்துரால் வழங்கும்
உயக்கிளர் சாரந் தனிற்றுவக் கதனில்
உதிரமற் றதினிணத் துடனூன். 300

தசையிடை நரம்பு முரோமமு நரம்பின்
நாடிநா டியிற்றயங் கத்தி
அசைவறு மென்பின் மூளையு நகமும்
மூளையிற் சுக்கில மதனில்
பசையுறு கருவா மிம்முறை சார்ம்
பன்னிரண் டுறுப்பதாய்ப் பயிலும்
விசைகொள்சுக் கிலஞ்செம் புனலின்மிக் குத்தரம்
விரவுறி னுண்மக வாகும். 301

செம்புனல் வெண்ணீர் தனின்மிகிற் பெண்ணும்
செம்புனல் வெண்புன னிகர்ப்பின்
அம்புவி யிழிக்கு மலியுரு வாகும்
அளிப்பவர் குணமகக் கெய்தும்
வம்பிலட் டகத்தோ டுயிர்பிதா னுகரும்
வண்சுவை பற்றியுண் ணுழைந்து
வெம்புவெண் புனற்பட் டன்னைதன் கருவிற்
சட்டக மாய்ப்புவி வீழும். 302

---

300. வழுக்கு - கபம். களி - குழம்பு. வேராய் - வியர்வையாய். சாரத்தில் துவக்கும், துவக்கில் உதிரமும், உதிரத்தில் நிணத்தோடு ஊனும்: உய்யக்கிளர் சாரம்.

301. ஊனில் நரம்பும் உரோமமும், நரம்பில் நாடியும், நாடியில் எலும்பும், எலும்பில் மூளையும் நகமும், மூளையிற் சுக்கிலமும், சுக்கிலத்தில் கருவுமாம். துவக்கு, உதிரம், நிணம், ஊன், நரம்பு, உரோமம், நாடி, எலும்பு, மூளை, நகம், சுக்கிலம், கரு ஆகப் பன்னிரண்டு, நாடி - தலைமையாயுள்ள பெருநரம்பு.

302. அட்டகம் - சூக்குமதேகம். சட்டகமாய் - தூலதேகமாய். பிதாவயிற்றில் இரண்டுமாதம் என்பது மூன்றும் அடியால் விளங்கும்.

உயிர்படு கருவோர் வைகலிற் குன்றி
உறுமைந்திற் புற்புத மொக்கும்
பயிலிள வூனு மேழிலீ ரேழிற்
பரந்துசெம் புனறிர ளூனும்
வயமுறு பீச மையைந்திற் சிறிது
வருஞ்சிரங் களஞ்சிறு புறமே
வியன்முது கென்பென் றுரைத்திடு நான்கும்
விளங்குறு முப்பது நாளில். 303

தாளடி நிதம்பந் தடங்கர மருங்கு
சார்தரு மிருமதி வரையில்
கோளுறு வடிவிற் சந்திகண் மூன்றிற்
கொழுவிர லுன்கிலேம் மதியில்
வாளுகிர் நாசி முகங்குய்யங் கன்னம்
வாலெயிற் றாறெழுங் காறின்
நீளுறு கன்னத் துளையெழு மதியின்
நிகழ்குறி விளங்குறத் தோன்றும். 304

இங்கவோ ரெட்டிற் குதமுந்தி யேனைச்
செறிதரு மங்கமா திகளும்
தங்குறும் பிராணன் முதல்வளி யைந்தும்
ததையுமுந் தியின்வழி யன்னை
நுங்குண விரதம் வயிற்றுறு மின்ப
துன்பமு மறுதியா னுகரும்
அங்கண்முன் னிகழ்ச்சி கனவெனத் தோன்ற
வளாவிய மோகம்விட் டகலும். 305

---

303. பீசம் - ஏனைய அங்கங்களெல்லாம் உண்டாவதற்கு முன்னே உண்டாகும் அடையாளம். விதைக்கொட்டை என்பாரும் உளர். சிறுபுறம் - முதுகு, பிடரி.

304. இருமதியிற்சாரும் மூன்றிற் சந்திகளாகும். சந்தி - மூட்டு. நான்கு மதியில் விரல் உண்டாகும். எயிற்றின் ஊன் வரிசை ஈறுயுள்ளன ஐம்மதியிலாகும். ஆறில் காது உண்டாகும்.

305. வளி ஐந்து - பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன் என்பன. மனவாக்குக் காயங்களால். மனம், சித்தம், புத்தி, அகங்காரங்களால் நுகரும் என்பாரும் உளர். தோன்றுநிற்ப மோகம் விட்டிருக்கும்.

இறப்பொடு பிறப்பிற் பன்முறை யிதுகா
றிடருழந் தனமினிப் பிறந்தாங்
கறப்பெருங் கடவுள் பூசனைப் பேற்றால்
அவற்றினை யறுத்துமென் றெண்ணிச்
சிறப்புற விருக்கு முயிர்கருப் பையும்
செறிவழுக் குதகமு மற்றும்
உறப்பெரி தழிந்து மோகக்கான் மிளிர்ப்ப
உணர்விழந் தரிதின்மண் சாரும். 306

சூக்கும வுடலைப் பற்றியே யெழுந்த
தூலதே கத்தினுண் முன்னர்
ஆக்கிய வறம்பா வங்களின் பயனை
அவ்வினை யெனப்பின்பு பயக்கும்
நீக்கரும் வினைகள் வளாவியா னென்னும்
செருக்கினு னித்தலு மருந்திப்
போக்கொடு வரவிற் படுமுயி ரிறைவன்
பொருவில்பா தம்புகு காறும். 307

மூன்றரைக் கோடி நாடியவ் வளவே
முற்றிய மயிரெயி றெண்ணுன்
கான்றகை யடியி னுகிரிரு பதுவீ
ரியமழாக் குடற்பித்த முழக்கு
மான்றுறு மிடற்றுக் கபமுரி யுடனு
ழுழிவண் ணிணத்தொடி யைந்நான்
கேன்றமே தைக்குத் தொடிகளோ ரைஞ்ஞூ
றீண்டுமூன் றொடியொரு நூறே. 308

---

306. உற - சார. அழிந்து - வருந்தி. கால் - காற்று.

307. காறும்படும். உயிரானது, முற்பிறவியில் தூலவுடல்கொண்டு செய்த நல்வினை தீவினைகளின் பயனை, முன்செய்த அந்நல்வினை தீவினைகள் இப்பிறப்பில் பயக்குமாறுபோலவே இனி, அடுத்த பிறவியில் பயக்கும்படி யான இருவினைகளையும் செய்து அருந்திப்படும் என்க. பயனை அருந்தி என இயைக்க.

308. நாடி - நரம்பு. அடி - பாதம். கபம் நால்நாழியுரி. தொடி - பலம். ஈண்டும் ஊன். காறு - அளவு, ''என்னிலை உணர்த்தி யான்வருங் காறும்'' சிலப்.

இளகுநெய்த் தோரு மிறுகுநெய்த் தோரும்
இயம்புறிற் ருெடியொரு மூன்றும்
வளமலி மூளை பன்னிரு தொடியாம்
மயிர்முத லனைத்தையுந் தொகுத்திட்
டளவிடி லாக்கை யாயிரந் தொடியாம்
அருவருப் புறுமியக் கங்கட்
களவிலை யிந்தப் புலையுடற் பொறையைப்
பொருளென மதிப்புரோ வறிந்தோர். 309

தமனியக் கடமே யாயினும் பவ்வீத்
தங்குறின் விழைஞரும் பற்ருர்
அமிழ்தமே யானுந் துய்ப்புறிற் பவ்வீ
யாக்குமிவ் வுடற்புக ரறிந்தும்
இமிழ்தரப் பற்று மடவருக் குரைத்தும்
என்பயன் நீர்த்தமா டிடினும்
உமிழ்முடை யாக்கை சுசியுரு திறைவன்
உண்மைதேர்ந் துயிர்சுத்தி யுறுமே. 310

முப்பொரு ளியல்பு முள்ளவா றுணர்ந்து
முழுத்தபே ரறிவினுள் விழித்தோர்
இப்புவி யவர்போல் வினைபல குயிற்றி
யிருப்பினும் வினைப்பய னெய்தார்
கைப்பட மனையைப் புதல்வியைத் தழூஉங்காற்
கருத்துவேற் றுமையுங்கை வருடச்
செப்பிள முலையார் மகன்பதிக் களிக்கும்
பயத்தினவேற் றுமையுநேர் தெரிதி. 311

இருவகை யியக்கங் கழிப்புழி யுண்டாம்
இன்பமெவ் வளவைய துணைத்தே
கருவிழிச் செவ்வாய் மகளிரைக் கலந்து
கழிப்புறு மின்பமு மதற்கே
அருவருப் பெவரு மெய்துறும் பவ்வீக்
கடர்ந்தெழும் வன்றிநாய் போலத்
தெருள்கிலா ரெல்லா மிவர்ந்திரு பயனும்
சிதைத்தரும் பழிச்சுமை தரிப்பார். 312

310. விழைஞர் - விருப்பமுள்ளோர். இமிழ்தர - இறுக.
312. இன்பமும் அத்துணைத்தே. அதற்கே இவர்ந்து.

வேறு

உருத்திரன் மன்ற ஞளி னுமையிடுஞ் சாபந் தாங்கி
மருத்ததா மரைப்பூ வாழ்க்கை வானவ னிடும்பை கூர்ந்தான்
திருத்தபு மார்பன் வேற்றுத் தேமொழி மனையை வெஃகிக்
கருத்தழி மம்மர் கூர்ந்து கலங்கனர் பெரிதுந் துய்த்தான். 313

இந்திரன் பிறனில் காமுற் றிழிகுறி முழுதும் பெற்றான்
சந்திரன் குரவ னில்லாட் டழுவிவெந் துயரத் தாழ்ந்தான்
அந்தரத் தவரு மண்மே லவருமிவ் வாறு பட்ட
வெந்துயர்க் களவின் றாக்கை நோய்க்கும்வே றவதி யின்றே. 314

வலாரிதோள் வாத நோயன் வண்மதி கயநோ யாளன்
சுலாவுறும் வெப்பு நோயிற் றொடக்குண்டான் றக்க னென்பான்
உலாவுறு காலி லாத முடவனே யுரங்கொண் மந்தன்
சலோதர நோய்க்கோட் பட்டான் றண்புனற் கரையன் மாதோ.

துளவினன் றலைநோ யாளன் சுடரவன் பழுதார் மெய்யன்
வளமுடி யிழந்தான் போதன் வாணிதன் னாசி தோற்றாள்
அளமர மாரன் வெந்தா னடல்வலிக் காலன் பட்டான்
உளரவிக் களத்தில் யாருந் தக்கனோ டுறுப்புத் தீர்ந்தார். 316

காண்டகு விண்டு கண்டங் கண்டமுற் றவனி வீழ்ந்தான்
மாண்டமுப் புரமோ ரம்பின் மாய்ந்தன காளி சீற
நீண்டதா ருகன்மெய் விட்டா னிகரிலாச் சூர னென்போன்
தூண்டிய நமது வேலாற் றேல்வியி னுடல நீத்தான். 317

---

313. பிரமன் உமையை முன்னொருகால் இச்சித்தான். திரு தபும் - இலக்குமியை மார்பினின்று நீங்கிய. வேற்றுமனை - பிருந்தை.

314. ஆக்கையைப் பற்றிவரும் நோய்க்கும்.

315. கயம் - க்ஷயநோய் (ஒருநோய்). மந்தன் - சனி; இவன் முடவன் என்க. அரையுன் - வருணன். சலோதரம் - நீர் அதிகப்பட்டு வீங்கியிருக்கும் உதரநோய். நீரிழிவு என்பாருமுளர்.

316. பழுது - பல்லிழத்தல் முதலிய பழுது. அவிக்களம் - யாகம் செய்யுமிடம்.

317. காளிசீற மெய்விட்டான் தாருகன். இவன் தாரகன் அல்லன் வேறொருவன். துர்க்கை சீற.

மலரவன் றன்னை மாயோன் வழங்கிடப் பட்டுத் தாழ்வன்
அலரவன் மாயன் றன்னை யளித்திட வவனிற் ருழ்வன்
புலவர்க டாக்கப் பட்டுப் போர்த்திற லவுணர் தாழ்வர்
கலதிவா ளவுணர் தாக்கக் கடவுளர் தாமுந் தாழ்வர். 318

ஒருவன்பால் வெற்றி கொண்டோ ரொருவன்பாற் ருேல்வி [கொள்ளும்
ஒருவன்பாற் சீர்த்தி கொண்டோ ரொருவன்பா லிளிவந் துட்கும்
ஒருவன்பா னட்புக் கொண்டோ ரொருவன்பாற் பகைமை [கொள்ளும்
ஒருவனே நட்பா வுள்ளோன் பகையுமா யுடற்று மன்றே. 319

வினையிலி விழியிற் ருேற்றி விளங்கிய வெம்பின் வந்த
முனைகெழு வீர ரண்ட முழுவதும பொடிக்கு மாற்றல்
வனைகழற் கணமுஞ் சூரன் வன்சமர்ப் பட்ட செல்லல்
தனைநிக ரில்லை யென்ருற் பிறர்துயர் சாற்று மாறென். 320

எற்றைக்கு முறவா யுள்ள திருண்மல மணுகாச் சோதி
எற்றைக்கும் பகையா யுள்ள திருண்மல மதன்றன் சார்பால்
எற்றைக்கும் வினைக ளீட்டி யிருப்பது காய மென்ருல்
எற்றைக்கு மெச்சீர் வாய்ந்த காயமும் பகைமை யன்ருே. 321

ஆதலாற் றேவர் தேவர்க் கருள்புரி தேவ ரேனும்
ஓதுறு முடலுக் கேன்ற ஊழ்வினை யுடலுற் றன்றிப்
போதரா தற்றே லேனைப் புலவரைப் புவியி னேரை
மாதுயர்ப் படுத்துச் சேறல் வல்வினைக் கரிய தன்றே. 322

---

318. பிரமன் பட்டு. கலதி - கேடு. மூதேவி வாழ்கின்ற எனினும் பொருந்தும்.

319. நட்பாக இருந்தவனே பின்பு பகையாக இருந்து உடற்றுவான்.

320. சிவன் விழியினின்றுந் தோன்றிய எனக்குத் தம்பியராகப் பின் வந்த வீரவாகு முதலியோரும், பூதகணமும் பட்ட செல்லலானது தனக் கொப்பின்றியுளது. தன்னை நிகர்தலில்லை.

321. சோதி உறவாய் உள்ளது. இருண்மலம் பகையாயுள்ளது.

322. தேவரேனும், தேவர்க்கு அருள்புரி தேவரேனும் உடலைக் கெடுத்தாலன்றி வினைபோதராதென்க.

கருவினின் மழவிற் கற்குங் காலையிற் பருவ மாறில்
பெருகிய பொழுதி னேயிற் பிரிவினிற் பகையி னீட்டும்
பொருள்வயின் வேட்ட தெய்தாப் புன்மையின் முதுமை தன்னில்
மருவிய திழப்பிற் சாவின் வன்றுயர் மனித்தர்க் குண்டே. 323

விதித்தன வாண்டு நூறு மேவரி தாண்டு சில்ல
கதித்திடு மிளமை தின்னுங் காமநோய் சில்ல தின்னும்
உதிக்கினல் லுணர்வு மேலே யுறுபிணி நாட வொட்டா
மதித்தன ரொழுக லாறும் வழுவிக்கு மூப்பு நண்ணில். 324

இத்திறத் தினர்கண் மாந்த ரேனைய வுயிர்க ளெல்லாம்
தத்தமக் கனந்த கோடிப் பகைவிராய்த் தாக்கப் பட்டும்
பொத்திய பசியிற் பட்டும் பொழுதிரு துடற்றப் பட்டும்
மெத்திய துயரத் தாழ்ந்து விளிவன பல்லாற் றுனும். 325

இருவகைத் தாகு நோயொன் றிடைவிடு மருந்தே யோமம்
உரைமனு வன்ன மாதி யுதவலித் திறனு லொன்று
பிரிவுறு முடலைக் கொண்டே பெருகிய சுற்ற மெல்லாம்
கருவிழி முத்தங் கான்று கவலையுற் றரற்ற மாதோ. 326

மாதரை மைந்தர் தம்மை வளநிதித் திரளை விட்டுப்
போதுமே யென்றென் றேங்கிப் புழுங்கிநெஞ் சழிவ தல்லால்
சாதலை யுறுமஞ் ஞான்றுந் தருமமொன் றுற்று ரெந்தை
பாததா மரையை முன்னூர் வறியராய்ப் பதித ராவார். 327

---

323. ஆறு பருவப்பொழுதினும். பெருகிய பொழுது - பெரும் பொழுது. சாவினும். பருவமாறுள் பெருகியபொழுது - கார் முதலிய பெரும்பொழுது.

324. நூறும் மேவரிதாகும். ஆண்டு சில்லவற்றை இளமைதின்னும். சில்லவற்றைக் காமநோய் தின்னும். நல்லுணர்வு உதித்தால் பிணி, மேலே நாடவொட்டாவாம். மூப்பு நண்ணினுல் ஒழுகலாற்றை வழுவிக்கும்.

325. மாந்தர் இத்திறத்தினர்கள் ஆவார். எலிக்குப் பூனையும், யானைக்குச் சிங்கமும், பசுவுக்குப் புலியும் பகையாதலால் தாக்கப்பட்டும் என்றூர். தாமரைமலர் பனிக்காலத்தில் வாடி அழிதலால் இருது உடற்றப் பட்டும் என்றூர்.

326. நோய் இருவகைத்தாகும். ஒன்று திறனுல்விடும். உதவலாகிய இத்திறனுல், ஒன்று அரற்றக்கொண்டு பிரிவுறும்.

327. குலம், சமயம் முதலிய ஒழுக்கத்தில் தவறினேர்கள்.

தருக்குறுஞ் செல்வ மெய்திற் றருக்கினுற் பிழைக ளெல்லாம்
பெருக்குநல் கூ.ரி னந்தோ பிறருழை யிரந்து சேறல்
மரித்தலிற் றுயர மீண்டும் வந்தவர்க் கிரக்க மற்றுக்
கரத்தன்மற் றதனி னுரங்குக் கடுந்துய ரறிவி லார்க்கே. 328

மன்னிய செல்வ ராகி வாழினும் வளமிக் கீண்டித்
தன்னின்மேம் பட்டார்க் கண்டு தழைத்தவர் போறல் வேட்டுப்
பின்னரு மீட்டி யீட்டிப் பேதுற லன்றிப் பெற்ற
நன்னிதி கொண்டு நீதி நடத்துதே லேவர் வல்லார். 329

மனைக்குரி மனையா டன்னை வாய்த்தநன் மைந்தர் தம்மைக்
கனைத்தலை சுருட்டும் வேலைக் கடனிகர் செல்வந் தன்னை
எனைத்தையு மிலம்பா டென்றே யிம்மெனத் துறந்து பெம்மான்
தனைச்சர ணடைந்து ளாரே தனைநிக ரில்லாச் செல்வர். 330

எந்தையை விழைந்த பத்த ரிருதிறத் தோர்க ளாவர்
முந்துநூல் வழியான்மும்மைப் பொருளுணர்ந்திறைவன் பாங்கர்ச்
சிந்தையை யொருக்கி நின்றோ ரொருவர்மற் றொருவர் தேரா
தந்தில்வந் துதித்த வாறே யறிவுமிக் கன்பு செய்வோர். 331

பொருந்திய வேக தேச வுடலினைப் பொதியுந் தோறும்
வருந்தியங் கறிவு மேக தேசமாய் வசித்துக் காணும்
இருந்திட வேக தேச வுடலெழுந் தொன்றிக் காணில்
திருந்திய வறிவு மெங்குஞ் செறிந்தபூ ரணத்தி னுமே. 332

---

328. செல்வம் எய்தினுல் தருக்குறும். தருக்கினுல், அத்தருக்குத் தரித்திரம் முதலிய பிழைகள் எல்லாவற்றையும் பெருக்கும். நல்கூர்ந்தால் இரந்து செல்லுதல் இறத்தலினும் மிகத்துன்பமாம். கொடுப்போர் இரக்க மின்றி இல்லையென மறைத்தால் இரந்து செல்லுதலினும் அதிகத் துன்பமாம். பெருகும் என்பது எதுகைநோக்கி மிக்கதென்பாரும் உளர்.

329. கண்டு தழைத்து வேட்டு.

330. கனைத்து அலை.

331. தேராது - நூல் வழியால் மும்மைப் பொருளுணராது. பிறந்த அப்பொழுதே.

332. உயிரானது எங்கும் வியாபகமாயிருந்து அறியாது. உடலில் மாத்திரம் வியாபகமாயிருந்தறிதலின் 'ஏகதேசவுடல்' என்றார். ஏகதேச உடல் இருந்திட அதை நீங்கிப் பதியோடு ஒன்றுபட்டுக் கண்டால்.

வே

அறம்பா வங்கள் பெரிதாற்றி யலங்குந் துறக்க மளறெய்தித்
திறம்பாவின்பம் பெருந்துன்பந் திளைத்தோர்க்கங்கட்பயவாமைப்
புறம்பாய் நின்ற வினையெச்சம் புணரி வயல்கான் மலைவளங்கள்
பறம்பா நின்ற மண்ணுலகிற் பற்றுந் திறமும் பகர்வாமால். 333

துறக்க மாண்ட வறவோர்க டுய்ப்பங் கறலு மண்ணுலகில்
பிறக்க மாண்ட மறையோராய்ப் பிறந்து வளங்க ளினிதீண்டச்
சிறக்கு மொழுக்கந் தலைநின்று தேவர் பிரானை வழிபட்டாங்
குறக்கம்விழிப்பென் றிரண்டற்ற வோவாவின்பத்துறைபடிவார்.

அள்ள லழுந்தும் பாதகத்தோ ரருந்த லவணற் றிடவொழிந்து
பள்ள விரிநீர்க் கடலுலகிற் பயிலுந் தருவா திகளாகி
மெள்ள வுயர்ந்து மானிடத்தின் மேவுங் காலுங் குணமுறுப்பு
நள்ளும் வெறுக்கை யிவையின்றி நவையே யுழப்பர் மாதவனே.

பரனைக் குருவை யவமதித்தோர் பவ்வீக் கிருமி யுருக்கொள்வர்
ஒருவற் கரிய முயலகநோ யுழப்ப ரவரை யிழித்துரைத்தோர்
குரவன் பணியை யன்பின்றிக் குயின்றோர் மந்த ராய்த்தளர்வர்
குரவன் பணிசெய் குநர்க்கலைப்போர் கோம்பி யுருவாய்ப் பகைக்
[கழிவார். 336

வேறு

சினந்தகுர வற்சினந்தோன் சிரநோயன்
அந்தணனைச் செகுத்த பாவி
இனைந்தழியுங் கயநோய னரியலார்ந்
தவன்பழுதா ரெயிற்றன் குந்தி

---

333. எஞ்சிய வினையைப் பற்றும் திறத்தையும். வளங்களெல்லாம் மலையாக மிகுந்து நின்ற மண்: பரம்பாநின்ற எனினும் அமையும். பறம்பு - மலை. நானில வளங்கள்.

335. மானிடத்தில் மேவினும் நற்குணமும் பின்னமில்லாத உறுப்பும் செல்வமுமின்றி. உறுப்பு - முடமுதலிய இல்லாத நல்லுறுப்பு.

336. நீங்கற்கரிய. அவரை என்றது பரனைக்குருவை. மந்தபுத்தி யுடையராய். ஏவல்செய்வோரைக் கலைப்போர். கோம்பி - பச்சோந்தி. பவ்வீயிலுள்ள புழு.

தனங்களவிற் கவர்ந்தவஞ ரியன்மனேயைத்
தழுவினேன் குட்ட நோயன்
மனங்களிப்பத் தெய்வதிர வியங்கவர்ந்தோன்
நச்சரவ வடிவ ஞவன். 337

மாயனேயெள் ளினன்கோம்பி யறமறந்தான்
பூத்தமட மாதொ டார்வம்
நேயமொடு முரைபகர்ந்தா ஞய்புலேயன்
உருக்கொள்வர் நேர்ந்த செம்பொன்
தூயவர்க்குக் கொடானீகை பகர்ந்துதவான்
வலேயனிவர் சூலின் மாய்வர்
மேயவிள மையின் மாய்வர் காளேயிற்பல்
விழைவுடற்ற விளிந்து போவர். 338

பொழிறடிந்தோர் தடந்தூர்த்தோர் புலாஞுகர்ந்தோர்
உறுப்பழுகும் புரைநோ யாளர்
கழிசிறப்பி னேவகையா கத்தொன்றும்
உளுற்றுர்கற் புடையா ளுள்ளம்
அழியவரை வின்மகளிர்ப் புணர்வாரும்
தெய்வமெனு மன்பி லில்லேத்
தழியினருங் கேழலொரு குடிப்பிறந்தாட்
டழீஇயினர்புண் டலேநா யென்ப. 339

தருமம்வரல் கருதாது பொருண்மதித்துப்
பிறரறச்சா லேகள்காப் போரும்
திரிதருமிம் மைப்பயனே மதித்திறையா
லயப்பூசை செய்வித் தோரும்

---

337. கவர்ந்தவன் குந்தியாவான்: குந்திக்குந்தி நடக்கும் குந்தி காலன். நச்சரவம்.

338. முதலிரண்டடிகளினும், கடையிரண்டடிகளினும் நிரல்நிறைப் பொருள்கோள் வந்தமை காண்க. தருவேன் என முன் சொல்லிப் பின் தாராதவனும். வலேயன் - உயிர்களேக் கொல்லும்பொருட்டு வலே வைத்திருப்பவனும். நாய் புலேயன்.

339. கற்புடைமனேவி உளம் வருந்தும்படி வரைவின்மகளிரைப் புணர்வோனும். நாயகரைத் தெய்வமென்றெண்ணும் அன்பு இல்லாத இல்லாளேத் தழுவினரும். கேழல் - பன்றி: ஒப்பில்லாத என்பாரும் உளர். தங்கோத்திரமும் பெண்ணின் கோத்திரமும் ஒன்ருயிருப்ப, அவ்வொரு கோத்திரத்துப் பிறந்தாளேத் தழுவினவர் என்க.

பருவருநா யொடும்புலைய வுடலெடுப்பர்
தமக்கன்றிப் பரர்க்கு நல்கும்
குருபரனை யிழித்தோரும் பங்குகுரு
டாவர்செவி டாவர் கேட்டோர். 340

ஆரியனை யெளியனென வெண்ணினவன்
அற்றவிழிக் கிருமி யாவன்
சேருநர வுருவினிற்புண் ணுறுகுறியும்
உளனெண்மை செப்பி னோன்கை
தீருமுறுப் பிலியாவன் சிவனேவற்
றேவர்களைப் பூசை செய்யான்
வாரமறு மலியாவ னொக்கறழான்
வறங்கூர்ந்து கண்ணோ யாள்வன். 341

அருந்தவரைத் தானுண்ட பின்னூட்டி
னோனெஞ்சி னடர்வெங் நோயன்
விருந்தினரைப் புறந்தரான் கபோலத்தின்
வெய்துயிர்க்கு நோய னுண்டி
கரந்துநுகர்ந் தானுதரக் கனன்மந்தன்
நடுப்பிழைத்துக் கரந்தான் வாயின்
அரந்தைபடு புண்ணுடையன் கற்புடையாள்
தனைவெறுத்தா னரலைக் கண்டன். 342

நோயலைப்பத் தனையடைந்த பெரியோரைப்
புறந்தரா னெய்மைச் சுற்றம்
தாயுயிர்த்தான் குடிவருதொன் மையரிவரைத்
தாங்காதான் றசையூன் கோடற்
காயபெருஞ் சூழ்ச்சியினான் கள்வனவன்
தனக்கியைந்தா னனைவர் தாமும்
மேயவிழி நோயினரா யடித்துணையில்
விண்ணெனும்புண் ணுடைய ராவர். 343

---

340. பக்குவமில்லாத தமக்கின்றிப் பக்குவமுடைய பிறருக்கு உபதே சிக்கின்ற குருவைத் தமக்கு உபதேசித்திலன் என்று இழித்தோரும்; இழித் துச் சொல்லக் கேட்டோரும்.

341. குருட்டுப் புழு. ஆரியனை எளியன் என நினைத்தோனுக்கும், பிறரறிய அவ்வாரியனை எளிமையாகச் சொன்னோனுக்கும் பேதமுண்டு என்க. அலியாவன். ஒக்கலைத் தழுவாதவன் ஆள்வன்.

342. உதரக்கனல் மந்தமாயுள்ளவனாவான். அரலை - கழலைக்கட்டி.

தீம்புனற்பந் தரைச்சிதைத்தா னுதரநீர்க்
கோவையனுன் செகுத்தான் றேற்றம்
ஆம்பொழுதே விழியிலா னுன்வருத்தி
னுன்கோண னுசி யாவன்
ஓம்பலுறு மூனுதி யூணுகர்ந்தான்
உறுகண்ட மாலி யாவன்
தேம்புகலாம் விளைத்திடுவா னழுகல்வா
யினன்புலையன் சினமீக் கொண்டான். 344

வேறு

வெள்ளி பட்டிவை கள்ளினேன்
குட்டநோய் விரவினன் சாந்தாற்றி
கொள்ளு மேழைவா மனன்பெரு
மஞ்சிகன் கோளன்றா சினைவிற்போன்
எள்ளும் வேட்டுவ னீயஞ்சா
மரைமுதல் விலைசெய்தா னிருங்கானம்
நள்ளு மாசுணங் கூலிநல்
காதவன் பிறர்பணி நயப்போனும். 345

வேறு

கற்புளார் செயலை யிழித்தவன் காக்கைக்
கண்ணன்வா னவர்சிவ யோகர்க்
கற்பிலார் கோடும் வாயின ரீவார்க்
கரும்பழு துரைப்பவர் புழுக்கள்
பற்படு நோயர் சமயமாய்த் தவர்பா
தகர்த்தெறுங் கொலைவிலக் கினர்கள்
பொற்பறக் கோடும் வழக்குரைத் தோரும்
பொருஞ்சல வாதரா யிழிவார். 346

---

344. உதர நீர்க்கோவையன் - சலோதரநோயன். ஓம்பல் - ஒழிதல். நீர்க்கோவை நீரிழிவு என்பாரும் உளர்.

345. விரவினன் ஆவான். வாமனம் - குள்ளம். வாமனன் ஆவன். கோட்சொல்லுவோன் மஞ்சிகன் ஆவன். மஞ்சிகன் - நாவிதன். வேட்டு வன் ஆவன். மாசுணம் ஆவன்.

346. அன்பிலார். பாதகரைக் கொல்லும் கொலையை விலக்கின வரும். சலவாதம் - நீரிழிவு.

எளியரை வதைத்தான் கால்கர மில்லான்
எனைத்துமுட் கரவிலா வடியார்
உளைதர வொறுத்தான் கால்கரந் தளர
வுடலுறு குட்டநோ யாளன்
அளியுறு மனையோ டலதுசூ தாதி
யயன்மட மாதர்வே சையரில்
களிதர முயன்ருன் மெய்ம்மயி ரில்லான்
கழிமிடி யுற்றிரந் தழிவான். 347

கொண்டநோன் பிழந்தா னுறையுளை யிழப்பான்
குறுகினோர் மாலையம் பொழுது
விண்டிட விடநல் கான்மனை யவளை
விடுத்துள மழுங்குவன் பெரியோர்க்
கண்டெழுந் தெதிரான் பொருளினை யிழப்பன்
இருமுது குரவர்பாற் கருத்துள்
மண்டுமன் பில்லான் வறியனு யொன்றும்
வந்துகை கூடிடா தலைவன். 348

வேதநுண் பொருளை யிழித்தவன் வேடன்
வேதநூ லிழந்தவன் புலையன்
வேதமெய் யினரை யிழித்தவன் மந்தன்
வேதியர் பொருள்கொண்டோன் விட்டில்
வேதநல் வழிவிட் டிச்சையா றெல்லாம்
விளைத்தவ னுருவினு மனத்தும்
வேதனை யென்றுந் தணப்புருன் முழுதும்
விதப்புறி னும்பர்நா ளுலக்கும். 349

பற்பல வதிபா தகமிழைத் தோர்பவ்
வீப்புழுப் பற்பல்கா லாவர்
பற்பல மாபா தகம்புரிந் தோர்கள்
பற்பல்காற் பன்றிமெய் யெடுப்பார்

---

347. சூதாடல் முதலானவற்றை மனைவியோடன்றி, வேற்றுமாத ரிடத்தும் வேசியரிடத்தும் செய்து முயன்றவன் மெய்யில் மயிரில்லாதவனு யழிவன்.

348. வந்தோர்க்கு இராப்பொழுது நீங்க இடங்கொடாதவன்.

349. விட்டிற்பூச்சியாவன். வடிவினும், மனத்தினும் துன்பம் நீங்கான்.

பற்பல மாபா தகக்கினங் குயின்றோர்
பற்பல்கா லுயுட றரிப்பார்
பற்பல வுபபா தகம்விளைத் தோர்கள்
பற்பல்கா லிழிஞரா யுதிப்பார். 350

ஓங்குபா தகமூன் றவற்றின மூன்றென்
றுரைத்தமூ விருதிறத் தொன்று
தாங்குமுன் னுடலிற் புரிந்தவ னதுவே
சார்ந்தமற் றுடலினும் புரிவான்
தீங்கிது கழுவாய் நூன்முறை யாற்றில்
தீருந்தீ ராதுளுற் றுனேல்
வீங்கிய செல்ல னரகுழந் துரைத்த
வீறிலாப் பவமெடுத் துழல்வான். 351

புண்ணியம் பாவ மிதுவிது வென்றும்
புரிந்தவர்க் கிப்பய னென்றும்
வண்மையி னிதுகா றும்பகுத் துரைத்தாம்
வார்சடைக் கடவுள்பூ சனையால்
நண்ணிய ஞானத் திரண்டையு மறுத்து
நரகுமண் டுறக்கமூ விடத்தும்
அண்முறு தைந்து மலங்களுந் துமிய
அமர்சிவ யோகமற் றருள்வாம். 352

மேவரு ஞான மிரண்டவற் றென்று
விமலனர் பாததா மரையே
ஓவ று மன்பி னுணர்திரு வளிக்கும்
ஒப்பிலா வுயர்கலை ஞானம்

---

350. பற்பல்கால் ஆவர் - பலதரமாவர்.

351. மாபாதகமும், மாபாதகத்துக்கு இனமாயுள்ளதும்; அதிபாதகமும் அதிபாதகத்துக்கு இனமாயுள்ளதும், உபபாதகமும் உபபாதகத்துக்கு இனமாயுள்ளதும் ஆகிய ஆறுதிறத்தினுள் ஒன்றை முற்பிறவியிற் செய்தவனே வருபிறவியினும் செய்வான் என்க. ''தவமுந் தவமுடையார்க்காகும்'' என்பது இதற்கும் ஒக்கும். கழுவாய் செய்யின் இப்பாதகமாகிய தீங்கு நீங்கும்; செய்யானேல் தீராதுழல்வான். வீறு இலா.

352. ஞானத்தினுல் நல்வினை தீவினைகளையொழித்து, உருது, துமிய, அமரும் சிவயோகம்.

தாவரும் பவத்தை வேரொடுங் களையும்
தக்கமெய்ஞ் ஞானமொன் றிவற்றால்
சாவதும் பிறப்புந் தணப்புறச் சிவத்தைச்
சார்ந்தது வாய்நிற்றல் யோகம். 353

இரண்டறப் பண்டே கலந்திடு மனாதி
முத்தனா லிருண்மல மாயை
திரண்டவன் கருமந் தீர்தர வவனைத்
தெரிசித்துத் தன்னையுங் கண்டு
முரண்டகு முலகிற் றுயின்றுல குறங்கு
முழுத்தவப் பொருள்வயின் விழித்தோன்
அரண்டக வாண்ட வமலனே ஞேய
மாகிய வருஞ்சிவ யோகி. 354

காட்சியே கருத லுரையள வையினாற்
காணுறு மெவ்வகைப் பொருளும்
மாட்சியி னையந் திரிபறத் தெரித்து
மயங்குயிர்க் கறிவினை யாக்கும்
ஆட்சியி னமைந்தோ னனாதியே முத்தன்
அரும்பொருள் விளக்குமவ் வுரையும்
மீட்சியில் கருணை யுடையவவ் வாத்தன்
விதித்தருள் வேதமா கமமே. 355

பரமதக் கடலுட் டுளைகுநர் தாமும்
பைப்பய வுயர்ந்துமே லில்லா
வரமலி சைவ மருவுவ ரிதன்கண்
மரபினா லறமுத லாற்றி

354. அனாதிமுத்தனால் கலந்திடும் இருண்மலமும், மாயாமலமும், கன்மமலமும் தீரத்தெரிசித்து கண்டு துயின்று விழித்தோனே சிவயோகி யாவான். உலகில் துயின்று எனவே, பிரபஞ்சம் தெரியாதிருந்தென்பது. முழுத்த பொருள் என்றது கடவுளை. உலகுறங்கும் பொருள் - உலகம் நித்திரை செய்யும்படியாயுள்ள பொருள்; எனவே உலகத்தாற் பற்றப் படாத பொருள் என்பது. அரண் தக. ஞேயம் - காணப்படுபொருள்.

355. காட்சியளவு - காட்சிப்பிரமாணம். கருதல் அளவு - அனுமானப் பிரமாணம். உரையளவு - ஆகமப்பிரமாணம். ஆக்கும் ஆட்சி யாற் குருவாயமைந்தவன் யாவனெனின், அநாதிமுத்தன் ஆகிய சிவன் என்க. அக்காட்சி முதலிய மூன்றனுள் ஒன்றாகிய உரையும் வேதாகமங் கள் என்க. ஆப்தன்.

விரவுவ ரிறைவன் பாததா மரையை
மேவருஞ் சைவமே சார்ந்தும்
உரமறு புறநா லொழுகுந ரமிழ்தம்
ஒரீஇவிடம் பருகுநர் புரைவார். 356

பரிதியின் மதியின் வேறுபல் பொருளிற்
பயின்றிருள் பாற்றியொள் ளொளியைத்
தருவதோ ரழலே யதுவென வயனு
தியருளைத் தவிர்ந்துதன் றொழிலைப்
பொருவரு ரிறையே புரியுமீ துணரார்
புகர்படு மொரோவொரு நூல்கொண்
டொருபர மயனே மாயனே மற்றை
உம்பரை யுயிரினைக் கிளப்பார். 357

விரவிய மாயா வுருவினைக் கடந்து
விளங்குமா யாவுரு வுடையோன்
பரசிவன் மாயா வுருவினை யுடையோர்
பரமல ருயிரெனப் படுவார்
புரவியன் மாயா வுருவுரு தொழியிற்
போக்குயிர்க் கறிவுற லின்றும்
வரமரு ளரனுன் மற்றிரு வர்களும்
வயங்குமுத் தொழிலினைப் படுவார். 358

அனாதியே யமலன் சச்சிதா னந்தன்
அரன்பதி யனாதியே மலத்தில்
தனாதியன் மறைய விரவிய தான்மாச்
சாற்றிய மலத்தொடு மாயை

---

356. தாமும், தனக்கு உயர்வில்லாச் சைவத்தில் மருவி ஆற்றித் தாமரையை விரவுவர். மேல் - உயர்வு. அது சைவத்தை விசேடித்தது.

357. ஓர் அக்கினியேயாகும். அது என - அவ்வக்கினியைப்போல. தவிர்ந்து - தங்கி. இறை தவிர்ந்து புரிவார்.

358. மாயாத உருவுடையோனே பரசிவன் ஆவான். ஏனைய மாயா என்பன மாயை எனப் பொருள்படும். அறிவுறல் - பொருளையறிதல். இருவராகிய பிரமவிஷ்ணுக்களும் சிவன் தங்களைச் சிருட்டிக்கவும், திதிக்கவும், சங்கரிக்கவும் படுவர். புரவு - காத்தல்.

மனுதிகின் றுயிர்க்குங் கருமமு மனுதி
மாயையுங் கருமமு மானுல்
பினுதியிற் பந்தம் பந்தமோ ரிரண்டும்
பேர்க்குவன் பதியெனப் படுவான். 359

செம்புதன் களிம்பு பாற்றறி யாது
களிம்புதான் றீர்வது மில்லை
பைம்பொனுக் குவதோர் மருந்துமம் மருந்தின்
பாங்கறி புலவனு முளரால்
வெம்பிய மலத்தை யுயிர்விட வறியா
விடுவது மலந்தனக் கில்லை
நம்பிய மாயை யுருவினைக் கொடுத்தே
நாயகன் புகர்மலங் கழிக்கும். 360

விளக்கது தானே தோன்றுத லில்லை
விழிவிளக் காக்குமா றறியா
துளக்கிரு ளிரிய விளக்கினை யொருவன்
தோற்றியங் களித்தென வாக்கை
அளக்கரும் பரம னளித்தலும் விளக்கின்
அலர்விழி பொருளினுற் றுங்குக்
களக்குறும் வினையிற் கதித்துட லீட்டிக்
கறங்கெனச் சுழல்வன வுயிரே. 361

---

359. அமலனும், சச்சிதானந்தனும், அரனுமாகிய பதியானது அநாதியேயுள்ளது. ஆணவமலத்தில் தன்னுடைய இயல் மறையும்படியாய் விரவிய ஆன்மாவும் அநாதியேயுள்ளது. ஆணவமலத்தொடு மாயா, கன்ம மலங்களும் அநாதியே உள்ளன. அவற்றுள்ளும் ஆணவமலத்தை நீக்கும்பொருட்டு இடையில் வரற்பாலன ஆகலான், மாயாமலமும் கன்ம மலமும் ஆகிய இரண்டும் பின்பு ஆதியிற் பந்தமாம். எனவே, ஆணவ மலம் அநாதியாயுள்ளதென்பது. பந்தமோரிரண்டு - மாயா, கன்ம மலங்கள். மனம் முதலிய கரணங்களையுண்டாக்குகின்ற கன்மமலமும் என்க. மாயையும், கன்மமும் ஒருபுடை ஆதிபந்தமாகவும் ஒருபுடை அநாதி பந்தமாகவும் இருக்கும் என்க.

360. பாற்ற அறியாது.

361. பொருளையறிதற்கு ஆக்கை இடமாயிருத்தலான் ஆக்கையை விளக்காகக் கொள்க. விளக்கினுல் விழியானது பொருளையறியலுற்று வினையால் உடலை ஈட்டிச் சுழல்வன. களக்குறும்வினை. களக்கு - கள்ளத் திற்கு என்பாரும் உளர்.

வேறு

உடலினைக் கரணந் தன்னைப் பொறியினை யுயிரென் பாரவ்
உடல்பொறி கரண மெல்லா முடைப்பொரு ளுயிரென் றோரார்
சடமுடல் கரண மாவி சார்ந்தலா லியங்கா வற்றே
மடனுயிர் தானும் வள்ள றனையன்றி யியக்க மின்றே. 362

தெருளுயி ரணுவே யென்பர் தேகத்தி னுருபா லென்பர்
உருவினின் முழுது மென்ப ரோங்குபூ ரணமே யென்பர்
பெருமுறை யுடனமுற் றோர்ந்து பின்னத்திற் பின்ன மின்றிப்
பொருடொறுமபற்றி நீங்குந் தன்மையிற் புலன்கொ ளாதார்.

நிறைசிவத் தடக்கஞ் சத்தி நிருமலிக் கடக்க மான்மா
மறைமல மவற்ற டக்க மன்னிய வவற்றின் சத்தி
அறையுயிர்ச் சத்தி தன்பா லடக்கமே மாயை மாயை
பொறையுயிர் காரி யங்க ளதனிடை யடக்கம் பூணும். 364

வியாபக வியாத்தி யான்மா வினின்விளங் கமலன் சத்தி
வியாப்பிய வியாத்தி யான்ம சத்தியின விரவு மாயை
வியாபக வியாப்பி யங்க ளின்றியே சமத்தின் மேவும்
வியாத்தியே யுயிரு மொன்றாய் விரவிருண் மலமு மாதோ. 365

---

362. எல்லாவற்றையுமுடைய பொருள் உயிராகும் என்று ஓரார் என்க. உடல் சடம். அவ்வுடல் கரணமும் ஆவியும் சார்ந்தல்லாமல் இயங்காவாம். பதியை நோக்குங்காலத்து நித்தியமாகிய உயிரும் அப் பதியாலியங்குதலின் சடமாகும் அத்தன்மைத்து என்க. சடம் - பொய்.

363. முழைபொருந்திய உடலின் இயல் முற்றையும் ஓர்ந்து புலன் கொளாதார் உயிரானது, தான் உடலோடு வேறாகும் என்பதில் வேறில் லாமல் பொருள்கடோறும் உள்ளிருந்து பின் நீங்கும் என்க. வேறாகும் என்பதில் வேறின்றி எனவே, அபேதமாய் உடலோடு இருந்தென்பது. பொருள் உடல் முதலியன. அத்தன்மையில் அறிவைக் கொள்ளாதவர் எனவே, அத்தன்மையை அறியாதவர் என்பது. பற்றி நீங்கல் என்பது உயிரின் வினை. இன்றி என்பதும் அதன் வினை.

364. சத்தி சிவத்திலடக்கம். ஆன்மா சத்தியிலடக்கம். மலமாகிய வைகளின் சத்தி அம்மலமவற்றிலடக்கம். மாயை உயிர்ச்சத்தியிலடக்கம். மாயையின் காரியங்கள் மாயையிலடக்கம்.

365. வியாபகம் - மேற்பட்டுக் கலந்திருத்தல். வியாப்பியம் - கீழ்ப் பட்டு அடங்கிக் கலந்திருத்தல். வியாத்தி - சம்பந்தம். ஆன்மாவின் கண் சிவசத்தி வியாபக வியாத்தியாயுள்ளது. எனவே, சிவசத்தி ஆன்மா வைத் தன்வசத்தடக்கி மேற்பட்டிருக்கும் என்பது. மாயையானது

வியாபக மலமான் மாவுக் கென்றிடின் வீடு சேரா
வியாப்பிய மலமான் மாவுக் கென்றிடின் விரவா பந்தம்
வியாபக வியாப்பி யங்க ளின்றியே சமத்தின் மேவு
வியாத்தியே நீக்க நீங்கி விமலனி லடங்கு மாற்றல். 366

நீக்கற விராவி நின்ற நிமலனு ளிருக்குங் காலும்
தாக்கிய மலமெவ் வாறு தணக்குமென் றையங் கொள்ளல்
பூக்களு றருவி னீரம் புலர்பரு வத்துண் மேய
தீக்கடை பவனு லோங்கிச் செறிந்தெலாந் தானே யாகும். 367

கதிரவ னெழுத லோடுங் களுலிரு ளென்ன மாயும்
முதிர்மலம விளக்கி னுக்கை முகந்ததன் வினைபோங் காறும்
வதியும்வாள் விழியி னுவி வாங்கிய வருளி னின்றும்
பதிவயிற் பண்டே நின்ற பான்மையி னுணர்ந்தே நிற்கும். 368

ஆன்ம சத்தியின்கண் வியாப்பிய வியாத்தியாயுள்ளது. எனவே, மாயையானது ஆன்மசத்தியின் வசத்தாய்க் கீழ்ப்பட்டு அடங்கியிருக்கும் என்பது. இனி, ஆன்மாவுக்கு மேற்பட்டிருக்கின்ற சிவசத்தியின்கண்ணே மாயையானது வியாப்பிய வியாத்தியாயுள்ளது. எனவே, மாயையானது சிவசத்தியின் வசத்தாய்க் கீழ்ப்பட்டு அடங்கியிருக்கும் என்பது என்றலும் ஒன்று. உயிரும் அதனோடு விராய ஆணவமலமும் வியாபக வியாப்பியங்களில்லாமல் சமமாகின்ற வியாத்தியாகும். வியாத்தி - விட்டு நீங்காதிருக்கும் சம்பந்தம். வியாபகம் - அதிக தேசவிருத்தி. வியாப்பியம் - நூனதேசவிருத்தி; இது தர்க்காமிர்தத்திலுள்ளது. வியாத்தி - உடனிகழ்ச்சி. தீ வியாப்பியம், அதில் புகை வியாபகம். வியாத்தி - வியாபக வியாப்பியங்களின் குணம் எனப்படுகிற அவ்விரண்டும் உடன் நிகழும் சம்பந்தம். ஒன்று வியாபகம்செய்தற்கு இடமாயுள்ளது வியாப்பியம்.

366. மலமானது ஆன்மாவுக்கு வியாபகமாயுள்ளது என்றால் முத்தியை அடையாவாம். அம்மலமானது ஆன்மாவுக்கு வியாப்பியமாயுள்ளதென்றால் பந்தம் விரவாவாம். பின்னையென்னை எனில், மலமானது தன்னைப் பதி நீக்கத் தான் நீங்கி அப்பதியிலேயே அடங்கும் விதத்தால் வியாபக வியாப்பியங்களில்லாமல் சமமாயிருக்கிற வியாத்தியேயாகும்.

367. நிமலன் உள்ளிருக்கும் காலத்திலும் வருத்திய மலம் என்க. தீயானது ஓங்கிச் செறிந்து ஆகும். ஈரத்தை மலமாகவும், ஆசாரியனைக் கடைபவனுகவும், தீயைப் பதியாகவும் கொள்க.

368. 'கதிரவன் எழுதலோடும்' என்பதை விளக்கின் என்பதனோடும், விழியின் என்பதனோடும் ஒட்டுக. சூரியன் எழுந்தமாத்திரத்தில் உள்ள இருளைப்போல, முதிர்மலமானது மாயும். சூரியன் எழுந்தமாத்திரத்தில் விளக்கானது ஒளியிழந்திருக்குமாறு போல ஆக்கையானது இருவினை நீங்கும் வரையும் வதியும். இரவு நீங்கினமாத்திரத்தில் ஒளியிழந்த விளக்கைப்போல வினை நீங்கினமாத்திரத்தில் ஆக்கை நீங்கும் என்க. சூரியன் எழுந்தமாத்திரத்தில் விழியானது பொருளை அறியுமாறுபோலப் பதிவயின்

நுண்ணியன் சத்திக் கண்ண னுண்ணிய னுயிர்க்குச் சத்தி
நுண்ணிய துயிர்தன் சத்திக் கதுவு நுண் ணியது நோய்க்குத்
திண்ணிய விந்த நோயைத் தீர்மருந் துடலே தீர்ப்பான்
அண்ணலே யவனே யாள னலன்மருத் துவன்வே றில்லை. 369

உருத்திரன் சத்து வத்தி னிராசதத் துவண வூர்தி
உருத்தமோ குணத்தின் வேதன் றனையுயிர்த் துவரா லாக்கி
இருத்திமாய்த் தவரோ டெல்லா மிறுக்குமவ் விறையை யுந்தக்
கருத்தரு ளொருவ னாகக் கருதுறிற் கழுவா யின்றே. 370

பருவமிக் குடையோ ரெல்லாம பண்டைவல் வினையி னோடும்
இருண்மல மாதி மூன்று மிரிதர வீண்டே முத்தி
மருவுவர் பருவத் தாழ்வான் மலரடி கலக்க மாட்டா
தொருவிலன் புளுற்றி னோர்க ளூர்த்துவ புவன நண்ணி. 371

அளப்பரும் போகந் துய்த்திட் டகிலமு மொடுங்கும் போது
வளப்படு மிறைவன் பாத மருவுவர் சில்லோர் சில்லோர்
திளைப்புறு திதியா தாரஞ் சேர்ந்துவீ டுறுவர் சேர்ந்த
தளைப்புறு திதிவீழ் காலைச் சிவத்தினைச் சார்வர் சில்லோர். 372

நிற்கும் என்க. ஆவியானது நின்றும் உணர்ந்துநிற்கும். கதிரவன் எழுத லோடும் என்பதைப் பின்னுள்ளவற்றோடும் ஒட்டாது, எண்ணெய் உள்ள வரை எரியும் விளக்கைப்போல ஆக்கையானது வினை போங்காறும் வதியும் எனவும், சூரியனும் கண்ணும்போல எனவும் பொருள் கூறுவாரும் உளர். இப்பொருட்கு வாள் சூரியன்; பதி சிவன். வாங்கிய - சூழ்ந்த.

369. நுண்ணியதாயடங்கியிருப்பன். உயிரானது தன் சக்திக்கு நுண்ணியது. அவ்வுயிரானது நோய்க்கும் நுண்ணியது. தீர்க்கும் மருந்து உடலேயாம். நோய் என்றது மலநோயை. அதுவும் உயிர்ச்சத்தியும் என்றலும் ஒன்று.

370. இருத்தி - திதித்து.

371. உடையோரெல்லாம் மருவுவர் என முடிக்க. பருவத்தாழ்வினாலே மாட்டாது. நண்ணிச்சில்லோர் மருவுவர் என அடுத்த செய்யுளோடு முடிக்க. அன்பு உளுற்றினோராகிய சில்லோர் மருவுவர் என்க. ஊர்த்துவம் - மேல். மேற்புவனம் என்க.

372. திதியை ஆதாரமாகக்கொண்டு சில்லோர் வீடுறுவர்; எனவே, கடவுளால் திதிக்கப்படுங்காலத்தில் இறந்து முத்தியடைவோரும் உண்டு என்பது. சில்லோர் திதி வீழுங்காலையில் சிவத்தை அடைவார்; எனவே, திதியில்லாத சர்வசங்காரகாலத்தில் சிவத்தை அடைவார்களும் உண்டு என்பது. திதி - திதிக்கடவுள் என்பாருமுளர்.

படைப்புறும் போது சில்லோர் படைப்பவ ராவர் சில்லோர்
விடைப்புறு பாச நீங்கிச் சிவத்தினை விரவு வார்கள்
உடைப்பெருஞ் செல்வ மான யோகமீ துறுதல் வல்லார்
கடைப்பிடித் தொழுகு மற்றைக் கருமயோ கமும்விள் வாமால்.

செய்பவன் கருமஞ் சேரும் பயனது கொடுப்பா னுண்டென்
றெய்திய வுளத்த ஞகி யிருண்மல வலிதேய்ந் துட்கப்
பொய்படு புலனை வென்று பொருந்துமுட் பொருள்க ளெல்லாம்
கைபடு நெல்லி யென்னக் காண்பவன் யோகி யாவான். 374

வேறு

விலங்கு வாளர வாதியா னச்சமே வாமை
அலங்கு பூந்தரு நிரந்தழ கார்ந்துராய் மாந்தர்
குலங்க ளண்முரு விடத்தினிற் கொழுஞ்சுட ருறுத்தி
இலங்க வாக்கிய குகையிருந் தியோகுசெய் யிடமாம். 375

பிணியி ஞரகத் தாதர விலார்பொருள் பெட்கும்
தணிவி னெஞ்சினர் சாலவுங் கருமஞ்செய் தக்கோர்
பணிக ளாரியற் குஞற்றுநர் பசிப்பிணி மிக்கோர்
திணிகொ ளித்தகை யார்க்கிந்த யோகஞ்சேட் படுமே. 376

உச்சிப் பின்னொரு கால்வறி தூணுண்டு பானெய்
நச்சு நல்லுண விழித்தகு மூனொடு நயவா
திச்சை தோன்றுறி னஞ்சியங் கடக்குமித் தகையில்
பொச்ச மில்லவர்க் கண்மையிற் புகுதரு மதுவே. 377

---

373. கடவுளால் படைக்கப்படுபவராவர். விரோதமுற்ற பாசம். செல்வமாகிய யோகமானது ஈதாகும். இந்த யோகத்தையுற்றோர்கள் ஒழுகுகின்ற கன்மயோகத்தையும் சொல்வாம்.

374. செய்பவனும், கன்மமும், அக்கன்மத்தின் பயனும், கன்மத்தைக் கொடுப்பானும் நித்தியமாயுண்டு என்று அறிந்த மனத்தையுடையஞகி வென்று காண்பவனே யோகியாவான். (பெரியபுரா: சாக்கிய: 5-வது திருப்பாட்டுக் காண்க.)

375. அஞ்சாமல் ஆர்ந்து அண்முருத இடத்தில் தீபம் வைத்து ஆக்கிய குகையே இடமாகும் என்க. மாந்தர் குலங்கள் உராய் அண்முரு என மாற்றுக.

376. கருமம் - பிரபஞ்ச சம்பந்தமாய் இல்லறத்துக்கடுத்த தொழிலைச் சிறிது செய்யாது பெரிது செய்வோர்களும்.

377. வறிதூண் - சிறிதுணவு. பின் சொல்லப்படும் பால் நெய் கறி முதலிய சேராத வெற்றூண் என்பாருமுளர். நச்சும் - விரும்பத்தக்க.

பதும மாதிய வாதனத் தொன்றுறப் பயின்று
விதுவி ராஞ்சடை விமலனை விமலையை விமலம்
கதுவு மாரியன் றனைவழி பட்டனர் காண்பார்
புதுவ தாய்ப்பயில் வான்புகு வாருப யோகம். 378

ஊணில் இச்சை தோன்றினுல் அஞ்சி அடங்குகின்ற. இச்சையை அடக்குகின்ற என்க.

378. பதுமாதனம் முதலியன: சுவத்திகம், கோமுகம், பதுமம், வீரம், கேசரி, பத்திரம், முத்தம், மயூரம், சுகம் ஆக 9. அவற்றுள், 1. சுவத்திகம் - தொடைக்கும் முழங்காலுக்கும் நடுவே இரண்டு உள்ளங்காலையும் செலுத்தி இறுமாந்திருத்தல். 2. கோமுகம் - சகனப்பக்கத்தில் இருகாற்பரட்டையும் மாறவைத்து அவ்விருகாற் பெருவிரலையும் கையாற் பிடித்திருத்தல். 3. பதுமம் - இருதொடைமேலும் இரண்டு உள்ளங்காலையும் மாறித் தோன்றவைத்தல். 4. வீரம் - வலத்தொடையில் இடக்காற் பரட்டைச் சேர்த்தி இறுமாப்புற்றிருத்தல். 5. கேசரி - பீசத்தின் கீழ்ச் சீவனியிடத்துப் பரட்டை வைத்து இடமுழங்கையை முழந்தாளில்வைத்து அங்குலிவிரித்து நாசியைப் பார்த்திருத்தல். 6. பத்திரம் - பீசத்தின் கீழ்ச் சீவனியிடத்து இருகாற் பரட்டையும்வைத்து அவ்விருபதத்தையும் இருகையால் இறுகப்பிடித்து அசையாதிருத்தல். 7. முத்தம் - இடக்காற்பரட்டால் சீவனியை அழுத்தி வலக்காற்பரடு அப்பரட்டின்கீழ் அழுந்த இருத்தல். 8. மயூரம் - முழங்கையிரண்டும் உந்திப்புறத்தழுந்தப் புவியிற் கையூன்றிக் கால் நீட்டித் தலைநிமிர்ந்திருத்தல். 9. சுகம் - சுகமும் திடமும் எவ்வாறு இருந்தாலெய்துறுமோ அவ்வாறிருத்தல்.

அங்கயோகமானது இயமம், நியமம், ஆதனம், பிராணுயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என எண்வகைப்படும். அவ்வெட்டனுள் ஒன்ருகிய ஆதனம் முற்கூறப்பட்ட பதுமாதனம் முதலாயின. 1. இயமம் - கொல்லாமை, மெய்ம்மைகூறல், கள்ளாமை, பிறர்பொருள் இச்சியாமை, இந்திரியமடக்கல் முதலாயின. 2. நியமம் - தவம், தூய்மை, தத்துவநூல் ஓர்தல், மனமுவந்திருத்தல், தெய்வம் வழிபடல் முதலாயின. 3. பிராணுயாமம் - பிராணவாயுவை இரேசக பூரக கும்பகஞ்செய்தல். 4. பிரத்தியாகாரம் - உபாதியை நீக்கி உண்ணோக்கல். 5. தாரணை - கண்டம், இதயம், நெற்றி, கபாலம், நாபி இவற்றுளொன்றனுள் சந்ததமும் சிந்தைவைத்தல். 6. தியானம் - ஐம்புலமடக்கிச் சிவயோகம் சேர்தல். 7. சமாதி - இந்திரியம் முதலிய தத்துவச் சேட்டைகட்கு ஏதுவாய் யாக்கையுள் நின்று அவற்ருேடு கூடினும் அவற்றில் பற்றின்றி இருக்கும் ஆன்மாவாகிய தன்னைத்தான் காண்டல். சீவனி - சீவநாடி. இரேசகம் - பிராணவாயுவை விடுதல். பூரகம் - மூச்சுள்ளே வாங்குதல். கும்பகம் - கும்பித்தல். உபயோகம் - யோகத்துக்கு அங்கமாயுள்ள யோகம்; பிரயோசனம் என்பாருமுளர்.

குறங்கி னிற்கரந் திரியக்காய்க் குலாவமுன் மார்பம்
பிறங்க மேற்கள நிமிரநா சியின்விழி பிணைய
உறந்த பன்னிரை நடுவணு வோட்டற நிற்பச்
சிறந்தி ரேசக பூரக மறச்சிலை யொத்து. 379

மன்னு நாயக னுருவினை மனநிலை யடங்க
முன்ன ரார்தர நினைந்துபின் முயங்குரு வறுதி
நன்ன ராரிய னவில்வழிப் பெற்றதி னலப்பார்
அன்ன வாய்மைமீங் குறினுரு மடுத்துமீட் டடுப்பார். 380

இதய நாண்மல ரிடத்தினிற் பெருவிர லளவில்
வதியு நாதனை யோகினில் வழிபடு வார்க்குப்
புதிய போகமெ லாமுறும் புகரொன்று மடாது
கதிய யோகத்தி னங்கமு மாறவை காண்டி. 381

வேறு

திருத்தகு பிராணு யாமமே பிரத்தி
யாகாரந் தாரணை தியானம்
உரைத்தமந் திரமே சமாதியவ் வாறும்
ஊன்றிநா சியின்வல மிடத்தான்
மருத்துமிழ்ந் திடப்பான் மறித்துளே வலத்தால்
வாஙகியவ் விரண்டையுஞ் சிறைத்து
விருத்தமொன் றின்றிக் கும்பித்தல் பிராணு
யாமமென் றுரைப்பர்மே தக்கோர். 382

இதுமுறை பிறழின் வருத்தமிக் கடுக்கும்
எய்திய வருத்தந்தீர் பாக்குக்
கதுவிய வாதப் பிணிக்கழ றன்னைக்
கனற்பிணிக் கறலினை யறலின்

---

379. திரியக்கு - வலக்கையால் இடக்காற் பெருவிரலையும், இடக் கையால் வலக்காற் பெருவிரலையும் பிடித்திருத்தல்; முக்கோணம் என்பாரு முளர்.

380. யோகத்தைப்பெற்று. உரு அறுதி - தம்முடல் இருக்கும்வரை யும் நலப்பார்கள்.

382. விரலை மூக்கிலூன்றி. இடப்பால். கும்பித்தல் - தம்பித்தல். விருத்தம் - வேறுபாடு. நாசியின் வலத்திலூன்றி.

முதிர்பிணிக் கனலை யுடலிடைத் தியான
முற்றுறப் புரிவது செய்வர்
பொதிபசி புனலின் வேட்கையுந் தணிப்பர்
பொழிதரு மமிழ்தபா வனையால். 383

முள்ளெயிற் றரவ மாதிய விடங்கண்
முகப்பினு முடலெலா மமிழ்த
வெள்ளமிக் கொழுக்கி னனைத்திடின் விளியும்
விடைப்புறு வளியினை வென்றோர்க்
குள்ளமுந் தூய்தாய்ப் பொறிகளு மடங்கும்
உருவினிற் பிணியின்மை யாதி
நள்ளுறும் பவ்வி முதலிய முன்போல்
நண்ணுறு நொய்தெனக் கழியும். 384

மலர்க்கரத் தீரெண் முறைமுழந் தாளை
வலம்புரிந் திடுவதொன் றாக
நலத்தகு நாற்பத் தெட்டுமாத் திரைகள்
நயப்புறு முதலறு நான்கென்
றிலக்கமுற் றிடுத லிடைகடை யீரா
றெய்துத லின்னவல் லுநர்க்குத்
துலக்குறு நெஞ்சத் தவர்க்குமாத் திரைகள்
சொல்லுறிற் கைநொடி யளவே. 385

பிரத்தியா கார மனம்பொறி வழியிற்
பெயர்தரா தசைவற நிறுத்தல்
உரத்தொடு மிதயத் துறுத்திய பொருளின்
உய்த்தது நிறுத்தரு ரணையவ்
வரத்தொடை யிறையை யிடைவிடா தறிவின்
அறிவது தியானமந் திரமுன்
உரைத்தனஞ் சமாதி யுருவிறந் துண்மைப்
பொருளினோ டிரண்டறக் கலத்தல். 386

383. இது - பிராணாயாமஞ் செய்தல். வாதப்பிணிக்கு.

385. பிராணாயாமத்தில் வல்லுநர்க்கு எய்துதலாகிய இன்னவாகும். நாற்பத்தெட்டு மாத்திரை யோகமிருத்தல் முதலாகும். துளக்குறு - சலன முற்ற. அது விகாரம்.

386. பொருள் - சிவம். அரா என்பது "குறியதன் கீழாக்குறு கலும்" என்ற விதியின்படி அர என நின்றது.

வளிநடு நாடி யியங்குறிற் சமாதி
வாய்க்குமாற் கிளந்திடு முறையே
தெளிதரு மாறு மொன்றினொன் றுயரும்
சிறப்புறு மிந்தயோ கத்தில்
களிதரு முளத்தர் கணிப்பறு மறையா
திகளெல்லாங் கரையவும் வல்லார்
ஒளிதகு மிருநாற் சித்தியு மவர்க்கே
உள்ளங்கை நெல்லியங் கனியே. 387

அணுவினு நுழைநுண் ணுருக்கொள லாழ்ந்த
அளற்றிடை யஃதொட்டா தியங்கல்
மணிநெடு வரையிற் பெருத்தல்வேட் டனவெவ்
வளங்களுஞ் செறிதலா யிரவர்
திணிமுலை திளைத்தல் பெருவலி யினரும்
சென்றடி பேணல்யா வர்களும்
தணிவற விழைதல் வலியருந் தடாமை
சாற்றிய விவைகளெண் சித்தி. 388

மறுமையி லிறைவ னுலகினி லவன்றன்
மாணுரு வெடுத்தமர்ந் திருப்பர்
கொறுகொறுத் துழலு மலக்குறும் பனுக்கும்
கோணைமெய்ஞ் ஞானமாம் வெறுக்கை
பெறுவதற் கடுத்த நிமித்தமீ தல்லால்
பேருல கத்தில்வே றில்லை
உறுதவ முறையி னுறழ்ந்தவர் கழுவாய்
உளுற்றுமத் திறமினி யுரைப்பாம். 389

---

387. பிராணாயாமம் முதலிய ஆறும்.

388. நுழை - நுட்பம். அணுவினும் நுழையும்படியான நுண்ணுரு.

389. தவமுறையில் மாறுபட்டவர். உறுதவ விளியாக்கலுமொன்று. உடலின்கண் நவத்துவாரத்தாலுண்டாகும் குற்றமும், சுத்தி யாக்கையின் பொருட்டு நதி முதலியவற்றின் மூழ்காமல் வெந்நீரின் மூழ்கும் குற்றமும், புடவையிற் சுக்கில முதலியன பட்ட குற்றமும், இழிந்த சாதிகளுடன் பேசின குற்றமும், அவர்கள் உடைமையைப் பொசித்த குற்றமும், அந்தணர்க்கு உண்டாகிய இருவகை ஆசூசமும், போனவாறே முழுகிச் சுத்தராகாத குற்றமுமாகிய இங்ஙனம் கூறிய குற்றங்களெல்லாமடங்க 'முறையினுறழ்ந்தவர்' என்றார்.

வேறு

வினையிரண்டா மகாமமொடு காமமென வகாமம்
விமலனுரை துணியாத தைவிகம்பே ரார்வம்
துனையவறி வழிமோகம் பொச்சாப்புக் கள்வர்
துளக்கரையர் பயமுதலா னிழுக்குறுதல் காமம்
இனைதலவ ணறிகின்ரு மென்றவையொன் றின்றி
இயற்றுதலாங் கழுவாயிங் ககாமவினைக் கதற்கு
நனிவெருவி னிருகுணிதம் புரிதன்மனை யோரின்
நாற்றிநயிட் டிகனிரட்டி பவுதிகன்மற் றையர்க்கில். 390

பொருவிலியைப் பிராமமுகுர்த் தத்தெணு னிரட்டி
பூணலிரு நூறுமூ லம்புகற னீறு
தரியாது புறம்போந்தான் பசித்தன்ரு னைந்தும்
தான்பருகிக் கோரமிரு நூறுபசுப் பார்ப்பார்

---

390. இல்வாழ்வானுக்கும் பிரமசாரிக்கும் பரிகாரம் சொல்லுகின்ருர். பிரமசாரி இருவகைப்படுவர். அவர் பவுதிகப் பிரமசாரி, நயிட்டிகப் பிரமசாரி எனப்படுவர். நூலில்விதித்த காலமளவும் பிரமசரிய விரதத்தை அநுட்டித்து முடிந்தவாறே விவாகம் செய்யுமவன் பவுதிகப் பிரமசாரி. மரணுந்தம்வரை பிரமசரிய விரதியாய் விவாகம் செய்யாமல் இருக்குமவன் நயிட்டிகப் பிரமசாரி. இவர் செய்யுங் கருமமும் புத்தி பூருவம், அபுத்தி பூருவம் என இருவகைப்படும். ஈண்டு இல்வாழ்வான் அபுத்தி பூருவமாகச் செய்த கன்மத்துக்கே பரிகாரம் சொல்லுகின்ருர். இல்வாழ்வான் அபுத்தி பூருவமாகச் செய்த கன்மத்தின் இரட்டி அவன் புத்திபூருவமாகச் செய்த கன்மத்துக்கு என அறிக. கிருகத்தனுக்கு அபுத்தி பூருவத்துக்குச் சொன்ன பரிகாரத்தின் இருமடங்கு பவுதிகன் செய்த அபுத்தி பூருவத்துக்கு என அறிக. அப்பவுதிகனுக்குச் சொன்னதின் இருமடங்கு நயிட்டிகன் செய்யும் அபுத்தி பூருவத்துக்கு என அறிக. அதில் இருமடங்கு புத்தி பூருவத்துக்குப் பொருந்தும்; ஆதலான் நான்மடங்கு ஆயிற்றென அறிக. 'ஒழிபாலும்' என்ற உம்மையால் பிரமசாரிக்குச் சொன்னது வானப்பிரத்தனுக்கும், நயிட்டிகனுக்குச் சொன்னது சந்நியாசிக்கும் என அறிக. இவர்கள் தாம் தாமே பரிகாரம் செய்தற்கு அசத்தராயின், தம் ஆசிரியராலேயாதல், ஆசிரியர் புத்திரராலேயாதல் இருமடங்கு செய்விக்கில் குற்றம்போம் என அறிக. தான் செய்த வினை, செய்வினை எனப் பாவங்கள் இருவகையான் வரும். அவை புத்தி பூருவம் அபுத்தி பூருவம் என்னும் பேதத்தான் நான்கு வகைப்படும். இப்படிக் கன்மபேதங்களையறிந்து அவ்வவற்றிற்கேற்ற பரிகாரங்களைச்செய்து பாவங்களைப் போக்குக. தெய்வத்தாலாவது தைவிகம்.

பரிதிமுத லிரண்டியக்கந் தனிற்பார்க்கி னூறு
பரன்முன்றின் முதனிலத்திற் கழிப்புறின்மா திரங்கள்
ஒருவினூ றறைதல்பிர மம்பசித்து நன்காட்
டுயர்புரிக்க ணேலைஞ்ஞூ றீசான முரைத்தல். 391

இரண்டியக்க முதலான வழுக்காடை யெய்தின்
எரியுறுநீர் கோசலமண் ணேய்த்தொலித்திட் டுணக்கல்
திரண்டபதி னொருமனுவு முக்கானோ யாளி
செப்பலழ னீராடி னோயிலியு மாடின்
அரண்டகுமம் மனுநூறுஞ் சாதமிரு நூறும்
அறைதனூற் றெட்டுணவின் றகோரமுடை யின்றி
வரண்டுதிரைப் புனலாடிற் பதிதரைப்பார்த் திடினும்
வழங்குகநூற் றெட்டூற்றத் தறல்படிந்தும் வழங்கல். 392

ஒருவரொரு தெருவினிறின் முகடொன்றில் வழுக்குண்
டோரைம்ப திடையறின்விற் கிடைமுப்ப திடையே
தெருவிலங்கி னப்பாலின் றொருபதிற்றொன் றேனைத்
தெருக்களுக்கு முப்பதுதண் டாலயத்துக் குண்டால்
அருமறையா திகடொடங்க லுடலெடுக்கு முன்னர்
அந்தணர்முன் னால்வர்க்கும் பிறப்பிறப்பின் வழுநாள்
ஒருபதுபன னிரண்டுபதி னாறுபதி னைந்தாம்
ஒழுக்கமிலாச் சூத்திரர்க்கு முப்பதிற்று நாளே. 393

புதல்வியுடன் பிறந்தாடா யுடன்பிறந்தான் முதலோர்
பொன்றின்முந்நா ளொழிந்தோர்க்குப் புனலாட லிறைவன்
பதம்விரவு ஞானியர்க்கின் றுலகதரு மணியிற்
பரவுசிவ தருமணியிற் பயின்றவர்க்கு முந்நாள்
அதளுடையார்க் குரியகணி கையர்தமக்குப் பதினைந்
தாகுமருச் சனையாதி பிறர்தம்மான் முடித்தல்
மதியமையா தெனிலீர வுடைதரித்துப் புரிதன்
மகவிழுந்தார் பசித்தன்று னைந்துண்டல் வருநாள். 394

கணவனிறிற் றலைமழித்துச் சாந்திரா யணமுன்
கடுவிரத முஞற்றியபின் னுடலியங்கச் சிறிதூண்
உணன்மகளி ரறிவுண்டேற் குருவருளான் முக்கண்
ஒருவனடிப் பூசைமுறை யுஞற்றியிடன் மரபாம்

மணமகன்றன் பணியன்றி யிறையடிப்பூ சனையும்
வாஞ்சிப்பி னவனருள்பெற் றியற்றன்மதி தொறும்பூப்
பணவியமுந் நாளுமருச் சனைபிறரா லாற்றி
அறலாடிக் கவ்வியமுண் டருச்சித்தல் வழிநாள். 395

வைகறையா மத்திருது நிகழினுமந் நாட்கு
வருமைந்தா நாண்மறையோ ரேனையர்நான் காதி
நைகரமில் கிழத்திமுலை புணர்தல்விர தத்தோன்
நான்மறையோ னெனிலைந்தா நாளினுங்கூ டாது
பொய்கழியா குதிபுரிதன் மூன்றுறெட் டிராறு
புணர்பதினுன் கிரண்டுவா மதியாதி வரினும்
கைகலவல் யாவர்களும் விலக்காநா ளாகிற்
கலவானேற் கருவொன்று சிதைத்தகரி சுறுவான். 396

பிரணவமோ ரயுதம்விலக் கியநாளிற் புணரின்
பிரணவமில் லார்மூலம் புகறல்பகற் புணர்ச்சி
விரவினுமற் றும்பகலி னுறங்கலரி வையர்தம்
வீழ்புணர்ச்சி கேட்டல்பசுப் புணர்ச்சிமுத னேக்கல்
பரவிவற்றி னகோரநூற் றெட்டாகும் பிறனில்
பரத்தையர்தோள் விடலியர்தோள் வீழ்ந்துபரி சித்தான்
கரிசறநூற் றைம்பதினு யிரமவற்றி னிரட்டி
கன்னிகைமென முலைத்தடத்துக் கலந்துவிடிற் கணித்தல். 397

இணங்கவின மல்லாரை யிச்சையிற்பார்த் தானூ
றெழிற்குரவன் மனைவியைப்பார்த் தான்சாத நூறு
வணங்கிடையைக் கனவின்முயக் குறின்விரதி முழுகி
மாற்றியுண வொருநூறத் திரநினைந்து கனவின்
அணங்கறநா னூறிரவி னினைந்துவெண்ணீ றிறக்கின்
ஐம்பதிற்று நாற்றிவா மந்தாழ்ந்தோர்ப் புணரின்
உணங்கவினை யயுதம்விழை வுறினூலான் விரதம்
ஒழித்துவரைந் தணைதலிலாற் கொழிவிலள ழுறுழிவில். 398

வீழ்ந்துபவு திகன்பிறனில் பரிசிக்கிற் பசித்து
விளம்பல்பிர ணவமிலக்கம் புணரிலொழி வில்லை
தாழ்ந்தபுலை மனைபுகின்மண் கலமோப்பித் தூய்மை
சமைத்தையா யிரம்புருடஞ் சாற்றல்கிருச் சிரத்தோ

டாழ்ந்தவள்கை யூஞெருநா ளுணிற்கோர மயுதம்
அறைந்தமலற் கைந்தாட்டித் தத்தகிருச் சிரத்தின்
வாழ்ந்திடுக வறிந்தேலேங் கிருச்சிரத்தி னயுதம்
வாமமிரு நாண்முந்நாட் கேற்றுகமே லொழிவில். 399

இழிகுலவண் ணுத்திமுத லோர்புகினுஞ் சுத்தி
இயற்றிமுந்நா ளயுதவையா யிரமியம்ப லவர்கைத்
தழுமுணவோர் கானுகரிற் பதினையா யிரநாள்
தாமூன்று புகனருனேந் துண்டனு ளிரண்டேல்
விழைவினிரு குணிதமறிந் தேலொருநாட் கிரட்டி
மிசைந்ததுபன் னுளாகிற் சாந்திரா யணத்தைக்
கெழுமன்மற்றை நவையுணவிற் கிளைப்பினுமெந் தைக்குக்
கெவ்வியங்கொண் டாட்டிநிசி யுண்ணினவினை கெடுமே. 400

வைகறெு றுமொருவலக்கை நீர்மிகமுன் பக்கம்
வாய்மடுத்துப் பின்பக்க மம்முறையிற் கழித்தல்
பொய்கழுவு சாந்திரா யணம்பதநீர் யாதும்
புசியாது பன்னிருநாள் போக்கினது பராகம்
மெய்கலவும் பிரசாபத்தி யம்பகன்மூன் றிடையே
விரவுமொவ்வொர் நாள்விடுத்துண் டிரவுமவ்வா றுண்டல்
பெய்கனனீர் பானெய்பகன் மும்மூன் றுண் டியாதும்
பேணுமை முப்பகருன் றத்தகிருச் சிரமே. 401

முக்கனிபா லுண்டன்மூ வைந்தாறு வைகன்
மொழிபவதி தபனமென முக்கணனுர் விழவில்
தொக்குநெடு வீதியிடை யிழிஞருறத் தொடினும்
துன்னுது கரிசிறைவற் றெுழப்போகுங் காலும்
மிக்கமகத் தினும்வரைவி னுந்தொடினீ றணிதல்
வெய்யவதி பாதகத்தோ ரன்னமொரு திங்கள்
பொக்கமிகு மாபாத கத்தவர்க ளன்னம்
புணர்திங்க ளேனையரு ணுண்டுணிற்பா தகரே. 402

இழிக்கினரூ ணிழிகுலத்தா ரூணுதி யழுக்கின்
ஏய்க்குமுளத் தினையதனு லிழிவினையே புரிவர்
வழுக்கிலரூ ணுளந்தூய்மை யாக்கியிடு மதனல்
வாய்மைவினை யேபுரிவ ராதலினு லிழியூண்

கழிக்கவரை யினினூறு நாலாநா டன்னிற்
காமருசீ மந்தத்தி னுமகர ணத்தில்
செழிக்கவூ ணூட்டுநாள் சபிண்டியிலா யிரமாற்
சிரார்த்தத்தி லயுதமப்பா லுண்ணிலொரு நூறே. 403

இயக்கமிரண் டிழிந்தவெண்ணீ ருண்டவன்கீழ் சாதி
இல்லகத்தி னுண்டவன்புன் புலைச்சியிணைத் தோளை
முயக்கமுற வெண்ணினவ னிவரயுத மியம்பி
முக்கணற்கா னைந்தாட்டித் தாங்களுமுண் ணுகர்தல்
வயக்கியபொற் கலமாதி மரப்பலகை யந்தம்
வன்னிநீ ராற்புனிதம் வழுக்குறிற்கோ சலமண்
நயக்குமற லாற்புனிதங் களிற்றுலவை சங்க
நன்றுகடைந் ததற்பினு டொறுமயநீர்க் கழுவல். 404

வளைகரிக்கோ டிழுக்குறின்வெந் நீர்மண்ணுற் செம்பு
வண்புளியாற் கஞ்சமுதல் சாம்பரா னிவைதோம்
அளைவுறினெய் பூசியெரி யழுத்துதலாற் புனித
மாங்கவுசி கங்கடுகாற் சாமரைதா னரிட்டம்
திளைபுனலாற் றுலாதி தடந்திரைநீர் தன்னால்
திகழுமத னிழுக்குறிற்கோ சலமண்ணீ ரகற்றும்
விளைகலத்துச் சொன்றிநாய் பன்றிகரங் காகம்
வெய்யவாய்ப் பூனைவா யிடிற்கலத்தோ டகற்றல். 405

குவித்தபதத் தொருபாங்கர் வெளவினங்க ணகற்றிக்
கொழும்பூதி தூய்க்கவ்வி யங்தெளித்த லுணுங்கால்
நவைத்தமயிர் கொசுகாதி படினுமங்க ணகற்றி
நன்னீறு தூவறேன் வடித்தழலிற் காய்த்தல்
அவித்தநீர் பெய்துப்புச் செருத்தல்கழீஇக் கறந்திட்
டாவின்பால் வெண்ணெயழ லழற்றல்புன றயிலம்
சவித்தகருப் புரம்புழுகு சாந்துபல விரையும்
தக்கநிவே தனமபிறவு மருக்கியநீர் தெளித்தல். 406

புற்றுமண்கோ சலமயநீ றறலிவற்றி லிங்கம்
புனிதங்கூ விளமுறிப்பைஞ் சாற்றின்மிக்க புனிதம்
அற்றவருக் கற்றபரம் பொருணிறைவுள் ளகத்தே
அறியினுயிர் புனிதந்தத் துவங்களினொற் றித்த

பெற்றிதெரி கிற்பினவை யும்புனித மாகும்
பிழைக்கினெரு சந்திசா தஞ்சதநான் மடங்கு
முற்றுகநான் கெனுஞ்சந்தி பிழைக்கினிறை பூசை
முடியாதேற் கோரமா யிரங்கணித்து முடிக்க. 407

அறிந்திறைவன் பூசைபுரி யாதொழியி னிரட்டி
அறைந்துபசித் தழல்வளர்க்க பன்னுளுந் தவறில்
சிறந்திடவிம் முறையேற்றிச் செய்தல்கட காதி
திரிமதியிற் பவித்திரஞ்சாத் தாதயர்ந்தான் பசித்துப்
பறைந்திடுக விருநியுத மறிந்தொழியி னிரட்டி
பன்னுகதீ யொழியினியற் றுநாள்க ளோம்பிப்
பிறங்கநியு தம்வருடத் தின்மதிக்கீ ரயுதம்
பிழைக்கினிவே தனங்காயத் திரிநூறு பேசல். 408

செந்தழலாற் கள்வராற் சிவலிங்கஞ் சிதையிற்
செப்பிநியு தங்குருவால் வேறிலிங்கங் கோடல்
வெந்தழற்பட் டழியாதேன் மூன்றயுதம் விளம்பல்
விமலவுரு ஆறுபடிற் பரார்த்தத்து மொழித்தல்
எந்தையுருச் சுயம்பாகி லொருவற்க வுருவின்
எய்தினடி யீரயுதங் கடக்கினுருத் தூளி
பந்தமுறி னேரயுத நிழல்கடக்கிற் பீடப்
பரப்பினிற்சாய்ந் துறின்முந்நா றறைகவுளம் பதைத்தே. 409

சற்றுருளி னுயிரம்பின் னுஞ்சற்றே லிரட்டி
சாலவுரு ளினுமுழுந்தா னுயர்வினு தாரம்
பெற்றுகினு மயுதமா தாரமின்றி விழினும்
பேழ்வாய்நீர் தெறிப்பினுமீ ரயுதமூன றயுதம்
உற்றிடினே கோழைநியு தந்தாழ்ந்த புனலின
உறினுநிரு மாலியநீர்த் தாழினுநன் றுரைக்கப்
பற்றியா னுயர்வினிருந் துக்கிலிங்கம விள்ளிற்
பக்கொழியிற் பீடமிவற் றிற்குவிதி யின்றே. 410

குருநீழ லடியர்நிழல் கடந்திடின் முந்நூறு
கோமறையோர் விளக்கினிழல் கடக்கினொரு நூறுல்
இருநாழி யரிசியிழி வறுகுறுணி யுயர்வெம்
இறைவனிவே தனத்துக்குக் கிருமிமயிர் விரவின்

மருவாதேன் ஞெருருவனிவே திக்கிஞெரு நூறு
மறையோர்முன் ஞல்வர்வளர் தீக்கையிலா ரிலிங்கத்
திருமேனி தொடிற்பூசை சிறப்பித்து முறையாற்
செப்பல்சத மிருசதமுச் சதநான்கு சதமே. 411

வாமசம யத்தோர்கள் வனசரரா தியர்கை
மருவினயு தங்காக நாய்தொடின்மூ வயுதம்
தோமுறுநாய்க் கடுவான்பார்த் திடினயுத மைந்து
தொடினியுதங் கிளந்துபூ சனைசிறப்பச் செய்க
ஆமிறைவற் கறைந்தவிதிப் பாதிசெப மாலை
அருநூலா திகட்கதனிற் பாதிகண்டைக் காகும்
காமரருக் கியம்வீழி னுருளினுருச் சிதையிற்
கசிந்திருநூ றைஞ்ஞூரு யிரமுறையே கணித்தல். 412

ஆட்டுகல சந்தவறித் திருமுடிதீண் டிடினீர்
அயுதமெணல் சிவலிங்க ஞானமுரு விற்போர்க்
கீட்டுகமு வாயில்லை யுணற்கிறைவன் பூசை
இயற்றினெவ ரேனும்பா தகரவரிற் புகுந்தால்
நீட்டுகரம் பட்டகல ஞெழிக்கவுமை யைங்கை
நின்மலஞு தியர்பூசை யியற்றினுநற் பயனை
வீட்டினரே யவரொடுஞ்சாக் கியராதி யரொடு
மேவற்க மேவுறினீ றணிந்துசிவம் விளம்பல். 413

கண்ணுதலா லயத்தேது கவரினுமுண் ணடுங்கிக்
கவர்ந்தபொரு ளுற்றியறிந் தேலைந்து நல்கிப்
பண்ணிடுக சாந்திரா யணங்குரவன் பார்ப்பார்
பண்ணியத்தே தெடுப்பினுமம் முறையுதவி நியுதம்
எண்ணிடுக விணங்கினவ னதன்பாத மிவனை
இணங்கினவ னிதன்பாதி யீந்துமனுக் கணித்தல்
அண்ணலுருப் பதிட்டைசெயிற் குருப்பசித்தீர் நியுதம்
ஐந்திலக்க நூலறியான் றீக்கைசெயி னறைக. 414

போதகனைச் சோதகனை முத்திதனைக் கடுஞ்சொற்
புகலின்றே றிலக்கமதிற் பாதியதிற் பாதி
ஓதியடி தாழ்ந்திரத்தல் கையவர்மேற் ருக்கின்
உரைத்தலா றிலக்கமா யுதத்தெறியி னிரட்டி

தீதிலிபூ சனைசாந்தி ராயணமுஞ் செய்து
தீர்வின்டி யடைந்துபொருண் முழுதுமளித் திரந்து
காதலினன் னவர்கருணைக் கிலக்கமுற லறிவிற்
கலந்தவரைப் பிழைத்திடினு மிம்முறைநகைப் பிடித்தல். 415

பாறயிர்நெய் பழம்விரைநீ ராட்டிநறுங் குவளை
பலவணிந்து சுவையாறும் பழுத்தநா லுண்டி
கூறிமனுக் கொடுத்தானெய் விளக்கிட்டா குதிதீக்
கூர்த்திரண்டா யிரஞ்செபம்பத் திற்கொன்ரு குதியும்
வீறுபெறப் புரிந்துநிசி யுண்டுநிலத் துறங்கி
விளம்பிவா யிணைவிழைச்சு விடுத்துடனெய் பூசா
தேறுயர்த்தாற் காட்டியா னைந்துநித்தம் பருகின்
இறுங்குரவற் பிழைத்தபிழை யடியாரு ளினும்போம். 416

மறையவனைச் செகுத்தாறு யிரம்பசுவி னுப்பண்
மண்டபஞ்செய் தீசான நியுதமெணல் பொருளன்
முறையின்மக மாங்கியற்றல் சாந்திரா யணம்பின்
முடித்தலல தொருமதிநீற் றறையினுருத் திரத்தைப்
பொறியடக்கி யறைந்துறைதன் மதுவுண்டான் கோயிற்
புருட்மெணல் பொருளன்மகம் புரிதலவர் பராகம்
நிறுவுதல்வாய்க் கோசலநெய் கஞ்சமொன்றை யழற்றி
நிறைத்தலுமாம் பூதியறை யிருத்தலுமா மவர்க்கே. 417

ஆடகங்கொண் டான்கோர நியுதநன்காட் டறைக
ஆக்கமுளான் மகம்புரிக பிரசாபத் தியத்தால்
வாடலவ ரிருப்புமுச லத்தான்மன் னவனுன்
மாய்தலுமா நீற்றறையு மாமறியா தொருநாள்
கூடினவன் குருமனையை யழற்சாலை வாமம்
கூறுகவுள் ளவன்வேட்க தத்தகிருச் சிரத்தை
நாடலவர் குறிபீசம் பனைமடலால் வீழ்த்து
நடந்துதென்றிக் கிறுதலுமா நீற்றறையு மாமே. 418

உரைத்தவவ ரோடிணைந்தா ரோரிலக்கஞ் சாதம்
ஓங்கன்முடிக் கணிக்கநிதி யானங்கண் வேட்க
கிருச்சிரமா மதிதபனங் கெழுமுகவான் வதைத்தான்
கிளக்கநியு தங்கோர மறிந்தேன்மற் றிரட்டித்

திரைத்தசுர நதியாடி விச்சுவநா தனைமுன்
சென்றிறைஞ்சி யுணவாதி தீர்ந்தொருநாட் காசி
வரைப்பமரி னறியாமா பாதகமொன் றகலும
மதிதவிரி னறிந்தமா பாதகமொன் றறுமே. 419

கேதார முதலான வெங்கைதலங் கணிக
கிரியாதி நந்தலத்து மலமைந்துங் கீழ்ந்திட்
டாதார முயிர்க்கிறையென் றறிந்தவடி யவர்தம்
அடிப்பூசை யொருநாளோர் திங்களுற வியற்றின்
ஏதாகு மியங்குநெறி யென்றியா தறிந்தும்
ஈட்டியமா பாதகங்க ளோட்டந்து விளியும்
தீதான பலவினையு மூட்டாதங் கவர்தம்
சேவடிபூ சித்திறைஞ்சி ஞேவுவதென் கிளத்தல். 420

சண்ணித்த நீற்றினரா யக்கவடஞ் செறித்துச்
சங்கரன்மெய் யடியார்தம் பணிபுரியிற் பாவம்
மண்ணித்தங் கருத்தெல்லாம் வாய்ப்பருல காளும்
மன்னனிளங் குமரர்குணங் குணமின்மை தெரியா
தண்ணித்தம் பண்பினொடும் வணங்குதல்போ லமலன்
அருள்வேடத் தவரையொன்று மாயாதங் கவர்பால்
நண்ணித்தம் பரிவினிறைஞ் சுநரேவிண் ணுள்வர்
நலமின்மை தேர்ந்தனரே னரகமெலாந் துளைவார். 421

பனத்திபன வன்சிவவே டந்தரித்தோர் பிழைப்பிற்
பார்த்திபன்கொன் றுனிரயம் படுவனவர் தம்மை
மனத்தருக்குத் தபக்குரவ னடக்கிகிலே கிறுத்தன்
மரபிரவிற் பிறர்பொருள்கள் வெளவியியங் குழியும்
துனித்தமரி லெதிர்ந்துபடை வழங்குழியு மறையோர்த்
துணிப்பினவன் பால்வழுக்குத் துன்றுது கொடுத்த
தனத்தையிழந் துறுபாகந் தணந்திழிக்கப் பட்டுச்
சாதலுறிற் றடாதிருந்தான் றுனேகொன் றவனும். 422

வீடாத பிணிவெகுளி மற்றுளவே துவினல்
வெறுத்துடலைத் தான்றுனே விடுத்தல்விடுத் திடினே
ஓடாகின் றருகிரயம் பதினொரு யிரமாண்
டுறுவனு லயத்தீங்கி னொழிப்பின்விண் ணுனுவனல்

ஆடுஉவை மகடூஉவைக் குழவியையமன் குலத்தில்
அடர்த்தவன்மூ வயுதம்வணி கக்குலத்தீ ரயுதம்
பீடாரும் பின்வருணத் தோரயுதம் பேசல்
பேசலா யிரஞ்சாதம் பூசையுயிர் தொலைத்தான். 423

வானரமன் னந்தோகை வாரணம்பாம் பாதி
மாய்க்கினிரண் டாயிரங்கா ராமரைமான் மேடம்
ஊனிலுயிர் பிரிக்கிலஞ்ஞூ றேனமற் றும்வனத்தில்
உறுமிருகங் கெடுப்பினூ றுரைக்கநாய் நரியைத்
தானழிப்பிற் சாதமா யிரமெலிமூ டிகத்தைத்
தாக்கினூ றென்பிலுயிர் சவட்டுறினைம் பஃதால்
ஈனமுறு கிருமிபல வொருவைக லிறுப்பின்
எண்ணுதன்மூன் றயுதமுற வேறும்வினை பாறும். 424

குரங்குநரி நாயுரக மூறுசெயிற் றெறுக்கால்
கொட்டினுங்கண் டத்தளவு குளிர்புனலி னின்று
தரங்கமலி புனற்சடையிற் றலைமாலை மயிர்சூழ்
தண்கமல வதனமொளி ததைந்துசுழல் விழிமூன்
றுரங்கலவு சருப்பவிருச் சிகமாலை வலநால்
ஒண்கரத்துச் சூலமழுத் தண்டுவா ளிடநால்
கரங்கதுவு கட்டங்கந் தலைபலகை பாசங்
கருமேனி யிறையைநினைந் தயுதமெண்ணிற் றீரும். 425

பரிவிடைதா னியந்தரணி யரிதாரஞ் செம்பொன்
பரிந்தேற்பி னுலயத்துப் பதிந்தயுதங் கணித்தல்
விரிதருகம் பளம்பஞ்சு தயிலம்பா றயிர்நெய்
வெஃகின்முந்நூ றறைதன்மட மேற்பினொரு நியுதம்
கரைதல்வினை தீரவொரு வன்கொடுக்கு முண்டி
கடைபோக வேலாது சின்னாளேற் றதனை
அரனருளா ரியனடியார்க் கூட்டியுண லவர்கட்
களித்தலொரு நாட்டவறி னறைந்திடனூற் றெட்டே. 426

பிணியினமூப் பினகன்று பெருதகரு வயிற்ற
பீண்முதிர்ந்த புனிற்றவிளங் கன்றினசாங் கன்ற
உணவெனப்பவ் வீயுண்ப விவையொழிந்த குடஞ்சுட்
டும்பர்பிராற் காட்டுறுமைந் துதவுவன வாகும்

அணவுபுகை நிறநீல நிறஞ்செம்மை வெண்மை
அருங்கபிலை நிறப்பசுவின் மயநீர்பா றயிர்நெய்
நணுமளவு பெருவிரலிற் பாதிபல மொன்று
நான்கொடுமொன் றொருமூன்று பலமிரண்டு கோடல். 427

உரைத்தநிறத் தனவிலையேற் கபிலைநிறத் தைந்தும்
உறவேற்க வஃதுமரி தேனோர்ந்த துதவக்
கருத்தமைக மண்விழுமுன் கமலத்தில் வானிற்
கண்டித்து நடுமயத்தைக் கைக்கொள்க கன்று
பரித்தபசி யிரித்தபின்றைப் பால்கொள்க வறையொன்
பதுமரிசி யானுத றருப்பையினு னுதல்
வரைத்துமுக னிறமைந்து நடுக்கிழக்குத் தெற்கு
வடக்குமேற் கிட்டிசா னத்தைந்து மிடுதல். 428

வீறுசிவ தத்துவமே சதாசிவதத் துவமே
வித்தியா தத்துவமேதற் புருடதத் துவமே
கூறுதரு காலதத் துவமேயவ்வி யத்த
கோட்டஞ்சுப் பிரதிட்டை சுசந்தைதே சடுத்தங்
கேறுகல மரதனபாத் திரமமிர்த கலமே
இலங்குசத்தி தத்துவபாத் திரமுறையர்ச் சித்துப்
பாறயிர்நெய் நீர்மயங்தெண் புனல்பெய்தொன் றுதி
பாலாதிக் கேறவீ சானமுதல் பகர்ந்து. 429

வெற்றபுனற் கறுகுகுசை சந்தனமிட் டறுகால்
விமலகா யத்திரியை விளம்பிமய மாதி
உற்றநீ ராதியிடை மூலத்தா லொடுக்கி
உதகமும்வே றதிற்காயத் திரியினு லொடுக்கி
மற்றதனைப் பிரமாங்கஞ் சிவகாயத் திரியும்
மனுமூல நூற்றெட்ட னேடும்ந் திரித்து
நற்றிசைபந் தனமாதி புரிதலிக்கவ் வியத்தை
நயந்திறைவற் காட்டிநுகர்ந் திடின்வினைக ணலிமே. 430

வறும்புன லுக் களவுதொடி யொன்றும்பாத் திரந்தான்
மாசையிர சதமுமாம் பலாசுசெம்பு மாகும்
உறும்பரிவின் வினைதீர்ப்பான் குடாதுமுக மான
உம்பர்பிரான் காட்டியது பகலுண்டு துயிலின்

நம்மி னத்தொரு மாவைந லிந்தவன்
நம்மி டத்தினு மன்புந டாத்துமச்
செம்மை நாம்பெறுஞ் செவ்விய தாமெனக்
கொம்மை மென்றளிர் கூர்ந்தன கொக்கினம். 26

மதுவை மாட்டிய வானவ னேமியைப்
புதல்வி யைப்புறந் தந்திடத் தாண்டலும்
கதுவி யெண்ணிலு ருக்கொடு காத்தெனத்
ததைவ தேத்தடை தண்வரைப் பாலெலாம். 27

நரந்த மாதுளை நாளிகே ரம்முருக்
கரம்பை யாசினி யாம்பிரந் தீங்கனி
நிரந்த ரித்தன நின்னெதிர் காணிய
வரந்த ழைத்த வரைகொடு நின்றென. 28

கருது தம்பயன் கைக்கொளுங் காலமென்
றிருது வேற்றுமை யின்றியொ ருங்கவண்
மருவு கின்றன போன்றவ யின்றெறும்
பெருகு மெவ்வள னும்பிணை கின்றன. 29

அங்க ணீமுன் னருளிய வாறுபோய்
நங்கை சுந்தரி நற்றவ வேடர்பால்
தங்கி யேனலந் தாழ்குரல் காத்துறும்
எங்கு மற்றவ ளுக்கிணை யில்லையே. 30

நினக்கு நேரழ குள்ளவ ரில்லவள்
தனக்கு நேரழ குள்ளவர் தாமில்லை
மனக்கு வேட்டபொ ழுதவை வாய்த்தலின்
இனிக்க முற்றுவ தெங்கணு மில்லையே. 31

26. செவ்வியது ஆகும் என்று. புனத்தில் வேங்கை முதலிய மரங்களை நலிந்தோர், பின்னர் தினைவிளைத்து நன்மைசெய்வர்; அதுபோல, மாவை நலிந்தவன் அருள் செய்யினும் செய்யும் என்று எண்ணியது.

27. வானவன் - விஷ்ணு.

31. உள்ளவர் இல். அவள்தனக்கு - அவளுக்கு. வாய்த்தலைப் பார்க்கினும். அவை - வேட்டவை.

தொடுக்குமிலக் கணத்தமைந்த முப்பதிற்றீ ருறுப்பும்
துன்னுவய திரெட்டும் பளிக்குருவுந் திகழும்
அடுக்குமொளிச் சதாசிவதத் துவதவிசிற் பதுமத்
தடிகளிணை யடிதொழ நெடுவினையும் விடுமே. 435

ஐவருக்குந் திருமேனி யலர்முகத்தி னிறமே
அவிர்விழியு மறைந்தனவே யைவருக்கும் வலப்பால்
கைவயங்கு திரிசூலம் வரதமிடக் கரத்திற்
கண்மணிமா லிகையபயந் திலகமும்வண் டோடு
மைவகுத்த வளகமுங்கொண் டுமைமுகம்போ லிருந்த
வாமேத வரையொழிந்த நால்வருக்குஞ் சடிலப்
பைவளரு மரவுமதி யுளபகரெண் கையும்
பற்றிடுவர் கோரரைவர்ப் படர்ந்தவர்க்கென் பிழையே. 436

தவளநிறங் கனகநிறஞ் சிந்தூர நீலம்
தனுவிதய தேவர்முத னால்வர்க்கு மேனை
அவிருறுப்புப் பகர்ந்தனவே நேத்திரங்கட் கிரவி
அலங்குமதி கனலுருவ மபயவர தங்கை
இவர்முகவொவ் வொன்றுவிழி யிவ்விரண்டத் திருக்
கெதிரறுசெவ் வரத்தவுருக் கரதலமீ ரைந்து
சிவனயன மொருமூன்றுஞ் சினத்திடித்த குரலும்
திகழுமிவ்வா றறுவரையுந் தேரின்வினை தீரும். 437

வாக்காதி கடந்துமறை கடந்தொளிரு மிறைவன்
மன்னுயிர்கட் குடலாதி வழுக்கின்வழுக் கறுத்து
நோக்காமைத் தனைநோக்கு மியல்பருளும் பொருட்டு
நுவன்றவா றருண்மேனி யருளினு தரித்தான்
திக்கான்மண் புனல்வான மிருசுடரான் மாவும்
திலத்தினுறு நெய்யென்னச் செறிந்துபிரி வில்லான்
தாக்காமை யெத்தொழிலும் புரிந்திடுமெண் குணத்தான்
தனுவியலை யறிவாரார் தாளடையி னல்லால். 438

கண்ணிருத்தி வலைதொடுத்துக் கருதுறுபுள் ளுவர்போற்
கருணையா லுயிர்திருந்தக் கருதியந்த விறைவன்
நண்ணியநற் றலங்களினை யடுத்தடிப்பூ சனையும்
நயந்தடியர் பணியுமுறின் வினைகளெல்லா நலியும்

விண்ணிவர்பல் போகமெல்லாம் வேட்டாங்கங் குதவும்
வெய்யமல மூன்றுமழற் றுய்யெனவெந் தவிய
எண்ணரிய முத்தியுமா ரியனுகி ஞானம்
ஈத்தருளு மிதுவல்லார் தமைப்பிறப்பி னிழிக்கும். 439

வினைதீருங் கழுவாய்கள் பலமொழிந்தா மேனும்
மேலான கழுவாய்மெய்ஞ் ஞானமே யாகும்
கனைவானத் திருளனுக்கு மொளிபலவற் றுள்ளும்
கதிரவனே யொன்றில்லை யதற்குநிக ரில்லை
தனையாதுங் காட்டாதா ருயிரினைக்காட் டாது
தற்பரத்தைக் காட்டாதத் தனிமலமும் பண்டை
வினையோடு விளித்திறையைத் தருவதெனி லேனை
வினைகெடுத்து வேட்டகதி தருமென்னல் வியப்போ. 440

கழுவாய்மற் றிதுமொழிந்தா மெனக்கதிர்வேற் படைகுன்
கருணையினு லருளுதலுங் குறுமுனியு மகிழ்ந்து
வழுவாய வினைநலிய விழுமியது வளர
வந்துநறும் பாலாதி தருமென்ற பசுவின்
குழுவாழு மெல்லையுமற் றதன்மரபுந் தெரியக்
கூறுகென வாறுமுக னதன்சிறப்புத் தோன்ற
முழுதாய வண்டத்தி னுலகமெலாம் பகுத்து
மொழிந்தருளத் தொடங்கினுன் விழுந்துவினை யோட. 441

வேறு

இன்னுழை கதிரி னணுவிரு நான்கெட்
டிணங்குறல் கசாக்கிர கந்தான்
மன்னுத லிருநான் கிலீக்கையெட் டஃது
மருவுதல் யூகையெட் டஃது
துன்னுத லியவை யஃதிரு நான்கு
துறுமுத லங்குல மறுநான்
கன்னது சேரின் முழமது நான்கு
தனுவத னிரட்டியோர் தண்டே. 442

இராயிரந் தண்டங் குரோசமே குரோசம்
இரட்டிசேர்ந் ததுகெவி யூதி
குரோசநான் குறல்யோ சனையது நூறு
கோடிமண் ணண்டத்தி னளவை

தராதல முதலாந் தத்துவக் கண்டந்
தனித்தனி யாயிர கோடி
யிராவுமண் முதலா வொன்றனுக் கொன்று
விளம்பிய வளவைமிக் குறுமால். 443

பகுதியி னளவும் பதின்மடங் கென்றும்
பகுதியிற் சதமடங் கராகம்
நிகழரா கத்தின் வித்தைவித் தையினும்
நியதியந் நியதியிற் காலம்
தொகுநியு தத்தோ டயுதங்கா லத்திற்
சூழ்தருங் கலைகலை தன்னில்,
தகுமொரு கோடி மாயைமேல் வித்தை
தானதிற் கோடிமே லயுதம். 444

சுத்தவித் தையினவ் வளவுநா தாந்தஞ்
சொன்முறை யேறுமிவ் வனைத்தும்
வித்தகன் விளையாட் டாகவாக் கியதான்
மெத்திய வுயிர்த்தொகை யோடும்
அத்திற நிற்க மண்ணிஞே ரண்டத்
தமைந்தபல் லுலகத்தி னளவும்
கைதலக் கனிபோற் காட்டுது மெனத்தீங்
கலைமுனி மகிழவே விியம்பும். 445

ஐம்பது கோடி கிழண்டச் சுவரோ
டவனியின் காறுமே லற்றே
ஐம்பது கோடி புடைச்சுவ ரோடும்
ஆடகக் கிரிவரை கடாகம்
தன்புறத் திசையிற் புவனநூ றவற்றுட்
டங்குவர் நூற்றுவ ருள்ளால்
தென்படு புவன மாறுமேக் கிரண்டு
சிவனுவ தெளிகமா தவனே. 446

பித்திகைக் கனமோர் கோடிமேற் கோடி
யோசனை பொன்மனை பிறங்கும்
தொத்தழற் கொழுந்தீ ரைந்தெனுங் கோடி
துதைந்தெழும் புகையுமைங் கோடி

பைத்தவம் மணையி லாயிர நீண்டி
ராயிரம் பரந்தது தவிசங்
குத்தமன் காலத் தீயிறை யயுத
யோசனை யளவின்வீற் றிருக்கும். 447

வலக்கைவாள் பகழி யிடக்கரம் பலகை
வார்சிலை தழுவுமவ் விறைபால்
நலக்குமவ் வுருவி னுருத்திரர் பதின்மர்
நயந்தன ரிருப்பரோவ் வொருவர்க்
கலக்கணிற் றவிர்ந்த பரிசனர் கோடி
அண்முவ ரவ்வயின் மேலால்
கலக்கனு ருறுத்து மளறெழு நான்கு
கோடியுங் கதுவுறு மெல்லை. 448

முப்பது கோடி மேலிரண் டிலக்க
மொழிந்தமுன் னெல்லையி னுயரம்
பப்பெணி லண்டப் பித்தியின் காறும்
பயிலுமவ் வயின்மிசை வெளிதான்
செப்புமுப் பதினு யிரமத னுச்சி
தீர்ந்தவோ ரிலக்கத்தின் கோடி
ஒப்பிலோர் புவன முடைத்தத னடுமேற்
கொண்பொன்கீழ் பாலிருப் புருவம். 449

மழுப்படை யூழித் தீயுருக் கராள
வதனவட் டித்தொளிர் விழியின்
விழுப்பொலங் தவிசின் விளம்புமேல் பாங்கர்
வீற்றிருந் தருள்வர்கூர் மாண்டர்
முழுப்பவன் னவர்நே ருருத்திரர் பல்லோர்
மொய்ப்பராங் கிளிமொழி யவரும்
குழுப்பயின் றேத்த லுறுவரக் கூர்மாண்
டரையளற் றினுக்கிறை யென்பார். 450

சொற்றவான் புரிமே லொன்பதிற் றிலக்கம்
தூவெளி யதன்முடிக் கீழென்
றுற்றபா தலம்பத் திலக்கம்பொன் மயமே
ஒருபதி னுயிர மகற்சி

முற்றிடை வெளியு மன்னதே யிதற்கு
மொழிந்தவே யனைப்பா தலக்கும்
மற்றிதற் கீழ்பா லவுணர்நள் ளிடையின்
உரகர்வா ளரக்கர்மேற் கமர்வார். 451

இந்தவான் பிலத்தின் மிசையபா தாள
முதலிரு மூன்றுங்கற் பதுமம்
இந்திர நீலம் புட்பரா கந்திண்
ணிரசத நித்தில நிறமும்
கொந்தொளி யொன்பான் மணிநிறங் களுநேர்
கொள்ளுமேற் பிலமுடி விடத்துச்
சுந்தரம் பழுத்த மகளிரெட் டிலக்கத்
தொகையினர் குழுமுவர் மாதோ. 452

எழுபிலத் தெல்லை மிசையிடை வெளிபத்
திலக்கமே லொன்பதிற் றிலக்கம்
முழுதுண ராட கேசர்வாழ் புவனம்
முற்றுமா யிரம்பொலங் கோயில்
ஒழுகுவா ளரக்கர் தயித்தியர் சூழ்வர்
உதன்மிசை மட்கனங் கோடி
எழுபில மவற்றின் வழிக்குமா தாரம
இவரளற் றெல்லையும் வழிபோம். 453

மண்ணடி யுரைத்தா மேருவோ ரிலக்க
மண்ணுளெண் ணுயிரத் திரட்டி
நண்ணிய தேனே யளவுமேற் றோற்றும்
நளினமென் பொகுட்டுற முதன்றன்
திண்ணிய பராரை யீரெண்ணு யிரஞ்சென்
னியின்விரி விரட்டிமே கலைமூன்
றண்ணுறு மேக்கு மேகலைப் பரப்பின்
அவிர்சிக ரம்பல வுளவே. 454

மாதிரத் தலைவர் தத்தம திசையின்
மருவிய குவட்டிடை வதிவர்
ஓதிய சிரத்தி னுப்பனுங் குடாதும்
உதீசியின் குணக்குமுச் சிகரம்

மேதக விளங்கு மயனரி யீசன்
விளம்பிய முறையின்வீற் றிருப்பார்
ஏதமி லவற்றின் பெயர்மனே வதிவை
குண்டமே சோதிவெற் பென்ப. 455

மந்தரங் கந்த மாதனம் விபுலம்
வயங்குபா ருசுவமென் றியம்பும்
இந்தநான் மலையுங் கீழ்த்திசை முதனாற்
றிசையினு மெறும்படக் கிடக்கும்
பைந்துணர்க் கடம்பு சம்புதண் போதி
பரந்தவா னென்கினு நிற்கும்
முந்துநாற் றிசையு மருணமா னதந்தண்
ணசிதோத மாமடு முயங்கும். 456

நாற்றிசை மருங்கி னடிவரைச் சயித்தி
ரதப்பொழி னந்தன வனந்தண்
தேற்றுளி துளிக்கும் வைப்பிர சந்தண்
செறிதிரு தாக்கியம் பொதுளும்
தோற்றிய நாவற் கனியுணிற் பதின்மூ
வாயிர மாண்டுதுன் னுவர்கள்
ஊற்றுமக் கனிநீர் மேருவைச் சூழும்
ஓங்குசாம் பூநதப் பெயரின். 457

பொற்றவந் நாவற் சிறப்பினு லுவர்நீர்
போர்த்தமண் ணுவலந் தீவென்
றுற்றது மேருத் தெனுதுயர் நிசதம்
ஏமகூ டம்பனி யோங்கல்
செற்றெழில் வடாது நீலமே சுவேதம்
சிருங்கமேல் கீழ்கட னிமிரும்
மற்றைமேல் கீழ்பால் விலங்குவ கந்த
மாதன மாலிய வானும். 458

நடுவண்மே ருவுக்கு நாலிரு வரைக்கும்
நாற்றிசைக் கடற்குநள் ளிணையே
இடமுடை நவகண் டப்புவி யென்பர்
இவற்றது தன்மையுங் கேட்டி

வடவரை சூழ நிலமிளா விரதம்
வடாதிர மியமிர ணியநீர்க்
கடல்வளை குருவே பத்திரங் குணுது
கண்ணகன் கேதுமால் குடாது. 459

தெணுதரி வருடங் கிம்புரு டம்பா
ரதமெனச் செப்பிடப் படுமால்
மணுதியைக் கவர்க்கு மிளாவிர தத்தோர்
மாணுருப் பொன்மையு ணுயுள்
முணுதுரைத் தனவே பத்திரத் தவரூண்
முழுநெறிக் குவளைமெய் திங்கள்
தணுதெழில் கவர்ந்தாங் கனையரா யுகந்தான்
சார்ந்திடு மயுதமற் றவர்க்கே. 460

கேதுமா லத்தோ ருணவுகண் டகியின்
கேழ்கனி நிறங்கருங் குவளை
ஓதுறு மாயு ளயுதமே குருவின்
உறைபவ ருணவுபல் கனிகள்
மாதர்மெய் யுருவம் பசுமையாம் பதின்மூ
வாயிர வருடம்வாழ் வைகல்
காதல்சேர் மக்க ளாங்கவர்க் குளரோர்
கணத்தகட் டமர்ந்துதோன் றுவரால். 461

செப்பிய வருடந் தனில்வட ஞாங்கர்ச்
சந்திர தீவெனும் பெயர்த்தோர்
வைப்பும்வா யுவின்கட் பத்திரா கரப்பேர்
வைப்புமுள் ளனவவற் றமர்வார்
துப்புடை முனிவர் சாரணர் சித்தர்
சோமதீ வினர்மதி நிறத்தார்
பப்புறு மற்றை வைப்பினர் செய்ய
பதுமநே ருருவின ரனறே. 462

இரமியத் தவரு ணிருசநற் கனிமெய்
யெழின்மதி யனையர்வை குறுமவ்
வருடமைஞ் ஞூற்றைத் தலைப்பெயு மிரண்டா
யிரம்வயங் கிரமியத் தவரூண்

பெரியவா லத்துச் சிறுகனி குவளை
பெறுநிற மயுதவாண் டாயுள்
அரிவரு டத்தோ ருண்கரும் பாயுள்
பன்னிரா யிரநிறம் வெள்ளி. 463

கிம்புரு டத்தோ ருணவிற லியின்வண்
கேழ்கனி நிறந்தம னியச்சீர்
பம்புறு மாயு ளயுதமே யுரைத்த
பண்புறு மெண்வகை வரைப்பும்
நம்பிவாழ் குநர்க்கு நரைதிரை மூப்பு
நலியுநோ யாதிக ளில்லை
கம்பமற் றில்லர் முதலுகம் போலெக்
காலமு நன்மையே கலவும். 464

பாரத வரைப்போர் தோரையே முதலாம்
பல்வகை யுண்டியு மழைபெய்
தேருழன் முதலாம் பற்பல தொழிலும்
ஈண்டிய வேறுவே றுருவும்
சீரிய தெய்வ மாதிமூன் றுனும்
தீவினை நல்வினைப் பயனை
ஆருமத் திறமு முகத்தின்வேற் றுமையும்
அடுபிணி யாதியு முளரால். 465

இற்றிஃ தேனு முரைத்தபா தலத்தும்
ஏனையெண் வருடத்து முரையா
மற்றைய தீவு வானத்து மருவி
வாம்பிலின் பாருந ரெல்லாம்
செற்றிமுற் பவத்து நல்வினை புரிந்த
திறத்தினர் குறைபிழை முடிப்ப
நற்றவ ரிமையார் யாவரு மென்று
நண்ணிநல் வினைசெயப் படுமால். 466

இப்பெரு வருடந் தானுமொன் பதுகூ
றெனப்படு மொரோவொரு கூறு
செப்புமா யிரயோ சனையிவற் றினையிந்
திரங்கசே ருகநற்று மிரமே

தப்பறு கபத்தி நாகமே வளத்த
சவுமியங் காந்தரு வம்மே
வைப்பெனும் வாரு ணந்திகழ் குமரி
எண்மர்வண் குமரிமா னுவதில். 467

விந்தமே யருவிப் பாரியாத் திரமே
விந்தியஞ் சுத்திகஞ் சையம்
கந்தமார் மலய மயேந்திர மென்னும்
கடிவரை யேழுமேழ் நகரும்
அந்தமி லேனைத் தலங்களுங் கங்கை
ஆதிய பற்பல நதியும்
மந்திர வேத முறைமையு முடைத்தீ
தேனைய மிலேச்சர்வாழ் வனவே. 468

மலயமால் வரைத்தென் சாரலி னிலங்கை
மற்றைய வரையடிச் சாரல்
நிலையுமா லங்கஞ் சமாக்கிய மழகு
நீடுறு மணிமலை சங்கம
உலைவறு குமுதம் வராகமு மிமய
வோங்கலின் வடகிழக் கெல்லைப்
பலர்தொழ வுமையோ டெந்தைவீற் றிருக்கும்
பருப்பத முளததது கயிலை. 469

எழுதரும் பனுவ லாகம மேனைக்
கலைகளு மிருடிகண் முதலாம்
உழுவலன் புடையார்க் கருளவுந் திருமால்
ஊற்றுதேந் தாமரைக் கிழவன்
முழுதுடல் விழிக்குங் கடவுளா தியர்க்கு
முன்னிய வரங்கொடுத் திடவும்
செழுமணிக் களத்துத் தெய்வதக் குரிசில்
தேவியோ டாங்கிருந் ததுவே. 470

இத்தகு தீவின் யோசனை யிலக்கம்
இதுவளை யுவரியற் றப்பால்
பைத்துறு சாகம் பாற்கடல் குசைப்பார்
பரவையாந் தயிர்கிர வுஞ்சம்

நெய்த்திரைக் கடல்சான் மலிகழை நீர்கோ
மேதந்தே னிலயம்புட் கரணி
சுத்தநீர் முறையா ஞென்றற்கொன் றிரட்டி
சொற்றநீ வலைகட லளவை. 471

சாகமு னைந்து தீவுமெவ் வேழு
தடவரை யுடையபுட் கரணி
போகுயர் நேமி வரையென முழுதும்
போந்துசூழ் பொருப்புடைத் ததன்மேல்
மாகர்சூ ழெண்மர் தத்தம திசையின்
வதிவரவ் வறுநிலத் தவரும்
ஏகிய பிணிமூப் பினர்களா யென்றும்
இன்பமுற் றிருப்பரோ ரயுதம். 472

எழுகடற் கப்பாற் பொன்னில மீரைங்
கோடியீண் டுவர்சுர ரப்பால்
முழுவதும் வளைந்த செம்மணி நிறஞ்சான்
முதுவரை யயுதமப் புறத்துப்
பழுதிரு ளுலக முப்பத்தை தங் கோடிப்
பத்தொன்ப திலக்கநா லயுதம்
கொழுமணிப் பெருநீர்க் கடலப்பா லளவை
கோடிமே லிருபத்தே ழிலக்கம். 473

மொய்யொளி தயங்கு நேமிமால் வரையின்
முற்புற மியக்கர்க ளரக்கர்
வெய்யபேய்க் கணங்க ளமர்வரெண் டிசையின்
விண்ணவ ரெண்மரு மமர்வர்
மையிருள் பொதிந்த வவ்வரைப் புறத்து
வதிவர்தம் முடலினைத் தாமே
கையறச் செகுத்தோர் புல்லியர் முதலாங்
காழக மனத்தவர் பலரும். 474

பெரும்புற வேலை யப்புறத் தண்டப்
பித்தியோ டாடக வரைகா
றிரும்புவிக் கைம்ப தேன்றகோ டியும்பாத்
தறைந்தனம் விண்ணும்பாத் தறைவாம்

இரும்புவ லோகந் தரைக்குமேற் பதினோந்
திலக்கமென் றூழூல கிலக்கம்
வரும்பனிக் கதிர்மே லிலக்கமே லிலக்கம்
வானமீன் புதன்மிசை யிரட்டி. 475

இவ்விரண் டிலக்க மும்பரின் வெள்ளி
யிலகுசேய் சுரர்குரு சனியும்
கௌவிவா ழூலக மப்புறத் திலக்கம்
காழிலேழ் மாதவ ருலகம்
செவ்விய துருவ னுலகமே லிலக்கம்
திகழ்புவ லோகமுற் றமைந்த
ஔவிய மனுக்கிந் திரனர சாளும்
சுவலோக மெண்பத்தைந் திலக்கம். 476

மாதவர் மரீசி முதலியோர் பயிலும்
மாலோக மேலிரு கோடி
மேதகு பிதிரர் வதிசன லோக
மேலிரு நான்குமே லீரா
றேதமில் சனக ராதியர் தவிரும்
இருந்தவ லோகமே லீரெட்
டோதயற் கரிக்கு நான்குமே லிறைக்கால்
தூங்குறுஞ் சத்திய வுலகில். 477

உம்பரி னண்டப் பித்திகை யொடுமண்
ணுலகுகா றைம்பது கோடி
கும்பமா முனிவ குறிக்கொள்வெவ் வேறு
கூறுமெவ் வுலகினு மேலாய்
நம்பிரான் வதியப் படுஞ்சிவ லோக
நண்ணெழில் சொல்லினுக் கடங்கா
தம்பர்வாழ் குநர்தந் தன்மையிற் றன்னம்
அரிறபத் தெரிக்குது மறிமோ. 478

வேறு

பல்வேறு விலங்குபற வையினுருக்கொள்
பல்வேறு கணமொவ் வோர்பால்
சில்வேறு கணமொருவாண் முகத்தபல
முகத்தவவை செறிவொவ் வோர்பால்

நல்வேறு திருவுருவத் தனவொருபால்
நகுமுருவத் திறத்த வோர்பால்
அல்வேறு படுமுளத்துக் குறைவின்றிங்
ஙனனெழிர்ந்த வனந்த கோடி. 479

செம்பவள வொளிவிரிக்குந் திருவுருவும்
சடைமுடியுந் திகழ்வெண் ணீறும்
வெம்புலித்தோ லுடையுநுதல் விழியுமழு
வேலிவற்றின் விளங்குங் கையும்
அம்புயமோ ரீரிரண்டு மமலனடி
ஐதவருமுள் ளகமுஞ் சேர்ப்பப்
பம்புகண நாயகராய்த் தொழுதேத்தும்
அடியர்களும் பலரே யாங்கண். 480

காலையிளஞ் சுடர்கோடி யுதித்தனைய
கதிர்மணித்தேர் கடவிச் சென்று
சோலைகமழ் புறநகரு மகநகரு
மங்கலங்க டுவன்ற மின்னார்
வேலையிகழ் விழிக்கணையால் விரைக்கணைகண்
மாற்றியின்ப வேலை மூழ்கும்
மாலையர்தா மரையாம்பல் சங்கம்வளர்
வெள்ளமென வயின்றோ றுள்ளார். 481

விளங்குசிவ புரிநாப்பண் பளிங்கொளிரா
லயக்குணபால் விரைத்த கொன்றைக்
களங்கில்பிறைச் சடைமுடிமுக் கண்மழுவும்
திரிசிகையுங் கதையும் வாளும்
துளங்குகரக் கணநாதர் வதிவருயர்
பாசுபதர் தூய சைவர்
வளங்கதுவு காபாலர் விரதியர்மெய்த்
தவருமவ ருருவின் வாழ்வார். 482

தென்றிசையி லயன்வாணி யங்கிராக்
கபிலர்சித்தர் சனகர் முன்னோர்
ஒன்றுவர்மேற் றிசைவினையை யொழித்தபூ
தேசர்முன்னோ ருலவாச் சீர்த்தி

துன்றுபிரா மியைமுதலோ ரெழுமாதர்
பத்திரைமுன் றொடர்ந்த வெண்மர்
அன்றினரா ருயிர்குடிக்கும பல்வேறு
வயிரவரு மமர்ந்து வாழ்வார். 483

வடதிசையிற் றிருமார்ப னுருத்திரர்வா
னருக்கரட்ட வசுக்கள் வில்லின்
தடவுநுத லரமகளிர் கந்தருவர்
இயக்கர்விச்சா தரர்கள் சித்தர்
சுடர்மணிய சேடர்குய்ய ரிறைவனடி
யுளத்திருத்தித் தொடர்ந்த வேட்கைப்
படரொழிய விடுத்தவரும் பாததா
மரையினுளம் பதித்து வாழ்வார். 484

இத்தகையோர் புறஞ்சூழ வாயிரக்கான்
மண்டபத்தி லெறும்சால் சிங்கப்
பைத்தமணிப் பீடத்துப் பரசிறெடு
மானிருகைப் பதித்துச் சார்வோர்
மெத்துபயந் துரந்துவர மளிப்பவிரு
கரமமைத்து வீழிச் செவ்வாய்
முத்தநகை யுமையோடும் வீற்றிருந்த
முதல்வனார் திருமுன் னாக. 485

சுந்தரத்து விடையமரு மதன்பாங்கர்ச்
செய்யநிறச் சுமனே வெள்ளை
அந்தநிறச் சுரபிகா பிலநந்தை
கரியசுபத் திரையார் தூமமா
நந்துநிறச் சுசீலையெனு மைந்துமினி
திருக்குமிங்க ணவின்ற வாவின்
முன்றெழுகோட் டடித்தலத்து மலரவனும்
திருமாலு முற்று வாழ்வார். 486

கோட்டினுதிச் சராசரமும் பல்வகைத்தீர்த்
தமுஞ்சிரத்துக் குழக னெற்றி
மாட்டமலை மேருசி வையிலைவே
லேமகநா சியினு கேசர்

ஓட்டமதி லுதயவத்த மனசந்தி
பல்லின்வளி யோசை கண்ணில்
காட்டுமிரு சுடர்கன்ன மிரண்டினசு
வினிதேவர் கடலோ னுவில். 487

கலைமகளுங் காரத்திற் கண்டத்திந்
திரனியமன் கருத்திற் கெண்டைத்
தலனியக்க ரிமிலருக்கர் சாத்தியர்மார்
பினிலனில வாயுத் தாளில்
நிலவுமருத் துவர்முழந்தாண் மேற்குரத்து
நுதிநிகழ்பன் னகர்க ளுப்பண்
குலவுறுகந் தருவர்கண்டி னரமகளிர்
உட்குரத்தி னெழுவர் மாதர். 488

வாலடியி னுகேசர் வான்மயிரின்
இரவியொளி யபான மாமா
தேலவரைப் பலகைதனிற் பிதிரர்வசு
தேவர்சந்தி தொறுமேர் வாய்ந்த
கோலவுருத் திரர்முதுகின் மாதவர்மெய்ம்
மயிரினும்பர் குடிஞை நீரில்
சாலுமயத் தெமுனைதரை மாதுதரத்
துததிபயோ தரத்தி னெல்லை. 489

காருகபத் தியமாதி மூன்றழலு
முறைவயிற்றிற் காமர் நெஞ்சில்
சீருமிழும் வதனத்தி லென்பொடுசுக்
கிலந்தனிற்செய் மகங்க ளெல்லாம்
சாருமுறுப் பணைத்தினுங்கற் புடைமகளிர்
தங்குவரிச் சாதி யாகிப்
பாருலவு மாணிடத்து மிவ்வாறு
தேவரெலாம் பயில்வர் மாதோ. 490

இத்தகையா வினையியக்கிற் பலாசுறுகோ
லான்மெல்ல வெறிந்து செல்கென்
றத்தகையோ ரதனுருவ மறிகின்றோர்
அரிந்திடுபுல் லருத்திச் சூழ்வோர்

பத்தியினுல் வழிபடுவோர் பாலரனுக்
காட்டுவோ ரிவர்க ளெல்லாம்
கொத்துபடு மறன்கடைகண் முழுதிரித்துச்
சிவலோகங் குறுகி வாழ்வார். 491

தீண்டினுங்கா ணினுங்கரிசு சேணகற்றி
நல்வினையே செறிப்ப தாகி
ஈண்டுமரும் பயனுதவி மறுமையினும்
வேண்டுபய னெளிதி னுய்க்கும்
காண்டகைய வாவினைக்கண் ணின்றியொறுத்
துரையுரப்பிக் கலக்கங் காண்போர்
மாண்டகபி லையினறும்பால் வரதனுக்காட்
டாதுண்போர் வதிவார் கும்பி. 492

இட்டிமுதன் மகவினையிற் சாலைநிரு
மித்தியங்கு வாய்தல் கீழ்சார்
விட்டுவளர் கிழக்காதி நாற்றிசையும்
விசையைவிளம் பைங்கோ தானம்
பட்டகவுட் கடவுணந்தி யொடுசோமன்
பயில்கோட்டம் பயிற்றி நந்தி
அட்டமுன்மா காளரைவாய் தலினிருபான்
மிசைவயினே றதனை யாக்கி. 493

கறவையினை முதிர்கன்று புனிற்றிளங்கன்
றுகளேயிற் கன்றும் பால
உறையுமிடம் வேறுவே றமைத்தொளிரும்
கண்ணிவாய் தலுநாற் பாலும்
பெறவியற்றிக் கூவிளம்பா தியினடிமண்
பெருகுநதி யோடை சேர்மண்
செறிதருவன் மீகமுமாங் கேய்த்துள்ளால்
அயனரியைச் சிவனைப் போற்றி. 494

விரைபுகைத்து மலர்மாலை நாற்றிமெல்லச்
சுவத்தியெனு முரையை விண்டு
நிரைபுகுத்திப் புல்லருத்தி நித்தலுநீர்
மயம்புறத்து நீக்கி யேதம்

வரைவுசெய்தட் டமிதொறுநீ ராட்டிமலர்
சூட்டியன்னம் வனமு மூட்டிப்
புரைதபபூ சனைபுரிவோர் புராரியுல
கத்தினிது புகுந்து வாழ்வார். 495

சிவ்புரத்திற் பெரும்போகந் துய்த்தறலு
முராரிமற்றோர் சூழ லெல்லாம்
இவர்வளத்த போகமுண்டுண் டெழுந்தவட
கிரியெய்திக் குருவென் றோதும
அவமறுகண் டத்தமர்ந்து பாரதம்பி
னடுத்துமுன்வா தனையான் மீட்டும்
நவமுறவான் சாலைபுரிந் தரற்கானைந்
தாட்டிமுத்தி நண்ணு வாரால். 496

வேறு

வேனிலிற் பொதும்பர் நீழல்சே ரிடத்தும்
வீங்குநீர் மழைமலைச் சாரல்
கானினு மிமத்திற் கதிர்வெயில் விரிக்கும்
வெளியினுங் காழிடர் கடிந்திட்
டானினம் பரிப்போ ருரினுகன் னடுவோர்
அமனுலக் காரியற் கானைத்
தானமுய்த் தளிப்போ ரிருமதி கன்று
தழைத்தபின் கறந்திறைக் கேய்ப்போர். 497

செருத்தலான் முறையிற் காத்துரு தவரைச்
செருக்கும்வேந் தாதியோர் விடையைப்
பொருத்திநற் கலன்க ளிறைவனுக் களிப்போர்
பொலிவறப் பிறருழை நோயால்
வருத்தமுற் றதனை வாங்கினர் காப்போர்
வாழ்த்தினர் வணங்குந ரெல்லாம்
உருத்திகழ் சிவலோ கத்தவ ரவர்கட்
கொத்தபோ கங்களுண் டிருப்பார். 498

வேறு

விடையானைக் காவுவித்தோர் வெறுத்தோரே
றூர்ந்தோரிவ் வினைஞர்க் காதாக்
கடையோர்கள் கன்றிளைப்பக் கறந்துபால்
பருகுநர்கள் காவா தோர்கள்

அடையார்தெவ் வுறக்காப்ப தரிதாயின்
ஆருயிர்நீ வாரின் ஞேரை
இடைமீள விடலறியா தமக்கழிவெய்
துறுங்காறு மெரிவாய்க் கும்பி. 499

ஏற்றின்மிசை சுமையேற்றும் வினையிறைக்கு
விடைபதினென் றீத்தோ ராண்டு
போற்றினிரை கழியுநிரைச் சாலையிடை
நீசர்புகிற் போக்க நூலின்
ஆற்றுகழு வாயில்லை பலமொழிந்தென்
தருமமிரண் டாகு மொன்று
நீற்றனடிப் பூசனையொன் றுவையவ
னடியாரை நிகழ்த்தும் பூசை. 500

ஆதலினல் வறியோரு மாவையவ
னடியாரை யமைந்த கொண்டு
தீதறுபூ சனைவிளைக்க வினைநீறுங்
கதிவீறுந் தீண்டா ரேனும
நாதனடிக் கன்பினரே லவரைவழி
படன்முறையங் நலமி லாரேல்
மேதகுசா தியரேனும் விடல்விளைத்த
பூசைநலன் விளைப்பார் யாரே. 501

தேவயாத் திரைதீர்த்த யாத்திரைசெய்
சிவனேசர் பிரம சாரி
மேவவறம் வளர்கிரகி வனத்துறைவோர்
அறத்துறந்த மெய்ம்மை யாளர்
மாவிரதர் பாசுபதர் சிவதலம்வாழ்
வோரிறைவன் மலர்த்தாண் மீது
பாவமைப்போ ரியமியம்ப லாதிபல
தொழில்வகையிற் பட்டோர்க் கம்மா. 502

அறுசுவையூண் விசிறிகுடை கழலறுவை
கனகம்வெள்ளி யாதி வெங்நோய்
தெறுமருந்து கடங்கரக மாபரண
முதற்பலவுந் தெரிந்து நல்கும்

உறுகொடையோ ரவ்வகொடைப் பலன்சிவலோ
கத்தினுகர்ந் தும்ப ராஞேர்
நறுமுறுப்ப விறல்வேந்தாய்ப் பாரதமாண்
டிறைவனடி நண்ணு வாரால். 503

புகலான்ம தத்துவத்தி னைம்பூதம்
அகங்காரம் புந்தி மூலத்
தகலாநின் றிடுமண்ட மெட்டவற்றுட்
பகுதியண்ட முகட்டி னீசன்
பகலாத வுமையாம்பன் னகப்பள்ளி
மலர்ப்பள்ளி பயிலுந் தேவர்
தகலாநின் றமருலகந் திப்பியமா
யோரைந்து தவிரு மன்றே. 504

வேதனுக்குக் கடாகநெடு முகட்டினதன்
மேற்றுளப விரிபூந் தாராற்
கோததன்மே னமக்கதன்மே லுமைக்கதன்மேல்
ஈசற்கு மூழின் வைகும்
சோதிவளர் சிவலோகம் புகுந்தோர்மீ
ளுவதில்லை சோதி செய்ய
பாதமலர் தனின்முடிவிற் கலந்துபரா
னந்தவெள்ளம் படிவர் மாதோ. 505

வேறு

இல்லறந் துறந்தேற் றுண்டமெய்த் துறவோர்
ஈசனு கமப்பொரு ளுணர்ந்தோர்
சொல்லிறந் தவனைச் சித்திரைத் திங்கள்
தோற்றுநா ணெய்யொடு பிறவும்
புல்லுற வாட்டிப் பாளித முதலாம்
போனக மன்பரா யிரவர்க்
கொல்லுவித் துபய முகத்தன விடையோ
டாயிர மொருமுதற் களித்தோர். 506

மெய்யுணர்ந் ததற்குத் தகாட வாது
மிடைந்தெழும் போகத்தின் கருத்தால்
கையிழந் தவரென் றிவரெலாங் கலப்பர்
கவின்றவச் சிவபுரத் தெல்லை

பொய்யற வொருநா ளுண்மையுன் னினரும்
பூரணி புரங்கற்ப வயுதம்
ஐயென வாழ்ந்து நம்முல காதி
அவனிகா றிழிந்தடி யடைவார். 507

நுனக்கிவண் மொழிந்த முறையினைக் கற்றோர்
நுண்பொரு ளாய்ந்தவர் பிறர்க்கு
மனக்கொளத் தெரிப்போ ரம்முறை நீதி
வழிநடப் போர்நடப் பிப்போர்
தனக்கணஞ் செறித்துப் படிப்பித்தோர் முடிவிற்
றகுமுறை தனக்கரும் பூசை
கனக்கரி சிரிய வாற்றினோர் தாமும்
கரைந்தவச் சிவபுரங் கலப்பார். 508

வீங்கிய செருத்த லாணிட மியல்பும்
விளம்பினம் விளம்பின யாவும்
ஓங்கிய சிவதன் மோத்தரத் தனகாண்
ஓரோவொரு வயின்மற்று கமங்கள்
தாங்கிய முறையொவ் வாமையு முடைத்து
தகையுயிர்ப் பக்குவக் கியையப்
பாங்குறு சிருட்டி தொறும்பரன் வேறுய்ப்
பயிற்றுமா தலின தி னயிர்த்தல். 509

அரிறபு நூலைத் தெரிக்குமா ரியற்கக்
கரமொன்றற் காடகக் காசொன்
றுரிமையி னளித்த லுள்ளவ னில்லான்
உதவுக செம்புறு காசு
தருபயன் கருதா தாரியன் றெரிக்க
தகுங்குறி யெதிர்ப்பையி தென்னக்
கருதுறு தளிக்க வாரியற் கடிமை
யலதுகைம் மாறென்று மிலதே. 510

அன்னமு மொரோவொன் றெழுத்தொரோ வொன்றற்
கான்றவர்க் கூட்டுதல் கடனால்
மன்னுபுத் தகத்தை யீசனைக் குருவை
மரபினாற் பூசைசெய் யாரேல்

துன்னுறு பயனை யிழப்பது மன்றித்
தொக்கவெந் நிரயமுந் துளைவார்
நன்னர்நெஞ் சுவப்பப் பூசனை புரியின்
நாடிய பொருளெலாம் பெறுவார். 511

என்றுரு ருயிரைக் குடிக்கும்வே லிறைவன்
இயம்பிய ஞானமுற் றுணர்ந்து
நன்றுவீ றன்பிற் பன்முறை தாழ்ந்து •
நளினமொத் தலர்ந்ததா ணீழல்
ஒன்றியாங் கடித்தொண் டுஞற்றினன் பன்னுள்
உறைந்துபின் னுரிய னருளால்
மன்றல்சூழ் பொதிய மடுத்துமுத் தமிழை
வளர்த்துவாழ்ந் திருந்தனன் முனிவன். 512

மும்மல மிரித்து நன்மையை வேட்ட
முனிவிர்காண் முனிவரற் கிலேவேல்
செம்மலன் றளித்த திருத்தகு ஞானஞ்
செயிர்தபத் தெருட்டினங் கண்டீர்
விம்மமெய்ஞ் ஞானத் திருநிறை தலினுல்
விளங்குசீ பூரண நாமம்
அம்மலைக் கான தன்றியுஞ் செல்வத்
தாயதுங் கேட்கவென் றறைவான். 513

அகத்தியனருள்பெறுபடலம் முற்றிற்று

ஆகத்திருவிருத்தம்—1386.

சீபரிபூரணநாமப்படலம்

வளங்கு லாவிய போகங்கண் மதிப்பினு மாவி
துளங்க மேவிய வினையொரீஇத் தொலைவில்வான் பதத்தின்
உளங்கு லாவுற வேண்டினு மொல்லையுய்த் தருளும்
விளங்கு சீபரி பூரண விலங்கலைப் பணிவாம். 1

வேறு

முன்னரொரு கற்பத்தின் மொழிசாக மெனுந்தீவின்
மன்னன்பிர பாகரன்சேர் மனைவிசுகு மாரிபால்
நன்னரிரு மகவுடங்கு நண்ணினவெவ் வேறிரண்டு
பின்னருதித் தனவிந்தப் பெருந்திறனுன் மகவுக்கும். 2

தந்தைகு ரன்பன்மன் சிங்கன்று ரகனெனும்பேர்
பந்தமுறச் செய்துல்கம் பரேரெறுழ்த்தோட் பரிப்பித்துக்
கந்தமலி குழலியொடுங் கானடைந்து தவமுயன்றுன்
அந்நிலவர் முறைசெலுத்தி யரசுபுரி யவ்வெல்லை. 3

குறுமுனிமுன் னிருவர்க்குங் குமரன்மான் மியங்கிளந்தான்
உறுகிரண விந்திடப யோகிபின்னேர்க் குயர்கன்னி
தெறுவினைச்சாத் தன்காதை தெரித்தனராங் கெறுழ்ப்பன்மன்
கறுவுகொள்வாரணக்கொடியாங் காதலினைக்கருத்தமைத்தான்.

சூரனுமற் றிருவரும்வேல் சுடர்கரத்தான் முதன்மூவர்க்
கேருறும்வா கனமாத லிவறினு ரக்கணமே
பாரளிப்ப மைந்தர்தமைப் பணித்தேகிக் கயிலைவரைச்
சாரலினுன் குறம்பதினு யிரமாண்டு தவம்புரிந்தார். 5

---

1. ஆவியானது துளங்கும்படி மேவிய வினை. சீபூரணம் - செல்வ நிறைவு. முத்தி நிறைவு.

3. பருத்த ஏரை உடைய.

4. கிரணவிந்து முனியும், இடபயோகி முனியும். கன்னி - துர்க்கை.

5. மூவர் - முருகவேள், துர்க்கை, சாத்தன். இவறினர் - விரும்பினர். நாற்பதினுயிரவருடம்.

முக்கணிறை பதம்பணிய முன்னியவேண் முதலானோர்
அக்கணிறு வியமயில்குக் குடமரிதோ னீயிர்தவம்
எக்கருத்தி னிழைக்கின்றீ ரெனவினுய்ச் சபித்திடலும்
தக்கவவற் றெழின்முகத்த சாரதங்க ளாயினர். 6

பாரிடராய் விறலண்டா பரணர்பணி புரிகாலைப்
போரிடைந்து தேவரடைக் கலம்புகுதப் பொருமவுணர்
வேரறுத்தா ரதுகேட்டு வெய்யவவு ணக்குலத்துச்
சாருகென வத்தலைவர் தருஞ்சாபந் தாங்கினர். 7

மற்றுமொரு நாட்செவ்வேண் மதிமிலைத்த பொலஞ்சடிலக்
கொற்றவனைத் தொழுவூர்தி கொடிப்பறவை புறநிறீஇ
உற்றனன்மான முதலோரு மூர்திநிறுத் துள்ளடைந்தார்
வெற்றிமயிற் சேவலைத்தாழ்ந் திலவிண்ணோர் விறலூர்தி. 8

கூளியர்கள் சினங்கொளுத்தக் கொதித்தெழுந்து மயில்சேவல்
வாளிமைக்கும் வைகுண்ட முதல்வரைப்பெ லாமழித்து
நீளரவப் பகைமுதலா யூர்தியுயிர் நீத்தமைந்த
மீளுமறு முகனோக்கி விளைத்ததிவ ரெனக்கேட்டு. 9

---

6. வேள் முதலானோர் - முருகவேள், துர்க்கை, சாத்தன் முதலியோர். முருகவேளினுடைய ஊர்தி மயில், கொடி குக்குடம். துர்க்கைக்கு வாகனம் அரி. சாத்தனுடைய வாகனம் யானை. மயில் முதலிய நான்கும் தம் பதவிக்கு வந்துவிடுமோ எனச் சபித்தல். சூரன் முதலிய நால்வரும் மயில் முதலிய நான்கன் முகத்தையுடைய பூதர்களாயினர். அங்கண்.

7. அண்டங்களையெல்லாம் ஆபரணமாகத் தரித்திருக்கும் அண்டாபரண முனிவருக்குப் பாரிடராகி நால்வரும் ஏவல்செய்துகொண்டிருக்கும் போது தாங்கள் அவுணர் வேர் அறுத்தார்கள். அவுணத்தலைவர் சாபமாவது எங்குலத்திற் பிறந்து நீவிரும் தேவருக்குப் பகையாவீர் என்றது.

8. செவ்வேள் நிறீஇ. பறவை - கோழி. விண்ணோர் ஊர்தி - கருடன் முதலாயின.

9. கூளியர் சினம் கொளுத்த - சூரன் முதலிய நான்கு பூதர்களும் மயிலைநோக்கி நீ முருகவேளுக்கு வாகனமாயிருந்தும், ஏனையோர் ஊர்திகள் உன்னை வணங்கிலவே என மயிலுக்குக் கோபமூட்ட. அரவப்பகை யூர்தி - கருடன். அமைந்தன. இவர் - சூரன் முதலிய நால்வர். சாருதிர் எனச் சபித்தருளி. மயிலும் சேவலும். சேவல் - கோழி.

தறுகணவு ணக்குலத்துச் சாருதிரென் றவர்க்கருளி
இறுமுலகோ டூர்திகளை யினிதெழுப்பிச் சுரர்க்களித்தான்
மறுவறுகா சிபமுனிக்கு மாயைபான் முதலிருவர்
எறுழுடலொன் றினிற்பிறந்தா ரேனையர்வெவ் வேறுதித்தார்.

தாதையரு டவம்விலக்கித் தாயருளு மாசிவறி
மேதகுதங் குலத்தாசான் விளம்பியசூழ்ச் சியினிறைவன்
பாதநினைந் தனர்வேள்வி பன்னெடுநா டவப்புரிந்து
மாதொருபா லுடையபிரான் வரவேண்டும் வரம்பெற்று. 11

மாதிரத்தெண் மரைவணக்கி வளஞ்சூறை யாட்டயர்ந்து
காதியுவ ணத்திறையைக் கடற்பாயல் வளந்தெவ்விப்
போதனம ருலகமும்வை குந்தமும்புல் லெனக்கவர்ந்து
பாதலமும் பணித்தெல்லாப் பாக்கியமுங் கைக்கொண்டார். 12

தானவர்கள் களிதூங்கத் தடங்கடலி னகரியமைத்
தானிருந்து முடிசூடி யணங்கனையார் தமைமணந்து
வேனவிரேண் மைந்தர்பலர் வீறவுயிர்த் தேவல்புரி
வானவரை வலாரிமக னெடுஞ்சிறைவைத் தமர்நாளில். 13

வேறு

ஏவ விற்றணந் தோடி மேருவை யெய்தி மாதவ மாற்றுறும்
காவல் விண்முழு துற்ற வன்கதிர் வென்ற வன்கடி பொன்னகர்
மேவ முற்குண வாக்கி மைந்தனை வெஞ்சி றைக்கிடல் கேட்டலும்
ஆவ வென்றுபு லம்பி யேத்தவ டுத்த னன்கயி லைக்கிரி. 14

தக்கன் வேள்வியி லன்று டங்குத விர்ந்தி கந்தபெ ரும்பிழை
புக்கு டற்றிய வீர ஞனனி போக்கி யெச்சமு நீக்கிய
மிக்க சூரனை யுய்த்த நாயகன் மெல்லி யலிம யம்புகத்
தொக்க நால்வர்த மக்கு ணர்த்துபு தூய யோகினி ருத்தலின். 15

---

11. மாசு இவறி - மாசை விரும்பி. ஆசான் - சுக்கிரன்.

12. சூறையாட்டு - கொள்ளையிடல்.

13. வேல் நவில் தோள் - வேல் பொருந்திய கை.

14. கதிரை வென்றவன் - பானுகோபன். மைந்தன் - சயந்தன்.

15. நீக்கிய - நீக்க. சனகாதி நான்முனிவர்க்கு.

செவ்வி பெற்றிலன் மீண்டு மன்னசி லம்பை யண்மின னோற்றுழி
அவ்வி யந்தபு மன்ப ருக்கருள் செய்ய வாங்கணெ ழுந்தருள்
ஒவ்வ ரும்பர னும்ப ரோடு முனக்கு நன்மை பெருக்கிநும்
எவ்வ மோப்புமொ ரேந்த லைத்தரு கென்று போக
[மகிழ்ந்தனன். 16

எந்தை யோகினி ருந்த னனிம யத்தி லன்னை யிருந்தனள்
மைந்த னைத்தர லென்றெ னக்கம லத்தன் மாட்டித றைந்தனன்
தந்தை தாய்பிரி யத்த ணந்தபு ணர்ச்சி யாற்றளர் வேதனும்
அந்தின் மாயனை யண்மி யாய்ந்தலர் வாளி யான்றனை
[யேயினான். 17

வாளி தூண்டிநு தற்க னுக்கிறை மார னுதலுங் கால்பொரும்
பூளை வீயென வோடி நாள்பல போன பின்புல வோர்குழாம்
மீள வண்மியி றைஞ்ச நாதன்வி றற்க ணங்கண நாதர்கள்
மூளு மன்பினர் யாரு முற்றுற முன்னி னானிம யத்தலை. 18

மலிச னங்கள்பொ ருது தாழ்ந்தவ டாது பார்சம மாக்குவான்
ஒலித மிழ்க்குர வற்றெனா துயர் மலய வெற்பினு றுத்தபின்
கலிகெ ழும்வரை வாற்றி யாவருங் கைய கன்றுதம் வைப்புறக்
குலவு மாதினை வெள்ளி மால்வரை கொண்ட ணைந்துபன்
[னாள்செல. 19

வலாரி யாதிவிண் ணோரி ரப்பம ரீஇய தொன்முக மாறொடும்
நிலாவி நெற்றிவி ழிக்க ணெவ்வொரு நீடிரும்பொறி காற்றினன்
கலாவி யந்தர மெங்கு மப்பொறி கண்ணி மைப்பினொ மிர்ந்தன
சுலாவு நெஞ்சின ராகி யஞ்சினர் தொக்க மான்முத
[லோரெலாம். 20

---

16. அன்ன சிலம்பு - மேரு. உம்பரோடும் போக. உனக்கு என்றது இந்திரனை. தருகு - தருவேன். இந்திரனுக்கெதிரே மேருமலையில் சிவ பிரான் பிரசன்னராகி வரங்கொடுத்தார் என்க.

17. இந்திரனானவன் தருதல் எக்காலம் என்று பிரமனோடு உரைத்தான். தந்தை தாயாகிய சிவனும் உமையும் தணந்திருக்கும் புணர்ச்சியினால் தளர்கின்ற பிரமனும்.

18. புலவர் குழாம் வீ என அஞ்சியோடி.

20. சிவபெருமான் ஆறுமுகத்தோடும் நிலாவி. தொன்முகம் - அதோமுகம். '' ஐந்து முகத்தோ டதோமுகமும் தந்து '' என்பதனாலும் உணர்க. இதனால் சிவபிரானுக்கும் ஆறுமுகம் உண்டென அறிக.

முன்ன ரண்மகி ழ்னந்த டுத்தபின் முக்க ணுயக னல்கலும்
அன்ன வொண்சுடர் கால்சு மந்தழ லுய்ப்ப வத்தழல் கங்கைநீர்
தன்னி லுய்ப்பவி ரைந்து கங்கைத குஞ்ச ரவண முய்த்தலும்
என்னை யாள்கும ரன்ம கிழ்ந்தறு மாதர் பாலுண்டி
[ருந்தனன். 21

சிலம்ப ரொன்றனெ டொன் று தாக்குபு சேர்ம ணித்திரள் சிந்துற
அலம்பு மேகலை யன்னை யக்கன லஞ்சி யோடிய றிந்துபின்
நலம்ப டுங்கருத் தேவர் மாதர்நண் ணற்கவென் றுந வின்றுசென்
றிலம்ப கங்கழ லொன்ற வீழ்ந்திறை பாக மொன்றியி
[ருந்தனள். 22

ஆங்கசைந்தொளிருங்கலொன்பது மன்னை தன் னுருத்தோற்றின
ஈங்கு வம்மினெ னும்பி ரானெதி ரேந்து கொங்கைய ராய்விழைந்
தோங்கி ருங்கரு வெய்த நோக்கியு றுங்க ருப்பெற லென்றுமை
தாங்கு வெப்பினு ரைப்ப வத்தகு ழைய லார்வெயர்த்
[தாரரோ. 23

இலக்கர் வேரினு தித்த னர்சில வைக லேகலு மன்னவர்
நலக்க வந்தனை செய்தி ரப்பந யந்த பார்ப்பதி யேவலால்
குலக்க ணம்புக ழொன்ப தின்மருங் குக்கி நீங்கின ரீசனுர்
இலக்க ரோடினை யோனை நீங்கலி ரென்ற வர்க்கரு
[ளேய்த்தபின். 24

---

21. முக்கண்நாயகன் அவ்ஆறுபொறிகளும் தன்முன் வர நினைந்தருளி, வந்த அளவில் அப்பொறிகளைக் கொடுத்தலும். சுடர் - ஆறுபொறி. நல்கலும்.

22. சிலம்பர் - காலிலணிந்த சிலம்பு. சிந்துற ஓடி. முருகவேளைத் தன்மூலமாகத் தோற்றுவிக்காமைக்குத் தேவர்கள் ஏது ஆகலின், உமை அவர்மீது சினந்து 'தேவமாதர் கருவை நண்ணற்க' எனச் சபித்தருளினர். இலம்பகம் - நெற்றிச்சரம்.

23. ஒன்பது பெண்களும் கடவுளை விழைந்து பார்த்ததினுற் கருவுற்ருரென்க.

24. வேர் - வெயர்வை. அன்னவர் - ஒன்பது பெண்கள். ஒன்பது பெண்களும் உமாதேவியாரை இரத்தலினுலே. நவவீரரும்.

பல்லி யங்களி யம்ப யாரும்ப டர்ந்து சூழ்தர மாதொடும்
அல்லி மென்மலர் செற் றுபொய்கைய டுத்துமைந்தரையவ்வயின்
வல்லை நீகொணர்கென் றனர்மலை யான்மடந்தை மகிழ்ந்துநீஇப்
புல்லி யோருருச் செய்துகொங் கைபொ ழிந்த தீம்பய
[முட்டினாள். 25

ஆறு மாமுக மாறி ரட்டிய வங்கை யோடொளிர் கந்தனை
ஏறி வந்தரு ளேற்றின் வாங்கியி ருத்தி மாதுமப் பாலுற
நீறு சேர்திரு மேனி யானெடு வெள்ளி யங்கிரி யெய்துபு
வீறு சேரணை வீற்றி ருந்தனன் விண்ணு ளார்துயர்
[மண்ணவே. 26

ஆய காலையில் விம்மி தம்பல வாக வாடவொ டங்கினான்
பாய மேகலை யன்னை பார்ப்பதி பார்த்து நாதர்ப தந்தொழு
தேயெ னும்முன மெண்ணி லற்புத மீண்ட வாடல்வி ளைத்திடும்
சேயி வன்றிற மோது கென்னம கிழ்ந்து செப்புதன்
[மேயினான். 27

வேறு

திகழுநம் விழியிற் றோன்றுஞ் சேயெனுங் குமரன் கங்கை
அகமுற வடுத்த லாற்காங் கெயனகன் சரவ ணத்துத்
தகவமர்ந் திருந்த வாற்றாற் சரவண பவன்வா னாரல்
நகிலமிழ் தளிப்ப வுண்ட நலத்தினாற் கார்த்தி கேயன். 28

ஆறுமோ ருருவ தாக வாக்கலிற் கந்த னானான்
ஆறுமா முகஞ்சேர்த் துள்ள நமக்கவை யவன்மு கங்கள்
ஆறுமா யிருந்த வேத மறையுந்தா ரகவெ ழுத்தோர்
ஆறுமாங் கவனு மத்தா றெழுத்துமா யிருந்த வன்றே. 29

---

25. செற்று - செறிந்த. சரவணப்பொய்கை. நீ என்றது உமையை. குழந்தை வடிவாயிருந்த ஆறுருவையும் ஒருருவாகச்செய்து.

26. அப்பால் - இடது பக்கத்தில்.

28. ஆரல் - கார்த்திகையாகிய ஆறு நட்சத்திரங்கள்.

29. அதோமுகத்தோடு ஆறுமுகங்கள் நமக்கு உள்ளன: அவ் ஆறு முகங்களாகிய அவையே நம் புதல்வன் முகங்களாக இருந்தன. வேதம் அறைகின்ற. கந்தம் - கூட்டம்; என்றது சேர்க்கையை.

ஆங்கவ னமது சத்தி யாதலி னம்மைப் போல
ஓங்குவன் சிறுவ னுவ னுலப்பில்பல் லுருவங் கொள்வன்
நீங்குவன் பணிந்தோர் வேட்ட நிரப்புவ னடியா ரின்பம்
தாங்கவீ டளிப்ப னன்னான் றன்மையா ரறிதற் பாலார். 30

வேதமுன் மொழியி னுண்மை வினைச்சிறை புகுத வேதற்
காதியெவ் வுலகு மாக்கிக் கருநிறத் தவுணர்ச் சாடும்
மாதுநீ காண்டி யென்ன மகிழ்ந்தவண் மைந்த னோடும்
தீதறு விளையாட் டின்கட் செலுத்திய மனத்த ளானாள். 31

சிலையினைக் கடலைத் தேளத்தைச் செறிகதி யுயிர்க டம்மைத்
தலைதடு மாறச் செய்த தன்மையை நோக்கி விண்ணோர்
உலைவுறு மனத்த ராகி யுயர்வட கிரியை யண்மிக்
கொலைபுரி வயிர வேலா னொடுங்குழீஇ யாய்ந்து நின்றார். 32

ஆவயிற் குழவி போற்சென் றடுக்கலைத் துளக்கி மீச்சூழ்
தாவில்பல் குவடு விண்டு தரையிடை யுகுத்திட் டார்த்து
மேவல னிவனே யென்ன வெய்யபோ ராடல் செய்த
தேவரைக் கொன்று வீழ்த்துச் செங்களந் தமிய னின்றான். 33

பொன்பெய ரமரன் றாழ்ந்து போற்றலு மெழுப்பி யன்னோர்
இன்புற வுலக மெல்லா மிலங்குபே ருருவந் தோற்றித்
தென்பொலி தேவ சேனா பதியெனத் திகழ்பேர் தாங்கி
மின்பொலி கந்த வெற்பின் விண்ணவர் பூசை கொண்டு. 34

நாரதன் வேள்வி வந்த நாமவான் றகரை யூர்ந்து
வீரரோ டமரு நாளில் வேதனைச் சிறைவைத் தெண்டோள்
ஆரியன் முதலி னோர்கட் காரிய னாகி நோற்ற
வாரணி முலையி னார்க்கு மணாளனும் வரமு முய்த்தான். 35

---

30. உருவங்கொள்ளுதலினின்றும் நீங்குவன் என்க.

31. இனியாக்கிச் சாடுவான் என்க. என்ன - என்று. கடவுள் கூறுநிற்ப. மகிழ்ந்தவள். வேதனைக் காதி.

32. விண்ணோர் நோக்கி ஆகி மேருவை அடைந்து இந்திரனோடுங் கூடிநின்றார் என முடிக்க. தேளத்தை - இடத்தை.

33. பகைவன் இவனுகுமென்று போர்செய்து எதிர்த்த தேவர்களை.

34. வியாழன் போற்றின அளவில் தேவரை எழுப்பி. விசுவரூபத் தைத் தோற்றி.

இன்னன நிகழ்ந்த பின்றை யெம்பிரா னுமைக்கு நாப்பண்
மன்னிவீற் றிருக்கு மேல்வை மான்முத லிமையோர் வேண்ட
முன்னவன் கருணை கூர்ந்து மொய்யெறும்ப் பூத வெள்ளம்
தன்னையு மளித்துப் போக்கத் தாழ்ந்தனன் விடைகொண்
[டானல். 36

வேறு

இரண்டா யிரவெள் ளமெனும் படையும்
திரண்டார் தருதே வருமொன் பதின்மர்
முரண்டா வுமிலக் கருமுற் றுமரீஇ
அரண்டா னெனும்வை யமடுத் தனனே. 37

தங்கட் கிறைவன் றுயருந் தவிர
இங்குற் றனனென் றெழுமோ கையினல்
பொங்கிக் கடலார்ப் பொடுபுக் கதென
அங்கட் டிரள்பல் லியமார்த் தனவே. 38

வறங்கூர்ந் துமையாந் தனிர்வண் மைதழீஇத்
திறங்கூ ருதிரென் றுகையாற் செறிவிண்
நிறங்கூ ருலகின் வெரிநீ வுதல்போல்
அறங்கூர் கொடியெங் குமசைந் தனவே. 39

மண்டே ருருளா கியநா மனமாம்
திண்டே ருருள்வல் லமெனத் திகழூர்
கொண்டேர் மதியங் குடையா னதென
ஒண்டேர்க் குடையோங் கிமுற் றியதே. 40

---

37. ஒன்பதின்மரும். முரண் தாவும். அரண் எனும் வையம் - மதிற்கோட்டையாம் என்று சொல்லும்படியாகக் கனத்துப் பருத்த தேர்.

38. தேவரிலொருவனுகிய வருணன்.

39. விண்ணுலகின் வெரிநை நீவுதலைப்போல்.

40. மதியமானது, உலகமாகிய தேருக்கு உருளையாயிருந்த யாம், மனமாகிய தேருக்கு உருளையாதல் வல்லமையில்லேமென்று உருளையாகாது குடையானது என்னும்படி. ஊர் - பரிவேடம். வல்லம் - வலிமையில்லேம். முருகவேளினுடைய தேருக்கு மனோரதம் என்று பெயர்.

அக்கங் கைசுமந் தருள்பெற் றதுகேட்
டுக்கண் விசும்போ ரிருகங் கையுமுன்
புக்குத் தொழுகின் றதுபோ லுமெனத்
தொக்குத் திவள்சா மரைதுள் ளினவே. 41

இளையோ னலனென் றுதெரிப் பனபோல்
முளையா முதல்வன் குரவன் பிரமற்
றளையார்த் தவன்சண் முகனென் றிசைகா
களமோ டுசின்னங் கள்கறங் கினவே. 42

விழையத் தகுவீ ரலிரென் றுவிண்ணோர்
உழைநற் புகழைத் திரள்செய் துணவாய்
முழைவைப் பமுயன் றவையோ லிடல்போல்
தழையப் பலசங் கமுரன் றனவே. 43

காலா தியின்வன் பகைகாய்ந் துசமர்
ஏலா மைதமக் கருளீ சன்மகன்
கோலா தியினு டல்குறித் தமைதேர்ந்
தாலா நடமா டினபா ரிடமே. 44

இக்கா ளையையேந் தெறுழ்முன் பெறலால்
தக்கா னெனமான் மொழியத் தழையாக்
கைக்கால் வடிகோல் கொடுகா மருதேர்
அக்கா லிறையை யெனவூர்ந் தனனே. 45

---

41. சுமந்து - முருகவேளைச் சுமந்து. உங்கண். பிரமலோகம், இந்திரலோகம், சிவலோகங்களில் மூன்று கங்கையுள்ளன. அவற்றுளொன்றே பூமியிலிழிந்து வந்தது என்க. அக்கங்கை - புவியிலிழிந்துவந்த காசிக் கங்கை.

43. தேவர்களுடைய புகழைத்திரட்டி வாயாகிய முழையில் உண்ண வைத்து முயறலால் அப்புகழானது அஞ்சி ஓலிடல்போல. அவை - புகழ். ஊதுவோர்கள் தேவர்களைநோக்கி நீங்கள் புகழை விரும்பத்தக்கவரல்லீர் என்று. தகுவீர் அல்லீர். முயன்று - முயறலால்.

44. காய்ந்து யுத்தமின்மையைத் தமக்குந் தந்த ஈசன். தமக்கு என்றது பாரிடங்களை. கோல் - அம்பு. ஆலா - முழங்கி.

45. விஷ்ணுவானவன் வாயுவை நோக்கி நீ முருகனைத் தாங்கும் வலிமையைப் பெற்றதனாலே நீயே சாரதியாகச் செலுத்தத்தக்கவனுவாய் என்றுகூற, உடனே வாயுவானவன் தழைந்து. கைக்கால் - கையினிடத்து. வடிகோல் - தாற்றுக்கோல். ஐயென.

கடலும் புவியுங் கதிர்வா னகமும்
படர்வா யிடவே றுபௌவங் கிளரா
வடவா முகத்தின் வழிக்கொண் டடெனை
மிடைபூ தரிஞைப் பண்விரைந் ததுதேர். 46

வேறு

தங்குலத் தரசற் றடிமார் செலும்
இங்கி வர்க்கிடை யூறுசெய் வாமென
அங்கண் மாநில னுமவு ணன்புரி
பொங்கு மாயையிற் போர்த்தது தூளியே. 47

ஞான நாயக னல்லருட் பார்வையின்
ஆன மாயைய கன்றது போன்மென
வானு ளார்நனி தூவுதண் மாமலர்த்
தேனை மாரியிற் றீர்ந்தது தூளியே. 48

முத்தி னூர்தியும் பிச்சமு மொய்குடைக்
கொத்தும் வார்கொடி யுங்குளிர் பாரெலாம்
பொத்தி நின்றன பூண்கொடுங் கோலழல்
மெத்தி நின்ற மெலிவுதி றம்பவே. 49

இன்ன வாறிய வைக்க ணியங்குபு
பன்ன ருஞ்கிர வுஞ்சப் பறமபயல்
துன்ன லுஞ்சுரர் யாருந் துளங்கினர்
நன்னர் நாரத னயகற் கோதினன். 50

---

46. தேரை வடவாமுகாக்கினியாகக் கொள்க.

47. சூரியனைத் தபுப்பவராய்ச் செல்லும் இவருக்கு. "ஆர்த்தார் கொண்மார் வந்தார்" என்புழிப்போல மார் என்பது வினையெச்ச விகுதியாய் வந்தது.

48. தேனை என்பதில் ஐ சாரியை.

49. குளிரும்படி. கொடுங்கோலால் உண்டாகிய அக்கினியானது மண்ணில் குறைந்திருந்த மெலிவு.

50. இயவை - வழி.

பட்டி மைக்கிரி யீதுபன் மாதவர்
அட்ட தீங்கொரு பாலணி மாநகர்
இட்டு வல்லவு ணற்கிளை யோனுளன்
விட்ட மால்படை மின்னிய மார்பினன். 51

இன்ன தாலவ னின்னுயி ருண்டலால்
அன்ன தானவ னுருயிர்க் கேகலை
அன்னை தந்தை யழற்கணெ னத்தகும்
மன்ன வென்றுயர் மாதவன் கூறலும். 52

தார கத்துரு வாகிய தத்துவன்
பார கத்துயிர் வாட்டும் பதகனித்
தார கப்பெயர் தாங்கற காதெனப்
போர கத்துமு டிப்பது பூண்டனன். 53

வேறு

வீர வாகுவை நோக்கி யாயிர வெள்ள மாகிய பூதரும்
போர வாவுமி லக்க ரும்புக ழெண்ம ரும்புடை கொண்டுபோய்
ஆர வாடமர் செய்க வென்றருள் செய்து வான்யவ னன்றனைத்
தேரனோர்க்குத வப்ப ணித்தனன் செய்த ளித்தன னெல்லையில்.

இறகெ ழுந்துப றக்கு மோங்க லெனச்செஃ றேர்பல சூழ்தரப்
பொறைநி லக்கரி தாமெ றுழப்பொரு பூதர் தேர்ப்படை சூழமண்
நெறுநெ றென்றுநெ ளிக்க நீளிர தங்க டாய்விறல் வாகுவும்
முறைதி றம்பிய தறுக ணூன்றவிர் மூரி மாநகர் முற்றினன். 55

உருகி நெஞ்சழி யத்த மக்கிறை யோனை முன்பணி சீற்றமிக்
குருவ னகட லேழு மோங்கியொ ருங்க டப்புவி முற்றியாங்
குருளு மாழிய வங்க மாகவொ லித்து முற்றிய சேனையின்
உருமு முட்கவெ ழுந்த வார்ப்புல கேழு முட்டிநி மிர்ந்ததே. 56

---

51. பட்டிமை - வஞ்சனை. பல முனிவர்களையும் கொன்றதாகும். இட்டு - செய்து. படை - சக்கரம்.

52. அக்கினிக்கண் ஈனவந்தமையால் அக்கண்ணை முருகனுக்குத் தந்தையாகக் கூறினர்.

55. முற்றினன் - வளைந்தான்.

56. கடலேழுமே முற்றினாற்போல. ஆழியனவாகிய இரதங்கள் எல்லாம் வங்கமாக ஒலித்துவந்த சேனைக்கடலில். சூரன் வருணனை ஏவல் கோடலால் உளதாகிய கோபம் என்க. அட - கிரவுஞ்சமலையை அடும் பொருட்டு. உருவ - கடக்க: என்றது கரை கடக்க என்றதை.

இன்று வையக மூன்றும் வச்சிர மேந்தி னுற்கரு ளாழியான்
நன்ற ளித்தன னென்று தேவர் நயப்ப முற்றிய சேனைகள் [மேல்
ஒன்று தண்டையும் வேண்டு மேயென வொய்யெனப்பிறக் கிட்டு
துன்றி யும்புரி சைக்கண் வீரர்கள் சோடை யாற்படை தொட்
[டிலார். 57

வேறு

பந்தும் பாவையும் பசுவரிப் புட்டிலும்
பலவுஞ்சென் றெறிகிற்கும்
முந்தை மாதரை யியற்றுபு பின்றைமொய்ப்
பகழிவா யிலிற்றாக்கி
எந்தி ரம்பல வுஞ்செறித் தவுணர்தம்
யவனன்செ யெயில்வாய்ந்தும்
அந்தில் வீரர்கள் பூக்கொடண் ணுமைநனி
யதிர்தொறு மயிர்க்கின்றார். 58

குருகு சுட்டிய குன்றெனக் கைதவவ
குயிற்றரு மிளைகானம்
அருகு முற்றிய கிடங்குயர் மதிலழித்
தவுணரா விகண்முற்றும

---

57. அருட்கடலாகிய முருகனானவன் திரிலோகத்தையும் இந்திர னுக்கு நன்றளித்தனன் என்று தேவர்கள் நயக்கும்படி வந்த சேனைகள். வழியும் வேண்டுமோ, வேண்டாமெனப் பிறக்கிட்டோடி மதிலின் மேலே வாயிலாற் சேது துன்றியும் என்க. தண்டை - வழி. மதிலில் உள்ள வீரர்களானவர் முன்னமே போருக்கு வருகின்றாரெனத் தெரியாமையால் நிராயுதபாணிகளாய்ப் படை தொடாது நின்றார் என்க. சோடை - சடைந்து. சடைவு - போர் செய்ய வருகின்றாரென முன்னரே யறிந்து போர்க்கோலங் கொள்ளத் தவறினமையால் உளதாகிய சடைவு என்க. தண்டை என்றது மதில் வாயிலை.

58. புட்டில் - சுளகு. பசிய வரிந்த புட்டில். அரி எனப் பிரித்து நல் என்பாரும் உளர். அசுரத் தச்சன். முந்தை - முதல்வாயில். பின்றை - பின்வாயில். மதிலினுள்ளே புகும் பகையரசன் முதல்வாயிலிலுள்ள பந்தையும் பாவையையும் புட்டிலையும் அறுத்துப் பின்பு அதனடுத்த வாயிலிலுள்ள பகழியையும் எடுத்துக்கொண்டு, கொல்லும்படி வைத் துள்ள எந்திரத்துக்குத் தப்பி உள்ளேபோதல் வேண்டும். பூதர்கள் அவ்வாறு செல்லாமையால் அவைகளெல்லாம் அவ்வாறு நீங்காதிருத் தலைக் கண்டு மதில் வீரர்கள் ஐயுறுகின்றனர். பூ - பொலிவு. எறிதல் - பந்தை வீசுதல், புட்டிலைப் புடைத்தல். வாய்ந்தும் என்னும் உம்மையால் பந்து முதலியன அறுபட்டில என்க.

பருகி னல்லது குமரவே டிருமுன்னர்ப்
படர்கல மெனச்சீறி
ஒருக ணத்திலா ழகழிதூர்த் தெயிற்பொறி
யுதைத்துருட் டினர்சூழ்ந்தோர். 59

வேறு

அழுவப்புன லமரேற்றவ ரகழோடற மதிலில்
குழுமிப்பெரி தமராடினர் பொறியோடுயிர் குலைய
எழுமுற்றிய கதவட்டன ரெயில்கைக்கொட கத்தில்
கழுமிப்பயில் கருவிக்கடி மதின்முற்றினர் கடிதின். 60

உழிஞைப்படை யெதிர்நோக்கிய வொற்றேடி வணங்கி
அழிவுற்றெழி யமரர்க்குல கருளப்பரன் மதலை
வழிவந்தனன் கொடிவெம்படை வல்லைப்புரி சையைவென்
றொழிவின்றுய ரகன்மாமதி லொடுநேர்ந்ததை யெனலும். 61

பொன்னும்பிற பொருளும்புக ழுலகுஞ்சர ணடைவோர்
மன்னுங்கொள நல்கிக்களி மல்கத்தவி சமரும்
மின்னுங்கதிர் முடியான்விரை செலலுற்றன னறியாக்
கொன்னும்படை புடைமுற்றின குரமான்வைய முற்றான். 62

---

59. பட்சியைச் சுட்டிய மலை கிரவுஞ்சமலை. கிரவுஞ்சம் என்னும் பறவையே அம்மலை. குயிற்றுகின்ற மிளையும் கானமும் கிடங்கும் மதிலு மாகிய இவற்றை அழித்து. அரிய மிளை என்க. மிளை - காவற்காடு. "குருகு பெயர்க்குன்றம் கொன்ற நெடுவேலே" என்பதன் உரையில் 'குருகு பெயர்க்குன்றம் - கிரவுஞ்ச பருப்பதம்' என்றார் அரும்பதவுரை ஆசிரியர். (சிலப்பதி: குன்றக்குரவை).

60. அகழி நீரில் நின்று போர் செய்தவர்கள் அகழோடு அறவும், மதிலினின்று போர் செய்தோர் அம்மதிற் பொறிகளோடு உயிர் குலைய வும், முருகவேள் சேனைகள் கதவை அட்டனராய் மதிலின் வீறைக் கைவசப் படுத்திக்கொண்டு, வெளிமதிலைக் கடந்து, உட்சென்று, நிறைந்த படைக் கலங்கள் வைத்துள்ள உள்மதிலை அடைந்தன. அமரேற்றவர், அமராடி னர் என்றது காவலாளிகளை. கழுமி - நிறைந்து. கருவி - ஆயுதம்.

61. உழிஞை - மாற்றார் ஊரை வளைக்கச் சூடும் மாலை. உலகையருள. கொடிப்படை - முற்படை. ஒழிவில்லாமல்.

62. பொன்னையும் பொருளையும் உலகத்தையும் நல்கி. மன்னும்: அசை. குரத்தையுடைய குதிரைகட்டிய தேரிலுற்றான் தாரகன் என்க. மான் - குதிரை. உற்றாஙகி அறிந்து விரைந்து சென்றான் என முடிக்க; அறிந்து முற்றினன் என்றலுமொன்று.

குடைநாட்கொளல் வாணுட்கொளல் குறியாவர சவுணன்
உடைநாளழி வழியாதவ னுரனென்றியீவாழிப்
படைநாரணன் மகன்வெண்குடை பற்றக்குடை யேயாய்
அடையாவமர் வுற்ருலன முடிமீக்குடை நிழல. 63

கற்றைக்கதி ரங்கைத்துணை கலைவெண்மதி யாழி
பற்றிச்செல நீட்டிப்பத மின்றிச்சுருக் குவபோற்
கொற்றக்குடை நிழலிற்குரு மல்குமிணைக் கவரி
எற்றத்துய ரியதானவன் புடைதாழ்ந்தெழுந் துளர. 64

கண்வைத்தம ரரையோம்பிய கந்தன்றம தரசை
மண்வைப்பொடு மடவந்தமை கேளாமற மூளா
விண்வத்துயர் பலவைப்பையும் வெய்தெற்றுவ துறழ
எண்வைத்துயர் பலவார்கொடி யெண்டிக்கினு மசைய. 65

சிறக்கும்வகை தமையோம்பிய செல்வத்துயர் குரிசில்
இறக்கும்பரி செய்த்துள்ளக மேங்கிக்கத றுவபோற்
பிறக்கம்படு வள்வார்ப்பணை பெரிதுங்குளி றத்திண்
இறக்கட்டிகி ரித்தானவ னிமிர்தீயினி றந்தான். 66

---

63. அவுணனும் அறியாதவனும் ஆகிய தாரகனது மார்பிற்பொருந்திய சக்கரத்தையுடைய விஷ்ணுவின் மகனாகிய மன்மதனுக்கு வெண்குடையாயிருக்கும் சந்திரனவன் அவுணர்பற்றும் குடையாகி அடைந்து அமர்ந்தாலன்ன குடைநிழல் என்க. குடை நிழலானது வாணாளைக் கொள்ளுதலைக் கொள்ளல் குறியாத அவுணன் என்றதனாலும், ஆயுளின் அழிவை அறியாதவன் என்றதனாலும் நித்தியமாயிருப்போம் என்னும் எண்ணமுடையான் என்க. வாணாள், உடைநாள் - ஆயுள். வெண் கொற்றக்குடையை நல்லநாளிற் கொள்ளுதலையும், வாளையும் அங்ஙனம் கொள்ளுதலையும் குறியா அவுணன் என்பாருமுளர். பற்று அக்குடை எனப் பிரிப்பாரும் உளர். அக்குடை என்றது வெண் குடையைச் சுட்டியதாம்.

64. வெண்மதியானவன் கிரணமாகிய கைகளைத் தாரகன் மார்பிலுள்ள சக்கரத்தை வவ்வ நீட்டிச் செவ்வியில்லாமல் சுருக்குதலைப்போல. முடிமீது வெண்குடையாயுள்ள வெண்மதி என்க. ஏற்றம் - உயர்வு; அது குறுக்கல் விகாரம் பெற்று நின்றது.

65. தமதென்றது கொடியை.

66. எய்த்து - அறிந்து. நிறக்கண் - மார்பில். குளிற. இறந்தான் - கடந்தான்.

மன்னாமவு ணன்கண்ணிணை வட்டித்தழ லுமிழ்வ
தென்னாய்முடி யாதினனினி யெனமண்மகள் விண்ணில்
பொன்னாகிய தன்மாற்றவ ளொடுபோய்மறைந் தொழுகத்
தன்னாருரு வேறாயெழுந் தனதூள்விழி தகையும். 67

கச்சுச்செறி யிடையார்கழல் கலவுங்கழ லுடையார்
வெச்சென்றடு படையாவுமி ளிர்க்கும்புய வலியார்
அச்சுற்றுல கீரேழும டங்கப்பொரு மிகையார்
நொச்சிப்படை யினர்முற்றிய நொறில்வெய்யரி னேர்ந்தார். 68

கணிப்பில்பல நாளுங்களுல் கண்டூதியை முற்றும்
மணிப்பொற்புய மொருவுற்றொளி மல்கப்புகு மிந்நாள்
தணிப்பில்புகழ் பேரூழிக டறுகட்கரி வதனத்
தணிப்பொன்முடி யிறையோடுத ழைக்கென்றமர் செய்தார். 69

சிலையோடெதிர் சிலையுஞ்செறி வாளோடுவை வாளும்
இலைவாரயில் வேலோடிலை வேலுஞ்சுள குறழ்கா
தலைதோலொடு தோலும்பரி யோடன்னது மிரத
மலையோடுருண் மலையும்பொரு மறவெங்கனல் சிதறி. 70

வேறு

மனம டிந்தவர் மகவு யிர்த்திலர் மயிர்கு லைந்தவர் மாதர்பேர்
தனைய டுத்தவர் புறனளித்தவர் தக்க வெம்படை கையெடார்
சினம டிந்தடி பின்பெ யர்த்தவர் செருவி னொந்தவ ரிவரைவிட்
டினம றிந்துகி ளந்த போர்களி ழைத்து ளாரிரு வோர்களும். 71

---

67. வட்டித்து - சுழன்று. மாற்றவள் - விண்ணுலகு. எழுந்தாலன்ன தூளானது கண்ணைத் தடுக்கும்.

68. நொச்சி மாலை - மாற்றார்க்கு எதிரூன்றி நொச்சிப் பூமாலை சூடித் தம் மதில் காக்குந் திறங்கூறுவது. வெய்யரில் நேர்ந்தார் - வெய்யராகிய பூத சேனைகளோடு நேர்ந்தார். வெச்சு - வெப்பம். நொச்சி மதில் காத்தல் எனினும் அமையும்.

69. இந்நாளில் உண்டாகிய புகழானது பேரூழிகள் வரையும் தாரகனோடு தழைக்குக என வாழ்த்திக்கொண்டு அமர்செய்தார்.

70. சிதறிப்பொரும்.

71. மனமடிந்து கவலையோடிருப்பவரையும், பிள்ளையிலா ஆடவரையும். புறன் - முதுகு. இனம் - விற்போர் செய்பவரோடு விற்போர் புரிவோர், மற்போர் புரிவோருடன் மற்போர் புரிவோர் என்க.

தேரி றக்கினர் வேழம் வீழ்த்தினர் தேசி கப்பரி தாழ்த்தினர்
வாரி றுத்தனர் கச்ச றுத்தனர் வார்கொ டித்திர ணூறினூர்
தாரி றுத்துட ரேுள டர்த்தனர் தாடு ணித்தனர் தலையொடும்
போரி ரித்தன ரின்ன வாறு பொலிந்த வூரகப் பாசியே. 72

கோயி லீள்பத ணங்கள் விண்டொடு கோபு ரக்குரு மேனிலை
வாயி லாதியி வர்ந்து டற்றிவ ழுங்கி ஞர்படை வீதிகள்
பாய சோரியி னுறு போன்றன பம்பி யூடறத் தேங்கலின்
ஆய மாளிகை மேடை மேனிலை யாழி வாய்ப்பலி லங்கையே. 73

வேறு

மண்டு நொச்சியினர் சாலமறம் வாடி விழலும்
மிண்டு மிஞ்ஞையினர் வெய்யவவு ணத்த லைவர்பின்
கண்டு நிற்பவது கண்டுவயி ரங்க டவுறக்
கொண்ட தேரினைவி டுத்துமண் குலுங்க விழியா. 74

தார கப்பெயரி ஞனெடிய தண்டு திரியாப்
பாரி டத்தொகைக ளோச்சியுயிர் பாற்றி நிமிரச்
சார தத்தலைவ ராற்றலர்த ளர்ந்தொ ழிவுகண்
டோரும் வீரர்க ளிலக்கருமொ ருங்கு பொருதார். 75

ஆர டுத்தமணி யாழிகள்சி தர்ந்து விழவெஃ
றேர னைத்தையு மெறிந்துதிரள் வீர ரையெலாம்
காரு வர்க்கடல்க டாயினனு லம்ப வெதிர்செல்
வீர சிங்கம்விடு வாளிமுடி வீழ்த்த தவனி. 76

---

72. தலையொடும் தாளைத் துணித்தனர். தார் - மாலை. ஊரகத் துள்ள பாசிப்படை. பாசிப்படை - பலமுள்ள படை. பாசி - பலம். பாசியானது நீரினிடத்து எவ்வாறு கலந்து விராவியுளதோ அவ்வாறு இருவகைப்படையும் கைகலந்து விராவிப் போர்செய்யும் படை என்பாரும் உளர்.

73. பதணம் - மதிலுண்மேடை. இரத்த ஆற்றை வீதிகள் ஒத்தன. தேங்கலினுல் இலங்கையாகும்.

74. உழிஞையினர் நிற்பத் தாரகன் கண்டு. இழியா.

75. தளர்ந்தொழிதலைக் கண்டு.

76. ஆரைக்கால். ஆழி - உருளைகள். வெல் தேர். நவ வீரர்களில் ஒருவனுகிய வீரசிங்கன் என்பவனே வீரரைக் கடலில் வீசினுன். முடி - தாரகனுடைய கிரீடம்.

உட்கி யோர்கதைம டங்கலுயிர் சோர வுகையா
வட்கி லாணிரத மெய்திமணி மோலி கவியூஉத்
தட்கும் வார்சிலைத டிந்துபொரு தீர னயரக்
கட்கு லாந்தொடையன் மார்பிலொரு சூல்க டவினான். 77

ஆடு போர்க்கொருவ னானவிறல் வாகு சமரம்
நீட வேளையிளை யோர்களுநி கழ்த்தி யுடையும்
பாடு கண்டுமுழல்ப கட்டிரத மூர்ந்து சினவிச்
சோடை நெஞ்சினன்னொ ரேலெனவெ திர்ந்து துனையா. 78

சிலைவ ளைத்தவுணர் தேவர்திசை யானை பிறவும்
குலைய நாகரிடி யென்றுகுழை வுற்ற ழிதர
உலைவி னானொலியெ டுத்தனனொ ராயி ரமெனும்
அலைசெய் வாளிகடு ரந்தனன ழன்ற வுணன்மேல். 79

ஆயி ரங்கணைவி டுத்தவுண னக்கணை யொரீஇக்
காயி ரும்பகழி நூறுகட வக்க டிதவை
மாயி ரும்பகழி நூறுகொடு மாற்ற வரதன்
சேய டுஞ்சிலையின் வல்லனிவ னென்று தெளியா. 80

தெய்வ மாப்படைசெ லுத்தவவு ணன்றி றலினான்
வெய்ய வப்படைவி டுந்தொறும்வி டுத்தொ ருவினான்
உய்வ தொன்றுமறி யாதவன்ம ருட்கை யுளனாய்
ஐய மாயையின டர்ப்பவத னைக்க டவினான். 81

அங்க ணப்படைய வன்வடிவ னந்த மொடுசென்
றெங்கு நின்றுபொர வீரரிமை யாரினை வுற
மங்கும் வல்லவுணர் துள்ளவது கண்டு மனிதச்
சிங்கம் வென்றபடை செம்மல்கையெ டுத்த னனரோ. 82

---

77. மடங்கல் - வீரசிங்கம். வீரதீரன் என்பவன் நவவீரருள் ஒருவன். சூல் - சூலாயுதம்.

78. சோடை - சடைவு. வீரவாகு நெஞ்சினனாய் எதிர்ந்து.

80. தாரகன் தெளிந்து.

81. அவுணன் செலுத்த. திறலினனாகிய வீரவாகுவும். அந்த அந்தத் தெய்வாஸ்திரங்கட்கு எதிரியான தெய்வாஸ்திரங்களை விடுத்து ஒருவினான். மருட்கை - வியப்பு. அதனை - மாயாஸ்திரத்தை.

82. நரசிங்கத்தைவென்ற சரப அஸ்திரத்தை. வடிவு - தாரகன் வடிவு. செம்மல் - வீரவாகு.

சிம்புள் வெம்புடையை நோக்கிவிளை மாயை சிதற
உம்பன் மாமுகவன் கைதவமு ஞற்ற விரிய
நம்பி தேர்கிலன லத்தபடை தூணி நிறுவி
இம்ப ரோடினன்பி டித்துவர வெண்ணி விரைவின். 83

வேறு

குறுமுனி விளைத்த சாபக் குருகுசுட் டியபே ரோங்கல்
இறுவரை முழையொன் றண்மி யிபமுக னிறந்து தோற்றுன்
கறுவொடு தொடர்ந்து போந்த காளையுட் சேற லோடும்
பெறுமுணர் வழியக் குன்றம் பேதுசெய் திட்ட தன்றே. 84

சென்றவன் றிரும்பக் காணுச் சேனைகா வலரொண் வீரர்
துன்றிய விலக்க ரெல்லாந் தொடர்ந்தவந் நெறியே போந்து
நன்றெனத் தோற்றி யாங்கே நவைவிளை பிறனில் கூட்டம்
வென்றவம் முழையிற் புக்கு விளிந்தன ரவரு மாண்மை. 85

வஞ்சனை வாய்த்த தென்று வரைமிசை யிவர்ந்து தீயோன்
விஞ்சிய வவுண ரார்ப்ப வில்வளைத் தனந்த கோடி
செஞ்சரந் தூண்டிப் பூதர் சேனையைச் சிதர்ப்ப நோக்கி
அஞ்சின ரமரர் வீணை யறவன்போ யடிகட் கோதும். 86

எயிற்குல மூன்று மொன்ரு யிருந்தன வெயிலே முற்றிக்
கயிற்கழ லவுண ராற்றல் காற்றிமா முகவ னெய்ப்ப
அயிற்குலப் படைக ணேண்டி யவன்விளை புணர்ப்பிற் பட்டு
வெயிற்குரு மோலி வீரர் வெற்பக மயங்கி ஞரால். 87

---

83. தாரகன் சரபாஸ்திரத்தை நோக்கித் தன் மாயை சிதறிப் போயினமையால் கைதவமாய் மறைத்தல் செய்யும்பொருட்டு ஓடா நிற்ப, இதனை வீரவாகுதேவர் அறியாதவராய் அம்பைத் தூணியிலிட்டு. நோக்கிச் சிதற.

84. கிரவுஞ்ச மலையானது அகத்தியரை முற்காலத்தில் மயக்கியது. அவர் அப்போது விபூதியால் அம்மாயையைவென்று முருகனுல் அழிக என் அம்மலையைச் சபித்தனர். ஓங்கலாகிய இறும்வரை. தாரகனுனவன் கடந்து தோற்றுதவனுயினன்; எனவே மறைந்தான் என்க. இறந்து - கடந்து. பேது - மதிமயக்கம்.

85. சென்றவன் - வீரவாகுவை. பிறனில் கூட்டத்தையும் வென்ற முழை எனவே, அம்முழை செல்லச்செல்ல வழிகளைக்காட்டி இதம்செய்து, பின்பு திரும்பிவருங்காலையில் வழிகாட்டாமல் துன்பம்செய்யும் என்க.

87. இருந்தன்ன எயிலே. முன் வெற்றிகொண்டு பின் அவனுல் மயங்கினுர் என்ருன்.

நஞ்செனக் கொதித்துத் தீயோ னம்படை யெஞ்சிற் றெல்லாம்
பஞ்சியிற் பறப்பக் காலாய்ப் படர்ந்தன னென்ன மஞ்சன்
அஞ்சலிர் தேவ ரென்று வணிமணிக் கொடிஞ்சித் திண்டேர்
வெஞ்சினத் தடுபோர் ஞாட்பின் விரைசெல வுந்திச் சென்ருன்.

ஆர்த்தன பூத வெள்ள மடைத்தன பதாகை வானம்
போர்த்தன திசைக ளோதை பொலிந்தன சமர்செய் சூழல்
தூர்த்தனர் மலர்கள் விண்ணேர் துளும்பின கடலு மண்ணும்
வேர்த்தன ரமர்த்த வீரர் வேறிருந் தவுணர் தொக்கார். 89

நெடுமொழி கிளந்து சூழ்வார் வஞ்சின நிகழ்த்தி நேர்வார்
விடுகணை பாய்ந்து பாய்ந்து மெய்யெலாந் தூணி போல்வார்
படுபிண மிடறிச் சென்று பறந்தலை யுழக்கி வீழ்வார்
இடுகிய வீரம் வேண்டா ரிருதிறத் தவரு மாதோ. 90

மடித்திதழ் தின்ஞர் பூதர் வாலெயி றழுந்தி மாதர்
துடித்திடு மதர நேரிற் சூழ்ந்தவர் படைக ணம்மேல்
எடுத்திடா ரென்று தீயோ ரிமைமுழு தொழியக் காய்ந்த
தடுத்தகண் வெகுளிச் செந்தீ யழித்திமைப் புளதா மென்றே.

தார்த்தடந் திணிதோட் பூதத் தலைவர்பல் கவந்த மாட
ஆர்த்தழன் முளிபுன் மேய்ந்தாங் கையென நூழி லாடித்
தேர்த்திரண் மிதப்ப நெய்த்தோர் தேங்கியும் போரி னீங்கார்
நீர்ச்செரு விழைந்த பாசி நிலையினைத் தெரித்து நின்ருர். 92

---

88. கால் - காற்று. என்ன - என்று நாரதன் சொல்ல.

90. நெடுமொழி - தன்மேம்பாட்டுரை; தன் வீரத்தைத் தானே எடுத்துப் புகழ்தல். வஞ்சினம் - சபதம். இடறி வீழ்வார். சுருங்கிய வீரத்தை விரும்பார் எனவே வீரஞ்சுருங்கியோரைக் கண்டால் அமர் செய்ய விரும்பார் என்பது.

91. எடுத்திடாரென்று இதழ் தின்ஞர். அடுத்த கண்ணின்று உண்டாகும் கோபத்தீயானது போரில் திரும்பவும் இமைத்தலுண்டாம் எனக் கருதி இமை ஒழியும்படி எரித்துக் காய்ந்தது. தீயோரது இமை என்றது கண்ணின் மேலிமையை. அழித்திமைத்தல் - மீள இமைத்தல். இனி, அழித்திமைத்தல் - போரைக் கெடுத்திமைத்தல் என்பாருமுளர்; எனவே இமைத்தல் போரழிதற்குக் காரணம் என்பது.

92. பூதத் தலைவரானவர் ஆடி நீங்காராய் நின்ருர். நூழில் - கொலை. தன் மெய்புதைந்த படையைப் பறித்து நிற்க. செரு - தடாகம்.

கால்பொரக் கனிந்து நைந்த கனித்திர ளுருவ தென்ன
மால்பொர னுெக்கித் தன்னை மதியகத் திழிக்கும் பூதர்
கோல்பொர வவுணர் சென்னி குருமுடி யோடும் வீழச்
சால்பொரு வுற்றுத் தீயோர் தலைவர்க ளுடைந்து
போந்தார். 93

உடைதல்கண் டார்த்த பூத ரோகையுந் தன்பாற் றேல்வி
அடைதலு நோக்கி வல்லே யந்தநா ளங்கி யென்னத்
தடைஇய சிலைகை வாங்கிச் சரமழை தூர்த்துப் பூதர்
மிடைதரு தலைவர் தம்மை விழிக்குமு னிரித்துச் சென்றான். 94

பண்டைநற் றவத்தி னுற்றுற் பாயொளி முகமோ ராறும்
குண்டலங் குலாய காதுங் கொழும்படைக் கரமீ ராறும்
தண்டைகிண் கிணிகள் சூழ்ந்த தாள்களும் பொலியத் தேரின்
அண்டர்கள் சூழ நின்ற வமலனை யெதிரே கண்டான். 95

தன்னையு மறியா துள்ளந் தழைத்தெழு மன்பு பொங்க
இன்னவ னேயோ வீசன் மகனென வியம்புந் தோன்றல்
என்னலு மன்ன னேயா மிவனென வமைச்சர் கூற
முன்னவன் முன்னர்த் தேரின் முன்னினன் மொழித லுற்றான்.

நாரணன் முதலா யுள்ளார்க் கல்லது நம்மேற் போர்க்குக்
காரணி மிடற்றுற் குன்னுங் கடனிலை மைந்த வீங்குத்
தாரணி படையி னேடுஞ் சார்ந்ததென் னுரைக்க வென்றான்
பூரணப் பொருளா யுள்ள புண்ணிய னிதனைக் கூறும். 97

நீரையுடைய தடாகத்தில் உண்டான பாசியின் நிலையை என்க. அப்பாசி யானது நீரைவிடாது அதனோடு கலந்து நிற்குமாறுபோல, படைகளும் அஞ்சியோடாது பகைவரோடு எதிர்த்தெதிர்த்துக் கலந்து நின்றே போர் செய்யுமாதலால் இப்படைக்குப் பாசிப்படை என்றார். நீரை விழைந்த பாசிக்கொத்து, செருவை விழைந்த பாசிப்படை என்பாருமுளர். செரு - போர்.

93. மாலானவன் தன்னை இழித்துக் கொள்ளுதற்கு ஏதுவாகிய பூதர்களுடைய கோல். அவுணர் சென்னி வீழ்ந்தமாத்திரத்தில் இதனைக் கண்டு வந்த ஏனைய அவுணத் தலைவர்களும் வந்து பொருது தோற்றுப் போயினர். தன்னை என்றது திருமாலை. சால் - மிகுதியாக. சாலை யொத்து வீழ என்பாரும் உளர். சால்பு ஒருவுற்று.

முறைபுரிந் தவரை யோம்பி முறைமையிற் றிறம்பி மன்னே
மிறைபுரிந் தோரைக் காதும் வேந்திலா வேந்த னெந்தை
அறைகழல் வீர விண்ணேர்க் கருஞ்சிறை யிட்ட வாற்ருல்
இறையினும் முயிரைக் காற்ற வேயினன் போந்தா மென்ருன்.

வரம்பிலா வாற்றற் செம்மல் வரவினைக் கிளத்த லோடும்
வரம்பிலா வின்ப முக்கண் வள்ளலார் தமக்குத் தந்த
வரம்பிலா வரமு மற்று மதித்துமா முகத்துத் தோன்றல்
வரம்பிலாச் சீற்றம் பொங்க மற்றெதிர் கழறு கின்ருன். 99

மாயனூர் திகிரி யீது மார்பிடைக் காண்டி வீந்து
போயினு ரன்றி யென்னைப் பொருதவ ருலகி னில்லை
ஆயினர் பலரூண் வெற்புக் கடுபடை தமக்கு நீவந்
தேயினு ரினையைநீயு மேகென விறைவன் சொல்லும். 100

உடுவொளிக் குயர்ந்த திங்க ளுருகெழு பரிதிப் புத்தேள்
விடுமொளிக் குயருங் கொல்லோ விண்டுகைத் திகிரி வென்ருன்
முடுகுபு நுமைய னூரு மண்டங்க ளன்றி முற்றும்
நொடிவரை யடுநங் கைவே னுன்வயத் தாமே பேதாய். 101

பொய்தகு வரையும் புக்கெக் கழுத்தத்திற் புகலு நீயும்
செய்தவ ரிடும்பைக் குன்றுந் திகழ்ந்திடு நும்மார் தேசும்
வெய்திவ ணழியக் காண்டும் வாயினல் விளம்ப லென்னும்
கைதனில் விளமப லனறே வீரர்தங் கடப்பா டென்ருன். 102

---

98. காதுகின்ற வேறு ஒரு வேந்தைத் தனக்கு ஒப்பாகவும் உயர்வாகவும் இல்லாத வேந்தன் எந்தையாகிய சிவன். எந்தை ஏயினன்.

99. வள்ளலார் தந்த வரத்தையும் மற்றவற்றையும் மதித்து.

100. எனது வெற்புக்கும் எனது அடுபடைக்கும் நீ வந்து என்னல் ஏவப்பட்டாருள் பலர் ஊண் ஆயினர். உன்னல் ஏவினர் வந்து ஊணுயினர் எனினும் பொருந்தும்.

101. விஷ்ணுவை உடுவாகவும், தாரகனைத் திங்களாகவும், முருகனைப் பரிதியாகவும் கொள்க. வென்ருல். ஆளுகின்ற. உனது ஆயுதத்தையும் என்வசப்படுப்பேன் என்னும் கருத்தால் 'மாயனூர் திகிரிமீது' என்றதற்கு 'வேல் நுன் வயத்தாமே' என்ருன். நுமையன் - உன் தமையனும் சூதன்.

102. காண்டும் - செய்வோம்.

இன்னண மிறைவன் கூற விபமுகன் மான முந்தப்
பொன்னிவர் தோளை நோக்கிப் பொருசிலை நோக்கிக் கையால்
மன்னிய முகத்து ரோமம் வருடினன் திரித்துக் கொண்டு
தன்னெடுஞ் சிலையைக் கோட்டி நாணினைத் தழக்கங் கண்டான்.

வன்றிற லிளையோன் றானும் வார்சிலை வாங்கி நாணில்
துன்றொலி யெழுப்பி விட்டான் றுளங்கின வண்ட மெல்லாம்
வென்றில மேனும் போரின் விளிகுவ மேனும் வென்றி
இன்றுள மென்று தீயோ னெரிகணை தெரிந்து கொண்டான்.

மிக்கவ ரில்லா வண்ணம் வென்றசீ ரிவன்முன் னோரைப்
புக்கடல் புகழே யாகப் புகலும்வை யகங்க ளென்றே
தொக்கயே ரண்ட மெல்லாந் தூள்படுத் துருவிற் பூசும்
முக்கணை நுதற்கண் வாய்த்த முதல்வனுங் கணைகைக்
[கொண்டான். 105

வேறு

எண்ணில் பல்கணை தான வன்றொட
ஏவொ ராயிரந் தொட்டவை
மண்ணி றுத்தவன் மீட்டோ ராயிரம்
வாளி தூண்டவ வற்றையும்

104. தீயோனுனவன் நான் வெல்லாவிட்டாலும், போரில் இறந்தேன் ஆனாலும், வெற்றியுளேன் என்று கருதிக்கொண்டான் என்க. தாரகனவன் தன்னை யாவரும் சுத்த வீரனாகிய முருகனோடு எதிர்த்தவன் என்று புகழ்ந்து சொல்லுவர் ஆகலின் 'வென்றி இன்றுளம்' என்று எண்ணினான் என்க.

105. மிக்கவர் - அமர்த்தொழிலால் மேலானவர். வையகங்கள் புகலும் என்று கருதிக் கணை கைக்கொண்டான். தூள்படுத்து அத்தூளை உருவத்தில் பூசிக்கொள்ளுதற்கு ஏதுவாகிய அக்கினிக்கண் முக்கண்ணினுள் நுதற்கண்ணை மறைத்துவந்த முதல்வன்; முக்கணை ஐ சாரியை. முருகக் கடவுளானவர் தாம் மூன்று கண்ணினோடும் தோன்றி, அக்கினிக் கண்ணினால் தாரகன் முதலாயினோரை எரித்துக் கொல்லுகின்ற வல்லமையிருந்தும், அவ்வாறு செய்யாது உலகத்தார் எவரும் அமர்த்தொழிலால் தமக்கு மேம்பட்டவர் இல்லை என்னும்படி எவரையும்வென்ற தாரகன் முதலாயினோரை அவ்வமர்த்தொழிலால் வெல்லுதலே புகழாகும் என்று சொல்லுகிறபடியால் அதற்கு இயைதர அக்கினிக்கண்ணை மறைத்து அவ்வமர்த்தொழிலாலேயே வெல்லும்பொருட்டுக் கணை கைக்கொண்டான் என்க.

அண்ண லையிரு வாளி யேவிய
றுத்தொ ரம்பின வன்சிலைத்
திண்மை சிந்திவில் வேறெ டுக்குமுன்
செல்ல வாயிர முந்தினன். 106

வல்லை வாங்கிய வில்லி ஞயிரம்
வாளி தூவிம டித்தவை
அல்ல மூத்திய வாக்கை யாளன
னந்த வாளிது ரந்தனன்
எல்ல மூத்திய மேனி யண்ணலி
லக்க வாளியி னட்டவை
சொல்ல மூத்திய கோடி வாளிது
றுத்த னன்றனு வெங்கணும். 107

வாளி கோடியி ரட்டி யுந்தினன்
மாயை மைந்தன ரன்மகன்
தூளி கண்டவை கோலி ரண்டுது
ளைக்கை கோடிற விட்டனன்
நீளு றுப்பற வாயி ரங்கணை
யானை டுங்கொடி நூறினன்
ஆள வந்தவ னெட்டின் வில்லி றுத்
தாயி ரத்தடர்த் தான்வையம். 108

பாய்ந்து வேறொரு வையம் வார்சிலை
பற்றி வெங்கணை யாயிரம்
வாய்ந்த கால்வல வன்பு யத்தின்வ
ருந்த வுய்த்திளை யோன்கணை
ஆய்ந்தொ ராயிர நெற்றி யேற்றவ
யர்ந்து சோரிநி லத்துகச்
சாய்ந்த னன்றடந் தேரின மாமுகன்
சாய்ந்த வானவ ரோங்கவே. 109

---

106. மண்ணில் இறுத்து அவன். ஐயிருவாளி. அவனுடைய.

107. அவை மடித்து - முருகவேள் விட்டவற்றை மடித்து என்க. அவை அட்டு. தனு - உடல்.

108. கை கோடு: உம்மைத்தொகை. கை - துதிக்கை. ஆயிரங் கணையால் நூறின் அட்டால் வில்லை அறுத்து. ஆயிரத்தால் தேரை அடர்த்தான்.

109. கால் - வாயு. தேரில் சாய்ந்தனன்.

வேறு

கண்டவ வன்படை காவலர் மானம
　　லைப்பவொ ருங்குகலாய்
மண்டிய முற்படை யாவும்வ ழங்கவ
　　ளங்குல வுங்குமரன்
கொண்ட சிலைக்கணி ருங்கணை பௌவமுண்
　　கொண்டலெ னச்சொரியத்
திண்டலை தோள்கழல் சிந்தம டிந்தனர்
　　செத்திலரோடினரால். 110

அழிந்தவு ணர்ச்சியெ ழுந்தெழு தாரக
　　னுவிளை வென்கொலெனா
இழிந்தவு ளத்தின னிப்படை யாலிவ
　　னெய்ப்பில னென்றுகனல்
பொழிந்தடர் தெய்வத மாப்படை யாவும்பு
　　குத்தின னன்னவைபோய்த்
தொழுந்தகை யைத்தொழு தண்மையி னின்றதொ
　　லைத்தவ னெண்ணமெலாம். 111

புராரித ரும்படை போக்கின னூர்த்தது
　　போதவு ளத்திறையைப்
பராவிய கங்கையி னேற்றலு நொந்துப
　　றைந்தன நந்திருவென்
றுராவும னத்தினன் மாயைவ லானிவன்
　　ஒய்யென வாற்றியது
விராவுவல் வெற்றியெ னக்கிர வுஞ்சவி
　　லங்கலொ டும்வருவான். 112

---

110. திண் தலை. போரில் இறவாதவர்கள் யாவரும் ஓடினர்.

111. ஆ என்பது ஆச்சரியக்குறிப்பில் வந்தது. அவன் எண்ணம் எல்லாவற்றையும் தொலைத்து நின்றன.

112. பாசுபதாஸ்திரத்தைப் போக்கினன். முருகக் கடவுளானவர் அகங்கையால் ஏற்றலும். உராவும் - பெயர்ந்த, இம்முருகன் மாயையில் வல்லமை இல்லாதவனுதலால் அம்மாயையை ஆற்றி வெற்றி விராவுவேன் என்று. வலான் - வல்லமையில்லான்.

முப்புர மெண்ணில வாகவி லங்கன்மு
னைத்தெழு சூரிளவல்
அப்புர வாழ்நர்க ளாயொரு சார்வரும்
ஆழிக ளாகவரை
துப்பின ஞர்வடவைக்கன லாம்புனல்
தூங்குமு கிற்படலம்
மைப்படி நீள்சிலை யாகவி டிக்குல
மாமுக ஞய்வருவான். 113

நேமிவ ரைப்புடை சூழிரு ளாகநெ
டுங்கிரி யாங்குஞெமிர்
நாமிகு பாரிட ரெண்ணில ராவன
லத்ததி சைக்களிறு
பேமுறு வெற்புறவன்னவை சூழ்பெரு
மால்வரை யாய்த்தழைவான்
தோமுறு காலுரு வாகவ டுக்கறு
ளக்கெரி யாயெழுவான். 114

பொங்கழல் கான்ஞெகி ழித்திர ளாய்ப்புவி
மாதிரம் வான்மிடையத்
துங்கமி குந்தகல் சூரிய ரெண்ணில
ராய்ச்சுல வுற்றழல்வான்
இங்கன னந்தமெ ழுங்கிரி யோடுமி
ழைத்தமை கண்டிவையோன்
செங்கைய யிற்படை தூண்டின ஞேக்கிய
தோன்முகன் சீற்றமுறீஇ. 115

---

113. கிரவுஞ்சமாகிய விலங்கலானது திரிபுரம் அநேகமாகத் தாரக ஞனவன் அத்திரிபுராதிகளாய் ஒருசார் வருவான். கிரவுஞ்சமாகிய வரை யானது ஆழிகளாக, துப்பினஞகிய தாரகஞனவன் வடவைக்கனல் ஆகு வான். ஆழி - கடல். மேகம் படியும்படியான மலையானது முகிலாக, மாமுகஞனவன் இடிக்குலமாய் வருவான். சிலை - மலை.

114. கிரியானது இருளாக. ஆங்கு ஞெமிர் பாரிடர் - அவ்விருட் பூமியில் உள்ள பூதர். வெற்பானது திசைக்களிருய் உற. அன்னவை - திசைக்களிறு. திசைக்களிறுகள் சூழ்ந்த சக்கரவாளகிரியாய்த் தழைவான். அச்சம். ருபம்.

115. துங்கம் மிகுந்த கல்லானது ஆய் மிடையாநிற்ப. கல் - மலை.

இருதுணி செய்குவ லின்னதை யென்றெதி
ரெய்தலு மார்புதுளைத்
தருவரை யட்டடல் வீரம யக்கம
கற்றியெ ழுந்துயர்வான்
பொருதிரை யுந்திது ளைந்திமை யார்பொழி
பூமழை யுண்முழுகித்
திருவளர் கைக்கணி ருந்தெழுந்தது
தேவரி ருந்துதியே. 116

வேறு

குன்றொடு மவுணற் சாடிக்
குடிமிகைக் கொண்ட செவ்வேள்
முன்றிறல் வீர வாகு
முதலியோ ரெவருந் தொக்கார்க்
கொன்றிய கருணை நோக்கம்
உதவியா டமரிற் றுஞ்சும்
வன்றிற லாளர் தம்மை
வருகென வெழுப்பிக் கொண்டான். 117

தாரகன் விடுத்த தெய்வத்
தறுகண்மாப் படைக ளோடும்
கூரிய மாய னேமிக்
கொழும்படை நின்ற வெல்லாம்
வீரவா குவின்கை யுய்த்துப்
போற்றெண விளம்பிப் போர்செய்
பாரினை யெவருஞ் சூழப்
பணியெழ நீத்துச் சென்றான். 118

போரிடை வீழ்ந்தோர் மெய்யிற்
பொங்கிமேற் றுளித்த நெய்த்தோர்
ஆரவேற் றுமைப்பட் டென்ன
வலரிமெய்ம் முழுதுஞ் சேந்தச்

116. தாரகன் மார்பைத்துளைத்து.

117. குடுமி - வெற்றி. துஞ்சல் - சாதல்.

சோரியை மண்ணு வான்போல்
தொடுகடல் குளித்தான் வீழ்ந்த
தாரகன் வீரச் செங்கேழ்
தரணிவீழ்ந் ததுவும் போன்றான். 119

வெய்யவ னொளிமை யாப்ப
விளங்குருக் குமரன் வீரச்
செய்யொளிப் பிழம்பு தோற்றிச்
செறிந்தென மாலைச் செவ்வான்
ஐயெனத் தோன்றிற் றங்கண்
அவன்பெரும் புகழ்சீர்த் தென்னப்
பெய்யொளி முழுவெண் டிங்கள்
பிறக்கம்வாய்ந் தெழுந்த தன்றே. 120

மூவுல குய்ய வந்த
முன்னவன் சீர்த்தி யோடும்
தேவர்கள் புகழும் பாங்கர்ச்
சீர்த்தென நெடுவா னெங்கும்
தாவில்பல் லுடுவின் கூட்டம்
தகைந்தன வாய காலைக்
காவன்மூ வர்களும் வேண்டக்
கடவுளர் சிலம்பைச் சார்ந்தான். 121

முந்துறத் தேவத் தச்சன்
முறைமையி னங்கட் செய்த
கொந்தொளி நகரிற் சேனைக்
குழாத்தொடு மசைந்தா னகப்
பைந்துழா யலங்கன் மார்பிற்
பண்ணவன் முதலோ ரெல்லாம்
வெந்திற லவுணன் புன்கோற்
குட்படு வினைக டீர்ப்பான். 122

---

119. சேந்து அச்சோரியை.

121. திரிமூர்த்திகளும். தேவகிரி என்னும் பெயருடைய மலையைச் சார்ந்தான்.

122. அசைதல் - தங்கல்.

விசும்பமர் கங்கை தேனு
　　விரைநறு மலர்ப்பூந் தாருத்
தசும்பம ரமிழ்த மாதி
　　தகைதர வருத்திக் கொண்டே
அசும்புருக் குமரற் காட்டி
　　யணிந்தருச் சித்த யிற்றி
இசும்பெனும் பவங்க ளேங்க
　　வேத்தினர் தொழுது சூழ்ந்தார். 123

வேறு

குடுமிகைக் கொண்ட மண்ணுமங் கலமும்
　　கூர்த்தவாண் மண்ணுமங் கலமும்
அடுதிற லவுண னகர்வயிற் புரிதல்
　　அடாதென வகற்சியிற் றூய்மை
படுமிட னறிந்து செய்தது நிகர்க்கும்
　　படையொடு பண்ணவ ரெல்லாம்
விடுசுட ரிமைக்கு முருவனை யாட்டி
　　வியத்தகப் பூசனை புரிதல். 124

கடவுளர் வழிபா டறிந்துமற் றியாமும்
　　கழன்மலர் வந்தனை புரியப்
படர்குது மெனவந் தணைந்தவன் போலப்
　　பாற்கரன் றிரைக்கட லெழலும்

---

123. வருவித்துக்கொண்டு. காமதேனு. தாரு - கற்பகம். ஏர் அசும்பும்படியான உருவையுடைய குமரனுக்கு. இசும்பு - வழுக்குநிலம்.

124. படைக்குப் பூசை செய்தலொடு முருகவேளுக்கும் பூசை புரிதலானது நிகர்க்கும் என முடிக்க. குடுமி - வெற்றி. ஒரு பேரரசனுனவன் பகையரசரைப் போரில்வென்று வெற்றிகொண்டமாத்திரத்தில், அமைச்சர் முதலானோர் யாவரும் அப்பேரரசனைச் சிங்காசனத்தில் ஏற்றி, அபிடேகம் செய்தலோடு அப்பேரரசனுடைய வாளாயுதத்தையும் வைத்து அதற்கு அபிடேகம் செய்து பூசித்தல் வழக்கம்; ஆகலின், ' குடுமிகைக்கொண்ட மண்ணுமங்கலமும், கூர்த்தவாள் மண்ணுமங்கலமும் ' என்றார். தொல் - புறம் - 13 காண்க. மண்ணுதல் - கழுவுதல்; என்றது அபிடேகித்தலை. இருவகை மங்கலத்தையும் செய்தல் தாரகன் நகரில் பொருந்தாது என்று.

நடவிய கடிநாட் புடவிதாழ்ந் தமைதேர்
நம்பிரா னேவலிற் றென்பால்
வடதலைக் கிரிகள் பெயர்வன புரைய
வயவர்தேர் புடைவர நடந்தான். 125

மண்ணிடை யாங்காங் கிறையமர் தலங்கள்
வழியினோர் பட்டன பாரா
மண்ணியாற் றருகி னிறுத்துழி மணித்தேர்
வார்கொடி புடைத்தலுந் துருவன்
நண்ணிய பிணிப்பிற் றீர்ந்துவீழ்ந் தென்ன
நரலைவீழ்ந் ததுகதி ரதுகண்
டுண்ணிறை களிப்பி னெழுந்தென மாரு
முடுபதி யொளிர்ந்தது விசும்பில். 126

இரவவ ணிருந்து காலையி லீசன்
பூசனை யியற்றியவ் வீசன்
பரவுபல் படைக்கு நாயக மான
படைக்கலங் கொடுத்திடப் பெற்று
விரவிய சேனை யொடும்வழிக் கொண்டு
வெஞ்சுரங் குளிர்தகக் கடந்து
வரமலி செந்தி லடுத்தவ ணினிது
வதிந்தன னென்னையா ளுடையான். 127

முந்துதா னளித்த வரமும்பின் றந்தை
யருளுநா ளிறுதியு முழுதும்
புந்திகொண் டிருந்தும் புறப்பொருண் மரபு
புவித்தலை வழங்கிலக் கியமாச்

---

125. கடிநாள் - உமையோடு கடவுள் மேருகிரியிற்செய்த விவாக காலத்தில். புரைய என்றது இல்பொருளுவமை.

126. சேய்ஞலூரில் தங்கியபோது, துருவ சக்கரமானது கீழே வீழ்ந்த வாறுபோல் சூரியன் வீழ்ந்ததைக் காணலால், அச்சூரியனுக்கு எதிரியாகிய சந்திரனனவன் களித்து எழுந்தாற்போல் ஒளிர்ந்தான். துருவனது பிணிப்பினின்றும் எனினும் பொருந்தும்.

127. படைக்கலம் - பாசுபதாஸ்திரம்.

சிந்தைசெய் தவுணர் தோற்றமும் வலியும்
செய்கையு முழுவதுங் கடாவி
அந்திலொற் றுக வாகுவை யையன்
அகற்றின னவனுந் தாழ்ந் தெழுந்தான். 128

அளைதொறு மவுண ரரக்கர்நோற் றிருந்தார்
அழிதகப் பிலமது புகுத
வளமலி கந்த மாதன மிவர்ந்து
வயங்குபே ருருக்கொடே மூலகும்
களிமிகு சூர னகரமு நோக்கிக்
காயமே வழியெனச் செல்வான்
தளைவுறும் வீர சிங்கனை யழித்துத்
தடவிய விலங்கைகுப் புற்றான். 129

ஆழியு ளிலங்கை யழுந்தவாங் கெதிர்ந்த
அதிவீர னுயிர்குடித் தேகி
வாழிய வீர மகேந்திரம் புக்கு
வாயில்காத் தமர்கய முகத்துப்
பாழியந் தடந்தோட் பதகனைச் சவட்டிப்
பட்டினம் படர்ந்தருஞ் சிறையில்
தாழுறுஞ் சயந்த னுளத்தினைத் தெருட்டிச்
சார்ந்தனன் சூர்முத லவைக்கண். 130

எவ்வெவ ரவையுந் தவ்வெனப் பொலிந்த
வீடிலாச் சூரன்வீற் றிருந்த
அவ்வவைக் களமு மவன்றவி சொளியும்
ஆங்கவன் றேசுமை யாப்பச்

---

128. தான் கொடுத்த வரத்தையும், சிவன் அருளிய நாள் எல்லையின் முடிவையும் தான் அறிந்திருந்தும் என்க. வழங்குவதற்குத் தான் இலக்கியமாக. தூது அனுப்பிப் போர் செய்தல் முதலியவற்றைக் கூறுவது புறப் பொருள் ஆதலால் இவ்வாறு கூறினர். தான் அளித்த வரம் என்பது இப்படலத்து, ''தறுகணவு ணக்குலத்துச் சாருதிர் என்றவர்க் கருளி'' (செய் - 10) என்றமை காண்க.

129. அளை - குகை. இருந்தாரெல்லாம் அழியும்படி. காயம் - விண்; தலைக்குறை. தளைவுறும் - தடுத்த.

செவ்விய குமர னருளினோர் தவிசு
சிவணலுஞ் சென்றவ ணிருந்தான்
தெவ்விய சூர னெரியெழ விழித்துச்
சிறுவநீ யாரென மொழிவான். 131

முக்கண னுயிர்த்த முருகவேள் விடுப்ப
முன்னிய தூதன்யா னீங்குப்
புக்கதென் னெனிற்கேள் பொன்னுல கழித்துப்
புலவரைச் சயந்தனோ டழியத்
தொக்கபல் லூழி வருத்துதி யன்றே
துயருமச் சிறைதுமித் தொழிப்பின்
ஒக்கலோ டின்னும் வாழ்குவை யன்றேல்
உம்பிபோ லொருகணத் திறப்பை. 132

சலந்தரன் முதலா நுன்குலத் தலைவர்
தருக்கினாற் றேவரை யின்புக்
கலந்தன ரழியக் கவற்றிமாய்ந் ததுநன்
றறிதியே யன்றியுந் தளரா
வலந்திரு வீரம் வரமிக வுடையார்
வல்லுத லில்லவர்க் கவற்றின்
நலந்தரு மேகொ லவரழு நீரே
நலனழி படையென வறியாய். 133

ஆதலாற் றேவ ரருஞ்சிறை சீத்தின்
பார்மதி யென்றுரைத் தீங்குப்
போதென விடுத்தா னென்னலு முளத்துப்
பொங்கிய வெகுளிமீக் கிளைப்ப

---

132. **உம்பி - உன் தம்பி; தாரகன்.**

133. **நுன்குலத் தலைவர்களானவர் தேவர்களை இன்பத்துக்கு அலந் தழியும்படி வருத்தி மாய்ந்ததை அறிதியே. இன்பம் அநுபவித்தற்கு அலந்து. வலம் முதலானவற்றையுடைய வலியோரானவர்கள் அவ்வலம் முதலியவற்றில் வல்லமை இல்லாதவரை வருத்தினால் நலம் ஆகுமா? ஆகாது. வல்லுதல் இல்லவரைத் தேவராகக்கொள்க. தேவர்கள் உன்னால் வருந்தி அழுகின்ற கண்ணீரே உன்னுடைய நலனை அழிக்கும் படையாகும். ''அல்லற்பட் டாற்றா தழுதகண் ணீரன்றே, செல்வத்தைத் தேய்க்கும் படை'' (குறள் - 555) என்றார் திருவள்ளுவர்.**

மூதறி வெனக்குக் கிளத்தலா னுமையன்
அறிவினு முருகனே போலும்
வேதனை யிரிந்தோர் தமக்குநன் றுறுப்பன்
விடுவனே சிறையகத் தோரை. 134

எம்பிபோ லெனையு நினைந்துனை விடுத்த
இளையவன் யானென வுயங்கத்
தம்பியை யெம்பி யாக்குவன் றருமம்
அன்றெனத் தாழ்ந்தனன் வேற்கை
நம்பியை யெம்பி செல்லிட நென்னல்
நடத்துவன் வீரமன் றேயென்
றம்புவி வியப்பச் சிறுவரால் வேறல்
அமர்ந்துளே னேகுதி யென்றான். 135

இகந்துரை கேட்ட வீரனுஞ் சினத்தின்
இயம்புவன் மான்முத லோர்தம்
அகந்தையைத் தணித்த வகந்தையா யுண்மை
அறைந்தனை தத்துவந் தோறும்
நிகழ்ந்திடு மண்ட மளப்பில வவற்றுள்
நிலனுறு மண்டத்தா யிரத்தெட்
டுகந்துளன் யானவ் வனைத்துநின் றளிக்கும்
ஒருமுத லுனைவிடு முருகன். 136

---

134. நுமையன் - நுந்தமையன். முருகன் - இளையவன். உருவத்திஞல் அல்லாமலும், அறிவினுலும் இளையன்போலும். சிறையில் அகப்படாது இரிந்தோர்தமக்கும் வேதனையைச் செய்வேனுனல், சிறையகத்தோரை விடுவேனே?

135. வலியிலாத தாரகனைப்போல என்னையும் நினைந்து உன்னை விடுத்த முருகனுனவன், யான் எவ்வாறு தாரகனுகிய தம்பியை இழந்து வருந்துகின்றேனே அவ்வாறு வருந்தும்படி, அவனுக்குத் தம்பியாகிய உன்னை என் தம்பிபோல் இறக்குமாறு செய்வேன். ஆனுல், தூதனைக் கொல்லல் தருமமல்ல ஆதலின் தாழ்த்தேன். யான் என - என்னைப் போல. தம்பியை என முன்னிலையைப் படர்க்கையாகக்கூறினுன். முருகனை என் தம்பி சென்ற வீரசுவர்க்கத்தில் நேற்றைத்தினமே அநுப்பிவிடுவேன்; ஆனுல், இளையவனைக் கொல்லலாகாது ஆகலின் வீரம் அல்ல என்று கருதி அவ்விளையவனை எனக்கு இளையவரால் வெல்ல நினைத்திருக்கின்றேன். தாரகனை அழித்த நென்னலே. என்னுடைய சிறுவரால்.

136. சூரனுனவன் "மூதறிவெனக்குக் கிளத்தலான்" என்று சொன்னதிலுள்ள எனக்கு என்னும் சொல்லுக்கு, இச்செய்யுளால் வீரவாகு தேவர் 'ஆயிரத்தெட்டு அண்டம் ஆளும் இயல்பினேன் என உயர்வு தோன்றக் கூறினுன்' என்று கருதிப் பொருளுரைத்தார் என்க.

என்றுமோ ரியல்பி னின்றதன் னிலைமை
இருந்தவர்க் கறிவுறுப் பான்போல்
என்றுமவ் விளமை தணத்தலின் மையினால்
யாவரு முருகனென் றிசைப்பர்
நன்றவன் கொளுத்து முதுக்குறை வென்று
நலனெனு மிளமையிற் றணவா
தொன்றலி னறிவி னானுமந் நாமம்
உள்ளதெக் காலமு மவற்கே. 137

ஆரடு திகிரிக் கூவிரத் தடந்தேர்
அடுதிறற் களிற்றினம் பரிமா
வீரரைப் பல்கா விடமறக் கனுற்றி
வெஞ்சம ருழப்புழி யுயிர்க்கு
வாரமுற் றிரிந்த வெமர்க்குவே தனையை
மண்டிய வெமரொடு மிறந்தியான்
பாரகத் துறுப்ப னிதுவரும் பொருட்டுப்
பண்ணவர் படுசிறை வீட்டேன். 138

உம்பரைத் தாங்க வருமுரு கனையே
நானென வும்பர்க ளுயங்கத்
தம்பியா நினையு மெம்பியாக் கொள்வல்
தனக்குது தருமமன் மையினால்

---

137. முதல் இரண்டடியினும் உருவத்தால் இளையன் என்பதற்கு ஏதுக்கூறிப் பின் இரண்டு அடியால் அறிவால் இளையன் என்பதற்கும் ஏதுக் கூறினர். எவருக்கும் முருகன் அறிவிக்கின்ற முதுக்குறைவானது எப் போதும் நலன் என்கின்ற இளமையில் நீங்காது ஒன்றலினாலே அறிவினாலும் முருகன் என்க. முதுக்குறைவு - பேரறிவு.

138. ஆர் - ஐந்துருவாணி. தேர்ப்பண்டி அகவாய். உயிரின்மீது அன்புற்றுத் தோற்று ஓடின எம்மவர்க்கு. வேதனையாவது சூரன் இருத்த லால் அச்சூரன் முருகனைவென்று நமக்கு இதம் செய்வான்; நாம் போரில் முருகனை எதிர்த்து ஏன் வம்பாக இறக்கவேண்டும்? என்று உயிரில் அன்பு வைத்து முருகனுக்குத் தோற்றோடும் அவுணர்களானவர் பின்பு முருகனால் சூரன் இறந்தமாத்திரத்தில் சூரன் இறத்தலால் எமக்கு இன்பம் நீங்கி விட்டதே என்று வருந்துதல். இது - வேதனை.

நம்பிமற் றிசையா னருள்வழிச் சிறையை
நலியனு தியரென வுளத்துப்
பம்பிய மான முலப்பில தரனல்
பணிந்தது செய்கிலன றழ்த்தேன். 139

நெருநலே பணிந்து முற்றவப் பயனல்
எம்பிசெ னீள்கயி லாயம்
முருகனை விடுப்பன் மெய்யம ரிகந்து
முரிதிரு விழைவது வீரர்
தருமமன் மையினல் வீரமன் றெனப்போர்
தனிற்படும் தகைமையே வேட்டிங்
கொருசிறு மீனு நீயொளி வேறல்
உவந்தன னெனக்கொள வுரைத்தாய். 140

இன்னதுன் கருத்தே லிங்ஙன மாக
என்றனன் வீரர்கள் வீரன்
அன்னது செவியிற் புகுந்தெனக் கண்கள்
அங்கிகான் றுடன்மயிர் பொடிப்ப
மன்னுயிர் கோறல் பழியிவற் பற்றி
வன்சிறை யிடுமினென் றுருத்துத்
தன்னருகுள்ளோ ராயிரர் தம்மை
ஏயினன் றறுகண்வா ளவுணன். 141

---

139. முருகன் நானுகவும் நீ என் தம்பியாகவும் கொள்வல் என்றதனல், இராசியாகப் போவேன் என்பது. இராசியாதல் தேவர்களுக்குச் சம்மதம் ஆகாது ஆகலான், ''உம்பர்கள் உயங்கக் கொள்வல்'' என்றுன். பதியாய் உள்ளவன் பசுவாய் உள்ளவரோடு இராசியாதல் தருமமல்லவாதலின், நம்பியாகிய முருகன் அதற்கு உடம்படான். முருகனது ஆக்கினையின்வழிச் சிறையை நலிவனேயானல் எனக்குத் தாயாதிகள் ஆகிய தேவர்கள் பின்பு பரிகாசம் செய்ய, அதனல் எனக்கு மானமானது உலப்பிலது ஆகும். அதனலே முருகனைப் பணிந்து சிறையை வீட்டலாகிய அதனைச் செய்யாது தாழ்த்தேன். தனக்கு - முருகனுக்கு.

140. தாரகன் சென்ற கயிலாயத்துக்கே மீளும்படியாக முருகனைச் செய்து விடுப்பன் என்றதனல் இராசியாகப் போவேன் என்பது. நீ என்றது வீரவாகுதேவருக்கு முன்னிலையாய் இருக்கின்ற சூரன். சிறுமீனுகிய நீ சந்திர சூரியராகிய ஒளியை வேறல் போல. சிறு வரால் - சிறிய வரால் மீன். முரி - பெருமை; விகாரம். படுதல் - இறத்தல்.

141. புகுந்து என - புக. தூதன் ஆதலால் கோறல் பழியாம்.

முற்றின ரவரை முடிச்சிகை பற்றி
மோதிமுன் னிட்டுநீ யழிவை
பற்றுள வெவையு மின்னினி நுகர்தி
படர்குவல் யானென வெழுந்தான்
வெற்றிகொள் வீரற் பற்றினை தம்மோ
வெனவிறற் றுணையர் தலைவன்
நற்றிற லுடைய சதமுகற் குரைப்ப
நன்றெனப் படையினோ டெதிர்ந்தான். 142

வேறு

இலக்க வீரர்கள் படைவிடச் சூளிகை
இடந்தொன்று மேலோச்சித்
தொலைக்க நேர்ந்துடல் சதமுகத் தவனுயிர்
துரந்துபே ருருக்கொண்டான்
நிலக்கட் டாட்டுணை பெயர்தொறுஞ் சுவட்டின்வா
ரிதிப்புன னிமிர்ந்தூரை
அலைக்க வைம்பது வெள்ளங்கா வலர்பொர
அவையகத் துயிர்மாய்த்தான். 143

மேரு மால்வரை பொருமொரு தூவிகை
விரைந்தகழ்ந் தெடுத்தோச்சிச்
சூரன்பேரா சவையழித் தோங்கிய
சூளிகைக் குலந்தம்மால்
வீரர் மாளிகை மேனிலை மண்டபம்
விற்பயி னெடுஞ்சாலை
கார ளாவிய கடிமதின் முழுவதும்
கனன் றுயி ரொடுஞ்சாய்த்தான். 144

ஆயி ரங்கர மைந்துநூ றெனுமுடி
அவுணரா யிரர்சூழ்ந்து
மாயி ரும்படை வழங்கினர் தண்டென
மராமர முரித்தேந்திச்

---

142. சூரனுக்கு முன்னே இட்டு. வீரன் - வீரவாகுவை. என்று சூரன் தலைவனாகிய சதமுகனுக்கு உரைக்க. தலைவன் சூரன் எனினும் அமையும். சதமுகன் சேனைத்தலைவன்.

143. இடந்து - தேர்ந்துடன்ற. தொலைக்க - விட; இவ்வினை வீரவாகுதேவர் வினை: விசுவருபம்.

சேயி ளந்தசை மூளைநெய்த் தோர்கரஞ்
சிரமடி நிலம்வீழத்
தாய டர்ந்தவர்ப் புடைத்துயிர் முழுவதும்
தனிவிசும் புறவுய்த்தான். 145

வீரர் வெள்ளமீ ராயிரம் பரிவெள்ள
மொராயிரம் வேழந்திண்
தேரி ரண்டுமா யிரவெள்ளஞ் சேனைகாப்
பாளருந் தற்சூழச்
சூரு யிர்த்தவன் வச்சிர வாகுதா
துவனெங்க ணுளனென்றே
போரி யற்றிய வடுகளங் குறித்துநேர்
போந்தனன் புகுமெல்லை. 146

அண்டம் விண்டெனத் தோள்புடைத் தார்த்தனன்
ஆடமர் விழைவீரன்
மண்டு தானைகள் வெயர்த்தன வயிர்த்தனன்
மறமிகு சூர்மைந்தன்
கொண்ட தானையைச் செலுத்தினன் குனையும்
குலாய்ப்படை யொருங்குய்த்த
மிண்டன் மெய்யவை யழுந்திநெய்த் தோருக
வெகுண்டனன் மேற்கொண்டான். 147

வேறு

இரத மாயிரத் திரதமா யிரம்புடைத் திறுத்தான்
கரிக ளாயிரத் தாயிரங் கரிகடாய்க் கவிழ்த்தான்
பரிக ளாயிரத் தாயிரம் பரிவிட்டுப் படுத்தான்
சரிய வீரரா யிரரையா யிரவராற் றகர்த்தான். 148

---

146. வச்சிரவாகு - சூரன்மகன். போர் இயற்ற.

147. வீரவாகு ஆர்த்தனன். வச்சிரவாகுவும் சிறிது அயிர்த்தான். அயிர்த்தல் - சந்தேகித்தல். மிண்டன் - வீரவாகு. உய்த்தன.

148. இரதம் ஆயிரத்தால், கரிகள் ஆயிரத்தால், பரிகள் ஆயிரத் தால் என விரித்துப் பொருள் கொள்க.

தாளி னாற்சில தடங்கரத் தாற்சில தடவுத்
தோளி னாற்சில சுலாவலிற் சிலமுறு வலிக்கும்
கோளி னாற்சில கூர்ந்தெழு முயிர்ப்பினாற் சில்ல
வாளி மொய்ம்பினன் விழிப்பினாற் சிலபடை யவிந்த. 149

இன்ன வாறுநா லாயிர வெள்ளமு மிகலி
முன்னு றும்படைத் தலைவரு முறைமுறை விளிய
மன்னர் மன்னவன் மதலைவெஞ் சினந்தலைக் கொண்டு
கொன் னு மவண்சிலை குனித்தொ ராயிரங்கணை விடுத்தான். 150

விடுத்த கோலொரு கையினாற் பிடித்துமென் றுகளாப்
படுத்த னன்பதி னாயிரம் பகழிக டூர்த்தான்
அடுத்த தண்டினாற் சிதர்த்தன னயுதம்விட் டெறுழ்த்தண்
டொடித்தொ ராயிர மவயவந் தொறும்புக வுதைத்தான். 151

வருந்தி வாளிபாய் வீரன்வாம் பரியொடு பாகு
நெரிந்து நீறவொண் டேரினை யுதைத்தன னேரான்
விரைந்து வேறுதேர்ப் பாய்ந்தொரா யிரங்கணை நுதலில்
தெரிந்த மூத்தினன் சென்றுதே ரெடுத்துவிண்
[ணெறிந்தான். 152

வீழு முன்னவண் வேறுள சேமத்தே ரனைத்தும்
பூழி செய்தனன் விழுந்துதேர் கெடநின்றோன் பொருவில்
வாழி வாங்கினன் றொடுக்குமுன் வார்சிலை யிறுத்தான்
ஊழி னன்னநாந் தகமுரீஇ யினரிரு வோரும். 153

பொருது மேல்வையிற் பூரிய னேச்சுநாந் தகக்கை
இருநி லத்திழித் தனனவ னேந்தொரு தண்டம்
மரும மோச்சினன் வருமுனர்த் துணித்திடங் கழிகொண்
டருவி செம்புனல் கொளமுடி யறுத்தனன் வீரன். 154

---

152. வீரவாகு எறிந்தான்.

153. ஊழை ஒத்த. தன் பயனைச் செய்தேவிடும் ஊழைப்போலத் தன் தொழிலைச் செய்தே விடுதலால் ஊழை ஒத்த நாந்தகம் என்றார்.

154. மற்ற ஒரு கையினால் தண்டத்தை ஓச்சினனாய். இழித்தனன் - வெட்டினன். இடங்கழி - நெருங்கல்.

ஒழிந்த வச்சிர வாகுதன் னுடலினைப் பொதிர்த்திட்
டழுங்கப் போதுவ னேயென வஞ்சினுன் போலச்
செழுங்க திர்த்தின கரன்கடற் கரந்தனன் செருக்கொண்
டெழுந்து ளார்களு மில்லையா தலின்விறல் வாகு. 155

முந்து மண்ணலை யிகழ்ந்தவ னூர்முழு தழித்தாம்
வந்த வந்தபல் வீரர்க ளுயிர்விசும் புறுத்தாம்
மைந்த னுக்கைமண் படுத்தன மறலுந ரில்லை
அந்தி பட்டது போதுமென் றவனொரீஇ மீண்டான். 156

இலங்கை புக்கனன் புகுதலு மென்மகன் படைஞர்
குலங்கெ டப்பொரு தாய்நினைக் கொல்வலென் றியாளி
விலங்கு மாமுக மாயிரங் கொண்டவன் விடைப்பத்
துலங்கு போரினு லவனையுந் தொலைச்சிவிண் ணெழுந்தான். 157

செந்தி லான்றிருச் சேவடி தாழ்ந்துசென் றுரைத்து
வந்தவா றெலா நுவன்றனன் வதிந்தனன் வீரன்
மைந்தன் பட்டது கேட்டழிந் தரற்றுமன் னவன்முன்
முந்து போயவொற் றெருற்றிவந் துரைத்தன முழுதும். 158

சீர மைச்சர்கண் மைந்தர்க ளிளவறோர்ந் தவர்கள்
யாரும் வம்மினென் றழைத்தெரிப் பொலஞ்சடைக் கடவுள்
வார மைந்தன்ரு ரகனொடு மலைதொலைத் தமரர்
பார வன்சிறை பாற்றெனத் தூதிவண் விடுத்தான். 159

தூது வந்தது மிருந்தது மொழிந்ததுந் துளக்கிப்
போத லுற்றதுங் கண்டுகேட் டறிதிரே பொறிகால்
கோதை வேலவன் செந்திலான் கூளிவெம் படைகள்
ஓதி ராயிரம் வெள்ளமோ டிவணுறு நாளை. 160

---

155. சூரியனுடைய உடலைத் துளைத்திட்டு.

156. முருகனை இகழ்ந்த சூரன் ஊர். மைந்தன் - சூரன் மகனுகிய வச்சிரவாகு. வீரவாகுதேவர் தூதுவராய் வருதற்கு முன்னமே சூரனும் முருகவேளது செய்தியை அறிந்துவரத் தூது அநுப்பியிருந்தான் என்க. ஒற்று - உளவு; ஒன்றியிருந்து உணர்தல். ஒற்றிவந்து - அறிந்துவந்து.

159. இளவல் - சிங்கமுகன்.

160. வந்ததையும் இருந்ததையும் கண்டு, மொழிந்ததைக் கேட்டு. செந்தில் உள்ளானுனன்; நாளை இவண் உறுவான்.

நுனித்த கேள்விய ரேனுநூ லாளரை யன்றித்
தனித்தொ ரெண்ணமு மெண்ணலர் தரணிகாப் பாளர்
இனித்த மூஉம்வகை யிதுவென வுரைமின்க ளென்றுன்
பணித்து விண்ணவர் கேட்டொறும் பருவருந் திறலோன். 161

மதுக்கு டித்தவர் குழாமென வரதனம் படையை
நுதுக்கு மென்மரு நொறிலிலா னவனைநம் படைசென்
றதுக்கு மென்மரு நீபொர விழிவியா னழல்காய்
பதுக்கை மேய்ந்தெனப் படுப்பல்சென் றென்மரு மானுர். 162

தத்த நெஞ்சினுட் டோற்றியாங் குரைப்பவர் தம்மைக்
கைத்த லத்திறு லடக்குபு காழ்படு சினத்தான்
ஒத்த வாறெலா முரைப்பதி னுறுபய னெவன்கொல்
அத்த கேளெனக் கரைவனு லரிமுகத் திளவல். 163

வேட்ட தாறுமா முகன்சிறை விடலது செயினம்
மாட்டு வந்துறு மிடரெவன் வச்சிர னவுணர்
ஈட்ட முன்னெலா மலைத்ததற் கெதிரின்று காறும்
மூட்டி வெந்துயர் சிறையின்முள் காந்தன னவன்சேய். 164

குமைக்கு மாற்றலி னமக்குமே லிலையுயிர்க் குழுவின்
அமர்க்கட் டோல்வியுண் டாகுமேற் றுணைவர மளித்த
உமைக்கு நாயக னேயல திலையுவன் றுனே
நமக்கு மாற்றல னெனச்சிறு குழவியாய் நயந்தான். 165

---

161. தரணி காப்பாளர் எண்ணலர்.

162. நொறில் - வலிமை. அழலானது பதுக்கையை மேய்ந்தாற் போல. காய்ந்து உலர்ந்த பதுக்கை. பதுக்கை - சிறுதூறு. நுதுக்கும் - அழிக்கும்.

163. சிங்கமுகன்.

164. உடலைத் தான் வேட்டதென்க. அது செயின் - சிறையை விடுத்தல் செய்தால். வச்சிரனுகிய இந்திரன் நமது அவுணர்களையெல்லாம் முன்பு அலைத்ததற்குப் பதிலாக அவன் மகனுகிய சயந்தன் இதுவரையில் சிறைச்சாலையில் முள்காந்திருத்தலே போதும். எதிர் - பதில், முள் காத்தல் - மௌனமாயிருத்தல்.

165. நமக்கு வலியின் மேம்பட்டவர் பசுக்கூட்டத்து இல்லை; எனவே, பதிதான் நமக்கு மேற்பட்டது என்றுன் என்பது. குழுவின் இலை என முடிக்க. மாற்றலன் ஆக. உவன் - சிவபெருமான். சத்தியொழிய ஏனையோரால் வெல்லப்படாமை. இருவரத்தில் ஒன்று.

அளித்த நல்வர மழிக்குமே யீசனென் றயிர்த்தல்
தெளித்த வாயுளீ ரெட்டலா விலையென் றுஞ் சிவணக்
களித்து நல்கினன் மார்க்கண்டற் கவனுளங் கைத்து
விளிக்க வேண்டுமே லரிதுகொ னம்முடை வீறு. 166

அல்ல தூஉம்வர மளிக்குஞான் றமலநா யகனம்
வல்ல சத்தியி னல்லது மற்றெவ ராலும்
கொல்லு நீரால் வீரெனக் கூறின னிளவல்
வல்லை மாய்தலிற் சத்தியே யவன்கையில் வடிவேல். 167

தத்து வந்தொறு முலப்பில தரணியண் டத்தில்
பொத்து நீர்முத லொன்றற்கொன் றளவுபூண் டுயரும்
அத்த கும்பல வண்டமும் படைத்தளித் தழிக்கும்
சத்தி நம்முயி ருண்பது தாழ்க்குமே சமர்க்கண். 168

நார ணன்றெழு வாரணற் றருநல னளித்தான்
ஆர ணன்றெழு நாரணற் றரும்வர மளித்தான்
சார நாமிமை யார்த்தெறு தலைமைமுன் னளித்தான்
வார முற்றவர் தொழநமைத் தெறமழ வானுன். 169

தவத்தி னுலய னுதற்கணோர் சேயுமாய்ச் சார்ந்தான்
தவற்றி னுலொரு சிறுவனு யவனறலை தடிந்தான்
தவத்தி னுலொரு மருகனுந் தக்கன்பா லானுன்
தவற்றி னுலொரு சிறுவனு யவன்றலை தடிந்தான். 170

---

166. இலையாம். என்றும் சிவண - எக்காலமும் நித்தியமாயிருக்க. சிவனுகிய அவன் தன் உளம் வெறுத்துக் கெடுக்கவேண்டுவானேயானுல் நமது வீறு அவனுக்கு அரிதாகுமா? அயிர்த்தல் - சந்தேகியாதே.

167. நம் இளவல் - தாரகன்.

168. தத்துவந்தொறும் உண்டான அண்டங்கள் உலப்பிலாதன வாம். பிருதிவியண்டத்தினைப் பொத்திய அப்பு. அண்டம் முதலானவை யுயர்ந்திருக்கும். உயர்தலாவது எண்ணிக்கைக்கு மேற்பட்டிருத்தல்.

169. அவர் தொழ - தேவர் தொழ.

170. நீலலோகிதனுய்ச் சார்ந்தான். பிரமனுனவன் சிருட்டித் தொழில் கைவரப்பெருமையினுல், தவம் செய்தகாலத்தில் கடவுள் அப் பிரமனுடைய நுதற்கண்ணில் சேய் உருவாய்த்தோன்றி அருள் புரிந்தார்.

வளமும் வீரமு மைந்தரும் வாழ்க்கையும் வேண்டில்
தளையி னீக்குதி விண்ணவர் தமைகளை யன்றேல்
ஒளிறு கைப்படை யோடுநே ருதியொல்லை யென்றான்
விளியு மூழினன் கேட்டிலன் வேறெதிர் கிளப்பான். 171

வேறு

ஏயே நினதெண் ணமெனக் கினிதே
ஆயே யிலன்கா லழலப் பினலைந்
தோயே லெனமீன் முலையூட் டநுகர்
சேயே பரமென் றுதெளிந் தனையே. 172

படைபல் கலைநோற் றல்வரம் பயிலான்
சடைசுற் றியதந் தைதருங் கதிர்வேல்
விடல்கற் றொருகூ ழுறுவெற் பினொடு
மடல்கற் றனனாண் மையிலா தவனை. 173

நெற்றிக் கணிருந் தநெருப் புவிழி
தெற்றென் றறியத் தருசெவ் வியினால்
கற்றைச் சடையாற் கொருகான் முளையே
பற்றற் றுயரப் பரன்று னலனே. 174

மாயைக் கொருவைப் பெனுமா னையனை
யாயுற் றனணற் றவமாற் றியெலாம்
ஈயப் பெறுமென் னைவெல்வா ரெவர்யான்
காயப் படுவான் கதிர்வே லவனே. 175

---

171. தளை - சிறைச்சாலை. தளையில் நீக்குதி.

172. நினது எண்ணம் எனக்கு இனிதாயது. ஆயே இலன் - தாயில்லான். ஓய்தல் - தளர்வடைதல்.

173. படையையும், பல்கலையையும், நோற்றலையும், வரத்தையும் பயிலாதவன் முருகன். ஆண்மையிலாத் தாரகனை அடல் கற்றனன். சூழ் - அகத்தியர்.

174. 'உவன்தானே சிறு குழவியாய் நயந்தான்' (165ம் செய்யுள்) என்றதற்குப் பதிலாக, சூரபதுமன் 'சிவனுக்குப் புதல்வன் ஆவானே யல்லாமல் அச்சிவன் ஆகான்' என்றான் இச்செய்யுளால்.

175. அனையாய் உற்றாள். கொடுக்கப்பெற்ற என்னை.

என்று னிகல்சூர் முதலோ னெனலும்
பொன்று வவுணப் பொருவில் குலமின்
றென்று தினிநல் வினையென் றுணராப்
பின்றே ரரிமா முகன்பே சுவனால். 176

வேறு

கருவயிற் றுருமை யானுங் ககனங்கா லழனீர் மண்ணோர்
மருவுத லானு நோற்ற மாதர்பா லுண்ட லானும்
பொருபடை கலைகல் லாது புலவரைக் கொன்று வேதற்
கொருசிறை யமைத்துப் பௌவ முண்டவற் கருள லானும். 177

நோற்றலொன் றானு மின்றி நாழிலாட் டயரும் வெள்வேல்
ஏற்றிட லானு மொன்ப தெனுமுருப் போல விச்சை
ஆற்றினிற் றோற்ற லானு மறுமுகன் பரமே மாயை
தோற்றிய நம்மை மாயை தோய்விலா வவனே வெல்லும். 178

ஆங்கவ னெனவிண் ணோரை யட்டுயி ரெழுப்ப வல்லேம்
ஓங்குல காக்க வல்லே முறுவரர்க் குணர்த்த வல்லேம்
பூங்கழ லீசன் றாழப் புகன்றுவீற் றிருக்க வல்லேம்
பாங்குமை யிறைவ னுப்பண் மகவெனப் பயில வல்லேம். 179

---

177. நெற்றிக்கண்ணினின்றும் ஆறு பொறியாய் உதிர்ந்தகாலையில் அவ்வாறு பொறிகளும் நெற்றிக்கண்ணிலிருந்து ஆகாயவழியால் பூமியில் விழுந்தமையின் ககன சம்பந்தமும் பிருதிவி சம்பந்தமும் பெறப்பட்டன. நோலாத பெண்களுடைய பாலைக் குடியாது, முருகன் எங்களுடைய பாலைக் குடிக்கவேண்டும் என்று கருதி வெகுகாலமாகத் தவஞ்செய்து கொண்டிருந்த ஆறு கார்த்திகைப்பெண்களுடைய பாலையுண்டலானும், பிறந்தபோது தேவர்களை விளையாட்டாகக் கொன்று.

178. வேலைத் தவஞ்செய்து பெறாது பெறுதலானும். சிவன் நவந்தரு பேதமாய் இருத்தல் போல இச்சைப்படி உரு எடுத்தலானும். இச்சை யாற்றில் தோற்றிய உருவாவது அகத்தியன் அருள்பெறு படலத்தில் 64 ஆம் பாட்டு முதல் தொடுத்துள்ளவாம்.

179. விளையாட்டால் அட்டு. வல்லேம் - வல்லமையுடையேம், வல்லமை இல்லேம்.

பரமனும் வேறே வந்த பாலனும் வேறே யாக
பரமனல் கருளி னன்றே பாரளிப் பவர்முன் ஞமெச்
சுரரையு மடக்கி ஞமத் துரிசிலாப் பரமன் ருேன்றல்
வரமுடை நம்மைப் போரின் மாட்டுதல் வியப்போ தேரின். 180

பன்னெடு மூழி கால முந்துறப் பயிலு மாயன்
அன்னமேக் குயர்த்தோ ஞதி யவர்க்கெலாம் பின்பு தோன்றி
முன்னவ னருள்பெற் றன்றே யவர்க்கெலா முதல்வ ராஞேம்
தன்னருண் மகனைப் பால னென்றெள்ள றகைமைப்
பாற்ருே. 181

மகனென வுருவே ருகி மறைவழி யொழுகார் தம்மை
அகநெகத் தாக்கு மங்கத் தவயவத் தொன்ருன் மாய்க்கும்
தகவுறு மடியர் தம்மாற் சாடுஞ்சூழ்ச் சியினும வெல்லும்
உகலுரு வரத்தோர் யாரே யுமையொரு பாகன் சீறில். 182

முகம்விழி மலர்க்கை மூன்று முப்பது முன்பு நாஞ்செய்
மகவினைக் கருள வந்த வள்ள லுக் கீண்டுச் சாடப்
புகுமிறைக் கவைகண் மூன்று முப்பதே பொலிவு மற்றே
திகழுரு வானுஞ் சேயைச் சிவனெனத் தெளிய லாமே. 183

வரமரு ளுருவிற் போதின் மலரடி பணிந்து போற்றி
அருளிய தரும மெல்லா மகனமர்ந் தியற்றி மேலும்
திருவினைப் பெறலா மன்ஞே தீவினைப் பயத்தா லென்ன
உருவுவே ருகப் போந்தா னுமையொரு பாகம் வைத்தோன். 184

---

180. நீ சொன்னபடி சிவன் வேருகவும் முருகன் வேருகவும் இருந்தாலும் இருக்கட்டும். வந்த சிவனருளால் அல்லவா நாம் பிரமன் முதலாகிய தேவர்களை அடக்கினேம். அவ்வாறிருப்ப, நேரே சிவனுக்குப் புதல்வனுய் உள்ளவன் போரில் நம்மை மாட்டுதல் வியப்பா!

181. முந்துற - நமக்கு முற்காலத்திலேயே. ஆதியவர்களுக்கு.

183. முகமும் விழியும் கையுமாகிய மூன்றுறுப்பும் சிவஞகிய வள்ளலுக்கு முப்பது ஆகும். சிவனுக்கு ஐந்து முகம், நெற்றிக்கண்ணைச் சேர்த்து விழி ஐம்மூன்று, கை ஐயிரண்டு ஆக முப்பது. முருகனுக்கு ஆறு முகம், பன்னிருவிழி, பன்னிருகை ஆக முப்பது.

184. சிவனுனவன் வரம் அருளும் உருவத்தோடு போதுவானேயானல் யாமெல்லாம் போற்றி இயற்றித் திருவைப் பெறலாம்: அன்ஞே! நம் தீவினைப்பயனல் சேயாய்ப் பகைவனுய் வந்தான். போதில் - வந்தால்.

அருமறை முதலி னேமென் றறைதரு பதமுஞ் சேர்த்த
திருமுக மாற னுள்ளோர் முகமெனத் திகழுந் தேவை
உருவினு மிளமை யானுஞ் சிறுவனென் றுதித்த மம்மர்
பொருதொழிற் பெருமை கண்டா லல்லது போத லின்றே. 185

அமிழ்தினை நஞ்ச மென்று பருகினு மின்பே யாக்கும்
குமரனைப் பகைஞ னென்றே கொள்ளினும் பெரும்பே றெய்தும்
விமலமெய் யுருவங் காண விளம்புரை கேட்க ஞான
இமிழிசை வேலிற் பொன்ற வெத்தவஞ் செய்தா மென்றான். 186

என்றலுஞ் சூரன் சீறி யிமையவர் பாலிற் பட்டாய்
துன்றுபோர்க் கஞ்சு கின்றாய் தூத்தவ முயலப் போதி
கொன்றுவன் பூதர் தம்மைக் குமரனை வேறு மென்றான்
ஒன்றுதன் முதன்மை யொன்றே மதிப்பவர்க் குணர்த்தல்
வீணே. 187

அரிமுகன் றமைய னெண்ண மறிந்தழி வெய்துங் காலைப்
பெரிதுநன் றுறுத்தி னுலுஞ் சிறிதுங்கைக் கொள்ளார் பீடு
விரிதரு காலைத் தாமே விளைவறிந் தொழுகு வாரென்
றுரிமையி னிறைஞ்சிப் போர்சென் றுடற்றுவல் பெரும
வென்றான். 188

தம்பியை மகிழ்ந்து புல்லித் தனிநகர் சேறி யீங்கு
வம்பலன் புகுந்தா னுகில் வருகென விடுத்திட் டாங்குப்
பம்பினர் தமையும் போக்கிப் பரிவொடு மிருந்தான் வல்லை
வெம்புபோர் மூட்டு வான்போல் வெய்யவன் கடலிற் பூத்தான்.

நாரணன் முதலோர் போற்றச் செந்திலி னயந்த நம்பி
ஆரண முழக்கம் விம்ம வடியவர் துழனி பொங்கத்
தோரணி படைகள் சூழச் சென்றவ னகர்க்க ணித்தின்
ஏரணி யேம கூட மியற்றிப்பா சறைய ஞஞன். 190

---

185. அறுமுகத்துள் நடுமுகம் பிரணவமாம். மம்மர் போதவின்று: போர்த்தொழிலினது பெருமையை.

190. அவன் நகர்க்கு - சூரனுடைய நகரத்திற்கு.

நாரத னட்டான் போல நண்ணியாங் கிறைவ னுற்ற
சீரினை விளம்பிப் போத வொற்றருஞ் சென்று செப்பப்
போரணி கொடித்தேர்ச் சூரன் பொள்ளெனப் பானு கோப
வீரனை விடுக்க வன்னான் விறற்படை யெழுக வென்றான். 191

அடிகழ னரல வீக்கி யணிவிரல் புட்டில் சேர்த்தி
இடைநெடுங் கச்சிற் சுற்றி யெறும்கொள்சா லிகைமெய் யிட்டு
வடிநெடும் படைக ளேந்தி வார்நிறை தூணி தூக்கிப்
படுமணி யிரதம் புக்கான் பல்லியத் தொழுதி யார்ப்ப. 192

வேறு

தேர்களிறு பரிவயவ ரிருபதினா
யிரம்வெள்ளஞ் செறியத் தன்பால்
தார்கதுவும் படைத்தலைவர் தும்பைமிலைச்
சினர்சூழத் தறுகட் டெய்வப்
போர்கலவும் படைநிரைத்த சேமத்தேர்
ஒருகோடி புடையே நண்ண
வார்கலவு முரசுலம்பக் கொடி துவன்ற
மதிக்கவிகை நிழற்றச் சென்றான். 193

தன்பெயர்ப்புத் தேட்கின்னுந் தனிசெயினுஞ்
செய்யுமெனத் தரணி வல்லே
அன்பினெடுங் கரந்தடெனப் பெரும்பூழி
கதிரொளிகா லறுப்ப நந்தம்
மன்பகைஞற் குதவிசெய்த லென்னையென
மாற்றுதல்போன் மதம்வி லாழி
கொன்பகடும் வயப்பரியுங் கூர்த்தொழுக்கக்
கோபுரவா யிலைநீத் திட்டான். 194

---

192. புட்டில் - விரல் உறை. இடையைக் கச்சால் சுற்றி. சாலிகை - கவசம்; வார் நிறைந்த தூணி; வாராலான அம்புநிறைந்த தூணியுமாம்.

194. தரணி - சூரியன், பூமி. பூமியானது சூரியனை மறைத்தவாறு போல். பூழியானது ஒளியைக் காலறுப்ப: ஒளி - சூரியன். காலறுப்ப - கெடுக்க; நமது பாநுகோபனுகிய மன்னனுக்குப் பகையாகிய சூரியற்கு; பகடு மதத்தையும் பரி விலாழியையும் ஒழுக்க.

மாயன்முத லோர்பனிப்ப மகதியாழ்
முனியடுத்து மாயை வல்லான்
காயிரும்போர் பலகடந்தான் கமலன்முத
லோர்படையுங் கைக்கொண் டாண்மை
மேயினன்பொன் னுலகழித்தான் வெங்கதிர்க்குப்
பகைஞன்வரு கின்றான் போர்க்கு
நீயலது பிறர்வேற லரிதென்ன
வரைகிழித்த நெடுவே னம்பி. 195

வறிதுநகை யொடும்வீர வாகுமுக
நோக்கிவரு வானை யெண்மர்
செறிகழற்கா லிலக்கர்படைத் தலைவரா
யிரவெள்ளஞ் சேனை யோடு
முறையினிடங் கழிகோடி யெனவிடுப்ப
அவன்மொழிந்த சேனை மொய்ப்பப்
பறையியம்பக் குடைகவிப்பக் கொடிநுடங்கத்
தேரிவர்ந்து படர்த லுற்றான். 196

போர்பூத்த மைந்தினுக்குந் தானொருவ
னாதலிற்பொற் புறவெஞ் ஞான்றும்
சீர்பூத்த தந்தைமுடிக் கணியுமலர்த்
தும்பைமிலை திறலோன் சேனை
ஏர்பூத்த வடிதோய வவுணரடித்
தவிர்ந்தவினை யிரித்து வல்லே
பார்பூத்த துறக்கமுற வெழுந்ததுபோல்
எழுந்ததெங்கும் படர்ந்த தூளி. 197

இந்திரன்வா கனமிதுவென் றுறுப்பனபோன்
முகில்புடைக்கு மெழிற்ப தாகை
அந்தரமெங் கணுமிடையு மவுணர்நெடும்
படைக்கடலை யமர்க்குங் காலை

---

195. பணிக்கும்படி என்ன. போர்க்கு வருகின்றான்.

196. இடங்கழி கோடல் - நெருங்கல். அவன் படர்தலுற்றான். மொழிந்த சேனை - முருகன் எல்லையிட்டுச் சொன்ன சேனை.

197. ஆதலின் மிலை திறலோன். வீரவாகுவின் சேனை அடிதோய்தலால் பாரானது இதுவரையும் அவுணர் அடியில் தங்கியிருந்த பாவவினையைக் கெடுத்து பூத்த துறக்கத்தில் செல்ல எழுந்ததுபோல.

வெந்திறல்வா ளிகடுமிக்குஞ் சேட்சென்மின்
எனவெறிந்து விசும்பு ளோரை
உந்துதல்போற் கொடிநுடங்கும் வீரர்படைக்
குறுமுனிவ னுணநேர்ந் தன்றே. 198

வேய்த்தோடிச் சிலர்வீர வாகுபோர்
மேயினனென் றுரைப்பத் தீயோன்
தாய்த்தாக்கு மடங்கலென வுயிர்குடிப்பல்
எனச்சீறிச் சார்ந்தான் முன்போர்
தேய்த்தார்ந்த புகழவுணர் தெழித்தடுத்து
நேர்ந்தனர்வன் சிலம்பி னுண்மை
மாய்த்தானைத் தொழுதுவிறற் பூதருமார்த்
தனர்வெகுண்டு மலைக்க லுற்றார். 199

வேறு

குழாக்க ளிற்றவுணர் கோனை யாற்றல்வளர்
பூதர் கோனெதிர்கொ லைக்களம்
விழாக்க ளம்புரைய மெய்ம்ம லிந்துவகை
மேவி யாண்மையுளங் கேண்மையின்
வழாக்க டுப்பொடுது ரப்ப வட்டமொடு
வார்ந்தி லங்குவடி வாள்கரந்
தழாக்கி ளர்ந்துவரு சாரி கைத்தொழிற
ழைப்ப வாடலொரு பாலெலாம். 200

---

198. பதாகை மிடைந்த. அவுணக்கடலை வீரர்படை நேர்ந்தது. வீரர்படை சிறிதாக இருத்தலால் அகத்தியனாகக் கூறினர். கடலை வீரர் படையானது அமர்க்குங்காலை அகத்தியன் உண்ண ஒத்தது என முடிப் பாரும் உளர்.

199. வேய்த்து ஓடி. முன் யாரையும் போரில் தேய்த்தலால் உண் டாகிய புகழையுடைய அவுணர் என்க. வேய்த்து - அறிந்து.

200. பானுகோபனை வீரவாகு எதிர்ந்த களமானது புரையாநிற்ப. திருவிழாச் செய்யுமிடத்தில் எவரும் மகிழ்ந்திருத்தல்போலப் போர்க்களத் தில் இருதிறத்தார்களும் போர்செய்ய மகிழ்ந்திருத்தலால் 'விழாக்களம் புரைய' என்றார். ஆண்மையை உள்ளமானது நட்பில் வழுவாத கடுப் பொடு துரக்க. உளம் துரப்ப. குழாக்களிறு: குழாங்களிறு எனற்பாலது குளங்கரை என்றாற்போல விகாரம் ஏற்றது.

நீக்க மின்றென வழுந்து றத்தழுவி
நீணி லம்விழுந ரோர்புறம்
தேக்கு நீர்ப்பெயலின் மொக்கு ளேரடி
விசைப்பி னிற்சிதர்ந ரோர்புறம்
தாக்கி ருந்தகரி ஞன னம்பிதிர்த
ழைப்ப முட்டுநர்க ளோர்புறம்
ஒக்கு முட்டியினு டற்றி வன்கொடிறு
டைப்ப வீழுநர்க ளோர்புறம். 201

கட்டு கையினொடு காற டுக்குநர்கள்
ஓர்பு றங்கதழ் புகட்டினர்
ஒட்டி நிற்குநர்க ளோர்பு றங்கருதி
யுய்த்த வெம்படை யுலப்புற
விட்ட ழிக்குநர்க ளோர்பு றந்திகிரி
வீழ வெள்வளையும் வீசுபு
பட்டு நின்றவுட லெஃகு கண்டனர்ப
றித்து நக்கெதிர்ந ரோர்புறம். 202

மல்லி னூற்பிடிப டுத்தும் வார்சிலையின்
எற்றி யும்மறல வூக்கியும்
செல்லெ னக்கடிது ரப்பி யுங்கனலி
சிந்து றத்திருகி நோக்கியும்
சொல்லி யும்புடைய கற்றி யுங்கயிறு
துட்கெ னப்பெரிது வீசியும்
எல்லெ யிற்றினுடல் பீறி யும்பொருநர்
எல்லை யில்லவர்க ளோர்புறம். 203

வேறு நீடமரின் மிண்டு தம்மிறைவி
மூது டற்றுநர்க ளோர்புறம்
தேறு மவ்வகையெ திர்த்து ளாரிருதி
றத்த ருந்தபுத லோர்புறம்

---

201. நீக்கம் - விடுதல். மழைபெய்தலின் தோன்றுகிற மொக்குளை நேரச் சிதர்நர். ஒக்கும் - ஓச்சிய.

202. ஒருவரைத்தழுவிய கையினோடு காலை வாரிவிடுத்துத் தடுக்குநர்கள். கதழ்பு - விரைந்து. உலப்புற - கெடும்படி. சக்கராயுதமும் சங்கும் கீழே நழுவி வீழ இறந்துநின்ற உடலிலுள்ள எஃகை. எஃகு - வேல்.

203. மறல - சுழல. நெடுமொழி வஞ்சினம் சொல்லியும் என்க. கயிறு - பாசம். பீறல் - கிழிதல், கிழித்தல்.

பாற மால்களிறெ றிந்து டற்றுநர்கள்
ஓர்பு றம்பகடு தாழவீழ்ந்
தீறு பட்டவரை யட்டு ளார்படைஞர்
ஏய்ந்து சூழமலை யோர்புறம். 204

படைய றுத்துநனி பாழி கொள்ளுநர்கள்
ஓர்பு றம்படைவ ழக்குமிக்
குடைப டைக்கணுறு கூழை தாங்கெருமை
யோர்பு றங்களையும் வேலுமொய்த்
தடுமு டம்புதிற னீங்க லின்றமர்தல்
ஓர்பு றந்தலைக ளற்றுயிர்
விடுமு டம்புகளெ ழுந்து துள்ளுபுவி
யப்ப வாடுவன வோர்புறம். 205

இன்ன தானையிரு மாவு மேவியுமஃ
தின்றி யுந்தமதி னத்தினை
மன்னர் போர்த்தலைவ ரேனை யோரினைம
தக்க யங்கரிக டேரினை
வன்ன வண்டுரகம் வைய மால்கரியை
வையமுந் தலைய டுத்துநின்
றென்ன லார்தலைப னிப்ப வாடமரு
ளுற்றி நின்றனவி டந்தொறும். 206

---

204. வேறொருபக்கத்தில் உண்டாகின்ற யுத்தத்தில் தம்முடைய அரசன் தோல்வியடையாதபடி முன்னின்று உடற்றுநர்கள். அவ்வகை - தம் அரசன் தோலாவிதம். யானையிலிருந்து வீழ்ந்து இறந்தாரை அட்டுளா ராகிய படைஞர். யானை வீழ்தலால் வீழ்ந்து. அமலை - ஒலி.

205. பாழி - வலி, பெருமை. படைவழங்குதல் அதிகப்படுதலால் தோற்று உடைந்தோடும் படைக்கண் உற்ற கூழைப்படையைத் தாங்கு கின்ற எருமைமறம். தோற்று ஓடுவோரை அஞ்சற்க என்று பின்னின்று தடுப்போர்கள் எருமை மறமாம். கூழை - பின்படை.

206. யானை குதிரை ஆகிய இரண்டு மாவின்மீதிருந்தும் இல்லாம லும் தம் இனத்தினையும், மன்னர்கள் போர்த்தலைவரையும், ஏனையோரைக் கயமும், தேரைக்கரிகளும், துரகம் வையத்தையும், கரியை வையமும் அடுத் துப் போர் இயற்றின. இனமாவது யானையிலிருப்பவர் யானையிலிருப் பவரோடும், பரியிலிருப்பவர் பரியிலிருப்பவரோடும் என்க. வையம் - தேர். தானை உளுற்றி நின்றன.

மேக மூர்ந்துபுரு கூதர் தம்மின்விளை
யாடு கின்றதென வேழமும்
மாகம் வர்ங்கலைக ளூர்ந்து காலிறைவர்
மாறு கொண்டதென மாக்களும்
வேக வண்சிறைமு ளைத்த நீள்சிலைகண்
மேல்கொ டச்சிலையின் மன்னவர்
ஓகை யாலெதிர்வ தென்ன வையமுமு
டற்று வெஞ்சமர்கை மிக்கதே. 207

மேக்கு ளான்புடைபு குத்து மாறெனவெ
குண்டெ திர்ந்தவரு ரம்புகக்
கோக்கும் வல்லெயிறு யர்த்தும் வாருடல்கு
ழைக்கு மண்ணடியு ளர்த்தியிட்
டோக்கி நீள்கையுறு தண்டி னோரிரதம்
ஊரு மாவினம்வி ளிக்கும்வால்
தாக்கி யும்படைய ழித்து லம்புவத
மாது நீழல்சுளி வேழமே. 208

கந்து கப்பெயர டுக்கு மென்னவொளிர்
கந்து கப்பெயர்வி ளையெனச்
சிந்து ரத்தநுத லோடை யானைமணி
சேர்ந்த மத்தகமி தித்திடும்
முந்து கிள்ளையென லொத்த தென்னமுடு
கிப்ப றந்திரத மேலடி
தந்தி டுந்தலைவர் வாசி தீரவெதிர்
தானை வாசிதகு வாசியே. 209

---

207. மாகத்தில் வாவுகின்ற. வாயுவுக்குக் கலைமான் வாகனம் என்க. மா - குதிரை. மாறு - பகை. மலையின்மீது மலையரசர்கள் இருந்து எதிர்வதென்ன.

208. மேக்குளான் - பாகன். புகுத்துமாறுபோல. எயிற்றை உயர்த்தாநிற்கும். உளர்த்தியிட்டு - தேய்த்து. வேழம் உயர்த்தும் குழைக்கும் விளிக்கும் உலம்புவ.

209. குதிரையானது யானை மத்தகத்தை மிதித்திடும். பின்னைய கந்துகம் - பந்து. அடிதந்திடும் - அடிக்கும். ஈற்றிலுள்ள வாசி - குதிரை. முன்னைய வாசி - பெருமை. எதிர்த்த சேனைத்தலைவர்களுடைய பெருமை நீங்கும்படி எதிர்க்கின்ற தானைக்குப் பெருமையாய்த் தகாநின்ற குதிரை என்க. வா கூட்டம் எனினும் பொருந்தும். கந்துகப் பெயர் அடுக்கும் என்ன - கண்டோர் கந்துகம் என்னும் பெயர் வாய்ந்தது குதிரைக்கும் பொருந்தும் என்று சொல்லும்படி.

இரத மென்றபெய ரேற்கு மென்னவெழி
லார்ப டைச்சுவைகொ ழித்தெழ
விரவு தானைபல பாகு செய்துவிறல்
வாசி யைத்துவைய லாக்குபு
கரம தக்களிறு கூறு செய்துகரு
ணைக்கு வால்பலநி றுத்துவிண்
பரவு தேர்த்தொகுதி வல்சி செய்வபடர்
கூறை போன்றுதிரி வையமே. 210

வெளில்பி ணித்ததொட ரென்ன வீரர்குடர்
சுற்று காலின்விரை குஞ்சரம்
ஒளிமி குத்தவரு ரத்த மூத்துலவை
வயிர்பொ ரத்துணிய வாலிகால்
அளிமி குத்தமுகி லொத்த சிந்துமணி
யாற்பு யத்தவிறு கோட்டிணைக்
களிமு லைச்சுவடு பூத்த மார்பிறைக
டுத்து ளார்களிறெ திர்த்துளார். 211

நெடுமொ ழித்திறமும் வஞ்சி னங்களுநி
கழ்த்த லோடுதலை யற்றுமண்
படுவ வாடிகிரி சுற்ற லோடுவளர்
பாணி யற்றுகுவ சாரிகை
அடைவி னுடுவம ருங்கு லற்றுடலம்
வீழ்ந்த தாளடிக ளற்றுவீழ்
உடலம் வாயிதழ்ம டித்து வாலெயிற
ழுந்த வூன்றுவன வெங்கணும். 212

---

210. வையம் - தேர். வையமானது தானை பலவற்றை ஆயுதச் சுவை கொழித்தெழக் குழம்பு செய்து. களிறைக் குவால் பலவாக நிறுத்தி. தேர்த்தொகுதியை வல்சி செய்வன. பாகு - குழம்பு.

211. வெளில் - கட்டுத்தறி. உலவையானது வயிரை ஒப்பத்துணியா நிற்ப. வயிர் - ஊதுகொம்பு. ஆலி. யானையானது கொம்பினின்று சிந்தும் மணியாலே ஆலி காலும் முகிலை ஒத்த. கொம்பானது முறிய. துணிய - முறிய. களிறு எதிர்ந்துள்ளார்கள் மார்பிலுள்ள இரு கொம்பால் சிவனை ஒத்தார். இறை - சிவன். புயத்தல் - பறித்தல். புயக்க எனத் திருத்த வேண்டியதில்லை.

212. நிகழ்த்தினவுடனே தலையற்றார் என்க. மருங்குல் அற்று வீழ்ந்த உடலம் சாரிகை அடைவின் நாடுவ. நெடுமொழி எனினும் மீக்கூற்று எனினும் ஒக்கும் என்பாரும் உளர்.

ஒருவ னுக்குரிமை பூண்ட பார்மகளு
ரந்த மூராமைநல னென்பபோல்
உருவி நின்றகணை வேல்க டாங்கமனு
ருது றங்குமுட லெண்ணில
பொருத நின்றவர்க ளென்றெ திர்ந்தெதிர்பொ
ராமை யாற்சிலர் சமழ்ப்புற
மருவு மண்டிலவ கைக்க ணின்றபடி
நின்ற மாண்டவுட லெண்ணில. 213

இத்தி றத்தமர்வி ளைந்த காலையெறும்
மிக்க பூதரினு டைந்தன
தொத்த முற்கணவு ணக்கு லந்தொலைவி
லாத வாற்றலன லன்முனை இப்
பைத்த பூதருலை யச்சி லைத்தொழில்ப
யிற்றி னன்படைபு ரத்தரோள்
வைத்த சிங்கனொரு தண்டி னீளிரத
வாம்ப ரித்திரள்கள் சாடுபு. 214

மெய்யெ லாங்கணைகு ளிப்ப வையம்விரை
வுற்றி வர்ந்துவில்ப றித்தொரீஇ
ஐயெ னத்தலைபு டைத்த தண்டுறும
வன்கை பற்றியுர மங்கையால்
நைய வெற்றியுய ரத்தி ரித்துயிர்க
டப்ப மண்டலைய றைந்தனன்
வெய்ய சண்டனினி யுய்தி யேயெனவெ
குண்டெ திர்ப்பவெதிர் மேயினன். 215

'' நீயறிந்திலையே நெடுமொழி யன்றோ '' (சிலப்பதி - 14 ஊர்காண்) என்பதன் உரையில் புராணகதையன்றோ என உரைத்து, விசேடவுரையில் நெடுமொழி புகழுமாம் என்று எழுதியவாறு அறிக. சிலப்பதிகார அரும் பதவுரை யாசிரியரும் ''நீர்த்தன் றிதுவென் நெடுமொழி கூறி'' என்பத னுள் (கட்டுரை) நெடுமொழி கூறி - புகழ்ந்து சொல்லி என்றுரைத்தார்.

213. மண்டிலவகைக்கண் நின்றபடியே மாண்டுபோன உடலைப் போர்செய்ய நின்றவர்கள் என்று கருதி எதிர்ந்து அவர் போர்செய்யாமை யால் நாண. பொருத - போர் செய்ய.

214. குலம் உடைந்தன. படையையும் புரத்தலையும் தோளில் வைத்த சிங்கன். படை - ஆயுதம். அனலன் - படைவீரன்.

215. சிங்கனுனவன் அனலனுடைய தேரிலே தன்மெய்யில் அவன் கணை குளிக்க ஏறி ஒருவி தன் தலையை அடித்த தண்டம் பொருந்திய

சண்டன் சண்டனக ரெய்து கென்னவொரு
தண்ட முய்த்தனன வன்கரம்
கொண்ட தண்டமெதி ருய்த்த னன்பொறிகு
லைந்து ளாரிருவ ருஞ்சினை இ
மண்டு மாயனய ரக்க ணத்தலைவன்
நீலன் வார்கதைவ ழங்கினான்
உண்டி யாவியென மாயன் முத்தலைய
சூல நீலனுர முய்த்தனன். 216

உயங்கி நீலனவன் வார்மி டற்றெயிறு
றுத்தி ரத்தமுயி ருண்டனன்
மயங்கு சிங்கனொடு சண்ட னுந்தெளிபு
வார்ந்த தண்டமொடு நேர்ந்தனர்
தயங்கு சண்டனெறி தண்டி றப்பவிறல்
தங்கு மல்லினம ராடினான்
புயங்கெ ழூஉம்பலிய சிங்க னத்தொழில்பு
துக்கி யாருயிர்கு டித்தனன். 217

வேறு

சிங்கனொடம ராடச் செல்லசமுகன் றன்னை
இங்குறுகென நாப்ப ணெதிர்ந்தனன்மது வென்போன்
அங்கவன்பொழி வாளிக் கஞ்சலனவன் வையம்
பொங்கியசினத் தேறிப் புயலுருமென வார்த்தான். 218

வேர்த்தனனவ னோக்கி வீரரிற்பத ரொத்தாய்
போர்தொழிற்சிவ ணெங்குப் போந்தனையென மீண்டான்
வார்த்தையுள்சுட மான முந்தமைவத னத்தான்
ஆர்த்தடல்கெழு வாளி யலகிலதொடுத் தெய்தான். 219

அனலனது கையைப்பற்றி மார்பில் அங்கையால் அடித்து அறைந்தனன். உரத்தில் நைய எற்றி.

216. பூதகணத்தலைவனாகிய நீலன்.

217. மிடற்றின்கண் எயிறை உறுத்து இரத்தத்தையும் உயிரையும் உண்டனன் என்க. சண்டன் அமராடினான். அத்தொழில் - மற்றொழில். பலிய - பலத்தையுடைய.

218. இங்கு உறுக எனச் சிங்கனை நிறுத்தி அசமுகனும் மதுவும் யுத்தத்துக்கு ஆரம்பித்தார்கள். அசமுகன் பொழிகின்ற. அசமுகனது தேரில் ஏறி. இங்கு என்னோடு உறுவாய் என்று. மது வீரவாகுவைச் சேர்ந்தவன்;

219. அசமுகன் வேர்த்தான். மை - அசம்.

வருபகழிகள் பற்றி மதுவெறிந்தன னவுணன்
பொருபடைவகை யெல்லாம் பொள்ளெனமிசை யுய்த்தான்
விரைசெலலவ னிரதம் வேலையில்விழ வோச்ச
உருமெனநிலன் குப்புற் றுடற்றுமறற்றெழுழி லேற்றான். 220

அடிகொடுமது வுந்த வந்தரநிமிர்ந் துக்காங்
கிடியெனவுர மெற்றி யிம்மெனமறைந் தரிதந்
திடுதிகிரியை விட்டா னெய்தியபடை யின்றான்
படையிலனென மீண்டு பரிவுசெய்திட மாண்டான். 221

தானவர்படை காவற் றலைவர்களொருங் கெய்தி
மானவெம்போ ராட மறந்தணிந்தனர் பூதர்
ஆனறிந்தெறு ழிலக்க ரவரினுளொரு வீரன்
கானழலுண நேர்ந்த காட்சியினெதிர் சென்றான். 222

வேறு

தண்ட கப்பெய ரன்னவன் வார்சிலை
தலைவணக் கினன்வல்லே
மண்டு தீக்கணை சிதறின னொருமுறை
வயக்களஞ் சூழ்ந்தான்
கொண்ட துஞ்சிலை தொடுத்தது மறிகிலர்
குறையுட லெழுந்தாட்டும்
கண்ட துண்டங்க ணிமிர்ந்ததுங் கறைநதி
பலவுங்கண் டனர்விண்ணோர். 223

ஒளிம றைத்தது திறந்தென மொய்யிருள்
உடைந்தது போன்ஞாலம்
நெளிபெ ரும்படை யிறுதலு நெடுங்களம்
வெளிபட நேர்நோக்கி

---

220. அவன் இரதம் என்றது அசமுகனுடைய இரதத்தை.

221. அசமுகன் மறைந்து விஷ்ணு தந்திட்ட திகிரியை. மதுவான வன் நிராயுதனாயிருந்தபடியால் அம்மதுவின்மீது சக்கரமானது செல்லாது தன்னை ஏவிய அசமுகனையே மீண்டு கொன்றது. படை நிராயுதத்தனிடத் தில் செல்லமாட்டாது.

222. அவுணத்தலைவர். பூதர்கள் எல்லாம் தோற்று வீரம் தணிந் தனர்கள். இலக்கருள். அழலானது கானை உண்ண நேர்ந்த. வீரன் என் றது தண்டகனை.

223. ஆட்டும் - ஆடுதலையும்.

விளிவ டுத்ததோ நம்படைக் கெனநகைத்
தெஞ்சொரா யிரவெள்ளம்
வளையப் போரளப் பான்கதிர் மாற்றலன்
வஞ்சினத் தொடும்போந்தான். 224

வீற்று வீற்றுவெஞ் சரந்தொடுத் தாடமர்
விளைத்தபூ தர்கடாளை
நாற்று செங்கையை யுரத்தினைக் களத்தினை
நானிலம் படத்தாழ்த்தான்
ஆற்று நீரெனச் சோரிவார்ந் துடற்குறை
அலைத்தன வலியில்லார்
காற்று ணைக்கொரு காற்றெழில் புதுக்கினர்
உக்கிரன் கனன்றேற்றான். 225

நெடிய தண்டொடு நேர்ந்தவுக் கிரனுடல்
நிரைத்தனன் கணைமாரி
அடிகொள் பந்தெனப் பட்டுமீண் டனவது
கண்டெழு விடுத்தான்கைப்
பிடிகொ டண்டினு லதுசிதர்த் தாயிரம்
பெருக்குமுப் பதுமான்றேர்
நடைய றுத்தெழுந் தார்த்தனன் வேறுதேர்
நண்ணியக் கதையெய்தான். 226

அம்பி னக்கதை பொடித்தலு முக்கிரன்
அழன்றுதே ரொடும்பற்றி
உம்ப ரோக்கினன் விழுந்தவ னுக்கிரன்
றன்னையும் பரிநேச்சி

---

224. சூரியனாகிய ஒளியை மறைத்ததான ஒன்று திறந்த மாத்திரத்தில் இருள் உடைந்தாற்போல. போர்க்களத்தை ஒளியாகக் கொள்க. வெளி படல் - சனம் இன்றி வெள்ளிடையாய் இருத்தல். போரை அளக்கும் பொருட்டு. அது திறக்க ஒளியை மறைத்து என்றும், போல தண்டகளை மறைத்த படை அவனால் இறுதலும் என்றும் சொல்லுவாருமுளர். கதிர் மாற்றலன் - பானுகோபன்.

225. வலி இல்லார் புதுக்கினர் எனவே ஓடினர் என்பது. காவின் தொழிலாவது நடை.

226. முப்பதினாயிரம் தேர்.

வெம்பு தேரொன்றி னிவர்ந்துவே தன்றரு
வேலினை யெதிர்விட்டான்
நம்பி சோர்ந்தனன் குன்றொடு தண்டிநேர்
நடந்தெறிந் தனனார்த்தான். 227

குன்றி றுத்தலு மெழுக்கொடு குரகதங்
குமைத்தன னவனெற்றி
வன்றி றற்கணை யழுதழுய்த் தமர்த்திற
மாற்றின னதுகண்டு
நின்ற குன்றமொன் றகழ்தரு பிஞகியும்
நின்றனன் கணைமூழ்கி
ஒன்று சாரதத் தலைவரெல் லாமமர்
உஞற்றின ருலைவுற்றார். 228

ஆய தோல்விகண் டிலக்கரும் பெரிதம
ராடினர் வருகாலைத்
தீய னுய்த்தகோன் மாற்றினர் மேற்செலச்
செலுத்தின ரதுநோனான்
பாய வாளிக ளெண்ணில தொடுத்தவர்
பரப்பிய கணைநூறி
ஏயெ னச்சிலை யிலக்கமு மறுத்தனன்
எறும்சிலை யறவோடும். 229

வேறு வான்சிலை வளைத்தவு ணன்விடு
விசிகநுண் டுகளாக்கி
ஏறு தேர்பரி பாகினைச் சிதைத்தனர்
இரதமொன் றவன்பாய்ந்து
சீறி நூறுநா றுயிரஞ் சிலீமுகம்
செலுத்திவார் சிலைதேரும்
கூறு செய்தகன் மருமத்து மழுத்தினன்
கூர்ங்கணை சமர்நீத்தார். 230

---

227. தண்டி என்ற ஒருத்தன். பிடுங்கிய குன்றொடு.

228. பிஞகி என்றொருத்தன்?

229. அதைச் சகியாத பானுகோபன். தொடுத்து.

வீர கோளரி நேர்ந்திருங் கணைமழை
விடாதுமேற் சொரிகிறப்பச்
சூரன் மாமக னூறுநா ருயிர
கோடிவா ளிகடேண்டி
நேரும் வாளிக ணீறுசெய் தாயிர
நெடுங்கணை புயத்துய்த்தான்
ஓரும் வீரனு மவனுரம் போழ்ந்துற
உறுத்தினன் கணையன்னுன். 231

வில்லி னுலிவன் ருேல்விகாண் பரிதென
விண்டுமாப் படைதொட்டான்
ஒல்லை மேற்படர் பகழிவாய் மடுத்தஃ
துறுதலு மெதிரேவல்
வல்ல வீரனு மெடுக்குமுன் மார்பிடங்
கொண்டவன் மதிதன்னைச்
செல்லு லாய்க்கதிர் மறைத்தென மறைத்தது
தினகரன் போர்வேட்டான். 232

போர்தொ டங்குமுன் வீரமார்த் தாண்டன்கைப்
பொருசிலை துணித்தொட்டான்
வார்நு தற்கணு யிரங்கணை வரித்தனன்
மற்றொரு சிலைவாங்கி
நேர்ந்தொடுக்குமு னதனையுந் தேரையும்
நீறுசெய் தெழுநூறு
தார்ம ணிப்புயத் தேயினன் ருயவன்
தடங்கையின் முரித்திட்டான். 233

முரித்த வீரன்மார் பத்திடை நாந்தக
முடுக்கினன் முனிவீரன்
பரித்த நாந்தகத் தழுத்தினன் பதகன்குப்
பாயம்பா றிடத்தீயோன்

---

231. வீரசிங்கம்.

232. அவன் மதி தன்னை - வீரசிங்கத்தின் அறிவை. செல் மறைத் தென. தினகரன் - மார்த்தாண்டன். படை - சக்கரம்.

233. ஒட்டானுடைய நுதலில்: ஒட்டான் - பகைவன்.

உரத்தி ஞந்தக முரீ இக்குளத் தழுத்தினன்
உதிரமோ டுயிர்சோர்ந்தான்
தெரித்து வீரராக் கதனெதிர்த் தாயிரம்
சிலீமுக மேல்விட்டான். 234

விட்ட வாளிகள் சூர்மகன் விலக்கிவெங்
கணைகனூற் றினிற்பாகை
அட்ட னன்கடி தொருவனை யமைத்தொரா
யிரங்கணை யான்மோலிக்
கட்ட ழித்தனன் வீரராக் கதன்கருந்
தானவ ரிறைமைந்தன்
முட்டு நாணினன் மோலிவே றணிந்தவன்
மொய்சிலை தொடுத்தீர்ந்தான். 235

மற்றொர் வார்சிலை பற்றுமுன் றேர்ப்பரி
மாய்த்தனன் மற்றோர்தேர்
உற்ற காலையிற் கைச்சிலை துமித்தனன்
உருத்திராக் கதனோர்வேல்
பற்றி யோக்கின னதனையும் பொடித்தனன்
பானுகோ பனையண்மிப்
பொற்ற தேரொடு மந்தரத் தோச்சினன்
புழுங்கிவிண் ணொழுமன்னன். 236

வேதன் முன்றரும் வேலினை விடுத்தனன்
வீரராக் கதன்சோர்ந்தான்
பூத லம்விழு தானவன் வேறொரு
பொற்றதே ரிவர்ந்துற்றான்
கோதில் வீரர்க ளைவரும் பெருஞ்சமர்
குயிற்றினர் வலிதேய்ந்தார்
ஈது கண்டன னன்றுநன் றெனநகைத்
தெதிர்ந்தனன் விறன்மொய்ம்பன். 237

---

234. தெரிந்து.

235. ஒருவனைப் பாகனாக அமைத்து. கணையால்.

237. நவவீரரில் ஐவர். வீரவாகு எதிர்த்தனன். வீரகோளரி, வீர மார்த்தாண்டன், வீரராக்கதன் நீங்கிய ஐவரும்.

கண்டு தானவன் வெகுண்டுநீ தூதனுங்
கள்வனு தலினின்னை
மண்டி யாருயி ருண்பது பழியலால்
வருவதொன் றிலையானும்
உண்டு ளுருயி ரெஞ்சினுர் தமையெலா
முறுத்துவன் சிறையென்றுன்
அண்டர் நாயக னிளவலு முறுவலித்
தருளிலிக் கிதுகூறும். 238

நுங்க ளாருயிர் மேலெழுந் தூதன்யான்
அன்றியு நுமரெல்லாம்
பொங்கு மன்பினு லடிதொழு மிறைதரு
புதல்வனு தலினென்னை
இங்கணையென மதித்திடா தெதிர்தலை
யிழிவினி யிவனேடும்
அங்க வன்சம ராடின னெனும்புக
ழாக்குவ னினக்கென்றுன். 239

வேறு

என்ற லுங்கதிர் மாற்றல னிகல்பெ ருஞ்சிலை வாங்குபு
கொன்றி றற்கணை பத்தனைக் கோத்து விட்டனன் வாகுவும்
வென்றி விண்ணவர் தளையற வெய்ய தானவர் நாளற
மன்ற வையகங் கோளற வாளி பத்துறுத் தறுத்தனன். 240

அறுத்து நூறுகோல் கோபன்மே லண்ண லேயின னூறுதொட்
டிறுத்தொ ராயிரந் தானவ னேயி னுனவை யாயிரத்
தொறுத்து நம்மவ னயுதமே லுறுத்தி னுனவை நேர்கணை
தெறித்தி றுத்தபி னிலக்கமேற் சேர்த்தி னுன்கதிர் மாற்றலன்.

---

238. தூதனுகிய கள்வன். ஒன்றிலையானும் - ஒன்று இல்லையானுலும்.

239. இயமதூதன் யான். ஐ என - இறை என்று. எனக்கு இழிவு.

240. கோள் - இடையூறு.

241. அவைக்கு நேராகிய கணையைத் தெறித்து. கோபன் - பானு கோபன்.

செம்ம லக்கணை சிந்துபு சிதறி ஞனொரு கோடிமேல்
இம்மு றைத்தொகை யின்றியு மெய்து போர்விளை யாடினர்
அம்ம வாளியின் மாய்குவ ராறுத்து மெய்யுருத் தோற்றுவர்
மும்மை வையக முஞ்சர மூரித் தூணிய தாக்கினர். 242

ஆடு மெல்லையில் வாகுவி னங்கை வில்லிறுத் தானவன்
பீடி லான்சிலை குரிசிலும் பேசு முன்னறுத் தானவன்
நாடி யாயிரங் கணையுர நடவி னனிவ னவன்முடி
ஓட வேழ்சர முய்த்தன னுட்கி வேறுக வித்தனன். 243

கவித்த வன்கவ யங்கெடக் கடவு ளாயிரத் தீர்ந்தனன்
அவித்த நன்மைய னுயிர மழுத்தி னன்குளத் தவைவிலம்
குவித்தொ ராயிர மாயிரங் குவவுத் தோளுர மானனம்
பவித்தி ரன்கொளத் தொடுத்தனன் பானு கோபனங்
[கயர்ந்தனன். 244

வேறு

நாயக னயர்த்தலு நயத்தவிற லாளர்
மேயினர் தெழித்தனர் வெகுண்டமர் விளைத்தார்
காயிரு மழுத்திகிரி காதுகதை யாதி
ஏயின வனைத்துமுற வேந்தலது நோக்கி. 245

கார்முகம் வளைத்துவிடு காலனிகர் வாளி
போர்முக மிறுத்தவர் புயங்கைமுடி வார்தாள்
பார்முகம் விசும்புமுகம் பாய்திசைமு கஞ்சூர்
ஊர்முகம் விழுத்தின வுலைந்தபடை முற்றும். 246

நொந்தவிறல் வீரரு நொறிற்கணமும் யாரும்
வந்துபொரு வாகுவுழை மல்கினர்க ளாங்கே
புந்திதளர் சூர்மதலை பொன்றுமுணர் வெய்திச்
சிந்துபடை நோக்கியெரி சிந்தியெதிர் சென்று. 247

---

242. மேலே ஒரு கோடி சிதறினன். தொகை - பாணத்து எண். வாளியால் மறைவார்கள், பின் அவ்வாளியை அழித்து வெளிப்படுவார்கள். மாய்வு - மறைவு.

243. பீடிலானது சிலையை.

244. பவித்திரனனவன் தொடுத்தனன்.

246. வாளி விழுத்தின. போர்முகத்தில் தங்கினவருடைய.

தோன்றன்மிசை வாளிகடு றுத்தினன றுத்தாங்
கான்றவன வன்மிசைய டைச்சின னகற்றி
மான்றவன் மணிப்பொனிர தந்தபவொர் வையம்
சான்றவ னிவர்ந்துதவழ் தேர்சிலை தகர்த்தான். 248

வேறிரத மேறியெழு நூறுவிசி கந்தேர்ந்
தூறுபட வீரனுர முய்ப்பவுவ னம்பால்
தேறுசிலை தேர்பரிசி தர்த்தவுணன் மார்பம்
ஆறுதிர மாகவழி யாக்கினன வன்றான். 249

மற்றுமொரு வையமிசை வாவுதலும் வீரன்
பிற்றலையி ருந்தகணை பெய்தபெருந் தூணி
அற்றுவிழ வற்றமரு மப்புழையி னூடு
பொற்றகணை யேயினன்பொ ருதவன்வி யந்தான். 250

இன்னவனை வாளியினி றுத்தலரி தாமென்
றன்னையொரு பாலமரு மண்ணறரு மோகம்
மன்னுபடை தூண்டவிறல் வாகுவர னோக்கித்
துன்னுபடை யாலறிவு தோன்றுமென நின்றான். 251

தந்தைபடை யாயினுந்த வத்தினுறல் பெற்றோர்
சிந்தையினி னைந்தபடி செய்திடுவ தன்றே
அந்திலுயிர் வீரன்முத லோரறிவு மாய்த்து
மைந்தினொடு நிற்பவது கண்டுமகிழ் தீயோன். 252

---

248. பானுகோபனுனவன் அகற்றித் தபுக்கா நிற்ப. அடைச்சினன் - செறித்தனன்.

250. எவ்வீரரும் இலக்கைக் தமக்கு எதிராக வைத்து அம்பு எய்வார்கள். அவ்வாறன்றி, வீரவாகு தேவரானவர் பானுகோபனது பின்புறத்தில் இருக்கின்ற அம்பருத்தூணி இலக்காக அப்பானுகோபனது மார்பின் துளை வழியே அம்பு ஏயினுர் ஆதலால் அவ்வலிமையைப் பற்றித் தன் உள்ளத்தில் வியந்து கொண்டான். அற்றுப்போன மருமம்.

251. வீரவாகு தேவரானவர் நமது தந்தையாகிய கடவுளின் படையாகையால் எனக்கு அறிவு தோன்றுவிக்குமேயல்லாமல் என்னை யாது செய்யும் என்று நின்றார் என்க.

வென்றிரம தென்றுவில்வ ஊத்தனிக மீது
துன்றுசரம் விட்டுட று ஊத்தல்வினை மிக்கான்
அன்றைறவிளை வோர்ந்துகுக னுடலைய ரமோகம்
ஒன்றுபடை யூக்கினனு டைந்ததஃ தன்றே. 253

இரித்தபடை மீண்டுகுக னெங்கைதயை யடுத்த
துருத்துவிறல் வாகுவிவ னுள்ளுயிரை யின்னே
பிரிப்பலென முக்கணுடை யான்படைபி டித்தான்
தெரித்தவுணன் வானிடைம றைந்துநகர் சென்றான். 254

கரந்தவுண னேகியது கண்டுவிறல் வாகு
பரந்தபடை யோடுவளர் பாசறைய டுத்தான்
அரந்தையொடு தன்பகைய கன்றதறி வெய்யோன்
சுரந்தகளி யாற்கடறு ளேந்திடவ டுத்தான். 255

மண்ணிடை யிறுந்தகுவர் வான்புலனி றந்தார்
நண்ணுமுனு ணர்ச்சியினம் மாரிவரென் னுது
விண்ணவரொ டும்பொருத வீழ்குருதி யெங்கும்
துண்ணெனவி ரிந்ததுற முஞ்சுடர்செவ் வானம். 256

வாங்குபரி வேடமதின் மாமதிய நாப்பண்
ஓங்கிருடு மிப்பவொளிர் வித்தவெண்வி ளக்கம்
பாங்கருடுச் சேனையொளி பற்றலர்கண் முற்றும்
வீங்கியமு னைப்புலம்வி ளைந்ததகல் வானம். 257

---

253. துளைத்தலாகிய வினையில் மிக்கான். குகனுனவன் அமோகப் படையை ஊக்கினுன். அமோகப்படை - ஞானுத்திரம்.

254. பாசுபதாத்திரத்தைப் பிடித்தான்.

255. வெய்யோன் - சூரியன்.

256. இறந்த அவுணரானவர் தேவராகிய பின்னும் அவுணராயிருந்த முன் உணர்ச்சியால் அத்தேவர்களோடு ஆண்டும் பொர.

257. பரிவேடமானது போர்க்களத்தைச்சுற்றிய மதிலாகும். மதியானது போர்க்களத்தின் நடுவில் வைத்த விளக்காகும். உடுவானது சேனை ஒளியாகும்.

வேறு

அரும்பிய மாலையி லடுத்த வீரனும்
பொருந்திறன் முருகனைப் போற்றி யேவலால்
இருந்தனன் றனதிடத் தெவருஞ் சென்றுதம்
திருந்திய விடங்களிற் சிவணி வைகினர். 258

தொன்றறி யாததோர் தோல்வித் தீஞ்சுவை
நன்றுகைப் படுத்தவந் நாம வேலினன்
தன்றணி யுவளகஞ் சார்ந்து மத்தரின்
கன்றிய கவலையங் கடலிற் றாழ்ந்தனன். 259

மதலைதன் மனத்தொடு வராமை தேர்தலும்
கதமிகச் சூர்மகன் கனன்று நாளையான்
விதலையுற் றனைவரும் விளிய முக்கணன்
புதல்வனை வேறெனப் புழுங்கி வைகினன். 260

அதுதெரிந் தாண்டகைச் சூரன் றோல்வியும்
விதுவணி பிரான்மகன் வெற்றி வீக்கமும்
புதுவது காணிய புகன்று வெய்யவன்
கதுமெனத் தேர்கடாய்க் கடலிற் றோன்றினன். 261

புலரியிற் செய்கடன் புரிந்து சூர்முதல்
உலவிறன் படைஞரை யொற்றிற் கூயினன்
விலகரு மிலக்கவெள் ளத்து வீரர்கள்
கலவின ரெழுகடன் முழக்கங் காட்டினர். 262

மந்திரத் தலைவரு மற்று ளோர்களும்
தந்தியும் புரவியுந் ததைய வெவ்வகை
வெந்திறற் படைகளுந் தேரின் மேவுற
இந்திர ஞாலத்தே றிவர்ந்து சென்றனன். 263

---

258. தனதிடத்திருந்தனன்.

260. மதலை தன்னிடத்து வராமையை. சூராகிய மகன். வேறு - வெல்வேன். விதலை - நடுக்கம்.

261. புகன்று - விரும்பி. தோல்வியும் வீக்கமுமாகிய புதுமையைக் காண.

வெளிறிலா யின்றுநீ வெளிறு தங்குவை
தெளிகென வுற்பனஞ் செய்திட் டாலென
ஒளிவிரா யுடலெலாம் வெளிற வொண்மணிக்
களிகுலா மொருகுடை கவிந்த தென்பவே. 264

மானமா தமையிழப் பெய்தின் வாழ்தரா
மானம்வேல் வீரரு நீங்க வாழ்கலார்
ஆனசீ ராலின மென்ற டுத்தெனப்
பானிலாக் கவரிகள் பாங்கிற் றுள்ளின. 265

வீரர்போ ரிடையுயிர் விளிந்த தானவர்
வாரமா யமரரின் மருவக் கண்டிது
சீரிதோ வெனச்சிர மசைத்தல் போன்றன
ஓரும்வார் கொடிநிரை யுகந்த சைந்தவே. 266

எழுகட லோதையு மேழு மேகமும்
குழுமுறு மோதையுங் கூர்ந்த சேனையின்
விழுமிய வோதையும் வேறுங் தன்னெதிர்
கெழுமுவ தரிதெனக் கிளர்ந்த தின்னியம். 267

படைத்திற நோக்கிமெய் பனிப்ப ரென்றுதன்
உடைப்பெருங் கருணையா லும்பர் கண்களை
அடைப்பது கருதிமண் ணணுவிற் சென்றெனத்
துடைப்பருந் தூளிவிண் முழுதுந் தூர்த்ததே. 268

இன்னணம் படையெழுந் தேகுஞ் சூர்முதல்
மன்னரி முகன்மகன் மரித்த பின்னவன்
தன்னொரு மகனிவர் தம்மைச் சேனைகட்
கின்னுயிர்க் காவல ராக்கி யெய்தினன். 269

---

264. உற்பனம் - உற்பாதம். வெண்குடை.

265. வீரரை இனம் என்று.

268. மண்ணுலகமானது சென்றாற் போல.

269. சிங்கமுகனுடைய மகனையும், இறந்த தாரகனுடையமகனையும். மரித்த - இறந்த. பின்னவன் - தாரகன். அரிமுகன் மகன் அதிசூரன். தாரகன் மகன் அசுரேந்திரன்.

இடங்கழி கொண்டுயி ரிறுப்ப லென்றுசூர்
அடங்கருஞ் சீற்றமொ டண்மு செய்திபோய்த்
தடங்கடல் விடநுகர் சதுரன் சேய்முனர்
முடங்கிய கையினன் முனிவன் கூறினன். 270

தனைநுக ரொருவனைத் தருக்க ழித்தவவ்
வனைகழல் வலவனை வருத்தி தேரென
நினையுமு னவன்றர நிமல னேறினன்
அனைவரு மவரவ ரியல்பி னண்மினர். 271

திருமுகப் பரிதியந் தெய்வப் பேரொளி
பருகுபு பெருகொளி படைத்து மைதவிர்ந்
துருகெழு முழுமதி யும்பர் நின்றெனக்
குருமணிக் கவிகைமேற் குலாய தென்பவே. 272

மானமின் றழிதரு மாயை மைந்தனைத்
தானினி யகலெனத் தம்மி னத்தினை
ஆனதோ ரொற்றுவிட் டகற்றச் சோடைகொண்
டானுழி தருவபோ லலைந்த சாமரை. 273

கோளினை நாளினைக் குயின்கு ழாத்தினை
ஆளுநங் கடவுடே ரணுக லுற்றது
நீளிடை யேகுமி னென்று நீக்கல்போல்
தாளுயர் நெடுங்கொடி தழைந்த சைந்தவே. 274

வல்லிசை கேட்டொறு மாழ்கு மாவென
ஒல்லலன் முரசங்கேட் டுயங்குந் தேவர்கள்
மெல்லிசை கேட்டென வுவகை வீக்குறப்
பல்லிய மெங்கணும் பரந்தி யம்பின. 275

---

270. நெருங்கிக்கொண்டு. சதுர் - திறம், புத்தி.

271. தனை - வாயுவை. வாயுவான வலவன். ஒருவன் - ஆதிசேடன்.

272. ஒளியை வாங்கி. மை - களங்கம். சந்திரவட்டக்குடை.

273. சூரனது சேனையிலுள்ள தம் இனமாகிய சாமரைகளை. சோடை - சடைவு; ஈண்டுக் கவலை. மைந்தன் - சூரன். மைந்தனில் நின்றும்.

274. குழாத்தினை நீக்கல்போல.

275. மா - அசுணம். அவ்வசுணம் மெல்லிசை கேட்டாற்போல.

ஏழுல கெனத்தனோ டெண்ணப் பட்டுவிண்
வாழுல கிருதுவற் புறுத்த வள்ளறன்
பாழிகண் டிடும்புவி படர்ந்திட் டாலெனப்
பூழிவிண் ணிவந்தது புகையிற் சூழ்ந்தரோ. 276

புகையிடை நெருப்பெனப் பொங்கிப் பூதரும்
தகைவளர் வீரருந் தழங்கி முன்செலப்
பகைவலி மெலிதரப் பகவ னின்னணம்
அகைமணித் தேர்கடாய்க் களத்தை யண்மினான். 277

விண்ணவர் பொழிமலர் விரையிற் செங்களம்
நண்ணிய புலான்முடை நலியக் கூழையின்
அண்ணல்வை கினனணி வகுத்துத் தூசியில்
திண்ணிய வீரர்கள் சென்று கிட்டினார். 278

எலிப்பெருந் தொழுதிக ளிறுப்ப மன்சில
வலிப்பெரு நாகங்கண் மறலிச் சென்றெனக்
கலிப்பெருஞ் சேனையங் கடல்கி ழித்ததால்
சலிப்பறுங் குமரவே டானைக் கங்கையே. 279

இருவரு நேர்ந்தம ரியற்ற வீழ்ந்தன
கரிபல பரிபல காமர் தேர்பல
சரிகுட ரொடும்பல தானை பொன்றின
எருவைபேய் கொடிபல விறுத்த வெங்கணும். 280

---

276. முருகனது பெருமையை அறிந்த பூமியானது, முருகனானவன் என்னிடத்தில் அவுணரைக்கொல்ல வந்திருக்கின்றான்; தேவர்காள் நீங்கள் அஞ்சவேண்டா என்று விண்ணுலகத்தை வற்புறுத்தப் படர்ந்தாற்போல. புகையைப்போல.

278. கூழை - பின்படை. தூசி - முன்படை. கூழைப்படையில் முருகன் வைகினான்.

279. தொழுதி - கூட்டம். மன்: இடைச்சொல். எலிக்கூட்டத்தை அழிக்கச் சில பாம்பு சென்றாற்போல அவுணக்கடலை முருகனது சேனையாகிய கங்காநதி கலந்து கிழித்தது. இதனால் அவுணர்சேனை அதிகம் என்பதும் முருகன் சேனை குறைவு என்பதும் பெறப்படுதல் காண்க.

280. எருவை - கழுகு. கொடி - காக்கை. தேர் பல வீழ்ந்தன என முடிக்க.

தேங்குநெய்த் தோர்கட றிரியு மாதிரை
ஓங்குதேர் கலங்கரி யுழக்கும் யானைமீன்
வாங்கிய குடர்கள்சை வலங்கள் வீரர்கள்
தாங்கரு வடவையந் தழலொத் தாரரோ. 281

கதைதொடை தண்டம்வார் கண்ணி சக்கரம்
துதிதரு மிண்டைகோ றொடர்செய் தார்களாம்
முதிருமிங் குலிகநீர் முகத்தி னாட்டயர்
மதலையர் போன்றன வூர்தி மள்ளரே. 282

கருவிபோ ழூர்தியர் கறைகள் சோர்வன
பெருமழை விழுகுடை பிறங்கு மாம்பிகள்
குருதிதோய் முடிமணி சிதர்ந்த கோபங்கள்
இருநில னெமிர்ந்தபன் முல்லை யேய்த்தவே. 283

கண்களு முகங்களுங் கரமுங் கால்களும்
மண்ணிட மெங்கணு மலிந்த நீர்மையால்
தண்ணிய தாமரை ததைந்த லர்ந்தொளிர்
பண்ணையிற் றோற்றின பறந்த லைப்புறம். 284

கோடிமே லுடற்குறை குனிப்பப் பாடெலாம்
ஆடுமங் கூத்திவர்ந் தமர்ந்து ளாரெனப்
பாடுறு பிணமணை யாகப் பட்டுவீழ்ந்
தீடறு பிணங்கள்சார்ந் திருப்ப வெங்கணும். 285

---

281. மா - குதிரை. நெய்த்தோரானது கடலாகும்; திரிகின்ற மாவானது திரையாகும்; தேரானது கலமாகும்; கரியானது யானை மீனாகும்; குடரானது சைவலமாகும்; வீரர்கள் வடவாமுகாக்கினியாவார். கலம் - கப்பல்.

282. கதை தொடையாகவும், தண்டம் கண்ணியாகவும், சக்கரா யுதம் இண்டையாகவும், கோல் தொடர்செய்த தார்களாகவும், இங்கு லிகம் அளாவிய நீரின்கண் மிதக்கும் தோணியராய் ஆட்டு அயர்கின்ற ஆடவர்களை ஊர்தி மள்ளர் ஒத்தார்கள். வேனிற்காலத்தில் விளையாடு கின்ற ஊர்தியை மதலையாகக்கொள்க. நீர்விளையாட்டில் தோணியில் ஏறிக்கொண்டு முகத்தில் நீரைப்பொழிந்து விளையாடுவார் எனினும் பொருந்தும்.

283. கருவி - கவசம், ஆயுதப்பொது. சோர்வன மழையாகும். விழுந்த குடைகள் ஆம்பிகளாகும். முடியினின்றும் சிதர்ந்த மணிகள் இந்திரகோபங்களாகும். பல் முல்லையரும்பாகும். ஆம்பி - காளான்.

284. பண்ணை - மருதநிலம்.

285. அக்கூத்தைப் பார்க்கும்பொருட்டுப் பக்கத்தில் திண்டு தலை யணையில் இருந்துகொண்டிருக்கும் பிரபுவைப்போல். பிணமானது திண்டு தலையணையாகா நிற்ப. பட்டு வீழ்ந்து - இறந்து வீழ்ந்து.

எதிரெதிர் வாளொடு மேந்து தோலொடும்
அதிர்கழல் வயவர்த மாக்கை வைகலின்
வதியுயி ரினரென மருண்ட பேய்கணை
நுதிசித றுறுப்பினை நோண்ட ருந்துமே. 286

இன்னணம் போர்க்கள மிலங்கு மேல்வையில்
துன்னிய பூதராற் றொலையத் தானவர்
அன்னது கண்டதி சூர னென்பவன்
முன்னினன் மறக்கனன் மூளப் பூதர்மேல். 287

வேறு

மிக்கரி மாமுகன் கான்முளை
வெஞ்சமர் விஞ்சவி ளைத்தலும்
உக்கிர னோர்ந்தொரு தண்டுரத்
தோச்சினன் சாலிகை சிந்திய
தக்கொடி யோனிலக் கங்கணை
யேயினன் மெய்யவை மூழ்கலும்
புக்கவிர் தேரொரு குன்றிறற்
பொன்றின னுக்கிரன் மாற்றலன். 288

சேமநெ டுஞ்சக டண்மினன்
சென்றிவன் மாவுதைத் தட்டனன்
நாமவி லாரொரு நூறுகோ
னடாயின னுக்கிரன் றண்டுகொண்
டேமறி வித்தனன் வேறுதேர்
எய்தியங் கிப்படை யேயினன்
பூமியும் விண்ணுந டுங்குறப்
போந்தது பற்றிவி ழுங்கினன். 289

வாரிப்ப டைசண்ட மாப்படை
வாயுப்ப டையயன் வான்படை
வீரிய மாயன்ப டையும்வெவ்
வேறுசெ லுத்தின னலதி

---

287. அதிசூரன் - சிங்கமுகாசுரன். தானவர் தொலைய.

288. உக்கிரன் அதிசூரனது தேரைப் பொன்றுவித்தான். மாற்றலன்- அதிசூரன்.

289: உக்கிரனவன் விழுங்கினன்.

சூரன வற்றையு முக்கிரன்
சொன்றியெ னவயிற் றுக்கினன்
ஆரிய னுமம லன்படை
அன்பொடு போற்றிவி டுத்தனன். 290

கைக்கதை நீக்கிவ ழுத்தினன்
கண்ணுத லான்படை கண்ணுதல்
பக்கம டுத்தது சூர்மகன்
பாரிழிந் தோர்கதை கொண்டுநேர்
உக்கிரன் றிண்புயத் தெற்றினன்
உக்கிர னக்கதை வாங்குபு
மிக்கவன் மார்பின டித்துமண்
வீழ்த்தினன் கண்டசு ரேந்திரன். 291

பாரிடர் பாரிடம் வீழ்தரப்
பத்துநா றுயிர மோர்தொடை
சேரவ யிற்கணை தூண்டுபு
செங்குரு திக்கட றேக்கினன்
காரென வார்த்தெதி ருங்கன
கன்கணை பாய்ந்துரு வத்திழி
சோரியி னோடவன் றேரினைத்
துன்னிவின் னுணறுத் தேகினன். 292

ஓர்சிலை வேறுகொண் டாடகன்
உய்த்தவி லங்கலு திர்த்தவன்
வார்புய மாயிர வாளிகள்
வாங்கிவி டுத்தனன் றுனவன்

---

290. சண்டப்படை - இயமப்படை, சூரியப்படை. அதிசூரன் செலுத்தினன். அதிசூரன் விட்டான்.

291. உக்கிரன் கையில் உள்ள கதையைக் கீழே போட்டுவிட்டு நிராயுதனுயிருந்து வந்தபடையை வழுத்தினன். நிராயுதனை ஒன்றும் செய்யாதாகையால் அவ்வாறு இருந்தான். அசுரேந்திரன் கண்டு.

292. கனகன் முருகவேளைச் சேர்ந்தவன். அசுரேந்திரனது தேரில் பாய்ந்து.

போர்கழி யக்கன கன்பரி
பொன்றவ துக்குமுன் மத்தனைச்
சேர்கணை யாற்றிறல் சிந்தினன்
சென்றெதி ரேற்றனன் மந்தனே. 293

ஐயிரு வாளிதன் மெய்யுற
வார்த்தொரு வெற்புவி டுத்தனன்
மையனை யானுர மேற்றனன்
வண்டுக ளாயது பத்துநா
றெய்தவ னுடல டக்கினன்
ஏற்றுடல் சிங்கன்வி டுங்கதை
ஒய்யென மாற்றியொ ராயிர
வொண்கணை யாலெறும் நீக்கினன். 294

காவல ரிம்முறை நீங்கலும்
காழிவி லக்கரு ளுள்ளவன்
மேவரு தண்டக னுயிர
வெங்கணை தாரகன் கான்முளை
பாவுநு தற்கண ழுத்தினன்
பரிந்தவ னெண்கணை நெற்றியில்
கோவைப டப்புகு வித்தலும்
குன்றினன் றண்டக னுற்றலில். 295

தண்டகன் பின்வரு சோமுகன்
தானவ னெய்கணை மெய்புக
உண்டனன் வாளியிற் பாகனோ
டோடிர தப்பரி யைச்சினம்
கொண்டவன் வேறொரு தேருறீஇக்
கூரயி லொன்றுவி டுத்தனன்
விண்டது மார்பங்க லங்கினன்
விசயன வற்கிளை யான்விரைஇ. 296

---

293. ஆடகன் - கனகன். உத்தமன் என்றொருவன். சிந்தினனாகி.

294. மையனையான் - உன்மத்தன். உன்மத்தனை அடக்கினன். மத்தனை ஆடல் அடக்கினன். ஏற்றுடலுகின்ற சிங்கன். மையனையான்.

295. கான்முளை - அசுரேந்திரன்.

296. சோமுகன் வாளியால் பரியை உண்டனன். சோமுகன் கலங்கினன். அவன் - அசுரேந்திரன். அவற்கு இளையவனாகிய விசயன்; அவற்கு - சோமுகனுக்கு.

பகழியோ ராயிரந் தூயவன்
பாகொடு கைச்சிலை பாற்றினன்
தகுவனோர் தண்டம்வி டுத்தொரு
சகடம டுத்தனன் மற்றது
புகழ்விச யன்கணை தூனுறப்
போந்தவ னைக்கண்ப டுப்பிய
தகலுந ராயினர் நேர்ந்துபோ
ராடிய வேனையி லக்கரும். 297

பூதர்க டல்கடை மத்தெனப்
போந்தசு ரேந்திர னுடலும்
கோதைவி றற்புய னோக்கினன்
கூர்ங்கணை கொண்டுட னார்த்தனன்
ஆதவ னொத்தவு ணன்கணை
யாயிரம் வீரன்மொய்ம்பு யத்துவில்
காதின னேழ்கணை யாலொரு
கார்முகம் வாங்குபு வீரனும். 298

ஆயிரம் வாளியிற் பாகயம்
அங்கைவ ரிச்சிலை மாய்த்தனன்
தாயொரு தேர்சிலை கொண்டுவெஞ்
சரஞ்சதம் விட்டிர தந்தபக்
காயமெ ழுந்தவன் றேரிடைக்
கடிதுகுப் புற்றவன் கையிலொன்
றோயவ றுத்தனன் றண்டமொன்
றோச்சினன் குனவன் வீரன்மேல். 299

வானிலெ ழுந்துவி றற்புயன்
வந்தவன் சென்னியு தைத்தரோ
வானிலெ ழுந்தனன் மீட்டுமவ்
வல்லவு ணன்சுடர் வாள்கொடு

---

297. தூய் - தூவி. தகுவன் - அசுரேந்திரன். படுப்பியது.

298. விறற்புயன் - வீரவாகு. பூதராகிய கடலை. வில்லைக்காதினன்.

299. அயம் - குதிரை. தப - கெட. அசுரேந்திரனது தேரிடை. கையில் ஒன்றை - ஒருகையை. மற்றொரு கையால் ஓச்சினன் என்க. குப்புற்று அவன்.

தானும்வி சும்பிலெ ழுந்தனன்
தார்மலி வாகுத ஞந்தகத்
தானவன் சென்னிய றுத்தனன்
அஞ்சியி ரிந்தனர் தானவர். 300

இருபெரு மைந்தரும் வீழ்ந்ததும்
எண்ணில ரும்படை பட்டதும்
வெருவுமு ளத்தொடு மெஞ்சிஞேர்
மீண்டது நோக்கிவெ குண்டுசூர்
ஒருநொடி யிற்படை நாழில்செய்
தூர்புகு வேனென வண்மிஞன்
பொருசிலை நாணொலி கொண்டனன்
புலவரு ளஞ்சுழல் கொண்டனர். 301

வேறு

ஒருதொடை யினிலள விலகணை யுகுமழை யெனவிரவ
வருமவு ணர்களிறை பெரிதமர் மலைதலு நிமிர்கணையால்
குருதியி னலகில நதிவளை குரைகட லொடுபொருத
எருவையி னெடுகழு குகள்பொர விறுவன பலபூதம். 302

கழலினெ டடிதுமி வனவணி கலையொடு தொடைதுமிவ
நிழலுமிழ் சுரிகையி னெடுமரை துமிவன நிலனுகுவ
அழலுமிழ் படையொடு கரதல மறுவன திசைபெயர்வ
சுழல்விழி யொடுதலை யிறுவன தொடுகட லிடைவிழுவ. 303

நொந்தனர் சிலரஞ் சினர்சிலர் நுவலறி விலர்சிலர்போர்
மைந்திலர் சிலர்மற மிலர்சிலர் வஞ்சின மிலர்சிலர்மெய்
நைந்தனர் சிலர்நடை யிலர்சிலர் நந்துயி ரினர்சிலர்கள்
முந்திய வடிபிந் தினர்சிலர் முனைபடை யடுதலைவர். 304

---

300. நாந்தகத்தான் - நாந்தகத்திஞல்.

301. இரு மைந்தர் - அதிசூரன், அசுரேந்திரன். சூரன்.

302. கணையாற் பொருதன. எருவையோடு.

303. அரை. அடிதுமிவன முதல் அரைதுமிவன என்பது ஈருக உள்ளன எல்லாம் நிலத்தில் உகுவனவாம். கரதலம் திசைபெயர்வன. தலை கடலிடை விழுவ.

304. முந்திவைத்த அடியைப் பிந்திவைத்துப் போரில் தோற்பவர் சிலர். கண்ணுக்கு முந்தியிருந்த அடியை.

தலைவர்க ளொடுபூ தர்கணனி தளர்வுற வதுகாணுக்
குலமட வியர்வேர் வையின்வரு குமரர்கள் கணையேவ
நிலனவை விழநீ றுவில்பட நிரைவிடு புகைவார்வில்
கலவுமு னவர்தேர் விழவுரங் கடவினன் பலவாளி. 305

நியுதவெண்மர்களொழியவிண்ணெறி நிகழிரவியின்பெயர்கொள்
வயவன்முன் விடுகணை யிருமுறை வருதலு மவைதொலையாப்
பயில்சிலை யொடுதூ ணியுமறப் பலகணை நுதலுரமும்
உயிருலை வுறநட வினனவு ணர்களுறு குலவிறைவன். 306

வேறு

வீரராக் கதனெதிர்ந்து கணைபொழிய
அவைவிலக்கி வில்லை மாய்த்தான்
கோரனு மவுணனவன் கொடிஞ்சியந்தே
ரிடைப்பாய்ந்து கொதித்து வாளால்
பாரவார் சிலையெறிந்து பயனின்றி
வாளொடியப் பாணி கொண்டு
நேரவுக் கினனவுண னடியேற்றி
எற்றநெடுந் தூரத் தானுன். 307

அட்டுமழை யெனவீர மகேந்திரனெய்
கணைவிலக்கி யவுண னெய்ய
வட்டணைசெய் தவைவிலக்கி யெய்வீரன்
சூரனும்வட் டணையிற் றேரை
விட்டுவரு கணைவிலக்கி முப்பதுதா
ளினுந்தோளின் விளம்பு மம்பும்
கட்டழகன் மார்பிடைநாற் பதுமேவி
வலிதொலைத்தான் கலங்கி மீண்டான். 308

---

305. விடுபு - விட்டு. கையானது வில்லில் கலவுதற்கு முன்னுக.

306. வலவன் - சூரன். வீரமார்த்தாண்டன்: சூரியனுக்குச் சூரன் என்ற ஒரு பெயரும் உண்டு. நியுதம் - இலக்கம். நியுத எண்மர் - இலக்க மாகிய எண்ணையுடையவர்; எனவே, இலக்க வீரர் என்பது. ஒழிய நடவினன்.

307. அவுணனுனவன் மாய்த்தான். சூரனது தேரில். ஓடியாநிற்ப. வீரராக்கதனுனவன் கைகொண்டு அடித்தான். சூரன் காலால் எற்றினுன்.

308. அட்டும் - நெருங்கிய. விளம்பும் அம்பும் - அம் முப்பதாகச் சொல்லப்படுகிற அம்பும். வட்டணை-வட்டம். என்று வட்டமாகச்சுற்றல்,

சொரிம்மழையிற் கணைபரப்பு வீரதீ
ரப்பெயரோன் றன்ன வெங்கும்
நெரிபகழி விலக்கிநெடு வில்லொடுதேர்
தூட்படுத்தா னேரான் றன்மேல்
பெரியவொரு கதைகொண்டு நடந்தனனெய்
கணையினதன் பீடு மாற்றி
விரியுரத்தும் புயத்துமெவ்வேழ் விசிகமுகைத்
தான்சூரன் மீண்டான் றீரன். 309

தெய்வதவே லாலடுவ லெனவீர
மகேசன்விடச் சென்று சூரன்
எய்வடிகோ லாயிரந்தூட் படுத்துரம்பட்
டுதிராக வெய்த்து வீரன்
கைவயினோர் தண்டெடுக்கு முனங்கணையேழ்
புயம்விடுத்துக் கழலச் செய்தான்
மெய்வளர்கோ ளரியெதிர்ந்து சிலைவணக்கி
நாணெறிந்தான் வெகுண்டு சூரன். 310

சிலையறுத்துத் தேர்பொடித்து நுதலினு
யிரவாளி செறிப்ப வீரன்
மலைபெயர்த்து மேல்விடுத்தான் வார்கணையொன்
ருலறுத்து வாளி நூறும்
நிலவுரத்தி னுறவிடுப்ப நேர்போந்து
நிறத்தெறிந்தா னிமலன் மைந்தன்
அலர்கரம்விண் டதுபற்றி யாழிமிசைச்
செலவுகைத்தா னவுணர் கோமான். 311

புரந்தரநா மக்குரிசி லியமனெடும்
படைவிடுத்தான் போந்து சூரன்
உரந்தலைப்பட் டுதிரவயன் படைவிடுக்கு
முனங்கணையெய் துவனைச் சாய்த்தான்

---

310. எய் வடி கோல். சூரன் உரம். உதிர் ஆக - துகளாக. வேலா ன்து கோல் ஆயிரத்தைத் தூட்படுத்தி.

311. சூரனுடைய மார்பில் அடித்த வீரகோளரியின் கையானது பிளந்துபோனதே அல்லாமல் சூரனை ஒன்றும் செய்திலது.

சரந்தொடுத்துத் தொடுகணைக டடுத்தமர்க்கும்
வீரராந் தகனைச் சீறி
வரந்தழைத்தோன் சிலைமுரித்துத் தேர்நெரித்து
வலியிரித்து வறுமை செய்தான். 312

வேறு

வாகுப்பெய ரமரன்சிலை வளையக்கடி தெதிரா
வேகக்கடு வனையானிவன் விறல்சிந்துவ னென்று
ஏகக்கணை பலகோடிக ளெய்யுந்தொறும் விலக்கிச்
சாகத்திடு கணைநூறவ னுதல்சாரவி டுத்தான். 313

நுதலிற்படு கணைநீறுற நுதலிக்கும ரன்கை
வதிசத்தியை யேலுங்கணை மழைபோலெழு வித்தான்
பதகன்கணை யவைசிந்துபு பரமன்மகன் மொய்ம்பில்
உதிரம்பொழி தரவெண்கணை யுறுவித்தன னுருவ. 314

வருந்துந்தனி வீரன்வடிக் கணையாயிர கோடி
சொரிந்தங்கவன் வலவத்தொகை துயரத்துறு வித்தான்
இருந்தானவன் வீரன்சக டிறுத்தானிவன் வேறோர்
பெருந்தேர்கொடு கனல்காற்படை பெயர்வித்தன னவன்மேல்.

அறிந்தானெதிர் படைதொட்டில னவைபட்டுதி ராக
எறிந்தானிவன் கூற்றுப்படை யென்றாழ்ப்படை யவையும்
மறிந்தேவிழ நிருதிச்சத மகனீரிறை படையும்
சிறந்தேவின னவையுஞ்சித ராகத்திகழ் வீரன். 316

---

312. வீரபுரந்தரன்.

313. சூரன் எய்யுந்தோறும். சாகத்தீவில் இடும்படியான கணை. வாகு - வீரவாகு.

314. நீறுதலை வீரவாகுவானவன் கருதி முருகன் கைவேலை ஒத்த கணையை எழுவித்தான். வீரவாகுவினது தோளில். பதகன் சிந்தி, சூரன் தொட்டிலன். சூரன்மீது பட்டுத் துகளாக.

316. மறிந்து விழ.

மாயப்படை யவுணப்படை விட்டானவை மாய்ந்த
ஆயன்படை வேதன்படை தொட்டானவை யழிந்த
வீயப்புர நகைகொட்டிய விமலன்படை யுகைத்தான்
காயப்படை கண்டப்படை கடிதேவின னவனும். 317

ஆலங்கனல் கூளிக்குல மசனித்திர டிமிரம்
சாலுங்கதிர் கூற்றுச்சிலை சரமாழிவை யிலைவேல்
சூலம்பல புடைசுற்றின துன்னிச்சம ராடி
மாலும்படை விட்டோருழி மருவுற்றன மாதோ. 318

சூரன்சினம் வளரச்சுடு கணைமாரிக டூர்த்தான்
வீரன்றடை செய்தெய்தமர் விளையாடுழி வீரன்
வாரச்சிலை முரிவித்தனன் மணிவேலிவன் விட்டான்
சாரப்பொடி யாயிற்றவ னொருதண்டமு கைத்தான். 319

எதிர்விட்டவல் லெழுவொன்றனை யெற்றித்துக ளாக்கி
அதிரத்தட மார்பத்துற வருவிக்குரு தியனுய்
முதிர்மூர்ச்சனை யுற்றானவி றன்மொய்ம்பன்மறந் திருகிப்
பிதிராக்கிய பூதப்படை பெட்டான்கணை தொட்டான். 320

அம்மைத்தவ மாற்றும்பய னருளப்பொழு திதுவென்
றிம்மைச்சம ராடப்புகு மிறவாவறு முகவன்
மும்மைச்சக மேத்துமவி றன்மொய்ம்பன்முத லெவரும்
கம்மக்கழ லவுணற்குடை செயல்கண்டெதி ருற்றான். 321

நட்புப்பகை நொதுமற்றிற மொருமூன்றினு நாதன்
பெட்புற்றெறி றுறலூழிகள் பெயரத்தவ மாற்றும்
ஒட்பத்தினர் தம்பாலல திலையென்பது ணர்த்தும்
திட்பத்தவ மிகையானெதிர் தெவ்வுக்கொடு புகலால். 322

---

317. மாயப்படை - மாயாஸ்திரம். ஆயன்படை - விஷ்ணுப்படை. காய் அப்படை கண்டு அப்படையை. அப்படை - பாசுபதாஸ்திரம்.

318. சிலை - மலை. படை - பாசுபதாஸ்திரம்.

319. வீரவாகுவின் சிலையை.

320. தண்டமானது ஆக்கி மார்பில் உற.

321. சூரனுக்கு அருள. கம்மியரால் செய்த கழல்.

322. புகலால் மூன்றிலும் உறலானது இவர் தம்பால் அல்லது தவம் செய்யாரிடத்து இல்லை என்பதை உணர்த்தாநிற்கும். சூரன் பகைவனுயினும் முன் தவம் செய்திருந்தமையால் காட்சி கொடுத்தான் என்க.

பயன்முற்றிய சூரன்புகு படர்பேரொளி முருகன்
இயன்முற்றிய வுருவத்தெழி லெதிர்நோக்குபு மொழிவான்
வியன்முற்றிய களனிற்படை வீயத்தமி னின்றாய்
புயன்முற்றிய சிலையேனொடு பொரவல்லையொ லென்றான். 323

யானைத்திரள் குதிரைத்திர ளொறுழ்வெம்புலி கேழல்
கானத்திரண் மிருகக்கண மெளிதட்டுழல் சிங்கம்
கூனற்பிறை யனவள்ளுகி ரெண்காற்குரு கண்மின்
மானத்திர ளென்னுநினை மதியேலென விறைவன். 324

மிக்கட்டுயர் சிலைவெய்யவன் விண்ணோர்செவி பொத்தக்
கைக்கண்வளை வித்தேற்றிய கடிநாணொலி கொண்டான்
திக்கெண்களி றிரிவுற்றன சேடன்றெரு மந்தான்
நெக்குத்தளர் வொடுநின்றன நிலையெண்குல கிரிகள். 325

புத்தேளிரு மறியாவொரு பொருளேயென நின்ற
அத்தேவனு மொருவார்சிலை யடுநாணொலி கொண்டான்
மொய்த்தாயிர மேலெட்டென மொழியண்டமு மற்றும்
கொத்தோடுலை வுறநீண்டது குமுறுற்றவவ் வொலியே. 326

வேறு

கூர்த்த வாளியாற் றேரையு முலகையுங் கொடியோன்
போர்ப்ப வீழ்த்தவை புண்ணியன் பொலன்சக டகல்வான்
வார்த்த வாளியின் மறைத்தனன் மறுத்தவை தொடுத்தான்
மூர்த்தி மேலுறப் பத்துநா றாயிர முனைக்கோல். 327

நொதுமல் - பற்று இகல் இன்மை. ஒட்பம் - அழகு. நன்மை முதுக் குறைவு மேன்மை புகலுணர்த்தும். ஆல் அசை என்பாரும் உளர்.

323. புயல் - மேகம். மேகம்போன்ற சிலை. புயத்திலுற்ற சிலை எனினும் ஒக்கும்.

324. எண்காற்குருகு - சரபம். மானம் - பெருமை, வலிமை. என் ஆம் - யாதாகும்; யாதும் ஆகாதென்பது.

326. ஆயிரத்தெட்டு அண்டமும்.

327. வானில் வார்த்த வாளியாலே தேரை மறைத்தான். அவை மறுத்து.

ஞான நாயக னலிந்தவை நாமவான் கணையேழ்
தேனு லாங்தொடை யவன்புயத் தேயினன் றிணிதோட்
கூன மேதுமின் றவன்விடு முறுகணை விலக்கி
மான வேலவ னுயிரத் தவன்சிலை மடித்தான். 328

பிரமன் றந்தவேல் விடுத்தனன் பெருமித வவுணன்
பரமன் றந்தவ னதுபடுத் துகைத்தபல் சரமும்
உரன்ம லிந்தவே ளொருசிலை கொடுதொடுத் தொழித்திட்
டரன்ம கன்புயத் தெழுகணை செலுத்தினின் றுர்த்தான். 329

பட்ட வாளிகள் பூழியா யினபர னுயிர்த்தோன்
எட்ட னேடிரு கணைதொடுத் தெறுழ்ச்சிலை துமித்து
முட்டு மாயிர வாளியாற் றேரினை முருக்கி
ஒட்ட லான்படைச் சேமத்தே ரனைத்தையு மொழித்தான். 330

முத்த லைப்பெருஞ் சூலமொன் றேயினன் மூர்க்கன்
அத்த னுற்கணை தொடுத்தது துணித்தெழு கணையால்
நித்தி லக்குடை துமித்தொரு கணையினீண் மோலி
மெய்த்த நல்வரத் தோடுமண் வீழ்த்தினன் விரைவின். 331

காமர் மோலிமண் விழுமுனங் கணைபல போக்கித்
தாம மாரணி யாவையு மறுத்தனன் றலைவன்
தோம ளாவிய வுளத்தவன் றோல்விகண் டவுணன்
நாம வான்படைத் தலைவர்க ளரலையின் வளைத்தார். 332

செங்கை யேந்திய திகிரியைத் தூண்டினன் மலன்
பொங்கு தானையம் புணரியைப் பொள்ளெனச் சுவற்றிற்
றெங்க ணாயகன் கைப்படை யுருத்திர ரென்றால்
அங்கண் மாநிலத் தழிதராப் படைகளு முளவோ. 333

---

328. தோளுக்கு ஊனம் சிறிதும் இல்லை ஆயிற்று. அவை நலிந்து. சூரனது சிலை.

329. பரமன் தந்தவன் உகைத்த சரமும்.

333. பன்னிருகையிலும் பன்னிரு படைகள் தாங்கியிருக்கின்றான் முருகவேள். ஒருகையிலுள்ள வேற்படையானது சத்தியாகும். மற்றைப் பதினொரு கைகளில் உள்ள பதினொரு படைகளும் பதினொரு உருத்திரர்கள் என்க.

பிணத்தின் குப்பையும் பெருகுநெய்த் தோர்ப்பெரு நதியும்
கணக்கி லாதன கண்டனன் கருமுருட் டவுணன்
துணித்த பாலகன் சேவக னன்றெனத் துணிந்து
மணத்த தாமரை மனையினான் படைவழங் கினனால். 334

ஏந்த லேந்திலை வேலது விழுங்கவீர்ந் துளவன்
காந்தி ரும்படை கடவினன் கவ்விய ததுவும்
சாந்த நீறெனத் தரித்தவன் றனிப்படை தொடுத்தான்
போந்த தப்படை புவனமோ டுயிரெலாந் துளங்க. 335

அடுத்த காலையிற் றந்தையை நினைந்தகங் கையில்
மடுத்து நின்றனன் மாயைதன் மகனது காணாப்
படைத்தி றத்திலிப் பாலன்யா னலதுவே றில்லென்
றெடுத்த விம்மிதத் தினையன சூழ்ந்தன னிருப்ப. 336

கருணை நாயக னவன்முக நோக்குபு கழறும்
வெருவு வன்சிறை விண்ணவர்க் கொழியெனத் தூது
மருவ வுய்த்தன மிசைந்திலை யினிவழி வரினும்
பொருவி லாத்தனி யரசொடும் பொலிதிவா ராயேல். 337

அழுன்று நின்னுயிர் குடிப்பதிங் கருங்குரைத் தன்றால்
தழன்றி தோதடங் கரத்துவெள் வேறவிர்ந் ததுபார்
கழன்ற கைப்படை யார்தம தாருயிர் காற்றல்
நிழன்ற தண்குடை யார்நிலை யன்றெனத் தாழ்த்தேம். 338

நின்னு ளக்கருத் தெவன்கொலா நிகழ்த்தெனச் சூரன்
தன்னு ளத்தெண்ணும் பாலனைச் சாடகான் மாட்டேன்
என்னை வேலனு மிறுப்பவல் லானெனும் வரத்தால்
துன்னும் வான்பழி முடிவில்வெல் லினுந்தொலைந் திசையாம்.

---

334. பிரமாஸ்திரம்.

335. வேலானது அதையும் கௌவியது.

336. அகங்கையில்.

337. யான் சொல்லுகின்ற வழியில் இனி வருவாயானாலும் பொலிவாய். வாராயேல் அருங்குரைத்தன்று. குரை; இடைச்சொல்.

338. நிராயுதருடைய உயிரை.

339. தன் உள்ளத்தில் எண்ணுவான். யான் பெற்ற வரத்தால் முருகவேள் என்னைக் கொல்ல வல்லமையில்லாதவனாவான். இப்போது

நின்ற சேனையோ டடுத்தின்னு நெடுஞ்சம ரியற்றி
வென்றி கோடென விண்மறைந் தகன்றனன் விமலன்
அன்றி னுன்றிற மறிந்தன னமரர்க ளடுத்துப்
பொன்றல் வல்லையாக் கெனக்குறிப் பாற்பல புகழ்ந்தார். 340

அமல நாயக னங்ஙனம் புரிதுமென் றளித்தான்
சமரின் மாய்ந்துடை சாரதர் குழாங்கொடு சார்ந்து
குமர வேளடி பணிந்துபோய்க் கொடியவ னொச்சி
உமிழ்சி னத்தினர் முற்றின ருலைப்பவ ராஞர். 341

நொச்சி காத்ததி கோரனென் மையினவ ணிருந்தான்
வெச்செ னப்பல படைகொடு விளைத்தனன் பூசல்
மெச்ச விண்ணவர் பூதரப் படையெலா மிதித்துச்
செச்சை செய்துகோ புரத்தொடு திண்மதி லழித்தார். 342

அகத்துப் புக்கன ரட்டனர் மாளிகை நிரைகள்
உகத்து மோவிலா வவுணர்க ளாவியு முண்டார்
சகத்துக் கிசனைத் தணப்பதே யென்றுமீண் டனர்சண்
முகத்த னாருள் புரிந்துபா சறையின்முன் னினஞல். 343

பொருது வீழ்ந்தவர் தன்னுடல் பொதிர்த்துவிண் ணேகக்
குருதி தோய்ந்துமெய் குலைந்துவெய் யவன்பெருங் குன்றத்
தொருபு றத்திடை யொளிப்பவன் போன்றெழிந் தனஞல்
மருவு சேனையோ டமலனும் பாசறை வதிந்தான். 344

நான் முருகவேளுக்குத் தோற்றேனுனலும், பின்பு வெல்வேனேயாஞல் இப்போது தோல்வியால் உண்டாகிய பழியானது கீர்த்தியாகவே முடியும். பழி இசை ஆம். எண்ணும். வல்லான்: எதிர்மறைவினை.

340. சூரன் மறைந்தான். கோடு - கொள்வேன்.

342. அதிகோரன் பூசல் விளைத்தனன். பூதர் அப்படை. செச்சை - சேறு.

343. சண்முகத்தன் மீண்டோருக்கு அருள் புரிந்து பாசறையிலானன். தணப்பது ஆகுமா என்று.

344. வெய்யவன் - சூரியன்.

வேறு

வறியனுய்த் தந்தை மீண்ட வரவறிந் தென்றூழ்க் காதும்
சிறுவனுங் கெய்தி யில்லாச் சேவகம் பலவுஞ் செப்ப
முறையிலாச் சூரன் கேட்டு முருகனே டமர்த்தல் யானே
உறுமொரு தூத னுவி யுண்மென விடுப்ப மீண்டான். 345

அற்றைநாள் வடசார் நொச்சி யவுணரோ டழிதல் கேட்டாங்
கொற்றரின் யவனற் கூவி யுளுற்றென வேவிப் பின்னர்ப்
பற்றுமா காய னென்னு மவுணனு யிரப்பத் தென்ன
முற்றுவெள் ளத்தி னேடு முன்னினன் காக்க வுய்த்தான். 346

தன்மனை யடுத்து வைகித் தழங்குமா மறையி னுற்றுல்
மன்னிய கர்லைத் தூநீ ராடுதன் மான வெய்யோன்
பன்மணிக் கடனீ ராடி யெழுப்பயில் கரும முற்றி
முன்னிய மாயை நல்கு மூரிவெம் படைகைக் கொண்டான். 347

மதலைபோர்க் கெழுவ தோர்ந்து வயின்வயின் விறந்த சேனை
விதலையுற் றகில மேங்க வொருங்குடன் வெறுத்துச் சூழக்
கதிர்மணித் தேரி னேறிக் கடிநகர் கடந்து செல்வான்
துதிவளர் தூதன் போர்க்கு வருகெனச் சொல்லி விட்டான். 348

ஆண்டகை வீரன் செவ்வே ளடியிணை குறுக வையன்
மூண்டுபோர் வினைத்தி குய்ய முடித்தன னுயின் வேலைத்
தூண்டுது மென்னப் போற்றித் தொக்கவா யிரவெள் ளத்தின்
மாண்டசெங் களத்திற் சென்றுன் மறங்கிடந் திமைக்குங்
[கண்ணுன். 349

---

345. யான் அமர்த்தலுறும். தூதன் - வீரவாகு.

346. நொச்சி அழித்தமை 341ம் செய்யுளைப் பார்க்க. மாகாயன் என்பவனை அதிகோரனுக்குப் பதிலாக வைத்தான் மதிலின்கண்

347. வைகி, முற்றி, கைக்கொண்டான்.

349. குய்யம் - வஞ்சனை. வெள்ளத்தோடு. கண்ணுன். வீரவாகு.

இடந்தலைப் பாட்டி னுற்ற காட்சிபோ லிருவர் சேனை
அடங்கரும் போரின் மூண்ட வற்றன கரந்தாள் சென்னி
படர்ந்தன வுயிர்கள் வானம் பாடினர் நிணந்தின் பெண்டிர்
உடைந்தன வவுணர் சேனை யுருத்தனன் பானு கோபன். 350

பூதர்மே லுருமை வீர வாகுமுன் போந்து நேர்ந்தான்
காதுபோ ரிருவர் தேருங் கனைகடற் பரப்பிற் றென்றும்
மாதிரந் தோறுஞ் சுற்றும் வானுல கனைத்துஞ் செல்லும்
மேதினி வரைப்பின் மீளும் வெஞ்சரத் தொழுதி கான்றே. 351

புயல்வளர் பருவத் தாழ்ந்த புற்றெழு மீயல் போல
அயில்வளர் கணைகள் செல்ல வாடமர் விளைக்குங் காலைப்
பயனிலி வீர வாகு பகட்டுரத் தம்பு விட்டான்
கயவனீ ளிரதம் பாகு கந்துகம் படுத்தான் வீரன். 352

சேமத்தேர் பாய்ந்து வாளி செலுத்துமு னவுணன் மார்பத்
தேமற்றோள் வீர னுய்ப்ப வினைந்துவெங் கதிர்க்கு மாற்றான்
வாமத்தேர் வீரன் மீது வாருணப் படையைத் தொட்டான்
காமுற்றோர் நெஞ்ச மென்னக் கதழ்ந்தது நீரா யெங்கும். 353

அங்கிமாப் படையை வீர னடைச்சினன் பருகிச் செல்ல
நுங்குகாற் படையைத் தீயோ னூக்கின னெதுத்துத் தாவச்
சிங்கவா ளரவம் வீரன் செலுத்தினன் றெவுட்டிச் சீற
மங்குவான் கருட னேவ மடித்துமேற் சென்ற தன்றே. 354

---

350. இடந்தலைப்பாடாவது தலைவனும் தலைவியுமாகிய இருவரும் புதிதாக முன் ஓர் இடத்தில் சந்தித்து, முதனாட்புணர்ந்த இடத்திற்கு மறுநாளும் வருதலாம். முன்பு போர்க்களத்தில் சந்தித்து அமர்செய்த பானுகோபனும் வீரவாகுவும் இப்போதும் அப்போர்க்களத்தில் சந்தித்து அமர்செய்யத் தொடங்கினார். வானம் படர்ந்தன. பெண்டிர் பாடினர்.

351. பூதசேனைகளின்மேலே அவுணர்கோன் உருதபடி.

352. இரண்டு தேரும் ஒன்றோடொன்று அமர்க்கும்போது. கயவனுடைய இரதத்தையும்.

353. மார்பத்து ஏ மல் தோள். ஏ - பாணம். அழகிய தேரையுடைய வீரவாகு. வாமம் - அழகு. காமிகளுடைய நெஞ்சானது எவ்வாறு நீர் போலாகி உருகுமோ அவ்வாறு நீராய் விரைந்தது.

354. அரவப்படை. சிங்க - கெட.

நந்தியம் படையை வீர னடத்தின னுலக மஞ்ச
வெந்திற லோடுஞ் சென்று கலுழனை விழுங்கி மேவ
அந்தகன் படையைத் தொட்டா னவுணனங் கதுவும் பொன்ற
உந்தினன் செல்ல வேத னுறுபடை வணங்கிற் றன்றே. 355

நாரணன் படையை விட்டா னரசிங்க மாயேற் றோடு
போரினை விளைத்து நிற்பப் புங்கவன் சிம்பு ளான
வீரபத் திரனை யேவ விளித்துமே லடர்ந்த தன்னோன்
பூரணன் படையைத் தொட்டான் புனிதனு மதனைத்
[தொட்டான். 356

உருத்திரர் வடிவந் தாங்கி யோரிரு படையுங் காவற்
கருத்தனை யயனை யேனைக் கடவுளர் தம்மை யன்னோர்
திருத்தகு படையைப் பூதத் திரளினை விடத்தை மற்றும்
விரித்தரன் சிருட்டி தோற்றி மிக்கமர் விளைத்த மாதோ. 357

இரிந்தனர் பூதர் வீர ரேங்கினர் பொடிந்த வெற்புக்
கரிந்தன நாள்கள் கோள்கள் கவிழ்ந்தன வும்பர் நாடு
சரிந்தன வண்டப் பித்தி தளர்ந்தன பூதம் யாவும்
மரிந்தன விறைவ னெல்லா மாற்றுமவ் வைக லென்ன. 358

என்னென வயிர்த்துச் சூர னிரிந்தவர் விளம்பத் தேறி
அன்னவ னிதனை விட்டு மழிந்தில னேயோ வன்னோன்
தன்னையு மெளிய னென்றேன் றகைமையே தகாமை காண்டல்
உன்னருந் தொழிலி னல்லா துருவத்தி னெண்ணு
[தென்றான். 359

---

355. நந்தியாஸ்திரமானது மேவாநிற்ப. நந்தியாஸ்திரத்துக்குத் தோற்றுப் பொன்றாநிற்ப. பிரமாஸ்திரம் நந்தியாஸ்திரத்தை வணங்கியது. அதுவும் - அந்தகன் படையும்.

356. ஏற்றோடு - நந்தியாஸ்திரத்தோடு. நாரணன் படையானது நரசிங்கமாகி. சரபமாகிய வீரபத்திரப் படையை ஏவ. நந்தியாஸ்திரத்தை விளித்து.

357. காவற் கருத்தன் - விஷ்ணு.

358. ஐம்பூதம்.

359. மேல் உபரிகையிலிருந்துகொண்டு போர் செய்தலைப் பார்த்த சூரனவன் இஃது என்னை என்று முதலில் சந்தேகித்து, பின்பு போரில் தோல்வியடைந்து வந்தோர்கள் சொல்லத் தெளிந்து.

இன்னண மாகப் பூச விருபெரும் படையு மாற்றித்
துன்னிய வவுண சேனை தொலைந்தவா தொலைய வேனை
மன்னுல கத்தில் வீந்த வளமெலாம் பூதர் சேனை
தன்னுட னெழுப்பி மீண்டு சார்ந்தன விடுத்தார் மாட்டு. 360

தன்படைச் சேனை நீறத் தமியனய்த் தளருந் தீயோன்
முன்பெனத் தோல்வி யோடு முதுநகர் முன்னி னம்மேல்
அன்புறு ரெவருந் தந்தை யாற்றலு மிறக்கு மாயைக்
கொன்படை விடுவ லென்னக் குறித்துவிண் மறைந்து நின்ருன்.

இருந்தன மாயி னின்னு மிவர்சமர் புரிவ ரற்ருன்
வருந்துது மென்ருன் போல மறைந்தனன் கதிரோன் வீரம்
திருந்திய வாகு வின்று தீயவன் பிழைத்துச் சென்ருன்
பொருந்துது மிறைவன் சார்பி லெனப்புகுங் கருத்துக்
[கொண்டான். 362

இதுபொழு தென்று தீயோ னெய்த்துரு துடங்கு பற்றி
முதிரறி வழித்துச் சுத்த மூரிநீர்க் கடலி னிட்டு
வதியெனப் படையை விட்டான் வன்படை யதுசெய் தன்ருல்
புதிதுளங் களிப்ப நீங்கிப் போந்தனன் றந்தை கோயில். 363

உலைபடு மிளவெவ் நீரி னுளமகிழ் கமட மொத்தான்
கொலைமுகத் தூண்டில் காணுக் கொழுநிணம் விழுங்கு மீன்போற்
தலைவனு மகிழ்ச்சி கொள்ளச் சாற்றினன் கருளப் பெற்று
விலைவரம் பில்லா மாட மேயினன் வீரர் போற்ற. 364

ஆயிர வெள்ளஞ் சேனை யருந்திற லிலக்க ரெண்மர்
பாயிரும் புகழா ளேடு படைதழீஇக் கடற்க ணிட்ட
தாயிடை யறிந்த வீணை யமைவர னுரைத்தா ளேடிப்
போயிமை யவரு நெஞ்சம் புலர்ந்தனர் கிளந்து தாழ்ந்தார். 365

---

363. எய்த்து உருது - வீரவாகு முதலியோர் அறியாதபடி. தந்தை - சூரன். பின் வருவதாகிய கேட்டை எண்ணுமல் இப்பொழுது புதிதாய் உண்டானது வெற்றி என்று மகிழ்ந்தான் என்பார் உளமானது புதிதாகக் களிப்ப என்ருர்.

364. இளவெந்நீரானது பின்பு அதிக சூடேறி வருத்துதலை அறியாத ஆமை. அத்தூண்டிலில் உள்ள நிணம் என்க.

365. என் படையானது இட்டது.

செங்கடம் பணிந்த தோளான் சேயிலை வேலை நோக்கி
அங்கணுற் றழுந்துந் தானை யனைத்தையு மம்மர் நீவி
இங்கணுய்த் திடுதி நீயென் றேயின னெழுந்து சென்ற
தெங்கணு மிரவி கோடி யெழுந்தெென வொளிகால் வீச. 366

கடவுளர் படைக ளெல்லாங் கையிணை குவித்துச் சேவித்
துடனுற வங்கி தாம முருப்பவிர் விடமுங் கான்று
தொடர்கணம் போற்ற வைவே றாரத்தே வரவு நோக்கி
மிடன்முழு தழிந்து மாயை விறற்படை வீந்த தன்றே. 367

கடலிறை யெதிர்ந்து தாழ்ந்து கசிந்துபோற் றெடுப்ப வன்னுற்
குடலுயி ரளித்துச் சார வுணர்வுவந் தெழுந்தெல் லோரும்
படையெதிர் சென்று தாழ்ந்து பழிச்சினர் வம்மி னென்னு
முடிவிலக் குமரன் செங்கை முன்னிவீற் றிருந்த
[தொள்வேல். 368

மீண்டவ ரடுக்குங் காலை வெய்யவ னகரந் தோன்ற
ஆண்டகை வீர வாகு வழலென வெகுளி துள்ள
மாண்டமெய் வலியில் லாமை வன்படை மறைந்து நின்று
தூண்டினோற் செகுப்பி னல்லாற் றேன்றல்பா லேகே
[னென்றான். 369

ஏனைய வீரர் தாமு மிறுத்தலா லேகி னேமேல்
மானமின் றென்ன யாரு மண்டினர் குடாது வாயில்
மேனிவர் வாயில் காப்பான் வெம்புலி முகத்தான் கண்டு
சேனையோ டெதிர்த்தான் பூதத் திரள்களு முழங்கி யேற்ற. 370

வேறு

கரிவ யப்பரி முழுவது மிறந்த
கதிர்ம ணிப்பொலந் தேர்களு முரிந்த
எரிப டர்ந்தென வமர்த்ததா னவர்கள்
இறந்து ளார்பல ரெஞ்சின ரிரிந்தார்

---

368. வேலானது அளித்துச் சாராநிற்ப. சார உணர்வு வந்தெழுந்து என்பாரும் உளர்.

370. இறுத்தல்லால். ஏகினேமேல் - ஏகினோமானல்.

வரிகி டந்தொளிர் புலிமுக னேக்கி
வலிய சூலமொன் றெடுத்தன னடுத்தான்
பெரிய சூலமொன் றெடுத்தெதிர் சிங்கப்
பெருந்த கைக்கணத் தலைவனு நேர்ந்தான். 371

குத்தி னைரெதி ரெதிருட லுருவக்
குருதி தாரையிற் பாய்ந்துகப் புய்த்தார்
வைத்த சூலங்க ளிறுதலு முழங்கி
மல்லுப் போரினை வயக்கின ராங்குப்
பைத்த பாரிடைப் புலிமுகன் வீழ்ந்தான்
பதத்தி னலிறச் சவட்டினன் சிங்கன்
மொய்த்த பூதர்கண் மதின்முழு தழித்து
முந்து கோபுரம் பெயர்த்தகத் தெறிந்தார். 372

மாளி கைக்குலந் துகைத்துநீ ருக்கி
மறுகி னேர்ந்திடுந் தானவர்ச் செகுத்துச்
சூளி கைக்குல மகழ்ந்தெறிந் தட்டுத்
துளங்கப் பூதர்கள் பேரொலி யெழுப்ப
வேளி ருங்கழற் பணிபுரி வீர
வாகு காலழற் படையொருங் கெடுத்து
நீளு மிந்நக ருண்கென விடுத்தான்
நிமிர்ந்த வப்படை நெளிந்தன வுலகம். 373

உருகி மாழையும் வெள்ளியும் பிறவும்
ஒழுகி வீதிக ளாறெனக் கிடப்பப்
பெருகு பைங்கதிர்க் குலமணி நீறாய்ப்
பெயர்ந்து வானகம் போர்வையின் மறைப்பப்
பொருமு தானவ ரிறந்தவெள் ளென்பும்
பூழி யாயல மராக ரிங்குத்
திருவ ழிந்திடு செய்திகண் டோடிச்
சென்ற தூதுவர் முழுவதுஞ் சொற்றார். 374

---

372. உருவக் குத்தினர். குத்திப் பெயர்த்தார் என்பாரும் உளர். புய்த்தல் - பெயர்த்தல். அகத்து - நகரத்துள்.

ஊழி நாட்பெயு மேகங்க ளனைத்தும்
ஒருங்கு கூயவு ணர்க்கிறை யேவ
ஆழி யேழும்வந் திறுத்தென மேகம்
அடர்ந்து தாரைக ணிரைப்பவங் கவற்றைப்
பாழி வீரனு மூழிநா ளங்கிப்
படையி னீக்கின னதுதெரி சூரன்
கேழி லாதநந் தேரினைக் கொணர்திர்
கெடுத்து மாற்றல ருக்கமென் றுருத்தான். 375

ஆங்கு டங்கம ரிரணியன் றந்தை
அடிவ ணங்கின னுற்றல ராயின்
ஓங்கு போர்புரிந் தகற்றலாம் வரந்தந்
தாக்க நல்கிய விறைவனைப் பணிந்து
நீங்கல் காணுவ தல்லது போரால்
நீக்கங் காணுதல் யாவரே வல்லார்
பாங்க லாதன புரிதியென் றுரைத்தான்
பதகன் சீறினன் போர்விடை கொண்டான். 376

துணைவ ராயிரர் தலைவரா யிரர்தற்
சூழ நான்குநூற் றிரட்டிவெள் ளந்தேர்
பணைம ருப்பெறும் வேழமத் தொகைய
பாய்ப ரித்திர ளாயிரத் திருநூ
றணவு மள்ளரு மத்தொகை யினர்கள்
அணைய வெள்ளநா லாயிர நெரிய
இணையில் பற்பல படைக்கலந் தழுவி
இரத மூர்ந்தெழு கடலெனப் படர்ந்தான். 377

---

375. அழற்படையானதால் மேகத்தைச் சூரன் ஏவினன். ஆழி - கடல். கெடுத்தும்: தன்மைப்பன்மை.

376. நமக்கு ஊக்கத்தை நல்கிய இறைவன். நமக்கு ஆற்றுமல் போவார்களேயாஞல். ஆற்றலர் - பகைவர் என்பாரும் உளர். இரணியன் சூரன் மகன். புரிகின்ருய்.

377. சூழவும் நெரியவும் 800 வெள்ளம் தேராகும். வேழமும் அத் தொகையாகும். பரித்திரள் 1200 ஆகும், மள்ளரும் அத்தொகையின ராவார். ஆக நாலாயிரம் வெள்ளம் என்க.

பாரி டத்தொகை நகரழிக் கின்ற
பான்மை நோக்கினன் வெஞ்சினங் கொண்டான்
சேர ரும்படை நால்வகைப் பிரிவாய்ச்
செல்ல வுந்தின னல்வகைப் பிரிவாய்ச்
சார தப்பெரும் படையுநேர் செல்லச்
சமர்வி ளைந்தன விரணியன் பாலாம்
வீர வன்படை படர்வன நோக்கி
வீர வாகுபொள் ளனவெதிர்த் தமர்த்தான். 378

வேறு

வார்சிலை வளைத்துமிழ் வாளிபல கோடிமழை
போல்விடுவ வெங்கும் விரவி
ஆர்சில வெடுத்தவிர தங்களை யழித்தன
அழித்தன பணைக்கை மதமா
போர்சிதர் வயப்பரி யழித்தன வழித்தன
பொலங்கழலின் மள்ளர் பெருநாள்
பார்சிதறு டற்றுணிம றைத்தது மறைத்தது
பரந்தகடல் வார்ந்த குருதி. 379

சேனைபெரி துந்தபுதல் கண்டுகன கன்வளை
சிலைத்தொழில் பயிற்று விசிகம்
சோனைமழை போன்மெனநி ரத்தலுமு லைந்தனர்
துவன்றுகண வீர ரதுபோ
தியானையெதிர் சிங்கமென நீலனுரு மிற்பிளிறி
யேற்றனன்வெ குண்டி ரணியன்
ஊனைவடி வேலுரம்வி டுத்தனன வன்கதையி
னேச்சியிர தந்த புதனன். 380

---

378. இரணியனனவன் தன் சேனையை நால்வகைப் பிரிவாக்கிச் செல்ல உந்தினன். பூதர் சேனையும் நால்வகைப் பிரிவாய்ச் செல்ல. இரணியனனவன் நான்கு பிரிவாக்கி ஒரு பிரிவில் தான் செல்லுதலால் 'இரணியன் வீரவன்படை' என்னுது 'இரணியன் பாலாம் வீரவன்படை' என்றார். பால் - பக்கம். இரணியனது பக்கத்திலுள்ள படை.

379. ஆர் - ஆரைக்கால். போரைச் சிதருகின்ற. விடுவ - விடப்படுவனவாகிய பாணங்கள். உடல் துணியானது பாரை மறைத்தது. குருதி கடலை மறைத்தது.

380. தபுதல் - கெடுதல். தபுத்தனன் என்பது சந்தம் நோக்கித் தபுதனன் என நின்றது. ஊனை வடிக்கின்ற வேல். கனகன் - இரணியன்.

வாவியொரு தேரைவடி வாளிபொழி யக்கனகன்
வார்குருதி சோர வுடலின்
மேவினனெ டுத்திரதம் விண்ணிடையு கைத்தனன்
விளங்குதிற னீல னவுணன்
தாவியொரு தேர்புகவ ரக்கடிதெ ழுந்துதட
மார்பிறவெ ருக்கி வரதன்
பாவிநில னிற்படமி தித்தனனு ருட்டுபு
பழுங்கண்மிகு வித்த னனரோ. 381

ஆற்றலில னுய்த்தளரு முத்தலையி னுன்மனுவ
கத்துறநி னைந்து தொழலும்
தோற்றியவ னென்னவொரு மாயையுரு வன்சமர்
தொடங்கவிவ னுவி விரைவில்
காற்றுவலெ னக்கடிது நீலனொரு தண்டுகொடு
காதமறை வுற்ற ததுமெய்
தேற்றிலன்வெ குட்சியொடு நிற்பவது சேயிடைவி
ளங்கியணு கும்பெ யர்தரும். 382

விண்ணிடையெ ழுங்கனக வெற்பினையு றும்பரிதி
வீழவிர தத்தி லணவும்
மண்ணிடைவி ரைந்துதிரி யுங்கடல டுக்கும்வட
வைக்கனலொ டும்வி ரவுறும்
எண்ணிபமு மஞ்சவெளி திற்றிசைதொ றும்படரு
மின்னவுரு வோடு மலையா
அண்ணல்விற னீலனயர் வுற்றிஃதெ னுமெனவ
கத்தினனி யாயு மளவில். 383

---

381. உடலில் குருதி சோர. கனகன் பொழிய. நீலன் உதைத்தனன். வரதன் - நீலன். தேர்புகத் தாவி வராநிற்ப. எருக்கி - அடித்து.

382. மூன்று தலையையுடைய இரணியனுனவன் ஒரு மந்திரத்தை நினைத்தலும். ஒரு மாயையான உருவானது அவனுகவே நின்று போர் தொடங்கா நிற்ப. இவன் என்று எண்ணியது மாயையுருவை. நீலனுனவன் உண்மை தெரியாது நிற்ப அம்மாயையாகிய இரணியன் உருவானது தூரத்தே விளங்கி அணுகும் பின் நீங்கும், இந்தவாறுக இருக்கும் என்க. உத்தலையினுன் - இக்களத்துள்ள இரணியன் என்பாரும் உளர்.

ஒன்றெனவி ருந்துபல மாயைபுரி யும்வடி
வுலப்பிலுரு வாயு லகெலாம்
துன்றவிது மாயையென நீலனுண ரத்தகுவன்
சோகமொழி வுற்றெ ழுதரா
மன்றவினி வெல்வலென மாயையுரு வோடுற
மரீஇயமர்தொ டங்க வொருபால்
நின்றவிறல் வாகுமுன டுத்துவளர் சேதன
நெடும்படைதொ டுத்து விடலும். 384

நீங்கியது மாயையது கண்டிரணி யன்கன
னெருப்பெழவெ குண்டு சிலைகை
வாங்கிவிடு வெங்கணைக ளாயிரமு ரத்திடை
மரீஇப்பொடிக ளாக விறலோன்
வீங்குகணை நூறுபடர் வித்தவனெ டுங்கொடிகை
வில்லரண நூற வொருவில்
தாங்கியவு ணன்கணையெ டுப்பவிறல் வாகுகணை
சார்த்தினனெ ராயி ரமெதிர். 385

கைத்தலமெ டுத்தசிலை வாளிவளர் தூணிகலி
னப்பரிக டேர்வ லவனை
மொத்தினவி டுத்தகணை வேறுமொரு தேர்விரைவின்
முன்னவது வும்பொ டிசெய்தான்
எய்த்திரணி யன்பலரு மாய்வரவர் நீர்க்கடனி
யற்றவமை வாமெ னநினைந்
தத்தியின்ம றைந்தனன நிந்துவிறல் வாகுசய
மார்வளைபி டித்த னனரோ. 386

நாற்றிசையி னுஞ்சமர்பு ரிந்தகண வீரரு
நலிந்தவுண ராயுண் முழுதும்
மாற்றினர்வ ளம்புரம ழிக்குமெழி ஞேக்கிய
வயங்குகதிர் தோற்றி யதுவேய்

---

384. புரிகின்ற மயங்கின இரணியன் எழுந்து தெளிந்து தான் செய்த மாயையாகிய இரணியவுருப் பலவற்றேடு தானும் ஒருவனும் உற்று அமர் தொடங்காநிற்ப. சேதனப்படை - ஞானப்படை.

385. இரணியன் விட்ட வெங்கணைகள் ஆயிரமும். அரணம் - கவசம்.

386. விடுத்த கணையானவை மொத்தின. அவர்க்கு இயற்ற.

ஆற்றினர்நி கழ்ந்ததுரை யாடவயர் சூரனெதிர்
அங்கிமுக னென்னு மதலை
சாற்றுகதி ரின்பகைத னக்குநிக ராற்றல்பெறு
தானவன்வ ணங்கி யெழுவான். 387

ஆயிரவெள் ளம்பகடு தேர்த்தொகையு மன்னதடு
மாவதனி ரட்டி வயவர்
மேயினரு லப்பிலர்க ளாகவிர தங்கடவி
வேகமொடு சென்ற ணவினன்
ஏயினன்மு ரட்படையை யீண்டுகண வீரரும்
எதிர்ந்தமர்வி ளைத்த னர்பலர்
மாயிருநி லத்திடைவி ழுந்தனரு டைந்தவுணர்
மாதிரமி டைந்த னர்களால். 388

வேறு

சோம கண்டகன் சோமன் மேகன்முன்
னுன தொல்படை காவலர்
நாம வேலவ னுந்த மண்டி
நலிந்த பூதரொ டாடினர்
காமர் வீரபு ரந்த ரன்கடு
கச்சி லைத்தொழி லாற்றுபு
சோம கண்டக னைப்ப டுத்தவர்
தூண்டு தேர்களி றுத்தனன். 389

வேறு தேர்கொடு சூழ்ந்தெ லோரும்வெ
குண்டு வாளிசொ ரிந்தனர்
ஊறு செம்புனல் வார வீரனு
குத்து நீள்சிலை தேரெலாம்

---

387. நோக்கச் சூரியன் தோற்றியது. வேய் ஆற்றினர் - ஒற்றின் வழியில் அமைந்தோர்: எனவே ஒற்றென்பது.

389. படை காவலர் மூவரும் முருகவேள் அநுப்பிய பூதரொடு ஆடினர்.

நூறி நெற்றியு ரம்பு யத்தினு
 னித்த பொத்திர மேற்றினன்
மாறி னர்வலி யாரு மெய்ப்பிடை
 மண்ட வைகிய மேகனும். 390

வார்ந்த தண்டினை திர்ந்து தேர்ப்பரி
 மாவ துக்கினன் வீரனும்
நேர்ந்து ஞாங்கர்வி டுத்து மேகனி
 றங்கி ழித்துயி ரோம்பினன்
தீர்ந்து ளார்படை வேந்த ரென்றுசி
 னந்து தீமுகன் வாளிகள்
ஆர்ந்த பூதரி னுய்த்து மிக்கலை
 செய்ய வேற்றன னிந்திரன். 391

விண்ணெ லாம்பக ழிக்கு லங்கள்வி
 ராவ வெஞ்சம ராடுழித்
திண்ணி ருஞ்சிலை தேர்த டிந்துசி
 வீமு கம்பல மார்பிடை
நண்ண வங்கிமு கன்செ லுத்தந
 லிந்த னன்மக வானவண்
துண்ணெ னத்துணை யான நால்வரு
 மூவ ருங்கணை தூண்டினர். 392

விட்ட வாளிவி லக்கி வீரர்பு
 யத்தின் வெஞ்சர மேற்றினன்
பட்ட யர்ந்தவர் தீமு கன்படர்
 தேரும் வில்லும்ப டுத்துரம்

---

390. வீரன் - வீரபுரந்தரன். பொத்திரம் - பாணம்.

391. மேகன் அதுக்கினன். மேகனது மார்பைக் கிழித்து. உயிரை ஒழித்தான். இந்திரன் - வீரபுரந்தரன். ஓம்பல் - ஒழிதல். படைகாவலராகிய வேந்தர் மூவரும் தீர்ந்துளார் என்று.

392. மகவான் நலிந்தனன் - வீரபுரந்தரன் வருந்தினன். நால்வர் மூவர் - நவவீரரில் வீரவாகுவும் வீரபுரந்தரனும் ஒழிந்த எழுவர்.

நெட்டி ருங்கள நெற்றி கால்கர
　　நீள்ச ரம்பல கோத்தனர்
வட்ட வாழிய தொன்று வாவினன்
　　மாய்த்து மார்புந்தி றந்தனர். 393

ஓடும் வேறிர தம்பு குந்துமை
　　பாகன் மாப்படை தொட்டனன்
நீடு செங்கனல் கான்ற டுப்பநெ
　　ருப்பி ரும்படை யீதென
ஆடு வெஞ்சமர் வீரர் நீர்ப்படை
　　யாங்கெ திர்ப்பவி டுத்தனர்
வீட நீர்ப்படை யுண்டு வீரர்க
　　ளாவி யுண்டது மீண்டதே. 394

பூத ரஞ்சின ரஞ்ச லென்றுபொ
　　ருக்கெ னக்கைய மைத்தலர்க்
கோதை வார்புய வீர வாகுகொ
　　தித்தெ திர்ப்பவ ழன்முகன்
நீத னிச்சம ரென்னொ டிங்கணி
　　கழ்த்த வுய்த்தது தெய்வதம்
ஆத லானினை வெல்வ லேனைய
　　ராக வெண்ணலை யென்றனன். 395

கரந்து தன்னுரு நீங்க வல்லக
　　திர்ப்ப கைக்கிளை யானுநீ
அரந்தை யுற்றலை வாரி புக்கமர்
　　வாற்க டுத்தமுன் னோனுநீ
பரந்த தோல்வியி னானு மத்தகு
　　பாலை யாகிய நின்னையான்
விரிந்த மண்ணிடை யேனை யோரென
　　வெண்ண லேன்விர காளனே. 396

---

393. தீமுகனுடைய. ஆழி - தேர். மார்பையும் திறக்கச்செய்தனர். எழுவரும் அத்தேரையும் மாய்த்து.

394. ஈதென விடுத்தனர். சிவன் படையானது நெருப்பைக் கான்றமையால் சிவன் படை என்று உணராது, ஆக்கினேயாஸ்திரம் என்று எழுவரும் கருதி, அதற்கேற்ப நீர்ப்படையை விட்டார்கள். சிவன் படையானது நீர்ப்படை வீடும்படி அதை உண்டு. வீடல் - அழிதல்.

396. அத்தகு - இளையவன். முன்னோன் என்னும் பகுப்பு; வீரவாகுவின் கூற்று.

நும்பி பின்வரு நும்பி தம்பியு
மாக நீநுமை யன்றனே
அம்பு வேலொடு நுந்தை காப்பினு
நும்பி யாக்குவ னென்றனன்
வெம்பு கின்றவி றற்பு யன்கனல்
வெய்ய மாமுக னெய்யென
உம்ப ரஞ்சவ ணக்கு வார்சிலை
நாணி னோதையு ரப்பினன். 397

கோதை வார்சிலை நம்பி யுங்குனி
வித்து நாணொலி கொண்டனன்
மாதி ரத்தொடு மண்ணும் விண்ணும
றைத்து ளார்விசி கத்தினப்
போது பொத்திர மாயி ரம்புனி
தன்கு ளத்தில முத்திநின்
றோத நீர்வளை வாயில் வைத்தவ
னாதி னானுரு மேறென. 398

வேறு

ஒருங்காயிர வம்பாலவ னூறுதேர்பரி வில்லும்
மருங்கேவிழு வித்தான்வய வீரன்கனன் முகவன்
பொருங்காற்சக டொன்றேறினன் புகவிட்டன னொருதண்
டிருங்காசினி விழவோர்கணை யெய்தானெறும் வீரன். 399

சிலையொன்றனை வாங்கித்தழல் சிந்தும்வத னத்தோன்
உலவைப்படை கூற்றுப்படை யென்றாழுறு படையும்
பலவும்வரி சையினேவின னவைகொண்டவை பாற்றிக்
கொலைமுற்றிய கணையாயிரங் கோத்தானுரத் தமரன். 400

---

397. சூரன் புதல்வராவார் பானுகோபன், தழல்முகன், இரணியன், வச்சிரவாகு என நால்வர்; இவர் ஒருவருக்கொருவர் இளையவர். உன் தம்பியாகிய இரணியனுக்குப் பின்வந்த உன் தம்பியான வச்சிரவாகுவுக்கு நீ இனித் தம்பியாகும்படி. இறக்கிற முறையில் வைத்து இளையோன் மூத்தோன் எனக் கூறுகின்றார். வச்சிரவாகு முன்னமே இறந்தவன். நும் ஐயனாகிய பானுகோபனை. விறற்புயனாகிய வீரவாகு என்றனன்.

400. சூரியப்படை. அவ்வுலவைப்படை முதலானவற்றைத் தானும் கொண்டு அவ்வுலவைப்படை முதலியவற்றைப் பாற்றி. அமரனானவன் உரத்துக் கோத்தான்.

மடிந்தானென வீழ்ந்தானவன் சற்றேமயர் நீங்கி
மிடைந்தாடமர் புரிகாலையின் மெலிவெய்திடின் வருகென்
றடைந்தேபல நாளும்வழி படுகாளியை யகத்தால்
தொடர்ந்தானவள் படைபற்பல சூழத்தொடர் வுற்றாள். 401

பார்த்தாளவன் மெலிவைப்படை பலவுந்தெறு வேனென்
ரார்த்தாளுடன் வருகாளிய ரவரைச்செல வுய்த்தாள்
வேர்த்தார்பலர் கணவீரர்கள் வெகுண்டார்சில ரேற்றார்
தீர்த்தார்சில ருயிரைக்கனல் சிதர்கண்ணினள் கண்டாள். 402

வெருவப்படை முழுதுண்கென விட்டாளொரு சூலம்
ஒருவக்கணை பலவீரனு கைத்தானஃ திறலும்
பெருவன்றிறன் மற்றொன்றது பெயர்வித்தன ளதுவும்
தரையிற்பட வெய்தான்பல சரமாரிக ணிரையின். 403

வாளங்கொடு வீரன்மணி யிரதம்புக வயவன்
தாளங்கற மார்பந்தள ரக்கையினெ றிந்தான்
நீளுங்கரு முகிலாமென நெய்த்தோருக வீழ்ந்தாள்
மீளுந்தொழி லினள்வீரனை வியந்தாள்பிறக் கிட்டாள். 404

என்னேயிவ னுண்மைத்திற மெனவீ தறி யவுணன்
கொன்னேசிலை வளைவித்தெதிர் குறுகிச்சர முய்த்தான்
இன்னேயிவ னிறவந்தன னெனவேந்தல்வி லக்கி
ஒன்னுன்மிசை யப்புத்திர ளுறுவித்தனன் மாதோ. 405

வருவாளிக ளூறிக்கனல் வதனன்கணை தூண்டித்
திருவாளன திரதஞ்சிதர் செய்தான்றிரு வாளன்
பொருவார்சிலை மாய்த்தான்புக ராளன்கம லத்தோன்
தருவான்படை தொட்டானது தனைநோக்கிய வீரன். 406

---

401. வருவாயாக என்று தான் வழிபட்ட காளியை.

402. தன்னோடு வந்த பல காளியரை. கணவீரர்கள். சில காளியர் உயிரைத் தீர்த்தார்கள்.

403. நிரையின் - வரிசையாக.

404. வீரவாகுவின் இரதத்தில் காளி புகாநிற்ப. வீரனை - வீர வாகுவை. பின்னிட்டாள்.

405. அம்பு - பாணம்.

தக்கன்மக னுங்குந்தனி வீரன்படை தொட்டான்
திக்கெட்டினு மழல்சிந்துபு சென்றப்படை தாழப்
புக்கட்டழன் முகனைப்புய வலியானுழி மீண்ட
தொக்கச்சம ருடலுற்றனர் மூவாயிரர் தலைவர். 407

வளைந்தார்மிசை வீரன்றழல் வாளித்திரள் சொரிய
உளைந்தார்சில ரிறந்தார்சில ருருவம்பல துணியாய்
விளைந்தார்சிலர் விழுந்தார்சிலர் வெருவுற்றனர் சிலர்மெய்
நெளிந்தார்சில ரவுணப்படை நீருகிய தன்றே. 408

வேறு

பம்பிய விலக்கர் கணங்கண நாதர்
வீரமா புரந்தரன் பலரும்
நம்பிபா லடுத்தா ரெழுவரைக் காணு
னவர்திறம் விஞயுழை நண்ணி
உம்பர்வா ழியமற் கோலையொன் றேவி
யொய்யென வவன்கயி லாய
நம்பிவீற் றிருந்த வீரரை விடுப்ப
நயந்துபோர்க் கமர்ந்தனன் வாகு. 409

ஒற்றர்போ யங்கி மாமுகன் றபுதி
யுரைப்பமிக் கழுங்கிய சூர்முன்
வெற்றிசேர் மூவா யிரரவன் மைந்தர்
விரசினர் தாழ்ந்துபோர்க் கேவப்
பெற்றன ரளவில் சேனைகள் சூழப்
பெயர்ந்தமர்க் களத்தினை யடுத்தார்
உற்றது பெரும்போ ருலைந்தனர் பல்லோர்
உடற்றினர் சிலைகொடு மைந்தர். 410

---

407. தொட்ட படையானது சென்று அவன் விட்ட பிரமாஸ்திர மாகிய அப்படை தன்னைத் தாழும்படி. தழல்முகனை அட்டு மீண்டது.

409. இலக்கரும் பூதகணமும் எழுவரென்றது வீரபுரந்தரனும் வீர வாகுவும் ஒழிந்த ஏழுபேர். அது 392-ம் செய்யுளில் நால்வரு மூவரு மென்றது. நம்பி முன்னையது வீரவாகு. கயிலாயத்தை நம்பியிருந்த ஏழு வீரரை அனுப்ப. அவன் - இயமன். உழை நண்ணி - தான் அவ்விடத்தி லிருந்து.

410. தபுதி - தபுதலை. முன் - எதிரே. மூவாயிரராகிய சூரனது காமக்கிழத்தியர் மைந்தர்.

எதிர்பொரும் பூத ரவுணர்தாஞ் சரத்தின்
எய்த்தலு மிலக்கர்க டம்மில்
அதிர்கழல் வீர ராயிர ரெதிர்ந்தார்
ஆயிரர் தேரையு மன்னூர்
உதிர்செய வவுண ரொலிசிலை முரித்திட்
டுருமூ வாயிரந் தேரும்
பிதிர்படுத் தொழித்துச் சேமத்தே ரிவர்ந்து
பிறங்கவர் சேமத்தேர் தகர்த்தார். 411

மலையொடு மரங்கள் வீசினர் கணையான்
மாற்றினர் வீரரா யிரரும்
கொலைமுகக் கூற்றிற் பாய்ந்துசூர் மைந்தர்
கொடுமர மெறிந்துந்தேர் சிதைத்தும்
சிலையுறழ் மார்பி னெற்றியும் பொருதார்
திண்வலி யாவரு மிழந்தார்
உலைவில ஞகி யிருந்தவில் விசயன்
வஞ்சின முரைத்தம ரேற்றான். 412

நெட்டயில் வாளி முறைமுறை தொடுத்து
நேர்ந்தமூ வாயிரர் சிரமும்
மட்டலர் மாலைத் தோள்களுந் தாளும்
மார்பமும் வேறுவே றறுத்தான
ஒட்டிவீ ழுறுப்பு மாவியு மெழுந்தார்
ஒறுத்தொறுத் துறுப்புவீழ் தோறும்
பட்டன ரெழுதல் பார்த்துள நினைந்தான்
பரனருள் குமரனை விசயன். 413

முன்னெழுந் தருளி யயன்வரம் பெற்றோர்
முருக்கொரு படைதொடி னல்லால்
அன்னவர் விளியா ரெனவயன் றலையொன்
றரிந்தவன் படைகொடுத் திறைவன்

411. அவுணரது சிலையை முரித்திட்டு.

412. விசயன் - வீரவாகு.

முன்னின னெடுத்தா னதுதெரி மூவா
யிரவரு ளொருவன்முன் மாயை
தன்னுறு படையை விடுத்தனன் விசயன்
றாங்கிய படையெதிர் விடுத்தான். 414

நேர்வரு மவுணப் படையினை விழுங்கி
நேர்ந்தழு வாயிர ருயிரும்
ஒருமுண் டடுத்த தொளிர்படை விசயன்
ஒண்கர மமரர்கள் வியந்தார்
சூரனு மைந்த ரழிந்தது கேட்டுத்
துயர்க்கட லழுந்தின னதுகண்
டாருயி ரழிந்தோர் ஞாதிய ரெனவிண்
ணலரியு மலைகடல் படிந்தான். 415

வேறு

பொருது மீளுவ லென்றுசூர் பொருக்கென வெழுந்தான்
தரும கோபனன் றாற்றினேன் றாளிணை பணிந்தின்
றிருபெ ருஞ்சம ராற்றிவென் றெம்பிரான் முன்னர்
வருவ லென்றனன் விடைகொடு வல்விரைந் தெழுந்தான். 416

மாதி ரத்தமர் புண்டரீ கப்பெயர் வயமா
மீதி வர்ந்தனன் விறந்தியல் சேனைக ளுப்பண்
போத லுற்றனன் பொருகள மடுத்தனன் புகைந்தான்
காது பூதரு மவுணருங் கைகலந் தமர்த்தார். 417

---

414. பெற்றோராதலால் விளியாரென. முருக்கும்படியான ஒரு படையென்றது வயிரவாஸ்திரத்தை. அயன்றலை யரிந்தோனாகிய வயிரவன் படையை முருகன் விசயனுக்குக் கொடுத்துச் சென்றான். உடனே விசயன் அப்படையை எடுத்தான். பெற்றோரென்றது மூவாயிரரை. தாங்கிய படை - வயிரவாஸ்திரம்.

415. ஒரும் : அசை. கரத்திலடுத்தது தாயாதிக்காரரென்று.

416. தருமகோபனென்னும் பெயரையுடைய நன்றை ஆற்றினேன். இவன் சூரனது மந்திரி. நன்று - அரசகாரியம். இனி அன்றாற்றினேன் எனக்கொண்டு அல்லாததைச் செய்தவனெனப் பொருள் கொள்ளினும் பொருந்தும்.

417. புண்டரீகம் - திசையானையிலொன்று. தருமகோபனனவன் ஒருகாலத்திலே அத்திசையானையை 'நான் போர்க்குப் போகுமொரு காலத்தில் நீ வாகனமாய் வந்து உதவவேண்டும்' என்று கேட்டுக்கொண் டிருந்தான் என்க.

இலக்க வீரரு மமைச்சர்தங் குழாங்களு மெதிர்ந்தார்
நிலக்கட் பூதரு மவுணரு நிரைநிரை வீழ்ந்தார்
அலக்க ணுற்றன ரிலக்கரு மமைச்சர்கை மிக்கார்
நலக்கும் வீரமார்த் தாண்டனச் செனவழுன் றெதிர்த்தான். 418

சிலைவ ளைந்தது நிமிர்ந்தன தீயுமிழ் சரங்கள்
தலைவி ழுந்தன தாட்டுணை விழுந்தன தடந்தோள்
மலைவி ழுந்தன வாம்பரி விழுந்தன வேழக்
குலம்வி ழுந்தன கொடிஞ்சிமான் றேர்களும் விழுந்த. 419

கண்ட றத்தினை முனிந்தவன் கார்முகம் வணக்கி
மண்டு வெஞ்சரஞ் சொரியவாய் மருப்புவால் காலில்
புண்ட ரீகமு முழக்கலிற் பூதர்க டளர்ந்தார்
மிண்டு வெய்யவன் றோன்முகத் தொருகணை விடுத்தான். 420

அயர்ந்து நின்றது வேழமங் கதுதெரி யமைச்சன்
வயந்த வாதமார்த் தாண்டன்வார் நுதற்கணை யழுத்திச்
சயந்த வாதவெள் வேலுமொன் றுறுத்தெறும் தடிந்தான்
வியந்த வீரமா புரந்தரன் மெலிவுகண் டெதிர்ந்தான். 421

புக்க வாசவன் மேற்கணை பொழிந்தன னமைச்சன்
தொக்க வாளியி னறுத்தவ னமைச்சன்மேற் றொடுத்தான்
மிக்க போர்களிங் குளுற்றுழி வீரன்மே லமைச்சன்
தக்க தண்டமொன் றேயினன் றளர்ந்தனன் மகவான். 422

ஆர்த்து வீரவா குப்பெய ரண்ணன்மு னடுத்தான்
பார்த்த மைச்சர்கோன் பற்பல நெடுமொழி கூறித்
தூர்த்த னன்பக ழித்திர டுயவன் மெய்யில்
போர்த்து நுண்டுக ளாயின பொருப்பெறி கலன்போல். 423

---

418. வீரமார்த்தாண்டன் - நவவீரரிலொருவன்.

420. தருமத்தை முனிந்தவன் - தருமகோபன். மிண்டு வெய்யவன் - வீரமார்த்தாண்டன்; மிண்டு - வீரம்: வெய்யவன் - சூரியன். சூரியனுக்கு மார்த்தாண்டனென்னும் பெயருளவாதலறிக. தோல் முகத்து - புண்டரீகமாகிய யானையின் முகத்தில்; தோல் - யானை.

421. அமைச்சன் - தருமகோபன். வீரமார்த்தாண்டனது மெலிவைக்கண்டு வீரபுரந்தரன் எதிர்ந்தான்.

422. வீரன், மகவான் என்றது வீரபுரந்தரனை.

423. தூயோனது மெய்யில். மண்ணுற்செய்த கலமென்க.

வாகு வோரயில் விடுத்தன னவன்விடு வாளி
போக வீழ்த்துரம் புகுந்துசெங் நீருண்டு புறத்தில்
ஏக வீழ்ந்தன னெதிர்ந்திபங் தேரினைத் தாக்க
வேக நீங்கவண் கவுட்புடைத் தெறிந்தனன் விசும்பில். 424

மறித்து வெங்கரி வீழ்தலு மதிவலா னுயிர்த்தங்
கெறிந்து ளானொரு தண்டமற் றதன்வலி யிறுத்தான்
அறிந்து வச்சிரம் விடுத்தன னதுகரம் பற்றிச்
செறிந்த மைந்தினன் சென்றவன் மார்பிற வெறிந்தான். 425

அறமு னிந்தவன் விழுந்தன னடியினுற் சவட்டி
மறமி குந்தனன் வீரவா குப்பெயர் வள்ளல்
திறம ழிந்தெழு வேழமுஞ் சேவகற் றுதித்துக்
குறைமு டிந்ததென் றடுத்தது குறுகுதன் றிசையை. 426

தனக்கு மாற்றல னழிவினை யறிந்துதான் காண
நினைத்து வந்தென நெடுங்கட லெழுந்தனன் கதிரோன்
வினைத்தி றத்தில்வீ ழமைச்சன்பா டறிந்துவெஞ் சூரன்
மனத்து நீடிய துயரொடு மருண்டன னிருந்தான். 427

ஆவி பொன்றினு னெனவொளி யழிந்தவெற் பகைஞன்
மேவி வந்தனை புரிந்துதன் றாதைக்கு வேறல்
யாவ தும்படா திறைஞ்சுதுங் கந்தனை யென்றுன்
பாவி பொன்றினுங் கொண்டகோள் விடேனெனப் பகர்ந்தான்.

---

424. வீரவாகுவின் அயிலானது தருமகோபனது வாளியை வீழ்த்தி. தருமகோபனது புண்டரீகமானது வீரவாகுவின் தேரைத்தாக்க. வண் கவுள்.

425. மதிவலான் - தருமகோபன்.

426. வீரவாகுவைத் துதித்து. தருமகோபன் வேண்டத் திசை யானையானது 'உனக்கு அபசயம் வரும்வரையும் வாகனமாயிருப்பேன்' என்று நேர்ந்திருந்த குறை.

427. மாற்றலன் - பானுகோபன். தீவினைத்திறத்தால் வீழ்ந்த அமைச்சன். பாடு - படுதல்.

428. தாதைக்கு என்றுன் பாவியாகிய சூரன்.

விடைபெற் ருவயி னீங்கினன் விலக்கருந் தெய்வப்
படைக ளேந்தினன் பன்னருஞ் சேனைகள் சூழ
இடிபொ ரும்பணை யியம்பவேழ் கடல்களும் வளைந்தாங்
கடல்செய் போர்க்கள மடுத்தன னழிவுகண் டயர்ந்தான். 429

தேற்றி நெஞ்சினை வஞ்சினம் புகன்றுதெவ் வர்கண்மேல்
ஆற்றல் வீரரை யேயினன் பூதரு மமர்த்தார்
ஏற்ற தானவர் பூதர்க ளெண்ணில ரிறந்தார்
காற்றெ னக்கடைக் கூழையிற் பூதர்கள் கலந்தார். 430

அவுண வன்படை மெலிந்தன வதுகண்டு மணித்தேர்
பவன வேகத்தி னூர்ந்துராய்ப் பானுவை முனிந்தோன்
உவண னுகங்க ளுடற்றியாங் குடற்றினன் சிலையால்
புவன மஞ்சின பூதர்கள் பெரிதுலைந் தனரால். 431

இரிந்த சேனையுங் கோபன்பா லெய்தின விதனைத்
தெரிந்து முந்தினன் வீரவா குப்பெயர்ச் செம்மல்
சொரிந்து சூழ்ந்தன ரவுணர்கள் சொரிந்தபல் படையும்
வரிந்த வார்சிலைக் கணையினன் மாற்றின னொடியில். 432

எண்ணில் வாளிக டொடுத்தட ரவுணர்மே லேவிப்
புண்ணுஞ் சொரியு மூளையும் பொழிநெடுங் குடரும்
நண்ணு மீரலு நாடியும் வழும்புமற் றுறுப்பும்
மண்ணி லெங்கணும் வீழ்த்திவண் சயத்தினை விளைத்தான். 433

இற்ற தோமம திருமபடை முழுதுமென் றிரங்கிக்
கற்றை வெங்கதிர்ப் பகைஞன்முன சென்றுகார் முகத்துப்
பொற்ற வாயிரங் கணைதொடுத் துரம்புகு வித்தான
கற்ற வீரனு மாயிரம் புயங்கலப் பித்தான். 434

வில்லி றுத்தனன் சூர்மகன் வீரனோ ரயில்வேல்
வல்லை யுய்த்தன னெதிர்வரு வாளிக டுமித்துக்
கல்ல டுத்தவோ டைத்தட நுதற்கதி யதுமான்
றல்ல மூத்திய மேணியா னறிவுவந் தெழுந்தான். 435

---

429. தன் சேனைகள் முன்னமே போர்க்களத்திலழிந்துகிடத்தலைக் கண்டு.

432. இரிந்த - முருகனது சேனைக்கு முன்பு தோற்றோடிய.

435. பானுகோபனுடைய சிவப்புக்கற்கள் பதித்த நெற்றிப்பட்டத்தையணிந்த நெற்றியிற் கதுவியது. மான்று - மயங்கி.

காற்றின் வெம்படை கனற்படை கதிரவன் படைதேன்
ஊற்று தேமல ரவன்படை மால்படை யுகைத்து
மாற்றி ஞரவ்வப் படைகளின மறுப்பதுண் மையினுல்
ஏற்ற மின்றென விறைபடை தொடுத்தில னவுணன். 436

மாயை யால்வெல்ல மதித்துவிண் மறைந்துவெஞ் சரங்கள்
தூய வீரன்மேற் ருெடுத்தனன் சேதனப் படையைத்
தீயன் மேலவன் விடுத்தனன் றீர்ந்தது மாயை
காய நின்றனன் றேரொடுங் கரந்தவக் கள்வன். 437

விடுவ லோவினி நினையென வெகுண்டுவிண் ணெழுந்து
தொடுச ரங்கண்மே னிரைத்தனன் றூயவ னவனும்
விடுச ரங்கண்மே னிரைத்தனன் விலக்கினர் திரிந்தார்
கடுவி சைக்கொடு சூறையின் மாதிரங் ககனம். 438

கொள்ளி வட்டமும பிற்படக் கொட்புறுந் திறலோர்
அள்ளி விட்டபல் சரங்களு நிமிருமிவ் வகிலம்
முள்ளெ யிற்றரா வினமொன்று நாடுபு முடுகித்
தெள்ளி திற்றிரி வுறினந்தப் பணிப்பதி சிவனும். 439

கட்பு லன்கது வாக்கடு விசைகொடு கறங்கின்
விட்பு லத்தல மருமமை யத்துவெந் திறலோன்
ஒட்ப மிக்கவன் றேரினை யுடைத்தன னுகுமுன்
மட்பு லத்தவன் றேருக மறித்தனன் வீரன். 440

---

436. அந்த அந்தப் படைகளினுலே அந்த அந்தப் படைகளை மறுப்பதுண்மையினுல் மாற்றினுர். முன்னொருதரம் போர்க்குவந்தபோது தான் விடுத்த பாசுபதாஸ்திரம் பலித்திலதாகையால் உயர்வில்லையென்று தொடுத்திலனென்றுர். இனி அவ்வப் படைகளால் மாற்றினுர். மறுப்பதுளதாகையால் உயர்வின்றென்று தொடுத்திலனென முடித்தலுமொன்று.

437. காயத்தில். காயம் - ஆகாயம். சேதனப்படை - ஞானப் படை.

439. அகிலமானது சிவனும். அராவினமானவை வேறொன்றை நாடி. பணிப்பதி - நாகலோகம்.

440. ஒட்பம் - அழகு, நன்மை, முதுக்குறைவு, மேன்மை.

உரத்திற் பல்சர மழுத்தின னும்பர்தம் பகைஞன்
சிரத்து மோலியைச் சிதர்த்தனன் றேவர்நட் பாளன்
புரத்துச் சாலிகை கீழ்ந்தனன் புலவரை யலைத்தோன்
கரத்துக் கார்முகந் துமித்தனன் கடவுளர்க் காத்தோன். 441

வாணி கேள்வன்மு னருளிய வேலினை வல்லே
ஏணி லாதவன் விடுத்தன னெய்கணை துமித்துத்
தூணி லாவிய தோளெதி ரடுத்தலுந் தோன்றல்
கோணை நாந்தக முரீஇயிரு துணிபடக் குறைத்தான். 442

நாந்த கங்கர முரீஇயெதிர் நடந்துபோய் நம்பி
சேந்த கைத்தலச் சிலைதுணித் தெழுந்துவா டிரித்துக்
காந்து கண்ணினன் பெயர்ந்தனன் கடுகவா ளுருவி
ஏந்த லெந்தினிப் போவதென் றெதிர்த்தன னமர்த்தார். 443

சாரி கைத்தொழில் புரிந்தனர் தாளினைக் குறிப்பார்
வாரி ருங்கர நோக்குவர் மணிமுடி மதிப்பார்
வீர வாளெறி விலக்குவ ராகிய வேலைத்
தாரை வாளினை வீரன்றோள் சார்த்தின னவுணன். 444

எறிந்த நாந்தகம் வாங்குமு னெரியெனக் கொதித்துச்
சிறந்த வீரியன் றனவன் றோளுகச் செகுத்தான்
பிறந்த சீற்றமோ டொருகையி னுந்தகம் பெயர்த்து
மறிந்தெ திர்ந்தனன் மாற்றினன் மற்றிடக் கரமும். 445

மாயை வன்படை தொடுக்கிய தானவன் மதித்தான்
ஆய சிந்தையுஞ் சென்னியு மமரர்க டுயரும்
மேய சூரனேக் கழுத்தமும் விரதியர் குறையும்
பாய பார்மக ளிடும்பையு மொருங்குகப் படுத்தான். 446

---

441. புரத்துச்சாலிகை - காத்தலையுடைய கவசம். புரம் மேனி யெனினுமமையும்.

443. நம்பியினது. எந்து - என்ன, என்னை, யாது. அது தெலுங்கு.

444. தாள் முதலானவற்றை வெட்டப் பார்ப்பார். தாரை - ஒழுங்கு, கீர்த்தி, கூர்மை, நேரோடல், வலி.

445. தோள் - ஒருகை; அது வலக்கை. மற்றொரு கையினால் நாந்தகத்தைப் பெயர்த்து.

446. ஏக்கழுத்தம் - இறுமாப்பு, தலையெடுப்பு; 'ஏக்கழுத்தம்போல வினிதன்றே' (சீவக . 496). தொடுக்க.

அமரர் கற்பக மலர்பொழிந் தாடவாங் கலையின்
குமரி யாடமெய்க் குறைபல கோடிநின் றுடும்
சமர்செய் ஞாட்பிடைத் தழங்கிவீ ரர்களொடுந் தேரின்
விமல னுடினன் வியனிலம் வியத்தருங் குரவை. 447

வீழ்ந்த வீரனைப் பூதர்க ணெருங்கினர் விமலை
வாழ்ந்த தாழ்கர நோக்கினர் மருட்கையின வியந்தார்
போழ்ந்த வாள்கரம் வீசியா டினர்சமர் புகழ்ந்தார்
ஆழ்ந்த வேழ்கட லுடைந்தென வார்த்தன ரம்மா. 448

வாகை பன்முறை சூடிய வயவர்க டலைவன்
ஓகை கொண்டன னுரைத்தவஞ் சினமின்று முடித்தாம்
ஏகு வாமினி யிறைவன்மாட் டென்றன னன்றே
ஆக லென்றன ரனைவருந் திரண்டனர் பெயர்ந்தார். 449

அழுக்கில் வீரர்தே ரகறலு மாவயி னெங்கும்
வழுக்கு வெண்ணிணம் வாய்மடுத் திரத்தநீர் பருகி
ஒழுக்கு வார்குடர் மாலைவேய்ந் துலப்பில்பேய்ப் பெண்டிர்
முழுக்க வண்புகழ் பாடினர் முயன்றனர் குரவை. 450

இருந்த பூமக டவ்வையைக் காட்டியே குதல்போல்
வருந்த மாநகர் பெயர்ந்தருள் வாகுபோய் முருகன்
திருந்து சேவடி பணிந்தனன் சேயுள மகிழ்ந்து
பொருந்து நல்வரங் கொள்கெனப் புகழ்ந்துபோர் வீரன். 451

ஆர ணத்தனு நகரமே லடுத்தவா ரணனும்
வார ணத்தனு மற்றுள கணங்களும் பணியும்
ஏர ணத்தகு முதன்மையி லிருத்தினை யினிநின்
பூர ணத்திரண் டறக்கலப் பதுதரப் புகறி. 452

---

447. வாவுகின்ற கலைமான் வாகனமுடைய துர்க்கை நடிக்கக் குரவையாடினன்.

448. துர்க்கை வாழ்ந்த கையை. மருட்கை - வியப்பு.

451. மாநகர் வருந்த. கொள்க என்று முருகன் சொல்ல வீரவாகு புகழ்ந்து.

452. நகரமெய்யின் மேலேறிய ஆரணனெனவே நாரணனென்பது. வாரணத்தன் - வெள்ளை யானையையுடைய இந்திரன். தர விரும்புவாய், என்னையிருத்தினை.

என்று வேண்டின னளித்தன மெனவிறை நவின்று
நின்ற வீரர்க டமக்கெலா நெடிதரு ளுதவி
ஒன்ற வவ்வவ ரிடங்களிற் செல்கென வுறுத்தான்
வென்றி வீரர்க ளனைவரு மெலிவொரீஇ யிருந்தார். 453

வேறு

நந்தாத வாண்மைக்கு நாயகமா மைந்தனுருச்
சிந்தாக் கிடந்தா னெனச்சிலர்போய்ச் செப்புதலும்
அந்தோ வெனச்சூர ஞாவி முழுதழிந்து
நொந்தா னழுதா னுவன்றான் பலநினைந்தான். 454

கோயில் விலாவம் பணையா லொளிகுறையப்
பாய நகருந்தன் பாடழிய வெவ்வயினும்
பேயு நரியும் பிணமு முடற்குறையும்
தாய குருகின் றமரிப்பு மிக்கதே. 455

தேவர் சிறைசெய்த திறலோன் மனிந்திரன்முன்
மூவரு மஞ்சு முதல்வன்மன் வெள்ளணிநாள்
மேவிக் கதிரை வெகுண்டயனுர் வந்திரந்த
காவலன்ம னென்றவுணர் காவலன்மா ழாந்தளவில். 456

துண்டப் படுமுறுப்புச் சோரா தெடுத்திரதம்
கொண்டங் குறுப்பக் குமரன் றனைக்குறுகிப்
புண்டங் குடலுமரப் பொந்தனைய நெஞ்சகமும்
கண்டங் கினைந்திதனைக் காமி னெனக்கிளந்தான். 457

---

455. விலாவம்பணை - அழுகை. அகராதியில் விலாபம் புலம்பல் என இருத்தல் காண்க. தமரிப்பு - முழக்கம். பிணத்தை யுண்ணவரும் குருகின் முழக்கம்.

456. இந்திரன் முதலாகத் திரிமூர்த்திகளும். திரிமூர்த்தி பிரம விஷ்ணு ருத்திரர். வெள்ளணிநாளில் வெகுண்டு. வெள்ளணிநாள் - பிரசவித்தலை அறிவிக்கும் குறி, பிறந்தநாள். மன்னென்னுமிடைச்சொல் இரக்கப்பொருளில் வந்தது. மாழாந்தபோதில்.

457. இரதம் - தேர். தயிலத்திலிட்டுக் காப்பாற்றுங்கள்.

ஆருப் பெருந்துயர மாறிச் சினம்வீறி
மாருக வந்தார் வளமுழுது மோரிமைப்பில்
பாருடு வெங்களத்தின் றெம்பியாற் பார்வியப்ப
நீருக்கு வேனென்று விட்டா னெடுந்தூது. 458

கேட்டா னரிமுகத்தோன் கிட்டியதூ தாற்கேடு
வாட்டா முகமு மனமு நனிவாட்டிக்
கோட்டானை வாட்டானைக் கொய்யுளைமாப் பன்மணித்தேர்ச்
சேட்டா ரிலக்கவெள்ளச் சேனை யொடுமடுத்தான். 459

பூமகட்குத் தன்னகரும் பொன்னகரந் தவ்வைக்கும்
ஆமுறைமுன் வைத்த வடைவிற் பிறழ்வித்த
கோமகனைத் தாழ்ந்தான் குறையுரைப்பக் கேட்டினைந்தான்
ஈமணந் துய்யுங்கொ லெரிசிறிய தென்றென்ருன். 460

இகுதற் கியைந்த விறுமாப் புரையமிழ்தாய்
மிகுதற் கியைந்தவுரை மெய்ம்மைவிட மாயிற்றே
நகுதற் கிடமாய் நயந்தவிறன் மைந்தரும்போய்த்
தகுதற் கமைந்த படைபலவுஞ் சாம்பினவே. 461

பல்ல நினைந்தென் படைகொண் டிடங்கழிப்பல்
வெல்ல வலனேல் விளங்கெ னுருக்காண்மை
கல்லினுங் காண்ட லரிதாங் கடந்திலனேல்
வல்லவ வென்று வலித்தான் விடைகொண்டான். 462

---

458. எம்பி - சிங்கமுகன். களத்து இன்று.

459. கேடு கேட்டான். கோட்டையுடைய ஆனை. வாள்தானை என்றது பதாதியை.

460. எரி சிறிதென்று அதில் ஈயானது மணந்துய்யுமா. முருகனை எரியாகக்கொள்க. முன் ஆகும்படி வைத்த முறையிற் பிறழ்வித்தல் - தன்னகர் தவ்வைக்கும் பொன்னகர் பூமகட்குமா வைத்தல்.

461. யான் உனக்கு முன்சொன்னவுரை விடமாயிற்று அல்லவா? கெடுதற்கியைந்த பிறர் கூறிய இறுமாப்புரை உனக்கமிழ்தாகி. மிகுதற்கு - மேம்பாட்டை அடைதற்கு.

462. நினைந்ததனல் இனி என்னை. இடங்கழிப்பல் - நெருங்குவேன். செயித்திலேனேல் காண்டலரிதாம். கல் - போர்க்களத்தில் ஓரரசனை யெதிர்த்துப் போர்செய்து இறந்துழி அவ்வரசனுடையவழியில் வந்த

வேறு

பாக்கிய மினியின் றென்னாப் பயில்பெரு மனையுட் புக்குப்
போக்கியப் பொருள்க ளெல்லாம் பொலியக்கை தொட்டு மோடு
வீக்கிவம் பணிகள் சால மெய்ப்படுத் திணர்த்த தும்பைப்
பூக்குரு முடிக்கண் வேய்ந்து போர்த்திருக்கோலங் கொண்டான்.

பற்பல படைகைக் கொண்டு படர்பெரு மணித்தே ரூர்ந்து
விற்பயில் கவிகைக் காடும் விண்டுழாம் பதாகைக் காடும்
எற்பயில் கவரிக் காடு மீண்டபல் லியமி யம்பச்
சொற்படு சேனை வெள்ளஞ் சூழ்தரப் பெயர்ந்து போந்தான். 464

மாடகத் திவவு நல்யாழ் மாமுனி குமரற் றாழா
ஆடக வரைபோ னீண்ட வரிமுகன் போர்க்குப் போந்தான்
நாடக மவன்போ ராக்கி நலிதரு மமரர் தாளில்
பாடக நிகளஞ் சீத்துப் பாணியா தருள்க வென்றான். 465

தேரினைக் கொணர்தி ரென்று செம்மலா ரருளிச் செய்ய
வீரரில் வீர னப்போர் வேண்டினன் விடைபெற் றேகப்
பாரிட ரிலக்கர் வீரர் பலருமாங் குடங்கு சென்றார்
போரடு களத்தை யுற்றார் புவனங்க ளேங்க வார்த்தார். 466

கைவகுத் திருவர் தாமுங் கலந்தனர் படைக ளுய்த்தார்
ஐவகை முடியுங் குஞ்சி முடிகளு மற்று வீழ்ந்தார்
மெய்வகை யுறுப்புத் தீர்ந்தார் வீரமு வரமு மற்றார்
உய்வகை யுறக்கங் கொண்டா ருலப்பில ரிருவர் மாட்டும். 467

பின்னோர் போர்க்களத்தில் உடனே ஒரு கல்லை நாட்டி அக்கல்லில் இன்ன காலத்து இன்னான் இன்னோடேதிர்த்துப் போர்செய்து இறந்தானென் றெழுதிவைக்கப்படுவது. கல் நாட்டுதற்குரிய வழியில் வந்த பின்வந்தவர் களோடும் நீயும் அழிவாயென்னும் கருத்தால் 'என்னைக் கல்லிற் காண லும்' அரிதாகும் என்றான்.

463. மோடு - வயிறு.

465. அவன் போரை நாடகமாகச் செய்து, பாடகமாயமைந்த நிகளம். பாடகம் - காலணியினொன்று.

467. ஐவகை முடியாவன தாமம், மகுடம், பதுமம், கிம்புரி, கோடரம் என்பனவாம்; இவ்வைந்தும் முடியுறுப்புக்களாம். உய்யும் விதமானது உறங்கிப்போதலைக் கொண்டார் எனவே உய்யாது இறத்தலைக் கொண்டார் என்பது. உய்தற்காகப் பொய்யுறக்கம் கொண்டாரென்பாரு முளர்.

பூதர்க ளிரியத் தாக்கிப் பொங்கிய வவுணர் சேனை
மீதுறக் கண்ட சிங்கன் வெய்தொரு தண்ட மேந்தி
மோதுபு சிரங்க டோள்கண் முரிந்துக வுழக்குங் காலைச்
சாதனிற் களித்தே னென்று தசமுகத் தவுண னேற்றான். 468

வேறு

விடுசரந் தண்டினால் விலக்கிப் பாய்ந்தவன்
தொடுகவ யந்தபத் துளங்க வோச்சினான்
நெடுமொழிச் சிங்கனந் நேர லானொரு
கடுமுரட் டண்டமேற் கடவி யார்த்தனன். 469

மருமமுற் றக்கதை மறிந்து வீழ்ந்தது
குருதியுண் கணிச்சியைக் கொள்ள வேயினான்
கரதலத் தண்டினாற் கணிச்சி சிந்திப்போய்ப்
பொருசிலை தகர்த்தனன் பூத நாயகன். 470

தானவன் வேல்விடச் சக்க ரத்தினான்
மானவ னழித்தனன் வார்ந்த தண்டவன்
கானுரத் திட்டனன் கலங்கிச் சிங்கன்கை
யானிறத் தெற்றின னவுணன் றுஞ்சினன். 471

வேறு

படைக்கு நாயகன் வீழ்தலும்
அவுணர்கள் பாரிடர் தனிவீரம்
உடைக்க நேர்ந்தன ரிலக்கருள்
அனகனென் றுரைப்பவன் சிலைவாங்கித்
தொடைக்க ணந்தவா ளிகள்படுத்
துழக்கினன் சோரிவெண் ணிணம்வெளவி
நடக்க லுற்றது துன்முகன்
என்பவ னச்சர வெனக்கண்டான். 472

---

469. தசமுகத்தவுணன் விடுகின்ற சரத்தை. பாய்ந்து, அவன் - தசமுகத்தவுணனுடைய. சிங்கன் ஓச்சினான். முரண் தண்டம்.

471. சக்கரத்தினால். தண்டை தசமுகத்தவுணனாகிய அவனது மார்பில். கான் - வாசனை. கையான் - கையாலே. நிறத்து - மார்பில்.

472. சோரியானது நடக்கலுற்றது.

நாறு நாறுரு வொவ்வொரு
    பூதர்க்கு நொடிக்குமு னெடுத்துற்றுப்
பாறு தாழ்சிலை வணக்கினன்
    சிலைத்தொழில் பயிற்றின னதுகண்டு
சீறும் வீரமார்த் தாண்டன்சே
    தனப்படை செலுத்தினன் றனிநின்று
கூறு துன்முகன் சரமழை
    பொழிந்தனன் கோணையா னவைமாற்றி. 473

வேறு

வாளி யேழுனல் வார்சிலை துணித்துவான் கவயம்
வாளி யொன்றனுன் மாற்றிமாற் றலனுட லெல்லாம்
வாளி யெண்ணில துறுத்தனன் மயங்கிவீழ்ந் தெழுந்து
வாளி லாதவன் மாயையா னுருமறைந் தகன்றான். 474

தலைவர் பட்டதுந் தன்படைக் கேட்டையுங் காணாக்
கொலைமு கத்தவெங் கூற்றென வரிமுகன் குறுகி
மலைம ரம்படை பூதர்கள் வழங்கின நாசி
உல்வை பட்டுமிக் குடைவன திரிவன வுயிர்த்தான். 475

விம்மி தத்தராய் மேலும்போர் மலைத்தெழு பூதர்
தம்மை வன்கையாற் சேர்த்தனன் றகர்த்தனன் றுகைத்தான்
அம்ம வோவென வமரர்க ளிரிதர வோக்கி
மும்மை வையமும் பூதர்தம் பிணமுகப் பித்தான். 476

சார தக்குழா முலைதலுந் தனதுபொற் றேரைச்
சார வாளரி முகத்தவன் றன்னெதிர் சார்ந்து
சார ருந்திறற் கண்ணனென் றுரைத்திடுந் தலைவன்
சார வார்கழு முள்ளிணைத் தடவுரத் திட்டான். 477

---

473. ஒவ்வொரு பூதர்க்கும் நூறு நூறு வடிவெடுத்து. கோணை யான் - வலியவன்.

474. வாள் இலாதவன் - ஒளியில்லாத அவுணன்.

475. சிங்கமுகனைவன் பூதர்களால் மலை மரம் படை முதலாக வழங்கப்பட்டனவெல்லாம் தன்னுடைய நாசியின் காற்றிற்பட்டுடைவன வாகவும் திரிவனவாகவும் மூச்சுவிட்டான் என்க. உலவை - காற்று. வழங்கின : வினையாலணையும் பெயர்.

476. மும்மை வையகமும் முகர்ந்துகொள்ளும்படிச் செய்தான்; முகத்தல் - மொள்ளல்.

கழுமு னுண்டுக ளாயது கைக்கதை யோச்சி
விழுவ தாக்கினன் வலவனை வெகுண்டரி முகவன்
பழுதி லாக்கதை யொன்றனாற் கண்ணனைப் பாற்றி
முழும ணிப்பொலந் தேர்க்கொரு பாகுமுன் னிட்டான். 478

குன்றெ டுத்துமேல் விடுத்தனன் சுமாலியக் குன்றம்
நன்று பற்றிமீட் டுய்த்தன னலிந்தனன் சுமாலி
ஒன்று தண்டினன் றண்டியென் றுரைப்பவ னோடிச்
சென்று சிங்கனை யெருக்கினன் சிதர்ந்தது தண்டம். 479

தாக்கி னான்கரத் தானுமார் பத்திடைத் தண்டி
ஊக்கி னானவன் றாளினா லுகந்துபின் றணிவான்
மேக்கு யர்ந்ததிண் புயந்தொறுஞ் சிரந்தொறு மிதித்தான்
போக்கி னான்கரத் தீயெனத் தண்டியும் புரண்டான். 480

அலைக்க முற்றிய தலைவர்க ளின்னண மகல
இலக்கர் முற்றிவண் கணைகைதூ வாமைநின் றெய்தார்
நிலக்கட் குப்புரு நேர்புகுந் துதைத்துகைத் தொடித்துச்
சிலைக்குந் தேர்களைச் சேமத்தே ரொடுமுற் றுஞ் சிதைத்தான்.

மலைத்த வீரர்கள் வலியிகந் தொருமருங் ககல
உலைத்த தானவன் றனதொரு தேரிடை யுகந்தான்
மிலைத்த தும்பையஞ் சிகழிகை வீரரில் வீரன்
அலைத்து மேல்வரு மவுணர்மே லையென வடுத்தான். 482

---

478. கண்ணனானவன் வலவனை விழுவதாக்கினன். தனது தேருக்கு வேறொரு பாகனை வைத்துக்கொண்டான்.

479. சுமாலி விடுத்தனன், சுமாலி நலிந்தனன் என முடிக்க. சிங்கமுகன் உய்த்தனன். தண்டியென்னும் பெயருடையவன் தண்டேந்தினனாய் ஓடிச் சிங்கமுகனை அடித்தனன். அடித்த தண்டு முறிந்தது.

480. தண்டி தாக்கினான். தாளினால் அச்சிங்கமுகன் வானின்கண் ஊக்கினான். வானிலிருந்து கீழேவிழத் தணிபவனாகிய தண்டியானவன் மிதித்தான். கரத்து ஈயென - ஈயெனக் கரத்தாற் போக்கினான். உகந்து - உயர்ந்து. தண்டாலடித்ததல்லாமலும் கரத்தானும் அடித்தான்.

481. கைதூவாமை - இடைவிடாமை. முழங்குகின்ற தேர்களை. சிலை - முழக்கம்.

வேறு

வாங்கிய சிலையினன் விடுசர மழையினன்
மண்டில வகைமையி னமர்செய்தான்
தூங்குகை மதமலை யிறுவன விறுவன
துரகத நிரையுடை வனபொற்றேர்
ஓங்கிய வவுணர்க ளுடல்பல துணிபட
உகுவன வுகுகறை நதியாகி
வீங்கிய பிணநிரை தழுவுபு முடுகுபு
வேலையி லிடுவன திசைதோறும். 483

தூத்தகு மரைமலர் பலதொட ரியதொட
லைகளென வடிகர முடிபல்ல
கோத்தெழு கணைபல வவுணர்கள் குலமக
ளிர்கள்குலை வுறமனை தொறுஞ்செல்லும்
மீத்தழை யுலகவு ணர்கள்வெரு வரவவண்
விரவுறும் பாதல முறைவோர்கள்
பார்த்தல மரநெடு நிலன்கிழித் தெறும்கொடு
படர்வுறு மரன்மகன் விடுந்தோறும். 484

கூற்றுற முவுணர்த மிறையவன் குலனொடு
முடிவது குறிக்கொளுற் பனமாகத்
தோற்றிய குருதியின் மழையென விடுகணை
துணியுடல் கொடுநெடு வெளியேக
ஊற்றிய வுதிரமெங் கணுமுகு மழையெதிர்
கோடலி னுகுகர மொளிர்புற்ற
நூற்றுவ ரரிமுகன் மதலையர் வீரன்செய்
நூழில்கண் டனர்சிலை வளைவித்தார். 485

நிரைநிரை யவர்விடு கணைவில குபுசிலை
நெடுகிய விரதமு மொழிவித்தான்
பரைமக னவரிவன் சிலைவெல லரிதெனப்
படர்மதி யினரிது வலியாகில்

---

485. உற்பனம் - உற்பாதம். உதிரமானது மழையாகும். அந்த மழைக்கெதிரேயுள்ள கோடலைப் போலக் கரங்கள் ஒளிர்தலுற்றன; கோடல் - காந்தள். ஒளிர்பு - ஒளிர்தல்.

வருகென வுடைவளர் சுரிகையை யுரியினர்
வயவர்கள் வயவனு மதுகைக்கொண்
டரவென வெழுதலு மனைவரு மிகலினர்
அவருடன் முழுவது நிலன்வீழ்த்தான். 486

எதிர்வயி னிளையர்த முயிரொரு வனிலிறும்
இதுவிட விழிவினி யெவனேயென்
றதிர்கழ லரிமுக னடவிய தேரொடும்
அணுகின னழலுமிழ் விழியோனும்
முதிர்சின மொடுமெதிர் குறுகினன் றூதுறு
முனைமக னிவனல திலையென்று
விதிர்குரல் படவிறன் மொழிகட வினனரி
வியன்முகன் கடவின னிவன்வாளி. 487

தடவுர மருவிய வாளிகள் பழுதொடு
தரைவிழ வரிமுக னொருதண்டம்
விடவது துகள்புரி கணைசில வேவுபு
வெங்கணை யாயிர முடியுய்த்தான்
கடவுள ரிடர்தப வருபவ னக்கணை
கரிதலு மரிமுக னொருசூலம்
நடவினன் பலமுறை விடுகணை துமியமுன்
நணுகிய திவன்சுரி கையினட்டான். 488

அட்டவன் வெகுளிமிக் கெழுதலு மிவனுயிர்
அடுகுவ லெனவிறை படைதொட்டான்
ஒட்டல னதுவரல் காணலு மப்படை
ஒருகையி னிருந்தது தனைவிட்டான்

---

486. விலகுபு - விலக்கி. சிலையையும் இரதத்தையும் பரைமகன் ஒழித்தான். அரவென - பாம்பென. அவருடல் முழுவதையும்.

487. சிங்கமுகனுனவன் நம் புதல்வருயிர் இறுநிற்கும். இதைவிட நமக்குளதாம் இழிவு வேறு யாதென்று நினைத்து. இதுவிட - இதைப் பார்க்கிலும். இளையர் - புத்திரர். தூதாகவந்த முன்னைமகன். அரிமுகன் மொழி கடவினன், இவன் வாளி கடவினன். விதிரென்பது அச்சம் அல்லது நடுக்கமாம்.

488. வருபவனுனவன் முடியிலுய்த்தான். சூலமானது முன்னர் நணுகியது என்க. முன் - எதிரே.

முட்டின திரிந்தன மீண்டன வீரனும்
முருகனி லலதிவ னுயிர்மன்றப்
பட்டிட லரிதிவன் வார்சிலை தேர்முதல்
படவமர் புரிகுவ லெனமூண்டான். 489

வேறு

வலவ னுயிரைச் சிலகணையான்
மடித்தான் வீர னொருதண்டம்
கலதி யவுணன் விடமார்பங்
கலந்து துகள்பட் டதுவீரன்
பலவெங் கணையா லவன்றேரைப்
படுத்தா னந்தப் பதநோக்கி
அலகில் பூத வீரர்களும்
ஆர்த்துச் சமரின் மேலடர்ந்தார். 490

நெருப்பிற் கனன்று சிங்கமுகன்
நெடிய மணித்தே ரொன்றிவர்ந்து
பொருப்புக் குலங்க ளெனச்சிலைகள்
போகு கரமா யிரத்தேந்தி
அருப்பு முலையார் வாள்விழியின்
ஒவ்வொன் றலகி லுயிர்மாய்க்கும்
செருப்பொற் கணைகள் பலகோடி
செறியத் தொடையொன் றினிலெய்தான். 491

தவக்கூ ளியர்க டொகைசாய்க்கும்
தருக்கள் சாய்க்கு மலைபொதிர்க்கும்
நவக்கோ ளறுக்கு நாளறுக்கும்
நட்டா ருயிரும் வாய்மடுக்கும்

---

489. அப்படை - இறைபடை. வீரனும் - வீரவாகுவும். என்னால் சிங்கமுகனைக் கொல்லவரிதாகு மாகையால் அச்சிங்கமுகனை முருகனே கொல்லுவான். யான் அவனுடைய வில் தேர் முதலானவற்றையாவது அழியும்படி செய்வேனென்று போர்மூண்டான் என்க.

490. வீரன் மடித்தான்.

துவக்கோ டுதிரச் சேறளேயும்
சுரருக் கலக்க ணனிபெருக்கும்
பவக்கூ டெனுமாக் கையர்க்கெல்லாம்
பரிவு புரியு மவன்வாளி. 492

திசையும் வானும் படைகடவாச்
செறியத் திரக்கூ டுறுத்தாங்கு
விசையிற் றிரியுங் கணைமயமே
விரிமூ வுலகுந் தோற்றுதலும்
வசையில் வீர னொருநொடியில்
வயின்றோ றுலப்பில் கணைதூண்டிப்
பசையி லவுணர் நறுமொறுப்பப்
பலவு மறுத்து வெளிசெய்தான். 493

அமரர் வியந்தா ரதுவியப்போ
அரிமா முகனு நனிவியந்து
சமரச் சிலைநின் பொருட்டெடுத்தேன்
சாய்த்தே னினைவே ளொடுமென்றான்
நுமர்போ னீயும் புனைந்துரைக்கும்
வென்றி யலது நுதலியாங்
கெமர்போன் முடிக்கும் பொருள்வென்றி
யெய்தா யென்றான் றனிவீரன். 494

சீற்றங் கிளரச் சிங்கமுகன்
சிலையா யிரமும் வளைவித்து
வீற்று வீற்று விடுசரங்கள்
விலக்கி வீரன் மேல்விடுத்தான்

---

492. கூளியர் - பூதர். நட்டார் - பகைவர்; அது பெட்டாரென்றாற் போலும்.

493. திசையினும் வானினும் கடவி உறுத்தாங்கு என முடிக்க. உறுத்தாங்குத் தோற்றுதலும். செறிந்த அத்திரக்கூடு.

494. நுமர் போல் - சொல்லளவிற் புனைந்து வெல்வேனென்று கூறிப் பொருளளவில் நிறைவேற்றாத தாரகன் பானுகோபன் முதலியோரைப் போல. நுதலியாங்கு - சொல்லியபடி. சொல்வென்றியல்லது.

பாற்றி யவற்றைச் சிங்கமுகன்
பாணிச் சிலையை யிறுத்தமரன்
மாற்றோர் சிலைகைக் கோடுமுன்னம்
மருமத் துலப்பில் கணைசெறித்தான். 495

ஆறு கொளச்செங் குருதியுக
அமரர் களைக ணனைநின்றோன்
சீறி விசிக மாயிரத்தாற்
சில்லி யிரதஞ் சிதர்செய்து
வேறு மணித்தே ரிவர்முன்னம்
விடுக்கும் வாளி யாயிரத்தால்
மாறில் சிலையா யிரமுமவன்
மதிப்போ டொருங்கு விழவறுத்தான். 496

அண்டர் பூத ரனைவோரும்
அங்கை யெறிந்தங் கசித்தார்த்தார்
கண்டு மடங்கன் மாமுகத்தோன்
கனன்று மாயா பாசத்தை
மிண்டு மிவரைப் பிணித்துதய
வெற்பிற் போதந் திருத்தியெனக்
கொண்டு விடுத்தா னனைவரையும்
கொடுபோந் திருந்த தப்படையே. 497

சேந்தன் யாங்க ணுளனென்றே
திரிந்தான் காணான் வெருண்டிரிந்து
போந்தான் கொல்லோ வெனத்தூதர்
பூத ரொடும்பா சறையிருந்தான்
ஏந்தா லென்றோ ரமர்க்கஞ்சி
யிருந்தான் கொல்லோ வெனப்பதகன்
காந்தா நின்றோ ஞங்கேகிக்
கடப்பா மென்று பெயர்குற்றான். 498

---

495. சிங்கமுகனுடைய பாணிச்சிலையை. சிங்கமுகன் கொள்ளு முன்னம்.

496. இவ்வாறெல்லாஞ் செய்தது வீரவாகு என்க.

497. அசித்து - சிரித்து. போதந்து இருத்தி - போந்திருப்பாய்.

498. என முன்னையது என்று வினவா நிற்ப என்பது பொருள். பின்னையஎன என்று என்பது பொருள். தூதர் என்றோர். சேந்தன் - முருகன்.

காலி னிறைவன் கண்டனைத்துங்
கரைய வறிதே நகைகொண்டு
வேலி னிறைவன் றேரிவர்ந்து
விண்ணோர் தத்தம் பணிபுரியக்
கோல முரசக் குலங்குளிறக்
கொடிவான் றுவன்றப் பூதர்படை
ஆல மெனவெங் கணுமிடைய
அடுத்தா னமர்செய் பறந்தலையில். 499

வேறு

கிட்டிய வவுணருங் கேடில் பூதரும்
முட்டின ரதுக்கினர் முறையிற் பல்படை
விட்டன ரழித்தனர் விரவி யாடினர்
பட்டனர் பலரிரு திறத்தர் பாங்கினும். 500

கண்டன னரிமுகன் கணங்கொள் பூதரை
உண்டலா லென்சின மொழிவ தின்றெனக்
கொண்டனன் பேருருக் குறுகி யாரையும்
விண்டுவாய் மடுத்தகட் டிடுதன் மேயினான். 501

மாயைவண் கயிற்றினாற் பாதி மாய்ந்ததும்
ஆயிர வெள்ளமு மகட்டி னாக்கலும்
போயொரு தூதுவன் புகலச் சூர்களி
மேயின னொருவனை விளித்துக் கூறுவான். 502

கந்தனேற் றிடும்படை காழ்ப்பி னின்றிடா
அந்திலிங் குளபடை யனைத்து மேவென
உந்தின னிளவல்போ ருளுற்ற நோக்கிய
அந்தரத் துயர்ந்தவத் தாணி யேறினான். 503

---

499. வாயுவானவன் சொல்ல.

501. பேருரு - விசுவரூபம்.

502. மாய்ந்ததையும் ஆக்கலையும்.

503. சிங்கமுகனோடு சென்று இப்பொழுது கந்தனை யெதிர்த்திடுகின்ற நமது படையானது சிறிது ஆதலால் அது வலிமையில் நின்றிடாது. அதனால் இன்னும் படையனுப்புக என்று கூறியுந்தினனாய். இளவல் - சிங்கமுகன். நோக்க.

வியவரின் முரசறை விப்ப முன்னிஞேன்
கயமுத ஞற்படைக் கடலு மாநகர்ப்
பயிலிட மொரீஇப்பறந் தலையின் முற்றின
இயலிட மிறந்தன வீண்டு சேனையால். 504

முப்புர மட்டநாண் முதன்மை பின்னெனும்
அப்பெருந் தேவர்த ஞற்ற றெள்ளுறத்
துப்புடை வீரர்பாற் றேல்வி பன்முறை
வைப்பவ ஞகிய வள்ள லோர்ந்தனன். 505

வேறு

கண்டவுண ரெங்கணும்வ ளைந்துபடை கொண்டுகதழ்
வுற்றமரி யற்ற வடிகள்
கொண்டொருசி லைக்கணு று நாணொலியெ டுத்தனர்கு
லைந்துபல வண்ட முழுதும்
விண்டனநெ டுங்கிரியு மண்டலமு முக்கணுமிர்
மீன்கடறு ளும்பி னபடை
ஒண்டரைவி ழுந்தனவு லம்பினக ரிப்பரியு
டைந்தனதி ரண்ட விரதம். 506

ஈதுபுரி வன்மையனெ னக்கிளவ லாருயிரி
றுத்தவினை யோனி வனுயிர்
காதுவலெ னக்கடிது முந்திமொழி வான்கருத
லார்தமைய டக்க லரையர்
நீதியது செய்தனமெ மக்கறவை யெண்ணலனு
மல்லைநிகழ் போர்க ருதிவே
ருதியிது வென்னையுரை யென்றறிமு கத்தவன
றைந்திடவு ரைப்ப னமலன். 507

---

504. வியவன் - ஏவுவான், திண்ணியன், வழிச்செல்வோன் இவற்றுளேற்பன கொள்க. சேனைகளைச் சேர்த்தற்பொருட்டு அறையும் முரசு என்க. முன்னிஞேன் - முன்னிய சூரன். சூரஞனவன் விளித்துக்கூற உடனே புறத்தில் முன்னிய ஒருவஞனவன் வியவராலே முரசறைவிப்ப என்றலும் ஒன்று.

505. பின்ஞகுமென்று சொல்லுகின்ற தேவர்களானவர். வீரர் - நவவீரர், இலக்கவீரர் முதலியோர். வள்ளல் - முருகன்.

506. அடிகள் - முருகன். கடல் துளும்பின.

507. இளவல் - தாரகன். மொழிவாஞயிஞன். நான் தேவர்களைச் சிறையிட்டது அநீதியன்றென்பான். 'கருதலார் தமையடக்கல் அரையர்

தஞ்சமுள ரைத்தறுக ணாளர்களை யப்பினவர்
தங்களைமு றைக்க ணிறுவி
விஞ்சுமகி லாண்டமுமொ ருங்கரசி யற்றுமொரு
வேத்தியல்ப டைத்த விறையான்
அஞ்சலிர ருங்கடவு ளார்திரளை வெஞ்சிறையி
னுக்குதலி னுங்க ளுயிரை
எஞ்சுதலி லாதுணவி றுத்தமரி னின்றனனெ
னச்சுளிவி ளோடரிமுகன். 508

யாங்களெளி யோம்வலியை நீயெமைமு றைக்கணியை
விப்பதுமெய் பாதி படையை
ஓங்குதய மால்வரையு றுத்தினனி னக்கெதிரொ
ழிந்தபடை முற்று மகடு
தாங்கினனெ ருத்தர்குறை மாற்றலுறு வார்குறைத
மக்குறுதல் செய்கு வர்கொலோ
தேங்கொளிய வேற்படையி னாற்றலும றிந்துளனெ
னச்சிறிய பேசி னனரோ. 509

நன்றிவன கந்தையென நாயகன கைத்தழலு
நஞ்சுகனி யோர்க ணைவிடக்
குன்றுறழு ரந்துளைப டுத்துவெரி நேகவது
கூளியர்வெ ளிக்கொள் வழியாய்
நின்றதவ னேக்கியொரு செங்கையி னடைத்துநெடி
தோச்சியொரு வார்க தைவிட
வென்றியினை யோனெதிர்வி டுத்தகணை நான்கதுவி
லக்கிறுதன் மூழ்கி யனவே. 510

நீதியாம்' என்றான். அந்நீதியாகிய அதைச் செய்தோம்; அதுவே நமக்கற மாம். எண்ணலன் - பகைவன். நீ எமக்கு முன்னமே பகைவனாயுள்ளவனு மில்லை; ஏதோ போரைக்கருதி வேறாக வந்திருக்கின்றாய் இஃது என்னை. அறவை - தருமம். போர்க்கோலமாய் வந்திருத்தலால் 'வேறாக ஆதி' என்றான்.

508. தஞ்சம் - எளிமை. அவர்தங்களை - தறுகணாளர்களை. யான் இறையாம். அஞ்சலீராகி நின்றனன் என்று முருகன் கூற.

509. தாங்கள் வலியோம் எனும் கருத்தால் 'யாங்கள் எளியோம்' என்றான். இயைவிப்பது மெய்யாகும். ஏனைய பாதியாக ஒழிந்த படை எல்லாவற்றையும் உனக்கெதிரே வயிற்றில் தாங்கினேன்.

510. நஞ்சு கனிந்திருக்கும் கணை. கணை நான்கானவை கதையை விலக்கி.

மம்மர்மிக நின் றனன டைத்தகை வழுக்கவழி
கண்டுமிடை பூதர் களெலாம்
இம்மெனுமு னம்வெளியி னேகியிறை வன்புடையில்
எய்தினர்க ளாங்கொ ருகணை
செம்மல்விட வேகியவன் யாத்தபடை சிந்தியொரு
தேரெனவி ளங்கி யவரை
அம்மகொடு போந்துமுன்வி டுத்துநுழை தூணியின
மர்ந்ததுவி டுத்த பகழி. 511

நாஞெலியின் முந்துவிழு தானவர்தெ ளிந்துநனி
போர்புரிய நாதன் விசிகம்
ஏனுடைய வார்சிலைவ ணங்கவள வில்லவெழு
வித்தனனொ ரம்பு பலவாய்க்
காணுறும ரப்பணைகி ளைத்தொகைவ ளார்விரிவு
காட்டினுமிர் சேனை முழுதும்
கோணைவலி சிந்தவடல் செய்தனக றைக்குடிஞை
கூர்ந்துகட லோடு பொருத. 512

சோகமுமி ளங்குமர னெய்தகணை மூழ்கவுறு
தூலவுரு வுந்த விர்தர
ஏகனென நின்றவவு ணன்றனதி ரும்படையி
றந்ததுமி றந்த படைகள்
மாகர்பணி வேலிறைம ருங்குமிடை வுற்றதும
தித்துவில்வ ளைத்து விசிகம்
ஏகமென வுந்தினன றுத்தெதிர்ச ரம்பலவி
டுத்தனன கைத்தி ளையவன். 513

---

511. அவன் உதயகிரியில் யாத்தபடையை. படை - மாயப்படை. இருத்தற்குத் தேராக விளங்கி.

512. விழுதானவரென்றது 506-ம் பாவில் 'படை யொண் டரை விழுந்தன' என்பதை.

513. சோகமும் ஸ்தூல வடிவும் முருகன் கணைமூழ்கலால் நீங்கா நிற்ப. சோகமென்பது 510-ம் செய்யுளைக் காண்க. தூலவுருவென்றது 501-ம் செய்யுளைக் காண்க. ஸ்தூலவுரு - மாயையால் கொண்ட பெரிய வுருவம்.

விலக்கிவரு வெங்கணைபல் வாளியின்ம டங்கன்முகன்
வேளிரத மூர்ப வன்வலி
கலக்கவிளை யோனவுணன் வையமழி விப்பவவன்
காசினியி னின்று பகழி
இலக்கமிசை யேயினனி றுத்தவையொ ராயிரவெ
றுழ்ச்சிலையும் வீழ்த்த முருகன்
குலக்கழுமு ளொன்றவுணன் விட்டனனி ருங்கணைகொ
டுத்திறைவ னட்டன னரோ. 514

வேறு

சூல மட்டபி னொராயிரங் கணைமிசை தொடுத்தான்
பால னுங்கவன் றண்டினப் பகழிகள் சிதர்த்து
மேல டர்ந்தனன் விசாகனக் கரந்தொடுத் தறுத்தான்
ஞாலம் வீழ்கதை யெடுத்துமே னடத்தின னண்ணுன். 515

தண்ட முந்தகர் வித்தனன் சாமிமுன் சமன்பால்
கொண்ட பாசத்தை விடுத்தனன் கோளரி முகத்தோன்
கண்ட மாக்கினன் காங்கெயன் கரங்கொடு பற்ற
மண்டி னனவன் வார்கர முழுதுஞ்சே யறுத்தான். 516

அற்ற பாணிமண் விழுமுனு யிரத்திரு புயமும்
செற்ற நின்றனன் சேந்தன்மூ வாயிரங் கணைதொட்
டுற்ற தோள்களு முடிகளு மொருங்குமண் வீழ்த்தான்
எற்ற முள்ளவ னவையினு மெழவிது மொழிவான். 517

எண்ணில் காலநின் றறுப்பினு மென்றலை கிளைக்கும்
அண்ண றந்தருள் வரத்தினை யறிகலா தமர்க்கு
நண்ணி னுய்நினை விடுத்தன னடமதி யென்ருன்
பண்ணும் வேள்வியின் பயனிதென் றறிந்தருள் பகவன்.

---

514. வருவெங் கணையை விலக்கி. வாளியால் வாயுவைக் கலக்கா நிற்ப. முருகன் வீழ்த்தா நிற்ப.

515. பாலன் தொடுத்தான். நண்ணுன் - பகைவன்.

516. சாமி தகர்வித்தனன்.

517. இரண்டாயிரம் புயத்துக்கும் ஆயிர முடிக்கும் மூவாயிரங் கணையென்க. ஏற்றமுள்ள சிங்கமுகன். ஏற்றமென்றது குறுகியது.

518. சூரன் பண்ணிய.

நன்று கூறினை பின்றையே கூற்றநண் ணியதால்
இன்று நின்னுயிர்க் கிழைத்தநா ளென்றலு மவுணன்
குன்ற மாயிரம் பெயர்த்துமேற் கொம்மென வுகைத்தான்
துன்று வாளியிற் சிதர்த்தவன் சிரங்கரந் துணித்தான். 519

எட்ட னைத்தலைப் பெய்தநூற் றிருபதின் காறும்
விட்டு வாளிகள் சிரங்கரந் திருவிளை யாட்டால்
அட்ட னன்பரன் மதலைகாண் டொறுமஞ்சி விண்ணோர்
ஒட்ட லன்படு மாறெவ னெனவுல மந்தார். 520

இன்ன வாறம ராடுழி யிருகையோர் முடியும்
மன்ன மற்றன வறுத்தனன் மறுவலுங் கிளைப்ப
முன்னு மேல்வையி லுரப்பினன் முளைத்தில வகத்தோர்க்
கன்ன வாய்நுழை வான்கண்டு பிந்திய கடுப்பின். 521

சிரமுந் திண்கையும் பொய்த்தலுந் திகழ்சமழ்ப் பினனாய்
இருக ரத்தினால் வெல்வலென் றெடுத்தொரு கிரியை
விரைய விட்டனன் வேலவ னொருகணை விடுத்துத்
தரையி னாக்கின னவனொரு தண்டெடுத் துரைப்பான். 522

ஞாங்க ரேவவும் வாளிக ணடாவவு மன்றி
ஈங்கு வேறொன்றும் பயின்றிலாய் போலுமென் றெடுத்த
ஓங்கு தண்டமே லுகைத்தன னுமைமக னொருகைத்
தாங்கு வச்சிரத் தண்டினை யெதிர்செல விடுத்தான். 523

எதிர்கொ டண்டினைப் பராகமாய் விழத்தள்ளி யேகி
அதிர மார்புகீண் டந்தரக் கங்கைதோய்ந் தங்கை
வதித லுற்றது வச்சிர மடங்கன்மா முகத்தோன்
உதிர மூற்றெழ மறிந்துவீழ்ந் தாருயி ருலந்தான். 524

---

519. இழைத்த நாளின்றாகும். சிதர்த்து அவனது. முடிவுசெய்த நாள் இன்றென்றலும்.

520. நூற்றிருபத்தெட்டுத்தரம்.

521. இரண்டு கையும் ஒரு முடியும் மன்ன நிற்ப. மற்றன. அகத்தோரைக்கண்டு. கன்னவாசல்.

522. பொய்த்தலும் - பொய்யாகப்போதலும்.

524. வச்சிரத்தண்டு வதிதலுற்றது.

தேவ ரந்தணர் பாடினர் ராடினர் தெய்வக்
காவ லர்ந்தபன் மலர்மழை சொரிந்தனர் கணமும்
யாவ ருங்களி இளைத்தன ரெம்பிரான் றணந்து
மேவ ருந்திறற் பாசறை யடுத்துவீற் றிருந்தான். 525

சூளி கைத்தலை யிருந்தமர் நோக்கிய சூரன்
ஆளி மாமுகன் விழுதல்கண் டயர்த்துளான் கொல்லோ
நாளி முந்துளா னோவென நனியயிர்த் தளவில்
மீளும் வேயினர் பணிந்துவீந் தாளென்று விரித்தார். 526

வெற்று டம்பினன் மிக்குயிர்த் தவலித்துக் கவன்றங்
கற்ற நீங்கியுள் ளேதுய ராறுபு சினந்து
பற்று மண்டங்க டொறும்பயில் படையெலா மீண்டு
முற்றத் தம்மினென் றெண்ணிலர் தமைமுடுக் கினனால். 527

மனமும் பின்பட வேகிய தூதுவர் மாற்றம்
தனையு ணர்ந்துப லண்டமுந் தவிர்ந்தபல் படையும்
துனைய வெய்துவா னெழுந்தன முந்துறுந் தூசி
கனைக டற்புவி நிறைந்துமே லுலகெலாங் கனன்ற. 528

ஆடிப் பூசியுண் டணிந்தருங் கலன்றுகின் மற்றும்
நாடிச் சேனைகட் களித்தெவ்வே ழயுதநற் பரிமா
பாடற் பேயரி மாவிவை பண்ணமை பொற்றேர்
கூடிப் பல்லிய மியம்பவா ளவுணர்கோ னிவர்ந்தான். 529

இறைவ னல்கிய விந்திர ஞாலமு மூரும்
விறன்ம டங்கலு முழையவ ருடன்கொண்டு மேவ
நிறைது கிற்கொடி நுடங்கவெண் ணிலாக்குடை நிழற்றச்
செறிவு கொண்டசா மரைபுடை யலமரச் சென்றான். 530

---

526. அயர்தல் - சோர்தல். சந்தேகித்த அளவினில்.

528. முன்னர்வரும் தூசிப்படை.

529. எவ்வேழு குதிரையும் பேயும் சிங்கமும் கட்டிய தேரில். ஏழேழ் அயுதம் - எழுபதினாயிரம்.

530. சிங்கம் சூரனது வாகனமென்க.

மூந்து தூசிபோய்ப் பாசறை மூற்றின கண்டு
பைந்து மாயினன் முதலியோர் பதைபதைத் தழிந்து
வந்து ளானமர்க் கவுணர்கோ னென்றடி வணங்கக்
கந்த வேணகைத் தெழுந்தனன் கடைத்தலைச் சென்றான்.

மான தப்பெருந் தேரிணை வளியிறை யுய்ப்ப
வான துந்துமி முழங்கவா னவர்பணி புரிய
ஞான நாயக னிவர்ந்தெதிர் நடந்தனன் மகவான்
சேனை கண்டுள மழுங்கினன் மாயவன் றெளித்தான். 532

சலந்த ரன்கயா சுரன்முத லானதா னவரின்
வலந்த ழைத்தவர் மலிவுகாண் பூதர்நம் முடலம
நிலங்கி டக்குமல் லானிலை யாதென நினைந்தக்
குலந்த ழைத்ததா னவரொடு மமர்த்தனர் குலைந்தார். 533

தலைவ ரேற்றனர் தளர்ந்தன ரிலக்கருந் தாக்கி
உலைவு முற்றினர் வீரரெண் மரும்பொரு துடைந்தார்
சிலைவ லாள னுஞ் சிலர்விழக் கலக்குழி யொருங்கே
மலைதன் முற்றலின் வலியறச் சலித்தனன் மாதோ. 534

கண்டு நாயகன் கார்முகம் வணக்கினா னேதை
கொண்ட னன்மத குஞ்சரம் புரண்டன மணித்தேர்
விண்டு டைந்தன விளிந்தன பரித்தொகை பல்லோர்
எண்ட விர்ந்தன ரிறந்தனர் சிலரிடந் தோறும். 535

வேறு

சத்தியொ டும்புணர் தற்பர
ஞக்கிய தானுள முன்னுதலும்
எத்தனை யுங்கணி கத்தில்வி
ரிந்திட லென்னவி ளங்குமரன்

---

531. தூசிப்படையானதுபோய். பாசறையின் கடைவாயிலென்க.

533. முதலான வலந்தழைத்தவருடைய மலிவையெல்லாம் கண்டுள்ள பூதரென்க. தானவருக்குள்ளே சலந்தரன், கயாசூரன் முதலானோருடைய குலத்திலுள்ளோர். சூரன் முதலானோரென்பாருமுளர்.

534. வீரவாகு ஒழிந்த எண்மரும். சிலைவலாளனாகிய வீரவாகுவும் சலித்தானென்க.

535. எண் - எண்ணம்.

வைத்தனன் றூணியில் வார்கைய
    முற்சரம் வையநி றைந்தவையவ்
வுத்தம னட்டிடல் போலவு
    ணப்படை யொல்லைய ழித்தனவே. 536

குடர்கொழு வெண்புவ மூக்குவ
    ழும்புகொ ழுங்கறை மூளைதடி
தொடருந ரம்பிவை வேறுபி
    ரிந்துது வன்றுவ தன்றிமுழு
துடல்களை நாடரி தென்னவொ
    றுத்தன வும்பர்பி ரான்கணைகள்
இடமுள தண்மவெ னப்பிற
    வண்டமி ருந்தவு முற்றினவே. 537

முந்தினு மிக்கபெ ரும்படை
    கண்டுமுன் ஞேன்வல வாவிரதம்
அந்தர மாதிர மெங்கணு
    முந்தென வையென வெண்ணிலுரு
மைந்தனெ டுத்தும லைந்தனன்
    என்னவ ளிக்கிறை யேவல்செயச்
சிந்தினன் வார்கணை சிந்தின
    வெங்கணுஞ் சேனையு டற்றுணியே. 538

மீட்டுமி ரும்படை மேவநெ
    டுங்கணை விட்டுவி யன்வழியில்
மாட்டிவ ழுக்கம றுத்துல
    கெங்கும லிந்தவு டற்குறையின்
ஈட்டம றிந்துக னனறுவி
    ழிப்பவெ ரிந்தவு டற்ஞெருகுதி
ஓட்டறு சோரிவ றந்தது
    சூரனெ ருத்தனு நின்றனனே. 539

---

536. ஆக்க - சிருட்டிக்க.

537. கணைகளானவை ஒறுத்தன. பிற அண்டத்திலிருந்த சேனைக ளிறந்தொழிந்து போனபடியால் இவ்வண்டத்திலிடமுள்ளது என்று வந்தனவென்க.

539. உடற்ஞெருகுதி எரிந்தன.

என்னைமு டிக்குநர் யாவரும்
இல்லையெனு ஞான்றுமிவ் வாறுடலில்
மன்னுவ னீயத நிந்திலை
புல்லியர் மாற்றம்வி ளுய்ப்பொருத
முன்னினை பிள்ளைமை யான்முது
கீயினு மோதுவ லென்னவவன்
பன்னிரு தோளிறை செப்பென
தம்புப கர்ந்திடு மென்றனனுல். 540

என்றலும் வெஞ்சினம் வீறவி
ருஞ்சிலை யேற்றிய நாணெலிசெய்
தன்றிய சூரனெ திர்ந்தனன்
நேர்ந்தறி வுற்றனர் பூதரெலாம்
துன்றுமி லக்கரும் வீரரும்
நேர்ந்துதொ டுத்தனர் வான்பகழி
நின்றவை மாற்றிநெ டுஞ்சிலை
தேருநெ ரித்துமெ யுய்த்தனனே. 541

உய்த்தச ரம்புய நெற்றியு
ரங்க ளுரீஇப்பெய ரத்தளரா
மொய்த்தவி லக்கரு மெண்மரும்
நீங்கினர் மொய்ம்பினன் வாவியவன்
பைத்தவிர் வையமி வர்ந்துப
ரன றரு நாந்தகம் வாங்கிவளை
கைத்தல வில்லையி றுத்தனன்
கையினெ றிந்தவ னேச்சினனே. 542

வானெறி மொய்ம்பன யர்ச்சித
விர்ந்துதன் வள்ளலை யண்மினனுல்
தானவன் வேறொரு வார்சிலை
கொண்டுச ரம்பல கோடிவிட

---

540. பிள்ளைமையால் முன்னினை. செப்பு - விடை.

542. மொய்ம்பினன் - வீரவாகு. சூரனது வாளை வாங்கிச் சூரன் வீரவாகுவை விண்ணிலெறிந்தோச்சினன்.

மேனிலை யும்பர்கள் வைப்ும்வி
றந்தகி ரித்தொகை யும்விரிநீர்ப்
பேனநெ டுங்கட லும்புவி
யும்பிற வுந்தப மூடினவால். 543

கோற்றொடி கொன்றைமி லைத்தவர்
வாள்விழி கொம்மென மூடுமிருள்
தோற்றுநு தற்கணி ரித்தென
வாளிது ரந்தவ னெய்தகணை
மாற்றிய வன்மிசை யெண்ணில
ஏவினன் வள்ளல றுத்தவைமேல்
வீற்றுநெ டுங்கணை விட்டனன்
சூரன்வி ளைத்தல ரிம்முறையால். 544

அறுத்துவி ழுஞ்சர மார்கலி
வெற்பகன் மண்ணிட மெவ்விடனும்
மறைத்துமி மிர்ந்தன வாவயி
னேர்வரு வாளிய றுத்தவுணன்
குறித்திறை வன்கொடி யைத்துகள்
கண்டுகு றித்தொலி சங்கம்விரைந்
துறுத்தினன் மீட்டுமு லப்பில்ச
ரங்களொ ராறுமு கத்திறைமேல். 545

நேர்ந்தச ரங்களி றுத்தவன்
வையமி றுத்தநெ டுங்கொடியை
ஈர்ந்துக டற்கணி டக்கணை
சிந்தின னெம்பெரு மானதனை

---

543. சூரனால் வானிலெறியப்பட்ட வீரவாகு.

544. வள்ளலானவன் வாளியைத்துரந்து சூரனெய்த கணையை மாற்றி ஏவினனென்க. உலகைமூடிய இருளைப்போலச் சூரன்கணை மூடியிருந்தன. அவ்விருளை நுதற்கண்ணானது இரித்தவாறுபோல் முருகன்கணை அவன் கணையை இரித்ததென்க. அவை அறுத்து விட்டனன் சூரன். வாளி துரந்து அவன்.

545. கோழிக் கொடியை. இறைமேல் உறுத்தினன். சங்கொலி குறித்து.

ஓர்ந்துயர் பானுகம் பன்வளை
யாயிர மூதினன் மால்வளையும்
சேர்ந்துமு ழங்கிய தண்டமெ
லாமொலி தேங்கிய தேங்கவுயிர். 546

புங்கவர் நம்மிறை தேரினி
ருங்கொடி யாதியெ னப்புகல
அங்கிபு றஞ்சிறை வாரண
மாய்நனி யார்த்தனன் றேவரெலாம்
தங்குமகிழ்ச்சியி ஞர்த்தனர்
கண்டுத ழன்றிவ ராருயிரை
நுங்குவ லென்றவன் விண்ணிலெ
ழுந்துநொ றிற்படை தூண்டினனே. 547

ஓலமி டும்புல வோர்தமை
அஞ்சலி ரென்ருெரு கையினமைத்
தாலம்வி லக்கிய வண்ணலெ
னக்கணை யாலவன் வாளியெலாம்
சாலவ றுத்தனன் வேலிறை
தானவர் தந்தலை வன்றிருமி
மேலவ ரோடினர் பாலன்கொ
லாஞ்சமர் மேவுவ னென்றழிவான். 548

கோன்மழை சிந்துபு தேர்சுழ
லக்குறு குற்றனன் வேலவனும்
பான்மையி ளுலிர தந்திரி
யப்பக ழித்திரள் சிந்தினுல்
மீன்மறி யுங்கட றீவுவி
லங்கல்வி யன்புவி விண்ணுமெலாம்
நீன்முகின் மின்னின்வி ளங்கிம
றைந்திடும் வெற்றிமி குந்தவர்தேர். 549

---

546. அவன் சூரனுடைய. பெருமான் சிந்தினன். உயிரேங்க. இறுத்து அவன். வையம் - தேர். விஷ்ணுவின் பாஞ்ச சன்னியமும்.

547. அங்கி - அக்கினி. அவன் - சூரன்.

548. மேலவரெல்லாம் நமக்குத் தோற்ருேடினர்.

549. கோல் மழை. சூரன் குறுகுற்றனன். முகிலிலுள்ள மின்னலைப் போல.

உலகுறு காரிய முண்மையி
ஞலுத னுக்கொரு காரணனும்
மலமும னைத்தும தித்திடல்
போல்விடு வாளிதி ரிந்திடலால்
நிலவியி ருஞ்சம ராடுநர்
என்றுநி னைப்பத லாலவர்தம்
இலகுரு வுஞ்சம ராடுறு
செய்கையும் யாருமறிந்திலரால். 550

மழுப்படை கப்பண நேமிகொ
ழுப்படை வச்சிரம் வேல்கதைவார்
எழுப்படை சூலமு மற்றும
னந்தமி டைக்கண்வி ராய்க்கடவ
விழுப்பக ழித்திர ளாலவை
சிந்திவி ரைந்துழ றேரொடுமா
முழுப்புவி வீழம டித்தனன்
முன்னவன் மூவுல கும்புகழ. 551

தோரழி யச்சிலை யோடவு
ணர்க்கிறை திண்புவி நின்றுகணை
ஆரவி டுத்தன னண்ணலு
நண்ணிய றுத்தவன் வார்புயமேல்
வீரநெ டுங்கணை யாயிர
மேவினன் வீடின பட்டவைகோல்
சூரனி ராயிர மேவினன்
வேணெடுந் தோளுற நீறினவே. 552

மருங்கமை பூதர்கள் வீரர்கண்
மீதுவ டிக்கணை தானவர்கோன்
முருங்கவு கைத்தனன் வேளவன்
வில்லைமு ரித்தனன் மற்றொருவில்

---

550. உலகாகிய காரியம்.

552. பட்டவைகள் வீடின.

இருங்கையெ டுத்தும றைந்துறு
மாயையி னிம்மென வானிடையுற்
றொருங்கிய சிந்தையி னின்றனா
னுற்றம ராடின னும்பர்பிரான். 553

ஓதநெ டுங்கடல் பாதல
மாதிர மோங்கிய மேருமுடி
மாதவன் வைப்பும றைந்தவ
னேகநம் வள்ள லு மங்கணெலாம்
போதல்பு ரிந்தம ராடினன்
அவ்வபு லன்களி னீங்கியவன்
மீதுய ரண்டக டாகமு
கட்டினை மேவின னுங்கிறைபோய். 554

மூதம ராடிவை யந்துக
ளாக்கினன் மூர்க்கனி னைந்தணையும்
மேதகு மிந்திர ஞாலமி
வர்ந்துவெ குண்டம ராடல்செய்வான்
வாய்தல டைத்துறு சேனைக
ளப்புற மல்கிய நீர்தெரியாக்
காதிநெ டுங்கணை யால்வழி
கண்டுவி ளித்தன னப்படையை. 555

குடங்கரின் வேறுகு டங்கரி
ரும்பொருள் கொட்டிய கொள்கையென
இடங்கெட வல்லையி றுத்தன
வெம்பெரு மானழ லின்விழியா

---

553. மாயையால் மறைந்து நின்றனன் வானில். ஆண்டு உற்று அமராடினன்.

555. சூரனது தேரைத் துகளாக்கினன். சூரனாகிய மூர்க்கனவன் தான் நினைந்தமாத்திரத்திலணைந்த இந்திரஞாலத்திலேறி அமர் செய்வானாகி. முருகனுலடைக்கப்பட்ட சேனைகள். நீர் - தன்மை. வழிசெய்து அழைத்தனன் அவுணப்படையை.

உடங்குற நீற்றிம ழுப்படை
 நேமியொண் சூலமெ ழுக்கதையும்
தடங்கைவி டுப்பவெ ழுந்தவை
 யெண்ணிலு ருக்கொடு சார்ந்தனவே. 556

ஏழ்தலை யிட்டவோ ராயிர
 வண்டமு மெய்திய வப்படைகள்
ஊழ்தலை யற்றன ரேயென
 மங்கைய ருள்ளுயிர் கண்டழிய
வாழ்தலை நீப்பவி ருந்தவ
 மாற்றமண் ணைத்திர ளோம்பவினம்
வீழ்தலை யுற்றவ ரென்றல
 கைக்கண மோம்பவி ளித்திடுமால். 557

ஐயிரு நூற்றிரு நான்கெனு
 மண்டமு மாடுப றந்தலையாய்
ஐயவி ருந்தன வெண்ணில
 வன்படை யார்தொகை காணவலார்
ஐயிரு கையொடி ரண்டுகை
 பெற்றம ராடல்கு றித்துவரூஉம்
ஐயன லாலவு ணர்க்கிறை
 யாருயிர் யாவர ழிக்கவலார். 558

ஆங்கது கண்டவு ணர்க்கிறை
 யீசன ளித்தத ழற்றிகிரி
ஏங்கவிண் ணோர்கள்வி டுத்தன
 னீட்டியி ருங்கையி னேற்றனன்வேள்

---

556. குடங்கரின்கண். இடங்கெட அவுண சேனை இறுத்தன. இறுத்தன - தங்கின. விழியா - விழித்து.

557. இவ்வண்டத்தை யொழித்து ஆயிரத்தேழண்டமென்றார். அப்படைகளானவை விளித்திடும். அவுணராகிய தத்தம் பிணமான நாயகரை நோக்கி இறந்தனரே என்று மங்கையர்களானவர் கண்டு தமதுயிரழியா நிற்பவும் வாழ்க்கையை யொழிக்கவும் தவஞ்செய்யும்பொருட்டு வனத்திற்குப்போக நினைக்கவும். இனம் வீழ்தல் - இனங்கெடுதல். பேய்களானவை இறந்தவர்கள் இனமில்லாதவரென்று கருதி அவரைக் காக்க.

558. ஆயிரத்தெட்டண்டமும். பன்னிருகையைப் பெற்று. படையை யாவர் எண்ணிக்கை காணவல்லார்.

ஓங்கிய சூர னு லப்பிலு
ருக்கொடு ருத்தம ராடினனல்
காங்கெயன் சேதன மாப்படை
யாலவன் மாயைக ரந்தனனல். 559

அலைத்திடு நாண்கொடு சூரன்ம
றைந்துய ரண்டமு கட்டுவழித்
தலைத்தலை நின்றறை கூவியப்
பாற்றவி ரண்டம டுத்தனனல்
இலைத்தலை வேல்வல னேந்தியு
முற்றெறி ராடவொ ழிந்தவுணன்
மலைத்தலை வீழ்ந்துப லண்டமும்
வாவினன் வாவின னம்மிறையும். 560

அஞ்ஞையி முந்தசி ருரென
நொந்தய ஞதிவிண் ணேர்களெலாம்
கைஞ்ஞெரி கொண்டுக வன்றனர்
மால்கறை கண்டம்வி டுத்துவரும்
மஞ்ஞைய ஞற்றல றிந்திலி
ரின்னும்வ ருங்கடி தென்றமர
மொய்ஞ்ஞும லித்தொகை சூழ்ந்தம
கேந்திரஞ் சூரொடு முன்னினனல். 561

ஆனவு ணப்படை யுள்ளன
யாவும டர்ந்தெதி ரக்குமரன்
ஈனழி கென்றுந கைத்தனன்
வெண்பொடி யின்றிட ராயினவே
ஊனர சாள்பவ ஞேக்கியு
ளந்தளர் வுற்றெரு சூழ்ச்சியனய்
வானவ ரஞ்சிய மாயையை
முன்னினன் மற்றவண் முன்னினளால். 562

---

559. விண்ணேர்களேங்க. நீட்டி.

560. மலைத்தல் - போர்செய்தல்.

561. அஞ்ஞை - தாய். முருகனைக் காணப்பெருது கவன்றனர். மாலானவன் தேற்றி அமர்ந்திருக்க. மஞ்ஞையன், அஞ்ஞையனென்றலும் ஒக்கும். கடிதுவருமென்று. ஞமலி - நாய், மயில்.

562. ஆன், ஈன், ஊன் இடப்பொருள். அஞ்ச.

எமியையி ருந்தர சாள்வது
கண்டவென் கண்களி னைந்தழியத்
தமியையி ருந்தனே பின்னும
மர்த்தற விர்ந்திலை யாவர்கொலாம்
இமிழுறு பாலவிழ் கிற்பினி
றுக்குந ரீங்கெனை முன்னுமஃ
துமிழ்மதி யென்றனண் மாய்படை
யாகுக தில்லென வொன்றுசொல்வாள். 563

வேறு

திமிதி மிங்கல கிலந்திரி புறக்கட லொருபால்
அமிழ்த சீதமங் தரவரை யுளதஃ தடுப்பின்
நிமிரு நின்பெருஞ் சேனையென் றகன்றன ளுயிர்கள்
துமிம டங்கன்மேல் கொண்டனன் றூண்டினன் மணித்தேர். 564

ஞாலந் தன்னுறுப் பாக்கிய நாமத்தேர் குறுகி
மூலந் தன்னொடு மகிழ்ந்துமுன் னலுமுந்து கால்பட்
டால முண்டவன் றுருகத் தாடலி னயர்ந்தோர்
பால ணங்குற வெழுந்தென வெழுந்தநாற் படையும். 565

---

563. எமியை - தாரகன் சிங்கமுகன் முதலிய எம்மனோருடன் கூடியிருந்தனையாய் இனைந்து. பால் - ஊழ். கட்டுற்ற ஊழானது தானே இயல்பாக நீங்கி அவிழ்ந்துவிடுமேயானால் அவ்வூழைப் பின்பு சேர்த்துக் கட்டுநர்கள் யாவர்? ஒருவருமில்லை. ஊழ் நீங்கினால் அதனைக் கெடுக்குநர் யாவர் என்பாருமுளர். இவ்விடத்திலென்னை நினைத்த அஃதை உமிழ்வாய். உமிழ்தல் ஈண்டு அகத்திலுள்ளதை வெளியிட்டுச் சொல்லுதல். மாய்ந்த படைகளானவை யுண்டாகுகவென்று கேட்க.

564. அமிர்தசஞ்சீவிமலை. சேனை நிமிரும். சிங்கவாகனத்தின்மேல் ஏறிக்கொண்டு இந்திரஞாலத்தேரை வறிதாகச் செலுத்தினன். திமி - திமிங்கிலம். திமிங்கிலம் - யானையை விழுங்கும் மீன். திமிங்கிலகிலம் - திமிங்கிலத்தை விழுங்கும் மீன்.

565. உலகத்தையெல்லாம் தனக்கு அங்கமாக்கிக்கொண்ட இந்திரஞாலத்தேர். மூலம் - அடி. அமிர்தசஞ்சீவியின் காற்றுப்பட்டு நாற்படையும் எழுந்தன. அமிர்தசஞ்சீவியை மூலத்தோடும் அகழ்ந்து. சிவனது ஆடலால் மயங்கி வீழ்ந்த முனிவர் எழுந்தாற்போல. அயர்ந்தோர் - முனிவர். அணங்கு - மோகினி. தாருகாவனத்து அயர்ந்த முனிவரெழுந்தென அயர்ந்தபடை யெழுந்தன.

மற்றை யண்டஙின் றிறுத்தவிவ் வண்டத்தின் மலிந்த
முற்று முய்ந்தன குச்சென மொழியுல கேழும்
செற்றி நின்றன மூடுதெண் கடலினுட் காஞ்சி
உற்ற வாறெனப் பூதர்வீ ரர்களுமுள் ளானுர். 566

முந்து வாழ்க்கையின் விழைவினி யொழிந்தனம் வேண்டா
இந்த யாக்கைதப் புதறவப் பேறென விமையார்
நொந்து வண்டுதே னுண்கொசு கெளவுரு மாறி
அந்தி னீங்கின ரிரிந்தனர் மலைமுழை யடைந்தார். 567

அரிமு கத்தவன் கதிர்ப்பகை யங்கிமா முகவன்
பரிவின் மைந்தர்மூ வாயிரர் பின்னவன் பலரும்
பெரிது மோகைகொள் சூரனை வணங்கினர் பெரும
புரிதும் போரினை யாமெனப் போர்த்தன ரொருங்கு 568

படையெ டுத்திடு முணர்வின்றிப் பாரிடர் நின்ருர்
மிடையும் பாரிடத் தலைவர்கள் வீரமுற் றழிந்தார்
தொடையி லக்கருந் தொலையுங்கொ லோவென வயிர்த்தார்
உடையு நெஞ்சினை வலியுறுத் தாக்கினர் வீரர். 569

வாழி காங்கெய னனைத்தையு மனத்திடைக் குறித்தான்
ஊழி நாயகன் படையினைத் துரந்தன னேங்கிப்
பூழி யாக்கிமீண் டதுபுரத் தெஞ்சினுர் போலச்
சூழி யானையந் தொகையுடைச் சூரனை விடுத்து. 570

தேரி ருந்தமந் தரமுமாங் கேசிதர் பட்ட
தோரு நாயக னிழந்தவ ளுவன்வரக் கனவி
ஆரு மின்பிடை விழித்தென வவலமிக் கெய்திச்
சூரன் வேலையுந் தனிமைசெய் வாமெனத் துணிந்தான். 571

---

566. வேறண்டத்திலிருந்து இங்கு வந்தனவும் இவ்வண்டத்திலுள்ளனவும். குச்செனச் செற்றி நின்றன. அவுணசேனைக்கடலுக்குள்ளானுர். குச்சு - பாவாற்றி.

568. பின்னவன் - தாரகன்.

569. முற்று - முழுதையும். இலக்கரும் அயிர்த்தார். ஊக்கத்தையுடையரானுர்.

570. ஊழிநாயகன் படை - காலாக்கினி ருத்திரப்படை.

571. இந்திரஞாலத்தேரிலிருந்த அமிர்தசஞ்சீவிமலையும். நாயகனை நீங்கினவள். அவன் வர. இன்பத்திற்கிடையே. ஓரும்: அசை.

வேறு

இந்திர ஞாலம்வி டுத்தன னண்மியி
ராயிரம் வெள்ளமொ டேனோர்தம்
சிந்தைம யக்குபு தெவ்வியெ ழுந்துதி
ணிந்துய ரண்டமு கட்டெய்தி
அந்திலி ருந்தது வேலவ னேக்கியொ
ரம்புவி டுப்பவ டுத்தீர்த்து
வந்தது குப்புற லுற்றனர் மண்ணிடை
வன்னமி கும்வய வோர்யாரும். 572

ஏகலை நிற்றியெ னச்சுழ லிந்திர
ஞாலநி றுத்தின னெங்கோமான்
ஆகிய வண்ணம றிந்தவு ணர்க்கிறை
யாடுசி லைத்தொழில் கைக்கொண்டு
பாகனு யங்கமெய் யெங்கு மிருங்கணை
பாய்த்தின னெம்பெரு மானன்னேன்
வேகநெ டுஞ்சிலை சிந்தினன் வாளரி
மீதுந டத்திம றச்சூரன். 573

ஈசன ளித்தருண் முச்சிகை வேல்கொண்
டெறிந்தனன் மாற்றவெ ழிற்செவ்வேள்
ஆசுக மாயிர முய்த்தன தின்றட
ரக்கர வச்சிர மேலேவி
வீசொளி முச்சிகை வெளவிவி டாதது
மீளவு டங்குக ரத்திட்டுக்
கேசரி மாயவி ராயிர வாளிகள்
கீழ்ந்தெழ நெற்றியு றுத்தானல். 574

---

572. அம்பானது இழுத்து வந்தது. இந்திரஞாலத்தேரால் கவரப் பட்ட வீரரானவர் பூமியில் குதித்தனர். வன்னம் - அழகு.

573. சூரனவன் சிங்கவாகனத்தை நடத்தி.

574. சூரன்விட்ட முச்சிகை வேலானது தின்று அடராநிற்ப அம் முச்சிகைவேலை வெளவி விட்டுவிடாது மீள. உய்த்தனவற்றைத் தின்று. கேசரி - சிங்கம். சிங்கத்தின் நெற்றியில். இரண்டையும் கையில் வைத்து.

மடங்கலி றத்தலு மாயையின் வெல்லுவல்
என்றும தித்தும றச்சூரன்
தடஞ்சிறை துன்றிய சக்கர வாகவு
ருக்கொடு சாகர நீர்பொங்க
நெடுங்கிரி யின்சிக ரம்புடை சிந்தநி
ரைத்தரு நுண்டுக ளாய்ப்போத
அடங்கரு வெப்பினெ ழுந்தன னார்த்தனன்
அண்டக டாகமு டைந்தென்ன. 575

வீரர்கள் கைப்படை மூக்கின்மு ரிப்பன்வி
ழுத்தகு பூதர்த மைக்கொத்தி
ஆரவி ழுங்குவ னோடுவன் மீள்வன
லைப்பனெ டுஞ்சிற கான்மான்றேர்
போரவ னின்னண மாற்றுதல் கண்டபு
ராந்தகன் மைந்தன்கு றிப்பால்வெள்
வாரண வேந்தனை நோக்கின னுய்ந்தனன்
என்றவன் மாமயி லாய்நின்ருன். 576

தன்னொரு வாகன மென்னவி ளங்குச
தக்கிரு தென்னு மயிற்போத்து
மன்னிய தன்கொடி வாயினி றுத்துவ
ழங்குவ தென்னமு ழங்கிக்கண்
துன்னிய வார்சிறை மூக்கினு ளர்ந்துசு
ழன்றுந டித்தெதி ரேநிற்ப
முன்னவ னார்ந்துமு டுக்கின னத்திற
மூர்க்கன றிந்தெதிர் கொண்டானல். 577

காலினு ளர்ந்துவள் வாயினெ றிந்துக
றித்திற கூடுதி ரஞ்சோரச்
சாலவி ரண்டும மர்த்துழி நேமித
லைச்சிறு தோகைப றித்தெற்ற

---

576. தேரை அலைப்பன். வெள்ளையானையையுடைய இந்திரனை.

577. இடிக்கொடி இந்திரனுக்கு. இறுத்து - தங்கச்செய்து.

நீலநி றக்குரு கெய்த்தது கண்டுநெ
டுங்கணை பல்லவு டம்பெங்கும்
வேலவ னேவமெ லிந்துகு லைத்தவை
வீழ்த்துவி ரைந்தது விண்ணெங்கும். 578

ஏகுழி யேகியி ருஞ்சம ராற்றவி
ளைத்திறை கைச்சிலை யைக்கீழ
வேகமொ டண்மவி எங்கொளி நாந்தகம்
வீசியி றுப்பவி ழுந்தன்றால்
போகுயர் புள்ளுரு மண்ணுரு வாய்ப்புரை
யோனுல கெங்கும்வி ரிந்திட்டான்
வாகையி னுன் கணை யேழ்விட நீர்வடி
வாயது மாற்றநீ ராயுற்றான். 579

வாளிக ளூறுவி டக்கன லாயது
மாற்றவ யங்கெரி யாய்மொய்த்தான்
ஆள்கணை யாயிர மேவம ருத்துரு
வாயது மாற்றம ருத்தானான்
நீள்கணை யாயிர நூறுது ரப்பநெ
டும்பணி யின்குல மாயுண்டு
மீள்வது செய்தன வின்னண மீரிரு
நாள்விளி யாதுடல் வோன்பின்னும். 580

வேறு

மூவர் தேவர் யாரு மாக மொய்க்கு மோர்பு றத்தினில்
மேவு தன்னி னத்த ராய்வி ராவு மோர்பு றத்தினில்
பாவு கோள்க ளுள்க ளாய்ப்ப றம்பு மோர்பு றத்தினில்
தூவு கின்ற மேக மாய்த்தொ டங்கு மோர்பு றத்தினில். 581

---

578. காலாற்கிண்டி. சக்கரவாகமும் மயிலுமமர்த்துழி. நேமியானது எற்ற. தலைச்சிறு தோகை - மயிலின் சிரசிலுள்ள மூன்று சிறிய தோகை. கணையாற் சிறிது மெலிவாகி. பாணங்களைக் குலைத்து.

579. இளைத்து. கீழ்தற்காக அண்ம .புள்ளுருவானது மண்ணுருவாய். கணைகளானவை நீராகி மண்ணுருவாகிய அதை மாற்றுநிற்ப. உடனே சூரனுனவன் அந்நீர்வடிவானுன்.

580. வாளிகளானவை கனலாகி நீருருவாகிய அதை மாற்றுநிற்ப, உடனே அச்சூரனுனவன் அக்கனலுருவானுன். கணைகளானவை பாம்பின் கூட்டமாகி உண்டு மீண்டன.

சார தங்கள் பேயி னங்கள் சார்வி டங்கண் மாதிர
வார ணங்கள் வாள ராவி னங்கள் வாள ரிக்குலம்
வீர மல்கு சிம்பு ளாகி வேறு வேறி டங்தொறும்
ஆர வெண்ணின் மாயை கொண்ட மர்த்தொழிற்க ணின்றனன்.

இலக்க வாளி யெம்பி ரானெ டுத்து விற்றொ டுத்தனன்
இலக்க மாகி யொவ்வொ ரம்பெ ழுந்து சென்று வேற்படைக்
கிலக்க மான சூரன் மாயை யாவு மட்டு மீண்டன
இலக்கர் வீரர் பூதர் தேவர் யாவ ரும்வி யப்பவே. 583

தனித்து நின்ற சூர னைத்த டங்கை பன்னி ரண்டுளான்
அனித்த யாக்கை நித்த மென்ற னந்த மாயை செய்கினும்
துனித்து நீற்றி நின்றனன் மாயை முற்று றத்து ரந்தனம்
இனித்தெ ரிக்கு மெம்மி யற்கை காண்டி யென்று வீறினன்.584

மாய னாதி தேவ ரும்வ யங்கு மற்று லோகமும்
ஆய வெண்ணி லண்ட மும்ம னைத்து மங்க மாயுற
மேய வொமபி ரானி யற்கை மெய்மை யஞ்ச விண்ணவர்
தூய னஞ்ச லஞ்ச லென்று தூம லர்க்கை காட்டினன். 585

விம்மி தத்த னாகி வெய்ய சூர னிற்ப மெய்யருள்
செம்மல் சற்ற ளிப்ப வுண்மை கண்டு செப்பு மம்மவோ
அம்மை யெத்த வங்க ளாற்றி னேன்கொன் மாயை யாமுரு
மும்மை யுங்க டந்த வன்மு ழுத்த மெய்தெ ரிப்பவே. 586

பால னென்றி கழ்ந்த தும்ப டுப்ப மிக்கி ரும்படை
மேல டர்ப்ப வுய்த்த தும்மெ லாம்வி ளங்கு தோத்திரம்
சால நல்கு பூசை யாத்த மீஇயி னன்வி டைப்பனேல்
கோல மேனி காட்ட வல்ல னல்ல னென்கண் கொள்ளவே. 587

---

586. தெரிப்ப ஆற்றினேன் கொல். உரு மும்மை - ஐம்பூதம், ஐம்பூதசாரம், ஐம்பூத பரிணமம். பரிணமம் - திரிவு.

587. இகழ்ந்ததைத் தோத்திரமாகவும், கணையுய்த்ததைப் பூசையாகவும். முருகனவன் என்னிடத்தில் கிருபையில்லாது விடைத்தா னென்றால் மேனி காட்டவல்லவன் அல்லன்.

ஒருக ணத்தி லட்டு மீள வல்ல வும்பர் தம்பிரான்
பொருக ளத்து நேர லானெ னப்பு குந்த மர்த்தமென்
திருகு யிர்ச்செ ருக்க டர்த்த தல்ல தில்லை யீதுசேர்
முருகு கொப்ப ளித்த தார்மு குந்த னுக்கு மெய்துமோ. 588

உளங்கொ ளாத விம்மி தத்தி னின்ன வோதி நின்றிடும்
வளங்கு லாவு சூரன் போத மாற்றி முன்னு ருக்கொடு
விளங்கி னுன்வி சாகன் போர்க்கு டைந்தி ழைத்த மாயையால்
துளங்கு வேன லேனெ னத்து ணிந்தொர் சூழ்ச்சி முன்னினான்.

பால னைக்கொ ணர்ந்த தேவர் தங்க ளைப்ப டுத்துமுன்
பால னைப்ப டுப்ப லென்று மந்தி ரம்ப டர்ந்தனன்
ஞால மாதி ரங்கள் வானு நள்ளி ருட்பி ழம்புற
ஆல மென்ன வெண்ணில் வாய்மை கொண்ட வாக்கை யாளனாய்.

இருட்பி ழம்பி னூடு போந்தி றுப்ப முன்னு கின்றனன்
மருட்சி மிழ்ப்ப னுக்கு மாய னாதி யோர்க ளோதியால்
தெருட்சி கொண்ட றிந்த னர்தி கைத்து ளார்பெ யர்ந்திலார்
வெருட்சி கொண்டு விம்மி னார்வி சாக வென்று கூவுவார். 591

பண்ட னைப்ப டுத்த வம்மை பால வோல மாலமுண்
கண்ட னெற்றி யங்கி தந்த கந்த வோல மாமுகச்
சண்ட னைத்த டிந்த பிள்ளை தம்பி யோலம் வெய்யசூர்
மிண்டி னைத்த கர்க்க நின்ற வேல வோல மோலமே. 592

மூல மாய னைத்து மான மூல வோல மோலமே
கால மாய்க்க டந்து நின்ற கால வோல மோலமே
பால னும்மு துக்கு றைந்த பால வோல மோலமே
வேல வோல மோல மென்ன யாவ ரும்வி ளித்தனர். 593

---

588. அமர்த்ததானது என் அகங்காரத்தை அடர்க்கவேண்டுமென்ற எண்ணமல்லாமல் வேறில்லை. ஈது எய்துமோ. திருகிய.

590. முன்பு தேவர்களைப் படுத்துப் பின்பு பாலனைப் படுப்பேன் என்று மந்திரத்தை மனத்தில் தியானித்தான்.

591. இறுப்ப - கொல்ல.

592. கயமுகனைத் தடிந்த விநாயகருக்குத் தம்பியே. மா - யானை. மாமுகச் சண்டன் - கயமுகன். படுத்த அம்மை.

ஊர்தி மஞ்ஞை யான வும்பர் கோன்ப ணிந்து காரிருள்
சார்தல் செய்து தேவ ராவி தான்ம டிப்ப வூடுசெல்
சூர்த டிந்தி டும்பை யாந்து ரப்ப நல்கு கென்றனன்
வாய்த டக்கை வேற்ப டைம கிழ்ந்து நம்பி விட்டனன். 594

விடுக்கு முன்னர் மாயை நீவ வெய்ய சூரன் மாவடி
வெடுத்து நீர்க்க டற்கண் வேர்க ளீண்டு சாகை கீழ்மிசை
அடுத்த வைப்பெ லாம டர்த்த முன்று தேவர் தங்களைப்
புடைத்து நிற்ப வங்கி கான்று போந்த வேற டிந்ததே. 595

கொக்கு ருச்செ குத்த லுங்கு லாய தன்னு ருக்கொடு
தக்க தன்னு டைக்கி டந்த தாரை வாளு ரீஇயடப்
புக்க னன்பொ ருக்கெ னக்கி ழித்தி ரண்டு கூறதா
மைக்க டற்க ணிட்டு மீண்டு வள்ளல் கைத்த லத்ததே. 596

வேறு

அம்மையி லெண்ணில் கால மாற்றிய தவப்பே றெய்த
இம்மையி லிரண்டு கூறு மெழுந்துகுக் குடம யூர
விம்மித வுருவங் கொண்டு விண்ணவர் மருள வையம்
மும்மையுஞ் சிதர்ப்ப தென்ன முழங்கிமே லெழுந்த வன்றே. 597

அருள்விழி சேர்த்த லோடு மாணவ மாதி மூன்றும்
ஒருவியுள் ளுருகி நிற்ப வூன்றலைப் பொடித்த புள்ளை
மருவுதி கொடியாய் நந்தம் வாம்பரித் தேர்மே லென்றுங்
கிருவியூர் மஞ்ஞை நீத்தங் கெதிர்ந்தமா மயின்மேல் கொண்டு.

திரைக்கட லேழு மொன்றாய்ச் சென்றளாய்க் கலவிப் பொங்க
வரைத்திரள் பொடிக ளாக வானமீன் முகில்கள் சிந்த
நிரைத்தபல் லுலக மெல்லா நிலைதடு மாற வையன்
புரைத்தப லண்ட மெல்லாம் பொள்ளெனக் கடவி மீண்டான்.

---

595. கீழடுத்த வைப்பு, மிசையடுத்த வைப்பு என்க.

596. வாள் - உடைவாள். தனதுடையிற் கிடந்தவாள். உடை - அரைக்கச்சாகியதைக் கொள்க.

597. எய்தக்கொண்டு.

598. குக்குடமும் மயிலும் உருகிநிற்க. இந்திரனாகிய மயிலை நீத்து;

இருதிறத் தேங்கள் யாமென் றிருவரு மறியா வண்ணம்
ஒருதிறத் துடலி னூற்றெட் டுகம்பெரும் போகந் துய்த்தல்
கருதுதன் மறத்த லாதிக் கடனெலா மொருங்கு கூட்டிப்
பிரிவுசெய் தாண்ட வள்ளல் பெருமையார் கணிக்கற் பாலார்.

சூரனே பன்ம னென்னச் சொலத்தகு மிருவர் பன்னுள்
ஓருட லத்தி யாரு மொருவனே யென்ன வாழ்ந்தோர்
ஈருட லிருவ ரென்ன விருப்பரேல் விரிந்த வையத்
தாருடங் கிருந்தோ ரூழ்வந் தடுப்புறிற் பிரியா ரம்மா. 601

தேவரை யளித்துத் தீய வவுணரைச் செகுப்பச் சாபம்
மேவிய தன்று பின்னர் விரவிய வவுணர்க் காத்துத்
தேவரை யலைப்ப வாழ்க்கை தேகமோ டொழிந்த தென்றால்
யாவர்கண் மாட்டு மின்னுங் கியற்றுதன் முறைமைத் தன்றே.

அடைக்கலம் புகுவிண் ணோரை யாதரித் தவுணர்க் காதக்
கடப்பருஞ் சாபம் பெற்றார் கடவுளர்க் கிடும்பை யெய்த்துப்
படைக்கல மிறைமேற் றாண்டிப் பழித்துமெய் வாழ்வு பெற்றார்
விடைப்பரு வினையி னுக்கம் யாவரே விளங்கக் காண்பார். 603

மண்டிய சிறகர்ப் புள்ளாய் வயங்கிய புலவர் தம்மைப்
பண்டைய வுருவங் கொள்ளப் பணித்தனன் பறப்பை யாக்கை
விண்டன ரமரர் யாரும் விரைமலர் மாரி தூர்த்துப்
புண்டரீ கத்தாள் போற்றிப் பணிந்துபே ருவகை பூத்தார். 604

---

601. உடங்கிருந்தோரிற் பிரியாதார் ஆர்.

602. தேவரையளித்துத் தீய அவுணரைச் செகுப்பச் சாபமேவியது அன்று என்பது ''பாரிடராய்'' என்னும் இப்படலம் 7-ஆம் செய்யுளாற் கூறப்படுவதாம். அன்று - அக்காலத்து. சூரனுயிருந்தலைப்ப. இன்னுங்கு - துன்பம்.

603. சாபம் பெற்றாரென்பது ஈண்டும் அவ்வேழாம் செய்யுளிற் கூறப்பட்டதேயாம். மெய்வாழ்வாவது குக்குடமும் மயிலுமாய்ப் பதம் பெற்றமை.

604. மயிலும் கோழியுமான இந்திரனையும் அக்கினியையும். கொசு வண்டு முதலிய வுருக்கொண்ட தேவரை என்பாருமுளர்; அது பொருந் தாது.

போரிடை விழுந்த பூதர் தங்களை யெழுப்பிப் பொல்லாச்
சூரன்முன் கவர்ந்த தேவர் தொல்வள முழுதுந் தன்பால்
சாருற வழைத்து வீர வாகுவாற் சயந்த னோடும்
ஆரும்விண் ணவர்தங் காவ லகற்றிநீ ரிறையை நோக்கி. 605

அவுணர்கோ னகர மான மகேந்திர மழிக்க வேவி
உவணமேக் குயர்த்தோ னாதி யும்பரோ டாங்குத் தீர்ந்து
பவனவே கத்தின முந்தும் படர்சிறை மஞ்ஞை யூர்ந்து
புவனமேத் தெடுக்குஞ் செவ்வேள் பொருவருஞ் செந்தில்
[புக்கான். 606

தானவர் கரந்தி யாங்குத் தவிரினுந் துருவி மீண்டு
ஞானநா யகற்குக் கூறி நலித்துமென் றகன்றான் போல
மீனுளர் கடலிற் பட்டு வெய்யவன் மறைந்தா னன்பின்
வானவர் கந்த வேளை வரன்முறை பூசை செய்தார். 607

தாவுமா னிரதந் தூண்டித் தரணிவந் தெழுத லோடும்
ஆவயிற் கந்த வேளு மமலனைப் பூசை யாற்றித்
தேவர்கண் முதலோர் சூழத் திருப்பரங் குன்றம் புக்கான்
காவல்செய் மகவான் றாழ்ந்து கன்னியை மணக்க வென்றான்.

தூதுவர் தம்மை விட்டான் றுணைமுலை மகளைக் கொண்டு
மேதகு சசிமான் போந்தாள் விறன்முசு குந்தன் போந்தான்
ஆதிநா யகனுந் தானே யறிந்துபல் கணங்கள் சூழ
மாதொடும் போந்தான் வைவேல் வள்ளலும் வதுவை
[செய்தான். 609

சிலபகல் கழிந்த பின்றைத் திருப்பரங் குன்றி னீங்கி
இலகுவிண் ணுலக மாக்கி யிந்திரற் கரசு நல்கிப்
பலரையுந் தத்தம் வைப்பிற் படர்தர வேவிப் பூதர்
குலவிய வீரர் சூழக் குறுகினான் கந்த வெற்பு. 610

---

605. வளங்களையெல்லாம் தன்பால் அழைத்து வைத்துக்கொண்டு; வீரவாகுவாற் சிறைநீக்கி. வருணனை நோக்கி.

606. விஷ்ணுவாதி.

608. தரணி - சூரியன்.

குவிமுலைக் களிநல் யானை கோட்டுமண் கொள்ளப்பட்ட
சவிமணி மார்பிற் செவ்வே டையலோ டமர்ந்து சின்னாள்
அவளையங் கிருவிக் கொண்ட வமரர்கள் வளத்தி னோடும்
புவிபுகழ் தணிகைக் குன்றம் போந்துவீற் றிருந்தா னன்றே. 611

பொருவில்லை குந்த மாதிப் புலவர்க ணகரந் தோறும்
ஒருவுறி னமையா வாக வுற்றபல் வளங்க ளென்னும்
திருவெலா நிறைந்த வாற்றாற் சீபரி பூர ணப்பேர்
மருவிய தென்ப வேற்கை வள்ளலார் தணிகைக் குன்றம். 612

கந்தரந் தொறும்விண் ணோர்கள் வளமெலாங் களனுந் தோற்றம்
எந்தைவேற் குமரப் புத்தே ளிருந்தரு டணிகைக் குன்றில்
முந்துபல் வளத்தோ டொப்ப முதிர்தவம் புரிதல் போன்ற
தந்தினல் வளத்தை யஞ்சிக் கரந்ததும் போன்ற தன்றே. 613

தீயவர் புரத்திற் பட்ட செயிர்கழீஇப் புனித மெய்த
ஆயிடை வதிதல் போல வமரர்கள் வெறுக்கை முற்றும்
பாயின வண்ணஞ் சொற்றும் பங்கயன் முதலோர் யாரும்
மேயினர் தவங்க ளாற்றி மீட்டனர் போதல் சொல்வாம். 614

சீபரிபூரணநாமப்படலம் முற்றிற்று

ஆகத்திருவிருத்தம்—2000.

---

611. தெய்வயானையோடு சின்னாளமர்ந்திருந்து அங்கே அவ்வம்மையாரை யிருத்திவிட்டு அமரர்களுடைய வளத்தோடும் இருந்தான்.

612. நகரந்தோறும் உற்ற பல்வளங்கள். நீங்கினால் அமையாவாக உற்றவளமெனவே இன்றியமையாதுள்ள வளமென்பது.

613. கந்தரம் - முழை. தணிகைக்குன்றினது வளத்தோடு ஒக்க.

பிரமனருள்பெறுபடலம்

பூமகள் களிதூங்கப் போர்மகள் குறைநீங்க
நாமக ணலனெய்த நல்லருட் கிடனுப
காமரு சுவைதமேனிக் கலைமகள் வழிபட்ட
வீமலி நறுங்கொன்றை விமலனை நினைவோரே. 1

வேறு

முறுக்கவிழ் நறைக்கமல மூரியணை மேலான்
ஒறுக்குமவு ணக்களையொ ழித்தயர்வு யிர்த்து
நிறுக்குநிறை செல்வமொடு நீடுலகி ருந்தான்
இறுக்குமெறு ழாய்தமுதல் யாவுமுற வெண்ணி. 2

அலத்தகம ணிந்தழகெ றிக்குமடி வாணி
நலத்தகவி ளைந்துடன டப்பவவ ணீங்கிக்
குலத்தமிழ்வ ழங்குகுவ ளைக்கிரிகு டக்கர்
நிலத்தின்முனி ருத்திமகிழ் நின்மலனை யண்மி. 3

பூசனை புரிந்துபுக ழோங்கியவீ ராட்ட
காசமவி ரீசர்கழல் காதலின்வ ணங்கிக்
கூசலன சங்கடர்கு மாரதிருத் தம்புக்
காசகல் வாடியணி மால்வரையி வர்ந்தான். 4

---

1. துர்க்கைக்குப் பலியிட்டு அவள்குறையை நீக்கிப் போர்புரி வீரராவரென்பது தோன்ற 'போர்மகள் குறைநீங்க' என்றுர். தனக்குத் தக்க சுத்தவீரன் இதுவரையுங் கிடையாதிருந்ததனுல் உண்டாகிய குறையெனினும் பொருந்தும்.

2. மேலான் - பிரமன். மேலானிருந்தான். சூரனுலிழந்த ஆய்தம் என்க.

3. தணிகைக்கிரிக்கு மேற்றிசையிலே சரசுவதியை இருத்திவிட்டுத் தான் தனியாக அந்த மேற்றிசையாகிய அவ்விடத்திலுள்ள கடவுளை யடைந்து பூசைசெய்துவிட்டு என அடுத்த செய்யுளோடியைக்க.

4. கூசலனவாகிய சங்கு. கூசல் - முழக்கம்.

அருக்கர்பதி னுயிரவ ராங்கொருவ ரைப்பின்
ஒருக்குறையி னும்பொருவு றுதசுடர் வேல்கொண்
டிருக்குமரு ளெந்தையெதிர் தாழ்ந்தனனெ ழுந்தான்
திருக்கறுமு ளக்கசிவு தேக்கிவலம் வந்தான். 5

ஆலய நுழைந்துமுறை யானணிய னாகி
மூலவச லத்திறையை மூலமல நாசக்
காலனைவ ணங்கினவர் காலன்முறை யஞ்சா
வேலவனை வித்தகனை வீழ்ந்துதரி சித்தான். 6

அன்றையிர வுப்பொழுது வைகவலர் மேலான்
நன்றுமுன ருந்தவந டாத்தியவ ரைப்பில்
சென்றுபுன லாடிவினை தீர்க்குமணி மாலை
மன்றல்கமழ் நீறுடல்வ யக்கினன ணிந்தான். 7

தடாதபொறி யைந்துமெறும் சாயவிறை கோலம்
விடாதுளமி ருத்திவிறன் மந்திரந வின்று
வடாதுதிசை நோக்கிவரை யாதனமி ருந்து
கெடாதபய னல்குகிளர் மாதவமு ழந்தான். 8

ஏவலினி தாற்றுமெழி னுமகள்வ ணங்கிக்
காவலனு ளத்திசைவு கண்டுகுனை ஞாங்கர்ப்
பூவலயம் வான்சுடர்கள் பூண்டுருள வூர்வெல்
சேவகன ருட்குறியி ருத்தியருச் சித்தாள். 9

இன்னணம்வி ழைந்திவரி ருந்தவமி யற்றக்
கன்னியர்ம ருங்கமர்க டம்பணிபு யத்தான்
நன்னர்வர நல்கநளி மாமயில்க டாவித்
துன்னியக ணத்தொகுதி சூழவணு குற்றான். 10

---

5. ஒருங்கு: விகாரம்.

6. முறை - தண்டனை.

7. நன்றாக முன்பு தான் தவஞ்செய்த இடத்தில் மணிமாலை யணிந்தான. வைக - நீங்க.

8. வரைந்த ஆதனமென்க.

9. குனைஞாங்கர் அருச்சித்தாள். பூவலயம் - பூமி. பூமியாகிய தேரானது சூரிய சந்திரராகிய உருளையைப் பூண்டுருளும்படி. வலயம் - உருளை என்றலும் உண்டு. ஊர் - திரிபுரம்.

கண்டுதொழு துச்சிமிசை கையிணைக ளேற
மண்டுவகை யுள்ளமெழ வல்லையினெ ழுந்து
தண்டென விழுந்துதிவ டாண்முடிக டட்டி
நுண்டுளிபி லிற்றவிழி நோக்கியய னேத்தும். 11

வேறு

மும்மை மலக்கணத்தின் மோகக் கடலழுந்தி
விம்மற் பவத்தின் மெலிகின்றார் பல்லோர்
விம்மற் பவத்தின் மெலிகின்றா ரென்னே
செம்மற் றணிகைத் திசைநோக்கா வாறே. 12

நிகழ்பிணிக் கோட்பட்டு நிரயமிது வென்னத்
திகழிடும்பைச் சேற்றுட் டிளைக்கின்றார் பல்லோர்
திகழிடும்பைச் சேற்றுட் டிளைக்கின்றா ரென்னே
பகவன் றணிகை பணியாத வாறே. 13

ஒல்லார் நலிய வுரிமைபொரு ளூரொடுந்தோற்
றல்லாந்து வையத் தலைகின்றார் பல்லோர்
அல்லாந்து வையத் தலைகின்றா ரென்னே
வல்லான் றணிகை வழுத்தாத வாறே. 14

வேறு

வழுத்து நான்முகனை நோக்கி நீலவரை
வள்ளல் வேட்டவரம் யாதெனத்
தழைத்த பேரருளி னல்வி னவவெதிர்
தாழ்ந்து வேதனனி சாற்றுவான்
முழுத்த வாண்மைவளர் சூர னெங்களை
முனிந்து வெளவுவளம் யாவையும்
பிழைத்தி டாதுகொடு வந்து பன்மணி
பிறங்கு மிவ்வரையி ருத்தினை. 15

11. தாளிலே முடிகளைத் தீட்டி. விழிபிலிற்ற.

12. விம்மல் - அழுதல், இறுகிப்பொலிதல், ஏங்கல், கலக்கம், பருத்தல்.

சோத்த நின்னடிய னேற்கு நுந்தையரு
டொல்லை நாள்வளம னைத்தையும்
யாத்தன் மாதிவள்ப ராப ரன்குறியி
ருத்தி வந்தனையி யற்றினள்
ஆத்த வாதலினொ ளது நாமமொ
டலங்கு தீர்த்தமிவள் பேரொடும்
பூத்தல் வைகுசிவ லிங்க மும்மிவள்
புணர்ந்த பேரொடுவி ளங்குதல். 16

சீர்க லந்துவளர் தெய்வ யானைபுணர்
செல்வ நீவரம்வ ழங்குமிம்
மார்க ழிச்செழும திக்க ளுதிரை
மரீஇய பூரணைவ ருந்தினம்
நீர்க லந்தசுனை யாடி யிவ்வயி
னிறுத்த சோதியுரு நோக்குவோர்
பார்க லந்தபதி னன்கு கல்வியும்
பயின்று நாற்கவியு மாதலே. 17

என்ன வன்னவைவ ழங்கி நாதனெழி
லால யம்புகுபு வைகினான்
அன்ன மத்திரமி றுக்கு நாணகல
மாரு நூல்சரசு யாகநீர்க்
கன்னல் கண்மணியின் மாலை தண்டரசு
கனக வொண்சபைய னைத்துமேல்
துன்னி வேளடிபெ யர்ந்து போந்துநக
ருற்ற னன்மறையி னயகன். 18

---

16. சோத்தம் - சிறியோர் செய்யும் அஞ்சலி. நினதடியேனுக் கருளிய வளம். யாத்தல்: வியங்கோள். பூத்தல்: வியங்கோள்.

17. வித்தைகள் 14: வேதம் 4, வேதாங்கம் 6, மீமாஞ்சை தருக்கம் புராணம் தருமநூலாகிய உபாங்கம் 4, ஆக 14. கவி 4: ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம்.

18. அன்னம் - அன்னவாகனம். அத்திரம் - ஆயுதம். இறுக்கும் நாண் - பாசக்கயிறு. பூணநூல். மானதசரசாகிய தடாகமும் யாகமும் நீர்க்கன்னலும். கன்னல் - கமண்டலம். அரசாட்சியும். கனகசபையும். ஏற்று வேளின் அடியை உன்னி.

வாணி தீர்த்தமினி தாடி யங்கண்வளர்
வாணி நாதனைவ ணங்குவோர்
பூணு மின்பமுயர் கல்வி செல்வமலி
போத மின்னவென யார்வலார்
பேணி மாதவமி ரப்பு மந்தணிர்
பிறங்கு வேதனருள் பெற்றமை
காண வோதினம ராவ ணைக்கடவுள்
காம மார்ந்தபரி சோதுவாம். 19

பிரமனருள்பெறு படலம் முற்றிற்று

ஆகத்திருவிருத்தம்—2019.

---

19. வணங்குவோர்கள் பூணுகின்ற இவற்றை இத்தன்மையாயுள்ளன என்று யாவர் சொல்லவல்லார். காமம் - இஷ்ட காமம்.

நாரணனருள்பெறு படலம்

தொள்ளை பூத்தல ருளத்தவர் நீக்கமுந்
தூய நேயமலி தொண்டர்கள் சேர்வையும்
கள்ள வைம்பொறியும் வென்றெழு வீரமுங்
காழி லாதகலை ஞானவு ணர்ச்சியும்
தெள்ளு பேரொளியின் மூழ்கித் திளைத்தலுஞ்
சென்று தாக்கும்வினை தீர்த்திடு சூழ்ச்சியும்
அள்ளி யள்ளிவர மென்னவ ழங்குமா
லறிவி னூடுவளர் மாதவ நாதனே. 1

வேறு

பூத்த தாமரை யிருக்கு மணங்கு
பொங்கொ ளிக்கழ லடித்துணை யல்குல்
யாத்த மேகலை வயங்கு மடிக்க
ணிருத்தி நாளும்வ ருடத்துயில் கொள்வோன்
நீத்த தன்வள ரிரப்புதல் வேட்டு
நீடு வாழ்க்கையின்வை குந்தம்வி டுத்துத்
தூத்த குந்தணிகை மால்வரை மேல்பாற்
சூழ லோசனை யரைக்கண டுத்தான். 2

ஆங்கு மாநகர மொன்றுவி ளங்க
வாக்கி யந்நகரி டத்தறல் பொங்கித்
தீங்கு தீர்க்குமொரு தீர்த்தம கழ்ந்தத்
தெள்ளு தீர்த்தமரு காகிய வைப்பின்
ஓங்கி லிங்கமுறை யானிறு விப்போ
தூறு தீஞ்சுவையின் போனக மற்றும்
தாங்கி யன்பின்வழி பாடுபு ரிந்து
தாளி ணைக்குளமொ ருக்கியி ருந்தான். 3

---

1. வந்து தாக்கும்படியான தீவினையை. தொள்ளை - துளை.

2. கழலடித்துணையை மடியில் வைத்துக்கொண்டு. அணங்கு வருட.

3. போதையும் போனகத்தையும் ஏனையவற்றையும் கையிற்றாங்கி.

மருவு மாதவந கர்ப்பதி யாளு
மாத வேசன்மகிழ் கூர்ந்தெதிர் தோன்றிப்
பெருகு பத்திமைவி டாதவு ளத்துப்
பிரச நக்கதுள வத்தொடை மார்பன்
இருகை யுச்சியினி ருத்திவ ணங்கி
யெழுந்து சூழ்ந்துதுதி விண்டய னிற்பப்
பொருவி லாதவடி மைத்தொழில் பூண்டோய்
பொருப்பி வர்ந்துவிழை வெய்துதி யென்றான். 4

அளித்த நல்லருளை யுச்சியி னேற்றி
யடிக ளின்னும்வர நல்குவ துண்டால்
களித்த விந்நகர மென்றும்வி ளங்கக்
காம ருங்குறியி தன்கணெஞ் ஞான்றும்
தெளிக்கு நீயினிது வைகநி றைந்த
தீர்த்த மாடியிவ ணிற்றொழு கின்றோர்
நெளிக்கும் வல்வினையி னீங்கிவி ழைந்த
நினைவும் வீடுமுற வாக்குவ தென்றான். 5

இரந்த வவ்வர மளித்தெனை யாளும்
எம்பி ரான்குறியி னெய்திம றைந்தான்
வரந்த ழைப்பவினை மாதவ னீங்கி
வயங்கு காவிவரை சூழ்ந்தெதிர் வைகி
அரந்தை தீர்த்தருள்கு மாரதி ருத்த
மாடி யாற்றுகட னுடிவெண் ணீறு
பரந்த மார்பிலணி யக்கவ டங்கள்
பாங்கு லாய்த்துவள வேறினன் வெற்பு. 6

அத்தி யுங்கொடியு நின்றவ ரைப்பி
னைந்து மெட்டுமுற வாரவ ணங்கிப்
பத்தி சேர்மணிவண் மாளிகை சூழ்ந்து
பைய வாலயநு ழைந்து விழைந்த

---

4. மாதவனுலுண்டாகிய நகர் மாதவநகர். அயல் நிற்ப.

5. விளங்க, வைக, உற ஆக்குவதாம். நிற்றொழுகின்றோர்.

6. சந்நிதியில் வைகி. நாடி.

கொத்த னைத்தையும்வ ழங்குமொ ரைங்கைக்
குஞ்ச ரத்தொடு குமாரலிங் கேசன்
உத்த மச்சரண நச்சிவ ணங்கி
யொளிறு வேற்கையிறை வன்புடை யுற்றான். 7

அருவி கொண்டுவிழி நீருடன் மண்ண
வஞ்ச லிக்கரமு டித்தலை யேற
உருகி யுள்ளம்வள ரன்புதி ளைப்ப
வுயர்ம றைத்துதிக ணாவின டிப்பக்
கருணை பொங்கிவழி யுங்கடை நோக்குங்
கமலம் வென்றமுக மும்விழி கூசத்
தருண சுந்தரமி குந்தொளி வீசுஞ்
சாமி நாதனுரு முற்றும டுத்தான். 8

நெடிது போதவச மாயெதிர் நின்று
நிறைந்த கோலமுள முற்றிய பின்றை
நடலை வாழ்வினைய றுக்கும ருந்து
ஞான சத்திதர னாண்மலர் வென்ற
வடிக ளல்லதிலை யென்றுக தித்த
வற்பு தத்தினொடு மாயிடை நீங்கித்
தொடிபொ லிந்தகர மார்பொடு பின்னிச்
சூழ்ந்துதாழ்ந்தொரும ருங்கி னிருந்தான். 9

மாலை யாமமும கிழ்ந்து வணங்கி
வைக றைப்பொழுது பாதியி றந்த
வேலை நீறுடல ணிந்து தியானம்
விளங்கு மந்திரந வின்றுக ணித்தல்
சால வாற்றியயல் போந்துகு டாது
சார ணித்தலைவ யங்குசு னைக்கண்
ஏல நாட்கடன்மு டித்தவண் வைகி
யிரித்து வன்பொறியி ருந்தவ முற்றான். 10

---

7. அத்தி - ஆபச்சகாய விநாயகர். கொடி - தோரணக்கம்பம்.

8. உடலை மண்ண. நோக்கும் முகமும் ஒளிவீசும்படியான. கூசவீசும்.

10. வைகறைப்பொழுதில் பாதி நீங்கிய காலத்தில். அணித்தலை - சமீபத்தில்.

இருந்த வா றுபல நாள்கழி வெய்த
வீது தேர்ந்தவுணர் சூழ்ச்சியி னுற்றுன்
அருந்த வந்தபுத லாற்றலும் வல்ல
ராவ ரென் றுமுன்வ ருத்தமவி ளைத்த
திருந்து தேவர்மகிழ் செய்திட முன்போற்
செல்லு ருக்கொடும றைத்தது நேரப்
பொருந்த வல்லிகள்வ லந்த வுடம்பிற்
புற்றெ ழுந்துமிமிர் கின்றதை யன்றே. 11

புடவி மாதுகடல் வைப்பும்வை குந்தப்
பொற்ற மாநகரு மண்மிய ணைக்கும்
கடனி லாமையின்ம கிழ்ந்தற மன்னுங்
கண்ண ளித்ததெனு வெண்ண நிரம்ப
உடல முற்றுமறை யத்தழு விக்கொண்
டுகந்த காட்சியினி ருந்தவ மாற்றும்
குடங்க வின்றகுரி சிற்குவ ரங்கள்
கொடுப்ப நீலவரை வேலணி னைந்தான். 12

பாரி டம்புடைபல் கோடிந டப்பப்
பரந்து தேவர்பனி மாமலர் தூர்ப்ப
ஆரி டம்பனுவல் வல்லவர் போற்ற
ஆர ணங்கண்முனி வோர்கடு திப்பக்
காரி டங்கொண்முர சங்கள் கறங்கக்
காமர் தந்திரியின் யாழிசை தேக்கப்
போரி டங்கொண்மணி மாமயி லூர்ந்து
பூர ணப்புனித னுங்கெதி ருற்றுன். 13

---

11. அவுணர்களானவர் வல்லராவர் என்று தேவர் மறைத்தது நேர. தலையிழக்கும்படிச் செல்லுருவாகி முன் வருத்தம் விளைத்த தேவர்கள் யாவரும் இப்பொழுது மகிழ்ச்சி செய்திடச் செல்லுருவாய் மறைத்தது போல் கொடிகள் சூழ்ந்த உடம்பில். வலந்த - சூழ்ந்த.

12. இப்பூமிதேவியானவள் பாற்கடலிலும் வைகுந்தத்திலும் அண்மிப் பெயர்ந்தணைக்குங்கடன் தனக்கிலாமையாலே நான்செய்த அறமே தாட்சண்யமாகக் கிருபைசெய்ததென்று கருதித் தன் எண்ணம் நிறைவேறத் தழுவிய காட்சிபோல.

13. ஆரிடம் - ஆகமம்; இருஷிகள் வாக்கு.

கனைக ணனருளி னுலுயர் பானு
கம்ப னண்மையி னடைந்து பிடித்த
வனைக ளாயிர முரன்றத முக்கம்
வார்செ வித்துனை ரம்பலும் யோகில்
தினையு ளந்தனை விடுத்தனன் மெல்லச்
சிறையி னின்றும்வெளி வந்திட லுற்றான்
அனையி ருந்துரிக முற்றி வெளிக்கொ
ளாடுபாம்பொடு மலைத்தனன் மாயோன். 14

வண்டு வார்தொடைகு டைந்துமு முங்க
வான துந்துமிம ருங்கு முழங்க
அண்டர் நோக்கமருண் மேனி துழாவ
ஆடு வார்கொடிவி சும்புது மூவக்
கொண்ட னேர்கருணை யான்வெளி நின்ற
கோல நோக்கியிரு கைமலர் கூப்பிக்
கண்டு ளிப்பவுடல் வார்மயிர் பொங்கக்
காத லாற்கழல்ப ணிந்து துதிப்பான். 15

வேறு

நாடாது வேட்ட நனிவழங்கும் வள்ளன்மை
தாடா முநர்பாற் றகைக்குங் கருணையான்
ஓடாத தானை யுருமுச் சினச்சூரைக்
கோடாப்போர் வெங்களத்துக் கொன்றவிறை போலும்
குருபரனைத் தாழ்த்த குருநாதன் போலும். 16

பாருடு செங்களத்துப் பற்றார் திரண்முருக்கி
ஆருடு கண்ணீ ரமரர் சிறைமீட்டோன்
நீருடு மேனி நிமலன் வலத்துயிர்த்த
தேருத வேதற் சிறையிட்டோன் போலும்
தேவியுமை கண்களிக்குஞ் செல்வமே போலும். 17

---

14. முருகனது அருளினாலே. மலைத்தனன் - ஒத்தனன்.

16. நாடாது - யாதும் நோக்காமல். வள்ளன்மையைத் தகைக்கின்ற. குருநாதனொருவனே கருணையானும் இறையுமாவன்போலுமென முடிக்க. பின்னர்வருஞ் செய்யுளினும் அவ்வாறே முடிக்க.

17. சிவனது வலதுபக்கத்தில் உண்டான.

தேக்கு மறைமற்றுந் தெள்ளுந் தமிழ்முனிக்கு
நீக்கமின் ஞான நிலையருளும் வாய்மையான்
ஊக்கமி லோமு முணரச் சராசரங்கள்
தாக்கி லுருவாய்த் தழைத்தபிரான் போலும்
தந்தைதாய் நாப்பட் டவிர்ந்தமழப் போலும். 18

வெளிஞெமிர் ஞான்றீசன் வியங்கொள்ளத் தாங்கி
வளியழல் வார்கங்கை வருந்தும வழித்தோன்றல்
களிஞிமி றுந் தேனுங் கஞலு மணிப்பொய்கை
நளிமலர்மென் பள்ளி நயந்திருந்தான் போலும்
நாயே னுளமு நயந்திருந்தான் போலும். 19

அறிவிரண்டு மாயா வலங்கறிவிற் றாழ்ந்தோர்
செறிவகன்ற யாக்கைச் செருத்தே ருகைப்போன்
உறுவலியின் வைய முடற்று தகரூர்ந்த
எறுழ்மிகுத்த நாற்கோட் டிபப்பாகன் போலும்
எழிற்கலவ மஞ்ஞை யினிதுகைத்தான் போலும். 20

வேறு

நாரண னின்னை நன்றுது இத்தலும்
பூரணன் மாமயிற் போதத்தரு குந்திச்
சீரணி மாதவஞ் செய்திளைத் தாயெனக்
காரணி மெய்கரங் கொண்டுதை வந்தான். 21

---

18. வேதத்தையும் ஏனைய நூலையும் தெளிந்தறிந்த அகத்தியனுக்கு.

19. ஏவலைத்தாங்கி. வியம் - ஏவல். சுமந்துவரும்படியான.

20. பாச அறிவு பசு அறிவாகிய இரண்டும் கெடாநிற்பப் பதி அறிவின்கண்ணே தங்கிய பெரியோரது உடலாகிய இரதத்தைச் செலுத்துவோனெனவே அவரது உடலிலிருப்பனென்பது. தேரென்றற்கு ஏற்பச் செருத்தேர் என்றார். செரு - அமர்க்குரிய. செறிவகன்ற - செறிவுமிகுந்த. நான்கு கொம்பையுடைய யானை முருகன் வாகனம்.

ஆர்ங்கதிர் வேணிய னுக்கிய ளித்தெதிர்
ஈர்ங்கவுண் மாமுகன் மார்பிடு மாழி
சார்ங்கமு மற்றவுஞ் சாமிய ளித்தனன்
பீர்ங்குரு வீயுற மூடையன் பெற்றான். 22

பங்குனி யுத்திரம் பாற்கரன் வாரமும்
தங்கிய தின்னரு டந்தரு ளித்தினம்
இங்கிதி லிச்சுனை யீர்ம்புன லாடுவோர்
எங்கணும் வேட்டன வெய்துக வென்றான். 23

அவ்வர மூங்கொடுத் தந்தணருச்சியும்
எவ்வமி லாரணத் துச்சியு மேய்ந்த
கவ்விய பூங்கழ லான்கமழ் கோயிலுள்
செவ்வியு ளாரொடுஞ் சென்றுவ திந்தான். 24

வாடிய பொங்கர்ம ழைக்கும லர்ந்தென
நீடிய செல்வநி றைந்தெழு மாயன்
வீடிலி லாதுள்வி சாகனை வைத்தனன்
கூடிவை குந்தங் குளிர்ந்துயிர் காத்தான. 25

அந்தணிர் மாயன டுத்துவ ரங்கொடு
சிந்தனை முற்றிய செய்தி தெரித்தாம்
இந்திர னேடிமை யார்வரம் பெற்றுறு
மைந்தின ராகிய வண்மையுஞ் சொல்வாம். 26

நாரணனருள்பெறுபடலம் முற்றிற்று

ஆகத்திருவிருத்தம்—2045.

---

22. ஆர் - ஆத்திமாலை. சக்கராயுதமானது திருவீழிமிழலையில் சிவபெருமானால் முன்னர் புதிதாக ஆக்கப்பட்டுப் பின்பு விஷ்ணுவுக்கு அளிக்கப்பட்டுள்ளதென்க. விஷ்ணுவுக்குச் சிவன் கொடுத்த பின்பு விஷ்ணுவானவன் வாங்கிக்கொண்டு திரும்புங்காலையில் ஆண்டிருந்த விநாயகக் கடவுள் தன் மார்பிலிட்டுவைத்துப் பின் கொடுத்தாரென்க. மாமுகன் - விநாயகன். தாரகனுகிய கயமுகன் என்பாரும் உளர். பீர்ங்குவீ - பீர்ங்கம்பூ. பீதாம்பரன்.

இந்திரனருள்பெறுபடலம்

அமராப தீச னடிவணங்கி னோர்கள்
இமையார் வணங்க விருப்பதற் கெனையந்
தமரா னவருந் தழுனரக நீந்தி
நிமிர்போக வாரி நெடுவிசும்பிற் றோய்வார். 1

வேறு

அரம்பு முற்றிய தான வக்குல
மந்த முற்ற வமர்த்துவிண்
வரம்பு முற்றுல கம்பு துக்கிவ
ழாமை நற்குடி யேற்றினான்
நிரம்பு மாதவ மின்மை யாற்சில
நீடு செல்வம ளித்திலான்
உரம்ப டைத்தவை யெய்து வாமென
வுன்னி னானும்பர் காவலன். 2

விண்ணி னீங்கிய டுத்து நீலவி
லங்கல் யோசனை பாதமொன்
றென்ன நின்றதெ னாது சாரிரு
ணீங்கி வாசமு மிழ்ந்துதேம்
கண்ணெ கிழ்ந்தும லர்ந்தொ ழுக்குக
டம்பு முற்றிய சூழலை
நண்ணி யங்கண கழ்ந்து தீர்த்தந
யந்தி லிங்கமி ருத்தினான். 3

ஐந்தெ னும்முப சார முற்றவ
தற்கி யன்றவெ லாந்தழீஇ
ஐந்து சுத்திபு ரிந்தி ருந்தவி
சைந்த மைத்ததி லானனம்

---

1. என் ஐயம். தமரானவரும் தோய்வாரேயானால் என் ஐயமென முடிக்க. தமர் - வணங்கினோர், சுற்றத்தார். தமர் - அமராபதீசனுக்குத் தொண்டு பூண்ட அடியார்.

2. வலிமையாயுள்ளவற்றை. உரம் - வலிமை.

3. பாதம் - கால். யோசனை பாதமொன்று - ஒன்றேகால் யோசனை. கால் யோசனை என்பாருமுளர்.

ஐந்து கொண்டருண் மூர்த்தி மூலமு
மார்த்தி யாவர ணங்களோர்
ஐந்து முற்றவ ழாது பூசனை
யைந்த டக்கின னாற்றினான். 4

புராரி பாங்கர்வ லாரி பூசைபு
கன்று வைகலு மின்னணம்
பராவி யாற்றியி ருந்த னன்பயி
லேனை மாதிரத் தார்களும்
ஓராத பத்தியின் விண்ணு ளாருமு
டங்கு வந்தவ ருங்களி
விராவி யன்பொடு மங்க ணங்கண்வி
ழைந்து மாதவ மாற்றினார். 5

ஆண்டு செல்லவி லிங்க நின்றம
ராப தீசனெ ழுந்தனன்
பூண்ட காதலின் வீழ்ந்து வீழ்ந்துபு
ரண்டு சூழ்ந்துகைத் தட்டமிட்
டண்டு மாமறை வேண்டு மவ்வள
வுங்க ரைந்தெதி ராடிய
மாண்ட வச்சிர னேங்க லேறும்வ
ரங்கொ டுத்தும றைந்தனன். 6

அடம்பு தாதகி கொன்றை சூடம
ராப தீசனை யாக்கமார்
கடம்ப மாநக ரெய்தி வாழ்த்துநர்
காத லாற்கழ லூழுநர்
இடும்பை முற்றுமி ரித்து வேட்டன
வெய்து வார்வர மெய்திய
உடம்பெ லாம்விழி யான வன்கிரி
யும்ப ராரொடு சூழ்ந்தனன். 7

---

4. பஞ்சோபசாரம். தவிசு ஐந்து - பத்மாசனம் நீங்கிய சடுத்தாசனம்.

5. திக்குப்பாலகர்களும்.

6. தட்டம் - தட்டல். வச்சிரனாகிய இந்திரனானவன் கிரியிலேறும்படியான வரம்.

தீர்த்த நேர்ந்தன வாடி யாடிமுன்
சென்று தாழ்வரை வைகிய
கூர்த்த வல்வினை வல்லை யோப்புகு
மார தீர்த்தமு வந்துதோய்ந்
தார்த்த வாணிதி ருத்த மாடிய
லங்கு பன்பணி வீங்கிருள்
வேர்த்தொ துங்கவி மைக்கு நீலவி
லங்க லுச்சியி வர்ந்தனன். 8

சிலம்பு கிண்கிணி வால்வ ளைத்திரள்
தெள்ளொ ளிக்கலை வார்குரல்
இலம்ப கத்திமிர் வண்டு மார்ப்பவெ
ழான்மு ழாவெழு மங்கையர்
குலம்பு ரிந்திய லாடல் பாடல்கு
லாய கோயின்ம ருங்குபோய்
வலம்பு ரிந்துயர் வார ணக்கொடி
மன்னு சூழல்வ ணங்கினன். 9

பாயு மும்மத வேழ மூரிறை
பாயு மும்மத வேழமாய்
மேய வாவச்ச காயன் வார்கழல்
வீழ்ந்து தாழ்ந்துபு கழ்ந்துபோய்
நேய மல்குகு மார லிங்கநி
லாய சோதிப தந்தொழு
தாயெ னத்தகு காயி லைப்படை
யண்ணன் முன்னர டுத்தனன். 10

தாது துன்றிய வாச மாமலர்
தமனி யச்செழு மாமலர்
கோது பாறிய வச்சு தங்குரு
மோலி வானவர் கொடியக

---

9. கலை - மேகலை. இலம்பகம் - மலர்மாலை: குரலுமார்ப்ப.

10. இறை - இந்திரன். தொழுது. ஆயெனத்தகு.

மீது தாங்கினர் நிற்ப வள்ளிவி
ழைந்து தாளிணை தூய்த்தொழு
தியாது மன்பிலி யேற்கு மின்னருள்
ஏய்ந்த வாறென விம்மினான். 11

இரண வல்லவு ணக்கு லத்தெறு
மூரயன் கொன்றம ரம்பொர
முரண விந்தொரு பற்று மின்றிமு
டிந்த பாணியின் வந்தருள்
கருணை யின்றிற நோக்கி யுள்ளங்க
சிந்து நீடெதிர் நின்றவண்
அருண மென்மலர் வென்ற பாதம
கத்த ணிந்துபெ யர்ந்தனன். 12

தோத்தி ரத்தொடு சூழ்ந்து தாழ்ந்தொரு
சூழல் வைகிம கிழ்ச்சியில்
பாத்தி ரம்பெற மாசை தூசுப
கட்ட ருங்கலன் யாவையும்
ஆர்த்தி மந்திர மெண்ணி யன்றொழி
வெய்த வங்கண கன்றுபோய்ச்
சீர்த்த கோயிலி னண்மை யிற்சுனை
தென்பு றத்தெதிர் கண்டனன். 13

ஆவ யிற்புகுந் தாடி நாட்கட
னற்றி யாரண நாடரும்
தேவ தேவன ருச்சனைப்பணி
செய்ய வெண்ணிவி சும்பிடைப்

11. கொடியகத்தின்மேலே மலர் முதலிய அவைகளை வைத்துத் தாங்கி நிற்ப. அச்சுதம் - அறுகு வெள்ளரிசி கூட்டியணிவது. கொடியகம் - பூந்தட்டு. அள்ளி.

12. அவுணரால் முரணவிந்து. இரணகளத்தில் வல்ல.

13. பாத்திரம் - பெட்டி. பெட்டியில் நிறைத்து.

பூவ மன்றருளிர் கற்ப கப்பொழி
ழூடு பூத்தம டுக்கிளைத்
தேவ ருந்தனி யுற்ப லக்கொடி
யொய்யெ னக்கொணர் கென்றனன். 14

சிலத ரோடினர் பொள்ளெ னக்கொடு
சென்று தாழ்ந்தனர் வைகலும்
மலர்தல் வேட்டம னத்தி னன்வளர்
கோயில் சூழ்தல்வ லித்தொளி
அலர்வி மானமு றுத்து மாறவ
மாற்று கின்றசு னைத்தலை
உலவை யொன்றுடை யான்க மற்றுணை
யோங்கு பூசையு ஞற்றினன். 15

ஆத லானவண் வைகி யாருயி
ரல்லன் முற்றும றுத்துயர்
நீதி வாழ்வரு ளேந்தல் செங்கழு
நீர்வி நாயக னுயினன்
தீது தீரிய வன்ன வன்கழல்
சென்று தாழ்ந்தவ லாரிபின்
நாத னுலய நன்று சூழ்ந்துந
றுஞ்சு னைக்கணி றுத்தினன். 16

காலை நண்பகன் மாலை யுங்கடி
கொண்ட லர்ந்தொளிர் காவியும்
சோலை நீர்நிலன் வல்லி யிற்சுரும்
பார்க்கு மேனைய பூக்களும்
மேலை நாட்டணி யுண்டி மற்றுமெண்
வேலை மாக்கடல் போனிரைத்
தாலை யம்புகுந் தாக மத்துள
வாறு பூசனை யாற்றினன். 17

---

14. அமன்று. தேவருலகிலுள்ள உற்பலக் கொடியைக் கொண்டு வரச் சொன்னன்.

15. விமானஞ்செய்து உஞற்றினன். விஷ்ணு தவஞ்செய்கின்ற சுனையில்.

16. உற்பலக்கொடியை நிறுத்தினன்.

அருச்சனைப்பணி யின்ன வாறும்
போதும் வைகலு மாற்றுழி
விருச்சி கத்துறு மார னுண்மிளிர்
பூர ணைக்கண்வி சாகனுர்
திருச்சி றப்பமு னின்ற னர்திக
ழுன்பு பொங்க வலாரிமென்
தருச்சி றந்தபன் மாம லர்த்திரள்
தாள்க டுய்த்தொழு தேத்தினன். 18

வேறு

அருள்பொழி முகங்கள் போற்றி யலர்விழிக் கமலம் போற்றி
மருமலர்க் குவளை பூத்த வரையுறழ் திணிதோள் போற்றி
பெருவர மளிப்ப நீண்ட பேரெழின் மணிக்கை போற்றி
இருள்வினை துகைத்துச் சேந்த விணைமலர்ப் பாதம் போற்றி. 19

பேரரு ளுடையா னென்னும் பெற்றிமை யுலகோர் தெள்ளக்
கூரிருண் மலத்தி னழுந்து கொட்புறு மிழுதை யேற்கும்
சீரருள் புரிந்து தேவர் சிறையினைச் சீத்துக் காத்த
ஆரருள் போற்றி யாரு யிரமுறை போற்றி போற்றி. 20

மண்ணுயி ரனைத்து மல்க மழைமுகி லானுய் போற்றி
விண்ணுயி ரனைத்து மல்க மிளிரமிழ் தானுய் போற்றி
கண்ணுருக் காணக் கண்ணுட் கனலுரு வானுய் போற்றி
எண்ணுயிர்த் தொழின்மை முற்ற விரந்தர மானுய் போற்றி. 21

பரிதிமெய் யுடற்றும் வெப்பின் பரிதியாங் கடவுள் போற்றி
வருமதி குளிர்க்குஞ் சீத மதிப்பெருங் கடவுள் போற்றி
செருவழல் பொடிக்குஞ் சீற்றச் செருவழற் கடவுள் போற்றி
கருதுளங் கடவு மாவி கடவுயிர்க் கடவுள் போற்றி. 22

---

21. கண்ணொளியானது தேயுசம்பந்தமாகையால் அவ்வாறு கூறினுர். கண்ணுனது உருவைக் காணும்படி. இரந்தரம் - எங்கும்.

22. சூரியனது மெய்யையும் உடற்றும்படியான வேறோர் சூரியனுகிய. சந்திரனையும் குளிரச்செய்கின்ற. அழலைப் பொடிக்கும்படியான. உளத்தாற் கடவப்பட்ட ஆவியைக் கடவுகின்ற.

மாமனு ரினைய கூற மருகனுர் மகிழ்ந்து வார்விற்
காமனுர் கொடுத்த வாக்கைக் கண்ணனுர் முகத்தை நோக்கித்
தூமனு மோலி வேந்த சொல்லுதி விழைவை யென்ன
ஏமனுய்ப் பூழ்த்த கேழ லெயிற்றினர்க் கிறைஞ்சிக் கூறும். 23

தானவர் கவர்ந்த செல்வஞ் சகலமு மீட்டா யன்றே
ஈனவை பெறுதல் வெஃகி யெம்பிரான் றிருமுன் போந்தேன்
வானவர் தாமும் போந்தா ரவரவர் வரங்கள் கொண்மார்
கானவிர் கடப்ப மாலைக் கடவுளென் றிதுவுஞ் சொற்ருன். 24

துறக்கம்வாழ் குவளை வாங்கிச் சுனையிடைக் கால மூன்றும்
முறுக்கவிழ் மலர்கண் மூன்று முகிழ்க்குமா றிருமித் திட்டேன்
நறைக்கடம் பணிந்தோய் நாளு நயந்தணிந் துலக மெல்லாம்
இறக்குமந் நாளு மன்னி யிருக்கவக் கழுநீர் மாதோ. 25

இம்மல ரணியுங் காறு மேழையேற் கிடரின் ருக
செம்மனீ காட்சி தந்த திருத்தகு மிந்த நாளில் [கொண்டோர்
பைம்மலர்ச் சுனைநீர் தோய்ந்தோர் பருகினேர் தெளித்துக்
வெம்மைவல் வினைக ளோப்பி விளங்குநின் னுலகஞ் சேர்க. 26

இந்திரன் வேட்ட வெல்லா மெம்பிரா னருளிச் செய்தான்
அந்தரர் தாமுந் தத்த மாக்கமுற் றருளப் பெற்ருர்
பைந்தருக் காம தேனுப் பகர்நிதி மணிக ளாய்தம்
சந்தமார் சுதன்ம மென்னுஞ் சபைமுத லனைத்தும் பெற்ருன். 27

பன்முறை தாழ்ந்து போற்றிப் பண்ணவர் கணங்கள் சூழ
வின்மலி கோயி னீங்கி விசும்புபுக் கமர்ந்தா னந்தக்
கொன்மணி வயிர வேலான் கொண்டுசென் ருட்டிச் சாத்தும்
தென்மணி நீரும் பூவுந் திருமுடி யென்று மேறும். 28

---

23. மன்மதனுனவன் கொடுத்த சரீரக்கண். ஏமன் ஆய் பூழ்த்த - முருகனுனவன் பாணத்தையுடைய வேடனுகி ஒடித்த. எயிற்றினர்க்கு - தந்தத்தையுடைய முருகனுக்கு. முருகன் பன்றியின் கொம்பைச் சிவனது ஏவலால் முறித்தாறுதலால் அவ்வாறு கூறினர்.

24. ஈன் - இவ்விடம். கொண்மாராகிப் போந்தார். கடவுள்: விளி.

இந்திர தீர்த்த மென்ன விருஞ்சுனை நாம மெய்திற்
றிந்திர நகர மென்று மியம்பிடப் படுமால் வேதன்
இந்திரன் வாழ்வு மேனை யிமையவர் வாழ்வு மெல்லாம்
இந்திர ஞால மாக வின்னருள் விளக்கு மவ்வூர். 29

தேவர்க ளுலகுக் கெல்லாஞ் செல்வங்க ளாக்கி நின்ற
காவியங் கிரிபோல் யார்க்குங் கண்ணிய தளிப்ப துண்டோ
ஓவிய பொறியி னீரே யும்பர்கோன் பேறு சொற்றும்
பாவிய புகழ்சா ஞகம் பணிந்துறு பேறு சொல்வாம். 30

இந்திரனருள்பெறுபடலம் முற்றிற்று

ஆகத்திருவிருத்தம்—2075.

---

29. இந்திரசாலமாக.

நாகமருள்பெறுபடலம்

நாக நாடிய நல்லரு ணல்கிய
ஏக வானைத் தணிகை யிறைவனைப்
பாக மின்றெனி னும்பணி கின்றவர்
தேக மன்றுகொ றேகமென் றுவதே. 1

வேறு

முன்னொரு காலையின் முரண்மணி யிமைக்கு
முடிகெழு சுரர்களு மவுணர்க டாமும்
துன்னிய சமரிடை யிருதிறத் தவருந்
தொலைந்தவர் தொகைபல வாதலை நோக்கி
இன்னுயி ரிறப்பதன் றுயமர் புரிய
வெண்ணின ரதுபெற மாயனை யடுத்தார்
அன்னவன் கடல்கடைந் தமுதெடுத் தயின்று
லனுங்கல மதுபுரி வாமென வலித்தான். 2

நிரைகதிர்க் குளிர்மதி தறியென நிறுவி
நெடுகிய மந்தர மத்தென நாட்டி
உரைதகு வாசுகி கயிறெனப் பூட்டி
யொளிர்மணிப் பாற்கடல் கொறுகொறு வென்ன
வரைவல மிடந்திரி தரக்கர நீட்டி
வாங்கினர் கடைந்தனர் வல்விடம் பிறந்த
திரையெனப் புவனங்க ளனைத்தையு மடுப்ப
வெழுந்தது விதும்பின ரிரிந்தன ரெவரும். 3

கயிலையை யடைந்தன ரிரந்தனர் சோதிக்
களத்தினைக் கறைக்கள மாக்கின ருய்ந்தார்
வெயிலுமிழ் மணிப்பணி யணியென மிளிரும்
வித்தக னருள்கொடு மீட்டுமக் கடலைத்

---

1. நாடிய - நாட. பாகம் - பரிபக்குவம்.

3. விது - நடுக்கம். விதும்பல் - ஆசைப்படல். விதுப்பு - ஆசை. சீக்கிரம். இரையென.

தயிரெனக் கடைந்தன ரெடுத்தன ரமிழ்தந்
தம்பதி யடைந்தனர் வாசுகி யுடலம்
பயில்வரை யுரிஞலிற் பிணர்பட வலியும்
பாறிய தாய்ந்தது படர்ந்தது தணிகை. 4

வேறு

விண்டலர் கஞ்ச மலர்ந்து விரைக்கமழ் நீர்பூத்து
வண்டுளர் கின்ற குமார இருத்த மகிழ்ந்தாடிக்
கண்டவ ரஞ்ச வலங்கொடு குன்று கதழ்ந்தேறி
அண்டர்க ளுத னடித்துணை போற்றி யசைந்தன்றே. 5

அன்ருழி வெய்த வகன்றுபு றத்தய லேமேல்சார்
ஒன்றிய தண்சுனை யொன்றெதிர் கண்டவ னுற்ருடி
மன்றல்க மழ்ந்தக டம்பணி மார்பன்ம லர்ப்பாதம்
நன்றுளம் வைத்துந லத்தகு மாதவ மாற்றிற்ருல். 6

பன்னெடு நாள்கழி வெய்தவு ளம்பரி விற்றீர்ப்பான்
கன்னிம யிற்பெரு மானெதிர் போந்துக ருந்திண்மை
மன்னுமு டற்பிணர் நீத்துவ ழங்கம கிழ்ந்தாடிப்
பொன்னடி தாழ்ந்துபு குந்தது தன்புகழ் சால்வைப்பு. 7

நாகசு னைப்பெயர் நண்ணிய வத்தகு தீர்த்தத்தின்
மேகநி றத்தின ளுேடுப டர்ந்துவி ழுச்சேடன்
ஓகையி னுடியு முந்துத வம்பல்வ ளங்கொண்டங்
கேகன தின்னரு ளாலுல கெய்தியி ருந்தானல். 8

திண்மைவி ளைந்தவர் நோய்நனி தீரவி ளைந்தோர்கள்
ஒண்மைவி ளைந்தவர் செல்வம்வி ளைந்தவ ரொப்பற்ற
வண்மைவி ளைந்தவர் நாகசு னைக்கண்ம கிழ்ந்தாடின்
அண்மையி னெய்துப வண்ணல ருட்கொரி லக்காகி. 9

---

4. பிணர் - சரசரப்பு.

5. அசைந்தன்று - தங்கியது. ஆடியதென்பாரும் உளர்.

8. விஷ்ணுவோடு.

9. ஒண்மை - அழகு, அறிவு, ஒழுங்கு, நன்மை, மிகுதி. வண்மை - அழகு, ஈகை, குணம், புகழ், மெய்மை, வளமை.

அராத்தவ மாற்றிவி ழைந்தன பெற்றத றைந்தாமால்
இராப்பக லற்றசு கத்துளம் வைப்பவி ரும்போதம்
விராய்த்துயர் வீட்டிய வந்தணிர் வேலைய டைத்திட்டோன்
உராய்த்தன ருள்ளமொ ருங்கவு ழந்தது ரைப்பாமால்.

நாகமருள்பெறுபடலம் முற்றிற்று

ஆகத்திருவிருத்தம்—2085.

---

10. போதம் - ஞானம். உராய்தல் - உரிஞ்சல். உராய்போதல் - உரைதல்.

இராமனருள்பெறுபடலம்

இல்லறத் திருப்பினுந் தணிகை யெம்பிரான்
நல்லருட் குரியவர் நவையி னீங்கினர்
வெல்லலர் வினைதுற வறத்தின் மேவினும்
வல்லிதன் கேள்வனை மனத்துன் னார்களே. 1

அறந்தலை யெடுத்திடு மயோத்தி மாநகர்
சிறந்திடுந் தசரதச் செல்வத் தாதைவாய்ப்
பிறந்தசொற் பிழைப்பதற் கஞ்சிப் பெய்கழல்
மறந்தழை யிராமன்வார் வனத்துச் செல்லுநாள். 2

அரக்கர்பட் டிமைபுரிந் தஞ்சொற் சீதையைக்
கரக்கவெங் கவலையங் கடலுட் டாழ்ந்துராய்ப்
பரக்குமுந் நீர்க்கடல் பருகு மாதவன்
இருக்கைபுக் கடித்துணை யிறைஞ்சிக் கூறினன். 3

ஓங்கிய விந்தவெற் புறுத்தி மண்ணிடை
நீங்குபு பனிவரை நிலனை நேர்பெறத்
தாங்கிய வெந்தைசா னகியை வெளவிய
தீங்கினர் தமைத்தெறுந் திறநல் கென்றலும். 4

செந்தழன் முளிவனஞ் சிதைத்திட் டாலென
ஐந்தெழுத் துண்மையா லழிவி லாணவ
மைந்தினை முருக்கிய மாத வத்தினன்
கொந்தொளி மணிமுடிக் குரிசிற் கோதுவான். 5

பகைபிணி மண்ணைபன் மந்தி ரத்தினும்
மிகையறன் கடையுள வெருட்சி பித்திடர்
வகையெனைத் தையுமற மாற்றி யாவர்க்கும்
தகைநல மளிப்பது தவள நீறரோ. 6

---

1. இருப்பினும் உரியவரே நீங்கினராவர், மேவினும் உன்னார்களே வினைவெல்லலராவர்.

4. மண்ணிடை உறுத்தி. பனிவரையை நீங்குபு.

5. முளிதல் - காய்தல், வறத்தல்.

நலிபெரும் பாவமு நாச மாக்கலான்
ஒலிகெழு பன்மமுள் ளுடற்று மீழைகள்
சலமெனக் கழுவலிற் சார மவேட்டவப்
பலனுற விளங்கலிற் பசித மென்பரால். 7

தயங்கிய நீறுடற் றரித்தி லாரெனின்
இயங்கற மெத்துணை யியற்றி முற்றினும்
பயங்கது வுதலிலை பலவு முற்றிய
இயங்கலில் பயிர்க்குறு காவ லின்றெனை. 8

உரைத்தன வறமுளுற் றூர்க ளாயினும்
வரைத்தவவ் வறப்பயன் வருதல் காண்பரால்
தரைத்தலை நெறிமுறை தழங்க நாட்டுவோய்
புரைத்தப விதியினும் பூதி பூசுவோர். 9

பூதியா முறைமையும் புகலக் கேட்டியால்
கோதிலா மனுமுறைக் கொற்ற வேந்தனே
பாதியாள் சத்திபத் தினியின் வைகுற
ஏதிலா ணவந்தபு மிணையில் வேதியன். 10

ஊழியே பாணிக ளுலப்பி லண்டமே
கேழிலா மண்டபங் கேழ்த்த வேதிகை
ஆழிசூழ் புவியவி யரிமெய் யாதியா
வாழிமா மெய்மைவண் பசுக்க ளாவியா. 11

---

7. பன்மம், சாரம், பசிதம் என்பன விபூதியின் பரியாயநாமம். சிவத்துவத்தை விளக்கலால் பசிதமெனவும், பாவங்களை நீக்கலால் பசும மெனவும், உயிர்களது மலத்தைக் கழுவுதலால் க்ஷாரமெனவும் பெயர் பெற்றது என்பது சைவசமயநெறி.

8. களைகட்டல் முதலிய பல தொழிலும் முற்றிய பயிர். அசரப் பொருளாகையால் பயிரென்றொழியாது இயங்கலில் பயிர் என்றார். மிருக முதலிய பலவும் முற்ற இயங்கலென்பாருமுளர்.

10. பாதியாளாகிய சத்தியானவள் யாகபத்தினியாக வைகச் சிவ பெருமானனவன்.

11. பெருமைதங்கிய உண்மையாகிய யாகபசு ஏனைய உயிர்களாக. மெய்மை என்பதை உண்மையான ஆடு என்பாருமுளர்.

நெற்றியங் குண்டத்து நெடித டங்கிய
பொற்றநீள் விழியெரி புணர்த்து வேள்விசெய்
தற்றமில் வேள்வியி லவிர்வெண் பூதியைப்
பற்றற வுயிர்க்கெலாம் படிவத் தார்த்தினன். 12

வேறு

விண்ணவ ருடல முழுவதும் பொடித்த
வெண்பொடி யணிந்தரு ளிறையப்
பண்ணவர் முழுது முறுப்பினு ளடங்கும்
பசுமயம் பொடித்தவெண் ணீறு
புண்ணியம் வளர்க்கு முயிர்க்கெலாந் தரிப்பப்
புகன்றன னஃதிரண் டாகும்
எண்ணுவை திகநீ றிலகிய சைவ
நீறென விரண்டையுந் தெரிப்பாம். 13

உலகருக் குரிய மறைவழி வேட்கும்
ஓங்கிய விரசையிற் பொடித்த
இலகுவெண் ணீறு வைதிக பூதி
யின்னது புத்தியே யளிக்கும்
மலமறு சத்தி பதிந்தவர்க் குரித்தாய்
வயங்குமா கமவழி தீக்கை
நிலவுசெங் கனலிற் பொடித்தவெண் பூதி
நிகரிலாச் சைவவெண் ணீறு. 14

முத்தியே யன்றிப் புத்தியும் வெஃகின்
முகிழ்க்குமாற் சைவவான் பூதி
அத்தகு சைவ மூன்றதாங் கற்பம்
அனுகற்ப முபகற்ப மென்ன
உத்தம மான கற்பமென் றுரைப்ப
துரைத்தவான் மயமனுவோடும்
பைத்ததா மரைமெல் லடையின்வா னேற்றுப்
பாந்தமேல் வழும்பினை நீக்கி. 15

12. குண்டத்தடங்கிய. தனது வடிவத்தில்.

14. விரசாக்கினி - யாகாக்கினி. புத்தி - போகம். தீக்ஷைசெய்யும் காலத்துச் செய்யும் யாகாக்கினியிற் பொடித்த.

கூட்டுமா னைந்தும் பொழிந்துறப் பிசைந்து
குவால்படத் திரட்டியோ மத்தின்
நீட்டுநா வெரியிட் டெடுத்தரித் தாளா
நிறையமைத் திருத்தியோம் புவதாம்
காட்டுலா மயத்தை யிடித்துமுன் போலக்
காண்பதா மனுகற்ப மற்ற
தோட்டெரி மேய்ந்து வனம்படு நீற்றை
யுரைத்தவா றுளுற்றுவ தாகும். 16

பெறலருங் கற்ப மாதிய தீக்கை
பெற்றமந் திரத்தொடு மணிவோர்க்
கிறுவது செல்லாப் பகைகளு மில்லை
யெய்துருப் பொருள்களு மில்லை
உறுவலிப் பாச முழுவது முருக்கி
யுயர்கதி யண்மைய தாகும்
நெறியுளி தீக்கை பெற்றணிந் திறைவன்
நீள்கழல் வணங்குதி யென்று. 17

அருடகு தீக்கை புரிந்தெழுத் தைந்தும்
அளித்தருந் தமிழ்முனி சொல்வான்
இருளறு மினைய பூதிதீக் கையினெய்
தாதகூத் திரர்க்கவர்க் கிழிந்தோர்க்
கொருவுவ திறைவன் றிருமடைப் பள்ளி
யொண்பொடி சூத்திரர்க் குரித்தாம்
குரையழன் மேய்ந்த வனத்துவெண் ணீறு
கோடலாந் தாழ்ந்துளோ ரெவர்க்கும். 18

மந்திரங் கேட்டி யரசனே சாத
மயத்தினை யேற்றல்வா மத்தான்
ஐந்தினை வாக்க லகோரத்தாற் பிசைதல்
அழலிடை யுருட்டிவைத் திடன்மால்

---

16. அரித்து - வடிகட்டி. ஆளாதமிடா - புதுப்பானை. அனுகற்பம்.
17. கற்பமாதியவற்றை அணிவோர்க்கு,

சிந்துதற் புருடத் தாற்புகை பீதஞ்
சிவப்பறு கருமையுந் தீர
இந்துநேர் பூதி யெடுத்தலீ சம்பெய்
திருத்தல்கா யத்திரி மனுவால். 19

சிரநுதன் மரும முந்திநான் கினுநேர்
திகழ்ந்தவீ சானமுன் னுங்கின்
இருமுழந் தாள்வண் புயமுழங் கைமுன்
கையெழிற் களம்வெரிந் காதென்
றுரைசெய்பன் னிரண்டுஞ் சத்தியோ சாதத்
துறுத்துரந் தோனுத னன்கும்
விரலிரு மூன்ற னளவிட லேனை
யிடத்தொரு விரலள விடலே. 20

வத்திரம் புலிமான் றோலிவற் றொன்றுன்
வட்டம்வாய் கொளவிர லிருநான்
கத்தகு மளவை யிரட்டிநே ரகலம்
உயரமு மாகநன் கமைத்த
பைத்திகழ் பொடியைத் தற்சனி கனிட்டை
பாற்றுமூன் றினுஞ்சிந்தா தள்ளி
மெய்த்தலை யணிதல் கனிட்டையங் குட்டம்
விடுத்தவற் றிடுவது மாகும். 21

ஒருவிர லொருகை யானிட லுத்தூ
ளனஞ்செயா தணிதறெய் வந்திக்
குருபரன் வித்தை யெதிர்வழி வழுக்கள்
கூரிட நீசர்முன் னணிதல்

---

19. ஐந்து - பஞ்சகவ்வியம். தற்புருடத்தால் உருட்டி வைத்திடல். புகைநிறம். பீதம் - பொன்னிறம். சிவப்பு அற்ற கருமை - செந்நிறத்தோடு விரவாத கருநிறம். பாணையிற்பெய்து. காயத்திரி மந்திரமாவது 'தந்மஹேசாயவித்மஹே, வாக்விசுத்தாயதீமஹி, தந்நோசிவப்பிரசோதயாத்' என்பதாம். இது சிவகாயத்திரி என அறிக.

20. உரைசெல் - உரைபோய.

21. விபூதிப் பைக்கு அளவு அகலம் எட்டுவிரல், உயரம் பதினாறு விரல் என்க. கனிட்டை - சிறுவிரல். அங்குட்டம் - பெருவிரல்.

தரைமுக நோக்கி யணிதனின் றணிதல்
. தருநர்பா லொருகையி னேற்றல்
எரிநர குய்க்கு மிவைவிடல் சந்தி
யில்லுழி நீரின்றிப் பூசல். 22

இனையவெண் பூதி தரித்தலோ டீசன்
இன்னருள் புரிந்திடுங் கண்டி
புனைமதி முகமொன் றுதியீ ரைந்தின்
மேலும்பூண் டுள்ளன கோவை
தனின்முக மொத்த வல்லன வாகா
தயங்கிய சிரஞ்சிரஞ் செறிய
இனியநா ணிடைக்கோத் திடையிடை முடிந்திட்
டேற்றுநா யகமணி மேலான். 23

சிரங்கர மணிவ சிரங்கரங் கொண்ட
திகழ்மிடற் றணிவவெண் ணுன்கால்
உரஞ்செறி மாலை நாபியி னளவாம்
உரமள வாதலு முரித்தே
வரஞ்செறி மனுக்க ளலகிடு மாலை
மணிகளுாற் றெட்டதின் பாதி
தரம்படு மதனிற் பாதியு மாகுஞ்
சமைக்குமுன் றளவையு மொன்றால். 24

---

22. வித்தை - கல்விபயிலிடம். எதிரினும் வழியினும். இவைகளை நீக்குக. சந்தியல்லாத காலங்களில் நீரில்லாமற்பூசுக.

23. ஒரு கண்டியில் ஒரு மணிக்கு எத்தனை முகமுண்டோ அவ்வா றுகவே ஏனைய மணிக்கும் இருக்கவேண்டும். அப்படியல்லாமல் விரவி யிருக்குமாயிற் குற்றமாமென்பார் 'முகமொத்த வல்லனவாகா' என்றார். புனைமதி - புனைவாய். தரித்தலோடு புனைமதி. நாயகமணியானது மேலாக.

ஒத்தவாமென்றது 'ஒத்தவல்லனவாகா' என்று இருகால் விலக்கிச் சொன்னதினால் முகமொவ்வாதனவும் ஓர்புடையாமெனக்கொள்க. யாப் பருங்கலக்காரிகை ''இயற்றளை வெள்ளடி'' என்னும் பாவில் இருகால் விலக்கியதறிக.

24. சிரத்திற்கும் கரத்திற்கு மெவ்வளவுகொண்டனவோ அவ் வளவே சிரங்கரத்தில் அணியப்படுவன.

சத்தியோ சாதத் தாட்டிவா மத்தாற்
றகமதித் தகோரத்தாற் றூபம்
பத்திபி னளித்துப் பகர்புரு டத்தாற்
பையவா டையிற்புன லுலர்த்திச்
சுத்தவீ சான மனுமுத லாகச்
சொல்லிய பிரமமோ ரைந்தும்
வைத்திடு மணியொவ் வொன்றற்கு நூறு
வரிசையி னுரைத்தெடுத் தணிக. 25

பரசிவன் பூசை புரையநா யகத்துப்
பண்பொடு பூசனை புரிந்து
பரர்விழிப் படாமை மணியொலி யெழாமைப்
பரனுரு வுளத்திடை யிருத்திப்
பரவுமந் திரங்க ளுயக மணிமுன்
பற்றியெண் ணுகமறந் தேனும்
பரமணி வழங்கு நாயகங் கீழாப்
பயிலுற வணியல்பார்த் திவனே. 26

வேறு

கடல்பருகு மருந்தவத்தான் கருணைசுரந் தினிதளித்த
கடலமிழ்த நிகரருளைக் கைக்கொண்டு விடைபெற்றுக்
கடகமள விலநிரைத்த காமரயோத் திக்கிறைவன்
கடவுண்மணி நீறணிந்து கருதுமனு வலகிட்டான். 27

நித்தலுமைந் தெழுத்திலக்க நிரம்பவல கிடமுக்கண்
அத்தனெதி ரெழுந்தருளி யவாவியதென் னுரையென்னப்
பொத்தியவன் புளத்தோடும் பூங்கமலத் தாள்வணங்கி
நித்தியநின் மலவனக நிரிகவெனத் துதித்துரைப்பான். 28

சானகியைக் கவர்ந்தரக்கன் றடங்கடல்சூ ழிலங்கையினான்
ஆனவனைச் சேனையொடு மடர்த்தவனைக் கொடுநாயேன்
ஈனடைய வரமருள்வ தென்றுமறு வலுந்தாழ்ந்தான்
ஊனருள வெழுந்தருளு முமைபாகர் முறுவலித்து. 29

---

26. நாயகத்து - நாயகமணியில்.

27. கடகம் - யானைக்கூட்டம், படை, ஆயுதவருக்கம், கேடகம்.

28. நிரிக - செயலற்றவ.

29. இலங்கையின் ஆனன். ஈன் - இவ்விடம். ஊன் - உவ்விடம்.

பக்குவமில் லார்க்குண்மைப் பரஞான மெவ்வுருவால்
எக்கருணை யாலியைய வியைத்தாலுங் கொள்ளாமை
மைக்கடல்சூ ழுலகமெலா மதித்தறியத் தெரிப்பார்போல்
அக்கணொரு திருவிளையாட் டானருளிச் செய்கின்றார். 30

மாரவேள் கணையலைத்தோர் வழியறியா ரதுபோல
வீரமார் தருமானம் விழுங்கப்பட் டுறுநற்றறனுக்
கேலும்வான் பயனிரவா திழிந்தபய னிரந்தனையால்
கோலமார் சிவஞானங் கொடுக்கின்றா மதனாலே. 31

உலகமெலாந் தொழிற்படுத்து மோங்கொளியா கியவெமையும்
உலகமெலா மவாவுயிரை யுற்றொழியா மலவிருளும்
உலகமெலா மதுவதுவா யுற்றறிந்து மலப்பிணியால்
உலகிறந்த வெமையறியா வுயிரெனுநின் னையுமறியாய். 32

தேயமிடம் பொருள்போலத் தீராமை யுடங்கியைந்த
மாயவுடல் வேறுமேன் மங்கையுயிர்க் கெவனுவள்
போயபவந் தொறுமீட்டும புகழிகழீண் டுற்றனவோ
காயமொழிந் திக்குடிக்குக் காிசுறினீக் குவைகொல்லோ. 33

சிற்றிலிழைத் தாடுநர்பாற் செறிந்தாடும் விளையாட்டுப்
பொற்றமனை யறம்புரிகாற் புந்திசெயி னகைதரல்போல்
அற்றமிலா வில்லறமென் றுதரிக்கப் படுவதருள்
பற்றுமிகும் போதுன்னிற் பழுதெனத்தோற் றுவதன்றே. 34

மங்கையுரை யானுந்தை மரணமடைந் ததுமீண்டை
மங்கையொழி வாலொருநீ வருந்துவதுங் காட்சியவே
மங்கையராற் றுயர்பெரிதும் வளருமெனு முரைச்சான்று
மங்கையரை வேறெடுத்து வகுத்துரைக்க வேண்டுமோ. 35

---

30. அங்கணென்பது அக்கணென விகாரமாயிற்று.

32. படுத்துகின்ற எம்மையும் இருளையும் நின்னையும் அறியாய். பிணியாலறியா என இயைக்க. உற்றறிந்து அறியா. உயிரானது எதை எதைக் கூடியதோ அதுவதுவாய் அறிந்துநிற்கும் தன்மையது என்க. அது அதாயுற்றறிந்து நின்றும் உலகைக்கடந்த எமை என்பாரும் உளர். பதி பசு பாசலக்ஷணம் அறியாய் என்பது.

வழும்பு தடி குடரென்பு வார்நரம்பு மேதை நெய்த்தோர்
தழும்புழுக்கண் மூளைமயிர் சருமமா திகள்குழுமும் [காட்டாய்
கொழும்பொதியைப் பகுத்திடுங்காற் கோற்றொடியா ளெவள்
விழும்பிணத்தெவ் வுறுப்பில்லை விழையாளைவிடல்கிளவாய் 36

என்றுமோ ரியல்பினதா யென்றுமா னந்தமாய்
என்றுமா ருயிர்க்கிரங்கி யிடர்முழுதுந் துமிப்பதாய்
என்றுநீங் குவதின்றி யென்றுமருந் துணையாகி
என்றுமோங் கெமதருளே யெய்திவாய்ந் திருவென்றார். 37

அருள்புரிதல் கேட்டலொடு மயோத்தியா னருண்மறுப்ப
வெருவியநெஞ் சினனாகி வீழ்ந்துபல் முறைமொழிவான்
இருவினையே னென்செய்கே னிராக்கதர்செய் கையுஞ்சீதை
உருவுநினை தொறும்வெகுளி காமமுமோங் குவவென்றான். 38

பெருங்கருணை யொடுநகைத்துப் பேதுறே லெனத்தேற்றி
அருங்கதவீ ரமும்படையு மளித்தருளி யிடந்துடியின்
மருங்குலுமை யாட்கருளும் வானவர்நா யகர்மறைய
ஒருங்குபகை துமித்தான்போன் றுவகையனாய்ப் பணிந்தன்னான்.

இலங்கைபுகுந் தரக்கருயி ரிருவிசும்பிற் குடியேற்றி
அலங்கனறுங் குழன்மாதோ டணியிரா மேச்சுரத்து
நலங்கிளருஞ் சிவலிங்க நயந்திருத்திப் பூசித்துச்
சலங்கெழுபா தகத்தொடக்குத் தணந்தமரு மந்நாளில். 40

முந்திறைவ னருண்ஞான மோகத்தா லிழப்புண்ட
அந்தவினை நினைந்துநினைந் தயர்கின்றா னதுபெறுவான்
சிந்தையிற்சே வடிநினைந்து தியானித்தா னங்கெதிரே
வந்தருளிக் கூத்தனார் மற்றவனுக் கருள்புரிவார். 41

உள்ளமடங் கியதில்லை யுள்ளமடங் குறினல்லால்
தெள்ளரிய சிவஞானஞ் சிவனாது செருத்தணியை
நள்ளுவையே லுளமடங்கு ஞானமுமெய் துவையென்றார்
துள்ளுமுள மகிழ்சிறப்பத் துதித்திறைஞ்சி விடைகொண்
[டான். 42

---

36. பிணத்தை விரும்பாதொழித்தலைக் கூறுவாய்.

நெடிபடுகா னமும்பதியு நெடுநெறியா னீந்திப்போய்
வடியயில்வேல் வலத்துயர்த்த வள்ளல்செருத் தணியண்மிக்
கடிகெழுதீர்த் தம்படிந்து காமர்வரை வலஞ்செய்து
முடியிவர்ந்து பணிந்துள்ளான் முறையாற்புக் கெனத்தொழு
[தான். 43

அன்றொழிய வழிநாளா லலைநதிபுக் கினிதாடித்
தொன்றிறைவற் கருள்புரிந்த சூழலிருந் தனனேற்றான்
மன்றல்கமழ் கடம்பணிந்த வரைமார்ப னெதிர்தோன்றி
நன்றருளுஞ் சிவஞான நயந்தேற்றுப் பதிபுக்கான். 44

எற்றுபுன லயோத்திநக ரிராமனருள் பெற்றபடி
பற்றறுத்த வுயர்தவத்தீர் பகர்ந்தனமா லினிச்செவ்வேள்
கற்றைநறுஞ் சுருட்கூந்தற் கானவர்தங் குலவிளக்கை
முற்றிமறை யொழுக்கனைத்து முடித்துடன்போந் ததுமொழி
[வாம். 45

இராமனருள்பெறுபடலம் முற்றிற்று

ஆகத்திருவிருத்தம்—2130.

---

43. புக்கென - புக்கு.

44. சூழல் - வீராட்டகாசம்.

45. மறையொழுக்கு - களவொழுக்கம். மறை - களவு.

களவுப்படலம்

செந்திரு மணந்த கேள்வ னுயிர்த்தரு டெய்வக் கற்பின்
சுந்தரி யமுதவல்லி யென்பவர் சுடர்வேற் செங்கை
மைந்தனை மணப்ப வுன்னி மலர்விரி சரவ ணத்து
முந்தருந் தவங்க ளாற்ற முருகனுங் கண்மிக் கூறும். 1

இந்திரன் பாங்க ரண்மி யிருமதி யமுத வல்லி
சுந்தரி புவியின் மாட்டுத் துகளறு முனிபாற் றோன்றி
வெந்திறல் வேடர் சார்பில் விளங்குதி கருத்து முற்றப்
பிந்துற வரைதுஞ் சென்மி னென்றனன் பெயர்ந்து போந்தான்.

அன்னண மமுத வல்லி யமரர்கோன் பாங்க ரண்மி
மன்னுநாற் கோட்டு வேழம் வளர்த்திடத் தெய்வ யானை
என்னுமப் பெயரின் வைகி யெம்பிரான் பரங்குன் றத்து
முன்னினன் வதுவை யாற்றத் தவப்பயன் முற்றி நின்றாள். 3

துளங்கெரி வளர்த்து மூழ்கிச் சுந்தரி வடிவு நீக்கி
விளங்குருக் குமதே கத்தின் மேதகு தொண்டை நாட்டில்
வளங்கொண்மேற் பாடி மாட்டு வளர்வரைச் சார லண்மி
உளங்கொளு மன்பு பொங்க வுயர்தவ மாற்று நின்றாள். 4

ஆவயின் முன்பே வைகி யருந்தவ மாற்று நின்றோன்
தேவரும் வியக்குஞ் சீர்த்திச் சிவமுனி யென்பா னுங்கோர்
தாவுமான் பிணையொன் றண்மத் தகையெழி னோக்கிக் கண்ணால்
மேவருங் கலவி துய்த்தா னத்தகு வேலை தன்னில். 5

கருவென வகட்டி னுற்றாள் காமரு பிணைமான் சென்று
பெருகிய வருத்தந் துன்னப் பீளுறு மகவை வேடர்
உருகெழு வள்ளி கெண்டி யுற்றிடும் பயம்பி லுய்த்து
மருமலி கானம் புக்கு மறைந்தது வேடர் கோமான். 6

---

1. கேள்வன் - விஷ்ணு.

2. அமுதவல்லியே! சுந்தரவல்லியே! என விளியாக்குக. சிவமுனி.

4. மேற்பாடிநாடு.

6. பீள் - கரு.

அம்மைநற் றவங்கள் சால வாற்றினேன் மகப்பே றின்றி
இம்மையின் வறங்கூர்ந் துள்ளா னேந்திழை மனைவி யோடும்
கைம்மலை யுலம்புஞ் சார லேகுவான் கண்டு நண்ணி
விம்மிமிக் கழுத கொம்பை விம்மிதத் தொடுங்கைக் கொண்டு. 7

வருந்திய வருத்தந் தீர வரையுறை கடவு ளம்பால்
திருந்தழ கெறிக்கு மிந்தச் செல்வியைத் தந்த தென்று
முருந்துறழ் முறுவ னல்லாண் முகப்புறக் கொடுத்திற் புக்கு
விருந்துக ளோம்பி வள்ளி யெனப்பெயர் விதித்தா னன்றே. 8

நித்தலுங் கடவுட் போற்றி நிரைந்தனர் குரவை யாடி
நித்தலு முருவே றுக நீர்மையின் வளர்க்க லுற்றார்
தத்தையுங் கிடந்தி ருந்து தவழ்ந்தெழுந் தொதுங்கிச் சிற்றில்
முத்தினி லிழைத்து வண்ட லாட்டினின் முதிய ளானாள். 9

தனைநிகர் மாதர் பாங்கர்ச் சார்தர வேகி நீலச்
சுனைகுடைந் தாடிச் சோலைத் தூமலர் குற்றுப் பந்தும்
புனைமணிக் கழங்கு மற்று மூசலும் புணர்ந்து நோக்கித்
தினையினிக் காத்தி யென்னத் தீம்புனங் காவல் கொண்டாள். 10

இதண்மிசை யிவர்ந்து தட்டை யெறிநெடுங் கவணை கொண்டு
புதன்மறைந் தடுக்குங் கிள்ளை பொறிமயில் புறவு மற்றும்
கதிர்படு புனத்தி னீங்கக் கருதியா லோல மென்னச்
சுதைநிகர் மொழியா ளோப்பிச் சூழ்ந்தன ளிருக்குங் காலை. 11

மகதியாழ் முனிவன் வேற்கை வள்ளலை வழிபா டாற்றத்
தகவுறுந் தணிகை யோங்கல் சார்பவன் கண்டு தாழ்ந்து
பகரரு வளமை சான்ற பாவையை மணக்கும வண்ணம்
புகலுது மென்று வல்லே போந்தனன் றணிகை வெற்பு. 12

---

8. முகப்புற - வாங்கிக்கொள்ள.

9. உருவேறுபடல் - தினம் வளர்தல்.

10. பிதா மாதாக்கள் நோக்குக்காப்பாய் என்று சொல்ல.

11. தட்டை - கிளிகடிகோல். ஆலோலம் - புள்ளோச்சும் ஒலி.

12. சார்பவனாகிய நாரதமுனிவன். தாழ்ந்து புகலுதும். நாரதன் வீணைக்கு 'மகதி' என்று பெயர்.

புரிவளை யலறி யீன்ற புதுநிலா மணியும் பொன்னும்
விரிமலர்த் தாதுங் கோட்டின் வீசுவெண் டரங்க மெற்றும்
கரிசறு குமார தீர்த்தங் காதலி னுடிப் போந்து
தரியலர்க் கடந்த வேலான் ருட்டுணை வணக்கஞ் செய்தான். 13

தூணமுந் தளிர்கள் காலத் தொல்வரை யுருகா நிற்பப்
பாணறி கின்ன ரங்கள் பாடுவீழ்ந் தவச மாக
வீணைகைக் கொண்டெ டூாலின் விளையமிழ் துகுத்துப் பாடிக்
காணிய விறைவ வென்று காரிகை திறத்தைக் கூறும். 14

வேறு

அண்ட முற்று மரும்பய னல்குசீர்
கொண்ட விந்தக் குலவரை மேற்றிசை
அண்டர் போற்ற வணிமையி னுள்ளது
மண்டு பேரொளி வாய்ந்தமேற் பாடியே. 15

அப்ப திக்கொரு சாரட லாழியான்
ஒப்பி றன்மக ளோடுநீ யாட்டயர்
வைப்பெ னக்கிரி யாய்வளர்ந் தல்கியாங்
கொப்பெ ழிற்கிரி யொன்றிருக் கின்றதே. 16

ஓங்கன் மாயனு டுத்தபொன் னுடையொத் .
தாங்கு மூடிக மங்ககழ் செம்பொனும்
பாங்க ரூழ்த்துகு பன்மலர்த் தாதுவும்
நீங்க லின்றி நிரந்ததவ் வான்வரை. 17

ஐய நீகணி யாவது தேர்ந்தென
உய்தி பெற்றன மென்றுறு மோகையால்
மெய்ம லிந்தன போன்றன வேங்கைகள்
கொய்ம லர்த்திரள் கொண்டுத ழைத்தன. 18

---

13. வலம்புரி இடம்புரி என்னுது புரியெனப் பொதுப்படக்கூறிய அதனுல் இரு வளையும் கொள்க. கோடு - கரை.

16. ஆழியான் ஆனவன் அல்கியாங்கு.

நின்னு ளங்களி கொள்ளு நெடுமயில்
தன்னி னங்கட ளிப்பது செய்குவான்
பொன்ன கர்க்கிறை யேவப்பு ணர்ந்தென
மின்னு குத்துமு ழங்குவ மேகமே. 19

ஒழுகு வெள்ளரு வித்திர ளோதையும்
விழும மார்வெறி யாட்டய ரோதையும்
தழுவு மவ்வரை தையனற் செவ்வியள்
குழும வாவெனக் கூவுவ தொத்தவே. 20

ஏந்த னின்வர வேற்றுநின் சென்னியில்
வேய்ந்து கொள்ள விழைந்தன போன்மெனக்
காந்த ளுஞ்சுனைக் காவியு மௌவலும்
பூந்தண் பிண்டியும் போதுக டாங்கின. 21

கள்ளு றைத்துக் கடிமலர்த் தாதுறீஇ
வள்ளி தழ்த்திரள் வாலொளி நீளறை
கொள்ள வுய்த்துக் குமரநீ யாட்டயர்
பள்ளி யெங்கும் படுப்பன பைம்பொழில். 22

மயின டாவுநின் வண்மைம கிழ்ந்தென
மயில்க ளாடுவ மாங்குயி லுந்தம
தியலு ருக்கொ ளிறையுமவ் வூர்தியாய்ப்
பயில்வு தேர்ந்தெனப் பாடெழுந் தார்ப்பன. 23

ஆடு வேல்வல னேந்தி யடுத்திடும்
வாடு றுமது நீபம லர்த்தொடை
கூடு வாங்குடை வாமெனு மோகையால்
ஓடு மீனு முலாவும ளிக்குலம். 24

யானை மாமுகத் தேந்தற் கிளையவன்
யானை யைக்கடி தொட்டவ னீங்கொரு
மானு யிர்த்த மகட்குறு மெனறுபன்
மானி னங்களு மோகைம லிந்தன. 25

---

23. இறை - இந்திரன். அவ்வூர்தி - அம்மயில் வாகனம்.

24. ஏந்தி என்பது வினையாலணையும்பெயராய் விளியேற்றது.

25. உயர்ந்த யானைக்குச் சம்பந்தமான முருகன் இழிந்த மான் உயிர்த்த வள்ளிக்குறும் என்று. விநாயகனுக்கு இளையவன். யானை பின்னையது தெய்வயானை. கடி - விவாகம்.

நம்மி னத்தொரு மாவைந லிந்தவன்
நம்மி டத்தினு மன்புந டாத்துமச்
செம்மை நாம்பெறுஞ் செவ்விய தாமெனக்
கொம்மை மென்றளிர் கூர்ந்தன கொக்கினம். 26

மதுவை மாட்டிய வானவ னேமியைப்
புதல்வி யைப்புறந் தந்திடத் தூண்டலும்
கதுவி யெண்ணிலு ருக்கொடு காத்தெனத்
ததைவ தேத்தடை தண்வரைப் பாலெலாம். 27

நரந்த மாதுளை நாளிகே ரம்முருக்
கரம்பை யாசினி யாம்பிரந் தீங்கனி
நிரந்த ரித்தன நின்னெதிர் காணிய
வரந்த ழைத்த வரைகொடு நின்றென. 28

கருது தம்பயன் கைக்கொளுங் காலமென்
றிருது வேற்றுமை யின்றியொ ருங்கவண்
மருவு கின்றன போன்றவ யின்றொறும்
பெருகு மெவ்வள னும்பிணை கின்றன. 29

அங்க ணீமுன் னருளிய வாறுபோய்
நங்கை சுந்தரி நற்றவ வேடர்பால்
தங்கி யேனலந் தாழ்குரல் காத்துறும்
எங்கு மற்றவ ளுக்கிணை யில்லையே. 30

நினக்கு நேரமு குள்ளவ ரில்லவள்
தனக்கு நேரமு குள்ளவர் தாமில்லை
மனக்கு வேட்டபொ ழுதவை வாய்த்தலின்
இனிக்க முற்றுவ தெங்கணு மில்லையே. 31

---

26. செவ்வியது ஆகும் என்று. புனத்தில் வேங்கை முதலிய மரங்களை நலிந்தோர், பின்னர் தினைவிளைத்து நன்மைசெய்வர்; அதுபோல, மாவை நலிந்தவன் அருள் செய்யினும் செய்யும் என்று எண்ணியது.

27. வானவன் - விஷ்ணு.

31. உள்ளவர் இல். அவள்தனக்கு - அவளுக்கு. வாய்த்தலைப் பார்க்கினும். அவை - வேட்டவை.

வேறு

புருவம்வார் செவிகண் கவுள்பணைத் தோள்கை
புணர்முலை கவான்முத லுறுப்பும்
பொருவுமொன் றனையொன் றலதுவே றுவ்வா
பூங்குழல் வாணுத ஞசி
திருமுகங் கனிவாய் களம்வயி றுந்தி
செறிந்தகா ழல்குலொவ் வொன்றே
மருவலி னவற்றுக் கொப்பன வில்லை
யாயினு மொருமுறை வகுப்பாம். 32

உலகின்முச் சுடர்மு னுடையிரு ளொதுக்கி
யுமைவிழி புதைத்தஞான் றிறுத்த
குலவிருட் குழாத்தைப் பணித்திறை நாட்டக்
கொழுஞ்சுடர் மூன்றினுந் தவாத
பலர்புகழ் திமிர மெனுங்குழல் வதனப்
பாங்கரிற் றதைதலின் முழுத்த
நிலவுமா தவஞ்செய் துமிழ்ந்ததன் னகத்து
நீணிறக் கறையெனப் படுமால். 33

பிடிநெடு நாசி பிறைமுகத் திரும்பு
பெருகொளி வாணுதல் புண்டோய்
வடிநுதி செந்தா ளட்டுவார் கூந்தல்
வகிர்ந்தகீற் றுகமூன் றுறுப்பும்
கடிமலர்ப் பகழிக் கழைச்சிலைத் தடக்கைக்
காமவேள் காரிரு ளோதித்
துடியடிக் கயவாய் முறஞ்செவி வேழந்
தூண்டுகைத் தோட்டிபோன் றனவே. 34

மாப்பெருஞ் சூரை வென்றிடு நின்னை
வணக்கவார் செவியளிக் குவளை
ஏப்புழை படுத்த இக்குழ ஞணி
லிருபெரும் புருவவில் சிலையில்

---

32. இரண்டிரண்டு உறுப்பாகிய புருவமுதல் கவான் ஈறாய் உள்ளவைகள் புருவத்துக்குப் புருவம், செவிக்குச்செவி, கண்ணுக்குக்கண் ஒக்கும்.

34. நுதி கீற்றுக.

கோப்பமை யாத கூரெதி ராத
கொழுங்களி விழிக்கணை யமைத்துத்
தீப்படு மதவேள் கவிகைநின் றனைய
திருவெழி லுடையது முகமே. 35

வார்ந்தபைங் கூந்தற் சைவலஞ் செவிமென்
வள்ளைகட் குவளைவாய்க் குமுதம்
ஈர்ந்துகட் கமலந் தழைக்குநீர் நிலையி
னிருந்தன கவுட்டுணை பலவீ
ஆர்ந்தொரு கோளி காஞ்சியி னின்றுங்
கைதுவே றினமலர் பலவும்
சார்ந்தலர் கமுகா யமிழ்தமும் பொதிந்து
தழைந்தது மங்கல மிடறு. 36

கந்தரக் கமுகென் றுரைத்திடும் புல்லுக்
கடிமலர் பலமலர்ந் ததுகண்
டுந்தெழில் வேயென் றுரைத்தகு புல்லு
மொளிர்ந்தசெங் குடங்கைமென் கமலம்
சுந்தர விரலுற் பலமுகிழ் காட்டிச்
சுரர்துதி பாடலங் காஞ்சி
அந்தினின் றதனை நிகர்த்தின மாமென்
றடுத்திருந் தனபொரும் பணைத்தோள். 37

---

35. குவளையாகிய ஏப்புழையைப்படுத்தது. ஏப்புழை - பகையரசர்களின்மேல் பாணம் செலுத்தும்பொருட்டு மதிலின்கண் உள்ளே அகற்சியாயும் வெளியே சிறியதாயுமிருக்கச்செய்த துவாரம். கண் எனும் குவளையாகிய பாணம் செலுத்தும் துவாரம் என்பாரும் உளர். முகமானது செவியிற் குவளையாகிய ஏப்புழையைப் படுத்துக்கொண்டது. புருவவில்லையும், விழிக்கணையையும் அமைத்துக்கொண்டு எழிலுடையது என முடிக்க. வணக்கப்படுத்தது, உடையது. இக்கு உழல் - கரும்பு வில்லும் நாணுடைமையால் நாணியுழலும்படியான. மன்மதனது சந்திர வட்டக்குடையானது ஏப்புழையைத் தன்னிடத்துப் படுத்ததாகி, புருவவில்லையும் விழிக்கணையையும் அமைத்துக்கொண்டு நின்றால் ஒத்தது முகம்.

36. கோளி - பூவாது காய்க்கும் மரம். கவுட்டுணை நீர்நிலைபோல் இருந்தன.

37. பலவகை மலர் மலர்தலால் கந்தரக்கமுகுக்கு இனமாமென்று. தோள் பொரும். புல் என்பதினல் இனம் என்று என்றலும் ஒன்று. ''புறக்கா ழனவே புல்லெனமொழிப. அகக்காழனவே மரமென மொழிப'' (தொல்)

கொடிற்றுநீர் நிலைகண் டடுத்தன வுரத்துக்
குருகுகுன் ருதிய வுருவாய்
பொடித்திட லானுஞ் சூரனு நேமிப்
புள்ளுருப் பலகொள லானும்
படித்தலை யிரண்டு மொக்குநீள் சிறைய
பகைக்குரு குருத்தப வுருவே
றெடுத்தழிந் ததுநிற் புணர்குரு கிருந்தாங்
கெனைத்துமாய் மன்னிநிற் பனவே. 38

கருங்குழன் மேக மீழவண் டொடையற்
கணத்தினன் மின்னியஞ் சிறைய
சுரும்பினுற் சிலம்பி மலர்மதுத் தாரை
சொரிதலி னுயங்குபு சாய்ந்த
மருங்குலஞ் சீயஞ் சரண்சர ணென்னு
மருவவஞ் சலையென நெடுமால்
ஒருங்கிரு குன்றம் பெயர்த்துநின் றதுபோ
லொழுகிய துரோமமா வல்லி. 39

கூந்தல்கா னெனக்கண் ணுழைக்குறி காட்டக்
கொங்கைவெற் பெனப்புயம வேயின்
வாய்ந்தன வுந்தி வலம்புரி காட்டு
மணிக்கட லெனப்புடை பணிந்த
ஏந்தக லல்குன் மயிரொழுக் கெனுமா
லினிதுகண் படுக்குநெட் டமளி
போந்தடுத் தெழினி யுள்ளுறப் பைத்துப்
பொறப்பவீற் றிருந்தது தகையும். 40

---

38. அடுத்தாலன்ன மார்பிலுள்ள முலையாகிய குருகானவை மலை முதலியவற்றின் உருவாகத் தோன்றலானும். குருகு - சக்கரவாகம்.

39. ஈழம் - பொன்.

40. உந்தியாகிய வலம்புரியைக் காட்டுகின்ற. கடலைப்போலப் புடை பணிந்த அல்குலானது தகையும். அமளி - சேடசயனம். கொங்கை யானவை தாம் வெற்பென்று அதற்கியையத் தோளாகிய மூங்கிலோடும் வாய்ந்தன. ஆதிசேடன் வீற்றிருந்ததை அல்குல் தகையும். எழினி - மேகலை ஆடை முதலிய திரை.

ஆர்ந்தபன் மணிக்காழ் விரிசிகை பருமம்
அலங்கொளிக் கலாபமே கலைமின்
கூர்ந்தொளி துளும்புங் காஞ்சியென் றுரைக்குங்
கோலமா ரெழினிகால் வாங்கும்
சேர்ந்துவார்ந் தொழுகிப் போந்தொ றுஞ் சிறுகிச்
செறிசுடர்ப் பூணிடைக் கொண்டேர்
சார்ந்தபொற் றூணம் போன்றன மகர
வாயணி தயங்கிய குறங்கு. 41

மதர்விழி நீலந் திருமுகக் கமலம்
வயங்கிய மூரலந் தளவம
பிதிரொளி யுருவத் தியற்றளிர்ச் செயலை
பெருவலைப் பங்கைமாந் தளிரென்
றதிர்திறற் காம வாளிகள் வாங்கும்
ஆவநா ழிகைபொருஞ் சிலம்பு
கதிருகு பொன்னங் கிண்கிணி பாத
சாலமுங் கவைஇய கணைக்கால். 42

திருமுகங் கமல மிணைவிழி கமலம்
செய்யவாய் கமலநித் திலந்தாழ்
வருமுலை கமலந் துணைக்கரங் கமலம்
வலம்புரி யுந்திபொற் கமலம்
பெருகிய வல்குன் மணித்தடங் கமலம்
பிடிநடைத் தாள்களுங் கமலம்
உருவவட் கவ்வா ருதலி னன்றே
யுயர்ந்தது பூவினுட் கமலம். 43

---

41. காழ் - எண்மணிக்கோவை. விரிசிகை - முப்பத்திரண்டு கோவை யுள்ள மாதர் இடையணி. பருமம் - மூவாறு கோவைமணி. கலாபம் - பதினாறுகோவையுள்ள மணி. மேகலை - மாதர் இடையணியுள் ஏழு கோவை மணி. காஞ்சி - எண்கோவை மணி. கால் வாங்கல் - வளைதல். மகரம் - இராசசின்னத்தொன்று. எழினி ஈண்டுத் தூணில் இடும் உறை. அடா - இல்லாத: இல்லாத பூணைக்கொண்டு எனவே பூணிலாது என்க. தூண் என்றதற்கேற்பப் பூண் என்றார். எழினி - வளைந்த தூண்.

42. கணைக்கால் பொரும் என முடிக்க.

43. வலம்புரிந்த உந்தி; வலம்புரியாகிய உந்தி எனினும் ஒக்கும். பூவினுட் கமலம் உயர்ந்தது என்பது ''பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை'' என்னும் தேவாரத்தானும் பெறப்படும்.

படைவிழி நேர்ந்த நீலமு முகநேர்
பதுமமு மூரனேர் தளவும்
புடையொளி களூற்று மேனிநே ரசோகும்
பொன்னடித் துணைபொரு மாவும
தடைஇய பணைத்தோள் புரைகழைக் கரும்புந்
தடக்கையிற் பிடித்தலி னன்றே
மிடையுமூ வுலகி னுயிர்க்கெலாங் காமம்
விளைப்ப னுயினன் மதவேள். 44

அவணடை வல்லா தாயினு மெண்க
ணன்னமு மடிவிழிக் கூந்தல்
திவளுரு வல்லா வாயினு நேமிச்
செங்கைய கமடமீன் புயலும்
இவளிடை யரிய தவத்தினுற் கற்ற
லெய்துமே யெனமதித் ததனுல்
உவமையில் களியும் பெருமையுந் தழீஇய
வெனிலினி யுரைக்குமா றெவனே. 45

தணப்புறி னொருகாற் பெரிதுநீ யாற்றுந்
தன்மையி னிருந்தன போலும்
கணப்பிர மரஞ்சூழ் கடிமலர்க் கூந்தற்
காரிகை விழியென வொருகை
மணப்புறும் வேலு மவளினஞ் சாயன்
மருட்டிய வூர்திமா மயிலும்
குணப்பெருங் கடலே யிவ்விலை யாயிற்
கூடுவ தருங்குறைத் தகற்சி. 46

அத்தகு மயிலைக் கண்டமாத் திரையே
யவள்பெறுங் கவினுளந் துரப்ப
வித்தக விரைய நீமணம் புணர
விளம்புவா னெழுந்தவென் விழைவால்

---

45. விட்டுணுவாகிய கமடமும், மீனும், புயலும். விட்டுணு ஒரு காலத்துச் சிவபிரானை மேகமாய்த் தாங்கினுன் என்க. புறவடிக்குக் கமடம்.

46. இவ் இல்லையாயில். இவ் - இவை. அகற்சி கூடுவது அருமை யாம்: அகற்சி - பிரிவு. வள்ளியம்மை ஒருகால் தணப்புறினும். வேலும் மயிலும் இருந்தன போலும். இவ் - வேலும் மயிலும்.

முத்திற வுயிர்க்கு முயிரென நின்ற
முதன்மையை யென்பது மயர்த்திங்
கித்திறங் கிளந்தே னனைத்துநீ யறிதி
யெம்பிரா னெழுந்தரு ளென்றான். 47

கேட்டலு மகிழ்ந்திங் கிருவென முனியைக்
கிழமையி னிருத்திமுன் புறத்தின்
ஈட்டிரும் பொருளின் றுறைகளுங் கற்பி
னியற்றுமக் கடியுமண் வழங்கக்
காட்டிய குமரன் களவெனு மின்பக்
கடற்றுறை வழக்கமு முலகில்
நாட்டிய நுதலுங் கருத்தொடுந் தமியே
நண்ணினன் வள்ளிமால் விலங்கல். 48

வேறு

மயில்பூ வைகள்கிள் ளைபுரு மடமான்
அயலே கவகற் றியகன் புனவாய்ப்
பயில்வா ளவைதாம் படரா நடுவான்
இயலா தவனெய் தியசெவ் வியினில். 49

வெள்ளம் பலவென் னுமினூர் குழுவும்
உள்ளம் புறமென் னவொருங் கியிடை
விள்ளும் பரிசில் விழைபாங் கியுஞ்சூழ்
கொள்ளும் படிகூர் பொழினண் ணினளால். 50

---

47. மூவுயிர் - விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர். அங்கங்கு நிகழும் காரியங்களையெல்லாம் ஓரிடத்திலேயே இருந்து அறியும் முற்றுணர்ச்சியையுடையை என்பது போதர 'முத்திறவுயிர்க்கும் உயிரென நின்ற முதன்மையை' என்றான்.

48. புறத்தின் ஈட்டு இரும்பொருளின் துறை - புறப்பொருளின் மார்க்கம். புறப்பொருளிற்கூறிய விதிப்படி இந்திராதி தேவர்களுக்குப் பகையான சூரபன்மா முதலிய அசுரர்களைப் போர்புரி வீரனாய் நின்று தொலைத்து அவ்விந்திரன்மகளை விவாகம்செய்து மேவினான் என்க. களவு எனும் துறை - களவொழுக்கம்; என்றது, அகப்பொருளின் மார்க்கம். நாட்டிய - நாட்ட. தெய்வயானையை மணஞ்செய்து கற்பியலைக் காட்டினான் என்க.

50. குழுவும் பாங்கியும் சூழும்படி. இடையில் நீங்கும் தன்மையில்லாத. ஒப்புரைத்தற்கு உள்ளமும் புறமாம் என்னும்படி எனவும்,

குயிலோ டெதிர்கூ வுதுமென் றுமணி
மயிலோ டுமாறு டுதுமென் றும்வரைப்
பயினீர்ச் சுனைபாய் குதுமென் றுநெடும்
கயிறம் மனைகைக் கொளுவா மெனவும். 51

ஒளித்தார் தமைநே டியுமுப் புறனில்
விளித்தார் தமைநே டியும்வெற் பெதிர்கூஉய்க்
களித்தார் தருகா தன்மதித் துமிவ்வா
றளித்தேங் குழலா ரகல்வுற் றனரே. 52

பழுகுற் றதளிர்ப் பொழிலும் பலநாள்
விழைவுற் றதவப் பயனும் விரவ
அழுகுக் கழகாக் குமணங் கனையாள்
சுழல்வண் டலர்கொய் துசுலா வுறுவாள். 53

மந்தா ரமணங் கமழ்கூ ழலிடை
நந்தா வொளிநா றுபளிக் கறையில்
முந்தா டியதோ கையின்மூ ரிநடத்
தந்தா மரைவாள் விழியாக் கினளே. 54

வேறு

நின்ற மாதுமுன் றணிகையங் குன்றநீத் தடுத்த
வென்றி வேலவன் விளங்குதன் னுருவினைக் கரந்து
குன்ற வாணர்தங் குலத்திறை யெனவுருக் கொண்டு
வன்றி யாதிவேட் டையிற்செல்வா னெனமருங் கடுத்தான். 55

மாசை வண்கயிற் றிறுக்கிய குஞ்சியும் வார்வில்
தேசு லாமலர்ச் செங்கையுந் திருவரைக் கச்சும்
ஓசை யங்கழற் றாளுமற் றுருவுமா டவர்க்கும்
ஆசை மூட்டுமவ் வேட்டுவ னாகத்தொடு கிளப்பான். 56

உள்ளமும் உடலும் எனவும், உயிர்ப்பாங்கி உள்ளம் ஏனையமின்னார் உடல் எனவும் பொருளுரைக்க.

51. மாறுக ஆடுதும் - எதிராக நடிக்குதும். கவண் கயிறு.

52. உப்புறனில் - உப்பக்கத்தில். களித்து ஆர்தரு.

53. சோலையும் பயனும் தன்னைக் கலக்க. சோலையும் பயனும் ஒன்றையொன்று கலக்க எனவுமாம்.

கோவைக்கலித்துறை

காட்சி

பூந்தா மரையும்பைங் காவியு முல்லையும் பூத்தகொக்கும்
தேந்தா துகுக்கு மசோகமுந் தீங்கரும் புந்தழுவிக்
காந்தா ரழற்குண வாஞே ஞருக்கொடு காழ்பகையின்
சீந்தா வெமைப்பொரு வான்சென் றுபாசறை நின்றனனே. 57

ஐயம்

பகுதியி னண்ட முடிவிற் சுடர்பர லோகங்கொல்லோ
தகுதியின் வாழுமை மாதுலகோநந் தணியுலகோ
விகுதியில் லாச்சுத்த மாயா புவனத்தொன் ருேவிரையப்
புகுதியென் றுள்ளந் துரப்பநின் றீங்கொளிர் பூங்கொடிக்கே. 58

துணிவு

தடையா திருப்பி னமதா ருயிர்நனி சாடுமெனப்
படையாண் மதர்விழி பல்காற் றடுப்பன போலிமைகள்
புடையா டுவவடி தோய்தலிற் பூமகள் போக்கரும்பே
றுடையா ளெனவைகு மாதலிற் பூதலத் தோரணங்கே. 59

வியப்பு

அங்கலுழ் மேனிநல் லாள்விழி போற னமக்கணியாம்
பங்கயன் மாலும் பரவுந் தணிகைப்பைம் பூஞ்சுனையில்
செங்கழு நீர்க்கு மரிதுசெவ் வேற்கு மரிதவடன்
பொங்கிளஞ் சாய னிகர்த்தல் பொறிமயிற் கும்மரிதே. 60

---

57. சீந்தா - கோபித்து. இப்படலத்து 42 ஆம் செய்யுளாகிய 'மதர்விழிநீலம் திருமுகக் கமலம் வயங்கிய மூரலந் தளவம், பிதிரொளி யுருவத் தியற்றளிர்ச் செயலை பெருவனப் பங்கைமாந் தளிரென், றதிர் திறற்காம வாளிகள் வாங்கு மாவநா ழிகைபொருஞ் சிலம்பு, கதிருகு பொன்னங் கிண்கிணிபாத சாலமும் கவைஇய கணைக்கால்' என்னும் இப்பாடலில் உரைத்தமுறையே அவயவங்கொள்க.

58. பகுதியின் அண்டம் - பிரகிருதி தத்துவத்தில் உண்டான பிர கிருதியண்டம். பிரகிருதி - பின் சுத்தமாயையை விதத்தலால் இஃது அசுத்தமாயையாகக் கொள்க.

59. தடையாது - இமையாகிய தான் கண்ணைத் தடுக்காமல். படையை ஆளுதலுடைய வழி. விழியை என இரண்டனுருபு விரிக்க. ஆடும் வைகுமாதலில். இவளுடைய அடி தோய்தலால் பூமிதேவியானவள் பேறுடையாள் என வைகுவாள். பூமகள் - பூமிதேவி. ஆடுவ ஆதலில், வைகுமாதலில்.

60. நமக்கு அணியாம் செங்கழுநீர். நமக்கென்ருன் முருகன் என்க.

குறிப்பறிதல்

சிறுகிய வாடி வெயிலிற் றினகரன் றீயுமிழ்ந்தாங்
கிறுகிய வாரிளம் பூண்முலை யேந்திழை மாதுளத்து
முறுகிய காதல் சிறுகிய நோக்கின் முகிழ்த்தனள்விண்
மறுகிய வாலமுண் டோன்ருள் போன்ற வளம்பொழிற்கே. 61

புணர்ச்சிதுணிதல்

வறங்கூர்ந் தவன்கைத் தலத்திமை யார்கை வழுக்கிவந்து
நிறங்கூ ரமிழ்தம் படிற்பின்பு மாந்த நினைவதுண்டோ
அறங்கூர் தணிகை வரைக்குவ டேய்க்கு மலர்முலையைத்
திறங்கூர் கிளையிற் பிரித்தது நாமுன்பு செய்தவமே. 62

வேறு

காண்டன்முன் றுறுத்த கூற்றுக் கைக்கிளை தலைவ னெய்தப்
பூண்டதன் காத லெட்டிப் புகுமுகம் புரிந்த நங்கை
நாண்டக நுதல்வே ராட நகைமுகங் கரந்து வேற்ருேர்
மாண்டவுட் சிதைவு காணு மரபினு னிறைஞ்சி நின்ருள். 63

மையவிர்ந் தொளிருங் கூந்தன் மணிக்குழ னெகிழ்ந்து சோரப்
பெய்யுர்வண் காதி லொன்று பெயர்ந்துமண் ணிடத்த தாகக்
கையணி தொடியு மற்றுங் கழல்வன செறித்துப் பல்கால்
நையிடை நுழைந்து நில்லா நன்கலை யுடுக்கு நீராள். 64

ஓதியு நுதலு நீவி யொளிர்முலை வருட வையன்
பேதுகொ ளுளத்தி னேடு முகுவன பெரிதுந் தாங்கி
மாதர்வண் கலைகால் யாத்து வலிந்துபொய்த் தொடுங்கி யன்பன்
ஆதரத் தெடுத்துப் புல்லுந் தொறுமெழுங் கைய ளானுள். 65

---

61. சூரியகாந்தக்கண்ணுடி. ஆடி வெயிலில் - கண்ணுடிச்சாயல் மூலமாக. காதலைக் கண்மூலமாக முகிழ்த்தனள். ஆடியானது வெய்யிலில் தினகரனுல் தீயை உமிழ்ந்தாற் போல என்பாரும் உளர்.

63. நாயகியானவள் நாயகனிடத்துப் புணர்ச்சிக்குறிப்பைக் காட்டப் புகுமுகம்புரிதல் முதலியன செய்வாள். கூற்று - வெவ்வேருகிய. காட்சி ஐயம் முதலியவற்றையுறுத்த. உறுத்த - செய்த. நாண்தக. உள்ளம் சிதைதலை. ''புகுமுகம் புரிதல் பொறிநுதல் வேர்த்தல், நகுநய மறைத்தல் சிதைவு பிறர்க்கின்மை, கூழைவிரித்தல். காதொன்று களைதல், ஊழணிதைவரல் உடை பெயர்த்துடுத்தல், அல்குல்தைவரல் அணிந்தவை திருத்தல், இவ்வலியுறுத்தல் இருகையும் எடுத்தல்''

65. பொய்த்து வலிந்து - இல்வலியுறுத்தி; அஃதாவது காமத்தால் வலியிழப்பினும் வலியுளதாகச் சொல்லுதல்.

உரைத்தபன் னிருமெய்ப் பாடு மொளிர்பசுங் கொடியி னின்ற
விரைத்தமைக் கூந்தற் செவ்வாய் வெண்ணகை மடந்தையெய்த
இரைத்துவண் டிமிருந் தாரா னியற்கையம் புணர்ச்சி மற்றும்
தரைத்தலை வழங்கு மாறு தான்செய முன்னி னானல். 66

வேறு

புணர்ச்சி

பொருப்பின் வளர்கொடி புல்லினி தாகலிற் பூரணனும்
விருப்பி னுடலமொற் றித்துநின் றுங்கிவ் விலங்கல்வளர்
அருப்பின் முலைப்பசுங் கொம்பொடொற் றிப்பின லாதமையா
துருப்பின்னி யெங்கு மிலாநல னெய்திய வுள்ளகமே. 67

தலைவியை மகிழ்தல்

எனதா ருயிர்க்கு முடலே யவளுட லீர்ங்குழலாள்
தனதா ருயிர்க்கு முடலே யெனதுடல் சார்ந்துநின்ற
எனதா ருயிர்க்கு முயிரே யவளுயி ரேந்துகொங்கை
தனதா ருயிர்க்கு முயிரே யெனது தனியுயிரே. 68

தெய்வத்தை மகிழ்தல்

ஆரா வமுதனை யாளையென் னுருயி ராகிநின்ற
வாரார் முலையைவள் ளிச்சிலம் பூடு மணப்பநல்கும்
சீரார் தணிகைக் குமாரலிங் கேசன் றிருவருளின்
பேரா விரகு மறவே னுலகு பெயரினுமே. 69

கிளவிவேட்டல்

ஆடிய கூத்தன் முடிமதி வாணுத லைங்கரத்தோன்
பீடியல் கும்பம் பெருமுலை பின்னவன் சென்னிமிலை
தோடியல் காந்த டுணைக்கர மென்னிற்றென் மாண்புமைகைக்
கூடிய கிள்ளை குறுந்தொடி யாண்மொழி கேட்பதென்னே. 70

---

67. புல் - தழுவல். பூரணன் - சிவன். நின்றுற்போல உள்ளகம் அமையாது. பொருப்பு - இமயம்.

70. அவயவங்கட்குத் தக்கபடி மொழியுமிருக்கும். ஆதலால் கேட்ப தென்னை. ''அளவியை'' (திருகோவை, செய் - 10) காண்க.

நயப்புரைத்து அயிர்ப்பொழித்தல்

பண்டே யுளனு முளனும் பிணைந்தவப் பண்பின்வளர்
கண்டே யனைய மொழிமான் முகத்துக் கதிர்த்தமிழ்தம்
கொண்டேர் செவிகண் முகந்து குமிழின் மறிவிழியின்
உண்டே மலர்சுனை வாய்வண்டு காண்மெய் யுரைமின்களே. 71

பிரிவச்சம்

மணிநீர்க் கயத்து மலரிடை தட்பினும் வார்கழுத்துப்
பிணிநீர் மையிற்சற்று நீங்கினு மூழி பெயர்ந்தனைய
துணிநீர் மகன்றிலிற் றண்டாது காமத் துறைபடியும்
அணிநீர் மையினுயி ரோராங் ககல்கதி லம்புவிக்கே. 72

பிரிவுணர்த்தல்

இமையார்க் கிறையவன் வீராட்ட காசத்தெம் மானிமயத்
துமையாள் கணவன் றணிகைப்பி ரானரு ளாலுவன்றன்
அமையாப் பதம்பெறி ஞரிழுப் பாரலர் வாழ்க்கைநல்லார்
தமையா ணினைத்தணப் பேன்கொ றளர்ந்தெற்
[றளர்க்கலையே. 73

பருவரல் நினைத்தல்

தெளிவா னமிழ்த நுகர்ந்து சிறிய விடநுகர்ந்தாங்
களிவார் குழலி மனத்தைப் பிரிசொ லழுங்கல்கண்ட
தொளிவா னவர்த முலகுஞ் சமழ்ப்பவொண் டாதுறைத்துக்
குளிர்வாய் பொதும்பர் குலாயெழில் வாய்ந்தொளிர்
[குன்றகத்தே. 74

---

71. உள்ளமும் உள்ளமும் இப்பொழுது சேர்ந்ததாயினும் முன்னமே பழமையாகக்கூடிய பண்பிலே வளரும். மான் விழியைப்போல உமது சுனையின் கண்ணே மலர் உண்டா?

72. துணி - அளவு. ஓராங்கு - ஒருமிக்க.

73. பதம் - திருவடி. நல்லார் தம் அழகை ஆளும் நின்னை.

தெய்வத்தன்மை கூறல்

இந்நாள் வரையு மெனையறிந் தாயில்லை யிந்தமணம்
முன்னா நுதலிற்று முண்டுகொ லோமுறி வாய்ந்தகொம்பர்
அன்னையவ் வாறறி வானன்று கூட்டிய வக்கடவுள்
பின்னா வெறுப்பினுந் தான்றுணி யாது பிணிப்பிக்குமே. 75

தன்னிலையுரைத்தல்

உயிர்நீத்த தேகமு மொண்மணி நீத்த வுரகமும்வார்
மயிர்நீத்த மானுங் கலைநீத்த திங்களும் வாங்கிமுற்றாப்
பயிர்நீத்த சூலுநிற் பாற்றினென் னீர்க்குப்பின் னாவதன்றிச்
செயிர்நீத்த பொற்றொடி யாய்முந்து சேக்குந் திறனில்லையே. 76

விடலரிதென்றல்

எண்குணத் தானிம யச்சிலை வாங்கின னேற்றுமாத்
திண்குணத் தானரு ளாலவன் முற்றன்மை தேக்கிடினும்
பெண்குணத் தானுயர் மாதே விடலிபெட் பேனலன்பண்
வண்குணத் தாடளி பாடல ருவள்ளி மால்வரைக்கே. 77

தெளித்தல்

அறன்மறந் தல்ல புரிவா ரமர்க்கிடைந் தஞ்சுநர்பால்
மறன்மறந் தல்ல புரிவாரு மாகுவன் மாதுநின்னைப்
புறன்மறந் தல்ல புரிகுவ னேலிப் புகன்மொழியின்
திறன்மறந் தல்லற் பெயரா தமைதி திருந்திழையே. 78

---

75. முன் நாம். நுதலல் - அறிதல். அவ்வாற்றை. துணியாது - துண்டுபடுத்தாது; எனவே பிரிவுசெய்யாது என்பது. நாம் வெறுத்துக் கொண்டாலும்.

76. மான் - கவரிமா. வாங்கி - வளைந்து.

77. அச்சிவபெருமான் தலைமைத்தன்மையை எனக்குக் கொடுப்பினும். முற்றன்மை - தலைமைத்தன்மை. அச்சிவனுடைய முதன்மைத் தன்மை கிடைப்பினும்; எனவே, அவனைய்விட்டாலும் என்பாரும் உளர். விடலி - விடுதல். விடலி பெட்பேன் அலன் - உன்னை விடுதலையுடையவனாய் முற்றன்மை விரும்பேன்.

78. அறன் மறந்து அல்ல புரிவாரும், அஞ்சுநர்பால் போர் புரிவாரும் புரிகுவனேல் ஆகுவன். துன்பத்திற் செல்லாது அமைதி. யான் இப்போது சொல்லும் உண்மை மொழியை நீ மறந்து என்க.

இடமணித்தென்றல்

காந்தளம் போது கமழுமெம் மூர்வரைக் காவியிற்றேன்
மாந்தளி பாய்ந்துநும் மூர்வரைச் சோலை மதுநுகரும்
தேந்தளி தூவுஞ்சில் லோதிநல் லாய்சென்று மீட்சிசெவி
போந்தளி வாட்கண் மறிவது நீட்டிக்கும் பூங்குழலே. 79

அகல்பவன்வற்புறுத்து ஆயத்துய்த்தல்

என்மனம் பாச மெறிவலை யானெறி யும்வலைஞன்
நின்மன மாகக் கரந்திங்ங னேவந்து நின்றிடுவல்
பன்மல ரோடை படரனம் போலநின் பாங்கியரில்
நன்மணம் வீசு நறுநுதன் மாது நணுகுகவே. 80

கிழத்திசேறல் உளத்தொடுகிளத்தல்

எருத்தத் திரண்டு விழிபடை யாமையென் னுருயிரை
வருத்தத் திருத்த முகம்பிறக் கிட்டு மயினடக்கும்
திருத்தத்தை நாணி விளர்த்தவென் னுதய னூர்திசெங்கோல்
பொருத்தத்தனூர்தியும் பண்டேவிளர்த்துப் புகழ்கொண்டவே.

ஆங்கவளருமை பாங்குறத்தெரிதல்

கூம்பிய கையினர் கோட்டிய சென்னியர் கோதுதப
ஓங்கிய வுள்ளத் தொழுகின ராயவெள் ளங்குமுதம்
தேம்பிய சிற்றிடை யாண்முகந் திங்கள்செத் தாலிங்ஙனே
காம்பிய ரேளி கிடைத்தது மாயங்கொல் காண்பரிதே. 82

பாங்கியையறிதல்

திருவரு மாறுரு வாய்விளை யாடுநஞ் செய்கையென்ன
இருவரு மோருயி ரேயல்ல தில்லென் றியம்பினவால்
குருவரு வாளரி சிந்திக் கரிகுழைத் திட்டவைவேற்
பொருவரு நீள்விழி தாங்களு மொன்றெனப் புக்குழன்றே. 83

---

79. கண்மறிதல் தாமதமாகும் எனவே விரைவாகச் சென்று மீள்வல் என்றபடி.

81. தலைவியெருத்தம். அவள் திரும்பித்திரும்பிப் பார்த்துச் சேறலால் கழுத்து நோவும் என்று வருந்தி அங்ஙனம் கூறினன். அயன் ஊர்தியும் இந்திரனது வெள்ளையானையும். என்னுது விளர்த்து.

82. ஆயவெள்ளம் ஆம்பலாகும்.

83. கரி - மை. ஆறு உருவாய். தலைவி விழி பாங்கியினிடத்தும் பாங்கியின்விழி தலைவியினிடத்தும் உழன்று.

வேறு

மணந்திவ் வாறு மகிழ்ச்சி தலைக்கொளீ இத்
தணந்த வேலவன் றுங்கருங் காதலால்
அணர்ந்த பாம்பி னரும்பவிழ் காந்தள்சூழ்
புணர்ந்த பூம்பொழிற் போதுதன் முன்னினான். 84

வழிநிலைப்புணர்ச்சிக்கு வள்ளல்சேறல்

வாளாங் கிருப்பினுந் தன்னருள் சேர்ந்துயிர் வாழ்வுபெறத்
தாளாங் குறுக்குந் தலைவனை நாடிற் றகைவுமுண்டோ
தோளாங்கு முன்பறி யாதளித் தாள்வயிற் றுன்னிநிற்பின்
மீளாங் கலந்தன்றிச் சேறுநெஞ் சேவள்ளி வெற்பிடத்தே. 85

கிள்ளை வாழ்த்தல்

அந்தா மரைமல ரன்னமன் னுண்முலை யானைநின்றேருள்
கந்தாக யாப்பையென் றேமுந்து பாய்ந்துண்மை காட்டுதலால்
சந்தார் தணிகைத் தடவரைத் தாழ்சுனைக் காவியினிச்
செந்தார்ப் பசுங்கிளி வாழிய வூழி சிறக்கநின்றே. 86

முன்னிய துயரொடு மின்னிடை நிற்றல்

புலம்பிய வென்னிலை நோக்கிக் கவர்படு புந்தியொடும்
வலம்படு தோள்வள்ள லாங்கே கவலுங்கொல் வண்சிறைப்புள்
சிலம்பிய சோலை புகுங்கொலென் றென்னுளந் தேம்புதலால்
நலம்பட வெண்ணிய தெய்தரி தாங்கொ னளிவரைக்கே. 87

பயில்பொழில் அவளெனப் பையுள் நீங்கல்

தீம்பா லடியிற் கிடத்திய நீலந் திகழ்வதுபோற்
காம்பா லியன்ற பெருமபணைத் தோளிதன் காமருருக்
கூம்பா வளத்த பொழின்முழு தாய்நனி கூரிடும்பை
ஓம்பா வளிசுரக் கின்றது வள்ளி யுயர்வரைக்கே. 88

---

84. அணர்ந்த - நெருங்கிய. அண்ணுந்த என்பாருமுளர்.

85. தாளாங்கு - தனு முதலிய கொடுக்கும் முயற்சியில். தலைவன் சிவபெருமான். தகைவு - தடை.

86. காவியின் - காவியைப்போல. கிளியானது இடமிருந்து வலமானால் நன்மையுண்டாகும்.

87. தேம்புதல் துச்சகுனம்.

88. பாலின்கீழ் இட்ட நீல இரத்தின ஒளி அப் பால் முழுவதுமாய்த் திகழும். பரந்த வளத்த. உருவானது முழுதாய். ஓம்பா - ஒழித்து.

மாதுதன்மை ஈதெனக் கிளத்தல்

காட்சிப் பொருளுங் கருத்துப் பொருளுங் கருத்தடங்கும்
ஆட்சிப் பொருளு மகற்சிப் பொருளு மடுப்பினங்கே
மீட்சிப் பொருளு மெனநிற்ற லாற்கொன்றை வேய்ந்தமுக்கண்
மாட்சிப் பொருளைத் தெரிப்பது வள்ளி வரைப்பொருளே. 89

தனிநிலைகண்ட மனமகிழ்வுரைத்தல்

உருவிளக் கூர்நுதற் றேட்டி விழிக்கய லொண்கொடிற்றுத்
திருவிளக் காடிமென் றேண்முழ வாரத் திரட்கவரி
குருவிளக் கோர்முலைக் கும்ப மயிரொழுக் குக்கொடியென்
றிருவிளக் கெண்மங் கலத்தொடு மாதெதிர் கொண்டனளே. 90

மெய்தொட்டுப்பயிறல்

நந்தவெஞ் சூர னடுகளம் போந்த நளியமிழ்தம்
மந்தரம் போலுயி ரீவது வள்ளி வரையமுத
சுந்தரி பூண்முலைக் குன்றமொன் றேடுதொடித் தோணுதலும்
கொந்தல ரோதியுங் கோமள மாருரு யாவையுமே. 91

பொய்பாராட்டல்

இயங்குந் திறனுடைந் தீரா யிரமருப் பேய்ந்துடற்றத்
தயங்குந் திறலயி ராவணஞ் சார்வது தையனல்லாய்
உயங்குங் கெனவிடைச் சீய நலியு முவாமருப்பின்
வயங்கண்டு வாளாங் கிருந்தது வெள்ளி வரையகத்தே. 92

---

89. கருத்துக்கு அடங்காப் பொருள். கருத்தானது கீழ் அடங்கத் தக்க; எனவே, கருத்துக்கெட்டாத ஆட்சிப்பொருளும் என்பது. அகற்சிப் பொருள் - தூரத்தில் உள்ள பொருள். அடுத்தால் மீண்டு சமீபத்தில் வரும் பொருளும். வரைப்பொருள் - நாயகி.

90. உருவானது விளக்காகும். ஊர் நுதல் - பசலையூர்ந்த நுதல். ஆரம் - முத்துவடம். திருவை விளக்குகின்ற. குருவை விளக்குகின்ற. இரு - பெரிய.

92. இடைச்சீயத்தை வருத்தும்படியான முலையாகிய உவாமருப்பினது. சார்வதாகிய அயிராவணம். நீ இயங்கும் திறனுக்கு உடைந்து, வரையகத்திருந்தது என முடிக்க.

இடம்பெற்றுத் தழாஅல்

வீராட்ட காச விமலன் றணிகைவெற் பாள்குமரன்
தாராட்டு வீரர் முதலோர் கணத்தர ணத்தநெடும்
போராட்டு வேலுங் கணையும் பொரும்புறம் போக்கொழியக்
காராட்டு பூங்குழ லாயென்னை யாத்தநின் கண்ணிணையே. 93

நாணட மழைக்கண் வாள்நுதல் புதைத்தல்

ஒலிதழற் பூதத் தொளிர்விழி யோடுனக் கொற்றுமையால்
மெலிதரு காற்றுணை வேருர் நினையன்றி மென்கரமே
பலிதரு கென்று மடவார் நிறைகொள் பரனுயிர்த்த
வலிதகு மைந்தன் றணிகைவெற் பேருமிம மால்வரைக்கே. 94

இடையூறு கிளத்தல்

கந்தென் மணிப்புயத் தானிங்ஙன் வாடக் கருத்தைவெளி
தந்தென் முகத்தி லிருத்தியென் றேதடங் கண்புதைத்தாய்
மைந்தென் மதர்த்துப் புடைத்துப் புளக மலிமுலையாய்
முந்தென் மனத்தைப் பிணித்தது ஙங்க முழுவதுமே. 95

நீடுநினைந்து இரங்கல்

ஏமங் கனிந்தவெ னெஞ்சகம் போலு மிடுகிடைமென்
தாமங் கனிந்த சுருணெடுங் கூழைத் தொடிக்கரத்தாய்
சேமங் கனிந்த கனிகண்டு நாவெழுந் தீம்புனல்போற்
காமங் கனிந்துறின் யாவர்கொ லாற்றக் கடவர்களே. 96

---

93. விமலன் - சிவன். வீரர் - வீரவாகு, வீரகோளரி, தினகரன், வீரமார்த்தாண்டன், வீரராக்கதன், உருத்திராக்கதன், உக்கிரன், தண்டி, பிநாகி என்னும் நவவீரர்கள். நின் கண்ணிணை பொரும். விமலன் என்றதும் முருகனையே. தாராட்டல் - புகழல். முருகவேளால் புகழப்பட்ட நவவீரர். வேலும் கணையும் போர்செய்யாநிற்கும்; உன்கண்கள் அங்ஙனம் அன்று; போர் செய்தலோடு என்னைக் கட்டின.

94. கண்ணொளி தேயு சம்பந்தமாகையால் தழற்பூதத்தால் ஒளிரும் விழி என்க. ஏரும் - ஒத்த.

95. மைந்தென் முலையாய்.

96. ஏமம் - இன்பம்; என்றது காம இன்பத்தை; மையலுமாம். காவவில் அகப்பட்ட கனியை. நெஞ்சகம்போல் வாடிய இடை.

வருந்தி நாண்விடுத்தல்

மலமாயை கன்ம மொழியினல் லான்முத்தி வாழ்க்கையில்லைக்
குலமார் மடமச்ச நாணொழிந் தாலன்றிக் கூட்டமில்லைச்
சலமார் பிறவியுட் பெண்பவம் போனனி தாழ்ந்ததுண்டோ
நலமா ருலகத் ததுவொழி மாதவ நாடிலமே. 97

மருங்கணைதல்

வளியென் றுமாட னுகாது வசைவரு மென்றனைய
தெளியொன் றுசிற் றிடைக் கோபகை செம்பொற் சிகரியன்ன
களியொன் றுகொங்கை களிவண்டு காள்குழல் காதலிப்பின்
அளியென்ற நாமங் குறிப்பாம் வெளிப்படை யாவதின்றே. 98

கலவியின்மகிழ்தல்

ஓருரு வாக விருப்பினு மென்பய னொற்றுமைகொள்
சீருரு வாகிய செம்மலுந் தேவியுந் தானுமென
ஈருரு வாகவும் வேறிருந் தானெம்மைப் போலவின்ப
நீருரு வான கரணங்கள் யாவு நிகழ்த்துதற்கே. 99

நயத்தல்

ஆயுந் தொறுந்தொறு மின்பந் தருங்கலை யாங்கறிவு
மாயுந் தொறுந்தொறு மின்பந் தரும்வள்ளல் வார்கழல்கள்
தேயுந் தொறுந்தொறு மின்பந் தருஞ்சந்து தேங்குழனிற்
றோயுந் தொறுந்தொறு நேராத வின்பஞ் சுரந்திடுமே. 100

---

97. மலம் - ஆணவம்.

98. வளியானது வசை வரும் என்று உம்மாடு அணுகாது. பகை கொங்கையாகும். அளி - கிருபையையுடையது. குறிப்பு - அழைத்தற்கு இட்ட குறி என்பது பொருந்தாது.

99. செம்மலாகிய சிவன் தேவியும் தானுமாய் வேருகவும் இருந்தான். தேவியும் தானும் என்று சொல்லும்படி எனவே வேருகவும் என்பது போதரும்.

100. அறிவு - தற்போதம். சந்து - சந்தனக்கட்டை. நிற்றோயும்.

தீராத்தேற்றம்

முருகிய ருமரை மாதரு நாணமுன் றேனிடத்துப்
பெருகிய காதற் பிராட்டியு மெச்சநிற் பேணியென்றும்
உருகிய வன்பி னுடங்கமர் வேனுரு சான்றளிதேன்
பருகிய காவி வரைவா முறுமுகப் பண்ணவனே. 101

ஆயத்துய்த்தல்

கருங்குழல் வெண்ணகைச் செவ்வாய்ப் பசுங்கதிர்ப் பொற்றொடி
ஒருங்கிய நின்னுட லாருயி ராவென் னுயிருடலாப் [யாய்
பெருங்கடல் சூழ்ந்த விடத்தும் பிணேந்தன பேசுவதென்
மருங்கிய லாயம் புகுதக வாயம் வளம்பெறவே. 102

பிரிபவன் நோக்கி அருமைகண்டழுங்கல்

திரைதவழ் நீர்க்கட னுப்பட் செலற்கரு நாற்படையின்
நிரைதவழ் நொச்சிச் சிறையகத் தும்பரை நேர்ந்துகொளற்
குரைதவழ் நெஞ்ச மதித்தில மும்ப லுலவைசுற்றார்
வரைதவ முாயத்து மாதரி யாளென்று மாழ்குதுமே. 103

பிரிபவன் உரைத்தல்

திருத்தகு மாது புறத்தவ ளாய்விழி சென்றுபற்றின்
உருத்தகு காமக் கவலையொன் றில்லை யொழிந்தெனது
கருத்தவ ளாய்நிற்கு மேற்கலன் மாய்த்தவர் கையறைபோல்
வருத்தமிக் காகின்ற தாலென்ன மாயம் வரையகத்தே. 104

வேறு

இடந்தலைப் பட்டிவ்வா றியற்றி நீங்கிய
உடம்பிடித் தடக்கையுத் தமனற் பாங்கனுன்
இடந்தலைப் படுதன்மே லியற்ற வைத்திடை
தொடர்ந்துபல் விம்மிதந் தோற்ற முன்னினுன். 105

---

103. மதித்திலம் - கொளற்கு அருமையாம் என்று மதித்தோமில்லை.

104. கையறை - வருத்தம். புறத்தவளாய் - என் கண்ணுக்குப் புலப்படும்படி எனக்கு எதிரே புறத்தில் நிற்பவளாய். புறத்தவளாய் பற்றின் எனது விழி. ஒழிந்து - புறத்தே நிற்றல் நீங்கி.

105. இடந்தலைப்பாடாவது வழிநிலைப் புணர்ச்சியாம்: என்பது முன்பு இருவரும் ஓரிடத்து எதிர்ப்பட்டுக் கூடிப் பிரிந்து பின்னரும் அவ்

வள்ளியை மணந்தவவ் வடிவு நீங்கினான்
தெள்ளிய வேறொரு சிலம்ப னாயினான்
கொள்ளைமான் வேட்டையிற் குறுகு வாரென
ஒள்ளிய தினைப்புன முற்று நண்ணினான். 106

உட்குநா ணின்றியாங் குகப்பு நோக்கியும்
புட்குழா மோப்பினள் புகலு மேதகு
பட்குலா மொழிசெவி பருகித் தேக்கியும்
கட்குலாங் களியனாய்ப் பரிவு காற்றினான். 107

அவ்வழி யவ்வரை யரையன் வேட்டையான்
பவ்வமென் றயிர்ப்புறும் பரிச னத்தொடும்
செவ்விய தினைப்புனஞ் சென்று முற்றினான்
வெவ்வினை தீர்ப்பவன் வேங்கை யாயினான். 108

உலைவறு மறைகளு மோங்கு நூல்களும்
கலைகளு முழுவதுங் கதித்து வேர்முதல்
இலைமுடி வாயுரு வியைய வாங்கதன்
நிலைபெறு முயிரென நிமல னிற்றலும். 109

கண்டனர் கானவர் கணிமுன் னில்லது
வண்டுதேன் ஞிமிறுற மலர்ந்து தாதுதேன்
நுண்டுளி சிந்திவிண் ணோக்கி நின்றது
தொண்டதோர் மாயையின் கொள்கை யென்றனர். 110

விடத்தே எதிர்ப்பட்டுக் கூடுதல். உடம்பிடி - வேல். இடந்தலைப்படுத்தல் - கூட்டுதல் என்றார். (சிலப்பதி - கொலைக்களக் காதை.)

107. உகப்பு - மார்பில் உள்ள ஆடை நெகிழ்ந்து கொங்கை தெரியும் படி எடுப்பாக உயர்ந்திருத்தல். உகப்பு - உயர்ச்சி. உட்கும் - அஞ்சத்தக்க. கண் குலாம்.

108. வேங்கைமரம்.

109. முழுவதும் உருவாக இயைய.

110. வேங்கையில் வீழாவண்டும் வீழகிற்றலால் மாயையின் கொள்கை என்றார்.

தீங்கிது கணிச்சியிற் றெறுமி னென்றனர்
ஓங்கிய பணைகளை யொழிமி னென்றனர்
தாங்கிய வேரொடுந் தறிமி னென்றனர்
வீங்கிய பராரையை வீட்டு மென்றனர். 111

முயற்சியின் வேடரை முதல்வன் கையமைத்
தியற்கைநல் லெழிலுடை யேந்து கொங்கையைக்
கயற்கணல் லாய்கணி காமர் நம்புனத்
தயற்கண்வந் தெழுந்தவா றறைதி யென்றனன். 112

ஐயயா னிதன்வர லாறு தேற்றிலேன்
ஒய்யென நீயிரின் றுக்குன் றெய்துழி
வெய்யதாய் விண்ணினின் றிழிந்த தாமெனப்
பொய்பகல் வளத்தொடும் பொலியக் கண்டனன். 113

என்னிஃ தற்றவா றென்று நாடுமுன்
முன்னினிர் நீயிரே முற்றி நோக்கினீர்
பின்னரென் னுவதோ பெருமை வென்றனள்
அன்னவ னேவமா னறைந்த வாறென்றான். 114

வரையுறை கடவுணல் லருளின் மாட்சியால்
திரைவள ரமிழ்தனுய் சிவணிற் றுகுமால்
விரைமலர்க் கணியிது வெற்பி னின்றனக்
குரைவளர் துணைமையி னுறுகென் றேகினன். 115

தந்தையிவ் வாறெதிர் சாற்றி யேகலும்
பைந்தொடி யடுத்தனள் பணையி வர்ந்தனள்
கொந்தலர் குற்றனள் குழலின் வேய்ந்தனள்
அந்தழை வாங்கின ளல்குல் சேர்த்தினள். 116

---

111. கணிச்சி - கோடரி.

113. உக்குன்று - உந்தக்குன்று.

114. ஏவம் - இவ்விதம்.

116. வேடஸ்திரீகள் தழையை ஆடையாகக் கொள்வர் ஆகலின் அந்தழை வாங்கினள் அல்குல் சேர்த்தினள்' என்றார்.

அலத்தக மலர்ந்தசீ றடிக டோயவும்
மலர்த்தகைத் தொடிக்கரந் தழுவி வெளவவும்
நலத்தரு பரிமள நகில்கள் புல்லவும்
நிலத்தலைப் பேரின்ப நிமல னீடினன். 117

விம்மிதம் பலபல விளைத்து நிற்றலின்
செம்மலங் கணியினைத் தீர மூன்னலள்
பைம்மயி லெனவதிற் பயிறன் மேயினள்
அம்மர மணைத்தெழு கொடியு மாயினள். 118

கிளிமயில் குயில்புருக் கேழ்த்த பூவைகள்
அளியினஞ் சேவலோ டாடி நீங்கவும்
களிவரக் காட்டினன் கண்டு நெஞ்சகம்
விளிவருங் காமநோய் மிடைய மெல்கினள். 119

பொரவளி யசைவபோற் பூத்த சாகையங்
கரமல ரிளமுலை கலந்து தைவர
விரவிய புளகமு மகிழ்வு மேவரப்
பரவிய மெலிவுதீர் பரிசுங் கண்டனள். 120

தனையறி யாவகை மகிழ்வு சான்றவப்
புனைமலர்க் கோதையாள் போந்து வேட்டைதீர்
வனைகழற் றாதையின் வரவு தேர்ந்தொரீஇத்
தினைநடு வளரிதண் சென்று வைகினள். 121

கோற்றொடி தனைவிடாக் கொள்கை யாலவண்
வேற்றுரு வாகிய வேங்கை நாயகன்
வீற்றுமோர் விம்மிதம் விளைக்கத் தன்னொரு
கூற்றினை வேங்கையிற் குலாவ வைத்தனன். 222

இளையவ னெனுமுரு விகந்து வேடர்தம்
களைகணுங் காளையிற் காட்சி தந்தவன்
விளைமுதிர் விருத்தனாய் விழைவு காட்டுவான்
மிளைவயி னவ்வுரு மேவி னனரோ. 123

---

117. மலர்த்த கை.

120. வளியானது பொர.

123. மிளை - காவற்காடு. விழைவு - காம ஆசை.

124. சிலை நேர என்றதனால் வில்லைப்போல வளைந்திருப்ப என்பது.

வேறு

அராவுரியெ னத்திரையு மாக்கைசிலை நேர
விராவுமயிர் வெள்ளொளி விரிப்பவிமை நால
உராவிய விழித்துணை யொசிந்தரிது நோக்கத்
தராதல மழுத்தியிய றண்டுகர மன்ன. 124

கைத்தசை கவுட்டசை கழற்றசைக டுங்க
மெத்திய சழுங்கலுடை வீழ்ந்துநடை தட்பத்
தத்தடி யிடுங்கழ றளர்ந்துதடு மாற
ஒத்தகர னேடுதலை யுங்குலைகு லைப்ப. 125

இடுகிடை மிடைந்தகுர லின்மொழி வழுங்கப்
படுமொழி கொளாதவொரு பண்புசெவி காட்ட
விடுசுடர் விபூதிமெய் விலங்குறவி ளங்கத்
தொடுகடவுண் மாமணிக டோளனமுன் னுட. 126

மேதினி யளப்பவரின் மென்மெல நடந்தங்
கூதைநனி நாசியி னுயிர்த்திடை யிடைக்கண்
ஊதவுகு வானென வுலைந்துநிலை கொண்டே
ஆதவன் மறைத்தகுடை யோடெதிர டுத்தான். 127

மன்றல்கமழ் நீறுநனி வாழியென வீந்தான்
குன்றவர் தமக்கிறை குடங்கைகொடு பூசி
இன்றுபய னானதின மென்றுள முவந்து
நன்றுவர வென்னையடி கேணவிலு கென்றான். 128

திரைக்குமுடன் மூப்பிது சிதைந்திளமை சேர்நும்
வரைக்குமரி யாடவென வள்ளல்வரை யாள்வோன்
விரைக்குமணி நீரிது விளைத்தலரி தேயென்
றுரைக்கணயி ராதவ னுடங்குகொடு சென்றான். 129

---

125. சழங்கல் - நழுவுதல். அடியையிடும் கழல். கழல் - கால்.

126. தோளனம் - தோள். தோளனவாய் என்பாரும் உளர். இடையில் இடுகிய குரல் என்க. விலங்குற - திரிபுண்டரம் ஒன்றையொன்று தீண்டாது விலகியிருப்ப. இடுகிய இடம் - நெருங்கிய கண்டம். இடை - இடம் என்பாரும் உளர். குரல் - மிடறு.

127. உகுபவனைப்போல. ஆதவன் என்பது ஆகுபெயராய் வெய்யிலை உணர்த்திற்று.

129. அரிதாகும் என்று. குமரி என்னும் பெயரமைந்த சுனை குமரிச் சுனை. குமரி வள்ளியென்னும் பொருள்படச் சிலேடையாற் கூறினன் வள்ளல் என்க.

முதுக்குறைவு போலுடலின் மூப்புமுதிர் தூயோய்
புதுக்கணியி னீயும்விளை பூம்புனமி ருந்து
மதுக்குவளை வாய்விரி வரைக்குமரி யாடிப்
பதுக்கைவரை யாருணவு பண்பினுகர் கென்றான். 130

மங்கையிவர் நங்குமரி வார்சுனையி னாட
இங்கணவி னாரிவர்த மக்கினிய நல்கித்
தங்குகென வொண்கனி தயங்குமது மற்றும்
அங்கணாத விக்கடித கன்றுமனை புக்கான். 131

பட்டிமை விருத்தனணு கப்பயிற லுற்றுக்
கட்டழகு கண்ணிணை கவர்ந்துகளி கொள்ள
எட்டனை யுறுப்புமொழி யாதெளிது நோக்கி
மட்டுவிரி கூந்தலுரை யாடமகிழ் கூர்ந்தான். 132

உள்ளமணை யக்கடிது கக்குமிரு கையும்
பொள்ளென வெழும்புணரு மன்பனென வாக்குத்
தள்ளியெழும் வாயிதழ் தணைப்பெரிதும வௌவ
விள்ளுமிரு வார்தொடை விராவநனி துள்ளும். 133

பூங்குழன் முலைத்துணை புணர்ந்ததொடை வாட
வீங்குயிர் விடுக்கும்விரி வாயினுயிர் காலும்
தாங்கரிதெ னத்தரையில் வீழுமெழு நிற்கும்
ஓங்குபசி யேயெனன வுரைத்தவைம றைத்தான். 134

கிழங்குகனி தேன்விரவு கேழ்த்ததினை மாவும்
வழங்கவெதிர் வாங்கிவயி றார்தரமி சைந்தான்
பழங்கணுறு பொய்ப்பசி பறைத்திளைய கள்வன்
முழங்குபுனல் வேட்கையென மூதுயரு ழந்தான். 135

---

130. புதிதாக வந்த கணியைப்போலவே நீயும் இருந்து. பதுக்கை பாறை. முதுக்குறைவு முதிர்ந்திருக்குமாறு போலவே.

131. மங்கை: விளி.

132. விருத்தனானவன் சமீபத்திற் பயின்று. அழகை என விரிக்க. பட்டிமை - வஞ்சகம்.

133. உள்ளம் உகக்கும். தள்ளி - தடுமாறி. விள்ளும் - வாயைப் பிளப்பான். இரண்டு தொடை.

135. பறைத்து - கெடுத்து. முதிர்ந்த துயர்.

இப்புற வரைத்தலை யிகந்துவரை யேழ்போய்
அப்புற மடுப்பினவ ணுள்ளதொரு தீர்த்தம்
வெப்புற மிடைந்தபுனல் வேட்கைதணி கென்ன
மைப்புறவ ளுயறிய வல்லனல னென்ருன். 136

துவளிடையி னேடடி துளும்புமென முன்னிக்
குவளைவிழி யாய்வறிது கூறிவிட லென்ருங்
கவளுடனெ ழுக்கதையி ளுதரவு பற்றி
உவளக மடுப்பதென வொண்சுனைய டுத்தான். 137

நிச்சமு நினக்குரிய நீர்ச்சுனையி தேகொல்
முச்சகமு முத்தொழிலு மும்மலமு மல்ல
விச்சென வெறுத்தவரு மேவரிய தென்றே
நச்சிநறு நீர்நளின நகைகொடு துய்த்தான். 138

வந்தபய னெய்தியது போலுமட வாய்கேள்
இந்தவள வார்சுனை வருர்புனன்மு கந்த
அந்தவள விற்கடிதெ ஞர்வவுள நின்மேல்
முந்தியது பிந்துவது மூப்புமினி யென்ருன். 139

பஞ்சினு மிதிப்பவுலை யும்பதம டந்தை
அஞ்சின ணடுங்கினள றந்தலைபி றழ்ந்த
நெஞ்சின ளினைந்தபரி சென்னென நினைந்து
விஞ்சுவெகு ளித்தழல் வெதுப்பவுரை செய்வாள். 140

மேதையென நின்றனை விருத்தரிலை நின்போற்
காதுபழி பாவவழி கண்டுமறி யாய்கொல்
மாதர்மட வார்சிறு மகாரொடு புனைந்த
தீதிலுரு வத்தையு மயிர்க்குநெறி செய்தாய். 141

---

136. புறவு - புரு. வேடஸ்திரீகள் கருநிறத்தர் ஆகலான் 'மைப் புறவு' என்ருர். வெப்பு - தாகவெம்மை.

137. கதை - தண்டு. அவள் தன்னேடு எழ. உவளகம் - அந்தப்புரம்.

138. இம்மூன்று பொருள்களும் முத்திபெறுதற்கு வித்தல்ல என வெறுத்த பெரியோர்களும்.

141. மேதை - பேரறிவு. நின்போல் விருத்தரிலை. மாதர் - அழகு. மடவார் உரு மகார் உரு - மகார் உருவத்தோடு மடவார் உருவத்தையும்.

ஆய்தவடி விற்கஞெரு மூன்றவிரு மண்ணல்
தூயவளர் வேடமொடு தோற்றுதிநீ வாழி
நேயமலி மெய்யடியர் நேர்ந்துழியு நின்போல்
மாயமென வெள்ளுமொரு வான்பழியும் வைத்தாய். 142

உரைத்தமொழி நாவினை யொறுப்பலெழி ஞேக்கும்
புரைத்தவிழி சூன்றிடுவல் புந்திதுயர் மூழ்க
விரைத்திரு கரத்தலம் விழுத்துவல னைத்தும்
அரைத்திடுவ லெங்குமிசை யாக்கிடுவ லின்னே. 143

தேவரினெ ருத்தனலை திண்புவிபு ரக்கும்
காவலர்க டம்மிஞெரு காளையனு மல்லை
ஆவதெனு றுப்பரையி ஞர்த்தரிய டர்ப்போன்
சாவவிழு புன்னரி தடிந்ததிற னுமால். 144

வஞ்சியர்க டஞ்சமனை வாழ்க்கையர்க ளேனும்
அஞ்சுமுல காள்பவனை யாள்பவனு மஞ்சும்
விஞ்சமரர் தம்மைமிக வஞ்சுவர்விண் ணேரும்
நஞ்சணி மிடற்றனை நலக்குமறி வில்லோய். 145

பித்தரு மதித்திஃது பேசுதிறன் வல்லார்
மைத்துனரு நெஞ்சொருமை வாய்ப்பினல திவ்வா
றுரைத்தபடி வாயினழி யாரொருவர் மாட்டும்
எத்திறநி னைத்தியினி தேருகடி தென்றாள். 146

---

143. மொழி உரைத்த நாவை.

144. உறுப்பு அறையின் ஆவது என் - யான் உன்னுடைய உறுப்புக் களை அறுத்தலால் யாது பிரயோசனம். உறுப்பை அறுத்தலால் ஆம் என முடிப்பினும் பொருந்தும். இனி, உறு பறையின் ஆர்த்து. பறை - வாத் தியம். சந்தம் நோக்கி ஒற்றுமிக்கது என்பாரும் உளர்.

145. காம ஆசை நீங்கிய துறவறத்தார் ஆகாது கற்புடை மனை யாள் பற்றுக்கோடாக நிற்கும் இல்லறத்தராய் இருப்பினும் அரசன் தண்டிப்பான் என்று வேற்றுமடவாரை இச்சியாது அவ்வரசனை அஞ்சுவார் கள் என்க. ஆள்பவனை உலகு அஞ்சும் என இயைக்க. தஞ்சம் - பற்றுக் கோடு. இனி, இல்லறவாழ்வினையுடையார் தம் வஞ்சியர்கள் எளிமையரா யிருப்பினும் அவ்வஞ்சியர் குற்றம் செய்தால் உலகாளும் அரசனுக்கு அஞ்சுவர். தஞ்சம் - எளிமை என்பாரும் உளர்.

நெற்றிமிசை முற்றுபுரு வங்கணெளி கிற்பக்
கற்றையெரி தோய்ந்தகணை யென்னவிழி சேப்ப
விற்றரள மென்னவெய ராடவுரை தள்ள
முற்றுடல்வெ திர்ப்பமொழி மாதையிறை பாரா. 147

இப்பிழைபொ றுத்துளமி ரங்கியருள் கென்னக்
கைப்பதுமம் வள்ளியிரு காற்பதும முய்த்தான்
வெப்புமிக வொய்யெனவி திர்த்துதறி நீக்கி
ஒப்பின்மன வேகமொடு ருத்துவழி மீண்டாள். 148

கற்பின்வலி யுங்குறவர் காமருகு லத்தின்
பொற்பின்வலி யும்பொதுளி மாட்சிநனி பூத்த
அற்பில்வெகு ளிச்சுவையை யார்ந்துளம தித்தான்
வற்புரைய பாங்கனைம ரீஇப்புணரு மன்றல். 149

வேறு

பாங்கனை நினைத்தல்

அருளிற் கலந்துறி ஞராத வின்பத் தழுந்தவிடை
இருளிற் கலப்பதொன் றில்லை யினைந்துகு நெஞ்சகமே
தெருளிற் கலந்தநற் பாங்கனைச் சேரிற் றெரிவையென்னும்
பொருளிற் கலப்பதற் கையமுண் டேயெப் புவனத்துமே. 150

வேறு

தாற்று வாழைத் தணிகைச் சிலம்பின்முன்
போற்று மாவச் சகாயனைப் புந்தியின்
ஆற்று பாங்கனென் றுதரித் துன்னலும்
தோற்றி னைவர் சொற்கள் வழங்குவார். 151

---

146. வல்லமையில்லார். ஒருவர்மாட்டும் பேசும் திறன் வல்லார். வாயின் அழியார் என முடிக்க.

147. நெற்றிமிசை நெளிகிற்ப. வெதிர்ப்ப - நடுங்க.

149. இருவலிமையும் நிறைதலால் உண்டாகிய வெகுளி.

150. இருள் ஈண்டுத் தடை.

151. புந்தியால் உன்னலும். ஆற்று - தேறுதல் செய்து ஆற்றுகின்ற.

வேறு

பாங்கன் தலைவனை வினாதல்

முன்னே குழவியி னூட்டயர் கான்முடி வானவரைக்
கொன்னே குமைத்தவஞ் ஞான்றுங் குழைவிலை கொற்றமுற்றப்
பின்னே யவுணத் திரள்சாய்த் துழியுமோர் பீழையில்லை
என்னே வறிதமர் ஞான்றயர் வேந்திலை வேலவனே. 152

தலைவன் உற்றதுரைத்தல்

தேவரை யஞ்சாத் திறல்சா லவுணத் திரண்முருக்கிப்
பூவரை யஞ்சா றெழுவே றிகழ்ந்தது போற்றுணைவா
மூவரை யஞ்சாத் தமியே னெறும்நல முற்றுமொரீஇ
மாவரை யஞ்சான் மடக்கொடி வெற்றியின் மன்னியதே. 153

தலைவனைக்கழறல்

கரும்பொன்றுதோளியிடங்கொண்ட நாதன்கைவேற்படையோய்
இரும்பொன்று தேவர் வலியளப் பானெய்தி நாப்பணட்ட
துரும்பொன்று கொல்லோ தொகுவரைப் புன்குடித் தோன்று
[முலை
அரும்பொன்று பூங்கொடி யாற்றலை மாற்றி யஞர்செய்யவே. 154

தலைவன் உளந்தளர்ந்துரைத்தல்

விண்டா ரமரிற் றிறங்காணி னல்லது மேன்மையெண்ணார்
கொண்டார் மனைவி குணங்காணி னல்லது கூட்டமெண்ணார்
வண்டார் குழலி வளங்காணி னல்லது வாய்மையெண்ணாய்
கண்டா யலைகழ றாநிற்றி யாலென் கருத்தனவே. 155

---

152. குழைதல் இல்லை. அயர்வு என்னே என இயைக்க.

153. முருக்கி அஞ்சா. முருக்கி இகழ்ந்ததுபோல் என்று முடிப்பாரும் உளர். பூவர் - பூ: இது போலி என்க., வேறு இகழ்தல் ஈண்டுக் கசக்குதல். சால். இகழ்ந்ததுபோல் முருக்கி அஞ்சாத் தமியேன்.

154. நாதன் நட்ட.

155. விண்டார் எண்ணார். விண்டார் - பகைவர்; இகழா நிற்றி. அவனுடைய வளம் என் கருத்தன. வளம் - அழகு.

பாங்கன் நிற்பவை நினைந்துரைத்தல்

பெருமையைக் கல்வியைப் பேணுந் தவத்தைப் பிறங்குகின்ற
அருமையை மற்று மழிப்பதன் றேவடர் காமவெங்நோய்
இருமையை யெண்ணலர் பாலு மிளிவர லேனினக்குக்
கருமைய தன்றுகண் டாயண்டர் போற்றுங் கருணையனே. 156

தலைவன் நிகழ்பவை கூறல்

கடலினை வாய்ப்பெய் வடவையை மீட்டக் கடன்மடுத்தாங்
கடலினை வாய்வைத் துழல்கருங் கண்ணி யவயவத்தென்
மிடலினை யாருமுன் மிக்கறி வேனின்னின் மேதினியில்
தொடலினை யாய்ந்து விடலினை மன்றோ துணையவனே. 157

தலைவன் தன்னியல் தன்னுளத்தெண்ணல்

துணைவனு மின்ன கழறுக சூழ்தரு நல்வினையும்
அணைவன வல்லன வாக வுலகம்ப லோடலரும்
பிணைவன வாக பெரும்பணைத் தோளி பிறழ்ந்துமின்னுங்
கணைவன வாள்விழி யன்றியெவ் வாறுயிர் காப்பதுவே. 158

தலைவன் தலைவி தன்னியலெண்ணல்

வருநாள் கழிவதொன் றில்லையென் றேவற் புறுத்தியதும்
ஒருநாள் கழிவதில் லாக்கடி யுற்றது முன்னியுன்னிப்
பெருநாள் கழிவன போலுங் கணத்திற் பிழைப்பதுண்டேல்
திருநாள் கழிவதில் லாத்தொண்டை நாடன்ன தேமொழிக்கே.

---

156. இம்மைப் பயனையும் மறுமைப் பயனையும் ஓர்பொருள் என மதியாப் பெரியோர்களிடத்தும் காமநோய் அழிப்பதன்றோ என முடிக்க. நினக்கு இளிவரல் ஏன். கருமை - பெருமை. தலைவன் நிற்கும் நிலையை நினைந்துரைத்தல். இளிவு - இழிவு.

157. மீட்டு அக்கடல். கண்ணி ஆர்தற்கு முன்பு. ஆர்தல் - உண்டல். நின்னைப் போல மிக்கு அறிவேன். யான் மயங்கியிருக்கும் சம்பந்தத்தை ஆய்ந்து விட்டுவிடுகிறாயோ.

158. அம்பல் - சிலர் அறிந்து அலர் தூற்றல், பழிமொழி, புறங் கூறல். அலர் - பலர் அறிந்து பழி தூற்றல். நான்காம் அடி வனம் - அழகு.

159. பின் வருகின்ற நாளில் யான் பிரிதல் இல்லை என்று உண்மை யாகச் சொன்னதும். கடி - மணம். கணப்பொழுது யான் பிரிதலுண்டேற் போலும் என முடிக்க. மிக்க நாள் கழிவன போலும்.

நிற்பணிபவரும் நிலைதிரிகலரென வற்புரைபாங்கன்
வகுத்துரைத்தல்

ஆலங் கொதித்தட மேல்வரு மேனு மடற்கெழுந்து
காலங் கொதித்துக் கனன்று றுமேனுநிற் கண்டவரும்
சீலங் கொதித்த நிலைதிரி யார்செம்ம லேமலர்ந்து
நீலங் கொதித்த விழியாட் குடைவது நீதியன்றே. 160

தலைவன் கையற்றுரைத்தல்

ஒழுகிய வெள்ளத் தெதிர்கின்ற மென்புல் லொழுக்கின்வழி
முழுகுவ தல்ல தெழுவதுண் டேமுடி வானவர்சூழ்
தொழுகுல மேயிரும் பீர்க்குஞ் சுரிமுகக் காந்தமென
எழுகிளி யோப்பு மடமானென் னுருயி ரீர்த்ததுவே. 161

பாங்கன், ஆற்றுந்தன்மை தேற்றிலை என்றல்

எல்லா முணர்ந்த குறுமுனிக் கோத்துரைத் திட்டதுமுன்
கல்லா லடியி லிருந்தார்க் கொருமொழி காட்டியதும்
வில்லா லவுணக் குலம்வே றறுத்துவிண் ணோர்க்கருளும்
வல்லாண் மையுமற் றும்பொச்சாத்தி செல்ல மனம்விடுத்தே.

பாங்கன், தெருட்டுந்தன்மை மருட்டினை என்றல்

முற்று முணர்ந்த முதுக்குறை வாளர்க்கு முன்னியொன்று
பற்றும் வகையெவ ரேதெரிப் பாரவர் பண்பின்வழி
மற்று மறிந்து நடப்பதல் லால்வடி வேற்கரவா
எற்று மணித்திரை முந்நீர் முதிர்ந்த விருநிலத்தே. 163

---

161. கையற்று - ஒழுக்கமற்று. குலம் என்றது விநாயகனை. மடமான் ஈர்த்தது ஆகலான் யானும் அம்மான்வழியே ஒழுகினேன் என்பது. கையற்று - செயலற்று.

162. நீ உரைத்திட்டதையும் காட்டியதையும் வல்லாண்மையையும் மறந்தனையோ. பொச்சாத்தி - மறந்தனையோ. ஓத்து - வேதம். இருந்தார்க்கு - சிவபெருமானுக்கு.

163. அல்லால் எவர் தெரிப்பார் என முடிக்க.

பாங்கன், வினைத்திறமுரைத்தவ ளியற்றிறம்வினுதல்

வீசுந் தரங்கக் கடல்விழு வோரின்விம் மாந்துளத்தை
ஆசுந் தடையி னிறுத்தவல் லாவயில் வேலிறைவா
பேசுந் தனுவினை யாரே பெயர்க்கவல் லார்பெயரக்
கூசுந் தளிரடி மாதியல் யாதினிக் கூறுகவே. 164

தலைவன் அவளியல் பாங்கற்குரைத்தல்

பொன்னொக்குங் கொங்கைப் பொறிசுணங் கேர்முலை போதொ
[டொக்கும்
மின்னொக்கு நுண்ணிடை செங்கழு நீரொக்கும் வேல்விழிமா
தென்னொக்கு மேனி யுளமுந் தனவ வெனவவொக்கும்
நின்னொக்கு நீர்மையில் லாய்செல்லு மாலிந் நெடுவதியே. 165

பாங்கனைச் செல்க என்றல்

நின்னடி போற்றி யெவரு நினைத்த கருமமெலாம்
தன்னமுந் தாழ்வின்றி முற்றுவ ரேற்றமி யேன்பொருட்டு
முன்னவ நீயே முயலின் முகிழ்ந்த முலைப்பணைத்தோள்
அன்னவள் கூட்ட மமையாமை யாவரி னுவதுவே. 166

தேற்றுபுபாங்கன் ஆற்றிடைச்சேறல்

உருவா யுருவப் புவனத்தில் யாங்க ணுறினுமொழிந்
தருவா யருவ நிலையொன்றிற் சேரினு மன்றிநம்மான்
மருவாய் மலர்ப்பதத் தொன்றினும் வல்லை யினையப்பல்கண்டாய்
குருவாய் மயிலினை வேலவ வேதுங் குழையலையே. 167

---

164. வினைத்திறத்தை யுரைத்து. ஆசும் - சிறிதும். வல்லமை இல்லாத. தனு வினை - உடலினது வினை. வினை என்பது இருவினைப்பயன் என்க. பெயரக் கூசும் அடி - நடத்தற்குக் கூசும்படியான பாதம்.

165. போது - மலரும் பருவத்து அரும்பு. தன்னுடைய உள்ளம் என்னுடைய உள்ளமாக ஒக்கும். இப்பாதை அவள் ஊர்க்குப்போம். என் ஒக்கும் மேனி - அவளுடைய சரீரமானது என்னை நிகர்க்கும்; எனவே, அவள் சரீரம் என்னுடையது என் சரீரம் அவளுடையது என்பது. உளமும் என்ற இறந்ததுதழீஇய எச்ச உம்மையால் என் ஒக்கும் மேனி என்பதற்கு இவ்வாறே பொருள்கொள்க. மாது இளைத்த என்னை ஒக்கும். மேனியும் உளமும் தன்னுடையன என்னுடையவாக ஒப்பாள்.

167. நீ கருதிய பொருளானது உருவாய் உறினும் அருவ நிலையாய புவனம் ஒன்றில் மயிலை இயைப்பல். நிலை - இடம். நம்மான் - சிவன்.

பாங்கனையாற்றுப் படுத்தோன் உரைத்தல்

சென்றனள் கொல்லோ தினைப்புனந் தீர்ந்து சிறுகுடில்வாய்
நின்றனள் கொல்லோ நெடுந்தகை யன்று ணிலையறிவாய்
ஒன்றினன் கொல்லோ வுவப்பொடு மீண்டு குறுகுங்கொல்லோ
என்றலை யாதிநெஞ் சேமணம் பாணித்த லின்றினியே. 168

பாங்கன் குறிவழிப் பாவையைக் காண்டல்

நங்கையி லங்குசம் வாணுதல் பாச நயனமிரு
கொங்கைகள் கோடு புரிநூ லிடைகுல வல்குலரா
கங்கையிற் றூய மதம்பாய் புழைக்கைக் கவான்கடுக்கும்
மங்கையின் ஞான்றி யில்லைவை வேலன் மனத்தவளே. 169

எளிதிற்காட்டிய இறைவனை
அளிவளர் பாங்கன் அன்பிற்பணிதல்

மாயத்தி னேருழி நீக்காது புன்குடின் மாட்டமலும்
தாயத்தி னுப்பட் டவிராது பூம்புனந் தண்பொழில்வாய்
ஆயத்தின் வண்ட லயராது மாதை யகப்படுத்த
தோயத்தின் வார்சடை வீரட்ட காசனைச் சூழ்குதுமே. 170

பாங்கன் தலைவியை வியத்தல்

கூந்தல் வதனம் விழியென வேழங் குடைதுவசம்
வாய்ந்த புயமுலை யல்குலெ னச்சிலை வாளிமுர
சாய்ந்த விடையென மார னழகுடற் றப்பொருவான்
போந்தது வேட ரறியார் புதல்வியிற் போற்றினரே. 171

---

168. குடில்வாய்ச் சென்றனளோ அல்லது புறத்தில் நின்றனளோ என்று அலையாதே. நெடுந்தகை - பாங்கன்.

169. நமது கையிலுள்ள. புரிநூல் - பூணுநூல்.

170. எளிதிற் காட்டிய சிவனை.

171. சிலை - வில்லாகிய கரும்பு. வாளி - கணையாகிய தாமரைமலர். மன்மதன் அழகினால் காமுகரை வருத்த. புயம் கரும்பு என்க. இடையே மாரன்.

பாங்கன் தலைவனை வியத்தல்

இம்மாதர் பின்னர்த் திரியாது நின்று மிவள்புணர்ச்சி
நம்மா தரவின் முடியுமென் றுள்ளியு நாடறிந்து
விம்மாது காத்தவ னேயுர வோன்வெளி யேவிடுங்கால்
தும்மாது நின்றவர் தாமுங் கயவரித் தொல்புவிக்கே. 172

பாங்கன் வருத்தம் தகுமென உரைத்தல்

தோன்றுன் றனதொரு கூற்றிற் சுடர்த்தொடி யாளணியாய்
ஆன்று னெனினும் பிரிவரி தேயறி யாமையந்தோ
மான்று யெனவு நிறைபொறை சால்பு மதிமுறையும்
கான்று யெனவுங்கை வேலனை வீணே கழறினமே. 173

வேறு

பாங்கனு முறைக்க ணின்று பரிந்துபல் கிளவி காட்டி
ஆங்கவன் றன்னைக் கண்ட வடலிப முகத்தெம் மண்ணல்
ஈங்கிவ ணிலைமை கூறி யிடந்தலைப் படுங்கா றையன்
தாங்குத லரிதென் றுன்னித் தறுகண்மா வேழமானுன். 174

மும்மதக் கலுழி பாய முகமறிந் தலையக் காது
மைம்மலை யுலநாற் காலின் மருவின தூளி யாகக்
கொம்மெனத் தருக்கள் சாய்த்துக் குவட்டினை முருட்டிச் செய்க்கண்
கைம்மலை முழங்கி நேரே கடுகிட்ட ததனைக் கண்டாள். 175

---

172. நின்று காத்தவனே உள்ளிக் காத்தவனே எனத் தனித்தனி முடிக்க. விம்மல் - அதிகப்படல்; என்றது அம்பல் அதிகப்படுதல். அவன் வெளியிட்ட காலத்துப் பார்த்து நடுங்காது நின்றவர்களும் கயவராம். தும்மாது - நடுங்காது; நடுங்காது எனவே அழகில்மிக்க இவளைக்கண்டு மயங்கல் தகும் என்று எண்ணுது பலர் அறியத் தூற்றிநிற்போர் என்பது. இனி, வெளியேவிடும் காற்றுனது நடுங்காது நின்ற பெரியோர், எனவே அடங்கிய காற்றையுடைய பெரியோர் என்பது கருத்து.

173. உருத்தோன்றுன் ஆகிய மன்மதனும், ஆன்றுனுகிய சிவ பெருமானும் ஆன இவ்விருவராயினும் அவர்கள் இவளைக் காண்பாராயிற் பிரிதல் அரிதாம் என்க.

174. யான் கூறி. முருகன் இடந்தலைப்படும் வரையும்.

175. கரிய மலையும் உலமும் மருவினவாய்த் தூளியாக.

போமிடம் வேறு காணாள் பொள்ளென வெகுளி நீங்க
நாமவுள் ளத்த ளாகி நடுங்கிமீண் டிரிய லுற்றாள்
ஆமது தெரிந்து கள்வ னியல்பினுங் கணவான் போலக்
காமர்முன் னுருவ னாகிக் கன்னிமுன் விலங்கிச் சென்றான். 176

அஞ்சலை யஞ்ச லென்னா வணைத்தொரு கரத்தின் மாதைக்
குஞ்சர மடுத்துச் சீறக் குமைப்பவன் போல வேற்கை
குஞ்சியின் மேக்க தாக்கிக் கும்பிடக் களித்து வேட
மஞ்சனை யஞ்சிற் றென்ன மறைந்தது தெய்வ வேழம். 177

தணிவறு காதன் மீக்கூர் தம்பியை யிடரி னீக்கி
மணிநகை மாதைச் சேர்த்த வண்மையி னானு நேரில்
கணிகவெற் பமரு மைங்கைக் கடவுளெம் பெருமான் றன்னை
அணிகிள ருலக மாவச் சகாயனென் றன்பிற் போற்றும். 178

நஞ்சட வெழுத லோடு நடுங்கின ரிரிந்த தேவர்க்
கஞ்சலி ரென்று முக்க ணமலன்கை யமைத்த ஞான்றே
துஞ்சிய கவலை போலத் தோன்றலங் கணைத்த லோடும்
குஞ்சரப் பயத்தி னோடு கூர்பரி வணங்கு நீத்தாள். 179

எனைத்துமங் கறியான் போல வேழையை வினவி நம்மைக்
கனைத்துவண் டிமிருங் கூந்தால் கலப்பிக்கும் வாயி லாக
அனைத்தும்வெற் பமருஞ் செவ்வே ளயர்திரு விளையாட் டென்ன
நினைத்தனென் னுள்ள மற்றே யாகுநீ யஞ்ச லென்னா. 180

மறைமுடி யறியா வேட மன்னவ குமர னங்கண்
உறைமதுப் பொதும்ப ருள்ளா லொண்டொடி மாதைக்
நிறைமகிழ் திளைப்பப் புக்கு நீடிய பரிவு நீத்தும் [கொண்டு
குறையினை முடிப்பா னன்னாள் குறிப்பறிந் துரைக்க லுற்றான்.

---

178. ஒப்பில்லாத கணிக வெற்பு. நேர் - ஒப்பு. நேர் இல் என் பதனைப் பெருமானோடு இயைப்பினும் பொருந்தும்.

180. எனைத்தும் - சிறிதும். வாயில் - தூது.

181. மன்னவனாகிய குமரன். உட்குறையை முடிப்பவனானவன்.

வேறு

பிரிந்துழிவருத்தம் திருந்திழைக்குணர்த்தல்

வரிந்தா லனைய மணிநகை வாங்கு சிலைப்புருவம்
சொரிந்தா லனைய திதலையம் பூண்முலைத் தோகைநின்றோள்
பிரிந்தா லனைய வணங்குநல் லூழிற் பெயர்ந்தடுத்துப்
புரிந்தா லனையமுற் றின்பமும் பூப்ப தரிதுலகே. 182

பயந்தோர்ப்பழிச்சல்

கயந்தலைக் கும்பல் வெதிர்சாய்த் தளிக்குங் கணவரைவாய்
வயந்தலைக் கொண்ட விவட்பயந் தோனும் வளர்த்தெடுத்துப்
பயந்தலைக் கொண்டநற் றாயும் பணிலங்கை யேந்தியுநல்
நயந்தலைக் கொண்ட நளினங்கை யேந்தியும் வாழியரே. 183

கலவியின்மகிழ்தல்

அயிலுந் தொழும்விழி விஞ்சையர் நாட்டினை யச்சுறுத்தக்
குயிலுந் தொழுமொழி கின்னரர் நாட்டைக் குழைப்பவைகும்
மயிலுந் தொழுமெழின் மாதர்நல் லாண்மணிக் கொங்கைதழீஇப்
பயிலுந் தொறும்விருந் தாயின னீதென்ன பண்பிவட்கே. 184

பாங்கனை உண்மகிழ்ந்துரைத்தல்

அம்மைப் பிறப்பி னுஞற்றுநல் லூழி னடுத்தெளிதில்
இம்மைப் பிறப்பினிம் மாதினைக் கூட்டிய வேந்தலிடை
மும்மைப் பிறப்புல கத்தினிற் கேண்மை முதிர்கவென்றும்
உம்மைப் பிறப்பு முளதேன்மற் றுங்கு முறுதகவே. 185

---

182. நின் தோளைப் பிரிந்தாலொத்த வேறோர் துன்பமும். நல் ஊழினால் நீ சென்று, பின் வந்து புணர்ந்தாலொத்த வேறோர் இன்பமும் என்க. யான் நல்ல ஊழினாலே பெயர்ந்து, உன்னை அடுத்துக் கூடுதல் புரிந்தாலொத்த வேறோர் இன்பமும் எனினும் பொருந்தும்.

183. கயந்தலைக்கு - யானைக்கன்றுக்கு. திருமாலும் திருமகளும் போல வாழியர் என்க. வெதிர் - மூங்கில்.

184. வைகும் நல்லாள் புணரப்புணரப் புதிதாகின்றாள்.

185. ஏந்தலிடை என்றும் கேண்மை முதிர்க. அம்மை இம்மை மறுமையாகிய மும்மைப் பிறப்பினையுடைய உலகம் என்க. மும்மைப் பிறப்பும் - வருபிறப்பும். அக் கேண்மை உறு தக. அம்மை - கழிபிறப்பு. உம்மை - வருபிறப்பு. என்றும் - எக்காலத்தும். உம்மைப்பிறப்பும் உளதேல்.

அணிதிருத்தல்

கருமந் தழூநர் மனம்போ லிருள்குழல் கைபுனைந்து
தருமந் தழைந ருளம்போ லொளிர்நுத றைவந்துமின்
பருமந் தழையப் பயிற்றிப் பதநூ புரந்திருத்தி
அருமந்த மெய்ம்முழு துந்தொட வென்றோ வருந்தவமே. 186

அணிந்ததுநாண அறிந்துளந்தெளித்தல்

பொன்னே மணியே புனக்கிளி யேபுயல் வாயுமிழ்ந்த
மின்னே யமிழ்தே விளக்கொளி யேவிரைப் பூங்கொழுந்தே
கொன்னே யயிர்த்துள நாணே லொளிருநின் கோலமெல்லாம்
நின்னே யனையவ டன்னணி யாக நிகழ்த்தினமே. 187

பாங்கியொடு வருகெனப் பணித்தல்

நயந்தெனக் கார வருளினை யாயினங் காய்முழவ
இயந்தனக் கேற்பநின் றேங்கு மருவியிம் மால்வரைவாய்
வயந்தனக் கேற்றவை வாள்விழி நின்னுயிர் மாதொடன்றிப்
பயந்தனக் கேற்ற படர்தலை யாதும் படரலையே. 188

வேறு

பாங்க னிற்பயில் பண்ணையின்
நீங்கு வேலவ னேரிழைப்
பாங்கி யிற்பயில் பண்ணையும்
ஆங்க னுற்ற வமர்ந்தனன். 189

---

186. மின் - இடையில்.

187. உன்னை ஒத்த தோழி அணிந்த ஆபரணமாகவே அணிந்தேம். தலைவியானவள் தன் தோழி அணிந்ததைத் திருத்தி வேறாக நாயகன் அணிந்தமையால் இவ்வேறுபாட்டை நமது தோழி அறிந்துவிடுவாளோ என்று சந்தேகித்து உளத்தில் நாணம் அடைவள் ஆதலின் 'அயிர்த்துள நாணேல் ஒளிரும் நின் கோலமெல்லாம் நின்னே அனையவள்தன் அணியாக நிகழ்த்தினமே' என்றான் நாயகன்.

188. முழவ இயம். படர்தலை படரலை - செல்லும்படியாயுள்ள இடத்தில் வாராதே. இனிச் செல்லுதலை நினையாதே என்றலும் ஒன்று. இப்பொருட்குப் படர்தலை - செல்லுதலை, படரலை - நினையாதே என்க.

189. பாங்கனுற் பயில் விளையாட்டினின்றும் நீங்கிய வேலவன். பண்ணை - விளையாட்டு.

வேறு

கேழிலைவேலோன் தோழியையடுத்தல்

எய்யா மினித்தமி யேசென் றிளமரக் காவகத்து
மையா ரளக மதிநுத லாளை மருவும்வகை
கையா லமிழ்தங் கனிவாய் மடுத்தல் கடுப்பவின்னே
நையா தவளுயிர்ப் பாங்கியி னண்ணுது நன்னெஞ்சமே. 190

பாங்கியைக்கண்டவன் பகரவலித்தல்

உடங்கிய மெய்யுயி ரூழின் பகுதி யுணர்ந்துறுத்தத்
தொடங்கிய மொய்யருள் வீராட்ட காசத் துணைமுதல்போல்
நுடங்கிய நுண்ணிடை மாதொடெம் பானுவ லாதவின்பம்
அடங்கிய முன்னிற்கு மாயிழைத் தோழிக் கறைகுதுமே. 191

ஊர் வினுதல்

கற்றைக் கவரி மயிர்வேய்ந் தகத்துக் கடிப்புழுகு
முற்றக் கலவி வழித்து முதிர்சந் தகில்புகைத்திட்
டெற்றைக்கும் விண்ணொத் திருக்குநும் மூரெது வேந்துகவண்
சுற்றிக் கிளிகடி யுந்தொடித் தோட்டுவர் வாய்க்கிளியே. 192

வழி வினுதல்

குழைவளர் காது மறியக் குளிர்முகஞ் சூழ்ந்தசைய
வழைவளர் சாரற் றினைப்புனங் காக்கு மடக்கொடியே
முழைவளர் குன்றத்து நும்மூர் மொழிந்திலை யேனுமவ்வூர்க்
கழைவளர் முத்தங் கனையிருண் மேய்நெறி காட்டுகவே. 193

---

190. மருவும் வகை எய்யாம். எய்யாம் - அறியாம். நையாது. அவள் - நாயகி. எய்யாம் - இளையாம். மருவும் வகை உயிர்ப்பாங்கியி னிடத்து நண்ணுவோம் என்பாரும் உளர்.

191. ஊழை உணர்ந்து மெய்யில் உயிரை உறுத்தத்தொடங்கும் முதல்வனைப்போல, தலைவியோடு என்னிடத்து இன்பம் அடங்கும்படி முன் நிற்கும் தோழி. மெய்யின் ஊழ், உயிரின் ஊழ். மெய்யும் உயிரும் தலைவ னும் தலைவியும் என்க.

192. புறத்தில் வேய்ந்து. கலவி - பூசி. வழித்து - மெழுகி. வாசனை யினால் விண்ணை ஒத்து. ஏந்து கவண்.

193. ஓர் காதில் அணிந்த குழை மற்றோர் காதில் மறிந்து செல்ல வும், முகம் அசையவும் காக்கும் கொடி. வழை - சுரபுன்னை.

பெயர் வினாதல்

பதியும் பதியாப் பதிநெறி யும்பதி சேர்நெறியாப்
பொதியுங் கருத்தினை யோபுக லாயது போகமணி
நிதியுந் தருவு மொருங்குருக் கொண்டன்ன நேரிழையாய்
வதியும் பெயரினை யேனுந் தெரிப்ப மதிப்பதுவே. 194

வேழம் வினாதல்

பவளத் திருவுரு வீசன் தணிகைப் பதிக்கரையன்
தவளத்த நீறணி வீரட்ட காசத் தனிமுதன்மேல்
கவளத்தின் வீங்கிக் கடுகிய வேழங் கடுக்குமுவாத்
துவளத் தொடுத்துவிட் டேன்வந்த தோவிங்குத் தூநகையே.

கலை வினாதல்

காவித் தடவரை யுள்ளுந ருள்ளக் கரிசுமுற்றும்
மேவித் தணித்தருள் வீரட்ட காச விமலனங்கைத்
தாவித் தழுங்கு மறியொத்த மானென் சரத்தொடிங்கண்
வாவித் திரிவிழி யாய்வந்த தோவுள்ள வாமொழியே. 196

வன்றி வினாதல்

வருமுலைக் கோட்டது மாழையங் கண்ணிகர் கண்ணதென்றோ
உருமுலை யோதை யுவாவுங் கலையு முரைத்தல்செல்லாய்
பொருமுலை வாய்வடி வேல்படு வன்றி புகுந்ததுண்டோ
குருமுலை வீபுனை கோதா யிதுவோர் குறியதன்றே. 197

வேங்கை வினாதல்

கருமா னுரைத்திடின் வீரட்ட காசங்கைக் கொண்டருளும்
பெருமான் மருமத் தணிபடுப் பேணிற்க பேழ்கயவாய்
இருமா நிலமஞ்சும் வேங்கையெய் தேனெய் துழிபகர்ந்தால்
குருமாந் தளிர்நிறத் தாயுடை யாங்குழ கற்கதுவே. 198

---

194. ஊரும் பதியாக. அவ்வூர் நெறியும் அப்பதியைச் சேரும் நெறியாகப் பொதியும் கருத்தினையோ. பதி - கடவுள். புகலாய் - புகன்றாயல்லை.

195. உண்ட கவளத்தால் பெருத்து.

197. உருமு உலை. பொரும் உலைவாய். உரைத்தலிற் சென்றாயல்லை. முல்லை வீ - முல்லை மலர். அவைகள் போலன்றி உன் அவயவத்துக் குறியல்லவே.

198. கருமான் - பன்றி.

சிங்கம் வினுதல்

சிங்கத் துரியுத்த ராசங்கத் தண்ணற்குச் சேமம்வைக்கும்
சிங்கத் துரியுத்த ராசங்க மாகவொர் சிங்கமெய்தேன்
சிங்கத் துருவிவ ரச்சிலைத் திச்சிலை சென்றதுண்டு
சிங்கத் துருவங்கொ ணுண்ணிடை கண்ணுறிற் செப்புகவே.199

அருட்டிறத்திளமுலை தெருட்டாமைவினவல்

அருளிற் கடுத்ததன் றென்றேகெடுதி யறைந்திலைமேற்
றிருளிற் கடுத்த குழலா யிடுகிடை தேய்ந்தொழிய
மருளிற் கடுப்ப வனமுலை நாளும் வளர்வதனைத்
தெருளிற் கடுப்பத் தெருட்டா திருப்பதென் செப்புகவே. 200

கண்ணி பூங்குழற்கு ஒண்ணுமோ என்றல்

அறியு மறிவுக் கறிவாகி நின்ற வமலனறி
குறியு நெறியுங் கடந்த குமாரலிங் கேசனும்வீழ்
முறியு நறுமலர்க் கண்ணியு மொய்குழற் காகுங்கொல்லோ
மறியு மறிய மறியு மதாரி வாட்கண்ணியே. 201

மொழியாமை வினுதல்

மருந்தினை வான நிதியினை வேட்பினு மாட்டுளதேல்
விருந்தினர் மாட்டின்மை மேவச்செய் யார்விரி நீருலகோர்
பொருந்திய பல்லக டாவுய்த்து வேண்டினும் பூங்கொடியே
திருந்திய வோர்விடை யேனுங்கொ டாத திறமெவனே. 202

---

199. உத்தராசங்கம் - மேற்போர்வை. சிங்க - கெட. கெடுதல் ஈண்டு மறைதல். துருவிவர - யான் தேடிவர.

200. மேற்று - (நீ சொல்லாமை) மேன்மையுடைத்து. கொல்லல் தீயதாதலால் அறைந்திலை என்றான். இருளிற்கு அடுத்த. தெருளிற்கு அடுப்ப. மருளிற்கு அடுப்ப முலை வளர்வதனை - மயக்கத்திற்குப் பொருந்த முலை வளர்வதை. மருளிற்கு அடுப்ப எனவே மயங்க என்பது. இனி, தன்னிடத்துள்ள காமத்துக்குப் பொருந்த முலைவளர்தலை என்று பொருள் கூறிப் பொருந்த வளர்தலாவது பெண்களுக்குக் காமம் எவ்வளவோ அவ்வளவுக்கு முலை வளரும் எனக் கொள்வாரும் உளர். இப்பொருட்கு, மருள் - காமம்.

201. மறிய - தோற்றோட.

202. உலகோர் தம்மாட்டு உளதாயின் செய்யார் என முடிக்க. ஊர்வினுதல் பெயர்வினுதல் முதலிய எல்லாம் பாங்கியிடத்தில்.

பாங்கி தலைவனை அயிர்த்தல்

பித்தினர் போலப் பலதொடுத் தார்பிறங் கெக்கலைக்கும்
வித்தினர் போல விடையும் விடுத்தனர் மெய்ம்மையுளம்
பொத்தினர் போல வுரைக்கொத்த வில்லின ரல்லர்பொறப்பூங்
கொத்தினர் யாவர்கொல் சேயரு மல்லாக் குறிப்பினரே. 203

பாங்கி தலைவனைத்தெளிதல்

ஊர்தங்கிச் சென்னெறி மீண்டுறு நாமத்தி னுற்றுப்பன்மான்
போர்தங்கு வேட்டை புரிந்ததெல் லாம்பொய் யிடைக்கிரங்கி
வார்தங்கு கொங்கை தெருட்டி முறியு மலர்த்தொடையும்
கார்தங்கு கூந்தலிற் சூட்டுதற் கோவிவர் காதனெஞ்சே. 204

பாங்கி தலைவியைப் பரிமளத்தயிர்த்தல்

ஒழுகுங் கரிய குழலுங் கலம்பகத் தொள்ளொளியின்
முழுகுந் திலக நுதலு முழவுறழ் தோளும்விரைப்
புழுகுங் கலவு முலையும் புலவோர் துணியுளமும
மழுகும் புதுமணம் வீசுவ நந்தம் வளர்கொடிக்கே. 205

---

203. கையில் வில் ஏந்தாது நின்று தழையை வைத்துக்கொண்டு, அதற்கு மாறுக வேழம் வினுதல் முதலிய பல வார்த்தைகளைத் தொடுத்தார். இதனுல் 'உரைக்கொத்த வில்லினர் அல்லர்' என்று அயிர்த்தாள். இதனை, ''மைத்தழை யாநின்ற மாமிடற் றம்பல வன்கழற்கே, மெய்த்தழை யாநின்ற வன்பினர் போல விதிர்விதிர்த்துக், கைத்தழை யேந்திக் கடமா வினுய்க்கையில் வில்லின்றியே, பித்தழை யாநிற்ப ராலென்ன பாவம் பெரியவரே'' என்னும் திருக்கோவையார் (102 செய்.) திருவாக்கானும் உணர்க. வில்லையுடையோர் அல்லர் எனவே, வில்லிலர் என்பது. மெய்ம்மை பொத்திய உள்ளத்தையுடைய பெரியோர்போல உரைத்த உரைக்கு ஒத்த என்க.

204. ஊரிவிருந்து பின்னர் நெறியில் வந்து, அதன்பின் நாமத்திவிருந்து வேழம் முதலிய பல மான்வேட்டை புரிந்ததெலாம் எனவே ஊர் வினுய், வழிவினுய், பெயர்வினுய், வேழம் முதலிய வினுய் என்பது கருத்தாகக் கொள்க. முறிந்து போமே என இடைக்கு இரக்கமுற்று முலை நாளும் வளர்வதனை வினுவி. கொங்கை தெருட்டி என்பது, 'அருட்டிறத்தின் இளமுலை தெருட்டாமை வினுதல்' என முற்கூறின துறையைச் சுட்டி நின்றது. தலைவன் இரங்கி வினுவி என இயைக்க. முறி - தளிர்.

205. கலம்பகம் - நறுஞ்சாந்து. மழுங்கும் என்பது மழுகும் என எதுகை நோக்கி விகாரம் ஏற்றது. சந்தனம் முதலியன அன்றிப் புழுகும் என்க.

தோழி தலைவியைத் தோற்றத்தினயிர்த்தல்

வளைவளர் கையன் விழிவளர் பாற்கடல் வார்துவரின்
கிளைவளர் காட்சிய சேயரிக் கண்கிளர் வேய்பொருதோள்
உளைவளர் சொல்லிக்கு வீங்கிற் றிடையுமுண் டில்லையெனத்
தளைவளர் கொங்கைக் கினியிட மின்று தடவுரமே. 206

ஒண்டொடிப்பாங்கி ஒழுக்கத்தினயிர்த்தல்

தண்டலை வாய்த்தர ளங்கொடு சிற்றி றனையிழைத்து
வண்டலி ளுட்டயர் வீழாண் மணிக்கழங் கம்மனையும்
கொண்டணை யாள்குரு மாமணி யூசலிற் கோளுமில்லாள்
பண்டணை யாத வொழுக்கின ளின்றிப் பசுங்கிளியே. 207

ஒள்ளிழைப்பாங்கி உண்டியினயிர்த்தல்

தீம்பான் மிதக்குஞ் செழுஞ்செந்நெல் வல்சியுஞ் செங்கரும்பின்
ஆம்பா கடுத்தசிற் றுண்டியு நோலையு மல்லனவும்
ஓம்பா வினிதெடுத் தூட்ட வுவந்துண்ட வட்கவைதாம்
வேம்பா யிருந்தன போலும் விழையா விளைவினவே. 208

செய்வினைமறைப்பிற் றேமொழி அயிர்த்தல்

திரையகஞ் சேர்கடன் மெல்லென் பொருள்செறி வுற்றவெல்லாம்
கரையகஞ் சேர்ப்பது போல்வெளி கண்ட கரைவதன்றி
வரையகஞ் சேர வொளித்திடு மத்தகு மாகடல்போல்
விரையகஞ் சேர்குழ றன்னகம் விள்ளா விரகினளே. 209

---

206. கருவிழியைத் திருமாலாகக் கொள்க. என வளர். தளை - கட்டு. உளை - ஓர்பண், பேசுதலால் ஆகிய ஒலி.

207. முன் இல்லா ஒழுக்கினள். இன்று இப்பசுங்கிளி.

208. நோலை - எள்ளுண்டை. இவளால் விரும்பப்படாத விளைவை யுடையன.

209. வெளி கண்ட - மறைவில்லாமல் வெளிப்படையாகவுள்ள வார்த்தை. தன்னகம் - தன் மனத்திலுள்ள இரகசியம்.

இலவிதழ்ப்பாங்கி செலவினயிர்த்தல்

வெள்ளிடை யேமுகஞ் செய்தெழு வெள்ளம் விழையமலர்க்
கள்ளிடை வீழும் பொழில்படர் வாண்முன்பு காழ்சிறைக்கான்
நள்ளிடை யேயெழு சின்னீர் விழைய நடந்தொருசார்
தள்ளிடை நோமென் றிரங்குநள் போலத் தவிர்கிற்குமே. 210

பல்வளைத்தோழி பயில்வின் அயிர்த்தல்

மோட்டிளங் கொங்கை முருகுயிர் பூங்குழன் முத்தநகை
வாட்டிறம் வாட்டிய வாட்டடங் கண்ணிவள் வைகலுந்தாய்
தீட்டிய பூண்முலைத் தொய்யிலின் மார்புறச் சேர்ந்துதுயில்
காட்டிய கண்ணுக்குக் காட்டிலள் வேறுகண் ணுற்றசைந்தே.

எதிர்ப்படுபுணர்ச்சி ஈர்ங்குழல் உணர்தல்

கருவயிற் றுதலுங் காமரு சாயல் கழிந்துபசப்
புருவயிற் றுத லுறழத் தலைவரொண் டோள்புணர்
மருவயிற் றுகும் பொழிலாடன் மற்று மறந்துபெண்மைத்
திருவயிற் றுவதன் றேமட வார்தந் திருவுருவே. 212

---

210. வெள்ளிடையில் நீர்வெள்ளமானது விரைந்து செல்லும், காட்டினிடத்து ஆங்காங்குத் தட்டுண்டு பையச்செல்லும் என்க. சிறை யாகிய கான். நீரைத் தடுத்தற்குக் கான் சிறைபோறலால் அக்கானைச் 'சிறைக்கான்' என்றார். குறியிடத்தில் தலைவனைப் புணரும்பொருட்டு நாயகியானவள் தன்னோடுவரும் தோழியர் அறியாது அவர்களைப் பிரித்தற் காக இவ்வாறு ஓர் உபாயம் சொல்லித் தங்குவாள் என்க. முன்பு படர்வாள். சிறை - காவல்.

211. தாயின் முலைத் தொய்யிலில். அசைந்து - மெலிந்து, தங்கி. இப்பொழுது தாயுடன் நித்திரை செய்யாது வேறு தனியாகத் தங்கி நித்திரை செய்தலால் நாயகனோடு புணர்தற்காகவோ என்று பாங்கி ஐயுற்றாள். கண்ணுற்று - நித்திரைசெய்து. அத்துயிலைக் காட்டிலள். வேறு கான் - வேறிடம்.

212. பசப்பு உரு வயிற்று - பசப்புருவானது தம்மிடத்து. பின்னைய வயிற்று மூன்றும் இடம். இதனால் புணர்ச்சி உண்டு என்று உணர்ந்தாள். மடவார் என்றது தலைவியை. பெண்மைத்திரு - நாண் முதலிய குணங் களாகிய செல்வம்.

இருவரும் உள்வழி ஏந்தல் வினுதல்

வள்ளந் தணித்து மதர்த்துப் புடைத்த வனமுலையீர்
கள்ளந் தணித்தருள் வீராட்ட காசத்தெம் மான்கடவுள்
வெள்ளந் தணித்த விரிசடை யானை விரவலர்போல்
உள்ளந் தணித்திங்குப் போந்தது காணி னுரைமின்களே. 213

தாழ்குழற்பாங்கி தலைவன்குறிப்பறிதல்

ஏந்திய கண்ணிய ருள்ளமிங் கேசென்ற தெண்ணின்மெய்யே
காந்திய பொற்கொடி யன்னு ணிதம்பக் கடன்முழுகும்
போந்திளங் கொங்கை வரையூ டிவரும்பொங் குந்திமிரம்
சீந்திய கூந்த னெடுங்கான் புகுந்து திரிகிற்குமே. 214

தளிரியற்பாங்கி தலைவிகுறிப்பறிதல்

வண்டென வன்பர் மலர்முகம் பாயு மலர்க்கரத்துத்
தண்டளிர்க் கோதை சுலாவுந் தயங்குகட் பார்வையந்தேன்
மொண்டுணு முள்ளே களிக்கும் புறத்து முனிந்தனபோற்
கண்டிடுங் கண்டன மென்மொழி மாதர் கயற்கண்களே. 215

அலர்முலைப்பாங்கி அன்புகண்டுவத்தல்

மருளுங் கடந்து மருண்மாயை கன்ம வகைகடந்தெப்
பொருளுங் கடந்தவிர் வீராட்ட காசப் பொருளொடுயிர்
அருளுங் கடந்து கலந்ததொப் பாமென் னளவுகடந்
திருளுங் கடந்த குழலியொ டான விவர்கலப்பே. 216

---

213. என் உள்ளமானது ஈண்டுப் போந்தது. நாலாம் அடியில் தணித்து என்பதற்கு என்னை நீக்கி எனப் பொருள்கொள்க.

214. கையில் ஏந்திய கண்ணியர் என்றது தலைவரை. உள்ளமானது முழுகும், இவரும், திரிகிற்கும். சீந்திய - கோபித்த.

216. மருள் - ஆணவம்; பின்னையது மருளுதற்கு ஏதுவான எனப் பொருள்பட்டு மாயாமலத்தை விசேடித்து நின்றது. உயிர் பொருளொடு கலந்ததை என்க என்னளவு கடந்து குழலியொடு ஆன என இயைக்க.

பெய்வளைப்பாங்கி பிறைதொழுகென்றல்

முந்நாண் மதிக்கலை செவ்வா னெழுந்தது மூசளிசேர்
மைந்நாண் மலர்க்குழன் மண்டலந் தாங்கிய வாளரவின்
பைந்நாண்மணியல்குற் பைந்தொடிப் பேரமைத்தோண்மடவாய்
கைந்நாண் மலர்க்கம லங்கண்டு கூம்பல் கடனமக்கே. 217

கோற்றொடிப்பாங்கி வேற்றுமை வினுதல்

வாரித் தடுவில் லுழவர்கள் சூழும் வரையமுதே
பூரித் தனமுலை தெய்வங் கமழ்ந்தது பூங்குழலும்
பாரித் தனபணைத் தோள்சே யரிபரந் தன்றுவிழி
சீரித் ததங்க முழுது மிவைதாந் திகழ்வதென்னே. 218

சுனையாடல்கூறித் தோழிநகுதல்

முலைத்தலைக் குங்குமந் தோயக் குழலின் முருகுவிம்மக்
கலைத்தலை தூசு கதுவக் கடைவிழி மைகரைய
மலைத்தலை வான்சுனை கண்கவர் காமர் வழங்குவதேல்
கொலைத்தலை வேலன்ன கண்ணுய்மற் றியானுங் குடைகுவனே.

பொற்றொடிப்பாங்கி புணர்ச்சிகூறல்

மயிலடி கொங்கை பொறிப்ப மணிகள் கவுட்கிடத்தப்
பயிலிதழ் மூடிகஞ் சேர்த்த வெரிநூற் பலம்வரிப்பக்
குயிலிசை மென்மொழி யாய்மற் றுஞ் சாலக் குயிற்றவற்றே
வெயிலியல் பன்மணி சூழ்வெற்பின் வாய்நம் வியன்சுனையே. 220

அவ்வளைப்பாங்கி அணங்கெனக்கிளத்தல்

மணங்கேழ் சுனைகுடைந் தாடச்சென் றூளும் வரைவளரோர்
அணங்கே யெனகிற்கு நீயு முருவு மதுகிழற்ற
இணங்கோர் மணியிற் கதித்த வுருவு மெனத்துணிந்தாம்
குணங்கேழ் முதலுரு நீயோ வவளோ குறித்துரையே. 221

---

217. நமது கைக்கமலமானது அப்பிறையைக் கண்டு குவிதல் முறை யாம் எனவே கும்பிடச் சொன்னுள் என்க. தலைவியர் தமக்கு நாயகர் ஏற்பட்டுவிட்டால் பிறை தொழார் ஆகலின், அவ்வாற்றை அறியப் பாங்கி இவ்வாறு கூறினள். குழலையும் அல்குலையும் உடைய.

218. வாரித்து - தடுத்து. தெய்வமணம் கமழ்ந்தது.

219. கலைத்தலை - உலைதலை.

நாணுவ பலவும் நாடிய தோழி
வாணுதல்நடுக்கம் காணிய உரைத்தல்

அழல்சுழித் தார்க்கு மடல்வே லொருவ ரணிநிறத்து
நிழல்சுழித் தார்க்குங் களிறென் றுநேர்சென் றுபாய்ந்ததந்தோ
கழல்சுழித் தாங்கே புடையின தாக்கிக்கை வேறிரித்துச்
சுழல்சுழித் தோடுங்கண் ணுய்வரை வாய்வெற்றி தோற்றினரே.

இருவருந்தணவா இயல்பிருதிறத்து
மருவியபாங்கி மதியுடம்படுத்தல்

பன்னீ ருயிரும் பதினெண் ணுடலும் பயின்றியக்கும்
அந்நீ ரெனவடல் வேலோன றனக்கு மமிழ்துயிர்க்கும்
முந்நீர்த் தரள முறுவன் முரிபுரு வத்திவட்கும்
நன்னீ ருயிரொன் றுமெய்யிரண் டாகி நயந்ததுவே. 223

ஏவின செய்வலென் றேந்தல் இரத்தல்

கழைவளர் முத்தமும் வேங்கையம் போதுங்கைக் கொண்டுதொ
திழைவளர் கொங்கைக் கிடுகோ திணைப்புனத் தீண்டுகிளி [டுத்
மழைவளர் சாரற் பெயர்க்கோநும் மாட்டுவா ளாங்கமைகோ
குழைவளர் செஞ்செவி யீரென்னை யேவலிற் கொள்ளுமினே. 224

பிணக்கறுதோழி பெருமையினகற்றல்

விரையாக் கலிமும்மை வேயகத் தோரும் விழுமிதென
வரையாக் கடன்படும வள்ளல்கொ லாமென மாண்டவுறப்
புரையாக் கிடந்தன வுத்தகு நீகட லுண்டெழுகார்
குரையாக் கலவுகுன் றிற்சிறு வாழ்க்கை குறிப்பதன்றே. 225

---

222. தலைவரது மார்பில். கழலால் சுழித்து. அழலைச்சுழித்து. சுழித்து - கோபித்து. யானையைத் தன் பக்கத்ததாக்கி. கழல் - கால். சுழித்து - சுழலுதலைச் செய்து.

223. துறை: தணவா இயல்பை இருதிறத்தால் உடம்படுத்தல். ஈண்டு இருதிறம் என்றது பன்னீருயிர் பதினெட்டு மெய் என்க.

225. விரையாக்கலி - ஆணை. வேய் - பொருந்திய. உனது ஆக்கினையை விழுமிதென. வரையா - கைக்கொண்டு. கடன் - முறைமை. உரைத்துக்கிடந்தன.

இழிகுலத்தாளெனும் ஏந்திழைப்பாங்கிக்குத்
தொழுகுலத்தாளெனத் தோன்றல்செப்பல்

திருமா றனது குலக்கொழுந் தென்றுசிந் திக்குமுக்கட்
பெருமான் றனது குலத்தினைப் பேணுமப் பெற்றிகொள்ள
வருமா தெனமுன்னு மும்பர்க ளெண்ணம் வகுப்பவொண்ணு
துருமாந் தளிரன்ன வொண்டொடிப் பேதையை யொண்ணுதலே.

எங்குலமிழுக்குமென் றிகுளையகற்றல்

குன்றிய லூத்தொடர் வல்லின முன்பின் குறுகநிற்பிற்
குன்றுவ துள்ள வளவையி னின்னொடு கோற்றொடியைக்
குன்றிற கீர்த்தவ னாதியர் நன்கு குறிக்கினுமெங
குன்றவர் வண்குலங் குன்றுவ புன்சொற் கொழுந்தெழுமே. 227

தலைவன் நுங்குலம் தழைக்குமென்றியம்பல்

பெயர்வினை சேரி னிடையுரி யாங்கும் பிறங்கெழில்வாய்ந்
தயர்வினை யெய்தா தினிதிய லாநிற்கு மாரணங்கே
மயர்வினை தீர்த்தருள் வீராட்ட காசத்தெம் மானருளால்
உயர்வினை யேநுங் குலமென்று மெம்மா லுறுவதுவே. 228

ஒண்டொடிப்பாங்கி உலகுரைத்தொழித்தல்

கலைத்துறை போய வறிவிற்குங் காமர் குலங்களுக்கும்
சிலைத்துறை போய நலத்துக்குஞ் சீர்மை பயப்பநிற்கும்
நிலைத்துறை வையத் தியற்கையின் மாதினை நீபுணர்க
மலைத்துறை நாட்டும் படைத்தழும் பேய்ந்த மலர்க்கரனே. 229

---

226. பேதையைச் சிந்திக்கும் முன்னும். பேணும் தன்மை கொள.

227. நின்னொடு தலைவியை நன்றாம் என்று இந்திரன் ஆதியோர் குறித்தாலும்.

229. மூன்றற்கும் சீர்மை பயப்பது விவாகம் என்க. வையத் தியற்கை என்பது விவாகம்.

அண்ணல்முறையல தெண்ணிலனென்றல்

வையத் தொழுக்கது மாமறைக் கண்ணதும் வாஞ்சைமிக்கோர்
உய்யத் தொடர்வது மோங்கின்ப மாவது முற்றிவண்யான்
செய்யத் தொடர்வது கண்டாய் திதலைமென் பூண்முலையாய்
நையத் தொடர்வன வேமற்றை மன்ற னயப்பனவே. 230

ஆயிடைப்பாங்கி அருமையினகற்றல்

நண்ணுங் கருத்துடை வீராட்ட காசத்து நாதனருள்
பண்ணுங் கருத்தும் பயிலுங் கருத்தும்பல் கான்மறந்து
கண்ணுங் கருத்து மதன்வழிக் கண்ணுங் கலந்தொப்பாம்
எண்ணுங் கருத்தவெம் மாதோ டெனக்கிங் கியல்வகையே. 231

---

230. யான் செய்யத் தொடர்வதுவே இவ்வளவும் ஆவது என்க. மற்றை மன்றல் என்பது காந்தருவமணம் ஒழிந்த ஏனைய எழுவகை மன்றலை என்க. ஏனைய மன்றல் இருவரும் ஒத்துக்கூடும் மன்றலுக்கு ஒப்பாகா ஆகலின் இவ்வாறு கூறினன். பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசம் என்பன எண் வகை மணம். இவற்றுள், பிரமசாரிக்குக் கன்னியைத் தீமுன்னர்க் கொடுப்பது பிரமமணம். தலைமகன் இனத்தார் வேண்டத் தலைமகள் இனத்தார் உடன்பட்டு அவளைத் தீமுன்னர்க் கொடுப்பது பிரசாபத்தியம். ஒன்றிரண்டு பசுவும் எருதும் வாங்கிக்கொண்டு கன்னியைத் தீமுன்னர்க் கொடுப்பது ஆரிடமணம். வேள்வியால் வந்த கன்னியைத் தீமுன்னர்க் கொடுப்பது தெய்வமணம். கொடுப்பாரும் கேட்பாரும் இன்றி இருவரும் தனியிடத்தே எதிர்ப்பட்டுத் தாமே கூடுவது காந்தருவம். பெண்ணுக்குப் பொன் சூட்டிச் சுற்றத்தாருக்குப் பொன் வேண்டுவ கொடுத்துக்கொள் வது அசுரமணம். பெண்ணும் பெண் இனத்தாரும் உடன்படாமல் வலிதிற் கொள்வது இராக்கதமணம். துயின்றாளைச் சென்று கூடுவது பைசாசமணமாம் என அறிக.

231. அருள் செய்யும் கருத்தையும், அருள் செய்ய அவ்வருளிற் பயிலும் கருத்தையும் மறந்துவிட்டு, கருதும் கருத்தும் அக்கருத்தின்வழியே கண் கலந்ததையும் நிகராம் என்க. ஞானிகள் கருத்துக் கண்ணின் வழிக் கலவாது ஆகலின் அவரது கருத்தையும் கண்ணையும் ஈண்டு ஒழித்தார். கண் முன்னையது கருதல் என்னும் பொருட்டு. கர்த்தனே. தியானிப்போரிடத்துப் பொருந்தும் கருத்தையுடைய. கண்ணனது கருத்தின்வழிச் செல்லுதல்போல யான் தலைவியின் வசமாய் அவள் செல்லும் வழியே செல்கின்றேன் ஆதலின் தலைவி என்வசமாகாள் என்று தோழி கூறினாள் என்க.

மன்னவன் நின்வழி முன்னுவளென்றல்

நினைப்பித் தடுத்தருள் வீரட்ட காச நிமலன் மற்றும்
முனைப்பித் துயிர்வழி நின்றதன் றேருமன முற்றும்விற்ற
எனைப்பித்தி னீக்க விரங்குவை யேலினி மாதர்நல்லாள்
தனைப்பித்தி கைக்குழ லாய்நின தேவலிற் றந்திடுமே. 232

அவளறிவுறுக்கவென் றிகுளையகற்றல்

சடம்படு மாவியு மாவியு மாயிற்சந் திக்கவிடை
யுடம்படு மெய்யொன் றுறவேண் டுவதுட லோடுயிர்வந்
திடம்படு மாயி னிடையொன் று வேண்டுவ தெற்றுக்கண்ணல்
மடமபடு கண்ணிக்கு நீயே மொழிய வலித்தியின்றே. 233

ஒழித்துறிற்பழிநிற் கொழியாதென்ன
வழுத்தபு கிழவன் வருந்தியுரைத்தல்

புரப்பான் விடுப்பி னுலகமென் னும்புரை தீர்ந்தவள்ளல்
கரப்பா னெனிலிரப் பானெங்ங னுய்யுங் கனிமொழியைத்
தரப்பான் மையையல்லை யாயிற் றபுகமற் றியான்பழிநீ
துரப்பான் புகுநெறி யில்லைகண் டாய்சுடர்ப் பூண்முலையே. 234

இனி, அக்கடவுள் அருள் செய்தலை மறந்து மருள்வழியிற் புகக்கருதும் கருத்தும். ஆன்மாவானது கடவுள் அருள்செய்யக் கருதினால் அவ்வழியிலும், மருளிற் புகுத்தக் கருதினால் அவ்வழியிலும் செல்லுமாறுபோல யான் அவள்வழி நடப்பதன்றி என்வழி அவள் நடக்கமாட்டாள் என்பது கருத்தாகக்கொள்க. அதன்வழிக் கண்ணும் - அதன் வழியிலும் என்பாரும் உளர்.

அருள் பண்ணும் கருத்தும் பயிலும் கருத்தும் கலந்தது ஒப்பாம்: பல்கால் மறந்து கண்ணும் கருத்தும் அதன்வழிக் கண்ணும் கலந்ததொப்பாம். ஈற்றிலுள்ள கண் கருத்து என முடிப்பாரும் உளர்.

232. நினைக்கச்செய்து பின் அடுத்து அருள்கின்ற. நிமலன் நின்றதன்றே அதுபோல என்க. முனைப்பித்து - முன்னுக்குக் கொண்டுவந்து. நினது ஏவலால் நல்லாளானவள் தன்னை எனக்குக் கொடுத்திடுவாள். 'நிமலன் மற்றும் முனைப்பித்துயிர்வழி நின்றதன்றே' என்பது. ''அன்று தொட்டு என்னையடுத்து நான் ஆடுந்துறையெல்லாம் ஓடவிடுத்து இன்று தனக்குட்படுத்து எனக்கு எங்கெங்கே பார்க்கிலும் காட்சி கொடுத்து'' என்னும் ஆனந்தக்களிப்பின் கருத்தை அடக்கி நின்றது.

233. தலைவியிடத்து நீயே சென்று அறிவுறுக்க என்று இகுளை அகற்றல் என்னும் துறை. அண்ணல்: விளி.

234. யான் தபுக. நீ பழியைத் துரக்கப்புகும் நெறியில்லை.

பிறைநுதல்தோழி பின்வருகென்றல்

கற்றைப் புரிசடை வீராட்ட காசக் கடவுளருட்
பற்றைப் புரிகலர் போற்கொடி யாரெமர் பார்த்திபனே
இற்றைப் பொழுதரி தாங்கண்ணி யேற்ப தெமக்குமெய்யே
மற்றைப் பொழுது வரினெளி தாகும் வரையகத்தே. 235

கையுறை ஏலெனக் காளையிரத்தல்

மாவைத் தணித்துய் ரத்தியைச் சாய்த்துவண் வேங்கைகுழைத்
தேவைத் தவ்வொடு மாய்த்தென தங்கை யிருந்தநறும்
பூவைத் தளிரைநுங் கையகத் தாக்கிப் புலம்புமெனைக்
காவைத் தமர்த்த படைவிழி வேய்த்தோட் கனங்குழையே. 236

காதலற்கிளை பேதைமையூட்டல்

தணியா வருள்வளர் வீராட்ட காசத் தலைவர்விழை
அணியா மிருகமெய் தீரவை தாமிங் கடுத்துவிடின்
பிணியா முழந்துயிர் மாய்வதல் லாற்பிழைப் புண்டுகொல்லோ
துணியா வறிவு புறத்தின்றி முற்றிய சூழ்ச்சியரே. 237

பேதைமை ஊட்டிய பெய்வளைத்தோழிக்குக்
காதலன் பொருந்தக் கட்டுரைத்தல்

மிருகக் குலங்களெஞ் சாத்தனி வேட்டை விளைக்குமென்னெஞ்
சுருகக் கடவிய வோடரிக் கட்படை யொண்முகத்தீர்
கருகக் கரம்வைத்த பல்லவம் பாய்ந்து கலக்கியுயிர்
பருகக் கடுகிய மாவஞ்சு வீரெனப் பார்த்திலமே. 238

---

235. விரும்பாதாரைப்போல. எமக்கு ஏற்பது அரிதாம். ஏற்பது எளிதாகும். கண்ணி - மாலை. பற்று ஐ - பற்றுதலை.

236. மா - கலைமான், பன்றி. ஏவை - பாணத்தை. தவ்வொடு வில்லொடு. எனைக் கா - என்னைக்காப்பாய். வைத்து - கூரியதாகிய, நும் என்னும் பன்மையொடு கா என்னும் ஒருமை மயங்கியது பன்மை யொருமை மயக்கம் என்க. குழைத்திருந்த. மாய்த்ததும் பூவும் தளிரும் என்க.

237. நீர் எய்த விலங்கு ஈண்டு அடுத்தால் யாம் உயிர் மாய்வோம். யாம் உயிர் மாயாதிருத்தலால் அவ்விலங்கு இவண் வரவில்லை என அறிய லாம்; அஃது அறிந்திலீர் என்பது கருத்து. புறத்தின்றி எனவே அகத்தில் முற்றிய என்பது.

238. உங்கள் சமயம் கிடைப்பது நீட்டித்தலாலே கையில் வைத்த தளிர் கருகி வாடும்படியாயின.

பிணைநடைத் தலைவியைப் பேதைமை ஊட்டித்
துணைமுலைப்பாங்கி துணைவனையகற்றல்

கலைத்தொழிற் குள்வைத் தளித்தற்குக் கைவைத்த காமர்
[வெற்பா
கொலைத்தொழிற் குள்ளமுங்கையுங் குறித்துவைத்தார்கடங்கை
மலைத்தொகு தீம்புனங் காப்பான் பலவுயிர் வாட்டுகிற்பாள்
சிலைத்தொழிற் றேண்மெலி வெங்ஙன மோர்ந்தருள் செய்யு
[மன்றே. 239

பேரறிவுடைமை பெருந்தகை கிளத்தல்

கடங்கலுழ் வேழ முதலா மிருகக் கணந்துமிக்கும்
மடங்கலுந் தன்னினங் காப்பதன் றேமதி வாணுதலாய்
தொடங்கரு வன்கொலைப் புன்குடித் தோற்ற முறினுமன்ற
படங்கிள ரல்குலென் னோயறிந் தோம்பும் பரிசினளே. 240

விளைவிலளவளென இகுளைவிலக்கல்

கரம்பை திரம்வளர் காரனை யாய்கனி வேட்டிளம்பூ
வரம்பையை மந்தி யடுக்கு மடுக்கத் தகன்குறிச்சிக்
குரம்பையிற் கொம்புக்குக் கொங்கை யரும்பில பிள்ளைமையின்
வரம்பை யிகந்து வயங்கரி கண்கண் மலர்ந்திலவே. 241

இளையளாயினும் என்னுயிர்க்கு அணங்கெனத்
தளையவிழ்தாரான் தாழ்ந்துரைத்தல்

உளையவ ளாயுயிர் ஞான்றே மடங்கலொண் மாக்குழவி
அளையவ ளாயெழு வேழத் தயிற்கோட் டவிர்முருந்து
களையவ ளாயெழு கல்லதர் நாட்டுக் கனங்குழையாள்
இளையவ ளாயினு மாரணங் கென்னுயிர்க் கேந்திழையே. 242

---

240. வேடனாகிய என்னுடைய நோயை அறிந்து ஓம்புவாள்.

241. ணைதிரம் - காடு.

242. உளைய அளாய் - தாய் மடங்கல் வருந்தும்படி அளாவி. உளைய வளாய் - புறமயிர்களை வளாவி என்பாரும் உளர். அணங்கு - நோய். பிறக்கும்பொழுதே.

இவற்றிளமுலேயாள் இணக்கமறிந்திலளெனக்
கவற்றிய உளனொடு காளை நிற்றல்

தளவைத் தகர்த்த தவளத்த வாணகைத் தண்மதியப்
பிளவைத் தணித்த பிணைநுதற் பெய்வளைத் தோளியொடாங்
களவைத் தெரித்திலள் பாங்கியு நீயுங் கதித்தவிழை
வளவைத் தணித்திலை நெஞ்சேயென் செய்து மகன்வரைக்கே.

தன்னறிவுளதெனத் தலைவற்கிகுளை
முன்னுறுபுணர்ச்சி முறைநிறுத்துரைத்தல்

பலாவம் பொழிலி ஞெருதா யுயிர்த்த பலமயிற்கும்
கலாவம் புனைந்த களிமயின் மூத்த தெனக்கருதச்
சுலாவம் பரமிமிர் வெற்பினெம் மாதுக்குத் தோன்றன்முன்னம்
இலாவம்பு வாய்ப்ப முதுக்குறைந் தாளென வெண்ணமுண்டே.

ஆற்றியதோழிக் கவன்நயந்துரைத்தல்

காஞெத்த கூந்தற் கனியொத்த செவ்வாய்க் கருநெடுங்கண்
வாஞெத்த நுண்ணிடை மாதர்நல் லாய்மயர் கூர்ந்தவுளம்
தேஞெத் தமிழ்தொத்த மென்றீங் கிளவிசெப் பாவிடினே
ஊஞெத்த வாழ்க்கையு ருமே துவர வுலக்குவதே. 245

அன்னையைப்பாங்கி அஞ்சியச்சுறுத்தல்

முந்தினை யாங்ஙனஞ் சென்றனை பைங்கிளி மூரிமயில்
செந்தினை யார்த்தியென் றென்னுயிர் மாதையுஞ் சீறுமன்னை
வந்தினை யாங்கிற்ப வென்னையுஞ் சீறும் வளம்புனத்துக்
கந்தினை யாத்தன்ன தோளா யினிச்சென்று காப்புக்கொண்டே.

---

243. பாங்கியும் தெரிந்திலள், நீயும் தணித்திலை. தெரித்திலள்: விகாரம்.

244. இல்லாத வம்பு. வம்பு - வாசனை. தோன்றல்: விளி.

245. உளம் உலக்குவது. உலக்கல் - வாடல்: வாட்டுவது. ஊன் - உடல். கிளவி - தலைவியோடு கூட்டிவைப்பேன் என்று சொல்லும் சொல்.

246. துறை: அன்னைக்கு அஞ்சி. உயிர்மாது - தலைவி: சென்று - சென்றேன், செல்வேன் என்பது புனத்தினிடத்துத் தலைவியை யான் காத்தல் கொண்டு சென்றேனுவன். முந்தினை ஆகி. ஆர்த்திச்சென்றனை: ஆர்த்தி - உண்பித்து.

அன்னவள்தமரை அஞ்சியச்சுறுத்தல்

வில்லின ரம்பினர் வீங்கிய சீற்ற விளைவினர்வன்
சொல்லின ரென்னையர் தீம்புனங் காவலிற் ருேற்றுவரால்
புல்லினர் போக்கருந் தன்மையி ளுய்பொலந் தேர்க்கதிரோன்
கல்லினன் மேற்றிசை மெல்லிய லென்னிற் கலங்குவளே. 247

குறியெதிர்பெருது கொற்றவேலவன்
முறுகியதுயரின் மூட்சிமீட்டுரைத்தல்

இட்டிடை வெஃகி யதுபோற் றுளும்பி யிறுக்குமுலை
மொட்டினை வெஃகி யதுபோற் பிணியுண்டு மொய்யரிக்கண்
பெட்டிக வின்றி யதுபோற் கறங்குதி பேதைநெஞ்சே
மட்டினை வெஃகி வரைநோக் கியமுட மானநின்றே. 248

சொல்லவட்சார்த்தித் துன்னிடம்பெற்றுத்
தாங்குயிர் வேலோன் பாங்கியை இரத்தல்

கன்னற் பொருசிலைக் காமனும் வாளி கடவியென்மேல்
இன்னற் பொருந விளைத்தும்விட் டானெய்த் திளிமொழியாய்
நென்னற் பொழிற்குறி நல்கின ளென்னுயிர் நிற்கும்வகை
மின்னற் பொறிநுண் சுணங்கே ரிளமுலை மென்கொடியே. 249

---

247. உன்னைத் தழுவிஞேர் விடுத்தற்கு அரிய. மேற்றிசைக் கல்லினன். ஐயர் - பெருமையிற் சிறந்தோர். நான் எவ்வாறு தமர் வருவர் எனக் கலங்குகின்றேஞே அதுபோலவே தலைவியும் கலங்குவாள். என்னில் - என்னைப்போல. என் ஐயர் எம்மவர் என்பாரும் உளர்.

248. வெஃகி அதைப்போல. பிணி - கச்சின்கட்டு, நோய். இகவு இன்றி. மட்டு - தேன். முடம் - முடவன். இன்ன இடத்துக்கு வருவாய் என்று சொல்லும் குறியிடத்தை எதிர்பெருது. மலையினது உச்சியிலிருக்கும் தேனை என்க.

249. இன்னல் பொருந - இன்னலானது சண்டைசெய்ய. இளைத்தும்விட்டான். எய்த்து உவகை நல்கினள் என முடிக்க. எய்த்து - மன்மதன் அவ்வாறுசெய்தலை அறிந்து. நென்னல் நல்கியவாறுபோலத் தலைவி இப்பொழுது நல்குமாறு நீ அருள்செய் என்பது.

என்மேல் கடவி துன்பத்தோடும் போர்செய இளைத்தும்விட்டான். இளைத்தும்விட்டான் - இளைத்தும்போனுன். அத்தலைவியானவள் என்னேடு மன்மதன் பொருதலைக்கண்டு என் உயிர் நிற்கும்படி நேற்றுச் சோலையில் குறியிடத்து அருள்புரிந்தாள். கொடி நல்கினள். எய்த்து - அறிந்து.

பாங்கியோடொற்றுமைப் படஇறை கிளத்தல்

பைந்தாட் குவளை யடைச்சிப் புணரிய பைம்பொழில்வாய்க்
கந்தார மென்மொழி கைகலந் தாடுகங் கண்ணுறுகோ
சிந்தா குலத்தி னிரந்தேற்குத் தான்செய் குறிநிலையைத்
தந்தாங் ககன்றவள் பினசென்ற நெஞ்சந் தணப்பரிதே. 250

உள்ள முழுதும் வெள்ளிடையுமிழ
வேட்டபாங்கிக்கு மீட்டுமீதுரைத்தல்

வம்மோ வினிய மிழற்றுஞ் செழுந்துவர் வாய்க்கிளியே
தம்மோ வெனநின் றிரப்ப வடுத்துத் தயங்குகங்குல்
நம்மோ ரனையண் மலர்வேய்ந்து பொய்த னயந்துதமர்
தம்மோ ரனைய விருள்புலர் வைகறை தாழ்குழலே. 251

நின்னுளம்விழைந்த மின்னிடை மடந்தையை
எய்யேன் யாரெனெ இகுளை இயம்பல்

பள்ளம் படர்ந்த பெரும்புனல் போலெறும்ப் பார்த்திபநின்
உள்ளம் படர்ந்த வுருவத்த ளோரை யுழப்பினெங்கும்
வெள்ளம் படர்ந்தன மெல்லிய லாருள்ளும் யார்விரிவீக்
கள்ளம் படர்ந்த கணவரைச் சூழ்ந்துயர் காவகத்தே. 252

துறை: சொல் அவட்சார்த்தி - சொல்லை அத்தலைவியின்மீதுசார்த்தி: இடம்பெறலாவது தலைவி தன்னோடு ஒற்றுமையுடையள் எனக்காட்டி அவளைப் புணரப் பாங்கியை இடம்பெறுதல்.

250 குவளை நெருங்கிப் புணர்ந்த பொழில். காந்தாரம் - ஒருபண்; அது விகாரம் ஏற்றது. மொழி: விளி. ஆடுகமாய்ப் பார்ப்பனோ. இரந் தேற்குத் தந்து. தலைவியானவள் தான் குறியிடத்தில் நிற்றலைத்தந்து எனவே குறியிடத்தில் வந்து என்பது. தலைவியை விட்டு நீங்கல் அரிதாம். துறை: பாங்கியொடு கிளத்தல். நெஞ்சம் தணப்பரிது என்றமையால் ஒற்றுமையாயிற்று.

251. துறை: தலைவனுடைய கருத்து முழுவதும் வெளிப்பட விரும்பிய பாங்கிக்கு. தாழ்குழல் அனையள். இரவில் எம்மவளாய் இருக்கின்றாள் என்பது கருத்து. இனி, இரவில் அஞ்சாது குறியிடத்துக்கு வரலால் ஆடவரை ஒப்பாள்; வைகறையில் மலர்வேய்ந்து பொய்தல் நயத்தலால் பெண்களையொப்பாள் என்பாரும் உளர்.

252. புனல்போல் உள்ளம்படர்ந்த. ஓரை உழப்பின் - விளையாட்டு முயற்சியில். வெள்ளம் படர்ந்தன்ன. கள்அம்பு - தேன். நினது உள்ளம் விரும்பிய உருவத்தள். உருவத்தள் யார்? கண்மானவரை. கணவரை - கணவாய்; அதாவது இரண்டு மலையின் இடையேசெல்லும் வழியை யுடையது.

தலைவிவண்ணம் தலைவனியம்பல்

ஒளிதங் கியமதி தங்குஞ் சகோரமொண் வள்ளையின்வாய்க்
களிதங் கியசுற வேறுக டுங்குங் கதிர்க்குவட்டின்
அளிதங் கரும்பொற் கணிமலர் பூக்கு மகன்கடல்வாய்த்
தெளிதங் கியபன் மணியிமை யாநிற்குந் தேமொழிக்கே. 253

கொவ்வைவாய்ப்பாங்கி செவ்வியிலளென்றல்

செவிமரு ளூசலுந் தேங்களிச் சந்தத் திணிமுலைநேர்
சவிமணிப் பந்துங் கவுணிகர் தண்ணீர் நிலையுமகில்
அவிமலி கூந்தல் பொருமலர்க் காவு மழுகுபெரு
கவிமணி மோலிக் குரிசிலெம் மாது கலப்பின்றியே. 254

செம்மலிதுவே செவ்வியாமென்றல்

திருந்தவன் தாளுங் குமாரலிங் கேசனைச் சிந்தைவைத்துப்
பெருந்தவன் தாவி னுழப்போர் கடுப்பப் பிணைந்தவுள்ளம்
வருந்தவன் தாமரை மாதுநின் றுலது வேமம்மர்நோய்
பொருந்தவன் தீர்த்தென்னை யோம்புறும் வாயில் புனமயிலே. 255

குறையயர்ந்தேனெனப் பாங்கிகூறல்

வருக்கைப் பொழிலை நிணைந்தெழு மும்மத வார்மருப்புப்
பருக்கைப் பொருப்பெதிர் வாழையங் கானம் படர்சிலம்பின்
இருக்கைப் பொருப்பர் புதல்விய ரேங்குறை யீங்கயர்ந்தாம்
திருக்கைப் பொருவடி வேற்பொலந் தார்ப்புயத் தேர்மன்னனே.

---

254. அகில் அவி - அகிற்புகை. ஆவி என்பது அவி என்றாயிற்று. கவுள் நிகர். ஏதோ ஒரு கவலையுடன் இருக்கிறாள் என்பது கருத்து. துறை: செவ்வி - சமயம்.

255. தாவின் - வலிமையோடு, வருத்தத்தோடு. எனது மம்மர் நோய் பொருந்திய அவத்தை. வாயில் - தூது. அவ்வாறு நிற்றலே வாயில் எனவே, அதுவே குறைகூறுதற்குரிய சமையம் என்பது. கடுப்ப ஓர் செய்கையுமின்றி நின்றால். கடுப்ப விரும்பிய உள்ளம் என்பாரும் உளர். பிணைந்த - விரும்பிய.

256. பருத்த கையையுடைய பொருப்பு - யானை. பொருப்பர் புதல்வியராகிய எமது குறையை மறந்தோம். குறை என்றது தலைவன் பாங்கியினிடத்துத் தலைவிக்குச்சொல்லும்படி சொன்னமையை. திருக்கை - ஒருவகைமீன். மீன்போன்ற வேல். யாம் பொருப்பர் புதல்வியர், நீ எம்மிடத்துச் சொன்ன குறையைமறந்தாம்.

கேடும்பீடுங் கூடியமுகத்தான்
நீடியகுறையை நாடியவனுரைத்தல்

உணங்கு குலாவிய தோரையஞ் சாரலொண் பூம்பொழில்வாய்
அணங்கு கொலாமுரை யாயென் றெதிர்த்தலு மாயிழையாய்
பிணங்கு குலாய பெரும்பணைத் தோட்பிறை வாணுதலாட்
கிணங்கு குலாம்விழி முத்துக மூர லிலங்கினவே. 257

நீக்கலினாகிய நிலைமையவனுரைத்தல்

தண்டலை வானரம் வானரப் பூஞ்சுனைத் தாழ்வரைவாய்
மண்டலை நாட லரிதாஞ் சிலம்பின் மறவர்குழாம்
எண்டலை யேலா ரிடர்பெரி தாற்றுந ரென்னைசெய்கோ
புண்டலை வேய்ந்து பொறிதும்மு வேற்கைப் புரவலனே. 258

அந்நிலைநோக்கி ஆண்டகை கலங்கல்

பின்னிலை வேட்டல் பெரிதினி தேபின்னர் மாறிநின்று
தன்னிலை தேய்ந்து தணியா ருயிரைத் தழீஇக்கொடொன்று
முன்னிலை யீச னருள்போற் றழுவி முனிதுயர்கூர்
என்னிலை நோக்கி யிரங்கவல் லார்ப்பெறி னேழைநெஞ்சே. 259

---

257. உணங்குதல் பொருந்திய மூங்கிலரிசியையுடைய. உணங்குதல் - காய்தல். தோரை - மூங்கிலரிசி. பிரிந்த தலைவன் வந்து கூடியபொழுது தலைவிக்குத் துக்கமும், மகிழ்ச்சியும் உண்டாம்; ஆதலால், அங்ஙனம் கூறினார். அணங்கோ என்றமையால் வேறொருத்தியையும் பார்த்திருக்கின்றான்போலும் என்று அழுகையும், வந்தமையால் மகிழ்ச்சியுமுண்டாயின எனினும் பொருந்தும். யான் தலைவியை நீ அணங்கோ என்று எதிர்தலும் இலங்கின. துறை: முகத்தால் தெய்வப்பெண்ணோ என்றமையால் இவன் ஒரு தெய்வப்பெண்ணை விரும்பினனோ எனக் கண்ணீரும், அஃதன்றி, என்னைத்தான் தெய்வப்பெண் என்று புகழ்கின்றானோ என மூரலும் இலங்கப்பெற்றாள்.

258. வானரமானது அடிவரையில் மண்டுதலை நோக்கல் அரிதாகிய. வான் அரவு - இராகு கேதுக்கள். அரவைத் தோயும்படியான சுனை. மண்தலை. எண்ணுதலை ஏலாரெனவே அளவிலாதவர் என்பது. எண்தலை - எண்ணுதலை. நீ உன்னிடம் இரு, தலைவி வரையில் இருக்கட்டும் என்பது அடைமொழி.

259. தழுவி இரங்க வல்லாரைப்பெற்றால் அவர் பின்னின்று வேட்டல் மிக இனிதாகும். பெத்த காலத்தினின்றும் மாறி முத்திக்காலத்தில் நின்று தன்னிலைகெட்டுத் தணிந்த உயிரை என்க. தன்நிலை - ஆன்மாவின் தன்மை. தன்மை என்றது, ஆணவத்தின் நிலைமை. பின்னர் மாறி நிற்றல் - பாசம் பசு பதி என்பது பதி பசு பாசமாக மாறிநிற்றல்.

புரவலன் மடலே பொருளென மதித்தல்

பஞ்சாய் முருந்தின் முறுவற் பவளச்செவ் வாய்க்கிரங்கி
நெஞ்சா யலேகிளே யில்லார் நெடியர் நிழல்சிறியார்
துஞ்சா வனந்த ஞெருதுப்பா ரெனினுந் துலங்குநம
தெஞ்சா விடும்பை யெளிதொழிப் பாரிங் கிருந்தனரே. 260

மடலேற்றுலகின் வைத்தவனுரைத்தல்

என்பா லருளுங் குமாரலிங் கேசனை யேத்தலர்போல்
அன்பா லிணங்கு மணங்களே யார்பொருட் டாவிநைய
வன்பால் விலக்கிய பெண்பெறின் வையத் தவர்க்குமன்னும்
ஒன்பா னுயிருற்ற பெண்ணன்றி வேருே ருரனில்லேயே. 261

ஒண்மடல்யானே ஊர்வலென்றல்

கவளத்த வேழக் கவர்மணிப் போர்வைக் கடவுள்விழை
தவளத்த நீறென் பெருக்குந் தரித்துத் தருமடன்மா
பவளத்த வாய்நுங்கை பண்பினைப் பாடிப் படங்கைதழீஇத்
துவளத் தடாய வுளத்தாய்நும் மூர்வயிற் றாண்டுதுமே. 262

தழீஇக்கொண்டு ஒன்ருகின்ற கடவுள் அருளைப்போல. முன்னிற்கும் ஈசன். தழுவிப்பெறின் அவர் பின்னின்று யான் வேட்டல் மிகவும் இனிதாகும். வேட்டல் - இரத்தல். இரங்கவல்லார் என்றது தலைவியை. துறை: அந்நிலை - அக்குறியிடத்தை.

260. நெஞ்சு ஆயலே - மனமே ஆராயாதே. பஞ்சாய் - ஒருவகைக் கோரை. அனந்தல் - மயக்கம். பனைமடல் தன் உடலைக் கிழித்ததனுல் உண்டாகிய மயக்கம் என்க. பனையைப்பார்த்து 'கிளையில்லார் நெடியர் நிழல் சிறியார்' என்ருன். கிடைப்பாளோ கிடைக்கமாட்டாளோ என்று அவளுக்கு இரக்கமுற்று மனமே ஆயாதே.

261. அன்பால் என்னேடு சேர்ந்த. துறை: மடலேற்றை உலகின் மேல் வைத்து அவன் உரைத்தல். வன்பால் - வலிமையால். பெண் - தோழி. தலைவனை விலக்கிய தோழியைப் பெற்ருலன்றியில்லை. ஒன்பதாம் உயிர் ஐ, அது ஏறிய பெண்ணை பனை.

262. மா - குதிரை. நுமது தங்கை என்றது தலைவியை. படம் - தலைவியின் உரு எழுதியபடம்; எழுதுபடம். தடாய - முரடாகிய, கடினமான. வேழத்தினின்றும் கவர்ந்த.

அறனின்மைகூறி ஆங்கவண்மறுத்தல்

கலைமுற் றும் வையத் திழவா தளிக்குங் கடனடுத்த
இலைமுற் றும் வார்மட லேந்தக லல்கு லிடைநெருக்கும்
முலைமுற் றும் பொன்விளை மாதினை வீழ்ந்து முரித்தணியின்
சிலைமுற் றுந் திண்புய யார்கண்ண தாகுந் திருந்தறனே. 263

விலகிய பாங்கிக்குத் தலைவனெதிர்விளம்பல்

அருளு மருளு நலனுமெ லாம்பண் டறிவுடையேன்
இருளு மருளு மிணர்மலர்க் கூந்த லிலங்குதொடித்
தெருளு மருளும் வழங்குஞ் சிதரிக் கண்பொருட்டு
மருளு மருளு மடலுடை யேனின்று வாணுதலே. 264

எழுதரிதென்ன ஏந்தலை விலக்கல்

பொழிலொன் றுபூங்குழ லல்லா ளவயவம் பொறப்வெலாம்
எழிலொன்ற நாடி வரைந்துகைக் கொள்ளினு மின்பமிக்காம்
தொழிலொன்றுந் தீட்டவல் லாய்வல்லை யேற்றுனை யப்புகுக
தழலொன் றுவேற்கை தளிரொன்றி நின்ற தனிவள்ளலே. 265

கருத்துறிற்றெழிலுங் காட்டுவலென்ன
வருத்தியிற்றலைவன் அவட்கெதிர்கிளத்தல்

நவையவங் கட்ட குமாரலிங் கேச னளியருளால்
அவையவங் கட்டழ கார முழுது மமைத்துவல்லே
சுவையவங் கத்தொழில் காணிய வாவியுந் தோற்றவல்லேன்
கவையவங் கொத்துழன் மால்வரை மாது கருத்துறினே. 266

---

263. கலையை எழுதும்படியான பனைமடல். இலைமுற்றும். முலையில் தேமல் விளைந்த மாது. மடலைமுறித்து அணியின். நூலை எழுதும் பனை மடலை ஊர்ந்தால் பாவமன்றோ என்றபடி.

264. அருளும்படியான நலனும். அறிதலுடையேன். தெளிவையும், மருளையும் வழங்கும்படியான கண். மருளையும் மருளும்படியான மடலையும் இப்பொழுதுடையேன்.

265. தொழில் - சொல், நடத்தல் முதலியன. வல்லாய் - வலி யில்லாய். மடல் ஏறலிற்புகுக.

266. மாதினிடத்துச்சென்ற என்கருத்து என்வசப்படின். கவயவம் - காட்டுப்பசு.

மெய்த்திறம் விளம்பினை யாயின் வெஃகலை
பொய்த்திறம் விளம்பினை போலுமென்றெள்ளல்

உருத்தக வாக்கி யுயிரும் புகுத்து முயர்வுவல்லின்
கருத்தழி முன்னமெம் மாதே யெனவொரு கன்னிதனைத்
திருத்தக வாக்கிக்கைக் கொண்டமை யாது திறனிலர்போல்
வருத்தமிக் கைய விரப்பதென் ஞெவெங்கண் மாட்டுவந்தே. 267

எள்ளற்பாங்கியை இறைவனெதிரெள்ளல்

முட்டாட் கமல முதல்வனைப் போலெம்மை முன்னிலைகொல்
கட்டா ரலங்கற் கருங்குழ லாய்கரு மால்சிரங்கை
வட்டா டியதிறல் வீராட்ட காசத்தெம் மான்வகுத்த
ஒட்டா ரவையின் மறையோ டுலக வொழுக்கயர்த்தே. 268

மடலினூக்கம் வரவரத் தணித்தோள்
அடல்வேலண்ணல் ஆற்றவுரைத்தல்

துணிந்தொன் றும் யான்சொல்ல வல்லேன் சுடரிமைக்குந்தரளம்
அணிந்தொன்று கொங்கை யணங்கனை யாளடித் தாமரைக்கீழ்ப்
பணிந்தொன்ற நின்னுளத் தாதர வோதிப் பயிற்றினல்லால்
தணிந்தொன்று வார்க்கருள் வோயிது யான்செயத் தக்கதுவே.

மதியுடன்படுப்ப வலித்தபாங்கி
கதுவியவுரிமை மதியொடு கிளத்தல்

திருகிய வாவி யிருள்வழி நிற்பச் செறிந்தவிருள்
அருகிய வீச னருளு மதன்வழி நிற்பதுபோற்
பெருகிய நீரிற் பெயரி னுடங்கு பெயர்குவளால்
கருகிய பூங்குழற் காரிகை யீதவள் காதன்மையே. 270

---

268. பிரமன் திலோத்தமையைச் சிருட்டித்துத் தானே புணர்ந்தான். வட்டு - ஓர் விளையாட்டு. சிரத்தைக் கையில் வட்டாக்கி ஆடிய. வேதத்துக்குப் பகைவராகிய புறமதக் கூட்டரைப்போல அயர்த்து. ஒட்டார் - பகைவர். வகுத்தமறை ஒழுக்கோடு. அயர்த்து முன்னினையோ.

269. அவளை அதில் பயிற்றின் அல்லால் வல்லமையிலேன். உன் உள்ளத்து ஆதரவின் வழியே பயிற்றினல்லால்.

270. இருள் - பாசம். முன் இரண்டடியும் முத்திக்காலத்தில் நிற்கும் முறையை ஒழித்துப் பாசம் மேற்பட்டிருக்கும் பெத்தகாலத்தை உணர்த்தின. பாசத்திற் பசுவும் பசுவிற் பதியும் அடங்கிநிற்பதுபோல.

கோற்ருெடித் தலைவியைக் குறைநயப்பித்தற்குத்
தெள்ளியபாங்கி மெள்ளவுரைத்தல்

மூவரு மேத்துவ தொத்தது மூரிச் சிலைமுதன்மை
யாவரு மாற்ற வணங்குவ தொத்த திருங்கொடைக்கை
காவரு தோற்றங் கவற்றுவ தொத்தது காவலரிங்
காவரு தோற்ற நகையது நீயு மறிவதுண்டே. 271

அறக்கழிவுடையன அலர்முலைப்பாங்கி
குறிப்பு வெளிப்படுத்தக் குறித்து உரைத்தல்

வயமான் றுருவுநர் போலடுப் பார்நென்னல் வாயெனக்குக்
கயமா மலரன்ன கண்ணுய் கருத்து நெகிழ்வித்தங்கே
புயமார் தரவண்மிப் புல்லினர் வனசொலிற் போக்கவின்றும்
பயமார் பொழிலினர் காணுதி நீயும் பரிசடுத்தே. 272

ஆங்கவன்தளர்வு பாங்கிகூறல்

பிடியொடு தோன்றிய குஞ்சர நோக்கிப் பிடித்துணங்கும்
கடியொடு தோன்றிய கண்ணியொ டென்னைக் கடைக்கணித்துக்
குடியொடு தோன்றிய கொள்கையி ஞய்குழை கிற்பினல்லா
தடியொடு தோன்றுந் தொழில்புரி யார்பித்தி ஞழ்ந்தனரே. 273

அது - ஆவி. பதியைக் கூறுவார் அப்பதியின் அருளைக்கூறினர். பெருகிய சலத்தைப்போல. யான் பெயரில். ஆவி இருள்வழி நிற்றலால் ஈசன் அருளும் அவ்விருள்வழி நிற்குமாறுபோல என்வழித் தலைவி நிற்பாள் என்றலும் ஒன்று.

271. துறை: குறை - தலைவனது குறை. தலைவியைநோக்கிப் பாங்கி சொன்னுள் என்க. சிலையொத்தது, முதன்மையொத்தது, கையொத்தது. கா - கற்பகம். இங்கு ஆவருதோற்றம்.

272. மானைத் துருவுநர் போல. நென்னல்வாய் நெகிழ்வித்து. எனக்கு என்றது பாங்கியை. தலைவியைப் புணர்ந்தமையைத் தன்மேல் வைத்துக் குறிப்பாகக்கூறினுள். துறை: அறிவுக்கு அழிவுடையனவற்றைக் குறித்து உரைத்தல். அது கருத்து நெகிழ்வித்து என்பதனுற்பெறப்படும். அறிவுக்கு என்பது அறிக்கு எனத்தொக்குநின்றது. அறிவு கழிவுடையன வற்றைக் குறித்துரைத்தல் எனவே கருத்து நெகிழ்தலைக்கூறல் என்பது மொன்று.

273. கையில் ஏந்திப்பிடித்து உணங்கும்படியான கண்ணி. காலொடு தோன்றும் தொழில் - நடத்தல். நடத்தல் தொழில்புரியாராய் ஆழ்ந்தனர். நோக்கி வருந்துவதல்லாது.

மடன்மாவேற வலித்தனன் என்றல்

விண்ணேங் கியபெண்ணை மாமட ஞேக்கும் விழையகிலா
மண்ணேங் கியவெருக் கின்முகிழ் நோக்கும் வரைகுவன்போல்
எண்ணேங் கியவென இன்னுரு நோக்கு மிதுவுமுண்டால்
பண்ணேங் கியமொழி யாயறி யேனவன் பாவகமே. 274

கவர்பொருட் பாங்கிக்குக் கவர்பொருள்வகையால்
என்னுேத்தனேயென இறைவிகூறல்

உயங்கிய வண்புல வோர்க்கருள் செய்ய வொலிகடல்புக்
கியங்கிய வல்லவு ணக்கனே மாய்த்திருந் தோடுணேயாத்
தயங்கிய மாமறை யோம்பலிற் ருழ்குழ லாய்வரைவாழ்
நயங்கிளர் நம்பிக்குங் கான்வளர் நம்பிக்கு நாட்டமொன்றே. 275

பாங்கி தன்மேல் படுத்தியபொருளே
ஆங்கவள்தன்மேல் ஆக்கினள் கிளத்தல்

வானெனத் தோற்றிய வீராட்ட காசத்து வள்ளல்பெம்மான்
யானெனத் தோற்றிய மாமல மாய்த்திட் டிருந்தவத்தோர்
தானெனத் தோற்றிய செய்தியெல் லாந்தனக் காக்கிவிடும்
கானெனத் தோற்றிய பூங்குழ லாய்கடல் சூழ்நிலத்தே. 276

---

274. வரைகுவன்போல் - எழுதுபவனேப்போல. பாவகம் - இயல்பு, கருத்து. விழையகிலா எருக்கு.

275. தலேவனும் எனக்கு அருள்செய்யச் சோலேயிற்புக்கு வேழத்தை மாய்த்துக் களவொழுக்கத்தை ஓம்பலால் என்றும் ஓர் பொருள்படலால் கவர்பொருள் ஆயிற்று என்க. தோள்துணேயாகக் களவொழுக்கத்தை ஓம்பலில். பாங்கிமுன் கவர்பொருளாகச் சொல்லியது தலேவியின் செய்கை யைத் தன்மீது வைத்துரைத்தமையாம் என்க. மறையோம்பல் சிலேடை. நாட்டம் என்பது அபிப்பிராயம்.

276. பாங்கியின் கூற்று. பெம்மான் தவத்தோரது செய்கை எல்லா வற்றையும் தன்னுடையதாக்கிவிடும். எல்லாம் சிவன் செயலே எனத் தோற்றிய செய்தி. தான் - சிவன். துறை: தலேவி கிளத்தல்.

மடலரிதாயினும் வரைபாய்வுண்டென
அடல்வேலண்ணலை அஞ்சினளெதிர்தல்

வெள்ளாங் குருகு மகன்றிலுந் தூங்கும் வியன்குடம்பை
உள்ளாங் கருவு முலப்பில தோங்கு பனையெனினும்
கள்ளாங் கொழுகும் வரைபாய் தலுமுண்டு காதனெஞ்சே
தள்ளாங் கடிதெதிர் வாந்தணப் பாரந் தளர்வினையே. 277

குறைநயப்பித்தபின் கொய்தளிரேந்திக்
கறைபயில் வேலோன் கண்டனன் இரத்தல்

ஆலங் கனிந்த விழிக்கா விகளள்ளி யள்ளியுண்ட
சீலங் கனிந்தவென் னுருயி ரோடுஞ் செறிந்தவுளம்
கோலங் கனிந்த காத்தா மரைதளிர் கொண்டளிப்பின்
ஏலங் கனிந்த குழலாய் பழியன் றியைபுடைத்தே. 278

அரிது மறைவிடுத்த பெருமையைத் தெரிப்பான்
கையுறைவகையில் பெய்வளை விலக்கல்

களம்பயில் கண்டத்த னேகம்ப நாதன் கருணைவளர்
வளம்பயின் மாந்தளி ராகவை வேலெங்கு லத்திறைவன்
உளம்பகை யென்ன வொருமா வெழுதலு முள்ளவெலாம்
இளம்பகை யென்றிகழ் வாரெங்கு லத்தோ ரெழின்மன்னனே.

---

277. தான் நினைத்தகாரியம் முடியாவிட்டால் மலையின் உச்சியில் ஏறி வீழ்ந்திறப்ப மறுபிறப்பில் அக்காரியம் சித்திக்கும் என்க. வெள்ளாங் குருகு - ஓர் பறவை. மகன்றில். குடம்பையுள்ளே ஆகின்ற முட்டையும். குடம்பை இருத்தலால். அறம்நோக்கிப் பனையை வெட்டாமற்போனாலும். கள். ஆங்கு நாயகனைத்தள்ளாம்.

278. உளம் அளிப்பின் - நின்னிடத்தில் சென்ற என் உள்ளத்தைக் கொடுத்தால். பழியன்று.

279. பெய்வளை - பாங்கி. ஆக: வியங்கோள். களம் - விடம். இறைவன் - முருகன். ஒரு மா - சூரனுகியமா. உட்பகையென்ன. மாந்தளிராய் இருந்தாலும்.

இதுவுமது

மாசின் மணியை வலம்வரும் போதி வனத்தரசின்
ஆசின் மணித்தழை யாயினு மேனை யரசைவென்ற
காசின் மணியக லல்குலிற் சேர்த்துங் கடனரிதால்
தேசின் மணியெறுழ்த் தோளாய் திலகத் திருநுதலே. 280

இதுவுமது

காவிரி யாற்றங் கரையானைக் காவெண் கனியுகுக்கும்
பூவிரி நாவற் புதுத்தழை யாயினிப் பூதலத்தில்
பாவிரி பாவலர் பாவினுங் கேட்டறி யாரெமர்கள்
தாவிரி வேல்வலத் தாயது வேற்குந் தகுதியின்றே. 281

இதுவுமது

உடம்பிடி யன்னகண் ணாளர சாளு மொலிமதுரைக்
கடம்பணி பூந்தழை வீழ்வதொன் றுனுங் கதிர்முடியோய்
அடம்பணி செஞ்சடை யண்ணறன் பிள்ளைக் கணிபடுத்திட்
டிடம்பட வைப்பதென் றத்தழை யென்று மிறுத்திலமே. 282

இதுவுமது

மந்தா நிலமுந் தமிழும் வளரு மலயவெற்பில்
சந்தார் தழைகொண் டருளநின் றுய்தகை சாலுரவோய்
கந்தார் மணிப்புயத் தார்பலர் மார்புங் கலப்பதெனப்
பந்தாடுஞ் செங்கையெம் பாவைதொ டாளந்தப் பாதவமே. 283

---

280. போதிவனத்து - அரசவனத்து; அது ஊரைக் குறித்தது. மாசிலா மணியை வலம்வரும் மேன்மையுடைமையால் அல்குலிற் சேர்த்தும் கடன் அரிது என்றாள். திருநுதலாகிய தலைவியானவள் சேர்த்தும் கடன்.

281. ஆனைக்காவிலன்றி வேறோரிடத்தில் இன்மையால் அவ்வருமை பற்றிக் கேட்டறியார் என்றாள். தாவு இரி; தாவு பகை, வருத்தம். வெண்ணாவல் அரிது என்க.

282. கண்ணாள் - மீனாட்சியம்மையார். அண்ணல் வைப்பது. பிள்ளை - முருகவேள்.

283; பாதவம் - மரம்; ஈண்டு ஆகுபெயராய்த் தளிரை உணர்த்திற்று.

இதுவுமது

அடுக்கத் தனிநலம் வீசுஞ் சுசீந்தரத் தண்ணலெதிர்
கடுக்கைத் தழையுங் கடிமலர்ப் போதுங்கை கூப்பினல்லால்
உடுக்கத் தகுவது மொண்முலைப் பூங்குழ லூடணியாத்
தொடுக்கத் தகுவது மல்லகண் டாய்சுடர்ப் பூணவனே. 284

இதுவுமது

கற்பகத் தேந்தழை மேருவின் றென்சார்க் கலித்தெழுந்த
பொற்பகத் தேய்க்கும் பொலங்கெழு நாவலம் பூந்தழையும்
வெற்பகத் தேயெங்கண் மாதணிந் தால்விண் ணரமகளொன்
றற்பகத் தேதுமில் லாமலை வாழ்நர்க ளஞ்சுபவே. 285

இதுவுமது .

ஊட்டிய தென்ன வொளிநிறப் பூந்தளி ரும்பருந்தாழ்
கோட்டிய வேழச் சிலையான் குறித்து விடுங்கணையுள்
வாட்டிய வெந்துயர் வாளிகொண் டீயு மரத்தமென்றல்
தீட்டிய வண்புக ழோய்வஞ்சிக் கெங்ஙனஞ் சேர்ப்பதுவே. 286

இதுவுமது

நிரைக்கு மணிகுவ டோங்குந் தணிகை நெடுங்கிரியின்
விரைக்கும் வியன்சுனைச் செங்கழு நீர்விண் ணகந்தனக்கும்
தரைக்கு மடுப்பரி தான்ஞான சத்தி தரன்புயத்துக்
குரைக்கும் வகையன்றி யேற்கும் வகையில்லை யுத்தமனே. 287

---

284. தழை உடுக்கத்தகுவதும், போது குழலில் தொடுக்கத்தகுவது மல்ல. எதிர்நிற்கும் கடுக்கை. மறவர்க்கு ஆடை தழையாகலின் அதற்கு இயையக் கூறினள். தன்னிடத்தே வந்து சேர்ந்தால் நலங்கொடுக்கும் அண்ணல் என்க.

285. கற்பகத் தேந்தழையும் என விரிக்க. கலித்து - தோன்றி.

286. அசோகு, பூந்தளிர் மரத்தது.

287. புயத்துக்கு உரைக்கும் வகையன்றி.

சேட்படுதலைவன் சேட்படைப்பாங்கி
கோட்படலின்றிக் கூடிய நினைத்தல்

அருளுந் திறத்தினள் போற்பசைத் தீஞ்சொ லறைவதல்லால்
இருளுந் தொழுங்குழ லாட்ககத் தேபசை யேதுமில்லை
மருளுந் தகநின் றினைவதி னுவதென் வன்னெஞ்சமே
பொருளுந் துணையுமுன் புல்கிய வேமப் பொழிலிடமே. 288

குறிப்பறிபாங்கி மறைத்திடினென்னை
உள்ளியதரிதென வள்ளலைத்தழாஅல்

தந்தை வயிற்றி னிருந்தன்னை பாங்கர்த் தவிர்ந்தகரு
அந்தி லுயிர்த்த வழியினல் லாலவன் மீட்டணைதல்
எந்த வழியினு மில்லைகண் டாயிலை வேற்கரவா
முந்தை மணமின்னுங் கூடுங்கொ லோமுகில் சூழ்பொழிற்கே.

தளர்ந்தனை பெரிதெனத் தளர்வுநீக்கல்

கொல்லி மருங்கெறும்ப் பூதம் புணர்த்த குவவுமுலை
வல்லி மருங்குலம் பாவைகண் டென்னவண் ணம்பிறிதாய்
எல்லி மருங்கிருந் தாமரை யென்னவி ருந்தனையால்
சொல்லி மருங்கக லாத்தொழில் வாய்ந்த துணர்க்கரனே. 290

அன்புற்றதோழி அசதியாடல்

தழைகொண்ட தங்கை யுரைகொண்ட தாற்றனி வேட்கையுளம்
கழைகொண்ட வார்சிலைக் காமரு வேளைங் கணைகொண்டதால்
பிழைகொண்ட நெஞ்சம் பிணைந்தறி யாப்பெரு மான்களம்போல்
மழைகொண்ட சாரல் வரைவாய் நிகரில்லை மன்னவற்கே. 291

---

288. துறை: பாங்கியால் சேட்படுத்தப்பட்ட தலைமகன் சேட்படுத்திய பாங்கியின் சம்மதமின்றிக் கூடநினைத்தல். சேண் - தூரம். படை - படுதல். பசை - அன்பு. பொழிலிடமே பொருளும் துணையும் ஆவன.

289. துறை: என்னை மறைத்திடின் - எனக்கு மறைத்தால். அவன் - அத்தந்தையிடத்து. உன்னுல் முன்பு அநுபவிக்கப்பட்ட தலைவி என்னுடைய காவலுக்கு அடங்கி இருப்பள் ஆகையால் என் சம்மதமின்றி உனக்கு மேவ அரிது என்றபடி.

290. கொல்லிமலை. புணர்த்த - பிடித்த. கரத்தின் தொழிலைச் சொல்லி முடித்துப் பக்கத்தே அகல முடியாது என்க. தொழில் ஈண்டுக் கொடை என்க.

291. துறை: அசதி - பரிகாசம், சிரித்துப் பேசல். அங்கையானது தழைகொண்டது; உரையானது வேட்கையைக்கொண்டது; எனவே,

இன்னகை கண்ட மன்னனுறுத்தல்

இடித்துத் தடித்து வழங்கிய நீல வெழிலிமழை
பொடித்துத் தரணி புரப்பதன் றேபுரை தீர்கிளவி
நொடித்துத் தரள நகையெழில் காட்டி நுவல்குறையை
முடித்துத் தருவதற் கையமுண் டோவென் முனிநெஞ்சமே. 292

கையுறை புகழ்ந்து காவலன் நீட்டல்

வெள்ளி வரையினு மேரு வரையினும் விண்ணினுமில்
வள்ளி வரைநும புனத்தய னென்னல் வளர்ந்ததெய்வக்
கள்ளி வரைதம ருங்கணி வாய்க்கடி யார்ந்ததிது
உள்ளி வரைவுசெய் தேனுமர் வீழு முகப்பினதே. 293

பாங்கி கையுறை தாங்கினள் உரைத்தல்

தாக்கிக் கடுகிய மும்மத வேழந் தனியிடரின்
நீக்கிக் கருணைசெய் தாய்நிலை யாத துயரழுந்த
நோக்கிக் கடிமலர்ப் பூந்தழை நுன்கைய தெங்கரத்த
தாக்கிக் கொளாது விடினற ஞேவன் றருளுமன்றே. 294

கையுறை ஏலாக் கடனிலையென்று
பையரவல்குற்குப் பாங்கி பகர்தல்

புல்லரும் பான பருவமெ லாஞ்சென்று போதுகொண்ட
மெல்லரும் பாதித்தன் முன்னெகிழ்ந் தாங்குவெய் யோன்கனி
சொல்லரும் பாகிற்குந் தோறுங் கரைந்த துளக்கின்மன [வாய்ச்
நல்லரும் பார்குழை நோக்கக் குழைந்தன்று நன்னுதலே. 295

வேட்டைக்கு வந்தேன் என்பர் என்பது. தழைகொண்டதற்கு விரோதமாக வேட்டைக்கு வந்தேன் என்ருர் என்பது. உளமானது ஐங்கணை கொண்டது. வரையைப் பெருமாஞகவும் அதில் மொய்த்த மேகத்தைக் களமாகவும் கொள்க.

292. மேகம் இடித்தாற்போல வன்சொற் சொல்லி. நொடித்து - சொல்லி.

293. கள் இவர் ஐது அமரும். உமக்கென்றே அத்தழையை நிச்சயித்தேன். உகப்பு - உயர்ச்சி. வரைவு கைக்கொள்ளலும் ஆம்.

294. தலைவியைக் கொல்லவந்த வேழம். நீ துன்பமடையப் பார்த்துக்கொள்ளாது விடின்.

295. பருவம் எலாம் சென்று - பருவமெலாம் நீங்கி. வெய்யோன் - தலைவன், விருப்பமுடையவன் என்று பொருள்படும். வெம்மை - விருப்பம்.

கையுறை ஏற்றற்குக் காரணம் விளம்பல்

தன்னுயிர் சாயினுஞ் சாய்கவென் றுன்னித் தறுகணொடு
நின்னுயிர் மேல்வந்த நீள்கரக் குஞ்சர நீக்குமவர்
மன்னுயி ருசலி னிற்பவுங் கைத்தளிர் மாழ்கவுமிங்
கென்னுயி ராரணங் கேபார்த் திருக்க வியல்பில்லையே. 296

ஏற்பதின் ஏலாமையிற் பழிமிகுமெனப்
பாற்படத் தலைவிக்குப் பாங்கி பகர்தல்

வினையின் விளைவினை யார்கடப் பார்விரி பூங்குழலாய்
இனையின் வளம்புனந் தீராக் கரிவென்ற செல்வரங்கை
நனையின் மணித்தளி ரேற்பதி னூங்கு நவையுளதாம்
பனையின் மடல்புனைந் தியாவரு மார்ப்பப் படர்தரினே. 297

தோகையைக் கையுறை தோழி ஏற்பித்தல்

விண்ணத் துயர்ந்த சிவபுரத் தெல்லை விரிபொழிலும்
வண்ணத் துயர்ந்த விதற்கிணை யில்லா வறியவென
எண்ணத் துயர்ந்த விறைவரிவ் வோங்க லெழுந்ததெய்வத்
தண்ணத் துயர்ந்த கணித்தளி ரீத்தனர் தாழ்குழலே. 298

தலைவன் கனிவாகச் சொல்லுந்தோறும் என் மனமாகிய நல்லரும்பானது அவன் கரத்திலுள்ள தளிரைநோக்கிக் குழைந்து. குழை - தளிர். அரும்பு என்பது அரும்பர் எனப் போலியாய்ப் பின்பு அரும்பார் என்று எதுகை நோக்கி நீண்டது.

296. உன்னி நீக்குமவர். தன் - தலைவன். என் உயிர் இருக்க என்று இயைக்க.

297. தளிரை ஏற்றால் ஓர் தலைவனைக் கூடினாள் என்று யாவரும் பழி கூறுவாராயினும், அப்பழி சிறிதாகும் என்னும் கருத்தால் துறை: 'ஏற்ப தின் ஏலாமையிற் பழிமிகும் என' என்றார். படர்தரின் ஏற்பதினும் பழியுளதாம் என முடிக்க.

298. விண்ணத்து உயர்ந்த பொழில் - தேவருலகில் உயர்ந்த கற்பகச் சோலை. வறிய என எழுந்த கணி என்க. இதற்கு என்றது கணியை.

ஏற்றவள்வண்ணம் ஏந்தலுக்குரைத்தல்

உளரிய மென்னரம் பின்மொழி யோடரிக் கண்மடவாள்
விளரிய வங்கமெ லாம்வரு டிக்கொண்ட வீழ்தளிரால்
தளரிய வண்ணம்பெற் ருள்செல்லு மாவியுந் தாங்கினளால்
வளரிய வான்மருந் தோவைய நீதந்த வண்டளிரே. 299

குறியிடந்தலைவன் கொள்ளக்கூறல்

புறங்கொண்டு பார்ப்பி னிருளாய்ப் புகுந்தகத் தேகலவின்
நிறங்கொண்ட பன்மணி நீடொளி யாய்நிவந் தோங்கியழல்
மறங்கொண்ட வேங்கை யதளுடை யான்வண்ண மானுவதால்
அறங்கொண்ட செஞ்சிலை யோயெங்கண் மாத ரணிபொழிலே.

நீடமைத்தோளியோடு ஆடிடம்படர்தல்

அரும்பு முலையி னவிர்குவ டேங்க வமிழ்திசையின்
சுரும்பு முரலும் பொழிற்கிளி யேங்கத் துணைவிழியின்
விரும்பு நறுஞ்சுனைக் காவிக ளேங்கவென் ருடிகஞ்செல்
கரும்பு விழைபணைத் தோளாய் வளர்க்குநங் கார்ப்புனமே. 301

ஆயவெள்ள மாயத்தினகற்றல்

அப்பொழிற் சாரற் சிலர்போய்க் கரக்க வருவிதத்தும்
உப்பொழிற் சாரற் சிலர்போய்க் கரக்க வுதன்புடைய
மைப்பொழிற் சாரற் சிலர்போய்க் கரக்க வளங்கனிந்த
இப்பொழிற் சாரலின் யாந்துரு விச்சென்று மேந்திழையே. 302

---

299. விளரிய - வெளுத்த. வருடிப் பெற்ருள். முன் வெண்ணிறம் மேற்பட்டிருத்தலால் அவ்வெண்ணிறத்துள் அடங்கித் தளர்ந்துபோன செந்நிறத்தை இப்பொழுது பெற்ருள் என்க. எனவே, வெண்ணிறம் நீங்கப்பெற்ருள் என்பதாம். இனி. தளிரியவண்ணம் பெற்ருள் என்பதற்கு நின்னை இச்சித்து மெலிந்தாள் என்பாள், 'தளிரியவண்ணம் பெற்ருள்' என்ருள் என்பாரும் உளர். ஆவிதாங்கிய ஏதுவினுல் 'மருந்தோ' என்ருள்.

300. கடவுள் யானைத்தோலைப் போர்த்தலால் புறத்தே இருண்மய மாகவும், அகத்தே மணியொளியாகவும் பொழில் நிவந்தது என்க. சோலைக்கும் கடவுளுக்கும் 'ஓங்கி' என்பது வரையும் சிலேடை. அழல் - கோபிக்கின்ற.

301. துறை: பாங்கி படர்தல். வென்று ஆடுகம் - அக்குவடு முதலி யனவற்றை வெற்றிகொண்டு விளையாடுவோம். புனத்திற்செல்வாய்.

302. உப்பொழில் - உந்தச்சோலை. யாம் தலைவரைத் தேடிச்செல் வோம். பாங்கி தலைவியைநோக்கிக் கூறினுள் என்க.

குறியிடத்துய்த்து மறைபவள் உரைத்தல்

களிக்கய லன்னகண் ணுய்மயி லாடுவ கண்டொளிரும்
பளிக்கறை பூம்பொழில் வைகுதி யான்பசுந் தேன்மழையின்
துளிக்கவண் டார்மலர் குற்றுத் தொடுத்துத் துணையவந்திங்
களிக்குவல் வார்ந்தகி லாவியுண் டீழ மணிகுழற்கே. 303

தனிமைகண் டிறைவியைச் சார்ந்தவன் உவத்தல்

பூரியர் மார்பும் பொருந்து மருமத்துப் பொன்னுமைதீர்
ஆரியர் நாவு மசையு மலர்நா வகத்தணங்கும்
சீரிய நின்போன் மனத்தகத் தாதலுஞ் செல்லச்சென்று
வேரிய பூம்பொழி லுள்ளகத் தாதலு மேவரிதே. 304

வாடிடைநோக்கி வருந்தினன்போல
ஆடமைத்தோளியை ஆர்வமோடு அணைதல்

பெருத்தன தோளொடு கொங்கை மதர்த்த பிணைவிழிக்கண்
திருத்தக வல்குல் வளர்ந்தது கூந்தறெய் வங்கமழ்ந்த
குருத்தளிர் மாமை கவர்ந்தது மேனி கொடிமருங்குல்
விருத்தமென் ஞெகினக் கென்னொடு காண்டொறு மெல்குதியே.

மணந்த தலைவன் மகிழ்சிறந்துரைத்தல்

கலைமுற் றமிழ்தந் தரினுங் களங்க மதியுமுயிர்
நிலைமுற் றமிழ்தந் தரினு நெடுவரை வாய்ப்பயிலா
அலைமுற் றமிழ்தக் கடலுமொவ் வாவணிப் பூண்முலையைச்
சிலைமுற் றியவெனை நேரார் சகோரமுந் தேவருமே. 306

---

303. மழைபோலத் தேன் துளிக்க.

304. பூரியர் - கீழோர். ஆரியர் - நல்லோர். அசைதல் - தங்கல். அலர்நா - பிரமன்நா. மனத்தகத்தாதலும் தவிரப் பொழிலின் உள்ளகத்துச் சென்றாதலும் மேவரிது. பொழிலின் உள்ளகத்தாதல் புறத்தகத்தாதலைக் குறிப்பித்து நின்றது. செல்லச் சென்று - யான் வர நீயும் வந்து என்பாரும் உளர்.

305. தோளொடு கொங்கை பெருத்தன. கமழ்ந்தது என்பது துவ்வீறு குறைந்து கமழ்ந்த என நின்றது. தெய்வவாசனை. மேனி தளிரின் நிறத்தைக் கவர்ந்தது. மருங்குல் - இடையே என விளியாக்குக. ஏனைய அங்கமெலாம் சீரித்திருப்ப நீமாத்திரம் ஏன் மெலிந்தாய் என்பது. விருத்தம் - வேறுபாடு. என்னொடு விருத்தம் என். விழியாகிய கண் மதர்த்த.

306. தன் முழுக் கலைகளினாலும் அமுதம் தந்தாலும் ஈற்றில் களங்கமுடையவனாய் இருக்கும் அச்சந்திரனும், உயிர்நிலை அழியாதிருத்தற்கு

தலைவன் விடுத்தல்

செவ்வாய்ப் பவளமும் வெண்ணகை முத்துந் திரிந்துகொட்கும்
அவ்வா ளரிக்கட் கயலு மடர்குழற் சைவலமும்
எவ்வாயுந் தோன்ற வியலுநின் னைய மெனுங்கடலுள்
ஒவ்வா வுவவு மதிபோற் புகுதக வொண்கொடியே. 307

தலைவியைப் பாங்கி சார்தல்

கொடியவுங் கோட்டவும் பல்லவந் தீண்டிற் குழைதருநின்
தொடியவுந் தூக்கிப் பறிப்பன வோதுக டீரனிச்சம்
படியவுஞ் சாயு மணிநூ புரப்பதப் பாவையிங்கே
கடியவுந் தேர்ந்து கொணர்ந்தேன் செறிந்த கருங்குழற்கே. 308

ஏதுவாயுள்ள அமுதம் தந்தாலும் ஈற்றில் மந்தரகிரி எக்காலத்தும் தன் மீது பயிலப்பெறுத கடலும் முலையினளை ஒவ்வா. அச்சந்திரகிரணத்து அமுதுண்ணும் சகோரமும் கடலமுது உண்ணும் தேவரும் எனை ஒவ்வார் என்றவாறு.

ஒரு காலத்தில் சிறிது இன்பமும், ஒரு காலத்தில் பெரிது இன்பமும் என்னும் பகுதியில்லாது கூடியகாலத்திலெல்லாம் பெரிது இன்பமே நல்கும் தலைமகட்கு, கலை குறைந்த காலத்தில் சிறிது அமுதமும் கலை நிரம்பிய காலத்தில் பெரிது அமுதமும் நல்கும் சந்திரனை உவமையாக்குதல் பொருந்தாது. பதினறு கலைகளும் நிரம்பியிருக்கும் காலத்து நல்கும் மிக்க அமுதத்துக்கு மாத்திரம் உவமையாக்கிக் கூறினல் என்னை? எனின், அப் பதினறு கலைகளும் நிறைந்த காலத்து அமுதம் மிக நல்கினும் (உள்ளத்தில் களங்கம் வைத்து இன்பளிக்கும் வரைவிலாமகளிர் போலாது, தலைவி யானவள் உள்ளத்திலே களங்கமில்லாது எனக்கு இன்பளித்தலால்) களங்க முடையோனுகிய சந்திரன் அத்தலைவியை ஒவ்வான் என்க. சோடசகலை களும் கோடற்குக் கலை என்றெழியாது 'கலைமுற்று' என்றார். கலை முற்று என்பதில் உம்மை தொக்கது.

கடலானது மந்தரகிரியாகிய மத்துத் தன்மீது என்றும் பயிலப்பெரு இயல்பிற்று ஆகலான், அமுதம்பெறக் கருதித் தேவர்கள் தன்னிடத்துக் கூடிய காலத்திலெல்லாம் அமுதம் தரமாட்டாது. அதனுல் நான் கூடிய காலத்திலெல்லாம் இன்பம்நல்கும் தலைமகட்கு அக்கடல் ஒப்பாகாதென்க. நான் தலைவியினிடத்து இன்பத்தைப் பெற்றாற்போலச் சந்திரனிடத்தும் கடலினிடத்தும் சகோரமும் தேவரும் பெற்றிலர் ஆகையால் என்னை ஒவ்வார் என்றான் என்க.

307. கடல் என்றதற்கேற்பப் பவளமுதலாக உருவகம் செய்தார்.

308. தொடியவும் - தொடியணிந்த கையும். நின் கைகள் கொடி யில் உள்ள பூவையும், கோட்டுப்பூவையும் தூக்கிப் பறிப்பனவோ. கடியவும் - வாசனையையுடைய ஏனையவற்றையும்.

குழாத்திடைத் தலைவியைக் கொண்டுசேறல்

பூத்தரு கான மணிந்தா லெனப்புதுப் பூங்குழலின்
ஏத்தரு நாண்மலர் வேய்ந்தே னிரும்புத ரேதுணையா
மாத்தரு தீந்தினை மேய்ந்து வருடைநன் மானினத்துக்
காத்தரு நீழல் பயில்வரை யாயங் கலந்தருளே. 309

முன்னம் அறிந்தவள் மன்னவற்கு உரைத்தல்

தொண்டக மேங்கப் புதுவோர் துவன்றத்தொன் மாண்பொய் [கைவாய்
முண்டக மேந்து முருகன்கொண் டாடு முதுவிழவு
கண்டக மோகை மலர விரவு கழிப்பிச்சென்மோ
வண்டக மார்க்குங் குழலாட் குயிரன்ன மன்னவனே. 310

வந்த கிழவனை மாயஞ்செப்பிப் பொறுத்தகாரணம் குறித்தவள்கூறல்

அண்ட மகட்டி னடக்கிமென் றூகை யடைகிடக்கும்
விண்ட மலர்ப்பொழிற் குன்றக நாட்டுவிள் ளாதவன்பு
கொண்ட விவர்வண்ணம் யாதென வோர்நாட் குறுகிவினுய்க்
கண்டரிற் கோடுங்கொ லோநின் பெருமையெங் காவலனே. 311

நுணங்கிடைப்பாங்கி வணங்கிக்கூறல்

பண்ணையு மேனலங் காவலும் பாற்றியெம் பாங்கரன்பும்
எண்ணையு மாக்கிய நீயெம்மை யன்றி யிரும்புனல்கால்
கண்ணையும் வால்வளை வீழ்தளிர்க் கையையுங் காத்தருளாய்
மண்ணையும் வானையுஞ் சூழ்புக ழோய்மற வாதுநின்றே. 312

---

309. உன் குழலில் சூட்டினேன். வருடையும் மானும் இனத்தோடு தருநீழலில் பயிலாநின்ற. ஆயம். புதர்துணையாகமேய்ந்து எனவே, புதரில் மறைந்துகொண்டு மேய்ந்து என்பது. மலரைக் கானம் அணிந்தாற்போல, குழலைக் கானமாகக்கொள்க. மா - பெருமை.

310. துறை: தலைவியின் குறிப்பறிந்த பாங்கிகூறல். புதுவோர் - புதிதாகவந்தவர். தொண்டகம் குறிஞ்சிப்பறை. பொய்கை - சரவணப் பொய்கை.

311. இவர் என்றது தலைவியை. கண்தரில் - பார்த்தால்.

312. பண்ணை - விளையாட்டு. எண் - எண்ணம். எம்மையன்றி - எம்மைக் காத்தலல்லாமல். நீ என்றது தலைவனை.

வீங்குதோட்டலைவி வேளாணெதிர்தல்

முன்னா யிறுதியு மாய்நடு வாய்முழு தாயெவர்க்கும்
மன்னாய் வயங்கிய வீராட்ட காசனை வாழ்த்துநர்போல்
அன்னாய் விருந்து புறந்தரு நீர்மையி னான்றனவால்
துன்னா யெனப்புள் விலங்கினைக் கூவுநஞ் சூழ்புனமே. 313

குறிப்பறிபாங்கி கொற்றவற்கு உரைத்தல்

பகல்வந்து பன்னாட் பெயர்தி பருவரு மாலையெனும்
இகல்வந்த தின்னுங் கொழியா யெனினெவ ரேனுமெவரும்
புகல்வந்த தேர்த்தொழில் பாகனும் நீர்கநின் போக்கொழிக
தகல்வந்த வூணனி நல்குகம் வாழி தனிவள்ளலே. 314

பொழுதுநீட்டிப்பப் பொற்றொடி தளர்தல்

ஒழுகுதம் மோங்கற் புனத்தரி தேனுமொண் கிள்ளைமயில்
புழுகுகத் தூரியும் போற்றித்தம் பெண்ணொடு போதுவன
எழுகரு மேகம்வட் டிக்குநஞ் சாரற்கண் டெய்த்திலர்கொல்
முழுகிய தேமலர்க் கோதைநல் லாய்நந்த மொய்ம்பினரே. 315

துணைவன்வரவு தோழிகூறல்

பொறிவயி னீங்கி யிறைவனை நாடும் புருடனைப்போல்
வெறிவயி னார்த்த குழலாய் விரைந்துநம வேந்தர்பொற்றேர்
நெறிவயி னீந்தி வருவது காண்டிசி னீள்பொழிற்கண்
குறிவயி னீங்கி யலமரல் கண்டு குறுகுதுமே. 316

---

313. துறை: வேளாண் - கொடை. தலைவி தன் பாங்கியைநோக்கிக் கூறியவாறு. துன்னாதே என. தான் பயிர் உடைமையால் புள்ளையும் விலங்கையும் துன்னுவாய் என்று கூவும்படியான புனம். புனம் ஆன்றன. வாழ்த்துநர் ஆன்றிருக்குமாறுபோல.

314. துறை: தலைவியின் குறிப்பையறிந்த பாங்கி. யாரும் சொல்லும்படிவந்த தேர்த்தொழிலைப் பாகனும் நீங்குக. எவராலும் விரும்புதல் வந்த எனினும் பொருந்தும். புகல் - விருப்பம்.

315. போதுவன கண்டு அறிந்திலர்கொல். வட்டிக்கும் - வளையும் படியான. போதுவன அரிதேனும் என்க.

316. புருடன் - ஆன்மா. காண்டிசின்: இசின் இடைநிலை. நாம் குறியிடத்துநின்று நீங்கி நீ இல்லாமையால் தலைவன் குறியிடத்து அலமரலை யாம் ஒளித்திருந்து கண்டு.

தாமஞ்சான்ற தாழ்குழற்கிழவி
ஏமஞ்சான்ற உவகைக்கிளவி

தாமே தமதுயி ராக்கையும் வாட்டுநர் தாம்பலரே
ஆமே பிறரை யணங்குறுத் தாமை யமரருக்கும்
நாமே குடங்கரி னுட்சுட ரேய்ப்ப நலன்கரப்பத்
தேமே விரும்பொழி லெல்குந ரென்னர் திருந்திழையே. 317

மணிநகைத்தலைவி மறைந்தவற்காண்டல்

தானுற்ற நோய்வண்டற் றண்மணல் வைகியுந் தாழ்குழற்குத்
தேனுற்ற பூக்கொய்து மினபுறச் சேர்ந்துந் தெரித்துமற்றிங்
கியானுற்ற நோயறி யாதயர்ந் தேகுகின் றூர்மணித்தேர்
ஆனுற்ற தாற்றொடர் நெஞ்சுமெட் டாமை யலர்முலையே. 318

தலைவிநீட்டிப்பத் தலைவன்மெலிதல்

காயம் பரந்த வுடுக்களி னுப்பட் கலைமதிபோல்
ஆயம் பரந்த நடுவட் குலாய்வண்ட லாட்டயர்ந்து
தாயம் பரந்தநம் மாருயிர் வைகிற்றுத் தாழ்மடைக்கண்
தோயம் பரந்தெனச் சேறிநெஞ் சேவரல் சூழ்ந்திலையே. 319

---

317. துறை: தலைவனைப் பொழிலிற்கண்ட தலைவியானவள் பாங்கியை நோக்கி மகிழ்ந்துரைத்தல். முதலடி ஒரு முடிபு. பிறர் வருத்தத்தை நீக்க மாட்டாது தாமும் வருந்துநர் பலருளர், தாமும் வருந்தாது பிறர் வருத்தத்தை நீக்கல் அமரருக்கு ஆம், இவ்விருதிறத்துள் நமது தலைவர் எத்திறத்தினரோ என்றாள். தலைவர் யான் வருந்தாதவிதம் அமரர்போல வந்தார் என்பாள் இவ்வாறு கூறினாள். அமரருக்கும் ஆமே. என்னர் - எத்தன்மையினர். குடத்துட்சுடர் ஒளி இழந்திருக்குமாறுபோல யான் ஒளி இழந்திருத்தலால் அதனை எண்ணிப் பொழிலில்வந்து கருணை செய்பவராகிய தலைவர் என்க.

318. தலைவியானவள் என்னைச்சேர்ந்தும் எனக்குத் தன் நோயைத் தெரித்தும் என்றாள் என்க. தலைவன் என்நோயை அறியானாயினும் நான் அவன் நோயை அறிந்து முன்பு இன்பம் நல்கினேன் என்பாள் 'தெரித்தும்' என்றாள். ஆன் - அவ்விடம். தெரித்தும் - நமக்குத் தெரிவித்தும்.

319. தாயம் - உரிமை. உயிர் என்றது தலைவியை. மனமே நீ விரைந்து அவளிடத்துச் செல்கின்றாய், சென்றால் பின்பு அவளிடத்தினின்றும் என்னிடத்தில் வர நினைக்கின்றாயில்லை.

மற்றிணிதோளான் பெற்றுளமலிதல்

கிள்ளைசெய் நன்றியென் னேயுயிர்த் தோழி கிளந்துவிட
வள்ளைசெய் வாள்விழி மாதர்நல் லாள்வள ரேனலெலாம்
கொள்ளைசெய் கின்ற தெனக்கூய்க் குறுகப் பரத்தருமால்
தொள்ளைசெய் மாந்தரின் மாழ்குவ தின்றினிச் சூழ்பொழிற்கே.

மருமலர்க்குழலி அருமைசெய்தயர்த்தல்

கணமன்றிக் கைத்தவர் மாட்டுங் கருத கருங்கழலார்
குணமன்றிக் குற்றங்க ணாடாக் குணப்பெருங் குன்றமன்னார்
மணமன்றிச் செல்பகல் காணா தவரின்று வாணுதலாய்
பிணமன்றிச் செய்திலர் நம்மையெவ் வாறுளம் பேணுவதே. 321

பறைந்தனார்விளியச் சிறந்தவன் அடுப்ப
நிறைந்த காதலில் சொல்லெதிர் மழுங்கல்

தனக்கே தகுதி யிருந்துந் தளர்வினைச் சாற்றல்செல்லா
தெனக்கே யுடன்பட் டெழுந்தநல் வாக்கிறை யோனையன்று
முனக்கே விடலருங் கேண்மையிற் காட்டிய மாமறைக்கண்
நினக்கே தகுங்கொ லெனநீர் விடுத்து நிகழ்த்தினவே. 322

---

320. தலைவியானவள் கூவிக்கொண்டு குறுகாநிற்ப அக்கிளிகள் பரத்தருமென்க. பரத்தரும் - பரம்பியிருக்கும். இனி மாழ்குவது இன்றென்றான் தலைவன். தோழியானவள் தலைவி தலைவனிடத்தில் தனியிடத்திற் சேரும்படி குறிப்பாகத் தலைவியைநோக்கித் தினைப்புனத்திற் கிளிகள்வந்து குரலைக்கவர்கின்றன ஆகையால் நீ தினைப்புனம் செல்வாயாக என்றனுப்ப, உடனே தலைவியானவள் தினைப்புனத்தைக் கிளிகள் அழிக்கின்றன என்று ஆயத்தார்க்கு உபாயஞ்செய்து நீங்கித் தலைவனைக் குறுகுவாளென்க. தலைவி ஆயத்தினின்றும் பிரிந்து தனியே வருதற்குக் காரணம் கிளியாயிருந்தபடியால் 'கிள்ளை செய்நன்றி யென்னே' என்றான் தலைவன். வள்ளைசெய் - வள்ளைக்கொடிபோலும் காதுவரையும் ஓடுதல் செய்யும்படியான.

321. வெறுத்தவராகிய பகைவரிடத்தும் கணப்பொழுதன்றிக் கோபியாத கழலார். கணம் அன்றி - கணப்பொழுது விரோதித்து எனினுமொக்கும். மணமல்லாமற் செல்கின்ற பகலைக் காணாதவரெனவே நித்திய கல்யாணரென்பது. என்னோடு மணத்தலன்றி யெனினும் பொருந்தும். துறை: அயர்த்தல் - மறத்தல். நம்மைப் பிணமன்றிச் செய்திலர்.

322. என்னுடைய நல்ல வாக்கானது பேசத் தகுதியிருந்தும் என் தளர்வைத் தலைவருக்குச் சாற்றமாட்டாது. அன்று - அக்காலத்து.

முன்னுளிழுக்கின் மின்னிழை மெலிதல்

முயங்கிய கைகளை வாங்கிப் புணருமுன் னேபசப்புத்
தயங்குவ தாற்றண வாப்பெரு நீர்மை தகைத்தளித்த
வயங்கிய வைநுதி வேலோன் மருமம் படர்ந்துமுன்னாள்
உயங்கிய வாருயி ரெவ்வா றுதாங்குது மொண்புவிக்கே. 323

மையலிற்பெயர்வோன் கையுறை மறுத்தல்

சொல்லுவ தீதென் றுணர்வாள் கொடுஞ்சொற் சுமந்தலரோ
புல்லுவ தாலென்று நாணிநிற் பாட்குப் புகழ்மருந்தாய்
ஒல்லுவ தேனுந் துயவறி யாவொரு நீபுரையச்
செல்லுவ தானின் கரந்தொட மாழ்கிய தேந்தழையே. 324

தலைவனைக் காட்டிய கண். கண்களானவை, தலைவனே! நீ பிரிந்தனையே, இது நினக்குத்தகுமா என்று நீரைவிடுத்து நிகழ்த்தின. அன்புடையிருவர் பிரிந்து கூடியபோது துன்புற்றழுதல் காதலுடைமையின் இயற்கையாதலால் நிறைந்த காதலும், வாக்கு சாற்றல் செல்லாது என்றதனால் சொல்லெதிர் மழுங்கலும் பெறப்படும்.

323. துறை: இழுக்கு - தலைவன் கூறிய வாக்குத்தவறல். யான் தலைவரைக் கட்டியணைத்த கைகளைப் பிரித்துப் பின்பும் கட்டியணைத்துப் புணர்தற்கு முன்பு பசப்பு எனக்குத் தயங்குவதாம். முன்னாள் தலைவனுடைய மார்பிற்படர்ந்து கூடிப் பின் பிரிந்து வருந்திய உயிரையென்க.

324. தழை ஒல்லுவதேனும். துயவு - வருத்தம். தலைவனே! நீ எவ்வாறு கூடிப் பிரிகின்றனையோ அதுபோல நீ கொடுக்கும் தழையும் கூடிப் பின் வாடி நீங்கும் தன்மையதாயிருக்கின்றது. தழை வாங்கலால் அலர் புல்லுவதென்றென்க. சொல்லுவதீது என்றுணர்வாள் - தலைவனே யான் தழையை வாங்கிக்கொள்வாயென்று சொல்லுவனவற்றைத் தலைவியானவள் வாங்கினல் தீது உண்டாமென்றறிவாள். தீதாவது தலைவிக்கு மேன்மேலும் காமத்தைக்கொடுத்து அலர் பரப்பல். இனி, தலைவனே தழை வாங்கிக்கொள்ள வேண்டுமென்று நீ சொல்லுவனவற்றைத் தீது உண்டாமென்றுஅறிவாளென்றும், சொல்லுவது ஈதென்றுணர்வாளெனப் பிரித்துத் தலைவனே யான் தழை வாங்கிக்கொள்ளவேண்டும் என்று தலைவியினிடத்தில் சொல்லுவதை அத்தலைவி இது ஆகும் இது ஆகாது என்று பகுத்தறிந்து கொள்வாளென்றும் பொருள்கூறலும் பொருந்தும். பாங்கியின்கூற்று.

அருமையிற்றலைவன் ஆற்றிய எட்டும்
பெருமையிற்றலைவி பிறைநுதற்கியம்பல்

வாணுத னீவு மயிலெனுந் தாழு மலிவியெனும்
காணுத னீடுமென் றேங்குங் கரைந்த கருத்தறியும்
பேணுத ஞேக்கும் பிரியாமை காட்டுமப் பெற்றியனல்
கோணுதல் யாது நிகழ்ந்தின்று பெண்மையிற் கோற்ருெடியே.

வரிவளைத்தோழி வரைவுகடாதல்

தழுவிய மென்பற ழோடு குரக்கினந் தாயெழுந்து
குழுவியல் சோலையுங் குன்றினும் பாயுங் குலச்சிலம்பா
கழுவிய மாமணி போனிறை காரிகை யாண்மடந்தை
வழுவிய லாகிற்கு மாலினி நீவரை யாதுறினே. 326

வரைவுடன்படாது மன்னவன் கிளத்தல்

வருக்கைக் கனியற்று வார்நீர் மருங்கெழுந் தாழையில்வீழ்ந்
திருக்கக் கனியிளந் தாழைய தென்றிள மந்தியெண்ணுத்
துருக்கக் கிரிவயின் வந்திருந் தேவர்தொன் மாண்குலங்கள்
தருக்கக் கிளரு மணங்கினை யோவிது சாற்றுவதே. 327

---

325. மயிலென்று சொல்லுவான், தாழுவான் என எல்லாவற்றையும் விரித்துரைக்க. பேணுதல் - விரும்புதல். தலைவரானவர் அவ்வாறு செய்யினும் எனது பெண்தன்மையிற் கோணல் நிகழ்ந்ததில்லை, எனவே நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு வழுவாதுடையளுயினேனென்பது. பெண்தன்மையாவது நாணம் மடம் அச்சம் பயிர்ப்புடைமை.

326. வரையாதுறின் நிறைவழுவல் பொருந்தும் எனவே நின்னை இச்சித்த இவளை வேருேர் தலைமகனுக்கு ஈன்ருேர் விவாகஞ்செய்து கொடுப்பரென்பது மடந்தைக்கு வழுவு இயலாநிற்கும்.

327. தாழைக்கனி பலாக்கனியின் தோற்றம் போன்றிருக்குமென்க. தாழை தெங்கு அன்று. எண்ணுத மலை: நினது மலையின்கண் மந்திகளானவை பலாக்கனி தாழையில் வீழ்ந்திருப்பினும் தாழைக்கனி என்றெண்ணுது அப்பலாக்கனியென்றே உணருமாறுபோலத் தேவர்குலத்தில் முன்னிருக்கும் இயல்புடைத் தலைவியானவள் புன்குடியில் தோற்றமுற்றிருப்பினும் தேவர்கள் யாவரும் நமது குடியிலுள்ள தெய்வப்பெண்ணே இவளாமென்று தருக்க விளங்குபவளென்க. இதனுல் தலைவனுனவன் தன்னை இழிந்த வேடனுகவும் தலைவியைத் தெய்வப்பெண்ணுகவும் சொல்லி வரைதல் முறையன்று என்ருனென்க. துருக்கம் - மலைமேற்கோட்டை. கிரிவயின்வந்து கிளரும் அணங்கு.

மறுத்தல்தகாதென வரைவுகடாதல்

கற்பகச் சோலை யுடையோர் களுநனி காதலிக்கும்
பொற்பகச் சோலை யகினறுஞ் சந்தனம் பூண்டுயர்ந்த
வெற்பகச் சூழலின் வாழ்ந ரெமர்விரைப் பூங்குழலாள்
அற்பகச் சூழ்ச்சியி னுய்புனங் காவ லறிந்தனையே. 328

வரைவெமர்சூழ்வரென வரைவுகடாதல்

சந்தனங் காரகில் குங்கும மின்னன தாமுதிரின்
முந்தினர் கொள்ளு முறைமழைச் சாரலின் முன்னுமன்னை
பைந்தினை காப்பவள் யாரையென் ருணர்ந்தம் பாவைகொலென்
றந்தினின் ருய்ந்துகண் ணூறழித் தாளணி நீறளித்தே. 329

கிழத்தியறிவுரைஇ வரைவுகடாதல்

பளிக்குரல் வேய்நெற் படுத்திபக் கோடுபற் றிச்செழுந்தேன்
துளிக்குமென் கூந்தலர் வள்ளையி னேச்சுமை சூழ்சிலம்பா
களிக்கய னேக்கி தெருமர லுள்ளங் கடியுடன்வந்
தளிக்கின லாது களிப்பரி தாமடல் வேலண்ணலே. 330

இற்செறிப்பறிவுறீஇ வரைவுகடாதல்

நிரம்பிய கால மறிந்தெமர் நீடுசெந் தேனழித்துக்
குரம்பையிற் போதருங் குன்றினெங் கோமள மாமயிலை
அரம்பொடி யாக்கும்வை வேலிறை வாவன்னை நீயினியில்
வரம்பிக வாதியென் ருள்புனங் காவல்கொள மன்னுவதே. 331

---

328. பூங்குழலாளுடைய அன்பகச் சூழ்ச்சியையுடையவனே எனவே அவளால் இச்சிக்கப்பட்டவனே என்பது. புனங்காவலை அறிந்தாயெனவே தினைப்புனத்திற் குறியிடத்துத் தலைப்படலாமென்று நினைந்தாயென்பது.

329. முதிரின் - முதிர்ந்தால். பார்க்கப்பார்க்க நாடோறும் வெவ்வேறாய் வளர்தல்பற்றிச் சந்தேகித்து 'யாரை' யென்றெண்ணினளென்க. நீறளித்து யாவரும் காணலாலுண்டாகிய திட்டி நீங்கும்படி செய்தாள் எனவே தலைவியின் அன்னை மூலமாக எம்மவர் பிறர்க்கு விவாகஞ்செய்ய நினைப்பாரென்பது. முதலில் வந்து கண்டவர். நாயகனோடு புனத்திற் கூடி அழகு முதிர்தலால் உருவு வேறுபட்டமையை ஆய்ந்து அன்னை இற்செறிப்பாளென்பது என்பாருமுளர்.

330. பளிக்கு உரல். வள்ளை - உலக்கைப்பாட்டு. தலைவியினுள்ளங் களிப்பரிதாம்.

331. குரம்பை - சிற்றூர்.

புரையுறுகிளவியின் வரைவுகடாதல்

பார்ப்பினங் தோகையி னுள்ளே யடக்கிப் படர்பருந்தை
வேர்ப்பெழச் சீறு மயில்வளர் சோலை வியன்சிலம்பற்
கோர்ப்பில தாயின் வினையே னுரைத்துமென் னுள்வளையின்
ஆர்ப்பெழ மாதைப் புனைவா னறிஞரி னுய்ந்ததுவே. 332

இட்டுப்பிரிவின் இட்டிடைதளர்தல்

ஆமா னினந்திரி யுந்தடஞ் சார லகன்சிலம்பர்
வாமான் மணிப்பொலங் தேரும் வலவனுந் தாமும்வந்து
தேமா நறும்பொழில் காணல னுண்டு செறிபசப்பின்
நாமாண் பழியத் துறந்தார் வரவு நவின்றதுண்டே. 333

புள்ளினைநோக்கி எள்ளியுள்ளுடைதல்

பைந்தா ரகலத்துப் பார்த்திப ரென்றுநம் பைம்பொழில்வாய்
வந்தாரங் நாண்முத லாவள ரேன னுமக்கிரையாச்
செந்தார்ப் பசுங்கிளி காண்மயில் காள்செல்ல விட்டனமே
முந்தார்ப் பொடும்விலங் குற்றிலிர் மொய்ம்பர்முன் னுவகையே.

கச்சிளமுலையவள் அச்சமிக்குரைத்தல்

ஈண்டிய வான்குள கோருழி வாய்ப்பெய்வ தின்றியெங்கும்
வேண்டிய வாறு வருடைக டேருந்தம் வெற்பினுக்குத்
தூண்டிய தேரினர் மீட்சியுண் டேற்றெழு தெய்வமல்லல்
பூண்டிய லாது விரிச்சியிற் காக்கவென் புல்லுயிரே. 335

---

332. மாதைப்புனைவான் - வேறொருவர்க்கு மாதை விவாகஞ்செய்யும்பொருட்டு.

333. துறை: இட்டுப்பிரிவின் - இட்டுப்பிரிதலால். வாம் மான் - தாவுகின்ற குதிரைகட்டிய. பொழில்காள். நாம் மாண்பழிய.

334. என்று வந்தாரோ அந்தநாள் முதலாக என்க. விலங்கு - தலைவனிருக்குமலை. என்முன் ஆகும்விதம். தலைவர் என்னைவிட்டுப் பிரிந்து போங்கால் அவர் போகாவிதம் நீவிர் தடைசெய்திலிர் என்பாருமுளர்.

335. விரிச்சி - நற்சகுனம்.

ஆற்றுவதெனத்தே ராற்றினைப்போற்றல்

பிணிநா முழப்ப தறிந்து பிறங்க னிகர்பெருந்தேர்
மணிநா வடக்கி வருந்தொழி லார்சென்ற வானதரைப்
பணிநாண் மலர்க்கொம்பர்ப் பாய்ந்துபைந் தாது படுத்தழியல்
அணிநாண் மலர்க்குழன் மூசுதிர் வம்மி னளிக்குலமே. 356

வடுவகிர்கண்ணி கொடுமைகூறல்

கூடா தவருழைத் தீங்கிழைப் போரைக் கொடியரென்போர்
வீடா தவருழைத் தீங்கிழைத் தாரை விராயறியார்
நாடா தவரவர் நல்லரென் றேத்தினு நன்னெஞ்சமே
வாடா தவரல்ல ராவரன் னுரை மரீஇயவரே. 337

பலவும் எண்ணி அலர்முலை இரங்கல்

காமரு மாமை பசலைகைக் கொண்டது காதலரைத்
தாமரு நாடு தகைத்ததென் னேவித் தனிமைகண்டு
பேமரு பீழை பிணித்தது வல்லே பெருநிலத்தோர்
நாமரு தீச்சொ லிறுமாப் புளத்தை நலிந்ததுவே. 338

இதுவலதென்பால் எய்துவதெவனென
விதுநுதற்றோழிக்கு மெலிவொடுகிளத்தல்

சூடிய பூவும் பருகிய வோலையுந் தோகையரும்
நாடிய காலை நிகர்ப்பரென் னுதன்பர் தந்நகர்வாய்
நீடிய வாழ்க்கை நினைந்துவிட் டாணிறை தாங்கிநைவேன்
வாடிய வாவியன் றேபுறம் போவது வாணுதலே. 339

---

336. தேரிற்கட்டிய மணியின்நாவை அடக்கிக்கொண்டு. அதர் ஈண்டுத் தேர்ச்சுவடு. அழியல் - அழியற்க. அதரை அழியல்.

337. தம்மொடு கூடாத அந்நியரிடத்திலே தீங்கு செய்பவரைக் கொடியரென்று சொல்லுவோர்கள், விட்டுப்பிரியாது கூடியிருந்தவரிடத்திலே தீங்கு செய்பவரோடு சிநேகித்தறியாரென்க. என்போர் அறியார். விடாதவர் என்பது விகாரமேற்றது. விட்டுப்பிரியாது கூடியிருந்த என்னிடத்திலே தலைவர் தீங்கிழைத்தார் என்பாள் 'வீடாதவருழைத் தீங்கிழைத்தாரை விராயறியார்' என்றாள். நாடாதவர்கள் அத்தலைவரை நல்லரென்றேத்தினும், அத்தலைவரை மருவினவர் வாடினவராவர்.

338. அழகானது பசலையைக் கைக்கொண்டதெனவே அழகு நீங்கிப் பசலையுண்டாயதென்பது. காதலரைத் தாம் அருநாடு தடுத்துக்கொண்டது. பேம் - அச்சம்.

339. பருகிய ஓலை - உண்ட எச்சிலிலை.

கருத்தழிகிழத்தி கலங்கிமொழிதல்

விடங்கழி காலத் தராவென வென்மெலி வைத்தணைப்பான்
இடங்கழி வாம்பரித் தேரோ னுடன்சென்ற வேழைநெஞ்சம்
மடங்கழி காதன்மை மல்கக் கருணைவை யாமைகண்டங்
குடங்கழி வேன்கொலென் றுன்னலி னுங்கொ லுருநிலையே. 340

மற்காட்டுதோளர்க்குத் தற்காட்டுறுத்தல்

அம்மையி னரத் தவம்புரி யாதவ மேபிறந்தேற்
கிம்மையின் யாவ ரிதனிறம் பெற்றன ளேந்திழையென
றும்மையி னுங்கு முடங்குற றேற்றி யொழிந்தவர்க்குச்
செம்மையி னுங்கப் பசும்பொன்னைக் காட்டுபு செப்புவரே. 341

மையுறுகண்ணி கையறுகிளவி

முயங்கிய வண்சிறை யன்றின் முதிர்பிரி நோயறிபின்
உயங்கிய வென்னிலை கண்டு முருரி னிருக்ககில்லீர்
தயங்கிய கைவளை கொண்டகன் றுர்தவி ரூரின்வல்லே
இயங்கி யடாதென்பிர் நீயிரெய் யாமையென் றீவினையே. 342

---

340. விடங்கழிந்த காலத்திலுள்ள அரா மெலிந்திருக்குமாறுபோல மெலிந்த என்மெலிவைத் தணக்கச்சென்ற நெஞ்சமானது தலைவர் கிருபை செய்யாமையைக்கண்டு நான் தலைவியினிடத்திற்சேரின் அவளோடுகூடத் துன்பமடைய வேண்டுமென்பதை உன்னலினாலேயோ என்னிடத்தில் வராத நிலையென்று தலைவி உரைத்தாளென்க. அரா வருந்துமாறுபோல மெலியும் என் எனினும் பொருந்தும். இடங்கழி - நெருங்கிய. நெஞ்ச மானது கண்டு.

341. இது என்றது பொன்னை. யாவர் செப்புவர். அம்மை - முற் பிறப்பு. உம்மை - வருபிறப்பு. பிறந்த என்பொருட்டு. பசலைநோயுற் றிருக்கின்றாளென்று யாவர் சொல்லுவரென்பது.

342. அன்றில் விளிப்பெயராய் நின்றது. உருரின் - உருத தலைவ ரைப்போல். தவிர் - தங்கிய. அடாதென்று தலைவரிடத்திற் செல்வீராக. நீயிர் எய்யாமை - நீவிர் அறியாமை. அன்றிலின் பிரிநோயை அறிந்தா லெனத் தோழியைநோக்கிச் சொன்னதாகக் கொள்வாருமுளர். துறை: கையறல் - துன்பமடைதல். பிரிவுநோயை நீயிர் அறியாமை.

கொலைத்தொழிற்புள்ளிது கூறுதென்றல்

வண்டான முங்குரு கும்பெரு நாரையு மற்றுநம்மை
விண்டா ரணைய விளம்புங்கோ லோவிரி நீர்ச்செறுவும்
தண்டா மரைத்தட முந்தவ ழோடையுந் தண்கழியும்
கொண்டா ருயிர்முற்று முண்டுண்டு தேக்குமக் கொள்கையவே.

ஆழியிழைப்பதிற் பீழைபடுமென
மீதூர்நெஞ்சை மீட்சியிற்படுத்தல்

ஒருவிய காதலர் தாமொழிந் தாங்கொழி யார்வரினும்
வருவரென் றூற்றவு மையுற்று நையவும் வான்பிணியுள்
இருவிய விந்நிலை யின்றியு மாழி யிழைப்பதனால்
வெருவிய வாவி பழியெழ நீங்கலு மேவுநெஞ்சே. 344

இரவிநீங்கப் பருவரலுறுதல்

வண்டலூற் றுடும் வயின்றெருறுஞ் சார்மலர்த் தாட்சுவடும்
கொண்டலூற் றேறும் பொழில்வா யளித்த குறியிடமும்
கண்டலூற் றேயுயிர் தாங்கிய யான்கவ லக்கதிர்த்தேர்
விண்டலூற் றேயன்பர் தேரினுந் தீமை விளைக்கின்றதே. 345

---

243. விண்டார் - பிரிந்த தலைவர். கொண்டு - செறு முதலிய வற்றை இடமாகக்கொண்டு. ஆருயிர் - மீன் முதலியவை.

344. ஆழி இழைப்பதனால் இன்மையும் நீங்கலுமாகிய இவ்விரண் டும் மேவுமென முடிக்க. (தலைவர் போனவாறிரார்) வந்தாலும் வருவா ரென்று ஆற்றிக்கொள்ளவும், வருவாரோ வரமாட்டாரோ என்று சந்தேக முற்று வருந்தவும், அத்தலைவர் என்னைப் பிணியிலிருத்திய இந்த நிலைமை யின்மையின் மேவும். கூடற்சுழி கூடாவிடில் என்னுயிர் நீங்குமென்பாள் 'ஆவி பழி எழ நீங்கலும் மேவும்' என்றாள். ஆழி கூடற்சுழி. ஒழிந்தபடி யொழியார். ஆற்றவும் நையவும் இருவியநிலை.

345. சுவடும் குறியிடமும் பகலில் அல்லது இரவிற்காண்டல் அருமை யின் அவ்வாறு கூறினாள். கண்டல் - பார்த்தால். கண்டலூற்று விகாரம். சூரியனது தேரானது நீங்கி. விண்டலூற்று - நீங்கி.

மாலைகண்டவள் சாலவுள்ளழிதல்

அழுவக் கடற்கழி மீனிரை தேரன்னம் பேடைபுடை
தழுவக் கடிமரச் சேக்கைக ளுடுந்தண் மாலையம்போ
தெழுவக் கதவுறழ் தோளூரத் தாரெய்து நாட்டுமுண்டாய்ப்
பழுவக் கனலிற் சுடவல்ல தோவவர் பாலினுமே. 346

குருகுறுபருவரல் கருணையினுட்டல்

சேவற் குருகொடு சக்கர வாகச் செழும்பெடைகாள்
நாவற் குருமலர்ச் சாகையஞ் சேக்கையு ணைவதெல்லாம்
காவற் குருமணி மோலியர் காரிகை கைக்கவர்ந்து
நீவற் குருகியன் றேயல தாயி னிகழ்த்துமினே. 347

சுவாகதநோக்கித் தூதுசெல்கென்றல்

பெண்டூது வந்தன னென்றுகை கூப்பிப் பெருநயப்புக்
கண்டூது வண்டுளர் தார்வரை மார்பர்க்குக் காதனெஞ்சம்
மண்டூ துலைமெழு காயின ளென்று வருதிகிள்ளாய்
ஒண்டூ துணமனை யாளுய்க்கும் பாளித முன்வயத்தே. 348

போதுகூம்பப் பேதுற்றுரைத்தல்

சீராழி வையத்து வால்வளை யோடுகச் சென்றுவிட்ட
போராழி வையத் தவர்மது வாருமம் போருகங்கள்
ஓராழி வையத் தவனூன் மகிழ்ந்தொழி யக்கவறல்
நீராழி வையத் தறியினென் னீரு நினைகுவரே. 349

---

346. மாலையம்போது சுடவல்லதோ. கதவு மார்புக்கு உவமை. பழுவக்கனலின் - காட்டாக்கினியைப்போல. எழு அக்கதவு எனப்பிரிக்க. எழு - கம்பம், ஈண்டு நிலையாகக்கொள்க.

347. சேவல் - ஆண். குருகு - புள். ஆண்புள் என்றது சக்கரவாகத் தினை. தலைவியானவள் புள்ளைநோக்கி, நீவிர் வருந்துவதெல்லாம் என் னுடைய தலைவர் எனது அழகைக்கவர்ந்து துடைத்தற்கு உருகியல்லவா. அத்தமித்தபடியால் சூரியகிரணம் உண்ணும் சக்கரவாகங்கள் நைவ தெல்லாமென்றுள். நீவுதல் - துடைத்தல். ஈண்டு அழகைக்கெடுத்தல்.

348. தூதுள் நம் அனையாள் கிளியே நீ மார்பற்குக் கைகூப்பிப் பெண்ணினிமித்தம் தூதுவந்தேன் என்று அவர் நயப்பைக்கண்டு, தூதுள் உய்க்கும்பாளிதம். நான்காமடி தூது - சிறுமுட்டி. பாளிதம் - பாற்சோறு.

349. அம்போருகங்களானவை சூரியனால் மகிழ்ந்து பின் அச்சூரியன் நீங்கத் தான் வருந்துதலைப் போராழிவையத்தவராகிய தலைவர் அறியின்

ஆன்மணி வேய்ங்குழற் காற்றுதுரைத்தல்

தருமக் கடவு ளெனுமிமி லேறு தனக்கினமாய்
வருமக் குலத்தெறு ழான்கழுத் தார்த்த மணியெனுளம்
பொருமக் கறங்குவ தென்றுற் புனவேய்ங் குழலவர்தேர்
திருமக் கடவி வருமுன்ன ராருயிர் தின்றிடுமே. 350

மந்தாநிலத்தொடு நொந்தாங்குரைத்தல்

பைந்தா ரகலந் திளைவளர் சாரற் பசும்பொழில்வாய்த்
தந்தா ரொருங்கிய வைகலெல் லாந்தண் குளிர்விரவ
வந்தாய் செழுந்தமிழ் மால்வரை யீன்றமந் தாநிலமே
சிந்தா குலமுறக் கொன்வந்து தீயிற் செறிவதென்னே. 351

தானுறுபிணியிற் றண்கடல்சேர்த்தல்

ஓங்கிக் கரைக்கண் விழுந்து புரண்டுமிக் கோலமிட்டு
வாங்கிக் கலங்கி மறுகித் துளும்பு மணிக்கடலே
தாங்கிக் கரையுநெஞ் சோடல மந்த தமியனைப்போல்
நீங்கிக் கவற்றுநர் கேண்மையை நீயுங்கொ ணிலத்தே. 352

மதியெழல்கண்டு கதிசெலலென்றல்

தண்பாற் பெருங்கட னற்று யுடன்பிறந் தாரமிழ்து
மண்பாற் பரவுந் திருவு மமிழ்த கலைவடிவும்
விண்பாற் கதியன்ன வெண்டிங்கள் வெப்பந் தரினுநன்றே
கண்பாற் கழற்கழ லான்கண்ட நின்னுருக் காட்டிநில்லே. 353

என்தன்மையும் நினைப்பார். மோதிரமானது வளையோடு உகவென்க. போர் ஆழி வையம் - போர்க்குரிய சக்கரமுடைய தேர். ஓராழிவையத் தவன் - சூரியன்.

350. கறங்குவதென்று நினைத்தால் அவ்வாறு நினைத்தற்கு முன்னமே வேய்ங்குழல் உயிர் தின்றிடும்.

351. பைந்தார் அகலம் தந்தார் கூடியிருந்த நாளெலாம் குளிர்ச்சி யோடும் வந்தாய்.

352. வாங்கி - வளைந்து.

353. திருவும் கலைவடிவும் வெப்பம்தரினும் கண்ணின் பகுதியால் தலைவன்கண்ட நின்னுருவைக்காட்டி நில். கழலையணிந்த பாதத்தன்.

கண்ணிலே நினக்கெனத் தண்சுனைக்குரைத்தல்

தவளைக் குரற்கிண் கிணியடிப் பாவையர் தங்களொடும்
திவளக் கலவிநின் ருட்டயர் வேன்றிறத் தும்முறையோ
துவளக் கதுவிய தென்னையென் றித்துணைப் போதுசென்றே
குவளைக் கருங்கண் விழித்தனிர் நோக்கக் கொழுஞ்சுனையே. 354

கண்படைபெறுது கங்குல்நோதல்

புரங்கட் கிளநகை காட்டிதன் கண்பொதி ஞான்றினுமேழ்
துரங்கக் கடவுளில் லாக்கங்கு னீடத் துளங்கும்வெந்நோய்க்
கரங்கக் கடிநக ராருயி ராக வதிர்முழவின்
இரங்கக் கருங்குயி லென்கண் படாதவர்க் காணலுற்றே. 355

அனமொத்தியலுநள் கனலிற்றளர்தல்

அடுத்தமைக் கேயெதிர் நெஞ்சினை மீட்டு மடாத்தொழின்மை
தொடுத்தமைக் கேயெதிர் கண்களை மீட்டுந்துன ஞரெனநீ
விடுத்தமைக் கேது விளம்பென வேந்தன் றனைமெலிவில்
படுத்தமைக் கேதுமின் ருவிழித் தேன்கொடும் பாவியனே. 356

துறை: கதி செலவென்றல் - விரைந்து செல்லாதே என்றல். அதுகாட்டி நில் என்பதனுல் பெறப்படும். அமிழ்தத்தைப் பூமியில் பரப்பும்படியான செல்வமும். தாயுடன் - தாயிடத்தில். விண்ணிலுள்ள முத்தி என்னும் படியான சந்திரனே.

354. துறை: கண் - தாட்சணியம். திவள - விளங்க. கலவி - சேர்ந்து. ஆட்டயர்தல் - மூழ்குதல். சுனையே நீ வருந்தப் பொருந்திய தென்ன என்று என்னை நோக்குதற்கு இவ்வளவு நேரஞ்சென்று குவளைக் கண்ணுல் விழித்தீர்! உன்னிடத்தில் நட்புடைய என்னிடத்தில் இது முறையாமா?

355. சிவபெருமானது கண் மூடிய காலத்திலும் இக்கங்குலானது நீடலாலுண்டாகும் காமநோய்க்கு நடனமாயமையுநர் எனதுயிராக. குயில் முழவாயொலிக்க. அவர்க்காணல் உற்று என் கண் படாது - அத் தலைவரைக் காணுதலை விரும்பி என் கண் நித்திரைசெய்யாது. காட்டி வினையாலணையும்பெயர். படாது - நித்திரைசெய்யாது. உற்று - விரும்பி. அரங்கம் - நிருத்தசாலை.

356. தலைவனே நீ என்னிடத்தில் அடுத்ததற்கு என் மனத்தை மீட்டுக்கொண்டும், வராமற் பிரிந்திருந்தமைக்கு என் கண்களை மீட்டுக் கொண்டுமென்க. எனவே வந்துபோங்காலையில் மனத்தைக் கவர்ந்தும்

நறைக்குழற்றோழி சிறைப்புறத்துரைத்தல்

கலைக்கோ டுழவடை கீறிப்பைந் தேன்கவர் கானவர்க்கும்
மிலைக்கோடு மீக்கும் பயவா திருவிடர் வீழுமன்பர்
மலைக்கோ டுறுகுரு கீர்தொழு தேன்முத்தம் வாள்விழியும்
முலைக்கோடு பொன்னும் விளைக்குமிந் நீர்மை மொழிமின்களே.

அலர்மிகுகின்றமை தலைவற்குரைத்தல்

காணாப் பெருந்துய ரோநிழ லீன்ற கருந்தளிர்போல்
பேணாப் பெரும்பசப் போபெருந் தேவ ருலகுநிமிர்
மாணாப் பெருங்கௌவை யோவன்ப விங்ஙன் வளர்த்தவற்றுள்
கோணாப் பெருமைய தியானறி பாக்குக் குறித்துரையே. 358

அழிபாடுளத்தவள் வழிபாடுமறுத்தல்

காமங் கடலிற் பெரியது கையகன் றுலங்ஙனே
தோமங் கடல்வட வைக்குமிக் காவதென் றேல்வியுயிர்க்
கேமங் கடலுல கத்திலின் றேனு மினியொழிக
பேமங் கடலைப் பிரானையுன் னுரன்ன பெற்றியரே. 359

வராமலிருக்குங்காலையில் கண்களைக் கவர்ந்தும் என்பது. ஏதும் இன்று - யாதொரு பயனுமில்லாமல். தலைவன் பிரிந்திருக்குங்காலையில் தலைவனைக் காணுங் காட்சியிலேயே தலைவியின் கண்கள் செல்லுதல்பற்றி 'அடாத் தொழின்மை தொடுத்தமைக்கே எதிர் கண்களை மீட்டும்' என்றாள்.

357. சந்திரன் உழுதலால் தேனடை கீற ஒழுகும் பைந்தேனானது குன்றவர்க்கும் ஈக்களுக்கும் பயன்படாமல் விடரில் வீழும்படியான தலைவரது மலைச்சிகரத்திலுள்ள குருகுகளே. வாள் விழி முத்தமும், முலைக்கோடு பொன்னும் விளைக்கும். இ நீர்மை - கண்கள் கலுழ்வதும் முலைகள் பசலை படரப் பெறுவதுமாகிய தன்மை. கலைக்கோடு - சந்திரன். விடர் - மலைப் பிளப்பு. இலையின்கண் ஓடும்படியான ஈக்கும். சிறைப்புறம் தலைவன் வந்துழி அத்தலைவன் வந்தமையை அறியாததுபோன்று தோழியானவள் மறைவாயிருந்து தலைவன் கேட்பச் சொல்லுதல்.

358. நின்னைக் காணாமையால் உண்டாகிய பெரிய துன்பமோ. நீ மிகச் செய்தவற்றுள். தளிர்போல் பெரும் பசப்பு. கௌவை - பழிச் சொல். பெரும் பசப்பு - மிகுத்த பசப்பு.

359. துறை: தலைவியானவள் தலைவன் வழிபடலை மறுத்தல். காமமானது பெரிதாயிருக்கின்றது. தலைவர் பிரிந்தால் அவ்விடத்துண்டாகிற குற்றமானது வடவையினும் மிக்காவதாயிருக்கின்றது, என்னுயிர்க்கு இன்பம் இல்லையேனும் பெற்றியரான தலைவர் வருதல் இனியொழிக.

வாழிதணிகெனத் தோழியிரத்தல்

வார்விரல் வாட்கண் மணிப்புனல் சோர வருத்திடினும்
ஆர்விர னீப்பவ ராயிழை யாயளி யேனினது
சீர்விர வாரருள் பெற்றிசை யப்பொலந் தேரவர்நம்
கார்விர வோங்கற் குறியினின் றுநின்று காண்பதுவே. 360

நெறித்தமைக்கூந்தல் மறுத்தெதிர்கோடல்

அரிக்கு மவர்தமைக் காண்பது வேட்டரி வாட்டடங்கண்
தரிக்கு மவருழை யேயெனை நீத்துத் தனியுளமும்
பரிக்கு மவர்கைத் தழைக்கென தோள்களும் பாரிக்குநா
விரிக்கு மவர்க்கிசை யாமையென னுவது மேதினிக்கே. 361

மணந்த தலைவன் மகிழ்ச்சியில் கிளத்தல்

சிறைபட நின்ற பெரும்புன லச்சிறை சிந்துதலும்
துறைபடச் செல்வது போலன்பி னுள்ளந் துணையவுந்தான்
பொறைபட வந்து பொலங்கொம்பி னெல்கிப் பொழிலழகு
நிறைபட நின்ற நிலையய ராதியென் நெஞ்சகமே. 362

தோம் அங்கு அடல். தோம் - குற்றம்; ஈண்டுத் துன்பம். துன்பமானது வடவையைப்பார்க்கினும் சுடுகின்றது என்பது. ஏமம் - இன்பம். பேம் அங்கு அடலைப்பிரான். பேம் - அச்சம். அடலை - சுடுகாடு. அடலை - நீறுக்கும் பெயர். இனி ஏமம் - காவல். தோம் - பழிமொழி. கையகன்றுல் - காமமானது என்னினின்றும் நீங்கினுல், எனவே யாவர்க்கும் வெளிப்பட்டால் என்றபடி. காமத்தாலாகிய தோமானது அழகிய கடலிலுள்ள வடவைக்கு மிகுந்தாவது. எனதுயிர்க்குக் காவலின்றேனும். பெற்றியரே - தலைவரே என விளியாக்கி, ஒழிக என முடிக்க. காவலொழிக என்பாருமுளர்.

360. விரலானது கட்புனல் சோரும்படி அக்கண்ணிற்பட்டு வருத்தினுலும் அவ்விரலை நீப்பவர் ஆர். ஆர் வினு. அருள் - தலைவன்மீது கிருபை செய்தலை.

361. என் கண்ணனது வேட்டு என்னை அரிக்கும், எனது உளமும் என்னை நீத்து அவருழைத்தரிக்கும், தழையை வாங்குவதற்குத் தோள்களும் பரிக்கும், என் நாவானது அவரது புகழை விரிக்கும், ஆதலால் நான் அவர்க்கு உடம்படாமை ஆவது என். தரிக்கும் - தங்கும்.

362. தலைவி உள்ளமானது தனக்கு முன்னே விரையவும் தான் பின்னேவந்து. பொறை - பொறுமை.

பரிவுற்றிறைவன் பாகற்குரைத்தல்

அடுத்தாங் கழியுயிர் நல்கு மமிழ்தசஞ் சீவியெனின்
விடுத்தாங் குயிர்விளி யாது விராய்வெற்ற வின்பமுற்றும்
மடுத்தாங் ககன்று வருத்துமிம் மாதரைத் தேர்வலவா
தொடுத்தாங் கிசைப்பி னுயிரை யலாதில்லைத் தொல்புவியே.

பகற்குறியிழக்கும் பரிசுதேர்பாங்கி
தகக்கிளி மொழிக்குத் தளர்வொடு கிளத்தல்

சிலம்பெதிர் கூய்த்தெளி நீர்ச்சுனை யாடித்தண் டேம்பொழில்
நலம்பெறு மூச னடாய்வண்ட லாடி நறுஞ்சினையிற் [வாய்
குலம்பெறு பூக்கொய்யும் வாழ்க்கையெல் லாங்குலைப் பானின்
[றதால்
சலம்பெறு வேங்கை யிணர்த்துமென் றேற றளித்தலர்ந்தே. 364

விளைதினைகாட்டி வேட்டைமேலிட்டுத்
தளையவிழ்பொழிலிற் சாரலையென்றல்

விளைந்தன வாற்றினை காண்டிவெற் பாமென் புனத்தயன்மா
வளைந்தன வாலென வேட்டையை மற்றினி வாரலையோ
உளைந்தன வாலெம் முளத்தொடு தாழ்குர லுண்குருகு
துளைந்தன வான்மகிழ் வென்னைய ரோடடல் சூழ்கணியே. 365

---

363. அடுத்துநீங்கிய உயிரை நல்குமியல்புடைய அமிழ்தசஞ்சீவி யென இவளைச்சொல்லின் அவ்வமிழ்தசஞ்சீவியானது விடுத்தபோது உயிர் கெடாது. இவளோ விரவியபோது இன்பமுழுதையுஞ்செய்து தானகன்ற போது வருத்துமியல்புடையவளாதலால் அவ்வமிழ்தசஞ்சீவியும் இவளை ஒவ்வா என்பது. தலைவியானவள் கூடியபோது தலைவனுக்கு இயக்கமும், கூடாதபோது இயக்கமின்மையும் இருத்தலால் உடலோடு கூடினுல் அவ்வுடலை இயக்கலும் கூடாவிடத்து இயக்குதலின்மையும் பொருந்திய உயிராகத் தலைவியைக் கூறினுன். அடுத்து ஆங்கு. விடுத்து ஆங்கு. விளியாது முற்று. அமிழ்தசஞ்சீவியை நீக்கினுல் உயிர் விளியமாட்டாது. இன்பமுழுதையும் மடுத்து.

365. மா - மிருகம். வேட்டையையாய் வாரற்க. குருகும் உளைந்தன. கணியானது மகிழ்வு துளைந்தன. குரல் - தினைக்கதிர். தினை விளைந்தமையால் உண்டாகிய மகிழ்ச்சியரென்பாள் என்னையரோடு என்ருள் என்க. கணியானது தான் கெடுதற்குக் காரணமாக உண்டான தினைக்கு இப்போது கேடுண்டாமாற்றை அறிந்து மகிழ்வுகொண்டதென்க, கணி கெடுதற்குக் காரணமாயுண்டாமாருவது வேடர்கள் தினை விளைத்தற்காகக் கணியை வெட்டுதலை. கணி - வேங்கை.

தெய்வக்கணியொடு நைவுற்றுரைப்பக்
கறைப்பொலி வேலற்குச் சிறைப்புறக்கிளவி

கொய்வதன் றேதினை யென்றலர் தூற்றிக் குழையவெம்மைச்
செய்வதன் றேநின் குலக்கணி தெய்வத் திருக்கணியே
உய்வதன் றேயெமக் குற்றுநின் றுயை யொழிந்துநனி
நைவதன் றேயினி யுள்ளது போலுமிந் நாகத்திலே. 366

சிறைப்புறத் தலைவற்குக் குறிப்புரை கிளத்தல்

வீழ்ந்தார் தமையெதிர் வீழா துலைய வெறுத்தவர்தாம்
வாழ்ந்தார் புகழொடு மென்பதுண் டோதெய்வ வான்கணியின்
தாழ்ந்தாந் தகமதித் தாமனை யேந்தகை யாருளங்கள்
போழ்ந்தாய் தினையு மழிப்பா யினித்துயில் பூங்கணியே. 367

தினையொடு புலம்பி இனிவரலென்றல்

அளிப்பான் புகுந்தவந் நாண்முத லின்றை யளவும்வண்டின்
களிப்பான் பெருநலங் காட்டிய நும்மைக் கதிர்த்தினைகாள்
விளிப்பான் புகுந்தது வேங்கையவ் வூழ்வினை விண்ணவர்க்கும்
ஒளிப்பான் புகலரி தாமென்றென றுளள முயங்குதுமே. 368

---

366. தெய்வக்கணி - முருகனாகிய வேங்கை மரம். நின்குலக்கணி செய்வதல்லவா. பின்னிரண்டடியாற் கூறுவதைத் தலைவனுக்கும்கொள்க. உய்வதாக அப்போதே உற்றுநின்ற உன்னைப்பிரிந்து.

367. தம்மை விரும்பினாரை எதிர் தாமும் விரும்பாது என்க. தாழ்ந் தாம் - தங்கினும். பூங்கணி - தெய்வக்கணியொழிந்த ஏனைய கணி. அனையேம் - அத்தன்மையேமுடைய. யாம் உம்மை விரும்பினால் நீயிர் விரும்பலீர். கணிக்குச் சொன்னமையைத் தலைவர்க்குங்கொள்ளல் குறிப்பு. வீழ்ந்த தலைமகளை யானும் விரும்புதல் கடனென்று தலைவன் அறிந்து கொள்ளும்படியாக உரைத்தலே குறிப்பெனினும் அமையும்.

368. உம்மை யாம் அளிக்கும்பொருட்டுப் புகுந்த, தலைவனுக்குக் கொள்ளுங்கால் எம்மை அளிக்கும்பொருட்டுப் புகுந்த எனக்கொள்க. வண்டைப்போலக் களிக்கும்படி நலங்காட்டிய நும்மை. தலைவனே நீ வந்தநாள்முதல் இன்றளவும் நலம்விளைத்த உன்னைப் பிரித்தற்கு வேங்கை பூத்ததென்று தலைவனுக்கும் கொள்க. ஒளிக்கப்புகுதல் அரிதாகும்.

நாளையிப்புனம் நண்ணலமறிகென
வாள்வினையவர்வர வறிவுறீஇ விலக்கல்

வாங்குங் குயத்தின ரின்னே வருகுவர் வார்பொழில்காள்
தூங்குங் குளிரரு வித்திரள் காள்சுனை காள்புனங்காள்
வீங்குங் குவட்டினங் காள்வினை யாட்டின் விரவுநும்மை
நீங்குங் கொடுவினை யேமென்னும் வைகலு நேர்ந்ததுவே. 369

வரைவுபாணித்த பருவரல்கிளத்தல்

வளைவாய்ச் சிறுகிளி யோப்புங் கருவியும் வாரிதனும்
விளைவார் தினைப்புன மேல்வைத்த காவலு மீட்டுவிழித்
திளைவார் புனலொற்றுந் தானையும் வெய்யவர் சேர்ந்தவில்லும்
முளைவா னிறைவைகுங் காவலுங் காட்டிற்று மொய்யருளே. 370

குறிப்பு வேறுபடல் குறிப்பொடு கிளத்தல்

ஆரக் குரல்க ளகப்படு மேனுமெம் மல்லற்கஞ்சிச்
சாரக் கவலுஞ் சிறுகிளி காடகை தீர்ந்ததென்றோ
வாரக் கதிர்முற்று மாற்றிய தாளின் மகிழுசிறப்பச்
சேரக் கருதுகின் றீரெம்மைப் போலினிச் செல்லலினறே. 371

---

369. துறை: அறிக எனத் தலைவனைநோக்கி அவன் வரவை விலக்கல். ஆள்வினையவர் - தினையறுக்குந் தொழிலையுடையவர். வாள் - அரிவாளென்பாருமுளர். அறிவுறீஇ - அறிவுறுத்தி. வாங்கும் - வளைந்த.

370. தலைவனது அருளானது கருவி முதலிய அனைத்தையுங்காட்டியதெனவே தலைவனுனவன் இவ்வளவு காரியங்கள் உண்டாவதற்கிடனுய் நிற்கின்றனே அல்லாமல் வரைவுசெய்ய நினைத்திலனென்றாள் என்பது: தலைவி தினைப்புனந்தீர்ந்து இருத்தற்குப்பின் வீடு இடமாய் முடிதலால் 'இல்லும்' என்றாள். உளைவான் காட்டிற்று - யான் வருந்தும்படி காட்டியது. (அருள் கற்புக்காவலைக் காட்டலாவது தலைவனுனவன் தலைவியின் மனம் வேறொருவரை இச்சியாவிதம் வசப்படுத்தியிருத்தலை) தலைவனே உன்னுடைய அருளானது கருவி முதலிய மூன்றையும் காட்டிக்கொடுத்தது. முளைவான் நிறை வைகுங்காவல் - முளைத்த பெரிய கற்பு வைகும்படியான காவல். கற்புக்காவல் - கற்பு வழுவாவண்ணம் ஈன்றோர் கடுமையாக வீட்டிலிருத்திக் காத்தல்.

371. ஆர - உண்ண. கதிரைநீக்கிய தாளடியில். வார் அக்கதிர்.

பரிவுறு வருத்தம் தெரிவுறக்கிளத்தல்

ஆடிட நோக்கி யலர்சுனை நோக்கியன் பூடுருகக்
கூடிட நோக்கிக்கொய் பூம்புன நோக்கிக் குழைதனன்றே
வாடிட நோக்கிய தென்னையென் றெம்மை மரீஇயினர்க்கு
நாடிட நோக்கி யுரைத்திடு நன்றி யிருந்திடினே. 372

நெடுந்துயரலைப்ப நீங்கத்துணிதல்

பீழைசெய் தார்கட் குதவிசெய் வாரெவ ரேபிரிவு
மாழைசெய் நோக்கின் மொழியின்மென் சாயலின் மாறுகொண்ட
ஏழைசெய் மாவுங் கிளியு மயிலு மிவைகிளவா
பூழைசெய் வார்கைக் கரியடர்த் தார்க்குப் புகன்மறியே. 373

வழியியக்குற்றவள் கழுமலுற்றுரைத்தல்

அழிந்தது சாய னடையொடு மாமையொ டஞ்சொனலன்
இழிந்தது காணென் றிறுமாப் பொடுமெழிற் றேகைகிள்ளை
மொழிந்தன வாயினு நம்முயிர் காக்கு மொழியதுவே
கழிந்தன வாயினுந் தெய்வத வேங்கைநக் காப்பதுவே. 374

---

372. தலைவருக்குத் தலைவிவாடிட நீ செய்ததென்னையென்று உரைத்திடுகின்ற நன்றியிருக்கிற பட்சத்தில் யான் குழைதல் நன்றாகும். வாடிட - வாட. ஆடிடம் முதலியவற்றில் நன்றியிருந்திடின்.

373. மா - வண்டு. அது நோக்கால் மாறுகொண்டது என்க. பிரிவைக் கிளவா. மாழை - மாவடு. மறி - மான். மாறுகொண்டதனுற் கிளவா ஆகலான் 'பீழை செய்தார்கட்கு உதவிசெய்வார் எவரே' என்றாள். ஏழை - அறியாமை. மான் மாறு கொண்டிலதாகலான் 'புகலுவாய்' என்றாள். இனி மானும் நோக்கத்திற்கு உவமையாகலான் எனப் பொருளொழித்து மறியென்பதற்கு ஆடு எனப் பொருள் கோடலுமொன்று. துறை: தினைப்புனத்தினின்று நீங்கத் துணிதல். புனத்திலுள்ள மா கிளி மயில் இவைகள் தலைவி இல்லிற்சென்றாளெனக் கிளவாவாம்.

374. துறை: கழுமல் - துன்பம். தினைப்புனம்நீங்கி வழியில் இயங்குபவளென்க. நான் புனம் நீங்கியவிடத்து அப்புனத்திலுள்ள மயிலும் கிளியுமாகிய இவைகள் நடையொடு சாயலழிந்தது, மாமையொடு சொல்லின் நலனிழிந்தது, தலைவிக்கென்று இறுமாப்பொடும் தாம் இயல்பாகச் சொல்லிக்கொண்டு புனத்திலிருந்தாலும் தலைவர் வந்தபோது அதைக் கேட்பாரேயானுல் என்னைத்தேடி எனக்கருள்செய்ய இல்லிற்கு வருவாராகையால் என்னுயிர்காக்குமொழி அதுவாகும். அவை மொழியாமற் கழிந்தாலும் தெய்வ வேங்கையானது நம்மைக் காப்பதாகும். தலைவனைப்

வறும்புனம் நோக்கி மன்னவன் மறுகல்

கருவிப் புயறவ ழூந்தடஞ் சாரற் கனைமணிவெள்
ளருவிப் புனலின் வளர்தினைப் பூம்புன மைமெதழிநீர்
திருவிப் புனமென நின்றா ழெறுழ்த்திறங் காட்டிற்றந்தோ
மருவிப் பிரிநர்தங் கேட்டுக்குஞ் சான்று வழங்குவதே. 375

கருத்து வேறுபட வருத்தமிக் குரைத்தல்

ஐந்தென வோது மவத்தையு நீங்கி யவக்கலப்புத்
தந்தெனை யாண்டருள் வீரட்ட காசத்தின் ருளொழிய
முந்தென வோங்கும புவனமுந் துன்ப முகிழ்க்குங்கொலாம்
வந்தென வோகை செறிக்குமிச் சாரல் வருத்துவதே. 376

மின்னுருக் காணது பன்னிமிக் கழிதல்

சுனைபொழி தேங்குவ ளைகண்கள் காட்டத் தொடுத்தவிருல்
நனைபொழி சாரல் வளர்பணை தோளினை நாட்டமலர்க்
கனைபொழில் வார்தளிர் மென்னிற மீட்டக் கவலமற்றியான்
துனைபொழில்வேங்கையுங் காட்டிற்றுமாதர்சுணங்கினையே. 377

பிரிந்தமையாலும் பகற்குறி இழந்துவிட்டதே யென்றெண்ணும் ஏக்கத் தாலும் அழிந்தது இழிந்தது என்க. காக்கும்படியான மொழியதைத் தலைவருக்கு மொழிந்தனவாயினும் மொழியாது கழிந்தனவாயினும் என்பாருமுளர்.

375. பூம்புனமானது தினைத்தாளையுடைய புனமென்னும்படி நின்று ஊழ்த்திறத்தினைக் காட்டியது. அஃதன்றியும் கூடிப்பிரிவோர் கேட்டுக்கும் சாட்சியாந்தன்மை வழங்குவதாம். முன்பு ஆக்கத்தைச் செய்து பின்பு அவ்வாக்கத்தை யழிக்கும் இயல்புள்ளது ஊழ்த்திறமென்க. பிரிந்தோர்கள் ஆக்கம் இழந்திருப்பரென்க. இருவி - தினைத்தாள். தினைப்பயிருடைத்தா யிருந்த புனமானது அப்பயிரழியப் பெற்றிருத்தல் தலைவி நீங்கற்கேதுவா யிற்று. அதுபற்றித் தலைவன் வருந்தினன்.

376. தலைவியிருக்கப்பெறாத இச்சாரலானது என்னை வருத்துவது ஆகலான் சிவபிரானது தாள் நீங்கலாக முதன்மையாக உயர்ந்த புவனங் களெல்லாம் துன்பம் தருமாம். சாரலும் அப்புவனத்துள் அடக்கம் ஆக லான் அவ்வாறு கூறினன். வந்தென - வர.

377. துறை: தலைவனனவன் பன்னி. பன்னி - கூறி. குவளை மூங்கில் தளிராகிய இவைகள் தலைவியின் கண்களையும் தோளையும் நிறத்தையும் தோற்ற என்க. நனை - கள், தேன். துன்று அ பொழி - நெருங்கிய அழகைப் பொழிகின்ற.

அணங்குறு பதிபுகல் அரிதெனக் கலங்கல்

எந்திரம் யாத்த வெயிலோ டகழில்லை யாயினும்வான்
தந்திரம் யாத்தவெஞ் சேனையின் றாயினுந் தாழ்மனனே
மந்திரம் யாத்த வயினணு காமணி நாகமெனச்
சுந்தரம் யாத்தவ ளூரிது வாயினுஞ் சுட்டரிதே. 378

இரவுக் குறிநினைந் தேந்திலை வேலோன்
பரவை யல்குற் பாங்கிக் குரைத்தல்

பகலிரை மாறிய ஞான்றிர வூடு படர்ந்துழுவை
புகலரி தாமிடத் தும்புகுந் தேகும் பொருப்பணங்கே
இகலெறும் வார்சிலை யார்பெருங் காவ லியைந்தமர்நும்
அகல்வரைச் சீறூர்க் கினிவிருந் தாக வணுகுதுமே. 379

தோம்பட வுளதெனத் தோழி மறுத்தல்

பொறிவயின் யாத்த வருடைநன் மானைப் புகன்றுதப்பாக்
குறிவயின் யாப்புண்டு வேங்கைகள் குன்றுங்குன் றத்துவெற்பா
நெறிவயி னீளிர தஞ்செல்லு மாயினு நேர்ந்தெவரும்
வெறிவயிற் சோடை விடிந்தன்றி யிற்றெருறும் வீவதின்றே. 380

---

378. எயிலோடு. மிக்க தந்திரத்தோடுகூடிய சேனை. சுட்டுதற்கும் அரிதாம்.

379. படர்ந்து புகுந்து ஏகுதற்கு இடமாம் பொருப்பு என்க. புக அருமையாகிய இடத்தும் புகுந்து.

380. துறை: தலைவனே! நீ இரவில் வந்தால் குற்றம் பொருந்தல் உளது என்று மறுத்தல். பொறியின்கண் கட்டிவைத்த வரையாடும் மானுமாகிய பார்வை மிருகத்தைப் புலிகள் விரும்பி அப்பொறியில் அகப்பட்டு வருந்துதற்கு இடம் நினது குன்றமாகலின், தலைவனே! நீ எம் மாதை விரும்பி இரவில்வரின் அகப்பட்டு வருந்துவாய் என்பது. புகன்று - விரும்பி. வெறியாடல் - வேலனுடல்; அஃதாவது, முருகவேளுக்குப் பூசைசெய்து கொண்டாடுமிடம். சோடை - விளக்கு. விளக்கு வீவது இன்று. சோஷை - திரி எனப் பொருள்கொள்க.

பின்னிலை முனிந்து பெருந்தகை கவறல்

கண்ணடிக் குள்ளொளிர் சாயையென் கையி னிருவுகென
மண்ணடிக் கோட்டி யழுமழப் போலவென் வன்னெஞ்சமே
பண்ணடிக் கின்ற பணிமொழிப் பாவை பரிசறிந்தும
எண்ணடிக் கின்ற விரவூ டலைத்தி யெனைப்பிடித்தே. 381

தளர்வறத் தோழி தழீஇக் கூறல்

அஞ்சிறை வாவ னறுங்கனி தேர்ந்துண் டகல்சிலம்பின்
நஞ்சிறை வேல்வலத் தாயன்பர் வந்தரு ணல்குமென்றேன்
நெஞ்சிறை கொண்ட துமிழுமுன் கண்ணீர் நிறைக்குமன்றே
பஞ்சிறை கொண்ட பரிபுரச் சீறடிப் பைந்தொடியே. 382

கடனறி தோழி உடன்பட் டுரைத்தல்

ஆற்று வுளத்தினை யண்ணலு மாதவ னீடொளித்தேர்
தோற்று தொழிந்தன னுண்டுளி மேகஞ் சுரந்தனவால்
கூற்று மெனவிலங் கும்விலங் காற்றிற் குறிச்சிபுக்கு
மாற்று விழிப்புனல் வல்லிகொள் ளாவகை வைகுதியே. 383

---

381. துறை: பகற்குறியின் பின்னர் நிற்றலுடையது இரவுக்குறி யாதலால் அவ்விரவுக்குறியை வெறுத்துத் தலைவன் கவலல் என்க. அது 'இரவூடு அலைத்தி' என்பதனுல் பெறப்படும். பின்னிலை - பின் நடக்கும் நிலைமை என்பாரும் உளர். மண்ணில் அடியை வளைத்து. எண்ணத்தையும் அடிக்கின்ற இரவு என்றது எண்ணத்தால் இத்தன்மைத்தென்று அறிய முடியாத இரவை.

382. வாவற் பறவையானது கனியையுண்டு அகலுதற்கு இடமாகிய சிலம்பு என்க. நஞ்சு இறை வேல். தலைவியே! தலைவர் வந்து கருணை செய்வார் என்று சொன்னேன், சொன்னமாத்திரத்தில் அத்தலைவி யானவள் என்னிடத்தில் தன் உள்ளத்திலுள்ள கருத்தை வெளிப்படுத்து முன்னர், அழுவாள். தலைவியின் நெஞ்சு என்க. வாவல் - வெளவால்.

383. துறை: இரவுக்குறிக்கு உடன்பட்டென்க. அண்ணலாகிய நீயும் தணியாத உள்ளத்தினையாயிருக்கின்றாய். ஆற்றினையுடைய யமனைப்போல விலகிச்செல்லும் விலங்கினையுடைய ஆறு என்க. ஆதவன் - சூரியன்.

மறிநேர் நோக்கி குறியிடங் கூறல்

பிண்டிப் பொழில்புடை சூழ்ந்திள வேங்கை பிரசமென்பூ
மண்டிப் பொதுளி வணங்கிய சாகை மலிந்துதினை
உண்டிப் பசுமயிற் சேக்கைய தாயுறை முன்றிலதால்
வண்டிப் பியமலர்க் கொம்பரன் னுண்மன்னும் வைகிடமே. 384

சூழ்ந்தவன் வினவத் தோழி குறித்தல்

நாற்றிய செஞ்சடை வீராட்ட காசத்து நாதர்பொற்றாள்
ஏற்றிய சென்னிய ரல்லா ருளத்தி னிருண்டகங்குற்
போற்றிய வாடலி னுன்வரை வாழ்நர் புகன்றணியும்
ஊற்றிய தேமலர் யாவிரை யாவை யுரைவள்ளலே. 385

குறிப்பறி தலைவன் மறித்தெதிர் வினுதல்

ஞாலங் கருது நகுகதிர் முத்த நகைமடவாள்
ஏலங் கமழுங் குழல்போ லிருண்ட விரவினுமர்
நீலங் கலந்த நெடுங்கணல் லாய்நெஞ் சுவந்தணியும்
கோலங் கனிந்த மலரென் கலவையென் கூறுகவே. 386

தொடுத்த வினுவுக்குத் தோழிசெப் பிறுத்தல்

புழுகுகத் தூரி கருப்புரம் குங்குமம் பூம்பனிநீர்
இழுகுமட் டேறிளந் தாதோ டுரிஞ்சி யெடுத்தசந்தின்
முழுகுபொற் றேளினர் கற்சுனைப் பூத்த முழுநெறியின்
ஒழுகுகட் டாரின ரெல்லியெங் குன்றினுற் றுடுநரே. 387

---

384. துறை: நோக்கி - பாங்கி. வைகிடமானது முன்றிலதென்க. அம்முன்றிலே குறியிடமாகும் வேங்கை மரம் மலிந்து தினையுண்டியை யுடைய மயில். சோலையே குறியிடமெனக் கூறியவாறு. முன்றிலையுடையது வைகிடமானது. சூழப்பெற்று - மலியப்பெற்று.

385. சென்னியரல்லார் - வணங்காதவர். தோழியானவள் குன்றவ ராகிய தம்மவர்கள் இரவுக்குறியிலணியும் மலரையும் விரையையும் தலைவ னணிந்து இரவுக்குறியில் வரவேண்டுமென்னும் எண்ணமுடையவளாய் அத்தலைவனைநோக்கி உன்வரை வாழ்நர்கள் இரவுக்குறியில் அணியும் மலர் யா? விரை யா? என வினவினுள் என்க. எனவே உன்வரைவாழ்வோர்க்கு உரிய மலரையும் விரையையுமணிந்து வாராதே என்பது. துறை: சூழ்ந்து அவன் வினவ - தோழி சொன்னமையை அறிந்த தலைவனுனவன் தலைவி யின் வரைவாழ்வோர்கள் அணியும் மலரையும் விரையையும் தான் அணிந்து வருவதற்காக அம்மலரையும் விரையையும் தெரிந்துகொள்ள வினுவ. அது அடுத்த செய்யுளாற் பெறப்படும். புகன்று - விரும்பி.

387. நெறி - ஒழுங்கு. பூத்த தாரினர்.

அரவக லல்குற் காற்றுமை தணிதற்கு
இரவுறு குறியும் வேண்டுமென் றியம்பல்

காமப் பிணிக்கென் றமைத்தது கங்குலக் கங்குலின்வாய்த்
தாமப் பிணிக்கு மருந்தாய்த் தணிப்பதல் லாற்றனித்து
நாமப் பிணிக்கு மருந்தறி யாநறுங் காழகிலின்
தூமப் பிணிக்குழற் காமரு சாயற் சுடர்த்தொடியே. 388

அடல்வே லண்ணல் ஆற்றுமை நுவறல்

வீக்கிய பாசப் பிணிப்பிற் றழீஇக்கொண்ட மென்பறழின்
வாக்கிய தேம்பொழின் மந்திக டுஞ்சுமஞ் சார்சிலம்பன்
தேக்கிய தேறற் களிவண்டு தன்பெடை சேரக்கண்டு
நீக்கிய வாவியர் போன் றுயிர்த் தானந்தி நேரிழையே. 389

ஆங்கவன் வரவு பாங்கி பகர்தல்

கொடிப்பகை சாம்பப் பகலதற் கஞ்சிய கூகைசென்று
முடிப்பகை வேந்தரின் வேண்டிரை தேர்முழை சூழ்சிலம்பன்
கடிப்பகை வேடர் பராவுங் கடம்பன் கடியுங்கண்டு
தொடிப்பகை பாணிக்கென் னுமையிங் கேவரல் சொற்றனனே.

---

388. துறை: பாங்கி தலைவிக்கு இயம்பல். அப்பிணிக்குத் தலைவரானவர் மருந்தாய்த்தணிப்பதல்லாமல். நாம் அறியோம். தாம் - தலைவர். அப்பிணி என்றது காமப்பிணியை.

389. மந்திகள் பறழோடு துஞ்சும் சிலம்பன் அந்திக்காலத்தில் பெருமூச்செறிந்தான். துறை: பாங்கி தலைவிக்குச் சொல்லல்.

390. பகலில் அதற்கஞ்சிய கூகையானது இரவில் கொடியாகிய தம்பகை சாம்பச் சென்று இரைதேர் சிலம்பு என்க. கொடி - காகம். வெண்சிறு கடுகைப் புகைத்தால் பேய் அணுகா. அதுபற்றி வேடர் கடுகைப் புகைப்பர் என்க. கடிப்பகை - வெண்சிறுகடுகு. ''ஐயவியப்பிய நெய்யணி முச்சி'' ஐயவி - வெண்சிறுகடுகு. தலைவனைவன் முருகனது விழாவைத் தெரிசித்துக்கொண்டு தலைவியின் கைக்கு வளையல் பகையாம் என்னுவிதம் வருகிறேனென்று சொல்லினனென்பது. பாணிக்குப் பகை தொடியென்னுமை யெனவே காமவிகாரம் கொண்டமையால் வாடிய கை பெருக்க என்பது. கடியும் - வெறியாட்டையும்.

வரவு கேட்ட மாணிழை கலங்கல்

கருணைக் கடல்வளர் வீராட்ட காசக் கடவுளுயிர்
இருணைக் குடைய வுருக்கொண் டெளிவந்த தென்னவன்றே
அருண்மிக் குடையவ ராயிர வூடரி யாளிப்பன்மா
வெருண்மிக்க சோலை வரலுஞ்செய் தேன்வினை யேனிருந்தே.391

துயரினி விடுகெனத் தோழி நயப்பித்தல்

கானவர் வார்விற் கணைபிழை யாதகண் ணார்சிலம்பன்
ஏனவண் சூழன் மிளையு மிறும்பி னிறுவரையும்
தானவ ணீந்தி வருதன்மெய் யேமுன் றளர்ந்துநின்றால்
மானவ மானகண் ணயெவ னுகுநம் மாட்சிமையே. 392

மடம்படு பேதை உடம்பட் டுரைத்தல்

முன்னுந் தனிநின்ற சூழலிற் பேரின்ப முற்றுவித்தார்
பின்னுந் தறுகட் கடாங்கவிழ் வேழம் பெயர்த்தளித்தார்
என்னுந் தமக்கியை பில்லேற் கிரவினு மின்றிறுத்தார்
கொன்னுந் திருவுள மின்னுமென் கொள்ளினுங் கூற்றமின்றே.

---

391. கடவுளானவர் ஆசாரியமூர்த்தமாய் வந்தாற்போலத் தலைவ ரானவர் அருளுடையவராய் இரவூடுவரலையுஞ் செய்துகொண்டேன்.

392. குன்றவரெய்யுங்கணை இலக்கினின்றும் தவறப்பெறாது இடமார்ந்த சிலம்பு என்க. தலைவன் வருதல் மெய்யாகும். அவன் வருதற்கு முன்னர்த் தளர்ந்து நீ நிற்பாயானால். காவற்காட்டையும் குறுங்காட்டையும் நீந்தி என்க. மிளை - காவற்காடு. இறும்பு - குறுங்காடு. சிறுமலை - தூறு.

393. தலைவரோடு எவ்விதத்தினும் யாதொரு இயைபும் இல்லாத எனக்கு ஆபத்துவந்தவிடத்து உதவினாரேயல்லாமல் யான் உதவி தலைவருக்குச் செய்ததொன்றில்லை என்றாள் என்பது. தலைவர் எவ்வெவற்றை நினைப்பினும் யான் தடுத்துப்பேசும் பேச்சில்லை என்றதனால் தலைவி உடம்பட்டுரைத்தல் காண்க. என்னும் - எவ்விதத்தானும்.

காய்துயிற் றோழி தாய்துயி லறிதல்

துடுமென வாரிச் சுனையில்வை வேல்கொண்ட தோன்றலுக்கு
விடுமென நீயிர் நிறுத்திய வாழைமென் றீங்கனிவீழ்ந்
திடுமென காரண மோவினி வேறு பராய்விடவும்
படுமெனல் கோடியன னையென் னனைய்துயில் பற்றினையே. 394

அரையிரு ளிதன்கண் வருகுவ ரென்றல்

கொட்டிய வேய்மணி சோலைமென் றாதிற் குளிப்பவைதாம்
அட்டிய மாரிக் குறுந்துளி யானலங் கும்பொருப்பர்
கட்டிய வாரிளங் கொங்கைநல் லாய்நங் கவினளிப்பான்
ஒட்டிய காலமு மீதுவல் லேயிங் குறுவரன்றே. 395

கொந்தொளி வேலோன் வந்தன னென்றல்

அழுந்தலை வேலை யடுத்தெழு மேக முருமெறிய
எழுந்தன தோகை மயிலின மார்ப்பொடு மீண்டரவம்
விழுந்தன மேகலை மெல்லிய லாய்வெயி லத்துலந்த
செழுந்தளிர்ப் பூங்கொடி முல்லைசிந் தாகுலஞ் சிந்தியதே. 396

---

394. துறை: காய்ந்த துயில் - நித்திரையின்மை. தலைவியோடு தலைவனை இரவிற்சேர்த்துவைக்கும்பொருட்டு நித்திரையில்லாதிருக்குந் தோழியானவள், தாய் துயின்றசமயம் பார்த்து, அச்சமயத்தில் சேர்த்தற்காகத் தாயின்துயிலை அறிந்துகொள்ளும்பொருட்டு, துயிலுகின்ற தாயின் காதில் விழும்படி 'தாயே! முருகனுக்கென விட்ட வாழைக்கனியானது சுனையில் வீழாநிற்கும் என்ன காரணமோ? இனி வேறு வாழை விடவும் படுமென்னலைக் கொள்ளுவாய்' என்று சொல்லுவாள் என்க. இச்சொல்லுக்குத் தாய் பதில் சொல்லாமலிருந்தால் தாய் துயிலுகின்றாளென்று அறிந்து உடனே தலைவியைத் தலைவனிடத்திற் கொண்டுபோய்சேர்த்து மீட்டு அழைத்திருத்துவாள் என்றறிக. தலைவன் தான் வந்தமையைத் தலைவியும் தோழியும் அறிந்துகொள்ளும்பொருட்டுக் கல்லையெடுத்துச் சோலையில் எறிவான். அக்கல்லோசையைக் கேட்ட தோழி தலைவன் வந்து விட்டான் என்பது உட்கொண்டு கல்லோசையை மாறுபாடாக வாழைக் கனி வீழ்ந்திடுமென வேறு உபாயத்தால் கூறுவாள். துடுமென வீழ்ந்திடும் என்ன காரணமோ. விடவும் படும். எறிந்த கல் சோலையினும் சுனையினும் வீழ்ந்து ஒலியுண்டாக்கும்.

395. பூந்தாதிற் குளிப்பவையாய் மறைந்திருந்த மூங்கில் முத்தானது மாரித்துளியால் விளங்கும் பொருப்பு என்க. கவினளிக்கப் பொருந்திய காலமும் ஈதாகும். ஒட்டிய - நெருங்கிய. குளிப்பவையாகிய வேய்மணிதாம்.

396. மேகம் உருமெறிதலால் தோகையையுடைய மயிலினம் எழுந்தன, ஈண்டிய சர்ப்பம் விழுந்தன, முல்லை பூத்தது, ஆர்ப்பொடும்

முயங்க வம்மென முற்றிழைக் குரைத்தல்

பூரண கும்ப முலையிறு மாப்பப் பொதியிருளில்
ஆரண மன்ன மொழியா னடல்வேற் கரந்துணையா
வாரண மென்ன வயினடுத் தான்மரு மந்தழுவாக்
காரண மென்னு மினியில்லை வம்மோ கலங்குழையே. 397

குறிவயிற் றலைவியை நெறிவயி னுய்த்தல்

சுனைக்கரு நீல மலர்ந்தது காண்சுணங் கேர்முலையாய்
வினைக்கரு ளீசன் வதியும்வெய் யோன்விளங் கும்பகலில்
தனைக்கரு வாட்கண் ணிகர்க்குங்கொ லாமிது தானெனச்செய்
முனைக்கரு நோயுற் றுறங்குவ தாமென்று மொய்யிருளே. 398

இடத்துய்த் தகல்பவண் மடத்தகைக் குரைத்தல்

சந்தனச் செச்சையி னுலால வாலஞ் சமைத்துநறைக்
கொந்தலர்த் தண்ணறுந் தாதெருப் பெய்து குளிர்பனிநீர்
உந்தகைத் தோங்குநம் முல்லைகள் பூத்தவொண் டோகைகுழற்
கிந்தமைக் காரிருள் வேய்வன கொய்திங்க ணெய்துவனே. 399

எழுந்தன. முல்லைக்கொடியானது தன் துன்பத்தைச் சிந்திக்கொண்டது. கார்காலம் வந்ததாதலால் தலைவன் வருவான் என்பது.

397. வேலேந்திய கையே துணையாக. வாரணம் - யானை. என்னும் - சிறிதும்.

398. ஈசன் தங்கியிருக்கும்படியான மண்டலத்தையுடைய சூரியன். வினைக்கு விடை கொடுத்தலாவது வினையை ஒழித்தல். தலைவியே உன்னுடைய கண்ணானது பகற்காலத்திலே தன்னை நீலோற்பலமாகிய இது ஒக்கும் என்று கருதிச்செய்த குவிதலாகிய நோயை இப்பொழுது அக்கண்ணே அடைந்து உறங்கிக்கொண்டிருப்பதாம் என்று இரவில் சுனையிலே நீலோற்பலம் மலர்ந்தது; அதனை நீ பார்ப்பாயாக என்றாள். எனவே உன் கண்ணானது பகற்காலத்தில் குவிந்து உறங்காது மலர்ந்திருத்தலினால் அப்பகலில் மலராது குவிந்த நீலமலரை வென்றிருந்தது; இப்பொழுது இந்த இரவிலே நீலமலரானது குவியாது மலர்ந்திருத்தலினாலே தன்னைப் பகலில் வென்றிருந்த கண் இப்பொழுது மலராது குவிந்து உறங்கும் என்பதை உட்கொண்டு வென்று மகிழ்ந்து சுனையில் பூத்திருக்கின்றது; அச்சுனையிடமே குறியிடமாம்; நீ செல்வாய் என்பது கருத்து. 'உறங்குவதாமென்று' எனவே நீ காமத்தால் உறங்காமலிருத்தலை நீலமலர் அறிந்திலது என்பது. நோய் என்றது காமநோயை அன்று, கண்ணானது நீல மலருக்குச் செய்த நோயை; அந்நோயாவது நான் அதனை ஒத்திலேன் என்று வருத்தமடைதல். சுனையே குறியிடமாம் என்பது மேல்வரும் 421-ம் செய்யுளால் அறிக.

399. ஆலாலவாலம் - பாத்தி. பனிநீரும் தகைத்து - பனிநீரையும் தடுத்து.

மறிமரு ணோக்கி குறியெதிர் உரைத்தல்

வார்ந்துயர் வாழைப் பொழிலின் வருடைநன் மான்கனிமிக்
கார்ந்துழை நீண்ட வருநெறிக் குன்றத் தசைந்துறங்கச்
சேர்ந்திவர் நாகத்துத் தேமொழி யாய்செறி கங்குலிங்கண்
சார்ந்ததென் ணேய்க்குப் பிறிதில்லை யென்றுகொ ருழ்குழலே.

அன்பு மீதூர அளவளாய்க் கலத்தல்

பண்டே புரிந்த பழுதறு நல்வினை பான்மதியம்
கொண்டேலநாறிய கொண்டல்கொண் டுள்ளே கொழுங்களியார்
வண்டே மருங்கு விடுத்து மணிநிற வேய்தழைப்பத்
தண்டேன் மொழியுடைத் தாய்வந்த வாறுயிர் தானெனவே. 401

கலவியிற் றேற்று நலனெடுத் துரைத்தல்

அருகிய நோக்க மளிக்கு மிளநகை யாங்குயிர்க்கும்
குருகிய லோதை கொழிக்குங் கொழுந்தளிர் போற்றுவளும்
உருகிய காத லுகக்கு முடங்குறை கெனனப்பைந்தேன்
பருகிய வாயுந் துடிக்குமின் னேயிவள் பண்புகளே. 402

வயந்தரு வேலோன் நயந்தவ னுரைத்தல்

பங்கய மானனஞ் செங்கரம் பாதம் பரவையல்குல்
செங்கயல் வாட்கண்க ளென்மர் செறியிர வூடெனைப்போற்
பொங்கய வாழ்க்கை மரைமலர் போலொளிர் பூவையுறுப்
பிங்கய ராமை மலர்ந்தின்பத் தேன்பொழி வெய்த்திலரே. 403

---

400. தலைவி குறியிடத்தில் எதிர்ப்படலைத் தலைவன்கண்டு சொல்லல் என்பது துறை. என்றுகொல் நீ சார்ந்தது என முடிக்க. சார்ந்தது என்பது வினை. வாழைக்கனியை. மலையிலுள்ள பெண்ணே.

401. வண்டு கண். உயிரென வந்தவாறு நல்வினையாம். நல்வினை யானது உயிரென்னும்படியாக இவ்வாறு வந்தவாறு ஆகும்.

402. உருகிய காதலால் மகிழும்.

403. பொங்கு கயம் என்பது பொங்கயம் என்றாயது. அயராமை - வாடாமை. ஈண்டுக் குவியாது என்பது. என்மரானவர் இன்பத்தேனை இரவினும் பொழிதலை அறிந்திலர். தலைவியின் உறுப்புக்கள் இரவினும் மலர்ந்து இன்பத்தேன் பொழிதலால் அவ்வுறுப்புக்கள் தாமரைபோல் ஒளிர்கின்றது என்று சொல்லவேண்டுமே யல்லாமல் அத்தாமரையாகவே சொல்லுதல் பொருந்தாது, இரவில் குவியும் இயல்புள்ளதாகலான்.

பரிவகல் தலைவனோ டரிவைகட் டுரைத்தல்

குரும்பிவன் மீகதத் தகழ்ந்துணு மெட்குக் குழாமொருபால்
விரும்பிவல் வேழத் துலவையின் வேர்மிசை மாவொருபால்
அரும்பிய சீற்றத் துவாப்புலி யோடம ராட்டொருபால்
சுரும்பிவர் தாரவ வெங்ஙனம் போந்தனை சூழிருட்கே. 404

இன்பநிறை வேலோன் துன்பமறு கிளவி

பொல்லா விலங்கு மலைகையும் பூதமும் போரணங்கும்
ஒல்லா விரவி னுருமெறி மேகமு மூரரவும்
எல்லா மெழிற்கணி காசலத் தேந்தல்செந் தாளிறைஞ்ச
வல்லார் தமையடுத் தாரையு நோக்குங்கொன் மாணிழையே. 405

நீங்குறு வேலோன் பாங்கியிற் கூட்டல்

எடுப்பிய தோகையுந் துஞ்சுக நீரொலி யாலிருந்தாய்
படுப்பிய வாட்கண் படாவிள மாக்களுங் கண்படுக்க
அடுப்பியை பாங்கியு நீயு மணையி னனந்தல்கொள்க
விடுப்பியை யாவுளத் தேனுமங் கேசெல்க மின்கொடியே. 406

எனைப்போலயராமை என இயையும். வாட்கண்கள் செங்கயல் என்று கொள்ளற்க. செங்கயலையும் வாளையும் ஒத்தகண்கள் பங்கயமென்பார் என அவற்றோடு சேர்ந்தே பொருள்கொள்க.

404. எண்கு எட்கு என்றாயது விகாரம். மா - சிங்கம். யானைக் கொம்பினது அடிக்குருத்தை ஒடித்து உண்ணும் சிங்கம்.

405. துறை: விலங்குடை இரவின்கண் எவ்வாறு வந்தாய் என்று கேட்டுத் துன்புற்ற தலைவிக்கு அத்துன்பம் அறும்படிக் கட்டுரைத்தல். சிவனது தாளிறைஞ்சவல்ல பெரியோரை அடுத்த மகான்களை விலங்கு முதல் ஊர்கின்ற பாம்பிறுதியாயுள்ள எல்லாம் நோக்குமா? நோக்காது. போர்க்குரிய அணங்கென்றது துர்க்கை, காளி முதலியோரை என்க.

406. என்னாலுண்டான சுனைநீரொலியால் நித்திரையின்றி யிருந்த மயிலும் மாக்களும் நித்திரை செய்க. தலைவனால் நீரொலி உண்டாதற் கேது 'துடுமென' என்னும் 394ம் செய்யுட்கருத்தாலறிக. அடுப்பு - அடுத்தல். விடுப்பு - விடுத்தல். எடுப்பிய - எழுப்பிய. இரும் தாய் படுப்பிய - பெருமை தங்கிய தாயான மிருகம் படுப்பிக்க. நீரொலியால் கண்படாத் தோகையும் துஞ்சுக, மாக்களும் கண்படுக்க. யானும் செல்க.

நீங்கிய தலைவியைப் பாங்கிசென் றடுத்தல்

குதுகல மார்த்துங் குமாரலிங் கேசன் கொழுஞ்சரணென்
பதுகல வாரிற்பைங் கோட்டலர்க் கூக்கிப் பருவரனீ
மதுகர மார்ப்ப மலர்ந்துசெந் தேனக்க மௌவன்முல்லை
யதுகர மேந்திவந் தேனணி யாய்குழற் காரணங்கே. 407

வல்லிநுண் மருங்குலை இல்லிடை யுய்த்தல்

இட்டிடை நோவ விரிசிகை நூபுர மேங்கமறை
மொட்டிகல் பூணிளங் கொங்கைகள் பொங்க முருகுவிம்மக்
கட்டிய கூந்தல் பிடர்த்தலை சோரக் கடுகலல்குற்
பட்டியல் பாவைநல் லாய்பையப் பையப் படர்மதியே. 408

தலைவனை யண்மிச் சார்ந்தபி னேங்கலள்
அலமரல் நீங்க வளைபிடி யென்றல்

வீற்றுவல் வீரர் மிடையினு மாங்கவர் வீரமுற்றுங்
காற்றுவை வேலிறை வாநுங்கள் காவல் வரையிற்சென்று
போற்றுவ தாவதொன் றுண்டு புலம்பிய பூவையன்னாள்
ஆற்றுவ தாக வலம்புரி வாய்வைத் தருளுவதே. 409

இன்னண மொழுகலை மன்னவென் றகற்றல்

அம்பலு மோங்க லரும்புதி தாவதின் றேனுநெறி
உம்பலும் யாளியு மேனவு மூறுசெய் யாவிடினும்
நம்பலுங் காவலு நின்வயி னீளினு நன்றிதன்றே
வம்பலுங் காலங்கொ லோபிரி யாவன்பு வாய்ந்தவர்க்கே. 410

---

407. மலர்க்காக நீ முயற்சித்துத் துன்படையற்க. ஊக்கி - முயற்சித்து, மனத்தைச் செலுத்தி எனினும் பொருந்தும். மகிழ்ச்சியைப் பொருத்துகின்ற. குதுகலம் - மகிழ்ச்சி.

408. கடுகல் - விரைந்து செல்லற்க.

409. துறை: தோழியானவள் தலைவனிடத்தில் உடனே சென்று தலைவனைப் பார்த்து, 'தலைவனே! நீ போகும் மார்க்கத்தில் மிருகங்கள் சஞ்சரிக்கின்றமையால் அம்மிருகங்களால் ஆபத்து நேரிடும் என்று தலைவி ஏங்கிக்கொண்டிருப்பாள்; ஆகையால் அத்தலைவி ஏங்கலளாய்த் துன்பம் நீங்கும்பொருட்டு நீ உன் ஊர் போய்ச்சேர்ந்தவுடனே சங்கநாதம் செய்வாயாக; செய்வாயானால் ஆபத்தின்றி ஊர் போய்ச்சேர்ந்தாய் என்றறிந்து கொள்வோம்' என்றாளென்க. வேறு வீரர் வரினும்.

410. நம்புதலும். பிரியா அன்புள்ள தலைவருக்கு, புதுமையான அல்லும் தாம்வருதற்கு ஒருகாலமோ, புதிதாவதின்றெனவே பழமையாக

பாங்கி கேட்பப் பையுள் எய்தி
நீங்குறு வேலோன் நெஞ்சொடு கிளத்தல்

புள்ளுவர் பார்வை வலையொடு கண்ணி புறத்திருவி
உள்ளுற யாத்துப் பறவையு மாவு முடற்றும்வெற்பின்
நள்ளுநள் போல நயமொழி காட்டிய நங்கைபின்பு
விள்ளுநள் போலுரைத் தாளென்ன பாவம் விளைந்ததுவே. 411

ஆகிய பரிவு பாகற் குரைத்தல்

அணங்கோ கடலி னமிழ்தோ வணிமயி லோவெனப்பொற்
சுணங்கோ டெழுமுலை யாள்புறத் தேசென்று சூழ்ந்தநெஞ்சிற்
பிணங்கோ முடங்குவ மோவெனின வாய்ந்தில பேசுவதென்
கணங்கோடி காவதங் காமரு தேருந்துங் கையவனே. 412

விளங்கிய மதியில் துளங்குறு கிளவி

குருமனை வேட்பக் கொழுந்தெழு காமத்தின் கோளறிந்தும்
திருமனை மூடுஞ் செயிர்த்தலை நின்றதிங் காணினையே
பொருமனை மாயினு நீமறை யப்புகல் வாய்கொலொன்னார்க்
குருமனை யானை வரதனை யாங்கூளு றுவகையே. 413

உள்ளது என்பது. எம்மை நம்புதலும் எம்மைக் காத்தலும் உன்னிடத்து மிகினும் நீ வருதலாகிய இது நன்றன்று. அல்லில் வாராதே என்பது. விவாகஞ்செய்துகொண்டு பிரியாமலிருப்பாய் என்பாள் 'பிரியா அன்பு வாய்ந்தவர்க்கு' என்றாள்.

411. வலையை மிருகத்திற்கும் கண்ணியைப் பட்சிக்குமாகக்கொள்க. என்ன அபிப்பிராயம் விளைந்தது. நள்ளுநள்போல - என்னோடு பொருந்து பவள் போல. விள்ளுநல்போல் - என்னோடு பகையையுடையாள்போல். விள்ளுநள்போல் உரைத்தமை 'இரவில் வாராதே' என்றமையாலும், நள்ளுநள்போல நயமொழி காட்டியமை 'வலம்புரி வாய்வைத்தருளுவதே' என்றமையாலும் பெறப்படும்.

412. நெஞ்சோடு யான். உடங்கு வருவாயாக வருவாயானல் பிணங்கமாட்டோம் என்றால் அவை வந்தில என்றானென்க. கணப் பொழுதில் கோடிகாதம் தேர்செலுத்தும் பாகனே நெஞ்சோடு பிணங் கோமாய்ச் சேர்வோமெனில் உடலும் நெஞ்சும் அவ்வாறு வாய்ந்தில; தலைவியிடத்துச் சென்ற நெஞ்சொடு யானும் சென்று சேர்வோமெனில் அப்பொருத்தமில்லாமலிருக்கிறது என்றாள். உடங்குவம் - சேர்வோம். நெஞ்சும் உடலும் வாய்ந்தில.

413. குரு - வியாழன். திருமனை - தாமரை. விஷ்ணு இலக்குமி யோடு சேராதபடி மூடுந்திங்களே. அன்னை துஞ்சினும் நீ துஞ்ச விரும்ப

இராவுறு துயரம் குராலொடு கிளத்தல்

தோகைக் குராய்த்திரி வஞ்சிய நாகந் துஞ்சுயிரவில்
பாகைக் குராலம் படுத்தசொல் லாள்கண் படாப்புலம்பில்
கூகைக் குராலஞ்சச் சொற்பயிற் றுதிகொன் னுான்புழுக்கல்
வாகைக் குராமரச் சூழலின் மல்க வழங்குதுமே. 414

அல்லகுறிப்பாட்டின் மெல்லிடை வருந்தல்

புல்லா டவனை யறியா திரையெனப் போந்தடுத்து
நில்லா துழுவை பசியோ டுயங்கு நெடுஞ்சிலம்பன்
ஒல்லா தளித்த வுளத்தனு ரோடுகு நாகத்தொள்வீ
நல்லா யிசைப்பது கேட்டுறங் காவென் னயனங்களே. 415

நையிடை மடந்தை கையறு கிளவி

ஊன்றலைச் சேவற் சிறகரிற் பின்னி யொடுங்கியின்பம்
சான்றலைச் சேரன்றில் காளெனைப் போற்றள ராதுதுயில்
ஆன்றலை சேர்நுங் கனவின் வரக்கண் டறிந்ததுண்டோ
நோன்றலைச் சேரரு நோய்தலைக் கூட்டிய நோன்மையரே. 416

மாட்டாயோ. அனை மாயினும் - அன்னை துஞ்சினும். தலைவனிடத்திற் செல்லுதற்கு நிலவு தடையினதாயிருக்குந் தன்மைபற்றி இவ்வாறு கூறினாள். திங்கள் போல அன்னையும் தடையாதல்பற்றி 'நினையே பொரும் அனை' என்றாள்.

414. மயிலுக்காகப் பகலில் பெயர்ந்து திரிதற்கு அஞ்சியிருந்த சர்ப்பங்களெல்லாம் அவ்வச்சம் நீங்கிக் கலந்திருக்கும்படியான இரவு என்க. குராலம் - குறைபாடு. வெல்லப்பாகையும் குறைவுபடுத்திய சொல்லாள். தலைவியானவள் நித்திரைசெயாத புலம்போடஞ்சும்படியாக; கூகையாகிய குராலே என விளியாக்குக. முதற் செய்யுளும் இச்செய்யுளும் பாங்கியின் கூற்று.

415. புல்லாடவன் என்பது தினைப்புனத்தில் திருஷ்டிதோஷ பரிகாரத்திற்காகப் புல்லினாலே மனிதனைப்போல் கட்டிவைத்த பாவை என்க. அப்பாவையை மனிதனென்று கருதித் தின்னும்பொருட்டாகப் புலிகள் வந்து உண்மையறிந்து அதன்பின் நில்லாது ஓடிப் பசியோடு வருந்தித் திரியும்படியான சிலம்பன். தலைவர்கொடுத்த துன்பத்தோடு என்க. மனிதனென்று போந்தடுத்து. யான் துன்பத்தோடு உகும்படியான மலையில். நாகம் - மலை. வீ - பறவை.

416. சகித்தலைச் சேர்தற்கரிய எனவே சகிக்க முடியாத நோய் என்பது. தலைக்கூட்டிய - எம்மிடத்துக்கூட்டிய. துறை: கையறவு - கவலை. கவலையோடு கூடிய குவளை என்க.

மாலுறு வருத்தம் நீலமொடு சார்த்தல்

கண்ணீர் கவிழ்த்துக் கருந்துக ளாடிக் கருகிநெகிழ்ந்
துண்ணீர் கழிய வெளிவந்து நின்றனை யுற்பலமே [கும்
விண்ணீள் வரையி னெனைப்போற் குறிபொய்த்து மெல்குவிக்
தண்ணீ ரிலாத தலைவனை நீயுங்கொல் சாற்றுகவே. 417

காணு வகையில் பொழுதுநனி யிகந்து
மாணுத் துயரின் வாணுதல் கிளத்தல்

காவலர் மாய வினிவரு வாரென் னுங் காதன்முற் றும
மேவலர் போன்மதி வீறி விளித்தது வீயவவ்வா
றேவலந் தேனன்னை நாய்மனைக் கோழியி னேய்ந்துமெல்லாம
ஏவலந் தாங்கு மிறையினு மேசற வெய்தினனே. 418

குறித்தலைச் சென்றேன் நெறிக்கவன் றிறத்தல்

பொறிகா ணுமக்குப் புலனணி யார்த்திய போதுஞ்செல்லும்
நெறிகா ணுதற்குத் துயவுறு வீரின்று நேர்ந்ததில்லை
வெறிகான் மலர்க்குழ லாளைவிட் டெங்ஙன மீளுகிற்பீர்
குறிகா ணுதற்குநெஞ் சேமுயன் றுய்குழைந் தாய்திரும்பே. 419

---

417. கள் நீர். உண்ணீர் - உட்டன்மை; அது உள் நீர் எனப்பிரியும். தண்ணீர் - தண்ணளி. தலைவனை உடையைகொல். கண்ணீர் கவிழ்த்தல் முதலியவைகளைத் தலைவிக்கும் கொள்க. உள் நீர் கழிய - குளத்துள்ளே யுள்ள நீர்நீங்க மேலெழுதலென நீலத்திற்குக் கொள்க.

418. காவலர் - நகரைக்காக்குங் காவலாளிகள். ஆசையைச் சந்திரன் கெடுத்தது. வீய - சந்திரனீங்க. அன்னை நாய் மனைக்கோழியினால் ஓ அலந்தேன் என முடிக்க. எல்லாம் ஒய்ந்தும் ஈற்றில் தலைவன் வரப்பெறுமை யால் அவனாலும் கவலை அடைந்தேன். தடையுண்டாதலைக்கண்டு வாரா தொழிந்த தலைவனாலும் எனப் பொருள்கோடலேயன்றித் தடையுண்டா தலைக் கண்டமுங்கிய தலைவனைப் பார்க்கிலும் எனப் பொருள்கோடலும் பொருந்தும்.

419. துறை: குறியிடத்துச் செல்லும் தலைவனுனவன் இடைவழி யில் வருந்திக் கடந்துபோதல். முன்பு தலைவியோடு கூடியகாலத்தில் யான் நுமக்கு ஆர்த்தியும், அத்தலைவியை விட்டுப் பிரிதற்கு மனமில்லாமையால் திரும்பி வருதற்கு வருந்துவீர்; இப்பொழுதோ தலைவி இன்னுங் கிடைக்க வில்லை; ஆதலால் இப்போது தலைவியோடு கூடுவிரேல் எவ்வாறு மீளுவீர்.

காட்சி யாசையிற் களம்புக்குக் கலங்கி
வேட்கையின் மயங்கிய கையறு கிளவி

எறிந்தளி வேங்கையின் மூசுவ தென்றுமெய் யாமின்றிதோ
செறிந்தலர் வேங்கையின் மொய்ப்பவன் ளுய்திருந் தேடியிங்கே
மறிந்தளி யேமுயிர் மாழ்கிய போதைக்கு வான்மருந்தாய்ப்
பிறிந்தவர் செங்கழு நீர்நறுங் கோதை பிறங்குவதே. 420

தன்பிழைப் பாகத் தழீஇத் தேறல்

சிலம்புங் குருகுறை நீண்மரச் சூழலுஞ் சிந்தலர்கட்
கலம்புங் கடிச்சுனைச் சூழலு நீக்கி யயிர்ப்பிலதோர்
நிலம்புஞ்ச வெல்வளை யாய்கிளந் தேமொனி னீடிரவில்
புலம்புந் தலைவ னடுத்தணங் கோடங்குப் போவதுண்டே. 421

ஆர்த்தல் - கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று இன்படைவித்தல். பொறிகளும் அச்சேர்க்கையினின்றும் பிரிதலை.

முன்பு கூட்டத்தில் இன்பனுபவித்தலால் மகிழ்ச்சியோடு பிரியவேண்டியதிருப்பவும், அது தவறிப் பிரிதற்குத் துயரமுறும் நீ. தலைவி இன்று வராதிருப்ப எங்ஙனம் மீளுவர் என்க.

420. துறை: தலைவியின் கூற்று. அளியானது எறிந்து. ஏடி - தோழியே. மருந்தாய் கழுநீர்மாலை விளங்குவது. தலைவன் தான் வந்தமையைத் தலைவி அறியும்பொருட்டுக் கழுநீர் மாலையை வேங்கைமரத்திலிட்டுச் செல்வான் என்க. மொய்ப்ப பிறங்குவது. பிரிந்த தலைவருடைய கைத்தழையான செங்கழுநீரென்க. சிலப்பதிகாரம் நாடுகாண்காதை ''கையறு துன்பம் காட்டினும் காட்டும்'' கையறு துன்பம் - செயலறுதியாகிய துன்பம்; மீளாத் துன்பமுமாம் என்றார். ஷெ அடைக்கலக்காதையிலும் ''காமக்கடவுள் கையற்றேங்க'' என்பதில் கையற்று - செயலற்று என்று உரைத்தார்.

421. துறை: பாங்கியின் கூற்று. பாங்கியானவள் தன்மீது பிழை ஏற்றிச் சொல்லிக்கொள்ளல். தலைவனுனவன் மரத்திலுள்ள புள்ளொலியாலும் சுனையொலியாலும் புணர்தற்குத் தடையுண்டாதலைக் கண்டு துன்பத்தோடு புணர்ச்சியின்றி வறிதாகச் செல்கின்றமைபற்றி அவ்வாறு கூறினுள். மலர்கள் வீழினும் ஒலிக்கும்படியான சுனை என்பார் 'சிந்து அலர்கட்கு அலம்புஞ் சுனை' என்றார். சந்தேகத்துக்கு இடமில்லாததொரு நிலத்தைச் சொல்லியிருப்பானேயாளுல். நிலம் - குறியிடம். புஞ்சம் - திரட்சி. எல் வளை.

புகாக்காலைப் புக்கெதிர்ப் பட்டுழிப்
பகாவிருந்திற் பைந்தொடி கிளத்தல்

அடுவது வன்பசி யென்றடுத் தாற்கன்னை யேவலிற்கை
தொடுவது முன்னுய்த்துப் பூசுநன் னீர்கொடு தோழிமற்றியான்
படுவது முன்னலன் பின்கடைச் செல்லப் பரிந்துதழீஇ
விடுவது கண்டிலன் வன்மையி னீக்கி விரைந்தனனே. 422

காமஞ் சிறந்து காதலி கிளத்தல்

துணைபுண ரன்றி லுடல்பல கோடி தொடர்ந்தெடுத்தே
இணைபுண ரன்பின மீண்டையென் றேற்றிய வென்னுளம்போற்
கணைபுண ரங்கையி னுருளங் தானுங் கருதினன்னுய்
அணைபுண ரன்றறி யாதிர வூடழி வாசுமின்றே. 423

நாணு மிகவர நன்னுதல் கிளத்தல்

வீணுக் கிடம்பெரி தாகிய நின்னுள மேவியிங்கே
பேணுக் கிடஞ்சிறி தாகிய ஞான்றுமென் பேதையுளம்
நாணுக் கிடம்பெரி தாயது காணே னவிற்றுவது
பூணுக் கிடம்பெரி தாகிய மார்பத்துப் போர்மன்னனே. 424

---

422. அடுத்த தலைவனுக்கு, அன்னையானவள் யாரோ என்று கருதி அன்னமிட ஏவலால் யான் கைதொடுவதான உணவை முன்னர் உய்த்துப் பின்னர் கைகழுவ நீர்கொண்டு பின்னுண்டாவதை அறியேனாகிப் பின் கடையிற் செல்ல. உய்த்தல் - போசனஞ் செய்வித்தல். விடுவது கண்டிலன் - தலைவன் விட்டிலன். விரைந்தனன் - விரைந்தேன். உய்த்து, கொடு என்னும் வினைகள் தலைவியின் வினைகள்.

423. முற்பிறவியில் அன்றிலுடலெடுத்து இப்பிறவியில் அன்பினமா யுள்ளோம் என்று கருதிய என்னுளம்போல அவருளமும் கருதினால் யான் இரவூடு அழிதல் சிறிதுமில்லை. அன்றில் ஒன்றையொன்று பிரியாதாகை யால் அவ்வாறு கூறினாள். அன்று அணையிற் புணர்தலை அறியாமல் இரவூடு வருந்தல் என்க. புணர் - புணர்தல். கருதின் அணையிற் புணர்தலை உலகம் அறியாது எனினும் பொருந்தும். இப்பொருட்கு உலகில் அம்பல் உண் டாகாதென்பது கருத்து. ஈண்டை - இப்பிறவி.

424. நின்னுளமானது ஈண்டு என்னைப் பேணுதற்கு இடம் சிறிதாகிய காலத்தும் எனவே நீ என்னை விரும்புதல் குறைந்தகாலத்தும் நான் நீ வந்தபோது உன்னைக் கண்டால் கணவனென்று அஞ்சி நாணுகின்றேன் என்றாள் என்பது. எனது உள்ளமானது நின்னுளத்தில் மேவி இங்கே

காவன் மிகுதி மேவரு கிளவி

கழுது முறங்குங் கனையிருள் யாமத்துக் காரிகையாள்
கொழுது வரிவண்டு கூட்டுணுந் தார்ப்புயங் கூட்டமின்றி
அழுது சிவந்தகண் ணேடழுங் காநிற்ப வன்னை துஞ்சாள்
எழுது மிரும்புக ழோயினி யான்செய்வ தென்னருளே. 425

ஆற்றது தீமை அறிவுறு கலக்கம்

கருமுச்சி வன்முலை யாய்கவி னீங்குக் கழியவன்பர்
இருமுச் சிவமத முந்தரு மீச னிருஞ்சினம்போன்
றுருமுச் சிவந்துர றுந்தடஞ் சார லுலந்தமணி
தருமுச் சிவண்பணி யாறியங் காதிருந் தாலுநன்றே. 426

இதுவிது படுமிர வேந்தல் வரவும்
விதுநுதற் கின்பம் விளைத்தில தென்றல்

ஊர்விழ வாயினு மில்விழ வாயினு மூர்கொண்டும்ப
ரார்விழை வாண்மதி தோன்றினுங் கூகை யறைபறையோர்
கார்விழை யேறு கடுமுரண் மான்குரல் காதுறினும்
போர்விழை தார்ப்புய னுருயிர் மாழ்குநம் பூங்கொடியே. 427

விரும்பியிருத்தற்கு இடம் சிறிதானகாலத்தும் நாணுக்கிடமானது என் பாருமுளர். இங்கே - என்னிடத்தும் அந்நாணல் நவிற்றல் செய்வது. இல்லேன்.

425. பாங்கியின் கூற்று. யான் செய்வது என்னை நீ அருள்வாயாக. அழுங்கல் காரியமாகத் துஞ்சாள்.

426. கரும் உச்சி - கரிய உச்சி; அது முலையை விசேடித்தது. ஆறு சிவமதத்தையும் படைத்த ஈசன். மணியைத் தருகின்ற உச்சியையுடைய சர்ப்பமானது சஞ்சரிக்கின்ற வழியில் தலைவர் வராதிருந்தாலும் நன்றும். உலந்த மணி - திரட்சியான மணி. ஈங்கு இரண்டு மூன்று மதம் ஆறு மதம் போன்று. உருமு - இடி. அன்பர் இயங்காதிருந்தாலும் என முடிக்க.

427. துறை: விதுபடும் இரவு - சந்திரன் பொருந்திய இரவு. அவ் விரவில் தலைவன்வருதல் இன்பம்விளைத்திலது என்றல். ஊர் - பரிவேடம். உம்பரார் விழை - தேவர் விரும்பும்படியான. ஊர் விழவு முதலியன புணர்ச்சிக்குத் தடையாதல் நோக்கி மாழ்குவாள் என்க. ஏறு - இடி. புயன் விளி.

அவனளி சிறந்துழிக் கவர்மனை கிளத்தல்

திருந்திய வாருயிர் மாசறத் தோன்றிய செவ்வியன்ன
வருந்திய மேகம் வழங்குமின் னான்வழி காண்பரிதால்
இருந்தியன் மாவெதிர் வுந்தெரி யாதிர வூடுநம்பால்
பொருந்திய காதலர்க் கண்ணிய வுள்ளும் புழுங்குவதே. 428

நொந்துவாட் கண்ணி வந்தவழி யெள்ளல்

மல்கும் பசப்பின் மதிவா ணுதலிய மாமருப்பு
வெல்குங் குமமுலை மூழ்க விரிநீ ருலகமெல்லாம்
புல்குந் துயிலிற் படாது விழிபொழி நீர்திளைக்க
நல்குந் தலைவரென் னேய்காணன் மாரினி நன்னுதலே. 429

மைப்பட்ட கண்ணி கைப்பட்டுக் கலங்கல்

தணந்தொழி காலை யெலாமே சறவு தகப்பெருக்கி
நிணந்திடு நீருள்ளி நிற்குமென் னெஞ்ச நிறைநெகிழ்த்தார்
மணந்திட முற்றிவ ளாவிய ஞான்று மகிழ்பெரிதாம்
குணந்திக மாதல்லன் மிக்காவ தென்னிதன் கோளணங்கே. 430

---

428. மாசு - பாசம். அன்ன மின்னால். இருள் மிகுந்திருப்பதனால் மின்னொளியாலும் வழி காண்பரிது. மிருகம் வருதலும் தெரியாது. மின்னொளியைக் கண்ட கண்ணானது இருளடைந்து ஒன்றையும் அறியாதாதலால் அவ்வாறு கூறினாளெனினும் அமையும். துறை: தலைவன் அளிசிறந்து வந்தவிடத்து கவர்பட்ட சிந்தையோடும் தலைவி சொல்லலாவது காண்பரிது தெரியாது எனத் தலைவன் வரச் சம்மதமில்லாதும் புழுங்குவது எனச் சம்மதித்தும் கூறியனவாம். இரவூடு காண்பரிது தெரியாது.

429. நுதலும் முலையும் பசப்பில் மூழ்கவும் விழியானது நித்திரையில் பொருந்தாமல் நீர்திளைக்கவும் எனக்கு நல்கிய தலைவர் என இகழ்ந்தமை காண்க.

430. துறை: தலைவனது கையிற்பட்டுத் தலைவி கலங்கல். என்னெஞ்ச நிறையை, பிரிந்திருக்குங்காலையெல்லாம் நெகிழ்த்தார். அங்ஙனம் நெகிழ்த்த தலைவர் வந்தபோது மகிழவேண்டியதிருப்பவும் மகிழ்ச்சி பெரிதாகுங்குணமில்லாமல் துன்பமாவது எனக்கு இதன்கொள்கை என்னை. நெடுங்காலம் பிரிந்திருந்தோர் தாம் கூடியபோது முன்பு துன்புற்றழுங்கல் சுபாவகுணமாகையால் இவ்வாறு கூறப்பட்டது. கூடியிருக்கின்ற தன்மையை நினைத்திருக்கின்ற என்னெஞ்ச நிறையை. ஏசறலைத் தணந்தொழி காலையெல்லாம் பெருக்கி. ஏசறவு - ஏக்கம். நிணந்திடும் நீர் -

பகற்குறி விழைந்தோள் பறவையி னேக்கி
நகைக்கதிர் வேலோற்கு நவிற்றிது வென்றல்

அளம்படு வார்துரும் பண்மினர் நேர வமர்ந்தசெவ்வேள்
இளம்பொழிற் காவி வரைகுறித் தேகு மெழிற்குருகீர்
உளம்படர் கூர வொழிந்தாரை யண்மியும் மன்றியுய்யாள்
வளம்படு மேனலங் காவல்கொண் டாளென்று வாய்விடுமே. 431

முற்றிழை மடந்தை பெற்றவழி மலிதல்

பூரித்த கொங்கை ஞெமுங்கக் கரம்புறஞ் சூழ்ந்திறுகப்
பாரித்த நின்புயம் புல்லினி தேபய னென்னையென்னை
வேரித்தண் பொங்கர லைத்துளர் வாடை மெலிவறியாச்
சீரித்த நின்னே டெமியாம் பகல்சில வாய்விட்டதே. 432

எய்திய மகிழ்ச்சி இகுளைக் குரைத்தல்

தம்மாண் பிகந்து தணிந்துழிக் கௌவை தரும்பகைதீர்ந்
தம்மா வணங்கனை யாய்குன்ற நாட னடுத்தலொடும்
விம்மா நெகிழ்வளை விண்டன தோள்கள் விளர்ப்பொருவிச்
செம்மாந்து வம்பு சிதர்த்தன கொங்கை திவண்டகண்ணே. 433

புண்படுந்தன்மையை என்பாருமுளர். அல்லல் - பிரிவு நிகழுமே என வுண்டாகுந் துக்கமெனினும் ஒக்கும். துறை: கைப்பட்டு - தலைவன் தன் கைப்பட்டும் எனக்கோடலுமொன்று.

431. அளம் ஆகுபெயராய்க் கடலை யுணர்த்திற்று. கடலிலலைகின்ற துரும்பைத் தெப்பமாக அண்மினவர் எவ்வாறு துன்புறுவார்களோ அது போல என்க. நேர, படர்கூர, ஒழிந்தாரை என முடிக்க. உம்மன்றி - உம்மையல்லாமல். வாய்விடுமே - சொல்வீரர்க.

432. ஞெமுங்கும்படி இறுகப் புல்லல் இனிதாகும். உன்னேடு யான் கூடியிருந்த பகல் சிலவாயினது ஆகையால் புல்லலினிதாயினும் அதனுற் பயன் யாது. சிலவாய் - சிலவாகி. வாடையாலுண்டாகிய என் மெலிவை அறியாத நின்னேடு. எமி என்பது தமி என்பதற்கு எதிர்மறையாக உள்ளது.

433. தோள்கள் - கைகள். ஒருவி சிதர்த்தன. இன்னநாள் வருவே னெனத் தலைவிக்குக் கூறி வரையறுத்த தமது மாண்பு கெட்டும் பிரிந்த விடத்து உண்டாகின்ற பழி தீர்ந்தும் அடுத்தலொடும். திவண்ட - விளங்கின. தலைவியின் கூற்று.

பைந்தொடித் தலைவியைப் பாங்கி கழறல்

இருவி யிடந்தொறும் பற்பல தோன்றின வீதெமர்தேர்ந்
தொருவி நமைப்புனங் காவல்கொண் டாலொண் கிளிமொழி [யாய்
கருவி முகிற்குலஞ் சூழ்வரை நாடனைக் காணரிதாம்
துருவி வருங்கிளி யோப்பு வயின்வயிற் றுன்னலுற்றே. 434

இட்டிடை மடந்தை விட்டுயிர்த் தழுங்கல்

என்னைக் கெனைவியங் கோளி னிறுவு மியல்பொருகால்
அன்னைக் குரைப்ப விரைந்தெழு நெஞ்சங்கு னேபெரிதும்
தன்னைக் கரத்த றகுமெனு நீயுயிர் சாய்ந்திறினும்
மின்னைக் கவற்று மிடையாய் நமர்க்கது விள்ளலையே. 435

ஒண்டொடி தலைவன் உள்வழிப் படுதல்

சான்றோர் துவன்றிய மன்றமுந் தக்கோர் பொதியினும்வில்
ஆன்றோர் விழவயர் சூழலு மாத ரடுத்துவிழை
வான்றோ யுவகைத் துணங்கையி னுமென் மாட்டிரங்காக்
கான்றோ யலங்கலந் தோளனை யாங்கணுங் கண்டிலனே. 436

---

434. இருவி - தினைத்தாள், அது தோன்றியன எனவே தினைப்பயிர் அறுக்கப்பட்டது என்பது. ஈது - தினையறுத்தமை. நம்மைப் புனத்தி னின்றும் ஒருவி வீட்டிற் காவல்கொண்டால் அத்தினைப்புனத்தில் கிளி யோட்டும்படியான இடமிடந்தோறும் யாம் துன்னி அவனைக் காணுதல் அரிதாகும். இனி இருவி என்பது ஆகுபெயராய்த் தினைப்பயிருக்காகிய தாகக்கொண்டு தினைப்பயிர் தோன்றின; இதை நினைத்து இல்லினின்றும் ஒருவிப் புனங்காவலுக்கு அனுப்பினுல் நாம் புனங்காவலுக்குச்சென்றதைத் தலைவரறியாது ஈண்டு வந்து துன்புறுவராகலின் தினைப்புனத்தில் கிளி யோட்டுமிடந்தோறும் துன்னிக் காணரிதாகுந் தலைவரை என்பாருமுளர். பொருந்துவன கொள்க.

435. எனது தலைவனுக்கு என்னை யானே ஏவலில் நிறுத்திக்கொண்ட இயல்பைத் தாய்க்கு உரைக்கவேண்டும் என்றெழுந்த என் நெஞ்சானது அவ்வியல்பை அத்தாய்க்குக் கரத்தலே தகுமென்று நினைக்கும். தன்னை - ஏவலில் நிறுவிய இயல்பை. தகுமெனும் - தகுமென்று நினைக்கும். அது - அவ்வியல்பை. என் ஐக்கு - என் தலைவனுக்கு. துறை: தன்னுள்ளக் கருத்தைத் தோழியினிடத்து வெளியிட்டு வருந்தல். உயிர்த்தல் - கூறுதல் என்பதைப் பொருளதிகாரம் களவியல் 273ம் பக்கத்திற் காண்க.

436. மன்றத்தின்கண்ணும், பொதியின்கண்ணும், குழலின்கண் ணும், பெண்கள் கைகோத்தாடலின் கண்ணும் தலைவனைக் கண்டிலே னெனத் தலைவனுள்ளவிடத்தெல்லாம் தேடல் என்பது துறை. மன்றம் - நியாயம் விசாரிக்குமிடம்; பொதி அங்ஙனம் அன்று.

மஞ்சன் ஊர்புக நெஞ்சொடு கிளத்தல்

எந்நாளு மின்ப மெளிதுறு சூழ்ச்சி யிருப்பவிட்டுப்
பன்னாளு மின்னற் படுவதென் னேபைய ளோடரிய
நன்னா ணிகக்கவின் னேபுறம் போந்து நலிநெஞ்சமே
அந்நா ளகன்றில மென்றூர் பதிசென் றடுத்தும்வம்மே. 437

ஆங்கவன் ஊர்புகப் பாங்கிக்கு உரைத்தல்

எழுந்த வலரின்னு மெங்கு மெழுக விடைமுரிந்து
விழுந்தவென பெண்மை விழுந்தே முழுதும் விளிகவினிச்
செழுந்தண் மதிமுகத் தாயன்ப ரூர்க்குச்செல் வாந்துயரின்
அழுந்த விடுப்பது மாண்மைகொ லாமென் றறைவதற்கே. 438

நொந்துதெளி வொழித்தமை பைந்தொடி கிளத்தல்

வரையுறை தெய்வத நோக்கி மலர்க்கை விசும்பெடுத்துப்
புரையுறை வாய்மொழி யாகப் புகலல் புகலலென
விரையுறை மார்பர் தெளிவொழித் தேற்கொரு வேற்றுமையில்
பிரையுறை பாலன்ன பெற்றியெஞ் ஞான்றும் பிறழ்ந்திலதே.

---

437. துறை: தலைவனது ஊருக்குத் தான் போக நெஞ்சொடு கிளத்தல். தலைவனது ஊருக்குச் சென்றால் எந்நாளும் இன்பமனுபவிக்க லாம் என்னும் கருத்தால் இவ்வாறு கூறினாள். புறம்போந்து அடுத்தும். என்றூரது பதிக்கு. அடுத்தும் - அடுப்போம். வம்மே - வருவாயாக.

438. இடை - மத்தியில். தலைவனைநோக்கி, துயரின் அழுந்த என்னைப் பிரிந்திருப்பது உனக்கு ஆண்மையோ என்று கேட்டற்குச் செல்வாம்.

439. கையை விசும்பிலெடுத்துச் சத்தியஞ்செய்யும் முறைமையை வியாசரானும் அறிக. பொய்ச் சத்தியமாக என்பது போதர 'வாய் மொழி' என்றொழியாது 'புரையுறை வாய்மொழி' என்றாள். புரை - குற்றம். புகலல் புகலல் - கருதாதே கருதாதே; விரும்பாதே விரும்பாதே என்றலுமொன்று. துறை: தெளிவொழித்தமை - தலைவன் என்றைக்கு வந்து கலப்பானோ என்னும் தலைவியின் தெளிவைத் தலைவன் நீக்கல். எனவே தலைவனானவன் இன்ன நாளில் வருவேனெனச் சத்தியஞ்செய்தமை என்பது. பைந்தொடி - தலைவி. தலைவரானவர் முருகனை நோக்கிக் கையை விசும்பிலெடுத்துத் தலைவியே! நீ யான் சொன்ன வார்த்தையைக் குற்றந் தங்கிய வார்த்தையாக விரும்பாதே விரும்பாதே என்று என்தெளிவை நீக்க ஏற்றுக்கொண்ட எனக்கு ஒரு வேற்றுமை இல்லை. பாலன்ன தன்மை எனக்குப் பிறழ்ந்திலது அவருக்கே பிறழ்ந்தது. பிரையுற்ற பாலானது தன் தன்மை கெடுமாறுபோல.

அணங்கினை நோக்கிய அச்சமிக்கு உரைத்தல்

எவ்வுழி நோக்கினு மவ்வுழி யவ்வவை யாயெதிர்ந்தும்
செவ்வுழி வாட்கண் படுத்தாற் கனவத்துச் சேர்ந்தணைந்தும்
ஒவ்வுழி யாமென் றுளத்தே நனவத்தொவ் வாதுறைந்தும்
அவ்வுழி வேறணங் காகாமை யன்ப ரகன்றிலரே. 440

தன்னையர் தந்தை தாமறிந் தோவென்
றன்னதி னெழுந்த அச்சமிக் குரைத்தல்

ஆராத காத லகனகரைப் பட்டுள்ள மாழ்ந்தலைய
வாராது காவலர் விட்டது வேற்று வரைநிலத்தோர்
சாராத விவ்வரை வாய்வர வெந்தை தமையறிந்தோ
சூராத நோக்கொடு மென்னையர் கண்டுகொல் சூழ்ந்திலனே. 441

எச்சமில் பாங்கியின் அச்சமிக் குரைத்தல்

விருந்தெனப் போந்தும் விரைமலர் சூட்டியு மிக்களிக்கும்
அருந்திற லான்வயி னன்னளென் றிவ்வூ ரலர்தொடுப்ப
இருந்தனை யோவென்று தோழி வினவுதி யென்னினிநாம்
திருந்திய செய்வகை தீமறை யோர்திகழ் விக்குமுன்னே. 442

---

440. நனவிலுள்ளத்தே ஒத்த இடமா மன்றுறைந்தும். அணங்கு இரண்டும் நோய் அல்லது துன்பம். அவ்வுழி - அவ்வுளத்தில். தலைவரா லுண்டாகிய நோயன்றி வேறு நோய் அவ்வுளத்திலாகாவிதம் அகன்றிலர். அவ்விடங்களில் இத்துன்பமின்றி வேறு துன்பம் உண்டாகாதபடி அகன்றிலர். செவ்வுழி - செவ்விய இடத்து. துறை: நோயைக் கண்டதனால் உண்டாகிய அச்சம் அதிகரித்துச் சொல்லல்.

441. எந்தந்தை என்பது எந்தை என்றாயவாறு போலத் தன் அன்னையர், என் அன்னையர் என்பன தன்னையர் என்றும் என்னையர் என்று மாதல் அறிக. வரவு சூழ்ந்திலன். சூராத - அஞ்சாத.

442. துறை: பாங்கிக்கு உரைத்தல். போதலுஞ் சூடலுந் தலைவன். இவ்வூரார் தலைவனிடத்தில் தலைவி அத்தன்மையளாயிருக்கிறாள் என்று அலர்தொடுக்கும்படி நீ இவ்வாறு இருந்தனையோ என்று தோழியே நீ என்னை வினவுகின்றாய். அந்தணர் என் விவாகத்திற்காகத் தீயைத் திகழ் வித்தற்கு முன்னரே யாம் செய்வகை என்னை. அன்னள் - தலைவியானவள் ஒருவனிடத்துச் சம்பந்தமாயிருக்கும் அத்தன்மையானவள்.

நெறிப்படு நாட்டத்து நேரிழைத் தோழிக்கு
முகிழ்ந்த கொங்கை நிகழ்ந்தவை மறைத்தல்

மண்ணுங் கதிர்மணி போலுருச் சாயலு மாமதர்ப்புக்
கண்ணுங் கவின்பணைத் தோளு நுதலுங் கதுவினவென்
றெண்ணுங் கருத்தினை யின்னுங் குழக்கு மிடத்தினென்றுன்
நண்ணுங் கவலை யெனக்கினி யின்று நறுநுதலே. 443

தமர்தற் காத்துழித் தன்னுளத் துரைத்தல்

புனங்காவ லின்முன் புகுத்திய வன்னை புறக்கணித்து
மனங்காவ லின்மையி னின்றுவைத் தாளுயிர் வாழ்வகையென்
சினங்காவல் கொண்டவை வேலருந் தேர்வன தேர்கிலரால்
கனங்காவல் கொண்ட கடிவரைச் சாரலங் கார்ப்பொழிற்கே. 444

அலரிற் காத்தமை மலர்முகத் தலைவி
உயிரோரன்ன ஒண்டொடிக் குரைத்தல்

ஆவா விதுவென்ன காரணம் வண்ட லயர்பொழிலும்
காவா வளர்தினைப் பாங்கும் படியுங்கண் ணூர்சுனையும்
ஓவா துழலு மொருதே ருளதென வூருரைப்பப்
பாவாய் புறத்தினிப் போகலென் றுளன்னை பைந்தொடியே. 445

---

443. துறை: நெறிப்படுநாட்டத்து - சுருங்கிய பார்வையையுடைய; அதாவது அருகிப்பார்க்கும் பார்வை. மண்ணும் - கழுவிய. தோழியே! யான் அழகு கெட்டுத் துன்பப்படுமிடத்தும் உருவானது சாயலையும் கண்ணினது மதர்ப்பையும் தோளும் நுதலுங் கவினையும் கதுவின என்று எண்ணுங் கருத்தையுடையாய். ஆதலால் எனக்கு இனிக் கவலை இன்று. தலைவனவன் தோழிக்குத் தெரியாதபடி வந்து தலைவியைப் புணர்ந்து சென்ற மாத்திரத்தில் தலைவிக்கு உருச்சாயல் கதுவல் முதலானவை உண்டாயின, அவை தலைவனுல் உண்டாகவில்லை என்று மறைத்துக்கூறினுள் தலைவி என்க.

444. மனக்காவலையுடைய வீட்டில் இன்று வைத்தாள். இன்மை - வீடு. தேர்வன என்பது விவாகத்தை.

445. துறை: பழி மிகுதலால் அன்னை தன்னைக் காத்தமை உரைத்தல். உயிர் ஓரன்ன - உயிரை ஒத்த. படியும் - மூழ்கப்படுகின்ற. தலைவனது தேர்.

தோற்றப் பொலிவால் காத்தமை கிளத்தல்

சுனைக்கடி நீலந் துரப்பன கண்கடுன் ஞர்துளங்கும்
முனைக்கரிக் கோடு முரிப்பன கொங்கை முழுநிறவேய்
தனைக்கழைக் கோலைத் தடிவன தோள்கள் கவன்றினிநீ
மனைக்கய லேக லெனவுருத் தாளன்னை வார்கொடியே. 446

வருத்தஞ் சுட்டி இருத்திய துரைத்தல்

வாடிய தோளு மலிபுனற் கண்ணு நன் மாமையெழில்
ஓடிய மேனியு மொள்வளைச் சோர்வு முயிர்ப்பெழவுள்
நீடிய நோயி னிலைகாண் முகமு நினக்குறலென்
ஆடிய சோலைசெல் லாதியென் றாளஞ்ஞை யாயிழையே. 447

மனைப்பட்டுக் கலங்கிச் சிதைந்தவழித் தோழிக்கு
நினைத்தல் சான்ற அருமறை உயிர்த்தல்

இமையா ரியல்பினை யோதுயில் வாயலை யென்னுமன்னைக்
கமையா லியன்றன தோளாய்வை வேலர்க் கணங்குகொண்டார்
தமையா வதுந்துயில் சாருங்கொ லோவெனச் சாற்றமுன்னி
நமையார் மதிப்ப ரெனப்பைய நெஞ்சி னவின்றனனே. 448

---

446. துறை: பருவமங்கைக்கு உண்டாம் இலக்கணங்களை நோக்கி அன்னை காத்தமையைக் கிளத்தல். பகைவர் நடுங்கும்படியான யானையது. மனைக்கு அயற்பக்கத்தில் ஏகாதே என்றாள். கண்கள் நீலத்தைத் துரப்பன, கொங்கை யானையின்கோட்டை முரிப்பன. தோற்றம் - பருவ மங்கையின் இலக்கணம் காணப்படுதல்.

447. ஓடிய - நீங்கிய. உள்ளே நீடிய காமநோயினது நிலையைக் காண்பிக்கும் முகம். இவையெல்லாம் தலைவியே நினக்கு உறுதல் என்னை. ஆடிய - ஆட. அஞ்ஞை - தாய்.

448. என்னை நோக்கித் தேவரியல்பினையோ துயில்வாயல்லை என்று கேட்ட தாய்க்கு யான் சொன்னதாவது. தாயே வேலர்க்குத் துன்பங் கொண்டாரைத் துயிலுதல் சாருமா என்று வெளிப்படையாகச் சொல்லக் கருதிப் பின்னர் அங்ஙனம் சொல்லின் நம்மை யாவர் மதிப்பார் என்றொழித்துப் பைய என்னெஞ்சுக்குமாத்திரம் சொன்னேன். முருகனென்றும் தலைவனென்றும் பொருள்பட வேலர் என்றாள். முருகனால் துன்பங்கொண்டார் எனவே முருகனால் பிடிக்கப்பட்டவர் என்பது. துறை: தலைவன், மனையில் வந்து அகப்பட்டு, என் அன்னை அறிந்துவிடுவாளென்று கலங்கி அவன் நீங்கியபோது நிகழ்ந்த அருமறை என்க. மறை - இரகசியம். உயிர்த்தல் - வெளியிடல். இயன்றாலொத்த தோளாய்.

காப்புச் சிறைமிக்க கையறு கிளவி

தாயுந் தளரத் தனிக்காவல் கொண்டன டாங்கவல்ல
நீயுந் தளர நெடிதயர்த் தாயென்று நீர்ப்பரப்பில்
பாயுந் தகட்டு வராலினந் தேரும்பைங் காற்குருகீர்
வாயுந் தமக்கின்மை செய்தார்க் குரைத்தல் வலிமின்களே. 449

உயிராக் காலத்துத் தன்னுள் உயிர்த்தல்

முயங்கிய நாளுமொன் றேயின்ன ளுரு முதிரவிட்ட
தயங்கிய தார்வரை மார்பனை நோவதல் லாற்றையலாய்
உயங்கிய தென்னென் றுசாவல்செய் யாரை யுடையதென
மயங்கிருட் கங்குலை யூரினை நோவ வழக்கில்லையே. 450

உயிர்ராக் காலத்துத் தோழிக் குயிர்த்தல்

செஞ்சுவ னீவு மணிக்குழை வார்செவித் தேமொழியாய்
அஞ்சுவ லாயை யெனினு மவரோ பிரிதல்செல்லார்
நெஞ்சுவன் றேனு மிறுத்துந ரேனு நிணந்தநட்பின்
எஞ்சுவ தென்று மெனக்கில்லை யன்ப ரிடத்தினன்றே. 451

துறை; தலைவி இற்காவலிற்பட்டுக் கலங்கித் துயிலும்தன்மை சிதைந்த வழி என்க.

449. தலைவி தளரும்படியாக அவள் தாயுங் காவல்கொண்டனள். அவளைத் தாங்கவல்ல நீயும் அவள் தளரும்படியாக அயர்த்தாய் என்று குருகீர் வலிமின்கள். வாய் - சத்தியம், உண்மை. தமக்குப் பேச வாயில் லாமற் செய்துகொண்டார்க்கு எனினுமொக்கும்.

450. வெளிவிடாக்காலத்துத் தன்னுள் வெளிவிடல் என்பது துறை. தலைவனோடு புணர்ந்த நாளும் ஒருநாளே ஆகும். அவ்வொருநாள் புணர்ந்தமைக்குப் பல நாளும் துன்பம் மிகச்செய்த தலைவரை நோவ வேண்டுமேயல்லாமல், தலைவியே நீ வாடியது என்னை என்று கேளாத தலைவரைக் கங்குலும் ஊரும் உடையதென்று அவற்றைநோவ வழக்கில்லை. தையலாய் என்றது தோழியையன்று; தலைவியை. தையலாய் என்னென்று முடிக்க. மார்பனென ஒருமையாகக்கூறிப் பின் செய்யாரெனப் பன்மை யாகக் கூறல் பொருந்தமாட்டா ஆகலான் யான் உயங்கியதை உசாவல் செய்யாத மனிதர்களைக் கங்குலும் ஊருமுடையதென்று அவ்விரண்டையும் நோவ என்பாருமுளர்.

451. தலைவரானவர் எனக்கு நோய் செய்பவராக இருந்தாலும் நட்பினின்றும் குறைதல் அவரிடத்தல்லாமல் எனக்கில்லை. நிணந்த - பசை யுடைத்தாய. அன்று ஏ. ஆயை அஞ்சுவலெனினும் நட்பில்குறைதல் எனக்கு இல்லை. தலைவரோ நோய் செய்யும் அச்செய்கையினின்றும்

நிகழ்ந்தமை செவிலிக்கு மறைத்தமை நிகழ்த்தல்

வல்லிய மன்ன வெறுழான் கடியு மணந்தவன்று
மெல்லிய நூலிடைக் கஞ்சிய பொய்யுமுள் விம்மவிம்மி
அல்லியங் கோதைநல் லாயழ வன்னையின் னுவவலம
சொல்லிய வென்னக் கரந்தேன் றுகள்விழித் தூர்த்ததென்றே.

நாணுச் சுருங்கப் பேணிய கற்பிற்
பெற்றுழி மெலிவு பெறுதுழிக் கிளத்தல்

பின்னாட் புணர்ச்சி சிதைவின்றித் தானே இகழ்ந்துசெல்ல
முன்னாட் டவப்பயன் முற்றின வேயம் முறைதிறம்பிப்
பன்னாட் டலைவர் பராமுக மாகிப் பருவருதற்
கந்நாட் டவறுமிக் காயது போலு மலர்முலையே. 453

அலர்தாய் அறியின் தலைவனோ டவன்பதி
செல்ல எண்ணிச் சொல்ல வலித்தல்

அறிந்தா லலரன்னை யென்னுயிர் வாழ்த லருங்குரைத்தென்
றெறிந்தா டளிமலர் வாயிசை பாடு மிணர்ப்பொதுமபர்
செறிந்தார் சிலம்பற் குரைப்பிற்றன் னூர்க்குத் தெரிந்துநம்மை
மறிந்தாழ் துயரென்று மின்றாக வுய்ப்பன்கொல் வண்கிளியே.

பிரியாதவராகி என்னெஞ்சில் நோயை நிறுத்துநரேனும் நட்பில்குறைதல் எனக்கில்லை. ஆயை அஞ்சுவல் எனினும் - தாய்க்கு அஞ்சுவனேயானாலும்.

452. கடி - விவாகம். இடைக்கஞ்சிய பொய் - பொய்பாராட்டல். கடியும் பொய்யும் எனது உள்ளத்தே விம்ம, யான் விம்மி அழ அதைப் பார்த்து என் தாயானவள் அவலத்தைச் சொல்லென்று கேட்க யான் தூசியானது என் கண்ணைத் தூர்த்தது என்று கரந்தேன். கரத்தலாவது கண்ணில் தூசி விழுந்தமையால் கண்ணீர் வருகின்றது என்பது. மணந்த அன்றுரைத்த பொய்யும் என முடிக்க. மணந்த - புணர்ந்த. இன்னா - துன்பம்.

453. புணர்ச்சி இகழ்ந்துசெல்ல. முன் தவப்பயன் என்றமையால் பின் அந்நாள் தவறென்றது முன்னாட் பாவப்பயனை. துறை: நாணமிகாது நாணஞ் சுருங்க விரும்பிய கற்பு என்றதனால் ஒருவர் தன் தலைவனைத் தூஷிப்பின் தான் நாணத்தை விடுத்து அவனைப் புகழ்ந்து கூறல் கற்புடைமை என்பது. மெலிவு பெற்றுழியும் மெலிவு பெறுதுழியும் கிளத்தல். முன்னிரண்டடியால் மெலிவு பெறுமையும் பின்னிரண்டடியால் மெலிவு பெறுதலும் கூறப்பட்டது.

454. அன்னையானவள் அலரை அறிந்தால் என்னுயிர் வாழ்தல் அருமைத்தென்று தலைவனுக்கு, கிளியே நீ உரைப்பில் அத்தலைவன் உன் னுரை கேட்டுத் தன்னுடைய ஊர்க்கு என்னைத் துயரின்றாகச் செலுத்த

ஆயம் அண்ணலை அறிந்தவை கூறல்

கைதலை வைத்துக் கணிகா சலத்துக் கடவுளைத்தாழ்ந்
துய்தலை யுற்றவர் போலவன் ஞய்கண் டுவகையன்பர்
எய்தலை யெய்த்த விழியேயெய் யாத விழிக்கியம்பப்
பொய்தலை விட்டுநின் ருர்வண்ட லாயத்துப் பூவையரே. 455

செவிலி அறிந்தமை கவலையின் உரைத்தல்

பலநா ளிடையிட் டொருநா ளடுப்பினும் பார்த்திபரைக்
கலவா தழுங்குங் கடனல தில்லைக் கனையிருள்வாய்
வலம்வா ரயிலொடு வந்தமை நோக்கி வரைமுருகோ
அலதோ ரிறைமக ஞேவென் றுசாவின ளன்னைமின்னே. 456

செவிலி களவு தெரிந்தமை கூறல்

கொடியோர் கொடுமையை யேற்றிக் குடங்கை முகனிருத்து
வடியோ டெதிர்விழி வாரநின் றேன்மருங் கன்னைவந்து
பிடியோ வெனுநடை யாயின்னல் யாவ தெனப்பெயரா
மடியோடு நின்னுரை யென்றுள்ள வாய்மை வழங்கினனே. 457

மாட்டாளோ. பொதும்பர் செறிந்து ஆர்ந்த சிலம்பு என்க. துறை: அலரைத் தாயறியும்பட்சத்தில் தலைவனது ஊர்க்குப்போக நினைத்து அத்தலைவனிடத்திற்போய்ச் சொல்லும்படி, கிளி முதலியவற்றை நோக்கிச் சொல்லல். எறிந்து ஆடு அளி.

455. வைத்துத் தாழ்ந்து, என்னைத் தலைவர் கண்டு உவகையடை தலை அறிந்த விழி, அறியாத விழிக்குச் சொல்ல, விளையாட்டை விட்டு நின்ருர் என்பது என்னைஎனில் தலைவன் தலைவியைக் கண்டு மகிழ்ச்சி எய்துதலை அறிந்தபெண்கள் அறியாதபெண்களுக்குக் கண்ணுற் சாடை காட்டி அறிவித்து விளையாட்டுத் தொழிலில் நினைவிலராயிருந்தார் என்பது. எய்த்தல் - அறிதல். பொய்தல் - மகளிர்விளையாட்டு. துறை: தலைவியின் கூற்று.

456. ஒரு நாளில் தலைவர் வரினும் அவ்வொரு நாளில் அவரைக் கூடாது யான் வருந்துங்கடனல்லது வேறில்லை யெனவே அவ்வொரு நாளில் அவர்மீது இரக்கங்கொண்டு புணரவேண்டியதாயிருக்கின்றது என்பது. அவ்வொருநாளில் வேலொடு வந்தமையை நோக்கி முருகனே அரசனே என்று அன்னை என்னைக்கேட்டாள். தலைவியின்கூற்று. தலைவரைக் கலவாமல் வருந்துகின்ற கடன்முனிருக்கின்றது எனினும் பொருந்தும். கலவாமல் வருந்துதற்கு ஏது தாயறிவாளென்னும் அச்சமே.

457. கொடியோராகிய தலைவரது கொடுமையை யான் எண்ணி உள்ளங்கையில் முகத்தையிறக்கி. இருத்து - இறக்கி. வடி - மாவடு. மடி - சோம்பல். யாவதென்று கேட்க, யான் செவிலி என்றுணராது நீ தான்

அலரெழச் செவிலி அறிந்தமை கூறல்

வல்லுரை வாயின ரேதிலன் காதலி வம்மெனவே
எல்லுரை யாடி நகுதலு நாணிமற் றியான்பெயர
நல்லுரை யாடு நறுங்குழ லேயன்னை நன்றறிந்து
புல்லுரை யாயின வேயென்று வாடினள் பூமுகமே. 458

பொழுதும் ஆறும் புரைவ தன்மையின்
அழிவு தலைவந்த சிந்தையில் கிளத்தல்

என்றூழ் தணந்தவண் டாமரை போலெழி றீர்ந்துமுன்கைக்
கன்றூழ் கொளவிட்ட காதலர்க் கோது கனையிருள்வாய்க்
கொன்றூம் பெனக்கழை மீமிசை பின்னுங் கொடுநெறிநன்
றன்றா டுறவெய்யை யாய்வரு மாறென் றலர்முலையே. 459

ஐயச் செய்கை தாய்க்கெதிர் மறுத்துப்
பொய்யென மாற்றி மெய்வழி கொடுத்தல்

வணங்கிடை நள்ளிர வூடய லேகிவந் தாளெனநீ
பிணங்கலை வாழியன் னைய்கன வானது பேதுறுத்த
வணங்குகின் றுள்சுட ரில்லா விடத்தசை யாள்பகலும்
இணங்குறு நற்றுணை யின்றேற் புலம்புக் கினைகுவளே. 460

கேட்கிறாய் என்று தோழியே நின்னுரையென்றே கருதி இரகசியமான உள்ள உண்மையைச் சொல்லிவிட்டேன். சோம்பலோடும் வழங்கினன். அவ்வாறுள்ள வாய்மை வழங்கற்குச் சோம்பலும் ஏதுவாயிற்று என்பாள் 'மடியோடும்' என்றாள்.

458. அலர் சொல்லும் வாயினர்கள் பகலில் என்னைநோக்கி அன்னியனொருவனுக்குக் காதலியே வருவாயாக என்று இகழ்ந்து நகுதலும் அதற்கு யான் நாணிச்செல்ல, அதை அன்னை அறிந்து பழிமொழியாயின என்று முகம் வாடினாள். புல்லுரை - பழிமொழி. புல்லியமொழி - தாழ்ந்த மொழி. வல்லுரை பேசும் வாயினர்.

459. இருள்வாய் கொடுநெறியில் வெய்யையாய் வருமாறு நன்று என்று காதலர்க்கு ஓது. ஊழ்கொளல் - உகுதல். தூம்பு - இருபக்கத்தினும் மூங்கில்கள் பின்னிக்கொண்டு நடுவேபோகும் மார்க்கமாயிருப்பது. வெய்யையாய் - விருப்பமுடையாய், கொடியையாய். துறை: இருள்வாய் என்பதனாற் பொழுது பெறப்படும். ஆறு - வழி. ஒப்பதன்மையின்.

460. துறை: தலைவி இரவில் தாயறியாவிதம் தலைவனைச் சார்ந்து புணர்ந்து வருமாற்றை அறிந்த தாயானவள் 'எவனொருவனையோ புணரும் பொருட்டுப் பக்கத்தேகி வருகிறாள்' எனக்கொண்ட ஐயத்தைத் தோழி

இகுளை தலைவனை இயற்பழித்துரைத்தல்

மறுகணி வீதி விழாவயர் நீல வரைப்பதியின்
அறுகணி வார்சடை வீராட்ட காசனை யண்மிலர்போல்
உறுகணி ஞானட் டேஞ்செல நன்மையுன் ஞருரைத்தும்
பெறுகணில் லாரம்ம வோவென்னர் நாம்விழை பெற்றியரே. 461

தலைவி தலைவனை இயற்பட மொழிதல்

உருப்பவிர் தீக்கதிர் காலும் பரிதி யுலகமெல்லாம்
விருப்பவிர் மேகம் விளைப்பதன் ரேவிழு மக்கடலுள்
அருப்பவிர் பூண்முலை யாய்விழுந் தியானமுந் தத்துறந்தங்
கிருப்பவ ரேயென தாருயிர் காவற் கிருப்பவரே. 462

பொழுது நீட்டிப்பப் பூங்கொடி கவறல்

தாழைத் திறந்து கதவந் திறந்துடற் சார்கலிங்கச்
சூழைத் திறந்து வருடித் துணைமுலை புல்லுமந்த
ஊழைத் திறந்தவழ் வேலரென் ஞேமறந் தாரொழிந்தார்
யாழைத் திறந்தக லின்றெனப் பேசு மிளங்கிளியே. 463

அறிந்து, கனவானது தன்னைத் துன்பப்படுத்தலால் பக்கத்தேகி வருகிருளே யல்லாமல் ஒருவனைக் குறித்துப் போய்வரவில்லை என்று அவ்வையத்தை மாற்றல். உலகத்துச் சிலர் கனவுகண்டால் எழுந்தோடிமீளுதல் செய்வர், அதுபற்றி அங்ஙனம் கூறினர். அசையாள் - தங்குதல்செய்யாள். அணங்கு - வருத்தம். புலம் புக்கு - தனிமையிற்புகுந்து. ''புலம்பே தனிமை'' (தொல் - உரியியல் - 35). தாயைநோக்கித் தோழிகூறல்.

461. உறுகண் - துன்பம். துன்பத்தில் யாம் செல்ல எனவே துன்பமடைய என்பது. துன்பமடையும்படியாக நன்மையை நினையாத தலைவர் நன்மையுன்னர் எனவே நமக்குக் கேடுநினைப்பவரென்பது. உரைத்தும் பெறுகண் இல்லார் - யாம் சொல்லியும் தாக்ஷணியம் இல்லாதவராயிருக்கின்றூர். உரைத்தல் ஈண்டு விவாகம்செய்துகொள்ளச் சொல்லுதல். எவ்வளவோ நாம் உணர்ந்திருந்தும் நன்மையை நினையார் என்பாருமுளர். என்னர் - எத்தன்மையர்.

462. துறை: இயற்பழித்து உரைக்கக் கேட்ட தலைவி சொல்லல். கொடுங்கிரணத்தால் உலகத்தை வருத்திப் பின் மழை பெய்வித்துச் செழிக்கச்செய்யும் சூரியனைப்போல எனக்குத் துன்பஞ்செய்தவரே என்னுயிர்க்குப் பின் இன்பஞ்செய்வார் என்பது பிரீதி விளைப்பதன்றே.

463. அந்த ஊழை மறந்தார் - அந்த முறையை மறந்தார். வீணையைத் திறத்தால் தகுதியின்றென்று.

வருந்தொழிற் கருமை வாயில் கூறல்

ஆவண வீதி துயின்றில பேரா வங்கடவுட்
காவண மன்றங் கடிந்தில காவல ரோவிலரால்
தீவண வேல்வலச் செல்வர் பதன்றெரிந் தன்றியுரூர்
பூவண மேனிநல் லாயிதற் கோசெல்லல் பூண்பதுவே. 464

கூறிய வாயிற்கு வேறிது கிளத்தல்

காலை யரும்பிப் பகலிளெல் லாங்கடிப் போதுகொண்டு
மாலை யலர்வதென் றுன்மமர் நோய்மலி யூறுமன்றே
வேலை யலையின் விடியு மளவும் விரவுமென்றால்
ஓலை யணிந்த செவியாய் நமக்கினி யுய்தியென்னே. 465

இரவு வருவானை இகுளை விலக்கல்

ஊறும் பலவுள வேயுற வின்மை யுரைப்பினும்யாம்
தேறும் படியிலஞ் சேர்பதஞ் சற்றே திறம்பினளூர்
ஆறும் பருவத்த ளல்ல ளணங்கனை யாளண்ணலே
வீறும் பகலிற் பெறுதி யிரவிங்கு மேவலையே. 466

---

464. தோழி சொல்லல். வாயில் - தோழி. பேரரவமானது காவணத்தின்கண்ணும் மன்றத்தின்கண்ணும் கடிந்தில. கடிந்தில - ஒழிந்தில. பேரரவம் - பேரொலி. காவலர் ஓவுதல் இலர். காவலர் - நகர்காப்பவர்.

465. காமநோய் காலையில் அரும்பாகிப் பகலெல்லாம் போதாகி மாலைக்காலத்தில் அலர்வது என்றால். மலிந்த இடையூறுனதும் கடலலை போல ஓயாது பொருந்தும் என்றால். அன்றே. இடையூறு - ஆவணவீதி துயிலாமை முதலியன.

466. இடையூறும் பலவுளவாமன்றே. அவ்விடையூறு எனக்கு உறுதலின்மையாம் என நீ சொல்லினும் யாம் அதைத் தேறும்படியில்லோம். பதம் - செவ்வி. நீ வருங்காலம் சிறிது தவறுமாயின் தலைவி துன்பந் தணியும் பருவத்தளல்லளாகின்றாள். இனி நீ தலைவியைப் பகலிற் பெறுவாயாக. உறலின்மை உரைப்பினும் யாம் தேறும்படியிலம் என்பதற்கு இனி யான் இரவில் வரமாட்டேன் என்று நீ சொல்லினும் எமக்கு நம்புதலில்லை எனினுமொக்கும். எனவே இரவில் வாரேன் என நீ உரைப்பினும் அவ்வுரை தவற அவ்விரவில் வருவாயென்றாள் என்பது.

பகல் வருவானைப் பாங்கி விலக்கல்

முருகியங் காரி னியம்புபைஞ் சாரன்மொய்ம் பூம்பொழில்வாய்ச்
செருகியம் போது செறிகுழன் மாதொடு சேர்ந்துளங்கள்
உருகியங் காடு முழுவ லெல்லாமல ராயுலகில்
பெருகியங் கேதம தாமபகல் வாரல் பெருமையனே. 467

பகலினும் இரவினும் பயின்றுவருகென்றல்

முற்று முலையெனுஞ் சக்கரவாக முதல்வநின்கைப்
பொற்று மரையிற் பகன மகிழ் கூர்தலும பொங்கிருளிற்
பற்று நினது முகமதி யாலுயிர்ப் பாவைமுகத்
துற்றுர் சகோரங் களித்தலுங் குன றத் துறுவனவே. 468

பகலினும் இரவினும் அகலிவண் என்றல்

எல்லிற் கமல மிவளவிழி நேர விரவியிற்சீர்த்
தல்லிற் குவளை நிகர்பப நின தா னன மதியின
வில்லிற் கவினுவ தேனு முளமோ மிகவிடைந்தப்
புல்லிற் கியைந்தில தண்ணல் வரலிரு போதுமிங்கே. 469

---

467. முருகற்காகிய இயம் முருகியம். போது செருகி - மலர் செருகப்பட்டு. செருகிச்செறிந்த குழல் என்க. இருவுளமும் உருகி என்பார் உளங்கள் எனப் பன்மையாகக்கூறினார். அங்கு ஆடுகின்ற உழுவலெல்லாம் அலராகிப் பெருகு ஏதமது ஆகும். ஆடுதல் - கூடுதல். உழுவலன்பு - எழுமையுந்தொடர்ந்த அன்பு.

468. இருவகைப்பொழுதில் நேர்ந்தபோது வா என்பது துறை. சகோரம் - கண். முகத்திலுற்று ஆர்ந்த சகோரம்.

469. எல் - பகல். விழியானது பகலிலுள்ள கமலத்தையொப்ப இரவியால் சீர்த்து இரவிலுள்ள குவளையையொப்ப நின் முகமதியினது ஒளியால் கவினுவதேனும் என்க. எனவே பகலினும் இரவினும் நித்திரை செயாது தலைவி துன்புறினும் அவள் மனம் மாத்திரஞ் சம்மதித்திலது என்றபடி. விழி இரவியிற் சீர்த்தலாவது சூரியனுள்ளதன்மையால் தான் நித்திரையின்றி விரிந்து இமை மூடாதிருத்தல். சூரியனுள்ளதன்மையால் தாமரை விரியுமாறுபோலத் தலைவியின் கண்களும் சூரியனுள்ள தன்மையால் இமைமூடாது விரிந்திருக்குந்தன்மைபற்றி இவள் விழி எல்விற் கமலம்நேர இரவியிற் சீர்த்து என்றார். இவள் விழி நினது ஆனனமதியின் வில்லிற் கவினுவதேனும் என்பதனால் நீ இரவில் வரத் தலைவியானவள் நின்முகங்கண்டு கண் களிப்படையினும் என்பது பெறப்படும். பெறப்படவே தலைவியின் கண்கள் நித்திரையின்மைக்கு ஏதுவும் போதரும். உளமோ இடைந்து அப்புல்லிற்கு இயைந்திலது. வரல் - வாரற்க.

காமமிகல் உரைத்து வரைவு கடாதல்

காவிக் கருங்க ணிமையிடை யாடநின் காமருரு
மேவிக் களித்தல் விலக்குவ தென்று மெலியுமிவள்
ஆவிக் கிரவிற் பகலிற்சற் றேவந் தடுத்தொழியிற்
பாவிக் குறுதி பயிற்றுவ தின்றது பார்மன்னனே. 470

வன்சொற் கிளந்து வரைவு கடாதல்

மறையா லிவணல முண்டுயிர் வாட்டும் வழியலது
முறையா லிவணல முண்டுயிர் காக்கு முதுக்குறைவு
நிறையா லுயருமன் னுவரி தாங்கொ ணிரைநிரையாய்த்
துறையா ரருவிவெண் டுசெனத் தோற்றுநின் ருெல்வரைக்கே.

பழிப்புரை கிளந்து வரைவு கடாதல்

அல்லார் களத்தனை வீராட்ட காசத் தடிகளைநெஞ்
சொல்லா தவரினவல் லாய்பொய் யுரைப்பவுற் ருரிடுமைை
கல்லா யலைத்தலைக் கற்ருய் மெய்யோதுங் கருத்தனுவும்
இல்லா யிதுவென்ன நாடக மேந்திலை வேலவனே. 472

தலைவனே! நின்னுலுண்டாகிய காமநோயால் தலைவியானவள் இருபோதும் நித்திரையின்றியிருந்தாலும் அவள் மனமாத்திரம் புணர்ச்சிக்கு உடம்பட்டிலது என்பது கருத்து. அண்ணுல் விளி. மனம் உடம்படாமலிருத்தற்கு ஏது என்னையெனில் தலைவனுனவன் விவாகம் செய்யாது புணரலால் வரும் பழியை நோக்குதலாம். அது மேல்வருஞ் செய்யுளான் உணர்க.

470. இமையானது இடையே ஆடுதலால் அவ்விமை ஆடலானது, விழித்தபடியே பார்க்கத்தகும் அழகுவாய்ந்த நினது வடிவத்தைப் பார்த்தலை விலக்குவதாமென்று மெலிகின்ற தலைவியின் உயிர்க்கு நீ இரவினும் பகலினும் சற்றுநேரம் அடுத்தொழிந்தால் அவ்வடுத்தொழிதலாகிய அது உறுதி பயிற்றுவதின்ரும். ஆவிக்கு உறுதி பயிற்றுவதின்றென இயைக்க. பாவிக்கு - பாவியாகிய தலைவிக்கு. இதனுல் வரைந்துகொள் என்பது கருத்து. துறை: காமமிகல் உரைத்து - தலைவியின் காமமிகுதியைச் சொல்லி, அது மெலியுமிவள் என்பதனுற் பெறப்படும்.

471. மறையால் - களவால். முதுக்குறைவு அரிதாங்கொல். முறையால் - ஈண்டு வரைவால் எனப்பொருள் கொள்க. பேரறிவில்லை எனவே வன்சொற் கிளந்ததாயிற்று.

472. கடவுளைத் தியானியாதாரைப்போலப் பொய்யுரைப்ப வல்லாய். நெஞ்சு ஒல்லாதவரின் - மனம் பொருந்தாதவரைப்போல. பொருந்தல் - கடவுளிடத்துச் சேறல். கல்லாய் - கலையாய். உன்னை அடைந்தாரது துன்பத்தை நீ களைவாய். அலைத்தலைக்கற்ருய் - வருத்தலைப்படித்தாய்.

தெளிவிடை விலக்கி வரைவு கடாதல்

ஆற்றுந் திறமிவட் கெங்ஙன மெய்து மலருலகில்
தூற்றுந் திறத்த சுடர்த்திரி நெய்யிற் சுடுபுனற்கண்
போற்றுந் திறத்தன வல்லமுன கையிற் பொருத்துவளை
பாற்றுந் திறத்ததன் றுறுத லாரும் பசப்பண்ணலே. 473

அருளின்மை தகாதென வரைவு கடாதல்

மணக்கும் பரிசினல் லாலுயிர் வாழ்க்கை மணப்பதின்றித்
தணக்கும் பரிசினில் லாத்தடங் கண்ணிதன பாணினக்கே
நிணக்கும் பரிசில்லை யேற்றகு மோநிலை சோர்ந்தவள்ளி
உணக்கும் பரிசின முதலரிந் தாலொக்கு மொளளியனே. 474

கையறு தோழி கண்ணீர் துடைத்தல்

என்னுயிர் வாட வெனதோளி வாட வெனக்குயிராம்
நின்னுயிர் வாட நினதோளி வாட நெடும்புனலுள்
தன்னுயிர்ப் பாவையுஞ் சாம்ப நினைது தடங்கணைந்தோ
மன்னுயிர்ப போடக் கலுழ்வதென லேமணிப் பூண்முலையே. 475

---

473. உலகில் அலரை ஆற்றும்படியான திறம் எப்படி எய்தும். விளக்கிலுள்ள திரியானது வெம்மை பொருந்தும் நெய்யைச் சொட்டுமாறு போலக் கண்களானவை காமவெம்மை பொருந்தும் புனலைத் தூற்றும் திறத்தன. வளையானவை போற்றுந்திறத்தனவல்ல. துறை: தொல்காப்பியம் பொருளதிகாரம் களவியல் 'முன்னிலையாக்கல்' என்னும் பத்தாஞ் சூத்திரத்தில் தெளிவகப்படுத்தலாவது - நின்னிற்பிரியேன்; பிரியின் ஆற்றேன்; பிரியின் அறனல்லது செய்கேனுவல் எனத் தலைவி மனத்துத் தேற்றம்படக் கூறல் என்றல் காண்க. தலைவன் தெளிவகப்படுத்துங்கால் அதனினின்றும் விலக்கி வரைவுகடாதலை உணர்த்துவது இச் செய்யுள் என்க.

474. மணக்கும் பரிசு - விவாகஞ் செய்யுந்தன்மை. மணப்பது - விவாகஞ்செய்வது. விவாகஞ்செய்தில்லாமல் நீங்குந்தன்மையின் கண் உயிர் வாழ்க்கை இருக்கப்பெறு இயல்புடைய தலைவி என்க. உயிர் வாழ்க்கையில்லாத்தடங்கண்ணி என இயைக்க. தலைவியின் உயிர்வாழ்க்கையானது நீ மணக்குந்தன்மையினல்லாமல் மணத்தலின்றி அம்மணத்தலை நீங்குந் தன்மையிலே நில்லா எனவுமாம். நிணக்கும் பரிசு - பசையுடைத்தாய தன்மை. வள்ளிக்கொடியின் முதலை அரிந்தால் மேலேயுள்ள கொடியெல்லாம் வாடும் என்க.

475. தலைவி அழுங்கால் அவள் கையிலுள்ள மரப்பாவையின் மேற் கண்ணீர் தோய்தல்பற்றிப் 'புனலுள் பாவையும் சாம்ப' என்றுள். கையறு தோழி கண்ணீர் துடைப்பினும் - தலைவியை ஆற்றுவித்துக் கையற்ற

கையறு தோழியை நையிடை யாற்றல்

அயிர்த்திர ளாலடர் வாரியைக் காத்தென வார்நிறையால்
செயிர்த்தவன் காமந் தகைத்தே நமதுளந் தேய்ந்தழிய
வயிர்த்திர ளேங்கும்வண் சாரல்வில் லோற்கண்ட வாள்விழிமன்
உயிர்த்தய லேயிடர் நீப்பக்கொ லாம்புன லூற்றுவதே. 476

வரைதல் வேண்டித் தோழிசெப்பிய புரைதீர்கிளவி

கிழங்குவண் சார லிடந்தொறும் வீழ்வன கேழ்த்தவள்ளி
முழங்குவண் டேனினஞ் சூழ்தேத் தடைமொய் யடுக்கமெலாம்
ஒழுங்குவ மாலை யருவியு மோங்குவ வொண்டொடியாய்
அழுங்குவ தேநமக் காக்கிப்பொய்ச் சூளுற்ற வண்ணல்வெற்பே.

புரைதீர் கிளவி புல்லிய வெதிர்வு

மருளிற் பிணைந்துபொய்ச் சூளுறு வார்கொல்வை வேலரன்னுய்
இருளிற் பிணைந்த விருவினை மாற்றியெல் லாங்கழிப்பி
அருளிற் பிணைந்தவ ராங்கிரு ளோடு மணைந்ததொப்பாம்
பொருளிற் பிணைந்ததம் வாய்மையிற் பொய்மை புகுந்திடினே.

தோழி தலைவி கண்ணீரைத் துடைப்பினும் தன் ஆற்றுமைக்கு ஆற்றுத தோழியை ஆற்றுவிக்கின்றுள். அவ்விரண்டும் கூறியது என்பது பொருளதிகாரம். இஃது அடுத்த செய்யுளாற் பெறப்படும்.

476. துறை: என்னுயிர்வாட எனதொளிவாட என்று தளர்ந்த தோழியை ஆற்றல். அயிர் - நுண்மணல். கடலை அயிரினுற் கரைகோலிக் காத்தலரிது; அதுபோலக் காமத்தைக் கற்பால் காத்தலரிது என்பது. தகைத்து - தடுத்து. அயலே உயிர்த்து - புறம் விட்டு. தலைவனைக் காணலா லுண்டாகிய துன்பத்தைத் தானும் நீக்கிக் கொள்ளவா என் கண்கள் கலுழ்வது. வயிர் - ஊதுகொம்பு.

477. வள்ளிக்கொடியில் கிழங்கு வீழ்வன. கிழங்கு என்றது வள்ளிக் கிழங்கை. வள்ளிக்கிழங்கு எவரானும் விரும்பப்படுவன எனினும் பொருந்தும். தலைவனது வெற்பில் வீழ்வன ஒழுங்குவ ஓங்குவ எனவே தலைவனது வெற்புக்குப்போவோம் என்றவாறுயிற்று. வேடராலே கிழங்கு இனி விரும்பப்படுவன எனவே அவ்வேடர் கிழங்கை விரும்பித் தோண்டவரு முன்னரே யாம் செல்வோமாகில் அவர்கள் காணுதபடியே செல்லலாமென் முள் என்பது கருத்து.

478. பொய்ச்சூளுற்ற அண்ணல் என்ற தோழிக்குத் தலைவியான வள் பொய்யான் எனக் கூறுநிற்றல். எல்லாம் - மலம் முதலிய எல்லாம். இருள் - ஆணவமலம், பிணைதல் - கலத்தல். சிவனதருளிற்கலந்த பெரியோர். வாய்மை - தலைவன்கூறிய உண்மை.

களவல ராகச் செவிலி கட்டுரைத்தல்

ஓங்குந் தணிகை வடிவேற் கடவுளை யுன்னலர்பால்
வீங்கும் பிழையினம் மெல்லியன் மாதின் விழுக்குடிக்குத்
தாங்கும் பழிமொழி சார்ந்தது நன்றினிச் சாருங்கொலோ
யாங்குந் தணப்பரி தாம்வரும் பாலன யாவர்க்குமே. 479

காமமெய்ப்படுப்பக் கண்டனள் கிளத்தல்

மென்னூ லெழினியி னுள்ளே கதிர்த்த விளக்கொளிபோல்
நன்னூல் கிளந்த வணியுட் கிடந்தோர் நலந்திவளும்
பன்னூறு கோடிநற் பாங்கியர் சூழப்பைம் பூம்பொழில்வாய்ப்
பொன்னூ புரங்கள் புலம்பப் புகுநம புனக்கிளிக்கே. 480

அளவு மிகத்தோன்ற அறிந்தனள் கிளத்தல்

முல்லை யளவு நிலாவின மூரன் முறுவலிடம்
இல்லை யளவு முலைக்கினி மார்ப மிலகுபெண்மை
எல்லை யளவு நிரம்பிற்று மாதுக் கிறமலநோய்
ஒல்லை யளவு முலவாமெய்ஞ் ஞான வுவாவெனவே. 481

தலைப்பெய்து கண்டோள் சாமியென் றயிர்த்தல்

காந்தளம் போது விராய்த்தொடு கூதளங் கண்ணியன்கை
ஏந்தயில் வேலினன் முன்னொரு நாளிவ ணெய்தல்கண்டங்
காய்ந்தலர் தூவி யடிதொழு தேனின்று மண்மல்கண்டேன்
வாய்ந்ததன் மந்திர மோவிந்த வில்லு மயூரனுக்கே. 482

---

479. உன்னலர்பால் அதிகரித்த பிழையைப்போல மாதால் நன்று சாருமோ. வரும்பாலன தணப்பரிதாம்.

480. காமக்குறி மெய்யிலே தோன்றக்கண்டு செவிலி கிளத்தல் என்பது துறை. கிளிக்குத் திவளும் என முடிக்க. நன்னூல் - சாமுத்திரிகா லக்ஷண நூல். அணி - முப்பத்திரண்டழகு. முப்பத்திரண்டழகுள் ஓர் நலம் என்றது காமக்குறியை.

481. துறை; செவிலி கிளத்தல். உவா - நிறைவு. மூரல் - சிரிப்பு. மூரலையுடைய முறுவலானவை நிலாவின. மார்பில் முலைக்கு இடவளவு இல்லை. பெண்டன்மையானது தன்னெல்லை எவ்வளவுண்டோ அவ்வளவு நிரம்பிற்று. மாதுக்கு நிலாவின இல்லை நிரம்பிற்றென முடிக்க. மல நோயானது இற்றமாத்திரத்தில் விரைந்தணுகும் உண்மை ஞானத்தின் நிறைவைப்போல, பெண்மை நிரம்பிற்று என்க.

482. துறை: செவிலி அயிர்த்தல். சாமி - முருகன். காந்தட்போது விராய்த்தொடுத்த கூதளங்கண்ணியும் வேலும் முருகனுக்கு உரியவை

வணங்கிடைத் தலைவி அணங்குகண் டயிர்த்தல்

காம்பிய ரோள்கண் மெலிந்தன சாம்பின கண்கனகம்
தேம்பிய மாமை சிதைந்தது தேவர் சிறைமுருக்கி
ஓம்பிய வேலர்க் குறுமணங் கோமற் றுமொன் றுகொலோ
கூம்பிய கொங்கைக் குறுமணி மூரற் குறுந்தொடிக்கே. 483

காதலி விழுநோய் கட்டினிற் றெளிதல்

சில்லரிப் பன்மணி நூபுரச் சீறடிப் பேரமைத்தோள்
வில்லரிப் பைங்கட் கருங்குழல் வெண்ணகை மெல்லியலாள்
கொல்லரிப் பைம்புனஞ் சூழ்வளஞ் சாரலிற் கொண்டவெங்நோய்
சொல்லரிப் பன்றியன் னாய்கட்டி னாடித் துணிவுறவே. 484

வேலனைக் கூஉய் வெறியாட் டெடுத்தல்

பொறியாட் டெறும்தணித் தூர்ந்தோன் றணிகைப் பொருப்ப
செறியாட் டொடுங்க வுறங்கிய செல்ல றெளிப்பவினாய் [னையாள்
மறியாட் டுதிரம விராய்ப்பலி தூய்வண் பிரப்பிருவி
வெறியாட் டயர்கிற்ப வேலன் புகுந்த விளைவெமக்கே. 485

ஆகையால் அவனென்று கருதி அடிதொழுதாள் என்க. மந்திரம் - கோயில். இந்த இல்லும். மயூரன் - முருகன்.

483. துறை: தலைவியினது அணங்கைக் கண்டயிர்த்தல். அணங்கு - தெய்வம். தெய்வம் பேய் முதலியன பிடிக்கப்பட்டவர்க்குத் தோள் மெலிதல் முதலியன உண்டு; ஆதலால் அயிர்த்தாள் என்க. துன்பங் கண்டயிர்த்தல் என்பாருமுளர். முருகனுக்காகவுற்ற அணங்கோ எனவே முருகனென்னும் தெய்வத்தாற் பிடிக்கப்பட்டாளோ என்று எண்ணினாள் என்பது. குறுகிய மணிபோலும் மூரலையும் உடைய.

484. துறை: செவிலியானவள் தலைவியின் நோயைக் குறத்தியிடத்துக் கட்டினால் தெளிதல்; அஃதாவது தலைவியின் நோய் இன்னது எனத் தெரிந்துகொள்ளும்பொருட்டுச் செவிலியானவள் கட்டுவிச்சியினிடத்துக் கேட்ட மாத்திரத்தில் அக்கட்டுவிச்சியானவள் முறத்தில் நெற்கொண்டு வரச்சொல்லி, அம்முறத்திலுள்ள நெல்லை முட்டியாக அள்ளியெண்ணி, அதைக்கொண்டு குறிசொல்லுவாள் என்பர். தொல்காப்பியம் பொருளதிகாரம் 325-ம் பக்கத்திற்காண்க. வில் - ஒளி. மெல்லியலாள்கொண்ட நோயைக் கட்டினாடித் துணிவுறச் சொல்வாயாக. அரிப்பன்றிபோலும் வலிமையையுடைய கட்டுவிச்சியே என்பது விளி.

485. துறை: செவிலி எடுத்தல். வேலன் - தலைவனுமன்று முருகனுமன்று வெறியாட்டைச் செய்பவன் என்க. எமக்குப் பொறி - எமக்குத் தலையெழுத்தாகும் என முடித்துப் பொருள்கொள்க; முருகன் பொருப்பை

வெறியினை வெரீஇச் செறிகுழல் கிளத்தல்

தாளத் தொடையுந் தமனியத் தாருந் தனமுகட்டுப்
புரளத் தொகுத்தவெல் லாநம்மைத் தாம்புற மாக்கியநோய்
கரளத் தனிமிடற் றான்மகற் பேணிக் கடிநகரம்
திரளத் தவிரினுந் தீங்கே யிருப்பினுந் தீங்குளதே. 486

வெருவிய தலைவிக்குத் தோழி விளம்பல்

கவலையுற் றாழ்வது வேண்டா நமது கருத்துறவு
தவலையுற் றாழ்தல் வருதலுண் டேயித் தலைவிடுத்துச்
சவலையுற் றுள்ள முகாமே யறக்குணத் தானறுந்தேம்
துவலையுற் றார்பொழிற் குன்றுறி னென்வெறி சூழ்வகையே. 487

எப்படி வருணிக்க முடியாதோ அதுபோல் அழகால் வருணிக்க முடியாத வள் என்பது. விளையாட்டொடுங்கும்படி உறங்கிய தலைவியின் துன்பத்தை எமக்கு வேலன் தெளிக்கும்பொருட்டு யாம் அவனை வினவித் தூவி இருத்திச் செய்யாநிற்ப, அவ்வேலன் புகுந்த விளைவு எமக்குப் பொறியாம். இது செவிலியின் கூற்று.

486. நம் கொங்கைமுகட்டிற் புரளும்படி அணிந்த மாலைகளெல்லாம் நம்மைப் புறமாக்கியனவாம். முருகனைப்பேணி நகரத்தார்கள் யாவரும் திரள. நோய் என்னை நீங்கினும் தீங்கே, நீங்காதிருப்பினும் தீங்குளதே. நமக்கு மாலை முதலிய எல்லாவற்றையும் புறமாக்கிய காமநோய் என்பாருமுளர். வெறியாட்டுச் செய்ய முருகனைப்பேணி நகரிலுள்ளார் திரளுதலினாலே காமநோய் தவிரினும் இருப்பினும் தீங்குளதாவது, நகரத்தார் திரண்டு வெறியாட்டைச் செய்துமுடித்தலினாலே நமது காமநோய் நீங்கினாலும் நாங்கொண்ட நோய் காமநோயென்று அவ்வெறியாட்டால் வெளிப்பட்டு அலர்தூற்றற்கிடனாய்த் தீங்குண்டாமென்றும் வெறியாட்டாற் காமநோய் நீங்காதிருப்பினும் கொண்டநோய் காமநோய் என்று அவ்வெறியாட்டால் வெளிப்பட்டு அலர் தூற்றற்கிடனாய்த் தீங்குண்டாமென்றும் தலைவி கருதி வெறியினை அஞ்சினாள் என்பது. இனி தமர் வெறியாட்டைச்செய்ய அதனால் காமநோய் நீங்கப்பெற்றால் தலைவன்மாட்டு அன்பு இழந்து கற்புநிலையிற் குறைந்தாள் எனப் பழிகூறுவர்; அவ்வெறியாட்டாற் காமநோய் நீங்காதிருந்தாலும் ஒருவனை இச்சித்துக் காமநோய் கொண்டாளெனப் பழிகூறுவர் எனினும் பொருந்தும்.

487. தலைவனது குன்றை யாம் உற்றால், வேண்டாம். கருத்தினுற்றவை கெடுதலுற்று வருந்தல் வருதலுண்டோ இல்லை. ஆழ்தல் - வருந்தல். வெறிசூழ்வகை என்னை. தேம் துவலை உற்று ஆர் பொழில். இத்தலைவிடுத்து உறின், உள்ளம் சவலை உற்று உகாமே உறின் எனத் தனித்தனி முடிக்க. துறை: வெருவிய - கண்டு அஞ்சிய.

கழங்கு பார்த்துழிக் கழங்கு மெய்யேயெனப்
பழங்கண் டீரப் பாங்கி பகர்தல்

குறிப்பாற் பிறிது பொருளினைச் சின்மொழி கூறுவபோல்
வெறிப்பாற் றணிகை வரையயில் வேற்கை விசாகன்கொலாம்
முறிப்பான் மையினெழி லாட்கணங் கீந்தா னெனுமொழிதான்
நெறிப்பான் மையினல னென்பது வோவிந் நெடுங்கிரிக்கே. 488

நின்வெறி யாட்டின் நீப்பரி தாகு
மின்வெறி யாட்டென வேலனுக் குரைத்தல்

வேண்டிய வேல வெறியாட் டயர்க வெறிப்பநின்னைத்
தூண்டிய தாயுந் துளக்க முடிசுடர் வேற்கடவுள்
ஈண்டிய பூசனை யேற்க விவற்ரு ணிகப்பரிதால்
மாண்டியல் வாட்கண் மடக்கொடிக் காற்ற வளரணங்கே. 489

முகிழ்முலைப் பாங்கி முருகற் குரைத்தல்

அடியே னறிந்த விளையா ளணங்கண்ட வாணர்மணி
முடியே ருழுமடி முன்னேய்நின் னுள்ளமுன் னுதுதன்றே
பொடியே யுலகமும் போர்ப்ப வரைபுழை யாக்கியநீ
கடியேல் வெறிமனை வேலோ னிரப்பக் கலப்பதன்றே. 490

---

488. கழங்கு - கழற்சிக்காய் தாமரைக்கொட்டை முதலியவற்ருற் பார்க்குங் குறி. போல் முறிப்பான்மையின் எழிலையுடைய தலைவிக்கு. முருகனுனவன் தளிரினது எழிலையுடையாட்குத் துன்பத்தைக் கொடுத்தா னென்னு மொழியானது முருகன்போலுந் தலைவனுனவன் தன்கையிலேந் திய தளிரின் தன்மையால் தலைவிக்குத் துன்பத்தைக் கொடுத்தானெனக் குறிப்பால் வேறு பொருளைக் கொடுத்தலன்றி, அத்தலைவன் இந்நெறிப் பான்மையினையுடையனல்லன் என்பதுவா இதற்குப் பொருள்? வெறி யாட்டின் பகுதியையுடைய வரை என்க. துறை: ஒரு தலைவனல் நோயுண் டிருக்கின்ருள் என்பதைக் கழங்கின்மூலமாகக் குறிப்பாலறிந்துகொண்ட பாங்கியானவள் அக்கழங்காலறிந்தமை மெய்யே எனப் பகர்தல்.

489. துறை: மின் - தலைவி. வேலன் - முருகனுமன்று தலைவனு மன்று. வெறிப்ப - வெறியாடல்செய்ய. தாயும் முடி துளக்குக. அணங்கு - நோய். பூசனையை வேற்கடவுளேற்குக.

490. இளையாளணங்கு - தலைவனல் தலைவிக்கு உண்டாகிய நோய். தேவர்களுடைய மணிமுடிகளானவை ஏருழும்படியான பாதத்தையுடைய முருகனே என்க. நானறிந்த தலைவியின் நோயை நின்னுள்ளம் அறியாத தல்லவே. இளையாள் - தலைவி. முடியாகிய ஏரால் உழப்பட்ட அடி. வேலோன் இரத்தற்காக நீ மனையில் வெறியாட்டைக்குறித்துக் கலப்பது. எமக்கு நன்றன்று. வாசனையையேற்ற வெறியாட்டு. பொடி. போர்ப்ப.

தையல்நோய் பிறிதெனத் தமர்கொளக் கூறல்

ஒருஞான சத்தி தரனணங் காலுவட் கெனபவற்றான்
வருஞான சத்தி தரனெனு நாமம் வழங்கவினிப்
பெருஞானம் பெற்றனம் பேரமைத் தோளி பிணையுருவத்
திருஞான மாற்றிப் பசலையு மையலுஞ் சேர்த்தவர்க்கே. 491

அன்னைக் கரிவை இன்னல்வே றென்றல்

மாதுற்ற நோய்க்கு மலையாண் மகனை மதிபுரையும்
காதுற்ற சங்கக் குழையான் புதல்வனைக் காமர்பொய்கைப்
போதுற்ற வாறு முகவனை யிங்குப் புகுத்தியன்றாய்
பேதுற் றனைவெறி யாடலும் பாடலும் பேணிகின்றே. 492

அழிபா டுளத்தவள் அன்ப னுறத்தழீஇப்
பழிதீர் முறுவல் சிறந்தே தோற்றல்

முறுவ னமக்கினி தாக முரிபுரு வத்தணங்கே
சிறுவ லுரையினர் வாய்நனி கூம்பத்தெய் வத்தின்மின்னாய்
குறுவ லெனுமன்னை யோகைகொண் டாடக் குறுகியளாய்
உறுவல் விலங்கனை யான்செல்லச் செய்ததவ் வொண்முருகே.

---

491. அணங்குண்டாயது என்ப. அணங்கால் ஆல் அசை. முருகனாற் கொடுத்த அணங்கு. அற்றால் - அத்தன்மையால். தலைவர்க்கு வழங்கப் பெற்றனம். தலைவியின் மேனி அழகையும் ஞானத்தையும் ஒழித்துத் தேமலையும் காமமயக்கத்தையும் கொடுத்த தலைவர்க்கு நாமம் வழங்கப் பெற்றனம்.

492. அரிவையின் இன்னல். அன்னையே நீ முருகனைத் தலைவியுற்ற நோய்க்காக ஈண்டுப் புகச்செய்து வெறியாடலையும் பாடலையும் விரும்பி நின்று பேதுற்றாய்; எனவே வெறியாட்டயர்வோனாற் பெறப்பட்ட நோயன்று, ஓர் தலைவனாலுண்டாய நோயென்றாள் என்பது.

493. இதுமுதல் 'வழிமொழிந்தேவல்' என்னுஞ் செய்யுள்முடிய தலைவியின் கூற்று. தலைவனானவன் ஆக, கூம்ப, கொண்டாடக் குறுகி, அளாவிப் போகும்படியாகச் செய்தவன் யாரெனில் அம்முருகனேயாம் என்க. வெறியாட்டயர்தலால் ஆண்டுத்தோன்றிய முருகனானவன் எனக்குச் செய்தது இதுவல்லாமல் வேறில்லையென்றாள் என்பது. தலைவன் வராமையால் துன்புற்றிருந்த நமக்கு மகிழ்ச்சியுண்டாகவும், தலைவியானவள் ஒருவனை இச்சித்து நோயுற்றிருக்கிறாள் என்று பழிமொழிந்தோரது வாயானது இப்பொழுது தலைவன் வராநிற்ப நான் நோய் நீங்கப்பெறுதலால் வறிதே உரையாடாது குவியவும் வெறியாட்டுச்செய்து தெய்வசகாயத்தால் தலைவியின் நோயைக் கெடுப்பேனென்று கருதி வெறியாடல்செய்யும் அன்னையானவள் தலைவன் வரவால் நோய் நீங்கியமை அறியாது வெறியாடலால்

களவறிவுறீஇ வரைவுகடாதல்

வாரித் தலையின் மணிவே லொடுநின் வரவுகண்டு
வேரித் தளிமலர் வேலனென் றேக்கினள் மீட்டொருநாள்
பூரித்த தார்ப்புயத் தாய்கண்டு தாயிவட் புக்கொழியாச்
சிரித்த வேலவன் யாரையென் றையஞ் சிறந்தனளே. 494

காவன்மிக லறிவுறீஇ வரைவு கடாதல்

புதுக்கலந் தேக்கு நறுநீ ரெனப்புறத் தேதிகழும்
முதுக்குறை வாண்டவுள் ளன்பொடு காமமு மொய்யலரும்
விதுக்குறை வாணுத லாட்குள்ள வாகண்டு வெய்துநந்தாய்
மதுக்குழ லார்பலர் காவலி னேய்த்தனள் மன்னவனே. 495

வெறியச் சுறீஇ வரைவு கடாதல்

வழிமொழிந் தேவல் செயப்பணி யாதுமன் றுபொழிய
விழிமொழி தள்ள விடுப்பது நீதிகொ லோவலதூஉம்
பழிமொழி யோபெரும பாவமும் வந்தன்று பன்மறிசாய்த்
துழிமொழி வண்பலி தூய்வெறி யாட்டுகந் தாளன்னையே. 496

நீங்கியதென்று மகிழ்ச்சி அடையவும் தலைவன் குறுகி என்ப. சிறுவல் உரை - பழிமொழி. அணங்கே - தோழியே. தலைவியுற்ற நோயானது வெறியாடலால் தீரமாட்டாது. அது ஓர் தலைவனால் உண்டாயது என்று பழிமொழிந்தோருடைய வாயானது இப்பொழுது தலைவியின் நோய் அன்னை செய்யும் வெறியாடல் மூலமாகத் தீர்ந்ததுபோலத் தோன்றப் படுதலால் கூம்பவும் என்க. குறுவல் - கெடுப்பேன்.

494. வாரி - சுனை. சுனைக்கரையில் வரவுகண்டு. கடலிலுண்டாகிய முத்தாரத்தை அணிந்த வேல் என்பாருமுளர். மலரை யோக்கினள் எனவே முருகனென்றுகருதி மலரால் அருச்சித்தனள் என் அன்னை என்பது. மீட்டு ஒருநாளில் உன்னை என் தாய் கண்டு. யாரை ஐ சாரியை. துறை: களவினை அறிவுறுத்தி.

495. புதிய மட்பாண்டத்திலுள்ள நீரானது புறத்தே கசிந்து தோன்றுமாறு போலப் புறத்தே தோன்றும்படியான உள்ளன்போடு காமத்தையும் பழிமொழியையும் கண்டு நமது தாயானவள் பெண்கள் காவலில் என்னை வைத்தனள். பேரறிவை ஆண்டவுள்ளம் என்க. இதனால் கலியாணம் செய்துகொள் என்பது. உள்ளன்போடு காமமும் மொய் யலரும் திகழும் என முடிப்பாருமுளர்.

496. உன்வழியே யான் மொழிந்துநின்று உனக்கு ஏவல் செய்ய நீ பணித்துக்கொள்ளாது. பணியாது எனவே நீ வரைந்துகொள்ளாது என்பது. வழிமொழிதல் - ஒருவன் சொன்னதற்கு அடங்கி அவன்வழி

சிறைப்புறத் தலைவற்குச் செறியெயிற் றிகுளை
பிறர்வரை வுரைத்து வரைவு கடாதல்

பரிகொண்டு வாங்க லணைப்பரி பண்ணிய வேழநிலம்
நெரிகொண்ட தேரு நெடுங்கடை வாய்த நிரைகொண்டவால்
அரிகொண்ட வாட்கண்ணி மங்கலங் கூறி யடுப்பவென் றும்
உரிகொண்ட வன்பினர் தாமிதற் கேது முணர்ந்திலரே. 497

அன்னை கேட்ப மின்னிடைக் குரைத்தல்

சிற்றி லடுத்துச் சிறுசோ றிரந்து தெருச்செலுங்கால்
முற்றி லடுத்து முழுச்சோ றடுமன் றுன் முண்டகக்கை
பற்றி னடுத்தெரி சூழ்வலென் றேபரி வான்வருட்டி
எற்றி னுரைத்தவர் யாண்டைய ரேதில ரீண்டமின்னே. 498

நின்று பதில் சொல்லுதல் ஈண்டுப் பொருளாகக்கொள்க. மன்னு விளி. விழி பொழிய. பல மறியைச் சாய்த்துழி பழிமாத்திரமா பாவமும்வந்தது. வந்தது உகந்தாள் எனவே தலைவனுக்குத் தலைவி வெறியை அச்சுறுத்துதலாயிற்று. பணியாது விடுப்பது என இயைக்க. விடுப்பது - பிரிந்திருப்பது.

497. தலைவியின் மணத்தைக் கூறிப் பரியும் வேழமும் நிலத்தில் நெரிதல்கொண்டன. கடைவாயிலில் தேர்நிரைகொண்டன எனவே தலைவியின் விவாகத்தை உத்தேசித்துக் குதிரைமீதும் வேழத்தின்மீதும் தேர்மீதுமாகப் பல தலைவர் வந்தனர் என்பது. பரித்தலைக்கொண்டு வாவுகின்ற பரியென்க. 'பரி பரி சுமத்தல் வேகம்' என்பவாகலின் வேகங்கொண்டு வாவுகின்ற பரி எனினும் பொருந்தும். அடுத்தற்கு என்றும் உரிமை கொண்ட தலைவர் தாம். ஏதும் - சிறிதும்.

498. தலைவியினன்னை காதில் விழும்படியாகத் தலைவியை முன்னிலையாக்கி அத்தலைவியை நோக்கித் தோழி கூறல் என்பது துறை. தலைவியே! நீ தெருவில் விளையாட்டாகச் செல்லுங்கால் உன்னிடத்திலே அடுத்துச் சோற்றை இரந்து. தலைவரடுத்து இரந்து சிறு பிராயத்தில் சிற்றிலும் தக்க பிராயத்தில் முற்றிலும் பேணுவார்கள் பெண்கள் என்க. முற்று இல் - பெருவீடு. உன் கையானது யான் என்கையாற் பிடித்தற்குப்பற்றுக யானடுத்து ஓமாக்கினியைச் சூழ்வேன் என்று வருட்டி எற்றுக உரைத்த தலைவரானவர் இப்பொழுது ஏதிலர்கள் ஈண்டிவர யாண்டுச்சென்றனர்? எரி - விவாகத்திற்காக வளர்த்த ஓமாக்கினி. எற்றுதலாவது உள்ளத்திலொன்றை வைத்து, வாக்காலொன்றைச் சொல்லி, ஒருவரை எற்றுதல். உலகத்தவர், மோசஞ்செய்த ஒருவனை 'இவன் என்னை எத்திவிட்டான்' எனக் கூறுமாறும் காண்க. ஏற்றின் - குறுக்கல் விகாரமாகக்கொண்டு பெருமையோடு என்பாருமுளர். அயலாரீண்டத் தலைவர் யாண்டையர்? 'எரிசூழ்வல்' என்பதனுல் விவாகஞ்செய்துகொள்வேன் என்பது.

ஒண்டொடித் தலைவி உயிர்செல வடுத்த
வேற்று வரைவை மாற்றெனக் கிளத்தல்

எள்ளாத வின்னற் கிரையா விருத்திய தன்றிமன்யாம்
விள்ளாத காதல மாகவுள் ளாது விடுத்தவர்பால்
தள்ளாத கேண்மைமுன் பேதந்த பாலுந் தலைதிறம்பி
நள்ளாத வேதிலர் பாலினு மாக்குங்கொ னன்னுதலே. 499

பிரியின் வாழாப் பெற்றிமை தலைவற்கு
உரையெனத் தோழிக்கு வரிவளை கிளத்தல்

பிரிந்தா லரிதுயிர் வாழ்க்கை புடைபெய ராமுயக்கம்
புரிந்தாலு மன்றி லெனக்கிள வாய்புது நித்திலங்கள்
வரிந்தா லனைய முறுவற்செவ் வாய்மதர் வாள்விழியாய்
தெரிந்தார் தமையுந் தெருட்டுதல் சான்ற தெளிவினர்க்கே. 500

நின்னின் றமையாள் என்றுரை யென்றல்

மதுவார் குவளைக்கு நீரன்றி யில்லைமன் னுருயிர்க்கு
விதுவார் சடைப்பெரு மானன்றி யில்லை வினையுடற்குக்
கதுவா ருயிரன்றி யில்லை நலநின் கருணையன்றி
எதுவா மடக்கொடிக் கென்றுரை வேலவர்க் கேந்திழையே. 501

---

499. துறை: தனது உயிர் செல்லும்படியாக அடுத்த வேற்றுவரவை மாற்றுவாய் என்று தோழிக்குக் கிளத்தல். மன் காதலமாக - மிகுந்த ஆசையையுடையேமாக. பாலும் - ஊழும். தலைதிறம்பி - முறைதவறி. ஊழானது தலைவரிடத்தல்லாமல் அன்னியரிடத்தில் விவாகத்தையாக்கி விடுமோ? இருத்தியதல்லாமலும் இவ்வாறும் ஆக்குங்கொல் எனமுடிக்க.

500. துறை: பெற்றிமையை உரையென்று, தோழியே தெரிந்த பெரியோரையும் தெளிவிக்குந் தெளிவினையுடைய தலைவர்க்கு நீ, ஆணும் பெண்ணுமாய் அன்றிலிரண்டும் இடைவிடாமல் எப்பொழுதும் கூடியிருப் பினும் சிறிதுபொழுது ஒன்றையொன்று பிரிந்தால் அவை உயிர்வாழ்தல் அரிதாகுமென்று சொல்வாயாக. அன்றில் புடைபெயரா முயக்கம் புரிந் தாலும் பிரிந்தால் உயிர்வாழ்க்கை அரிதெனக்கிளவாய் எனக் கொண்டு கூட்டுக. 'கிளவாய்' எனவே யானும் உன்னைப் பிரிந்ததனால் உயிர் வாழேன் என்று சொல்வாயென்பது. இனித் தலைவனே நீ தலைவியினிடத் தில் புடைபெயரா முயக்கத்தைப் புரிந்தாலும் அவளை நீ பிரிந்தால் அன்றி லென அவளது உயிர்வாழ்க்கை அரிதாகுமெனக் கிளவாய் என்பாருமுளர். இப்பொருட்கு அன்றிலென - அன்றிலைப்போலவெனப் பொருள்கொள்க. தெரிந்தவரையுந் தெருட்டுதலானது தெளிவினையுடையார்க்குக் கடனாகை யால் நீ கிளவாயெனப் பொருள்கூறல் பொருந்தாது.

501. துறை: நின்னை இன்றியமையாள். இல்லையென்னும் பயனிலை களுக்குப் பின்னின்ற நலம் என்பதை எழுவாயாக்குக. அவைபோலத்

வந்தவர் மீளுமுன் வெந்துயர் தெரிக்கெனல்

வந்தவர் வாம்பரித் தேரின்று மீள வலித்ததில்லை
நொந்தவர் நின்னடுத் தாருளில் லாநுதி வேற்கரவா
பந்தவ மான பயோதரப் பாவை படர்மலிநோய்
சிந்தவ ளாவெனிற் கேட்குவர் கொல்லோ திருந்திழையே. 502

அன்னைக் குரையென நன்னுதல் கிளத்தல்

சூளுற் றுரைப்ப லெலுவி நினக்குத் தொடுகழலான
வாளுற்ற கண்மை வரித்துக் குழலின் மலர்செருகி
மூளுற்ற வன்பின் முலைமுகம வைத்து முழுவிமெல்ல
மீளுற் றனனன்னைக் கோதி னவைவிர வாமைநன்றே. 503

ஆற்றுத் தன்மை தோற்றித் தலைவி
அறத்தொடு நிற்பத் திறத்தொடு கிளத்தல்

அளியே யினைதற்கு நீயன்றி யில்லை யணங்கனையாய்
களியேய் களிறனை யானை வரையக் கடாவலொன்றே
வெளியே யனைக்கென் விழுபெரு நோயை விளிக்கவல்ல
தெளியேய் மருந்திது வெனபதொன றேசெய்க லாயெனினே.

தலைவிக்கு நினது கருணையன்றி வேறு நலமுள்ளது எதுவாகும்? ஒன்றுமில்லை என்று உரைப்பாயாக.

502. பந்து அவம் ஆன பயோதரம் என்க. பயோதரம் - முலை. தலைவனே! நீ தலைவியின் நோய் சிந்தும்படி அவளோடு அளாவுவாயெனக் கூறின் உன்னை அத்தலைவர் ஏதாவது கேட்பாரோ? ஒன்றும் கேளார்; ஆதலால் நீ அஞ்சாது செல் என்பது கருத்து. நின்னை அடுத்தாருள் நொந்தவரில்லாத் தலைவனே.

503. முழுவி - முத்தங்கொண்டு. தோழியே! நினக்கு உண்மையாகச் சொல்வேன், அதனை நீ கேட்பாயாக. தலைவனானவன் வரித்துச் செருகி முகத்தை என் முலையில்வைத்து முத்தங்கொண்டு மீண்டான்; அதனை நீ என் அன்னைக்குச் சொல்லுகிறபட்சத்தில் நவை விரவாமற் சொல்லல் நன்றாகும். நவை - தீங்கு. ஓதின் நவை எனப் பிரிக்க. கண்ணில் மையை எழுதியென, கண்மைவரித்து என்பதற்குப் பொருள்கொள்க. மீளுற்றனனென்று என் அன்னைக்கு நவை விரவாமல் நீ ஓதின நன்றாகும் என முடிப்பாருமுளர்.

504. தலைவன் என்னை விவாகஞ்செய்ய நீ அவனை வினவுதலொன்றை யாவது, என் அன்னைக்குத் தலைவியின் நோயைக் கெடுக்கத்தக்க மருந்து தலைவனை விவாகஞ்செய்தலாகிய இதுவேயாமென்று சொல்லுவதொன்றை

வணங்கிடைத் தலைவி அணங்கெதிர் கண்ட
புகர்தபு செவிலி இகுளையை வினுதல்

கடுக்கந் தரம்வைத்த வீரட்ட காசன் கருணையில்லார்க் [யாள்
கொடுக்கந் திகழ்ந்தென வொள்ளொளி வாடின ளொண்டொடி
அடுக்கந் திகழ்வரை யாங்குமின் ளுேடுத் தாட்டயர்ந்தாள்
நடுக்கந் திகழிட் டிடையக லல்கு னறுநுதலே. 505

களிறிடை விலக்கி ஒளிறுவே லிறைவன்
மின்னிடைக் குதவி அன்னைக் குரைத்தல்

குமரித் தடஞ்சுனை யாடிவண் மீண்ட குறுநெறியின்
அமரிற் றலைமடங் காமத வேழ மடர்ப்பவிரீ இத்
தமரிற் றலைப்பிரி யாமைத் தலையளித் தேதனக்கங்
கெமரிற் றலைப்படல் கோடியென் ருெனெ றெறும்ப்புயனே. 506

நற்ருய்க் கன்னை பெற்றியீ தென்றல்

அரும்பிற் றிலமுலைத் தாமரை மூர லணித்தளவம்
விரும்பிற் றிலவிழிக் காவி யளியொடு மேவன்மலர்ச்
சுரும்பிற் றிவண்டில தோதியென் னேநஞ் சுடர்த்தொடிவேள்
கரும்பிற் றுவண்டனள் போலும்வில் லார்ந்த கனங்குழையே.

யாவது செய்யாயாஞல் யான் வருந்தற்குக் காரணம் நீயன்றி வேறில்லை. தெளிதலை ஏய்ந்த மருந்தென்க.

505. துறை: தலைவி அணங்கு - தலைவியின் நோயை. சிவனது கருணையில்லாதார்க்கு ஒடுங்குதல் திகழ்ந்தவாறுபோல, ஒண்டொடியாள் வாடினள். ஒடுக்கம் - ஒடுங்குதல். அடுக்கம் - மலைச்சாரல்.

506. துறை: ஒளிறுவேலிறைவனுனவன் களிற்றை இடையே விலக்கி மின்னிடையுடைய தலைவிக்கு உதவிய உதவியைத் தோழி அன்னைக்கு உரைத்தல் என்க. ஆடினுளாய். தலைவியானவள் நம்முடைய சுற்றத் தாரிற் பிரியாதபடி அவனளித்து தனக்கு அங்கு என்ருன் என முடிக்க. தலைவனுனவன் அங்கே தலைவியைநோக்கி எமரிடத்துச் சேருவாய் என்ருன். எனவே என்னை விவாகஞ்செய்து கொள்வாய் என்ருனென்பது கருத்து. எமர் - தலைவனுடைய சுற்றத்தார். கேட்ட செவிலிக்குத் தோழி கூறினுள்.

507. துறை: செவிலி நற்ருய்க்குச் சொல்லல். அன்னை - செவிலி. முலைத்தாமரையும் மூரற்றளவமும் அரும்பிற்றில. விழிக்காவியானது அளியோடு மேவியிருத்தலை விரும்பிற்றில. அளி என்பதற்குக் கிருபை என்றும் வண்டு என்றும் பொருள்கொள்க. விழியைக் காவியென்றதற்கு

அன்னது நற்றாய் தன்னையர்க் குறுத்தல்
யாழியன் மொழிக்குத் தோழி கிளத்தல்

என்வாய் மொழியன்னை வாயி னறிந்த வினியநற்றாய்
தன்வா யறிந்து தழலெனச் சேந்து தடங்கண்மலர்
முன்வாய் விதியன்றி யில்லையென் றூறினர் மொய்யமரில்
பின்வா யடிபெய ராதவென் னையர் பிறைநுதலே. 508

வடிநெடு வேலோன் கடிவரு மாறு
வடுவகிர் கண்ணிக்குக் கடுமொழி கிளத்தல்

வள்ளத் தெழுந்த வனமுலை யாயன்பர் வந்திடலும்
பள்ளத் தெழும்புனல் போலெழுங் காதலைப் பண்பின்மறை
வெள்ளத் தெழுது மெழுத்தென நந்துயர் வீடுநெறி
உள்ளத் தெழுதி யுறுநாள் கழியா துஞற்றுதற்கே. 509

மழைமேல் வைத்து வரைவு கடாதல்

இடித்துத் தடித்துத் திசைதொறுங் கான்றிந் திரதிருவிற்
பிடித்துத் ததைந்த பெருமுகி லேபெருங் கோடைவெப்பு
முடித்துத் தினையளிப் பாய்கொன் முயற்சியெ லாந்தபுத
நடித்துத் திரிவைகொல் லோவறி யேனிந்த நாகத்திலே. 510

ஏற்ப அளியொடு மேவவென்றூர். ஓதியானது மலர்ச்சுரும்பால் திவண்டிலது. திவளல் - விளங்குதல். வேளினுடைய கரும்புவில்லால் சுடர்த்தொடி துவண்டனள்போலும்; போலும் ஒப்பில்போலி.

508. துறை: நற்றாய் உறுத்தலை. கண்மலர் சேந்து. விதி - ஊழ். என்னையர் - சுற்றத்தார்.

509. உஞற்றுதற்கு மறைப்பாயாக. வந்திடலும் எழும்படியான ஆசையை. நெறி உஞற்றுதற்கு - நம்மை விவாகஞ்செய்தற்கு. உள்ளத்தெழுதி - மனதிற் சிந்தித்து. சடிதியில் மணம் உஞற்றுதற்கு. உஞற்றல் வினை தலைவனுடையது. மனதின்கண்ணே தலைவன் விவாகம் செய்து கொள்ளும்நாள் எந்நாளோ என்று நாம் வருந்தியிருக்கின்ற நாட்கள் அதிகரியாவண்ணம் தலைவன் விவாகஞ்செய்து கொள்வதற்கு என நான்காமடிக்குப் பொருள்கொள்க.

510. மேகத்திற்கும் தலைவனுக்கும் சிலேடையாகப் பொருள்கொள்க. தடித்துக் கான்று. தலைவன் காதிலே விழும்படி மேகத்தைப் பார்த்துச் சொன்னாள் என்க. மழைபெய்தளியாது திரிவாயோ.

நாட்டினை யுயர்த்தி வரைவு கடாதல்

ஒருத்தற் குலம்பிடிக் கூண்பல லூட்டியுண் டோங்குநிழற்
பொருத்தற் குகைப்பது நின்னக நாடெனிற் போர்த்தலைவா
வருத்தற்கெமையொன்றுந்தேற்றிலைபோலவெம்மாதைநின்னில்
இருத்தற் கியைந்திலை யென்னறி வாங்கொ லிருநிலத்தே. 511

ஊரை யுயர்த்தி வரைவு கடாதல்

புள்ளும் விலங்கும் புதிது றுவோரும பொருந்துநரும்
விள்ளும் விலங்கும் பசியிடர் நோயென வீழுநலம்
தெள்ளும் விலங்குட் டிருந்திய வூரற்குச் செய்வினையின்
தள்ளும் விலங்கு முளமெனின் மன்னே தகவில்லையே. 512

இல்லும் குடியும் பிறப்பும் சிறப்பும்
இறப்பக் கூறி வரைவு கடாதல்

வேங்கையு மற்றும விளையினை யாண்மெய் யெழிலும்வளை
பூங்கையும் விள்ளப் புறக்கணித் தாயின்னும் போற்றிலையேல்
தீங்கையு மில்லுங் குடியும் பிறப்புஞ் சிறப்புமெண்ணின்
மூங்கையு முற்றிய வாக்கியு நேரு முதுநிலத்தே. 513

---

511. ஒருத்தற்குலம் - ஆண்யானையானது. அப்பிடியானையை நிழலில் பொருத்துதற்கு. எமை வருத்தற்கு. ஒருத்தல் - யானை. நின் இல் - உன்வீட்டில்.

512. புள் முதலிய நால்வரும் பசிவிள்ளும், அதனால் இடர்நோய் விலங்கும் என்று கருதி விரும்பப்படுகின்ற நலம் பொருந்திய மலை. வினையின்கண்ணே தள்ளும்படியான உள்ளமானது விவாகத்திற்செல்லாது விலங்குமேயானால். விலங்குதல் - விலகுதல். புதிதுறுவோர் - வேற்று நிலத்திலிருந்து விருந்தாகப் புகுவோர். பொருந்துநர் - குறிஞ்சி நிலமாகிய ஆண்டுற்றவர்.

513. விளையப் புறக்கணித்தாய். தலைவியின் மெய்யானது எழிலையும் கையானது வளையலையும் இழப்புறப்புறக்கணித்தாய். இனியாவது அத்தலைவியைப் போற்றாயானால் உன்னுடைய தீங்கு முதலிய ஐந்தையும் எண்ணும் பட்சத்தில் தீங்கு ஊமையையும் ஏனையவை வித்துவானையும் ஒக்கும். முற்றிய வாக்கி - கல்வி கேள்வியால் நிறைந்த வித்துவான். மூங்கையும் வாக்கியும் சேர்ந்திருத்தலையொக்கும். மூங்கையொருவனும் வாக்கியொருவனும் சேர்ந்திருந்தவிடத்துச் சொல்நிகழ்ச்சியாகிய பயன் பெறப்படாமை போல அவையும் பிரயோசனப்படா என்பது. போற்றல் - வரைந்து காத்தல்.

வையிலை வேலோன் வரைவுடன் பட்டமை
பையர வல்குற் பாங்கி பகர்தல்

வாழிய நீதுயர் வீழ்கநின் மாமை வளஞ்சிறக்க
கேழியல் யாவ ரிடத்துமில் லோன்கிளை யோர்துவன்ற
ஊழியல் வேத வொழுக்கமை சான்றோ ருடன்குழும
யாழியன் மென்மொழி யாயடுத் தான்மண மெய்துதற்கே. 514

உழந்த துயரத் தோக்கமு மெதிர்ந்த
தழைந்த மகிழ்ச்சியும் தலைவி கிளத்தல்

நீட்டித்து மன்றலை நீப்பவர்ப் பெற்றோர் நிறையுளத்துப்
பூட்டித் தகைக்கும் பொறிப்பே றரிது புணர்கனவு
மாட்டித் துகைக்கும் வருத்தமுங் கௌவையு மற்றுமன்னாய்
வீட்டித் திருத்தரு நல்வினை யோவினி மேவுவதே. 515

மறுப்பர் கொலோவென மறுகுபு கிளத்தல்

தீதிலர் மாட்டுச் சிறக்குந் தணிகைச்செவ் வேலிறையை
ஓதிலர் மாட்டுறு செல்லலுற் றுழெ னுளம்விடுத்துப்
போதிலர் மாட்டுத் துணிந்தன ரோபுக லாய்புகுந்த
ஏதிலர் மாட்டுக் கருத்தினை மாற்றி யெமரணங்கே. 516

---

514. ஒப்புத்தன்மை இல்லோனாகிய தலைவன். துவன்ற குழும மணமெய்துதற்கு அடுத்தான். கேழ் இயல் - ஒப்பின்றன்மை.

515. துறை: துயரத்து ஓக்கம் - துன்பத்தின் மிகுதி. மன்றலை நீட்டிக்கும் நாயகரைப்பெற்ற பெண்களுக்கு அந்நாயகரோடு அனுபவிக்கும்படியான கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றலாகிய ஐம்பொறியின் பயன் அரிதாகும். நல்வினை - மணம். பொறிப்பேறு அரிது என்றதனால் துயரத்தோக்கம். இனி வருவது நல்வினையோ என்றதனால் மகிழ்ச்சி. கௌவை - பழி. கனவாலுண்டாகிய வருத்தத்தையும் பழிமொழியையும் கெடுத்துச் செல்வத்தைத் தருகின்ற நல்வினை என்க.

516. தலைவி தோழியைநோக்கிச் சொல்லல். தீதில்லாப் பெரியோரிடத்து வெளிப்படும் இறை என்க. எனது உள்ளத்தைவிட்டு நீங்காத தலைவரிடத்துத் துணிந்தனரோ. எம்மவர் மாற்றித் துணிந்தனரோ? அதனைச் சொல்வாயாக.

தமர்வரை வேற்றல் இகுளை சாற்றல்

குருவாய் வெளிக்கொள வீரட்ட காசக் கொழுஞ்சுடராங்
கொருவா மலந்தணிந் தோங்கரு ளாயுறு மாயைகன்மம்
மருவா மையினன்ப ரெய்தலுங் கௌவை மறைந்தெவரும்
திருவா ளனையன்றி நாட்டில ரேட்டையிற் றீர்திருவே. 517

அவன்வரைவு மறுத்துழி அணிவளைத் தோழி
அன்னைக் கணங்குறும் இன்னலீ தென்றல்

அடுத்தவல் வேழம் வருமுலை யாகத் தழுந்தவனைத்
தெடுத்தகை வேலின் விலகி யினமலர் சூட்டியளாய்
விடுத்தவர் தோட்புணை யில்லா தவைகனம் மெல்லியலாள்
கடுத்தவத் தீற்றிய செல்லலை யன்னாய் கடப்பரிதே. 518

உதவிசெய் தலைவர்க் கல்லது நினையின்
மதர்விழி வாழ்க்கை அரிதெனக் கிளத்தல்

வேழங் கடந்தவர்க் கல்லாது வேற்றோர்க் கெனவிதிக்கின்
வாழுங் கடலிடத் தென்றே யிருக்கு மடநடைமான்
வீழுங் கடிவரை மார்பரி னாமும் விதிப்பதல்லால்
யாழுங் கடர்மொழி யன்னாய் பிறரி னியல்பில்லையே. 519

---

517. ஏட்டை - இளைப்பு. சுடரானது கொள ஆணவமலம் தணிந்து மாயாமலமும் கன்மமலமும் சிவனருளாய்விடும். மருவாமையையுடைய அன்பர் என்க. சுடர் - சிவன். சிவன் குருவாய்வந்தமாத்திரத்தில் மலம் அருளாகி அச்சிவன்வயத்தாதல்போல, தலைவர் வந்தமாத்திரத்தில் பழி மறைந்து நம்மவர்கள் அத்தலைவர்வயத்தாயினர் என்பது. ஆணவமலம் தணிதல்போலக் கௌவை மறைந்து என்க. தணிந்து - தணிய. எனவே மறைய என்பது என்பாருமுளர். நம்மவரெவரும் தலைவரையன்றி வேறு ஒருவரை உனக்குக் கணவராக நிச்சயித்திலர் ஆதலால் நீ ஏட்டையினின் றுந் தீர்வாயாக.

518. துறை: தலைவனது மணத்தைத் தமர்கள் மறுத்தபொழுது உடனே தோழியானவள் அதனை அறிந்து தலைவியைப் பொருந்திய நோய் இதுவாகும் என்று அன்னைக்குச் சொல்லல். வேழத்தை விலக்கி. வருமுலை - வளருமுலை. வைகலிலடையுஞ் செல்லல் என்க. கடுவை மிகத் தீற்றினாற் போன்ற செல்லல். தவ - மிக. மெல்லியலாள் கடப்பரிது.

519. வாழும் எதிர்மறைத் தன்மைப்பன்மை வினைமுற்று. மான் இருக்கும். விரும்பப்படுகின்ற அழகிய கடியை வரைபோலும் மார்ப ரிடத்து நாமும் நிச்சயிப்பதல்லாமல் பிறரிடத்து நிச்சயிப்பது இயல்பல்ல. யாழ் அங்கு அடர். கடி - மணம்.

அணிபடுத் தணங்கின் அழகினுக் கொத்த
திணிவரைத் தோளனைச் செவிலிநா டென்றல்

பாடக நூபுரங் கிண்கிணி பாதம் பருமமல்குல்
சூடகந் தோண்முலை நித்திலந் தோடு குழைசெவிமெல்
லாடக மாமல ரோதி யணிந்திவ ளேர்க்கியைய
மாடக யாழ்மொழி யாய்மதி யாயொரு மஞ்சனையே. 520

குஞ்சரங் கடிந்த குமரனை யன்றொரு
மஞ்சனு மில்லெனப் பாங்கி வலித்தல்

அறியாப் பொருளின்றி யெல்லா மறியு மறிபொருள்சீர்
பிறியாத் தணிகையில் வீரட்ட காசப் பெருந்தகைதன
குறியானு மொத்தவன குஞ்சரங் கீழ்ந்த குமரனன்றி
வெறியார் மலர்க்குழ லாயில்லை வேறுவிண் ணோருளுமே. 521

இன்னண நிகழ்தலின் மின்னிழை மாதின்
சிந்தை யென்னெனச் செவிலி வினாதல்

அணியினும் பூசினு மோகையில் லாளடுத் தாயநல்லார்
பணியினும் பார்வை வழங்காள் பகலோன குடகடலில்
தணியினும் பாளிதம் வேண்டா ளணங்கிற் றலைப்படுதல்
துணியினும பாவமென் றுயிவ ளெண்ணஞ்சொல்
[லாய்கிளியே. 522

---

520. துறை: அணிபடுத்து நாடு. பாதத்தில் பாடகம் முதலிய வற்றையும், அல்குலிற் பருமத்தையும், தோளில் சூடகத்தையும், முலையில் நித்திலத்தையும், செவியில் குழையையும் தோட்டையும், ஓதியில் பொன் மலரையும் அணிந்து. மைந்தன் மஞ்சன் என்றாயிற்று.

521. தன்னால் அறியாத பொருள் உலகத்திலில்லாமல் எல்லாப் பொருளையும் தானே அறிகின்றபொருள் என்றது கடவுளை. அறிபொருள் - ஞானக்கண்ணுடையோரால் அறியப்படுங்கடவுள். பொருளும் பெருந் தகையுமான சிவனது அடையாளத்தானும் ஒத்தவனெனவே இத்தலைவ னும் எல்லாம் அறிபவன் என்பது. குறி ஈண்டு அருளென்பாருமுளர்.

522. பாளிதம் - பாற்சோறு. அணங்கில் - யாம் வெறியாட்டுச் செய்யும் பொருட்டுத் தெய்வத்தினிடத்தில். கிளி என்றது தோழியை.

வண்ணக் கிளிமொழி யெண்ணமீ தென்றல்

உற்ருர்க் குரியவர் பொற்ருெடி மாதரென் ருேதுபொருள்
பற்ருதல் கொண்டநம் பாவை பகட்டின் பணைக்கைமுகத்
தெற்ரு வொருகைத் தழீஇமலைந் தோப்பு மிறைவர்மணம்
முற்ருமை கூட்டுங்கொ லோவென வெந்துயர் மூழ்கினளே. 523

மறுத்துழி யாற்ரு வண்மொழித் தலைவிக்கு
நிமித்தங் கூறி நீடா தென்றல்

கூடிற்று மன்ற லெனவே விரிச்சி குலாயதிடன்
ஆடிற் றலர்விழி வாங்கமைத் தோளு மணிமுலையும்
ஓடிற் றிடனின்று காக மனைக்குரைப் பான்புகுங்கால்
நீடிற் றிலதினி மன்றல்பொன் னேயெவர் நீப்பினுமே. 524

தந்தை தன்னையர்க்குத் தாயினி துரைத்தல்

சான்ருே ரிரந்த விரப்பு நமது தனிக்குடியின்
வான்ருேய் வனைய புகழ்மையு நோக்கி மருதுபெண்மை
யான்ருேட் புணர்ப்பினல் லாற்கொடை சான்ற வவையுலகம்
மூன்ருே டளிப்பினு மாமோ முகிழ்ந்த முலைவிலையே. 525

---

523. உற்ருர்க்கு - ஆபத்து வந்தவிடத்து உதவினவருக்கு. பாவையை ஒரு கையால் தழுவி யானையது துதிக்கையையுடைய முகத்திலெற்றி மலைந்து. பகடு - யானை. இறைவர் கூட்டுங்கொலோ. பாவை மூழ்கினள் என முடிப்பினும் பொருந்தும்.

524. துறை: தம்மவர் விவாகத்தை மறுத்தபோது சகியாத தலைவிக்கு. விரிச்சி - நற்சகுனம். வாங்கு - வளைந்த. முலையும் இடனுடிற்று. காகமானது இடப்பக்கத்தினின்று வலனுயிற்று. யான் நின் அன்னைக்குச் சொல்லப்புகுங்கால் இவ்வளவுமாயிற்று. ஆதலால் இனி மன்றல் நீடாது யாவர் மன்றலைத் தடைசெய்து நீக்கினுலும்.

525. தோய்வு அனைய புகழ்மை - வான்முழுதையும் தோய்ந்தாலொத்த புகழ்; எனவே விரிந்த புகழ் என்பது. பெண்மையாலான்றவளைத் தலைவரிடத்துப் புணர்ப்பினல்லாமல், அத்தலைவரானவர் கொடையாகப் பொருந்திய அவைகளைத் திரிலோகத்தோடு கொடுத்தாலும் என்க. சான்ருேர் - தலைவர். யாம் நோக்கி மருது. இரப்பும் நோக்கி.

வருவன வேற்று வழங்குவ தல்லது
திருவிழை மாதர்க்குப் பொருளிலை யென்றல்

உரையுணர் வாக்கை கடந்த பதமுவற் ருற்பணிக்கண்
விரையுநர் பாலருள் வீராட்ட காசன் விழையவவர்
வரையுட னுடு தருவன வேற்று வழங்கினல்லால்
தரையுள தோவிலை யாகும் பொருள்விண்ணுந் தானிலதே. 526

புரவலர்க் கிதுவே பொருளெனக் கிளத்தல்

இடைப்பா லதுபெறின் முந்நீர் முதிர்ந்த விருநிலத்துக்
கடைப்பா லதுந்தலைப் பாலது மாமெனுங் கட்டுரையின்
நடைப்பான் மையும்பழு தாமோ விறைவநம் மார்விழைவு
கொடைப்பான் மையின்முடித் தென்றே நிறுவுதி கோற்றொ
[டியே. 527

நன்மையுந் தீமையும் பிறிதினைக் கூறிப்
பொருளெனக் கிளந்தவள் வரைவு கடாதல்

வழியா னுறுநர்க்கு வீராட்ட காசன் மலர்ப்பதம்போற்
கழியா விழைவின ராயினுங் காழுறு சான்றவர்நன்
மொழியான் வருமின்ப மல்லது மொய்கதிர் வேற்றலைவா
பழியான் வருமின்பம் பற்று ருயிர்சாய் பதத்தினுமே. 528

---

526. பணி என்றது தியானித்தல், துதித்தல், வலம்வந்து வணங்கல் முதலியவற்றை. பணிசெய்தலின்கண் விரைந்து செல்வோரிடத்து. பதத்தை அருள்கின்ற. உவற்றுல் - அவ்வுரை முதலிய மூன்றுல். விழைய - ஒப்ப.

527. தருமார்த்த காமம் என்னும் மூன்றனுள் அர்த்தத்தைப் பெற்றுல் காமத்தையும் தருமத்தையும் பெறலாம். நம்மவருடைய விழாவை முடித்து, தலைவியின் வளையல் கழலாது எப்பொழுது நிறுவுவாய். தொடியை என்று நிறுவுதி என்க. துறை: தோழி தலைவனைநோக்கிப் பொருள்கொண்டுவரக் கூறல்.

528. துறை: நன்மையும் தீமையுமாகிய பிறிதினை. பொருளைக் கொண்டு வரும்படியாகக் கிளந்த பாங்கி. அது முன்னுள்ள செய்யுட் களால் விளங்கும். உறுநர்க்கு மலர்ப்பதத்திலுள்ள விழைவைப்போல, காமத்தில் விழைவையுடையாராயினும். தலைவனுக்கு நன்மொழியால் வரும் இன்பமாவது விதிப்படி மணம்புரிந்து புணர்தல். பழியால் வரும் இன்பமாவது விதிப்படியன்றிக் களவாற்புணர்தல். துறை: கூறி வரைவு கடாதல்.

கடுமொழி கூறி வரைவு கடாதல்

முழங்கிய மாலை யருவியஞ் சாரன்மொய் வேடர்குழாம்
கிழங்கினை வேட்டெழு வள்ளியைக் கேட்டிடை நாட்டும்வெற்பா
வழங்குமென் றேருளி நலனுண்டு நீத்தன் மரபுகொல்லோ
பழங்கணிற் றீரெம்மைப் பூண்கநின் றேரிற் பரியினமே. 529

நலந்தொலை வுரைத்து வரைவு கடாதல்

கெழுவிய காதலை யென்றெம துள்ளங் கெழீஇயதன்றித்
தழுவிய காதல மென்றுநின் னுள்ளந் தழீஇயதின்றே
எழுவியல் வான்புயத் தாய்வரை யாயெனி லின்றெமது
வழுவிய மாமை வளந்தந்து சேறிநும் வான்பதிக்கே. 550

வரையுநாள் சுட்டி வரைவு கடாதல்

ஊர்கொண் டதுமதி மெல்லிணர் வேங்கையொள் வீமலர்ந்து
சீர்கொண் டதுவெற்பன் காதலி செல்வி யெனுமொழிவிண்
பார்கொண் டனவின்னும் பைந்தொடிப் பாவைதன்பாலலங்கண்
நீர்கொண் டதுமருந் தோகண்ட தின்று நெடுந்தகையே. 531

---

529. வேட்டு நாட்டும் வெற்பு. வேடர்கள் கிழங்கைத் தோண்டி எடுக்கவேண்டி வள்ளிக்கொடியை அறுப்பாரென்க. எம்மைத் துன்பத்தினின்றும் தீர்ப்பாய். நின் தேரிற் பரியினம் பூண்க; எனவே விரைவாகப் பொருளைக் கொண்டுவரச் செல்வாயென்றாள் என்பது: அதுவே கடுமொழி கூறலாம். கிழங்கு தலைவி. அதன்கொடி தலைவியின் சுற்றத்தார்.

530. காதலை என்று - ஆசையையுடையாய் என்று. தலைவிக்கு நேரிடுவது தமக்கென்றே நினைப்பவராகையால் தலைவியின் மாமையைத் தம்மதாக வைத்துத் தோழி கூறினாள். காதலம் என்று - யாம் ஆசையையுடையேம் என்று.

531. சந்திரன் பரிவேடங்கொள்வதும் வேங்கை பூத்தலும் விவாகஞ் செய்தற்குரிய சுபதினமாம். செல்வியானவள் வெற்பனுகிய தலைவனிடத்துக் காதலினள் என்று இகழ்ந்து யாவரும் கூறும் மொழி; எனவே விரைந்து பொருள்கொண்டுவருவாயானால் விவாகஞ் செய்துகொள்ளலாம்: அதுவே கண்ணீர் நீங்குதற்குரிய மருந்தாமென்றாள் என்பது.

வரைவிடை வைத்துப் பொருள்வயிற் செல்வோன் ஓம்படைக் கிளவியிற் பாங்கிக் குணர்த்தல்

சுவலிற் றுயல்வரும் பூங்குழை வார்செவித் தோகைநல்லாய்
அவலித் தணங்குறை யாவகை தேறற்கன் றுணவநோய்த்
தவலிற் றலைவரும் வீரட்ட காசன் றணியருளால்
கவலைத் தடஞ்சுரந் தாய்ப்பொரு ளானும்மைக் காண்குதுமே.

ஆற்றாத் தலைவியைத் தேற்றிச் செல்கென்றல்

செவ்விய நீஞ்சொற் சிலம்பா நுவன்றவஞ் ஞான்றவைதாம்
அவ்விய மாத லறிந்தா மடுக்கு மமயமன் றிக்
கவ்விய வேறொரு காரணத் தாற்கணந் தாழ்த்துறினும்
நவ்விய வாட்கண் கலுழ்வாட் குரைத்து நடமதியே. 533

ஆற்றாத் தலைவியைத் தேற்றுத லரிதால் தாழ்க்கலன் வரைவெனப் போக்கொடு வலித்தல்

அன்னை த னீக்கஞ் சிறார்க்குரைத் தாற்றி யகல்வரிதால்
அன்னை த னீக்கத் தடுத்தவ ராற்ற வமைவரன்றே
என்னை த னீக்கத்துய் யேனென்னு மாயி னியம்பும்வழி
என்னை த னீக்கநில் லாதெனத் தேற்றிங் கிளங்கிளியே. 534

---

532. சுவல் - தோள். தலைவி துன்புறுவண்ணம் தெளிதற்குக் காண்குதும். அவலித்து - அவலம் அடைந்து. அன்று ஆணவம் - அன்றிய ஆணவம் என வினைத்தொகையாக்குக. அன்றல் - விரோதித்தல், ஆணவ நோய் கெட்டவிடத்து வருகின்ற வீராட்டகாசன் என்க. கவலை - கவர் வழி. தாய் - தாவி. பொருளால் நும்மைக்காண்போம். துறை: வரைவை இடையிலே வைத்து.

533. நீ சொல்லிய அஞ்ஞான்றிலுள்ள அச்சொற்களை. அஞ்ஞான்றவை வினையாலணையும்பெயர். அவ்வியம் - பொய். இன்ன நாளில் வருவேன் என்று நீ சொல்லிய அந்நாளில் நீ வரும் சமயமில்லாமல் வேறு காரணத்தால் தாழ்ப்பாயானால் கலுழ்வாள் என்க.

534. அன்னையானவள் தனது பிரிவைத் தம் சிறு பிள்ளைகளுக்குச் சொல்லி அகலுதலரிதாகும். என்னுமாயின் - என்பாளாயின். என் ஐ - என் தலைவனது. பின்னுள்ள என்னை என்பதை என்று எனப் பிரித்து என் என்பதை வினாவாகவும் ஐ என்பதை அத்தலைவனாகவும் பொருள்கொள்க.

பிரிந்தமை பாங்கி திருந்திழைக் குரைத்தல்

வெப்பா னளவிய தேன்வாய் மடுத்தோர் விடுத்தலுண்டல்
அப்பா லவற்றுளொன் றுந்துணி யாரது போன்மயிலின்
ஒப்பா யுறுபொருட் கேகினர் காணது வானலஞ்செய்
இப்பா லதோவின்ன லப்பால தோலிவ ணெண்ணரிதே. 535

பிரிவு கேட்டவள் பருவரலெய்தல்

கன்றால் விளவெறி காழ்கணை பூட்டிக் கருதலரூர்
வென்றான் றணிகையில் வீராட்ட காசனை மேவலர்போற்
சென்றா னெனுமுன்னர்த் தீவினை யேனுயிர் தேய்ந்தழிவ
தென்றா லினிவைகு மாறெங்ங னுவ தெனக்கனமே. 536

நன்னெறி விளைவதி னேந்துக லென்னென
வஞ்சி நுண்ணிடை நெஞ்சொடு கவறல்

முன்பந்த மாயவை யெய்தா முதல்வன் முழுத்தவுயிர்
வன்பந்த மாய்த்தருள் வீராட்ட காசன் மலரடிபோல்
துன்பந் தடாச்சுடு வான்சுரம் போக்கென் றுந் தோல்விசெல்லா
இன்பந் தரூஉநெறி யென்றாங் கறிந்து மினைதிநெஞ்சே. 537

---

535. அது - அவர் ஏசினமை. வான் - மிகுந்த. நலஞ்செய்யும் இப் பகுதியையுடையதோ? துன்பத்தைச்செய்யும் அப்பகுதியையுடையதோ? போல் ஏகினரெனவே நாம் பொருளை இச்சித்துத் தலைவரை விடுத்தாலும் துன்பம், விடாதுவைத்துக்கொண்டாலும் துன்பமாகின்றதென்றாள் என் பது. விடாது வைத்துக்கொண்டாலும் துன்பம் என்னை? எனின், தமர்கள் கருத்துப் பொருள்மீதுள்ளதாகையால் அவர்க்கு அஞ்சுமிடத்து உண்டாந் துன்பம் என்க. போலேகினர் எனவே அதுபோலத் தலைவர் பொருளுக் காகப் பிரிதலினும் பிரியாதிருத்தலினும் யாம் விருப்பமுடைத்தாயிருக்கப் பிரிந்தவர் என்பது கருத்து என்பாருமுளர்.

536. விஷ்ணுவாகிய கணை.

536. முன்பு அந்தம் - ஆதியந்தம். போல் இன்பந்தருநெறி அன்று. சுரத்திற் போதலானது இன்பந்தருநெறி அன்று. அஃது இன்பந்தரலாவது பொருள் கொண்டுவந்து தமர்கள் கருத்தை முடித்து விவாகஞ்செய்து கொள்ளுதலை. துன்பத்தைத் தன்னிடத்தே வைத்துக்கொண்டு சுடுகின்ற சுரம்.

வருத்த மிக்கவள் கருத்தழிந் துரைத்தல்

வெஞ்சின வேலொடு போந்துமந் தார மிடைநிழலின்
வஞ்சின மோதி வருட்டித் தெருட்டி மணந்ததெல்லாம்
நெஞ்சின தேயன்று நீள்சிறை மஞ்ஞையு நின்றதுண்டு
துஞ்சின தேலவர் வாய்மையென் செய்கோ சுடர்க்குழையே. 538

இயற்பழித் திகுளை வற்புறுத்தியது

வித்தினை யாக்குந் தலைப்பெயன் மாமழை மென்பயிராம்
அத்தினை யாக்கும் பெயன்மறந் தாங்கடு வேலரையர்
முத்தினை வீழ்த்த முறுவனல் லாயென் மொழிதுமின்னற்
கொத்தினை நீப்பக் குறித்தவர் மீட்டுங் குறித்திலரே. 539

வன்புறை யெதிரழிந் தாற்று துரைத்தல்

தொடுக்குந் தொடலை யணிந்துபைந் தார்சுரு ளோதியின்வாய்
மடுக்குந் தொழிற்கு வரிவளைத் தோளிதன் வாரெறுழ்த்தோள்
விடுக்குந் தொறுமஞ்சு மெல்லுயிர்ப் பாவிக்கு விட்டுப்பன்னுள்
அடுக்குந் தொழில்வைத்த தெய்வத மோவருட் பாலதன்றே.

---

538. வருட்டி - மயக்கி. தலைவர் என்னோடு மணந்ததெல்லாம் என் நெஞ்சின்கண் உள்ளன. அவர் மணந்த அக்காலத்தில் சாக்ஷியாக ஒரு மயிலும் நின்றது உண்டு. வாய்மை துஞ்சினதேல்.

539. தலைப்பெயல் - முதன்மழை. பின்பெயல் என்றது முதன் மழைக்குப் பின்பு பெய்யும் மழை. முதன் மழையினாலே நிலங்குளிர்ந்து ஈரமாயிருக்கும்; ஈரமாயிருக்கும் காரணத்தால் விதை முளைத்தெழுந்து தளிர்த்துப் பயிராகும்; அங்ஙனம் பயிராகியவிடத்தும் பின் ஓர் மழை பெய்தால்தான் பயிர் வளர்ந்து முற்றி நல்ல பயனைத்தரும் என்க. மழையானது மறந்தாற்போல முன்னே துன்பத்தை நீக்கிய தலைவரானவர் மீட்டும் எண்ணிலர். துறை: தோழியானவள் தலைவனது இயலைப்பழித்து தலைவியே நீ ஆற்றவேண்டும் என்று அவள்வழியொழுகி வற்புறுத்தா நிற்றல். திருக்கோவையார் 245-ம் பக்கத்தில் விபரமாக அறிந்துகொள்க. யாம் யாது மொழிவோம் நீ ஆற்றியிருப்பாயாக என வற்புறுத்தியவாறு.

540. நாயகரானவர் தொடலையை என் தோளிலணிந்து பின்னர்க் கூந்தலில் தாரையணியும் தொழிற்காகத் தன் தோளை நீக்குந்தோறும் அஞ்சும் பாவியாகிய எனக்கு. தோளி விளி. எறுழ்த்தோள் என்றது தலைவனுடைய தோளை. பன்னுள்விட்டு அடுக்குந்தொழில் என்க.

ஆற்றுத் தலைவி தேற்றுமா றுரைத்தல்

வெறுக்கை யுடங்கிய வன்பினர் யார்க்கும் விளங்கிழையாய்
வெறுக்கை யெனினும்விள் ளாமைசெய் காரணத் தால்விழைந்
பொறுக்கை யிருப்பவர் தங்கட னென்று போனவர்நாள் [தாம்
நிறுக்கை யிகந்தனை யார்தக்க தன்றிது நேரிழையே. 541

மென்னடைக் காலவர் கன்னகந் தழுவியெம்
மெய்யிடை யுறினும் உய்துமென் றியம்பல்

மந்தா நிலமவர் வான்வரைப் பூஞ்சுனை வாய்த்தவழ்ந்து
பைந்தா துகுக்கும் பரிமளச் சோலை பயின்றுசுலாய்ச்
சிந்தா குலமுறுந் தீவினை யேன்மெய்த் திளைப்புறினும்
கொந்தா ரொளிமணிக் கோற்றொடி யாயுய்தி கூடுமன்றே. 542

பருவங் கண்டு பருவர லுழத்தல்

கொண்டன் மிகுத்துக் குரைகடன் மேய்ந்து குளிர்மழையின்
மண்டன் மிகுத்து வருவது போலும் வருமுனன்னாய்
துண்ட மழற்றி நனியுயிர்ப் போங்கச் சுடுதிவலை
விண்ட மலர்க்க ணிரப்புவ தீதென்ன விம்மிதமே. 543

---

541. எல்லாவற்றையும் வெறுத்தல்சேர்ந்த பெரியோர் யாவர்க்கும். உடங்கிய - சேர்ந்த பொருளானது வெறுக்கை என்னும் பெயரையுடைத் தாயினும் பின்னைய வெறுக்கை வெறுக்கப்படுவதென்னும் பொருளை விளக்கி நின்றது. விள்ளாமை - நீங்காமை. அப்பொருளை விழைந்தாம். பொறுத்திருத்தல் தலைவியின் கடனென்று பிரிந்தவர். நாள் நிறுக்கை - வரையறுத்து நிறுத்திய நாள். இனி வெறுக்கையுள் தங்கிய எனப்பிரித்து, பொருள் மிகுதியாக வேண்டுமென்று அப்பொருள்தங்கிய அன்பையுடைய நம் சுற்றத்தார் யாவருக்கும் பொருளானது வெறுக்கப்படுவதானாலும் வெறுத்தலின்மையைச் செய்யும் காரணத்தினால் யாமும் வரைவு முற்று தற்கு ஏது அதுவாகலான் அதனை விரும்பினும் என்பாருமுளர். விள் ளாமை என்பது வெறுத்தலுக்கு எதிர்மறையாகிய வெறுத்தலின்மையை உணர்த்தி நின்றது எனினுமமையும். நீ வருந்துவதாகிய இது தக்கதன்று.

542. துறை: மென்னடைக்கால் - தென்றற்காற்று. அவர் கல்நகம் - தலைவருடைய மலை.

543. துறை: பருவம் - கார்காலம். கார்ப்பருவம் வருதற்குமுன்னே. உயிர்ப்பு அழற்றி ஓங்க. கண் சுடு திவலையை நிரப்புவது. விண்டமலர்க் கண் - விரிந்த மலர்போன்ற கண். நித்திரையொழிந்த கண் என்பார் கண் என்றொழியாது விண்ட மலர்க்கண் என்றார்.

ஆயிடைத் தோழி யழிந்தியற் பழித்தல்

காண்டலை மாற்றிக் கவலையிற் ருழ்த்திய காதலன்போல்
வேண்டலை வேண்டுமன் ஞெனெடுங் குன்றமும் வீடருநோய்
தூண்டலை மேயதன் றேசுடர்ப் பூண்முலை யாய்முழுதும்
மாண்டலை மேய்ந்த மழைப்படம் போர்த்து மறைந்ததுவே. 544

அவன்றிறம் நோக்கிக் கவன்றனள் கிளத்தல்

பெருகிய கௌவையுங் கௌவையி ஞும்பெரி துங்கமுமுற்
றுருகிய வெவ்வமு மவ்வினைக் கேத முறுநமர்தம்
திருகிய சிந்தையுந் தீதிலர்க் கச்சஞ் செறித்தனவோ
அருகியெ னெஞ்சி னலாதிருட் போது மடுக்கலரே. 545

பொய்த்தது சூளெனப் புகன்றியற் பழித்தல்

வெறுத்தியல் பல்லன மேலெவன் செய்வது வேண்டுமன்ஞய்
உறுத்திய வஞ்சினம் பொய்த்தன றேயுது தேற்றுவபோல்
நிறுத்திய கைவளை நில்லா தரள நிரைநெடுங்கண்
மறுத்திய லாநெட் டுயிர்ப்படுத் தோரை வருத்துவதே. 546

---

544. நீ தன்னைக் காணுதலையொழித்து நின்னைக் கவலையில் தங்கச் செய்த காதலன்போல் அவனது மலையும் முழுதும் மேகமாகிய படாத்தைப் போர்த்து மறைந்து நினக்கு நோய் செய்தலை மேயது. தலைவன் நின் கண்ணுக்குப் புலப்படாதவாறுபோல அவன் மலையும் அங்ஙனமாயிற்று என்று தலைவன்மலையை நோக்கி ஆற்றியிருந்த தலைவிக்குத் தோழி கூறி ஞள். வேண்டலை வேண்டும் குன்றம் - நின்ஞல் விரும்புதலை வேண்டிய மலை. அலை மேய்ந்த மழை - கடல்நீரையுண்ட கார்.

545. கௌவையும் அக்கௌவையால் நாம் அடையும் துன்பமும் அக்கௌவை துன்பமாகிய இரண்டும் நேரிட்டதை நோக்கித் துனபுறு கின்ற நம்மனேருடைய சிந்தையும் தலைவருக்கு அச்சஞ்செய்தவோ எனவே தலைவனைவன் நம்மால் தலைவிக்குப் பழிச்சொல்லும் துன்பமும் உண்டாகிறபடியாலும் கொடியராகிய வேடர் அவ்விரண்டையும் நோக்கி னராகலான் நான் செல்லின் என்னை வருத்துவராகையாலும் செல்லா மையேநன்று என்று அஞ்சியிருந்துவிட்டாஞே என்ருளென்பது. நெஞ்சி னலாது எனவே என் நெஞ்சில்மாத்திரம் பகல் இரவாகிய இரு காலத்தும் தங்கியிருக்கிருரென்ருள் என்பது. இருட்போதும் அடுக்கலர் - பகலிற் சென்ருல் வெளிப்படையாம் என்றஞ்சினும் இரவிலாவது வரக்கூடாதா? அவ்விரவிலும் வந்திலர்.

546. செய்வது வேண்டும் விஞ. பொய்த்தமையைத் தேற்றுத லாவது கைவளை கழலல் முதலியவற்றை நோக்கினமாத்திரத்தில் தலைவ ஞனவன் இன்ன நாளில் வருவேனென வரையறுத்து நிறுத்திய நாளில்

வஞ்சினங் காவல ராயினுங் காவலின்
எஞ்சலர் எமக்கென இயற்பட மொழிதல்

அழுத்தினை வேட்டுனும் பெண்டீர்வல் சியமுன் னைவுந்தம
மழுத்தினை வேட்டு வளர்ப்பன வேமதர் வாட்கணல்லாய்
முழுத்தினை மெல்லணை யூன்றிய கங்கை முடிக்களிப்போன்
இழத்திய வென்னுயிர் காவல னீடினுங் காவலனே. 547

கவினழி வுரைத்துக் காதலி யுயங்கல்

வேந்தரி னல்விடுக் கப்படு வாரை விரசுநரும்
தாந்தழு வாமை விளக்குவ போற்றணந் தாரெனவென்
மாந்தளிர் மேனி வனப்புமென் றேளின் வரிவளையும்
போந்தன போயிற் றவர்புற நெஞ்சும் புறக்கணித்தே. 548

வந்துவிடுவானேயானுல் கைவளை கழலல் முதலியன நிகழாவன்றே! அங்ஙனம் வரையறுத்த நாளில் பொய்த்து வாராதொழிந்தமையினுலன்றே கைவளைகழலல் முதலியன நிகழுகின்றன என்று அறியும்படி செய்தல். இனி, தலைவனது வாக்கானது தளர்ந்ததைத் தேற்றுவபோல் அவரால் நிறுத்தப்பட்ட வளையல் நில்லா இயலா வருத்துவது என்பாருமுளர். கண்கள் தரளநிரைபோன்ற துளியைத் தடைசெய்து பொருந்தா எனவே தடைசெயா துடைத்தாயுள்ளன என்பது. பக்கத்தில் அடுத்தோரையும் உயிர்ப்புச் சுடுவதாம் கண்களானவை தரளநிரை மறுத்து இயலமாட்டா எனவே நீரை இடைவிட்டு இடைவிட்டுத் துளிக்காமல் பொழிந்தன என்பது என்பாருமுளர்.

547. துறை: இன்ன நாளில் வருவேனெனக் கூறிய வஞ்சினத்தைக் காத்துக்கொள்ளாதவரேயானுலும் எம்மைக் காத்தலில் குறைந்திலர் என்று கூறல். பெண்டீர் - பேய். அழும் - பிணம். மழவு - சிறுபேய், சிங்கக்குட்டி. முழங்கையை மெல்லணையாக ஊன்றி உள்ளங்கையை என் மூடிக் களிப்பவன். மெல்லணை - தலையணை. முழங்கையை அணையிலூன்றி. என்னுயிரிழக்கக் காவாதிருந்தவன் காலம் நீட்டித்திருப்பினும் பின் காப்பவனே யாவான். முன்னைய காவலன் என்பதைக் கா அலன் என்றும், பின்னைய காவலன் என்பதைக் கா வல்லன் என்றும் பிரிக்க. இழத்திய - இழக்க.

548. விரசுநர் - விடுக்கப்படுவோரிடத்து நட்பாய்க் கலந்திருந்தவர்; சுற்றத்தார் எனினுமமையும். அரசனுல் தள்ளுண்டோரை ஏனையோரும் கலவார்.

போற்றுவ ரின்னே யாற்றெனக் கிளத்தல்

கரைந்தது காகங் கலைகள்வல் லாரின்று காண்பரென
வரைந்தனர் வாம்பரித் தேர்வரை வோடும் வருகின்றதே
விரைந்தது பால்கதி ருச்சியி னேடைகல் வீழ்பதத்தோ
இரைந்தது மேகங்கொ லாமென வார்ப்பொடு மெய்துவரே. 549

சொல்லிய நாளிற் புல்லுவ தின்மையின்
மெல்லியற் றலைவி யல்லன் மிக் கழிதல்

வாடுவ தேதொழி லாக்கி யெனக்கு வருவரெனப்
பாடுவ தேதொழி லாக்கி நினக்குப்பைந் தோகையன்னாய்
நீடுவ தேதொழி லாக்கித் தமக்கு நினைகலரைக்
கூடுவ தேதொழி லாவது முண்டுகொல் குன்றகத்தே. 550

வரைவிடைப் பிரிவிற்கு வாடுவ தென்னென
விரைகுழற் பாங்கி தணிவுறக் கிளத்தல்

நறுமாந் தளிரன்ன மேனிநல் லாயவர் நாகத்துநாம்
இறுமாந் திருப்பதற் கேசுரம் போதலெய்த் தேயிருந்தும்
சிறுமாந் தர்களலர் தீட்டவல் லாக்குஞ் செயனினக்கே
உறுமாந் தளிமதுச் சோலையஞ் சார லுயர்வரைக்கே. 551

549. கலைகள் வல்லார் - சோதிடர். காண்பரென வரைந்தனர் - தலைவர் இன்று வந்து உம்மைக் காண்பரென்று நிச்சயித்தனர். பால் விரைந்தது - தலைவரோடு சேரும்படியான நல்லூழும் விரைந்துவந்தது. உச்சிக்காலத்தோ பகற்பொழுது வீழ்ந்த மாலைக்காலத்தோ மேகம் இரைந்தது என்று சொல்லும்படியாக முழக்கத்தோடு தலைவர் வருவார். இரவிலாவது பகலிலாவது எய்துவர் என்பாருமுளர்.

550. எனக்காக்கி, நினக்காக்கி, தமக்காக்கி என்றியைக்க. பாடுவது - தேற்றிச் சொல்வது. தலைவரைக் கூடுந் தொழிலுமுண்டோ?

551. அவர் போதலை என இயைக்க. நினக்கே உறும். அளி மாந்த மது. நாம் இறுமாந்திருப்பதற்காகப் பொருள்கொண்டுவரப் போதலை அறிந்திருந்தும்.

வன்புறை யெதிரழிந்து துன்பொடு கிளத்தல்

அல்லா வெனப்பொரு ளார வொருவர்க் களித்திடினும்
எல்லா வதுசெய் தழிவதுண் டோவென்னி னூற்றுவது
செல்லா மையினழி கின்றேன் கனவுஞ் செறிநிறையை
நில்லா தழிப்பதென் செய்கோவிவ் வாறு நிகழ்வினைக்கே. 552

கூடுநர்ப் பெறினவர் நீடுவ தின்றெனப்
பொற்புறு தலைவியை வற்புறுத் துரைத்தல்

ஆயத் தவர்புரி யோரையெய் தாண்மனு வாங்கயர்த்த
காயத் தவரிற் கலங்குகின் றாளென்று கைதொழுது
தாயத் தவரறி யாமையிந் நோய்தலை வர்க்குரைக்கும்
மாயத் தவர்ப்பெறி னின்னே யிடும்பையை மண்ணுதுமே. 553

நீங்கினும் அவருளம் நீங்கலர் இவணென
அயிர்ப்புறு தலைவிக் கியற்பட மொழிதல்

செங்கதிர் மேரு வலம்புகு மாயினுந் தேம்பிலொளி
இங்கழன் மாட்டவிர் விபதன் றேயிறை யோனுடங்கு
தங்கல னாயினுந் தன்னுளஞ் சாரலுந் தாழ்பொழிலும்
அங்கலும் மேனிநின் னாக்கையு மாக வமைப்பவனே. 554

552. துறை: வன்புறை - வற்புறுத்தல். 'நறுமாந்தளிர்' என்னும் மேலைச் செய்யுளால் பிரிவிடைத்தேற்றுதல் செய்து தோழி வற்புறுத்திய தற்கு எதிரழிந்து. அல்லாப்பாயென்று. எல்லா - தோழி, ஏச என்னாற் சகிப்பது முடியாமையால் அழிகின்றேன்.

553. எய்தாள் கலங்குகின்றாளென்று எனது நோயைத் தலைவருக்குக் கைதொழுது உரைக்கும் மாயத்தவரை யாம் பெற்றால். சுற்றத்தார் அறியாதபடி உரைக்கும் மாயத்தவர். மாயம் - மந்திரம். ஆகாய மார்க்க மாகச் செல்லுகின்ற தேவர்கள் மந்திரத்தை மறந்துவிடுவார்களேயானால் பூமியில் விழுந்து கலங்குவர். காயத்தவரில் - ஆகாயமார்க்கமாகச் செல் லுந் தேவர்கள் போல.

554. துறை: அயிர்ப்பு - வருவாரோ வரமாட்டாரோ என்னும் ஐயம். சூரியனானவன் தான் இப்பக்கத்திலில்லாது மேருவை வலம் புரிந்து அப்பக்கத்தில் மறைந்து விடுவானேயானாலும் அச்சூரியனானவன் தன் தேஜஸை அக்கினியிடத்தில் அமைத்திடுகின்றானன்றோ! அதுபோல என்க. தன்னுளம் - தலைவனுள்ளம். தன்னுளம் ஆக எனவியைக்க. துறை: அவர் நீங்கினும் உள்ளத்தால் ஈண்டு நீங்கலர்.

குறிப்பிற் குறிப்பு நெறிப்படத் தோற்றிக்
கயற்புரை கண்ணிக் கியற்பட மொழிதல்

விழியே யுளமிரு வீர்க்குந் தெரிப்பவின் னாதவன்பின்
வழியே கலந்தனிர் முன்னரந் நீர்மை மருவியநின்
உழியேய் வருத்த முருதோ வவர்க்கு மொளிநகையாய்
அழியேல் வருத்தந் தமக்கெவ ராக வவாவுநரே. 555

வரைந்த நாண்முன் விரைந்தனர் அறிகெனத்
தாழ்குழற் றலைவிக்குத் தோழி கிளத்தல்

தாரணி தாங்குநர் தெய்வம்ப ராய்ப்பயிர் தான்வளர்ப்பக்
காரணி வாய்ப்பப் பருவமென் றேமுன் கலங்கினமால்
வாரணி பூண்முலை யாய்சொற்ற நாள்வரு முன்னரிதோ
தேரணி நாமணி யார்க்கின்ற தண்மினர் சென்றவரே. 556

மற்றொரு மாதை வரையுமோ வென்ன
அயிர்த்த தாய்க்கு நயப்புறக் கிளத்தல்

முயங்கிய மாதை முயன்றன தோண்மும்மை வையகத்தும்
மயங்கியும் வேறொரு மாதினைத் தோயுங்கொல் வாட்கணன்னாய்
தயங்கிய மாமையுண் மூழ்கிய வன்பர் தடங்கண்மலர்
உயங்கியும் வேற்றவர் மாமையுண் மூழ்குங்கொலோர்ந்திடினே.

---

555. துறை: குறிப்பினாற் குறிப்பு நெறிப்படும்படித் தோற்றி. குறிப்பு - உள்ளக்கருத்தை நோக்கத்தால் அறியும் குறிப்பறிதல் என்னும் துறை என்க. உள்ளக்கருத்தை விழியே தெரிப்ப முன்பு அன்போடு கலந்தீர். அத்தலைவர்க்கும் உறுதோ. எவர் தமக்கு வருத்தம் ஆக அவாவுவர்? ஒருவரும் அவாவார். ஆக - உண்டாக. துறை: குறிப்பிற் குறிப்பு - குறிப்பாலறியுங்குறிப்பு எனினுமமையும்.

556. துறை: வரைந்த - வரையறுத்த. தாரணி தாங்குநர் மழை பெய்யவேண்டுமென்று தெய்வத்தைப் பரவிப் பயிரை வளர்த்தற்காக, காரானது வேனிலில் அணிவாய்ப்ப அதை நோக்கி நீயும் நானும் கார்ப் பருவமென்று எண்ணி முன் கலங்கினோம். கார்காலமல்லாக் காலத்து மழைபெய்ய வேண்டின் தெய்வத்தைப் பரவுவரென்க. தாரணி நீட்டல் விகாரம். தேரிலணிந்த மணியின் நா என்க. இதோ ஆர்க்கின்றது அண் மினரென முடிக்க.

557. துறை: தலைவனவன் வேறொருபெண்ணை வரையானென்றல். நம் மாதை முயங்க முயன்றனவாகிய தலைவன் தோள்களானவை வேறொரு பெண்ணைத் தோயுமா? நம் தலைவியின் மாமையில் மூழ்கிய தலைவனது

வாய்மை கூறி வற்புறுத்தல்

தேனுங் கிழங்குந் தினைநறு மாவுநெய் தேக்கியட்ட
ஊனுங் கழியப் பெறுகதி லம்ம வுடங்குறைவு
தானுங் கருதிவந் தானயில் வேலன் றனைச்சிதைப்ப
வானுங் கருதினு மாவதுண் டோவினி வாணுதலே. 558

கடியொடு வருதல் காணுதும் வம்மெனப்
பிடிநடைத் தலைவிக்குப் பெய்வளை கிளத்தல்

நெருநற் கடிமலர்ச் சூழலி னந்துயர் நீத்துச்சென்றான்
வருநற் கடியொடு காணவம் மோமதி வாணுதலாய்
வெருநக் கடிப்பொருள் வேழமுந் தேரும் விரசிநல்லோர்
பொருநக் கடிதடஞ் சாரலி னூடுமுன் போந்தனவே. 559

பொருளிறை விடுத்தமை தெரியிழைக் குணர்த்தல்

உருட்டித் திசைதிசை யோராழி வையம் புரப்பவர்நின்
பொருட்டித் திருவரை வாழ்நரெல் லாமகிழ் பூப்பமின்னே
சிருட்டித் துறுத்தின ரோவறி யேஞ்செம்பொன் மேருகிரி
மருட்டித் தயங்கிய மாசறு செம்பொன் மலையிதுவே. 560

கண்கள் வேறொரு பெண்ணின் மாமையில் மூழ்குமா? மாமை - அழகு. முயங்கிய - முயங்க.

558. கழிய - மிக. பெறுக - தலைவன் அடைக. தனை - தலைவனை; ஈண்டுத் தலைவன் வரவை. தலைவன் வந்துவிட்டான், அவன் வரவை மாற்ற முடியாது: ஆதலால் அவனுக்கு உணவு நல்கி உடம்படுவதுவே தகுதியென உண்மைத்தன்மை சொல்லி வலியுறுத்தினாள் தோழி என்க. இனி, தலைவன் பிரிந்தமையால் உணவு முதலியவற்றை வெறுத்திருந்த தலைவியே! நீ இப்பொழுது தலைவன்வந்தமையால் அவ்வுணவைப் பெறுவாயாக என்பாருமுளர். வேலையுடைய தலைவன் வந்தான்.

559. சென்ற தலைவன் வரைவொடு வருவான். நற்கடியொடு வரும். வேழமும் தேரும் கலந்து கடிக்குரிய பொருள்களை முதுகின்கண்ணுள்ளனவாய் நமது சாரலிற் போந்தன. நல்லோரை யொப்பப் போந்தன. வெருந் - முதுகு. வெருந - முதுகின்கண்ணுள்ளனவாய். பொருந - ஒப்ப. பொருநுதல் - ஒத்தல். பொருட்சுமையால் நல்லோரைப்போல அடங்கி வந்தது.

குன்றவ ரறிவு நன்றியி னின்றென
நகுமுகத் திறைவிக் கிகுளை கிளத்தல்

காட்டத் தளவைக் கியையக் கனலி கதிப்பதுபோல்
ஈட்டத் தளவைக் கியைய வவாமிக் கெழுவதன்றே
வாட்டத் தளவைக் கியையு மருந்திலர் வஞ்சியன்னாய்
கூட்டத் தளவைக் கியைவது பொன்னெனுங் குன்றவரே. 561

விலையிடன் மாதர் முலைதனக் கின்மையின்
இல்லவர் விழைவுக் கெல்லையின் றென்றல்

அண்டத் திடைவெளி யின்றிச் செழும்பொ னடைச்சியிது
கொண்டத் திருவைக் கொடுக்கவென் றாலுங் குறையுளதே
மண்டத் திசைதொ றும் வண்புக ழீட்டும் வரதவிருட்
கண்டத் தவரைக் கருதா தவரினங் கானவர்க்கே. 562

கண்ணிய தழிய அண்ணல் நெஞ்சழிதல்

இன்னும் பொருள்சென் றிறுத்தன மேனு மிவர்விழைவு
மன்னும் பெருகுவ தன்றே யதனான் வருவதென்னே
கொன்னும் பரமனை வீராட்ட காசத்தெங் கொற்றவனை
உன்னும் புரவறி யாரினெஞ் சேயின் றுயங்குதுமே. 563

---

561. துறை: வந்தபொருள் போதுமென்றெண்ணாது மேலும்மேலும் விரும்புதலால் நம் வேடரறிவு நன்றியினிடத்து இன்றென்று கிளத்தல்; நன்றியின் இன்றென. விறகுக்குத் தக்க அக்கினிக் கதிப்பைப்போல நம் சுற்றத்தார்க்குப் பொருளளவிற்குத் தக ஆசை எழுவதல்லவா: எனவே நம் சுற்றத்தார் தலைவர் எவ்வளவு பொருள்கொண்டுவரினும் மேலும் அவ்வப்பொருளளவிற்குத் தகத்தகவே இச்சையுடையரென்பது. மணஞ் செய்யுமளவுக்குப் பொருந்துவது பொன் கொடுத்தலே என்னும் எண்ண முடைய நம் சுற்றத்தார் உன் வாட்டத்திற்குப் பொருந்தும மருந்து இல்லர். 'மருந்திலர்' என்றாள் குன்றவர் விருப்பம் வரைவு முடியா மைக்கு அதுவாயிருத்தலின். அதனால் தலைவிக்குக் காமநோய் மிகுதல் பற்றி, எரியும் நெருப்பில் விறகை மேலும் மேலுமிட அவ்வவ் விறகுக்குத் தகத்தக நெருப்புக் கதிப்பதுபோல என்க.

562. அடைச்சி - செறித்து. இது கொண்டு - இப்பொருளைக் கொண்டு. அத்திருவை - அத்தலைவியை. குறை - பொருள் போதாதென் னும் பொருட்குறை. வரத விளி. சிவபெருமானைக் கருதாதவர்போலக் குறையுளது. மண்டு அத்திசை எனப் பிரிக்க. நம் கானவர் என்க. நம் கானவர்க்குக் குறையுளது.

563. சிவனைத் தியானிக்கும் காப்பை அறியாதாரைப்போல உயங் குதும். புரவு - காத்தல். தியானித்தலைக் காப்பென்றார், தம்மை அது காத்தல் நோக்கி.

தளர்வு கண்ட விளிமொழித் தோழி
உடன்கொடு போதுங் கடன்மதித் துரைத்தல்

மன்றலை வேட்டு வருந்திய பாவை வதுவைவினை
நின்றது கேட்டலு நெட்டுயிர்த் தாளந் நிலையின்மன்னு
இன்றவ ராகத் தணந்தில மென்றெனைப் பார்த்துமுன்போற்
சென்றன ளாயநல் லார்வண்ட லாடுஞ் செயலிடத்தே. 564

அளித்தொடை மார்பற்கு வெளிப்படக் கிளத்தல்

முறுவலுங் காதன் மொழியுங் கிளரமுன் வந்திடரின்
கறுவலுங் காவலர் தம்பணி யேற்றுக் கடனறிந்து
நிறுவலுங் காணுநிற் காண்க விரைய வெனநிகழ்த்தி
மறுவலுங் காதலி புல்லிக்கொண் டாளென்னை மன்னவனே. 565

கல்லதர்க் கானஞ் செல்லரி தென்றல்

கனிச்சந் தளமுங் கமழ்பூஞ் சுனையுங் கலுழும்வெற்பின்
பனிச்சந் திரமுகத் தாய்பசு நீழல் பயின்றிருப்பாட்
கினிச்சந்த வாரழன் மேயும்வெங் கானத் தியவையென்றோ
டனிச்சந் தனையஞ்சுஞ் சீறடி பாவ லருங்குரைத்தே. 566

---

564. துறை: தலைமகனது தளர்வைக்கண்ட. இளி - இசை. பாவை உயிர்த்தாள். மணவினையானது நின்றுபோய்விட்டதைக் கேட்டாலும், தலைவியானவள் என்னை நோக்கித் தலைவர் தணந்திருக்குமாறுபோல யாம் அவரைத் தணந்திரேம் என்று சொல்லித் தலைவரோடு உடன்போவேன் என்னும் தொழில் குறிப்பாகத் தோன்றும்படி ஆயப்பண்ணையில் முன் போல் நடந்தனள் என்க. ஆயப்பண்ணையில் நடந்தனள் என்றமையால் தலைவரோடு இவ்வாறுகவே நடந்து செல்வேனென அறிவித்தாள் என்பது. மன்னு விளி. உயிர்த்த அந்த நிலையிலிருந்தே பார்த்து என்று சென்றனள் என்க.

565. துறை: தலைவி உடன்போக்குத் துணிந்த தன்மையை வெளிப் படையாகச் சொல்லல். தலைவியானவள் என்முன்வந்து யான் தவறினல் கோபித்தலையும் தலைவர் பணியை ஏற்று அதில் என்னை நிறுவுதலையும் செய்யும்படியான உன்னை யான் சீக்கிரம் காணக்கடவாய் என்று நிகழ்த்தி மறுபடியும் என்னைத் தழுவிக்கொண்டாள். இடரில் - தவறில். கொண் டாள் எனவே உடன்போக்குத் துணிந்தாளென்பது.

566. சுரத்திலுள்ள இயவையில் சீறடி பாவல் அருமையாம். இயவை - வழி. பாவல் - பரவுதல். சந்தம் - அழகு. தலைவன் கூற்று.

காான்றழ லாமைக்குக் காரணங் கிளந்திட்
டூன்றிகழ் வேலனை யுடன்படு வித்தல்

சீதப் புனலும்வெண் டிங்களுந் தென்றலுந் தீயினுநீ
போதப் புலம்பிய ஞான்றடு மேலுடன் போக்கின்மன்னு
ஏதப் பரலடுத் தோங்கத ரத்தமு மீர்ந்தடமென்
றோதப் படுவதன் றோமெய்ம்மை யாகநம் மொண்டொடிக்கே.567

பின்னென நினையலை யின்னினி நடவென
அணிதிகழ் வேலற்குத் துணிவுறக் கிளத்தல்

அருக்கனு மாரழற் றேவனு நின்னயில் வேனிளையில்
பொருக்கென வாடுவர் போலு மவர்பொங்கு கானகநீ
உருக்கிளர் மாதொடுஞ் சென்றுற் றணிந்தொழி யாமையுண்டோ
வெருக்கொள வேதின்மை கூறுவ தென்னோ விளம்பையனே.568

தேக்கமிழ் துரையவள் போக்குத் துணியக்
கற்பிது வென்ன வற்புறக் கிளத்தல்

பூணினை யோம்புந ரில்லை யுடல்கெடிற் போர்ச்சிலையின்
ஏணினை யோம்புந ரில்லை புகழ்கெடி னீர்ங்குழன்மெய்ம்
மாணினை யோம்புந ரில்லைபொல் லாங்கு வரினுரிய
நாணினை யோம்புந ரில்லைகற் போடி நலிவுறினே. 569

---

567. நீ போத - நீ பிரிய. தடம் - குளம். தலைவனே நீ பிரியத் தலைவி புலம்பியிருந்த அக்காலத்து, பனிநீரும் சந்திரனும் தென்றலும் தீயைப் பார்க்கினும் அதிகமாகச் சுடுமாறுல் சேர்ந்து உடன்போகும்போக்கின் கண்ணே சுரமும் தடாகம்போல் அவளுக்குக் குளிர்ச்சி செய்வதல்லவா?

568. துறை: பின்பு உடன்போவேமென்று எண்ணுது இப்பொழுதே உடன்போவாய் என்றல். அவர் - அச்சூரியாக்கினி. அச்சூரியன் அக்கினி ஆகிய இருவரும் தணிந்து நீங்காமையுண்டோ எனவே நீங்குதலுண்டு என்பது. ஏதின்மை - அயன்மை. போலும் ஒப்பில்போலி. ஐயனே நீ விளம்புவாயாக. அயன்மையாவது உடன்போக்குத் துணியாது தலைவியை வேறு செய்தல்.

569. அணியால் அலங்கரிக்கப்படுவதாய உடல் கெட்டுழி அந்த அணியை ஒப்புதலானும், புகழ்கெட்டுழி அப்புகழை ஈட்டுதற்கேதுவாகிய சிலையின் ஏணினை ஓம்புதலானும், தீமைபயத்தலுளதாயவழிப் பொய்யும் மெய்யாமாகலான் ஆண்டு மெய்ம்மையின் மாட்சியை ஓம்புதலானும் பெரும் பயனில்லாதவாறுபோலக் கற்பானது நீங்கிக் கெடுதலுற்றவழி நாணத்தை ஒப்புதலாற் பெரும்பயன் இன்று என்பது. நாணுடைமை கற்புக் கேதுவாயிருப்பினும், தீமைபயந்தவழி பொய்ந்நெறி மெய்ந்நெறி

போக்குத் துணிந்தனர் பூங்கழற் காலரென்
றேக்குலக் கண்ணிக் கினிதெடுத் தியம்பல்

நீக்கங் கருதின ரிவ்வரைச் சூழனின மாமையெழிற்
காக்கங் கருதின ராயத் தவரன்னை மார்க்குநனி
ஏக்கங் கருதின ரீர்ங்குழ லாயென் னையர்திணிதோட்
கூக்கங் கருதின ருக்கத்து ளூக்கங்கொ ளுத்தமரே. 570

ஆவதுபோலக் கற்புக்கு ஊனம் வந்துழி ஆண்டு நாண்விடுதல் வேண்டின் விடுதலே கற்பு நெறியாவதென்பது கருத்து. ஈண்டுக் கற்புக்கு ஊனம் வருதலாவது உடன்போக்குக்கு இசையாதிருத்தல். உடன்போக்குக்கு இசையாதிருப்பின் தமர்கள் வேற்றுத் தலைவனுக்கு மணம் செய்விப்பர். செய்விக்கவே முன்னொரு தலைவனைக் கூடிய தலைவிக்குக் கற்புக்கெடும் என்பது.

தலைவியானவள் நான் உடன்போவேனேயானால் அலர் வெளிப்படுமே யென்று நினைத்து நாணுதல் தகாதாம்; உடன் போக்குக்கு இசைந்து நாண் விடுதலே கற்புடைமையாம்; நாண் விடாதொழியின் கற்புடைமை இன்றாம் என்றறிக. ''பொய்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின்'' என்னும் திருக்குறட் கருத்தை யுள்ளடக்கி 'மெய்ம் மாணினை ஓம்புநர் இல்லை பொல்லாங்கு வரின்' என்றான்.

புகழாகிய சாத்தியத்தைப் பெறுதற்குச் சிலை சாதனமாகையால் சாதனம் கெடினன்றோ சாத்தியம் பெறமுடியாது. சாதனத்தாற் சாத்தியத்தைப் பெற்ற ஒருவன் சாத்தியம் கெட்டுழிப் பின்னர் அச்சாதன உண்மையால் மறுத்தும் சாத்தியத்தைப் பெறுவனாதலான் 'சிலையின் ஏணினை ஓம்புநர் இல்லை புகழ்கெடின்' என்றது பொருந்துமாறென்னை எனின்? ஈண்டுச் சிலையாகிய சாதனத்தால் புகழாகிய சாத்தியத்தை ஒருவன் பெற்றவிடத்து வேறுவிதத்தால் இகழ்ச்சிவராநிற்ப அந்த இகழ்ச்சி அப்புகழாகிய சாத்தியத்தை மறைத்துத் தான் மேற்பட்டுத் தோன்றும்; தோன்றவே புகழாகிய சாத்தியம் கெடும்; கெடவே சிலையாகிய சாதன மாத்திரம் ஊனமின்றி நிற்கும்; நின்ற அச்சாதனத்தால் புகழாகிய சாத்தியம் சிறந்து தோன்றமாட்டாது; மாட்டாதாகவே அச்சாதனத்தால் யாதொரு பயனும் இல்லை; அதனால் மறுத்தும் புகழ்பெறுதலில்லை, ஆகையினாலே பொருந்துமாறறிக. குழல் விளி. ஓடி - நீங்கி. ஏண் - வலிமை. சிலையின் ஏணினை - வில்லின் வலியை.

570. ஊக்கத்துள்ளே ஊக்கத்தைக் கொள்ளும் உத்தமராகிய தலைவரானவர் இவ்வரைச்சூழலை நீங்கக்கருதினார். நீங்குதலால் நின் எழில் வளர்ந்தோங்கும்படியாகக் கருதினார். உடன்போனவுடன் ஆயத்தவரும் அன்னைமாரும் தேடிப்போய் மனம் நைதலால் அவர்களுக்கு ஏக்கங்கருதினார். மீட்டுக்கொண்டு போம்பொழுது குன்றவர் போர் செயலால் தலைவர் குன்றவர்களுடைய தோளுக்கு ஊக்கங்கருதினார் என்றாள். துறை: தலைவர் போக்குத் துணிந்தாரென்று தோழி தலைவிக்குச் சொல்லல்.

செல்லுறு மேதுச் சொல்லெனக் கவறல்

ஏற்றுக் கொடியனை வீராட்ட காசத் திறையையெண்ணூர்
கூற்றுக் கிரையெனக் காலரி னேகுங் கொடுநெறிநேர்
ஆற்றுக் கடுஞ்சுரஞ் செல்வதற் கேதுவென் னுரணங்கே
பாற்றுக் கிளைபட ருங்கதிர் வேல்கொண்ட பார்த்திபனே. 571

ஏது விதுவென மாதர்க் கியம்பல்

மறையினை நாட்டியு மேதத்தி னீக்கியு மன்றல்புரி
முறையினை நாட்டின மன்றே முலைவிலை முற்றுலகும்
குறையினை நாட்டுவ தாகக் கொழுங்கயற் கண்ணியின்ப
நிறையினை நாட்ட நெடுஞ்சுரம் போக்கு நினைந்தனரே. 572

கற்பு மிக்கவள் வெற்பனொடு துணிதல்

பட்டாங் குரைத்தும் பணிமொழி யாய்படர் வெஞ்சிலைக்கைத்
தொட்டாங் கடுத்தவன் றேயெமைக் காத்தவத் தோன்றல்வழி
விட்டாங் கருத்தினை மேதகு நாணும் விளியினுமென
நட்டாங் கிருப்பினு மென்னவற் றுவன நாடிலமே 573

---

571. துறை: தலைவியானவள் உடன்போதற்குக் காரணம் என் என்றவளாய்க் கவறல். காலரின் - யமதூதரால். பார்த்திபன் செல்வதற்கு ஏது என்.

572. மறை - களவொழுக்கம். தலைவரானவர் நாட்டியும் நீக்கியும் மன்றலைப் புரியும்படியான முறையை நாம் நாட்டினமல்லவா. முலைவிலை எல்லாவுலகும்போதாது என்னுங்குறையை நாட்டுவதாக இருத்தலால் நினைந்தனர். கண்ணி விளி. உடன்போதல் கற்பாதலின் 'இன்ப நிறையினை நாட்ட' என்றாள். நிறை - கற்பு. மறையினை நாட்டியும் ஏதத்தில் நீக்கியும் - நாம் தலைவரிடத்துக் களவொழுக்கத்தை நிறுத்தியும் அதனால் அவரைத் துன்பத்தினின்று நீக்கியும்.

573. யாம் உண்மையாகக் கூறுதும் கேட்பாயாக. பட்டாங்கு - உண்மை. தொட்டு - வேழம் நேரிட்டவிடத்துப் பாணத்தைத் தொடுத்து. கருத்தினைவிட்டாம். நாணம் கெட்டால் என்? கெடாது என்னோடு நட்டு இருந்தால் என்? அவற்று ஆவன நாட்டிலம் - கருத்தும் நாணும் கெட்டதனால் வரற்பாலவற்றிற்கு அஞ்சி அவற்றை நோக்கேம். அன்றே கருத்தினை விட்டாமெனவே வேழங்காத்தபோதே அவனை இச்சித்தாமென்பது. விட்டாம் - தலைவன்பால் அனுப்பினேம். வெற்பனொடு துணிதல் - வெற்பனொடு உடன்போகத் துணிதல்.

கோற்றொடி துணிவின் வீற்றினைக் கிளத்தல்

தடையா கியமலம் வீராட்ட காசன் றவிர்ப்பவுயிர்
விடையா வருண்முந் துறுவது போன்மின் னரிசிதறிப்
படையாள் விழியின ளெம்மவர் காவலைப் பாற்றுதலும்
உடையாய் நினக்குமுன் செல்லநின் ருளுடல் வெஞ்சுரமே. 574

புல்குறிப் பொழுதே செல்குறிப் பொழுதெனல்

கச்சிப் பதிகயி லாயந் திருத்தில்லை காழிமறை
உச்சிப் பதியுங்கொள் வீராட்ட காசத் தொருமுதலை
நச்சிப் பரவு நகுபூண் மருமத்து நண்பநறு
நொச்சிப் புதுமலர் வீங்கிருள் வீழ்வன நோக்குதுமே. 575

தேம்பிடைத் தலைவியை யோம்படுத் துரைத்தல்

இருள்குடி கொண்டமெல் லோதியர் சீறினு மீன்றவளை
மருள்குடி கொண்டவக் காலம் விடாது மரீஇயழுவார்
தெருள்குடி கொண்டவிக் காலமெல் லாஞ்செல்வ சீறினுமெய்
அருள்குடி கொண்டதம் மன்பரை யன்றி யறிகலரே. 576

---

574. வீராட்டகாசன் மலத்தை நீக்கலும் உயிரானது அருளிற்கு முற்பட்டுறுமாறுபோல எம்மனோர் இல்லிற் காத்தலை நீக்கலும் தலைவி யானவள் நினக்கு முன்னுகப்புறப்படநின்றாள். தலைவனை நோக்கித் தோழி சொல்லியவாறு. விடையா - விரோதித்தலில்லாத. துறை: தலைவியின் துணிவு மிகுதியைச் சொல்லல். படையை ஆட்கொள்ளும் விழி என்க.

575. துறை: குறிப்பொழுது - அடையாளத்தையுடைய பொழுது. அடையாளம் என்றது நொச்சி பூத்தலை. மறையுச்சி - வேதசிரசு. முதலைப் பரவும் நண்ப. நடு இரவில் நொச்சி பூத்து உதிரும்; அதை நோக்குது மெனவே நடு இரவில் புறப்பட எண்ணியிருக்கின்றேமென்றாள் என்பது.

576. மருள் குடிகொண்ட இளம்பிராயமாகிய அக்காலத்தில் சிறிய பெண்களானவர்கள் தாய் சீறினுலும் அத்தாயை விடாது மருவி அழுவார். தெளிவு குடிகொண்ட யெளவன காலத்தில், தலைவனே! தம் நாயகர் சீறினுலும் அந்நாயகரையன்றி வேறொருவரை மருவி அழுதல் செய்யார் என்க. எனவே தலைவனே! தலைவியானவள் இப்பொழுது உன்னையன்றி வேறொருவரை அறியாதவளாயிருக்கிறாள் என்பது. ஓதியர் - சிறு பெண்கள். தாய் சீறினும். செல்வ விளி. தலைவனே! உன்னையன்றி அறியா ளாகையின் நீ காப்பாய் என ஓம்பப்படுத்தவாறறிக.

போதரத் துணிந்தோன் மாதர் மெல்லியலும்
வெள்ளிடைச் சுரமும் உள்ளினன் கவறல்

புரியுடைந் தாலென வாளர வங்கள் புரண்டுசெல்லும்
கரியுடைந் தோடிக் கயத்திடைச் சேற்றினுட் காலழுத்தும்
எரியுடைந் தார்க்கு மியவையிம் மாதொடு மேகுவதோ
பரியுடைந் தாவது மில்லையன் ஞேவென்ன பாதகமே. 577

குறிவயிற் கூட்டி நெறிவயிற் செலுத்தல்

ஒருமா தடிந்துய ருந்தணி காசலத் தும்பனென
வருமா தடிந்தவள் ளானனி வாழிய வானவர்தம்
பெருமான் மகளென வெம்முயிர் மாதினைப் பேணியிந்தக்
கருமா லிருள்கழி யாமுன்ன ரிவ்வரை கையகன்றே. 578

நீங்குறு தலைவிக்குப் பாங்கி கிளத்தல்

ஒற்றைப் பொலஞ்சகட் டூர்திவெய் யோனுதிக் கும்பொழுதே
கற்றைப் புரிகுழ லாய்கெளவை யாக்குநர் வாயடையா
இற்றைப் பொழுதிங் கிருந்திமை யாரிறைஞ் சுந்தணிகை
மற்றைப் பொழுதுநிற் காணுவன் சென்றுமுன் வாழியவே. 579

577. வைக்கோற்புரி உடைந்தாற்போல அரவங்கள் செல்லும் இயவை. கரியானது காலையழுத்தும் இயவை. கரி உடைதலாவது யானை வெப்பத்துக்கு அஞ்சுதல். கயம் - தடாகம். இயவை - வழி. இயவையானது ஏகத்தகுவதோ. நாம் பரிந்து உடைந்து ஆவதனுற் போந்த பயன் சிறிதுமில்லை. பரிந்து உடைந்து என்பது பரியுடைந்தென நின்றது; அது ''வரிப்புனை பந்து'' என்றுற்போலும். வைக்கோற்புரியுடைதல் புரண்டு செல்லுதற்கு உவமை.

578. வள்ளலாகிய தலைவனே நீ உம்பனென வாழக்கடவாய். இந்திரன் மகளாகிய தெய்வயானையைப்போல எம்மாதை நீ பேணி இவ்வரையினின்றும் அகன்று வாழக்கடவாய். உம்பன் - முருகன். மா - முன்னையது மாமரம், பின்னையது யானை. அகன்று வாழிய.

579. ஊர்தி - தேர். இவ்விரவில் நீ முன்னர் சென்று வாழ்வாயாக, யான் உதயகாலத்திலே நீ போனமை அறிந்து பழிச்சொற் சொல்வோருடைய வாயை அடைத்து இன்று இங்கு இருந்து மறுதினம் அங்கு வந்து உன்னைக் காண்பேன்.

வெறிமலர்த் தாரோ னெறிவயி னுய்த்தல்

செம்பஞ் சிரும்பகை யென்றணி யாதசெஞ் சீறடியும்
வம்பஞ் சியமுலைக் கேபகை யான மருங்குலுங்கூர்
அம்பஞ் சியபர லாரத ரூடழி யாதுபையக்
கொம்பஞ் சியவெழிற் கோமள மேகொண்டு செல்லியரே. 580

முன்ன மறிந்து மன்னவன் கிளத்தல்

கயவர் களுலும்வெங் கானகத் தேகடித் தொண்டகநல்
இயவர் தொடர்வதற் கேதுமஞ் சேனஞ்ச லேந்திழையாய்
வியவ ரெனத்தொடர் வுற்றுவிண் ணோரும் விரசுவரேல்
வயவ ரெனவெவ ரேயென்கை வேன்முன் வருகுநரே. 581

இயவை யினைத்தென் றயர்வு நீக்கல்

வல்லத் தொருபுடை வைகுநும் மோங்கன் மறைந்ததினிச்
செல்லத் தொடங்கிற் செறிபிணி யாளருஞ் சென்றுவல்லே
புல்லத் தொடர்ச்சி புணர்தணி காசலம் பூவையன்னாய்
மெல்லத் தொடரினும் வேலைவெய் யோன்பட மேவுதுமே. 582

---

580. சீறடியையும் மருங்குலையும் அதரூடே பையக்கொண்டு செல்லியர். முலையைத் தன்னுள்ளே அடக்கிக்கொள்ளுந் தன்மையையுடைய கச்சானது இவள் முலையை அவ்வார் அடக்கிக்கொள்ள முடியாது அஞ்சுதலின் 'வம்பஞ்சிய முலை' என்றார். கூரிய அம்பும் அஞ்சும்படியான பரலென்க; அம்பைப்போலக் கூரிய பரலென்பது. பரல் - பருக்கைக்கல். செல்லியரென்பது ஏவல்.

581. துறை: முன்னம் அறிந்து - தலைவியின் எண்ணத்தை அறிந்து. எண்ணமென்றது நம் சுற்றத்தாராகிய வேடர்கள் கொடியராகலின் பின் தொடர்ந்து யாது செய்வரோ என்று அஞ்சுதல். முன்னம் - குறிப்பு எனினுமமையும். கானகத்தில் தொண்டகமாகிய நல்ல இயத்தையுடைய வேடர் தொடர்வதற்குச் சிறிதும் யான் அஞ்சேன், நீயும் அஞ்சாதே. அக்குன்றவர்களுக்காக ஏற்றுக்கொண்டு அவர்களுடைய ஏவலராகத் தேவர்கள் தொடர்ந்துவரினும் என் கைவேலுக்கு முன்னே வீரரென்று வருகுநர் எவர்? ஒருவருமில்லை. தொண்டகம் - குறிஞ்சிப்பறை. இயம் - பறை. வியம் - ஏவல்.

582. வல்லம் - ஒரூர். வல்லமென்னுமூரின் பக்கத்தே வைகும் உம்முடைய மலை மறைந்துவிட்டது. இனி நாம் செல்லத்தொடங்கினால் தணிகாசலமாம். விரைந்து செல்லமாட்டாத பிணியாளரும் சீக்கிரம் செல்லும்படியான தணிகாசலம் என்க. எனவே சமீபித்தது என்பது. வேலை - மேல்கடல். பட - கெட. துறை: இயவை - வழி. சிலப்பதிகாரம்

திகழ்வரை காட்டி மகிழ்சிறப் பித்தல்

இக்குன் று காண்கடி காசல மீங்கெதி ரேவிளங்கும்
அக்குன் று காண்டணி காசல மீந்த வணிநதியம்
மைக்குன்றின் பாங்கர்ப் படர்வது காணெப்பின் மாட்சிகுன்றி
எக்குன் றுங் குன்றெனும் பேர்பெற வோங்கு மிளமுலையே. 583

கண்டோர் அயிர்த்தல்

செம்மைப் பதமலர் வின்மணி மோலி செறிதழும்பால்
மும்மைப் புவனத் தலைவனென் றோது முதல்வனைமா
தம்மைப் பிறப்பினு மித்தகு கானறி யாதவளே
இம்மைப் பிறப்பினென் ஞேபடர் கின்றன ரிச்சுரமே. 584

மண்டிய வன்பினைக் கண்டோர் கிளத்தல்

ஆவியுங் கண்ணுத லண்ணலுஞ் சுத்த வவத்தையிடை
மேவியங் கங்கு விராவுதல் காட்டும் வியப்பினதே
தேவியங் கண்ணல்பின் னேபல காற்செல்லுஞ் செல்வனுமக்
காவியங் கண்ணிபின் னேபல காற்செல்லுங் காதலித்தே. 585

நாடுகாண் காதை ''இடைநெறிக் கிடந்த இயவுக்கொண் மருங்கின்'' என்பதில் ''இயவு - செலவு'' என்றார்.

583. கடிகாசலம் - ஒருதலம். நதி - நந்திநந்தினி. கடிகாசலமென் பது தணிகையைச் சார்ந்துள்ளது. எந்த மலையும் உவமைமாட்சி குன்றுத லாற் குன்றெனும் பேர்பெற ஓங்கிய முலை என்க. முலையையுடைய தலைவியே. ஒப்பின்மாட்சி - உவமையின் மாண்பு.

584. ஏனைய அரசர்களுடைய முடிகள் செறிதலாலுண்டாகிய தழும் பினுல் பாதமலரானது தலைவனைத் திரிலோகத்தார்க்கும் தலைவனென்று அறிவுறுக்கும். மாதோ என்னில் கானறியாதவளாவள். பதமலரிற் செறிதலாலுண்டாகிய தழும்பானது முதல்வனைத் தலைவனென்றோதும். தழும்பால், ஆல் அசை என்பாருமுளர்.

585. சுத்தாவத்தையின்கண்ணே பசு மேற்பட்டுப் பதி தாழ்ந்தும், பதி மேற்பட்டுப் பசு தாழ்ந்தும் நிற்குமாறுபோலத் தலைவியானவள் தலைவனுக்குப் பின்னே பலதரஞ் செல்லுவாள்: அத்தலைவனுனவன் அத் தலைவிக்குப் பின்னே பலதரம் செல்லுவான். இதனுல் மண்டிய அன்பு என்னை எனின்? தலைவி முன்னேசெல்லுங்கால் தலைவனுனவன் அவளுடைய நடையழகையும் பின்னழகையுங்கண்டு காதலித்தலும், தலைவன் முன்னே செல்லுங்கால் தலைவியானவள் அவ்வாறு கண்டு காதலித்தலுமாம். அவ் வன்பு 'காதலித்தே' என்பதனுற் பெறப்படும்.

கடும்பக லடுப்பக் கண்டவர் விலக்கல்

நெருப்பா னியன்றது நீணெறி யுச்சியி னீள்கதிரோன்
உருப்பா னியன்மெல் லியதிவட் கேகலொண் ணுதிவணத்
தருப்பா லியன்ற குரம்பையல் லாற்றங்க வேறிடமில்
விருப்பா னிருந்துபின் னேகுதிர் வமமின்கள் வெய்யவரே. 586

இளமரக் காவும் அளிமலர்ப் பொய்கையும்
வளவிய சூழலின் மாதினை இருத்தல்

அடுத்தனஞ் சீபரி பூரண வோங்க லணிமையுற
விடுத்தன மாரழற் கானெமி யாய்த்தமி மேவலின்றுப்
படுத்தனம் பாய்மணி மேகலை யல்குல்பன் மாமலர்கள்
தொடுத்தனஞ்சூழ்ந்து செல்வாம்வைகுவாமிந்தச் சூழ்பொழிலே.

நடையயர் வுயிர்த்தபின் நம்பி வேளைம்
படையயர் வுயிர்க்கும் பான்மைகட் டுரைத்தல்

கண்ணேய் பரிவு கடிந்தது காததன் பின்னதன்பின்
மண்ணேய் மணநுகர் நாசிய தன்பின்னர் வார்திணிதோள்
பண்ணேய் மொழிபரி வேதும் பரிந்தன்று நாவவைதாம்
எண்ணேய் விழியி னயர்வுயிர்த் தோங்க வினியருளே. 588

---

586. நெறி நெருப்பான் இயன்றது, கதிரோன் உச்சியினின்றுருப் பான், இவட்கோ இயல் மெல்லியது, ஆகலால் ஏகல் ஒண்ணுது. அந்தத் தருவின் பகுதியாற்செய்த குரம்பையல்லாமல் தங்க வேறு இடமில்லை. வெய்யவர் - விருப்பமுடையோர். வெம்மை என்னும் பகுதி வெய்யென நின்றது. வெம்மை - விருப்பம். தருவின் பக்கத்து எனினுமாம்.

587. அணிமையுற அடுத்தனம். அழற்கான் விடுத்தனம். கூடி யிருப்பேமாகித் தனியாக மேவுதலின்றுகச் செய்தனம். தொடுத்தனம் வினையெச்சமுற்று. பின்செல்வாம்.

588. துறை: நடையயர்வுயிர்த்தல் என்பது 'அடுத்தனம்' என்னும் முற்செய்யுளால் பெறப்பட்டது. நம்பி கட்டுரைத்தல். நம்பி - தலைவன். மன்மதனுடைய ஐம்படை அயர்வுயிர்த்தலாவது அவனுடைய பஞ்ச பாணங்களும் அவனேவ ஈண்டுத் தலைவன்மேற்சென்று வருத்துதலாகிய தொழிலின் முயற்சியின்றி இருந்து இளைப்பாறுதலாம். இளைப்பாறுத லாவது தலைவனுடைய கண் முதலிய ஐம்பொறிகளும் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனையும் தலைவியிடத்துத் தலைவன் அனுபவித்துக் காமநலம் துய்க்கின்றகாலும் துய்த்ததன்காலும் பஞ்ச பாணங்களும், நினைவு பசலை உணவொழிதல் கிடை இறத்தல் ஆகிய இவ்வைந்தவத்தையும் உண்டாக்குந் தொழிலின் முயற்சியின்றி வறிதிருத் தலாம். நினைவு முதலிய ஐந்தும் மாதரொடு காமநலந்துய்த்தற்கு முன்பு

வேறு

இரந்து பாங்கியைத் தன்னரு ளேவலி னிறுவிப்
பரந்த பல்வகை யொழுக்கெலாம் பயிற்றிய பின்னர்
அரந்தை தீர்த்துடன் போந்தவ னணங்கொடிவ் வாறு
கரந்த தன்னியல் காட்டுவா னிருந்தனன் காவில். 589

நிகழ்ந்து துய்க்கின்றகாலும் துய்த்ததன்காலும் கழிதலின் இவ்வாறு கூறப்பட்டது. இவ்வாறு கழிவதனை இப்படலம் **208, 338, 339, 341, 429, 430, 491, 530, 547**-ம் செய்யுட்களால் உணர்க.

இனி வேளைம்படையாலாகிய நினைவுமுதலிய துன்பத்தை அயர் வுயிர்க்கும் பான்மையென்பாருமுளர். துன்பத்தை அயர்வுயிர்த்தலாவது தலைவனவன் ஐம்புலனையும் தலைவியிடத்துத் துய்க்கின்றகாலும் துய்த்த தன்காலும் அந்நினைவு முதலிய துன்பமின்றியிருத்தல். காது முதலிய நான்கும் விடயிக்க இனியருள் என்றதனால் துய்க்கின்றகாலும் கண்பரிவு கடிந்ததென்றதனால் துய்த்ததன்காலும் கழியும்பயன் பெற்றும். கழியும் பயன் - நினைவு முதலிய துன்பம். தலைவியே! என் கண்ணனது நின்னைக் கண்டு தானடைந்திருந்த துன்பத்தை நீங்கிற்று. அதன்பின் காது பரிந் தன்று, அதன்பின் நாசி பரிந்தன்று, அதன் பின்னர் தோள் பரிந்தன்று, நாவோ என்னில் அதுவும் காது முதலியவை போலவேயாம். ஆகலான் நின் விழியருளால் விடயிக்க அருள்வாயாக என்பது. எனவே, என் கட் பொறிமாத்திரம் நின்னைக்கண்டு இன்புற்றது, ஒழிந்த நாற்பொறியும் இன்புற்றில ஆகலான் இன்புறச்செய்வாயாக என்பது.

மொழியைக் கேட்டல் முதலியன இதுவரையுமில்லையோவெனில் இப் பொழிலில் வருவதற்கு முன்னிகழ்ந்தனவன்றி வந்ததன்பின் காண்ட லொன்று தவிர ஏனைய நிகழ்ந்தனவில்லை என்க. அவைதாம் - அவை போலவேயாம். பரிந்தன்று என்னும் ஒருமைவினைமுற்றைக் காது நாசி முதலிய அனைத்தும் தனித்தனிக் கொண்டு முடிந்து நின்றன. பரிவு பரிந் தன்று - வருத்தத்தை ஒழிந்ததன்று. ஏதும் - சிறிதும். பண்ணேய்மொழி என்பது விளி.

தலைவன் நடையயர்வுயிர்க்கப் பொழிலகம் புகுந்தவாறுபோலவே அவன் ஐம்படையாலாகிய துன்பத்தை அயர்வுயிர்க்கக் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறிதலின்கண்ணே புகுந்தானென்பாருமுளர். எவ்வாசனையையும் பூமியின் வாசனையாமென்பராகலின் 'மண்ணேய் மணம்' என்றார்.

சிலப்பதிகாரம், மனையறம்படுத்தகாதை ''விரைமலர் வாளியொடு வேனில் வீற்றிருக்கு, நிரைநிலை மாடத்தரமியமேறி'' என்பதில் ''வேனில் - ஆகுபெயரால் காமன். பகையின்றிக் கலவியொடு செல்வத்திடை நஞ் சுற்ற காமநுகர்ந்திருத்தலின் வாளியும் காமனும் வருத்தாதிருந்தமை தோன்ற வீற்றிருக்குமென்றார்'' என்று உரை செய்தார்.

589. உடன் போந்தவன் - உடன்போக்குச் செய்தவன். அணங் கொடு இருந்தனன்.

கவலைத் தோழியைச் செவிலி வினுதல்

வேறு

பொருந்தவந் தாமரைப் போதுக ணோற்பப் பொருப்பிடையாம்
பெருந்தவந் தாங்கிப் பெருதுபெற் றேந்திய பிள்ளையெங்கே
திருந்தவந் தாண்டருள் வீராட்ட காசனைச் சேரலர்போல்
வருந்தவந் தாவினை வாடினை யென்னு மயிலியலே. 590

ஆங்கெதிர் செவிலிக் கறத்தொடு நிற்றல்

அருவித் தடம்புன லாடின நீர்கொண் டவட்கரப்பத்
துருவித் தடம்புனற் றேற்றின னுங்கொரு தோன்றல்வந்திங்
குருவித் தடம்புயத் தானுருத் தோய்ந்தமைக் கொத்தபண்பால்
தருவித் தருமழை தாரணி காத்த றனக்கெளிதே. 591

---

590. அம் தாமரைப் போதுகள் பொருந்த நோற்ப - இலக்குமியைச் சுமக்கின்ற அழகிய தாமரைமலர்களானவை இவளைச் சுமத்தற்கு விரும்பித் தவஞ்செய்யாநிற்ப. நாம் பெற்றேந்திய பிள்ளை - நாம் பெருந் தவந் தாங்கி. எங்கே - யாண்டுச் சென்றாள். பிள்ளை - தலைவி. இருந்து வந்து ஆண்டருள் - தீ நெறிக்கட் சேராது நன்னெறிக்கணின்று யாவருந் திருந்தினால் உடனே எழுந்தருளிவந்தருள்கின்ற. சேரலர்போல. அம் தாவினை - அழகுகெட்டவனை.

591. துறை: தோழி அறத்தொடு நின்று சொல்லல். அறமாவது ஈண்டுப் புனலில் தோன்றிக் காத்தல். ஆடிய நீரானது, கொண்டு அவளைத் தன்னுள்ளே அமிழ்த்தி வருத்தி மறைத்துக்கொண்ட மாத்திரத்தில், ஓர் தலைவனானவன் வந்து புனலிலே தானும் இறங்கித் தோற்றி ஆபத்தை நீக்க அவளைத் தீண்டிக் கரையிலேற்றினான்; அங்ஙனம் அவன் தீண்டப்பட்டபடியினாலே அவனையன்றி வேறொருவனை நாயகனாக எண்ணாது கற்பிலே சிறந்தவளாயினாளென்றாள் என்க. தாரணியை மழை தருவித்துக் காத்தல் அவளுக்கு எளிதாயிருந்தது என்பதை ''தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை'' என்னும் குறட் கருத்துப்போல் பொருள்கொள்க. துருவி - தேடி. உருவையுடைய. தருவித்து என்னும் வினைக்குக் கருத்தா தலைவி என்றறிக. புனலில் தலைவியைத் தோற்றினனாய.

கற்புக் கேட்ட கழிமகிழ் கிளர
அற்புச் செவிலி அகன்றமைக் கழுங்கல்

வண்டலம் பாவை வரிமணற் றைத்து வளாய்ப்பயிலும்
பண்டலங் காரநம் பாவைதன் பாவைக் கெனவடுத்துக்
கண்டலம் போது கொளக்கொடுத் தார்க்குக்கைம் மாறுதவல்
விண்டலம் பாற்றவற் ருேவினி யென்னே விளம்புவதே. 592

மின்னிலை நினைஇ யின்னலிற் றுளைதல்

பன்னா ளயன்மை பயின்றே யிருந்ததும் பண்புமிகச்
சின்னா ளணிமை திகழ்ந்தே யிருந்ததுந் தீவினையேன்
முன்னா மதித்தறிந் தாற்றணி காசல முன்னலர்போல்
இன்னா நெறியு மியங்குங்கொ லோவிட் டிடைக்கிளியே. 593

---

592. துறை: கற்புக் கேட்டமை 'தருவித் தருமழை தாரணி காத்தல்' என்னும் முற்செய்யுளால் பெறப்படும். செவிலியானவள் தலைவியின் கற்புநிலையை நோக்கி, அதற்கு மகிழ்ந்து, தலைவி உடன்போனமைக்கு வருந்தினுள் என்பது. மரப்பாவையை மணலிலே தைத்து வளாவி விளையாடும் அலங்காரத்தையுடைய நமது தலைவியானவள் தன் மரப்பாவைக்காகத் தாழம்பூவை ஏற்றுக்கொள்ளக் கொடுத்த தலைவர்க்குப் பிரதியுபகாரத்தை இப்பொழுது செய்தமையால் அவ்வுபகாரத்தைத் தேவராலும் தடைசெய்ய முடியாது; எனவே தலைவி குழந்தைப்பருவத்தில் விளையாடிக் கொண்டிருக்கும்போது தலைவன் வந்து 'குழந்தாய் உன் மரப்பாவைக்கு இதனை அணிவாயாக' என்று தாழம்பூ கொடுத்ததை யௌவன காலத்திலே எண்ணிப் பிரதியுபகாரமாக உடன்போயினுள் என்பது. வண்டல் - விளையாட்டு. பயிலல் - விளையாடல். தைத்தல் - பதித்தல். பாவை முதலதும் ஈற்றதும் மரப்பாவை. நம் பாவையானவள் உதவல் என இயைக்க.

593. துறை: செவிலி கூற்று. தலைவியானவள் இரவில் பலநாள் எம்மோடு சேர்ந்து படுக்கை செய்யாமலிருந்ததினுலும் சிலநாள் சேர்ந்து படுக்கை செய்திருந்ததினுலும் பலநாள் ஒருதலைவனை நோக்கிச் செல்லுவாள் போலும் என்று முன்னமே நாம் மதித்து அறிந்திருந்தால் தலைவனேடு சேராது உடன்போக்கையும் தடுத்திருப்போம்; அங்ஙனம் ஆகவே தமக்குத் துன்பநெறி வருவது உண்டோ என்ருள் என்க. எனக்கு அயலாக இருந்ததும் சமீபமாக இருந்ததும் என்றும் துன்பஞ்செய்யும் சுரத்தில் இயங்குவளோ, இயங்காள் என்று உரைப்பாருமுளர்.

மெல்லியல் நினைஇ அல்லலிற் படிதல்

பூவிற் பயிற்றிப் புதுமலர் வார்தளிர் போதவுகும்
காவிற் பயிற்றி வளர்த்தநம் பாவைமென் கான்மலர்கள்
நாவிற் பயிற்றினு முள்ளமும் வேஞ்சுர நண்ணுபவோ
ஏவிற் பயிற்றிய தோளா னொருவற் கிசைவுகொண்டே. 594

அஞ்சுதல் நினைஇ நெஞ்சுடைந் தழுங்கல்

பார்வைப் புலியும்வன் சீயமு மற்றும் பதைப்பவெனச்
சீர்வைப் பிடத்திற் செறியா தகற்றினஞ் செல்வியந்தோ
நீர்வைப் பிடநனி நேடி யுயங்கிய நீள்சுரத்து
வார்வைப் பிறையெயிற் றேனங்கள் காணினு மாழ்குவளே. 595

பேதைமை நினைஇப் பேதுற் றழுங்கல்

குரைக்கு மருவிமத் துத்தடந் தாழி கொழுஞ்சுனைநெய்
நுரைக்கு நுரையென் றிதுகடை வாரை நுவறியெனும்
விரைக்கு நறுமலர்க் கூந்தலம் பேதைவிற் காளையென
உரைக்கு மொருவன்குற் றேவலி னெவ்வா றெழுகுவளே. 596

---

594. துறை: தலைவியின் மெல்லியலை நினைந்து. நாம் பூவிலும் காவிலும் பயிற்றி வளர்த்த காலாகிய மலர்களானவை இயைவுகொண்டு சுரத்தில் நண்ணுபவோ. பூவில் பயிற்றி - இல்லின்கண் பூவிலே பொருந்தச் செய்து. இயற்கையாகப் பூவுந்தளிரும் மிக உதிர்ந்திருக்கின்ற காவின்கண் அப்பூவிலும் தளிரிலும் பொருந்தச்செய்து. பயிற்றி முன்னைய இரண்டும் வளர்த்த என்பதனோடு இயையும். நாவின்கண் அதன்பெயரைப் பொருத்தினும் உள்ளம் வேவும்படியான சுரம் என்க. ஏ வில் - பாணத்தையுடைய வில். ஒருவனுக்கு உடன்பாடுகொண்டு. நாவிற்பயிற்றினும் வேம் சுரம், உள்ளமும் வேம் சுரம் எனத் தனித்தனி முடிக்க. உரைப்பினும் நினைப்பினும் வேவுஞ்சுரம் என்பது.

595. துறை: தலைவி அஞ்சுதலை நினைந்து. பார்வை என்பதைச் சீயத்தோடும் ஒட்டுக. உயங்க நீண்டிருக்கும்படியான சுரம். பார்வை மிருகமாவது மிருகங்களைப் பிடிப்பதற்காக வேடர்கள் பாவையாகச் செய்யப்பட்டுள்ளது. அகற்றினம் - அகற்றித் தூரத்தே வைத்தனம். செல்வி மாழ்குவள்.

596. துறை: தலைவியின் பேதைமையை நினைந்து. பேதைமையால் அருவியை மத்தாகவும், சுனையைத் தாழியாகவும், நுரையை நெய்யாகவும் திரித்துணர்ந்து அன்னையே இதனைக் கடைவாரைச் சொல்வாய் என்று கேட்குந்தன்மையயுடைய நம் தலைவி தலைவனது குற்றேவலில் எவ்வாறெழுகுவாள்.

பெற்றாட் ககற்சி யுற்றாள் கிளத்தல்

இளையனுந் தானிணை யில்லா முதியனுந் தானெனவாம்
விளையருள் வேற்கை விசாகனிற் றோழி விராவுகம்பால்
தளையவிழ் பூங்குழ லாளிளை யாடமி யாக்கிழமைக்
கிளையழ நீங்கு முதியா ளடுத்த கிழவனுக்கே. 597

உற்றா ளுரைப்பப் பெற்றா ளழுங்கல்

பிள்ளைப் பருவங் கழிந்ததின் றேமுற்றும் பேதையெனும்
தொள்ளைப் பருவந் தொடங்குவ தானது தூங்கழற்கான்
உள்ளைப் பிறனபிணித் தேகொடு போதுமென் றோதினிந்தக்
கொள்ளைப் பெருமொழி யாங்குள தின்னுங் குவலயத்தே. 598

மைவந்த கண்ணிக்குத் தெய்வம் பராவல்

முருங்கோ மெனநின்ற தானவர் மூவரை மொய்யமரில்
மருங்கோ டறுத்தவஞ் ஞான்றுவிண் ணோர்வரு பூதர்படை
ஒருங்கோ டுயத்தணித் தோய்வா ரணமுய்ப்ப லொள்ளழற்கான்
இருங்கோற் றொடிக்குந் தழலா திருப்ப விரங்குகவே. 599

---

597. துறை: பெற்றாளாகிய தாய்க்குத் தலைவியின் அகற்சியைத் தோழி கிளத்தல். உற்றாள் - தோழி. இளையனும் முதியனுமாகிய முருகனைப்போலத் தலைவியானவள் நமக்கு இளையாளாயிருக்கிறாள், அடுத்த தலைவனுக்கு முதியாளாயிருக்கிறாள் என்பது. தன்னைவிட்டுத் தனித்திராத உரிமையையுடைய சுற்றத்தார் அழும்படி நீங்கிய முதியாள். முதியாள் - யௌவனப்பருவமுடையாள்.

598. துறை: தோழி உரைப்ப. பிள்ளைப்பருவம் இன்றுதான் கழிந்தது, இனிப் பேதைப்பருவம் ஆரம்பித்தது. அழற்கானுள். உள்ளை ஐசாரியை. போதும் - போவான். தூங்கு அழல் கான் - செறிந்த அக்கினியையுடைய சுரம். சிலப்பதிகாரம் கனாத்திறமுரைத்த காதை, ''சுடுகாட்டுக் கோட்டத்துத் தூங்கிருள் சென்றாங்கு'' என்பதில், ''தூங்கிருள் - செறிந்த இருள்; யாவரும் துஞ்சும் இருளுமாம்'' என்று உரைத்தார் அடியார்க்குநல்லார் என்று அறிக. தொள்ளை - ஓட்டை; அதாவது அறிவு புறம்போயதன்மை.

599. கெடோமெனநின்ற தானவர் என்க. தானவர் மூவர் - சூரன், சிங்கன், தாரகன். பன்மனும் சூரனும் ஒருவனனவாற்றால் மூவரென்றார். மருங்கு - சுற்றம். அவ்வமரைத் தணித்தோய். கான் தழலாதிருப்ப வாரணம் உய்ப்பல். முருகனே உனக்குக் கோழியை வாங்கிவிடுவேன். இக்காலத்தும் உலகத்தார் முருகக்கடவுளுக்குக் கோழிவாங்கி விடுகிறதாகப் பிரார்த்தனை செய்துகொள்ளுதலைக் காண்க. அஞ்ஞான்று உய்ய.

கிள்ளை குழைய உள்ளங் குழைதல்

அவ்வையர் வாடின ரன்னைபின் ஞளொடு மாயநல்லார்
தவ்வைய ளாவிய வானனத் தார்தடஞ் சாரலிவ்வூர்க்
கௌவையர் வீறினர் காணில மன்னையை யென்றுகனிக்
கொவ்வைய வாய்க்கிளி கூவியென் னுள்ளங் குழைவிப்பதே. 600

நாடுறு செவிலி நற்றாய்க் குரைத்தல்

சந்திர னுனுந் தனிக்குடை வேற்கரத் தான்றேடர
இந்திர ஞால விரதமுற் றேனெறு மூறசுலவும
மந்திர ஞால மறிகடல் பாதலம் வானமற்றும
முந்திர வாமுனனா நாடுவ ரேழிநம் மொய்குழலே. 601

தமித்து வழிச்செல்வோள் நிமித்தம் நாடல்

கடப்பா ரலர்சுரங் காணுத லுண்டெனிற் கைதொழுவல்
இடப்பா லிருந்த விளங்கருங் காக்கை யெழுந்துவலம
நடப்பா யதுபுரி யாயேனன் றாகக் கரைதிகண்டாய்
தொடப்பா லனவைக ரேறு நினக்குத் தொகுக்குதுமே. 602

காதலி கூடச் சோதிடம் நாடல்

விண்ணும் வழுத்திய வீராட்ட காசன் விளங்கருளால்
எண்ணு மெழுத்து மெனவிரு கண்ணு மினிதுடையீர்
கண்ணு மெனக்குக் கருமணிப் பாவையு மாலகன்னிக்
கொண்ணு மினுமிங் குறைறவெனின் வல்லையி னோதுமினே. 603

---

600. பின்னுள் - தோழி. தவ்வை அளாவிய ஆனனம் எனவே பொலிவு இழந்த ஆனனம் என்பது. அவ்வையர் - பாட்டியர். ஆயநல்லார் அன்னை பின்னுளொடும் பொலிவிழந்த முகத்தராயிருக்கின்றார்கள். தலைவி உடன் போனுளென்று அலர்தூற்றுவோர் மிகுந்தனர்கள். தலைவி வளர்த்த கிளி யானது இவ்வாறென்று குழைந்தது என்றாள். அன்னையைக் காணிலம் - தலைவியைக் காணேம்.

601. இந்திரஞாலத்தேரிலுள்ள சூரனுனவன் சுலவித்திரிந்த ஞாலம் முதலிய எங்கும் இரவு ஆதற்கு முன்னரே யான் தலைவியைத் தேடுவல். இந்திரஞாலத்தேர் நினைக்குமுன் எவ்விடமும்போய் மீளுந்தன்மையது.

602. இதுவரை இன்னும் சுரத்தைக் கடந்திருக்கமாட்டார்கள்; யாம் அவரைக் காணுதலுண்டானுல் காக்கையே நீ வலம் நடப்பாயாக; அது புரியாயேல் கரைவாயாக. தொடப்பாலன - நீ உண்பனவற்றை.

603. துறை: உடன்போன தலைவி தம்மிடத்துவரச் சோதிட நூலுடையோரைச் சோதிடங்கேட்டல். எண் - சோதிடம். எழுத்து -

கவலை நெறியிற் சுவடு காண்டல்

கடமறி யுங்கவுட் குஞ்சரம் வென்றவக் காளையொடு
படமறி யுங்கவின் மாதுசென் ருளென்று பன்னுவதே
தொடமறி யுந்தளி ரன்னமென் காலிற் சுவடுவலம்
இடமறி யுந்தடங் காற்சுவ டுங்கொண் டியவையிதே. 604

சுவடு கண்டவள் அவலமிக் கழுங்கல்

பாகலை சொல்லி பரிபுரச் சீறடி பாவியந்தோ
மேகலை யல்குன் மிதிப்பக் கொடேன்வெவ் வழற்கதித்துப்
போகலை நீரிற் றுளும்பும்வெண் டேரைப் புகன்றுபுகன்
ருகலை யோடுஞ் சுரத்தினுங் கண்டுளை தாவியினறே. 605

இலக்கணம். ''எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு'' என்னும் திருக்குறளானும் அதற்குப் பரிமேலழகருரைத்த உரையானும், ''எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்'' என்பதனுனும் உணர்க. கருமணிப்பாவை என்பதனை ''கருவே என் கற்பகமே கண்ணே கண்ணிற்கருமணியே மணியாடுபாவாய் காவாய்'' என்பதனுல் அறிக. தலைவிக்கு இங்கு உறைவு ஒண்ணுமெனின் ஓதுமின்.

604. துறை: கவலை - நான்கு பாதை கூடுமிடம். அவ்விடத்தில் எப்பாதை வழியாகப் போனர்களோ என ஐயம நிகழுமாகலின் சுவடு காண்டல் பொருந்துமென்க. கடம் - மதம். படம் மறியும் கவின் - எழுதுபடமானது பின்னிடும்படியான அழகுடைய. இயவையாகிய இது மாது காளையொடு சென்ருளென்று கொண்டு பன்னுவது. கையால் தொடாநிற்ப வாடுகின்ற மெல்லிய காலென்க. தலைவியின் காலென்பதனைக் குறிப்பித்தற்குக் காலென்றெழியாது 'தளிரன்ன மென்கால்' என்றும், தலைவனுடைய காலென்பதனைக் குறிப்பித்தற்குக் காலென்றெழியாது 'தடங்கால்' என்றும் உரைத்தார். இயவையானது மென்காலிற் சுவட்டையும் தலைவியின் வலப்பக்கத்தினும் இடப்பக்கத்தினும் மறிந்து மறிந்து சென்றிருக்குந் தடங்காற் சுவட்டையும் கொண்டென்க. வழிச் செல்லுங்கால் தலைவனனவன் தலைவிக்கு ஓர்போது வலப்பக்கமாகவும் ஓர் போது இடப்பக்கமாகவும் சென்றிருத்தலால் இவ்வாறு கூறப்பட்டது. மாது காளையொடுசென்ருள் என்று மாதைத் தலைமையாக்கிக் கூறலால் மாதின் வலமிடமெனக் கூறப்பட்டது. சிலப்பதிகாரம் ஊர்காண் காதை, ''மன்றமுங் கவலையும் மறுகும் திரிந்து'' என்றவிடத்து ''கவலை - முடுக்கு வழிகள்'' என்ருர்.

605. தலைவி றடியானது பரந்து மேகலை அணிந்திருக்கின்றமையால் உறுத்துமென்று அஞ்சி எனது அல்குலில் மிதிப்ப முன் கொடாதிருந்தேன். சீறடி பாவி மிதிப்ப என இயைக்க. பாவி - பரந்து. பாகு அலை சொல். அழலானது கதித்துப்போகினற சுரம் என முடிக்க. அலை

வெற்றி கண்டு தெற்றென மகிழ்தல்

இவ்வாய் மடந்தையஞ் சாநிலை யாக்கி யினிதெதிர்ந்து
செவ்வான் கிடந்தொளிர் வெண்முகில் போலச்செந் நீர்புடை
துவ்வாய் மடங்கல் கிடப்ப வுரத்தூ டயின்மடுத்தோன் [சூழ்ந்
அவ்வாய் மடங்கன் முகற்படுத் தோம்பு மறுமுகனே. 606

பூம்பொழில் நோக்கித் தேம்பினள் கிளத்தல்

மரவம் பொழின்மலர்ப் பாடலங் கோங்கம்வண் பாலைதுற்றும்
குரவம் பொழில்சிறி தேநும்மிற் கண்டாங் குளிர்நிழறேன்
விரவம் புதுமலர் நல்கி விளையாட் டயரச்செயா
தரவம் படுகழ லானொடு போக்கே யமர்ந்தனிரே. 607

மலர்கொய் எயின மாதொடு வினுதல்

மிண்டுளி போழ்ந்த விரிகற் சுனைதொறு மென்புனற்கு
மண்டுளி யங்கள் வழங்கிச் சுரஞ்செலெம மாதினைத்தேன்
நுண்டுளி மாமலர் நோக்கிய நோக்கினை நோக்கினையே
கண்டுளி யேகற காதென்றி யேசொல் கருங்குயிலே. 608

நீரைப்போலத் துளும்புகின்ற வெண்டேரை. புகன்று புகன்று - விரும்பி விரும்பி. ஆ இரக்கக்குறிப்பு. தலைவியைச் சுரத்தினுங்கண்டு என் ஆவி உளதாதாயிருக்கின்றது என்னை?

606. தலைவனும் தலைவியும் உடன்போனபோது சிங்கமானது எதிர்ப்ப அதனைக்கண்டு தலைவி அஞ்ச, தலைவன் 'அஞ்சாதே' என அவள் சமீபத்திற் சென்று தேற்றிய இடத்திலுள்ள இருவர் சுவட்டையும், சிங்கத்தையும் அதனோடு பொருதல் செய்த தலைவனடிச் சுவட்டையும் நோக்கி வெற்றி கண்டு தாய் மகிழ்ந்தாள் என்க. இவ்விடத்துத் தலைவியை அஞ்சாத நிலை யாகச் செய்து எதிர்ந்து செவ்வானிற் கிடக்கும் வெண்முகில்போல இரத் தஞ் சூழ்ந்து உவ்விடத்துச் சிங்கங் கிடக்கும்படி அதன் மார்பில் வேலை எய்தோனுனவன் சிங்கமுகனைப் படுத்த முருகனேயாவான்.

607. பொழில் இரண்டும் விளி. குளிர் நிழலைக் கண்டாம். நீ மலரை நல்கி உம்மில் அவ்விருவரையும் விளையாடச்செய்து தடுக்காது உடன்போகவே விரும்பியிருந்தனிரே.

608. உளியால் போழ்ந்து செய்யப்பட்ட சுனை. உளியங்கள் - கரடி கள். வழங்கு இச்சுரத்தில், கொய்யும்பொருட்டு மலரைப்பார்த்த நோக் கத்தை உடையாய். நீ எம்மாதை நோக்கியதுண்டோ? அவளை நீ கண்ட போது செல்லல் தகாது என்று சொன்னுயோ இல்லையோ. கண்டுழி என்பது கண்டுளியென நின்றது.

கள்ளிவர் குருந்திற் புள்ளொடு புலம்பல்

கல்லிரை தேரினும் வீழ்துணை நீங்கிற் கபோதகநோய்
அல்லிரை யோத மனையது பார்ப்பை யயல்விடுத்தல்
வல்லிரை நோவ வழக்குமுண் டோவன்பன் மாதைவிடச்
சொல்லிர வாமை துணிந்தனி ரென்று சுரக்குயிலே. 609

மாவிரதியரை மேவினள் வினுதல்

வெள்ளிப் பொருப்பரு வித்திர னென்னவெள் ளென்புபொடி
அள்ளிப் பொதிந்த மருமத் தனிரய லான் றுணையே
உள்ளிப் பணைப்பெருந் தோளிசென் றுளுயங் குங்கலைகள்
துள்ளிப் பெயருஞ் சுரங்கண்ட துண்டெனிற் சொல்லுகவே. 610

துறவிய ரடுப்ப வுறுபவள் வினுதல்

உரகத்து நாடு தபுத்துவெய் யோன்கிர ணத்தொழுங்கும்
நரகத்து நாட விடர்கொளு நாமவெங் கானமங்கைக்
கரகத்து நீர்கரப் பத்தண்டு கீறக் கடத்திரர
கரகத்து நூபுரப் பாவையொ டண்ணலைக் கண்டனிரே. 611

---

609. கபோதகமே நோயல்லிரையோ? தம் மனையிலுள்ள பார்ப்பைப் பக்கத்தே விடுக்கவல்ல நும்மைத் தலைவன் தலைவியை விடும்படி அவனிடத்திலே நீர் சொல்லை இரவாமையைத் துணிந்தீர் என்று நோவ வழக்கும் உண்டோ. கபோதகம் - புறு. கல்லை உணவாக உண்டுப் உமக்குப் பெடைமேற் காம ஆசை நிகழ்வது ஆச்சரியமென்பதுபட மொழிந்தாள். புறுவையும் குயிலையும் பார்த்து உரைத்தாள் என்க. ''உயிர்த்தபொழுதே நின் குரல்'' என்பது பிரபுலிங்கலீலை.

610. பொடி - விபூதி. என்பை அருவியாகக்கொள்க. மாவிரதியர் - என்பொடு விபூதியணிபவர். அயலானது துணையையே விரும்பிச் சென்றுள். கலைமான்கள் துள்ளித்திரியும் சுரத்தில் என்க. கண்டது உண்டு எனில் - இருவரையும் பார்த்தது உண்டு எனில்.

611. சூரியனது கிரணத்தின் ஒழுங்கானது நாகலோகத்தைக் கெடுத்துக் கடந்து, அதன்கீழ் உள்ள நரகலோகத்தையும் நாடும்படி வெடிப்பைக் கொள்ளும் கானம் என்க. சூரியனது கிரணவெம்மையானும் சுரத்தின் வெம்மையானும் உம்முடைய கையிலுள்ள கமண்டலநீர் வற்றிப்போகவும் தண்டு கீறிப்போகவும் கானத்தைக் கடந்தீர். கானங் கடத்திரென வியைக்க. கடத்திர் கடக்கின்றவர்களே என விளியாக்குக. அரகர என்பது இரக்கக் குறிப்பு. சுத்து நூபுரம் - ஒலிக்கின்ற சிலம்பு. கண்டனிரே - கண்டீரோ.

நீத்தார் உலகின் நிகழ்ச்சி கூறல்

சேயிடைக் கண்டனஞ் செல்வியைச் செல்வனைத் தேமொழியாய்
போயிடைக் கண்டு பெயர்வரி தாகும் புணரியெனும்
தாயிடைக் கண்டசெந் தாமரை மாது தனைவிசும்பின்
ஆயிடைக் கண்டனர் மாதவத் தாரந்த மாயனொடே. 612

இருவர் வரவி னேசற வெய்தி
விரிமனச் செவிலி வேசற வெய்தல்

உருமின மார்த்துத் திசைதிசை பாயு மொளிப்பிழம்பாய்
வருமினல் காட்டு மழைகண்டு வேட்ட மயில்விளர்ப்பப்
பொருமின வாறு புணர்ந்தெதிர் வாரைப் புணர்ந்துசென்றோர்
திருமின ராலென்றன் றெண்ணியல் லாந்ததென் சிந்தனையே.

தெருள்கிலள் வினவ இருவருங் கிளத்தல்

செந்திரு வேசெங்கண் மாயவ னேநும்மிற் சேர்ந்தபண்பின்
முந்திரு வோர்செலக் கண்டனி ரேமொய்ம்பு ளாரையிவர்
அந்திலை வேல்வலத் தாரென்று காட்டின ரன்னைமின்னை
இந்திர னார்மக ளாமென்று காட்டின ளீங்கிவளே. 614

---

612. துறை: நீத்தார் கூறல். நீத்தார் - துறவியர். செல்வியையும் செல்வனையும் வெகுதூரத்தில் கண்டோமாகையால் நீ போய் மத்தியில் கண்டு மீளல் அரிதாகும். பாற்கடலில் இலக்குமி தோன்றியமாத்திரத்தில் உடனே அவளை மாயனோடு ஆகாயத்தில் தேவர் கண்டனர் என்பதனால் கடலில் இலக்குமி தோன்றியமாத்திரத்தில் விஷ்ணுவானவர் அதிவிரைந்து விண்ணிற் கொண்டுசென்றாராகையால் அழகின் மிக்க மாதரை ஆடவர் அவாவிக் கொண்டுசேறல் இயற்கையென்றார் என்பது. அவள் பிறத்தலால் புணரியைத் தாயென்றார்.

613. துறை: தன் தலைவியும் தலைவனும் ஈண்டு நின்றும் ஆண்டு ஓரூர்க்கு உடன் போயவாறுபோலவே ஆண்டு ஒரூரிலுள்ள வேற்றொரு தலைவனும் வேற்றொரு தலைவியும் ஈண்டு வரும்பொருட்டு உடன்போக்குத் துணிந்து எதிரே வாரா நிற்ப, இவள் கண்டு அவ்விருவர் வரவினாலே தன் தலைவி தலைவன் வரவெனக் கருதி மகிழ்ந்து, பின் சமீபத்தில் எதிர்ந்த மாத்திரத்தில் அவர்களன்மை கண்டு கவலையடைந்தாள் என்க. ஏசு அறவு - ஏசு தவறுதல், எனவே மகிழ்தல் என்பது. வேசறவு - கவலை. அம் மேகம் விளர்ப்ப. ஆர்த்துக் காட்டும் கரிய மேகம் வர அதைக்கண்டு மகிழ்ந்த மயிலானது பின் அம்மேகம் விளர்த்தமாத்திரத்தில் அதைக் கண்டு பொருமினாற்போல, கூடியெதிரும் இருவரையும் முன் கூடிப்போன இருவரும் திரும்பினர் என்று என் சிந்தை முன்னர் எண்ணி மகிழ்ந்து, பின் துன்பம் அடைந்தது என்றாள் செவிலி.

614. திருவே மாயவனே என்று எதிர்வந்த இருவரையும் விளித்தாள் என்க. உம்மைப்போலச் சேர்ந்த பண்பினையுடைய இருவர் செல்லக்

கண்ட வெல்லை கடாவக் கூறல்

வருந்தினண் மாதென மாழ்கும்வள் ளாலின்று மாறிலின்பம்
பொருந்தினம் யாமெனும் பூங்குயி லேயிங்கு போதக்கண்டீர்
பருந்தின மார்சுர நீந்தித் தணிகைப் பறம்பணிக்கண்
திருந்திய காட்சியர்க் கண்டா மினியங்குச் சேர்ந்தவரே. 615

கவலைச் செவிலியைக் கண்டவர் தெருட்டல்

நன்னீர் நறும்பழ னத்திடைப் பூத்த நளினமெனத்
தொன்னீர் மையிற்றிரி யாண்முகஞ் சீர்த்துத் துணைவனொடு
முன்னீர் மிகுந்தணி கைப்பதிக் கேகுறு மொய்குழற்கே
இந்நீர் மையினன்னை வாடுவ தெண்ண மிலாரெனவே. 616

கண்டீரோ. மொய்ம்பு - தோள். இவர் இவள் என்றது எதிர்வந்த தலைவன் தலைவியை. இவர் சென்ற மொய்ம்பராகிய தலைவரை முருகனென்று காட்டினர், இவள் தலைவியைத் தெய்வயானையென்று காட்டினள் எனவே எதிர்வந்த தலைவனானவன் தான் பிறன்மனைநோக்காத உயர்வும் தலைவியைக் கண்டதாகச் சொன்னால் தன் தலைவி வேற்றொருத்தியையும் பார்த்து இச்சிப்பான்போலுமென எண்ணி ஊடுவாளாதலால் அதற்கிடனாகச் சொல்லாத சொற்சாதுரியமும் தோன்றக் கூறினான் என்பதும், எதிர்வந்த தலைவியும் தன் தலைவன் கூறியவாறுபோலவே வேற்றொரு ஆடவரைப்பாராத தன் கற்புவலியும் சொற்சாதுரியமும்தோன்றக் கூறினாள் என்பதும் பெறப்படும். வேல்வலத்தார் - முருகக்கடவுள். கண்டனிரே எனறு கேட்ப என ஒருசொல் வருவிக்க. இவர் காட்டினர், இவள் காட்டினள் என்றார் புராணிகர். அன்னையாகிய மின்னை என்க.

615. துறை: எம் தலைவியையும் தலைவனையும் நீங்கள் பார்த்த இடம் எது எனச் செவிலியானவள் எதிர்வந்த இருவரைக் கேட்க, அவர்கள் கூறுநிற்றல். எமது தலைவியும் தலைவனும் எவ்விடத்திற் போகக் கண்டீர் என்று கேட்க என ஒருசொல்லும், காட்சியரை அணிமைக்கட்கண்டாம் இதுவரை அத்தணிகையைச் சேர்ந்தவரே ஆவர் என ஒரு சொல்லும் வருவித்துக்கொள்க. அணிக்கண் - சமீபத்தில். வள்ளால் குயிலே விளி.

616. நளினமென முகமும் சீர்த்துத் துணைவனொடும் ஏகுறும் மொய்குழலைக் குறித்தா அன்னையாகிய நீ இந்நீர்மையினால் வாடுவது? எண்ணம் இல்லாரென வாடுவது; மொய்குழற்கே வாடுவது? குழற்கே என்பதில் ஏ வினாப்பொருளில் வந்தது. முந்நீர் - ஆற்றுநீர் முதலிய மூன்று நீர். எண்ணமிலாரென வாடுவது என்பதற்கு எண்ணம் நீங்கிச் செயலற்றவரைப் போல எனப் பொருள்கொள்க. பழயகுணந் திரியாளாகி.

ஒண்டொடிச் செவிலியைக் கண்டவர் மீட்டல்

ஊளைப் பெருநரி வெளவிய வூனை யுறவெறிந்து
வீளைப் பருந்துணும் வெஞ்சுர நண்பகன் மேவினன்றய்
பூளைப் பழமலர் தீயினிட் டாங்கடி பொன்றுமவர்
வாளைப் பழனஞ்சென் றூர்பய னில்லை வருந்தினுமே. 617

வேட்ட உள்ளம் மீட்டவண் மீட்டல்

சிவனத்த னீன்றருள் சேயையுன் றரென்னத் தேம்புளமே
புவனத்தின் யாப்பெவ ரேதடுப் பார்நம் புனக்கிளியை
அவனத்த நீந்தி யழகார் தணிகை யடுத்துவிட்டான்
பவனத்தின் வேகங்கொண் டேடடர்ந் தாலும் பயனில்லையே. 618

சேணிடை அகற்சி செவிலிதாய்க் குணர்த்தல்

மணிகா சலமரு மல்குனல் லாய்நின் வளர்முலைகட்
கணிகா சலமத னம்புகள் பாறவென் றுதரவின்
கணிகா சலமெனக் கற்றவர் வைகுங் கவினடுத்த
தணிகா சலங்கொண்டு சார்ந்தனன் றேழிநந் தையலையே. 619

---

617. நரிவெளவிய ஊனைப் பருந்தானது அந்நரியை எறிந்து வெளவி உண்ணும் சுரத்தில், செவிலியே நீ மேவினல் தீயில் பூளைமலரை இட்டாற் போல உன்னுடைய அடிகள் பொன்றும். அவ்விருவரும் சுரத்தைக் கடந்து மருதத்தை அடைந்தார்களாகலான் நீ வருந்தினும் பயனில்லையாம். வீளை - ஒலி.

618. துறை: தலைவியைக் கொண்டுவரவேண்டும் என்று விரும்பிச் சென்ற உள்ளத்தை மறுபடி அச்செவிலியானவள் தன்வசத்துத் திருப்பிக் கொள்ளல். மீட்டு அவள் - மறுபடி அவள். உளமே விளி. அத்தம் - சுரம். நம் கிளியைத் தணிகையை அடுத்துச் சேர்த்தான். கிளியை விட்டான். தலைவனைவன் புவனத்தின் யாப்பாகிய காமம் காரணமாக அடுத்து விட்டானகையால் புவனத்தின் யாப்பை எவர் தடுப்பார் என்றான்.

619. துறை: இருவரும் சேணிடை அகன்றமையைச் செவிலியான வள் திரும்பிவந்து நற்றாய்க்குச் சொல்லல். தோழி விளி. மணியும் காசும் அலமரும் அல்குலையுடைய பெண்ணே! நின் முலையின்கண், என்மேல் மன்மதன் செலுத்தும் பாணங்கள் மாறும்படி அலங்கரிக்கட்டுமா என்று நம் தலைவியைத் தலைவன் மகிழ்ந்து சொல்லி அவளை ஆதரவினுற்கொண்டு சென்றான் என்றாள் என்க. அணிகா - அணியட்டுமா; அணிகு - அணிவேன்.

வற்று விழைவின் நற்றாய் கிளத்தல்

இணங்குவ தின்றி வளர்முலை யாளெழில் காணவென்கண்
அணங்குவ தாயிழை மென்மொழி கேட்ப வகஞ்செவிகள்
பிணங்குவ பேதையை யாரத் தழுவிப் பெயர்த்தெடுப்ப
உணங்குவ தோளினி யென்செய லாவ தொளிநுதலே. 620

வேறு

தாயு மாயமுந் தளர்வுறத் தளர்ந்தழுஞ் செவிலி
காயும் வெஞ்சுர நேடினள் காணலண் மீள
ஆயு ளத்தெழு மல்லலை யறிந்துதன் னையர்கள்
ஏயி ருப்பதே யெழுகநம் மினமெலா மென்றார். 621

வில்லெ டுத்தனர் வாளிக டெரிந்தனர் வீரச்
சொல்லெ டுத்தன ரினமெலாந் துவன்றினர் சூழக்
கல்லெ டுத்ததங் குடியுளார் பெயர்தெரி கானம்
பல்லெ டுத்தபேய் தொடர்தரப் பரந்தனர் படர்ந்தார். 622

---

620. காண என் கண் அணங்குவதாகும். அணங்குவது - துன்ப மடைவது. அவளுடைய மொழியைக் கேட்டற்கு எனது அகஞ்செவிக ளானவை நான் கேட்பேன் நீ கேட்கலாகாது எனத் தனித்தனி ஒன்றோ டொன்று பிணங்குவனவாம். எடுக்கத் தோள்கள் உணங்குவனவாம். தோள் - கை. இணங்குவது இன்றி வளர் முலையாள் - ஒன்றோடொன்று அபேதமாகச் சேர்வது தவிர்ந்து கூடியவரை நெருங்கி வளரும் முலையினை உடையாள். இனி ஒன்றுக்கொன்று அடங்குவதின்றி வளருமுலை என்பாரு முளர்.

621. ஆயம் என்றது தோழியர்கள், சிலதியர்கள். சிலதியர் - ஏவல் மகளிர். சிலப்பதிகாரம் ஊர்காண்காதை ''செம்பொன் வள்ளத்துச் சிலதியர் ஏந்திய'' என்பதில் ''சிலதியர் - ஏவன்மகளிர்'' என்றுரைத்தார் அடியார்க்குநல்லார். ஆய் உளத்து - தாயினுள்ளத்து. தன்னையர்கள் - வேடர்கள். ஏ என்பது இகழ்ச்சிக்குறிப்பு.

622. கானத்திற் பரந்து படர்ந்தார். போர்க்களமுள்ள கானமென் றறிக. வேடருடைய குடியிலுள்ள முன்னோர்கள் போர்க்களத்தில் யுத்தஞ் செய்து இறந்தவுடனே அப்போர்க்களத்திலே கல்லை நாட்டி அக்கல்லில் அவர் பெயர் பொறித்திருத்தல் காணப்படுதலால் 'கல்லெடுத்த தங்குடி யுளார் பெயர் தெரி கானம்' என்றார். கல்லெடுத்த கானம். போர்க் களத்தில் நிணம் தின்னலாமெனக் கருதிப் பேய்தொடர என்க.

குவட்டுத் தாரையுங் குன்றிடை முடுக்கருங் கரிந்த
கவட்டுச் சோலைய கானமுங் கைபரந் தெழுவோர்
சுவட்டுத் தாரியிற் றொடர்ந்தனர் சூழ்பொழி லமிழ்தம்
சவட்டுத் தேமொழி தனைத்தனிக் காளைபாற் கண்டார். 623

பொங்கு மாகடல் வளைந்தெனப் புறக்கொடை யொழிய
எங்கும் வாங்கினர் வாங்கின ரிடம்படு வார்வில்
புங்க வார்கணை பூட்டினர் காளைமேற் பொழிந்தார்
அங்கண் மாதரா ளஞ்சின ளழுங்கினள் வெயர்த்தாள். 624

ஆன்ற லைப்பொடித் தெழுமருப் பஞ்சுமே வேங்கை
கான்ற லைப்பொடித் தெழுங்குழல் கவலல்கா ணென்றுத்
தேன்ற லைப்பொடித் தொழுகிய தீம்பொழிற் கள்வன்
ஊன்ற லைப்பொடித் தொளிர்குரு குறவுளம் வைத்தான். 625

முறஞ்செ விப்பெரு வாரணத் திளையவன் முன்னர்ப்
புறஞ்சி றைச்சிறு வாரணப் புள்ளெழுந் தார்ப்ப
அறஞ்செ யப்பெறும் பாவங்க ளழிந்தென வாங்கே
மறஞ்செ யப்புகுந் தாரெலா மறிந்துவீழ்ந் துலந்தார். 626

புள்ள டுத்தது மார்த்ததும் புளிஞர்க ளாவி
விள்ள டுத்ததும் விம்மிதம் விளைப்பமெல் லியலாள்
உள்ள டுத்தபே ரோகைய ளொளிமுக மலர்ந்தாள்
தெள்ள டுத்திலள் கணவனுர் திருவிளை யாட்டில். 627

---

623. தாரை - வழி. தாரி - வழி. தலைவியின் சுவட்டை நோக்கி அது உள்ள வழியில் தொடர்ந்தனர். பொழிலிற் கண்டார்.

624. புறங்கொடுத்தலின்றி எங்கும் வளைந்தனராய் வில்லை வளைத்தார்.

625. பசுவின் தலையிலுண்டாகி எழுங்கொம்புக்கு வேங்கை அஞ்சுமா. கான் - வாசனை. குழல் விளி. குருகு - தன் கொடியிலுள்ள கோழி. ஊன் தலையில் உண்டாகியெழும் புள். அது கோழியின் தலையில் சிவந்து சிகையாயுள்ளது.

626. வாரணத்துக்கு இளையவன் முன்னே. வாரணம் - விநாயகர்.

627. ஆவி விள்ளும்படி அடுத்ததும். விள்ளல் - கெடுதல். திருவிளையாட்டில் தெளிவு அடுத்திலள் என்றுர்; இத்திறத்தால் முருகனென்று இன்னும் யூகித்தறியாமை நோக்கி.

களித்த மாதராள் கதிர்முக நோக்கியக் கள்வன்
சுளித்து மேல்வருந் தொடுகழல் வேடர்தம் மாவி
விளித்து வீழ்த்தின மேவுதுந் தணிகையங் குன்று
தளித்த தேந்தொடைத் தாழ்குழா லெனவுட னெழுந்தாள். 628

ஆய வேலையி லன்றவ ளழுகெலாந் தெரித்துத்
தூய சீபரி பூரணத் தொல்வரை நோற்றல்
மேய நாரத மெய்த்தவன் விளைவெலா மோர்ந்து
மாய வேட்டுவக் குமரன்முன் வல்விரைந் தடுத்தான். 629

வலம்பு ரிந்தனன் வணங்கினன் வழுத்தின னின்றுன்
புலம்பு ரிந்தருள் புள்ளுவன் புன்னகை முகிழ்த்தான்
நலம்பு ரிந்தவேட் டுவக்குல நங்கையுண் மருண்டாள்
நிலம்பு ரிந்தமா தவமனை யவட்கவ ணிகழ்த்தும். 630

தணிகை நாயகன் றாரணி நாயக னவுணர்த்
துணிகை நாயகன் றெருகுவரை நாயகன் றாயோர்
பணியு நாயகன் பனிவிசும் பிறைமகட் கலங்கல்
அணியு நாயக னமரர்க ணாயக னமலன். 631

பங்க யற்கருஞ் சிறைபணித் தருளிய பாலன்
செங்க ணற்கடற் றிகிரியு மளித்தருள் செல்வன்
அங்க ணற்கொரு மொழிப்பொரு ளருளிய வறிவன்
இங்க ணற்கரு வேடனென் றெளிவருந் தலைவன். 632

பண்டு நீபுரி பெருந்தவப் பயத்தினு லன்னை
அண்டர் நாயகன் பற்பல வாடன்முன் காட்டிக்
கொண்டு நீங்கின னென்றுகை கூப்பினன் பழிச்சி
மண்டி மாய்ந்தவ ருயிர்பெற வள்ளலை யிரந்தான். 633

---

630. நாரதன் வேடனை வணங்கலும் இவளுக்கு ஐயம் நிகழ்ந்தது. அவன் - நாரதன்.

631. துணிகை -' துணித்தல்.

632. இங்கண். அல் கரு வேடன் - அல்போலும் கரியவேடன்.

633. அன்னை விளி. காட்டி. உன்னைக் கொண்டுவந்தான். பழிச்சிக் கூப்பினன்.

எழுக வென்றுதன் னியலுருத் தோற்றின னிறைவன்
தொழுது நாயக தொன்றெலா முஞற்றிய பிழைகள்
முழுது நின்பணி யாக்கென மொய்குழன் மகிழ்ந்தாள்
பழுது தீர்ந்தெழு வேடரும பணிந்தனர் மொழிவார். 634

காக்கும் வேலியே பயிரினை மேய்வது கருதின்
ஆக்க வேறொரு காப்புமுண் டேநின தருளால்
தேக்கும் வண்புகழ்ச் சிறுகுடி மரபினை நீயே
தாக்கும் புன்மொழி வளர்ப்பது தக்கதோ வன்றே. 635

அருள தாய்விடி னடியரேஞ் செய்வதெ னினியோர்
கருமம் வேண்டுவ துளததுவென் னெனிற் கமலத்
திருவின் மேலவ டன்னையாஞ் செழும்புனல் வாக்கித்
தருத லெம்பிரான் றனிமணம் புரிவதென் றிசைத்தார். 636

களவிற் பின்வரு மன்றலுங் காட்டுது மென்றே
களவிற் பல்வகை யொழுக்கெலாங் காட்டிய கள்வன்
அளவிற் கெல்லையி லானஃ தவர்க்கியைந் தான்போல்
வளவிற் குன்றவர் மகிழ்கொளக் குறுநகை வழங்கி. 637

இம்பர் முற்றினி ரெனைவிரு மிவள்வள ரோங்கல்
அம்பர் முற்றின ரனைவரும் வம்மின்கள் விசும்பின்
உம்பர் முற்றிய தவத்தின ரனைவரு மொருங்க
உம்பர் முற்றிகழ் தணிகையிற் புரிதுமென் றுரைத்து. 638

வள்ளி நாயகி யுடன்வர மயூரமேல் கொண்டு
துள்ளி வாளைக டுதைதலிற் றூங்குதெங் கிளநீர்
அள்ளி வார்திரை நித்தில மடைதரச் சிந்தும்
பள்ளி நீர்ப்பணை யுடுத்தவப் பருப்பதஞ் சார்ந்தான். 639

---

634. வேடுரு நீங்கி இயற்கையுருத் தோற்றினன். ஆக்கென்று மகிழ்ந்தாள்.

635. உண்டே வினா. புன்மொழி - உடன் கொண்டு போதலாற் கூறும் பழிமொழி.

636. வாக்குத் தருதலும் புரிவதுமாம் என்றிசைத்தார்.

637. களவுப் புணர்ச்சிக்குப் பின் வரும் மன்றல் என்பது விதிப்படிச் செய்யும் மணத்தை.

639. பள்ளி - இடம். திரையானது முத்தையள்ளிக் கரையிலடையத் தெங்கானது இளநீரைச் சிந்தும் பணை. இளநீர் நீர்ப்பணையில் வீழ்தலால் அலை உண்டாகிறதென்க.

இலக்கத் தொன்பதின் மர்களெனு மிளையரு மிகலே
இலக்கத் தெண்ணுரு வெறுழ்ப்படைத் தலைவரும் பகைஞர்
விலக்கத் தண்முரு விறற்கணப் படைஞரு மெவரும்
நலக்கத் துன்றினர் நாயகன் கழலிணை தாழ்ந்தார். 640

அருட்க டைக்கணு லவரவர்க் கமைவர நோக்கி
உருக்கி ளர்ந்தகோ புரமணி வாய்தலுட் புக்குத்
திருக்கி ளர்ந்தபொற் கோயிலுட் சென்றனன் செல்வன்
வெருக்கி ளர்ந்தமான் விழிபொரும் விழியவ ளோடும். 641

வேங்கை யானதும் விருத்தனுய்த் தொடர்ந்ததும் வேழம்
ஆங்க ழைத்தது மாகிய விம்மித மெல்லாம்
பூங்க ணுயிவட் போதர வன்றுகொ லென்னு
ஓங்க ணுயக னளவளா யுடங்குவீற் றிருந்தான். 642

அரண மாகிய பிரணவப் பொருணக ரடுக்கல்
முரண வாவிய முரிசிலை வேடர்தங் கொடியை
இரண வேலினன் களவுகொண் டெய்திய துரைத்தாம்
கரண மோடவன் கடியயர்ந் தமையினிக் கரைவாம். 643

களவுப்படலம் முற்றிற்று
ஆகச்செய்யுள்—2773.

---

640. பகைவரை லட்சியப்படுத்தாத வலிய படைத்தலைவரும், பகைஞர்கள் அஞ்சி முதுகுபுறங்காட்டி விலகியோடுங்காலத்து அவரோடு போர்செய்ய அண்முறுத வீரத்தையுடைய கணவீரரும்.

641. வெருக்கிளர்ந்த விழியவள் - கண்டோர் அஞ்சும்படியான கண்ணவள்.

642. விம்மிதமெல்லாஞ் செய்தது பூங்கண்ணுய் நீ ஈண்டு வர வல்லவா வென, பூங்கண்ணுய் - பூப்போலும் கண்ணையுடையவளே. சிலப்பதிகாரம் அடைக்கலக்காதை, ''புறஞ்சிறை மூதூர்ப் பூங்க ணியக்கிக்கு'' என்பதில் ''பூப்போலுங் கண்ணையுடைய இயக்கிக்கு'' என்றுரைத்தார் அடியார்க்கு நல்லார்.

643. அரணம் காவலெனக் கொள்ளுதலன்றி ஆரணம் என்பது குறுகியதாகக் கொள்ளலுமொன்று. பிரணவப்பொருணகராகிய தணிகையடுக்கலை எய்தியதை உரைத்தாம். கரணம் - மணவினைக்குரிய உபகரணங்கள்.

வள்ளிநாயகி திருமணப்படலம்

காக்குங் கடவுள் கரந்து சிலம்பனுய்
வாக்குங் கரக மணிநீர் கரத்தேற்றுப்
பூக்கும் பொலங்கொம் பனையாட் கருளின்பம்
தேக்குந் தணிகைச் சிலம்பற் றெழுப்பெற்றேன்
சீந்தும் வினையுஞ் செருக்கும் விடைகொண்ட
ஏந்த லறிவி னெனதறிவு மாய்ந்ததே. 1

வேறு

திருவிளங்குந் தணிகைவரை வீற்றிருக்குஞ்
சேயிலைவேற் செவ்வேள் சென்று
மருவிளங்கு மணிக்கூந்தற் கானவர்தங்
குலக்கொடியை வெளவி மீண்ட
துருவிளங்குங் கயிலாயத் திறையவனுர்
மதித்தருளி யுமையா ளோடும்
குருவிளங்குங் குமாரலிங்கத் திடைநின்று
மாங்குவெளிக் கொண்டா ரன்றே. 2

பூதகணம் புடைசூழப் பொழிகதிர்ப்பன்
மணித்தவிசிற் பூவை யோடும்
சோதிமணி மண்டபத்திற் றந்தையார்
வீற்றிருப்பச் சுடர்வே னம்பி
காதலின்வல் விரைந்தடுத்துக் கழல்பணிய
வணைத்திருவிக் கருணை கூர்ந்து
சீதமதி நகைமுகிழ்த்துத் திருமணங்கா
ணுதற்கிங்குச் சென்று மென்றுர். 3

உருகியசிந் தையினேடும் பெருங்கருணைத்
திறநோக்கி யுரையா டாது
பருகுகளி வண்டெனப்பன் னிருபுயத்தோன்
இருந்திடலும் பணிந்து போற்றி

---

1. சீந்தும் - கோபிக்கின்ற. வினையும் செருக்கும் விடைகொண்டன.

அருகிருந்த வீணைநரம் புளர்கரத்தோன்
அடியேங்க ளுய்யு மாற்றால்
பெருகுமகிழ்ச் சியின்மன்றல் கடனன்றோ
பிஞ்ஞகற்குப் பிறக்க லென்றான். 4

நிகழ்கின்ற விம்மாசித் திங்கள்வரு
பூசத்தி னிகழ மன்றல்
திகழ்கின்ற பலவினையு முயறியெனத்
தினைப்புனத்துச் செல்வி முன்மண்
அகழ்கின்ற நெட்டுயிர்ப்புத் துளைக்கைமுழு
மாவென்ன வடுத்தெல் லோரும்
புகழ்கின்ற மகனாரை வியங்கொண்டார்
அருள்சுரந்து பூத நாதர். 5

தரைகுழிக்கும் புழைத்தடக்கைத் தலைமைந்த
னருள்கொண்டு சார்ந்தோர் பாங்கர்
வரைகிழிக்கும் படையாளை முகநோக்கிக்
கந்தகிரி வரைப்பின் வைகும்
விரைகொழிக்கு மலர்க்கூந்தன் மெல்லியலை
வருத்தியென விளம்பித் தெய்வ
உரைகொழிக்கு முடங்கறச திசையினுஞ்சென்
றுறக்கணத்தை யுறுத்துப் பின்னர். 6

கடியயர்மண் டபநிருமித் திடுதியெனக்
கடவுளர்தச் சனைக்கூஉ யேவிக்
கொடிதுவன்று நகரறியக் குணின்முரசி
னெருக்கிமணங் கூறு கென்றாத்
தொடிபொலிந்த மணித்தடக்கை வள்ளுவனை
வியவரினாற் றாண்டி விண்ணோர்
முடிதுளக்க வவரவர்க்குத் தக்கபணி
விடைமுறையி னிறுவி னானால். 7

4. மன்றல் பிறக்கல் கடனன்றோ.

5. விநாயகரை ஏவல்கொண்டார்.

6. விநாயகர் முருகவேளைநோக்கித் தெய்வயானையை வருவிப்பாய் என்று உறுத்து. சுவாசத்தால் தரைகிழிக்குந் துதிக்கை என்க.

7. எருக்கி - அடித்து.

வேறு

மூத்தவ னருளிய மொழியுட் கொண்டுகல்
சீத்தவை வேலினுன் றெய்வ யானையைப்
போத்தனுங் கிவ்வரைப் போந்து தம்மென
ஏத்துயர் வீரனை யேவி வைகினுன். 8

கடவிய விபமுகன் கருணை தாங்குபு
தடவிய கடவுளர் தச்சன் மாமயில்
நடவிய நாயக னல்வி னைக்குறும்
இடவிய மண்டப மிழைக்க முன்னினுன். 9

ஐம்பெரும் பூதமு மடைவி னின்றெனப்
பைம்பொனின் வச்சிரம் பதித்து மேலிடும்
செம்பவ ளத்தின்மேற் செறித்த நீன்மணி
உம்பர்வெண் பளிங்கொளிர் குறடு ஞற்றினுன். 10

ஆயிரந் தூண்வயி டூரி யத்தமைத்
தேயகோ மேதகத் திணக்கிப் போதிகை
பாயவுத் திரங்கள்புட் பராகத் தாக்குபு
மீயுயர் முகடுமா ணிக்கம் வேய்ந்தனன். 11

மரகதக் கொடுங்கைசுற் றமைய வைத்தனன
தரளமக் கொடுங்கையிற் ருழ நாற்றினன
இரசத யாளிபாங் கிருவித் தேங்கொளி
பரவுபன் மணியசோ பானம் பாய்த்தினுன். 12

பாற்கடற் பரப்பெலாம் பைம்பொற் ருமரைப்
பூக்களு லிற்றெனப் பொற்ப நாப்பணே
தேக்கொளித் தவிசுவேற் செம்மற் கிட்டயல்
ஆக்கினன் றவிசவ ரவர்கட் கேற்பவே. 13

---

8. இந்திரன் மகளாகிய தெய்வயானையை. போத்து அனுங்கு. வீர வாகுவை. இவ்வரையினின்றும்.

10. ஐம்பூதங்களும் ஐந்து நிறமுடையனவாகலால் அவற்றைக் கூறினுர். பொன்னின்மீது வச்சிரம் பதித்து. நீன்மணி உம்பர் - நீலமணியின்மேல்.

11. போதிகையைக் கோமேதகத்தால் இணக்கி. முகட்டை மாணிக்கத்தால் வேய்ந்தனன்.

கண்ணடி யெனத்திகழ் காமர் வேதிகை
ஒண்ணிறம் பலதொகுத் தொளிரு மண்டிலம்
வண்ணமே கலைபுறம் வயங்கு குண்டமும்
எண்ணின னியற்றின னிறைவ னூன்முறை. 14

இந்துகாந் தக்கலி னிழைத்துப் பித்திகை
அந்தவார் சுவர்த்தல மடங்க வோவியப்
பந்திமா மணிகளிற் பயிற்றிப் பாவைகள்
வந்துலாய்ப் பெயர்தர வயின்றொ ருக்கினன். 15

உண்டுகொ லில்லைகொ லென்ன வும்பரும்
நுண்டொழி லுருப்பல நோக்குந் தூண்டொறும்
வெண்டுகில் வாருறை வீக்கிக் கம்பலம்
வண்டல மருத்துகண் மாற விட்டனன். 16

விடுகதிர்ப் பன்மணி வேறு கோத்தகாழ்
படுகவின் முறைமையிற் பரந்த வுள்ளெலாம்
நெடுகவும் விலங்கவு நிரைத்துப் பல்கனி
கடிமலர் கவரிகண் ணடியுந் தூக்கினன். 17

பாங்கெலாம் பசுநெடும் பந்த ரிட்டதின்
ஓங்கிய தூண்டொறு மொலிந்த பூகதம்
தாங்குதாற் றரம்பைகள் சுவைக்க ரும்புவிண்
தாங்குமைந் தருக்களுந் ததைய யாத்தனன். 18

---

14. வேதிகையும் மண்டிலமும் மேகலையும் குண்டத்திற்கு அங்கமென்றறிக. மண்டிலம் என்பது வட்டம்.

15. பித்திகை இழைத்து. பித்திகை - சுவர். அடங்க - முழுவதும்.

16. உம்பரிடத்தும் உண்டோ இன்றோ என்னும்படி நுண்தொழிலையுடைய பல உருவப் பொருள்களை நோக்கும்படியான தூண். வண் தலத்தில் துகள் மாறும்படிக் கம்பலம் இட்டனன். பூந்தாது என்பார் துகள் என்றது மருத்துகள் என்றூர்.

17. காழை நிரைத்து. காழ்கள் ஒன்றோடொன்று நெடுகியிருக்கவும் விலகியிருக்கவும் நிரைத்து.

18. ஒலிந்த - தழைத்த. சிலப்பதிகாரம் பதிகம் ''வாரொலி கூந்தல் நின் மணமகன்றனை - நீண்டு செறிந்ததோர் கூந்தலையுடையாய். ஒலி - தழைத்தல்'' என்றிருத்தல் காண்க. ''வாரொலி கூந்தற் பேரிற் கிழத்தி'' என்றூர் அச்சிலப்பதிகாரம் மனையறம்படுத்தகாதையினும்.

தேசிகப் பட்டினுற் செம்பொற் ருரினுல்
யோசனை கமழ்கடி யுயிர்க்கும் போதினுல்
வாசமென் கொழுந்தினுன் மருத்த வேரினுல்
வீசொளி மணிகளால் விதானித் தானரோ. 19

வித்துரு மத்தினுல் விதான முற்றுநீஇ
நித்தில வெண்மண னிரந்த ரிப்பியாப்
பைத்தநீ ரருவிமேற் பாய்த்திப் போக்குபு
தொத்துயிர் மலர்களும் விரையுந் தூவினுன். 20

பனியென நறும்புனல் பந்திற் றூவுவ
நனிவளி விசிறியி னடந்து வீசுவ
கனிமுத லுதவுவ காமர் பாவைகள்
அனிதம்விண் ணவர்களு மயிர்ப்ப வாக்கினுன். 21

பந்தர்பைங் காரெனப் பசும்பொற் ருர்கணுன்
றந்தினின் றசைவன வலங்கு மின்னெனக்
கொந்தொளிப் பன்மணிக் கோவைத் தோரணம்
இந்திர வில்லென விலங்க யாத்தனன். 22

உற்பல வோடைக ளுளூற் றும் பந்தர்பால்
பற்பல விம்மிதம் பயிற்றி யாக்கினன்
கற்பகச் சோலையுங் காமர் வல்லியும்
பொற்புற வவற்றயல் பூப்ப வாக்கினுன். 23

சலமென நிலனிடைச் சார்ந்து நாணவும்
நிலனெனப் புனலினை நேர்ந்து நாணவும்
சிலையென விவர்ந்தவல் சேர்ந்து நாணவும்
பலபல விம்மிதம் பாங்க ரீட்டினுன். 24

---

19. வேர் - வெட்டிவேர்.

20. முத்தை வெண்மணலாகப் பரப்பி. நிரந்தரிப்பியா - நிரந்தருப்பித்து, கலப்பித்தென்பது. அருவியையே மேலே பாய்த்தி அலம்பித்துகளைப் போக்கி.

21. தூவுவனவும் வீசுவனவும் உதவுவனவுமாகிய பாவைகளின் அனிதத்தை ஆக்கினுனென்க. அனிதம் - அளவின்மை.

23. உற்பல ஓடைகளைப் பந்தலின் பக்கத்திலே ஆக்கினன். கற்பகச் சோலையையும் அக்கற்பகத் தருவின்மேற் படர்கொடியையும் அவ்வோடையும் பந்தலுமாகிய அவற்றின் பக்கத்திலே உண்டாக ஆக்கினுனென்க.

24. சிலை - மலை. அவல் - பள்ளம். சலம் - நீர்.

மாலைவெள் ளருவிகண் மண்ணிற் றாழ்வன
கோலவிண் ணத்துராய்க் குளத்திற் றேங்கவும்
சாலவெள் ளருவியாய்த் தாழ்வ ரைச்சுனை
ஏலுநீர் வரைமுகட் டெழலு மாக்கினான். 25

எவரெவ ரெவ்வுழி யாது முன்னினார்
அவரவர்க் கவ்வுழி யதுப யப்படச்
சவிமணி யிருநிதி தருவுந் தேனுவும்
நவமுற வயின்றொறு நலக்க நல்கினான். 26

பஞ்சியின் மிதித்தொறும் பணிக்கு மாதரார்
அஞ்சிலம் படித்துணை யலரி டுந்தொறும்
விஞ்சிய வாகையின் விரைத்த பூவென
எஞ்சலின் றெறுழ்வரை யிளக வைத்தனன். 27

காலையின் மாலையைக் கலக்க வேண்டினும்
மாலையிற் காலையை மணப்ப வேண்டினும்
கோலவே றிருதுவைக் கூட வேண்டினும்
மேலென லின்றியே விளைய வூக்கினான். 28

விருத்தர்கள் பாலராய் மேவ வெஃகினும்
உரைத்தமூப் பிளையவ ருறுதல் வெஃகினும்
புரைத்தவ ரும்பராய்ப் புலவர் மக்களாய்ச்
சரித்திடல் வெஃகினுஞ் சமையச் செய்தனன். 29

---

25. மண்ணிற்றாழ்வனவாகிய அருவிகளானவை ஆகாயத்தில் பெயர்ந்து குளமாக ஆண்டுத் தேங்கியிருக்கவும் அடிவரையில் அருவியாய்ப் பொருந்திய சுனைநீரானது மலை முகட்டில் எழவும் ஆக்கினான் என்க. தாழ்வரை - அடிவரை. சிலப்பதிகாரம் காடுகாண்காதை ''வரைத்தாள் வாழ்வேன் வரோத்தமை யென்பேன்'' என்பதில், வரைத்தாள்வாழ்வேன் என்பதற்குத் ''தாள்வரைக் கண்ணே வாழ்வேன்'' என்றுரைசெய்தார் அடியார்க்குநல்லார். அதற்குச் சாமிநாதையர் அவர்கள் ''அடிமலையைப் பாதசைலமென்று வடநூலார் கூறுதலின் தாள்வரை என்றார். தாழ்வரை யென்றும் பிரதிபேதமுண்டு'' என்று குறிப்பு எழுதியுள்ளார்.

27. அடித்துணையாகிய அலர். இடுந்தொறும் வரை இளகும்படி. வாகைப் பூவைப்போல மென்மையாய் இளகவென்க. வாகைப்பூ மிக மென்மையையுடையது.

28. ஓரிருதுவில் வேறொரு இருதுவைக் கூடவேண்டினாலும். மேல் எனல் இன்றியே விளைய - செய்தல் அருமையென்பதின்றி எளிது விளைய என்க; செய்தல் இனிமேலாகட்டும் என்று இல்லாமல் விளையச்செய்தன.

29. புரைத்தவர் - கீழோர். கீழோர் என்பது ஈண்டுப் பொருந்து மாற்றான் மக்களை உணர்த்திற்று. வெஃகினும் - விரும்பினும்,

சிறக்குமண் ணவர்க்கெலாந் தெய்வ லோகமாய்த்
துறக்கமுள் ளவர்க்குமேற் றுறக்க நாடதாய்ப்
பிறக்கமுற் றிடப்பெரு வளத்த தாக்கினான்
அறக்குணத் தவர்பயி லடுக்கன் முற்றுமே. 30

நீடிய பெருங்கவி னோர்கண் டாரெனின்
வீடெனற் படுவது வேண்டற் பாலதே
பீடுறு பெருந்தவத் தார்க்கு மிங்கெனக்
கோடுயர் வரையெலாங் கோடித் தானரோ. 31

வேறு

வியவர்கள் விரைந்து சென்று விமலனா ரருளீ தென்ன
இயவருட் டலைமை பூண்டோ னினியன நுகர்ந்து பூசிப்
புயலுமிழ் மின்னு வீசும் பொலங்கல னணிந்து போற்றி
நயனுறு கருவி யெல்லா நயத்தக வமைத்துக் கொண்டு. 32

அருவிமும் மதத்த வேழத் தரசினை மண்ணுச் செய்து
குருமணி தகர்த்த ரைத்துக் குழைத்தசெஞ் சேற்றின் வார்கை
உருகெழு கோலந் தீட்டி யோடைவண் ணுதற்கண் வீக்கித்
திருமலி கவரிக் கற்றை சிறுதுளைக் காதிற் றூக்கி. 33

ஏற்றுரிப் போர்வை வள்வா ரிணைமுர செருத்தி னேற்றித்
தோற்றிய வுலக மெல்லாந் துயர்கெட வினிது வாழி
நாற்றிசை வணங்கு மிந்த நகர்நனி சிறந்து வாழி
வீற்றுவீற் றறங்க ளெல்லா மறன்கடை விளிய வாழி. 34

கம்பமால் களிநல் வேழக் கடாங்கவிழ் முகத்து முக்கண்
எம்பிரா னருளிச் செய்த தியாவருங் கேண்மின் கேண்மின்
தம்பிவேட் டுவர்தஞ் சார்பிற் றங்கிய வமிழ்தன் னாளை
உம்பரார் துவன்ற மன்ற லுஞற்றுவ திவண தாமே. 35

---

30. மேற்றுறக்கநாடு என்றது துறக்கலோகத்துக்கு மேலேயுள்ள துறக்கநாட்டையென்க. முற்றும் ஆக்கினான்.

32 இயவரில் தலைமையாயுள்ள ஒரு வள்ளுவன். என்ன என்று வள்ளுவனை நோக்கிச் சொல்ல. இயவர் - இயமியம்புவார். இயம் - வாத்தியம்.

33. சேற்றின் - சேற்றால்.

34. மாட்டுத்தோல்.

வெற்பட லழித்த வெள்வேல் விண்ணவர் கோமா னேவக்
கற்பகஞ் சுரபி சிந்தா மணிநிதி கலனூண் மற்றும்
அற்பகந் தழைய நல்கு மவையினி தேற்ற ணிந்து
பொற்பவுண் டார்வ முற்றப் பொருந்துபு மகிழ்ச்சி கொண்மின்.

விளக்கொடு தூப மார்த்தி விதானித்து வீதி தோறும்
துளக்கமி னிறைநீர்க் கும்பம் பாலிகை தொகுமின் வார்ந்த
வளக்கமு கரம்பை வேழம் வயின்றொறு நடுமின் செய்மின்
உளக்குலந் தணத்த றேற்று வோவியம் பித்தி தோறும். 37

விரைமலர்ப் பந்தர் வீதி யிடுமின்றோ ரணங்கள் யாமின்
பரவைவிண் ணகடு தூர்ப்பப் பலகொடி யெடுமி னென்னு
இரவியிற் பிறைபல் காற்சென் றெறிந்தெனக் குணில்கையோச்சி
உரவுரு முரற்றிற் றென்ன வொலிமுர சுரப்பி னுறல். 38

வேறு

முரச மார்த்தலு மூரி நகர்த்தலை
அரச வீதியு மாவண முந்தலை
விரசு ஞெள்ள லும் வேறிடம் யாங்கணும்
பரசி யாரும் பணிசெய முன்னினர். 39

பழைய மாடமும் பைம்பொற் பதணமும்
மழைது ழர்யெழும் வண்மணிப் பந்தரும்
தழையு மோவியச் சாலையுஞ் சீத்தொரீஇ
விழைய வேறுவிண் ணேனக விழைத்தனர். 40

செப்பு நேர்முலை யார்முன்னர்ச் சிந்திய
ஒப்பி ருமமொளிர்மணிச் சாந்தெனும்
குப்பை வாரவிற் கொண்டதம் மெய்யணி
குப்பை யாகலிற் குப்பைக ளைந்திலார். 41

---

37. கண்டோருடைய மனக்கூட்டம் பிரியாத ஓவியம் என்க.

38. யாமின் - கட்டுமின். பரத்தலையுடைய விண். பிறையானது சூரியனிடத்திற்சென்று தாக்கினாற்போல. முரசை இரவியாகவும் குணிலைப் பிறையாகவும் கொள்க.

39. ஞெள்ளல் - நெடுவீதி.

40. பதணம் - மதிலுண்மேடை. பழையவென்பதை எல்லாவற்றோடும் ஒட்டுக. புதுக்கினார் என்பது.

41. முலையார் வாராநிற்ப. வார - அள்ள. முன் சிந்தியவற்றை அள்ளுங்காலையில் தம் மெய்யணி வீழ்ந்து பினனும் குப்பையாகிறபடியால் களைந்திலார் என்க.

வீற்றுப் பந்தின் விரைப்புனன் மின்னனார்
ஏற்றுத் தூயினி தாடிய சேதகம்
பாற்றப் புக்குப் பசுந்தொடைத் தாதுதேன்
தூற்றிச் சேதகம் வேறுந் தொகுத்தனர். 42

ஓதி தாழநு டங்கியொண் கொம்பனார்
சோதி நித்திலத் தோரணம் யாத்தொறும்
வீதி வாய்ப்பிழைத் துக்கமின் கால்புயல்
சீத வாலிகள் சிந்தின போன்றவே. 43

வகைசெ யோவியப் பித்திகை மாசுறுத்
தகைசெ யாடியி னுறிய சாயையும்
நகைசெய் தாமங்க ளுற்றுநர் தம்மையும்
தொகைசெய் தியாவருந் தோல்வியிற் றங்கினர். 44

கருப்பு ரப்புனல் குங்குமக் காமர்நீர்
மருத்த மாமத மற்றும்வெவ் வேறுறத்
துருத்தி வாங்கித் துவற்றினர் வானவில்
திருத்தி னலென வீதிகள் சீர்த்தவே. 45

இந்தி ரச்சிலை வானு தற் கெஞ்சிமண்
வந்து வீழ மரீஇயபைங் காரினம்
அந்தில் வௌவ வடுத்தது போன்மெனப்
பந்தர் வீதிதொ றும்பயில் வித்தனர். 46

---

42. புனலைத்தூய்.

43. யாத்தொறும் - கட்டுந்தோறும். உக்க என்பது வினையாலணையும் பெயராய்ப் போன்ற என்னும் பயனிலைகொண்டது. ஓதியை மேகமாகவும் மாதர் மெய்யில் உக்கனவற்றை ஆவியாகவும் கொள்க.

44. ஓவியப் பித்திகையானது கண்ணாடியின்கண்ணே தோன்றலாலுண்டாகிய அவ்வோவியத்தின் சாயையும் அங்ஙனம் மாலைகளைத் தூங்க அலங்கரிப்போர்களையுந் தொகைசெய்து காணும்பொருட்டுச் சேர்த்து எண்ணித் தோற்றனர். ஓர்காலைக் கோர்கால் நிலையின்றிச் செல்லுஞ் சித்திரச் சாயையை அவர்களோடு சேர்த்து எண்ணினபடியால் தொகை காணமாட்டாராயினர். *ஓவியமென்றது ஆடவராகவும் மாதராகவும் எழுதிய சித்திரங்கள்.

45. இந்திரதனுவை வளைவை யொழித்துத் திருத்தினாற் போலச் சீர்த்தன வீதி.

46. இந்திர தனுவானது மாதருடைய நுதற்குத் தோற்று நாம் மேலே இருப்பது தகுதியன்றென்று நினைந்து பூமியில் வீழாநிற்ப, அதைக்

அடுத்த காரக லாமையி ருங்கனம்
தொடுத்தி ருத்துதல் போன்மெனத் தூக்கினர்
மடுத்த தேத்தொடை வண்கனி யாடிவில்
விடுத்த பன்மணித் தொத்தும் விராவியே. 47

வேறு

விழுத்துக ளுண்டமே னிலங்க ழீஇவிடச்
செழுப்புனல் சுருங்கையிற் செறிந்து வீழ்வன
குழுப்புன லருவியாக் குன்றம் போன்றன
வழுத்திய பன்மணி யவிர்பொன் மாடமே. 48

சாந்திழுக் கியபதந் தைய லாரின்வீழ்
தேந்தொடை யூற்றுகட் டேற லிற்கழீஇப்
பூந்துகட் குப்பையிற் புலர்த்தப் போந்தொளி
ஏந்துபல் கொடியெடுத் தார்க ளெங்கணும். 49

கவானெழில் கவர்ந்தபூங் கதலி வண்களக்
குவாலெழில் கவர்குளிர் கமுகு தோட்டிணைத்
தவாவெழில் கவர்ந்ததன் கரும்பும் யாத்தனர்
உவாவெழில் வாய்தலி னெழுகு தூண்டொறும். 50

வடிவினும் போதினும் வார்க வான்குழ
லொடுபொரல் பொறுத்தவ ருரைபொ ருங்கனிக்
கடுவது புரிந்தன ரம்ம வோவெனப்
படுகனிக் கதலிகள் பலவும வீட்டினர். 51

கண்ட மேகமானது அவ்விந்திர தனுவை வௌவிக்கொண்டு போம் பொருட்டுத் தானும் பூமியில் வந்தடைந்தாற்போன்றது பந்தல் என்க.

47. கனம் - சுமை.

48. புனலானது அருவியாக.

49. கொடியெடுப்போர்கள் சாந்தச்சேறு தோய்ந்த தம் பதத்தைத் தேறலினுலே கழுவி மகரந்தக் குப்பையினுல் புலர்த்திய காரணத்தாலே போதற்றெழில் செய்தாரென்க. புலர்த்தப் போந்து - புலர்த்தலாற் போதல்செய்து. பெண்களின் மெய்யிலிருந்து வீழ்ந்த மாலை ஊற்றுகின்ற தேறலாற்கழுவி.

50. உவா - நிறைவு. வாய்தலின் - வாயில்கடோறும்.

51. பொறுத்தவர் வீட்டினர். பெண்களுடைய கூந்தலின் முடிப் புக்கு வாழைப்பூவும் உவமானப்பொருள் என்க. பொறுத்தவர் - சகித் தவர். கனிக்குச் சகியாது அட்டனரெனறு சொல்லும்படி. பொரலென் பதற்கு எழுவாய் வாழை என்க.

மெத்திய புகையொளி விதான வேதியில்
வைத்தனர் பூரண கும்பம் வைத்தவர்
முத்தணி முலைக்குழன் முனிவில் கண்ணிணைக்
கித்தகைத் தறிகென வெவரு மாற்றவே. 52

வேறு

வண்ணக் கலைகஞ் சிதர்செய் தினிய மருவூட்டும்
சுண்ணத் திரளுஞ் சுடர்பன் மணியுஞ் சொரிபைந்தேர்
கண்ணித் திரளுங் கலையின் றிரளுங் கலவித்தான்
விண்ணத் தமர்பல் லுலகுங் கவல விளங்கின்றே. 53

தோடுங் குழையுஞ் சுடரப் புழுகின் மெழுக்கிட்ட
பாடுங் குவளைக் கமலந் தொடரிப் பலநாற்றும்
மாடுந் துவள்சிற் றிடையார் மலர்மென் குழலூடும்
ஆடுங் களிவண் டணவுஞ் சுலவு மகலாவால். 54

தவளத் தரளத் திரளுந் தவழ்வெள் வளையுஞ்செம்
பவளத் திரளும் பலவுங் கவரப் பனிமுந்நீர்
அவன்மிக் குடைய தணிசெய் தவைவிச் சமும்வீழ்த்தத்
தவவிட் புலனீண் டகல்வுற் றஃதத் தடவெற்பு. 55

---

52. காமிகள் யாவரும் காமநோயைத் தணித்துச் சகித்துக்கொள்ளும்படி பூரண கும்பத்தை வேதியில் பெண்கள் வைத்தனர். வைத்த பெண்களது முலைக்கு உழலுங்கண். கண்ணென்றது ஆடவர் கண்ணை. புகைநிறம்போன்ற விதானம் என்றதனால் நீலவிதானம் என்பதுபெற்றாம். விதானத்திற்கு அது இலக்கணமாகலின். சிலப்பதிகாரம் மங்கல வாழ்த்துப் பாடல், ''நீல விதானத்து நித்திலப்பூம் பந்தர்க்கீழ்'' என்பதன் விசேட உரையில் ''நீலவிதானம் கூறினார்; முத்து ஒளிபெறுதல்நோக்கி; அஃது அக்காலத்து முத்துநோக்குவார் ஒப்புக்கு விரித்து நோக்குப; பூ - பொலிவு'' என்று அடியார்க்குநல்லார் உரைசெய்தார். கோபக்குறிப்பை வெளிப்படுத்தாது தண்ணளியோடு கூடிய கண்ணென்பார் 'முனிவில் கண்ணிணை' என்றார்.

53. பொன்னைப் பொடிசெய்து அப்பொன்னில் மருவூட்டிய அப்பொற்சுண்ணம். கலை - வஸ்திரம். கலவி - கலந்து. பொன்னொளி மிக்கு இருப்பதனால் பொன்னுலகும் கவல விளங்கியது என்றார்.

54. பாடு, மாடு - பக்கம். பெண்கள் புழுகால் மெழுகுங்காலத்து அவர்கள் அணிந்த தோடும் குழையும் சுடர்கின்றன என்க. பெண்கள் சுடர இட்டபாடும். பாடும், மாடும், ஊடும் அணவும் சுலவும் என்க. தொடரி - தொடுத்து.

55. தணிகையிலுள்ளார்கள் கடலிலுள்ள முத்து முதலியவற்றைக் கவர்ந்து கொள்ளுதலால் பள்ளமாகின்றது. கவர்ந்தவையாகிய தாம்

வளக்குன் றுவமம் பெறுமா நகர மின்றென்று
விளக்குற் றனபோன் மெனவுங் கடிவீழ் விண்ணோர்கள்
உளக்கொண் டெழுசோ டையைமெச் சினபோன் மெனவுந்தாம்
துளக்குற் றனவாற் றுகில்வார் கொடிகள் சுடர்சென்னி. 56

சந்தக் களிமென் பனிநீர் மலர்வெண் டரளத்தொண்
கொந்துங் கஞலிக் குளிர்கூ திரின்மிக் குறுவிப்ப
அந்திற் புகையுஞ் சுடரும் பனவோ ரமைதீயும்
சிந்தித் திகழ்வித் தனதே வரும்வீ ழிளவேனில். 57

இழுக்கிப் படுசாந் திணையா மணிவீ திகளில்லை
ஒழுக்கிப் புனல்பொன் னுதவாத் தலைவாய் தல்களில்லை
முழுக்கட் டொடைதா ளிடரு வகன்முன் றில்களில்லை
வழுக்கித் தமியை யெமியாய் நுகரா மனையில்லை. 58

உழாலிற் பொலிவண் டிவர்பூந் தொடைநான் றுளிர்பந்தர்
எழாலிற் பொலிமெல் லிசையுங் குரலு மெறிசெங்கை
முழாலிற் பொலிவண் முழவும் பரத முறையோடும்
தழாலிற் பொலிநா டகவெள் ளமிழ்துந் தழைவுற்ற. 59

அணிந்தவற்றைக் கீழேவீழ்த்த, அவை குவியலாயிருக்கும் ஏதுவினாலே தணிகையங்கிரியானது விண்ணில் நீண்டு அடி பரந்திருக்கிறது. தரளத் திரளும் - முத்துக்களின் கூட்டமும்.

56. தணிகையங் குன்றுக்கு உவமையாகும் நகரம் இல்லையென்று தலையசைத்து விளக்குமாறு போலுமெனவும். கடி - விவாகம். உளங் கொண்டெழு. சோடை - விளக்கம்.

57. சந்தனக்குழம்பும் பனிநீரும் பூவும் தரளக்கொந்தும் கூதிரை உண்டாக்க, புகையும் தீபமும் முனிவரது யாகாக்கினியும் அக்கூதிரை அழித்து வேனிலை உண்டாக்கின. களி - குழம்பு.

58. சாந்தால் வருந்தாத வீதிகளில்லை. சாந்து இணையா. ஆண்டுள்ளார் அந்தணர்க்குத் தானமாகத் தாரைவார்த்த புனலை ஒழுக்கிப் பொன்னை உதவாத தலைவாயிலில்லை. ஆண்டுள்ளார் தனியாயிருத்தலை ஒழிந்து கூடியிருத்தலாகி உணவாதி போகப்பொருளைத் துய்க்காத மனையில்லை எனவே உணவாதிகளைத் தாம் தனித்தனியே உண்ணாது யாவரோடும் கூடியிருந்து உண்கின்றார்கள் என்பது. தமியை வழுக்கி.

59. மூக்கால் உழுதலிற் பொலியும் வண்டு. செங்கையால் எறியப் படும் முழவு. முழால் - முழக்கம். பரதமுறையோடு தழுவுதலிற்பொலியும் நாடகம். பந்தர் எழுந்தவிடத்தில்.

வேறு

மணிது ளக்கியு மணியரிச் செண்ணவஞ் சிலம்பின்
இணைது ளக்கியும் யாழ்நரம் புளர்ந்தும்வே றியைத்தும்
கணிது ளக்கிய சுணங்கிள முலையவள் களவின்
அணிது ளக்கினர் பாடின ரனிதகோ டியரே. 60

அற்றை ஞான்றவ ரவர்திரு நகரணி படுத்த
தெற்றை ஞான்றும்விண் ணவரிருந் தியம்பினு முடியா
துற்ற ஞான்றவ ரவருறு மகிழ்ச்சியை யுன்னின்
கொற்ற வேலவன் முதலியோர்க் கல்லது கூடா. 61

இயவு ளாகிய வெரிதவழ்ந் திலங்குவே லிறைவன்
வியவ னாகிய வீரவா குப்பெயர் விமலன்
புயல்வல் லேற்றுவண் கொடியினன் புதல்வியை யண்மிச்
சயவென் றேத்தினன் ருழ்ந்தன னருளிய துரைத்தான். 62

உவகை பொங்கினள் போதுமென் றுத்தமி யெழலும்
உவரி பொங்கியாங் கொலித்தன குணில்பொரு முரசம்
கவரி துள்ளின வசைந்தன காமர்சாந் தாற்றி
கவிகை யோங்கின துவன்றின காடெனத் துவசம். 63

வணங்கி முன்கையின் மடிவிரித் தடுத்தனர் சில்லோர்
இணங்கு பாதுகை திருவடி யிணக்கினர் சில்லோர்
கணங்கொண் டாடினர் பாடினர் களித்தனர் சில்லோர்
பிணங்கு பேரொலிப் பெருஞ்சனம் விலக்கினர் சில்லோர். 64

---

60. வள்ளியம்மையின் களவுப்புணர்ச்சியது அணியைத் துறையாகப் பாடினர். காலிலணியும் சிலம்பு. செண்ணம் - ஒளி. மேனியிலணிந்த மணி துளக்கியும். துளக்கியும் பாடினர்.

61. அவ்வவர் அடைகின்ற மகிழ்ச்சியை நினைத்தால். கூடா - ஏனையோர்க்கு இயம்பக்கூடா.

62. இயவுளாகிய இறைவனுக்கு வியவனாகிய வீரவாகு, இயவுள் - கடவுள். இந்திரனுக்கு இடிக்கொடி என்றறிக.

64. முன்கையின் மடி - முன்கையில் வஸ்திரத்தை விரித்து மடித்து வைத்து உயர்ந்தோர்கள் பிடித்துக்கொள்ளச் செய்வது; இதனை ஆதீனங்களில் காண்க.

குவளை யுண்கணூர் பற்பலா யிரர்குழீஇச் சூழ்ந்தார்
தவளை மென்குரற் கிண்கிணி தாட்கவைஇ யரற்ற
உவள கத்தினின் றொளிர்மணி வாய்தலை யண்மித்
திவண்ம ணிப்பெரு விமானமேல் கொண்டுசென் றடுத்தாள். 65

மாயி ரும்புவி மகண்முலை யிடைக்கிடந் தொளிரும்
காயி ரும்பொனிற் கதிர்மணி யழுத்துபூ ணனைய
மீயு யர்ந்தவிர் வெற்பினை நோக்கியுண் மகிழ்ந்தாள்
கோயின் முன்பெருங் கோபுர நேர்குறு குற்றாள். 66

விண்ணி றுத்திழி விமானநின் றிழிந்தனள் கோயில்
உண்ண டந்தன ளுத்தனை பணிந்தன ளுவகைக்
கண்ணி றைந்தநீர் கவிழ்ந்தனள் கருணைநோக் களித்தங்
கண்ண றன்னிடத் திருத்தின னளவளா யிருந்தாள். 67

வேறு

மங்கல முடங்கல்வர வேற்றுமறை ஞாளிப்
புங்கவன் மகமபொடி படுத்தபுகழ் வீரன்
துங்கமத யானைதுனை யக்கடவு சாத்தன்
இங்கிவர்க ணம்பலவு மீண்டவடை குற்றார். 68

பாதல வுருத்திரர்கண் மூவர்பது மத்தோற்
காதியரு ளைவரிரு மூவரவ ரீன்றோர்
ஆதவர்ம ருத்துவர்வ சுக்களென வான்றோர்
ஓதுபதி னெண்கணமு மாதவரு முற்றார். 69

---

66. ஒளிரும் பூணையனைய வெற்பு. இத்தணிகைவெற்பும் பொன்னாலும் மணியாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளது ஆகையால் அவ்வாறு உவமித்தார். பொன்னின்மீது மணி அழுத்திய பூண் என்க.

67. விண் சிறுத்து - விண்ணைக் கடந்து. உத்தன் - நாயகன்.

68. வைரவக்கடவுளும் வீரபத்திரக்கடவுளும் ஐயனாரும் அடைந்தார். ஐயனாருக்கு யானை வாகனம் என்க. துனைய - விரைய.

69. ஐவர் இருமூவர் - பதினொரு உருத்திரர். அவர் - ஐவர். பதுமத்தோனைக் காதி அருளிய மருத்துவர் இரண்டுகோடி, வசுக்கள் எட்டுக்கோடி, சூரியர்கள் பன்னிரண்டுகோடி, உருத்திரர்கள் பதினொருகோடி என்னுமிவர்கள் முப்பத்து முக்கோடி தேவர்கள். மருத்துவர் - தேவவைத்தியர்கள். பதினொருருத்திரராலீனப்பட்டோர் ஆதவர் முதலியோர்.

தத்தமனை மாதர்புடை சாரமல ரோனும்
மைத்தவுரு வத்தனும் வலாரிமுத லோரும்
பைத்தநதி குன்றுபல காலமுதல் யாவும்
எத்திசையி னோருமெழில் கொண்டணவி னரால். 70

வேறு

சேந்தெரி தும்மு வைவேற் சேவக னருளப் பெற்ற
காந்தெரி கணைவில் வேடர் கதழ்ந்துதம் மடுக்க லண்மி
ஏந்தக லல்குற் குற்ற திற்றென விளம்ப லோடும்
பூந்துண ரலங்கற் றிண்டோட் புள்ளுவர் தலைவன் கேளா. 71

கழிமகிழ் சிறந்து சொல்வான் கைதொழு திறைஞ்சிப் போற்றி
வழிபடு கடவு ளாவா மருகனுந் தலைமை பெற்றும்
பிழிமகிழ்ந் தினிய வுண்டு பேரணி யணிவா யென்னுப்
பொழிவிழி மனையை யாற்றி யாரையும் புலம்பிற் றீர்த்தான். 72

கடவுளர் சிறையைச் சீத்தோன் கன்னியை மணப்பா னங்கண்
உடன்வரு வீர்க ளென்னு வொலிகெழு பறையின் வைகும்
நெடுநகர்க் கறைந்து சாற்றி நிகழ்பொருள் கொணர்தி ரென்னுத்
தடவரைக் காவ லோர்க்குச் சாற்றினன் முடங்க லுய்ப்பான். 73

கன்றினைக் கவரி யூட்டிக் கழிந்தபாற் கலுழி நீத்தம்
மென்றினை விளைக்கும் வள்ளி வெற்புறை குறவர் கோமான்
என்றுல கெடுத்துக் கூறு மியல்பினே னியம்பு மாற்றம்
குன்றென நிலவுஞ் சீர்த்திக் குன்றவர் யாருங் காண்க. 74

முடங்குகி ரடக்கித் தோற்றுந் தோற்றுதி மூரி வேங்கை
கடங்கவிழ் முகத்து வேழங் கண்ணகன் புவியுண் டார்க்கும்
மடங்கலும் வேட்டை யாடி வதைத்தத ளணியுங் கொண்ட
அடங்கருஞ் சீர்த்தி வெள்ளி யடுக்கல்வீற் றிருந்த வேடன். 75

---

72. ஆ ஆ என்பது இரக்கச்சொல். பிழி - தேன், கள். மனைவியைத் தேற்றி. வள்ளியம்மை பிரிவாற்றாது நீரைப்பொழியும் விழியையுடைய மனைவி என்க.

74. கவரியானது தனது கன்றுக்கு ஊட்டி எஞ்சிய பால்வெள்ள மான்து தினைப்பயிரை விளைக்கும் வெற்பு. ஓலை எழுதுகின்றான் என்க.

75. வளைந்த நகத்தைத் தன்னுள்ளே அடக்கித் தோற்றுகின்ற தோல்வாயையுடைய வேங்கை. தோல் துதி - தோல்வாய். விஷ்ணுவாகிய நரசிங்கத்தையும். மலையிலிருத்தலாலும் வேடன் என்றான்.

தரைக்குயர் வரைகட் கெல்லாந் தலைமைசா லிமய வெற்பன்
விரைக்குழற் புதல்வி தன்னை வேட்டன னளித்த காளை
திரைக்கட லுலகங் கோட்டிற் சேர்த்தமா வேட்டை யாடி
வரைக்கெலா முரிமை பூண்ட மானவேல் வேட னம்மா. 76

விலங்கமர் பொருத கோட்டு வில்லுமிழ் குழையுந் தோடும்
அலங்குகொக் கிறகு மக்கு மதனுநம் மரபோ டேற்றங்
கலங்கிய தாதை போலா னேனுமா யிரத்தெட் டண்டம்
கலங்கும்வல் வேழச் சிங்க வேட்டையிற் கடவு ளொத்தான். 77

அத்தகு வேடற் காற்று மருந்தவப் பயத்தாற் பெற்ற
மைத்தகன் றுளிர்ந்த வாட்கண் வள்ளிநா யகியை மாதோ
இத்தகு மாசித் திங்க ளிடைவரு பூச நாளால்
வித்தகத் தணிகை வெற்பின் விதியுளி கொடுப்ப நேர்ந்தேன். 78

செம்மலை மணத்திற் காணத் தேவரும் யாரும் போந்தார்
கைம்மலை யுலம்பச் சிங்கக் கணஞ்செவி யோர்ந்து செல்லும்
அம்மலை வருக வென்று வடைவினில் வரைந்து விட்டான்
விம்மலை யுடைய வோங்கல் விழுப்பொருள சிலத ருய்த்தார். 79

வேறு

கோழரை யகிலின் குறடுசந் தனவண்
குறடுகுங் கிலியங்கப் பூரம்
கேழில வங்கங் குங்கும மேலங்
கிளர்மணப் பச்சிலை மஞ்சள்

---

76. வேட்டனன் வினையெச்சமுற்று. காளை - முருகன். முற்செய்யுளில் 'வேடன்' என்றது இச்செய்யுளில் 'அளித்த' என்பதனோடு இயைந்தது.

77. விலங்கை அமர் பொருதலால் உண்டாகிய கொம்பாற்செய்த குழையும் தோடும். விலங்கு - யானை, பன்றி கொக்கினிறகும். ஏற்று அங்கு அலங்கிய சிவனை ஒவ்வானேயானாலும். வேழன் - தாரகன். கடவுள் - சிவன். சிங்கன் - சிங்கமுகாசுரன். குழையும் ...... அதனு மாகிய இவற்றால் நம்மரபோடு முருகன் போலானேனும். ஏற்றங்கலங் கிய - ஏற்றங் கலங்க. தாதை - சிவன.

78. மைத்து - மையையுடையதாய். அகன்று - விசாலித்து.

79. யானையானது ஒலிக்க அவ்வொலியைச் சிங்கக்கூட்டமானது செவியால் ஓர்ந்து செல்லும் தணிகையாகிய அக்குன்றில். விம்மல் - மேன்மை. குறிஞ்சிநிலப் பொருளையெல்லாம் வேடர் கொண்டுவந்தனர். சிலதர் தப்பிரத்தியயம்; சிலர் என்பது.

வாழிகத் தூரி புழுகுதேன் வேரன்
மணிவரை யகழ்ந்துகொள் வயிரம்
வேழவெண் மருப்பு மரும்புகு முத்தம்
வேங்கையி னுகிர்மயிற் பீலி. 80

சாமரை வெதிர்நெல் லவனங் குற்ற
தவளமெல் லரிசிசெந் தினைபல்
காமரு கனிகள் கிழங்குபல் யூகங்
கவரிகத் தூரிமா புழுகு
மாமத வேழம் பிடிகள பங்கண்
மயில்கிளி பூவைமென் புறுக்கள்
ஆமவை பிறவுங் கண்டனன் மகிழ்ந்தான்
அவையெலாங் கொடுபுறப் பட்டான். 81

பாங்கியர் பாங்கி செவிலிநற் றாயும்
பரிவுறு தன்னையர் பலரும்
ஓங்கிய நகரும் பரிசனத் தவரும்
உவாக்கட லெனப்புடை சூழ
வீங்கொலி வள்வார்த் தொண்டகந் துவைப்ப
வெள்வளை வயிர்பல நரலத்
தூங்குசெந் நாவின் ஞாளியின் றொடரத்
தொடுகழ லொடும்படர்ந் தடுத்தார். 82

முடங்கல்சென் றறிந்த குன்றவர் யாரும்
முகிழ்பெரு மகிழ்ச்சியி னடைந்தார்
இடங்கெட விறுத்த வுருத்திரர் முதலோர்
யாவரு மேகநா யகனைக்
குடங்கையின் மலர்தூய் வணங்கினர் கருணை
கொண்டபின் றந்தமி லுயர்ந்தோர்க்
கடங்கினர் வழிபட் டஞ்சலி யளித்தங்
களவளா யிருந்தன ராக. 83

ஊற்றிய மதத்து முகப்பெருங் கடவுள்
உம்பர்கோன் முகத்தினை நோக்கிப்
போற்றியிங் குள்ளார் யாவரே யாக
அவர்க்கெலாம் பொலிந்தவான் றருக்கள்

---

81. வெதிர் - மூங்கில். யூகம் - குரங்கு. கவரிமா - கத்தூரிமா.

தோற்றுமெல் லணியுந் தேனுவி லமுதுஞ்
சுடர்தரு மணிதரும் பொருளும்
ஆற்றநின் றளித்த லென்றன னென்றூற்
கவனவற் றினைவியங் கொண்டான். 84

வேறு

இன்றுகொல் யாம்பிறந் திட்ட நாளென
ஒன்றிய வோகையி னுளிர்ந்த தாருவும்
வென்றிகொ ளேனவும் வீதி மாமனை
மன்றகம் புறநகர் வளங்கள் கான்றவே. 85

எங்கணு மணிவன வெங்கு முண்பன
எங்கணு மனத்தினுக் கினிய மெத்தலும்
எங்கணும் யாவரு முகந்து கொண்டவர்
எங்கணு மின்னண மில்லை யென்னவே. 86

பழையன தணந்தகன் பாரு ளார்தரு
இழையணிந் தின்னமு தயின்று சித்திரம்
தழைமணி மாடங்க டவிர்தன் மேயினார்
விழைதகு தேவரின் வேறு தோற்றிலார். 87

அருந்திற லரசன தருளி னல்லது
பொருந்திய விசும்பினும் புக்குக் கொள்ளருந்
திருந்திய விழைகளுந் தெய்வ வுண்டியும்
பெருந்தகை யமரரும் பெட்டு நொண்டனர். 88

---

84. கோன் - இந்திரன். என்றூற்கு - என்ற விநாயகர்பொருட்டு. அணிதரும்படியான பொருளும் என்க. அவற்றினை - அக்கற்பகத்தருக்களை. அளித்தல் வியங்கோள். மணி - சிந்தாமணி.

86. கற்பகமானது அணிவனவற்றையும் உண்பனவற்றையும் மனத்துக்கு இனியவற்றையும் எவ்விடத்தும் நிறைத்த அளவில். மெத்தலும் - நிறைத்தலும். என்ன கொண்டனர்.

87. பாருளராகிய மானிடரும் பழையன நீக்கிக் கற்பகத்தருவின் இழையை அணிந்து அமுதுண்டு மேன்மாடத்தில் தங்கினர். தவிர்தல் - தங்குதல்.

88. அரசன் - இந்திரன். நொண்டனர் - முகந்தனர்.

இரப்பதுங் கொடுப்பது மின்மை யாலவண்
இரப்பவர் கொடுப்பவ ரிவரென் பாரிலை
நரைப்புழுப் புறுபிணி நசித்த லாற்றரை
வரைப்பென விசும்பென வழக்க மற்றதே. 89

தெய்வத வுணவினு லணியின் சீரினல்
மெய்வளம் வேற்றுமை தெரிப்ப வீழ்துணை
மைவளர் கண்ணியர் மருண்டு மோதிரக்
கைவிரல் காட்டலுங் கலந்தன் மேயினர். 90

மானிடர் குழுவினை நோக்கி வானவர்
வானவர் குழுவென மருண்டங் கண்மினர்
வானவர் குழுவினை நோக்கி மானிடர்
மானிடர் குழுவென மருண்டங் கண்மினர். 91

ஈட்டலு மடுத்தலு மின்மை யால்வரைத்
தோட்டுணை மைந்தருந் தொடிக்கை மாதரும்
கூட்டுணு மிழையணிந் தகற்றிக் கோலமெய்
மீட்டுமீட் டணிதலே வினைய தாக்கினர். 92

ஆடினர் பலரரங் கேறி யாழ்தழீஇப்
பாடினர் பலர்களம் பயின்று பாரிடை
நீடுவார் குழலியர் நிகர வேண்டிவிண்
கூடுவா ரிளமுலைக் கோலக் கொம்பனர். 93

---

90. தெய்வ உணவாலும் அணியின் சீராலும் முன் இயல் நீங்கி மெய்யின் வளம் வேறுபட்டுத் தோன்றலால் தம் நாயகரை மாதர்கள் அறியாது மருண்டு, அந்நாயகர் மோதிரக் கைவிரலை அடையாளமாகக் காட்டிய அளவில் கலந்தார் என்க. துணை - நாயகர்.

92. வேண்டியவாறு கற்பகம் தருதல்பற்றி ஆண்டு அணி முதலிய பொருள்களைச் சம்பாதித்தலும், அங்ஙனம் சம்பாதித்த அவைகளை வைக்குமிடத்தில் வைத்துப் பாதுகாத்தலும் இல்லாமையினாலே ஆடவரும் மாதரும் ஆபரணாதிகளை அணிந்து அதனைக்களைந்து மறுத்து மறுத்து வெவ்வேறு அணிகளை அணிதலே தொழிலினராஞர் என்க. மடுத்தலும் - வைத்தலும். கொள்ளை கொள்ளத்தகும் இழை.

93. களம் பயின்று பாடினர். களம் - மிடறு. விண்ணிற்கூடிய கொம்பனாராகிய தெய்வ அரம்பையர்களானவர் ஆடலிலும் பாடலிலும் வல்ல பூவுலகமாதரை நிகர்க்கவேண்டி ஆடினர் பாடினர் என்க. வாரை அணிந்த முலை. இளமுலைக் கோலக் கொம்பனாராகிய மானிட மாதர், குழலியரான தெய்வ அரம்பையரை நிகர்க்கவேண்டிப் பாரிடை அரங்கு

கார்விளை யாடிய காமர் மின்னனார்
தார்விளை யாடுதோட் டலைவர் தம்மொடு
நீர்விளை யாடிநீள் பொழிலி னூடியுள்
ளூர்விளை யாடியு முவப்பு மிக்கனர். 94

வந்தவ ரகமனை வதிய வைகுநர்
வந்தவர் போற்புறம் வதிதன் மேயினார்
அந்திலுள் புறமென வறைவ தல்லதை
எந்திட முஞ்சிறப் பொப்ப வேய்ந்தவே. 95

கண்ணிணை யெழுதினர் கவிழ்த்த வஞ்சனம்
தண்ணிய முலையணிந் துகுத்த சாந்தமும்
வண்ணமென் மலரடி யிழுக்கன் மாண்புதேர்
விண்ணவர் மண்ணடி மிதித்த னீவினார். 96

கொன்மணி நகரமு மாதர் கோலமும்
மென்மெலப் பழகிய விழிகள் கண்டன
அன்மலி மின்னொளி யழுந்தி நின்றெனப்
புன்மையின் மிக்கன புதுமைக் கண்களே. 97

ஏறி ஆடிப்பாடி விண்ணிற்கூடுவார் எனினும் பொருந்தும். அரங்கு விண்ணுலகம்வரை உயர்ந்தது என்பது. இவர் - விரும்பும். குப்பையாய், கானாய், சேதகமாய், பிறக்கமாய் என்க.

94. மேகத்தினிடத்திலே விளையாடிக்கொண்டிருக்கும் மின் என்பதினும் மாலையானது விளையாடும்படியான தோள் என்பதினும் உள்ள விளையாட்டு என்பதற்குப் பொருந்துதல் என்பது பொருள். ஊருள் என மாற்றுக. ஊரில்.

95. புதிதாய் வந்தவர் மனையினுள்ளே இருக்க அம்மனையிற் சுதந்திரமாயிருப்பவர்கள் அம்மனைக்குப் புறத்திலே இருப்பார் என்க. உள்ளென்றும் புறமென்றும் என விரிக்க.

96. கண்ணிணையில் எழுதினராய் விடுத்த அஞ்சனமும்.

97. ஆண்டு அனுபவமுடையவர்களுடைய கண்களானவை நகரத்தின் கோலத்தையும் மாதரின் கோலத்தையும் மெல்லமெல்லக் கண்டன. புதிதாக வந்தோருடைய கண்களானவை மின்னொளியில் அழுந்தினமாத்திரத்தில் நிலைகுலைந்து ஒன்றையும் அறியாது தியங்கி இருக்குமாறுபோலப் புதுமையில் மிக்கன என்க. பகலிலன்றி இருளிற்றோன்றும் மின்னலானது அதிகமாகப் பிரகாசித்துத் தோன்றுதல்பற்றி 'அன்மலி மின்னொளி' என்றார்.

வரைகளும் வரைப்பெருங் குவடு மாமலர்
விரைசெலும் பொழில்களுங் கழித்து வீசிய
புரையொளி யிழைகொடு பொலிந்த தாங்களும்
கரைமணங் காணிய கவின்கொண் டாலென. 98

பாறயி ரிழுதுதேன் பசுங்க ழைப்புனல்
ஆறென வொழுகநன ருடிப் பூசுபு
நாறுமென் களபநல் லணிக டாங்குபு
வீறுய ருணவெலா மிசைந்த வீதியே. 99

குங்குமக் களிவிராய்க் குரும ணித்திரள்
எங்கணு ஞெமிர்ந்தொளி யிணர்த்த வீதிகள்
பொங்குபொற் றகட்டிடைப் பொருத்திப் பன்மணி
அங்குறப் படுத்ததோ ரழகு காட்டுமே. 100

சிந்துபொற் சுண்ணமென் றென்ற லுந்துபு
கந்தரக் கணமெலாந் தூர்த்த வோதையின்
வெந்திறன் மிருகங்கள் வெரீஇப்பெ யர்ந்தன
வந்துமீட் டுருவகை வாய டைத்தென. 101

பொன்மலை யரதனப் பொருப்பு நீன்மணித்
தென்மலை யெனவொரு சிறப்புப் பேர்பெறும்
நன்மலைக் குலமெலா நாணப் பொன்னுமிழ்
பன்மணிச் சிலம்பெனப் பறம்பு நின்றதே. 102

---

98. வரை முதலியன பெண்களும் ஆடவரும் களைந்து வீசிய ஆபரணங்களைக்கொண்டு பொலிந்தன எனக. புரை - உயர்வு.

99. இழுது - நெய்.

100. களி - குழம்பு. குங்குமக்களி விரவலால் பொற்றகடு என்றார்.

101. திருமணமுழக்கத்தால் அஞ்சிக் குகைகளிற் பெயர்ந்தொளித்த மிருகங்களானவை குகையினின்றும் வாராதபடி குகைவாயை அடைத்தது போலத் தென்றலானது பொற்சுண்ணத்தை உந்திக் குகையில் தூர்த்தன. கந்தரம் - குகை.

102. பொன்மலை என்றும், இரத்தினகிரி என்றும், இந்திரநீலப் பருப்பதம் என்றும் சிறப்புப் பெயர்பெற்ற மலையெலாம் நாணத் தணிகை மலை நின்றது என்க. தணிகை மலை பன்னிறமணியதாகையால் ஒவ்வோர் நிறமணி மலைகள் நாணிய என்க.

உக்கதே வர்கண்முடி யொளிர்பன் மாமணி
மக்கடாட் படவொளி மழுங்க வன்னவர்
தொக்கதா ருகுமதுத் துவர வாரிப்போய்
மைக்கடற் படுத்தது மரீஇய கேண்மையான். 103

இவரிழைக் குப்பைகுன் றிழுது பாறயிர்
தவழ்வகா ஞறுகு சாந்து சேதகம்
அவிர்மணிச் சுண்ணமெல் லயிர்ப்பி றக்கமாய்
நவமணி வீதிநா னிலமுங் காட்டுமே. 104

பொன்னினு மணியினும் பொறப்ச் செய்தணிந்
தின்னகை மாந்தரா ரிகந்த தாமரை
மின்னகு குவளையுஞ் சாந்தும் வேரியும்
துன்னிய மறுகுக ளோடை தோற்றுமே. 105

அரத்தகச் சுவடுமிக் கார்ந்து குங்குமம்
பரத்தலின் வச்சிரம் பதித்த மேனிலம்
வரத்தினை ரூற்றினை மாழ்கித் தன்னுருக்
கரத்தல்செய் மணிப்படாம் போர்த்த காட்சித்தே. 106

வேற்றுரு வாயவண் விரவெண் வேலையும்
ஆற்றுமேழ் மேகமு மழகு கண்டெனச்
சாற்றரு மோகையிற் றழுங்கி ஞலெனத்
தோற்றும்பன் மறைகளின் றுதிகண் மிக்கவே. 107

---

103. அன்னவர் - அத்தேவர். அத்தேவர் அணிந்த மாலையினுள்ள மதுவானது அம்மணி மக்கள் தாளிற்படல் தகுதியன்று என்று கருதித் தனக்குள்ள கேண்மையாலே முழுதையும் அள்ளிப்போய் கடலிலிட்டது என்க. துவர - முழுதையும். மாசுபடா மணியானது தாட்டுசிபட்டு மழுங்க என்க.

104. இழைக்குப்பை குன்றுகும், கானுறு. சாந்து சேதகமாகும் என்றதனுல் மருதம் பெற்றும். சேதகம் - சேறு. மணிச்சுண்ணம் அயிர்ப் பிறக்கமாகும் என்றதனுல் நெய்தல் பெற்றும். இவர் - உயர்ந்த.

105. பொன்னுலும் மணியாலும் தாமரை முதலியவற்றைச்செய்து.

106. பரத்தலால் மேனிலமானது காட்சித்து என முடிக்க. வருவோருடைய பரிசத்துக்கு மாழ்கி. தன்னுரு - வச்சிரநிறம்.

107. கண்டென-கண்டு. அகழாகிய வேற்றுருவாய். மறைகளாகிய வேற்றுருவாய் எனினும் அமையும்.

நேமிவண் கிரிமுத னெடிய குன்றெலாம்
தாமிவர் களிப்பிறுற் றருக்கி ஞலெனப்
போமிடந் தொறுந்தொழில் புரியு மீளுறும்
காமரு விமானமுங் கணிப்பி றேருமே. 108

நிறுத்திய நிலைநெடுந் தேர்க ளெண்ணில
கறுத்தொரு வரைதுளை கண்ட வண்ணலை
உறுத்துளக் குகையிடை யோகு முந்துமன்
மறுத்தப நின்றநல் வரைகள் போன்றவே. 109

பிலிற்று தண் மதுப்பொழிற் பொருப்பின் சேணெலாம்
இலிற்றும் மதக்களி றெண்ணி லாதன
வெளிற்றறி வினர்பொறி விழையச் செல்லுமால்
குளிற்றுவண் முரசினர் குழாம்வி லங்கவே. 110

கலஞ்சிதர்ந் திரும்புவேய் காலி டுந்தொறும்
நிலஞ்செதி ளெடுத்தவாய் நிரப்ப மாமணிக்
குலஞ்செறிந் தைங்கதிக் கோணஞ் செல்லுமால்
பொலஞ்செய்பூ ணினர்மிகாப் புலன்க ளுடியே. 111

இன்னண மணச்சிறப் பியன்ற பாணியில்
பொன்னலர்த் தவிசினுன் புரையின் மாதவர்
பன்னிய சமிதைபைந் தருப்பை யாதியின்
துன்னற மன்றல்செய் சூழ னண்ணினுன். 112

---

108. இடந்தொறும் போம்.

109. தேர்கள் எண்ணில போன்ற. உளக்குகையிடை அண்ணலை உறுத்தி யோகஞ்செய்து அசைவற்றிருக்கும் மலையைப்போன்ற. இடை உறுத்து.

110. இலிற்றும் - ஒழுக்குகின்ற. முரசினர் குழாம் விலக யானை செல்லும். வெள்ளறிவினேருடைய ஐம்பொறிகளும் கண்ட இடத்திற் செல்லுமாறுபோலச் செல்லும் என்க. குளிறு என்பது குளிற்று என ஒற்று மிக்கது.

111. குதித்துத் தாவுந்தொறும் கலம் சிதர்தலால் அக்கலத்திலுள்ள மாமணிக்குலமானது இருப்புத்தகடு வேய்ந்தகாலை இடுந்தோறும் நிலத்தைத் தோண்டியபள்ளத்தின் வாயை நிரப்ப. வாய் - காலடியின் பள்ள வாய். வாய் - இடம். ஐங்கதிக்கோணம் செல்லும். கோணம் - குதிரை. மனிதர்கள் அதிகரித்திராத இடத்தை நாடிச் செல்லும். செதிளெடுத்த - பெயர்த்த. கலம் சிதர்தலால் அதிலுள்ள மாமணிக்குலம் செறிந்து நிரப்ப என முடிக்க.

112. செந்தாமரை ஆசனனுகிய பிரமனுனவன் நண்ணினுன். செந்தாமரை என்பார் அலரென்னுது 'பொன்னலர்' என்முர்.

வேயின தோளியோர் பாக மேவுறக்
காயிலைச் சூற்படைக் கடவு ணாயகன்
பாயின வுருத்திரர் பாங்கர்ச் சூழ்தர
ஆயிடைப் புகுந்தகன் றவிசின் வைகினான். 113

வேறு

இந்திரனு மறுவிகந்த விமையவரும்
ஏவல்வினை யியற்று நிற்பக்
கொந்தொளிய கவுத்துவகின் றழகெறிக்கும்
வரைமார்பன் குமாற் றூழாச்
சுந்தரப்பன் மணிகுயின்ற மண்டபத்திற்
றுளும்புமொளித் தவிசி னேற்றி
அந்தரகங் கையைமுதலாப் பலவுமனுப்
புகன்றுமுறை யாட்டி னான். 114

செழுந்துபடு மரதனச்செம் மணிமலையிற்
செறிந்தபைங்கார் சென்று சாலப்
பொழிந்த பின்றை மஞ்சுதவழ்ந் தாலெனவெண்
டுகிலொடு புலர்த்திப் போக்கி
எழுந்தொளிருங் கிரணமணி யரைநாணுங்
கோவணமு மிலகு பட்டும்
தழுந்தரத்த வணிந்துநறுஞ் சந்தனச்செஞ்
சேறுருவிற் றயங்கச் சாத்தி. 115

தாவில்பல மறைகளுஞ்சுப் பிரமணிய
னெனவெடுத்துச் சாற்று மாறு
மூவுலகும் பெறலரிய முரஞ்சொளிய
விம்மணியாற் போலு மென்னத்

113. வேயினது தோற்றத்தையுடைய தோளியாகிய உமையம்மை மேவுற. சூற்படை - சூலாயுதம். நாயகன் - சிவன்.

115. செழுந்து - செழுமை. விஷ்ணுவைப் பைங்காராகக்கொள்க. அம்மலையில் வெண்முகில் தவழ்ந்தாற்போல. தழுவுந்தரத்தை உடையன வற்றை அணிந்து.

தேவர்களு மருட்கைகொடு நோக்கநவ
மணியிமைக்குந் தெய்வ மோலி
பூவமலு நறுங்குஞ்சி கைசெய்த
திருமுடியிற் பொற்பச் சூட்டி. 116

பாண்டரங்க னுதற்கிளைத்த பரவையொளி
விழித்தழற்பல் புலிங்கம் போலாம்
ஈண்டிலங்கு மணியுருவா யெழுந்துலகந்
தழன்மகனென் றியம்பப் பட்ட
ஆண்டகைமைக் கங்கிவிழி மிகையாமென்
றணியாத நுதலின் மாதோ
காண்டகுமக் கனல்விழிபோற் கதிர்க்குமர
தனவோடை கவின வீக்கி. 117

காமவேண் மணிக்கவிகை மருங்கடுத்த
கொடிமகரங் கடுத்துங் கஞ்சப்
பூமரீஇப் புறங்கிடந்த மகரமொடு
மலைத்துமெழில் பூப்ப முன்னர்
நாமநீர் நறும்பொய்கை யிருந்ததற்கோ
ரடையாள நண்ணிற் றென்ன
ஏமவா னுலகேத்து மணிமகரக்
குழைசெவியி னிலங்கத் தூக்கி. 118

மண்டியதன் பெருங்கீர்த்தி வயங்குமதி
யெனவண்ட வகுப்பு முற்றும்
கொண்டொளிர்வ தாகரமற் றிவனேயென்
றுலகமெலாங் குறிப்ப மும்மைப்

---

116. குஞ்சியை அலங்கரித்த முடியில் மோலி சூட்டி. கைசெய்த. சாற்றுமாறு போலுமென்ன. சுப்பிரம் - நன்மை. சுப்பிரமணியன் - நன்மையான மணியையுடையவன். மருட்கை - வியப்பு.

117. புலிங்கமாம் உருவாய் எழுந்து. போல் ஒப்பில் போலி. பரவை - பரத்தல். மிகையாம் என்று - அதிகமாமென்று. எழுந்து - எழுதலால்.

118. கடுத்தும் மலைத்தும் இலங்கத் தூக்கி. மகரகுண்டலமிருத்தலால் அடையாள நண்ணிற்றென என்றார். குழை மணிக்குழையாகலான் அக்குழையைக் கஞ்சப்பூவாகவும் அதிலுள்ள மகரத்தைக் கஞ்சப்பூவின் புறத்தே கிடந்த மகரமாகவுங்கொள்க. முகத்தைக் கஞ்சமாக்கொள்க.

புண்டரமென் றவிர்நுதலிற் செங்கதிரென்
றண்டமெலாம் புகர்கால் சீக்கும்
மிண்டுபிர தாபமுமவ் வாறடுத்தா
லெனத்திலக மிளிரத் தைத்து. 119

சேந்துமதர்த் தரிபரந்து குழைகிழிக்கும்
இருமாதர் செழுங்கண் வாய்வைத்
தேந்துநலன் முழுதுமினி துண்ணவரை
தலினேனை மாத ரங்குப்
போந்தவர்கண் புகுந்துழக்கி மிச்சில்படுத்
தாவரணம் போலத் தோளில்
காந்துமணி யங்கதமும வரைமார்பிற்
பலகலனுங் கஞலப் பூட்டி. 120

தன்னுருவிற் றொழிற்கும்வினை முதருனே
யெனுந்தன்மை சகங்க டெள்ளத்
தன்னுருவிற றொழிற்கருவி தானாகு
மணிக்கடகந் தடங்கை யேற்றித்
தன்னுருவி னிளையனுமாய் முதுக்குறைவிற்
பெரியனுமாந் தனையே யொக்கும்
தன்னுருவிற் சிறுத்துவிலை வரம்பிகந்த
மணியாழி ததையக் கோத்து. 121

அரிக்குரற்கிண் கிணிசிலம்புந் தண்டையுஞ்சே
வடியணிந்து பணிந்தான் கீர்த்தி
விரிக்குமறு முகவனெழுந் தியமியம்பக்
கொடிதுவன்ற வீங்கு மல்லைப்

---

119. கீர்த்தியானது மதியாக ஒளிர்வது. அங்ஙனமொளிருங் கீர்த்திக்குச் சிவனேயிடமென்று குறிப்பதற்குத் திரிபுண்டரமென்று அக்கீர்த்தியே அவிர்கின்ற நுதலென்க. அப்படிப்பட்ட நுதலில் திலகம் தைத்தென்க.

120. கண்ணாகிய வாயை வைத்து. போந்தவருடைய கண் என்க. அரணம் - கலசம். வரைதலின் மிச்சில்படுத்தா அரண்போல.

121. வயிரக்கடகம். முதுக்குறைவு - அறிவு. வச்சிரமணியானது தன்னைத் துளைத்தற்குந் தானே கருவியாகலான் அவ்வாறு கூறினார். தன்னுருவிற் றொழிற்கருவி - தன்னுருவினது துளைத்தற்றொழிற்குக் கருவி.

பொரிக்குமதிக் குடைநிழற்ற வரம்பையர்சா
மரையிரட்டப் புலவர் சூழப்
பரிக்குமணிக் கலனிவுளி யிவர்ந்தூர்ந்து
நகர்வீதி படர்ந்து சென்றான். 122

வேறு

கொங்குலாம் வீதியி னகருளார் பணிசெயக் கொடுசெலும்
எங்கணா யகனெதிர் முனிவரர் யாவரு மினிதமை
பொங்கொளிக் கரகநீர் தூவியா சிகள்புகன் றேத்தினார்
மங்கைய ரெண்வகை மங்கலங் கொண்டெதிர் வாழ்த்தினார். 123

பஞ்சுநெய் நாவியும் பளிதமு நீவிய தீஞ்சுடர்
விஞ்சுபொற் படலிகை யேந்திவிண் மாதரார் மென்மெல
அஞ்சிலம் படிபெயர்த் திடுகிடை துவளமுன் னண்மினார்
மஞ்சனை மரபுளி காட்டினா ரீட்டினார் மாதவம். 124

வாம்பரி நின்றிழிந் தெம்பிரான் மன்றல்செய் மண்டபத்
தோம்புமுன் வாய்தலிற் சேறலும் வேடர்கோ னுரிமையாள்
தீம்பயத் தாட்டினாள் சேவடி மாமலர் சூட்டினாள்
ஏம்பலுற் றயினிநீர்ச் செஞ்சுடர் சுற்றியிட் டாளரோ. 125

அகவயிற் சென்றன னம்மையோ டப்பரைத் தாழ்ந்தனன
நகுமுகத் திருமுது குரவர்த மேவலி னவமணித்
தகுபொலந் தவிசிடை வைகினான் முன்னரே சார்ங்கனால்
திகழுமலர் மாதராள் வள்ளியைச் சேர்ந்திது செய்தனள். 126

---

123. கொடு - அப்பணியை ஏற்றுக்கொண்டு.

124. ஆலாத்தி காட்டினார். சுடர் - தீபம். பஞ்சும் நெய்யும். காவி - கஸ்தூரி. பளிதம் - பச்சைக்கற்பூரம். பஞ்சு - திரி. நீவிய - தடவிய. படலிகை - விளக்கு வட்டில். ஏந்திக் காட்டினார். நெய்யும் நாவியும் பளிதமும்தடவிய பஞ்சிலுள்ளசுடரென்க. மஞ்சனை - மைந்தனை.

125. உரிமையாள் - வள்ளியம்மையின் தாய்.

126. அகவயின் - மண்டபத்துள்ளே. மலர்மாதராள் - இலக்குமி. விஷ்ணுவின் ஏவலாற்செய்தனள்.

வேறு

விசும்பு மகளிர் முனிவர் மகளிர் விரசிப் பரசித் தொடர
அசும்பு நறிய மதுமென் கோதை யளகத் திருவண் களபம்
இசும்புண் முலையிற் றிவளு மறுவை யிளக விறைஞ்சி யெழுந்து
தசும்பு நிகரு முலைமெல் லியன்முன் றரித்த கோலந் தணத்தாள்.

நாமா மகளுஞ் சசியு மேவ னயந்து புரிய நறுமென்
பூமாண் டயில மள்ளி வளைகள் புலம்ப வோதி யுரைத்துத்
தீமா ணெல்லிக் கனியுண் சார்ந்து திமிர்ந்து விரையுந் துவரும்
ஓமா லிகையு முரிஞி யுடல மொளிர மண்ணுச் செய்தாள். 128

ஈரம் வறல நுழைநூற் கலிங்க மேந்தி முழுது முளர்ந்து
நீரி னனைந்த தூசு களைந்து நிகரில் செம்பட் டுடுத்துத்
தாரு மணியின் வடமு நான்ற தலனிற் றவிசி னிருவி
ஓரு மிபத்தின மருப்புச் சீப்பி னோதி வாரி முடித்தாள். 129

வேறு

முழுதுலகுங் கமழ்நானக் கலவைவிரைப்
புகையூட்டி முறையி னீவிக்
குழலளகம் வகுத்தமைத்துக் கொண்டையெறு
மேற்றிமில்சீர் குறைய வாக்கி
நிழலுமிழ்நீன் மணிப்பணிச்சை பஞ்சையிணை
விரித்தியற்றி நிகரி லைமபால்
அழகெறிப்ப நித்திலமா லிகைநான்ற
மணிமகர மமையச் சேர்த்தாள். 130

---

127. திருவானவள் இறைஞ்சியெழுந்து வள்ளியம்மையின் முன்பு தரித்திருந்த கோலத்தைத் தணத்தாள். களப இசும்பு. இளக - விலக.

128. இலக்குமி அள்ளி. வளைகள் - சங்க வாத்தியங்கள். ஓதி யுரைத்து - ஓதியிற்றேய்த்து. நெல்லிச்சாந்து. ஓமாலிகை - வாசனைப் பொடி. வளைகள் - தொடிகள். உரிஞி - தேய்த்து.

129. நுழை - நுட்பம். உளர்ந்து - ஒற்றி.

130. குழல். ஐம்பால் - முடி, கொண்டை, சுருள், குழல், பனிச்சை. இவற்றுள் மயிரை உச்சியின் முடித்தலே முடி; பக்கத்தின் முடித்தலே கொண்டை; பின்னே செருகல் சுருள்; சுருட்டி முடித்தலே குழல்; பின்னி விடுதலே பனிச்சை என்பது காண்க. அளகம் என்பது முடி. பஞ்சை யிணை என்பது சுருள். நீவி - சீவி. கொண்டையை இடபத்தின் முரிப்புஞ் சீர்குறையும்படியாக்கி. மகரம் - மயிர்மாட்டி.

வேறு

தூநறுங் குவளைப் போது தொடிக்கையி னெரித்து வாங்கித்
தேனறு வேங்கை நாறுந் தீங்குழற் செருகி முல்லைப்
பூநறுந் தொடையன் முச்சிப் புறங்குலா யீழப் பைந்தார்
கானறுங் கதுப்புச் சுற்றிற் காருமிழ் மின்னிற் சூழ்ந்தாள். 131

முழுதெழிற் றிறத்தா னேற்ற முதன்மையாற் றன்னைத் தாழ்த்த
பழுதிலாள் சென்னித் தன்போற் பயிற்றிய தெய்வ வுத்தி
வழுவிய பிறையுஞ் சூட்டாண் மயில்வலம் புரியுந் தாழ்த்தாள்
ஒழுகொளிப் பிறைமா மஞ்ஞை யுறுத்தின ளுறுவ தோர்ந்தே.

காரெனக் கிளத்தற் கேற்பக் கண்ணுதல் சடில வாழ்க்கைச்
சீரிய பிறையுங் கானஞ் செப்புதற் கேற்பச் செவ்வேள் [தாள்
போரியல் கொடியின் வாழ்க்கைப் பொறிமயிற் போத்துஞ் சேர்த்
வாரியன் மணிப்பொற் சுட்டி தாழமண் ணுறுத்தா ளன்றே. 133

இளமழை யூடு போந்தங் கிலங்குமோ ரரவ நக்கும்
பிளவியன மதியே போலும் பிறங்கொளிச் சுட்டி தாழா
உளர்நறு நுதலி னோடே வுருகுபொற் பட்டம் யாத்து
வளவிய நாகங் கான்ற மணியெனத் திலக மிட்டாள். 134

பாட்டளித் துளவத் தாரான் பயத்தலி னவன்போன் மைத்தும்
சேட்டிளம பிணைமா னீன்ற செய்தியா லதன்க ணொத்தும்
வேட்டுவர் குலத்துச் சார்பா லவர்கைவெஞ் சரத்தின் வைத்தும்
காட்டிய விழிக்கு மாதோ கரியமை யெழுதி யிட்டாள். 135

---

131. முல்லைத்தொடையை முச்சியிலும். முச்சி - கொண்டை. புறம் - இடம். குறிஞ்சிநிலமகளாகலின் வேங்கைநாறும் குழலென்றார். வேங்கை - வேங்கைப்பூ.

132. இருதிறத்தாலுந் தன்னைத்தாழ்த்த வள்ளியம்மையின் சென்னியில் இருப்பது தகுதியன்றென்று கருதி, மயிலும், வலம்புரியுமென்னும் ஆபரணம் வேடமாதர்க்குரியவை. அவற்றை இப்போது ஒழித்தாள். பிறையையும் மஞ்ஞையையும் உறுத்தினள். இதனை அடுத்த செய்யுளில் விரித்து உரைத்துச் சேர்த்தாள் எனச் சுட்டினார்.

133. கூந்தலைக் கார் என்று. கூந்தலைக் கானம் என்று. காருக்கும் பிறைக்கும், கானத்துக்கும் மயிலுக்கும் இயைபுண்மையால் அவ்வாறு கூறினர். சேர்த்தாள் வினையாலணையும்பெயர்.

134. கூந்தல் மேகம், சுட்டி அரவம். நுதல் மதி. ஓட உருகிய பொன் என்க. தாழ்ந்து உளர்கின்ற நுதலில். உளர்தல் - தடவல். மதியே போலும் நுதலின்.

135. மைத்தும் - கருத்தும். வைத்தும் - கூர்மையாயும்.

நலம்புரிந் தருள வேண்டி நறுமுகை முல்லை மூரற்
குலம்புரி பவளக் கோயிற் கொழுமணி வாயில் காவல்
வலம்புரி யொருமுத் தண்மி வதிந்தென வார்ந்த நாசி
வலம்புரி முத்த நான்ற வயங்குபொற் றொடரைக் கோத்தாள். 136

பங்கய மலரை வென்ற பாயரி மதர்க்க ணோக்கிச்
செங்கய லீது மாந்தித் தேக்கலா மென்று போந்து
தங்கிய மகர மென்னத் தரித்தனள் குழைவார் காதில்
அங்கது வெகுண்டு தாக்கி யலைப்பநின் றலையு மன்றே. 137

வானர மகளிர்க் கெல்லாம் வதுவைசூட் டிடவோ ரங்கை
தானமைத் தருளு மையன் றரிக்குமங் கலநாண் டாங்கும்
நானவண் களத்துக் கட்டு வடநகை மணிக்காழ் சூழ்ந்தாள்
ஆனவொண் ணிதிகள் பாங்க ருங்கல னுமிழ்ந்த வேபோல். 138

தனையடுத் தவரைத் தன்போற் றகைநலத் துறுத்துவான்போற்
கனைகதிர் மணிபொற் காழுங் கடிமலர்த் தொங்கன் மற்றும்
புனைவன தாங்கி வல்லாப் புணர்முலைக் கணிசெய் தோங்கும்
வனைபுகழ்ப் பணைமென் றோளை வயிரவங் கதம்பூண் பித்தாள். 139

---

136. தந்தமானது முத்தாகிய தனக்கு நலஞ்செய்யத் தான் விரும்பி. பவளக்கோயில் என்னும் வாயினது வாயிலில் காவலாக வதிந்தாற்போல. தொடர் - மூக்கணி.

137. கண்ணை நோக்கிக் கயல் ஈதாகுமென்று தங்கிய மகரம்போல் காதில் மகர அணியைத் தரித்தனள். அங்கது - கண்ணாகிய கயல்.

138. சங்கநிதி, பதுமநிதி. ஐயன் தரிக்கின்ற மங்கலநாணைத் தாங்கும் களத்தில். களத்தைச் சங்கநிதியாகவும் முகத்தைப் பதுமநிதியாகவும் கொள்க. மணிக்காழ் - மணிவடம்.

139. தாங்கி ஓங்கும் தோள் என்க. தோள்களானவை ஆபரணத்தைத் தாம் சுமந்து முலைகளுக்கு அழகு செய்தலின் 'முலைக்கணிசெய்து' என்றார். தம்மைப்போலச் சுமக்க வல்லமையில்லாத முலைக்கென்க. அதிக பாரத்தைச் சுமப்பதற்குப் பூண் பிடித்துப் பலப்படுத்தல் வழக்காகலின் 'தோளை வயிர வங்கதம் பூண்பித்தாள்' என்றார். உறுத்துவானாகிய ஒரு மனிதனைப்போல முலைக்கணி செய்து என்க.

புரிமுறுக் கவிழுங் கஞ்சப் பூவினை வாட்டு மங்கை
விரிமலர்க் கஞ்ச நண்பன வெய்தடுத் திரந்து நின்றுங்
கெரிமணிக் கடக முன்கை யினவளை செறித்துப் பூட்டித்
தெரிமணி யாழி கோத்துச் செறித்தனள் விரல்க டோறும். 140

குளிர்பனி நீரிற் சேர்த்துக் குங்குமக் கலவை கொட்டி
ஒளிமணி தகர்த்த சுண்ண முறுபுகை யப்பி யூட்டித்
துளிமதுத் தொங்கல் பொற்றூர் சுடர்மணி மதாணி மற்றும்
தெளிகதிர் முத்த மாலைத் திரளொடு கவினப் பூண்டாள். 141

முகநிதிக் கமல மீன்ற முத்தமோ களச்சங் கீன்ற
புகரினித் திலமோ மென்றேட் புனக்கழை சொரிந்த வோகற்
றகர்முலைக் களிற்றுக் கோட்டுத் தரளமோ வென்னு மாரம்
திகழ்நகை மணியைத் தாழச் செவ்விபார்த் திருப்ப போந்தே. 142

கச்சப வடிவிற் றாகிக் கடலெனப் பரந்து தோன்றி
வெச்செனத் தாக்கும் வேழ வேந்தின்மத் தகத்தைச் சீறி
முச்சகம் வணக்கு மாரன் மூரிமான் றேரைத் தாழ்க்கும்
அச்செழு நிதம்பஞ் சேர்த்தா ளமபெயர் பூண்ட காழும். 143

மேருவு மேருச் சென்னித் துருவனும் வெளியு மாங்குச்
சாருடுத் திரளுந் தாரீர்த் தடத்திடை நிழற்றிற் றென்ன
வாருறு முலையும் வார்ந்த மயிர்மணி யொழுக்கு நள்ளாய்ச்
சேருநுண் ணுசுப்பு மல்குற் செறித்தபல் காழுந் தோன்றும். 144

---

140. அங்கையை அடுத்து. நண்பன் - சூரியன்.

141. சுண்ணத்தை அப்பி, புகையையூட்டி. மதாணி - பதக்கம்.

142. சொரிந்தவோ - சொரிந்த முத்தோ. கல் - மலை. ஆரம் - முத்துமாலை. ஆரமானது நகைமணியென்னுமோர் ஆபரணத்தின் றாழே என்றும் போந்திருப்பன. முன்னர் 138-ம் செய்யுளிற்கூரிய நகைமணியை ஈண்டுக் கூறினர். நகையாகிய மணி என்போர் சிலர்.

163. தேரை - தேர்த்தட்டை. வேழவேந்து - அயிராவதம். காழ் - மேகலை.

144. வெளி - ஆகாயம்.

கிம்புரி வடிவின் மின்னுங் கிளர்மணிச் செறிகை பற்றிக்
கம்பமால் களிநல் யானைப் பிணர்படு காமர் கையும்
உம்பர்வா ழேக்கும் வாழை யுருவமும் வறிய வாக்கிச்
செம்பொன்வார் கலையிற் பட்டிற் றிகழ்குறங் கணிதல்செய்தாள்.

சில்லரிச் சிலம்பு செம்பொற் கிண்கிணி பாத சாலம்
புல்லிய பரடு கவ்விப் புலம்புற வணிந்து வார்ந்த
நல்லெழில் விரன்ம ருவி னகைமின்னுச் செறியு ளாக்கி
வில்லுமிழ் பட்டின் றேக்கை மேதக விரீஇயி னாளே. 146

அலத்தக மெழுதக் கைக்கொண் டம்மல ரடிக ணோக்கி
நலத்தகு தளிர்க்கை நோக்கி யவற்றெருளிர் நகமு நோக்கிக்
குலத்தகு பவள வாயுங் கூர்மணி நாவு நோக்கி
நிலத்திடை யிட்டா ளூட்டா நிறத்தொடு நேரா தென்றே. 147

பிறர்க்கணி படுக்கு மாற்று லணியெனும் பெயர வெல்லாஞ்
சிறக்குமின் னனையாண் மெய்யிற் சேர்ந்தணி பெற்றுமுன்னர்
உறுத்தவப் பெயரி னீங்கா வாயின வொருவர் தம்பால்
துறுத்திடப் படார்கொ லொண்மை துறுத்தவ ரெவர்க்கு
[மொண்மை 148

---

145. மணிச்செறி - துடையில் அணியும் குறங்கு செறி ஆபரணம்; பிணர் - சருச்சரை. பூண்வடிவின்போலு மின்னுகின்ற துடைக்குப் பூண் வடிவினைப்போன்று இருக்கின்றதென்க.

146. மருவு - அரைப்பட்டிகை. மின்னுச்செறியுள் - மணிச்செறிகை யுள், தோக்கை - முன்றானை. பரடு - கரட்டுக்கால். விரீஇயினாள் - விரித்தாள். இலக்குமியானவள் தான் அலங்கரிக்கும் கால் தன் விரலான் ஆக்கி விரீஇயினாள். மருவின கையை மேலும், மின்னுச் செறியை உள்ளு மாக்கி. கையாற்பற்றி அணிதல் செய்தாள்.

147. அலத்தகத்தை நிலத்தில் வறிதாக இட்டாள். அலத்தகத்தை ஊட்டாத இயற்கை நிறத்தோடு அலத்தகமூட்டலாகிய செயற்கைநிறம் ஒவ்வாதென்று இட்டாள் என்க.

148. எல்லாம் நீங்காவாயின. அப்பெயரில் - அவ்வணி என்னும் பெயரில். எவர்க்குமொண்மை துறுத்தவர்கள். ஒருவர் ஒண்மை தம்பால் துறுத்திடப்படார்கொல்? ஒருவர் துறுத்திடவென இயைக்க. அணி பெற்று - அழகைத் தாம் பெற்று.

செந்திரு நமக்குச் சேமஞ் செய்தவவ் வணிக ளன்றே
இந்தமான் பிணைக்கொப் பித்தா மீதென்ன மருட்கைத் தம்மா
முந்தறி யாத காமர் முதிர்ந்தவென் றயிர்த்து நொந்தாள்
அந்தின்மற் றிருந்தோர் தாமு மயிர்த்தன ருயிர்த்து நின்றார். 149

ஆடவர் திலக னான வமரருக் கமரன் வார்வில்
வேடர்தங் காளை யாகி வேங்கையாய் நிழற்றிச் சால
வாடினா னடியில் வீழ்ந்த மரபெலாந் தகவே யனறே
ஈடரு மயிலின் சாய லிவள்கடைக் கணித்தற் கென்றார். 150

பெண்மையாற் பெண்க ளெல்லாம் பெருந்தவ மாற்றி யாண்மை
வண்மையாற் கோடு மென்ன மதிநனி யுடற்றுங் கற்பின்
திண்மையா ளன்னை யான செய்தியா லெவர்க்கு மாண்மை
உண்மையா னஃதன் றாயி னுரையொடுங் கெடுவ தென்றார். 151

நாரணன் மார னேனோர் நலத்தகு தன்மு னீங்கின்
சீரணி யழக ராகுஞ் செறிவனப் புடைய நம்பி
வாரணி முலையாட் கொத்தான் மங்கையர் யாருந் தன்முன்
ஏரணி யில்லா ராகு மிவளவற் கொத்தா ளென்றார். 152

அழகினி னிளமைக் காம்பி னழிவிலா யுதத்திற் காப்பின்
விழைவருள் கவிகை மாண்பின் வீரத்திற் கல்விச் சால்பின்
முழுவலி யிருள்கால் சீக்கு முதன்மையி னிகரில் லானைத்
தொழுமண வாள னுக்குஞ் சுந்தரி தவம்யா தென்னு. 153

---

149. செந்திரு நொந்தாள். ஒப்பித்தாம் - அலங்கரித்தாம். மருட்கை - வியப்பு. சேமம் - இன்பம். அணிகளை அன்றே ஒப்பித்தாம். நமக்குச் சேமம்செய்த எனவே நம்மை அலங்கரித்த என்பது.

150. ஆடினனுய் இவள் பாதத்தில் வீழ்ந்த மரபெல்லாம் என்க.

151. கொள்வேமென்று சொல்ல வள்ளியம்மையானவள் யாவருக்கும் அன்னையாயிருக்கும் ஏதுவினுலே யாவரும் இச்சியாதிருப்ப அதனுல் யாவர்க்கும் ஆண்மையுளதாயிற்று. ஆண்மையானது ஆண்மையென்னு முரையொடும். ஆண்மையுளது. ஆன் சாரியை. அன்னையாஞ் செய்தியன்றுயின்.

152. முருகனெதிர் நின்றும் நீங்கினுல் நாரணன் முதலியோர் அழகராவரென்க. ஆகும் - ஆதற்கேதுவாகிய.

153. முழுத்த வலிய ஆணவ இருளை என்க.

வேறு

சிந்தா மணியே தெய்வத் தருவே
கொந்தார் தருவிற் குலவுங் கொடியே
அந்தா மரைசங் கெனுமா நிதியே
நந்தா வொளியே நறையே யமுதே. 154

மாவின் குயிலே மருதின் கிளியே
காவின் மயிலே கானப் புறவே
பூவின் னனமே புறவின் பிணையென்
றேவின் விழியா ரினிதேத் தினரால். 155

வேறு

பூமருவு பந்தர்ப் பொலந்தவிசி
னின்றெழுந்து பூங்கொம் பொன்று
காமரணி யணிந்து காவணத்தி
னூடுநடை கற்று லென்னத்
தேமருவு கோதைத் திலகத்
திருநுதலா டிரள்சங் கார்ப்பப்
பாமருவு பாடல் பயிலமட
வார்சூழப் பையச் சென்றாள். 156

கம்மப் பலகலனும் வில்லுமிழ
நூபுரமே கலைக ளார்ப்பப்
பொம்மற் குவிமுலை யோபாரம்
பொறையரிது போலு மென்ன
அம்மெல் லிடைவருந்த வங்கை
வளைதெளிர்ப்ப வான்றோ ரென்றுஞ்
செம்மற் கடிவினைசெய் தெய்வமணி
மண்டபமுன் சேர்ந்துள் புக்காள். 157

---

155. புறவின் பிணையே என்று.

157. தெளிர்ப்ப - ஒலிக்க. தெளிர் - உள்ளோசை. கம்மியராற் செய்த கலன். கம் - கம்மியரது தொழில். கம்ம - கம்மென்னும் தொழில் வாய்ந்த.

செம்பொன் மணிப்பீடத் தும்பர்பிரான்
சேவடிக்கீழ்ச் சென்று தாழ்ந்து
பைம்பொன் னிழைசுமந்து பாங்கிருந்தாள்
பாதம் பணிந்தன் னோர்தம்
வம்பில் கருணை மழைக் குத்தழைத்
தரும்பி மலர்ந்த கற்பக்
கொம்பிற் கொளவொசிந்து தம்பெருமான்
பால்குறுகி வைகி னளால். 158

நம்பியென் றியற்பேர் பூண்ட நற்றவ வேட னண்மிப்
பம்பிய பரமா னந்தன பயந்தவிர் சதாசி வன்றன்
வெம்பழல் விழிக்கட் டந்த வேலவற் கென்பால் வந்த
கொம்பினைக் கொடுத்தே னென்று தன்வழிப பெயருங் கூறி. 159

மங்கலத் துழனி பொங்க வாசநீர் மனைவி நீட்டச்
செங்கையேற் றுகுத்து நல்கத் தேவர்க டேவ னேற்றுன்
பங்கய னுமாம கேசர் பாதபூ சனைசெய் தேத்தி
அங்குரந் தெளித்து முன்கைக் கங்கண மார்த்தல் செய்தான்.

மூத்தநூல் வழியா நாந்தி முகமெனுஞ் சிராத்த மோம்பிப்
பாத்திய முதல மூன் றும் பாஙகுற வமைத்துக் கொண்டு
தீத்தகு குண்டந் தூய்மை செய்தத னகத்தி ரேகை
ஆத்தகு வடசார் கீழ்சா ரந்திப்பத் தொடங்கி வார்த்தான். 161

இழைத்துவிட் டரத்தை நாப்ப ணிருத்திப்பூத் திருநீர்தோய்ந்த
தழைத்தபா சொளியின் மேனித் தயங்கிழைச் சத்தி யோடு
மழைத்தட நாற்கை முக்கண் வயங்குசெவ் வுருவி னானை
உழைத்தவி சளித்து றுத்தி யுவப்புறப் பூசை செய்தான். 162

---

158. பிரான் - சிவன். இருந்தாள் - உமை. கொம்பைப்போல.

160. உமாமகேசர். வேடன் உகுத்து நல்கச் சிவன் ஏற்றுன்.

161. மூத்த - பழைய. நாந்திமுகம் - பிதிர்க்களைக்குறித்துச் செய்வது. அக்குண்டத்தில் இரேகையை வார்த்தான். வார்த்தான் - நீண்டு ஒழுங்குபடச்செய்தான். இரேகையானது வடசாரும் கீழ்சாரும் முடிவு பெறவென்க. மூன்று - பாத்தியாசமனார்க்கியம். ''திருவளருஞ் சுபக் கிரியை அனைத்தினுக்கு நாந்திமுகஞ் செய்தல்வேண்டும்'' என்றார் திருவானைக்காப்புராணத்திலும்.

162. விட்டரத்தை இழைத்து. விட்டரம் - ஆசனம். ஓர் பிடி தருப்பை. தவத்தோர் பீடம். பூத்து இருநீர் தோய்ந்த சத்தியோடு

அரணியின் ஞெலிந்த வங்கி யரதனக் கலத்தி லாக்கி
இரணவல் லரக்கர் சாய வெடுத்ததில் வறிது போக்கி
வரமுறப் பார்த்து விந்து வயங்கமிழ் தெடுத்து வைத்துப்
பரவுறப் படுத்து முக்காற் பாணியிற் கொட்டிச் சூழ்ந்தான். 163

மாசறு மங்கி செங்கை மறித்தனன் வளைத்துப் பற்றி
நாசியிற் பூர கத்தா னடத்திவிந் துவினுங் குள்ள
தேசொளி யோடுங் கும்பித் துந்தியிற் செலுத்தி யங்கண்
வீசொளி விராய்வி டுத்து விளங்கவுற் பவமுள் வைத்தான். 164

அருச்சனை நிரப்பித் தெய்வ வான்முலை யமிழ்தம் பாய்த்தித்
திருத்தக வலைத்துக் காவல் செய்துமீட் டருச்சித் தங்கி
கரத்தினி தேந்தி முக்காற் காமரு குண்டஞ் சுற்றி
இருத்துபு முழந்தாள் பூமி யெதிருற வகத்தி னிட்டான். 165

வடகிழக் கெல்லை சென்னி வைத்தனன் பள்ளி கொண்ட
கடவுளாற் சத்தி குக்கிக் கதிர்த்தவீ ரியமாய்ப் புக்குச்
சுடரெரி கருப்பங் கொள்ளத் தொடங்குபு கருப்பா தானம்
நடுவண முறையி னுற்றி நாமமு நல்க விட்டான். 166

சிவனைப் பூசைசெய்தான். ஈண்டு விட்டரமென்றது ஓர் பிடி தருப்பையை அன்று. உழை - அவ்விடத்திற்குப் பக்கத்தில். இருது சங்கமனம் - நாயகியின் ருதுகாலத்தில் நாயகன் கூடும்படி செய்யுங் கிரியை. ''இருது சங்கமமின்றெனிற் கருப்பமின்றதனால்'' என்பதும் அப்புராணம்.

163. தீக்கடைக்கோலில் எடுத்த அக்கினியைப் பாத்திரத்தில் வைத்து, சிறிதெடுத்து அரக்கர்சாயப் போக்கி நிரீக்கணமாகப் பார்த்து, நெற்றியிலெடுத்து அக்கினியில் வைத்து என்றதனுற் புரோட்சணமும், படுத்து என்றதனுல் தாடனமும், கொட்டி என்றதனுல் தாளத்திரயமும் பெற்றும்.

164. செங்கையை மறித்தனனுய் வளைத்து என்றதனுல் அவகுண்டனம் பெற்றும். அவ்வக்கினியைப்பற்றி நாசியில் நடாத்தி, அவ்வக்கினி விளங்கிக்கொண்டிருப்ப என்க. உற்பவம் - கர்ப்பந்தரித்தல். பூரகம் - ஏற்றல். பற்றிய அக்கினியைக் கும்பித்து.

165. அக்கினிக்கு நிரப்பி பாய்த்தி என்க. குண்டத்தில் முக்கால் அக்கினியைச் சுற்றி, தான் முழந்தாளைப் பூமியில் ஊன்றிக்கொண்டு அக்குண்டத்தில் இட்டான். எதிருற முழந்தாளை இருத்துபு.

166. கருப்பாதானம் - கருப்பம் தரிக்கும்படி செய்யுங் கிரியை. குக்கி - வயிறு.

வளர்சிவ வங்கி யீன்ற வரதரை யலர்க டுய்த்தன
உளமலர்க் கமலத் தாக்கி யருக்கிய வுதகந் தூவித்
தளைசெய்மே கலைநாற் பாலுந் தருப்பைகள் பரப்பிக் கஞ்சன்
துளவின னரன வந்தற் றேற்றினன் கீழ்சா ராதி. 167

பரிதியங் குறுத்தி மேலாற் பண்ணவர்க் கிறைமுன் னேரை
விரவுறு தத்தந் திக்கின் மேதக விருத்தி நெய்தூங்
கருவியை யிழுதைத் தூய்மை கண்டழ லிதயப் போதில்
பரமனைப் பயிற்றிப் போற்றி யாகுதி பல்ல செய்தான். 168

அங்கியின் மேல்பா லிட்ட வாதனத் திருத்தித் தூசு
கொங்கலர் மனுவி னல்கி யிடையிடை குறித்த வோமப்
பொங்கெரி வளர்ப்ப நம்பி பூவைத னிதயந் தொட்டான்
சங்கர னுமையென் றுன்னித் தருமது வருக்க மேற்றான். 169

இஞ்சுவைச் சொன்றி யுய்ப்பத் திருவிழிப் பார்வை நல்கிக்
காஞ்சனக் கலத்தி னீட்டுங் கடவுளா சமனம் வாங்கிப்
பூஞ்சுரைக் காம தேனுக் கன்றெடும் போத நோக்கித்
தாஞ்சிகை யழற்கு வாமந் தன்னிலே முடியிட் டானல். 170

அச்சுதன் முன்ன ரீன்ற வரிவைதன் னிடத்து மூவா
அச்சுதந் திரனர் நெற்றி யங்கியிற் கதித்துப் போந்த
அச்சுதன் வலக்கை பற்றி முறையினே முடியிட் டண்மி
அச்சுதந் தெளித்து வல்லி யடியெடுத் தமமி யிட்டான். 171

---

167. சிவாக்கினியைப் பெற்ற. ஆக்கி - ஒடுக்கி.

168. பரிதி - சமித்து. தூய்மைகண்டு - தூய்மைசெய்து. அக்கினியின் இருதயத்தில்.

169. மதுவர்க்கம்.

170. சுரை - ஆன்முலை.

171. விஷ்ணு ஈன்ற தெய்வயானை. சுதந்திரனர் - எப்பொருளையும் சுதந்திரமாகவுடையவராகிய சிவன். அச்சுதன் - மூன்றுமடியில் அப் புதல்வன் என்க. அச்சுதம் - அறுகரிசி. மூவா அச்சுதன். தெய்வ யானையை இடப்பாகத்திற் கெடாது வைத்திருக்கின்ற சுதன். வள்ளி யம்மையின் இடதுபக்கத்தில் என்பாருமுளர்.

பொரியெரி மனைவி யட்ட வுடனின்று போந்து முன்போல்
எரிமணித் தவிசின் வைகி யிலங்குமங் கலநாண் வாங்கித்
தெரிவைதன் மிடற்றிற் றேவ துந்துமி முழங்க யாத்தான்
பிரமனு முற்ற வங்கி வினையினைப் பிறக்கி யிட்டான. 172

ஆர்த்தன பணில மாதி யாடின கணங்க டுள்ளித்
தூர்த்தனர் சுரர்பூ மாரி சுரந்தன துதியின் சும்மை
போர்த்தனன் புளகம் வேடன பொடித்தன வுவகை யார்க்கும
நீர்த்தனுங் கருணை கூர்ந்தான் றேவியு மகிழ்ச்சி பூத்தாள். 173

வேடர்கோ னீரி னல்க வேலவ னேற்ற லோடும்
ஆடில விமைக ணீழ லளித்தில துருவ மாலை
வாடில குழலின வண்டு மருவில நுதலின் வேர்வை
கூடில மாசு தூசு கொண்டில மாத ராட்கே. 174

பொறிமயிற் புலத்தை யோம்பிப் பூவையைக் கவர்வான் போந்த
நெறிவயிற் கரந்து நின்ற நிமலனே போலத் தானும
கறிவளர் சார னம்மூர்க் கரந்தனள் வளர்ந்தாள் கொல்லோ
முறியியன் மேனி யென்று முழுதுள மகிழ்ந்தார் வேடர். 175

எத்துணை யறங்கள் சால வீட்டினன் வேடர் கோமான்
பத்தியிற் பலநாட் டாழ்ந்தென் பாவையை யளிப்ப வேற்ற
உத்தமன் றனே யண்மி யொளியில னாகித் தாழ்ந்து
புத்திரி செங்கை பற்ற வென்றனன் புலவர் கோமான. 176

மாதவ னெனும்பே ரல்லான் மாதவ மீங்கொன் றில்லை
மாதவன புலவர் கோமான் மற்றவன றன்னிற் சால
மாதவன் புளினர் கோமான் வளாத்தரு டெய்வக் கற்பின்
மாதவள பாங்கி னின்று ளென்றனன் மதுவை யட்டோன். 177

---

174. முருகனேற்றமாத்திரத்தில் மானுடமாதாக இருந்த வள்ளியம்மையானவள் மானுடமாதிற்குள்ள இலக்கண நீங்கித் தெய்வமாதிலக்கணம் பெற்றுள் என்பது.

175. ஓம்பு இப்பூவையை. தெய்வமாதாகலும் இவ்வாறு வேடர் நினைத்தார் என்க. மேனி ஆகுபெயர்.

176. இந்திரன் என்றனன். என் - இந்திரன். பாவை - தெய்வயானை. பலநாளாக யான் முருகனைத் தாழ்ந்து அளிப்ப. புலவர்கோமான் - இந்திரன்.

177. அட்டோன் - திருமால். மாதாகிய அவள் அவன்பாங்கினின்றுள். எனக்கு மாதவனெனும் பெயர்மாத்திரை கிடைத்ததல்லாமல்.

இந்திரன் மனைவி முன்ன ரீட்டினள் சீர்த்தி யெல்லாம்
வெந்திறல் வேட னில்லும் விளைத்தன னின்று சால
எந்தரத் தென்னோ தெய்வ மேதுமின் றுக்கிற் றென்றாள்
செந்திரு மானை யுன்னித் திருவுளோம் யாமு மென்றாள். 178

வல்லிநற் றாயைப் புல்லிக் கொண்டனள் வலாரி யில்லாள்
வெல்லுநாற் கோட்டு வேழம் வியந்தது செவிலித் தாயைப்
புல்லினர் பாங்கி தன்னைப் புலோமசை மகளைச் சூழ்ந்த
பல்லிணர்க் கோதைக் கூந்தற் பாங்கியர் பலரு மன்றே. 179

ஒருக்கிய வுளத்த ராகி யுயர்தவ மாற்றி னோர்கள்
தரைத்தலை யிழிந்த சார்பிற் றவிரினுந் தவத்தி னாற்றிற்
பொருத்துழி யெவர்க்கு மேலாய்ப் பொலிவது வாய்மை யென்னாத்
திருக்கிளர் தெய்வ மாதர் விம்மிதந் திகழ நின்றார். 180

அருந்தவப் பயனு ளார்கட் கடுத்தவெவ் வுழியு மாவா
திருந்திய போக வைப்பாய்த் திகழ்வது திண்ணம் போலாம்
மருந்தம ருலகு நேரா வளத்தொடு வள்ளி மன்றற்
கிருந்தஇவ் வோங்க லென்னா மாந்தர்க ளேமுற் றாரே. 181

தரையுரங் கிழித்த கோடு மார்பிடைத் தயங்க வேணி
விரையுரங் கிழித்த கொன்றை மிலைத்தவித் தகனை வேலைத்
திரையுரங் கிழித்த சேற்க ணனனையைத் தேவி யோடும்
வரையுரங் கிழித்த வைவேல் வள்ளல்சென் றிறைஞ்சி னானால்.

பொழிந்தனர் கருணை வெள்ளம் பொலிகவென் றெடுத்துத்
திழிந்தனர் தவிசி னின்று மிலங்குதங் கோயில்புக்கார் [தைவந்
அழிந்தன மலங்கண் மூன்று மகமெலாந் தேக்கி யோகை
வழிந்தன வெவர்க்கு மென்றான் மன்றலார் வகுக்க வல்லார். 183

---

178. செந்திரு என்றாள். முன்னரென்றாளாய்ப் பின்னர் இவ்வாறு என்றாள் என்க. மானை - வள்ளியை ஈன மானாகத் தானிருந்ததை.

179. வள்ளியின் தாயை இந்திராணி புல்லினள். தெய்வயானைக்குச் செவிலியாகிய வேழமானது வள்ளியின் செவிலியை வியந்தது. தெய்வயானையைச் சூழ்ந்த பாங்கியர் பலரும் வள்ளியின் பாங்கியைப் புல்லினர்.

180. இழிகுலத்தில். தவவழியில் பொருத்திப் பார்க்குமிடத்து, தெய்வ மாதர் என்றது வள்ளியம்மை தெய்வயானையாகிய இவர்களையன்று, அரமகளிரை.

182. கோடு - பன்றிக் கொம்பு. வேணியில் மிலைத்த. மனையாளோடு மிறைஞ்சினான். கடலலையின் வலியைக் கிழித்த சேலென்க.

வேறு

மாய னாதியர் வார்கழற் றாழ்ந்தினி
மேய யாவரும் வீதியிற் காணிய
போயு லாவரல் புந்திகொ ளாயெனா
ஆய னானவர்க் கவ்வர மீந்தனன். 184

பன்னி றப்பக டுண்டுகொ லோவெனா
எந்நி றக்கல னுங்கதிர்த் தேர்தரும்
துன்ன ருந்திறற் றாங்குகை வாரணம்
முன்ன ருய்த்தனர் முன்னவ னேறினான். 185

பரந்து மாதர்பல் லாண்டுப யின்றுளம்
சுரந்த வோகைய ராய்ப்புறஞ் சூழ்தர
வரந்த ழைத்தசி விகையின் வையகத்
தரந்தை தீர்க்கும ணங்கிவர்ந் தானரோ. 186

ஒற்றை யங்கலை யூர்புன னீண்முடி
பற்றி வேய்ந்தப ரன்குரு வாதலான்
முற்றும் வான்மதி யேமுடி வைத்தெனக்
கற்ற சோமன்க விகைக வித்தனன். 187

எம்மை யீன்றவ னேயிவ னென்பபோற்
செம்மல் பாலணை வித்திரு மார்பனும்
மும்மை வையக முந்தரு மூர்த்தியும்
கைம்ம லர்க்கட் கவரிது ளக்கினார். 188

---

184. ஆய் அன்னான் - தாயையொத்த முருகன்.

185. பகடு - யானை.

187. பரனுக்குக் குருவாதலால். முற்றும் வான் மதி - பூரண சந்திரன். சந்திரன் பிடித்தான். குபேரன் பிடித்தான் எனினும் பொருந்தும்.

188. ஈன்றவனே - ஈன்ற சிவனே. திரிலோகத்தையும் படைத்த மூர்த்தி என்றது பிரமனை.

வளியெ ழூஉங்கரு வித்திரண் மானுற
வளியி னுட்டயர் வார்கொடி யெண்ணில
வளித னக்கிறை யோடுகை வௌவினர்
வளியின் வைப்பமர் வாழ்க்கையர் யாவரும். 189

ஆன நெய்பளி தத்தின விரொளி
கான றும்புகை யுங்கன லோடவன்
மாந கர்க்கணு ளார்கள்வ யக்கினர்
மான நாகர்ம ணிவிளக் கேந்தினர். 190

விரைது ழாவிய மென்பனி நீர்புனல்
அரைய னண்ணன்மெய் தூவவ மைந்தனன்
வரையி ழுக்கச்சி விறியின் வாங்கினர்
புரையி லாவவன் பொன்னகர் வாழ்நரே. 191

மாலை யாத்தக விகைவ ருக்கமும்
ஆல வட்டமு மார்ந்தசாந் தாற்றியும்
கோல வெள்ளை யுங் கொண்டனர் பானுவும்
சாலு ஞாயிற் றுலகவர் தாமுமே. 192

சோதி நாரதத் தூமுனி பாலராய்
ஆதி யாழ்முதல் யாவும மைத்துளர்
கோதி லாதகு ணந்தகும் யாழினோர்
மாத ராரொடும் வண்புகழ் பாடினர். 193

189. வாயுமண்டலத்துள்ளார் யாவரும் விசிறியையொப்பக் காற்று லசையுங் கொடியைக் கையில் எடுத்தார் என்க.

190. கனல் - அக்கினிதேவன். அவன் மாநகர் என்றது அவ்வக்கினி மண்டலத்தை. ஆன நெய்: அசாரியை. நாகர் - நாகலோகத்துள்ளார். மணிவிளக்கு - இரத்தினதீபம்.

191. புனலரையன் - வருணன். வரை - தணிகையங்கிரி.

192. வெள்ளை வீசலையும்.

193. அமைத்து உளர்கின்ற. யாழினோர் - காந்தருவர். முதல் யாழ் முதலான எல்லா யாழையுமென்க. யாழ்வகை நான்காவன: பேரியாழ், சகோடயாழ், மகரயாழ், செங்கோட்டியாழ் என்பனவாம்.

குளிர்ப்பக் கண்டகொ ழுங்கணு நெஞ்சமும்
மிளிர்ப்பக் காமரு மின்னினு டங்குபு
தெளிர்ப்பக் கைவள்ளி தெய்வத மாதரார்
தளிர்ப்பத் தீஞ்சுவை யாடலிற் றங்கினார். 194

மாண்ட சோதிம ணிமுடி வானவர்
காண்ட கக்கதித் தாடுநர் பாற்றமுஉம்
பாண்டி லுங்குழ லுங்குரற் பாடலும்
தீண்டு கைம்முழ வுந்திசை தேக்கின. 195

பானு கம்பன்ப ணிலமு ரன்றன
மான வாணன்கு டமுழா மல்கிய
தான பீலிவ யிர்பணை யாதிய
ஈன மில்கண நாதரி யம்பினார். 196

இலக்கர் வீரர்கை யேந்துப டையொடும்
கொலைக்க ளிற்றைக்கு லாயினர் வீரருள்
தலைக்க ணின்றவன் றுங்குகை வேத்திரத்
தலைக்கண் சிந்தவ டர்சனந் தாக்கினான். 197

வடகி ழக்குத்தி சைப்புற வாழ்க்கையங்
கடவு ளேற்றுவிற் கண்ணுதற் புண்ணியன்
தொடலை மார்பந் துணைக்கையிற் பின்னுபு
முடிவி லாதவி ருதுமு ழக்கினான். 198

சோம திக்கினன் றன்னிவ லப்புறம்
காமர் பாகடை கைத்தல நீட்டினான்
வாம பாகம ரீஇப்பொற்ப டியகம்
நாம வேற்றரு மன்னானு குற்றனன். 199

---

194. குளிரும்படி கண்ட ஆடவருடைய கண்ணும் நெஞ்சும் விளங்க. கை வள்ளி தெளிர்ப்ப. தீஞ்சுவை தளிர்ப்ப. வள்ளி-வளையல். மிளிர்ப்ப - விளங்க. தெளிர்ப்ப - முழங்க.

195. பாண்டில் - தாளம். வானவர் காணும்படி.

197. முருகன் ஏறிவருங்களிற்றைச் சூழ்ந்தனர். நின்றவன் - வீரவாகு. வேத்திரத்தால் தாக்கினான்.

198. புண்ணியன் - ஈசானன். மார்பில் கையைக் கட்டிக்கொண்டு. நாணேற்று வில்லையுடைய புண்ணியன் என்க.

199. குபேரன் - தருமன், யமன்.

மாகர் போற்றிய மண்டமர் ஞாட்பிடைத்
தோகை மாமயி லாகிய தோன்றருன்
ஏக நாயக னேவலி னங்குசப்
பாக ஞகிப்ப கடுந டத்திஞன். 200

வேறு

வரையு மாடமு மேடையு மண்டப மாலையும்
விரைய சோலையும் வாயிலும் வீதியு மாந்தர்கள்
நிரைய விண்ணவர் விண்ணிட மெங்குநி ரைந்தனர்
அரைய ரூர்களி றவ்வயி னவ்வயி னின்றவே. 201

புலவர் சிந்திய பொன்னரி மாலையும் பூக்களும
பலவ ரைக்குலம் பம்பிய தென்னப்ப யின்றன
நிலனி ரைந்தவர் தாட்பட நீறுபட் டொய்யெனக்
குலவு தம்பதி கொண்டென விண்ணினி வந்தவே. 202

கருப்பு ரங்கமழ் குங்குலி யங்கலா லூட்டிய
மருப்பெ ரும்புகை வானுல கெங்குமவ ளாவிய
தருப்பு மெனமுலை யாரொடு மண்டர்த ணந்தவவ்
விருபபு றங்கியி ளைப்பற வல்லிரு ளேய்ந்தென. 203

உரத்தி னபபிய மானமத மூட்டிய சாந்தரோ
வெரித்த லைககண் வி ராவவெ ரிந்தலை யேர்கொள
வரித்த சந்தன மார்பிடை யபபிம யங்கின
திரித்து வல்வினை தக்கமி யற்கைதி ரிந்தென. 204

---

200. தோன்றல் - இந்திரன்.

202. பொன்னரிமாலையும் பூக்களும் தாட்படத் துகளாய் விண்ணிற் செல்லும் என்க.

203. இருப்பு - விண். அண்டர்களீண்டு வந்தமையால் விண்ணுனது தானுறங்கி யிளைப்பு நீங்க இருண்டிருக்குமாறுபோலப் புகை வளாவிய தென்க. தணிகையில் இருந்த இருள், தணிகை ஒளியாயிருந்ததினுல் இருள் விண்ணடைந்தது.

204. வெரிந்தலை என்பது வெரித்தலை என விகாரப்பட்டது எதுகை நோக்கி. நல்வினை தீவினையாகவும் தீவினை நல்வினையாகவும் திரிந்தவாறு போல, மார்பில் அணிந்த சாந்து முதுகிலும் முதுகிலணிந்த சாந்து மார்பிலும் தோய்ந்து மயங்கினவென்க. பின்னும் முன்னும் முட்டிப் பலர் குழீஇ நிற்றலால் இவ்வாறு கூறினர். வெரிந்தலை - முதுகில். கொள்ளும்படி வரித்த சந்தனம். திரித்து மயங்கின.

வடவை முற்றுந் திரட்டி யிடமலே யோடுபின்
படர வோலிடு பவ்வங்க ளொத்தன பல்லியம்
அடிக ளின்றறி வாமெனுஞ் சோடையி ஞர்த்துராய்த்
தொடர்வ போன்றன பின்னர் முழக்குஞ் சுருதிகள். 205

வேறு

முருக ஞேமணி மார்பஞே மலர்க்கணே
முனேவஞே விசும்பாளும்
திருவ ஞேவென வவரலார் தமைப்புனேந்
துரைப்பவர் திருமார்பத்
தொருவ ஞேமுத லனேவருந் தவ்வென
வொலிவனப் புடையானே
முருக னேயிவன் முருகனே யிவனென
மொழிந்தன ரென்செய்வார். 206

வேறு

தண்ண றும்புன றசும்பி னேந்திப்போய்
அண்ணன் மாகளிற் றடியின் வாக்குபு
கண்ணி யுங்கமழ் கலவை யுஞ்செழுஞ்
சுண்ண முஞ்சிலர் சொரிந்து போற்றினர். 207

சுரக்குந் தம்முகச் சுடர்க வர்ந்துவிண்
கரக்கு மாதவற் கரைத்துக் காட்டியாங்
கரக்கு நீர்க்கல னங்கை யிற்சுலாய்ப்
பரக்க மண்ணிடைப் பாய்த்தி ஞர்சிலர். 208

---

205. கடலாகிய தன்னேத் திரட்டி உண்ணுதற்காக வடவாமுகாக்கினியானது மலேயோடும் கடலாகிய தனக்குப் பின்னே தொடர்ந்து வரா நிற்ப, அதனேக் கண்டு அஞ்சி ஓடும் கடலேயொத்தனவாகிய பல்லியங்கள் சுருதிகள் தொடர்வ போன்றன. படர - உலகத்தில் செல்லுதலால். கடவுளின் திருவடிகளே. வடவாமுகாக்கினியைத் திரட்டி எடுத்துவிடுவதற்காகத் தான் உலகத்தில் படர என்பாருமுளர்.

206. ஒலி - மிகுதி. அம்முருகன் முதலியோரல்லாத பிறரை.

208. ஆதவனேக் கரைத்து ஆலத்தியாகக் காட்டினற்போல. அரக்குநீர் - சிவந்தநீர்.

குவவுக் கோணு தல் குறித்துத் தேய்தரும்
உவவுத் திங்களை யுறுப்ப கைத்தகைத்
தவவுக் கோளினர்க் கறிவித் தாங்குத்தூய்க்
கவவுக் கைப்பொரி கனற்றி ஞர்சிலர். 209

புனித மென்மொழி பொருவ நின்றெழுந்
துனியி ஞற்சிலர் சுளித்தொ ழித்தெனக்
கனிவ ருக்கமுங் கருப்புத் துண்டமும்
இனிய கட்டியு மீண்ட வீசினர். 210

பரித்தன் முற்றுமோ பார நீக்கெனத்
தரித்த வொள்ளிழைத் தருணக் கண்ணியைத்
தெரித்த பட்டினைச் செம்பொற் குப்பையை
உரித்தென் றேகையி னுதவி ஞர்சிலர். 211

பாடி ஞர்சிலர் பணிந்து தட்டமிட்
டாடி ஞர்சில ராட லோடுமுன்
ஓடி ஞர்சில ருருவ நோக்கியே
நீடி ஞர்சிலர் பலர்நெ ருக்கவே. 212

முருக்கு மண்ணலை முன் முகுந்தன் மேலெலைத்
திருக்கு மால்கொடு செப்பி னேன்பொர
ஒருக்கி மேலெழு முகளக் கைசனம்
நெருக்க நாறறிலர் நின்று ளார்சிலர். 213

வேறு

வண்ட லாட்டயர் பேதையர் வரிப்புனை பந்து
விண்டு தாங்கிய வம்மனை வீற்றுவீற் றொழிய
மண்டு சிறடிக் கிண்கிணி வண்சிலம் பொலிப்பச்
செண்டு தாங்கிய களிறறெதிர் மேனிலைச் சென்றார். 214

---

209. அவவு - அவாவு; விகாரம். காமாசையின் கொள்கையர்க்கு. கவவுக்கை - அகத்திட்டகை, அகங்கை என்பது. சிலப்பதிகாரம் மங்கல வாழ்த்துப்பாடல், "காதலற் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல்" என் பதில், "அகத்திட்ட கை" என்று உரைத்தார் அடியார்க்குநல்லார். திங்கள் காமிகளுக்கு விரோதி ஆகையால் 'அறிவித்தாங்கு' என்றார்.

211. முருகனை நோக்கி எம் பாரத்தை நீக்கென்று.

213. செப்பினேன் வியாசன். தூக்கிய இருகையைத் தொங்கவிட்டிலர்.

214. பந்தும் அம்மனையும் வெவ்வேறுயொழியச்சென்றார். விண்டு - விடுத்து, எறிந்து என்பது. எறிந்து தாங்கிய அம்மனை என்க. வீதியி லுள்ள பேதையர் மேன்மாடத்துச் சென்றனர்.

வேழம் வாசவற் கென்பர்க ளவன்கொலோ வென்றார்
வேழ மூர்பவ னேயவ னெனவெதிர் விரித்தார்
வேழ மோம்பிய விண்டுகொ லென்றன ரவனே
வேழ வாமத்துச் சாமரை வீசுவா னென்றார். 215

பொருத ஞாட்பிடை யிந்திர னுடுபுரண் டமைதான்
கருதி மாதவம் புரிந்துறுங் களிறுகைக் கொண்ட
முருக னேவென விஞயினர் முழுவியவ் வாயை
உருவ வாளரித் தடங்கணி ருரைத்தவே ளெனறார். 216

இருவர் கனனிய ிருந்தவ மாற்றின ரிவன்றாள்
மருவி நின்றன ரென்மரான் மாதவம புரியின்
கருணை வள்ளலார் நம்மையுங் கடிப்பர் வார்கொல்
உரைமி னெனறுதந் தோழிய ரொடுமுசாய்த் தொழுதார். 217

கள்ளம் வெள்விழிக் கின்மையுங் காமத்துக் காதல்
உள்ள மின்மையு மொண்முலை யின்மையே காட்டும்
பிள்ளை மைப்பெரும் பேதைமை தீர்பெதும் பையர்கால்
தள்ள மென்புயத் தானைவீழ்ந் தோடிமுன் சார்ந்தார். 218

வளருங் கொங்கையெவ் வளவையவ் வளவையின் மலர்க்கண்
வளருங் கள்ளமு மனத்தகக் காதலு மருட்டத்
தளிர ரும்புமெல் லிளங்கொடி தலைநிறீஇ யென்ன
உளம ருங்கெலாந் தலைநிறீஇ நின்றாராய்த் தொழுதார். 219

தமது மாணெழில் விளக்குவான் றனிவனப் புடைய
குமரன் மாணுரு மறைக்குந ரேகுடை கவரி
நிமிரு நீள்கொடி விசிறியு நிரைநிரை யெடுத்த
அமரர் வாழியென் றகங்கனன் றெசிந்துநோக் குறறார். 220

---

215. வேழமூர்பவனே அவனென - இவனேறிய வேழத்தைச் செலுத்துவோன் அவ்விந்திரன் என்பார்.

216. அங்ஙனம் விஞயினருடைய வாயை முழுவி. நீயிருரைத்த வேளாகிய முருகனே என்பார். முழுவி - முத்தங்கொண்டு.

218. வெள் விழிக்குக் கள்ளமின்மையும் உள்ளத்துக்குக் காமக்காதலின்மையும் முலையின்மை யொன்றே அவ்விரண்டின்மையைக் காட்டும் பிள்ளைமை யென்க. கால் தள்ள - கால் தடுமாற. தானை வீழ்ந்து - வஸ்திரம் வீழ.

219. கொங்கை எவ்வளவு வளருமோ அவ்வளவு வளர்ந்த கள்ளமும் காதலும்.

220. தமதென்றது அமரரை. விளக்குவான் மறைக்குநரே - தமதழகை விளக்கும்பொருட்டு மறைக்கின்றார்களே. பெண்கள் நோக்குற்றார்.

திங்க ளுங்குளிர் முத்தமுஞ் சிறிதுளம் வெதுப்பும்
அங்க ணண்ணலார்த் தணப்புறி னண்ணுறின் வதனப்
பங்க யங்களும் பரேரெறுழ்த் தோள்களும் பல்வும்
கொங்கு தங்கிய தொங்கலுங் குளிர்ப்பன வென்றார். 221

மாழை வாண்முக நோக்கினர் மாதவ ராகப்
பீழை வாட்டிய பெருந்தகு தெய்வம்வே றுளதோ
ஆழி சூழுல கத்தென வடிமைபூண் டுவக்கும்
வீழி வாய்க்கவின் மங்கையர் விறந்தனர் மாடம். 222

தங்கள் வாண்முகச் சந்திர னெதிர்குவிந் தெனக்கைப்
பங்க யங்களைக் கூப்பினர் பண்ணவர் பெருமான்
துங்க வாண்முகப் பரிதிகண் டலர்ந்தெனத் தொழுத
அங்கை மாமலர் விரித்திரந் தாரரு வரங்கள். 223

சேந்த பங்கயந் திருமுக மென்றனர் சிலைவேள்
ஏந்து பங்கய மெய்தன னிணர்த்தமாந் தளிரோ
காந்த சோகத்துத் தளிர்கொலோ கவினுரு வென்றார்
ஆய்ந்து மாரனு மக்கணை யிரண்டுமபின் றொடுத்தான். 224

கொற்ற வேலவன் வனப்பெனுங் குளிர்மழை பொழிய
வெற்ற காமவித் துளமெலாம் வேருற வூன்றி
முற்ற வாக்கையிற் பசலையாய்ப் படர்ந்துமூ துயரப்
பொற்ற போதுகொண் டலர்ந்தது பூவையர்க் கம்மா. 225

பெண்ண வாயுருப் பசந்தனர் பேதைமா யவனும்
விண்ண மாளியும பொற்கென விளங்கினன் வேதன்
தண்ணெனன் மாமதி விளர்த்தது விழிதுயில் சாரார்
எண்ணின மாதரா ரென்படா ரிவனெழிற் கென்றார். 226

---

221. தணப்புறின் வெதுப்பும். பரேரெறுழ். தமது வதனம்.

222. நோக்கினர் - வள்ளி தெய்வயானை. வள்ளி தெய்வயானை இருவரும் பெரிய தவத்தராக முருகனன்றித் தெய்வம் வேறுண்டோ.

224. முருகனது முகம் பங்கயமாகுமென்று சொன்ன பெண்கள்மீது மன்மதன் அப்பங்கயக்கணையை எய்தான். உரு - முருகனது வடிவு.

225. அக் காமமானது பசலையாய்ப் படர்ந்து, அலர்ந்தது.

குண்ட லங்கதிர் விலங்கமென் றேருளிடைக் குனிப்ப
வண்ட லம்புவார் குழல்சரிந் தொருபுற மலியத்
தண்ட ளிர்ச்சர ணூபுர மேகலை தழுங்கப்
பெண்டி ராணவா மடந்தையர் பெயர்ந்துபோய் மிடைந்தார். 227

மெழுகு குங்கும முலைகளான் மெலிந்திடை வருந்தத்
தழுவி நின்றுமா தரைத்தொழுந் தையனல் லார்கள்
ஒழுகு தண்ணறு மலர்த்தளிர்ப் பொறைமிக வொசிந்து
கொழுகொம பூன்றிநின் றேருளிர்பசுங் கொடித்திர ளொத்தார்.

நிறைநெ கிழ்ந்தமை நெகிழ்ந்துவார் குழல்புற நிகழ்த்தப்
பொறை நெகிழ்ந்தமை யுளங்குழைந் திடையயல் புகல
அறைபொ லங்கழற் றேருளிஞ னழகெனுங கடலில்
துறைக ழிந்துசெஃ றுரும்பென வுளஞ்சுலா வினரால். 229

செய்ய பங்கயத் திருவொடு மலைத்தயாஞ் சென்றிங்
கைய நின்கழல் பணிதலு மவணலந் திளைக்கும்
வைய முண்டவன் வடிவொடு பெயர்கொடு நின்றும்
கையில் வெள்வளை யாழியுங் கண்டில மென்றூர். 230

கிடைசெய் முல்லையுங் கொலைபுரி நீலமுங் கெழுமித்
தொடைசெய் வெய்யவே டொழிலிடை யாமபுகு தாமைத்
தடைசெய் மூரன்முல் லையுந்தொடை நீலமுந் தாஙகிக்
கடைசெய கின்றசெவ் வேட்பெய ரடுத்ததே யெனறூர். 231

228. மாதரைத் தழுவிநின்று. மாதரை என்றது சேடியர் முதலியோரை. சேடியரைக் கொழுகொம்பாகக் கொள்க.

229. உளம் நெகிழ்ந்தமை. பொறை - குழலைப் பொறுத்தல். இடையானது புகல.

230. அவள் - அவ்விலக்குமி. மால்கொடு நின்றும். நின்ற யாங்கள் மாலானபடியால் கையில் வளையும் ஆழியும் இருக்கவேண்டியதிருப்பவும் அங்ஙனம் இருக்கக்கண்டிலேம் என்றூர். ஆழி - மோதிரம், சக்கராயுதம். பச்சை - பசலை, மால்.

231. யாமென்றது பெண்களை. கடை - கீழ்மை. எமக்குக் கீழ்மை செய்கின்ற. மன்மதனது தொழிலில் யாம் புகாவண்ணம் தாங்கி எம்மைக் கடைசெய்கின்ற நினக்குச் செவ்வேள் என்னும் பெயரடுத்ததே என்றூர் எனவே, யாம் அம்மன்மதனுல் துன்புறுதபடி நீயே எமக்கு மன்மதனய் எம்மைத் துன்புறுத்திக் கீழ்மைசெய்து செவ்வேள் என்னும் பெயரை உடையையாயிருக்கின்றூய் என்றூர் என்பது.

இருகை யாற்கல வித்தொழி லியற்றலாற் ருமை
வருட நீவவண் குறிசெயத் தழுவவார் கலையை
ஒருவி யோச்சவெண் கரணங்க ளுளுற்றமுந் நாற்கை
பொருநி னேய்புலம பறிதியெப் புரமதி யென்றார். 232

அரிவை குந்தமு மதிப்புரு வருந்தவ ருளமும்
அரிவை வன்படைத் தோற்றமா யன்மொழித் தொகையாம்
அரிவை யென்னுமப் பெயர்தழீஇ யனங்கன்வாழ் வுயர்த்தும்
அரிவை குந்தடங் கண்ணிய ரளவிலர் தொக்கார். 233

ஆட வர்க்குமிக் கணங்குசெய் கொல்லிமால் வரையில்
பீட மைந்தவப் பாவைபோற் பெண்பிறப் பினர்க்கு
நீட ணங்குசெய் பாவைகொல் லோநெடுங் களிற்றில்
பாட மைந்தொளி ருருவெனப் படரெழக் கண்டார். 234

மலர்ந்த பன்னிரு விழிகளும் வதனமும் வாயும்
அலர்ந்த கைகளு முந்திய மடியுங்கண் டமர்வார்
பொலிந்த பங்கயக் காடுகண் டதனிடைப் புகவீழ்
ஒலிந்த வோகையி னேதிமத் திரள்களே யொத்தார். 235

மகர வாய்க்குழை நிலத்திடை மாறுபு நக்கத்
தகர வார்குழல் பிறழமுன் றெரிவையர் தாழ்ந்தார்
இகலும வேள்கணை படமறிந் திறைஞ்சினு ரொத்தார்
பகவ னாருண் மழைக்குவீழ் பசுங்கொமபு மானுர். 236

---

232. கலவித்தொழிலை இயற்றுதற்கு இருகை போதாமையினல் முந்நாற்கை பொருநினேய். வருடவும் நீவவும் என முடிக்க. வருடல் முதலிய ஒவ்வொரு தொழிற்கும் இரண்டிரண்டு கைகள் கொள்க. புலம்பு அறிதி - எம்முடைய புலம்பை அறிந்தாய். எப்புர - எம்மைக்கா, 'நக்கா' வென முன்வந்தாற் போலக் கொள்க. மதி முன்னிலையசை.

233. அருந்தவருடைய உள்ளத்தையும் அரிக்கும் படையான் கூரிய படையெனப் படையென்னு மொருசொல் தொக்கியிருத்தலால் அரிவை என்பது அன்மொழித்தொகை. தோற்றமாய் - பொருளாய். உளமும் அரிவை வன்படையென்னும் பொருளாயென்க. அரி வை - அரியும்படி யான கூரிய படைபோல்பவர்.

235. ஓலிந்த - தழைத்த.

236. மகரகுண்டலமானவை நிலத்தில் ஒன்றோடொன்று மாறித் தடவத் தாழ்ந்தார். நக்க - தடவ.

தாழ்ந்த மங்கைய ருள்ளகம விருப்பெனுஞ் சரங்கள்
போழ்ந்து டற்றலி னெகிழுடை போற்றுவார் தாழ்ந்தாங்
காழ்ந்த நெஞ்சமோ டிருந்தன ரறுமுகக் கடவுள்
வீழ்ந்த தோடரி னலதெழா விரதங்கொண் டார்போல். 237

வேறு

விண்ணிடந் துவன்றி நின்ற மெல்லியன் மாத ரெல்லாம
வண்ணமென புருவ வார்வில் வளைத்துவேள சரங்க ளெனனும்
தண்ணகை முல்லைப் போதுந் தறுகண்மா நீலப் பூவும்
அண்ணலங் கிலக்க மாக வெய்தன ரவச முற்றார். 238

சிலைமதன் கணைக ணீண்டச் செயப்படு பொருளாய் நின்றே
கொலைபுரி யிறைவன் வாட்கட் குருஉச்சுட ரிவன்கண் வாளி
மலையுறழ் புயத்தி னெய்தே மலிபெருங் காமர் வெற்பின்
உலையவின் றருளிற் றின்றாற் குறுவது போலு மென்றார். 239

ஐயமேற் றுழலுந் தந்தைக் கருந்தவர்க் குரிய மாதர்
வையமேற் கலையிட் டீரேன் மகன்மண வாள னாகி
உய்யவிண் டுலாவுங் காலை யுடைவளை தோலார் யாரே
நையுநா லிடையா ரென்ன நலனொடு கலனுந் தோற்றார். 240

எலுவியங கென்னை செய்தா யெலுவனும பாங்க ருள்ளான
கலைநிறை தோற்றா யென்று கழறினோர் தாமு மூழான
நிலைதடு மாறு வார்போ னிறையொடு கலையுந் தோற்றங்
கலைநெடுங கொடியின வாங்கி யணிவளர் தூசு சூழ்ந்தார். 241

---

237. உடற்றலால் நெகிழும் உடையைத் தழுவிப் போற்றுபவராய்த் தாழ்ந்தவண்ணமே நிலத்திற் கிடந்தார். தோள் தரின் அலது - தோளைத் தந்தாலல்லாமல்.

238. மாதர் - தெய்வ அரம்பையர்.

239. நின்று அம் மன்மதனைக் கொலைபுரிந்த இறைவனது கட்சுட ராகிய சிவனிடத்து யாம் எய்தேம். எய்த எமக்கு அழகினின்றும் குலைய இன்று இவனருளினன் ஆதலால் ஈன்றோன் குணம் இவனுக்குண்டுபோலு மென்றார். இவன் அருளிற்று.

241. கழறினோர் தாமும் சூழ்ந்தார். தோழனும் அவன் பாங்கி லுள்ளான் ஆதலால் தோழியே நீ யாது செய்தாய் மயங்காதே யென்றுள் என்பது. கொடியின் வாங்கி - ஓர் பெண்ணிடத்தில் வாங்கி.

அங்கியங் கண்ணிற் றோன்று மங்கியே யிவன்மெய் யென்ப
திங்கனு பவத்திற் கண்டா மிளகிய சாந்தந் தீயப்
பொங்கொளி முத்த மாலை பொரியமெய்ம் மாமை நீறத்
தங்கிய வுளத்தொ டாவி தழற்றிய தாவா வென்றார். 242

அரம்பைய ரல்குற் றீர்ந்த வவிர்கலை வரத்துக் கேந்தும்
கரம்பட நோக்கித் தூசு கழிந்ததம் மல்கு னோக்கி
நிரம்பிய கருணை நீரா னின்மல னருளிற் றென்னா
வரம்பிலின் புற்றா ரொத்தார் மண்ணவ ரணிந்து தாழ்ந்தார்.

முயங்குத லெய்தா மேனு முலைக்கூறி வயக்கா மேனும்
மயங்கிமெய் யவச மாகுங் கரணத்தின் மலையா மேனும்
தயங்கொளி யுருவ நோக்கித் தளிர்த்துளே முயங்கக்கொண்டிங்
கியங்குவ தோடை யானை யென்செய்வா மென்று நைவார். 244

உருவெளி யருகு தோன்ற வுற்றன னிறைவ னென்னாப்
பெருகிய காத லன்பிற் பிணையன்னார் தழுவிக் காணார்
பொருவரு முத்தி யென்று புல்லிய கதியை நாடி
மருவிய மதத்தர் போன்று மறுகிய வுளத்த ரானார். 245

எங்கணு முடிகள் கண்க ளெங்கணும் வதனம் வாய்கள்
எங்கணுஞ் செவிக ணாசி யெங்கணுந் தோள்க டாள்கள்
எங்கணு முருவ மின்னாற் கெனமறை யியம்பி யாங்கே
எங்கணுங் கண்டா மன்றற் கெய்திய தவத்தா னென்றார். 246

அடிகளா ருருவங் காட்டி யலங்கிய தெனுமார் வத்தால்
கடிதழல் சுடுவ தெண்ணார் கதுமெனத் தழுவி மோந்தார்
விடுசுடர்ப் பந்தர் மாலை வித்துரு மத்தைப் பற்றி
இடுகிடை குழைய மார்பத் திறுகுற வணைத்து மோந்தார். 247

---

243. அரம்பையர் என்றது 'விண்ணிடந் துவன்றி நின்ற மெல்லியன் மாதரை'. கலையானது கரத்திற் பட. அணிந்து - அக்கலையை உடுத்து.

244. தளிர்த்துளேமாகிய யாம் உயங்க விரைந்தியங்குவது.

246. இவனுடைய திருமணத்திற்கு யாம் வந்த தவப்பேற்றால் கண்டாம் என்றார்.

247. அக்கினியைத் தழுவி.

கடம்பவிர் தார்க ளாகக் கற்சுனைக் குவளை யாகத்
தடம்பொழின் மலர்க ளாகச் சாரலிற் சாந்த மாக
இடம்படப் பிறந்தே மில்லை யெற்றுக்குப் பெண்களாக
உடம்பெடுத் துழிதந் தேமென் றுற்பவ மொறுத்து நின்றார். 248

தேம்பிய மருங்கு றேய்ப்பச் சீதளக் கலவை யாடப்
பூம்பசுந் தொடலை சூடப் பொழிகதிர்க் கலன்க டாங்கத்
தாம்பெரி தோங்கிற் றல்லாற் சண்முகற் றேய்தற் கோவென்
றோங்கிய முலைகள் காவா ருருவத்தோட் டுணையுங் காவார். 249

உறுப்பினுட் சிறந்த கண்கா ளுத்தமற் காட்டி யுள்ளம்
இறுப்பது புரிந்து நின்றீ ரெழிலுரு மீட்டு நோக்கிப்
பொறுப்பது வலித்து மேனும் பொழிமழைத் தாரை கொண்டீர்
கறுப்பொடு வெளிறி னீரோ காரிய முடிப்பீ ரென்றார். 250

நுந்தைபோ னுனது மார்புங் குறியுள தாமே னேக்கும்
பைந்தொடி யெங்கள் வாட்கண் பார்த்தற்கு மிசையாய்போலும்
அந்தர ரிடும்பை யோம்பி யருளினை யலக்க ணேப்பி
எந்தரத் தருளல் போலு மியைவுரு திறைவற் கென்றார். 251

திருவுரு வனப்பை வெளவுஞ் செங்கயல் விழியு முள்ளும்
தெருளுறு முயிரும் பேராச் சிறையகத் தாக்கிக் கூப்பும்
இருகையும் வணக்கங் கொண்ட விடையும்வண் சிறையி னீங்க
அருளினை புரவு ளாய்க்கிவ் வடுப்பன வழகோ வென்றார். 252

---

248. கடப்ப மாலை முதலியவற்றுள் ஒன்றாகப் பிறந்திருந்தால் அவனை அனுபவிக்கலாமே என்னும் கருத்தால் அங்ஙனம் கூறினர். உற்பவம் - பிறவி. ஒறுத்து - கோபித்து.

249. முலைகள் ஓங்கிய என்று.

250. கோபத்தோடு வெள்ளறிவை உடையீரோ என்பதொரு பொருள்.

251. நுந்தையின் மார்பு வடுப் பட்டவாறு போல உன்னுடைய மார்பும் வடுவுள்ளதாகுமாயின் இசையாய் என்க. குறி - சிவனுக்கு முலைக் குறி. முருகனுக்குப் பார்த்தலாகிய குறி என்னும் இலக்கு. போலும் முன்னையது ஒப்பில்போலி.

252. எம்முடைய விழி முதலிய மூன்றையும் உன்னிடத்துச் சிறையாக நீ ஆக்கி. இருகையும் இடையும் சிறையில் நீங்கலாவது வளை கலை யொழிதல். சிறையென்பது காவல். இவ் - இவை.

பெண்ணெனப் பட்டு நின்றார் பெருமதர் மழைக்க ணேடிக்
கண்ணென வளைத்து நல்கக் கடவுளர்க் கிறைவன் றன்னை
உண்ணமிழ் தென்னத் துய்த்தா ரோரிரு மகளி ரேயாம்
பெண்ணழி பதடி யானும் பேருல கத்தி லென்றார். 253

பல்வகைச் சிறப்புங் கொண்டு பாவையர் மனமுங் கொண்டு
வில்வளர் வீதி தோறும் விழாவணி விஞ்சப் போந்திட்
டெல்வளர் மணிப்பொற் காந்தி யிமைப்புறா ரிமைக்குங் கோயில்
சொல்வளர் சாமி நாதன் றும்பிநின் றிழிந்து புக்கான். 254

நித்திலத் தாம நான்ற நிழன்மணி விதான வேதிப்
பைத்தபொன் னணையின் மேலாற் பாவையோ டிருந்தெல் [லோரும்
மெத்திய வரிசை பெற்று வீற்றுவீற் றுங்காங் கெய்தி
ஒத்தவா றிருப்ப வேவி யுற்றனன் படுக்கைச் சூழல். 255

சாந்துபெய் செப்பும் பூந்தார்த் தமனியச் செப்பும் வாசம்
ஏந்திய செப்பும் வெவ்வே றிருத்திய வணியின் செப்பும்
காந்திகொ ளாடி மற்றுங் களுற்றினர் நாப்ப ணிட்ட
தேந்தவழ் சயனத் தேறித் தேவியோ டிருந்தா னன்றே. 256

விதித்தருண் மறையி னீதி மேதினி வழக்க மாக
மதித்தனன் சோம னாகி வனமுலை திளைத்தான் பின்னுள்
கதிர்த்தகந் தருவ னாகிக் கலந்தனன் மூன்று நாளில்
கொதித்தெழு மங்கி யாகிக் குமரவேள் கூடி னானல். 257

---

253. இறைவன் - முருகன். தெய்வயானை வள்ளியம்மையாகிய ஓரிரு மகளிரே பெண்ணெனப்பட்டு நின்றாராவர். யாம் பெண்தன்மையழிந்த பதடியாகும் என்றார். இரு மகளிருடைய கண்ணானது அவ்விரு மகளிரைக் கருதுவாயென்றோடி முருகனை வளைத்துக்கொடுக்க. கண் பின்னையது கருதுவாய் என்பது.

254. காந்தியையுடைய கோயில். இமைப்புறாராகிய தேவரும் இமைக்கும்படியான காந்தியமைந்த கோயில்.

256. செப்பு - சிமிழ். களுற்றினர் - எல்லாவற்றையுஞ் சூழவைத்தவராகி.

257. வேத நீதியானது உலகத்திலே தன்னால் வழங்கும்படி மதித்தவனாகிக் கூடினான் என்க. வேதநீதியாவது நாயகன் நாயகியோடு முன்னர்க் கூடுங்கால் முதனாளிலே தன்னைச் சந்திரனாகவும் இரண்டாம் நாளிலே கந்தருவனாகவும் மூன்றாம்நாளிலே அக்கினியாகவும் பாவித்துக் கூடுதல் முதலியன.

வழிவரு நாலா நாளின் மஞ்சன விழாக்கொண் டாடிக்
கழியிடை யிரண்டு நாளுங் காலையு மாலைப் போதும்
செழிமறை மனுவி னோம்புந் தீயிடைக் குறைகண் முற்றிப்
பொழிகதிர் விதான வேதிப் பூவணைத் தவிசி னுற்றான். 258

கனிவகை மாசை தூசு கலனணி நிலன்க டேயம்
தனிவரங் கதிகண் ஞானந் தயங்கிய வீடு பேறென்
றினியன வெல்லா மெத்த விரப்பவர் மறைவ லாளர்
முனிவரர் தேவர் யாரு முகப்புறத் தான முய்த்தான். 259

இற்றைநாள் காறு மாத ரெதிருற நோக்கப் பட்டாம்
முற்றுநா நோக்கப் பட்டு முதன்மையின் வைகற் கிந்தப்
பொற்றொடி மாதை நோக்கிப் பொலிவுறல் வேண்டு மென்று
உற்றருந் ததிநேர் கண்டா ளொண்ணுதல் பார்வை யீந்தாள். 260

தேவர்கண் முதலோர் நீங்கச் சிலதிய ரேவ லாற்ற
ஆவயி னகன்று பள்ளி யறையடுத் தமளி வைகி
மூவிரு முகமு முந்நாற் கரங்களும் விழியு மாக
மேவுதன் னுருவா லின்பம் விளைத்துவீற் றிருந்தா னன்றே. 261

சென்றமுந் நாளும் வெவ்வே றுருக்கொடு திளைத்தா யென்னே
என்றமா துவப்ப வண்ண லிறுக்குமம் மூவர் மாட்டும்
ஒன்றுவித் துலகோர் மாதை யுறுவது முறையால் யாமே
மன்றலங் குழலா யன்னார் வடிவெடுத் தமர்ந்தா மென்றான். 262

திருமணம் புரிந்து வைவேற் சேவக னுலகுக் கெல்லாம்
பெருகுமங் கலங்கள் செய்த பெற்றியிற் றன்னஞ் சொற்றும்
உருகிய முழுவ லன்பி னுறுவர்கா ளமரர்ப் போக்கிக்
கருணையங் கடவுண் மாதர் கடாவிடை நடாவல் செய்வாம். 263

வள்ளிநாயகி திருமணப்படலம் முற்றிற்று

ஆகச்செய்யுள்—3036.

---

258. இடை இரண்டு நாள் - முதனாளுக்கும் நான்காம்நாளுக்கும் இடையிலுள்ள நாள்.

261. முந்நால் விழி.

263. கடவுண்மாதர் - தெய்வயானை.

விடையருள்படலம்

தாமரை குவளை கயிரவ முல்லை
சண்பகங் காந்தளுல் வகையின்
பூமலர்ந் தொளிரும் பன்மணி கான்று
பொன்னொளி தழைத்தெழுந் தெய்வக்
காமரு கொடியோ ரிரண்டொடு தழைத்த
கற்பகத் தருவென மணந்த
தேமரு குழலா ருடனமர் வரதன
சேக்கையா யொழிந்ததென் னுளமே. 1

வேறு

பொன்னணி பூண்முலை வல்லி யோடு
பூவமல் சேக்கையி னுட்ட யர்ந்த
மின்னவில் வேல்வலத் தெந்தை யன்றை
விடியலெ ழுந்துபல் லோர்து வன்றத்
தன்னிகர் மன்றல்செய் கோயி னீவித்
தானர சாளுமுன் கோயி லண்மி
மன்னிய தன்னிரு பாலு மாதர்
வைகமென் பூவணை வீற்றி ருந்தான். 2

போதுநெ கிழ்ந்தவிழ் தீர்த்த மாடிப்
பூதிய ணிந்துகைப் போது தாங்கி
மாதவர் வானவர் வேதன் மாயன்
மற்றவர் மேற்படுந் தேவ ரேனோர்
ஏதமி றத்தமி ருக்கை யண்ண
வெண்ணுமு ளத்தொடி றைஞ்சி யேத்த
மேதக வாரரு ணல்கி யார்த்தி
வேட்டவ ரங்களும் போத விட்டான். 3

பன்மலை வாழ்நர்ப ரந்து சூழப்
பாங்கிபல் லாயங்கைத் தாய்நற் றாயும்
சொன்மலி தன்முன்வந் தோரும் பம்பத்
தோகைதன் றுதைமுன் போந்த டுத்து

---

1. மலர்ந்து கான்று தழைத்து எழுங்கொடி. வரதன் - முருகன்.
3. மாதவர் முதலியோர் தங்கியேத்த. வரங்களும் ஆர்த்தி.

வின்மலி பாதந்தன் சென்னி தீட்டி
விம்மிதத் தோடெதிர் நின்று போற்றிப்
பொன்மலி யிவ்வரை யென்றும் யாங்கள்
போந்துமைக் காணவி ருந்தி ரென்றான். 4

மாமன்மொ ழிக்கெதிர் நாம வேலான்
வாமம ணிநகை கொண்டு சொல்வான்
ஏமநெ டும்புவிக் கின்ப நல்க
வென்றுமிவ் வெற்பையி ருக்கை கொண்டாம்
மாமது சேர்ந்துமுப் போது நிச்ச
மாகண்ட லன்மலர் நீலம் பூப்பக்
காமரு கற்சுனை யாக்கி யிட்டான்
காண்மதி யத்தையென் றீதும் விண்டான். 5

முச்சக முந்தொழு தேத்த வள்ளி
மூரிவி லங்கெலாஞ் சாரல் வைகி
நிச்சமு மில்லற மோம்பி வாழ்தி
நீடிய வாயுளந் தித்த காலைப்
பொச்சமி லெம்முல கெய்தி மீளாப்
போகந்தி ளைத்தருள் சேர்தி யென்று
கச்சமில் பேரரு ணல்கி விட்டான்
கானவன் கைதொழு தேகு கின்றான். 6

முந்துற விந்திரன் மாம களார்
முன்னர டுத்துவ ணங்கிப் போற்றிச்
சுந்தர வல்லியை யண்மி நீடத்
தொழுதுநின் றேவப்பெ யர்ந்து போந்தான்
பைந்தொடித் தாயரு மேனை யோரும்
பாங்குற மூவர்க்குந் தாழ்ந்து கூறிக்
கொந்தொளி மாமணி யிட்டுப் போதுங்
கோளர விற்கருத் திட்டுப் போந்தார். 7

---

4. தோகைதன் தாதை - வள்ளியம்மையின் தகப்பன்.

7. மூவர் - முருகன், தெய்வயானை, வள்ளியம்மை. தன் மணியை ஓரிடத்திட்டு இழந்துபோகின்ற பாம்பினைப்போல, தமது கருத்தை இவர்களிடத்திட்டு இழந்து சென்றார்கள்.

வேறு

யாவருந் திருவரு ளெய்திப் போதலும்
மூவரும் வழிபடு முதல்வ னேக்கினல்
பூவரு மடந்தையைப் புறக்கென் ருக்கிய
மேவரு மாதராண் மேவித் தாழ்ந்தனள். 8

தழுவின ளெடுத்துட னிறைவந் தெங்கைநீ
விழுமிய துணையென மேவி னயெனக்
கெழுவிய காதலிற் கிளந்து விண்ணவர்
தொழுகுல யானைதன் றுணைவற் ருழ்ந்தரோ. 9

யாரிவள் வேடர்தஞ் சார்பி லெய்துறுங்
காரணம் யாதிவட் கரைதி யென்னலும்
வாரணம் வளர்த்தவள் வதன நோக்குபு
வாரண முயர்த்தவன் மகிழ்ந்து கூறுவான். 10

மருமலர்த் துளவினன் மகளி ராகமுன்
இருவருந் தோற்றினி ரெம்மை மன்றலிற்
பொருநிய சரவணப் பொய்கை மேவியங்
கொருவரும் பெருந்தவ முழந்து வைகினீர். 11

ஆவயி னும்மையா மடுத்து விண்ணவர்
காவலன் மகளெனக் கான வேட்டுவன்
மேவரு மகளென மேக வென்றனம்
ஏவியாங் கிருவிரு மெய்தி வைகினீர். 12

திருப்பரங் குன்றிடைச் செல்வி நின்னுளக்
கருத்தினை முடித்தனங் களவி னீங்கிவள்
அருப்பிளம் பூண்முலை யணைந்து மன்றலிப்
பொருப்பிடை யாற்றினும் புலவர் போற்றவே. 13

---

8. முருகன் வள்ளியம்மையை நோக்கித் தெய்வயானையை வணங்கும்படி குறிப்பாகக் காட்டிய கட்பார்வையினாலே அதனை வள்ளியம்மை தேர்ந்து தெய்வயானையைத் தாழ்ந்தாள்.

12. மேக - மேவுக.

நீயொரு குழவியாய்த் தவழ்ந்து நேர்செலக்
காயிலை வயிரவேற் கடவு ணாயகன்
பாயிருங் கடம்பொழி பகட்டை ஏவலும்
ஆயிடை யதுநினை வளர்த்த தாயிழாய். 14

ஈங்கிவள் சென்றது மெய்துந் தோற்றமும்
ஆங்கவன் வளர்த்தது மறியக் கூறுகேன்
பாங்குறக் கேளெனப் பட்டி மைக்குவட்
டோங்கலைத் துளைத்தவ னுரைத்தன் மேயினன். 15

வேறு

பிள்ளை மதியு மரவும் பிணைசடில
வள்ளல் கழற்கான் மறவா வழிபாட்டின்
கள்ளப் புலன்வென்ற கண்ணுவ மாமுனிவன்
ஒள்ளிய வைகுந்தத் துற்று ஞொருவைகல். 16

புள்ளே றுயர்த்த புயல்வண்ணன் றன்னோடு
தள்ளாத வார்வத் துரையாடச் சார்குற்ற
விள்ளாத சீர்த்தி விரதத் தவன்கோயில்
உள்ளா லவனிருந்த வோங்கு சபையடுத்தான். 17

வேறு

ஓங்குதன் கூற்றுன் முச்சக மளந்த
வுபேந்திரன் முதலியோர் சூழப்
பாங்குறு நளினப் பணிமலர்ப் பீடம்
பாவையோ டிருந்தபொன் னுடையோன்
ஆங்கெதி ரடுத்த முனிவனை நோக்கா
னையென விருக்கைநின் றெழான்மற்
றீங்கணை கென்ன மொழிகளும பயிற்று
னிருக்கையு மளித்திடா திருந்தான். 18

நன்றிவ னகந்தை யெனமுனி வெகுண்டு
நசிக்குமித் திருக்கொடு தருக்கிப்
பொன்றுநல் லறிவை மூகைபோன் றிருந்த
புயல்வணு பொருகடற் கதித்த

14. கடவுள்நாயகன் - இந்திரன்.

வென்றியங் கடுவை மிடற்றகத் தடக்கும்
விகிர்தனர் வேடமெய்ப் படுத்த
என்றனை யிகந்தாய் மூகைமைப் பிறவி
யெண்ணில வுறுகெனச் சபித்தான். 19

கானகத் துழலு மிருகமொத் திருந்த
கமலநாண் மலரணைக் கிழத்தி
தானுநெட் டிருங்கண் மான்வடி வனந்தஞ்
சார்ந்திடப் படுகவென் றுறுத்தி
ஊனமுற் றிரியத் தெள்ளிய வறிவி
னுபேந்திரன் முதலியோர் பாரா
ஈனமுற் றடுக்கும் வேட்டுவப் பிறவி
யெண்ணில வெடுமினென் றிறுத்தான். 20

ஒருவருஞ் சாப முறுத்திய முனிவ
னெய்யெனப் பெயர்ந்துதன் னிருக்கை
மருவினன் மாயன் முதலியோர் வெருவி
மழைமிடற் றிறைவனை முறையான்
இருவினர் வழிபட் டேத்தநின் மலனு
மெதிரெழுந் தருளியஞ் சலிரென்
றருளியம் முனியை விளித்திவர் சாப
மனுக்கொரு பவத்தினென் றறுத்தான். 21

சோத்தமெம் பெருமான் றிருமுத்தையேன் வாக்காற்
சொல்லுதல் வேண்டுங்கொன் முழுதும்
காத்தரு ளிறைவ வடியவர் மாட்டுக்
கருணையை விளக்கினை சாபம்
வீத்தொரு பவத்தி னிவரெலா முன்போன்
மேகவென் றுரைத்தடி யிறைஞ்சி
ஏத்தினன் விடைபெற் றேகினன் முனிவ
னெம்பிரா னருள்செய்து மறைந்தான். 22

வேறு

ஊனேறும் வேற்கண்ணு யுறுசாபந் தொடக்குதலும்
கானேறு மலர்ச்சோலை கமழ்வல்லத் தணிமைக்கண்
மீனேறு சுனைப்பொதும்பர் மேற்பாடி வரைச்சாரல்
தேனேறு துளவினன் சிவமுனியாய்த் தவமுழந்தான். 23

---

22. என் வாக்கினல் சாபநிவிர்த்தி சொல்லல் வேண்டுமோ.

அவ்வரைசூழ் நெடுங்கானத் தடுக்கிதழ்ச்செம் மலர்வாழ்க்கைக்
கொவ்வைநறுங் கனியிதழ்வாய்க் கோற்றொடிக்கைத் திருமாது
முவ்வுலகு மதிசயிப்ப முழுக்கனக வொளிதுளும்ப
நவ்வியுரு வெடுத்தன்றே நவ்வியினத் தொடுமுழன்றாள். 24

சுற்றமெலாஞ் சிலைவேடர் தொகையாக வெக்கலையும்
கற்றுணர்ந்த வுபேந்திரனுங் கானவர்க்கோ ரிறைமகனாய்ப்
பொற்றவளந் திகழ்குறிச்சிப் புளினரிறை பாலுதித்தான்
மற்றவன்பல் கிளைதுவன்ற வரையரசு புரிகின்றான். 25

மைந்தர்பலர் தமையீன்று மகளின்றி வருந்திஞன்
முந்தையருந் தவப்பேற்றான் முனியெதிரப் பிணையடுப்ப
அந்தில்விழிக் கலவிமுனி யாற்றிஞ னஃதோடி
நொந்துயிர்த்து வேற்றுருவ நோக்கியகன் றதையன்றே. 26

பரிவகலச் சிலைவேடன் படர்ந்தெடுத்து வளர்த்திட்டான்
அரிமதர்க்க ணிளமுறுவ லந்நலா யறிகென்றான்
தெரியிழையாண் மகிழ்சிறந்து சேட்பட்டுக் கிடந்தேமை
உரிமையுற வுடன்வைத்தா யுத்தமவென் றடிதொழுதாள். 27

இற்றைநாள் பயன்பெற்ற நாளன்றோ வெமக்கென்று
கற்றைவார் நறுங்கூந்தற் கானவர்தங் குலமகளைப்
பொற்றொடிக்கை யாலணமிப் புல்லினள் பூரித்து
மற்றவளுயந் தேனென்று மறுவலுஞ்சீ றடிபணிந்தாள். 28

ஆனந்தந் தலைசிறப்ப வளவளா வியபின்றைக்
கானந்து மலர்க்கூந்தற் கானவர்தங் குலமாது
தேனந்து மலர்க்கடப்பந் தெரியலான் கழல்வணங்கி
வானந்து மித்தணிகை வரைவாய்மை யருளென்றாள். 29

வேறு

வாடிய தேவர்கள் வன்சிறை
சாடிய வேற்படைச் சண்முகன்
ஓடரி மாமழை யுண்கணாய்
பாடுதுங் கோளெனப் பண்ணுவான். 30

---

24. முவ்வுலகு - மூவுலகு: அது விகாரம்.
29. வான் நந்தும் - விண்ணும் நந்தும்படியாக. உயர்ந்தவரை.

வளமலி காஞ்சிதன் வைப்பிடை
அளவலி னிந்தவ டுக்கலை
நளிவள மாநக ரேழுளும்
ஒளியொடு சீர்த்துயர் வுற்றதே. 31

விலங்கலுள வெள்ளி விலங்கல்பாப்
பலங்கலி ளுர்க்குரித் தாங்கெமக்
கிலங்குப லோங்கலு ளிவ்வரை
பொலங்கொடி யார்வம் புணர்ப்பதே. 32

விரைமல ருள்விரி கஞ்சமும்
திரைநதி யுட்டிகழ் கஙகையும்
புரைதப வோங்கிய போன்மென
வரைகளி னிவ்வரை மாண்பதே. 33

உருத்தெதிர் தானவ ருள்ளுயிர்
வருத்துபு மீண்டிவண் வந்துநாம
செருத்தணி வெய்தலிற் சீர்ப்பெயர்
செருத்தணி யென்றுசி றந்ததே. 34

அஞ்சன மேனி யவுணர்போர்
விஞசலு ருப்படை விண்ணவர்
எஞ்சலி லாதெய்து மாண்பினும்
வஞ்சியன் ஞயது வாய்வதே. 35

எப்பகை யுந்தரு மீண்டிருள்
துப்புடைத் தொல்செருத் துன்னிஞர்
வைப்பிடைத் தாழ்த்துற வனப்பினும
அப்பெய ரிப்பதிக் காயதே. 36

---

31. காஞ்சி நகரானது இந்த அடுக்கலைத் தன்னிடத்தளவலின் உயர்வுற்றது. காஞ்சி உயர்வுற்றது. அளவலால் காஞ்சி ஏழ்முத்தி நகருள் ஒன்றுய் உயர்ந்தது.

34. செரு தணிவு - போர் தணிதல்.

35. அவுணருடைய போர் அதிகப்படாமல் படையை விண்ணவர் ண்டெய்து மாண்பாலும், எனவே செருத்தன்மை ஈண்டுத் தங்குதல் பெற்றும். விஞ்சலுரு - அதிகப்படாமல.

36. இருட்செரு - ஆணவப்போர். ஈண்டிய ஆணவப்போர். துன்னிஞரானவர் அதைத் தாழ்த்துகிற வனப்பாலும்.

வேறு

என்று மிங்குநாம்
மன்ற வைகுதல்
நின்று நீலமே
நன்று ணர்த்துமே. 37

காலை காய்பகல்
மாலை மாமலர்
நீல நேரவிங்
காலவ மர்கின்றும். 38

ஐந்து நாளசைந்
தெந்த மிணையடி
வந்து வணங்கினோர்
பந்தம் பாற்றுவார். 39

வேறு

வீடா வினைமிக் குடைய ரேனும்
நாடா விவணண் ணினவ ரேமெய்
வாடா தவர்வா னவரின் மேலாம்
பீடா யினர்பெய் வளைக்கை நல்லாய். 40

அறந்தாம் பலவாற் றுநர்க ளேனும்
சிறந்தா ரெனச்செப் புநர்க ளேனும்
பிறந்தா ரலர்பெட் டிவணு ருரேல்
மறந்தாங் கியவாள் பொருது கண்ணாய். 41

பழிதீர் குறும்பல் லியமி யம்பிக்
குழலூ தியுங்கோ டுகளி சைத்தும்
வழுவான் றகர்மஞ் ஞையிவை யூர்ந்தும்
விழைவால் விளையாட் டயர்து மீண்டே. 42

---

37. நீலமானது திரிகாலத்தும் மலருஞ் செய்கையிலிருந்து விளங்குவது தெய்வத்தன்மையாகலின்.

38. நீலமானது திரிகாலத்தினும் நமக்கு மலரைக்கொடுக்க அமர்கின்றும்.

39. அசைந்து - தங்கி.

என்றே யிவையா தியுற வெல்லாம்
நன்றே தெரிவித் தருளு நம்பி
குன்று வருள்கொண் டனமென் றன்பின்
முன்றூழ்ந்து மொய்பூங் குழன்ம கிழ்ந்தாள். 43

படைவேல் வலம்பற் றுகும ரேசன்
விடைமே வரவீ சியது சொற்றும்
நடைமே தகுநா ரதன டுத்துத்
தொடையான் விடைசூழ்ந் தமைகி ளப்பாம். 44

விடையருள்படலம் முற்றிற்று
ஆகச்செய்யுள்—3080.

---

43. ஆதியுற - முதலர்க்.
44. விடை வீசியதை. தொடையால்.

நாரதனருள்பெறுபடலம்

போர வாய்ப்புர ளுஞ்சின வேற்கணார்
வார மாய்மறு கும்மயர் மாக்கடல்
தீர வான்கரை சேர்க்கும் புணையரோ
நார தீச்சுர னுண்மலர்ப் பாதமே. 1

வேறு

மன்றல்கம ழுங்குவளை மென்மலர்வி ரிந்தசுனை
மல்குகயி லைக்க ணொருநாள்
கொன்றைபுனை செஞ்சடில மன்றியபெ ரும்புனல்
குறுந்துளியெ னக்க துவுற
வென்றருளு மங்கணனை ணங்கொடும டங்கலணை
மீமிசையி ருப்ப வெவருமு
துன்றினர்ந ரம்புளர ருந்தவனு மங்கணெதிர்
துன்றுபுப ணிந்து தொழுதான். 2

வாரியும்வ டித்துநனி யுந்தியுமு றழ்ந்துமணி
யாழினிசை பாடி முனிவன்
ஓருமருள் பெற்றவனொ ழிந்துபெயர் கின்றவ
னுளததிடை யயிர்த்தஃ துதான்
தீரவொரு தாதைபயில் வானுலக மண்மியெதிர்
சென்றடிவ ணங்கி யிறைவ
வாரமொடி யான்வினவ நீயருள நின்றதொரு
வாய்மையிது வென்று மொழிவான். 3

இலிற்றுமழை மும்மதவெ றுழ்க்களிறு வெம்பரி
யெழிற்சிவிகை தேர்முத லொரீஇப்
பிலிற்றுமது நுண்டுகண றுங்கடிய கொன்றைபிறை
வேணிமுடி வைத்த பெருமான்

---

1. மயர் மாக்கடல் தீர - மயக்கமாகிய சாகரம் நீங்க.

3. தாதை - பிரமன். வாரல் - அள்ளுதல், கோலுதல், தடவுதல், நீளல், முகத்தல், வடிதல். வடித்தல் - கூராக்குதல், தெளிந்தெடுத்தல், வசமாக்குதல். உந்துதல் - உயர்ச்சியேறுதல், செலுத்துதல், தள்ளுதல். உறழ்தல் - எண்கூட்டிப் பெருக்கல்.

வெளிற்றுவிடை யூர்திகொள லென்னைவிரை யார்
வேண்டியவி ருப்ப வணியா [பொருள்கள்
தொளிற்றுருவ நீறணித லென்னெனவிவ் வாறுபல
வுங்கடவி னுன்க டவலும். 4

நோற்றலின்மி குத்தவற வோயிவையெ மக்கெளிய
வல்லநுத ஞேக்கின் மதவேள்
ஆற்றலுட லம்பொடிப டுத்தவிறை யேயறியு
மாங்கவனு தற்க ணருளும்
வேற்றலைவ னேயறியு மன்றியறி வாரிலை
விசாகனைய டுப்பி னவனே
தேற்றுவன தற்குரிய தேயமுய ருந்தணிகை
சேறியென வோதி னனயன். 5

கந்தவரை யாதிபல வுங்கடவு ளார்சிறை
கடிந்தமுரு கன்வ திவுற
எந்தைதணி கைக்கிரியு ரித்தெனமி குத்துரை
யியைத்திதணி கைப்பெ ருமையைச்
சிந்தையின்ம யக்கறவு ணர்த்துதியெ னப்பணிதல்
செய்தன னெழுந்து முனிவன்
தந்தைகும ரன்கழனி னைந்துதணி கைப்பெருமை
சாற்றுதல் வலித்த னனரோ. 6

அரம்புபுரி யாணவம ருட்டவறி வற்றிரு
ளகன்றவறி வேங்கி லயமாய்
வரம்பிலரு ளீசனுரு வுங்கொடுபி றர்க்கருள்
வழங்குமொரு வாய்மை யறியா
துரம்பயில்வி லாதவினை யானெனவ ணங்கில
னெழிந்துபடை வேல வனையான்
நிரம்பியபெ ருங்கருணை யாளனைவ ணங்கிநெறி
யாற்பெயர்வு கொண்டி யறலும். 7

---

7. அரம்பு - குறும்பு. மருட்டலாலறியாது. யான் வேலவனை வணங்கிலனுயொழிந்து.

வேதமுத லோதுபொருள் யாதெனவி னுயெனே
விதும்புறவ துக்கி நெடுநாள்
காதுசிறை வைத்திரச தக்கிரிக மூன்றுகவி
ஞன்றவட வேங்க டமுறீஇத்
தீதறவு யிர்த்தொகுதி நல்கியிறை யேவவிடு
திண்சிறையெ னக்கொ ருவுவித்
தாதிவின வச்சுருதி யாதிமொழி யின்பொரு
ளறைந்தவரை யந்த வரைகாண். 8

ஆருயிர ளிக்கும்வர மெய்தமல யத்தணிமை
யின்கணவிர் மூன்று சிகரத்
தேருமொரு வெற்படியி ருந்துதவ மாற்றியிறை
யோனடிப ணிந்து பரவ
வாரணிச டைப்பரம னேவலின டுத்தருளி
லிங்கம்வழி பட்ட ணவியான்
சாரரிய் மாதவமு மப்பவுல காக்குமரு
டந்தவரை யந்த வரைகாண். 9

இலைப்புரைகி ளைத்துநெடு மாலுமறி யாதவிறை
யோனருளி னுல ணவியெக்
கலைப்பொலிவு முற்றுமரு ணந்திதவ மாற்றவெதிர்
காமர்மயி லூர்தி வெளிநின்
றலைப்புனலி னுந்தியைய ழைத்ததின முத்தியருண்
ஞானமும ளித்தி ரவியிற்
றலைப்படுமொ ளிக்கணென வின்பநிறை விற்புணர்வு
தந்தவரை யந்த வரைகாண். 10

கும்பமுனி யண்மிநணி யார்த்துநட மிட்டவருள்
கூர்பரன டிக்க ணுறுநீர்
வம்பலர்சொ ரிந்தயல்வ ராகபுரம் வைகியொளி
வாய்ந்தசிவ லிங்க மிருவி
நம்புசிக ரத்திடையி வர்ந்துதவ மாற்றநவை
தீர்தமிழ்வி ரிக்கு முதன்மை
பம்புசிவ ஞானமொடு பன்னிருகை யாரியன்
பணித்தவரை யந்த வரைகாண். 11

---

9. உத்தாலகுவைப்பு. யான் பரவ.

11. நணியார்த்து - வீராட்டகாசஞ்செய்து.

இந்திர னுயிர்த்தமக னோடமரர் தங்களை
யிருஞ்சிறைப டுத்த வவுணர்
வெந்திறனெ டும்படைய னைத்தையு முடித்துவிறல்
வாகைமுடி சூடி யவுணர்
முந்துகவர் மாயன்முத லோர்திருவெ னைத்தையு
முகந்துகொடு போந்தி ருவுபு
பிந்தணவி யாங்கடவ மாற்றியிறை நல்கவவை
பெற்றவரை யந்த வரைகாண். 12

முன்னரொரு காலமற வோய்தணிகை நாதனடி
முன்னிநெடு மண்ணி லுறுநீ
அன்னநடை யன்னநடை மின்னிடைம ருங்குலமிழ்
தன்னமொழி மஞ்ஞை யியலின்
கன்னிகவி னின்னதென வன்னவன டந்துகள
வாற்றியுட னுய்த்தெ வர்களும்
துன்னவது வைத்தொழின்மு டித்துவிளை யாடல்புரி
தொல்லைவரை யந்த வரைகாண். 13

மேதகவி ளங்குமதன் மான்மியம னந்தமுள
வேற்கடவு ளேய றியுமால்
ஆதலினு னுக்கிரகம் யாவுமவ னேயுடைய
னவ்வருள்வ ழங்கு மிட்டும்
ஓதியது வேநனிதெ ரித்தியென வோதிம
முயர்த்தவன சத்த விசின்மேல்
வேதியனு ரைப்பமகிழ் வுற்றடிப ணிந்துவிடை
பெற்றனனல் வீணை முனிவன். 14

வேறு

விண்ணெறி நீந்திவி ளங்கிய நாரத மெய்ம்முனி வாரிசூழ்
மண்ணிடை வந்துவ ளந்தணி கைப்பதி வைப்பின்வயங்கிலைவேல்
அண்ணன்ம லைக்குவ டாதுகு டக்கி னலைத்தகி லுந்திவரும்
தண்ணிய நந்திந திக்குவ டாது தயங்கிய வெற்பணவி. 15

வானதி சென்னிமி லைத்தபி ரானடி வந்தனை செய்யவிது
தானமெ னக்கரு தித்தவழ் நந்தித டம்புன லாறுபடிந்
தீனம லத்தையி ரிக்கும்வி பூதியி லங்கிய கண்மணியும்
மேனிய ணிந்துப திட்டைபு ரிந்துவி திப்படி பூசைசெய்தான்.

பட்டினி விட்டொரு திங்கணி றைந்தப ராபரன் வந்தனையின்
கட்டிய செஞ்சடை நாரத மாமுனி காதலின் வைகுதலும்
மட்டும துக்கமழ் கொன்றைம லைத்தழ லாடிய வெம்பெருமான்
உட்டிக ழுங்கருணைக்கடல் பொங்கவு வந்தெதிர் தோற்றினனால்.

கண்டும கிழ்ந்துவ ணங்கிநி மிர்ந்துக ரஞ்சிரம் வைத்தெனையாள்
அண்டப ராபர வென்பர வங்கள தட்குல நீறணியாக்
கொண்டவ வெள்விடை யூர்குழ காவெளிர் கொக்கிற கீரமதித்
துண்டமு டிச்செரு குந்தலை வாசர ணென்றுது தித்தனனே.

புகழ்ந்தவ னிற்பவு ளத்தினி னைந்தபு ணர்ப்பறி யும்பெருமான்
நெகிழ்ந்தவு ளத்தவ நின்குறை வல்லைநி ரப்பும ழற்சுடர்வேல்
இகழ்ந்தக ரத்தவ னென்றரு ளிச்சிவ லிங்கம றைந்தனனவ்
வுகந்தவ ருட்குறி நாரத லிங்கமெ னப்பெய ருற்றதரோ. 19

அத்தகு நாரத லிங்கம்வ ணங்குநர் வாழ்த்துந ரார்வமெலாம்
மெத்திய செல்வர்க ளாய்வினை முற்றும்வி ளித்துயர் வீடுறுவார்
நித்தன ருட்கிட னாகிய மாமுனி நீடும கிழ்ச்சியனாய்ப்
பைத்தந திப்புன லாடியு யர்ந்தப ருப்பத மெஃகல்செய்வான்.

குணாது தி சைக்கண ணைந்துப ணிந்துகு ழைந்தவு ளத்தினொடும்
பிணாவய வுக்கரி யேறிரை நாடுபி றங்கல்வ லம்புரியூ
அணாவுநெ டுங்கொடி மேகமொ டாட்டய ராலய முற்றடிதாழ்ந்
துணாவிர விற்றுயி லின்றிவி சாகனை யுன்னியி ருந்தனனே. 21

---

16. வந்தனை செய்வதற்குத் தானமிதுவாகுமென்றெண்ணி.

17. பட்டினி விட்டு - உணவின்மையால் உண்டாகின்ற பசியென்பது மின்றியொழித்து: பசியென்பது மொழித்து எனவே உணவுமொழித்து என்பது தானே போதரும்: தவத்தர்கள் உணவின்மையாற் பசியென்ப தின்றி எஞ்ஞான்றும் ஒருபெற்றியராயிருப்பராகலின் இவ்வாறு கூறப்பட்டது.

20. பருப்பதம் - தணிகையங்கிரி. எஃகல் - ஏறுதல்.

21. பிணாவயவுக்கு அரியேறு. வயவு - ஆசை. வலம்புரியூ - வலம் புரிந்து. இரவில் உணாவும் துயிலும் இன்றி.

வேறு

அற்றையிராப் புலர்காலை யைதுவெண் ணீறுதரித்துப்
பற்றியயோ கமுழந்து பணிந்துபிரா னைப்புறம்போந்
துற்றவிதிப் படிகோறின் றுமிழ்ந்துநறும் புனறோய்ந்து
முற்றுறநாட் கடனாற்றி முதல்வனையண் மிப்பணிந்தான். 22

பாம்பணர்ந்தன்ன பைங்கோட்டுப் பன்மணிமா டகத்தள்ளற்
றாம்புறைதெண் டின்கணன்ன துரப்பமையா ணித்திவவின்
ஓம்பியபச் சையினல்யா ழொண்கையிடத் துத்தழுவித்
தேம்பயிறந் திரிதொட்டுத் தேக்கினன்பண் ணாரமிழ்தம். 23

மிதுனம்பயில் கின்னரங்கண் மெய்சோர்ந்தவனி யின்வீழக்
கதுமெனவற் றன்மரங்கள் காமருமென் றளிரீன
முதுவரைநெக் குண்ணெகிழ முன்னின்றுபா டியபின்றைச்
செதுமறுமா முனிகோயிற் றிருமாளிகை வலஞ்செய்தான். 24

வலம்புரிகா லைநிருதி மாதிரத்தண் மையிற்றோன்றும்
அலம்புபுனற் சுனைநோக்கி யார்வமொடங் கணடைந்து
சிலம்பரசன் முருகேசன் சேவடிசிந் தையிருத்தி
நலம்புரியோ கினிருந்தா னுளமங்நீர்ச் சுனைதோய்ந்து. 25

பன்னெடுநாள் கழிவெய்தப் பாரிடம்விண் ணவர்சூழப்
பின்னர்நெடு குங்கலாவப் பிணிமுகமூர்ந் தெனையாளும்
கொன்னவில்வேற் படைவள்ளல் குறுகினனவல் லையெழுந்து
பொன்னவில்பா தமிறைஞ்சிப் போற்றினனா ரதன்மாதோ. 26

வேறு

தடவரை மணியொளிர் தணிகையங் கிரியினை
கடவுளர் சிறைதபு கருணையங் கடலினை
கடவுளர் சிறைதபு கருணையை யாதலின்
இடர்தப வெளியமு மிணையடி பரவுதும். 27

---

23. அணர்தல் - மேல் நோக்கல். கோடு - வீணையின் மேற்சிகரம், அது பாம்பு மேனோக்கினாற் போன்றுள்ளது. துரப்பு - துவாரம். பச்சை - தோல். திவவு - வீணவலிக்கட்டு. தந்திரி - நரம்பு.

24. செதுமு - குற்றம்.

27. வரைமணி - மூங்கின்முத்து.

மகளிர்க ளிருவரின் வதிதரு மெழிலினை
துகளறு துறவியர் துறவியென் றிலகினை
துகளறு துறவியர் துறவியை யாதலின்
இகலற வெளியமு மிணையடி பரவுதும். 28

அரியய னமரரு மடிதொழு மமரனை
எரிசடை யிறைபணி யிறைமையி னிலவினை
எரிசடை யிறைபணி யிறைமையை யாதலின்
உரைபெற வெளியமு முனகழல் பரவுதும். 29

வேறு

என்று தோத்திர மியம்பிய பெருந்த வனெழுந்
தொன்று செங்கைமுடி வைகவுரை தள்ள வுடலில்
துன்று மென்மயிர்பொ டிப்பவிழி நீர்து தையநேர்
நின்ற னன்வரநி கழ்த்தென நிகழ்த்த லுறுவான். 30

கடுத்த யான்றெளிய வோதலெதிர் காட்சி யிறைநீ
கொடுத்த வைகலிது கன்னிமதி கூர்தலையுவா
அடுத்த வத்தமிதி லாடியிதி னிற்ப ணிகுவோர்
விடுத்து வல்வினைவி ளைந்தபெற நல்க வெனலும். 31

தந்த னம்வரமெ னத்தவனு டங்கு படரக்
கொந்தொ ளிக்கதிர்செய் கோயிலினு ழைந்த ணையிருந்
தந்த ணுவுளம யிர்த்ததெவ னேது தியென
எந்தை யுய்ந்தனனெ னத்தொழுதி றைஞ்சி மொழிவான்.32

கேழி லாதகிளர் பேரொளிய னாதி யிறைவன்
பாழி மாலிருள்ப டு●வுறு தூய வுருவன்
ஊழி னல்வறுமை யுற்றுமதி கெட்ட வர்கள்போல்
வேழ மாதிகள்வி டுத்துவிடை யூர்ந்த தெவனே. 33

---

31. கடுத்தல் - ஐயம். ஓதல் வியங்கோள். தலையுவா அடுத்த அத்த நட்சத்திரமாகிய இதில். இதில் ஆடி - இச்சுனையில் மூழ்கி. கன்னி மதி - புரட்டாசிமாதம்.

நாறு சாந்தநறு நீர்புழுகு நல்ல வொருவி
நீறு நாளுநிமிர் மேனிதிமிர் கின்ற தேவனே
ஏறு மாமணியி ருப்பவிழி யென்பு தலைநஞ்
சூறு பாம்பிறகெள் ளோடுலவை கொண்ட தேவனே. 34

ஆடை தீரவதள் கொண்டதேவ னங்கி மழுமா
னோடு நீர்மதிசு மந்ததேவ னாறு சுவையின்
நீடு வானமிழ்த நீக்கிவிட முண்ட தேவன்மெய்
வேடம் வேறுறவெவ் வேறுருவெ டுத்த தேவனே. 35

திருத்த குங்கடவு ளார்திரளி ருப்ப வகடு
பெருத்த பாரிடர்ம ருங்கமைவு பெற்ற தேவனே
வருத்த முற்றுகலுழ் தற்பொருள்வ ழங்கி வருமவ்
வுருத்தி ரப்பெயரு கப்பொடுத ரித்த தேவனே. 36

கடிஞை கொண்டுபயிக் கம்புகுவ தென்னை கனல்சேர்
சுடலை யாடுதொழி லென்னையுறு தூர்த்தர் விழைய
இடைவி டாதுவரை மாதொடுமி ருப்ப தேவனே
உடனி ருந்தவுமை காணநட மாட லெவனே. 37

வீணை மாமுனிவ னின்னணம்வி னுவ மகிழாக்
கோணை வேல்வயவன் கும்பமுனி வன்ப ணியமுன்
ஓண ஞர்க்கரிய வுத்தமனு ரைத்த னனிவை
மாண மற்றினிவ குப்பலென வாய்ம லருமால். 38

வேறு

ஆயிரத் திரட்டிச் சதுருக மொருநா
ளயற்கது முப்பது திங்கள்
ஆயவத் திங்கள் பன்னிரண் டாண்டவ்
வாண்டுநா ருயுளவ் வாண்டு
மாயவற் கொருநா ளம்முறை நூறு
வருடமு மரீஇப்பெயர் காலை
மாயவன் முதலா முலகெலாம் பரந்து
வயங்குசெந் தீக்கரந் துணுமால். 39

34. எள் ஓடு - இகழப்படும் ஓடு: நறுநீர் - பன்னீர்.
36. உரோதனத்தவன் ருத்திரன்: உரோதனம் - அழுகை.
37. கடிஞை - பிச்சை ஏற்கும் பாத்திரம்.
38. விஷ்ணுவுக்கரிய.

அத்தகு முடிவொன் றெய்தலு முலக
மழிவுநோக் கியவறக் கடவுள்
இத்தகு முடிவிங் கெய்துமே நமக்கு
மென்றுளம் விரும்பியேற் றுருக்கொண்
டுத்தமற் பணிய வுரன்முத லருளி
யூர்தியாக் கினன்விறன் மாலும்
வித்தகன் புரங்கொன் ஞான்றருள் பெறுவான்
விடையெனத் தாங்கின னறிதி. 40

குரையெரி சவட்டப் பொன்றிய வமரர்
கோமுட னீறிய நீறு
நரைநகு தலையு மங்கமுந் தனது
நல்லுரு நித்தியத் தியல்பும்
புரைபடு மேனோ ரநித்தியச் செயலும்
புகர்தபத் தெரிந்தொரு முதல்வன்
பரையிடங் கொண்டோ னெனவுயிர்த் தொகுதி
படர்ந்துவீ டுறும்பொருட் டணிந்தான். 41

மாயனை யயனை யெரித்துநீ றங்கம்
வண்டலை யணிந்திடு மொருகால்
தூயவன் னவரைச் சூலவாய் மடுத்துத்
தோளணி யாக்கிடு மொருகால்
ஆயவப் பொழுதின் முடிச்சிகை வாங்கி
யகலத்து நூலென வயக்கும்
நாயகன் செயற்கை தெரிக்குநர் யாரே
நன்றவர் புரிதவப் பேற்றுன். 42

மறைகவ ரவுணற் செகுத்துமீட் டுலக
மறுகுற வுடற்றிய மீனை
முறைபுரிந் திடந்த விழியினை மீட்டு
மூரிமா றருக்குரு வண்ணம்

---

40. அறக்கடவுள் - தருமதேவதை. உரன் முதலியவற்றைக் கொடுத்து.

41. உயிர்த்தொகுதியானது தெரிந்து பரையிடங்கொண்டோனே முதல்வனென்று படர்ந்து. உடல் நீறிய நீறும்.

42. சிகை - மயிர். நன்று - மிகவும்.

இறையவ னணிந்தா னெஞ்சுபூ வொன்றற்
கெதிர்மலர்ப் பங்கய விழியோன்
றறைகழற் பதத்து மற்றொரு காலத்
தணிந்தன னுழிவேட் டரியே. 43

தாய்க்கலாம் விளைத்த மாற்றவ னுயிர்த்த
தனயரென் றிகல்கொடு கருடன்
ஊக்கமிக் கலைப்ப வுளைத்தராத் தொகுதி
யுற்றடிப் பூசனை யுளுற்ற
நீக்கமி லணிக ளாக்கின னிமல
னீடுதா ருகவனத் தவர்வேட்
டாக்கிமே லுகைத்த வாளரா வினமு
மணியெனத் தாங்கின னறவோய். 44

தொக்கபே ராற்றன் மிகும்விராட் புருடன்
றொல்லுடன் மயிர்தொறுந் தூங்கும்
தக்கபே ரண்ட மனைத்துந்தன் னகட்டுட்
சார்த்துவான் சார்ந்தனன் றொடங்கும்
கொக்கின்மா னுருவிற் றானவற் செகுத்துக்
கோலவெள் ளிறகினை யவன்போல்
மிக்கபே ராற்ற லுடையவர் தருக்கா
வினைகொள முடித்தனன் விமலன். 45

மீன்முகப் பரவை கடைந்தஞான் றாழ்ந்த
விலங்கலைக் கமடமாய்த் தாங்கும்
தேன்முகத் துளவோன் செருக்கினைற் றருக்கித்
திரைகட லிறுதிநாட் போல
வான்முகத் துலகு மலைப்பகின் றலைப்ப
வல்விரைந் தோட்டினைப் பறித்துக்
கான்முகக் கடுக்கைச் சிவபிரா னீறு
கதிர்த்தமார் பத்திடை யணிந்தான். 46

தமனியத் தடங்கட் டானவன் புடவி
தன்னகத் தடக்கினன் பெயர
நிமிர்பெரு வரைபோ லேனமாய்த் தொடர்ந்து
நேர்ந்துயிர் குடித்தனன் மீட்ட

---

45. தானவன் - பகாசுரன்.

குமரியந் திகிரிப் படையினன் றருக்கக்
குறுகியோ ருலவையைப் புயந்து
திமிரவல் விடநின் றொளிர்மணி கண்ட
னோட்டொடுஞ் செறிதர வணிந்தான் 47

உடங்குல கனைத்துந் தாட்படுத் தோங்கு
மிரணிய னுயிர்குடித் தெழுந்த
மடங்கலந் துளவன் மலியுயிர் குமைப்ப
வண்சிறைச் சிம்புளாய்த் தாக்கி
அடங்கவுட் செருக்குச் சிரத்தினைச் சிரமே
லயன்சிர மீச்சுமாய்ப் பரித்துத்
தடங்கிளர் தோளி னுத்தரா சங்க
மாக்கினன் றயங்கிய வுரிவை. 48

காதியெவ் வுலகுங் கடவுளர் முதலோர்
கரந்துறை காசிமா நகரும்
மோதவங் கடுத்த கயாசுர னெதிரே
மொய்த்தபே ரொளியுருத் தாங்கி
மேதக நின்று கிழித்தெடுத் தமர்த்த
வியனுரு நோக்க லாற்றாது
மாதவர் முதலோர் வருந்தவவ் வொளியை
மறைத்தனன் படாமெனப் போர்த்து. 49

உயிர்க்குயி ராய்நின் றுறுவினைப் பயன்க
ளூட்டுநம் மிறைவனை யின்றி
இயக்கும்வண் கருமத் துயர்கதி யடைவா
னெண்ணின ரிருந்தவ முழக்கும்
செயிர்க்குணத் தாரு வனத்தினர் திருக்கைத்
திருக்கவெற்* றரையொடுந் தானோர்
பயிக்கனுய் நெடுமால் சுந்தர மகளாய்ப்
பாங்குறப் படர்ந்தனன் வனத்து. 50

---

47. இரணியாக்கன். புயந்து - பெயர்த்து. புயத்து எனவும் பாடம்.

49. எவ்வுலகையும் காதிக் காசிமாநகரையும் மோதுதற்கு வந்த கயாசுரனுக்கெதிரே அக்கினியுருத்தாங்கி, யானைத்தோலைப் போர்த்து.

தவம்புரி சூழ லரிவைபோய் மருட்டத்
தகையெழிற் பனத்தியர் சேரிச்
சிவந்தகைத் தலத்துச் சிறுபறை கறங்கச்
சென்றுலாய்ப் பலியிட வணைந்தோர்
நிவந்தவெங் காமக் கனலுளங் கொளுந்த
நிறையொடு கலைவளை மாமை
கவர்ந்தனன் றெரிந்து கடவுளை முடிப்பான்
கண்ணிவேட் டனரருந் தவத்தோர். 51

கொடுமகத் தழலி னிடிக்குரற் பேழ்வாய்க்
குயவரி வேங்கையொன் றெழத்தாழ்ந்
தடுதியென் றுகைத்தா ரயிலுகிர்க் கீறி
யரைக்குடை யாக்கினன் பின்னர்
விடுசுடர் மழுமான் வியாளம்பா ரிடம்வெண்
டலைவர விடுத்துமந் திரத்தைக்
கடவிவேட் டெழுந்த முயலகன் மகவெங்
கனலையு முடங்குற விடுத்தார். 52

மழுப்படை யாக்கி மறிதுடி யெனச்சென்
மந்திரஞ் செவிகளிற் றழுங்கத்
தழிக்கரத் துயர்த்துத் தலைதலை யணிந்து
தழலொரு கரத்துறீஇப் பூதர்
குழுப்புடை பெயரா விழுப்படை யாக்கிக்
கொழுவலி முயலகன் வெரிந்தாள்
அழுத்திநின் றாடி யயருல குய்ய
வடுத்துமை காணநோக் களித்தான். 53

விடைபொடி விழியென் பழிதலை யாவெள்
ளிறகுமா லோடுகோ டதடப்
படைமழு மறிவெம் பாரிட மியைந்த
பரிசுமை யம்புகு பரிசும்

52. அரிவாள் போலும் வரி.

53. மழுவைப் படையாக்கி.

உடையவ னடன முமையவள் காணு
முண்மையு முரைத்தன முமைகாண்
நடைபிணி மகவுக் கறமருந் தன்னை
நாடியுண் டாற்றுதல் போலாம். 54

வயிரவ னெனுந்தங் கூற்றினு மையம்
வையகத் தேற்றன னதுவும்
பயிலுமற் றனவுந் தெரிக்குதுந் தெரிதி
பழவினைப் பற்றறு தவத்தோய்
அயனரி மேரு வரையிடை யொருஞான்
றமர்ந்துடங் கிருந்தனர் தேவர்
நயனுறு முனிவர் நண்ணின ரேக
நாயகன் யார்நவில் கென்றார். 55

மம்மரின் முழுகு மலரவன் யானே
யென்றனன் மாயவன் யானே
செம்மலெண் குணத்துப் பிரமமென் றுரைத்தான்
செருக்கினு லின்னணங் கலாய்ப்ப
மும்மறை குடிலை வேறுவே றணுகி
முக்கணெம் பிரான்பரம் பிரமம்
அம்மவென் றுரைத்துந் தெளிகில ராக
வமலனு ரெதிருற வடுத்தார். 56

நாரணன் றெருண்டு வணங்கியோட் டந்தா
ஞன்முக னுச்சியின் முகத்தாற்
பூரணர் தம்மை யிகழ்ந்தனன் ஞாளிப்
புனிதனைத் தோற்றிமான் றிகழும்
ஆரணன் முதலோர் தருக்கெலாங் களையென்
றருளிவிண் மறைதலும் வடுகன்
கூரணி யுகிராற் கொவ்வையங் கனிபோற்
கொய்தன னுச்சிவான் றலையை. 57

விழுந்தயர் பிரமற் குயிரளித் தெழுப்பி
மேதினி வரைப்பெலாஞ் சுலாவிக்
கொழுந்தவத் தினர்தங் குறும்பறுத் தும்பர்க்
குலாயிமை யாரரட் டடக்கி

---

54. உமை காணும் நடையானது போலாம்.

57. ஓட்டந்தான் - ஓடினன். மான்று இகழும்.

எழுந்துவை குந்த மடுத்தெதிர் விடுவச்
சேனனை யேற்றுவண் சூலம்
தழுந்தளி யன்பின் மானுதல் வாக்குந்
தாரைநெய்த் தோர்கல னேற்றான். 58

மறிந்துவீழ் மாய னுயிரளித் தேகி
வயங்குமேற் புவனங்க ளனைத்தும்
செறிந்தவல் லரம்பு காற்றிய பின்றைத்
தேவர்மா தவர்க்கெலா மரணாய்ப்
பிறங்கிய வண்ட முகட்டின்வீற் றிருந்தான்
பிஞ்ஞக னருளினான் முடிவின்
உறங்கவெவ் வுலகும் பொடித்துள மகிழ்வி
னுலாவுமச் சுடுவனத் தன்றே. 59

சுடுவனத் தாடி யெனப்பரம் பொருளைச்
சொற்றதச் சுடுவனங் காண்டி
வடுகனங் கிருந்தோன் மாவலி கொடுப்ப
மண்ணளந் துலகெலா மலைத்த
நெடுகிய மாலைத் தருக்கறத் தாக்கி
நீள்வெரி நெலுமபுகைக் கொண்டு
படுமுட லுரிவை கஞ்சுக மாக்கிப்
பல்லுயி ரோம்பினன் முனியே. 60

வேறு

உமையாள்விழி மூடவி ருட்படலத்
துலகங்கவ லக்கனல் வாள்விழியால்
அமையாவரு ளாதனி ரித்தொளிமிக்
கருளக்கிளர் வேர்விர ரேறுமெழ

---

58. சூலத்தால் ஏற்று. தளி - குளிர். மால் நுதல் வாக்கும்.

59. வயிரவன் வீற்றிருந்தனனென முடிக்க. பிஞ்ஞகனாவன் எவ்வுலகும் உறங்கும்படி பொடித்துச் சுடுகாட்டில் உலவும்.

இமையாவிழி மாதுவி திர்ப்பவவை
யெங்கும்பெரு வெள்ளமெ னப்பெருகக்
குமையாதரு ளென்றெவ ரும்பரவக்
கூவிச்சடி லங்குடி யேற்றினனே. 61

பிற்றைப்பொழு திந்திரன் வேதனரி
பெரிதேத்தியக் கங்கைத னிற்சிறிது
பற்றித்தர வுய்த்தனர் தம்பதியிற்
பயில்வித்தனர் தாழ்ந்தப கீரதனுக்
கற்றந்தவிர் வேதன கர்க்கதுவு
மக்கங்கையை யேவவெ குண்டிழிய
முற்றுஞ்சடை யேற்றத னிற்சிறிது
முந்நீர்புக மண்முக முய்த்தனனே. 62

இருபத்தெழு மாதரை யீன்றுகடி
யினிதாற்றியெல் லாருழி யுஞ்சமனுய்
மருவித்திகழ் கென்றரு டக்கன்மொழி
வழுவிப்படு சாபம ரீஇத்திவளும்
உருவிற்கலை தேய்ந்தொரு வான்கலையோ
டுற்றுப்பணி யக்கலை யேறிமுறை
பெருகக்கதிர் வேணிம லைத்தெவரும்
பிறைசூடியெ னும்பெயர் பூண்டனனே. 63

சுரர்தானவர் போர்புரிந் தெண்ணிலர்க
டொலையத்தொலை யாதம ராடவுசாய்
அரிநான்முக னோடருள் பெற்றிலரா
யழுந்தார்கலி யைக்கடை யக்கடுவந்
தெரிசீதமெ னக்கன லக்கடுகி
யெவருஞ்சர ணென்றுவி ழுந்தயர
வரநீடிய வெந்தைமி டற்றிருவி
மனைமாதர்மி டற்றணி காத்தனனே. 64

---

61. அங்கி விழியால் இரித்து. விழியை இமைத்தெனவே பயந்து என்பது.

62. வேதனகரிற் கதுவிய அக்கங்கையை.

64. சிவனருளைப் பெறுதவராய்.

அல்வேறுப டுக்குமு ழுச்சுடர்போ
லடராணவ நீக்கரு ளேங்தொழில்கட்
கொல்வேறுரு வம்பல கொண்டருளு
முவையன்றியு மெண்ணிலு யிர்த்தொகையும்
பல்வேறியல் புள்ளன வேயதனுற்
பயிலும்பரி பாகம தற்கியையச்
சொல்வேறுரு வுந்தொழி லும்பெயருந்
தொலையாவரு ளெந்தை தொடங்கினனே. 65

பாவக்கட னின்றும ருட்கரையிற்
பலவாருயி ரும்படர் வித்திடலான்
மேவுற்றது ருத்திர நாமமிது
விமலன்வடி வெய்தின ருமபெறுவார்
ஆவித்தழு தானழ லோனதனு
லவற்காயவு ருத்திர நாமமிடர்
மூவுற்றவ முற்கல தேனையர்பான்
முற்றுதழு காரண மும்புகல்வாம். 66

ஒருஞான்றவு ணர்த்தெற வானவர்செல்
லுழிமாநிதி யம்பெற முற்றுமழற்
பெருமானுளி வைத்தம ராலவுணர்
புறங்கண்டபின் மீண்டவர் நல்குகெனத்
தருமாறில னாகியு டற்றுதலுந்
தளர்வுற்றழு தான்றனி மாதவனே
பொருளாற்புல வோருங்க லாய்ப்பரெனிற்
புவியோர்கள்க லாய்ப்பது மற்புதமோ. 67

கனகப்பது மத்தவி சானொருவன்
கடைநாளொழி காற்பவ மாய்வளர்நாள்
சனகன்முத லல்வரை யுந்தரவத்
தனையோர்தவ மாற்றியி ருந்தனர்பின்

---

66. ஆவித்து - கொட்டாவியிட்டு. ரும் - பாவம். திரம் - கரை. சிவனுக்காகிய உருத்திர நாமத்தைச்சொல்வாம். அவற்கு - அக்கினிக்கு.

67. உடற்றுதலும் - தேவர் வருந்துதலும். பெற - தாம் பின்பு பெற்றுக்கொள்ள.

இனமல்குயி ராக்கமு யன்றதுவந்
தெய்தாமையி னின்னலு முந்தரியை
அனகன்படைப் பெய்துவ ரந்தருகென்
றறவோரொடு சென்றுவ ணங்கினனே. 68

என்னுன்முடி யாதிது வென்றவரோ
டேகிக்கழ ருழுந்தரி யோதவிறை
அந்நான்முனி வோரயன் மாலைவிழித்
தவிர்நுண்பொடி யாக்கியி டத்திணிதோட்
டென்னுரரு ளேயுமை யாய்வருமா
திருநோக்கரு ளிப்புடை வைத்தவடன்
பொன்னுர்முலை புல்கிவி ளித்தவரைப்
பூத்தைம்படை யாற்கிது பேசினனுல். 69

அருளாகிய மாதிட மொன்றுதலா
னலரோன்செயன் முற்றுமி னிப்பெயர்கென்
றருளாலருள் செய்யவ ணங்கியவ
ரகல்வுற்றன ராரணி யெம்பெருமான்
ஒருவாதுமை மாதொடி ருத்தலினு
லுறுகாதலி னுெடு பெண்கள்பிணை ந்
திருநீர்ப்புவி யாதிய வெவ்வுலகு
மின்புற்றுயி ரீண்டிய தான்முனியே. 70

தலைக்கென்றது வும்புண ராவியல்பிற்
றனிஞானமு தற்பொரு ளானபிரான்
அனைத்துங்கரி சான்றவு யிர்த்தொகுதிக்
கருளுங்கரு ணைத்திற மென்றறிதி

---

68. பவமாய் வளர்நாள் - சிருட்டிகாலம். பிரமனுனவன் நால்வரையும் சிருட்டிக்க அந்நால்வராகிய தனேயோர்.

69. இறையான சிவன் விழித்துப் பொடியாக்கியிட. ஆக்கியிட - ஆக்க. தென் - அழகு. விளித்தவரைப் பூத்து - பொடியாக்கி அழித்த நால்முனிவர் முதலியோரைத் தான் உண்டுபண்ணி. விஷ்ணுவுக்குச் சொல்லத் தொடங்கினுன். புடையே வைத்து.

70. ஆர் - ஆத்தி.

இனிக்கும்புக ழானடி யார்க்கருளு
மியல்புந்தன மாண்பும்வ ரம்பிலுரு
முனைக்கும்பட ருள்ளம வித்தருளின்
முழுகித்திளை மோகம்வி டுந்தவனே. 71

என்றேமதின் மூன்றுமொ ருங்கவிய
வெரிமூரலி னானெழு வித்தருளும்
குன்றுதபெ ருந்தலை மைப்பகவன்
கோலத்தின யிர்த்தவ யிர்ப்பொழிய
நன்றேறுதின னுமைவ யிற்படையா
னவைதீர்ந்துயர் நாரத மாமுனிவன்
அன்றூர்தரு மோகைகி ளப்பவரா
ரடிதாழ்ந்தன னன்பொடு வாழ்த்தினனால். 72

வேறு

மறையோ லிடுந்தணிகை வள்ள லருளுருவம் வாழி வாழி
பிறையேர் நுதல்முகத்துப் பேரமைத்தோண் மாதரார் வாழி
பேரமைத்தோண் மாதர்ப் பிணைந்துலவும் பேர ருட்கண் [வாழி
வாரமிலேன் மாட்டும் வழங்கு மவன்கருணை வாழி வாழி. 73

வேறு

நார தப்பெயர் முனிவரன் விடைகொடு நடந்தான்
ஆர ணம்பயி லகோரனென் றந்தணன் மலநோய்
தீர வெண்ணின னடுத்தனன் றீர்த்தங்க ளாடி
ஆர வந்தனை புரிந்தரு ளான்முத்தி யடைந்தான். 74

விண்டு தீர்த்தம்வெய் யவன்றினம் வெண்மதி வாரத்
தண்ட ராட்டருச் சிவகங்கை யலைநதி யிரண்டும்
தொண்டர் போற்றிய நார தன் சுனையொடு நாகம்
கண்ட தீர்த்தமுங் கண்ணகன் புவிமகன் வாரம். 75

---

72. எரியை எழுவித்து. ஓகையைக் கிளப்பவர் ஆர் என வினவாக்கினும் பொருந்தும்; இப்பொருட்குக் கேட்ட நாரதன் தாழ்ந்து வாழ்த்தினன் என்க.

73. மாதர் - தெய்வயானை, வள்ளியம்மை.

75. புவிமகன் - செவ்வாய். வெய்யவன் - சூரியன்.

பிரம தீர்த்தத்துப் புதன்றினம் பிலிற்றுதேங் காவி
விரவு தீர்த்தத்து வியாழத்தின் கிழமைவெள் ளியினுள்
பரவு சீர்ப்பெருங் குமாரதீர்த் தம்பகர் சனிநாள்
உரவு நீர்க்குறு முனிசுனை யுற்றவன் படிந்தான். 76

அருளி னல்வர மவரவர் பூண்டவங் நாளும்
வருவ தோர்ந்துபுக் காடினன் வயங்குமேழ் சுனையும்
பரிதி வாரமுன் னாகவொ வ்வொன்றுறப் படிந்தான்
பொருவி லந்தணி ருய்பவ ரிம்முறை போற்றல். 77

விதித்த நாளிடை மிகுபயன் விளைப்பவென் றுள்ளம்
மதித்தி டரெந்த வாரத்தெப் புனல்படிந் தேனும்
கொதித்த வேல்வலக் குமரனைக் கும்பிடுந் தவத்தோர்
கதித்த தீவினை கடந்துபே றனைத்தையும் பெறுவார். 78

என்று சூதமா முனிவர னியம்பினன் வணங்கி
அன்று கேட்டமா தவரனை வோர்களும் வேள்வி
நன்று முற்றிய பின்னர்நற் றணிகையை நண்ணி
வென்றி வேலவற் றொழுதின்ப விளைவினை விளைத்தார். 79

வேறு

பூமேவு நான்முகத்தோன் முதற்றொழிலு
மணிமார்பன் புரப்புந் தெய்வத்
தேமேவு நறுங்கடுக்கை யரன்பணியு
மீசரவர் செயலுந் தூயோர்
நாமேவு செழுமறையா கமமனைத்து
நவின்றவர்நல் லருளு மெல்லாம்
தாமேயென் றவரவராய்ப் புரிந்தருளு
மொருமுதல்வன் சரணஞ் சார்வாம். 80

---

76. அவன் - அகோரன்.

78. விதித்த நாளிடை - இன்ன இன்ன தீர்த்தத்தில் இன்ன இன்ன வாரத்தில் என விதித்த நாளில். உள்ளம் மதியாதீர்

80. பணியும் - சங்காரமும். செயலும் - திரோபவமும். நல்லருளும் - அனுக்கிரகமும். நவின்றவர் - சதாசிவம்.

தொழும்பினரை யுடையவர்க ளாள்வதுறு
கடனென்னுந் தொல்லை மாற்றம்
செழும்பவள விதழ்மடவார் திறத்தழுந்து
மெனதுளத்தைத் திருப்பித் தன்சீர்க்
கொழும்புகழி னினிதழுத்திப் புதுக்கியரு
டணிகைவரைக் குமரன பாதம்
தழும்புபடப் பலகாலுஞ் சாற்றுவதல்
லாற்பிறர்சீர் சாற்று தென்னோ. 81

நாரதனருள்பெறுபடலம் முற்றிற்று

ஆகச்செய்யுள்—3161.

திருச்சிற்றம்பலம்

தணிகைப்புராணம் முற்றிற்று.

---

81. தொழும்பினரை ஆள்வது. உடையவர்கள் - அடிமையாக உடையவர்கள். உளத்தைப் புதுக்கியருளிய குமரனுடைய. மாற்றம் என்னும். என் நா.

குறிப்புரை அநுபந்தம்

[த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை]

விநாயகர் காப்பு:

1. மும்மதத்தன் - மூன்று மதங்களை உடையவன். கூந் தலையும் முலையையும் தொடியினையும் உடைய கொடிச்சி என்க. கொம்மை - திரண்ட. கோல் - வளைந்த. கொடிச்சியை - வேடர் குலத்துத்தோன்றிய வள்ளிநாயகியை. இளவல் - தம்பியாகிய முருகக்கடவுள். "சுஃறெனுந் தோட்டுப்பெண்ணை" (பரஞ்சோதி திருவிளை: வலைவீசின - 48.) ஐ இலை வேல்.

2. மதக்கலுழி - மதமாகிய கலங்கல். மண்ண - கழுவ. குழைப்ப - பதனழியச்செய்ய. மெலிவு - துன்பம். ஊற்று இருக் கும் - ஊற்றுனது நிலைபெற்றுள்ள; இடைவிடாத என்றபடி. "கூற்றம் அன்ன கூர்நுதி...மருப்பு; ஊற்றிருந்த மும்மதத் தோடையானை" (சிந்தா - நாமகள் - 123) காண்க.

கடவுள் வாழ்த்து:

1. உள் விலகு இருள் - அஞ்ஞானம். துமித்து - அழித்து. உருவத்து ஒளிகளின் - சூரியன், சந்திரன், அக்கினி என்பவை களால். இரித்து - கெட்டோடச்செய்து.

2. ஆரணன் - பிரமன்; சிருக்கு, மணிவடம். மாயன்; சங்கு திகிரி. அரன்; சூலப்படை, இலைவேல். இபமுகத்தன் - விநாயகக் கடவுள்; பாசம், அங்குசம். அனங்கன் - மன்மதன்; கரும்புவில், மலரம்பு.

3. பண்ணியம் - அபூபவகை; மோதகம். மருப்பு - ஒடிந்த கொம்பு. ஆணவமாகிய கொடிய யானை என்க. கரிசினேன்: வினையாலணையும் பெயர். கரிசு - குற்றம்.

4. விசும்பாதி - ஆகாயம் முதலாகவுள்ள ஐம்பூதங்கள். தேங்கு ஒளி - மிக்க பேரொளிப்பிழம்பாய். வெளி - ஆகாயம்.

வளி - வாயு. ஒள்ளொளி - அக்கினி. தெளிநீர் - அப்பு. நீங்கியமர்தல் பிருதிவியில். இதனை, "திருமுகங்க ளாறுகிச் செந்தழற்க ணாறும், ஒருமுகமாய்த் தீப்பொறியா றுய்ப்ப - விரிபுவனம், எங்கும் பரக்க இமையோர்கண் டஞ்சுதலும், பொங்கும் தழற்பிழம்பைப் பொற்கரத்தால் - அங்கண், எடுத்தமைத்து வாயுவைக்கொண் டேகுதியென் றெம்மான், கொடுத்தளிப்ப மெல்லக் கொடுபோய் - அடுத்ததொரு, பூதத் தலைவகொடு போதியெனத் தீக்கடவுள், சீதப் பகிரதிக்கே சென்றுய்ப்பப் - பொதொருசற், றன்னவளும் கொண்டமைதற் காற்றாள் சரவணத்தில், சென்னியிற்கொண் டுய்ப்பத் திருவுருவாய் - முன்னர், அறுமீன் முலையுண் டழுதுவிளையாடி" என்னும் (77 - 82) கந்தர் கலிவெண்பாவான் அறிக.

5. சூர் முதலை - சூரபன்மனாகிய முதல்வனை. இரு சுடர் - சூரிய சந்திரர். நறை - வாசனை. நளினம் - தாமரை.

6. கள் - தேன். சேக்கும் - தங்கியிருக்கும். வேத்திரம - பிரம்பு. தளித்த - துளித்த.

7. நவவீரர் - வீரவாகு, வீரகேசரி, வீரமகேந்திரர், வீரமகேச்சுரர், வீரபுரந்தரர், வீரராட்சதர், வீரமார்த்தாண்டர், வீராந்தகர், வீரதீரர் என்போர்.

8. முன் நாலும் துளைக்கரத்தோன் - விநாயகக்கடவுள். நாலும - தொங்கும். முன ஆலும் - முன்னே அசைகின்ற எனினும் ஆம. துளைக்கரம் - தும்பிக்கை. சடிலம் - சடை. மொய்ம்பில் - வலிமையோடு. அரந்தை - துன்பம.

9. அண்ணல் - பெருமை. நாணிய - நாண. "அரனடிக் கன்பர் செய்யும் பாவமும அறம தாகும், பரனடிக்கன்பி லாதார் புண்ணியம் பாவ மாகும், வரமுடைத் தக்கன்செய்த மாவேள்வி தீமையாகி, நரரினில் பாலன்செய்த பாதகம் நன்மை யாய்த்தே" என்னும் சிவஞானசித்தியார் (சூத் 2, செய் - 29.) கருத்தை நோக்கியது இச்செய்யுள்.

10. பாய - பரவிய. ஆர் உயிர் - எண்ணிலாத உயிர்; நிறைந்த உயிர் என்றபடி. பசுபதிக்கு அடிமை. ஆன்மா அடிமையும், ஏனைய உடைமையும் ஆம. மெய்த்தவம் - உண்மைத்தவம்; என்றது சரியை கிரியாயோகங்களை.

11. தெருள் - தெளிவு.

அவையடக்கம்:

1. கருவிகள் - தத்துவங்கள். ஒருவன் - ஒப்பற்ற சிவ பெருமான். உஞற்றுதல் - செய்தல்.

2. ஒருமை - ஒருமைப்பாடு, ஏகாக்கிரசித்தம்; 'ஒருநெறிய மனம்' என்பது அது. கசிவு அறுமனம் - உருகுதல் இல்லாத மனம்; 'நெஞ்சக்கனகல்' என்றருளினர் அருணகிரிநாதர்.

3. முதுக்குறைவு - அறிவு. விதுக்குறை - பிறைச்சந்திரன். பாகடை - பாக்கு வெற்றிலை.

திருநாட்டுப்படலம்:

1. வட்டவாய்க் கமலம் - கிண்ணம்போலும் வட்டமான வாயையுடைய தாமரைப்பூ. தணிகைக்குன்றம் மோலியணிந் தெனப் பாலிநாடு உயர்ந்தது. மோலி - கிரீடம்.

2. துலங்கல் இல் - அசைவில்லாத. அலங்கல் - அசைதல். கிழக்கு - கீழ. அது பகுதிப்பொருள் விகுதி. துறக்கம் - தேவருலகம். அறத்தின் ஆற்றல் - சிவபுண்ணியச் செயல்களால். அருங்கதி - வீடுபேறு.

3. கோள் - நவக்கோள்கள். தாள்முறை - முயற்சிகள். ததை - நெருங்கிய. அகழ்தல் - தோண்டுதல். 'கோள்கள் முறைபிறழுமாயின் மாரிவளங் குன்றும்' என்றதை வற்புறுத்து கின்றது. "கோணிலை திரிந்திடின் மாரிவறங் கூறும்" என்றது காண்க.

4. ஓங்கல் - மலை. உறுப்பிற்று - உறுப்பிணையுடையது. ஏமம் - பாதுகாவல்.

5. பெட்கும் - விரும்பும். நலிவு - துன்பம். ஆற்ற - மிகுதியாக.

6. கறை கெழு களம் - நஞ்சு பொருந்திய கண்டம். இறைவி - காமாட்சியம்மையார்.

8. இது தொண்டைநாடு சான்றோருடைத்து என்பதை வலியுறுத்துகின்றது. மொழியாகிய கதிர். கதிர் - கிரணம். ''சீர்த்தி மிகுபுகழ்''. மையாப்ப - இருளாகச் செய்ய.

9. கொடையாலுண்டாகும் புகழைக் கவசமாக அணிந்து, தருமமாகிய படைக்கலங்களை ஏந்தி, வாய்மை சீலம் நோன்பு பத்தி இவைகளை நால்வகைச் சேனையாகக்கொண்டு, பாவமாகிய பகையைக் கடந்தது என உருவகம் செய்தார்.

10. பல் வீ - பலவகைப்பட்ட மலர்கள். வெஃகி - விரும்பி. கரிசு - குற்றம். கவின்றது - விளங்கியது. தமது குற்றத்தைப் போக்கி வீட்டின்பத்தை விரும்பினவர்கள் பலவகைப்பட்ட தீர்த்தங்களில் மூழ்குதலினாலும் சிவதலங்களையும் சிவபெருமானுடைய திருவுருவங்களையும் தரிசித்தலாலும்; நாடு பலவகைப் பட்ட தீர்த்தங்கள் பொருந்துதலினாலும் சிவதலங்கள் மிக்குடைமையாலும் சிவபெருமானுடைய திருவுருவங்களமைந்த திருக்கோயில்களைத் தன்பால் கொண்டு விளங்குதலாலும் கவின்றது.

11. தொண்டைநாடாகிய மங்கை கூந்தல் காடாகவும் தனபாரம் மலையாகவும் சிறந்த கைகள் தாமரை மலராகவும் அல்குல் கடலாகவும் கொண்டு, வேத ஒழுக்கமாகிய கணவனோடு கலந்து, அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற் பயனையும் ஒருசேர மக்களாகப் பெற்றுப் பாதுகாப்பதாம் என்க. கானில், மலையில், பணையில் இல் உவம உருபு.

13. கடவுள் வெண்கரி - ஐராவதம். விசும்பு - ஆகாயம். ஒரீஇ - நீங்கி. புரந்தரன் - இந்திரன்; அவன்திசை கிழக்கு. மூகில் - மேகம். அண்மி - நெருங்கி. அந்தரம் - ஆகாயம். வெண்ணிறமுடைய மேகங்கள் கீழ்கடலிற் சென்று கடல் நீரைக் குடித்துக் கறுத்து அந்தரத்து எழுந்தன.

14. தேத்தடை - தேன் இறால். அசும்பு - வழுக்கு. மதலை - முருகவேள். கரி அடுத்தென - ஐராவதம் அடுத்தாற் போல. நந்தி மலை முதலாக உள்ள சிலம்பெல்லாம். சிலம்பு - மலை. இறுத்தன்று - தங்கியது.

15. செம்மல் - முருகவேள். இபம் - ஐராவதம். மேக்கு உயர்த்த - மேலே உயர்த்த. வாசிகை - தேமாலை. சிலை வாங்கி -

இந்திர வில்லை வளைத்து. வாள் மணி தீபம் - ஒளி பொருந்திய இரத்தின தீபம். தடித்து - மின்னல். சும்மை - ஒலி. மம்மர் ஏதம் - மயக்கத்தைச் செய்கின்ற துன்பம்.

16. வெம்மை - வெப்பம். உடற்றுழி - பகைத்தகாலத்து. உடைந்து - தோற்று. பெட்டல் - விரும்புதல். குருகு - வளையல். திருகு - மாறுபட்ட. சார் தனம் - பொருந்திய தனம்.

17. முனி - வியாக்கிரபாதர். பாற்கடல் பெற்றது - உபமன்யு முனிவர்க்காகத் திருப்பாற்கடலைப் பெற்ற வரலாறு காண்க. அமரர் ஆன் - காமதேனு. பயம் - பால். அது - பாற்கடல்.

18. பாலியாற்று வெள்ளம் முருகக்கடவுள்போல விளங்கியது. காந்தட்பூ வேய்தலினாலும், மயிலைக் கடாவுதலாலும், வெறியாடுகளத்துச் சார்தலினாலும், சாதிலிங்கக் குழம்பிலே தோய்தலினாலும் என்க. இங்குலிகம் - சாதிலிங்கம். நீத்தம் - வெள்ளம்.

19. பாலிவெள்ளம் குறிஞ்சிநிலத்து மாதர் ஒழுக்கத்தையும் உடையதாயிற்று. சுனைநீராடுதல், பளிக்குப் பாறையில் பொருந்துதல், விரும்புவோர் மெய்யிற் படிதல், வேங்கைமலர் குறிஞ்சி மலர்களைப் பறித்தல், தினைப்புனத்தை நீக்குதல், புள் விலங்கு முதலியவற்றை ஓப்புதல் முதலிய செயல்களால். பளிக்கறை - பளிங்குப்பாறை. வீழ்ந்தவர் - விரும்பியவர். குற்று - பறித்து. குரல ஏனல் - கதிர்களையுடைய தினை. ஓப்பி - ஓட்டி.

20. கோழரை - வழுவழுப்பாகிய அரை. வெள்ளம் அகில் சந்தனம் குங்குமம ஆகிய காடுகளை முறித்துக்கொண்டு, தினையை விதைத்து, கிழங்குகளை அகழ்ந்து, தேன்கூடுகளை அழித்துக் குடித்து வருதலால் வேடர் ஒழுக்கத்தையும் ஒத்துளது. சாடி - முறித்து, வாரி வித்தி - அள்ளித்தெளித்து. மாந்தி - குடித்து. ஊழ் - முறைமை. விராயது - பொருந்தியது.

21. சிலை - வில், அலம் - கலப்பை. கணிச்சி, பரசு இவை முறையே தசரதராமன், பலராமன், பரசுராமனிடத்து உள. வெண்ணெயை வாரிக்கொண்டு, ஆகாயத்தை அளாவி, நீர் நிலையில் புகுந்து, உழக்கி, பூமியை எடுத்து நிறுத்தி, அண்டர் கெட்டோடச் சிதைத்து, கலியின் முடிவைத் தோற்றுவித்து

முல்லைநிலத்தில் வருதலால் மாயோனை வெள்ளம் ஒத்தது. தெவ்வி - வாரிக்கொண்டு, எடுத்துக்கொண்டு. "சோறுடு தெவ்வுதலும்" என (காஞ்சிப்புராணம் - நகரேற் - 142,) இவ்வாசிரியர் கூறினர். நிமிர்ந்து - உயர்ந்து. உழக்கி - கலக்கி. அண்டர் - தேவர், இடையர். கலி - துன்பம், கலியுகம். வெண்ணெய் உண்டது கண்ணனாக, வான் நிமிர்ந்தது திருவிக்கிரம அவதாரத்தில். வாரியை உழக்கியது மச்சாவதாரத்தில். நிலன் எடுத்து இருத்தியது வராக அவதாரத்தில். அண்டர் உலைதர எற்றியது நரசிங்க அவதாரத்தில். புறவம் - முல்லைநிலம்.

22. தயிர், நெய் வைக்கும் பாத்திரங்களை ஆயர்பாடியில் எடுத்துச்சென்று, அங்கங்குள்ள பொருள்களை மாற்றி, பொன் மணி முதலானவைகளைத் திரட்டிச் செல்லுதலால் வெள்ளம் ஆய்ச்சியரையும் ஒத்திருந்தது. முளி - காய்ச்சிய. மூரி - வலிமை. கலன் - பாத்திரம். பாடியுளி: உளி ஏழன் உருபு. குளவி - மல்லிகை. பொதுவமாதர் - இடைச்சியர்.

23. கவைக்கொம்பு, வேய்ங்குழல், முறுக்கோடு கூடிய கயிறு இவைகளையுடைத்தாய்ப் பசுக்களைக் காத்து, விடை தழுவி, தோய்ந்த மகளிர் கூந்தலில் கொன்றை மாலையைச் சூட்டிச் செல்லுதலால் அவ்வெள்ளம் இடையர் செயலையும் ஒத்திருந்தது. கவைக்கோடு - கிளையையுடைய கொம்புகள். வேய் - மூங்கில், வேய்ங்குழல். நார் - கயிறு. மணிநிரை - மணிகளின் கூட்டம், மணிகள் கட்டப்பட்ட பசுக்கள். விடை தழுவுதல் - காளையைத் தழுவுதல். அலங்கல் - மாலை. ஆயர் - இடையர். தோய்தல் - மூழ்குதல், கூடுதல்.

24. செந்தாமரைக் கண்கள் உடம்பிற் பொலிதலாலும், வைரத்தைப் பற்றுதலாலும், வாரணம் மேற்கொள்ளுதலாலும், காத்தலை மருவுதலாலும், கற்சிறை சிந்துதலாலும், வெள்ளம் இந்திரனையும் ஒத்தது. வைரம் - வச்சிராயுதம், மரவைரம். வாரணம் - யானை, சங்கு. காத்தலை மருவி - காத்தல் தொழிலைப் பொருந்தி, காவினிடத்துப் பொருந்தி. தலை: ஏழன் உருபு. கற்சிறை - மலையின் சிறகுகள், கல்லாற் செய்யப்பட்ட மதகுகள். செந்தாமரைக்கண் மெய்யெலாம் பொலிய - இந்திரனுக்குச் செந்தாமரை மலர்போன்ற கண் எனவும், வெள்ளத்துக்குச் செந்தாமரைக் கள் எனவும் பொருள் கூறுக. பழனப்பாங்கர் - மருதநிலத்து. இறுத்தது - தங்கியது. இந்திரன்

மருதநிலத்துக்குரிய தெய்வமாகலின், வெள்ளம் விண்ணரசன் என்ன அங்கே இறுத்தது என்றார்.

25. கடைசியர்: கிளிகள் பயப்படும்படி கொஞ்சிக் கொண்டு, தாமரை குமுதம் முதலிய களைகளைப் பிடுங்கி, தமது கணவர் அகமும் முகமும் மலரும்படி அணைந்தனர். வெள்ளம்: கிளிகள் அஞ்ச ஒலித்து, வயலிலுள்ள தாமரை குமுதம் முதலியவற்றை அடித்துக்கொண்டு, கொழுமையான அரும்புகள் மலரும்படி பொருந்தியது. வயின் வயின் - இடந் தொறும். முருகு - வாசனை, தேன். முண்டகம் - தாமரை. கட்டு - பறித்து, பிடுங்கி. குரு - நிறம். மணி - இரத்தினம். காஞ்சி - எழுகோவை மணிவடம்; இருகோவை மணிவடம் என் பாரும் உளர். நனை - அரும்பு. கொழுநனை - கணவனை, கொழுத்த அரும்புகள்.

26. களமர்: வயலை அடைந்து பயிரிடுதற்கான செயல் களைச் செய்து, பின்பு விளைந்த கதிர்களைக் கொய்து, களத் துக்குக் கொண்டு சென்றும், கருப்பங்காட்டை வெட்டி ஆலையி லிட்டுச் சாறுபிழிந்தும் பெருமகிழ்வெய்துவர். வெள்ளம்: வயலை அடைந்து, நெற்கதிர்களை வாரிக்கொண்டு, பெருமை தங்கிய களத்திற் சேர்த்து, கருப்பஞ் சோலைகளையும் அடித்துக் கொண்டு சென்றது என்க. மோடு - பெருமை. களமர் - மள்ளர்.

27. வெள்ளம்: மேற்கிலிருந்து கீழ்கடலிற்சென்றும், மலைப் பக்கங்களில் பொருந்தியும், எதிர்த்து ஏறிவரும் மகர மீன்களைத் தள்ளியும், எல்லா நிலங்களின் வளங்களையும் பாதுகாத்தது. வருணன்: மேற்றிசைப்பாலகன் என்பதையும் நெய்தல் நிலத் தலைவன் என்பதையும் காட்டி, அழகிய புன்னைமரச்சூழலில் சுருமுள்ளை நாட்டி நெய்தல் நிலமாக்கள் பூசிக்கும் நிலையையும், மற்றை நிலங்களின் செழுமையையும் போற்றுதல். நாகம் - மலை, புன்னைமரம். மகரம் - மகரமீன், சுருமுள். கானல் - கடற் கரைச்சோலை.

28. பரத்தியர்: தாமரை, நீலோற்பலம், புலிநகக்கொன்றை மலர்களைத் தலையிற்சூடி, விலையைப்பெற்று வளை முதலிய வற்றை வேண்டுவோர்க்குத் தந்து, மீனைக் கவரவரும் புட்களை யோட்டி இரங்குதல். வெள்ளம்: மலர்களையும் தழைகளையும்

அடித்துக்கொண்டு, சங்குகளை வாரி எறிந்து, புட்களையோட்டி, ஒலித்துக்கொண்டு சென்றது. முண்டகம் - தாமரை. முருகு - வாசனை. மண்டிய விலை எனவும், மண்டிய இலை எனவும் கொள்க. தொண்டைவாய் - ஆதொண்டங்கனிபோலும் சிவந்த வாய். பரத்தியர் - நெய்தல்நிலமகளிர்.

29. வெள்ளம்: களிமண்ணோடுகலந்த உப்பை அடித்துக் கொண்டு, உப்பங்கழிகளையும் கலக்கி, மேல் மோதிக் கடலிலே கலந்து, நீரின் கீழேயுள்ள முத்துக்களையும் பவளங்களையும் மேலே கொணர்ந்து, மரக்கலங்களை வீழ்த்தி, பரத்தியர் நீராடும்படி பொருந்தும். பரவமாக்கள்: களிமண்ணோடு கலந்த உப்பை எடுத்து, மீன்பிடிப்பதற்காக உப்பங்கழிகளைக் கலக்கி நீந்திச் சென்று, கடல்நீரில் மூழ்கி, அங்கேயுள்ள முத்துக்களையும் பவளங்களையும் எடுத்து, மரக்கலங்களைத் தள்ளிச்சென்று, பரத்தியர்களை அணைந்து பொருந்துவர். கிழ்நீர் - நீர்க்கீழ் என மாறுக. நித்திலம் - முத்து. துவர் - பவளம். கலன் - மரக் கலம். கெழீஇயது - பொருந்தியது.

30. மலைந்து - சூடி. எயிற்றி - வேட்டுவிச்சி. ஆறு அலைத்து - வழிச்செல்வோரை வருத்தி. எயினர் - வேட்டுவர். உருப்பு அவிர் - வருத்துதலைச்செய்யும். நீத்தம் - வெள்ளம்.

31. பழங்கண் - துன்பம். சேயாறு, நந்தினி, பொன் முகலியாறு என்பன.

32. மருந்து - தேவரமுதம். தம் குலத்தவள் - வேட்டுவர் குலத்துத் தோன்றிய வள்ளியம்மையார். வெற்பர் - குறிஞ்சிநில மாக்கள். பூசனை விழா - நித்திய நைமித்தியங்கள். பொருப்பு மலை.

33. குகன் என்னும் பெயர்க்காரணம் கூறியவாறு. குறிஞ்சி நிலக் கடவுள் முருகவேள் என்பது.

34. நுனித்தறிந்து - கூர்த்தறிந்து வைத்தும். வடித்த நவ்வி - கூரிய கோடரி. தடித்து - மின்னல்.

35. வெண்மையான வைரக்கற்களும் முத்துக்களும் நிதிக் களஞ்சியம்போன்று பசும் பொன்னோடு இமைப்பனவாம். ஆரம் - முத்து. பள்ளி - களஞ்சியம்.

36. கடித்த - வாசனையோடு கூடிய.

42. உருமின் - இடிபோன்று. உழுவை - புலி. உம்பல் - யானை. வீ இணர் வேங்கை - பூக்களையும் பூங்கொத்துக்களையு முடைய வேங்கைமரம். மிக்க கோபம் வந்தவிடத்து எதனையும் பகுத்தறியவாராது என்பது நீதி.

43. இடப்புறத்து வீழ்ந்ததை வேங்கை உண்ணமாட்டா, கிட்டும் பொருளை மிக விரைந்து ஆக்குவார்போல அழிப்பார் என்பது. கதழ்ந்து - கோபித்து.

44. ஆசினி - பலா. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்பது.

45. தாழ்ந்த பொருளாயினும் கிடைத்தற்கு அரியதாயின் உயர்ந்தனவாம; மிக உயர்ந்த பொருளும் எளிதிற்கிடைக்கு மாயின் அவை தாழ்ந்தனவே.

48. பிரிவு இனைவு அலால்; பிரிவில் நைவு அலால் என வும் பிரிக்கலாம். இனைவு - வருத்தம்.

49. உயங்குதல் - வருந்துதல். வயம் - வெற்றி. மார வேள் - மன்மதன். பகழி - அம்பு.

50. அஞர் - துன்பம். முரப்புச் சூழல் - பாலைநிலம்.

52. தாது உண்டு. தாது - பருக்கைக்கல். ஓ அற - நீங்குத லின்றி. எவர்க்கும் வேள்கணை தீர்திறம் அரிது என்பது.

54. கோழரை - வழுவழுப்பான அரை. மராமரம், அகில் முதலியன கோழரையுடையன (நாட்டு - 20). "கோழரைக் குங்குமம்" என்றார் நைடதநூலார். விரவு அலர். அலர் - மலர், பழிமொழி. பாடலம் - பாதிரி. கோகிலம் - குயில்.

55. பொகுட்டரை இருப்பை.

57. மறைசை யந்தாதியில் "தத்தலை வேலையன்" என் னுஞ் செய்யுள் "வைத்தலை வேலையன் பாலென்னை நாடி வர வெண்ணுமே" எனக் கூறுதலால் நாயகியோடு உடங்கு பாலை

நிலத்திற் செல்வோர்க்கு முள்ளும் வெம்மையும் நிறைந்த அப் பாலையாலுண்டாகும் வருத்தம் அவர்களுக்குத் தோன்றாது இன்பமே தோன்றும், பிரிந்து செல்வோர்க்கே துன்பந்தோன்றி நாயகியைக் குறித்துத் திரும்பிவரச்செய்யுமாதலால் அவ்வாறு கூறினர். 'அலைவேலை' என்ற குறிப்புக் காண்க. இது உடன் போக்கில் நற்றாய் வருந்தலாம்.

63. இருந்தை - கரி. பூவை - காயாம்பூ. கோபம் - இந்திர கோபப்பூச்சி; தம்பலப்பூச்சி என்பர்.

64. உரியநாசி. உலப்பற்ற - எல்லையில்லாத. பரியா - தாங்கி.

65. மலர்த்திரு மானுக, மாயோன் மாதவன் ஆகி. நாம் நாளும் இவண் தணவேம் என.

74. இளவல் - உபேந்திரன். புறவம் - முல்லை.

78. அளி - வண்டு. திரை - அலை. கம்புள் - சம்பங்கோழி. குரண்டம் - கொக்கு.

79. இலஞ்சி - குளம.

80. பிருதிவி: நாற்கோணமாய், நிறம் சுவர்ணமாய், குணம் கடினமாய், அக்கரம் ல வாய், மந்திரம் சத்தியோசாத மாய், அதிதெய்வம் பிரமாவாய், ஆயுதம் வச்சிராயுதமாய், கலை நிவிர்த்திகலையாயுள்ளது. அப்பு: அர்த்த சந்திரனைப்போன்ற தாய், நிறம சுவேதமாய், நெகிழ்ந்த குணமாய், அக்கரம் வ வாய், வாமதேவ மந்திரமாய், அதிதெய்வம் திருமாலாய், ஆயுதம் தாமரையாய், பிரதிட்டாகலையாயுள்ளது. தேயு: முக்கோண மாய், நிறம் சிவந்ததாய், மூன்று குணமுடையதாய் அதில் ஒரு குணம் சுடதாய், அக்கரம் ர வாய், அகோரமந்திரமாய், அதி தெய்வம் ருத்திரனுய், ஆயுதம் சுவஸ்திகமாய், வித்தியாகலையா யுள்ளது. வாயு: சலித்தலாய், நிறம் கருமையாய், குணம் சலனுய், அக்கரம் ய வாய், தற்புருடமந்திரமாய், அதிதெய்வம் மகேசுரராய், ஆயுதம அறுபுள்ளியாய், கலை சாந்திகலையாய் உள்ளது.

ஆகாயம் : வட்டவடிவாய், நிறம் படிகமாய், குணம் பூரண மாய், அக்கரம் ஹ வாய், ஈசான மந்திரமாய், அதிதெய்வம் சதா சிவமாய், ஆயுதம் அமுதவிந்துவாய், சாந்தியாதீத கலையாய் உள்ளது. இம்முறை பார்த்திப பூசாவிதி அட்டவணையிலும் தத்துவப்பிரகாசத்திலும் உள்ளது. தத்துவப்பிரகாசத்தில் ஆயுதத்தைக் 'குறி'யென்னுமாறு ஆண்டுக் காண்க. ஐம்பூதங் களும் தனித்தனி எவ்வெட்டடையாளமுள்ளன; அதில் அப்புவுக் காயுதம் தாமரையாதலால் 'ஓம்பு தன் குறியினோடு முறைந் தென' என்றார். கூம்புற - குவிய.

115. கண்டூதி - தேமல். வெறி களுற்றும் - மணம் நிறை விக்கும்.

119. "சிவஞானச் செயலுடையோர் கையில் தானம் நில மளவே செய்திடினும் நிலமலைபோல் திகழ்ந்து, பவமாயக் கடலினமுந் தாதவகை யெடுத்துப் பரபோகம் துய்ப்பித்துப் பாசத்தை யறுக்கத், தவமாரும் பிறப்பொன்றில் சாரப் பண்ணிச் சரியைகிரி யாயோகம் தன்னிலும் சாராமே, நவமா கும் தத்துவஞா னத்தை நல்கி நாதனடிக் கமலங்கள் நணுகு விக்கும் தானே" (சித்தியார். 8 சூ. 26 செய்) என்னும் திரு விருத்தம் காண்க.

120. "பரஞானத்தால் பரத்தைத் தரிசித்தோர் பரமே பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார்" (சித்தி. 11 சூ. 2 செய்) என்னும் திருவிருத்தத்தால் அறிக.

124. குயம் - அரிவாள். பங்கம் - சேறு, துன்பம். அலர் மலர், பழிமொழி.

130. "உழப்பின் வாரா உறுதிகள் உளவோ" என்னும் திருவாக்கை முதலடி நினைப்பிக்கும். "முயற்சி திருவினையாக் கும்" என்பது பொய்யாமொழி.

136. வினைஞர் - பரதவர். புனல் உம்பன் - வருணன்.

139. திருமாலும் பிரமதேவரும் அடிமுடி தேடியபோது பிரமனுக்குப் பொய்ச்சான்று பகர்ந்த தாழை. முண்டகம் தாழை.

140. மின்னுவதால் தாழை பூக்கும் என்க.

142. மேதை - அறிவுடையோர். நாகம் - புன்னை. ஞாழல் - புலிநகக் கொன்றை. கைதை - தாழை. நெய்தல் - நெய்தற்பூ. கடி - வாசனை.

154. தினைக்குரல் - தினைக்கதிர். கொல்லை - முல்லைநிலம். இறுங்கு - சோளம். சொன்னல் - சோளம். விம்மிதம் - வியப்பு.

155. மந்திரம் தளைத்து என - மந்திரத்தால் கட்டப்பட்டாற்போல. மானமா - கவரிமா. மாதவி - குருக்கத்தி.

156. "தெருண்ட மேலவர்" என்னும் கம்பராமாயணச் செய்யுளையும் நோக்குக.

157. வேழம் - கரும்பு, யானை. பகடு - எருமைக்கடா, யானை.

158. பாழ் அகடு - பெரிய வயிறு. கார்கோள் - கடல். தரங்கம் - அலை. தெழித்திடும் - ஒலிக்கும்.

159. நாகத்தின்மணி - மாணிக்கம். ஓங்கல் - மலை. புணரி - கடல். வித்துருமம் - பவளம். அடுக்கல் - மலை.

160. குரும்பைகள் தோன்றுமுன் பாளை அதனை மறைத்து நிற்கும், அதுபோல, நகில்கள் தோன்றுமுன் துகிலினால் போர்த்திட்டதை ஒக்கும். குரும்பைகள் வெளிப்பட்டபின் பாளைகள் விரிந்து அவைகளை வெளிப்படுத்தி நிற்கும்; நகில்கள் தோன்றிய பின் துகில்கள் ஒதுங்கிநிற்பதுபோல், அதனைக்கண்டு முல்லைகள் சிரிப்பன. அதனைப் பொறுமல் தெங்குகள் பழங்களால் முல்லையைச் சிதைப்பனஆம். புறவம் - முல்லைநிலம். தளவு - முல்லை. பிணக்கு - மாறுபாடு.

161. கேழ் - நிறம். கடுக்கை - கொன்றை. மாதவி - குருக்கத்தி. சாகை - கிளை. வேழம் - கரும்பு. பூவை - காயாம்பூ.

165. கொடி இனம் - காக்கைக்கூட்டம்.

166. எண்கு - கரடி.

திருநகரப்படலம்:

4. காவி - நீலோற்பலம். காவியங்கிரி - தணிகை.

5. வரை கீண்டோன் - முருகவேள். வரை - கிரௌஞ்ச கிரி. அல் அனுக்கு - இருளைத் தொலைக்கின்ற. அனுக்கல் - வருத்துதல். வல்லை - விரைவு. நூறிய - அழிக்கும்பொருட்டு. சிவணுவித்து - பொருந்தச்செய்து. படைத்து அதன் தலை.

6. விம்மிதம் - அதிசயம். பௌவம் - கடல்.

7. ஓவம் - ஓவியம், சித்திரம். இரசதம் - வெள்ளி. அரதனம் - இரத்தினம்.

8. வாரணம் - யானை; ஈண்டு ஐராவதம். ஆரணம் வேதம். காரணப்பிரான் - நிமித்தகாரணனாகிய சிவபிரான்.

10. அறன் கடை - பாவம்.

11. இளைப்பு அனுக்கலால், பொழில்களால் அனுக்கலால்.

13. பாம்புரி - அகழி. நொச்சி - மதில்.

14. விலங்கல் - மலை. சோபானம் - படிக்கட்டு.

15. உலகியலில் தமக்கு மேலோரைத் தாழ்ந்தோர் வணங்குதல் முறை என்பதைக் காட்டுவது இது.

16. கொடியன - கொடியையுடையன, கொடிய செயலையுடையன, துகிற்கொடிகளையுடையன. கொழும் கள் - கொழுமையான தேன். அலர் - பூக்கள். குறுகார் - பகைவர். துமிக்கும் - துணிக்கும். அலரி - சூரியன். தட்கும் - தடைசெய்யும்.

17. தண்டலை - சோலை. அசோகு மகளிர் உதைத்தலாலும், பாதிரி நிந்தித்தலாலும், குரா அணைத்தலாலும், மகிழ் சுவைத்தலாலும், மா பார்த்தலாலும் மலர்வன. மகளிரான் மலரும் மரங்கள் பத்து என்பர்; அவற்றுட் சில இவை. மகளிர் நண்பு செய்யப் பாலையும், நகைக்க முல்லையும், ஆடுதலாற் புன்னையும், பாடுதலாற் குருக்கத்தியும், நிழல் படுதலால் சண்பகமும் மலர்வனவாம்.

18. பூவினால் திருத்தமுறும். காவினிடத்துத் திருந்திய மலர்கள். மேம்பட்டுத் திருத்தமாகவுள்ள சிலை. வயவர் - வீரர். சிலை - வில். பாக்களால் திருந்திய புலவர்.

19. அகழ் ஆழ்ந்து கிடந்தும் கரப்பது, அறிஞர் இனிது அமைத்த அரும் செய்யுள் தானும் அப்படிப்பட்டதே. மைந்தர் தடங்கரம் தாழ்ந்து கிடந்தும் புகழ்தக்கன, அவ்வாறே மன்றவர் அறம் சால் நெஞ்சம் தாழும். வளை போழ்ந்து கிடந்தும் புனைவ, பொருகளிற்றுக் கோடுகளும் புனைவனவே. மலர் பொழிலினுள் வீழ்ந்து கிடந்தும் உயர்வன, வெறுத்தெறிந்த பொருள்களும் உயர்வனவேயாம் என்க. "புவியினுக் கணியாய் ஆன்ற பொருள் தந்து புலத்திற்றாகி, அவியகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறியளாவிச், சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமும் தழுவிச் சான்றோர், கவியெனக் கிடந்த கோதாவரியினை வீரர் கண்டார்" என்னும் கம்பராமாயணச் செய்யுளை, இப்பாடலின் முதலடியில் உள்ள அறிஞர் இனிதமைத்த அருஞ் செய்யுள் தானும் ஆழ்ந்துகிடந்தும் கரப்பது என்னும்பகுதி நினைவூட்டும்.

21. கூவிரம் - கொடிஞ்சி.

22. செண்டுவெளி - வையாளிவீதி. விலாழிநீர் - குதிரை வாய் நுரை, யானைக்கை யுமிழ்நீர்.

74. 'பந்தொடு பாவை தூங்கும் வாயில்' என்பதனை "வரிப்புனை பந்தொடு பாவைதூங்க" (முருகு 68) என்பதும் 'பகைவரை மகளிராக்கி அவர்கொண்டு விளையாடுதற்குத் தூக்கின வென்றவாறு' என்னும் அதன் உரையும் இங்கே அறிதற்பாலன. அன்றியும் பதிற்றுப்பத்து 53-ம் செய்யுளின் 6-ம் அடி முதலியவற்றையும் அவற்றின் உரையையும், சீபரி பூரணநாமப் படலம் 58-ம் செய்யுளையும் பார்க்க.

84. "தவமறைக் கிழவன் மாயன் தாணுவென் றிவருமிவ் வூர்க், கவர்மனப் பரத்தை மாதர் கண்வலைப் பட்டேயின்றும், இவறிய வலரோன் மாலோன் பித்தனென் றிப்பேர் பெற்றார், சிவசிவ யாவ ரேயோ வவர்திறத் தகப்ப டாதார்" (காஞ்சிப். திருநகர. செய் 55.) என்பதனோடு ஒப்பிட்டு வேற்றுமையுணர்க.

106. பட்டி மண்டபம் - வித்தியாமண்டபம். ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் நால்வகைக் கவிகளையும் யாவரும்

வியக்கும்படி பாடுவோன் கவி ஆவான். அறம் பொருள்களைச் செம்பொருள் நடையினவாகக் காட்டி விவகரிப்போன் கமகன். ஏதுவும் மேற்கோளும் எடுத்துக்காட்டி வாதித்துப் பிறன் கொள்கையை மறுப்பவன் வாதியாவான். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகைப் பொருளையும் யாவரும் விரும்பிக் கேட்குமாறு குற்றமறக் கூறுவோன் வாக்கியாவான். சபையிலே ஒருவனால் கொடுக்கப்பட்ட பொருள், பாட்டு, அடி முதலியன அமையும்படி விரைந்து பாடவல்லோன் ஆசுகவி. பொருட்சிறப்பும், சொற்சிறப்பும், தொடையும், தொடை வகைகளும் நெருங்கி, உருவகம் முதலிய அலங்காரங்களும் ஓசையும் தோன்றும்படி பாடவல்லோன் மதுரகவி. மாலைமாற்று, சுழிகுளம, ஏகபாதம், சக்கரவகை, எழுகூற்றிருக்கை, பாதமயக்கு, பாவின் புணர்ப்பு, ஒற்றெழுத்து இல்லாப்பாட்டு, ஒருபொருட் பாட்டு, சித்திரப்பா, விசித்திரப்பா, வினவுத்தரம், ஓரெழுத்துப் பாட்டு, ஓரினப்பாட்டு, கதைகரப்பு, கரந்துறைபாட்டு, கோமூத்திரி, கூடசதுக்கம், சருப்பதோபத்திரம் என்பவைகளும்; எழுத்தும், எழுத்தின் வர்க்கமும், உதாரணமும் நோக்கிப் பாடும்படி வடநூலுள்ளே வைத்த மிறைக்கவிகளும் பிறவும் பாடவல்லோன் சித்திரகவி. மும்மணிக்கோவை, பன்மணிமாலை, மடலூர்தல், மறம், கலிவெண்பா, பாசண்டத்துறை, இயல் இசை நாடகம் என்பவற்றை விரித்துப் பாடவல்லோன் வித்தாரகவி.

புராண வரலாற்றுப்படலம்:

2. ஏறும் - வலிமை. நிவந்து - உயர்ந்து.

7. சாரதம் - பூதம்.

9. நொறில் - வேகம். கிம்புரி - முறிதந்தப்பூண்.

விராட்டகாசப்படலம்:

17. பஞ்சாட்சரமாவது சிவாயநம வென்றிருப்பது. இதற்குப் பொருள்: "சிகாரவகாரஞ் சிவனொடு சத்தி - யகாரமதுவே யான்மாவாகும் - நகாரமதுவே நற்றிரோதாயி - மகாரமதுவே மலமெனலாமே" ஆக இவை ஐந்து பொருளும் அநாதியாய், நித்தமாய், வியாபகமாய், அருவமாய், அகண்டிதமாய், ஒன்றாய், ஒருகொத்தாயிருக்கும். இதில் ய - ஆன்மாவானது அபக்குவத்தினாலே, ம - மலத்தினுடனே கூடி, ந - நகாரமாகிய திரோதாயி

தாரகமாகப் பொய்யை மெய்யென்று மாறுபாடாகக் கருதிச் செனன மரணங்களிலே சுழன்று நிற்கும். பக்குவம் வந்தவுடனே, ம - மலம், சி - சிவத்திலே ஒடுங்கிப்போம். நகாரமாகிய திரோதாயி வ - அருளிலே ஒடுங்கிப்போம். ய - ஆன்மாவும் வகாரமாகிய அருளும் ஒன்ருய்ப்போய் வசியாம். இதற்குத் திட்டாந்தம் எப்படி என்னில்: சூரியன், கிரணம், கண், விளக்கு, இருள். இருளில் கலந்தகண், விளக்குத்தாரகமாகப் பழுதையைப் பாம்பெனறும், இப்பியை வெள்ளி என்றும், குற்றியைப் பிள்ளை என்றும் திரிவுக்காட்சியாகக் கண்டுகொண்டேயிருக்கும; ஆதித்தப்பிரகாசம் வந்தவுடனே இருள் ஒளியிலே அமிழ்ந்திப் போம்; விளக்குச் சத்தி கெட்டுப்போம்; கண்ணும் ஒளியும் ஒன்ருகிப்போம். சூரியனைப்போலும் சி - சிவன், கிரணத்தைப் போலும் வ - அருள், கண்ணைப்போலும் ய - ஆன்மா, விளக்கைப் போலும் ந - திரோதமலம், இருளைப்போலும் ம - மலம்; இப்படி அறிக. இது பஞ்சாட்சர சிந்தனே. "அஞ்செழுத்து மண்ணலருளான்மாத் திரோதமலம், விஞ்சி நமத்துரந்து மெய்யருள்வத் - தஞ்சச், சிகாரத்தில் யவ்வைவிடுந் தீதிலா வின்பப், புகாரிற் புகுந்தருந்தப் போய்" என்பது துகளறுபோதம். மற்றும் இதன் விரிவெல்லாம் உண்மைவிளக்கம் முதலிய மெய்கண்ட நூல்களான் உணர்க.

21, உலகின் கொத்து உயிர்த்தவன் - பிரமன்.

குமாரேசப்படலம் :

22. பாசனம் - பாத்திரம். படலிகை - கைமணி, பூந்தட்டு.

23. ஆமலகம் - நெல்லிமுள்ளி. வேழம் - கரும்பு. பஞ்சாமிர்தம் பஞ்சபலோதகம் அபிஷேகப்பொருள்கள்.

24. கலை - பரிவட்டம்.

28. ஆவச்சகாயன் - ஆபத்சகாயன்; அத்தலவிநாயகர்.

35. கலிங்கம் - மெல்லாடை: திருவொற்ருடை.

பிரமன்சிருட்டிபெறுபடலம் :

22. பெரும்பெயர் - மகாவாக்கியம்; முத்திபஞ்சாக்கரம் என்பதும் அது.

32. குறும்பலா, குற்றாலம், சித்திரசபை, குற்றாலநாதர் என அறிக.

55. இது முதல் 41-ஆம் பாடல்வரை துதிகள்.

61. நைகரம் - துன்பம், வருத்தம்.

71. பூ முதல் ஐந்து - பத்மநிதி, கற்பகம், காமதேனு, சங்கநிதி, சிந்தாமணி. நாம் - அச்சம். அஞ்சல் - அஞ்சற்க.

74. பிரதாபம் - வெண்மை. கீர்த்தி - செம்மை.

நந்தியுபதேசப்படலம்:

65. உளியம் - கரடி. வன்றி - பன்றி.

67. குரண்டம் - கொக்கு.

உபதேசப்பகுதி

89. இறுதை நூலினர் இயம்புவ பலதிறம் - நந்தியே! துன்பந் தருவனவாய முக்கூற்றுப் புறச்சமயத்தவராலும் தத்தம் மத நூலாராய்ச்சி கொண்டு சொல்லப்படுவனவாகிய பெத்தமுத்தி யின் இலக்கணங்கள் பலவேறு வகைப்படும், எண்ணில் - அளவைகளான் அவற்றை ஆராயின், கனு எனத் தலைமயங்குவ தழிக - கனவுக் காட்சிபோல் முன்னொடு பின் மலைவனவாம் ஆக லானும் அவை அறிவான் மிக்க நினக்கு எடுத்துக்கூறி மறுக்கற் பாலனவல்ல வாகலானும் ஈண்டு எடுத்துக்கூறாது விடுத்தனம் அவை கிடக்க, சைவத்த - சைவாகமங்களிற் கூறப் படுவனவாய், மனுதியால் அறிவு அரியன - மனவாக்குக்களால் அறிந்துகோடற்கரியனவும், நிறைவின - செறிந்த வியாபகத்தை யுடையனவும், வலிய - வன்மையை யுடையனவும், அனுதி சத்தி நித்தியத்தன - அனுதியாகிய சத்தியோடு நிலைபேறுள்ளனவு மாகிய, ஐந்து மெய்ப்பொருள் - இந்நான்கு இலக்கணங்களையும் உடைய ஐந்து பொருள்களும் உண்மைப் பொருள்களேயாம் என்றவாறு.

இறுதநூல் - பசுநூல்.

90. அவைதாம் - அவ்வைந்து பொருள்கள் தாம், பதியும் அப்பதிக்கு அடிமையாம் பசுவும் அப்பசுவின் முதிரும் ஆணவப்

பகையும் அம்முழுப்பகை துமிப்பக் கதிய மாயையும் கருமமும் எனப்படும் - பதிப்பொருளும் அப்பதிப்பொருளுக்கு என்றும் மீளா அடிமையாகிய பசுப்பொருளும் அப்பசுப்பொருளின் அறிவை மறைத்து எழும் ஆணவமாகிய பகைப்பொருளும் அவ்வநாதி பகைமையை மாற்றுமாறுவந்த மாயைப்பொருளும் கன்மப்பொருளும் என்று சொல்லப்படுவனவாம், மதியுளோர்கள் பின் இரண்டையும் மலத்தொடும் மொழிவார் - சிவாகம ஆராய்ச்சியில் தெளிந்த அறிவுடையோர்கள் பின்னையவாகிய மாயை கன்மங்களிரண்டையும் ஆணவமலத்தோடும் சேர்த்துப் பாசம் ஒன்றெனவும் கூறுவர் என்றவாறு.

91. பதிஅறிந்து உயிர்க்கு அறிவிப்பது - அவைகளுள்ளே பதிப்பொருள் இயல்பாகவே அறிந்து உயிர்களின் பக்குவத்துக் கேற்ப அறிவிப்பதாகிய அதிசூக்கும சித்தாயுள்ளது, பசு அறிவித்தால் அறிந்து நிற்பது - ஆன்மா அப்பதிப்பொருள் அறிவித்தால் அறிந்து நிற்பதாகிய தூலசித்தா யுள்ளது, ஆணவம் அது சிவத்து அடையாமை செறிந்து வையகத்து உய்ப்பது - ஆணவம் அவ்வான்மா நீங்காத்துணையாகிய சிவத்துடனே உணர்ந்து கலவாவண்ணம் அதன் அறிவோடும் சமவியாத்தியாகக் கலந்து அழுத்தி மறைத்துப் பிரபஞ்சத்தில் செலுத்துவது, உறு அந்த மாயை திரள் கருவித்து - அதன் பின் வரும அவ்வியல்புடைய மாயை அந்தப் பிரபஞ்ச ரூபமாகிய கருவிக் கொத்தையுடையது, பல்திறக் கருமம ஊணது - பல வேறு வகைப்படக் காரியப்பட்டுவந்த கன்மம அந்தப் பிரபஞ்சத்திலே இன்பத்துன்ப உணவாயுள்ளது என்றவாறு.

92. உணர்வு எழாச் செயிர் வலியினுல் - அறிவு தோன்ரு வாறு அழுத்தி மறைத்த ஆணவமல சத்தி வலியினுலே, உறவினை இழந்து - அவ்வறிவினைத் தோற்றுவிக்கும் சிற்சத்தியினுபகாரத்தை மறந்து, தணவுருத ஆணவத்தினைத் தலைப்படும் உயிர்கட்கு - நீங்காத ஆணவமலத்தோடு கூடிக்கிடக்கும் கேவலாவத்தையை உடைய உயிர்களுக்கு, அணவு தாய் என இரங்கி - நீரினுள் வழீஇச் செல்லும் சிறு மகவைத் தழீஇச் சென்று தூக்கும் நற்ருயைப்போல அவ்வுயிர்களோடும் கலந்த முதல்வனது ஆதிசத்தி இரக்கங்கொண்டு, ஆர் அருளினுல் பருவப் புணர்வு தேர்ந்து - நிறைந்த அருளினுலே அம்மலம் பரிபாகமாதலையுணர்ந்து, உடல்கரணமும் புவனமும் பொருத்தி-

அவ்வுயிர்கள் அக்கேவலாவத்தையை நீங்கி அறிவு இச்சை தொழில்கள் மெல்ல மெல்ல வியாபரித்தற்குரிய காரணசரீரம் கஞ்சுகசரீரம் குணசரீரம் என்னும் மூன்றுமாகிய பரசரீரத்தையும் அதற்குரிய கரணங்களையும் புவனங்களையும் பொருந்தும்படி செய்து, காரணசரீரம் - அசுத்தமாயையின் கலக்குண்ட பாகம்; கஞ்சுகசரீரம் - காலம் நியதி கலை வித்தை அராகம் என்னும் ஐந்து தத்துவங்கள்; குணசரீரம் - முக்குணங்களும் விரியாது தொகையாகிய குணதத்துவம் என்றவாறு. பரம் - முன்.

93. உற்ற மாயையோடு ஆணவம் ஒழிந்து ஒளிர் அறிவே - ஏகதேச அறிவைச் செய்யும்படி பொருந்திய மாயாமலமும் ஆணவமலமும் நீங்கி விளங்கும அறிவினையே, வான் உருவு முற்றும் எனக் கொள்ளும் முதல் இலா முதல்வன் - உயர்வாகிய வடிவம் முழுவதுமாகக்கொண்டு உணர்த்தும் சர்வசத்திமானாகிய பசுபதி, பற்றும் மாயையில் படர்வினைப் பாலவாம் உயிர்கட்கு - போக நுகர்ச்சியைப் பெறுமாறு தமக்கு இடமாகக் கொள்ளும் மாயா புவனங்களிலே போக்குவரவு செய்தனுபவிக்கின்ற வினைப்பகுதியினையுடைய உயிர்களுக்கு, இற்றுறு உடலொடும் இறும் உடல் முதல் இயைத்து - அப்போக்குவரவு செய்தற்குரிய சூக்கும உடம்புடனே அநுபவித்தற்குரிய தூல உடம்பையும் ஆதியிலே கூட்டி என்றவாறு.

மாயையில் பற்றும் படர்வினைப் பாலவாம் உயிர்கட்கு என மாற்றி, மாயையிற் கட்டுண்டுகிடக்கும் விரிந்த வினைப்பகுதியினை உடைய உயிர்களுக்கு என்று உரைத்தலுமொன்று. இற்றுறு உடல் - சூக்குமஉடம்பு; இதனை வடநூலார் ஆமோக்ஷதாயி என்பர்.

94. உடல் உயிர் உலகமாய் - அப்பசுபதி மீட்டுஞ் சிருட்டி செய்யுமிடத்து உடலும் உயிரும்போல் கலப்பினால் அவ்வுயிர்களையாயும், வேறாய் - பொருட்டன்மையினாலே வேறாய சிவமேயாயும், மருவும் அவற்று உடனுமாய் - அவ்விருமைக்கும் பொதுவாய் இருவினைக்கேற்ப ஐந்தொழிற்படும் அவ்வுயிர்களோடு உடனாயும் அத்துவிதமாய்நின்று, அரு உருதிறத்து - அருவம், அருவுருவம், உருவம் என்னும் தடத்த வடிவைக் கொண்டு, வல்வினைக்கு ஏற்ப கருவிமுற்றவும் தொழிற்படுத்து - தமது ஆணையினாலே அவ்வுயிர்களின் வலிய இருவினைக்கேற்கு மாறு தத்துவத் தொகுதி முழுவதையும் தொழிற்படுத்தி,

உணவினைக் காட்டி - அவ்விருவினைப் பயனை நுகர்வித்து, பொரு இல் நல் பதம் புகுத்துவான் புகர் மலம் கழிக்கும் - ஒப்பற்ற நல்ல திருவடி எனப்படும் சிவசாயுச்சியத்தில் சேர்த்தற் பொருட்டு அவ்வுயிர்களின் குற்றம்பொருந்திய ஆணவமலத்தை நீக்கி அருளுவர் என்றவாறு. அருவுரு என்பதனை இரட்டுற மொழிந்துகொள்க.

95. இரும் படைப்பு ஆதி விரும்பு நான்முகன் ஆதியோ ரிடை விளைத்துழியும் - படைத்தல் காத்தல்களை விரும்பித் தவமியற்றிய பிரமன் மால் முதலியோரிடத்து நிலைக்களமாக நின்று செய்துழியும், அரும்பியாங்கு மீட்டு ஒடுக்கும் அ அர னுடைத்தொழிலே - அத்தொழில்கள் தோன்றியவாறுபோல மீட்டும் சங்கரித்தலைச்செய்யும் அம்மகாசங்காரக் கடவுளுடைய தொழில்களேயன்றி அவ்வயன் மால் முதலியோர் தொழில்க ளல்ல, எரி சேர்ந்து இரும்பு அழற்றினும் - அழலைப் புணர்ந்து இரும்பு சுடுதற்றொழிலைச் செய்யினும், அழற்றுவது இரும்பி னுக்கு இலை - அச்சுடுதற்றொழில் இரும்புக்கு இயல்பானில்லை, எரி உடைத்தொழிலே - அவ்வழலின் றொழிலேயாம் அதுபோல என்றவாறு.

96. அனாதி முத்தனாய் அனாதியே கலந்தருள் அமலன் - அனாதிமலமுத்தராய் அனாதியே அவ்வுயிர்களோடும் கலந் தருளிய நிருமலசிவனார், அனாதி பந்தமோடு அனுபந்தம் இரண்டும் இல்லாதான் - அனாதிபந்தமாய ஆணவமலத் துடனே பினாதி பந்தமாய மாயை கன்மங்களிரண்டையும் இயல் பானில்லாதவரேயாம், அனாதி பந்தமோடு அனுபந்தம் உறு வதும் உயிரே - அவ்விருவகைப் பந்தங்களையும் பொருந்துவதும் ஆன்மாக்களேயாம், அனாதி பந்தமோடு அனுபந்தம் ஆவதும் மலமே - அவ்விருவகைப் பந்தமாவதும் மலமேயாம் என்றவாறு.

97. விதந்த யாவையும் புரிந்தும் ஓர் விகாரம் இன்மையி னால் - மேலே எடுத்துக்கூறிய ஐந்தொழிலையும் செய்தும் ஒரு விகாரமுமின்மையானும், சுதந்திரத்தினால் - சுவதந்திரமுண்மை யானும், ஒருவழி குணம் கலப்பதனால் - ஒருபெற்றித்தாயே அறிவு விளங்குவதனானும், தொல் ஆருயிர்க்கு இதம் ஏற்று சீர்த்திறம் முதலானும், அனாதியாகிய நிறைந்த உயிர்களுக்கு இன்பந்தருளும் சிறப்புவகை முதலியவற்றானும், முதிர்ந்த

பேரொளி முதல்வனை ஒப்பது ஒன்று இலையே - சிற்சத்தி சொரூபனாகிய சிவமுதல்வனை ஒக்கும் பொருள் யாதும் இல்லை என்க.

இதனுள் யாவையும் புரிந்தும் என்றதனானே அளவிலாற்றலும், விகாரமின்மையினால் என்றதனானே இயல்பாகவே பாசங்களினீங்குதலும், சுதந்தரத்தினால் என்றதனானே தன்வயத்தனாதலும், ஒருவழி குணங்கலப்பதனால் என்றதனானே இயற்கையுணர்வினனாதலும், இதமேற்றுசீர் முதலானும் என்றதனானே வரம்பிலின்பமுடையனாதலும், முதிர்ந்த பேரொளி முதல்வன் என்றதனானே முற்றுணர்வுடையனாதலும் என்னும் இறைவனார் முதன்மைக்குணங்களாறும் கூறினார். இன்னும் ஆருயிர்க்கு இதமேற்றுசீர் என்றதனானே பேரருளுடைமையும், பேரொளி முதல்வன் என்றதனானே தூய உடம்புடைமையும் தெளிந்து கொள்க.

98. பரவும் இப்பதிப்பொருள் ஒன்று அலால் வேறு இல்லை - உயர்வொப்பில்லாத பதிப்பொருள் ஒன்றேயென்று வேதாகமாதிகளால் உயர்த்துக் கூறப்படும் இந்தப் பரசிவப் பொருளேயல்லது வேறு பதிப்பொருளில்லை, ('உணர்வெழா' என்பது முதல் இதுகாறும் பதியிலக்கணங்கூறி இனிப் பசுவிலக்கணங் கூறுவானெடுத்துக்கொண்டார்.) விரவும் சிற்றறிவின் ஆருயிர் பலவிதத்த - இனி அப்பதிப்பொருளின் வேறாய் அதனோடு கலந்த உயிர்கள் அனேக விதத்தன, இருள்மலத்தின - அவை இருள்போல மறைத்தலைச் செய்யும் ஆணவ மலத்தோடும் தழுவிக்கிடத்தலினாற் கேவலாவத்தையையுடையனவும், ஈண்டுறு சகலத்த - கருவிகளோடுங் கூடிப் பொருந்துவதனாற் சகலாவத்தையையுடையனவும், வசிப்பவரும் வியாபகத்தன - அதுவதுவாய்ப் பொருந்துவதனால் வசித்திடவரும் வியாபகத்தையுடையனவும், மலம் தப முத்தி அடைவ - மலபந்தம் நீங்க வீடுபெறுவனவுமாயுள்ளனவாம் என்றவாறு.

99. தொகை இறந்தன ஆயினும் - இனி அவ்வுயிர்கள் எண்ணலளவைக்கடந்த அனேகமானாலும், விதப்பின் - வகையானெடுத்துக்கூறின், தொல்லை ஆணவநோய் தகையநின்றன - அனாதி ஆணவமலபந்தத்தின் மயக்கமாத்திரமே பந்திக்க நின்ற விஞ்ஞானகலர்எனவும், அதனோடு கருமமும் தகையும் வகையில்

நின்றன - அம்மலபந்தத்துடனே கருமமலமும் பந்திக்கும் வகையில் நின்ற பிரளயாகலர் எனவும், அவற்றெடு மாயையும் மருவும் மிகையில் நின்றன என்ன மூவகையின - அவ்விருமலத்துடனே மாயாமலமும் பந்திக்கும் மிகுதியால் நின்ற சகலர் எனவும் மூவகைப் பேதமுடையனவாம் என்க.

100. சத்து நேர் தனக்கு என அறிவிலாதன - அவ்வுயிர்கள் வியஞ்சகத்தானறிதலினுலே சிவசத்தைப்போல இயல்பாகவே அறியும் அறிவு இல்லாதனவும், தணவா மெத்து அசத்து என அறிவு மேவாதவும் அல்ல - பிரபஞ்சாநுபவமுண்மையினுலே நீங்காத முற்றும் அசத்தாகிய பிரபஞ்சத்தைப் போல அறிவே இல்லாதனவும் அல்ல, ஒத்து அறிந்தவும் கனவத்தில் கலங்கும் ஊக்கத்த - அப்பிரபஞ்சாநுபவத்தின் பொருட்டுக் கருவிகளோடுங் கூடி அறிந்தனவற்றையும் நூல்களானறிந்தனவற்றையும் கனவு கண்டாற்போலக் கலங்கி மாறியுணருந் தன்மையினவாம், சத்து அசத்தையும் அறிதலில் சதசத்து ஆவனவே - ஆதலால் அச்சிவத்தின் தன்மையும் அசத்தின் தன்மையுமின்றி அவ்விரண்டனேடுங் கூடிநின்று அதுவதுவாய் அறிதலினுலே அவ்விரண்டினும் வேருய சதசத்து என்னும் இயல்பினவேயாம் என்க.

101. மூல ஆணவம் மயக்கலின் முதல்வனைப் பின்னிட்டு - அநாதி ஆணவமலம் முயங்கி மயக்குதலினுலே தமக்குற்ற துணையாகிய சிவமுதலை மறந்து பிறவியிற் பட்டு, ஏலும் வான் தரை நரகத்தில் இன்ப துன்பு அருந்தும் - தாம் பொருந்து தற்குரிய மேலுலகம் நிலவுலகம் கீழுலகம் என்னும் மூன்று உலகத்தினும் சென்று சென்று முறையே இன்பத்தையும் இன்பத் துன்பத்தையும் துன்பத்தையும் அநுபவிக்கும், நாளும் வேலை நோய் முதல் அடுத்துழி வெறுப்பன - அவ்வநுபவம் எங்ஙனமெனின் எந்நாளும் முயற்சியும் நோயும் முதலியன வந்தவிடத்துத் துன்புறுவனவும், வெறுக்கை கோல மாதர் மற்று அடுத்துழிக் குளிர்வன - மிக்க செல்வங்களும் அழகிய பெண்களும் கிடைத்தவிடத்து இன்புறுவனவுமாம் என்றவாறு.

இன்பதுன்பு என்றதனை இரட்டுறமொழிந்து கொள்க.

102. தனை நிகர்ப்பரும் சத்து அசத்து உருது- தன்னை ஒப்பதும் மிக்கதும் இல்லாத சிவமாகிய சத்து அசத்தாகிய

பிரபஞ்சத்தை அறிந்தனுபவியாது, அசத்து அறியாது - பிரபஞ்சமாகிய அசத்து அறிவற்ற சடமாம், அனையது ஆகலின் அதற்கு ஒன்றும் வேண்டுவதில்லை - அத்தன்மையதாதலின் அதற்கு அநுபவிக்குமாறு யாதும் வேண்டப்படுவதில்லை, வினையும் பல்வகை கரணமும் வேறு வேறு உடலும் வனையும் அண்டமும் யாவையும் உயிர்க்கு என மதியாய் - ஆகலின் பாரிசேடத்தானே இருவினையும் அவ்விருவினையை நுகர்தற்கு உரிய பலவகைப்பட்ட கருவிகளும் அக்கருவிக்கொத்துக்களாலாய பலவேறு உடம்புகளும் அவ்வுடம்புகளுடனே வசித்தற் குரித்தாய்ச் சிருட்டிக்கப்பட்ட பலபுவனங்களும் அவையிற்றுக்கு அங்கமான பிறவனைத்தும் அதுவதுவாயுணர்ந்து அநுபவிக்கும் இயைபினையுடைய உயிர்களுக்கே வேண்டப்படுமென்று அறிந்து கொள்வாயாக என்றவாறு.

இதுகாறும் பசுவிலக்கணங்கூறி, மேல் அப்பசுத்தன்மையைச் செய்யும் ஆணவமலத்தினிலக்கணங்கூறுவான் தொடங்குகின்றார்.

103. நெல் உறுமுளை என - நெல்லிற்பொருந்திய முளைத்தற் சத்தி தோன்றுதற்கு நிமித்தகாரணமாகிய உமியைப்போல, ஆணவம் - ஆணவமலமானது, இச்சை ஆதிகள் கலை ஆதி வந்து கலாவுமாறு நிலாவி - ஆன்மாவின் இச்சா ஞானக் கிரியைகளைக்கலைவித்தை அராகமென்னுந் தத்துவங்கள் மாயையினின்றும் தோன்றிவந்து கலந்து போகம் துய்ப்பிக்குமாறு தனது சத்தியை நிறுவி, குளிர் பதிமாட்டுச் சுலாவும் இச்சை ஆதிகளையும் தோற்றுறுது - இன்பந்தரும் முதல்வன்கட்கலந்த இச்சாஞானக்கிரியைகளையுந் தோன்றவிடாமல், உயிரில் சுலாவும் இச்சையாதிகள் ஒரீஇ அன்றே அணவும் - உயிரின்கட் கலந்த இச்சாஞானக்கிரியைகளையும் விளங்கவொட்டாது அநாதியே அவற்றைத் தகைந்து மறைக்கும் என்றவாறு.

முளை என்றது - முளைத்தற்குக்காரணமாகிய உமியை.

104. விழிபுணர்ப்புறும் இருளென விராவிய தன்னை - கண்ணொளியைக் கலந்து நிற்கும் பூத இருளைப்போல ஆன்ம சத்தியைக் கலந்து நிற்கும் ஆணவமலமாகிய தன்னை, அழிப்ப முற்றிய சத்தியும் தன்வழியாக்கி - அழித்தற்பொருட்டு முற்றுகைசெய்த ஆதி சத்தியையும் தன்வசப்படுத்தி, ஒழிப்பில்

மூன்று இடத்து இருதிறத்து அவத்தை ஓர் ஐந்தும் கழிப்பு இலாது உயிர் உற பல சத்தியில் கதுவும் - தன்னை ஒருவாற்றான் அவ்வாதிசத்தி ஒழிக்குகையில் கேவலம் சகலம் சுத்தம் என்னும் மூன்று காரணவத்தைகளிலும் மேலாலவத்தை கீழாலவத்தை என்னும் இருவகையினாலும் வரும் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்னும் ஐந்தவத்தைகளையும் தவறாது உயிர் பொருந்தும்படி தான் பல்வேறு சத்திகளினாலே பற்றாநிற்கும் என்றவாறு.

105. செறியும் உயிரின் நல் அறிவை எக்காலத்தும் சிதைத்து வரும் - அங்ஙனம் ஐந்தவத்தைகளைப் பொருந்தும் உயிரினது ஞானசத்தி வியாபாரத்தையும் எந்நாளும் தடைசெய்து கீழ் ஈர்ந்துவரும் அதனால், உறுதிபயக்கும் காரியங்கள் ஒருகாலத்தும் செய ஒட்டாது - அவ்வுயிர் நற்பிரயோசனக் காரியங்கள் ஒன்றையும் ஒருநாளும் செய்யவிடாது, அம்மட்டோ; மறிய உயிர்க்குப் புகர் அறிவை எக்காலத்தும் வளர்ப்பிக்கும் - மேலும் அவ்வுயிர்க்கு அஞ்ஞானத்தையே எந்நாளும் வளர்வித்துவரும் அதனால், இறுதி பயக்கும் காரியமே எக்காலத்தும் நிகழ்விக்கும் - தீமை பயக்கும் காரியங்களையே எந்நாளுஞ் செய்விக்கும் என்றவாறு.

106. தூய நினைவை தூமொழியை தூய தொழிலை தோற்றாது - நல்லெண்ணத்தையும் நன்மொழியையும் நற்றொழிலையும் தோன்றவிடாதும், தீய நினைவை தீமொழியை தீய தொழிலை தவ தோற்றும் - அவற்றின் மறுதலையாய தீய எண்ணத்தையும் தீய மொழியையும் தீய செயலையும் மிகவும் தோற்றுவிக்கும்.

இதுகாறும் ஆணவமலத்தினிலக்கணங்கூறி மேல் அவ்வாணவத்தின் பொல்லாங்கு எல்லாம் தவிர்த்தற்கு அடுத்த மாயை கன்மங்களின் இலக்கணங் கூறுவான் தொடங்குகின்றார்.

ஆய தனி ஆணவப்பகையின் அரட்டை தணிப்ப - இத்தன்மைத்தாய ஒப்பற்ற ஆணவமலப் பகையினாலே உளதாகும் பெரும் பொல்லாங்கை அடக்கும் பொருட்டு, உயிர் அடுக்கும் மாயை - அவ்வுயிர் துணையாகச் சம்பந்திக்கும் மாயாமலமும், சுத்தம் அசுத்தம் என இரண்டு திறன் ஆகும் - சுத்தமாயையும் அசுத்தமாயையும் என இரண்டு வகைப்படும் என்றவாறு.

107, 108. சுத்தம் - அவ்விருவகை மாயையினுள்ளே சுத்த மாயையானது, சுத்ததத்துவம் ஓர் ஐந்தும் - சிவம், சத்தி, சதாசிவம், ஈசுரம், சுத்தவித்தை என்னும் ஐந்துதத்துவங்களையும், நால்வாக்கும் - சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்னும் நான்கு வாக்குக்களையும், தொக்க ஐம்பத்தோர் அக்கரமும் - அவ்வாக்கின் காரியமாகத் தொகுக்கப்பட்ட அகரமுதல் க்ஷகரமீருய ஐம்பத்தொரு அக்கரங்களையும், கொத்து உறும் எண்பத்தொருபதம் சத்தகோடி மாமந்திரப்பகுப்பும் - அவ்வக்கரங்கள் கூடிய ஓம் வியோமவியாபி என்பது முதல் நமோநம: என்பது முடிவாகக் கூறப்படும் எண்பத்தொரு பதங்களையும்,நம:,சுவதா, சுவாஹா, வஷட், வௌஷட், பட், ஹூம்பட் என்னும் அந்தங்களினுலே ஏழுகோடியாக வழங்கப்படும் மகாமந்திர பேதங்களையும், மெய்த்த நாலேழ் ஆகமம் இருநூற்றேழ் உபாகமம் - உண்மை பொருந்திய சிறப்பு நூலாகிய காமிகம முதல் வாதுளாந்தமாகிய இருபத்தெட்டு மூலாகமங்களையும் அவற்றின் வழித்தோன்றிய நாரதீயம் முதல் விசுவான்மகம்ஈருய இருநூற்றேழு உபாகமங்களையும், விரிந்த நால் வேதம் மொய்த்தமூவாறுபுராணம் மூவிரு சாத்திரம் அறுபத்துநாற்கலையும - பொதுநூலாய்ப் பல சாகைகளாக விரிந்த இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என்னும் நான்கு வேதங்களையும் அவ்வவ்வேதசாகைகளின் பொருள்களை எடுத்துவிளக்கும் உபப்பிருங்கணங்களாயுள்ள பிரமம் முதல் பிரமாண்டமீருகிய பதினெண்புராணங்களையும், சிக்ஷை, வியாகரணம், சந்தசு, நிருத்தம், சோதிடம், கற்பம் என்னும் ஆறு சாத்திரங்களையும் எழுத்திலக்கணம் முதல் அவத்தைப்பிரயோகமீருகிய அறுபத்துநான்கு கலைகளையும், மேதகுசிவமே சத்தியே நாதம் விந்துவே சதாசிவ மகேச பேதமே அரன் என்று இவர்க்கும் - மேன்மை பொருந்திய சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவம், மகேசபேதம் இருபத்தைந்து, அரன் என்று கூறும் எழுவகைச் சிவபேத வடிவங்களையும் விரும்பிச் சரியையாதி நான்கு நெறியானும் வழிபட்டு அவற்றின பயனுய சாலோகமாதி நான்கையும் அடைந்து அவ்வச்சிவபேதங்களின் பெயருடனே கூடி எழுந்தருளியிருக்கும் அபரமுத்தர்களுக்கும், விஞ்ஞானகலரொடு பிரளயாகலர்க்கும் - விஞ்ஞானகலர்களுடனே பிரளயாகலர்களுக்கும், தீது அறு சரியை கிரியை யோகத்தில் செறிந்தவர் தமக்கும் - குற்றமற்ற உண்மைச் சரியை உண்மைக்கிரியை உண்மை யோகம் என்னும் நெறிகளில் வழுவாது நின்றவர்களுக்கும், நல்தனுக்கள் ஓதுறுகரணபுவன

போகமும் ஐங்கலையும் மற்றும் உயிர்ப்பது - நல்லதிருமேனி களையும் அவற்றிற்குச் சொல்லப்பட்ட கருவிகரணங்களையும் அவற்றிற்குரிய இடமாகிய புவனங்களையும் அவற்றால் அநுப வித்தற்குரிய போகங்களையும் அப்போகநுகர்வில் செலுத்து கின்ற சிவசத்தி நிற்றற்குரிய தானங்களாகிய சாந்தியாதீதை சாந்தி வித்தை பிரதிட்டை நிவிர்த்தி என்னும் ஐந்துகலைகளை யும் பிறவற்றையும் தோற்றுவிப்பதாம் என்றவாறு.

109. அசுத்தமாம் மாயை - இனி அசுத்த மாயையானது, காலம் நியதி கலையொடு வித்தை கதித்து எழும் அராகம் புருடன் சால நாலாறுதத்துவம் தன்பால் தரும பிரகிருதி ஓர் ஏழும் - காலம் நியதி கலை வித்தை இச்சை மிக்குளமுதற்குத் துணைக்கருவியாய அராகம் புருடன் என்னும் தத்துவங்க ளுடனே ஆன்மதத்துவம் இருபத்து நான்கையும் தன்னிடத் துத் தோற்றுவிக்கும் பிரகிருதி தத்துவமுமாகிய ஏழையும், மால் அயன் வலாரி தேவர்கள் முதலாமன்னிய சகலருக்கு எல்லாம் - திருமால் பிரமன் இந்திரன் ஏனைய தேவர்கள் முதலாக நிலைபெற்ற சகல வர்க்கத்தவர்களுக்கெல்லாம், கோல நல் தனுக்கள் ஆகிய நான்கும் கொடுப்பது - அழகிய நல்ல தனு கரண புவன போகமாகிய நான்கையும் தோற்று விப்பதுவாம் என்றவாறு.

110. மயக்கிடும் மாயாகாரியம் இலையேல் வல்வினை நுகர்ச் சியும் இல்லை - ஏகதேச அறிவைச்செய்யும் மாயாகாரியம் இல்லை யாயின் வலிய இருவினை நுகர்ச்சியும் இல்லையாம்; அஃதில்லை யாகவே, துயக்கும் அவ்வினையின் கழிவும் ஆங்கு எய்தா - நுகர்ந்தே ஒழிக்கும் பகுதியினவாகிய சோர்வினைச்செய்யும் அவ் விருவினையின் நீக்கமும் ஆண்டெய்தப்பெறாது; பெறாதாகவே, தொல்லையே சூழ்ந்த ஆணவத்தின் முயக்கும் ஒழிதல் அரிது அரிதாகும் - அநாதியே பந்தித்த ஆணவமலத்தின் புணர்ப்பும் நீங்குதல் மிகவும் அரியதாகும்; ஆகலினவ்வுயிர்கட்கு மாயை கன்மங்களின் சம்பந்தமும் இன்றியமையாத் துணையாக வேண் டப்படுவதாயிற்று, மூதுயிர் மாயை காரியத்தின் இயக்குறல் அன்றி இருவினை ஈட்டாது - அநாதியாய ஆன்மாக்கள் அம் மாயை காரியத்தினால் தொழிற்பட்டவழி அல்லது இருவினை களையுங் காரியப்படுத்தமாட்டாவாம், இவையின்றி அவையும் எய்தா - அவ்விருவினையின் காரியங்களையல்லாது அம்மாயா

காரியங்களும் புணரமாட்டாவாம், ஆகலின் அவ்விரண்டும் ஆணவமலத்தைப்போல அநாதி உள்பொருள்களேயாம் என்றவாறு.

மலங்கள் மூன்றும் உள்பொருளாதலை "உள்ள மலமூன்றும் மாய வுகுபெருந்தேன் - வெள்ளந் தரும்பரியின் மேல்வந்த - வள்ளல், மருவும் பெருந்துறையை வாழ்த்துமின்கள் வாழ்த்தக், கருவுங் கெடும்பிறவிக் காடு" என்னும் (பண்டாயநான்மறை - 2) திருவாசகச்சுருதியானு மறிக.

111. மனம் முதல் மூன்றின் இயற்றுறும் இதம் அகிதங்கள் இருவினை என்ப - ஆன்மாக்கள் மனம் வாக்குக் காயம் என்னும் மூன்றினாலும் செய்யப்படுவனவாகிய இதம் அகிதம் என்பனவே இருவினை எனப்படுவன, பேசும் புண்ணியபாவம் பெருவினைப் பயன்கள் - சொல்லப்படுகின்ற புண்ணிய பாவங்கள் அவ்விருவினையின் காரணமும் காரியமுமாயிருக்கும், இக் கருமத்தின் பயன்கள் மருவிடும் இன்பத்துன்பம் ஆம் - இப் புண்ணிய பாவங்களின் பயன்கள் ஆன்மாக்களினிடத்தே அநுபவமாகப் பொருந்தும் இன்பமுந் துன்பமுமாம், அவைதாம் மாய்வின் அவ்விருவினை தோற்றும் - அவ்வின்பத் துன்பங்கள் அநுபவிக்கப்பட்டு ஒழியும்போது மேலும அவ்விரு வினைகளும் உண்டாகும், ஒருதனு விளைப்பக் கெட்டும் கேடிலவாய் மற்றொரு தனுவின் உணப்படும் - அவ்வநுபவமும் ஒரு தூல உடம்பினின்றுஞ் செய்யப்பட்டு அச்செயலழியவும் அதன் பயன் அழியாது சூக்குமமாய் நின்று வேறொரு தூல உடம்பிலே காரியப்பட்டு அநுபவிக்கப்படும் என்றவாறு.

112. மனம் முதல் மூன்றும் அசைவற நின்று வந்திடும் நல்வினை பலவே - மனம் வாக்குக் காயம் என்னும் மூன்று கரணங்களும் தொழிற்படாது நிற்றலினாலே வரக்கடவனவாகிய நல்வினைகளும் பலவாம், மனம் முதல் மூன்றும் அசைவு அற நின்று வந்திடும் தீவினை பலவே - அங்ஙனமே அம்மூன்றுந் தொழிற்படாது நிற்றலினாலே வரக்கடவனவாகிய தீவினைகளும் பலவாம், மனம் முதல் மூன்றும் புடைபெயர் உற்று வந்திடும் நல்வினை பலவே - இனி அம்மூன்றும் தொழிற்படுதலினாலே வரக்கடவனவாகிய நல்வினைகளும் பலவாம், மனம் முதல் மூன்றும் புடைபெயர் உற்று வந்திடும் தீவினை பலவே -

அங்ஙனமே அம்மூன்றுந் தொழிற்படுதலினாலே வரக்கடவன வாகிய தீவினைகளும் பலவாம் என்றவாறு.

113. தூயவாய் அமைக்கப்படும் வினை எவர்க்கும் தூய வாய் இருப்பன பலவே - நல்வினையாக விதிக்கப்பட்ட வினை எல்லார்க்கும் ஒப்ப நல்வினையாக இருப்பனவும் பலவாம், தீயவாய் விலக்கப்படுவன எவர்க்கும் தீயவாய் இருப்பன பலவே - தீவினையாக விலக்கப்பட்ட வினை எல்லார்க்குமொப்பத் தீவினையாக இருப்பனவும் பலவாம், ஒருவர்க்குத் தூயவாய் ஒரு வர்க்கு ஒழியும் தீயவாய் இருப்பவும் பலவே - ஒருவருக்கு நல் வினையாக விதிக்கப்பட்ட வினைதாமே மற்றொருவருக்கு அந் நியமமின்றி நீக்கவேண்டிய தீவினையாக இருப்பனவும் பலவாம், ஒருவர்க்குத் தீயவாய் ஒருவருக்கு அடுக்கும் தூயவாய் இருப்ப வும் பலவே - ஒருவருக்குத் தீவினையாக விலக்கப்பட்ட வினை தாமே மற்றொருவருக்கு அவற்றின் வேறாய் வரும் நல்வினையாக இருப்பனவும் பலவாம் என்றவாறு.

114. நல்வினை திறம்பித் தீயவாய்த் தீய நல்லவாய் வருப வும் உளவே - நல்வினை என்றுசெய்யும் வினையே மாறித் தீவினை யாகவும் தீவினை என்று செய்யும் வினையே மாறி நல்வினையாக வும் வருவனவும் பல உளவாம், வல்வினை மெலிய வினைகளாய் மெலிய வலியவாய் வருபவும் உளவே - செயற்கரிய வினைகள் செயற்கெளிய வினைகளாகவும் செயற்கெளிய வினைகள் செயற் கரிய வினைகளாகவும் மாறி வருவனவும் பல உளவாம், நல்வினை செயும்போது அதன் பயன் போலத் தீயவும் நணுகலும் உளவே - நல்வினையைச் செய்யுங்கால் அவ்வினையின் பயன் போலத் தீவினைப்பயன் வருதலும் பலவுளவாம், புல்வினை செயும்போது அதன் பயன்போல நல்லவும் புணர்தலும் உளவே - தீவினையைச் செய்யுங்கால் அவ்வினையின் பயன்போல நல்வினைப்பயன் வருதலும் பல உளவாம் என்றவாறு.

115. பயன் - இனி, அவ்விருவினைப் பயன்களும், புரிதரு முறையில் பிறழ்ந்து - அநுபவத்திற்கு வரும்போது பக்குவ பேதத்தால் செய்த முறைமையினின்றும் மாறுபட்டு, உயிர் தெய்வம் பூதம் என்று இவற்றினுள் ஒன்றால் மருவுழி - ஆதி யான்மிகம் ஆதிதெய்விகம் ஆதிபௌதிகம் என்னும் இவ்வாயில் களின் ஒன்றினானே வரும்போது, விழைந்த விழைந்தில விழைந்த வன்றி வேறுவன என்னத் திரிவிதப்படுவ - அவ்வான்மாக்கள்

விரும்பினவும் விரும்பாதனவும் விரும்பினவன்றி வேருவனவுமாக மூன்றுவகைப்பட்டு வருவனவாம், இழிவினைகள் தீர்வு செய்யினும் நுகர்ந்து அன்றி முழுதும் இரிதரா - தீவினைகளாகிய அதிபாதகாதிகளின் பயன்கள் அநுபவித்தாலன்றி முழுவதும் நீங்கா, இது விலையானும் இயையும் - இப்பிராயச்சித்தம் தானேயன்றி விலை கொடுத்துப் பிறராலுஞ் செய்யப்படும், பண்ணுமையும் பலிக்கும் - ஒரோவழி இவ்விருவகையும் செய்யாதிருக்கவும் நீங்குவதும் உண்டு என்றவாறு.

116. புண்ணியம் எல்லாம் இன்பமே பயக்கும் - புண்ணியங்கள் எல்லாம் இன்பத்தையே கொடுக்கும், இழிதரு பாவங்கள் எல்லாம் துன்பமே பயக்கும் - இழிக்கப்படும் பாவங்கள் எல்லாம் துன்பத்தையே கொடுக்கும், புண்ணிய பாவம் தொக்க தம் பயன் தராதொழியா - புண்ணியம் பாவம் என்னும் இருவினைகளும் தமக்கெனத் தொகைசெய்யப்பட்ட பயனுய இன்பத் துன்பங்களைத் தராதொழியாவாம், கொன்படு வினைகள் ஒழி இருவினையும் - அஞ்சத்தகும் இருவினைகளையும் ஒழிக்கின்ற சிவ நல்வினை தீவினைகளும், குலாவுறு புண்ணிய பாவ வன்புறு பயனை அப்பயன் போல வழங்குருது ஒழிவகை இலை - தம் பயனுகப் பொருந்தும் புண்ணிய பாவங்களின் வலிய பயனுய இன்பத் துன்பங்களையும் அப்பசு வருவினைப் பயன்போலத் தாராதே நீங்கும் வகையும் இல்லையாம் என்றவாறு.

இதுகாறும் மாயையிலக்கணமும் இருவினையிலக்கணமும் கூறி, மேல் அவ்வினைத்தொடரறுத்து உய்தற்கு உபாயங் கூறுவான் தொடங்குகின்ருர்.

117. ஈண்டு நாற்பிறப்பின் எழுவகைத் தோற்றத்து - இவ்விடத்து அண்டசம் சுவேதசம் உற்பிச்சம் சராயுசம் என்னும் நால்வகைப் பிறப்பினுலே மனிதர் தேவர் விலங்கு பறவை ஊர்வன நீர்வாழ்வன தாவரம் என்னும் எழுவகை வடிவ பேதத்தினையுடைய, எண்பத்துநான்கு இலக்கம் எனும் மாண்ட பல் பவத்தின் மறிதரும் உயிர்களை - எண்பத்து நான்கிலக்கம் என்னும் தொகை மிக்க பலவேறு பிறவிகளிலே பலதரமும் இருவினைக்கீடாக மாறிமாறிப் பிறந்து இறந்து உழலும் ஆன்மாக்களை, அருள் அமலன் ஆண்டு எடுப்ப - அநுக்கிரகஞ் செய்யும் நிருமலசிவனுர் அச்சுழலினின்றும் கருணைக்கையினுல் எடுத்தற்பொருட்டு, அனுதியில் உலகம் ஆக்குழி அரும்தலம்

தீர்த்தம் காண்தகு மூர்த்தி என்ன மூன்றுருவாய்க் கண்ணகன் உலகு எலாம் கதித்து - அநாதியே இப்பிரபஞ்சத்தைச் சிருட்டிக்கும்பொழுது அரிய தலம் தீர்த்தம் காணத்தக்க மூர்த்தி என்னும் மூன்று வடிவங்களாக இடமகன்ற உலகமெல்லாம் தமது சத்தியினாலே வெளிவந்து தோன்றி என்றவாறு.

118. அறிதராவகையில் புண்ணியம் முற்ற அடுத்து - அவ்வினைத் தொடருட்பட்ட அவ்வான்மாக்கள் அறியாதவகையினாலே சிவபுண்ணியத்தைச் செய்தடையும்படி கூட்டிவைத்து, அதன்பின் அறிதரப் பணித்து - அப்புண்ணிய விசேடத்தினால் அதன்பின்னர் அச்சிவபுண்ணியத்தை அறிந்துசெய்யும்படி செய்வித்து அதன்பின், செறிதரும் அகத்துச் சரியைமுன் நான்கும் திகழ்தர மெல்மெலச் செலுத்தி - அதன்பின்னர் அதனால் வருதற்குரிய அகச்சமயம் ஆறினுக்கும் பொதுவாகிய உபாயச் சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நாற்பாதங்களையும் அறிந்து ஒழுகுமாறு மெல்ல மெல்ல ஒழுகுவித்து, நெறிதரும் உண்மைச் சரியைமுன் மூன்றும் நிரப்பி - அவ்வொழுக்க நெறிநின்றார் அடைதற்குரிய சித்தாந்த சைவத்துட் கூறிய சிறப்பாகிய உண்மைச் சரியை கிரியை யோகம் மூன்றனையும் முறையே ஒழுகுவித்து, தன்வலி தேய்ந்து பறி மலபாகம் பயிற்றுபு சத்தி பதித்து இருவினைச் சமம் ஆக்கி - அச்சிறப்பியல்பு பொருந்திய தலத்தினாலே தன் சத்தி குன்றி நீங்குவதாகிய ஆணவமலபரிபாகம் வரச்செய்து அதனால் அடையத்தக்க சத்திநிபாதத்தை விளக்கி அவ்விளக்கத்தினாலே இருவினையும் சமமாக அறிவிலே ஒப்பக் காணுமாறு செய்து என்க.

119. பாசமும் பசுவும் கீழுற மேலாம் பசுபதி - பாசஞானமும் பசுஞானமும் கீழ்ப்பட்டு வியாப்பியமாயடங்க அவற்றின் மேற்பட்டு வியாபகமாய் விளங்கும் ஞானரூபியாகிய ஆன்மநாயகர், நீர் உறு கூர்ப்புத் தேசுறத் திரண்டால் என - நீரில் தோன்றாது பொருந்திய கூர்ப்பு என்னுஞ் சுவை பிரகாசம் பொருந்தத் திரண்டு தோன்றினாற்போல, அருள்குருவாய்த் திருவுரு எடுத்து எழுந்தருளி - தமது அருளே திருமேனியாக ஞானாசாரியராய்த் திருவுருக்கொண்டு எழுந்தருளி, மாசு அறு மனுக்கள் பதங்கள் அக்கரங்கள் வதி புவனங்கள் தத்துவங்கள் ஆசு அறு கலைகள் என்னும் ஓர் ஆறும் அரில்தபத் தூய்மை செய்தருளி - ஆணவமலமாசைக் கழுவுதற் பொருட்டுப்

பொருந்தியமந்திராத்துவா பதாத்துவா வர்ணத்துவா தங்குதற் கிடனாகிய புவனத்துவா தத்துவாத்துவா குற்றமற்ற கலாத் துவா என்னும் ஆறத்துவாக்களையும அவற்றிடையே அவ் வான்மா அநுபவிக்கக் கடவனவாகக் கிடந்த வினைக்குற்றம் அனைத்தும் நீங்கும்படி சுத்திசெய்தலாகிய நிருவாணதீக்கை யைச் செய்தருளி என்றவாறு.

ஆசறு கலைகளென்னும் ஓராறும் தூய்மை செய்து அரில் தப பாசமும் பசுவும் கீழுற அருளி எனக் கூட்டி உரைத்தலும் ஒன்று. இதுகாறும் அவ்வினைத்தொடரறுக்கும் வகைகூறி, மேல் அத்தொடரற்ற ஆன்மா அடைதற்குரிய சாதனமாகிய உண்மை ஞானத்தைத் தொகையின்வைத்துணர்த்துகின்றார்.

120. கூட்டமே பொதுவே தன்னியல்பு என்ன குறித் திடும் முத்திற உணர்வால் - அத்தகைய சுத்தியையுற்ற ஆன் மாக்கள் தொகையாகவே பெயர் சாதி குணம் கன்மம் பொருள் என்பவற்றைப் பகுத்துணராது இஃதொன்று தோன்றுநின்ற தென்று உணரும் நிருவிகற்பக்காட்சியும் பொதுவகையானே அங்ஙனங் கண்டவற்றை ஒன்றில் துணிவு பிறவாது அதுவோ இதுவோ என்று உணரும் இரட்டுறுகாட்சியும் சிறப்புவகை யானே பெயர் முதலிய ஐந்தினையும் உணரும் தெளிவுக் காட்சி யும் என்று குறிக்கப்படுகின்ற மூவகைய ஞானசத்தியின் தொழிற்பாட்டினாலே, நாட்டும் முப்பொருளும் ஒன்பது தரமா நாடிடப்படும் - சித்தாந்த உணர்வால் வலியுறுத்தப்படும் மூன்று பொருள்களையும் அவற்றுள் தனித்தனி ஒவ்வொன்றும் மும்முறை மும்முறையாக ஒன்பதுதரம் ஆராய்ந்து உணரப் படும், அவை எல்லாம் காட்டும்தானும் காட்டுபு காண் அறிவும் கதிர்விழி எனக் கலப்பு ஆகும் - அவ்வுணர்வு பேதங்களை யெல்லாம் உணர்ந்து உணர்த்தும் சிவஞானமும் உணர்த்த உணரும் ஆன்மஞானமும் சூரியனொளியும் கண்ணொளியும் போலக்கலந்த சுத்தாத்துவிதமாயிருக்கும், ஈட்ட அரும் பயனும் தெரித்து அதின் அழுத்தும் இவற்றையும் கிளக்குதும் கேட்டி - தேடுதற்கரிய பெரும்பயனாகிய சிவப்பேற்றையும் உணர்த்தி அதிலே அழுத்தி அநுபவிப்பதாகிய சிவபோகமும் என்னும் இவ்வீரைந்து காரியங்களையும் தெளிவுபெற உபதேசிப்பாம் நந்தியே கேட்பாயாக என்றவாறு.

என்று இங்ஙனம் தெளிந்தார்தமையும் தெருட்டுதல் சான்ற தெளிவினராகிய கந்தபரமாசாரியர் தசகாரிய வகையின் வைத்து உபதேசிப்பாராயினர்.

121. மண் முதலாக சிவம் முடிவாக மலிதரு தத்துவம் எல்லாம் நண்ணிய தொழிலை தனித்தனி காண்டல் நவை தரும் அதன் உருவாகும் - பிருதுவி தத்துவம் முதலாகச் சிவ தத்துவம் இறுதியாகப் பொருந்திய முப்பத்தாறு தத்துவங் களும் ஆன்மாவாகிய தன்னோடும் கூடியவிடத்துப் பொருந்திய தொழிற்பாட்டையெல்லாம் அவ்வத் தத்துவங்களினிடத்தும் வேறு வேறாக இஃது இஃது இதனை இதனைச் செய்கின்றதெனத் தன்னின் வேறாய்வைத்து ஆன்மசிற்சத்தியுணர்தல் குற்றத் தைச்செய்யும் அத் தத்துவரூபமாகும், திண்ணிய அவை தாம் சடமென காண்டல் தெரிசனம் - வலியமைந்த அத்தத்துவங்க ளெல்லாம் பிரேரிப்பாளையின்றித் தொழிற்படுதலின்மையால் சடப்பொருள் என்று ஆன்ம சிற்சத்தியுணர்தல் தத்துவ தரிசனமாகும், இவை இடைநீங்கும் உண்மையைக் காண்டல் சுத்தியாம் - இத் தத்துவங்கள் ஒருபொருள்போல் தோன்றி நின்று இடையே தன்னின்நீங்கித் தம் முதற்காரணமாகிய மாயையிலே அடைவே ஒடுங்கும் உண்மையைத் தன் வியாபகத் தைத் தலைப்பட்ட ஆன்மசிற்சத்தியுணர்தல் தத்துவசுத்தி யாகும், பாசத்தின் மாட்டு மூன்றும் உற்றன - பாசபதார்த் தத்தின் கண்ணே ஈண்டுக்கூறிய உருவம் தரிசனம் சுத்தி என்னும் மூன்று காரியமும் பொருந்தினவாம் என்றவாறு.

122. இன்னணம் பாசம் அகறலும் - இவ்வாறு தத்துவ சுத்தியாதலும், உறவும் இகலுறு பகையும் நாடாது - உடங்குப் புணர்ந்திருந்து உணர்த்தும் அருளாகிய உறவையும் தம் சத்தி வலியினாலே பொல்லாங்கென்பவை எல்லாம் செய்த தம் மலப் பகையையும் அறியமாட்டாது, மன்னிய தானே முதல் என நிற்றல் மாசு உயிருக்கு உரு - கேவல சகலங்களிற் பொருந்தி யிருந்த ஆன்மாத்தானே தத்துவங்களின் நீங்கிய மாத்திரத்தில் தன்னைப் பிரமப்பொருள் என்றுணர்ந்து நிற்றல் மலமுடைய ஆன்மாவுக்கு உருவமாகும், இதுகாறும் அன்னியத்து அழுங் கும் நினக்கு உயிர் அருள் என்று அகற்ற அவ்வருளின் நான் முதல் என்று உன்னுதல்காட்சி - இச்சுத்தாவத்தையை அடை யும்வரையும் நின்னின வேறாகிய பாசத் தொகுதியோடு அது

வதுவாய் அழுந்தியிருந்த நினக்கு உயிராயிருந்து உணர்த்தி வந்தது அருள் என்று உணர்த்தி அவ்வகம் பிரமத்தை நீக்க அவ்வருளைப்போல நானும் சிவசமமே என்று முனைத்தல் ஆன்மதரிசனம் ஆகும், உதுகொடு செய நேர்ந்து ஒழிந்து அருளாய்விடல் சுத்தி - உந்தவருளின் குணங்களைத் தன்குண மாகக்கொண்டு ஐந்தொழிலையும் செய்யவெண்ணிப் பின்னரும் அவ்வருள் தானே பெருங்கருணையினாலே என்செயலை நின்செய லாக் கொள்ளுமது நன்று என இழித்துணர்த்தியவழி மீட்டும் அம்முனைப்பைவிட்டுத் துவண்டு அடங்கி அவ்வருளிலேயே அழுந்திவிடுதல் ஆன்மசுத்தியாகும் என்றவாறு.

123. மேதகு அருளான் முதல் என நினைத்தல் (அறல்) - மேன்மை பொருந்திய அருளினாலே ஆன்மா தன்னையே பிரம மாகக் கருதுகின்றுழி அந்நிலை மாறும்படி உணரநிற்பதும், விழுத்தகும் அருளினால் அதுசெய் தீது அறு தொழில்கள் செய்வல் என்று எண்ணும் செயல் அறல் - அவ்வுயர்வாகிய அருளினாலே அவ்வருள் செய்யுங் குற்றமற்ற ஐந்தொழில்களை யும் யானே செய்வேனென்று எண்ணி மீட்டும அவ்வருளான் உண்மையுணர்ந்து அவ்வெண்ணந் துவண்டு அடங்கு மிடத் துணரநிற்பதும், திகழ் அருள்மயமாய்ப் போதம் முற்று ஒடுக்கல் என்ன - பிரகாசிக்கின்ற அவ்வருளின் மயமேயாகித் தன்போத முழுவதும் சிவபோதமாய் அடங்கிநிற்கும் அந்நிலையில் உணர நிற்பதுமென்று, முன்கிளந்து போந்தவற்று அடங்கியமூன்றும் ஆதிதன் உருவம தெரிசனம் யோகமாம் - முன்னரே கூறிப் போந்த ஆன்மதரிசனம் ஆன்மசுத்தி ஆன்மலாபம் என்று சொல்லிப் போந்தவற்றேடும் உடனிகழ்வாய் விளங்கிய மூவகை யுணர்வும் முறையே சிவரூபமும் சிவதரிசனமும சிவயோகமு மாகும்; அது நிற்க, இனி போகமும் அருள்வாம் - இனிச் சிவ போக வியல்பையும் உனக்கு உபதேசிப்பாம் என்றவாறு

124. ஒன்றுறும் அதனால் ஒருபொருள் ஆகாது - அவ வான்மாச் சிவத்தோடும் ஒன்றுய் யோகமுற்றவதனாலே நீரும் நீரும் கலந்தாற்போல ஒரேபொருளாயும் விடாது, இரண்டினால் வேறும் ஆகாது - பொருட்டன்மை பேதமுற்றவதனாலே (இரு ளும் ஒளியும்போல்) வேருயும் விடாது, தொன்றுறு நிலையே நிலையதாய் சேர்ந்து - அனாதி அத்துவிதநிலையே நிலையாமாறு பெற்று, துன்னலும் துன்னுருமையும் அற்று - அதனாலே

வந்து சேர்தலும் வந்து சேராமையுமின்றி, அன்றும் ஆணவத்தின் அழுந்தியாங்கு அறிவாய் அறிவினுள் அழுந்தி - அநாதிகேவலத்தும் ஆணவமலத்திலே அவ்வருள்மயமாய்க் கலந்தாற்போல இம்முத்திக் காலத்தும் ஞானமே மயமாய் அச்சிவ ஞானத்துள்ளே அழுந்தி, அங்கு அறிவு பொன்றியும் பொன்றாது - அழுந்துமதனாலே அவ்விடத்து ஆன்மபோதமாகிய சுட்டுணர்வு நீங்கப்பெற்றும் சிவஞானத்தானே சிவத்தை உணரும் உண்மையுணர்வும் நிலைபெற்று, அவசமாய் இன்பப் புணரிவாய் மடுப்பது போகம் - அவ்வுண்மையுணர்வும் அச்சிவத்தின் வசமேயாய்ப் பேரின்பசாகரத்தைத் தனது அநுபவமாகவே அநுபவிப்பது சிவபோகமாகும என்றவாறு.

125. இந்நிலை தனக்குமேல் ஒரு நிலையும் இல்லை - இச்சிவபோக நிலைக்குமேலே ஆன்மா பெறத்தக்கது யாதோர் நிலையும் இல்லை, என்றும் மன் உயிர் ஈது ஒழிதராது - எக்காலத்தும் இச்சிவபோகமடைந்த முத்தான்மா இந்நிலையை விட்டு நீங்கவே மாட்டாது, மற்றை ஒன்பதும் கண்டு மாற்றும் - ஏனைய ஒன்பது காரியத்தையும் உணர்ந்த ஆன்மா ஒரோவழிக் கீழும் மேலுமாக மாறிமாறி உணர்தலும் உண்டு, வகுத்த ஈர் ஐந்தும் துன்னிய உண்மைஞானம் என்று உரைப்ப - இங்ஙனம் வகுத்துக்கூறிய தசகாரியத்தையும் உண்மைஞானமென்று சிவசாத்திர உணர்வான் நிட்டை கூடப்பெற்ற சிவாசாரியர்கள் போதிப்பார்கள், ஐந்து சுத்த அவத்தையுள் அடங்கும் - இவ்வீரைந்துகாரியமும் ஓரைந்து சுத்தாவத்தையுள்ளுமடங்கும், அடங்குமாறுயாங்ஙனமெனின்; பின்னிலை நான்கின் ஒன்பதும் அடங்கும் - பிற்பட்ட சுத்தசாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் என்னும் நான்கு அவத்தைகளிலும் தத்துவரூபம் முதல் சிவயோகம் ஈறுகிய ஒன்பது காரியமும் அடங்கும், பெருநிலை போகமே அடங்கும் - முற்பட்ட துரியாதீதத்திலே சிவபோகம் ஒன்றுமே அடங்கும் என்றவாறு.

இதுகாறும் தசகாரிய உண்மைஞானம் உணர்த்தி மேல் அஃதணைந்தோர் செயலையும் உணர்த்துவான் தொடங்கினர்.

126. இரிதரா உடலின் வினை வரும் - இவ்வுண்மைஞானத்தை அடைந்தோருக்கும் எடுத்த உடம்பின் அளவாய் முகந்துகொண்ட பிராரத்தவினை அநுபவத்திற்கே வரும், வருங்கால் இலகிய சாக்கிராதீதம துரியம என்று இரண்டின்

நின்றிடின் ஏறு - அவ்வினை அநுபவமாக வரும்பொழுது பூரண ஞானம் விளங்கிய துரியாதீதம் துரியம் என்னும் இரண்டவத்தைகளிலும் நின்றால் அவ்வநுபவத்தால் வரக்கடவதாய ஆகாமியவினை ஏறாது, சுழுத்தி சொப்பனத்தில் சாக்கிரத்தில் மருவினும் வளரும் - சுத்தசுழுத்தி சொப்பனம் சாக்கிரம் என்னும் அவத்தைகளைப் பொருந்தினும் அவ்வாகாமியம் ஏறும், சகலத்தின் விரவின் வளர் திறம் கிளப்பது என் - சகல சாக்கிராவத்தையாதியவற்றிலே பொருந்தின அவ்வாகாமியம் ஏறுமென்பதைப் பகரவும் வேண்டுமோ? மீட்டும் பெருநிலை அழுந்த அவையெலாம் அழியும் - பின்னரும் தந்நிலை தவறியது உணர்ந்து அவ்வவத்தைகளின் நீங்கித் துரியாதீதந் தழுவி அழுந்தப்பெறின் அவ்வவத்தைகளின் ஈட்டிய வினையெல்லாம் 'விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல் உண்ணிய புகில் அவை ஒன்றுமில்லையா' மாறு அழிந்தொழியும், பின்பு பேதுறுத்துவது இன்று - அதன்பின்பு வருந்த வருத்துவது யாதுமே இல்லை என்றவாறு.

127. மருள் மலம் ஒழிய - மயக்கந்தருவதாகிய ஆணவ மலம் நீங்கவே, மாயையும் வினையும் வயங்கு அருளாகியே நிற்கும் - மாயாமலமும் கருமமலமும் அவ்வுண்மைஞானிகட்குப் பிரகாசிக்கின்ற அருண்மயமாகியே நிலைபெறும், அவற்றை உலகோர்க்கு இருள் மலம் இரித்திட எம்பிரான் ஏன்றுகொண்டு அருளும் - அம்மாயை கன்மங்களைப் பெத்தான்மாக்களின் ஆணவமலத்தை நீக்கற்பொருட்டுச் சிவபெருமான் சுவீகரித்துக்கொண்டு அருளுவர், சுருதியான் மொழியான் சுவானுபூதிகத்தைத் தோற்றிய அமலனை - தெளிவுபதேச கலையினாலும் தெளிந்த வாக்கினாலும் சிவானுபவம் தமதனுபவமாக அனுபவிக்கும் சிவபோகத்தை விளக்கியருளிய நிருமலராகிய சிவகுருவை, இனைய சன்மார்க்கம் உற்றவர் - இத்தன்மைத்தாய சிவஞானத்தைப் பெற்றுச் சீவன்முத்தி பரமுத்தி நிலையைத் தலைப்பட்டோர், இருபகுப்பு இற யாங்கும் ஏத்தி நின்று இன்புறுப - அகம் புறம் என்னாது எவ்விடத்தும் சிவன்றோற்றம் ஒன்றுமே கண்டு தோத்திரித்து வழிபட்டுநின்று இன்பமிக்கடைவார்கள் என்றவாறு.

128. என்று - உண்மை ஞானமும் அஃதணைந்தோர் தன்மையும் இத்தன்மையவென்று, வேல்தடக்கைச் செம்மலார் -

ஞான சத்திதரராகிய கந்த பரமாசாரியர், பெத்தம் முத்தி என்னும் இரண்டினும் தன்மை ஒன்று அலாது இன்மை பொருள்தொறும் காட்டி - பந்தம் வீடு என்னும் ஈரிடத்தும் முப்பொருள்களின் தன்மையும் ஒரேபெற்றித்தேயன்றி ஏனைச் சமய விதிகளைப்போன்று முன்னொடு பின் முரணிக்கூறும் தன்மையின்மையை ஒவ்வொரு பொருளிலும் உத்தேசம் இலக்கணம் பரீக்ஷை என்னும் மூவகையானும் நன்குணர்த்தி, உரைத்தருள் அறிவு எலாம் - உபதேசித்தருளிய உண்மை ஞானங்களை எல்லாம், கேட்டு நன்று சிந்தித்துத் தெளிந்து உடன் நிட்டை நண்ணிய நந்தி மாதவத்தோன் - முறையால் கேட்டுக் கேட்டவாறே ஐயந்திரிவின்றி நன்ருகச்சிந்தித்து அங்ஙனமே தெளிந்து உடனே நிட்டை கைவரப்பெற்ற மாதவ சிரேட்டராகிய நந்திதேவர், துன்றிய மகிழ்ச்சி மீக்கொள ஆண்ட தோன்றல் தாள் புழிச்சுதல் உற்ருன் - தாமடைந்த சிவானந்தம் மேலிட மேலிடத் தம்மை அடிமையாகக்கொண்ட சிவாசாரிய ரத்தினமாகிய சிவகுருநாதருடைய திருவடிகளைத் தோத்திரம் செய்யத் தொடங்கினுர் என்றவாறு.

129. கற்ருேர் இயல்பு வேறு உடைமை எண்ணிய - சிவாகம நூன்முறையே கேட்டுத் தெளிந்தோர் தம்மிலக்கணம் அவயவப் பகுப்புடைமையானே நில்லா நெறித்தெனத் துணிந்தபடி, பலவேருகப் பயில்வுறும் உலகம் எல்லாம் பாற்றியும் - பற்பல வெவ்வேறு அவயவங்களாகக் காணப்படும் பிரபஞ்சமனைத்தையும் ஒடுக்கியும், மீட்டும் மாயோன் அயனொடும் தோற்றிப் போற்றி - பின்னரும் அப்பிரபஞ்சத்தை ஒடுக்கிய தாமே விண்டு பிரமருடனே தோற்றுவித்தும் போற்றுவித்தும், அடர்மல ஆற்றல் காற்றும் - ஆன்மாக்களின் சத்தியோடு சமவியாத்தியாகக் கலந்து பம்பிய ஆணவமலத்தின் வலிய சத்தியைக்கெடுக்கும், தலைசெயல் நின்ற இன்பத்திருஉரு முதன்மை போற்றி - தலையாய அநுக்கிரகத்தொழிலை மேற்கொண்ட பேரின்பமயமான சிவாசாரியத் திருவடிவத்தின் இறைமைத் தன்மை போற்றப்படுவது என்றவாறு.

130. ஒண்குணம் இல்லாநாயேன் - சார்ந்ததன் வண்ணமேயன்றித் தனக்கென நல்லறிவற்ற நாய்போன்ற அடியேன், உறு மடம் அன்றி இல்லாத் திண்குண மலத்திற் பண்டு சிவணுற - பொருந்துவதொரு அறியாமையே யன்றி வேருேர் குணமும்

இல்லாத வலிய சத்தியையுடைய ஆணவமலத்தினுலே அஞு தியே பந்திக்கப்பட, எண்குணம் ஆளாநின்ற தலைவன் - அளவி லாற்றல் முதலிய மங்கல குணம் எட்டையும் இயல்பாகவே உடைய முத்துக்குமரனுர், ஆங்கு இரும் பருவத்தை எய்த்து - அவ்வநாதிகேவலத்திலே பெரியதோர் பக்குவம் வரச்செய்து, வண்கலை ஆதி தந்த வரம்பில் வள்ளன்மை போற்றி - வளம் பொருந்திய கலை முதலிய தத்துவங்களைத் தந்து அடியேனது அறிவு இச்சை தொழில்கள் வியாபரிக்குமாறு செய்த அளவு கடந்த பேரருளாகிய வள்ளற்றன்மை போற்றப்படுவது என்க.

131. இருள்மலம் ஒன்றே பற்றும் இருவினை உடையேற்கு- இருள் போன்று மறைக்கும் ஆணவமலம் ஒன்றனையே பற்று மதனுல் விருப்பு வெறுப்பு என்னும் மூலகன்மமுடைய அடியே னுக்கு, அந்தோ - ஐயோ!, மருள் மலி மாயை கன்மம் திரோ தானகரியை - மயக்கம் நிறைந்த மாயாமலம் கன்மமலங்களோடு திரோதகிரியையைச் செய்யும் சத்தியையும், மல்கும் பொருள் மலிதரு மாமாயைப் புகர் மலம் நான்கும் தந்தும் - தம்மினுந் தூலமாகக் காரியப்படும் தாத்துவீகங்களைத்தருந் தத்துவங் களாகிய மாமாயையும் என்னும் குற்றம் பொருந்திய நான்கு மலத்தையும் தந்தும், அருள்மலி அருளில் திரா அற்புதத் தொழின்மை போற்றி - அனுக்கிரகம் நிறைந்த அருட்டன்மை யிற் சிறிதும் நீங்காத ஆச்சரியகரமான ஐந்தொழிற்றன்மை போற்றப்படுவது என்றவாறு.

132. நெருப்பு இடை அழற்றி வாளின் நிமிர் உடல் பிளந்து - ஆன்மாக்களாகிய எம்மை வினைக்கேற்றபடி நெருப் பிலே வாட்டியும் வாளினுலே நீண்ட உடம்பைக்கிழித்தும், கண் வாய் குருப்பொலி சோரி தூங்கக் குடைந்து அடு நரகத்து இட்டும் - கண்ணும் வாயும் செந்நிறத்த இரத்தங் கக்கும்படி அகழ்ந்தும் இங்ஙனம் வருந்துகின்ற வெறுப்பைத்தரும் நரகத் திலே செலுத்தியும், காமரு துறக்கத்து ஏய்த்தும் - விருப்பைத் தரும் சுவர்க்கத்திலே செலுத்தியும், விருப்பொடு வெறுப்பும் இன்றி மிளிர் அவிகாரம் போற்றி - விருப்பத்துடனே வெறுப் பும் இல்லாது விளங்குகின்ற தேவரீரது நிர்விகாரத்தன்மை போற்றப்படுவது என்றவாறு.

133. பூதமோ பூதத்து ஆன பொறை உடல் பொறிகள் தாமோ - ஐம்பெரும் பூதங்களோ? அல்லது அப்பூதங்களால்

ஆகிய சுமையான உடம்பிலே நிற்கும் ஐம்புலன்களோ?, மேதகு கரணம் தானோ - அல்லது அவற்றினும் மேன்மை பொருந்திய அந்தக்கரணங்களோ?, விரிதரு மாயைகொல்லோ - மாயையின் விரிவாய காரியங்களின் சமுதாயமோ?, யாது தான் உணர்வது என்றென்று இனைதரா வண்ணம் - இவற்றுள் யாதுதான் உணர்தலைச் செய்வதாகிய உயிர் என்று என்று வருந்தாத வாறு, நீ வேறு தாழ்போதம் என்று தந்த - நீ அவைகளின் வேருய் அதுவதுவாய் உணரும் தூல சித்தாவை என்று உணர்த்தியருளிய, பொங்கு ஒளிப்போதம் போற்றி - அதி சூக்கும சித்தாய சர்வ ஞானத்தன்மை போற்றப்படுவது என்றவாறு.

134. கேவல சகல சுத்தம் உயிர் எலாம் கெழுமும் என்றும் - கேவலம் சகலம் சுத்தம் என்னுங் காரணவத்தை மூன்றையும் உயிர்களெல்லாம் அடையுமென்றும், தாவு அரும் மாயை யில்லார் இருதிறத்தார்கள் என்றும் - அவ்வுயிர்க ளுள்ளே குற்றமற்ற மாயாமலமில்லாதவர்கள் விஞ்ஞானகலர் பிரளயாகலர் என இருவகையினர்கள் என்றும், ஆவயின் மாயை இன்றி இரு கருமம் அடா என்றும் - அவ்விடத்து அவர் களுக்கும் மாயாமலமில்லாது இருவினைகளும் வந்து பொருந்த மாட்டா என்றும், மேவர விதித்து - பொருந்துமாறு கூறி, மாலா விழுத்தகு வாய்மை போற்றி - முன்னொடு பின் முரணி மயங்கவிடாத உயர்வாகிய முற்றறிவாய உண்மைத்தன்மை போற்றப்படுவது என்றவாறு.

மாயை இன்றென்றது அம்மாயையான் உண்டாவதாகிய மயக்கமின்மையான் எனவும், மாயை உண்டென்றது உடம்புண் மையான் எனவும் தெரியக்கிடத்தலின் முன்னொடு பின் மலை யாமை அறிக.

135. சாக்கிர அவத்தைக்கு உள் ஆம் சகலத்தில் - கருவி களோடும் நின்றுணர்வதாகிய சாக்கிராவத்தைக்கு உட்பட்ட சகலாவத்தையில், அன்னே என்னை ஆக்கிடுந்தோறும் நீங்கி - ஐயோ! அடியேனைச் சேர்க்குந்தோறும் அவ்வவத்தையினீங்கி, அடர் இருள் கேவலத்தின் வீக்குறும் பிழை உட்கொண்டு விடாது - பம்பிய இருண்மயமாகிய கேவலாவத்தையிலே போய்க் கட்டுண்ணும் பெருங் குற்றத்தை அறிந்தும் கைவி டாது, உளம் சலியா மீட்டும் காக்கும் அத்தோலாச் சூழ்ச்சி

கைக்கொளும் காதல் போற்றி - திருவுளம் இரக்கத்தினின்றும் வேறுபடாது மேன்மேலும் அச்சகலசாக்கிரத்திற் சேர்த்துக் காக்கின்ற அத்தகைய குறைவற்ற உபாயத்தைத் தம் இச்சையாகக் கைக்கொண்ட பூர்த்தி எனப்படும் விருப்பம் போற்றப்படுவது என்றவாறு.

136. வினைத்திறம் மூளுமாறு மெலியும் என் மெலிவை ஆற்றி - இருவினைகளும் மீளவும் உண்டாமாறு பிராரத்தவினை வருத்த வருந்துகின்ற அடியேனது வருத்தத்தை ஒழித்து, அனைத்துகள் அனுங்கும் ஆற்றால் அறிவுறுத்து - மும்மலங்களானும் உண்டாவதாகிய வாசனைமலம் நீங்கும்வகையினாலே அறியச்செய்து, அனைத்தும் மாற்றி - மலமும் மலவாசனையும் ஆகிய எல்லாவற்றையும் மாற்றி, கனைத்து வண்டு இமிரும் தேம் தார் கமழ் மலர் கமலபாதம் - அடியவர்கள் இடையறாப் பேரன்போடு வழுத்தி அநுபவித்தலால் இன்னிசை செய்து வண்டுகள் மொய்க்கின்ற தேனொழுகும் புட்பங்கள் கமழும் தாமரைமலர் என்று உபசரிக்கத்தகும் திருவடிகளை, நினைந்து உறும் வாழ்வுதந்த நின்மலகொழுந்து போற்றி - இடைவிடாது சிந்தித்துப் பொருந்தும் பெரியதோர் இன்பவாழ்வை அடியேனுக்குத் தந்தருளிய தூயவுடம்பாய சிவக்கொழுந்து போற்றப்படுவது என்றவாறு.

அனைத்து துகள் அனைத்துகள் என நின்றது. அஃது அனைத்தாலாகிய துகளென விரியும். அனைத்து என்றது ஈண்டு மும்மலங்களை.

137. கேவல சகலம் முத்திச் சகலமும் கிளர உய்த்து - கேவலசகலம் சகலசகலம் சுத்தசகலம் என்னும் மூவகைச் சகலாவத்தையையும் பொருந்துமாறு செலுத்தி நுகர்வனவற்றை நுகர்வித்து, அக்கேவல சகலநீக்கக் கெழுமுறு சுத்தம் தன்னில் - அம்மூவகைச் சகலாவத்தையையும் நீக்குமாறு சிவத்தொடுங் கூடும்படி பொருந்தும் சுத்தாவத்தையிலே, கேவலம் ஆயினேனை - கருவிகள் நீங்கி வியாபகத்தைத் தலைப்பட்டுத் தனிமையின் முனைத்த அடியேனை, கேவலம் தணித்து - தன்னருளுபகாரத்தை உணர்த்தி அத்தனிமையினின்றும் முனைக்கும் முனைப்பைத் துவளுமாறு செய்து, மேலாம் கேவலம் உறுத்த நாடும் - உயர்வாகிய சிவவியாபகத்தைப் பெற்றழுந்தி அவ்வியாபக உணர்வையன்றிப் பிறிது யாதனையும் நாடாத்

தனிமையாய சுத்த கேவலத்தைப் பொருந்துமாறு சங்கற்பிக்கும், கேவலப் பொருண்மை போற்றி - ஒப்புயர்வு அற்ற அநாதி முத்தத்தன்மையாய பரப்பிரமத்துவம் போற்றப்படுவது என்றவாறு.

138. மேலாம் மாணுரு தோற்றி - நித்த முத்த சுத்த சித்தாகிய தானே உயர்வாகிய குருவுருக்கொண்டு, அன்றே ஆணவத்துப்பட்டாய் - அனாதியே ஆணவமலத்தொடும் கலந்தாய், அடுத்துறு மாயை பெட்டாய் - அம்மட்டோ பின்னதியாய மாயாமலத்தையும் விரும்பிப்புணர்ந்தாய், பூணுறு வினைக்கோட்பட்டாய் - அது முன்னிலையாகப் பொருந்தும் வினையுள்ளும் அகப்பட்டாய், போக்கொடு வரவும் பட்டாய் - அவ்வினைவழியே பிறப்பிறப்பினையும் அடைந்து உழன்றாய், நீயே ஏனுற அறிந்தாய்போலும் என்று இழித்து - இப்பந்தமெல்லாம் உற்றுழன்ற நீதானே வலிபொருந்தப் பெரிதும் உணரும் சித்தானாய்போலும் என்று எள்ளி, என்னை காட்டிய வடிவம் போற்றி - அடியேனை உள்ளவாறு உணரும்படி அப்பந்தமெல்லாம் துடைத்துணர்த்தியருளிய அந்தச் சிவகுருவடிவம் போற்றப்படுவது என்றவாறு.

139. ஒன்று கேவலத்து இனை ஐந்து - தன்னுண்மை எனப்படும் கேவலத்திலே வருத்துதற்குக் காரணமாகிய ஐந்தெழுத்து எனவும், சகலத்து உறழ் ஐந்து - சகலத்திலே திரோதானம் மலம் என்னும் இவ்விரண்டும் மாறிப் பின்னிடத்தமைந்த ஐந்தெழுத்தெனவும், ஒளி முதிர் சுத்தம்தன்னில் ஒன்று முன் தவிர் சகலத்து ஐந்து என்று - சிவஞானம் முதிர்கின்ற சுத்தத்திலே கேவலத்தின்கண் முன்னின்ற திரோதம் மலம் இரண்டும் நீங்கச் சகலாவத்தைக்குக் கூறிய ஐந்தெழுத்து எனவும், அருள் எழுத்தின் பேதம இசைத்துறு முறையும் காட்டி - இங்ஙனம் அருள்விளங்கும் குறிவடிவாகிய ஐந்தெழுத்தின் பேதத்தையும் அவற்றை அவ்வவ் அவத்தைகளில் நிற்கும் நிலைக்கேற்ப மாறிமாறி உச்சரிக்கும் முறைமையையும் உணர்த்தி, நன்று எனக்கு அருளி ஆண்ட நலத்தகு பெருமை போற்றி - நன்றாகத் தமியேனுக்கு அநுக்கிரகம்செய்து அடிமைகொண்ட நன்மை பொருந்திய பெருந்தன்மை போற்றப்படுவது என்க.

140. என்னை வல்லே தன்னடி இருத்தி - சிவஞானத்தினால் ஞேயத்தைக்கண்ட அடியேனை விரைவாகவே தம் ஞானத்தோடும் ஏகனாக்கி, யான் எனது என்ன நின்ற இருள் முழுதும்

இரித்திட்டு - தானல்லாததொன்றைத் தான் எனவும் தனது அல்லாத தொன்றைத் தனது எனவும் கருதி நிற்கச்செய்த ஆணவமலகாரியம் முழுவதையும் போக்கி, எல்லாம்தான் என - எப்பணியும் தன்பணியென்று இறைபணியினிற்க, பொன்முன் மீன் என விளக்கே என்ன விரவிய மாயை மாய்த்து - கதிரொளி முற்பட்ட தாரகைகளும் விளக்கும் அதனொளியாயடங்கியவாறு போல் மாயாமலத்தையும் போக்கி, அங்கு ஊன் உறு நுகர்ச்சி எல்லாம் ஏற்று அருள் உரிமை போற்றி - அவ்விடத்து உடம் பினுளவாய் அநுபவிக்கக்கடவ வினைகளை யெல்லாம் தானே ஏன்று அனுக்கிரகம் புரியும் உரிமைத்தன்மை போற்றப்படுவது என்றவாறு.

141. இன்றுகாறும் என்வழி இருந்தருள் தன்னை போல - முத்திபெறுமிக்காலம்வரையும் அடியேன் சென்ற கருமத்துறை வழியே அடியேனை விட்டு அடியேனோடும் விரவியிருந்தும் வெளி வராது நின்றருளிய தன்தன்மையைப்போல, தன்வழி எற்றை ஞான்றும் தங்கும் அந்நிலைமை தோன்ற - தன்செயலின்வழியே எக்காலத்தும் மீளாது அடியேன் வியாப்பியமாயடங்கிநிற்கும் அந்நிலைமை விளங்கும்படி, தன்னையும் எனையும் தந்து - தன் யோகமாகிய சிவப்பேற்றையும் தன்ஞானத்தினாலே தன்னை உணரும் முறையின் வைத்துத் தமியேனை உணரும் ஆன்ம லாபத்தையும் தந்து, தனது எனது அற - தனது அருட் செயலும் அடியேனது ஞாதுரு ஞான ஞேயப் பகுப்புணர்வும் நீங்கும்படி, முப்பாழ்மேல் பின்னிய முழுப்பாழான பெருகு பேரின்பம் போற்றி - அசுத்தம் மிச்சிரம் சுத்தம் என் னும் மூவகைப் பிரபஞ்சத்தினின்றும் நீங்குமிடத்து ஆன்மா வியாபகத்தைத் தலைப்பட்டு முனைந்தடங்கலும் அருளிற்றலைப் பட்டு ஐந்தொழில் செயக்கருதித் துவளலும் அவ்வருளில் வியாப்பியமாய் அடங்கலும் என்னும் மூவகைப் பாழின்மேலே அத்துவித சம்பந்தமாய முழுப்பாழாகியுள்ள மிக்க பேரின்பம் போற்றப்படுவது என்றவாறு.

முழுப்பாழ் - ஆனந்தாதீதம்.

142. அருள் பொழி விழி ஈராறும் - அநுக்கிரகத்தைச் செய்கின்ற திருக்கண்கள் பன்னிரண்டும், அலர் தரு முகம் ஓரா றும் - பிறவிவெப்பம் நீங்குமாறு தண்ணளிபுரிந்து மலரும் திரு முகங்கள் ஓராறும், திருவருள் இனிது தந்த செங்கனி வாயும் -

சிவஞானத் தெளிவுபதேசத்தை அடியேனுக்கு இனிமையாகத் தந்த சிவந்த கனிபோன்ற வாயும, கையும் - அவ்வுபதேசப் பொருளைச் சின்முத்திரையான் விளக்கும் திருக்கரமும், மரு மலர்ப்பதமும் வாய்ந்த வள்ளல் தன் உருவம் எல்லாம் அடியேன் சிரமேற்சூட்டுதலினால் உணர்த்தும் வாசனை தங்கிய மலர்போன்ற திருவடிகளும் வாய்க்கப்பெற்ற பெருவள்ளலாகிய கந்தபரமாசாரியரின் வடிவமனைத்தும், பெருகிய சுகத்துக்கு அப்பால் பிறங்கும் அப்பிறக்கம் போற்றி - மிக்க சிவபோகத் துக்கு மேலும் மேலானதாக விளங்கும் அவ்விளக்கம் போற்றப் படுவது என்றவாறு.

143. என்று இரும் துதிகள் சால இயம்பி - என்றிங்ஙனம் அரிய பெரிய தோத்திரங்களை மிகவும் சொல்லித் துதித்து, ஆட்டு அயர்ந்து முன்னேநின்ற மெய்க்குரிசில் தன்னை - ஆனந்த மேலீட்டினாலே கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித் தமது சந்நிதியிலேநின்ற உண்மைஞானம் விளங்கிய திருநந்திதேவரை, நின்மலக் குமரன் நோக்கி - நிருமலராகிய கந்த பரமாசாரியர் திருவருட்பார்வை செய்து, நின் கருத்து இன்று முற்றிற்று - பன்னாள் தவமிழைத்த உன்கருத்து இற்றைத்தினம் நிறை வேறிற்று, இனிக் கைலாயத்து எந்தை மன்றலம் கழல் தாள் போற்றி வதி என - இனித் திருக்கைலாயத்திலே எமது ஆசாரியராகிய பரமசிவனுடைய மணங்கமழும் மலர்போலும வீரக்கழலணிந்த திருவடிகளை வழிபட்டு ஆண்டே அக்குரவர் பணியில் நிற்பாயென்று கட்டளையிட்டருள், அருள்மேல் கொண்டு - திருநந்திதேவர் அக்கட்டளையைச் சிரமேற்கொண்டு என்றவாறு.

144. பன்முறை வணங்கி மீட்டும் பல் துதி நிரப்பி - பல தரமும் நமஸ்கரித்துத் திரும்பவும் பற்பல தோத்திரங்களைச் செய்து, மெய்யில் புன்மயிர் பொடிப்பக் கண்கள் பொழிம்மழைத் தாரை வாக்க - திருமேனியின்கண் மயிர்கள் சிலிர்க்க கண்கள் பொழியும் நீர்த்தாரையை யொழுக்க, சின்மயன் தாளில் சூழ்ந்த சிந்தையைப் புய்க்கல் ஆற்றான் - ஞானசொரூபியாகிய கந்த பரமாசாரியரது திருவடிகளிலே பதிந்த சிந்தையை மீட்டுக் கொள்ளமாட்டாராய், மெல்மெலப் பிந்தி பிந்தி விண் நெறி முன்னுகின்றான் - மெல்லமெல்லப் பிந்திபிந்தி ஆகாயமார்க்க மாய்ச் செல்லுகின்றவர் என்றவாறு.

புய்க்கல் - பெயர்த்தல்.

145. கோயிலை வணங்கி - திருக்கோயிலை வணங்கி, அப்பால் குன்றினை வணங்கி - அதன்மேல் திருத்தணிகாசலத்தை வணங்கி, தான் தோய் பாய் இரும் தீர்த்தமான படர் நதி வணங்கி - தான் மூழ்கிப் பரிசுத்தமடைந்த பரம்பிய பெரிய தீர்த்தமாகி ஓடுகின்ற நந்தி நந்தினி என்னும் நதியைவணங்கி, அவ்வூர் மேயின எல்லை தாழ்ந்து - அத்தலத்தின் திருவெல்லையை வணங்கி, வெற்பது மறையும் காறும் செய் ஒளி விழி நேராகச் சென்று - திருத்தணிகாசலம் கட்புலனுக்கு எட்டாது மறையும் வரையும தூர ஒளிவகையானும் கட்புலனுக்கு நேராகுமாறு சென்று, பின் திரும்பிச் சென்றான் - அதன்பின் திருக்கைலாயத்தை நோக்கி நேராகச்சென்றார் என்றவாறு.

சேய் ஒளி விழி என்றதற்கு அழுதலால் செந்நிறமடைந்த திருக்கண்கள் என்பதும் ஒன்று.

146. விலங்கலும் தலமும் ஆண்ட வித்தகன் உருவும் எல்லாம் - திருத்தணிகைமலையும் அத்தலமும் தம்மை அடிமை கொண்ட ஞானசாரியராகிய குமாரக்கடவுளின் திருவடிவுமாகிய எல்லாவற்றையும், நலம் கிளர் அறிவில் தோய்த்து - நன்மை மிக்க தமது ஞானமாகிய மதியிலே தோய்த்து, நயம் தகப் பொறித்து வைத்த - ஆன்மலாபமுறும்படி சிந்திக்கும் சிந்தையாகிய கோலினாலே எழுதிவைத்த, அலங்கு பொற்கிழியே ஆன அகத்தினன் கயிலை சார்ந்து - பிரகாசிக்கின்ற பொற்படமேயாகிய திருவுளத்தினையுடைய திருநந்திதேவர் திருக்கைலாயமலையை அடைந்து, அங்கு இலங்கு அருள் குரவற் போற்றி - அவ்விடத்தே அருட்பிரகாசத்தோடும் எழுந்தருளியிருக்கின்ற பரமகுரவராகிய சிவபெருமானை வழிபட்டு, ஏவலின் இருக்கின்றான் - அருளிறைபணி வழுவாது இயற்றிக்கொண்டு ஆண்டே இருக்கின்றார் என்றவாறு.

147. இன்னணம் சகச நிட்டை எய்திய நந்திப்புத்தேள் - இவ்வாறு சகச நிட்டையை அடைந்த திருநந்திதேவர், தன் அருள் குரவன் ஏவல் தலைநிற்கும் இயல்பும் தேறார் - தம்து ஞானசாரியர் பணித்தருளியபடியே பரமாசாரியராகிய சிவபெருமானுக்குத் திருத்தொண்டுசெய்து ஒழுகும் தன்மையையும் உணரமாட்டாதார், அன்னவன் நூலை ஆய்ந்தும் ஆக்கை

நின்று உளதேல் முத்தி மன்னலர் என்பர் - அத்திருநந்தி தேவர் தாம் கேட்டவண்ணமே தமது சந்தானவழியாய் உலகுக்கு உதவிய சிவஞானபோதத்தை ஆராய்ந்துகொண்டும் உடம்போடிருக்கின் அவர் முத்தியடைந்தவராகமாட்டார் என்று சொல்வார், அன்னோர் மம்மர் நோய்க்கு ஒழிவும் உண்டே - அத்தகைய மந்த மதியுடையோரின் மயக்கமாகிய பித்து நோயினுக்கு நீக்கமும் உண்டுகொல்லோ என்றவாறு.

148. நந்தி அன்று அருளும் நூலில் சால தலைப்படா உள்ளத்தார் - திருநந்திதேவ குரவர் பரமாப்த குரவரிடத்தே கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டைமேவிய அக்காலத்தே சற்சீடருக்கு உபதேசித்துச் சற்சந்தான முறையில் உலகுக்கு அருளிய சிவஞானபோத நூலின்வழியே அறிவு சாலும்படி உண்மை நெறியைத் தலைப்படாத கற்பித நூல்களைப் படைத்திட்டு மொழியும் மந்த அறிவினர், நூலினை உணர்ந்தார் போன்றும் - ஞான நூலை நன்கு உணர்ந்தவர்போலவும், நுண்ணறிவு உடையார் போன்றும் - அதனானே நுண்ணறிவு அடைந்தவர் போலவும், மாலினை தவிர்ந்தார் போன்றும் - அதனானே மயக்கம் தரும் மும்மலங்களின் நீங்கினவர்போலவும், வழி அறிந்து அடைந்தார் போன்றும் - அதனானே உண்மையை உணர்ந்து முத்திகைவந்தவர் போலவும், தத்தம் கோளே மேல் என விதந்து அலைகின்றார் - தங்கள் தங்கள் மதக்கோட்பாடுகளையே மேலானவை என்று கூறி உழிதருகின்றார்கள்; இவரறியாமை இருந்தபடி என்ன விபரீதம் என்றவாறு.

149. சத்திய நிருவாணத்தால் தனு கரணாதி தம்பால் பொத்திய ஓட்டின் ஒட்டாப் புளிம்பழம் போறல் தேற்றார் - சத்திய நிருவாண தீக்கையினாலே உடல் கரணாதிகள் தம்மிடத்தே மூடிய ஓட்டிலே யொத்த புளியம்பழம் போலக் கூடியும் கூடாதிருத்தலை உணரும் மதுகையில்லாதார், அத்தினால் உடல் போம் என்பர் அது புரி முறையும் தேற்றார் பித்து என மயங்கி நிற்பார் - அத்தீக்கையினாலே உடனேயே உடம்பொழிந்து விடும் என்பர் அதனைச் செய்யும் முறையையும் அறியாதவராய்ப் பித்துண்டானாரைப் போல மயங்கி நிற்பர், இவர் பெரிது உணர்ந்தார் போலும் - இவர் மிக்குணர்ந்தவர் போலும் என்றவாறு.

150. பிற உயிர்க்கு அருள நிற்கும் பெற்றிமை ஓரார் - அச் சத்திய நிருவாணதீக்கையை முத்தராய அவ்வாசாரியர்கள் பக்குவான்மாக்களுக்கு அநுக்கிரகஞ் செய்யும்பொருட்டு அவ் வுடம்போடும் அங்ஙனம் நிற்கும் தன்மையை அறியுமதுகையில் லாதவர்கள், தேகத்து உறும் வினை உடல் போம்காறும் உயிர் உண்ணும் என்பார் என்னின் - உடம்பிற்பொருந்திய பிராரத்த வினையை அவ்வுடம்பு நீங்குமளவும் அவ்வான்மாவே அநுப விக்குமென்று உரைப்பாரேல், அறிவொடு கலத்தல் இன்றாய் ஆம் வினை வளர - சிவஞானத்தோடும் பிரிப்பின்றிக் கலத்த லில்லையாகி அவ்வினை நுகர்ச்சியால் பிறசெய்வினை வளர்ந்து வர, மறுவலும் தேகம் எடுப்பது ஓரார் - அவ்வான்மா அவ் வினைக்கு ஈடாகப் பின்னரும் பிறப்பிற்சென்று உழிதருவதன்றி அஃதொழியுமாறில்லை என்பதை உணரமாட்டார்கள், இவர் களும் மலம் அற்றாரே - இத்தகையோர்களும் மும்மலங்களின் தன்மை நீங்கினவராவரோ! என்றவாறு.

151. ஆங்கு அவன் போல யானும் அறு குணம் உடை யேன் என்பார் - சைவருள் ஒருசாரார் முத்தியின்கண்ணே அப்பரமனூர்போல ஆன்மாவாகிய தானும் மங்கலகுணம் ஆறும் உடையேன் என்பார், ஓங்கு அவன் தொழில்கள் எல்லாம் யானே உஞற்றுவல் என்பார் - மற்றொருசாரார் சமான ரகித ராகிய சிவபரம் பொருளினது ஐந்தொழிலையும் சிவசாமியம் அடைந்த ஆன்மாவாகிய நானே செய்வேன் என்பார், தெளி வுறின் யானே தேங்கிய பிரமம் வேறு இன்று என்பார் - புறச் சமயத்தொருசாரார் பிராந்தியின் நீங்கித் தெளியப்பெறின் ஆன்மாவாகிய நானே அகண்ட பரிபூரணப் பிரமசொரூபம் என்னைத் தவிர ஏனையவாகக் காண்படுதல்லாம் முக்காலத்தும் இல்லாதனவே யாமென்பார், ஈங்கு இவ்வாறு உரைப்போர் எல்லாம் உயிர் இயல்பு உணராதோரே - இங்கே இவ்வாறு தந்தம் முத்திலக்கணங்களைக் கூறுமிவரெல்லாம் ஒருகுடியிற் கொண்டாரைப்போல ஆன்ம இலக்கணம் உணராமையின் ஒத்த பிராந்தரேயாவர் என்றவாறு.

152. வரி கழல் குமரன் நல்க மாதவ நந்தி பெற்றாங்கு - வீரக்கழலை அணிந்த பாசச்சேதராகிய கந்தபரமாசாரியர் அநுக் கிரகிக்க மாதவ சிரேட்டராகிய திருநந்திதேவர் தாம் பெற்றாற் போல, அரில் தப விளக்கும் நூலின் அமைதராப் பொருள்கள்

இல்லை - சந்தேக விபரீதக் குற்றம் நீங்கத் தம் சந்தானத்து அடியவர்களுக்கு உபதேசித்து உலகுக்கு உதவிய முதன்மையாய சிவஞானபோத நூலிலே அடங்காத மதப்பொருள்கள் இல்லை, கரிசு இல் அந்நூலின் உண்மை கேட்டிலார் - குற்றமில்லாத அத்தகைய சிவஞானபோத நூலின்கண் கூறப்படும் உண்மைப் பொருளாகிய முப்பொருள்களின் பொதுவியல்பு சிறப்பியல்புகளை அகச்சந்தான முறைமையிலே நல்லாசிரியரிடத்தே கேட்கப் பெருதவர்கள், கல்வி சான்றும் - பிறநூற் கல்விகளான் மிகுந்தும், விரியும் முப்பொருளின் தன்மை தன்னமும் விளங்கக் காணூர் - விரிந்த திரிபதார்த்த உண்மையை ஒரு சிறிதும் தெளிவுபெற உணராதவரேயாவர் என்றவாறு.

153. தந்திரகலை - கர்மகாண்டப் பொருளை விளக்கும் தந்திர கலையையும், மற்றை மந்திரகலை - ஏனைய உபாசனு காண்டப்பொருளை விளக்கும் மந்திரகலையையும், வான் வேதம் - உயர்வாகிய வேதங்களையும், அந்தம் இல் ஏனை எண்ணெண் கலை முதல் - அளவில்லாத ஏனைய அறுபத்து நான்கு கலைகள் முதலியவற்றையும், துவர ஆய்ந்த நந்தியும் - நன்காராய்ந்து உணர்ந்த திருநந்திதேவரும், தணிகைச் செவ்வேள் நல்கிடப் பெற்ருன் என்ருல் - திருத்தணிகாசலத்திலே எழுந்தருளியிருக்கும் கந்தபரமாசாரியர் உபதேசகலையை உபதேசிக்கப்பெற்ற உண்மைநெறியைத் தலைப்பட்டாரென்னில், முந்து நூல் மாத்திரத்தால் முப்பொருள் தெளியலாமே - மும்மல வசப்பட்டு முறை மறந்துழலும் நம்மனோர்கள் முதன்மையாய நூல்களை ஓதியதனுன்மாத்திரம் தம்மின் வேறல்லாத எண் குணமுடைய முதல்வனது இயல்பையும் தம்மின் வேருய மலத் தொடுபட்ட தமது இயல்பையும் அம்மலத்தின் இயல்பையும் தேர்ந்து உணர்ந்துகொள்ளுதல் கூடுமோ என்றவாறு.

'இன்னணம் சகசநிட்டை எய்திய நந்திபுத்தேள்' (147) என்பது முதல் இதுகாறும் குரவன் சிறப்பும் நூற்சிறப்பும் அது கேட்கு முறையும் எதிர்மறைமுகத்தான் விளக்கியவாறு அறிக.*

---

*இப்பதவுரை இவ்வாதீனத்து 16–வது மகாசந்நிதானம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக மூர்த்திகள் காலத்துச் சின்னப்பட்டத்திலிருந்த ஸ்ரீ நமச்சிவாய தேசிகர்பால் பாடங்கேட்ட மாணவர்களில் ஒருவராகிய ஸ்ரீ பழநிக்குமாரத் தம்பிரான் குறிப்பிற்கண்டது. (சிதைந்துபோன காகிதப்பிரதி).

அகத்தியனருள்பெறுபடலம்:

2. செற்றிய - நெருங்கிய. பண்ணை - வயல். மரு - வாசனை. மேல் நாள் - முன்னொருகாலத்தில். ஒருக்கிய - ஒருப்படுத்திய.

4. சொல்லினை விரும்பும் காமத்தையுடைய மைந்தர்களைப்போல: இன் உவமவுருபு. விழை - விரும்பும். மைந்தர் - ஆடவர்.

5. காவி இருங்கிரி - தணிகைமலை.

11. ஐ மலம் - ஆணவம், மாயை, கன்மம், மாயேயம், திரோதம் என்பன.

14. உலந்தார் - அழிந்தவர்.

17. கரிசு - குற்றம். அலக்கண் - துன்பம். படர் - துன்பம்.

21. எவ்வம் - துன்பம், குற்றம்.

23. பழங்கண் - துன்பம். அழுங்கிய - வருந்திய.

33. சித்தி நாலிரண்டு - அஷ்டமாசித்தி: அணிமா, மகிமா, லகிமா, பிராத்தி, கரிமா, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம். இதனை, "தானே அணுவும் சகத்துத்தன் நொய்ம்மையும், மாணுக்கனமும் பரகாயத்தேகமும், தாணுவதும்பர காயஞ்சேர் தன்மையும், ஆணுத உண்மையும் வியாப்பியமாம் எட்டே" என்னும் 649-ஆம் திருமந்திரத்தால் அறிக.

40. கணி - வேங்கை. கலைகள் - மான்கள்.

44. வீபவர் - இறப்பவர். வீழி - வீழிக்கனி. மா - இலக்குமி. சமழ்ப்பின் - வருத்தத்தின். மாழ்குற - மயங்க.

46. மலம் இறந்து முத்தியின் இறப்பர் - மலம் நீங்கப் பெற்று முத்தியில் தங்குவர்.

48. விருச்சிகம் - கார்த்திகைமாதம். ஆரல் நாள் - கார்த்திகை நட்சத்திரம்.

49. ஆறெழுத்து - சடக்கரம்: சரவணபவ என்பது. நமோ குமாராய என்பாரும் உளர்.

64. நச்சாதவர் - பகைவர். நளினம் - தாமரை. குறங்கு - தொடை.

65. வை வாய் - கூரிய வாயினையுடைய.

92. முகலி - பொன்முகலிநதி. தென்கயிலை - சீகாளத்தி.

99. நாற்றி - தொங்கவிட்டு. விசித்த - கட்டப்பட்ட. வேனில் - வேனிற்காலம்.

100. உடு - நட்சத்திரம். எழிலி - மேகம்.

101. பூமியின் தொன்னிறம் - பொன்மை. சிவிறி - நீர் தூவும் துருத்தி. தமனியம் - பொன். கலாய் - கலந்து.

104. பிறக்கம் - மலை. பெட்டு - விரும்பி. இறக்க - செல்ல.

106. தாள - தண்டினையுடைய. ஓதிமம் - அன்னம்.

115. கொங்கு - தேன், வாசனை. நிதித்துணை - சங்கநிதி, பத்மநிதிகள்.

152. அளற்றினில் - கும்பீபாகம் முதலிய நரகங்களில். ஓர்த்து - ஆராய்ந்து அறிந்து. இருபயனும் - இம்மைப்பயனும் மறுமைப்பயனும். தெருட்டல் - தெளிவித்தல்.

155. புணரி - பாற்கடல். சீறு இலை - சிறிய இலை.

175. புரிசை - மதில். பொதி - கட்டு. பொற்ப - அழகாக.

176. பழனம் - வயல். பாய்மா - குதிரை.

185. தணவா - நீங்காத. உளைவன - வருந்துவன. விழைவ - மகிழ்வன.

186. பாசடை - பச்சிலை. உடங்கு - ஒருசேர. உடற்ற - வருத்த.

187. மண்ணை கோட்பட்டோர் - பேயினுற் கொள்ளப் பட்டவர்.

196. துன்பம் மல்கு அளறு ஒரீஇ.

199. கருணை - பொரிக்கறி. ததி - தயிர். சொன்றி - சோறு.

201. ஆசு உரைத்தவர் - குற்றஞ் சொல்லியவர்.

204. மரத்தொடு இயைந்து அயம் மேல் தொக்க.

255. செருத்தல் - மடி.

256. பல் இயம் இயம்ப - பலவகை வாத்தியங்களும் முழங்க. மந்தமாருதம் - இளந்தென்றல். நடுவன் - யமன். தவிசு - ஆசனம்.

257. கருற்றி - செய்து.

258. குன்று இறுக்கும் இளவல் - முருகவேள்.

262. பூத பரிணும உடம்பு, பூத சார உடம்பு, பூத உடம்பு.

264. அங்கிகால - தீச்சிதற. குஞ்சி - தலைமயிர். தறுகண் - அஞ்சாமை. பூசைவாய் - பூனையின் வாயில். அல்லாந்து - துன்புற்று. உழலை - சுற்றித்திரியும்படி வாயிலில் நடும் மரம்.

265. கொடிறு - கதுப்பு. அண்ணம் - மேல்வாய். ஓட்டம் - மேல் உதடு.

266. மாழாந்து - மயங்கி.

267. செல்லல் - துன்பம். இறப்பர் - கடப்பார்.

268. அவதி - முடிவு.

270. வியங்கோள் - ஏவல். இழுதையர் - கீழோர். மிறை - துன்பம். மாற்றம் - சொல்.

321. இருண்மலம் - ஆணவமலம்.

328. நல்கூரின் - வறுமையுற்றால்.

330. இலம்பாடு - தரித்திரம்.

334. மாண்ட - மாட்சிமைப்பட்ட.

335. வெறுக்கை - செல்வம். நவை - துன்பம்.

336. ஒருவற்கு அரிய - நீங்குதற்கு அருமையான.

353. ஓவறும் அன்பு - நீங்காத அன்பு. தணப்புற - நீங்க.

356. வரமலி - சிறப்பு மிக்க. உரம் அறு - ஞானமில்லாத.

374. "செய்வினையும் செய்வானும் அதன்பயனும் சேர்ப்பானும், மெய்வகையான் நான்காகும் விதித்தபொருள் எனக் கொண்டே, இவ்வியல்பு சைவநெறி யல்லவற்றுக் கில்லையென, உய்வகையாற் பொருள்சிவனென் றருளாலே உணர்ந்தறிந்தார்" என்னும பெரியபுராணச் செய்யுளான் உணர்க.

376. ஆதரவு - விருப்பம். பெட்கும் - விரும்பும். சேட்படும் - தூரமாம.

378. விது - சந்திரன்.

390. அகாமம் - அபுத்திபூருவம். காமம் - புத்திபூருவம். விமலன் உரை - சிவபெருமான் அருளிச்செய்த வேத சிவாகமங்கள். தைவிகத்தால் உண்டாகிய வினையும், ஆசை மிகுதியால் உண்டாய வினையும், பொல்லாங்கு மறதி கள்வர் மூர்க்க அரசன் இவர்கள் பயத்தால் உண்டாம் வினையும், பேய் பாம்பு மாயமயக்கம் முதலியவற்றால் அறிவழிந்து செய்யும் வினையும் அகாமமாம். இவையல்லாமல் இயற்றுவன எல்லாம் காமவினை எனப்படும். வேத சிவாகமங்களில் இன்னது செய்தால் இன்னது பாவம் என்று அறுதியிட்டு அறிந்திருக்கவும் அதற்குப் பயமில்லாமல் செய்வது முற்கூறிய தைவிகமேயாம். அகாமவினைக்கே பிராயச்சித்தம். பொச்சாப்பு - மறதி. அவண் அறிகின்றும் என்பது உலோகாயதனைப்போல் இம்மைப்பயன் ஒழிந்து அம்மைப்பயனை யார் கண்டனர் என்று கருதுவதாம. கழுவாய் - பிராயச்சித்தம். இரு குணிதம் - இருமடங்கு. நாற்றி - நான்கு மடங்கு. இரட்டி - இரண்டு மடங்கு.

391. பொருவிலி - சிவபெருமான். பிராமமுகூர்த்தம் - சூரியன் உதிக்க மூன்றேமுக்கால் நாழிகை. ஆன் ஐந்து - பஞ்ச கவ்வியம். இரண்டு இயக்கம் - மலஜலம் கழித்தல். மாதிரம் - திக்கு. நன்காடு - சுடுகாடு.

392. பதிதர் - பாவிகள். அறல் - நீர்.

395. வழிநாள் - நான்காம்நாள் (பின் நாள்). அணவிய - பொருந்திய.

397. அயுதம் - பதினாயிரம்.

404. அறல் - மணல்.

405. கஞ்சம் - வெண்கலம். கரிக்கோடு - யானைக்கொம்பு. தோம் - குற்றம். சொன்றி - சோறு. கரம் - கழுதை.

406. செருத்தல் - மடி.

407. சாதம் - சத்தியோஜாத மந்திரம்.

409. நியுதம் - இலட்சம்.

412. வனசரர் - வேடர். தோம் - குற்றம்.

419. திரைத்த - திரையை உடைய. திரை - அலை.

421. மண்ணி - கழுவி.

422. பனத்தி - பார்ப்பனி. பனவன் - பார்ப்பான்.

சிபரிபூரணநாமப்படலம்:

1. ஆவி - உயிர். துளங்க - கலங்க. ஒரீஇ - நீங்கி. ஒல்லை - விரைவில். விலங்கல் - மலை.

2. உடங்கு - ஒருசேர.

3. எறும் - வலி. பரிப்பித்து - தாங்கச்செய்து.

4. முன் இருவர் - சூரபன்மன், சிங்கன். வாரணக்கொடி - சேவற்கொடி.

6. குக்குடம் - கோழி. அரி - சிங்கம். தோல் - யானை. சாரதம் - பூதம்.

7. பாரிடர் - பூதங்கள். இடைந்து - தோற்று.

8. பொலம் சடிலம் - பொன்போன்ற சடை. ஊர்தி - வாகனம்.

10. தறுகண் - அஞ்சாமை.

11. தாதை - காசிபமுனிவன். தாய் - மாயை. ஆசான் - அசுர குருவாகிய சுக்கிரன. மாசு இவறி - குற்றத்தையுடைய சொல்லை மேற்கொண்டு.

12. மாதிரம் - திசை. உவணம் - கருடப்புள். தெவ்வி - பறித்து.

13. வலாரி - வலன் என்னும் அசுரனையழித்த இந்திரன்.

14. தணந்து - நீங்கி.

15. இகந்த - நீங்கிய. வீரனால் - வீரபத்திரக்கடவுளால். எச்சம் - யக்ஞம், யாகாக்கினி. மெல்லியல் - உமாதேவியார்.

16. அவ்வியம் - பொறாமை. தபும் - நீங்கிய. ஒவ்வ அரும் பரன். எவ்வம் - துன்பம். ஓப்பும் - போக்கும்.

17. கமலத்தன் - பிரமதேவன். அலர் வாளியான் - மன்மதன். அலர் - மலர். வாளி - அம்பு.

18. மாரன் - மன்மதன். நுதற்கண் - நெற்றிக்கண். கால் பொரும் பூளை வீ - காற்றில் அடிபட்ட பூளைப்பூ. கால் - காற்று. வீ - மலர். புலவர் - தேவர்.

19. தமிழ்க்குரவன் - அகத்திய முனிவன். மலய வெற்பு - பொதியில்மலை. வெள்ளிமால்வரை - கைலைமலை.

20. வலாரி - இந்திரன். காற்றினன் - வெளிப்படுத்தினன். கலாவி - கலந்து. அந்தரம் - ஆகாயம். சுலாவு - சுழன்ற.

21. கால் - வாயுதேவன். அழல் - தீக்கடவுள். சரவணம் - நாணற்காடு. சரம் - நாணல். வனம் - காடு; இமயமலைச் சாரலில் உள்ள பொய்கை. அறுமாதர் - கிருத்திகைத்தையல் அறுவர்.

25. இயம் - வாத்தியம். அல்லி - அக இதழ்.

26. துயர் மண்ண - துயரைக் கழுவ.

30. வேட்ட - விரும்பியவற்றை.

31. வேதனைக்காதி. காதி - மோதி, புடைத்து.

33. அடுக்கல் - மலை. ஆவயின் - அவ்விடம். மேவலன் - பகைவன்.

34. பொன் - வியாழன்.

35. நாம - அச்சத்தைத் தருகின்ற. தகர் - ஆட்டுக்கிடாய். எண் தோள் ஆரியன் - சிவபெருமான். ஆரியன் - பூஜ்யன். ஆரியன் - ஆசாரியன். நோற்ற - தவம்செய்த.

36. நாப்பண் - நடுவிடம். ஏல்வை - சமயம். ஏறும் - வலி.

37. வையம் - தேர்.

38. ஓகை - உவகை. கடல் புக்கது எனப் பல்லியம் ஆர்த்தன.

39. மையாந்தனிர் - துன்புற்றீர். கூருதிர் - மிகுவீர். வெரிந் - முதுகு. நீவுதல் - தடவுதல்.

40. மண் - நிலவுலகம். சிவபெருமான் பூமியைத் தேராகக் கொண்டபோது சூரிய சந்திரர் தேருருளாயினர். நிழற்றியது - நிழலைச்செய்தது.

41. இவள் சாமரை - விளங்குகின்ற சாமரை. கங்கை வெண்ணிறமாகலின் சாமரைக்கு உவமித்தார்.

42. தளை - விலங்கு. காகளம் - எக்காளம். கறங்கின - ஒலித்தன.

43. விழைய - விரும்ப. உழை ஏழனுருபு. முழை - குகை. ஓலிடல் - சத்தமிடல். முரன்றன - ஒலித்தன.

44. கால் ஆதியின் - திருவடி முதலியவற்றால். சமர் - போர். ஆடல் - வெற்றி. பாரிடம் - பூதம். திருவடி முதலிய வற்றால் பகை காய்ந்தமையை "காலிற் றுலங்கு நகத்தாலும் கையிற் பொலிகூர் நகத்தாலும், சீலத் தரக்கன் உரங்கொண் டீர் திசைமா முகனைச் சிரங்கொண்டீர், மேலைப்புரத்தை நகைத் தெரித்தீர் வில்வேள் புரத்தை விழித்தெரித்தீர், சூலப் படை யேன் மழுப்படையேன் சுமந்தீ ரருணை அமர்ந்தீரே" என்னும் திருவருணைக் கலம்பகத்தான் உணர்க. "வேனிலா னுறுப்பின் மென்றசை யிறைச்சி, தீநாக் கறியத் திருக்கண் திறந்தோய், நான்மறை முனிவன் கான்முளை நிற்ப, விடற்கரும் பாசமோ டடற்பொறை நீங்க, உயிருண் கூற்றுக்குத் திருவடி வைத் தோய்" (திருவாரூர் நான்மணிமாலை) என்னும் பகுதி முதலிய வற்றாலும் அறியலாம்.

45. காலை என்றது முருகவேளை. அக் கால் இறை - அந்த வாயுதேவன். ஊர்ந்தனன் - செலுத்தினன்.

46. பௌவம் - கடல். மிடை - நெருங்கிய.

50. பறம்பு - மலை. துளங்கினர் - கலங்கினர்.

52. ஏகலை - ஏகற்க. அழல் - நெருப்பு. மாதவன் - நாரதன்.

53. தாரகம் - பிரணவம். பதகன் - பாவி.

55. ஓங்கல் - மலை. விறல் வாகு - வீரவாகு. திறம்பிய - மாறுபட்ட. மூரி - வலிமை.

56. ஆழிய - சக்கரங்களை உடையனவாகிய இரதங்கள். வங்கம் - மரக்கலம். உருமு - இடி. உட்க - அஞ்சுமாறு. ஆர்ப்பு - ஆரவாரம்.

57. வையகம் - உலகம். வச்சிரம் ஏந்தினன் - இந்திரன். அருள் ஆழியான் - அருட்கடலாகிய முருகவேள். நயப்ப - விரும்ப. பிறக்கிட்டு - பின்னிட்டு. துன்றியும் - நெருங்கியும். புரிசை - மதில்.

58. புட்டில் - சுளகு. பகழி - அம்பு. எயில் - மதில். தண்ணுமை - வாத்தியம். அயிர்க்கின்றார் - ஐயுறுகின்றனர்.

59. கைதவம் - வஞ்சகம். முற்றிய - சூழ்ந்த. கிடங்கு - அகழி. படர்கலம் - செல்லேம்.

60. அழுவம் - பரப்பு. ஏற்றவர் - எதிர்ந்தவர். கடி மதில் - காவலோடு கூடிய மதில். கடிதின் - விரைவில்.

62. குரம் - குளம்பு. வையம் - தேர்.

63. உரன் - மார்பு. ஆழிப்படை - சக்கராயுதம். நாரணன் மகன் - மன்மதன். நிழல - நிழலைச்செய்ய.

64. பதம் - காலம். தானவன் - அசுரன். உளர - அசைய.

65. கண் - கண்ணோட்டம்.

66. பிறக்கம் - விளக்கம். வள்வார் பணை - விசித்துக்கட்டிய வார்களையுடைய வாத்தியங்கள். குளிற - ஒலிக்க. இமிர் - விளங்குகின்ற.

67. மாற்றவள் - சககளத்தி. தகையும் - தடுக்கும்.

68. கச்சு - அரைக்கச்சு. நொறில் - விரைவு.

69. கணிப்பு இல் - எல்லையில்லாத. கஞல் - நெருங்கிய. கண்டூதி - தினவு.

73. பாய - பரவிய. உடற்றி - மாறுபட்டு. சோரி - இரத்தம்.

74. மறம் - வீரம். மண் குலுங்க - பூமி நடுங்கும்படி. இழியா - இறங்கி.

75. திரியா - சுழற்றி. பாரிடம் - பூதம். சாரதத்தலைவர் - பூதத்தலைவர்.

77. உட்கி - அஞ்சி. உகையா - செலுத்தி. தட்கும் - தடைசெய்யும். தொடையல் - மாலை.

78. சமரம் - போர். துனையா - விரைந்து.

81. ஒருவினுன் - நீங்கினுன்.

82. இனைவுற - வருந்த. மனிதச்சிங்கம் - நரசிங்கம்.

83. சிம்புள் - சரபம். உம்பல் - யானை. கைதவம் - வஞ்சனை. இரிய - கெட்டோட. நம்பி - வீரவாகுதேவர்.

86. வீணையறவன் - நாரதமுனிவன்.

92. கவந்தம் - முண்டம். முளிபுல் - காய்ந்தபுல். நூழிலாடி - கொன்று குவித்து. நெய்த்தோர் - இரத்தம்.

94. அந்தம்நாள் அங்கி - ஊழிக்காலத்துத் தீ.

95. இப்பாடல் மனப்பாடம் செய்தற்குரியது.

98. மிறை - பாவம். இறையின் - விரைந்து.

101. உடு - விண்மீன். திங்கள் - சந்திரன். பரிதிப் புத்தேள் - சூரியன்.

102. எக்கழுத்தம் - தலையெடுப்பு, இறுமாப்பு. "கல்லாதான் தான்காணும் நுட்பமும் காதிரண்டும் இல்லாதாள் எக்கழுத்தம் செய்தலும்" (சிறுபஞ்சமூலம் - 5), "ஈகையின் எக்கழுத்தம் மிக்குடைய" (நீதிநெறி விளக்கம் - 39), "எள்ளுநர்கட் கேக்கழுத்தம்போல வினிதன்றே" (சீவக - 496), "ஏ பெற்றாகும்" என்றார் அதன் உரையில் நச்சினார்க்கினியரும். இது சிந்தித்தற்குரியது. வெய்து - விரைவில். தேசு - புகழ். வரையும் நீயும் இடும்பைக்குன்றும் தேசும் அழியக்காண்டும் என்க.

103. இபமுகன் - யானைமுகமுடைய தாரகன். திரித்துக் கொண்டு - முறுக்கிக்கொண்டு. சிலை - வில். கோட்டி - வளைத்து. தழக்கம் கண்டான் - ஒலி எழுப்பினுன்; குணத்தொனிசெய்தான் என்றபடி.

104. வாங்கி - வளைத்து. விளிகுவம் - இறப்போம்.

105. நுதற்கண் மாய்த்த - நெற்றியில் மறைத்த; கண் ஏழனுருபு.

106. கணை, ஏ, வாளி, அம்பு என்பன ஒருபொருட் சொற்கள்.

107. அல் அழுத்திய யாக்கை - இருள் செறிந்த உடல். எல் - ஒளி. துறுத்தனன் - நிறைத்தனன். தனு - உடம்பு.

108. கோல் - அம்பு. கோடு இற - தந்தம் முறிய. நூறினன் - அழித்தான். வையம் - தேர்.

109. கால் வலவன் - வாயுவாகிய தேர்ப்பாகன்.

110. கொண்டல் - மேகம்.

112. புராரி - சிவபெருமான்.

115. ஞெகிழி - தீப்பொறி. மாதிரம் - திசை. அயில் - வேல். தோல் - யானை.

121. சீர்த்தி - மிகுபுகழ். தைதந்தன - நெருங்கின. கடவுளர் சிலம்பு - தேவகிரி.

122. அலங்கல் - மாலை.

123. தசும்பு - குடம். ஏர் அசும்பு உரு - அழகு துளிக்கும் படியான வடிவம். அசும்பு - ஒழுகுகின்ற எனினுமாம். அயிற்றி - நிவேதிப்பித்து. பவங்கள் - பிறப்புக்கள்.

125. பாற்கரன் - சூரியன். வயவர் - வீரர்.

126. நரலை - கடல். மாறு ஆம் - பகையாகிய. உடுபதி - திங்கள்.

128. வாகுவை - வீரவாகுதேவரை. அந்தில் அசைநிலை.

129. தடவிய - விசாலமான. குப்புற்றான் - குதித்தான்.

130. தெருட்டி - தெளிவித்து.

131. சிவணலும் - வந்து பொருந்துதலும்.

132. துயரும் - துன்பப்படும். துமித்து - நீக்கி. ஒக்கல் - சுற்றம்.

134. மூதறிவு - பேரறிவு, கிளத்தலால் - சொல்லுதலால்.

135. உயங்க - வருந்த. நென்னல் - நெருநல்; நேற்று. வேறல் - வெல்லுதல். அமர்ந்துளேன் - விரும்பியிருக்கிறேன்.

136. இகந்துரை - ஏகுதி என்னும் சொல். அளப்பில - அளவில்லாதன.

137. இருந்தவர்க்கு - பெரிய தவத்தையுடையோருக்கு. தணத்தல் - நீங்குதல்.

138. திகிரி - சக்கரம். கூவிரம் - தேர்க்கொடுஞ்சி; அது தாமரைப்பூப்போல் செய்து தேர்த்தட்டின் முன் நடுவது. பரிமா - குதிரை. பல்கால் - பலதடவை. கஞற்றி - நெருங்கி. சமர் - போர். வாரம் - அன்பு. இரிந்த - கெட்டோடின. மண்டிய - நிறைந்த. வீட்டேன் - விடுவித்தேன்

139. உயங்க - வருந்த. ஞாதியர் - தாயாதிகள்.

140. மொய் அமர் - நெருங்கிய போர். முரி திரு - பெருமை தங்கிய முத்தித்திரு. மூரி என்பதன் விகாரம் முரி. வேறல் - வெல்லுதல்.

141. கோறல் - கொல்லுதல். உருத்து - கோபித்து.

142. முற்றினர் அவரை - தம்மைப் பற்றுதற்கு வந்த வீரர் ஆயிரவரையும். இன்னினி - இப்பொழுதே. படர்குவல் - செல்வேன்.

143. சூளிகை - மாளிகையின் உச்சி அறை. இடந்து - பெயர்த்து. நேர்ந்து - எதிர்ந்து. உடல் - மாறுபட்ட.

145. தாய் அடர்ந்து - தாவிப் போர்செய்து.

153. நாந்தகம் - வாள். ஊழின் இன் உவம உருபு.

154. ஏல்வை - சமயம்.

161. நுனித்த - நுட்பமான. தரணி - பூமி. பனித்து - நடுங்குதல். பருவரும் - துன்புறும்.

163. அரிமுகத்து இளவல் - சிங்கமுகாசுரனாகிய தம்பி.

168. தரணி அண்டம் - பிருதிவி தத்துவத்தில் உள்ள அண்டங்கள்.

169. வாரம் உற்று - அன்பு பொருந்தி.

220. பொள்ளென - விரைவாக. குப்புற்று - குதித்து. ஏற்றான் - எதிர்த்தான்.

225. வீற்று வீற்று - வேறு வேறாக நின்று. நாற்று - தொங்கவிட்ட.

229. நோனான் - பொறுக்காத பானுகோபன். நூறி - பொடிபடுத்து.

230. விசிகம் - அம்பு. சிலீமுகம் - அம்பு. மருமத்தும் - மார்பினும்.

253. அனிகம் - சேனை.

255. அரந்தை - துன்பம்.

259. தொன்று - பழமையாக, முன்னே.

261. விது அணி - சந்திரனை அணிந்த.

271. வலவன் - தேர்ப்பாகன்.

279. "ஒலித்தக்கா லென்னும் உவரி எலிப்பகை, நாகம் உயிர்ப்பக் கெடும்" (குறள் 763), "எலியெலாமிப்படை அரவம் யானென்ன, ஒலியுலாஞ் சேனையை உவந்து கூயினான்" (இராமா - குகப்படலம் - 10). மறலி - மாறுபட்டு.

281. நெய்த்தோர் - குருதி. மா - குதிரை. கலம் - மரக் கலம். யானை மீன் - திமிங்கிலம். சைவலம் - பாசி.

290. சொன்றி - சோறு.

313. கடு அனையான் இவன் - நஞ்சை ஒத்தவனாகிய இவன்.

314. நுதலி - கருதி. ஏலும் - ஒத்த. மொய்ம்பில் தோளில்.

316. என்றாழ் - சூரியன். சதமகன்படை - ஐந்திராஸ்திரம். நீர் இறை படை - வாருணாஸ்திரம்.

318. ஆலம் - நஞ்சு. கூளிக்குலம் - பெண்பேய்க் கணம். அசனி - இடி. திமிரம் - இருள். வை - கூர்மை.

322. பெட்புற்று - விரும்பி. தெவ்வு - பகை.

324. கேழல் - பன்றி. வள் உகிர் - கூரிய நகம்.

325. களிறு இரிவுற்றன - யானைகள் கெட்டோடின. தெருமந்தான் - சுழன்றான். "அலமரல் தெருமரல் ஆயிரண்டும் சுழற்சி" (தொல்). எண்குல கிரிகள் - அஷ்டகுல பர்வதங்கள்.

330. வாளி - அம்பு. பூழி - துகள். முருக்கி - அழித்து. ஒட்டலான் - பகைவன்.

332. தோம் - குற்றம். நரலையின் - முழக்கத்தோடு.

342. நொச்சி - மதில். நோன்மை - வலிமை.

345. என்றாழ்க் காதும் சிறுவன் - பானுகோபன். சேவகம் - வீரம்.

351. மாதிரம் - திக்குகள்.

352. பகடு - பெருமை. உரம் - மார்பு. கந்துகம் - பந்து.

353. இனைந்து - வருந்தி. கதழ்ந்தது - விரைந்தது.

359. "உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந் தேர்க், கச்சாணி யன்னா ருடைத்து" என்னும் குறட்கருத்தை இது நினைவூட்டுவதாம்.

365. வீணை அமை வரன் - மகதி என்னும் வீணைபொருந்திய சிரேட்டன் ஆகிய நாரதன். வரன் - சிரேட்டன்.

366. சே இலை வேல். மம்மர் நீவி - மயக்கத்தினின்றும் விடுவித்து.

374. மாழை - பொன்.

381. பழங்கண் - துன்பம்.

386. கலினப்பரி - கடிவாளத்தையுடைய குதிரை. தேர் வலவன் - தேர்ப்பாகன். அத்தி - கடல். எய்த்து - இளைத்து. 'பலரும் மாய்வர்; அவருக்கு நீர்க்கடன் இயற்றுமாறு நாம் பிழைத்தலைப் பொருந்துவாம்' என இரணியன் நினைந்து கடலில் மறைந்தனன் என்க.

387. மதலை - புத்திரன், கதிரின்பகை - பாநுகோபன்.

391. ஞாங்கர் - பக்கம். நிறம் கிழித்து - மார்பைப்பிளந்து.

439. கொட்புறும் - சுழலும். அகிலம் - உலகம்.

440. கறங்கின் - காற்றாடியைப்போல.

441. உரம் - மார்பு. மோலி - கிரீடம். புலவரை - தேவர்களை. கார்முகம் - வில்.

442. வாணி கேள்வன் - பிரமதேவன். வல்லே - விரைவாக. ஏண் - வலிமை. கோணை - வலிய. நாந்தகம் - வாள்.

443. வாள் திரித்து.

447. மெய்க்குறை - கவந்தம். ஞாட்பு - போர்.

449. வாகை - வெற்றிக்குரிய மாலை; வாகைப்பூச்சூடுதல் மரபு. வயவர் - போர்வீரர். வஞ்சினம் - சபதம்.

451. பூமகள் - இலக்குமிதேவி. தவ்வை - மூதேவி. வாகு - வீரவாகுதேவர். சேய் - முருகவேள்.

452. ஆரணத்தன் - வேதன். ஆரணம் - வேதம்.

454. நந்தாத - கெடாத.

455. கோயில் - அரண்மனை. விலாவம் பணை - அழுகைப் பெருக்கம். ஒளி - தேசு. பாய - பரந்த. பாடு - பெருமை.

458. பாறு - பருந்து.

464. வில் பயில் - ஒளி வீசும். விண் துழாவும். எல் - ஒளி.

465. மாடகம் - முறுக்காணி. திவவு - யாழின் வலிக்கட்டு. மாமுனி - நாரதன். ஆடகவரை - பொன்மலையாகிய மேருகிரி. நிகளம் - விலங்கு. பாணியாது - தாமதமின்றி.

470. மருமம் - மார்பு. கணிச்சி - மழுப்படை.

474. மாற்றலன் - பகைவன்.

476. விம்மிதத்தராய் - ஆச்சரியமுடையராய்.

478. கழுமுள் நுண் துகள் ஆயது. வலவனை - தேர்ப் பாகனை.

479. எருக்கினன் - அடித்தனன்.

481. குப்புறு - குதித்து. புகுந்து உதைத்து உகைத்து ஒடித்து என்க.

482. மலைத்த - போர் செய்த. சிகழிகை - தேமாலை.

483. தூங்கு கை - தொங்குகின்ற கை, துதிக்கை. மத மலை - யானை. துரகதம் - குதிரை.

484. தொடரிய - தொடுத்த. தொடலை - மாலை. எறும் - வலிமை.

485. கூற்று உறழ் - இயமனை ஒத்த.

486. சுரிகை - உடைவாள். இகலினர் - பகைத்தனர்.

488. உரம் மருவிய - மார்பிலே பொருந்திய. ஏவுபு - ஏவி. இடர் தப - துன்பம் நீங்க. நடவினன் - செலுத்தினன்.

489. ஒட்டலன் - பகைவன்.

490. கலதி - மூதேவி. பதம் நோக்கி - சமயம் பார்த்து

491. இவர்ந்து - ஏறி.

492. துவக்கு - தோல்.

495. வீற்று வீற்று - வேறு வேறாக. பாற்றி - அழித்து. பாணி - கை. இறுத்து - ஒடித்து. மாற்று ஓர் சிலை - மாற்றாக ஒரு சிலை.

496. விசிகம் - அம்பு. சில்லி - உருளை.

499. காலின் இறைவன் - வாயுதேவன், "வறிது சிறிதாகும்". குளிற - ஒலிக்க. மிடைய - நெருங்க. ஆலம் - நஞ்சு. பறந்தலை - போர்க்களம்.

501. வாய்மடுத்து - உண்டு. அகடு - வயிறு.

503. அத்தாணி - அரசிருக்கை.

505. துப்பு - வலிமை.

506. கதழ்வுற்று - கோபமுற்று.

507. காதுவல் - போக்குவேன்.

508. கனிவு - கோபம்.

510. உரம் - மார்பு. வெரிந் - முதுகு. நுதல் - நெற்றி. அது - கதை.

511. மம்மர் - மயக்கம். யாத்த படை - மாயாஸ்திரத்தை. யாத்தல் - கட்டுதல். தூணி - அம்புக்கூடு.

512. விசிகம் - அம்பு. ஏண் - வலிமை. கோணை - வலிமை. குடிஞை - யாறு.

513. மாகர் - தேவர்கள்.

514. இரதம் ஊர்பவன் - வாயுதேவன். வையம் - தேர். காசினி - பூமி.

520. உலமந்தார் - கலங்கினர். ஒட்டலன் - பகைவன்.

521. மன்ன - நிலைபெற. முன்னும் ஏல்வையின் - கருதிய பொழுதில். உரப்பினன் - உங்காரம் செய்தான். பிந்திய கடுப்பின் - பிற்பட்டாற்போல. கடுப்பின் உவமஉருபு.

523. ஞாங்கர் - வேலை.

524. பராகம் - தூளி.

526. வேயினர் - ஒற்றர்.

527. உயிர்த்து - பெருமூச்செறிந்து. அவலித்து - புலம்பி. அற்றம் - மெலிவு.

534. ஏற்றனர் - எதிர்த்தனர்.

535. கார்முகம் - வில்.

541. அன்றிய - பகைத்த.

547. புறஞ்சிறைவாரணம் - கோழி. நொறில் - வலிமை.

549. கோல் - அம்பு.

551. கப்பணம் - இரும்பினாற் செய்யப்பட்ட நெருஞ்சிமுள்.

553. முருங்க - அழிய.

556. குடங்கர் - குடம்.

பிரமனருள்பெறுபடலம்:

1. சுதை - அமுதம் போன்ற வெண்ணிறம். வீ மலி - மலர்கள் நிறைந்த. விமலன் - சிவபெருமான்.

2. முறுக்கு - கட்டு. நறை - தேன்.

3. அலத்தகம் - செம்பஞ்சுக்குழம்பு. குலம் - சிறந்த. குவளைக்கிரி - திருத்தணிகை. குடக்கர் - மேற்கு.

4. சங்கு அடர். ஆசு அகல ஆடி.

5. திருக்கு அறும் உளம் கசிவு.

9. ஞாங்கர் - பக்கம். சேவகன் - சிவபெருமான்.

11. இவர் - விளங்குகின்ற.

14. ஒல்லார் - பகைவர். அல்லாந்து - துன்புற்று.

18. அகலம் - மார்பு.

நாரணனருள்பெறுபடலம் :

4. பிரசம் - தேன். நக்க - விளங்குகின்ற.

9. நடலை - பொய்வாழ்வு.

17. பாறு - பருந்து.

22. பீர்ங்குரு வீ - பீர்க்கம்பூ.

இந்திரனருள்பெறுபடலம் :

4. ஐந்து சுத்தி - பூதசுத்தி, தானசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, இலிங்கசுத்தி என்பன. தவிசு ஐந்து - பத்மாசனம், அனந்தாசனம், விமலாசனம், யோகாசனம், சிங்காசனம் என்பன.

5. புராரி - சிவபெருமான். வலாரி - இந்திரன். மாதிரத்தார் - திக்குப்பாலகர். மாதிரம் - திக்கு.

6. மாண்ட - மாட்சிமைப்பட்ட. வச்சிரன் - இந்திரன்.

நாகமருள்பெறுபடலம் :

2. அனுங்கலம் - அழியமாட்டோம்.

5. கதழ்ந்து - கலங்கி.

இராமனருள்பெறுபடலம் :

36. உடலின் இழிவு. (திருவிடைமருதூர் மும்மணிக் கோவை 13, திருக்கழுமல மும்மணிக்கோவை 16 சிந்தித்தற்கு உரியன)

களவுப்படலம் :

10. மலர் குற்று - மலர் பறித்து.

11. இதண் - பரண். சுதை - அமுதம்.

18. கணி - வேங்கை. ஓகை - உவகை.

21. மௌவல் - முல்லை. பிண்டி - அசோகு.

24. நீப மலர் - கடம்ப மலர்.

26. மா - மரம்; சூரபன்மாவாகிய மா என்க. கொக்கினம் - மாமரக்கூட்டங்கள்.

27. நேமி - சக்கராயுதம். தேத்தடை - தேன் இருல்.

28. நிரந்தரித்தன - எப்பொழுதும் உள்ளன.

30. குரல் - கதிர்.

33. முச்சுடர் - சோமசூரியாக்கினி. தவாத - நீங்காத. திமிரம் - இருள். வதனம் - முகம். தகைதலின் - நெருங்குதலின்.

34. மலர்ப் பகழி - மலர் அம்பு. கழைச்சிலை - கரும்புவில். ஓதி - கூந்தல். துடியடி - உடுக்கை போன்ற கால். தோட்டி - அங்குசம்.

35. மதவேள் கவிகை - சந்திரன்.

36. சைவலம் - பாசி.

37. பாடலம் - பாதிரி.

41. குறங்கு - தொடை.

42. மூரல் - பற்கள். தளவம் - முல்லை. செயலை - அசோகு. ஆவநாழிகை - அம்பறுத்தூணி.

46. பிரமரம் - வண்டு.

56. மாசை - பொன்.

57. காந்து ஆர் அழற்கு உணவு ஆனோன் - மன்மதன். காழ்பகை - வயிரம் பற்றிய பகை. பொருவான் - போர்செய்யும் பொருட்டு. பாசறை - படைவீடு. பூத்தகொக்கு - மாமரம்.

60. அம் கலுழ் - அழகு கசிந்தூறும்.

61. தினகரன் - சூரியன். விண் - விண்ணோர். மறுகிய - துன்புற்ற.

62. வறங்கூர்ந்தவன் - தரித்திரன். மாந்த - உண்ண.

63. கைக்கிளை - ஒருதலைக்காமம். நுதல் - நெற்றி.

64. மை - கருமை.

65. ஓதி - கூந்தல். நீவி - தடவி. ஆதரம் - விருப்பம்.

66. விரைத்த - வாசனையையுடைய. இரைத்து - ஒலித்து. முன்னினான் - திருவுளத்தடக்கினான்.

67. பொருப்பின் வளர்கொடி - பார்வதிதேவி. ஒற்றித்து நிற்றல் - மாதிருக்கும் பாதியனாய் நிற்றல். விலங்கல் - மலை. பசுங்கொம்பு - வள்ளியம்மையார்.

69. ஆரா - தெவிட்டாத.

70. பின்னவன் - முருகவேள். தோடு - பூவிதழ். உமை கை கூடிய கிள்ளை.

71. மறி - மான்.

72. மகன்றிலில்: இல் உவமவுருபு. தண்டாது - நீங்காது.

74. அளி - வண்டு. அழுங்கல் - துன்புறல். சமழ்ப்ப - நாண.

75. முறி - தளிர்.

76. உரகம் - பாம்பு. சூல் - கர்ப்பம். கிற்பு ஆற்றின் - நிற்றலைப் பொருந்தினால். என் நீர்க்கு - என்தன்மைக்கு. செயிர் - குற்றம். சேக்கும் - தங்கும்.

78. இடைந்து - தோற்று. எருத்தம் - பிடரி. பிறக்கிட்டு - பின்னிட்டு; அதாவது திரும்பித் திரும்பிப் பார்த்து. அயனூர்தி - அன்னம். செங்கோல் பொருத்து அத்தன் - இந்திரன். ஊர்தி - ஈண்டு ஐராவதம்.

79. மாந்தும் - குடிக்கும்.

82. கூம்பிய - குவிந்த. கோட்டிய - வளைந்த. தேம்பிய - வருந்திய. காம்பு இயல் - மூங்கிலை ஒத்த. செத்தால் - ஒத்தால், அறிந்தால்.

83. அரி - சிங்கம். கரி - யானை. சிந்தி - அழித்து. குழைத்திட்ட - குழையும்படி செய்த. பொருவரும் - ஒப்பற்ற. விழி தாங்களும் ஒன்றெனப் புக்குழன்று இயம்பின.

85. வாளாங்கு - சும்மா இருத்தல். அளித்தாள்வயின் - அளித்தாளிடத்து. சேறும் - செல்லுதும்.

86. முலையானை - முலையாகிய யானையை. கந்து - கட்டுத் தறி. யாப்பை - கட்டுவாய். காவியின் இன் உவம உருபு. செந்தார்ப் பசுங்கிளி முரண்தொடை.

87. புலம்பிய - தனித்த. கவலுங்கொல் - கவலைப்படுமோ. தேம்புதல் - புலர்தல், வருந்துதல்.

88. பையுள் - துன்பம். காமர் - அழகிய - கூம்பா - சுருங்காத. உரு முழுதாய் அளி சுரக்கின்றது என்க.

90. விளக்கு, தோட்டி, கயல், ஆடி, முழவு, கவரி, கும்பம், கொடி இவை எண்மங்கலப்பொருள்கள். இதனை, "செங்கயலிரட்டைதிரு வார்சுடர் கணுடி, பொங்கு கொடி வார்முரசந் தோட்டிபுணர் கும்பம், மங்கலங்களெட்டும்" (சீவக - 2487) என்பது பார்க்க. "சாமரை தீபந் தமனியப் பொற்குடங், காமர் கயலி ணிணைமுதலாத் - தேமருவு, கண்ணுடி தோட்டி கதலிகை வெண்முரசம், எண்ணிய மங்கலங்க ளெட்டு" எனவும், "பரந்தொளி யுமிழும் பைம்பொற் கண்ணடி பதாகை தோட்டி, விரிந்திருண் மேயுஞ் செம்பொன் விளக்குவெண் முரசு கும்பஞ், சுரந்தவெண் மதியைச் சூன்று கதிர்கொண்டு தொகுத்த போலும், பொருந்துபொற் கதிர்பெய் கற்றை புணர்கயல் போந்தவன்றே" எனவும் வருவன காண்க. உரு, நுதல், விழி, கொடிறு, தோள், ஆரத்திரள், முலை, மயிரொழுக்கு இவைகளை அட்டமங்கலப் பொருளாகக்கூறிய நயம் கருதத்தக்கது.

91. நந்த - ஆக்கம் மிக. நளி - பெருமை. நுதல் - நெற்றி. ஓதி - கூந்தல். கோமளம் - அழகு.

92. இடைச்சீயம் - இடையாகிய சிங்கத்தை. நலியும் - வருத்தும். உவா மருப்பு - யானைக்கொம்பு. வயம் - வெற்றி.

98. வளி - காற்று. மாடு - பக்கம், சிகரி - மலை. அளி - வண்டு, கருணை.

101. முருகு - தேன், வாசனை. தாமரைமாதர் - செந்தாமரையில் உள்ள திருமகளும் வெண்டாமரையில் உள்ள கலைமகளும், முன்னோன் - சிவபிரான். எச்ச - குறைபட. உடங்கு அமர்வேன் - ஒருசேரப் பொருந்துவேன்.

102. முதலடி முரண்டொடை. புகுதக - புகுதுக.

103. திரை - அலை. நாப்பண் - நடுவிடம். உம்பரை - தேவரை. உம்பல் - யானை. உலவை - காற்று. மாழ்குதும் - வருந்துதும், மயங்குதும்.

104. கலன் - மரக்கலம். கையறை - செயலறுதல்.

107. பரிவு - வருத்தம்.

108. பவ்வம் - கடல். அயிர்ப்புறும் - ஐயப்படும்.

111. பணை - கிளை. பராரை - பருத்த அடிமரம்.

114. நாடு முன் - ஆராய்வதன் முன்னரே.

117. அலத்தகம் - செம்பஞ்சுக்குழம்பு.

118. தீர முன்னலள் - நீங்க எண்ணிலள். விம்மிதம் - அதிசயம், வியப்பு. கணி - வேங்கை.

119. கேழ்த்த பூவைகள் - நிறம்பொருந்திய நாகணவாய்ப் புட்கள்.

120. சாகை - கிளை. தைவர - தடவ. மேவர - பொருந்த.

123. இகந்து - நீங்கி. களைகண் - பற்றுக்கோடு.

124. சிலை நேர - வில்லையொத்து வளைய. நால - தொங்க. ஒசிந்து - அசைந்து.

125. கவுள் - கன்னம். தூங்க - தொங்க. தட்ப - தடை செய்ய. கரன் - கை. குலைகுலைப்ப - நடுநடுங்க.

126. கொளாத பண்பு - கேளாத தன்மையை.

127. மேதினி அளப்பவரின் - தரையை அளப்பவர்போல; இன் உவமவுருபு.

128. மன்றல் - வாசனை. வரையாள்வோன் - வேடர் தலைவன்.

129. விரைக்கும் - மணம்வீசும். மணி நீர் - நீலமணி போலும் தெளிந்த நீர். உரைக்கண் அயிராது - சொல்லி னிடத்து ஐயங்கொள்ளாமல்.

130. முதுக்குறைவு - அறிவு. கணியின் - வேங்கைமரம் போல. மது குவளை - தேனையுடைய குவளை மலர்.

131. இங்கு அணவினர்.

134. வீங்கு உயிர் - மிக்க உயிர்ப்பு, பெருமூச்சு. விரி வாயின் உயிர் காலும் - அங்காந்த வாயினால் மூச்சை விடுவான். தொடை - மாலை. தாங்கரிது அகரஈறு தொகுத்தல். ஓங்கு பசியேன் - மிக்க பசியினையுடையேன்.

135. கேழ்த்த - நிறம்பொருந்திய. மிசைந்தான் - உண் டான். பழங்கண் - துன்பம்.

136. இகந்து - நீங்கி. தணிகென்ன: தொகுத்தல். மை புறவு அ(ன்)னாய் - கரிய புறவை ஒத்தவளே.

137- துளும்பும் - அலையும். முன்னி - கருதி. வறிது - வீணாக. கூறிவிடல் வியங்கோள். உவளகம் அடுப்பது என. உவளகம் - அந்தப்புரம்.

138. நிச்சமும் - நாடோறும்; நித்தம் என்க. நச்சி விரும்பி. நளினம் - தாமரை. துய்த்தான் - பருகினான்.

139. வளப்பம் பொருந்திய நீண்ட சுனை. உளம் நின்மேல் கடிது முந்தியது.

140. உலையும் - வருந்தும். அறம் தலை பிறழ்ந்த - தருமப் பயன் மாறுபட்ட. விஞ்சு - மேம்பட்ட.

141. காது பழி - மோதுகின்ற பழி. அயிர்க்கும் - சந்தே கிக்கும்.

142. ஆய்தவடிவு - ஆய்த எழுத்துப்போன்ற வடிவு. அவிரும் - விளங்கும். எள்ளும் - இகழும். வான் பழி - பெரிய பழி; மிக்கபழி என்க.

143. நாவினை ஒறுத்தலாவது துண்டித்தலாம். புரைத்த - குற்றத்தையுடைய. சூன்றிடுவல் - தோண்டுவேன். விரைத்து - விரைவாகவே. இசை - புகழ். இன்னே - இப்பொழுதே.

144. அரி - சிங்கம். புல் நரி - அற்பமாகிய நரி. "விசையின், நரிமா வுளங்கிழித்த அம்பினில் தீதோ, அரிமாப் பிழைப் பெய்த கோல்" என்னும் நாலடிநானூற்றுச் செய்யுளையும், "கான முயலெய்த அம்பினில் யானை, பிழைத்தவேல் ஏந்தல் இனிது" என்னும் திருக்குறளையும் நோக்குக.

147. வில் தரளம் - ஒளியையுடைய முத்து. உரைதள்ள - உரைதடுமாற.

149. பொதுளி - நிறைந்து. அற்பு இல் வெகுளி - அன்பு இல்லாத கோபம்.

150. இனைந்து உகும் - வருந்தி அழியும். ஆராத இன்பம் - தெவிட்டாத இன்பம்.

151. ஆவச்சகாயன் - விநாயகக்கடவுள் திருநாமம்.

152. குழவியின்: இன் உவமவுருபு. ஆட்டு அயர்கால் - திருவிளையாடல் புரியுமகாலத்து. குறைவு இலை. கொற்றம் - வெற்றி. பீழை - துன்பம். வறிது அமர் ஞான்று - சும்மா இருக்கும்போது. ஞான்று - பொழுது. ஏந்து இலை வேல்.

153. முருக்கி - அழித்து. எறும் நலம் - வலி நலம். ஒரீஇ - நீங்கி. மா வரை - விலங்குகள் தங்கும் மலையினிடத்து. மா - விலங்கு; பெருமை எனினுமாம். அம் சால் மடக்கொடி - அழகினாலே சான்ற மடக்கொடி. மடக்கொடி - தலைவி.

154. கழறல் - இடித்துரைத்தல். நாதன் - சிவபிரான். அளப்பான் - அளக்கும்பொருட்டு: பானீற்று வினையெச்சம். நாப்பண் - நடுவிலே. புன்குடி என்றது வேடர்குலத்தை. அரும் பொன்று பூங்கொடி நயம். முலை அரும்பு பண்புத்தொகை.

அஞர் செய்ய - துன்பம் விளைக்க. பூங்கொடி நாதன் நட்ட துரும்புகொல்லோ எனக் கூட்டுக.

155. கொண்டார் - கணவர். கண்டாய் அ(ல்)லை. வாய்மை - உண்மையை, என் சொல்லை.

156. அடர் - வருத்துகின்ற. எண்ணலர் வினையாலணையும் பெயர். அண்டர் - தேவர்.

157. மிடல் - வலிமை. ஆரும் - உண்ணும். நின்னின்: இன் உவமவுருபு. அடல் - வலிமை; ஈண்டுக் கொல்லுந்தன்மை என்க.

158. தோளி விழியன்றி உயிர் காப்பது எவ்வாறு? என்க.

160. ஆலம் - நஞ்சு; ஆலகாலவிடம். அடற்கு - கொல்லுதற்கு. உடைவது - மனமுடைவது.

161. கிளி ஓப்பும் - கிளியை ஓட்டும்.

163. முதுக்குறைவு - பேரறிவு. முன்னி - கருதி.

164. தரங்கம் - அலை. விம்மாந்து - கலங்கி. விழுவோரின்: இன் உவமவுருபு. அயில் வேல் - கூரிய வேல்.

165. சுணங்கு - தேமல். தனவ - தன்னுடையன. எனவ - என்னுடையன. நீர்மை - தன்மை. நெடு வதி - நெடுந்தூரம்.

166. தன்னமும் - சிறிதும். முற்றுவரேல் - செய்து முடிப்பாராயின். முயலின் - முயற்சித்தால். மரு வாய் - மணம் பொருந்திய. வல்லை இயைப்பல் - விரைந்து கூட்டுவிப்பேன். குரு - நிறம். மயிலினை என்றது தலைவியை.

168. நெஞ்சே அலையாதி. பாணித்தல் - தாமதித்தல்.

169. வாள் நுதல் - ஒளியையுடைய நெற்றி. நயனம் - கண். கோடு - கொம்பு; மலையுமாம். புழைக்கை - துதிக்கை. கவான் கடுக்கும் - துடையையொக்கும். வை வேல் - கூரியவேல்.

170. மாயத்தின் - மாயவித்தையினால். அமலும் - நெருங்கும். ஆயத்தில் - மகளிர் கூட்டத்தில். வண்டல் - விளையாட்டு. தோயம் - நீர்; கங்கை. சூழ்குதும் - தியானிப்போம்.

171. வதனம் - முகம். கூந்தல் வேழம், வதனம் குடை, விழி துவசம், புயம சிலை, முலை வாளி, அல்குல் முரசு, இடை மாரன் என்க. மன்மதனுக்கு வேழம் இருள், குடை சந்திரன், துவசம் மீனம், சிலை கரும்பு, வாளி தாமரையரும்பு, முரசு கடல் என்பது. மாரன் உருவிலியாகலின் உண்டோ இல்லையோ என இடை ஐயந்தாநின்றதாம். உடற்ற - வருத்த. பொருவான் - போர்செய்யும்பொருட்டு. வேடர் அறியாராய்ப் புதல்வியைப் போலப் போற்றினர் என்க.

173. அறியாமையால் அந்தோ வீணே கழறினம். மான்றாய் - மயங்கினாய். கான்றாய் - வெளிப்படுத்தினாய். கழறினம் - இகழ்ந்துரைத்தேம்; இடித்துரைத்தேம் எனினுமாம்.

174. பரிந்து - விரும்பி. அடல் இபம் - வலிய யானை. தறுகண் - அஞ்சாமை. மா வேழம் - பெரிய யானை.

175. கலுழி - கலங்கல்நீர். உலம் - திரண்ட கல்.

176. பொள்ளென - விரைவாக. வெகுளி - கோபம். நாம் - அச்சம். இரியல் - கெட்டோடுதல். காமர் - விருப்பம். முன் உருவன் ஆகி - முன்னேகொண்ட வடிவத்தையுடையவனாய். காமர் முன் உருவனாகி - மன்மதனுடைய முன்னைய வடிவத்தை யுடையவனாகி; சிவபெருமானால் நீறுக்கப்படுவதன்முன்னுள்ள வடிவினனாய் என்றபடி. காமர் - மன்மதன். விலங்கி - விலகி, குறுகிட்டு.

177. குஞ்சரம் - யானை. மேக்கது ஆக்கி - மேலாக்கி. வேட மஞ்சனை - வேடமைந்தனை. தெய்வவேழம் - யானை வடிவில் வந்த விநாயகக்கடவுள்.

178. வண்மையினாலும் - வள்ளற்றன்மையினாலும். கடவுள் எம்பெருமான்: பண்புத்தொகை.

179. நஞ்சு - ஆலகாலம். அட எழுதலோடும் - கொல்லுமாறு பொங்கியெழுதலோடும். கை அமைத்த ஞான்றே - அபயக்

தந்த பொழுதிலேயே. துஞ்சிய கவலை - நீங்கிய கவலை. தோன்றல் - முருகவேள். கூர் பரிவு - மிக்க துன்பம்.

181. பொதும்பர் - சோலை.

182. சிலைப்புருவம்: பண்புத்தொகை. திதலை - தேமல். தோகை: விளி. அணங்கும் - வருத்தமும்.

183. கயந்தலைக்கு உம்பல். வயம் - வெற்றி. பயம் - பால். பணிலம் - பாஞ்சசன்னியம். நளினம் கையேந்தி என்றது திருமகளை. நளினம் - தாமரை.

184. விருந்து - புதிது. அயில் - வேல்.

185. உஞற்று - செய்த. கேண்மை - நட்பு.

188. ஆர - மிகுதியாக. முழவ இயம் - முழவமாகிய வாத்தியம். ஏங்கும் - ஒலிசெய்யும். வயம் - வெற்றி. உயிர்மாது - உயிர்ப்பாங்கி. பயம் - பிரயோசனம்.

190. கேழ் - ஒளி. அளகம் - கூந்தல். கடுப்ப: உவமவுருபு.

192. கடியும் - ஓட்டும். தொடித்தோளையும் துவர்போன்ற வாயினையும் உடைய கிளியே. கிளி என்றது தோழியை. துவர் - பவளம்.

193. முழை - குகை. கழை - மூங்கில். கனை இருள் - மிக்க இருள்.

195. உவா - யானை. தவளத்த நீறு - வெண்மையையுடைய நீறு; "தவளத்த நீறணியும் தடந்தோளண்ணல்" (திருக்கோவையார் - 112). கடுகிய வேழம் - தாருகவன முனிவர்களால் ஏவிவிடப்பட்ட யானை.

196. உள்ளுநர் - தியானிப்போர். உள்ளக் கரிசு - மனத்திலுள்ள குற்றம்; அஞ்ஞானம். தழங்கும் - ஒலிக்கும். சரம் - அம்பு. உள்ளவாறு கூறுக என்றபடி.

197. மாழை - மாவடு, அழகு. உருமு உலை - இடியையும் கெடுக்கும். உவா - யானை. பொரும் - போரைச்செய்யும். வன்றி - பன்றி.

198. மருமம் - மார்பு. பேழ் கய வாய் - பிளந்த பெரிய வாயினையுடைய. எய்துழி - சென்ற இடத்தை. குழகற்கு - சிவபெருமானுக்கு.

199. சிலைத்து - ஒலித்து. இ சிலை - இந்த மலையில்.

201. மறியும் - மானும். மறியும் - பிறழும்.

202. பல்ல கடா - பலபடியான வினாக்கள். விடை - மறு மொழி. கடாவிடை என்பன ஒரு நயம்.

203. எக்கலைக்கும் - எந்த நூலுக்கும்.

206. வளை - சங்கம். துவர் - பவளம். தட உரம் - விசால மான மார்பு.

207. தண்டலை - சோலை. தரளம் - முத்து. வண்டலின் ஆட்டு - மகளிர் விளையாட்டு. வீழாள் - விரும்பிலள். கோளும் - கொள்கையும்.

208. வல்சி - உணவு.

211. வேறுகண் - வேறிடம்.

219. முருகு - வாசனை. தூசு - ஆடை. மலைத்தலை - மலையினிடத்து; தலை ஏழனுருபு. காமர் - அழகு.

220. மயூரபதம், உற்பலம் இவை நகக்குறி; பிரவாளமணி, மூடிகம் என்பன பற்குறிகள். கவுள் - கன்னம், கபோலம். வெரிந் - முதுகு. குயிற்றவற்றோ - செய்யவல்லதோ. மயிலடி என்றது மயூரபதத்தை; மணிகள் என்றது பிரவாளமணி, மணி பிந்துமாலை முதலியவற்றை என்க. இவற்றை விரிந்தநூல்களிற் காண்க.

221. மணம் - வாசனை. கேழ் - நிறம், ஒளி. வரை வளர் அணங்கு - வரையரமகளிர். அணங்கு - தெய்வப்பெண். நிழற்ற - நிழலைச்செய்ய. கதித்த - தோன்றிய.

222. நிறத்து - மார்பினிடத்து. நிழல் சுழித்து - நிழலைக் கோபித்து. வேல் திரித்து - வேலைச்சுழற்றி. வரைவாய் - வரையி னிடத்து.

223. அ நீர் என - அத்தன்மைபோல. முந்நீர் - கடல். முறுவல் - பல்.

224. கழை - மூங்கில். இடுகோ - இடட்டுமா. பெயர்க்கோ - பெயர்க்கட்டுமா. வாளாங்கு - சும்மா. அமைகோ - இருக்கட்டுமா. குழை - ஒருவகைக்காதணி.

225. விழுமிது - மேம்பாடுடையது. மாண்ட - மாட்சிமைப் பட்ட. குரையா - முழக்கம்செய்து. கலவு - பொருந்தும். குறிப் பது அன்று - கருதத்தக்கதல்ல. மும்மை வேயகத்தோரும் - சுவர்க்க மத்திய பாதல உலகத்தாரும.

226. முன்னும் - கருதும்; திருவுளத்தடைக்கும் என்க. வருமாது - உமாதேவியார்.

227. கோல் தொடி - வளைந்த தொடியினையுடையாள்: அன்மொழித்தொகை. குன்று இறகு ஈர்த்தவன் - இந்திரன். ஈர்த்தல் - அறுத்தல். குன்றுவ - குறைபடுவ. புன்சொல் - இழிந்தசொல்.

வன்றொடர்க் குற்றியலுகரமானது வல்லொற்றை முதலில் உடைய மொழியுடன் புணரும்போது தனக்குள்ள அரை மாத்திரையிற் குறுகும். உதாரணம் செக்குக்கணை.

228. அயர்வினை எய்தாது - சோர்வடையாமல். மயர் வினை - மயக்கத்துக்கு ஏதுவாகிய வினை. நுமகுலம் என்றும் உயர்வினையே உறுவது. பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லை யும் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் சேரின் எவ்விடத்தும் அயர்வினை யெய்தாது இயலாநிற்கும.

229. கலைத்துறை - கலைகளின் துறைகள். காமர் - அழகிய. சிலைத்துறை - வில்வித்தையின் துறைகள். மலைத்துறை - குறிஞ்சியொழுக்கம்; என்பது புணர்தலும் புணர்தல் நிமித்த மும். மலர்க்கரன் என்றது தலைவனை.

230. திதலை - தேமல். பூண்முலையாய் என்றது தோழியை. நைய - வருந்த. மன்றல் - மணம். வாஞ்சை - விருப்பம். பூண் - அணிகலம.

231. கண்ணும் கருத்தும். கண்ணும் - கருதும், கருத்த: விளி. இயல்வகை கலந்தது ஒப்பாம்.

232. 'நினைப்பித்து அடுத்து அருள் நிமலன்' என்றது முத்திக்கால நிலையை. மற்றும், 'முனைப்பித்து உயிர்வழி நின்றது' என்றது பெத்தநிலையில் என்க. எப்படியெனில்? ஞானக்கண்ணால் காணப்பட்ட அம்முதல்வன் தான் உடனாய் நின்று அறியவும் வேறு காணப்படுமாறு இன்றி யானே அறிந்தேன் என்னும்படி உயிர்தானேயாய் ஒற்றுமைப்பட்டு உயிரின் வழி நிற்பது பெத்தநிலையில். முத்திநிலைக்கண் உயிர் அம்முதல்வனோடு உடனாய்நின்று அறியினும் தானென வேறு காணப்படுமாறின்றி அவனோடு ஒற்றுமைப்பட்டு நிற்றலாம். மற்று: வினைமாற்று. "அவனே தானே யாகிய வந்நெறி, ஏகனாகி" என்ற பத்தாம் சூத்திரப்பொருளை இது நினைவூட்டுதல் காண்க. பித்து - மயல்; பித்தின்: இன் நீக்கப்பொருள். மாதர்நல்லாள் - தலைவி. பித்திகைக்குழலாய் என்றது தோழியை. பித்திகை - சிறுசண்பகப்பூ.

233. "இ ஈ ஐ வழி யவ்வும்" (நன் - 162 சூ). உடம்படு மெய்; "உடன்மே லுயிர்வந் தொன்றுவ" (நன் - 204) இயல்பு புணர்ச்சி. ஆவியும ஆவியும் - உயிரெழுத்தும் உயிரெழுத்தும். மொழிய வலித்தி - சொல்ல உடன்படுவாய்.

234. புரப்பான் - காவலன். புரை - குற்றம். கரப்பான் - ஒளிப்பான். இரப்பான் - யாசிப்பவன். பான்மையை அல்லை - தன்மையுடையையல்லை. யான்தபுக - யான் கெடுக்க. தபுதல் - நீங்குதல். துரப்பான் புகும்நெறி - நீக்குதற்பொருட்டுச் செல்லும் வழி. உலகம் என்னும் என்றது அழிந்துபடும் என்றவாறு. 'காவலன் காவானெனின்' (குறள் 560) என்றமை காண்க. "இரக்க இரத்தக்கார்க் காணில் கரப்பின், அவர்பழி தம்பழி யன்று" (குறள் - 1051). மற்று வினைமாற்றின்கண் வந்தது.

235. புரிகலர் - விரும்பார்; புரிவு - விருப்பம். கொடியார் - கொடியவர்.

236. மா, அத்தி, வேங்கை என்பன மரப்பெயர்கள். அத்தி - யானை, வேங்கை - புலி. மா - மான், பன்றி. ஏ - அம்பு. தவர் - வில். மாய்த்து எனது அங்கை. மாய்த்து - மறைத்து.

அமர்த்த - போரைச்செய்கின்ற. படை - வாள் வேல் முதலியன. வேய் - மூங்கில்.

237. தணியா - குறைபடாத. மிருகம் எய்தீர். பிணி யாம் உழந்து. பிணி - துன்பம். விழை அணி ஆம் - விரும்பும் அணியாகிய. மிருகம் என்றமையால் மான் என்க. அன்றியும், யானைத்தோல் புலித்தோல் முதலியவற்றைக்கருதின் அத்தியும் வேங்கையுமாம்.

238. குலம் - கூட்டம். எஞ்சா - குறைபடாத. என்னெஞ்சு உருக. கடவிய - செலுத்திய. கண்களாகிய படை: பண்புத் தொகை. பல்லவம் - தளிர். உயிர் பருக - உயிரையுண்ண. கடுகிய - விரைந்த. மா - விலங்கு.

259. வைத்தார்கள் தங்கை. காப்பான் - காக்கும்பொருட்டு: பானீற்று வினையெச்சம். வாட்டுகிற்பாள் - வாட்டுவாள்; கில்; ஆற்றலுணர்த்தும் இடைச்சொல். சிலைத்தொழில் தோள் மெலிவு - விற்றொழில் வன்மையையுடைய தோளின் மெலிவு. ஓர்ந்து - ஆராய்ந்தறிந்து.

240. கடம் கலுழ் - மதசலம் ஒழுகும். வேழம் - யானை. துமிக்கும் - அழிக்கும். மடங்கல் - சிங்கம். தோற்றம் உறினும் - பிறந்தாலும். மன்ற - மிகுதியாக. படம் கிளர் அல்குல்: அன் மொழித்தொகை. என் நோய் அறிந்து ஓம்பும். ஓம்பும் - பாது காக்கும். பரிசினள் - தன்மையையுடையாள்.

241. பைதிரம் வளர் கார் அனைய கரத்தாய். பைதிரம் - காடு. கார் - மேகம். கரம் - கை. வேட்டு - விரும்பி. இளம் பூவினையுடைய அரம்பையை. அரம்பை - வாழை. அடுக்கம் - மலை. கொம்பு - தலைவி. வரம்பை இகந்து - வரம்பைக்கடந்து. பிள்ளைமை - குழவித்தன்மை. வயங்கு அரி கண்கள் மலர்ந்தில. அரி - செவ்வரி. குறிச்சியிற் குரம்பை - மலைநாட்டகத்தூரி லுள்ள சிறு குடிசை,

242. உயிர் ஞான்றே - உயிர்க்கும்ஞான்றே; பிறக்கின்ற பொழுதே. உயிர்த்தல் - பெறுதல், ஈனுதல். ஞான்று - பொழுது. மடங்கல் - சிங்கம். மடங்கலாகிய ஒண்மா என்க.

குழவி - குட்டி. வேழம் - யானை. அயில்கோட்டு - கூரிய கொம்பினது. முருந்து - ஈண்டுக் குருத்தின்மேற்று. களையும்பொருட்டென்க. என் உயிர்க்கு ஆர் அணங்கு - என்னுடைய உயிருக்கு மிக்க நோயைச் செய்பவள்.

243. தளவு - முல்லை. தவளத்த - வெண்ணிறமுடைய. மதியப்பிளவு - பிறைச்சந்திரன். விழைவினது அளவை. விழைவு - விருப்பம்.

244. பலாவம்பொழில் - அழகிய பலாச்சோலை. மயில் முட்டையிட்டுப் பொரித்துழி முதற்பார்ப்பின் கலாபத்துப் பீலி பொன்னிறம் படர்தலானும், ஏனையவற்றிற்கு அங்ஙனம் அன்மையானும் அங்ஙனம் கூறினர். இனி, முதற்பார்ப்பினுக்குச் சுடிகை தோன்றுமை ஏனையவற்றிற்கு உளவாகாமையானும் என்பாரும் உளர். "மயின்முறைக் குலத்துரிமையை மனு முதன் மரபைச் செயிருறப் புலைச் சிந்தையால் என்சொனய் தீயோய்" என்னும் கம்பராமாயணச் (அயோத்தி - மந்தரைசூழ்ச்சி - 64) செய்யுளானும் உணர்க.

245. வான் - ஆகாயம். மயர் கூர்ந்த - மயக்கமிக்க. துவர - முற்றும்.

246. கந்து - தூண்; யானைகட்டும் தறி எனலுமாம். நகிலாகிய யானையினைக் கட்டுதற்கு உரியதாகலின் கந்து எனப்பட்டது.

247. வில்லினர் அம்பினர் விளைவினர் சொல்லினர் என்பன முற்றெச்சங்கள். சொல்லினராய்த் தோற்றுவர் என முடிக்க. என்னில்: இல் உவமவுருபு. புல்லுதல் - தழுவுதல்; புல்லினர் - தழுவினோர்; பொருந்தினோர் என்க.

248. பெட்டு இகவு இன்றி. பெட்டு - விரும்பி. இகவு - நீங்குதல். கறங்குதி - சுழல்கின்றாய். வெஃகி - விரும்பி. முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டதுபோல என்பது பழமொழி.

249. கன்னல் - கரும்பு. வாளி - அம்பு. நென்னல் - நேற்று. இளிமொழியாய் என்றது பாங்கியை. மென்கொடி என்றது தலைவியை.

250. அடைச்சி - நெருங்கி. சிந்தா ஆகுலம் - மன வருத்தம். இரங்கேற்கு: வினையாலணையும் பெயர். ஆங்கு அகன்றவள்; தலைவி: வினையாலணையும் பெயர். தணப்பரிது - நீங்குதலின்று.

251. வம் - வா. தம் - தா. ஓ, ஓர் என்பன அசைகள்.

252. எறுழ் - வலிமை.

253. வள்ளை - வள்ளைத்தண்டு. அளி - வண்டு. கணி - வேங்கை. மதி முகம், வள்ளை காது, குவடு நகில், கடல் அல்குல்.

254. சவி - ஒளி. மோலி - கிரீடம். எம்மாது கலப்பின்றி ஊசலும் பந்தும் நீர்நிலையும் காவும் அழகுபெறு என்க.

255. உழப்போர் - முயல்வோர். கடுப்ப - ஒப்ப. பிணைந்த உள்ளம் வருந்த. தாமரைமாது - இலக்குமி; என்றது தலைவியை. மம்மர் - மயக்கம். மம்மர்நோய் பொருந்த வந்து ஈர்த்து என்னை ஓம்புறும் வாயில். ஓம்புறும் - பாதுகாக்கும். புனமயில் என்றது தோழியை.

256. வருக்கை - பலா. புதல்வியரேம்: வினையாலணையும் பெயர். அயர்ந்தாம் - மறந்தோம். புயத்து ஏர்.

257. முத்து உக - முத்துப்போலும் நீரைச்சிந்த. மூரல் - பல். தோரை என்பது ஒருவகைநெல் என்பர் நச்சினார்க்கினியர்.

258. தண்டலை - சோலை. வான் அரா; அரா அர எனக் குறுகி நின்றது. புண் - ஊன். பொறி - குருதிக்கறை. தும்மு - நிறைந்த.

259. பின்னர் மாறி நிற்றல் என்றது பதி பசு பாசமாக நிற்றலை. பாசம் முற்படப் புலப்பட்டும், பசு அதனால் தொழிற் பட்டும், பதி தொழிற்படுத்தியும் நிற்கும் நிலையாகிய பெத்த காலத்தினின்றும் மாறி, ஆணவவலி குன்றிய ஆன்மா தற் போதம்கெட்டுச் சிவபோதம்மேலிட்ட அவதரத்துப் பரமுத்தி யில் சிவானந்தாநுபவ நிலையில் உறைத்து நிற்கச் செய்தல். இதனை, "பதிபசு பாசத்தைப் பாசம் பசுபதி யாக்கி யொரீஇப், பதிபசுவாகப் பசுபதியாக்கிப் பின்னும் பயிற்றிப், பதியெனத்

தானுய்ப் பயிலுந் திருவா வடுதுறைசைப், பதிவளர் பஞ்சாக் கரவனை யென்சொலிப் பாடுதுமே'' என்னும் பஞ்சாக்கரதேசிகர் அந்தாதிச் செய்யுளானும் உணர்க.

260. முருந்து - குருத்து. முறுவல் - பல். செவ்வாய்: அன் மொழித்தொகை. எஞ்சாத இடும்பையை எளிதாக ஒழிப்பார்.

261. ஆவி நைய - உயிர் வருந்த. ஒன்பானுயிர்பெற்ற பெண் என்றது ஒரு நயம்.

262. கவளத்த வேழம் - கவளத்தையுடைய யானை. கடவுள் - சிவபெருமான். விழை - விரும்பும். தவளத்த நீறு - வெண்மையையுடைய நீறு. 'தவளத்த நீறு' 'கவளத்த யானை' என்பன பன்மையொருமை மயக்கம் என்றார் பேராசிரியர் (திருக்கோ - 112 செ). நீறு(ம்) என்பு(ம்) எருக்கும் தரித்து. மடல் மா - பனைமடலால் செய்யப்பட்ட குதிரை. முற்பட்ட நட்புடைய தலைவியைப் பின்னர்ப் பெறுதற்கு இயலாவிடின் அவள் உருவத்தையும், தன் உருவத்தையும், இருவர் பெயரை யும் ஒருபடத்தில் எழுதுவித்துப் பனைமடலாற்செய்த ஒரு குதிரையின் மேலேறிப் புனைவன புனைந்துகொண்டு தலைவன் வீதியில் ஊர்ந்து வருதல் ஒருசாரார் கொள்கையென்றும் அதனைக்கண்ட பெரியோர் உண்மையுணர்ந்து அவ்விருவருக் கும் மணம் செய்விப்பர் என்றும் கூறுவர்.

263. கலை முற்றும் - நூல் முழுவதும். வையத்து - உல கத்து. பொன் - பொன்போலும் நிறத்தினையுடைய தேமல். வீழ்ந்து - விரும்பி. சிலை - வில். வார்மடல் முரித்து அணியின் திருந்து அறன் யார்கண்ணது ஆகும்.

264. அருளும் நலனும் மருளும் எலாம் பண்டு அறிவுடை யேன். பண்டு - தலைநாட்புணர்ச்சியில். இருளும் மருளும் - இருளும் மயக்கும். இருளும்; உம்மை உயர்வு சிறப்பு. இணர் - பூங்கொத்து. கூந்தலையும் தொடியையுமுடைய கண்பொருட்டு. சிதாரிக் கண்ணிணையுடையாள்: அன்மொழித்தொகை. வாணு தல் என்றது தோழியை. கண்ணிணையுடையாள் தலைவி.

265. பொற்ப - அழகாக. எழில் - அழகு. இன்பம் மிக்கு ஆம் தொழில். வல்லையேல் - வலியுடையையாயின. துனையப் புகுக - விரைந்து செல்லுக. நாடி வரைந்து - ஆராய்ந்தெழுதி.

266. நவை அவம் கட்ட - குற்றத்தையும் வீண்செயலையும் அழித்த. நளி - பெருமை. கட்டழகு ஆர - பேரழகு மிக. காணிய - காணும்பொருட்டு. ஆவியும் தோற்ற வல்லேன் - உயிரை உண்டுபண்ணும் வலியுடையேன். கருத்து உறின் வல்லேன் என்க.

267. உரு தக ஆக்கி - வடிவத்தைத் தக்கவாறு அமைத்து. உயிரும்: உம் உயர்வுசிறப்பு. வல்லின் - வன்மையுளதாயின். மாதே என - தலைவியைப்போன்று. அமையாது - அமைதி பெறுமல்.

268. முள் தாள் கமலம் - முளபொருந்திய தண்டினை யுடைய தாமரை. முதல்வன் - பிரமதேவன். முன்னினைகொல் - நினைந்தனைபோலும். அலங்கல் - மாலை. கருமால் - கரியவிட்டுணு.

269. அணங்கு அனையாள். உளத்து ஆதரவு - மன விருப்பை. சொல்லவல்லேன் - சொல்லும் வல்லமையில்லேன். ஒன்ற - பொருந்துமாறு.

270. திருகிய ஆவி - மாறுபட்ட உயிர். இருள் வழி - ஆணவத்தின் வழியே; பாசத்தின்வழியே என்றபடி; இது பெத்தகாலத்தில். செறிந்த இருள் அருகிய - நிறைந்த ஆணவம் வலிகெடும்படி; அருகிய - அருக. உடங்கு பெயர்குவள் - ஒருசேரப் பெயர்வாள். காதன்மை - அன்பின் தன்மை.

271. மூரிச்சிலை - வலியவில். ஆற்ற - மிகுதியாக. கவற்றுவது - கவலச்செய்வது. அ கா அலர் இங்கு ஆ வரு தோற்றம் என்க. மூவரும் யாவரும் என்பன முற்றும்மைகள்.

272. நென்னல் வாய் - நேற்றைப்பொழுது; நெருநல் என்பது நென்னல் என மருவியது. கண்ணுய் என்றது தலைவியை. புயம் ஆர்தர அண்மி புல்லினர். அண்மி - நெருங்கி. புல்லினர் - புணர்ந்தார். துருவுநர்போல் - தேடுபவர்போல. கயம் - குளம். மாமலர் - கருங்குவளை மலர். வன்சொலில்போக்க - வன்சொற்களைச் சொல்லி அகற்ற. இன்றும்: இறந்துதழீஇய எச்சவும்மை. பயம் ஆர் பொழில் - பயன் நிறைந்த சோலை. பயம் - நீர்; ஆகுபெயரால் மேகமெனினும் பொருந்தும்.

273. குஞ்சரம் - ஆண் யானை. கடி - வாசனை. கடைக் கணித்து - கடைக்கண்ணோக்குச் செய்து; அருள்செய்து என்றபடி. அடி - பாதம்.

274. பெண்ணை - பனை. மடல் நோக்கும். விழையகிலா - விரும்பாத; இல் ஆற்றல் இடைச்சொல். முகிழ் - மொட்டு. எண் - எண்ணுதல்; ஆராய்தல். மொழியாய் என்றது தலைவியை. பாங்கி கூற்று.

275. உயங்கிய - வாடிய. புக்கு இயங்கிய. அவுணராகிய களை என்க: பண்புத்தொகை. மாய்த்து இருந்தோள் துணையா(க). மா மறை ஓம்பல் - பெருமைதங்கிய வேதவொழுக்கத்தைப் பாதுகாத்தல். மறை - களவொழுக்கம். வரைவாழ் நம்பி - முருகவேள். கான்வளர் நம்பி என்றது களவித்தலைவனை.

276. மாமலம் - கரிய ஆணவம். "இவனுலகில் இதமகிதம் செய்தவெல்லாம்...சிவனுமிவன் செய்தியெல்லாம் என்செய்தியென்றும் செய்ததெனக்கு இவனுக்குச் செய்ததென்றும், பவமகல உடனாகி நின்று கொள்வன் ... (சித்தி, பயனியல், சூத் 10, செ 1) என்பது காண்க.

277. தூங்கும் - தொங்கும். குடம்பை - கூடு. உலப்பிலது - ஒழிவிலது. தள்ளாம் கடிது எதிர்வாம். கடிது - விரைவில். நம் தளர்வினைத் தணப்பாம். தணப்பாம் - நீங்குவாம்.

278. ஆலம் கனிந்த - நஞ்சின் தன்மை முதிர்ந்த. விழியாகிய காவிகள். காவி - நீலோற்பலம். கோலம் - அழகு. தளிர் கொண்டு உளம் அளிப்பின் பழியன்று. ஆருயிர் என்றது தலைவியை.

281. அது எற்கும் தகுதியின்று.

282. உடம்பிடி - வேல். ஒலி மதுரை - தழைத்த மதுரை. வீழ்வது - விரும்புவது. அடம்பு - அடம்பமலர்.

283. மந்தாநிலம் - தென்றல். அநிலம் - காற்று. மலய வெற்பு - பொதியில். உரவோய் - வலியுடையோய், அறிவுடையோய். உரம் - வலி, அறிவு. கந்து - தூண்.

284. அடுக்க - தன்னிடத்தே வந்து பொருந்த. தனி - ஒப்பற்ற. வீசும் - வாரி வழங்கும். அண்ணல் - சிவபெருமான். பூணவன் - பூணியையுடைய தலைவன். ஒண்முலை என்றது தலைவியை: அன்மொழித்தொகை.

285. அற்பு அகத்து ஏதும் இல்லா. அற்பு - அன்பு: வலித்தல் விகாரம். அகம் - மனம். ஏதும் - சிறிதும்.

286. கோட்டிய வேழச்சிலையான் - மன்மதன். கோட்டிய - வளைத்த. வேழச்சிலை - கரும்புவில். கணை என்றது மலரம்புகளை. துயராகிய வாளி. தீட்டிய - எழுதப்பட்ட. வஞ்சிக்கு - வஞ்சிக் கொடிபோல்வாளாகிய தலைவிக்கு.

287. விரைக்கும் - வாசனைவீசும்.

288. தகவின்று இனைவதின் ஆவது என். இனைவதின் - வருந்துவதனால்.

289. முந்தை மணம் - களவொழுக்கம். தந்தை வயிற்றி னின்று தாய்வயிற்றில் கருச்சேர்தல். எடுத்துக்காட்டுவமை யணி.

290. எல்லி - சூரியன். கண்டென்ன - கண்டாற்போல. துணர்க்கரனே - பூங்கொத்தையுடைய கரத்தையுடைய தலை வனே: விளி.

292. தடித்து - மின்னல். எழிலி - மேகம். தரணி - பூமி. புரை தீர் கிளவி - குற்றமற்ற சொல்.

293. நும் புனத்து அயல் செந்நெல். கணி - வேங்கை. வீழும் உகப்பினது - விரும்பும் உயர்ச்சியையுடையது. உள்ளி - நினைந்து. வெள்ளிவரை - கயிலை.

294. கடுகிய - விரைந்துசென்ற. துயரத்தின்கண் அழுந்த. எம் கரத்து ஆக்கி. அறனோ அன்று.

295. ஆதித்தன் - சூரியன். நெகிழ்ந்தாங்கு - கட்டுவிட் டாற்போல; ஆங்கு: உவமவுருபு. துளக்கு இல் மன நல் அரும்பு. துளக்கு இல் - அசைதலில்லாத. குழைந்தன்று - குழைந்தது. புல் அரும்பு - சிறிய அரும்பு. போது - மலரும்பருவத்தரும்பு.

296. தறுகண் - அஞ்சாமை. குஞ்சரம் - யானை. ஊசலின்; இன்: உவமவுருபு. நிற்பவும் மாழ்கவும்: உம்மை எண்ணின்கண் வந்தன. சாயினும்: உம்மை இழிவு சிறப்பு.

297. முதலடி "ஊழிற் பெருவலி யாவுள" என்ற குறட் பகுதியை நினைவூட்டும். நனையின் - அரும்பினையுடைய. நவை - குற்றம்; ஈண்டுப் பழி என்க.

298. இணையில்லாதன வறியன என. ஓங்கல் - மலை. கணி - வேங்கை. தளிர் ஈத்தனர்; வலித்தல் விகாரம்.

299. வருடிக்கொண்ட - தடவிக்கொண்ட. வீழ் தளிரால் - விரும்பத்தக்க தளிரினால். தளரிய - தளர்ந்துபோன. வான் மருந்தோ - தேவரமுதமோ.

300. கலவின் - கலந்தால். நிவந்து ஓங்கி - மிக்குயர்ந்து. வேங்கை அதளுடையான் - சிவபெருமான். அதள் - தோல். அதள் உடையான் - தோலை ஆடையாக அணிந்தவன். மானுவது - ஒப்பது. அழல்வேங்கை, மறங்கொண்ட வேங்கை என்க. மறம் - வீரம்.

302. அப்பொழில், உப்பொழில், இப்பொழில் என மூன்று சுட்டுக்களும் வந்தமை காண்க. "செய்குன் றுவை யிவை சீர்மலர் வாவி விசும்பியங்கி, நைகின்ற திங்களெய்ப் பாறும் பொழிலவை ஞாங்கரெங்கும், பொய்குன்ற வேதிய ரோதிட முந்திட மிந்திடமும, எய்குன்ற வார்சிலை யம்பல வற்கிட மேந் திழையே" என்னும் திருச்சிற்றம்பலக்கோவைச் செய்யுளில் (223) இச்செய்யுளிற்போலவே வந்தன. பேராசிரியர் "இவை யென்பது தன்முன்னுள்ளவற்றை; உவையென்பது முன்னின்ற வற்றிற் சிறிது சேயவற்றை; அவையென்பது அவற்றினும் சேயவற்றை" எனக் கூறிய உரைப்பகுதியும் சிந்திக்கத்தக்கது.

303. கண்ணாய் என்றது தலைவியை. மழையின்; இன் உவமவுருபு. குற்று - பறித்து. துனைய வந்து இங்கு அளிக்குவல். துனையவந்து - விரைந்து வந்து. ஈழம் - பொன்.

304. மருமம் - மார்பு. மை தீர் - குற்றம் நீங்கிய. வேரிய - மணத்தையுடைய. மேவ அரிது: தொகுத்தல். மருமத்துப் பொன் - இலக்குமி. நாவகத்தணங்கு - சரசுவதி.

307. வாய்ப்பவளம், நகைமுத்து, கட்கயல், குழற்சைவலம் என்பன பண்புத்தொகை. கொட்கும் - சுழலும். அவ்வாளரிக் கண்; வாட்கண், அரிக்கண். அ: நெஞ்சறிசுட்டு. அக்கண்களே இவளைத் திரிந்து கொட்கச்செய்தன என்க. சைவலம் - கொடிப் பாசி. எவ்வாயும் - எவ்விடத்திலும்; வாய் - இடம்: ஏழனுருபு. உவமதி - உவாக்காலத்து மதி. உவா - பூரணை.

308. கொடிய - கொடியிலுள்ளன; கோட்ட - கோட்டிலுள்ளனவாகிய பூக்கள். கோடு - மரக்கொம்பு. பல்லவம் - தளிர். துகள் தீர் அனிச்சம். அனிச்சம் படியவும் சாயும் பதம்; மணி நூபுரப்பதம். "அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர், அடிக்கு நெருஞ்சிப் பழம்" என்பது திருக்குறள். பாவை: விளி.

309. நாண்மலர் - அன்றலர்ந்த பூ; புதுமலர். வருடை - வரையாடு. வருடைமான் இனத்துப்பயில், வருடை மானினத்துப்பயில் எனலுமாம். "மீமிசைக் கொண்ட கவர் பரிக் கொடுந்தாள், வரை வாழ் வருடை" (மலைபடு 502-3) வருடை - எட்டுக்காலையுடையதொரு விலங்கு; இதற்கு முதுகிற் கால்கள் இருக்குமென்பர் நச்சினார்க்கினியர். நீழல் பயில். வரையின்கண் உள்ள ஆயத்தில்.

310. தொண்டகம் - ஆகோட்பறை. துவன்ற - நெருங்க. முண்டகம் - தாமரை. அகம் ஓகை மலர - மனத்தில் உவகை தோன்ற. சென்மோ - செல்லுக; மோ முன்னிலையசை. வண்டு அகம் ஆர்க்கும்.

311. அண்டம் - முட்டையை. அகட்டின் - வயிற்றில். விள்ளாத அன்பு - விட்டுப்பிரியாத அன்பு. நின்பெருமை கோடுங்கொலோ.

312. இரும் புனல் கால் - மிக்க நீரைச் சொரிகின்ற. எம்பாங்கர் - எம்மிடத்து. பாற்றி - நீக்கி. எம்பாங்கர் அன்பும். வால் வளை - வெள்ளிய சங்குவளையல். புனல் கால் கண்ணையும் வளை வீழ் கையையும் என்றது உன்பிரிவினால் உண்டாகும் கண்ணீரையும் உடல் மெலிவையும் என்றபடி.

313. ஆன்றனை - மனமே விசாலித்தனை.

314. பெயர்தி - பெயர்ந்து செல்கின்றாய்; என்றது தங்கி யிராமல் என்றபடி. பருவரும் - துன்பத்தைச் செய்யும். இகல் - பகை. இன்னாங்கு - துன்பம். தகல்வந்த ஊன் - தக்கவுணவு.

315- எய்த்திலர் - அறிந்திலர்.

316. பொறிவயின் - பொறியினிடத்தினின்று. வெறி - வாசனை. அலமரல் - சுழலுதல்.

317. உயிர் ஆக்கையும் - உயிரையும் ஆக்கையையும். அணங்குறுத்தாமை - வருத்தத்தில் இருத்தாமை. குடங்கரி னுள் - குடத்தினுள். தேம் மேவு இரும்பொழில். நல்குநர் என்னார்.

318. வண்டல் - மகளிர் விளையாட்டு.

319. காயம் பரந்த உடு - ஆகாயத்திலே பரவியுள்ள நட்சத்திரம். நாப்பண் - நடுவிடம். தோயம் - நீர். சேறி - செல் கின்றாய். சூழ்ந்திலை - நினைக்கின்றிலை.

320. கிளந்து - சொல்லி. தொள்ளை - துளை. மாந்தரின்; இன் உவமவுருபு. மாழ்குவது - மயங்குவது.

321. கணம் - நொடிப்பொழுது. கைத்தவர் - வெறுத் தவர். கறுத - கோபியாத.

323. மருமம் - மார்பு. உயங்கிய - வாடிய. தணவா - நீங்காத.

326. பறழ் - குட்டி. தாய் - தாவி.

327. வருக்கை - பலா.

328. அகில் நறுஞ்சந்தனம். அன்பு அகம்.

330. பக்கு - மூட்டு. ஓச்சும் மை சூழ் சிலம்பா. களி கயல் நோக்கி. கடியுடன் - விவாகத்துடன்.

331. இல் வரம்பு இகவாதி.

332. பார்ப்பு - குஞ்சு. ஓர்ப்பு - ஆராய்ந்தறிதல். வளையின் ஆர்ப்பு - சங்குகளின் முழக்கம். முதலிரண்டடிகளின் கருத்துச் சிந்தித்து மகிழத்தக்கது.

333. வலவன் - தேர்ப்பாகன். நாம் மாண்பு அழிய. பொழில்காள்: விளி. நலன் - இன்பம். நவின்றதுண்டே: ஏ வினா.

334. ஏனல் நுமக்கு இரையா. முந்து ஆர்ப்பொடும் விலங்குற்றிலிர். விலங்குற்றிலிர் - விலக்ககிலீர்.

335. குளகு - இலையுணவு. ஓர் உழி - ஓரிடத்து. வருடை - வரையாடு. தொழுதெய்வம் காக்க: அல்லல் பூண்டு இயலாது காக்க.

336. பிறங்கல் - மலை. அதர் - வழி. பாய்ந்து படுத்து அழியல். மூசுதிர் - மொய்ப்பீர்களாக.

337. கூடாதவர் - பகைவர். வீடாதவர் - விட்டு நீங்காதவர்.

338. தகைத்தது - தடுத்தது. பீழை - துன்பம். நாவினிடத்து மருவுகின்ற தீச்சொல் என்க.

339. நினைந்து விட்டால் நிறை தாங்கி. வாடிய ஆவி.

340. வையாமை கண்டு அங்கு உடங்கு அழிவேன்கொல்.

350. இமில் - திமில். ஏறும் ஆன் கழுத்து ஆர்த்த மணி.

351. மந்தாநிலம - இளந்தென்றல். அநிலம் - காற்று. சிந்தா ஆகுலம் - மனத்தின்கண் வருத்தம். தீயின்: இன் உவம வுருபு.

355. புரங்கட்கு இளநகை காட்டி: பெயர். ஏழ் துரங்கக் கடவுள் - சூரியன். துரங்கம் - குதிரை.

360. 'களைபவோ, கண்குத்திற் றென்றுதங் கை' என்றூர் (நாலடி: 226) பிறரும். எடுத்துக்காட்டுவமையணி. சீர் விரவு ஆர் அருள்பெற்று இசைய.

362. துணையவும் - விரைந்து செல்லவும்.

365. விளைந்தனவால் தினை காண்டி.

367. விழ்ந்தார் - விரும்பினோர்.

369. வாங்கும் குயத்தினர் - வளைந்த அரிவாளையுடையவர்.

375. கருவிப்புயல் - கூட்டமாகிய மேகம்; கருவி - மின்னல் இடி முதலிய தொகுதி என்க. இனி, புகை நெருப்பு நீர் காற்று என்னும் நான்கின் கலப்பினாலாகியது மேகம் என்பர். இதனை, 'தூமமு மெமது பவனனு மெமது தோழனத் தோயமுமெமதே, யாமுமிங் கிவற்றோ டொன்றுத லொழிதும் ஈரிரு பொருள்களும் பிரிந்தால், மாமுகி லெனும்பே ரெங்குளது' (வில்லிபாரதம் - காண்டவதக - 51) என்பது காண்க. சூரியனது உஷ்ண கிரணத்தால் இழுக்கப்பட்ட நீர் நுண்புகையாய் எழுந்து வாயுவோடு கலந்து முகில் வடிவாகின்றதென்பர். அக்கினியிலிருந்து ஜலம் உண்டாகிறது என வேதம் கூறும். மேகஸந்தேசத்தில் காளிதாஸரும் 'தூம ஜ்யோதிஸ் ஸலில மருதாம் ஸந்நிபாத: க்வ மேக:' என்றமை காண்க. இனி, 'கருவி மாமழை' என்னும் தலைப்பையுடைய நைடதச்செய்யுளின் உரையில் '(உலகத்திற்குத்) துணைக்காரணமாகிய பெருமை பொருந்திய மேகங்கள்' எனப் பொருள்கூறி; 'மழை கருவியாதல் திருக்குறள் வான் சிறப்பிற் காண்க. கருவி என்பதற்கு மின்னல் இடி முதலிய தொகுதி எனல் ஈண்டுச் சிறப்பன்று' என்றுரைத்தனர் மகாவித்துவான நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள்.

376. ஐந்தென ஓதும் அவத்தை - சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்பன. இவை கீழாலவத்தை, மத்தியாலவத்தை, சுத்தாவத்தை என மூன்று வகைப்படும். நீங்கிய அக்கலப்பாவது : 'நின்மல துரியாவத்தைக்குக் காரணமான விந்துவும் அர்த்தநாதமும் குடிலையிலும், சித்தம் பிரகிருதியிலும், ஆதிசத்தி பராசத்தியிலும் ஒடுங்க; நின்மல துரியாதீத அவத்தைக்குக் காரணமாகிய அநாதநாதம் என்னும் பராசத்தியும் சிவானந்த அநுபவியாகிய சொரூபஞானம் ஆகிய உள்ளமும் அடங்க, நின்மல துரியாதீத அவத்தைக்குத் தானம் ஆகிய பிரமரந்திரத்திலே அகண்டாகார சச்சிதானந்த பரிபூரண சிவானந்த அநுபோகத்தை இரண்டறப் பெற்றிருப்பது: இது

நின்மல துரியாதீதம். இதுவே, உன்மனைக்கு மேற்பட்டிருக்கிற மோட்சம் என்க.' விரிந்த நூல்களில் காண்க: குருவருளால் அறிந்து சிந்திக்க.

378. எயில் - மதில். வான்தந்திரம் - சிறந்த சேனைத் தலைமை. மந்திரம் யாத்த வயின் - மந்திரத்தால் கட்டப்பட்ட இடம்.

379. உழுவை - புலி. இகல் ஏறும் - மிக்கவலிமை. முன்னிரண்டடி இறைச்சிப்பொருள்.

384. பிண்டி - அசோகு. பிரசம் - தேன். பொதுளி - நிறைந்து. சாகை - கிளை. வண் இப்பிய மலர்க்கொம்பர்.

389. பறழ் - குட்டி. கொடிப்பகை - கொடியாகியபகை. கொடி - காக்கை. சாம்ப - வருந்த. கூகை - கோட்டான். முழை - குகை.

391. அருள் மிக்கு உடையவராய் இரவூடு.

399. சந்தனச் செச்சை - சந்தனத் தேய்வை.

403. எய்த்திலர் - ஆராய்ந்தறிகிலர்.

404. குரும்பி - புற்றுஞ்சோறு. வன்மீகம - புற்று. எண்கு - கரடி. உலவை - தந்தம். மிசை மா - உண்ணும் விலங்கு. உவா - யானை.

406. அணை - மெத்தை. அனந்தல் - நித்திரை. உளத்தேனும் - உள்ளத்தையுடைய யானும்; வினையாலணையும் பெயர்.

407. சரண் என்பது கலவாரில். இன்: உவமவுருபு. பருவரல் - துன்பம்.

408. இட்டிடை - இடுகு இடை: சிறிய இடை, நூபுரம் - காலணி. விரிசிகை - முப்பத்திரண்டு மணிகளுள்ள மாதரிடையணி. முருகு - வாசனை, தேன். அல்குற் பட்டியல் பாவை நல்லாய் என்றது 'பட்டிசைந்த அல்குலாள்' என்ற தேவாரச் சொற்றொடரை நினைப்பிக்கின்றது.

409. வீற்று - வேருகவுள்ள. மிடையினும் - நெருங்கினு லும். காற்றுதல் - அழித்தல். புலம்பிய - தனித்த, ஏங்கிய. பூவை - நாகணவாய்ப்புள்.

410. அம்பலும் ஒங்கு அலரும். அம்பல் - சிலரறிதல். அலர் - பலரறியும பழிமொழி. புதிது ஆவது இன்றேனும். உம்பல் - யானை. வம்பு அல்லும் - புதுமையான இராக்காலமும்.

413. வேட்ப - விரும்ப. கோள் - கொள்கை. செயிர்த்தலை - கோபித்தலோடுகூடி. நினையே பொரும் அனை மாயினும். ஒன் ஞர்க்கு உருமு அனையானை. ஒன்ஞர் - பகைவர். உரும் - இடி. காமத்துக்குக் கண்ணில்லை என்பது பழமொழி: முதலடி இதனை நினைப்பிக்கும.

415. உளத்து அருரோடு உகு நாகத்து ஒள் வீ.

416. நோன்றல் - பொறுத்தல். நோன்மையர் - வலி யுடையார்.

418. மேவலர் - பகைவர். ஓ அலந்தேன். ஏ வலம் - அம்பின் வலியை. ஏசறவு - துன்பம்.

419. துயவு உறுவீர் - வருந்துவீர்: துயவு - வருத்தம்.

420. மூசுவது - மொய்ப்பது. என்றும் மெய்யாம். என்றும் எய்யாம் எனப்பிரித்துப் பொருள் கூறினுமாம். எய்யாம் - அறியாம். மாழ்கிய - மயங்கிய. போதைக்கு: ஐ சாரியை. அளி வேங்கையின் மொய்ப்பக் கோதை பிறங்குவது என்க.

421. சிலம்பும் - ஒலிக்கும். அயிர்ப்பு இலது - சந்தேகத் துக்கு இடமில்லாத. எல் - ஒளி. நீடு இரவில். அணங்கு - வருத்தம்.

422. படுவது முன்னலன் - உண்டாவதைக் கருதாமல். பரிந்து - விரும்பி. இச்செய்யுள், "சுடர்த்தொடீஇ கேளாய்" என்னும் (கலித்தொகை - குறிஞ்சி - 15) செய்யுளில் 'உண்ணு நீர் வேட்டே னெனவந்தாற் கன்னை, அடர்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழாய், உண்ணுநீ ரூட்டிவா வென்ரு ளெனயானும், தன்னை யறியாது சென்றேன்மற் றென்னை, வளைமுன்கை பற்றி

நலியத் தெருமந்திட், டன்னு யிவனெருவன் செய்ததுகா ணென்றேனு' என்னும் பகுதியை நினைப்பிக்கும்.

423. கணை - அம்பு. அணை புணர் அன்று அறியாது. இரவூடு அழிவும் இன்றே. ஆசும் இன்றே, அழிவாசு: உம்மைத் தொகை.

425. கழுது - பேய். கழுது முறங்கும் கனையிருள் யாமத்து: 'கழுதுகண் படுக்கும் பானு ளிரவினில்' (பரஞ்சோதிதிருவிளை). கனையிருள் - மிக்க இருள். கொழுது - கிண்டி. கூட்டுணும் - கொள்ளைகொண்டுண்ணும். அழுங்காநிற்ப - வருந்த.

426. வல் முலை : வல் - சூதாட்டுகருவி. இரு மு சிவமதம் - அகச்சமயங்கள் ஆறு; அவை :- பாடாணவாதம், பேதவாதம, சிவசமவாதம், சங்கிராந்தவாதம், ஈசுர அவிகாரவாதம், நிமித்த காரண பரிணாமவாதம் என்பன. சிவந்து - கோபித்து, 'கறுப் பும் சிவப்பும் வெகுளிப் பொருள' என்பது தொல்காப்பியம். உரறும் - முழங்கும். மணிதரும் உச்சி வண்பணி. பணி - பாம்பு.

428. இருந்து இயல் மா.

431. படர்கூர - துன்பம்மிக. அண்மி உம் அன்றி உய் யாள. காவல் கொண்டாள் உம் மன்றி உய்யாள் எனக. வளம் படும் ஏனல் அம காவல் கொண்டாள். வளம்படு மேல் நலம் காவல் கொண்டாள் எனப் பிரித்துப் பொருள் கூறினுமாம். மேல் நலம் - மேம்பட்ட கற்பு. காவல் கொண்டாள்: 'சிறை காக்குங் காப்பெவன் செய்யும் மகளிர், நிறைகாக்குங் காப்பே தலை' என்பது திருக்குறள். 'காவலுனே பாவையர்க் கழகு' என்பது ஔவையார் வாக்கு.

432. வேரி தண் பொங்கர் அலைத்து உளர் வாடை. வேரி - வாசனை. பொங்கர் - சோலை. உளர் - வீசும்.

433. கௌவை - பழிமொழி.

434. கருவி முகிற்குலம் : முன் 'கருவிப் புயல் தவழும்' (செய் 375) என்றமை காண்க.

435. என் ஐக்கு : ஐ - தலைவன். வியங்கோளின் - ஏவலின்.

436. பொதியில் - அம்பலம். மன்றம் - ஊருக்கு நடுவாய் எல்லாருமிருக்கும் மரத்தடி; 'மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும' (திருமுருகாறு 226). துணங்கை - 'பழுப்புடை யிருகை முடக்கி அடிக்கத், துடக்கிய நடையது துணங்கை யாகும்' என்பர். ஈண்டுப் பெண்கள் கைகோத்தாடல் என்னும் பொருளது. சான்றோர், தக்கோர், ஆன்றோர் எனக் குறித்த நயம் காண்க.

437. சூழ்ச்சி - ஆலோசனை. இன்னல் - துன்பம். பையுள் - துன்பம். நல் நாண் இகக்க : இகக்க - நீங்க. தலைவி கூற்று.

438. விளிக - அழிக.

439. விசும்பு - ஆகாயம். தெளிவு ஒழித்தேற்கு : வினை யாலணையும் பெயர். பெற்றி - தன்மை. பிறழ்ந்திலது - மாறு பட்டிலது.

440. கனவத்து - கனவில் : அத்துச் சாரியை. நனவத்து என்பதும் அது.

441. ஆராத காதல் - அமையாத காதல். மாழ்ந்து - மயங்கி. சூர் - அச்சம். சூழ்ந்திலன் - ஆராய்ந்தறிகிலேன்.

443. கருத்தினை - கருத்தினையுடையாய். இன்னுங்கு - துன்பம். தலைவி கூற்று.

446. துரப்பன - கெட்டோடச்செய்வன. துன்னார் - பகைவர். வேய் - மூங்கில்.

448. இமையார் - தேவர். அமை - மூங்கில். யாவதும் - சிறிதும் என்றபடி.

450. என் என்று உசாவல் செய்யாரை.

451. செஞ் சுவல் நீவும் - அழகிய பிடரினைத்தடவும்: சுவல் ஈண்டுத் தோள்களை என்க. வல் நோயின் நிறுத்துநர். ஆயை - தாய்க்கு: உருபுமயக்கம்.

452. வல்லியம் - புலி. துகள் - தூசி.

454. அருங்குரைத்து - அருமையானது: அரிது, அருமைத்து: 'எருமை யன்ன......அளிதோ தானேயது பெறலருங் குரைத்தே' (புறநானூறு - 5).

458. ஏதிலன் - அன்னியன். எல் - பகலில்.

459. என்றாழ் - சூரியன். கழை - மூங்கில்.

460. வணங்குஇடை: அன்மொழித்தொகை. பிணங்கலை - மாறுபடாதே. பேதுறுத்த - துன்பஞ்செய்ய. புலம்புக்கு இனைகுவள் - தனித்திருத்தற்கு வருந்துவாள்.

461. உறுகணில் நாளும் நட்டேம் செல. கண் - கண்ணோட்டம்: தாட்சணியம்.

462. எடுத்துக்காட்டுவமையணி.

463. கலிங்கம் - மெல்லிய ஆடை. யாழைத் திறம் தகல் இன்று. தலைவி கூற்று.

464. ஆவணவீதி - கடைத்தெரு. பதன் - செவ்வி, காலம். செல்லல் - துன்பம். தோழி கூற்று.

465. 'காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி, மாலை மலருமிந் நோய்' என்பது திருக்குறள். வேலை - கடல். அலையின்: இன் உவமவுருபு.

466. பதம் - காலம். திறம்பின் - தவறினல். அஞர் - துன்பம்.

467. முருகு இயம் காரின் இயம்பும். உருகி அங்கு ஆடும் உழுவல். அங்கு ஏதம் அது ஆம்.

468. கையாகிய பொற்றாமரை என்க. முக மதியால் சகோரம் களித்தல் என்பது சகோரப் புள் நிலவையருந்தும் இயல்பை நோக்கியேயாம். முகத்து உற்று ஆர் சகோரம் என்றது கண்களை. கண்களைச் சகோரமாக உருவகித்தார்.

471. முதுக்குறைவு - பேரறிவு. வெண்தூசு - வெண்ணிற ஆடை.

472. அல் ஆர் களத்தன் - இருள் பொருந்திய கண்டத்தை யுடைய சிவபெருமான். கல்லுதல் - களைதல். அலைத்தலை - அலைக்கழிக்கும் செயலை. கல்லாய் கற்றாய் முரண்டொடை.

477. தேத்தடை - தேனிறால். அடுக்கம் - பக்கமலை, மலைப் பக்கம்.

479. 'ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று, சூழினும் தான்முந் துறும்' என்பது திருக்குறள். வரும் பாலன - ஊழால் வரக்கடவன. பால் வருவன என மாறுக. பால் - ஊழ்.

480. மெழல் நால் எழினி. எழினி - திரைச்சீலை. கதிர்த்த - விளங்குகின்ற.

483. காம்பு - மூங்கில். சாம்பின - வாடின.

484. சில்லரிப்பன்மணி, சீறடிப் பேரமைத்தோள், பைங் கட்கருங்குழல் வெண்ணகை என்பன முரண்டொடை. கட்டின் நாடி.

485. ஆட்டு எறும் தணித்து ஊர்ந்தோன் - முருகவேள். 'நெருப்பிலுதித், தங்கட் புவன மனைத்து மழித்துலவும், செங்கட் கிடாயதனைச் சென்று கொணர்ந் - தெங்கோன், விடுக்குதியென் றுய்ப்பவதன் மீதிவர்ந்தெண் டிக்கும், நடத்தி விளையாடு நாதா' (கந்தர்கலிவெ - 89—90). நாரத முனிவர் இயற்றிய வேள்விக் கண்ணே தோன்றிய ஆடு என்க. எறும் - வலிமை. வெறியாட் டயர்தலை நாட்டுப்படலம் 46-வது செய்யுளிற் காண்க.

486. தாளத்தொடை - முத்துமாலை. தமனியம் - பொன். காளம் - நஞ்சு. மகற்பேணி - திருக்குமாராகிய முருகவேளை விரும்பி.

487. தவலை உற்று - கெடுதலுற்று; தவலை - நீங்குதலை. சவலை - மெலிவு. உகாமே - உருகாமல், சிந்தாமல். துவலை - துளி.

488. பழங்கண் - துன்பம். அணங்கு - துன்பம்.

490. அண்டவாணர் - தேவர். முன்னாதது - அறியாதது. வரை புழையாகச்செய்தது கிரவுஞ்சமலையைத் துளைத்த செயல். கடி - வாசனை.

493. சிறு வல் உரையினர் - பழி மொழிவோர். கூம்ப - குவிய, மூட.

494. வாரித்தலை : தலை ஏழனுருபு. வேரி - வாசனை. ஓக்கினள் - அருச்சித்தாள்.

495. முதுக்குறைவு ஆண்ட உள் அன்பு.

497. பரிகொண்டு - பரித்தலைக்கொண்டு; பரித்தல் - சுமத்தல். வாம் - தாவிச்செல்லும். கலணை - சேணம். வாய்தல் - வாயிலில்.

498. பற்றின் அடுத்து எரி சூழ்வல். பரிவான் - அன்புடனே. வருட்டி - மயக்கி.

499. எள்ளாத இன்னல் - இகழ்தற்கில்லாத துன்பம். விள்ளாத - விட்டுப்பிரியாத. நள்ளாத ஏதிலர் - அன்பில்லாத பிறர்.

500. அன்றில் என கிளவாய். தெருட்டுதல் - தெளிவித்தல்.

501. விது - சந்திரன். கதுவு - பொருந்திய.

503. சூள் - சத்தியம். எலுவி - தோழி. முழுவி - முத்தமிட்டு. நவை - குற்றம்.

504. இனைதற்கு - வருந்துதற்கு. களி - மதக்களிப்பு.

505. கடு - ஆலகாலவிடம். கந்தரம் - கண்டம். ஒளி ஒளி: ஒள்ளொளி.

507. அரும்பிற்றில - தோன்றில; இற்றுச்சாரியை. தளவம் - முல்லை. வேள் - மன்மதன். வில் ஆர்ந்த - ஒளிபொருந்திய.

510. மேகத்திற்கு : இடித்தலைச்செய்து, மின்னலை வீசி, இந்திரவில்லைத் தோற்றி நெருங்கிய முகில். தடித்து - மின்னல். இந்திர திருவில் - வானவில். கான்று - வெளிப்படுத்தி. ததைந்த - நெருங்கிய. கோடையாகிய வெப்பத்தை மாற்றி; கோடையாலுண்டாகிய வெப்பத்தைமாற்றி எனினும் அமையும்.

தபுத - கெட. நாகம் - மலை. எங்கள் முயற்சியெல்லாம் கெட நடித்துத் திரிவாய் கொல்லோ? அளிப்பாய் கொல்லோ? என்பது.

518. தோள் புணை இல்லாத வைகல் நம் மெல்லியலாள்.

519. வீழ் அம் கடிவரை மார்பரின்.

523. மலைந்து ஒப்பும் இறைவர்.

527. 'வடுவிலா வையத்து மன்னிய மூன்றின், நடுவண தெய்த இருதலையு மெய்தும், நடுவண தெய்தாதா னெய்தும் உலைப்பெய், தடுவது போலுந் துயர்' (நாலடி - 114); 'ஒண் பொருள் காழ்ப்ப இயற்றியார்க் கெண்பொருள், ஏனை யிரண்டு மொருங்கு' (குறள் - 760); 'பாரோர் சொலப்பட்ட மூன்றன்றே அம்மூன்றும், ஆராயிற் றானே அறம்பொரு ளின்பமென், ஆரா ரிவற்றின் இடையதனை யெய்துவார், சீரா ரிருதலையு மெய்துவர்' என்றார் பிறரும். 'வறியா ரிருமை யறியார்', 'இல்லா ரிருமையும் நல்ல வெய்தார்' என்பனவும் காண்க. கட்டுரை - பொருள் பொதிந்த சொல்.

532. சுவல். ஆணவநோய் கெட்டவிடத்து இறைவனருள் கூடும்.

534. எடுத்துக்காட்டுவமையணி.

537. முன்பு அந்தம் ஆயவை எய்தா முதல்வன்: 'போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே' (சிவபுராணம்). 'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதி......' (திருவெம்பாவை).

540. 'தலைப்பெயல் தலைஇய தண்ணறுங் கானத்து' (முருகு).

541. வெறுக்கை - செல்வம், வெறுக்கப்படுவது: 'வெறுக் கைமேல் வெறுக்கை வைத்தேம்' (பரஞ்சோதி திருவிளை). 'அன்ன வாகநின் னருங்கல வெறுக்கை' (புறநா-146). 'முனி வரும் மன்னரும் முன்னுவ பொன்னூன் முடியும்' (திருக்கோவையார் - 332) என்பதனை முதலிரண்டடி நினைவுறுத்தும்.

542. மந்தாநிலம் - தென்றற்காற்று. தலைவி கூற்று.

543. துண்டம் - மூக்கு. உயிர்ப்பு - மூச்சு. விம்மிதம் - ஆச்சரியம்.

545. கழுமுற்று - அடைந்து. எவ்வம் - துன்பம். ஏதம் - துன்பம். திருகிய - மாறுபட்ட. தீதிலர் என்றது தலைவனை.

546. வெறுத்து இயல்பு அல்லலா மேல் எவன் செய்வது.

553. மனு ஆங்கு அயர்த்த காயத்தவரில் கலங்குகின்றாய்: 'பன்னீராண்டில் ஒருநா ளல்லது, உண்ணா நோன்பினேன் உண்கனி சிதைத்தாய், அந்தரஞ் செல்லும் மந்திர மிழந்து, தந்தித் தீயால் தனித்துய ருழந்து' (மணிமே – 17: 41 – 44 வரிகள்); 'வானூ டெழுகென மந்திர மறந்தேன், ஊனுயிர் நீங்கும் உருப்பொடு தோன்றி (ஷை 55 – 56): காயசண்டிகை நிலை கூறும் பகுதி. அயர்த்த - மறந்த. மண்ணுதும - துடைப்பேம்.

555. இருவீர்க்கும் உளம் விழியே தெரிப்ப: 'கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள், என்ன பயனு மில' (குறள் - 1100); இக்கருத்தைக் குழைத்தமைத்த பகுதி இது.

567. பரல் - பருக்கைக்கற்கள். அத்தம - சுரம். அதர் - வழி.

569. 'உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும், செயிர்தீர் காட்சிக் கற்புச்சிறந் தன்றெனத், தொல்லோர் கிளவி புல்லிய' (தொல் - களவு - 22 சூ). இதனை 'உரிய, நாணினை யோம்புந ரில்லைகற் போடி நலிவுறினே' என்ற பகுதி நினைவுறச் செய்யும்.

579. ஒற்றைப் பொலஞ் சகட்டூர்தி வெய்யோன்; 'ஓராழி வெய்யவன' (திருவரங்கத்தந்தாதி). கௌவை - பழிமொழி.

594. நாவிற் பயிற்றினும் உள்ளமும வேம் சுரம்; 'பரிதி வானவன் ... ... கருதின்வேம் உள்ளமும் காணில் வேம் நயனமும்' 'படியின்மேல் வெமமையைப் பகருநா, முடியவேம்' (கம்பராமா - தாடகைவதை - 5, 6 செய்).

595. சீயம் - சிங்கம். நேடி - தேடி. வார் - நீண்ட. வை - கூரிய. பிறை எயிற்று ஏனம் - பிறைபோலும் வளைந்த பற்களை யுடைய கரடி. மாழ்குவள் - மயங்குவாள். சுரம் - பாலைநிலம்.

596. நுவறி - சொல்வாய். விரைக்கும் - வாசனை வீசும்.

597. தளை - கட்டு, முறுக்கு. தமியா - ஒன்றியாக. கிழமைக்கிளை - உரிமைச்சுற்றம்.

599. முருங்கோம் - அழியோம். தானவர் - அசுரர். வாரணம் - கோழி. இரும் கோல் தொடி. கோல் - திரண்ட. கோற்றொடி: அன்மொழித்தொகை. தொடிக்கும்: இறந்தது தழீஇய எச்சவும்மை. தொடிக்கும் எனவே தொடியினை உடன்கொண்டு செல்லும் காளைக்கும் என்றபடி.

600. தவ்வை - மூதேவி. ஆனனம் - முகம். கௌவையர் - பழிமொழிந்து தூற்றுவோர்.

601. ஏறும் - வலிமை. சுலவும் - சுற்றும். முந்து இரவு ஆம் முன்னர்.

602. காக்கை இடமிருந்து வலமாகச் செல்லுதல் நற் சகுனமாம்; வலமிருந்து இடமாகச் செல்லுமாயின் நன்னிமித்த மன்று; 'இடமும், காகம்முத லிய முந்திய தடைசெய்வன கண்டான்' (கம்ப. பரசுராமப். 5.) 'கொடியிடமாப் போந்த குறை' (மதுரைக்கல - 55).

607. குளிர் நிழல் தேன் விரவு அம் புது மலர்.

608. வழங்கு இ சுரம் செல். எம் மாதினை. கண்டுழி ஏகல் தகாது என்றியே.

609. கபோதகம் - புறு.

611. உரகத்து நாடு - பாதலம்; உரகம் - பாம்பு.

619. மணி காசு அலமரும் அல்குல் நல்லாய்.

626. வாரணம் - யானை, கோழி. உலந்தார் - கெட்டார்.

627. புளிஞர் - வேடர்.

628. சுளித்து - கோபித்து.

632. செங்கணற்கு அடல் திகிரியும்.

வள்ளிநாயகி திருமணப்படலம் :

3. அணைத்து இருவி - அணைத்து இருத்தி.

5. பூதநாதர் - சிவபெருமான்.

6. தலைமைந்தன் - மூத்தபிள்ளையார். புழைத்தடக்கைத் தலை மைந்தன் எனினுமாம். வரை கிழிக்கும் படையான் - முருக வேள். மெல்லியல் என்றது தெய்வயானையம்மையாரை என்க. முடங்கல் - ஓலை; திருமணங்குறித்த திருமுகம். தச திசையி னும் - பத்துத் திசைகளிலும்.

7. கடி - திருமணம். குணில் - குறுந்தடி. வியவர் - ஏவலாளர்.

8. போத்து (பொத்து) - தவறு.

10. ஐம்பெரும்பூதம் - பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம். இவைகளின் நிறம் முறையே பொன்மை, வெண்மை, செம்மை, புகை, நீலம் என்பர்.

12. நாற்றினன் - தொங்கவிட்டான். இரசதம் - வெள்ளி. சோபானம் - படிகள்.

13. கஞலிற்று - நெருங்கியது. நாப்பண் - நடுவிடம். தவிசு - ஆசனம்.

18. பூகதம் - பாக்குமரம். அரம்பை - வாழை. ததைய - நெருங்க.

20. வித்துருமம் - பவளம். விதானம் - மேற்கட்டி.

23. உற்பலம் - நீலமலர்.

68. மறைஞாளி - வேதங்களாகிய நாய்; பண்புத்தொகை. புங்கவன் - தேவன்; ஈண்டு வைரவக்கடவுள். மகம் - தக்கயாகம்.

70. மைத்த - கருநிறத்தையுடைய. வலாரி - இந்திரன.

75. முடங்கு உகிர் அடக்கி.

121. 'வயிர ஊசியும் மயன்வினை இரும்பும், செயிரறு பொன்னைச் செம்மைசெய் ஆணியும், தமக்கமை கருவியும் தாமாம் அவைபோல், உரைத்திறம் உணர்த்தலும் உரையது தொழிலே' என்றார் ஆசிரியர் அகத்தியனார்.

135. வள்ளியம்மையாரின் விழிக்கு உவமையும் காரணமும் இப்பாடலில் கற்பிக்கின்றார். தற்குறிப்பேற்றவணி.

138. 'வானர மகளிர்க்கு வதுவை சூட்ட, ஆங்கப் பன்னிரு கையும் பாற்பட இயற்றி' என்பது திருமுருகாற்றுப்படை.

142. முத்துக்களின் பிறப்பிடங்களில் சில கூறப்பட்டுள.

148. அணி என்னும் பெயர்க்காரணம்.

158. இது முதல் 172ம் பாடல் வரை மணவினைப்பகுதிகள்; சைவர் சிந்தனைக்குரியன.

160. மங்கலத்துழனி - மங்கலமுழக்கம்.

163. அரணி - தீக்கடைகோல்.

190. பனிதம் - பச்சைக்கருப்பூரம்.

191. சிவிறி - நீர்தூவும் துருத்தி.

199. படியகம் - எச்சிற்படிக்கம்.

204. உரம் - மார்பு. மான்மதம் - கத்தூரி.

206. மணிமார்பன் - கௌத்துபமணியை அணிந்த மார்பினையுடைய திருமால். மலர்க்கணை முனைவன் - மன்மதன். விசும்பு - ஆகாயம்; விண்ணுலகம். திருவன் என்றது இந்திரனை.

213. "ஐயிரு புராணநூ லமலற் கோதியும் ... மெய்யறு சூள்புகல் வியாதன் ... " (காஞ்சிப்புரா). திருக்கு மால் - மாறுபட்ட மயக்கவுணர்வு.

215. வாசவன் - இந்திரன்; வசுக்களுக்குத் தலைவன்.

242. இறைவன் நெற்றிக்கண்ணாகிய அக்கினியில் தோன்றிய அக்கினியே இவன் மேனி; தீய, பொரிய, நீற, தழற்றிய ஆதலால் என்க.

246. 'எங்கணும் பணி வதனங்கள் எங்கணும் விழிகள்' என்னும் கந்தபுராணச்செய்யுளை நினைவூட்டும்.

குறிப்புரை அநுபந்தம் முற்றிற்று.

செய்யுள் முதற்குறிப்பகராதி

[எண் - பக்கஎண்]

அகத்திடுமுணவு 272
அகத்துப்புக்கன 409
அகப்பொருடமக்கருளு 58
அகவயிற்சென்றென 713
அக்கங்கைசுமந் 338
அங்கணப்படைய 346
அங்கணீமுன் 509
அங்கண்வீற்றருளு 177
அங்கலுழ்மேனி 517
அங்கிகாலுமட 108
அங்கிமாப்படைய 411
அங்கியங்கண்ணிற் 737
அங்கியின்மேல்பா 723
அங்ஙனமணுக 120
அசிதனுதியர்க 76
அச்சுதன்முன்ன 723
அஞ்சலையஞ்ச 542
அஞ்சனமேனி 747
அஞ்சிறைப்பூவை 206
அஞ்சிறைவாவ 600
அஞ்ஞையிழந்த 460
அடம்புதாதகி 485
அடருயிர்கொலாமை 249
அடர்ப்பவன்மிடின 108
அடிகழனரல 374
அடிகளாருருவங் 737
அடிகொடுமதுவுந்த 383
அடியர்தங்களை 246
அடியேனறிந்த 635
அடிவரைத்தடமார்ப 115
அடுக்கத்தனிநலம் 571
அடுத்தகாரக 696
அடுத்தகாலையிற் 408
அடுத்தமைக்கேயெதிர் 591
அடுத்தவல்வேழம் 645
அடுத்தனஞ்சேபரி 669
அடுத்தாங்கழியுயிர் 594
அடுத்துளோரிளைப் 43
அடுவதுவன்பசி 613
அடைக்கலம்புகுவின் 469
அட்டவன்வெகுளிமிக் 441
அட்டுமழையெனவீர 402
அணங்கோகடவி 609
அணிபரித்தொழுகி 152
அணியினும்பூசினு 646
அணுவினுநுழைநுண் 297
அண்டகோடிகள 107
அண்டத்திடைவெளி 660
அண்டமகட்டி 578
அண்டமாரளவைக் 57
அண்டமுற்று 507
அண்டம்யாவையு 80
அண்டம்விண்டெனத் 365
அண்டர்பூத 444
அண்டர்போற்று 147
அண்ணமுடெழ 267
அண்ணலாரருளிச் 85
அதுதெரிந்தாண்டகைச் 392
அத்தகுசெவ்விய 104
அத்தகுதிருத்தமங் 164
அத்தகுநாரத 754
அத்தகுமயிலைக் 514
அத்தகுமுடிவொன் 758
அத்தகுவரைப்பினெழு 97
அத்தகுவரைப்பின் 125
அத்தகுவேடற் 702
அத்தகையசிவபுரி 249
அத்தலந்தன்னையா 206
அத்தியுங்கொடியு 478
அந்தணாளர்கள் 244
அந்தணிர்மாய 483
அந்தரத்தில்விண்ணவர் 53
அந்தவுலகமழி 216
அந்தாமரைமல 523

அந்திப்பிறைசூடிய 105
அந்தோவிதுநாஞ் 137
அபயமுசலம் 213
அப்பதிக்கொரு 507
அப்பொழிற்சாரற் 575
அமரர்கற்பக 433
அமரர்வியந்தா 443
அமராபதிச 484
அமலநாயகனங் 409
அமலனடிக்கன்பிலார் 246
அமலனருளிற் 120
அமிழ்தமேயாகப் 260
அமிழ்தினைநஞ்ச 373
அம்பலுமோங்க 608
அம்பினக்கனத 384
அம்புயஞ்சுனையா 233
அம்மைத்தவமாற்றும் 405
அம்மைநற்றவங்கள் 506
அம்மைப்பிறப்பி 543
அம்மையிலெண்ணில் 468
அம்மையினுரைத் 587
அயர்ந்துநின்றதுவேழ 428
அயனூர்பகற்க 269
அயிர்த்திரளாலடர் 631
அயிலுந்தொழும்விழி 543
அயினுதிப்பரல்கா 265
அரக்கர்பட்டிமைபுரிந் 495
அரங்கும்வினைகள் 217
அரணமாகிய 686
அரணியின்ஞெலிந்த 722
அரத்தகச்சுவடுமிக் 708
அரம்புசெய்பிணி 140
அரம்புபுரியாணவ 751
அரம்புமுற்றிய 484
அரம்பையரல்குற் 737
அராத்தவமாற்றி 494
அராவுரியெனத்திரை 531
அரிக்குமவர்தமைக் 593
அரிக்குரற்கிண்கிணி 712
அரிதாம்பிறப்பு 270
அரிமுகத்தவன் 462
அரிமுகன்றமைய 373
அரியணைமீது 234
அரியயனமரரு 756
அரியலார்ந்த 25
அரிவைகுந்தமு 735
அரிறபுநாலைத் 328
அருகியநோக்க 606
அருக்கர்பதினாயிரவ 473
அருக்கனுமாரழற் 662
அருச்சனைநிரப்பித் 722
அருச்சனைப்பணி 489
அருச்சனையாதி 234
அருடகுதீக்கை 498
அருடருமாறெழுத் 208
அருட்கடைக்கணு 686
அருந்தவப்பயனு 725
அருந்தவரைத்தா 283
அருந்திறலரசன 704
அருப்பிளம்பொழி 204
அருமறைமுதலி 373
அருமறைமுறையிட் 225
அரும்பியமாலையி 392
அரும்பிற்றிலமுலைத் 641
அரும்புமுலையி 575
அருவிகொண்டுவிழி 479
அருவிதொட்டவ 138
அருவித்தடம்புன 671
அருவிமும்மதத்த 693
அருவுருத்திறத் 183
அருவென்றுருவென் 104
அருளதாய்விடி 685
அருளாகியமாதிட 766
அருளியகுரவன் 96
அருளிற்கடுத்ததன் 547
அருளிற்கலந்துறி 535
அருளினால்வர 768
அருளுந்திறத்தினள் 572
அருளுமருளு 565
அருள்செய்வனபுரி 145
அருள்புரிதல்கேட்ட 503
அருள்பொழிமுகங் 489
அருள்பொழிவிழியி 196
அருள்வளங்கொழிக்கு 64
அருள்வளர்நந்தி 5
அருள்விழிசேர்த்த 468

அலகில்பல்லுயிரு 66
அலகையாதியாச் 252
அலங்குகதிர்ச்செழுஞ் 44
அலத்தகமணிந்தழ 472
அலத்தகமலர்ந்த 530
அலத்தகமெழுதக் 718
அலைக்கழுற்றிய 439
அலைத்திடுநாண் 460
அல்யாப்பவிழ்க்கும் 213
அல்லகாத்திரியென 207
அல்லதூஉம்வர 369
அல்லார்களத்தனை 629
அல்லாவெனப்பொரு 657
அல்லும்பகலுங்கரு 19
அல்வேறுபடுக்கு 765
அவணடைவல்லா 514
அவலெறியுலக்கை 49
அவற்றினுட்புத்தி 87
அவுணர்கோனகர 470
அவுணவன்படை 430
அவ்வயிற்சேறு 119
அவ்வயின்வாழ்தரு 203
அவ்வரமுங்கொடுத் 483
அவ்வரைசூழ்நெடுங் 746
அவ்வுழியவ்வரை 528
அவ்வையர்வாடின 675
அழகினினிளமைக் 719
அழத்தினைவேட்டு 655
அழலுநெடுவேல் 214
அழல்சுழித்தார்க்கு 553
அழல்போலுயிர்முழு 144
அழன்றுநின்னுயிர் 408
அழிந்ததுசாய 597
அழிந்தவுணர்ச்சி 353
அழுக்கில்வீரர்தே 433
அழுக்குளத்தினு 250
அழுந்தலைவேலை 604
அழுவக்கடற்கழி 589
அழுவப்புனலம 342
அளந்தவவைதா 254
அளப்பரும்போகந் 292
அளமருபிறப்புக 25
அளம்படுவார்துரும் 616
அளித்தநல்லருளை 478
அளித்தநல்வர 369
அளிநரம்புளர 20
அளிப்பான்புகுந்தவந் 595
அளியணிங்குநவி 159
அளியாகியொளியாகி 133
அளியேனினைதற்கு 640
அளைதொறுமவுண 359
அள்ளலழுந்தும் 281
அள்ளற்பரப்பி 271
அறந்தலையெடுத்திடு 495
அறந்தாம்பலவாற் 748
அறமனைதோறு 236
அறமுனிந்தவன் 429
அறம்பாவங்கள் 281
அறன்மறந்தல்ல 521
அறுப்புனற்கால் 20
அறிதராதியற்றும் 65
அறிதராவகைபிற் 189
அறிந்தாலலரன்னை 623
அறிந்தானெதிர்படை 404
அறிந்திறைவன்பூசை 303
அறிந்துயிர்க்கறி 182
அறியாப்பொருளின்றி 646
அறியுமறிவுக் 547
அறிவிரண்டுமாய 482
அறிவினிற்பெரிய 121
அறுசுவையூண்விசிறி 326
அறுத்துநூறுகோல் 388
அறுத்துவிழுஞ்சர 455
அற்பகத்திமை 140
அற்றபாணிமண் 449
அற்றேனினதார்வங் 144
அற்றைஞான்றவ 699
அற்றைநாள்வடசார் 410
அற்றையிராப்புலர் 756
அனுதிபந்தமோ 183
அனுதியாகிய 142
அனுதியேயமலன் 288
அன்பினைந்திணைக் 15
அன்றுடங்கணைந்தோர் 125
அன்றுபோய்வழிநா 149
அன்றையிரவுப்பொழுது 473

அன்றொழியவழிநாளா	504	ஆட்டுகலசந்தவறித்	304
அன்றொழிவெய்த	493	ஆணடிநிழலோம்பி	115
அன்னகோட்டகம்	221	ஆணவத்தன்றே	195
அன்னணமமுத	505	ஆணவப்பிணி	138
அன்னத்தோடக	27	ஆணவமாயை	230
அன்னநல்கினு	208	ஆணவமூல	175
அன்னநீர்செருத்தலா	262	ஆண்டகைவீரன்	410
அன்னபொய்கை	223	ஆண்டிலிங்க	148
அன்னமுமொரோ	328	ஆண்டுசெல்லவி	485
அன்னவனேயேசரண	163	ஆண்டுவேண்டு	223
அன்னவூர்திய	180	ஆதலாலவர்பா	241
அன்னவைதெரித்தநி	162	ஆதலாலன்னந்	264
அன்னைதனிக்கஞ்	650	ஆதலாலாணி	231
ஆக்கங்கருதித்துணை	17	ஆதலாற்றேவரருஞ்	360
ஆக்கியபடைப்புக்	116	ஆதலாற்றேவர்	278
ஆக்கும்பொழுதாக்	29	ஆதலானவண்	488
ஆங்கசைந்தொளி	334	ஆதலினல்வறியோரு	326
ஆங்கதுகண்டவுணர்க்	459	ஆதலினற்குமரன்	204
ஆங்கவனமதுசத்தி	336	ஆதனத்திடையி	77
ஆங்கவனெனவிண்	371	ஆதியீறமைந்த	63
ஆங்கவன்படைப்பி	119	ஆதியீறில்லா	97
ஆங்கவன்போல	198	ஆதிரைநாளிற்	228
ஆங்குடங்கம	416	ஆமானினந்திரி	585
ஆங்குநாதன	142	ஆம்பலுற்பல	128
ஆங்குபதேச	202	ஆயகாலையில்	335
ஆங்குப்படர்ந்து	217	ஆயதோல்விகண்	385
ஆங்குப்புறவிடை	147	ஆயத்தவர்புரி	657
ஆங்குமாநகர	477	ஆயபல்படை	43
ஆடகங்கொண்டான்	305	ஆயவேலையி	684
ஆடகத்தகடுக	130	ஆயிரங்கணைவிடுத்	346
ஆடலம்மனை	50	ஆயிரங்கர	364
ஆடவர்க்குமிக்	735	ஆயிரத்திரட்டிச்	757
ஆடவர்திலக	719	ஆயிரத்தோரெட்	168
ஆடவர்மகடூஉ	262	ஆயிரந்தூணவயி	689
ஆடிடநோக்கி	597	ஆயிரம்வாளியிற்	400
ஆடிப்பூசியுண்ட	451	ஆயிரவெள்ளஞ்சேனை	413
ஆடியகூத்தன்	519	ஆயிரவெள்ளம்பகடு	420
ஆடிவைகாசித்	236	ஆயுநான்மறை	209
ஆடினுர்பலரரங்	705	ஆயுந்தொறுந்	526
ஆடுபோர்க்கொருவ	346	ஆய்தவடிவிற்கஞெரு	534
ஆடுமெல்லையில்	389	ஆய்ந்தவர்க்கன்ன	237
ஆடுவேல்வல	508	ஆரக்குரல்க	596
ஆடைதீரவதள்	757	ஆரடுதிகிரிக்	362

ஆரடுத்தமணி	345
ஆரணத்தனுநகர	433
ஆரணன்றுயர்க்	113
ஆராதகாத	619
ஆராவமுதனை	519
ஆரியற்பணியா	255
ஆரியனையெளிய	283
ஆருயிரளிக்கும்வர	752
ஆருயிர்மயங்க	261
ஆர்ங்கதிர்வேணிய	483
ஆர்த்தவோங்காரப்	230
ஆர்த்தனபணில	724
ஆர்த்தனபூதவெள்ள	348
ஆர்த்துநின்றுடும்	125
ஆர்த்துவீரவாகுப்	428
ஆர்ந்தபன்மணி	513
ஆலங்கனல்கூளிக்	405
ஆலங்கனிந்தவிழி	569
ஆலங்கொதித்தட	538
ஆலயநுழைந்துமுறை	473
ஆவணவீதி	627
ஆவயிற்குழவிபோற்	336
ஆவயிற்புகுந்	487
ஆவயினகன்று	170
ஆவயினும்மையா	743
ஆவயின்முன்பே	505
ஆவாவிதுவென்ன	620
ஆவிபொன்றினுனென	429
ஆவியுங்கண்ணுத	668
ஆவினையினத்தி	261
ஆழியுளிலங்கை	359
ஆழ்ந்தநீரல	15
ஆழ்ந்தநீர்ச்சுனை	10
ஆழ்ந்துகிடந்துங்	46
ஆளிக்கொடியேந்திய	17
ஆறுதாரமு	172
ஆறுப்பெருந்துயர	435
ஆறிருகோடி	150
ஆறுகொளச்செங்	444
ஆறுமாமுகமாறி	335
ஆறுமோருருவதாக	335
ஆற்றலிலனுய்த்தளரு	418
ஆற்றுவுளத்தினை	600
ஆற்றுந்திறமிவட்	630
ஆனநெய்பளிதத்	727
ஆனந்தந்தலைசிறப்ப	746
ஆனவுணப்படை	460
ஆன்வழிக்கொள்ளும்	118
ஆன்றலைப்பொடித்	683
இகந்துரைகேட்ட	361
இகன்மிகுத்தகொடி	78
இகுதற்கியைந்த	435
இக்காலையையேந்	338
இக்குன்றுகாண்கடி	668
இங்கணலனெய்துநர்க	58
இங்கிதுநந்தி	86
இச்சாஞானகிரியை	210
இச்சைஞானந்தொ	141
இடங்கழிகொண்டுயி	394
இடந்தலைப்பட்டிவ்வா	527
இடந்தலைப்பாட்டினுற்ற	411
இடர்தபுமதிஞற்	57
இடித்துத்தடித்து	573
இடித்துத்தடித்துத்திசை	642
இடுகிடைமிடைந்த	531
இடும்பையங்கடலுட்	118
இடைப்பாலதுபெறின்	648
இடையினுதரவு	242
இட்டிடைநோவ	608
இட்டிடைவெஃகி	560
இட்டிமுதன்மகவினை	324
இணங்கவினமல்லாரை	300
இணங்குவதின்றி	682
இதண்மிசையிவர்ந்து	506
இதயநாண்மல	295
இதுபொழுதென்று	413
இதுமுறைபிறழின்	295
இத்தகுகாசி	201
இத்தகுதீவின்	318
இத்தகுபூசை	232
இத்தகுவளஞ்சால்	116
இத்தகையமாதரினி	59
இத்தகையாவினை	323
இத்தகையோர்புறஞ்சூழ	322
இத்தலந்தன்னிற்	227
இத்தலைப்படுதி	158

இத்திறத்தமர்விளைந்த 381
இத்திறத்தினர்கண் 279
இந்தவான்பிலத்தின் 314
இந்திரச்சிலை 695
இந்திரஞாலம்விடுத் 463
இந்திரதீர்த்த 491
இந்திரற்கரசு 117
இந்திரற்காக்கம் 20
இந்திரனுதிய 200
இந்திரனுமறுவிகந்த 710
இந்திரனுயிர்த்த 753
இந்திரன்பாங்க 505
இந்திரன்பிரமன் 94
இந்திரன்பிறனில் 277
இந்திரன்மனைவி 725
இந்திரன்வாகனமிது 375
இந்திரன்வேட்ட 490
இந்துகாந்தக்கலி 690
இந்நாள்வரையு 521
இந்நிலைதனக்கு 191
இப்பிழைபொறுத்துள 535
இப்பிவாலிடம் 34
இப்புறவரைத்தலை 533
இப்பெருவருடந் 317
இமையாரியல்பினை 621
இமையார்க்கிறையவன் 520
இம்பர்முற்றினி 685
இம்மலரணியுங் 490
இம்மாதர்பின்னர்த் 541
இம்மைப்பிறப்பிற் 215
இயக்கமிரண்டிழிந்த 302
இயக்கமோரிரண்டாய் 273
இயங்குந்திறனுடைந் 524
இயல்புவேறுடைமை 193
இயவுளாகிய 699
இரணவல்லவு 487
இரண்டறப்பண்டே 287
இரண்டற்றெளிர்சிவ 176
இரண்டாயிரவெள் 337
இரண்டியக்கமுதலான 299
இரதமாதியூர்ந்து 263
இரதமாயிரத் 365
இரதமென்றபெய 380
இரந்தவவ்வர 478
இரந்தாருலகோரேழினு 144
இரந்துபாங்கியைத் 670
இரந்துமாணுக்க 235
இரப்பதுங்கொடுப்பது 705
இரமியத்தவ 316
இரவவணிருந்து 358
இரவிசெங்கதிர 76
இரவியைவெண்மதியை 249
இரவினும்பலிக 235
இரவெலாங்கணவன் 22
இராயிரந்தண்டங் 311
இரிதராவுடலின் 192
இரித்தபடைமீண்டு 391
இரிந்தசேனையுங் 430
இரிந்தனர்பூதர்வீர 412
இருகையாற்கல 735
இருசுடர்க்கிரண 128
இருடபுநமக்கர 163
இருட்பிழம்பினூடு 467
இருண்மலமிரித்தலி 207
இருண்மலமொன்றே 193
இருதிறத்தேங்கள் 469
இருதுணிசெய்குவ 355
இருந்தபூமகடவ் 433
இருந்தவம்பல 82
இருந்தவாறுபல 480
இருந்தனமாயினின்னு 413
இருந்தைக்குவை 18
இருபத்தெழுமாதரை 764
இருபுடைக்கணி 141
இருபெருமைந்தரும் 401
இருமையுமளிக்கு 64
இரும்புசேர்ந்தெரி 183
இருவகைத்தாகு 279
இருவகைமாயை 167
இருவகையியக்கங் 276
இருவராயிருந்து 151
இருவருநேர்ந்தம 395
இருவர்கன்னிய 732
இருவான்சுடர்க்கு 268
இருவியிடந்தொறும் 617
இருவினைச்சமத்தி 199

இருவினையென்ப	186	இறப்பொடுபிறப்பிற்	275
இருளத்துலப்பி	154	இறுதியிற்கிளந்த	93
இருளனுக்கியொளி	134	இறைகதித்த	3
இருள்கால்சீக்கு	211	இறைவநின்வியங்கோ	265
இருள்குடிகொண்ட	665	இறைவனமர்புரிதனக்கு	240
இலக்கண முழுதமை	130	இறைவனல்கிய	451
இலக்கத்தொன்பதின்	686	இற்றதோநமதிரும்	430
இலக்கம்வண்டரை	253	இற்றிஃதேனு	317
இலக்கர்வீரர்கை	728	இற்றைநாள்காறு	740
இலக்கர்வேரினுதித்த	334	இற்றைநாள்பயன்	746
இலக்கவாளியெம்	466	இனுதநூலின	182
இலக்கவீரருமமை	428	இனியசெய்கையர்	139
இலக்கவீரர்கள்	364	இனியன்னவனருளுக்	146
இலங்கைபுகுந்தரக்க	503	இனையபல்வளத்தி	179
இலங்கைபுக்கனன்	367	இனையவாறுபல்	40
இலிற்றுமழைமும்மத	750	இனையவெண்பூதி	500
இலைப்புரைகிளைத்து	752	இன்பமேபயக்கும்	188
இலைமுகப்பசும்	142	இன்றுகொல்யாம்பிறந்	704
இலையவேற்படை	61	இன்றுவையகமூன்றும்	341
இல்லறத்திருப்பினுந்	495	இன்னணஞ்சகச	197
இல்லறந்துறந்தேற்	327	இன்னணஞ்சிறந்த	96
இவனுறுகங்கை	202	இன்னணமனச்சிறப்	709
இவரிழைக்குப்பை	708	இன்னணமாகப்பூச	413
இவர்மனமொருக்கு	58	இன்னணமிறைவன்	351
இவறிமாதர்குங்கும	220	இன்னணம்படையெழுந்	393
இவற்றின்வழியீங்கெவரு	31	இன்னணம்பாச	190
இவ்வாய்மடந்தையஞ்	677	இன்னணம்பூசை	236
இவ்விரண்டிலக்க	320	இன்னணம்போர்க்கள	397
இழிகுலவண்ணுத்தி	301	இன்னணம்விழைந்திவரி	473
இழிக்கினருணிழி	301	இன்னதன்மையா	109
இழிஞரேயாக	182	இன்னதானவ	340
இழிவுளாருளு	33	இன்னதானையிரு	378
இழிவுற்றடுத்த	154	இன்னதுன்கருத்தே	363
இழுக்கிப்படுசாந்	698	இன்னபல்வரமு	228
இழைத்துவிட்டரத்தை	721	இன்னவனைவாளியினி	390
இளகுகாழகிற்	13	இன்னவாய	75
இளகுநெய்த்தோரு	276	இன்னவாறமராடுழி	450
இளமழையூடு	715	இன்னவாறிய	339
இளையவனெனுமுரு	530	இன்னவாறுநாலா	366
இளையனுந்தானிணை	674	இன்னவாறெலா	110
இளையோனலனென்	338	இன்னற்கடனடுவட்படி	144
இறகெழுந்துபறக்கு	340	இன்னநிகழ்ந்தபின்றை	337
இறப்பவுங்காமப்	257	இன்னுமறைபலகாலிங்	54

இன்னும்பொருள்சென் 660
இன்னுழைகதிரி 311
ஈங்கிவர்களோடுபுண 59
ஈங்கிவள்சென்றது 744
ஈங்குறுகங்கை 202
ஈசனளித்தருண் 463
ஈசனாதியர்க் 245
ஈட்டலுமடுத்தலு 705
ஈட்டியதவத்தாற் 227
ஈட்டும்பூசனை 232
ஈண்டியவான்குள 585
ஈண்டிறும்போதி 201
ஈண்டுநாற்பிறப்பி 188
ஈண்டுப்போந்தவ 141
ஈண்டுவிளங்க 214
ஈண்டைவிளம்பு 101
ஈதலாவது 243
ஈதுபுரிவன்மைய 446
ஈரம்வறலநுழை 714
ஈரவான்மதி 4
உக்கதேவர்கண்முடி 708
உச்சிப்பின்னொரு 293
உடங்கியமெய்யுயி 545
உடங்குகேட்பவர்கட் 232
உடங்குசெல்பவர்க் 17
உடங்குலகனைத்துந் 760
உடங்குறைகமலப் 241
உடம்பிடியன்ன 570
உடம்பிணியாலிறவு 59
உடலினைக்கரணந் 290
உடலினைவளர்த்த 264
உடல்கருவிபுவனமுறு 29
உடற்பயனளிக்கு 89
உடன்முழுதும்பல 28
உடுக்கவொள்ளிணர்த் 14
உடுநிரந்தமண்டிலம் 220
உடுவொளிக்குயர்ந்த 350
உடைதல்கண்டார்த்த 349
உட்கியோர்கதை 346
உட்குநாணின்றி 528
உட்டுகண்முழுதும் 126
உணங்குகுலாவிய 563
உணர்வெழாச்செயிர் 182
உண்டபாற்சுவை 9
உண்டுகொலில்லைகொ 690
உண்ணலாகுமிது 266
உண்ணினுமழுக்கொடா 205
உதரபந்தனவோ 152
உத்தாலகவா 137
உமையாள்விழிமூட 763
உம்பரினண்டப் 320
உம்பரைத்தாங்க 362
உயங்கப்பிணிக்கும் 155
உயங்கிநீலனவன் 382
உயங்கியவண்புல 568
உயங்கும்பவமோ 147
உயங்குவாரல 15
உயிர்க்குயிராய்நின் 760
உயிர்நீத்ததேகமு 521
உயிர்படுகருவோர் 274
உய்த்தசரம்புய 454
உரகத்துநாடு 678
உரத்திற்பல்சர 432
உரத்தினப்பிய 729
உரனிகழ்ஞான 91
உருகிநெஞ்சழி 340
உருகிமானழையும் 415
உருகியசிந்தையி 687
உருகுவெஞ்சின 9
உருட்டித்திசைதிசை 659
உருத்தகவாக்கி 566
உருத்திரர்வடிவந் 412
உருத்திரன்சத்து 292
உருத்திரன்மன்ற 277
உருத்தெதிர்தானவ 747
உருப்பவிர்தீக்கதிர் 626
உருமினமார்த்துத் 679
உருமினார்த்துடன் 14
உருவம்வேறன்றி 120
உருவாயுருவப் 539
உருவிளக்கூர்நுதற் 524
உருவினெஞ்ஞான்று 124
உருவெளியருகு 737
உரைத்தநிறத்தன 308
உரைத்தபன்னிரு 519
உரைத்தமொழி 534

உரைத்தவவரோ	305	ஊறும்பலவுள	627
உரைத்தனவற	496	ஊற்றியமதத்து	703
உரையுணர்வாக்கை	648	ஊற்றிருக்குமதக்	1
உலகமாக்கிடு	113	ஊனுணவெண்ணல்	261
உலகமெலாந்தொழிற்	502	ஊனேறும்வேற்கண்	745
உலகம்யாங்கணு	79	ஊன்றலைச்சேவற்	610
உலகருக்குரிய	497	எக்கர்மீதுமி	50
உலகிருளுருவத்	2	எங்கணுமணிவன	704
உலகின்முச்சுடர்	510	எங்கணுமுடிகள்	737
உலகுயிர்ப்பதி	109	எங்கணெவருஞ்	162
உலகுளார்தமை	250	எடுத்ததோருடலுயி	25
உலகுறுகாரிய	457	எடுத்தவையிரு	245
உலைபடுமிளவெந்	413	எடுப்பியதோகையுந்	607
உலைவறுமறைகளு	528	எட்டனைத்தலைப்பெய்	450
உவகைபொங்கினள்	699	எட்டனைநாற்றி	89
உழலைத்தொழுவாணிரை	18	எட்டினுமைந்தினு	104
உழாலிற்பொலிவண்	698	எட்டுறுப்பானு	120
உழிஞைப்படை	342	எட்டெட்டருள்விளை	147
உழுநர்களொருபா	23	எண்குணத்தானிமயச்	521
உளங்கொளாத	467	எண்குணந்தனக்கே	117
உளரியமென்னரம்	575	எண்ணத்துயரிய	147
உளையவளாயுயிர்	558	எண்ணுதிகழ்தக்கன்	143
உளையவேற்றவ	111	எண்ணிலண்டத்துப்	69
உள்ளடித்துணை	267	எண்ணில்காலநின்	449
உள்ளமடங்கிய	503	எண்ணில்பல்கணை	351
உள்ளமணையக்கூடிது	532	எண்ணில்பல்கோடி	227
உறுதிபயக்குங்	185	எண்ணில்பல்பவ	106
உறுப்பிறுப்பவொரு	268	எண்ணில்புண்ணிய	210
உறுப்பினுக்கின	26	எண்ணில்வாளிக	430
உறுப்பினுட்சிறந்த	738	எண்ணிறந்தபல்	79
உறும்பலாயிர	138	எண்ணெயாமலக	131
உற்பலவோடைக	691	எண்ணேங்கிய	147
உற்றமாயையோ	183	எதிருறுங்குமரனை	123
உற்றூர்க்குரியவர்	647	எதிரெதிர்வாளொடு	397
ஊடிமுன்னுமின்	50	எதிர்கொடண்டினைப்	450
ஊட்டியதென்ன	571	எதிர்பொரும்பூத	426
ஊர்கொண்டதுமதி	649	எதிர்வயினிளையர்	441
ஊர்தங்கிச்சென்னெறி	548	எதிர்விட்டவல்லெழு	405
ஊர்திமஞ்ஞையான	468	எத்தினத்தாயினு	135
ஊர்விழாவாயினு	614	எத்துணையறங்கள்	724
ஊழிநாட்பெயு	416	எந்திரம்யாத்த	599
ஊழியேபாணிக	496	எந்தையைவிழைந்த	280
ஊளைப்பெருநரி	681	எந்தையோகினிருந்த	333

எந்நாளுமின்ப 618
எப்பகையுந்தரு 747
எப்பெருங்கலையு 159
எமியையிருந்தர 461
எம்பிபோலெனையு 361
எம்மையன்பொடு 252
எம்மையீன்றவ 726
எம்மையேதுமுணர் 108
எம்மையோராண்டு 225
எயிற்குலமூன்று 347
எயிற்றியரிளமுலை 16
எய்யாந்தவறுடை 146
எய்யாமினித்தமி 545
எரிவளர்சாலை 260
எரிவாயுறுத்த 269
எருக்கிவன்கரம் 111
எருத்தத்திரண்டு 522
எலிப்பெருந்தொழுதி 395
எலுவியங்கென்னை 736
எல்லாமுணர்ந்த 538
எல்விற்கமல 628
எவரெவரெவ்வுழி 692
எவற்றினுமிங் 110
எவ்வரம்வேண்டியி 201
எவ்வுழிநோக்கினு 619
எவ்வெவரவையுந் 359
எழில்வளர்விசாக 91
எழுகடலோதையு 393
எழுகடற்கப்பாற் 319
எழுகவென்றுதன் 685
எழுதரும்பனுவ 318
எழுநான்குகோடி 268
எழுந்தவலரின்னு 618
எழுந்துவளர்பசும் 27
எழுபிலத்தெல்லை 314
எளியரைவதைத்தான் 285
எள்ளாதவின்னற் 639
எள்ளுங்காற்கிரிந் 26
எறிந்தநாந்தகம் 432
எறிந்தளிவேங்கை 612
எற்றுக்கிவனுற்றுத் 145
எற்றுபுனலயோத்தி 504
எற்றைக்குமுறவா 278
எனதாருயிர்க்கு 519
எனைத்துமங்கறியான் 542
என்பாலருளுங் 564
என்மனம்பாச 522
என்வழியின்று 196
என்வாய்மொழி 642
என்றலுங்கதிர் 388
என்றலுஞ்சூரன் 373
என்றலும்வெஞ்சினம் 454
என்றவெல்லை 263
என்றானிகல்சூர் 371
என்றிடிக்குலமு 108
என்றிருந்துதிகள் 196
என்றுசூதமாமுனி 768
என்றுசூருயிரைக் 329
என்றுதோத்திரமியம்பியபெரு 756
என்றுதோத்திரமியம்பியவிரு 106
என்றுமத்தாணியா 122
என்றுமாதவ 77
என்றுமாதவத்துச் 97
என்றுமிங்குநாம் 748
என்றுமோரியல்பி 92
என்றுமோரியல்பினதா 503
என்றுமோரியல்பினின் 362
என்றுருமேற்றிற் 266
என்றுவேண்டின 434
என்றுவேற்றடக்கைச் 192
என்றுளக்குய்யம் 121
என்றுளத்தெழுந்த 86
என்றூழ்தணந்த 625
என்றேமதின்மூன்று 767
என்றேயிவையா 749
என்னவன்னவை 475
என்னான்முடியாதிது 766
என்னிஃதுற்றவா 529
என்னுயிர்வாட 630
என்னெனவயிர்த்துச் 412
என்னேயிவனுண்மை 424
என்னைக்கெனைவியங் 617
என்னைமுடிக்குநர் 454
ஏகலைநிற்றியெனச் 463
ஏகுழியேகியிருஞ் 465
ஏட்டைமுற்றும் 75

ஏந்தலேந்திலே	408
ஏந்தனின்வர	508
ஏந்தியகண்ணிய	551
ஏமங்கனிந்த	525
ஏயேநினதெண்	370
ஏர்மிகுத்தவிடை	51
ஏலமொடிலவங்க	115
ஏவலிற்றணந்தோடி	332
ஏவலினிதாற்று	473
ஏழுலகெனத்தனே	395
ஏழ்தலையிட்ட	459
ஏற்றின்மிசை	326
ஏற்றுக்கொடியனே	664
ஏற்றுரிப்போர்வை	693
ஏனையவீரர்தாமு	414
ஏன்றவன்பிறைற்	251
ஐந்தாமனுவேந்	100
ஐந்துசுத்தி	224
ஐந்துநாளசைந்	743
ஐந்துமாமுக	62
ஐந்தெழுத்துமொரு	106
ஐந்தெனப்படுமா	256
ஐந்தெனவோது	598
ஐந்தெனும்முப	484
ஐந்தொழிலியற்றர	162
ஐம்படைசுமந்த	173
ஐம்பதுகோடி	312
ஐம்பெரும்பூதமு	689
ஐம்பொறியின்	136
ஐயநீகணி	507
ஐயமேற்றுழலுந்	736
ஐயயானிதன்	529
ஐயனேபோற்றி	86
ஐயிருநூற்றிரு	459
ஐயிருவாளிதன்	399
ஐவருக்குந்திரு	310
ஒண்குணமில்லா	193
ஒருகணத்திலட்டு	467
ஒருகைதனது	211
ஒருகையிலக்க	124
ஒருக்கியவுளத்த	725
ஒருங்காயிரவம்	423
ஒருஞானசத்தி	636
ஒருஞான்றவுணர்த்	765
ஒருதொடையினி	401
ஒருத்தற்குலம்பிடிக்	643
ஒருபாலின்மலே	224
ஒருமாதடிந்துய	666
ஒருவருஞ்சாப	745
ஒருவரொருதெருவி	299
ஒருவனுக்குரிமை	381
ஒருவனேயொரு	251
ஒருவன்பால்வெற்றி	278
ஒருவியகாதலர்	588
ஒருவிரலொருகை	499
ஒலிதழற்பூதத்	525
ஒல்லார்நலிய	474
ஒவ்வொருதிங்க	226
ஒழிந்தவச்சிர	367
ஒழுகியவெள்ளத்	538
ஒழுகுங்கரிய	548
ஒழுகுதம்மோங்கற்	579
ஒழுகுதிரைக்கிடங்கிடை	55
ஒழுகுவெள்ளரு	508
ஒளிகண்மாய்ப்ப	27
ஒளிதங்கியமதி	562
ஒளித்தார்தமைநேடி	516
ஒளிபிழம்பிய	82
ஒளிமறைத்தது	383
ஒளிர்பொன்னணி	176
ஒற்றர்போயங்கி	425
ஒற்றைப்பொலஞ்சகட்	666
ஒற்றைமுகமு	211
ஒற்றையங்கலே	726
ஒற்றையஞ்சகட்	48
ஒன்ருகிப்பலவாகி	137
ஒன்றுகேவலத்தி	195
ஒன்றுறுமதனு	191
ஒன்றெனவிருந்து	419
ஓங்கண்மாயனு	507
ஓங்கிக்கரைக்கண்	590
ஓங்கியவிந்தவெற்	495
ஓங்குதன்கூற்ருன்	744
ஓங்குதூவிகைய	129
ஓங்குந்தணிகை	632
ஓங்குபன்மறை	41

ஓங்குபாதகமுன் 286
ஓங்கொளியாய் 3
ஓடும்வேறிரதம் 422
ஓதநெடுங்கடல் 458
ஓதிதாழநுடங்கி 695
ஓதிமம்புடையி 128
ஓதியுநுதலு 518
ஓதுமறையாகம 161
ஓமெனுமந்தப் 229
ஓம்புதன்குறியி 21
ஓருடலட்டொளி 201
ஓருமறைநாடரிய 162
ஓருருவாக 526
ஓர்சிலைவேறுகொண் 398
ஓலமிடும்புலவோர் 456
ஓவவம்பல 42
கங்கையிறைவன் 59
கச்சபவடிவிற் 717
கச்சிப்பதிகயி 665
கச்சுச்செறியிடை 344
கஞ்சவெற்பென்னவுங் 163
கடகமங்கதங்க 151
கடகமுள்வயிற் 48
கடகரியொறுப்ப 264
கடங்கலுழ்வேழ 558
கடப்பாரலர்சுரங் 675
கடமறியுங்கவுட் 676
கடம்படுதோற்றத் 179
கடம்பணிகுமர 95
கடம்பவிர்தார்க 738
கடவிறையெதிர்ந்து 414
கடவினைவாய்ப்பெய் 537
கடலும்புவியுங் 339
கடல்பருகுமருந்தவ 501
கடவியவிபமுகன் 689
கடவுளர்சிறையைச் 701
கடவுளர்படைகளெல் 414
கடவுளர்முதலோர் 88
கடவுளர்வழிபா 357
கடவுள்பொருளைக் 254
கடவுள்வெண்கரி 8
கடிஞைகொண்டு 757
கடியயர்மண்டப 688
கடியனவேயகன் 45
கடியிலிடக்கைத் 214
கடுக்கந்தரம்வைத்த 641
கடுக்கைமதிச்சடில 309
கடுங்களியுப்பு 12
கடுத்தயான்றெளிய 756
கட்டுகையினெடு 377
கட்டும்வாரினர் 47
கட்புலன்கதுவாக் 431
கணமன்றிக்கைத்தவர் 581
கணவனுர்சிறைப் 111
கணவனிறிற்றலே 299
கணிகமழ்தடவரைக் 206
கணிகையர்விழை 208
கணிப்பறுபவங்க 228
கணிப்பில்பலநாளுங் 344
கண்களுமுகங்களுங் 396
கண்டவர்பிறவி 117
கண்டவவன்படை 353
கண்டவுணரெங்கணும் 446
கண்டறத்தினைமுனிந் 428
கண்டனர்கானவர் 528
கண்டனனரிமுகன் 445
கண்டானுடல் 143
கண்டுதானவன் 388
கண்டுதொழுதுச்சி 474
கண்டுநாயகன் 452
கண்டுமகிழ்ந்து 754
கண்டெழுந்தாடிப் 227
கண்ணடிக்குள் 600
கண்ணடியெனத் 690
கண்ணிகுத்திவலே 310
கண்ணிணையெழுதினர் 706
கண்ணிறந்திவை 48
கண்ணீர்கவிழ்த்துக் 611
கண்ணுதலாலயத் 304
கண்ணுதற்பரமன் 258
கண்ணேய்பரிவு 669
கண்முகத்துடற்று 222
கண்வைத்தமரரை 343
கதிரவனெழுதலோடுங் 291
கதிரொளியிருளெனக் 204
கதிர்மணிக்குலங்கால் 116

கதுமெனவெழுந்து 153
கதைதொடைதண்டம் 396
கந்தரக்கமுகென் 511
கந்தரந்தொறும் 471
கந்தவரையாதி 751
கந்தனேற்றிடும் 445
கந்துகப்பெயரடுக் 379
கந்துகம்புடைப் 49
கந்தென்மணிப்புயத் 525
கமலஞ்செங்கழு 26
கமலவுற்பலமும் 231
கமழ்புனன்முடித் 205
கம்பமால்களிநல் 693
கம்மப்பலகலனும் 720
கயந்தலைக்கும்பல் 543
கயவர்கஞலும் 667
கயிலையங்கிரியை 164
கயிலையையடைந்தன 492
கரந்தவுணனேகியது 391
கரந்துதன்னுருநீங்க 422
கரந்துவைகினும் 138
கரம்பைதிரம்வளர் 558
கரிசறுகவிக்குக் 64
கரிசறுதான 230
கரிவயப்பரிமுழுவது 414
கருக்கொலைதந்தை 205
கருங்கடல்வரைப்பிற் 152
கருங்குழல்காணிற் 8
கருங்குழன்மேக 512
கருங்குழல்வெண்ணகைச் 527
கருணைக்கடல்வளர் 603
கருணைநாயகனவன் 408
கருணையந்திறத்துத் 225
கருதுதம்பயன் 509
கருப்புரங்கமழ் 729
கருப்புரப்புனல் 695
கருமந்தமுநர் 544
கருமமுதன்மக 239
கருமமுற்றவர் 243
கருமானுரைத்திடின் 546
கருமுச்சிவன்முலை 614
கரும்பொன்றுதோளி 536
கருவயிற்றுதலுங் 550
கருவயிற்றுருமை 371
கருவிகளனைத்து 5
கருவிகளுமறியாமை 132
கருவிபோழர்தியர் 396
கருவிப்புயறவ 598
கருவிளங்குழவி 264
கருவினின்மழவிற் 279
கருவுயிர்ப்பன 34
கருவெனவகட்டி 505
கரைத்தலையண்ட 169
கரைந்ததுகாகங் 656
கலங்கஞக்கியுங் 60
கலங்காதநின்மெய் 157
கலஞ்சிதர்ந்திரும்பு 709
கலவர்மீன்படுத் 38
கலவியாற்றிய 69
கலவிஞர்பழி 33
கலவும்பொறிவிடயம் 177
கலாதியிச்சையா 184
கலைகற்றிலாமை 154
கலைக்கோடுழவடை 592
கலைத்துறைபோய 554
கலைத்தொழிற்குள்வைத் 558
கலைமகளுங்காரத்திற் 323
கலைமுற்றமிழ்தந் 576
கலைமுற்றும்வையத் 565
கலையொடுவாளம் 12
கலைவலார்மகளிர் 268
கலைவளங்கோட 179
கல்விரைதேரினும் 678
கவலைநெஞ்சலைப்ப 118
கவலையுற்றுழ்வது 634
கவளத்தவேழக் 564
கவானெழில்கவர்ந்த 696
கவித்தவன்கவயங் 389
கழலினொடிதுமி 401
கழிமகிழ்சிறந்து 701
கழிமதக்களிறு 168
கழுதுமுறங்குங் 614
கழுமுணுண்டுக 439
கழுவாய்மற்றிது 311
கழைவளர்முத்தமும் 553
கழைவார்சிலை 143

களபநெடுவாய்க்	28	கன்னற்பொருசிலைக்	560
களம்பயில்கண்டத்த	569	கன்னிகும்பங்க	68
களவிற்பின்வரு	685	கன்னியந்துழாயி	74
களவொழுக்கினைந்	53	கன்னியிலடுத்த	228
களிக்கயலன்ன	576	காக்குங்கடவுள்	687
களித்தமாதராள்	684	காக்கும்வேலியே	685
களிவண்டெனநின்	215	காசிகுருக்கேத்திரங்	248
களிற்றினந்தம்முட்	166	காட்சிப்பொருளுங்	524
களைகணுனருளி	481	காட்சியேகருத	287
களையக்கைகளைப்	26	காட்டத்தளவைக்	660
கள்ளகந்தளித்த	3	காட்டாகியநின்	104
கள்ளம்வெள்விழிக்	732	காணுப்பெருந்துய	592
கள்ளவிழ்பன்மலர்	131	காண்டகுவிண்டு	277
கள்ளுறைத்துக்	508	காண்டலைமாற்றிக்	654
கறங்குமணிவெண்	98	காண்டன்முந்துறுத்த	518
கறவையினமுதிர்	324	காதரந்தப	129
கறுவுகொண்டிடி	112	காதலோடுபூசனை	263
கறைகெழுகளத்தெம்	7	காதியெவ்வுலகுங்	760
கற்பகங்கடவு	76	காத்தலைமருவ	178
கற்பகங்களுங்	60	காந்தளம்போதுகமழு	522
கற்பகச்சோலை	584	காந்தளம்போதுவிராய்த்	632
கற்பகத்தேந்தழை	571	காந்தளம்போதுவேய்ந்து	9
கற்பம்வந்தழிக்	206	காந்துநாகத்தின்	37
கற்புக்காட்டிய	69	காமங்கடலிற்	592
கற்புளார்செயலை	284	காமப்பிணிக்கென்	602
கற்பின்வலியுங்	535	காமருமாமை	586
கற்றல்கேட்டலொடு	107	காமர்மோவிமண்	407
கற்றல்கேள்விநன்	113	காமவேண்மணிக்கவிகை	711
கற்றைக்கதிரங்கைத்	343	காம்பியரேருள்கண்	633
கற்றைக்கவரி	545	காயமல்கமர	127
கற்றைப்புரிசடை	557	காயம்பரந்த	580
கற்றையங்கதிர்கான்	57	காராகிருகங்	137
கற்றைவார்சடை	82	காருகபத்தியமாதி	323
கற்றைவெங்கதி	81	காரெனக்கிளத்தற்	715
கனகப்பதுமத்	765	கார்முகம்வளைத்துவிடு	389
கனிச்சந்தனமுங்	661	கார்விளையாடிய	706
கனிவகைமாசை	740	காலணிசிலம்பிற்	169
கனிவருக்கமுங்	61	காலந்தொறுநன்	71
கனைவெள்ளருவி	71	காலமன்றியுங்	138
கன்மிசைமஞ்ஞை	103	காலமேநியதி	186
கன்றுல்விளவெறி	651	காலாதியின்வன்	338
கன்றினைக்கவரி	701	காலிருமருங்கு	20
கன்னலுங்கனியு	77	காலினிறைவன்	445

காலினுளர்ந்துவள்	464
காலைகாய்பகல்	748
காலைநண்பகன்	488
காலையரும்பிப்	627
காலையிளஞ்சுடர்	321
காலையின்மாலையைக்	692
கால்பொரக்கனிந்து	349
காவலரிம்முறை	399
காவலர்மாய	611
காவலன்சிறையோர்	241
காவிக்கருங்கணிமை	629
காவித்தடவரை	546
காவிரியாற்றங்கரை	570
காவிரிவளத்த	88
காழ்படுமுளத்தினன்	206
காற்றின்வெம்படை	431
கானகத்துழலு	745
கானரும்பியகடுக்	127
கானவர்லார்விற்	603
கானவாரணங்	39
கானெத்தகூந்தற்	559
கிடுகுகூவிரங்	48
கிடைசெய்முல்லையுங்	734
கிட்டியவவுணருங்	445
கிம்புரிவடிவின்	718
கிம்புருடத்தோ	317
கிருமிகீடாதி	272
கிழக்கமர்ந்தவேழுலகுந்	53
கிழக்குமேற்கெனக்	32
கிழங்குகனிதேன்விரவு	532
கிழங்குவண்சார	631
கிளிமயில்குயில்புருக்	530
கிள்ளைசெய்நன்றியென்	581
கீற்றுவெண்மதிக்கோடு	115
குங்குமக்களிவிராய்க்	707
குடங்கரின்வேறுகுடங்	458
குடநிகர்செருத்தற்றிண்	114
குடந்தம்பட்டெதிர்	85
குடர்கொழுவென்பு	453
குடுமிகைக்கொண்ட	357
குடைநாட்கொளல்	343
குட்டநோய்பெரும்பிணி	204
குணங்கரும்விருச்சிகங்	207
குணுதுதிசைக்கண	754
குண்டலங்கதிர்	734
குண்டலமுங்கதிர்த்தோடுங்	133
குண்டுகண்ணபேழ்	41
குதுகலமார்த்துங்	608
குத்திரைெதிரெதி	415
குமரித்தடஞ்சுனை	641
குமைக்குமாற்றலி	368
கும்பமதிவருமகத்திற்	135
கும்பமுனியண்மி	752
குயிலோடெதிர்கூவுது	516
குய்யமாயுயிர்க	63
குரங்கியமலர்ச்சாகைக்	114
குரங்குநரிநாயுரக	307
குரவலர்ப்பாவை	16
குருகுசுட்டிய	341
குருடர்முடவர்கள்	247
குருதிகொப்பளித்	111
குருதித்தசைமிசையுங்	146
குருநீழலடியர்	303
குருமணியிளெளிப்	132
குருமணைவேட்பக்	609
குருமொழிவேட்டு	94
குரும்பிதேரிய	39
குரும்பிவன்மீகத்	607
குரும்பைமென்முலை	37
குருவாய்வெளிக்கொள	645
குருவியோப்புதங்	14
குரைக்குமருவிமத்	673
குரையெரிசவட்டப்	758
குவட்டுத்தாரையுங்	683
குவட்டுமத்தகத்தோட்டி	116
குவவுக்கோணுதல்	731
குவளையுண்கணூர்	700
குவிதருமாருதாரக்	152
குவித்தபதத்தொரு	302
குவிமுலைக்களிநல்	471
குழகன்றிருவுருவாங்	143
குழலும்வீணையுந்	83
குழவிவெண்மதிய	93
குழாக்களிற்றவுணர்	376
குழுமுபொறிமடங்கல்	56
குழைவளர்காது	545

குளிர்பனிநீரிற்	717	கைதலைவைத்துக்	624
குளிர்ப்பக்கண்ட	728	கைத்தசைகவுட்டசை	531
குளிர்மரம்பொந்தாகக்	113	கைத்தலமெடுத்தசிலை	419
குளிர்மென்மொழி	19	கைவகுத்திருவர்	436
குறங்கினிற்கரந்	295	கொக்கினமிறுத்த	178
குறிப்பாற்பிறிது	635	கொக்குருச்செகுத்தலுங்	468
குறுமுனிபழிச்சி	224	கொங்குலாம்வீதியி	713
குறுமுனிமுன்னிரு	330	கொங்குவிம்மு	223
குறுமுனிவிளைத்த	347	கொடிச்சிமார்விழிக்	13
குறைத்தபூங்கதிர்ச்சாலி	30	கொடிப்பகைசாம்பப்	602
குன்றவர்மடந்தை	94	கொடியவுங்கோட்டவும்	577
குன்றியலுத்தொடர்	554	கொடியனவேகுளிர்	45
குன்றிறுத்தலு	385	கொடியோர்கொடுமையை	624
குன்றெடுத்துமேல்	439	கொடிற்றினைத்துளைத்துக்	264
குன்றெடுமவுணற்	355	கொடிற்றுநீர்நிலைகண்	512
கூடாதவருழைத்	586	கொடுங்குழைமகளிர்	179
கூடிற்றுமன்ற	647	கொடுமகத்தழலி	761
கூட்டமேபொதுவே	189	கொடைக்குரியவரைப்	257
கூட்டுமானைந்தும்	498	கொடைப்புகழ்க்கவயம்	7
கூந்தல்கானெனக்	512	கொடைமைநல்குவ	81
கூந்தல்வதனம்	540	கொட்டியவேய்மணி	604
கூம்பியகையினர்	522	கொண்டநோன்பிழந்தா	285
கூர்த்தவாளியாற்	406	கொண்டன்மிகுத்துக்	653
கூவிரத்தடந்தேர்கடாய்க்	46	கொண்டுவிற்றல்	244
கூவிரத்தடந்தேர்மத	208	கொம்மைமென்முலைக்	83
கூளியர்கள்சினங்	331	கொய்வதன்றேதினை	595
கூறுசெய்துடல்	267	கொலைப்பழியாலுயிர்	204
கூற்றநடுங்கு	102	கொல்லிமருங்கெறும்ப்	572
கூற்றுழவுணர்	440	கொழுவிடைக்கறை	15
கெழுமுபாவங்கிட்டாது	140	கொள்ளிவட்டமும்	431
கெழுவியகாதலை	649	கொற்றவேலவன்	733
கேட்டலுமகிழ்ந்திங்	515	கொன்மணிநகரமு	706
கேட்டனன்றமைதி	86	கோசலம்விராய்க்	24
கேட்டானரிமுகத்தோன்	435	கோடிமேலுடற்குறை	396
கேதாரமுதலான	306	கோடுகொண்டுலாவுறுங்	219
கேதுமாலத்தோ	316	கோடுநெருங்கியதமது	52
கேவலசகலங்	181	கோட்டிபமிவுளி	266
கேவலசகலசுத்த	194	கோட்டிளங்கதிர்	107
கேவலசகலமுத்திச்	195	கோட்டினுதிச்சரா	322
கேழிலாதகிளர்	756	கோண்முறை	6
கேழ்த்தபொன்மலர்க்	37	கோதைவார்சிலை	423
கைகள்சீப்புக்	27	கோயிலைக்குறு	223
கைக்கதைநீக்கி	398	கோயிலைவணங்கி	196

கோயில்கோபுரங்	209	சாரிகைத்தொழில்	432
கோயில்விலாவம்	434	சாருமெவ்வுயிருந்	123
கோயினீள்பத	345	சானகியைக்கவர்ந்	501
கோலத்திணிவரை	171	சான்ருேரிரந்த	647
கோழரையகிலின்	702	சான்ருேர்துவன்றிய	617
கோழரையகிலுஞ்	10	சிகரமவிர்பொற்	70
கோளகர்வகுப்புங்	62	சிங்கத்துரியுத்த	547
கோளினைநாளினைக்	394	சிங்கவுைடமராடச்	382
கோளுறுவிண்ணரவ	55	சித்திநாவிரண்டையுஞ்	205
கோற்ருெடிகொன்றை	455	சித்திரகுத்தற்	265
கோற்ருெடிதனைவிடாக்	530	சித்திரம்பல	68
கோன்மழைசிந்துபு	456	சிந்தாமணியே	720
சகலரும்பலர்	110	சிந்துபொற்சுண்ண	707
சங்கமேந்திய	41	சிம்புள்வெம்படையை	347
சடம்படுமாவியு	556	சிரங்கரமணிவ	500
சண்டன்சண்டனக	382	சிரநுதன்மரும	499
சண்ணித்தநீற்றின	306	சிரமுந்திண்கையும்	450
சத்தியநிருவா	197	சிலதரோடினர்	488
சத்தியொடும்புணர்	452	சிலபகல்கழிந்த	470
சத்தியோசாதத்	501	சிலம்படிசிலம்பச்	177
சத்துநேர்தனக்	184	சிலம்பரொன்றனெ	334
சந்தக்களிமென்	698	சிலம்புகிண்கிணி	486
சந்தக்குறடகிலின்	176	சிலம்புங்குருகுறை	612
சந்தனங்காரகில்	584	சிலம்பெதிர்கூய்த்	594
சந்தனச்செச்சை	605	சிலைபிளந்துதெவ்வி	221
சந்திரகாந்தச்சிலை	67	சிலைமதன்கணைக	736
சந்திரனுனுந்	675	சிலையலங்கணிச்சி	10
சரியைகிரியை	217	சிலையறுத்துத்தேர்பொடித்	403
சரியைமுன்மூன்றும்	240	சிலையினைக்கடலைத்	336
சலந்தரன்கயாசுரன்	452	சிலையெனநனிவாங்கிச்	115
சலந்தரன்முதலா	360	சிலையொன்றனைவாங்கித்	423
சலமெனநிலனிடைச்	691	சிலையோடெதிர்சிலை	344
சற்றுருளினுயிரம்	303	சிலைவளைத்தவுணர்	346
சாகமுனைந்து	319	சிலைவளைந்தது	428
சாக்கிரவவத்தைக்	194	சில்லரிச்சிலம்பு	718
சாதகவழியும்	87	சில்லரிப்பன்மணி	633
சாதலன்னதோர்	35	சிவதத்துவவமிர்தப்	175
சாந்திமுக்கியபதந்	696	சிவநகர்செய்தபதி	238
சாந்துபெய்செப்பும்	739	சிவபணிசொற்றன	238
சாமதக்கினி	76	சிவபுரத்திற்பெரும்	325
சாமரைவெதிர்நெல்	703	சிவனத்தனீன்றருள்	681
சாரதக்குழா	438	சிவிறிவாங்கினர்	267
சாரதங்கள்பேயி	466	சிறக்குமண்ணவர்க்	693

சிறக்கும்வகைதமை	343	சூக்குமவுடலைப்	275
சிறந்தபத்தியடி	158	சூடியபூவும்	586
சிறந்தவேடத்தி	245	சூரனுமற்றிருவரும்	330
சிறப்பினவகப்பொருள்	60	சூரனேபன்மனென்னச்	469
சிறுகியவாடி	518	சூரன்சினம்வளரச்	405
சிறைபடநின்ற	593	சூருயிர்குடிப்பவன்	131
சிறையளிக்குலங்கண்	22	சூர்கவர்ந்தவளம்	52
சிற்றிலடுத்துச்சிறு	638	சூலமட்டபிறைராயிரங்	449
சிற்றிலிழைத்தாடுநர்	502	சூளிகைத்தலை	451
சினந்தகுரவற்சினந்	281	சூளுற்றுரைப்ப	640
சின்னுட்புணர்ச்சி	623	சூறையாட்டயர்	27
சீதப்புனலும்வெண்	662	செங்கடம்பணிந்த	414
சீதளத்தொடு	68	செங்கதிர்மேரு	657
சீபரிபூரண	207	செங்கமலமலரேய்க்கு	135
சீரணிசிருக்கு	2	செங்கைதாடி	25
சீரமைச்சர்கண்	367	செங்கையேந்திய	407
சீராழிவையத்து	589	செஞ்சுவனீவு	622
சீரியோர்பலி	34	செதுப்பழந்தலை	110
சீர்கலந்துவளர்	475	செந்தழலாற்கள்வராற்	303
சீர்த்தகுலிசங்	212	செந்தழன்முளிவனஞ்	495
சீர்த்தசித்திரவே	89	செந்திருநமக்குச்	719
சீற்றங்கிளரச்	443	செந்திருமணந்த	505
சுடுவனத்தாடி	763	செந்திருவேசெங்கண்	679
சுத்ததத்துவமோ	185	செந்திலான்றிருச்	367
சுத்தமெய்ஞ்ஞான	86	செப்பியவருடந்	316
சுத்தவித்தையினவ்	312	செப்புநேர்முலை	694
சுந்தரத்துவிடையமரு	322	செம்பஞ்சிரும்பகை	667
சுந்தரந்தமக்	48	செம்பவளவொளி	321
சுந்தரமங்கையர்	200	செம்புதன்களிம்பு	289
சுரக்குந்தம்முகச்	730	செம்புனல்வெண்ணீர்	273
சுரர்தானவர்	764	செம்பொற்சுண்ணமுந்	61
சுரும்புகண்டொளித்த	177	செம்பொன்மணிப்பீடத்	721
சுரும்புமுசுதேந்	219	செம்பொன்மேருக்	70
சுவலிற்றுயல்வரும்	650	செம்பொன்வார்கொடி	67
சுழல்விழியங்கி	264	செம்மலக்கணை	389
சுள்ளிவேலிய	13	செம்மலார்க்கிபஞ்	9
சுற்றமெலாஞ்சிலை	746	செம்மலைமணத்திற்	702
சுற்றமெலாம்வேருக்	31	செம்மைப்பதமலர்	668
சுற்றமென்வல்லி	86	செம்மையஞான	119
சுனைக்கடிநீலந்	621	செயற்றலைநின்றுழப்பவர்	31
சுனைக்கருநீல	605	செயிர்பிறங்கிய	85
சுனைபொழிதேங்குவளை	598	செய்பவன்கருமஞ்	293
சுனைமலர்க்கணந்	139	செய்யபங்கயத்	734

செருத்தலான்முறையிற்	325
செவிமருளுசலுந்	562
செவ்வாய்ப்பவளமும்	577
செவ்விபெற்றிலன்	333
செவ்வியதீஞ்சொற்	650
செழுங்கலைமதியங்	166
செழுந்துபடுமரதனச்	710
சென்றமுந்நாளும்	740
சென்றவன்றிரும்பக்	347
சென்றனள்கொல்லோ	540
சென்னிதாளிரு	234
சேட்டாரணமறியான்	146
சேந்தபங்கயப்	733
சேந்தன்யாங்க	444
சேந்துமதர்த்தரி	712
சேந்தெரிதும்மு	701
சேமத்தேர்பாய்ந்து	411
சேமநெடுஞ்சக	397
சேயிடைக்கண்டனஞ்	679
சேயிடையிருந்து	95
சேவற்குருகொடு	589
சேனைபெரிதுந்தபுதல்	417
சொரிமழையிற்கணை	403
சொல்லார்பொருளே	105
சொல்லுவதீதென்	582
சொற்சுருக்கியுஞ்	62
சொற்றவான்புரிமே	313
சோகமுமிளங்குமர	448
சோதிநாரதத்	727
சோத்தநின்னடிய	475
சோத்தமெம்பெருமான்	745
சோமகண்டகன்	420
சோமதிக்கினன்	728
சோலைவாயினுந்	51
ஞாங்கரேவவும்	450
ஞாங்கர்ப்படை	211
ஞாலங்கருது	601
ஞாலந்தன்னுருப்	461
ஞானசத்தியுரு	106
ஞானநாயகனலிந்	407
ஞானநாயகனல்	339
ஞானநூலோத	198
ஞானமெவற்றினு	202
தகவாயினுந்தா	30
தக்கன்மகநுங்குந்	425
தக்கன்வேள்வியிலன்று	332
தங்கட்கிறைவன்	337
தங்கள்வாண்முகச்	733
தங்குலத்தரசற்	339
தசையிடைநரம்பு	273
தஞ்சமின்றியுஞ்	109
தஞ்சமுளரைத்	447
தடக்குங்குமத்	19
தடத்துநீர்த்திரைத்	48
தடவரைமணியொளிர்	755
தடவியவுளத்துக்	173
தடவுமேனில	69
தடவுரமருவிய	441
தடாதபொறியைந்து	473
தடித்தெழுந்தொறுந்	33
தடையாகியமலம்	665
தடையாதிருப்பி	517
தணந்துபரத்தையர்	32
தணந்தொழிகாலை	615
தணப்புறினொருகாற்	514
தணிகைநாயகன்	684
தணியாவருள்வளர்	557
தணியாவிமையோர்க்	18
தணிவறுகாதன்	542
தண்டகப்பெய	383
தண்டகன்பின்வரு	399
தண்டமுந்தகர்வித்தனன்	449
தண்டமேந்துகைக்	47
தண்டலைவாய்த்தரளங்	549
தண்டலைவானரம்	563
தண்ணறும்புன	730
தண்பாற்பெருங்கட	590
ததைசிராரு	100
தத்தநெஞ்சினுட்	368
தத்தமனைமாதர்	701
தத்துவத்தினைத்	110
தத்துவந்தொறு	369
தத்துவவமிர்த	177
தந்தனம்வரமெனத்	756
தந்தைசூரன்பன்மன்	330
தந்தைதாய்புடை	107

தந்தைபடையாயினுந் 390
தந்தைமுந்திளவ 107
தந்தையிவ்வாறெதிர் 529
தந்தைவயிற்றி 572
தமதுமாணெழில் 732
தமனியக்கடமே 276
தமனியத்தடங்கட் 759
தம்பியைமகிழ்ந்து 373
தம்மாண்பிகந்து 616
தயங்கியநீறுடற் 496
தரளத்தொடையுந் 634
தருகவெனுமிடியர் 248
தருக்குறுஞ்செல்வ 280
தருமக்கடவு 590
தருமம்வரல்கருதாது 282
தருவலென்றேற்ற 258
தருவாகியென்பில் 269
தரைகுழிக்கும்புழைத் 688
தரைக்குயர்வரைகட் 702
தரைபுகழ்சயந்த 92
தரையுரங்கிழித்த 725
தலைவரேற்றனர் 452
தலைவர்களொடுபூதர் 402
தலைவர்பட்டதுந் 438
தலைவன்சரணஞ் 137
தவக்கூளியர்க 442
தவத்தினுலைய 369
தவமலிவேத 90
தவம்புரிகுலத்து 242
தவம்புரிசூழ 761
தவளத்தரளத் 697
தவளநிறங்கனக 310
தவளநீறு 223
தவளைக்குரற்கிண் 591
தவற்றிற்கதிநடை 145
தழுவியமென் 583
தழுவினளெடுத்துட 743
தழைகொண்டதங்கை 572
தளர்விடையூற்றிற் 258
தளவைத்தகர்த்த 559
தளைசெறிவயலிற் 11
தறுகணவுணக் 332
தனக்குத்தானே 123
தனக்குமாற்றல 429
தனக்கென்றெதுவும் 766
தனக்கேதகுதி 581
தனித்துநின்றசூரனைத் 466
தனைநிகர்ப்பருஞ் 184
தனைநிகர்மாதர் 506
தனைநுகரொருவனைத் 394
தனையடுத்தவரைத் 716
தனையறியாவகை 530
தன்படைச்சேனை 413
தன்பெயர்ப்புத்தேட் 374
தன்மனையடுத்து 410
தன்னருளைப்பிழைப்பதே 149
தன்னின்மேம்படு 112
தன்னுயிர்சாயினுஞ் 574
தன்னுருவிற்றெழிற் 712
தன்னையுமறியா 349
தன்னொருவாகன 464
தாக்கிக்கடுகிய 573
தாக்கினுன்கரத் 439
தாதுதுன்றிய 486
தாதையருடவம் 332
தாமரைகுவளை 741
தாமேதமதுயி 580
தாயுந்தளரத் 622
தாயுமாயமுந் 682
தாய்க்கலாம்விளைத்த 759
தாரகத்துரு 340
தாரகப்பெயரி 345
தாரகன்விடுத்த 355
தாரணிதாங்குநர் 658
தாரெனப்பூக்கு 167
தார்த்தடந்திணிதோட் 348
தாலில்பலமறைகளுஞ் 710
தாவுமானிரதந் 470
தாழைத்திறந்து 626
தாழைபூவொடு 33
தாழ்ந்தமங்கைய 736
தாழ்ந்தவர்வறிய 119
தாழ்ந்திடாவளத் 62
தாளடிநிதம்பந் 274
தாளதாமரைகளுந் 221
தாளினுற்சில 366

தாற்றுக்கதிர்கால்வர	19	திரைதவழ்தீர்த்த	225
தாற்றுவாழைத்	535	திரைதவழ்நீர்க்கட	527
தானங்கைக்கோட	178	திரைத்தவிர்பன்மணி	203
தானவர்கரந்தி	470	திரைத்துமணிசிந்தி	163
தானவர்கவர்ந்த	490	திரையகஞ்சேர்கடன்	549
தானவர்கள்களிதூங்கத்	332	திரையுந்திரைதவழ்	171
தானவர்படைகாவற்	383	திரையும்புனலேய்ந்	218
தானவன்வேல்விடச்	437	திளைமாயைமோக	155
தானிருக்குந்திருவெல்லே	132	திறந்தகீழ்மடைகள்	23
தானுற்றநோய்வண்டற்	580	தீங்கிதுகணிச்சியிற்	529
திகழுநம்விழியிற்	335	தீஞ்சுவைச்சொன்றி	723
திகழுமின்னஞர்	68	தீண்டினுங்காணினும்	324
திங்களுங்குளிர்	733	தீதிலர்மாட்டுச்	644
திங்களோரெட்டிற்	274	தீம்பாலடியிற்	523
திங்கள்சேர்மாடக்	88	தீம்பான்மிதக்குஞ்	549
திங்கள்வெண்ணிலா	222	தீம்புனற்பந்தரைச்	284
திசையும்வானும்	443	தீயபாவங்க	113
திணிகவைக்கோடும்	10	தீயவர்புரத்திற்பட்ட	471
திண்மைவிழைந்தவர்	493	தீர்த்தநேர்ந்தன	486
திமிதிமிங்கல	461	துடுமெனவாரிச்	604
திமிரப்படலங்	215	துணிந்தொன்றும்	566
திருகியவாவி	566	துணைபுணரன்றி	613
திருகுமிருவல்வினே	162	துணைவராயிரர்	416
திருக்கிளர்தாமரை	200	துணைவனீங்கினர்	35
திருத்தகுங்கடவுளார்	757	துணைவனுமின்ன	537
திருத்தகுபிராண	295	துண்டப்படுமுறுப்புச்	434
திருத்தகுமாது	527	துண்டமும்வாயுங்	121
திருந்தவந்தாளுங்	562	துதையத்துவாவும்	153
திருந்தியவாருயிர்	615	துப்புநித்திலத்	34
திருப்பரங்குன்றிடைச்	743	துரிசிலேழா	101
திருமகட்குரியதாய்ச்	163	துலங்கவில்போக	6
திருமணம்புரிந்து	740	துலாமணிந்தவர்	61
திருமாறனது	554	துவளிடையினேடடி	533
திருமுகங்கமல	513	துளங்கெரிவளர்த்து	505
திருமுகப்பரிதி	394	துளவினன்றலேநோ	277
திருவருமாறுரு	522	துளிக்கும்பசுந்தேங்	216
திருவிளங்கிய	41	துறக்கமாண்ட	281
திருவிளங்குந்தணிகை	687	துறக்கும்வாழ்குவளை	490
திருவுருவனப்பை	738	துறைமுற்றியமறை	146
திருவுளக்கருணே	106	துன்றுகதிர்ப்பசுஞ்சாலி	44
திரைக்கடலேழு	468	தூங்குங்கனிமல்கிய	18
திரைக்குமுடன்மூப்பிது	531	தூசுமின்கல	139
திரைசெய்நீர்விழுஞ்	243	தூணமுந்தளிர்கள்	507

தூண்டொரும்வாருறை	130	தேவயாத்திரைதீர்த்த	326
தூதுணம்பறவைக	16	தேவரந்தணர்பாடின	451
தூதுவந்தது	367	தேவராயினு	112
தூதுவர்தம்மை	470	தேவரினொருத்தனலே	534
தூத்தருமரைமலர்	440	தேவரையஞ்சாத்	536
தூநறுங்குவளேப்	715	தேவரையளித்துத்	469
தூமமெங்குங்	209	தேவர்கண்முதலோர்	740
தூயநினைவைத்	185	தேவர்களுலகுக்	491
தூயவாயமைக்கப்	187	தேவர்சிறைசெய்த	434
தூயவிஞ்ஞான	167	தேற்றிநெஞ்சினை	430
தூவிவெண்குருகு	129	தேனுங்கிழங்குந்	659
தெங்கினொண்பாளே	168	தேனுஞ்செந்தினை	15
தெண்டிரைக்கங்கை	93	தொகையிறந்தன	184
தெய்வதவுணவிஞ	705	தொக்கபேராற்றன்	759
தெய்வதவேலாலடுவ	403	தொடுக்குந்தொடலே	652
தெய்வமாப்படை	346	தொண்டகமேங்கப்	578
தெய்வமேகமழுமச்	164	தொண்டைவாய்மணித்	50
தெருளுயிரணுவே	290	தொழித்தளிமுரலு	96
தெருளொன்றியவர	175	தொழும்பினரை	769
தெவ்வியவவுணர்க்	20	தொள்ளேபூத்தல	477
தெளிபுனலுகுத்துத்	22	தொன்றறியாததோர்	392
தெளிவானமிழ்த	520	தோகைக்குராய்த்திரி	610
தெள்ளியதிரியம்	165	தோடுங்குழையுஞ்	697
தெள்ளியோர்ப்பொருஞ்	33	தோட்டுக்காதினர்	51
தெறுதழற்பிணிகண்	175	தோத்திரத்தொடு	487
தெனுதரிவருடங்	316	தோய்ந்துநீர்பரி	47
தென்புலத்தவர்க்	244	தோரணமெங்கணுந்	130
தென்புலத்தார்க்கெதிர்	31	தோலடிப்பவளச்	226
தென்றல்சந்தனஞ்	140	தோலுடுக்கை	75
தென்றிசையிலயன்	321	தோற்றியவாறிரு	103
தேக்குமறைமற்றுந்	482	தோற்றுதிவள்ளுகிரு	114
தேங்கியபெரும்புனற்	164	தோற்றுமிரண்டா	99
தேங்குநெய்த்தோர்	396	தோன்றன்மிசைவாளி	390
தேசவிர்கலேகளுந்	131	தோன்றுன்றனதொரு	541
தேசிகப்பட்டினுற்	691	நகரமூன்றினும்	46
தேத்தடைத்திரள்	8	நகர்சூழ்வட்ட	73
தேம்பியமருங்கு	738	நங்கையிலங்குசம்	540
தேயமிடம்பொருள்	502	நஞ்சடவெழுத	542
தேரழியச்சிலே	457	நஞ்சழுத்து	75
தேரிருந்தமந்தரமு	462	நஞ்செனக்கொதித்துத்	348
தேரிறக்கினர்	345	நஞ்சேந்திருளரவந்	176
தேரினேக்கொணர்தி	436	நடலேயுலகத்	99
தேர்களிறுபரி	374	நடுவண்மேருவுக்கு	315

நட்புப்பகைநொதுமற் 405
நண்ணுங்கருத்துடை 555
நந்தவெஞ்சூர 524
நந்தாதவாண்மைக்கு 434
நந்தியம்படையை 412
நம்பியென்றியற்பேர் 721
நம்மருளாணையி 201
நம்மினத்தொரு 509
நயக்கமூன்று 250
நயந்தெதிர்பழிச்சி 175
நயந்தெனக்கார 544
நரந்தமாதுளை 509
நலக்குமாகம 80
நலம்புரிந்தண்மி 149
நலம்புரிந்தருள 716
நலிபெரும்பாவமு 496
நல்வினைதிறம்பித் 187
நவமணிகுயிற்றி 57
நவையவங்கட்ட 565
நறுமணங்கமழுந் 95
நறுமாந்தளிரன்ன 656
நன்பொருளினுக்கியைய 59
நன்றிவனகந்தையெனநா 447
நன்றிவனகந்தையெனமுனி 744
நன்றுகூறினை 450
நன்னீர்நறும் 680
நாகசுனைப்பெயர் 493
நாகநாடிய 492
நாடாதுவேட்ட 481
நாஞெலியின்முந்துவிழு 448
நாந்தகங்கரமுரீஇ 432
நாமாமகளுஞ் 714
நாமிகப்புறி 82
நாயகனயர்த்தலு 389
நாரணனின்னண 482
நாரணன்படையை 412
நாரணன்மார 719
நாரணன்முதலா 349
நாரணன்முதலோர் 373
நாரணன்றெருண்டு 762
நாரணன்றெழு 369
நாரதப்பெயர் 767
நாரதனட்டான் 374
நாரதன்வேள்விவந்த 336
நால்வகைப்பயனையு 207
நாளுற்றெழுந்த 156
நாறுசாந்தநறு 757
நாறுபறித்துக் 24
நாற்றிசைமருங்கி 315
நாற்றிசையினுஞ்சமர் 419
நாற்றியசெஞ்சடை 601
நிகழ்கின்றவிம்மாசித் 688
நிகழ்தருநால்வகை 17
நிகழ்பிணிக்கோட்பட்டு 474
நிச்சமுநினக்குரிய 533
நித்தலுங்கடவுட் 506
நித்தலுநதியிற் 225
நித்தலுமைந்தெழுத் 501
நித்திலங்கொழித்தலு 219
நித்திலத்தாம 739
நியுதவெண்மர்க 402
நிரம்பியகால 584
நிரைகதிர்க்குளிர்மதி 492
நிரைக்குமணிகுவ 571
நிரைநிரையவர்விடு 440
நிலையாமைகண்டு 270
நிலையாயெழுகா 30
நிறுத்தியநிலைநெடுந் 709
நிறைசிவத்தடக்கஞ் 290
நிறைநிகர்கோங்கங்காய் 116
நிறைநெகிழ்ந்தமை 734
நினக்குநேரழ 509
நினைப்பித்தடுத்தருள் 556
நின்றசேனையோ 409
நின்றமாதுமுன் 516
நின்றிருந்துகிடை 129
நின்னடிபோற்றி 539
நின்னுளக்கருத்தெவன் 408
நின்னுளங்களி 508
நீக்கங்கருதின 663
நீக்கமின்றென 377
நீக்கறவிராவி 291
நீங்கியதுமாயையது 419
நீங்குகாதலர் 35
நீடியபெருங்கவி 693
நீட்டித்துமன்றலை 644

நீயொருகுழவியாத்	744
நீர்சொரிந்து	208
நீலவுடைதண்	70
நீறுதுன்று	74
நுங்களாருயிர்	388
நுண்ணியன்சத்திக்	292
நுதலிற்படுகணை	404
நுந்தைபோனுனது	738
நும்பிபின்வரு	423
நுனக்கிவண்மொழிந்த	328
நுனித்தகேள்விய	368
நூலினையறிந்தார்	197
நூறுநூறுரு	438
நெஞ்சந்தூய	180
நெடிதுபோதவச	479
நெடிபடுகானமும்	504
நெடியதண்டொடு	384
நெடியமாயனுந்	112
நெடுங்கைவழி	54
நெடுமொழிகிளந்து	348
நெடுமொழித்திறமும்	380
நெட்டயில்வாளி	426
நெரித்தவாண்முக	108
நெருங்குதோரணத்திற்	66
நெருநலேபணிந்து	363
நெருநற்கடிமலர்ச்	659
நெருப்பானியன்றது	669
நெருப்பிடையழற்றி	194
நெருப்பிற்கனன்று	442
நெறிகளோகொடிய	265
நெற்றிக்கணிருந்	370
நெற்றிமிசைமுற்று	535
நெற்றியங்குண்டத்து	497
நெற்றிவிழியாளர்	161
நேமிவண்கிரிமுத	709
நேமிவரைப்புடை	354
நேர்ந்தசரங்க	455
நேர்வருமவுணப்	427
நைகரமிலன்போடு	148
நொச்சிகாத்ததி	409
நொடித்தறீதென	13
நொந்தவிறல்வீரரு	389
நொந்தனர்சிலரஞ்	401
நோயலைப்பத்தனை	283
நோற்றலின்மிகுத்த	751
நோற்றலொன்றுனு	371
பஃறுயர்படுத்தி	265
பகவிரைமாறிய	599
பகல்வந்துபன்னுட்	579
பகழியோராயிரந்	400
பகீரதன்மாதவ	202
பகுதியினண்ட	517
பகுதியினளவும்	312
பகைசெய்துநிற்கு	156
பகைஞரைப்போரிடைப்	205
பகைத்துடிப்படுப்பவர்	16
பகைபிணிமண்ணை	495
பகைமுழுதிரிக்கு	63
பகைமைதோன்றப்	25
பக்குவமில்லார்க்	502
பக்குவம்பல	84
பங்கயமலரை	716
பங்கயானனஞ்	606
பங்கயற்கருஞ்	684
பங்குனியுத்திரம்	483
பசுகரணங்க	5
பஞ்சாய்முருந்தின்	564
பஞ்சியின்மிதித்தொறும்	692
பஞ்சினுமிதிப்ப	533
பஞ்சுநெய்நாவியும்	713
படியிடையைந்தாய்	174
படுப்பவுய்த்த	74
படைக்குநாயகன்	437
படைத்திறநோக்கி	393
படைபல்கலைநோற்	370
படைப்புறும்போது	293
படையறுத்துநனி	378
படையெடுத்திடு	462
படைவிழிநேர்ந்த	514
படைவேல்பகழி	212
படைவேல்வலம்	749
பட்டவாளிகள்	407
பட்டாங்குரைத்தும்	664
பட்டிமைக்கிரி	340
பட்டிமைவிருத்த	532
பட்டினிவிட்டொரு	754

பணிகிளராரப்	123	பலகூறுவதே	217
பணைமலர்க்கனோ	25	பலநாளிடையிட்	624
பண்டனைப்படுத்த	467	பலாவம்பொழிலி	559
பண்டிகந்திருளிற்	119	பல்குழுவேந்த	7
பண்டுநீபுரி	684	பல்லநினைந்தென்	435
பண்டேபுரிந்த	606	பல்லியங்களியம்ப	335
பண்டேயுளனு	520	பல்லியம்பல்கண	131
பண்டைநற்றவத்தி	349	பல்வகைசிறப்புங்	739
பண்டொருகோள்வாய்ப்	21	பல்வேறுவிலங்கு	320
பண்ணியமேந்துங்	2	பவளத்திருவுரு	546
பண்ணையுமேனலங்	578	பவளவாய்ச்சிறக	159
பதியுமப்பதிக்	182	பவுமன்பாசத	75
பதியும்பதியாப்	546	பழகுற்றதளிர்ப்	516
பதுமமாதிய	294	பழனமிருநிதிநடன	237
பந்தர்பைங்காரெனப்	691	பழிதீர்குறும்பல்	748
பந்தும்பாவையும்	341	பழியறுகன்னிக்	258
பம்பியவிலக்கர்	425	பழையமாடமும்	694
பயன்முற்றியசூரன்	406	பழையனதணந்தகன்	704
பரசிவன்பூசை	501	பளிக்குரல்வேய்நெற்	584
பரத்தமையாற்கணவருடன்	32	பளிங்கரிந்துசுற்றெலாம்	221
பரந்தபன்னதி	36	பள்ளம்படர்ந்த	561
பரந்துநின்றெளிர்	84	பள்ளிகொண்டுறங்கும்	23
பரந்துமாதர்பல்	726	பற்குறிநகக்குறிகள்	58
பரமதக்கடவுட்	287	பற்பலபடைகைக்	436
பரமனருட்டிருவுருவை	239	பற்பலவதிபாதக	285
பரமனும்வேறே	372	பற்றிகறனக்கொன்	117
பரமனைப்பரஞா	233	பனத்திபனவன்சிவ	306
பரம்புபல்லுயிர்தொறும்	24	பனியெனநறும்புனல்	691
பரவியபிரம	164	பன்மணித்திரள்	128
பரவுகாஞ்சியிற்	42	பன்மலைவாழ்நர்	741
பரவுசிவஞானமுண	29	பன்முறைதாழ்ந்து	490
பரவுமிப்பொரு	184	பன்முறைவணங்கி	196
பரனைக்குருவை	281	பன்னுளயன்மை	672
பரிகொண்டுவாங்க	638	பன்னிறப்பகடுண்டு	726
பரிதிமெய்யுடற்றும்	489	பன்னீருயிரும்	553
பரிதிமேற்கெழுந்தொறும்	206	பன்னெடுநாள்கழிவெய்தப்	755
பரிதியங்குறுத்தி	723	பன்னெடுநாள்கழிவெய்தவு	493
பரிதியின்மதியின்	288	பன்னெடுமூழி	372
பரித்தன்முற்றுமோ	731	பாகலைசொல்லி	676
பரிவகலச்சிலைவேடன்	746	பாக்கியமினியென்	436
பரிவிடைதானியந்	307	பாங்கரினந்தி	201
பருமநின்றுகு	47	பாங்கனுமுறைக்க	541
பருவமிக்குடையோ	292	பாங்கனிற்பயில்	544

பாங்கியர்பாங்கி	703
பாங்கெலாம்பசு	690
பாசமும்பசுவுங்	189
பாடகநூபுரங்	646
பாடலிசையாழ்பல	59
பாடினர்சிலர்	731
பாட்டளித்துளவத்	715
பாட்டளிமுரலும்	89
பாண்டரங்கனுதற்	711
பாதமுகமுடிக்குதவு	133
பாதலமுன்னுலகமெலாம்	52
பாதலவுருத்திரர்	700
பாத்திரத்தின்மிக்க	248
பாத்திரமுமபாத்திரமு	247
பாம்பணர்ந்தன்ன	755
பாம்பின்வாய்ப்பல	111
பாயவாருயிர்	4
பாயினவகழி	.58
பாயுமும்மதவேழ	486
பாய்ந்துவேறெரு	352
பாரதவரைப்போர்	317
பாரிடத்தொகை	417
பாரிடம்புடைபல்	480
பாரிடராய்விறலண்டா	331
பாரிடர்பாரிடம்	398
பாரித்தவெறுமெருத்துப்	114
பார்த்தாளவன்மெலிவைப்	424
பார்ப்பினந்தோகையி	585
பார்வைப்புலியும்	673
பாலனென்றிகழ்ந்த	466
பாலனைக்கொணர்ந்த	467
பாவகாரணத்தாற்	271
பாவக்கடனின்று	765
பாறயிரிழுதுதயில	262
பாறயிரிழுதுதேன்	707
பாறயிர்நெய்பழம்விரை	305
பாறயிர்நெய்புளிகடுகு	133
பாருடுசெங்களத்துப்	482
பாற்கடற்பரப்பெலாம்	689
பானுகம்பன்	728
பிடிநெடுநாசி	510
பிடியொடுதோன்றிய	567
பிணத்தின்குப்பையும்	408
பிணிகிழங்கினெடும்	132
பிணிநாமுழப்ப	586
பிணிபலவவற்றுண்	263
பிணியினமுப்பினகன்று	307
பிணியினரகத்	293
பிண்டிப்பொழில்புடை	601
பித்தருமதித்திஃது	534
பித்திகைக்கனமோர்	312
பித்திகையெங்கணும்	130
பித்தினர்போலப்	548
பிரணவப்பொருளை	93
பிரணவமுதலாய்ச்	229
பிரணவமோரயுதம்	300
பிரத்தியாகார	296
பிரமதீர்த்தத்துப்	768
பிரமர்நாரணர்	150
பிரமவுலகத்	72
பிரமனேமுதன்	80
பிரமன்றந்தவேல்	407
பிரிந்தவர்பசலையம்	17
பிரிந்தாலரிதுயிர்	639
பிருகுவுக்கிர	75
பிலிற்றுதண்மதுப்பொழிற்	709
பிழைதணப்பத்தனை	309
பிள்ளைப்பருவங்	674
பிள்ளைமதியு	744
பிறக்கமல்குதேவர்கள்	220
பிறங்கியபவானி	90
பிறப்பவரருள்	207
பிறர்க்கணிபடுக்கு	718
பிறர்நிதிவேந்தன்	260
பிறவிதொறும்வேட்	70
பிறவுயிர்க்கருள	197
பிறனில்விழைதல்	254
பிறையெயிற்றினர்	266
பிற்றைப்பொழுதிந்திரன்	764
பின்னிலைவேட்டல்	563
பீழைசெய்தார்கட்	597
புகலான்மதத்துவத்	327
புகழினைக்குறித்து	259
புகழ்ந்தவனிற்ப	754
புகையவட்படுந்	74
புகையிடைநெருப்பெனப்	395

புக்கவாசவன்மேற்	428	புளினமுங்குயிற்றுபொற்	49
புக்கனனெழுத்தோ	226	புள்ளடுத்தது	683
புங்கவர்நம்மிறை	456	புள்ளும்விலங்கும்	643
புடவிமாதுகடல்	480	புள்ளுவர்பார்வை	609
புடைநகர்த்தலை	43	புள்ளேறுயர்த்த	744
புண்ணிடைப்புழுக்குலம்	204	புறங்கொண்டுபார்ப்பி	575
புண்ணியம்பாதக	4	புற்றுமண்கோசல	302
புண்ணியம்பாவ	286	புனங்காவலின்முன்	620
புதல்வரைவேண்டினும்	205	புனலிடையாழ்ந்	309
புதல்வியுடன்பிறந்தாடா	299	புனிதமுடலோ	255
புதுக்கலந்தேக்கு	637	புனிதமென்மொழி	731
புதுவதாக்கும்	209	பூங்காவகத்துப்	218
புத்தேளிருமறியா	406	பூங்குழன்முலைத்துணை	532
புந்திநீங்கிய	252	பூசனைபுரிந்துபுக	472
புயல்வளர்பருவத்	411	பூசுபுனல்கரத்தேந்திப்	133
புரங்கட்கிளநகை	591	பூஞ்சினைவஞ்சி	20
புரந்தரநாமக்குரிசி	403	பூணினையோம்புந	662
புரப்பான்விடுப்பி	556	பூதகணம்புடைசூழப்	687
புரம்பொடிப்பவா	79	பூதமுதற்கரண	132
புரவிபோம்வழி	47	பூதமோபூதத்தான	194
புராரிதரும்படை	353	பூதரஞ்சினரஞ்ச	422
புராரிபாங்கர்	485	பூதர்கடல்கடை	400
புரிதருமுறையிற்	188	பூதர்களிரியத்	437
புரிமுறுக்கவிழுங்	717	பூதர்மேலுருமை	411
புரிமுறுக்குடைந்து	21	பூதியாமுறைமையும்	496
புரியுடைந்தாலென	666	பூத்ததாமரை	477
புரிவளையலறி	507	பூத்தசெந்தாமரைக்	11
புருவம்வார்செவி	510	பூத்தருகான	578
புரையிலிறைக்கு	254	பூத்திருந்தும்புனற்றடங்கள்	46
புரையில்புன்னைகள்	33	பூந்தாமரையும்	517
புலம்பியவென்னிலை	523	பூமகட்குத்தன்னகரும்	435
புலரியிற்செய்கடன்	392	பூமகள்களிதூங்கப்	472
புலவர்சிந்திய	729	பூம்ணமுமுடலுயிரும்	103
புலவுவீசுதற்	37	பூமருவுபந்தர்ப்	720
புலிங்கங்கதிப்பத்	214	பூமிநாதமாதி	221
புல்லரும்பான	573	பூமுதலைந்தற்	150
புல்லாடவனே	610	பூமேவுநான்முகத்	768
புல்லிதாகிய	42	பூரணகும்ப	605
புவியிருந்தேர்த்தவி	224	பூரணையிருது	259
புழுகுகத்தூரி	601	பூரித்தகொங்கை	616
புழுகுமிக்களாவலிற்	220	பூரியர்மார்பும்	576
புழுகொடுகத்தூரி	115	பூரியோர்குழாஞ்	36
புளகமெய்யரும்பிப்	226	பூவணைக்கிழவன்	121

பூவிருந்த	74	பொருவிலிறையா	255
பூவிற்பயிற்றிப்	673	பொருவிலியைப்பிராம	298
பூவைபைங்கிளி	51	பொருவில்வைகுந்த	471
பெண்டுதுவந்தன	589	பொருள்வளர்குணங்கண்	174
பெண்ணவாயுருப்	733	பொலங்குவட்டருவி	119
பெண்ணெனப்பட்டு	739	பொலிந்தசீர்வரத	91
பெண்மையாற்பெண்	719	பொல்லாவிலங்கு	607
பெயர்வினைசேரி	554	பொழிந்தனர்கருணை	725
பெருகியகௌவையுங்	654	பொழிலொன்றுபூங்குழ	565
பெருகியவித்தகு	129	பொழிறடிந்தோர்	282
பெருகுநின்கருணைத்	181	பொறிகாணுமக்ருப்	611
பெருங்கருணையொடு	503	பொறித்தசீரெழுத்	69
பெருத்தனதோளொடு	576	பொறிபடுதுறுக	169
பெருநிதிமுகப்பத்	66	பொறிமயிற்புனத்தை	724
பெருந்தவமுழந்து	121	பொறியாட்டெறும்தணித்	633
பெருமைதக்கபிற்	112	பொறிவயினீங்கி	579
பெருமைபிறங்குஞ்	99	பொறிவயின்யாத்த	599
பெருமையைக்கல்வியைப்	537	பொறிவரிச்சுரும்பு	118
பெரும்புறவேலை	319	பொறுமையைம்பொறி	87
பெறலருங்கற்பு	498	பொற்றமாதவம்	148
பெற்றுபதேசம்	201	பொற்றவந்நாவற்	315
பேதைமைப்பாலி	121	பொன்பெயரமரன்	336
பேரருளுடையா	489	பொன்மலையரதனப்	707
பைத்தபூஞ்சேக்கை	120	பொன்வரைக்குல	79
பைந்தாட்குவளை	561	பொன்னணிபூண்முலை	741
பைந்தாரகலத்துப்	585	பொன்னரிமாலையும்	130
பைந்தாரகலந்	590	பொன்னளாவிய	67
பொங்கழல்கான்	354	பொன்னனூர்புகுந்	50
பொங்குமாகடல்	683	பொன்னினுமணியினும்	708
பொய்தகுவரையும்	350	பொன்னும்பிறபொருளும்	342
பொய்ம்மையண்ணல்பாற்	33	பொன்னும்வெள்ளியும்	61
பொய்யெனப்போகு	266	பொன்னேமணியே	544
பொரவளியசைவ	530	பொன்னெக்குங்கொங்கைப்	539
பொரியெரிமனைவி	724	போதகனைச்சோதகனை	304
பொருண்மிகுமூர்தி	263	போதவிழ்ந்துதே	83
பொருண்மைசுட்டிய	62	போதாவினம்	218
பொருதஞாட்பிடை	732	போதுதவ்வெனக்	112
பொருதுமீளுவ	427	போதுநெகிழ்ந்தவிழ்	741
பொருதுமேல்வையிற்	366	போமிடம்வேறு	542
பொருதுவீழ்ந்தவர்	409	போரவாய்ப்புரமுஞ்	750
பொருந்தவந்தாமரைப்	671	போரிடைவிழுந்த	470
பொருந்தியவேக	280	போரிடைவீழ்ந்தோர்	355
பொருப்பின்வளர்கொடி	519	போர்தொடங்குமுன்	386

போர்பூத்தமைந்தினுக்	375
போற்றவடுத்தோர்	72
மகதியாழ்முனிவன்	506
மகத்தீசனெனப்	200
மகரவாய்க்குழை	735
மகளிர்களிருவரின்	756
மகனெனவுருவே	372
மங்கலத்தின்பெரு	32
மங்கலத்தின்மலி	209
மங்கலத்துழனி	721
மங்கலமுடங்கல்	700
மங்கலவெள்ளை	103
மங்கைக்கிடமிடமாகிய	176
மங்கையர்தடந்தோள்	22
மங்கையிவர்நங்குமரி	532
மங்கையுரையானுந்	502
மடங்கலிறத்தலு	464
மடித்திதழ்தின்னார்	348
மடிந்தானெனவீழ்ந்தா	424
மடுக்குங்காலையிற்	60
மட்டார்குழன்மங்	105
மட்டுவிரிபொழிற்	148
மணக்கும்பரிசினல்	630
மணங்கேழ்சுனை	552
மணந்திவ்வாறு	523
மணிகாசலமரு	681
மணிகுயின்றெடுத்த	170
மணிதுளக்கியு	699
மணிநிறக்கமுகு	21
மணிநீர்க்கயத்து	520
மணிமலர்ப்பட்டின்	66
மண்சுருங்கவார்ந்தன	219
மண்டியசிறகர்ப்	469
மண்டியதன்பெருங்	711
மண்டிலம்பிறழா	151
மண்டுநொச்சியினர்	345
மண்டேருருளா	337
மண்ணடியுரைத்தா	314
மண்ணவருக்கிரும்புன	161
மண்ணிடையாங்காங்	358
மண்ணிடையிருந்தகுவர்	391
மண்ணுங்கதிர்மணி	620
மண்ணுயிரனைத்து	489
மண்முதலாகச்	190
மதந்தவிரடியார்	92
மதர்விழிநீலந்	513
மதலைதன்மனத்தொடு	392
மதலைபோர்க்கெழுவ	410
மதிதவழ்கோபுரநிமிரப்	237
மதியொராயிரம்	80
மதுக்குடித்தவர்	368
மதுநுகர்ச்சியின்	27
மதுநுகர்ந்த	26
மதுவார்குவளைக்கு	639
மதுவைமாட்டிய	509
மந்தரங்கந்த	315
மந்தரநட்டரவநெடுங்	55
மந்தாநிலமவர்	653
மந்தாநிலமுந்	570
மந்தாரமணங்	516
மந்திரகலைகண்	198
மந்திரங்கேட்டி	498
மந்திரத்தலைவரு	392
மம்மரின்முழுகு	762
மம்மர்மிகநின்றன	448
மயக்கிடுமாயா	186
மயிலடிகொங்கை	552
மயில்பூவைகள்	515
மயினடாவுநின்	508
மரகதக்கதிர்	157
மரகதக்கொடுங்கை	689
மரணமும்பிறப்புங்	123
மரவம்பொழின்மலர்ப்	677
மருங்கமைபூதர்கள்	457
மருண்மலமொழிய	192
மருதமர்கிள்ளை	11
மருந்தினைவான	547
மருந்துண்விண்ணர	12
மருமமுற்றக்கதை	437
மருமலர்த்துளவினான்	743
மருவுபல்லுயிருமேல்	24
மருவுமாதவநகர்ப்	478
மருளாதுணையறியும்	144
மருளிற்பிணைந்து	631
மருளுங்கடந்து	551
மலக்கமுறுத்திய	202

மலதத்துவவிருள்	176
மலமாயைகன்ம	526
மலயமால்வரைத்தென்	318
மலரவன்றன்னை	278
மலர்க்கரத்திரெண்	296
மலர்ந்தபன்னிரு	735
மலர்முகப்பரிதி	175
மலிசனங்கள்பொருது	333
மலிபெரும்பொருளாற்	7
மலைத்தவீரர்கள்	439
மலையொடுமரங்கள்	426
மல்கும்பசப்பின்	615
மல்கும்பொருளின்	216
மல்லன்மந்திரந்	36
மல்லிகைகொடிமுல்லை	116
மல்லினுற்பிடிபடுத்	377
மழுப்படைகப்பண	457
மழுப்படையாக்கி	761
மழுப்படையூழித்	313
மழைத்தகார்முகி	13
மறிந்துவீழ்மாய	763
மறிந்துவெங்கரி	429
மறுகணிவீதி	626
மறுமையிலிறைவ	297
மறுவலும்வணங்கிப்	96
மறுவலும்வீழ்ந்தெழுந்து	134
மறைகதித்தவாறெழுத்தின்	149
மறைகவரவுணற்	758
மறைகளாகமம்	208
மறைநீதிகொண்டு	271
மறைபயின்றெழுதித்தல்	256
மறைமுடியறியா	542
மறையவனைச்செகுத்	305
மறையாலிவணல	629
மறையினைநாட்டியு	664
மறையோலிடுந்	767
மற்றுமொருநாட்செவ்	331
மற்றுமொருவையமிசை	390
மற்றொர்வார்சிலை	387
மற்றையண்டநின்	462
மற்றையிரண்டு	204
மற்றைவானவர்கண்	108
மனத்தினல்வடி	246
மனமடிந்தவர்	344
மனமுதன்மூன்று	187
மனமும்பின்பட	451
மனைக்குரிமனையா	280
மன்றலைவேட்டு	661
மன்றல்கமழும்	750
மன்றல்கமழ்நீறு	531
மன்றல்புரியு	72
மன்னுமவுணன்	344
மன்னியசெல்வ	280
மன்னுசிவஞ்சதாசிவ	28
மன்னுநாயக	295
மன்னுநானில	35
மன்னுமிருமா	73
மாகர்போற்றிய	722
மாங்குயின்மிழற்று	161
மாசறுமங்கி	722
மாசின்மணியை	570
மாசைவண்கயிற்	516
மாடகத்திவவு	436
மாடகம்பொலிந்த	94
மாண்டசோதி	728
மாதரார்கழுத்தெனும்	222
மாதரைமைந்தர்	279
மாதவமிகுதி	227
மாதவர்மரீசி	320
மாதவனெனும்பே	724
மாதவன்முதலோர்	120
மாதிரத்தமர்புண்டரீ	427
மாதிரத்தலைவர்	314
மாதிரத்தெண்மரைவண	332
மாதுற்றநோக்கு	636
மாப்பெருஞ்சூரை	510
மாமஞரினைய	490
மாமன்மொழிக்கெதிர்	742
மாயத்திரேருழி	540
மாயப்படையவுணப்படை	405
மாயனுகிய	38
மாயனுதிதேவரும்	466
மாயனுதியர்	726
மாயனுதிவிண்ணவ	83
மாயனுர்திகிரி	350
மாயனையயனை	758

மாயனையெள்ளினன்	282	முடங்கல்சென்றறிந்த	703
மாயன்முதலோர்	375	முடங்குகிரடக்கித்	701
மாயிரும்புவி	700	முடிவுநாள்பசித்து	235
மாயைக்கொருவைப்	370	முட்டாட்கமல	566
மாயையால்வெல்ல	431	முண்டகநீல	11
மாயைவண்கயிற்றினூற்	445	முதுக்குறைவுடையோர்	5
மாயைவன்படை	432	முதுக்குறைவுபோலுடலின்	532
மாரவேள்கணை	502	முதுமைமாதவர்	148
மாலையாத்தக	727	முத்தலைப்பெருஞ்	407
மாலையாமமு	479	முத்தனையநகைமடவார்	54
மாலைவெள்ளருவிதாழ்	87	முத்திப்பதமொரு	144
மாலைவெள்ளருவிகண்	692	முத்தியின்மேற்பயி	203
மாவின்குயிலே	720	முத்தியேயன்றிப்	497
மாவைத்தணித்துய	557	முத்தினூர்தியும்	339
மாழைவாண்முக	733	முத்தேவராதி	270
மாளிகைக்குலந்	415	முத்தொழிற்குரி	141
மானதப்பெருந்தேரினை	452	முந்தியபொருள்க	174
மானதமுமந்தமும்	238	முந்திறைவனருண்	503
மானமாதமையிழப்	393	முந்தினுமிக்கபெரும்	453
மானமின்றழிதரு	394	முந்தினையாங்ஙனஞ்	559
மானுகமலர்த்திரு	18	முந்துதானளித்த	358
மானிடர்குழுவினை	705	முந்துதூசிபோய்ப்	452
மானினத்தொடு	68	முந்துமண்ணலை	367
மானினமுடல்சிந்த	114	முந்துமரசன்	98
மான்றவல்வினைகால்	7	முந்துவாழ்க்கையின்	462
மிக்கட்டுயர்சிலை	406	முந்துறத்தேவத்	356
மிக்கரிமாமுகன்	397	முந்துறவிந்திரன்	742
மிக்கவப்பிழையுட்	119	முந்நாண்மதிக்கலை	552
மிக்கவரில்லா	351	முப்பதுகோடி	313
மிண்டுளிபோழ்ந்த	677	முப்புரமட்டநாண்	446
மிதுனம்பயில்கின்னரங்	755	முப்புரமெண்ணில	354
மிருகக்குலங்களெஞ்	557	முப்பொருளியல்பு	276
மிறைதருமுபபா	257	முப்பொருளிலக்கணமு	162
மீட்டுநற்பூசை	236	மும்மதக்கலுழிபாய	541
மீட்டுமிரும்படை	453	மும்மதக்கலுழிவண்டு	106
மீண்டவரடுக்குங்காலை	414	மும்மதத்தனென்	1
மீன்முகப்பரவை	759	மும்மலச்செருக்கை	65
முகநிதிக்கமல	717	மும்மலமிரித்து	329
முகம்விழிமலர்க்கை	372	மும்மைமலக்கணத்தின்	474
முக்கணனுயிர்த்த	360	முயங்கியகைகளை	582
முக்கணிறைபதம்பணிய	331	முயங்கியநாளுமொன்	622
முக்கனிபாலுண்டன்	301	முயங்கியமாதை	658
முச்சகமுந்தொழு	742	முயங்கியவண்சிறை	587

முயங்குதலெய்தா	737	முன்னருளுற்றும்	253
முயற்சியின்வேடரை	529	முன்னரொருகற்பத்தின்	330
முரசமார்த்தலு	694	முன்னரொருகால	753
முரலுஞ்சிறைவண்	137	முன்னுயிறுதியு	579
முரிதிரைசுருட்டிப்	8	முன்னுலுந்	4
முரிதிரைசுருட்டுந்	120	முன்னுந்தனிநின்ற	603
முரித்தவீரன்மார்	386	முன்னெழுந்தருளி	426
முருகனேமணி	730	முன்னேகுழவியி	536
முருகியங்காரி	628	முன்னொருகாலையின்	492
முருகியருமறை	527	மூதமராடிவையந்	458
முருக்குமண்ணன்	731	மூத்தநூல்வழியா	721
முருங்கோமெனநின்ற	674	மூத்தவனருளிய	689
முலைத்தலைக்குங்குமந்	552	மூலமாயனைத்து	467
முல்லையளவு	632	மூலமாயுலக	92
முழங்கிசையருவி	165	மூலமீறிகந்து	124
முழங்கியமாலை	649	மூலவாணவ	184
முழங்குசேய்நதி	12	மூவருக்கரி	180
முழங்குறுவிண்ணதி	203	மூவருமங்கத்	150
முழவுவென்றதோ	69	மூவருமேத்துவ	567
முழுதுணர்ந்தநித்	44	மூவரென்றுட	112
முழுதுலகுங்கமழ்	714	மூவர்தேவர்	465
முழுதெழிற்றிறத்தா	715	மூவர்மும்மறை	142
முளிதயிர்நறுநெய்	10	மூவுலகுய்ய	356
முள்ளெயிற்றரவ	296	மூன்றரைக்கோடி	275
முறஞ்செவிப்பெரு	683	மூன்றுமுறைவேந்	99
முறுக்கவிழ்நறைக்கமல	472	மூன்றும்மெய்ப்பொருண்	141
முறுவலுங்காதன்	661	மெத்தியபுகையொளி	697
முறுவனமக்கினி	636	மெய்யுணர்ந்ததற்குத்	327
முறைபுரிந்தவரை	350	மெய்யெலாங்கணை	381
முறைமுழுதும்பகுத்தமைத்து	224	மெழுகுகுங்கும	734
முற்றவுணர்ந்தோர்	215	மென்மையாரிடம்	140
முற்றுமுலையெனுஞ்	628	மென்றூலெழினியி	632
முற்றியசெல்வ	117	மேகமண்டலத்தைத்	23
முற்றினரவரை	364	மேகமூர்ந்துபுரு	379
முற்றுமுணர்ந்த	538	மேக்குளான்புடை	379
முனிவஞான	242	மேதகவிளங்குமதன்	753
முனிவரெழுவர்	98	மேதகுசிவமே	186
முனிவரரெனைத்துந்	85	மேதகுஞானந்	233
முனிவனின்னண	109	மேதகுமருளான்	191
முன்குவித்தகண்	61	மேதகுமறமா	228
முன்பந்தமாயவை	651	மேதினியளப்ப	531
முன்னநேடிநாடொறுத	222	மேதையெனநின்றனை	533
முன்னரண்மரினைந்த	334	மேருமால்வரை	364

மேருவுமேருச்	717
மேலவாந்தலைய	128
மேவருஞான	286
மேற்றிசைத்தொடர்பி	11
மேனிலைமாடத்	57
மைந்தநீயதன்பொருள்	122
மைந்தர்பலர்தமை	746
மைந்தன்றந்தையை	108
மையவிர்ந்தொளிருங்	518
மொய்யொளிதயங்கு	319
மொழிந்தெதிர்நின்ற	200
மோட்டிளங்கொங்கை	550
யாங்களெளியோம்	447
யாரிவள்வேடர்தஞ்	743
யாவருக்குமெப்பொ	127
யாவருந்திருவரு	743
யானெனதென்ன	195
யானைத்திரள்குதிரைத்திர	406
யானைமாமுகத்	508
வகைசெயோவியப்	695
வஞ்சனைவாய்த்த	347
வஞ்சியர்கடஞ்சமனை	534
வடகிழக்குத்திசைப்	728
வடகிழக்கெல்லை	722
வடதிசையிற்றிருமார்ப	322
வடவைமுற்றுந்	730
வடாதுகுணக்கினை	309
வடாதுசார்க்கயிலைக்	56
வடிவினும்போதினும்	696
வடிவின்வென்ற	50
வட்டகைவலம்புரி	131
வட்டச்சடையத்தாணியின்	143
வட்டவாய்க்கமலத்	6
வணக்கம்வரையாதளித்	247
வணங்கிடைநள்ளிர	625
வணங்கிமுன்கையின்	699
வணங்குநுண்ணிடை	14
வணங்குமாருயிர்க்	12
வண்டலம்பாவை	672
வண்டலாட்டயர்	731
வண்டலுற்றுடும்	588
வண்டானமுங்குரு	588
வண்டுபோய்மலர்க்	139
வண்டுவாருடறு	268
வண்டுவார்தொடை	481
வண்டுழாய்த்தொடை	84
வண்டெனவன்பர்	551
வண்டொடுஞிமிறு	226
வண்ணக்கனகஞ்	697
வத்திரம்புலிமான்	499
வந்தடிபணிந்த	170
வந்தபயனெய்திது	533
வந்தவரகமனை	706
வந்தவர்வாம்பரித்	640
வந்தனையோதென	122
வம்பணிமுலையி	180
வம்மோவினிய	561
வயக்கமாண்டவெள்	79
வயங்குசித்திரத்தன	219
வயமான்றுருவுநர்	567
வயலிற்பாய்வன	26
வயலின்மள்ளரார்ப்பொலி	220
வயன்மீட்டுமெழுந்	30
வயிரவனெனுந்தங்	762
வயிரவீட்டிக	127
வரங்கள்வேட்டுப்	71
வரதங்கொடி	213
வரதமணிக்குண்	213
வரமருளுருவிற்	372
வரம்பலவுதவுஞ்	90
வரம்பிலாவாற்றற்	350
வராகமாபுரத்து	228
வரிகழற்குமர	198
வரிந்தாலனைய	543
வருக்கைக்கனியற்று	583
வருக்கைப்பொழிலை	562
வருணங்கடோறு	271
வருநாள்கழிவ	537
வருந்தியவருத்தந்	506
வருந்திவாளிபாய்	366
வருந்தினன்மாதென	680
வருந்துந்தனிவீரன்	404
வருபகழிகள்பற்றி	383
வருபுனல்வாய்ந்த	6
வருமுலைக்கோட்டது	546
வருவாளிகணூறிக்கனல்	424

வருவைகலின்வாராதெழு	142
வரைகளும்வரைப்பெருங்	707
வரைத்திணைக்குர	35
வரையரோதோளன்	151
வரையுமாடமு	729
வரையுறைகடவுணல்	529
வரையுறைகடவுளா	16
வரையுறைதெய்வத	618
வலக்கைவாள்பகழி	313
வலத்தினர்கொள்ப	149
வலம்புரிகாலைநிருதி	755
வலம்புரிந்தனன்	684
வலவனுயிரைச்	442
வலன்மிகுத்தியே	109
வலாரிதோள்வாத	277
வலாரியாதிவிண்ணோ	333
வல்லத்தொருபுடை	667
வல்லிசைகேட்டொறு	394
வல்லிநற்றுயைப்	725
வல்லியமன்ன	623
வல்லுரைவாயின	625
வல்லைவாங்கிய	352
வழிநின்றுநன்று	156
வழிபடுங்கடவுளொன்	122
வழிமொழிந்தேவல்	637
வழியானுறுநர்க்கு	648
வழிவருநாலா	740
வழிவருநாளு	225
வழுக்கியஞ்சிறைத்	80
வழுத்துநான்முகனை	474
வழும்புதடிகுட	503
வளக்குன்றுவமம்	698
வளங்களெண்ணில	81
வளங்குலாவிய	330
வளச்சாலிமலர்ப்பொழின்	45
வளமலிகாஞ்சிதன்	747
வளமலைச்சாரலின்	122
வளமிகுசோமாக்	91
வளமும்வீரமு	370
வளருங்கொங்கை	732
வளர்சிவவங்கி	723
வளிநடுநாடி	297
வளியிடைபிங்கலைநடு	329
வளியின்யாத்தபொன்	67
வளியுளர்காலும்	240
வளியுளர்த்தலுஞ்	81
வளியெழூஉங்	727
வளியென்றுமாடணு	526
வளைகரிக்கோடிழுக்குறின்	302
வளைந்தார்மிசைவீரன்	425
வளைவகிர்ப்பேழ்வாய்ச்	227
வளைவளர்கையன்	549
வளைவாய்ச்சிறுகிளி	596
வள்ளத்தெழுந்த	642
வள்ளந்தணித்து	551
வள்ளிநாயகி	685
வள்ளிமௌவனீள்	40
வள்ளியைமணந்த	528
வறங்கூர்ந்தவன்கைத்	518
வறங்கூர்ந்துமையாந்	337
வறிதுநகையொடும்	375
வறியவருறையுள்	256
வறியனுய்த்தந்தை	410
வறும்புனலுக்களவு	308
வற்கமிட்டவாம்	47
வற்றுமதம்விளை	171
வன்மையினிடித்திடும்	49
வன்றிறலிளையோன்	351
வாகுப்பெயரமரன்	404
வாகுவோரயில்	429
வாகைபன்முறை	433
வாக்காதிகடந்து	310
வாங்கியசிலையினன்	440
வாங்குங்குயத்தின	596
வாங்குசெந்நெலின்	38
வாங்குபரிவேடமதின்	391
வாடியபொங்கர்	483
வாடியதேவர்கள்	746
வாடியதோளு	621
வாடுவதேதொழி	656
வாணிகேள்வன்	432
வாணிதீர்த்தமினி	476
வாணுதனீவு	582
வாதனைமலநோய்	87
வாமசமயத்தோர்கள்	304
வாம்பரிநின்றிழிந்	713

வாயிலினந்தி 117
வாய்ந்தமூவறு 77
வாய்மையேகூறினை 122
வாய்வதாகிய 14
வாரணப்பிரான் 43
வாரித்தடுவில் 552
வாரித்தலையின் 637
வாரிப்படைசண்ட 397
வாரியும்வடித்து 750
வார்கண்டமுலைத்துணை 19
வார்சடைக்கடவுள் 231
வார்சிலைவளைத்து 417
வார்ந்தகாதொடு 49
வார்ந்ததண்டி 421
வார்ந்தபைங்கூந்தற் 511
வார்ந்துயர்வாழைப் 606
வார்விரல்வாட்கண் 593
வாலடியினுகேசர் 323
வாவியொருதேரைவடி 418
வாழிகாங்கெய 462
வாழியநீதுயர் 644
வாழிவாளரம் 267
வாழ்வுமிக்குளை 109
வாளங்கொடுவீரன்மணி 424
வாளாங்கிருப்பினுந் 523
வாளாங்குவைகுறினுந் 134
வாளிகணூறுவிடக் 465
வாளிகோடி 352
வாளிதூண்டிநுதற் 333
வாளியேழனுல் 438
வாளையொன்றெழுந்து 222
வானதிசென்னி 754
வானரமகளிர்க் 716
வானரமன்னந் 307
வானவரெரி 259
வானளாவிய 210
வானுதிபூதங்கள் 149
வானுதிபூதமுத 153
வாணிலெழுந்து 400
வானெறிமொய்ம்ப 454
வானெனத்தோற்றிய 568
விசும்பமர்கங்கை 357
விசும்புமகளிர் 714
விஞ்சைவல்லவர் 49
விடங்கழிகாலத் 587
விடரளைப்பூழைத் 166
விடுகதிர்ப்பன்மணி 690
விடுக்குமுன்னர் 468
விடுசரந்தண்டினுல் 437
விடுத்தகோலொரு 366
விடுவலோவினி 431
விடைபெற்றுவயி 430
விடைபொடிவிழி 761
விடையம்பொறிவறி 172
விடையானைக்காவு 325
விட்டவாளிகள் 387
விட்டவாளிவிலக்கி 421
விண்டலர்கஞ்ச 493
விண்டாரமரிற் 536
விண்டுதீர்த்தம் 767
விண்ணைத்துயர்ந்த 574
விண்ணவரவுணர் 8
விண்ணவருடல 497
விண்ணவர்க்கவியி 159
விண்ணவர்சொரிபூ 152
விண்ணவர்பொழிமலர் 395
விண்ணறுத்துமேக்கிவர்ந்தார் 30
விண்ணிடந்துவன்றி 736
விண்ணிடமுயிர்த் 205
விண்ணிடையெழுங்கனக 418
விண்ணிறுத்திழி 700
விண்ணினீங்கி 484
விண்ணும்வழுத்திய 675
விண்ணெலாம்பகழிக் 421
விண்ணெறிநீந்தி 753
விண்ணோங்கியபெண்ணை 568
விண்ணோரவுணர்கண் 173
விதந்தயாவையும் 183
விதித்தநாளிடை 768
விதித்தருண்மறையி 739
விதித்தனவாண்டு 279
வித்தினையாக்குந் 652
வித்துணக்கலொருபாலாம் 31
வித்துநிலத்தின் 24
வித்துருமத்தினுல் 691
விந்தமேயருவிப் 318

வீந்தமொப்பவங்கை	223
விமலமாரனந்த	180
விம்மிதத்தராய்	438
விம்மிதத்தனுகி	466
விம்மிதம்பலபல	530
வியவரின்முரசறை	446
வியவர்கள்விரைந்து	693
வியாபகமலமான்மா	291
வியாபகவியாத்தி	290
விரகிலான்பிரணவ	122
விரகுமேவரி	111
விரவியமாயா	288
விரிகான்மலர்வாச	18
விரித்தவீண்டை	100
விரிமுகிலிடையிடை	17
விருத்தராகிய	148
விருத்தர்கள்பலராய்	692
விருந்தெனப்போந்தும்	619
விருப்பின்மீன்கவர்	32
விரைதுழாவிய	727
விரைபுகைத்துமலர்மாலே	324
விரைமலருள்விரி	747
விரைமலர்ப்பந்தர்	694
விரையாக்கவிழும்மை	553
விலகாவிறன்மாலறிந்	18
விலகிவில்லுமிழு	19
விலக்கிவருவெங்கணேபல்	449
விலங்கமர்பொருதா	702
விலங்கலுந்தலமு	197
விலங்கலுள்வெள்ளி	747
விலங்கித்தாந்திரை	34
விலங்குபறப்பை	203
விலங்குவாளர	293
வில்லினரம்பினர்	560
வில்லினுலிவன்	386
வில்விறுத்தனன்சூர்	430
வில்லுமிழ்மணிப்பொற்	56
வில்லெடுத்தனர்	682
விழிகாலருவிக	170
விழிக்குடைந்தமான்	13
விழிப்புணர்ப்புறு	185
விழியேயுளமிரு	658
விழுத்துகளுண்ட	696
விழுந்தயர்பிரமற்	762
விழைதருமென்கலிங்கத்	133
விழையத்தகுவீ	338
விளக்கதுதானே	289
விளக்கொடுதூப	694
விளங்கவோதுமிவ்	251
விளங்குசிவபுரி	321
விளைந்தனவாற்றினே	594
விளைவைத்தடிவார்	30
வினைதிருங்கழுவாய்கள்	311
வினைத்திருக்கினே	78
வினைத்திறமுளு	194
வினைபுரியாளர்க்	261
வினையிரண்டாமகாம	298
வினையிலிவிழியிற்	278
வினையில்காசிபன்	101
வினையின்விளைவினே	574
வீக்கியபாசப்	602
வீங்கியசெருத்த	328
வீங்குதோட்குடை	139
வீங்குபுனற்சரவணத்து	54
வீசுசுண்ணமு	51
வீசுந்தரங்கக்	539
வீடாதபிணிவெகுளி	306
வீடாவினைமிக்	748
வீடுநல்கிய	209
வீணுக்கிடம்பெரி	613
வீணைமாமுனிவ	757
வீண்படலொழிகென	24
வீரகோளரி	386
வீரராக்கதனெதிர்ந்து	402
வீரர்கள்கைப்படை	464
வீரர்போரிடையுயிர்	393
வீரர்வெள்ள	365
வீரவாகுவைநோக்கி	340
வீராட்டகாச	525
வீழ்ந்தவீரனேப்	433
வீழ்ந்தார்தமையெதிர்	595
வீழ்ந்துபவுதிகன்	300
வீழுமுன்னவண்	366
வீறுசிவதத்துவமே	308
வீற்றுப்பந்தின்	695
வீற்றுவல்வீரர்	608

விற்றுவிற்றுவெஞ்	384	வேட்டநல்வரம	158
வெகுளியாதியின்	256	வேண்டியவேல	635
வெங்கதிர்மணிகால்	150	வேதத்துயரிய	172
வெஞ்சினவேலொடு	652	வேதநான்முகன்	109
வெப்பானளவிய	651	வேதநுண்பொருளை	285
வெய்யமலவேர்துவர	163	வேதமத்தக	157
வெய்யவனொளி	356	வேதமாதிபல	106
வெய்யோன்விசுவ	101	வேதமுதலோது	752
வெருவப்படைமுழு	424	வேதமுன்மொழியி	336
வெவ்வினைப்பிலநா	266	வேதனுயுலகந்	173
வெளிஞெமிர்ஞான்	482	வேதனுக்குக்கட்டாக	327
வெளியிடையொன்றுய்	174	வேதன்முன்றரும்	387
வெளியூடுவிரா	104	வேந்தரினுல்விடுக்	655
வெளிவிரவுவளிதன்பால்	56	வேயினதோளியோர்	710
வெளில்பிணித்ததொட	380	வேயினமுகுத்து	165
வெளிறிலாயின்றுநீ	393	வேய்த்தோடிற்சிலர்	376
வெள்வேலிறைவ	73	வேர்த்தனனவனேக்கி	382
வெள்ளணியணிந்துபலர்	60	வேலவன்முன்விழுங்கு	51
வெள்ளம்பலவென்னு	515	வேழங்கடந்தவர்க்	645
வெள்ளாங்குருகு	569	வேழமென்றுதன்	36
வெள்ளியங்கிரியின்	127	வேழம்வாசவற்	732
வெள்ளிடையேமுகஞ்	550	வேழம்வாய்திறந்	40
வெள்ளிபட்டிவை	284	வேறிரதமேறியெழு	390
வெள்ளிப்பொருப்பருவித்	678	வேறுதேர்கொடு	420
வெள்ளிவரையிருத்தலி	135	வேறுநீடமரின்	377
வெள்ளிவரையினு	573	வேறுவான்சிலை	385
வெறிகமழ்கமல	165	வேறுவேறுள	251
வெறிகமழ்பொழில்	88	வேற்றுருவாயவண்	708
வெறுக்கையுடங்கிய	653	வேனிவிற்பொதும்பர்	325
வெறுத்தியல்பல்லன	654	வைகலும்விதியா	97
வெற்படலழித்த	694	வைகறையாமத்திருது	300
வெற்றபுனற்கறுகு	308	வைகறையெழுந்து	226
வெற்றுடம்பினன்	451	வைகறுெறுமொருவலக்கை	301
வென்றிநமதென்றுவில்	391	வைத்தசுடர்வேல்	212
வேங்கையானதும்	686	வைத்தவேலிளவ	107
வேங்கையுமற்றும்	643	வையகவரைப்பி	67
வேடர்கோனீரி	724	வையத்தொழுக்கது	555
வேட்டதாறுமா	368	வைவாய்க்கணிச்சிப்	210
வேட்டநல்வரங்க	181		

செய்யுள் முதற்குறிப்பகராதி முற்றிற்று.